# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

FOURTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**3rd to 7th March, 1964.**

**Volume XVIII (Nos. 1 to 5).**

TABLE OF CONTENTS.

*Tuesday, the 3rd March* 1964.


| | | PAGES |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 1–20 |
| II | Calling Attention to Retrenchment of employees by the Madras State Electricity Board .. .. .. .. .. .. | 20–21 |
| III | General Discussion on the Budget for 1964-65—*cont* .. .. | 21–100 |
| IV | Announcement— | 100–102 |
| | Business of the House .. .. .. .. .. .. | 102 |
| V | Papers laid on the Table of the House .. .. .. .. | |


*Wednesday the, 4th March* 1964.


| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 105–125 |
| II | Calling attention to damages to roads and culverts in Tirunelveli district .. .. .. .. .. .. .. .. | 125–126 |
| III | General Discussion on the Budget for 1964-65—*cont* .. .. | 126–204 |
| IV | Papers laid on the Table of the House .. .. .. .. | 204 |


*Thursday, the 5th March* 1964.


| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 205–216 |
| II | Calling Attention to remission of land revenue and postponement of collection of loans in Ramanathapuram District .. .. | 216–217 |
| III | General Discussion on the Budget for 1964-65—*cont* .. .. | 217 297 |
| VI | Papers Laid on the Table of the House .. .. .. .. | 297–298 |

## *Friday, the 6th March 1964.*


I Questions and Answers .. .. .. .. .. .. 299–315

II Expunction of objectionable matter .. .. .. .. 315

III General Discussion on the Budget for 1964-65—*cont.* .. .. 315–394

IV Announcement—Conviction of a Member .. .. .. .. 353

V Papers laid on the Table of the House .. .. .. .. 394


## *Saturday, the 7th March 1964.*


I Questions and Answers .. .. .. .. .. .. 395–413

II Government Motion—Change in the Order of Business .. .. 413

III General Discussion on the Budget for 1964-65—*cont.* .. .. 414–497

IV Papers laid on the Table of the House .. .. .. .. 497



D
V211,31' N64
N64.18

138003




## *How to use the Index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading Bill(s).

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i. e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion .. .. | Adjournment Motion. |
| Ann. .. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. | Business of the House. |
| C.A. .. .. .. .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. .. .. .. | Calling Attention Statement. |
| Consid. .. .. .. | Consideration stage of a Bill. This stage includes: (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. .. .. .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. .. .. .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. .. .. .. | Demands for Supplementary Grants. |

| | |
|---|---|
| G.A. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. .. | Half-hour Discussion. |
| Int. .. .. .. .. | Introduction stage of a Bill. |
| L.A. .. .. .. .. | Legislative Assembly. |
| L.C. .. .. .. .. | Legislative Council. |
| M. .. .. .. .. | Motion. |
| P.M. .. .. .. .. | Privilege Motion. |
| R/Res. .. .. .. | Resolution. |
| St. .. .. .. .. | Statement. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 3rd March 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS

### "வளர்ப்புத் தந்தை" ("God Father") திட்டம்

*** 131 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து சீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கல்வி இலாகா இயக்குனர் அறிவித்துள்ள "God Father" திட்டத்தின் நோக்கமென்ன?

(இ) இத் திட்டம் அமுல்படுத்தப்பட்டதில் ஏற்பட்டுள்ள நன்மைகள் என்னென்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) கல்வித் திறனை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இடையே நல்லெண்ணத்தையும், ஒருமைப்பாட்டையும் சேர்த்து செயலாற்றும் பண்பையும் ஏற்படுத்துவதே "God Father" திட்டத்தின் (வளர்ப்புத் தந்தை) திட்டத்தின் நோக்கமாகும்.

(இ) இத் திட்டம் மாவட்டங்களில் நன்கு வரவேற்கப்படுகிறதென்றும், பள்ளி வேலையைத் திட்டமிடுவதில் தேவைப்படும் ஒருமைப்பாட்டினை அடைய பல பள்ளிகள் இதை ஆர்வத்துடன் அமுல்படுத்த முயல்கின்றனவென்றும் கல்வித்துறை டைரக்டர் தெரிவித்துள்ளார்.

(a) The aim of the "God Father" scheme is to bring about better understanding, integration and unity of purpose between the teachers of the Elementary Schools and those of the High Schools with a view to improving academic efficiency.

(b) The Director of Public Instruction has stated that the scheme has been well received in the districts and the several schools are trying in right earnest to achieve the much needed co-ordination in planning the school work.

**திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களில் ஒருமைப்பாடு ஏற்படுத்த இது உதவியாக இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால் இதுவரையில் பள்ளிகளில் ஒருமைப்பாடு இல்லாமல் இருந்து வந்ததா? இப்போது புதிதாக ஒருமைப்பாட்டை உண்டாக்க இந்தத் திட்டத்தின் மூலம் முயற்சி செய்யப்படுகிறதா?

[3rd March 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினருக்கு நாட்டு ஒருமைப்பாடு என்றால் ஒரு அலெர்ஜி உண்டு. இது நாட்டு ஒருமைப்பாடு அல்ல. இப்போது ஆரம்பப் பள்ளி இருக்கிறது, உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அவை ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இருக்கின்றன. இப்போது ஆரம்பப் பள்ளியில் பாஸ் செய்து விட்டு அத்தாட்சிப் பத்திரம் பெற்றாலும் உயர்நிலைப் பள்ளியில் அப்படியே சேர்த்துக்கொள்வதில்லை. அங்கே மறுபடியும் பரிட்சை வைப்பார்கள். அது இப்போது இன்டெக்ரேட் செய்யப்பட்டிருக்கிறது. 6, 7, 8 வகுப்புகளைப் படித்துவிட்டு 9, 10, 11 வகுப்புகளைப் படிப்பதற்கு ஒரே இன்டெக்ரேட்டெட் ஸ்கீமாக 11 வகுப்புக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளியில் படித்த மாணவன் பாஸ் செய்தவுடன் உயர்நிலைப் பள்ளிக்குப் போகவேண்டும். அதற்கு ஒத்ததாக இருக்க வேண்டுமானால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் ஒவ்வொருவருடைய அனுபவத்தைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிப் படிப்பு ஒருமைப்பாடுதான் இதனால் ஏற்படுத்தப்படுகிறது. வேறு ஒன்றும் அல்ல.

**திரு. து. ப. அழகமுத்து :** இப்போது இரண்டும் இன்டெக்ரேட்டெட் ஸ்கீமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால் இந்தத் திட்டமே தேவையில்லை என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒருமைப்பாடு என்பதால் கனம் அங்கத்தினருக்கு ஆட்சேபம் இருக்கிறது. ஒருமைப்பாடு என்ற வார்த்தைக்கே இவ்வளவு ஆட்சேபம் இருந்தாலும் நாட்டு ஒருமைப்பாட்டை கனம் அங்கத்தினரால் தவிர்க்க முடியாது. ஆரம்பப் பள்ளி உயர்நிலைப்பள்ளி இன்டெக்ரேஷன் என்று சொன்னேன். ஒருமைப்பாடு என்றால் இதை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்பதுதான் நோக்கம்.

**புலவர் கா. கோவிந்தன் :** ஆரம்பப் பள்ளியில் போதிக்கும் ஆங்கிலம் உயர்நிலைப் பள்ளியில் போதிக்கும் ஆங்கிலத்திற்கு ஒத்ததாக இருக்க வேண்டும். கல்வித் தரம் உயரவேண்டும் என்ற காரணத்திற்காக இந்தத் திட்டம் வந்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால் இந்தத் திட்டத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் கலந்து பணியாற்றும் அந்தப் பணி எந்த அளவில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதற்கு மாத்திரம் அல்ல, பொதுவாக அறிவு புகட்ட, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் எப்படி நிறைவேற்றலாம் என்று கலந்து பேசுவார்கள். இதுதான் இதிலே நோக்கமாகும்..



3rd March 1964]

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் குறிப்பிட்ட சில பள்ளிகளில் சில பகுதிகளில் பரீட்சார்த்தமாக எடுக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகிறதா? அல்லது பரவலாக எல்லா இடங்களிலும் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது பரவலான முறையில் நடத்தப்பட வேண்டும், நடத்தப்பட்டு வருகிறது. இதைத் திட்டம் என்று கூடக் கூறுவதற்கில்லை. ஆரம்பப் பள்ளியும் உயர்நிலைப் பள்ளியும் ஒரே ஸ்தலத்தில் இருந்தால் அந்தப் பள்ளிகளின் ஆசிரியர்கள் கலந்துகொள்ளவேண்டுமென்பதுதான் இதன் கருத்து.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை இப்போது உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஆரம்பப் பள்ளிகளுக்கும் மட்டுமே வைத்திருக்கிறோம். இந்தத் திட்டத்தைக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி ஒருமைப்பாடு ஏற்பட விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உயர்நிலைப் பள்ளிக்கும் கல்லூரிக்கும் இணைப்புத் திட்டம் இல்லை. ஆரம்பப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும் இணைக்கவேண்டும் என்பதுதான் கருத்து. மேலும் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கு மாணவர்கள் தான் கல்லூரிக்குப் போகிறார்கள். இதை இணைப்பது அவசியம் இல்லை, சாத்தியமும் அல்ல.

**திரு. செ. மாதவன் :** திட்டம் அமலாக்கப்படும் பகுதியிலுள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தங்களை மேற்பார்வை செய்வது போல் இருக்கிறது என்று ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்களே? அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் வேண்டுமானால் ஆட்சேபிக்கலாம். இதிலே மேற்பார்வை ஒன்றும் இல்லை. இது பற்றி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஆட்சேபிக்க இடம் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் கலந்து பாடத் திட்டத்தை எந்த முறையில் செயலாற்றவேண்டும் என்று கலந்து பேசுவது நல்லது தான். கலந்து பேசுகிற வாய்ப்பை உண்டாக்குகிறவர்கள் யார்? கல்வித் துறையினர் இரண்டு பேர்களையும் கூடிப் பேச திட்டத்தைத் தயாரித்து நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது விஷயம் பற்றிக் கல்வித் துறை அதிகாரிகள் கவனம் செலுத்துவார்கள்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் இந்தத் திட்டத்திலே சிலபஸ் எப்படி இருக்கவேண்டும், எப்படி அதை நடத்த வேண்டும் என்று கலந்து பேசச் செல்லுகிறபோது அவர்களுக்குப் பயணப்படி, தினப்படி கொடுக்கப்படுகிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே சொன்னேன், ஒரு ஸ்தலத்தில் ஆரம்பப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும் இருக்கிற இடத்தில்தான் அவர்கள் கலந்து பேசுவார்கள்.

**கனம் சபாநாயகர் :** அப்புறம் பயணப்படி பற்றித்தான் பேசுவார்கள், திட்டத்தைப் பற்றிப் பேசமாட்டார்கள். பயணப்படி கிடைக்குமா, கிடைக்காதா என்று தீர்மானம் போட்டுக்கொண்டிருப்பார்கள்.

### பள்ளி இறுதித் தேர்விற்கான அத்தாட்சிப் பத்திரங்கள்

* 132 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962 மார்ச்சில் நடைபெற்ற பள்ளியிறுதித் தேர்வில் பொய் சர்ட்டிபிகேட்டுகள் வழங்கப்பட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்துள்ளதா ?

(இ) அவ்வாறு எத்தனை சர்ட்டிபிகேட்டுகள் வழங்கப்பட்டன ?

(உ) அதன் மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*c*) The matter is under investigation.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, பல ஆண்டுகாலம் பள்ளிகளில் படித்து விட்டு, பல தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, கடைசியில் மாணவர்கள் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெறுகிறார்கள். அப்படி ஒரு முறை ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும் நிலையில், சிலர் எந்த வித முயற்சியும் இல்லாமல் கள்ளத் தனமாகப் பணம் கொடுத்து சர்ட்டிபிகேட் பெறக் கூடிய முறையும் தமிழ் நாட்டில் நீண்டகாலமாக இருந்துகொண்டு வருகிறது. நீண்டகாலமாக இருந்து வரும் இப்படிப்பட்ட குற்றம் இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது வரையில் எந்தவிதமான குற்றச்சாட்டும் கண்டுபிடிக்கப்படவில்லையா ? நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லையா ? இதில் ஏன் அசட்டைத் தனமாக இருக்கிறார்கள் என்று சர்க்கார் அறிவிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் புலவர் அவர்கள் இந்தக் கேள்வியைப் புரிந்துகொள்ளவில்லை என்று வருந்துகிறேன். இந்தக் கேள்வி 1962 மார்ச் பப்ளிக் எக்ஸாமினேஷனில் ஃபார்ஜ்டு சர்ட்டிஃபிகேட் பற்றியது. அது பற்றி விசாரணை நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னேன். பொதுவாக அல்ல இந்தக் கேள்வி.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 1962-ம் ஆண்டு நடைபெற்றதை மட்டும் விசாரித்து வருவதாகச் சொன்னார்கள். பொய் சர்ட்டிஃபிகேட் கொடுக்க ஒரு இயக்கம் நடத்தப்படுவது உண்மையா ? அதில் யார் யார் கலந்திருக்கிறார்கள் ?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. கனம் அங்கத்தினரிடம் தகவல் ஏதாவது இருந்தால் அதை எனக்கு அனுப்பலாம்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு எழுதிய மாணவன் தேர்வு பெற முடியாத நிலையிலே கமிஷனர் ஃபார் கவர்ண்மெண்ட் எக்ஸாமினேஷன்ஸ் அலுவலகத்திலே யாரோ ஒரு தரகரைக் கொண்டு மார்க் போட்டு பாஸ் செய்ய முடியும் என்று பணம் கொடுத்தால் செய்வதாகச் சொல்லி, ஆஃபீஸ் ஆஃப் தி கமிஷனர் ஃபார் கவர்ண்மெண்ட் எக்ஸாமினேஷன்ஸ் என்று ஸீல் போட்டு அதிலே அந்தப் பையன் அதிகமான மார்க் பெற்று பாஸ் செய்து விட்டதாகப் போட்டு பணம் பெற்றுக்கொண்டு போயிருக்கிறார்கள். உண்மையில் பெற்ற மார்க்குகள் 152. ஸீல் போட்ட காகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்குகள் 261. இது பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? அது பற்றி அரசாங்கத்திற்குப் புகார் பண்ணினால் கவனிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. அரசாங்க அலுவலகத்தில் இருக்கிறவர் யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அவ்வாறு ஏதாவது அங்கத்தினரிடம் தகவல் இருந்தால் அதை அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1963-ம் ஆண்டுக்கு முன்னால் நடைபெற்ற தேர்வுகளிலே இப்படிப்பட்ட பொய் சர்ட்டிபிகேட்கள் வழங்கப்பட்டதாக அறிந்து, அதன் காரணமாக சிலர் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டார்களா ? அதுபற்றிய விவரங்களை அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி அரசாங்க பரீட்சைக் கமிஷனருக்குத் தகவல் வந்து, அதற்கப்புறம் அதை மேலும் நல்ல முறையில் விசாரிக்கவேண்டும் என்று ஸி.ஐ.டி. போலீஸுக்கு வழக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை அவர்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். 'பைனல் ரிபோர்ட்டு' இன்னும் வரவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இம்மாதிரி பொய் சர்டிபிகேட் வாங்குவதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் என்ன யோசனை செய்திருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்காக ஒன்றும் தடை வேண்டியதில்லை. ஏற்கனவே தடை இருக்கிறது, இப்படிச் செய்வது தவறு, குற்றம். குற்றம் செய்கிறவர்கள் எங்கும் இருக்கிறார்கள். குற்றம் செய்ததாகத் தெரிந்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**புலவர் கா. கோவிந்தன்:** இந்தக் குற்றச்சாட்டு 1962-ல் நடைபெற்றது. இப்பொழுது 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் தேர்வு நடைபெறவேண்டிய காலம் வந்துவிட்டது. இரண்டு ஆண்டு காலம் கழிந்துவிட்டது. இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு நடந்த ஒரு குற்றச்சாட்டு இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டிற்கு இவ்வளவு நீண்டகாலப் பரிசீலனை தேவைதானா? இது எவ்வளவு பெரிய கெடுதலைத் தமிழ் நாட்டிற்கு உண்டாக்கும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் காரசாரமாகக் கேள்வி கேட்டார். புலவர் அவர்களுக்கு ஆத்திரம் வருவது இயற்கை தான். இம்மாதிரி செய்வது கூடாது, தலை.யு. 1962-ம் ஆண்டு பரீட்சை நடந்தது. பரீட்சையின் முடிவுகள் ஜூன் மாதத்தில் வெளி வந்திருக்கும். பொய் சர்டிபிகேட் என்றால் அதற்குப் பிறகு 2, 3 மாதங்களுக்குப் பின்னால் வந்திருக்கும். அதற்குப் பிறகு அது பரீட்சை கமிஷனர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். கமிஷனர் அவர்களுக்கு எப்பொழுது தெரிந்ததோ அதற்கு மேலே அவர்கள் அதைப் போலீஸிடம் கொடுத்து விசாரிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அனாவசியமாக தவிர்க்கக் கூடிய தாமதம் இதில் ஒன்றும் இல்லை என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. செ. மாதவன்:** 1962-ம் ஆண்டு நடந்த நிகழ்ச்சிக்குத்தான் இப்படிப்பட்ட காலதாமதம் என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க முன்வந்தார்கள். அதற்கு முன்னால் பல ஆண்டுகளுக்கு முன்பு இப்படிப்பட்ட பொய் சர்டிபிகேட்கள் வழங்கப்பட்டு, சந்தேகத்தின்பேரில் ஒரு சில தலைமை ஆசிரியர்களிடம் சர்டிபிகேட்களை டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் வரவழைத்து, அவை இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை, இன்னும் விசாரணையில் இருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பாகக் கேள்வி கேட்டால் அல்லது எழுதி அனுப்பினால், மேலும் அதில் கவனம் செலுத்தப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்படிப்பட்ட பொய் சர்டிபிகேட்கள் வழங்கப்படுவதற்கான தவறான அடிப்படை என்ன என்று கண்டுபிடித்து அந்தத் தவறான அடிப்படையை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிற விஷயம். அதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை சுலபமாக உணர்ந்து கொள்ளவும் கூடும். பரீட்சையில் தேறியதாக [illegible]



சர்டிபிகேட் வாங்கினால் உத்தியோகம் கிடைக்கும், உத்தியோகம் கிடைப்பதற்கு பரீட்சையில் தேறியதற்கான சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் தான் இதற்கு அடிப்படை.

*Election of Chairman of Panchayat Unions.*

* 133 *Q*.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal for amending the Panchayats Act, 1958, concerning the election of Chairmen of Panchayat Unions;

(*b*) if so, the details thereof; and

(*c*) when a final decision would be taken in the matter?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பஞ்சாயத்து போர்டு தேர்தல்களை எப்பொழுது நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அதற்குத் தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.

**திரு. செ. மாதவன்:** பஞ்சாயத்துத் தலைவர்களுடைய மகா நாட்டில் பஞ்சாயத்து சேர்மன்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதா? அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா? முடிவு என்ன? முடிவு இல்லை என்றால், எப்பொழுது அந்த முடிவைத் தெரிவிப்பார்கள்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** தாலுகா பஞ்சாயத்து சங்கங்களில் நமது மாநிலத்தில் பல சங்கங்களில் அம்மாதிரி தீர்மானம் செய்திருப்பது சர்க்காருக்குத் தெரியும். இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யும்பொழுது இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு எடுக்கப்படும்.

**திரு. ம. கமலநாதன்:** பஞ்சாயத்து பொதுத் தேர்தல் நடந்து 7, 8 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்படும் என்று தெரிந்தால் நல்லவர்கள் பஞ்சாயத்திற்கு வந்து, பஞ்சாயத்து யூனியனுக்கு வரலாம். அவர்களெல்லாம் எப்பொழுது தேர்தல் நடக்கும் என்று ஒவ்வொரு கிராமத்திலும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நேஷனல் எமெர்ஜன்ஸி என்று அறிவித்திருந்தாலும், முனிசிபல் எலெக்ஷன், 'பை-எலெக்ஷன்' இவைகளெல்லாம் நடக்கவில்லையா என்று கேட்கிறார்கள். ஆகவே, இந்தத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா? பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதைப்பற்றி அறிவிப்புத் தெரிவி

கும் நேரத்தில், எப்படி தேர்தலை நடத்தவேண்டும் என்பதை ஆராய்வதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு ஏற்படுத்தி, அந்த அளவில் இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இந்தக் கேள்வி பஞ்சாயத்து யூனியன் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதா என்பதைப் பற்றியதுதான். பஞ்சாயத்து யூனியன் தேர்தல் எப்பொழுது நடத்துவது, பஞ்சாயத்துத் தேர்தல் நடத்துவது எப்பொழுது என்ற பிரச்னைகளுக்கு இதில் இடமில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது பற்றிய கருத்து இந்த மன்றத்தில் இரண்டு ஆண்டு காலமாகப் பல்வேறு வாய்ப்புகளில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் இதுவரையில் இதைப் பரிசீலனை செய்தார்களா ? அப்படிச் செய்தால் என்ன முடிவு ? முடிவு செய்யவில்லை என்றால் என்ன காரணம் ? அல்லது முடிவு செய்ய இருக்கிறார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இதைப்பற்றி ஆலோசிக்கலாம் என்று மட்டும் கூறிக்கொள்கிறேன். நகராட்சித் தேர்தல்கள் இப்பொழுதுதான் முடிவடைந்திருக்கிறது. அடுத்த கட்டத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் பற்றி ஆலோசனை செய்வது உத்தேசத்தில் இருக்கும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பஞ்சாயத்துத் தேர்தல்கள் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் டெல்லி அரசாங்கம் கனம் சந்தானம் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் நமது அரசாங்கம் அவர்களுடைய ரிபோர்ட்டு கிடைக்கும் வரையில் காத்திருக்குமா ? அல்லது அதற்கு முன்பே தேர்தலுக்கு ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரித் தகவல் என்னிடம் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** பஞ்சாயத்து ஆட்சி அமைக்கிற நேரத்தில் அவசரம் அவசரமாக அமைத்துவிட்டோம். அதன் காரணமாக சில சில ஊர்களைப் பொருந்தாத முறையிலே சேர்த்து பஞ்சாயத்துக்களாக ஆக்கியிருக்கிறோம். அந்த ஊர்களில் தனிப் பஞ்சாயத்து வேண்டும், அல்லது வேறு பஞ்சாயத்தோடு இணைக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்பே அப்படிப்பட்ட வேண்டுகோளை ஏற்று, பரிசீலனை செய்து பஞ்சாயத்துத் தேர்தல் வருவதற்கு முன்பாக இதைப்பற்றி அறிவிப்பார்களா ?





**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே அம்மாதிரி சில பஞ்சாயத்துக்கள் பிரிப்பது அல்லது சேர்ப்பது என்ற பிரச்னைகளை சர்க்காரும் கவனத்தில் கொண்டிருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள்கூட ஒரு கூட்டத்தில் இதைப்பற்றி பேசியதை கனம் அங்கத்தினர்கள் பார்த்திருக்கலாம். அவைகளெல்லாம் சிறந்த கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** பஞ்சாயத்துத் தலைவர்களையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் நேரடியாக மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் திருநெல்வேலியில் ஒரு கூட்டத்தில் பேசினார்கள். அதைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி நான் பார்க்கவில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன், கார்ப்பரேஷன், முனிசிபாலிடி ஆகியவைகளுக்குத் தேர்தல்களை, பார்லிமெண்டிற்கும், சட்ட மன்றத்திற்கும் ஒரே நாளில் இரண்டு வோட்டுகளை அளித்து தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது போல், மாநிலத்தில் எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துக்கு ஒரு வோட்டு, முனிசிபாலிடிக்கு ஒரு வோட்டு என்று நான்கு வோட்டுகளை அளிப்பதன்மூலம் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதுபற்றி அரசாங்கம் ஏதாவது யோசிக்குமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** முனிசிபல் தேர்தல் இப்பொழுது தனியாக நடத்தப்பட்டு முடிவடைந்துவிட்டது. கனம் அங்கத்தினர் கேள்வியில் பஞ்சாயத்து மெம்பர், பஞ்சாயத்து தலைவர், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் என்று சொன்னால் பொருத்தமாக இருந்திருக்கும்.

**டாக்டர் பா. நடராஜன் :** ஏனைய மாவட்டங்களில் இருப்பது போல், கன்னியாகுமரி ஜில்லாவிலும் டவுன் பஞ்சாயத்துக்களை மாற்றி கிராமப் பஞ்சாயத்துக்களாக அமைக்கின்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அந்த மாவட்டம் முன்பு திருவாங்கூர்-கொச்சி சர்க்கார் ஆட்சியில் இருந்தது அங்குள்ள சட்டத்தின் அடிப்படையிலே பல பஞ்சாயத்துகள் இணைந்து ஒரு பஞ்சாயத்தாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றிய பிரச்னை சர்க்காரின் கவனத்திற்கு வரவில்லை.

**திரு. எம். தண்டாயுதபாணி :** குறிப்பாக தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், 75,000 வாக்காளர்கள் கொண்ட ஒரு கூட்டு மன்றத்திற்குப் பொது மக்களால் நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், அது ஒரு பொதுத் தேர்தலை நடத்துவது போல் அமையும். ஆகவே, அதை மனதில்கொண்டு,

[3rd March 1964

சிறிய சிறிய, அமைப்புக் கொண்டுள்ள பஞ்சாயத்து யூனியன்களிலே, பெரிதாக அமைந்திருக்கும் கூட்டு மன்றங்களிலுள்ள பஞ்சாயத்துக்களைப் பிரிந்து சேர்ப்பதற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** டீலிமிட் பண்ணும்பொழுது அது பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம்.

குழாய்க்கிணறுத் திட்டம், புதுக்கோட்டை

*** 134 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை போன்ற பகுதிகளில் குழாய்க் கிணறுத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன் :** குழாய்க் கிணற்றுத் திட்டத்தை புதுக்கோட்டைப் பகுதிக்கு விஸ்தரிக்க தற்சமயம் உத்தேசம் எதுவும் இல்லை.

There is no proposal to extend the tube well scheme to the Pudukkottai area at present.

**திரு. பி. முருகையன் :** புதுக்கோட்டைப் பகுதியில் ஆலங்குடி தாலுகாவில் சோத்துப்பாளையில் ஊத்துக்குழிக்குளம், கருக்காகுரிச்சிக்குளம், நம்பப்பட்டி குளங்களில் கோடை காலத்தில் ஊற்றுக்கள் ஏராளமாக வருகின்றன. அந்தப் பகுதியில் இந்தத் திட்டம் இருக்கிறதென்று கலெக்டர் அவர்கள் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலே கூறினார். அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டில் குழாய்க் கிணறு திட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்பேற்பட்ட இடங்களில் விவசாயிகளே கிணறுகளுக்காகக் கடன் வாங்கி வெட்டிக் கொள்ளலாம். மாநில சர்க்காரும் விவசாய இலாக்கா மூலமாக, டியூப் வெல்ஸ் ஆர்கனைசேஷன் மூலமாகச் செய்ய வேண்டியது.

**திரு. செ. மாதவன் :** இந்தக் குழாய்க் கிணறுத் திட்டம் மத்திய சர்க்காருடைய உதவியால் நடத்தப்படுகிறது. அப்படி நடத்தப்படுகின்ற காரணத்தினால், அவர்கள் தண்ணீருக்குப் போதுமான வருமானம் ஒரு இடத்தில் இருந்தால் கொண்டு வருவோம், அவ்வாறு தக்க வருமானம் கிடைக்கவில்லை என்றால் கொண்டு வர மாட்டோம் என்று சொல்லுவது உண்மையா? அதன் காரணமாக, பின்தங்கிய ராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டம் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது உண்மையா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கிணறுகள் போடும்பொழுது தண்ணீர் போதுமான அளவு கிடைத்தால்தான் நல்லது என்று எக்ஸ்பொளோரேட்டரி டியூப் வெல்ஸ் ஆர்கனைசேஷன் நினைக்கிறது. விவசாயிகளிடத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 125 கேட்கிறார்கள் ரூ. 45 ரேட்



3rd March 1964]

இருந்தால் பரவாயில்லை என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். இந்த மாதிரிக் கிணறுகள் அதிகமாகத் தோண்டவேண்டும் என்று நினைத்துத்தான், எங்கெல்லாம் தண்ணீர் சாதகமாகக் கிடைக்கிறதோ, அங்கெல்லாம், அதிலும் குறிப்பாக தஞ்சாவூர், செங்கல்பட்டு, ராமநாதபுரம் மாவட்டங்களில் டியூப் வெல்கள் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

**திரு. க. ர. நல்லசிவம் :** கோயம்புத்தூர் மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் இதற்குத் தகுந்தபடி இருக்கின்றன?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** இந்தக் குழாய் கிணறுத் திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் சௌகர்யமாக இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் 20, 30 செட்டுகள் வைத்து வேலை செய்கிறார்கள். இவ்வாறு குழாய்க் கிணறுகள் அமைக்கும்போது அவற்றை டெஸ்ட் செய்வதற்கு எஞ்சின் கிடையாது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். லாரியில் போய், கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் குழாய்க் கிணறுத் திட்டம் சரியான முறையில் இயங்குவதற்கும், தண்ணீர் இருக்கிறதா என்று பார்ப்பதற்கும் என்ஜின்களை சப்ளை செய்ய வேண்டியது அவசியம். அவற்றை சப்ளை செய்ய அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அது பற்றி யோசிக்கப்படும்.

செகண்டரி பள்ளிகளில் இலவசப் படிப்பு

*** 135 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் செகண்டரி பள்ளிகளில் படிக்கும் எல்லாப் பெண்களுக்கும் இலவசக் கல்வி அளிக்க நமது அரசாங்கம் ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have now decided to make education up to Secondary School level free for all irrespective of income.

* 136 Q.—SRI M. KALYANASUNDARAM : }
SRI S. ARUMUGAM : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) when a final decision will be taken on the proposal to give free education to all children up to S.S.L.C. Class; and

(b) whether the scheme would be brought into force from the next school-year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have now decided to make education up to Secondary School level free for all, irrespective of income.

(b) Yes.

[3rd March 1964

**திரு. செ. மாதவன் :** இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் சில பள்ளிகளிலே கல்வித்தரம் குறையும் என்றும், தனியார் வைத்து நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்களுக்குத் துன்பம் ஏற்படும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதா ? அதை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிலர் அத்தகைய கருத்துக்கள் கொண்டிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் என்ன கருத்து கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. அந்த மாதிரிக் கருத்துக்களுக்குக் கொஞ்சம்கூட இடம் இல்லை என்று நான் கூறுவேன்.

**திரு. சா. கணேசன் :** தனியார் நடத்துகிற உயர்நிலைப் பள்ளிகளில், அதிலும் குறிப்பாக மிஷனரிகள் நடத்துகிற உயர்நிலைப் பள்ளிகளில் சம்பளம் வசூல் செய்து தருவது நமக்கெல்லாம் தெரியும். அதை எடுக்கிறபொழுது அந்தப் பள்ளிகளிலே ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டு, அதனாலே பள்ளியின் வளர்ச்சி தடைப்படுமா ? அதற்கு ஏதாவது பரிகாரங்கள் செய்ய அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கூறிய பொழுது, தனியார் துறையில் நடத்தப்படுகிற மிஷனரிப் பள்ளிகள் என்று சொன்னார்கள். தனியார் துறையில் மிஷனரிகள் நடத்துகிற பள்ளிகளில் ஏதோ ஒரு விசேஷ அம்சம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சில பள்ளிகள் நல்ல முறையில் நடக்கலாம். சில பள்ளிகளில் நல்ல டிஸிப்ளின் இருக்கலாம். ஆனால் எல்லாம் ஒரே திட்டத்தின்கீழ்தான் வரும். ஆனால், சில கான்வென்ட் பள்ளிகள் இருக்கின்றன. அவைகள் இந்தத் திட்டத்தின்கீழே வருகிறதா என்றால், அந்த ஸ்கூல்களிலே மெட்ரிகுலேஷன் பரிட்சைக்கு மாணவர்களை அனுப்புகிறார்கள். உதாரணத்திற்கு சர்ச் பார்க் கான்வென்ட், குட் ஷெப்பர்டு கான்வென்ட் ஆகிய பள்ளிகளைச் சொல்லுகிறேன். அந்தப் பள்ளிகள் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டவை. அவைகளுக்கு இது பொருந்தாது. கிராண்டும் கொடுப்பதில்லை. மிஷனரிகள் நடத்துகிற பள்ளிகள் உள்பட, தனியார் துறையில் உள்ள பள்ளிகளில் இன்றும் ரூ. 1,500 வருமானத்திற்கு உட்பட்ட பெற்றோர்களின் குழந்தைகளுக்கு சம்பளச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. கெஜட் பதிவில்லாத ஊழியர்களின் குழந்தைகளுக்கும் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜன மாணவர்களுக்கும், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சலுகையளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அளிக்கும்போது அதற்காக நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது. இவ்வாறு சலுகைகள் கொடுப்பதிலே, நான் முன்பு கூறினபடி 83 சதவிகிதம் வருகிறது. நகரப் பள்ளிகளிலே குறைவாக இருக்கலாம். கிராமப் பள்ளிகளிலே அதிகமாக இருக்கலாம். இப்பொழுது எந்த அடிப்படையிலே நஷ்ட ஈடு



3rd March 1964]

கொடுக்கப்படுகிறதோ, அதேவகையிலே நஷ்ட ஈடு கொடுக்கப்படும் மற்றப் பள்ளிகளுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும். இதனால் பள்ளிகள் எவ்வாறு பாதிக்கப்படும் என்பது புரியவில்லை.

**திரு. சா. கணேசன் :** அத்தகைய பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதானது, இப்பொழுது அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற முயற்சிகளினாலே அல்லது முறையினாலே நிறுத்தப்பெறும். கட்டணம் என்பதற்குப் பதிலாக சந்தா என்று சிலர் வசூலிக்க எண்ணியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். " பீஸ் " என்பதற்கு பதிலாக " ஸப்ஸ்கிருப்ஷன் " என்று வாங்க இருப்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறதா ? இதற்கு ஏதாவது தடுப்பு முறையை மேற்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது சம்பளம் வசூலிக்கிறார்கள். சம்பளத்திற்கு மேலே லைப்ரரி பீஸ், கேம்ஸ் பீஸ் என்று எல்லாம் வசூலிக்கிறார்கள். அதுவேறு விஷயம். ஏதோ ஒரு பெயரை வைத்துக்கொண்டு அதிகமாக வசூல் செய்வதன் மூலம் குழந்தைகளுடைய பெற்றோர்கள் சுரண்டப்படுகிறார்கள் என்றால் அது கல்வி இலாகாவினால் கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** பத்தாவது வகுப்பு வரையில் இலவசக் கல்வி அளித்திருப்பதின்மூலம், அரசாங்கத்திற்கு இந்த ஆண்டு எவ்வளவு செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் வரவுசெலவுத் திட்டத்திலே சுமாராக எவ்வளவு செலவாகும் என்று குறிப்பிட்டேன். இப்பொழுது கணக்குப்போட முடியாது. இந்தத் திட்டத்தை மேற்கொள்வதினால், சுமார் ரூ. 50 லட்சம் அதிகச் செலவாகும் என்று குறிப்பிட்டேன்.

**திரு. ஏ. ஆறுமுகம் :** பொதுவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கல்வி விஷயத்திலே அதிகமாகக் கவனம் செலுத்தி வருகிறார்கள். அதிலும் பெண்கள் கல்வியிலே மேலும் அதிக கவனம் செலுத்துகிறார்கள். பெண்களைப் பொறுத்தவரையில் கல்லூரி வரையிலும் இலவசமாகக் கல்வி பெறுவதற்கு அரசாங்கம் சலுகை அளிக்க உத்தேசித்துள்ளார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெண்கள் கல்வியிலே என்னை விட கனம் அங்கத்தினர் அக்கறை உள்ளவராக இருக்கிறார். ஏனென்றால் ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் சரி சமமாக நான் உயர்நிலைப் பள்ளி வரையில் சம்பள சலுகை அளித்திருக்கிறேன். சாவித்திரி வரம் கேட்டதுபோல, இப்பொழுது உயர்நிலைப்பள்ளி வரையிலும் ஆய்விட்டது, மேற்கொண்டு கல்லூரிக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிவரையிலும்தான் இப்பொழுது சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர் :** ஸார், நகர சபையார் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[3rd March 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அப்படி உத்தேசம் இல்லை. ஏதாவது நகர மன்றம் தங்களால் நடத்த முடியவில்லை என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்தால், அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

### ரிவர் பம்பிங் திட்டம், திருநெல்வேலி

*137 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்**: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் நிறைவேற்ற உத்தேசித்துள்ளவை River Pumping Schemes). எவை எவை?

(இ) அவைகளில் இந்த ஆண்டு எவை எவை மேற்கொள்ளப் படும்?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) & (இ) கள்ளிக்குளத்தில், ஒரு ரிவர் பம்பிங் ஸ்கீம் 1961-62-ல் ஏற்கெனவே துவக்கப்பட்டு விட்டது. இந்த மாவட்டத்தில் கலிங்கப்பட்டி கிராமத்திற்காக அனுமதிக்கப் பட்டுள்ள ரிவர் பம்பிங் ஸ்கீம் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாவது அடுத்த ஆண்டுத் துவக்கத்திலாவது ஆரம்பமாகலாம்.

(*a*) & (*b*) One River Pumping Scheme at **Kallikulam has** already been started during 1961-62. The River Pumping Scheme sanctioned for Kalingapatti village in the district is likely to be started before the close of this year or early next year.

**திரு. க. ர. நல்லசிவம்:** ஸார், இந்த ரிவர் பம்பிங் ஸ்கீம் கூட்டுறவு முறையிலே விவசாயிகளே தாங்களாகவே நடத்த ஏற்பாடு செய்தால், அவர்களுக்கு அரசாங்கம் முன் உரிமை அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** எங்கெல்லாம் கூட்டுறவு முறையிலே வைக்கவேண்டும் என்று கேட்டாலும், அந்த இடத்தைப் பார்த்து, அனுமதி கொடுக்கலாம் என்றால், அது பரிசீலனை செய்யப்படுகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** ஸார், இந்த திட்டங்கள் தவிர, திருச்செந்தூர் பகுதியில் குறங்கணி மேலாத்தூர் முதலிய இடங்களுக்கு ரிவர் பம்பிங் ஸ்கீம் பரிசீலிக்கப்பட்டதா, எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன்:** குறங்கணி, ஆழ்வார் தோப்பு, கைலாசபுரம், இன்னும் எட்டு ரிவர் பம்பிங் வைக்க, வைப்பாற்றில் பரிசீலனை செய்திருக்கிறார்கள்.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் செய்யாற்றில் ஏற்றம் போட்டு இறைத்து கரையோரத்தில் பயிர் செய்து வருகிறார்கள். அங்கே இம் மாதிரி அமைத்து நீர் இறைக்கும் திட்டத்திற்கு அனுமதி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



3rd March 1964]

**கனம் திரு. பூ. கக்கன்:** அப்படிப்பட்ட திட்டம் காவிரி ஆற்றில் கூட செய்திருக்கிறார்கள். பி.டபிள்யூ.டி. ஆபீசர்கள் பார்த்து அனுமதி கொடுக்கலாம் என்று தெரிவித்தால் அப்படிச் செய்யலாம்.

### உயர்நிலைப் பள்ளிகள் (தென்னாற்காடு)

*138 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு**: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர் நிலைப் பள்ளிகளில் பத்தாம் வகுப்புகள் வரை உள்ள பள்ளிகள் எத்தனை?

(இ) முதல் நிலைத் தமிழாசிரியர் (First Grade Tamil Pandits) போடப்படாத உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(உ) போடாமல் இருந்தால் காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 62.

(*b*) Nil.

(*c*) Does not arise.

**திரு. ஆ. தங்கவேலு:** தலைவர் அவர்களே, முதல் நிலைத் தமிழாசிரியர்கள் தங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவில்லை என்று விண்ணப்பம் கொடுத்து தெரிவித்திருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு தகவல் ஒன்றும் இல்லை.

### உயர்நிலைப் பள்ளிகள் (செங்கற்பட்டு)

*139 **கேள்வி.—வி. எஸ். எஸ். மணி (திரு. முனு ஆதி சார்பாக)**: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64-ம் ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் துவக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(இ) அவை எங்கெங்கு நிறுவப்பட்டன?

(உ) எந்த அடிப்படையில் இவைகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பெற்றுள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Five Board High Schools. Two Private Management Schools.

(*b*) Board High Schools—

(1) **Andarkuppam.**

(2) **Morapakkam.**

(3) Perungalathur.

(4) **Mattur.**

(5) **Ayyampet.**

Private managements :

(1) Virugambakkam.

(2) Pallavaram.

(c) If the need for the opening of a high school is established, the Government will accord necessary sanction for the opening of the High School in a locality, subject to the fulfilment of the conditions prescribed thereof.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** *ஸார், மாவட்ட வாரியாக உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்ட ரூ. 25,000 என்று சொல்லி, அதன் பிரகாரம் கழக உயர்நிலைப் பள்ளி தன் பங்குத் தொகையான 50 சதவிகிதத்தை கொடுக்க முன்வந்தும், சில பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலும், சிலவற்றிற்கு கொடுக்கப்படவில்லை, அதற்கு காரணம் என்ன, எந்த அடிப்படையில் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன, யார் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார், யாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, கல்வித் துறை இயக்குனருக்கா, டிவிசனல் இன்ஸ்பெக்டருக்கா, ஸ்பெஷல் டி.இ.ஓ.-க்கா என்று அறிவிக்க முடியுமா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *அரசாங்கம் இந்த ஆண்டில் ஓரளவு பணம் ஒதுக்கி வைத்திருக்கிறது. அந்த அளவுக்கு ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கும் கட்டடம் கட்ட என்று ரூ. 25,000 என்று சொல்லி, அதில் அவர்கள் 12,500 வசூலிக்க வேண்டும் என்ற அடிப்படையில், முதலிலே ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இதில் முடிவு எடுப்பது அரசாங்கம் தான். யார் முன் வருகிறார்களோ அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. சில இடங்களிலே, பொது மக்களிடத்திலே வசூலிக்க முடியாத நிலையில் பஞ்சாயத்து யூனியன் முன் வந்தால் அதற்கும் அனுமதி கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியனுக்கு இந்தக் கல்வி பொறுப்பில்லை என்றாலும் அப்படிச் செய்கிறோம், அப்படி 12,500 ரூபாய் வசூலித்தும் அனுமதி கொடுக்கவில்லை என்றால், பணம் போதவில்லை என்றுதான் பொருள்.*

**திரு. செ. மாதவன் :** *தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டிக்கொடுத்து, ஆசிரியர்களுக்கு வீடு கட்டித்தர ஆகும் செலவில் மத்திய சர்க்கார் ஏதாவது உதவித் தொகை கொடுக்க முன் வந்திருக்கிறார்களா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *மத்திய சர்க்கார் கடன் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்கள். ஆனால், 15 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். தவணை 30 ஆக இருக்க வேண்டும் என்றும், வட்டி குறைவாக இருக்க வேண்டும் என்றும் நான் கருதினேன். மற்ற மாநிலங்களும் இதே போன்ற கருத்தை தெரிவித்தன. இப்பொழுது அந்த விதிகளை தளர்த்தி கடன் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*





**புலவர் கா. கோவிந்தன் :** *சிற்றூர்களில் பள்ளிகள் உருவாகி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. பள்ளிகளுக்குக் கட்டடம் அத்தியாவசிய தேவை. ஒரு பள்ளிக்கூடத்திற்கு, வகுப்பிற்கு ஒரு பகுதி என்று வைத்துக்கொண்டாலும், 6 வகுப்புகளுக்கு 6 அறைகளும் ஆசிரியர்களுக்கு ஒரு அறையும், தலைமை ஆசிரியருக்கு ஒரு அறையும் ஆக 8 அறைகள் கொண்ட கட்டடம் தேவை. அந்த அளவாவது உடனடியாக அமைத்துக்கொடுக்க அரசாங்கம் வழி வகை செய்யுமா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *கட்டடம் அவசியம் வேண்டும். அதற்காக ஒரு ஆரம்பம் செய்ய வேண்டும் என்ற கருத்தில்தான் பணம் ஒதுக்கி பகிர்ந்து கொடுக்கப்படுகிறது.*

**திரு. எம். தண்டாயுதபாணி :** *தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பள்ளி கட்டடம் கட்ட தேர்ந்து எடுக்கப்பட்டது 200 பள்ளிகள் என்றாலும் விதிகள் பிரகாரம் கூட்டு மன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அது இங்கே ஏ.டி.சி.-யின் அனுமதி பெற்றால் தான் உண்டு என்று இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே கூட்டு மன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றினாலே போதும் என்ற அளவுக்கு விதிகளைத் திருத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *கூட்டு மன்றத்தின் நிதி நிலைமையைப் பார்த்துத்தான் இது அனுமதிக்கப்பட வேண்டியிருக்கிறது. அதனால் தான் இங்கே ஏ.டி.சி.-க்கு வரவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.*

**திரு. வி. எஸ். எஸ். மணி :** *தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 40 மாவட்டக்கழக உயர்நிலை பள்ளி கட்டட கமிட்டியார்கள் பங்குத்தொகை கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். இருந்தும் 15 பள்ளிகள் மட்டுமே தேர்ந்து எடுக்கப்பட்டு இருக்கிறது. அது எந்த அடிப்படையில் தேர்ந்து எடுக்கப்பட்டது என்று தெரிவிக்க முடியுமா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *எந்த அடிப்படையில் 40 பள்ளிகளில் 15 தேர்ந்து எடுக்கப்பட்டன என்று என்னிடம் தகவல் இல்லை. ஒதுக்கியிருக்கும் பணத்தை மற்ற மாவட்டங்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதும் ஒரு காரணம்.*

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** *தலைவர் அவர்களே, சில கிராமப்புறங்களில் பள்ளிக்கூடங்கள் திறக்கவேண்டிய அவசியம் இருந்தும் பணம் கொடுக்க முன் வருவது இல்லை. நிதி வசதி உள்ள பஞ்சாயத்து யூனியன் தாங்கள் பங்கு போடுகிறோம் என்று பணத்தைக் கொடுக்க முன் வந்தால் அவற்றினை அரசாங்கம் அனுமதிக்குமா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *மாவட்டக்கழகம் பொதுவாக ரூபாய் 10 ஆயிரம் டெபாசிட் செய்ய வேண்டும். முதல் ஆண்டில் ஐயாயிரம், அடுத்த ஆண்டில் மூவாயிரம், மூன்றாவது ஆண்டில்*

இரண்டாயிரம். இன்றைக்கு நிதிநிலை சரியாக இருக்கிறது என்று பஞ்சாயத்து யூனியன் பணம் கொடுக்க முன் வந்தால் கூட அதை அங்கீகரிப்பது சரியல்ல. பஞ்சாயத்து யூனியன்களுக்கு எத்தனையோ பொறுப்புக்களும், வேறு எத்தனையோ இனங்களில் செலவுகளும் இருக்கின்றன. ஆகவே இம்மாதிரி காரியங்களுக்கு பொது நிதியில் இருந்து கொடுப்பது சரியில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நீலகிரி ஜில்லாவில் மழையும் குளிரும் அதிகமாக இருப்பதால் நல்ல கட்டடங்கள் இருந்தால்தான் பள்ளிக்கூடங்கள் நடைபெற முடியும். மற்ற ஜில்லாக்களைப் போல், நீலகிரி ஜில்லாவுக்கும் இந்த ரூ. 12,500 வீதம் ஒதுக்குவது போதாது. ஆகவே, ஆர்வம் உள்ளவர்கள் பள்ளிக்கூடம் துவக்க முன்வந்தால், நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில், அதற்குப் பிரத்தியேக சலுகை அளித்து, இந்தத் தொகையை உயர்த்தி வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** நீலகிரி ஜில்லாவிற்கு எத்தகைய சலுகை அளிக்க வேண்டுமோ அத்தகைய சலுகை கூடிய வரையில் அளிக்கப்பட்டுத்தான் வருகிறது.

**திரு. எம். தண்டாயுதபாணி :** சென்ற ஆண்டு கட்டடம் கட்டத் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 பள்ளிகளுக்கு நிதி வசதி சரியாக அமையாத காரணத்தால் பல இடங்களில் கட்டடம் கட்டாத நிலையில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நிதி வசதி கொடுக்கத் தயாராக உள்ள உயர்நிலைப் பள்ளிகளாவது அதைக் கட்ட சர்க்கார் உத்தரவிடுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த விஷயமும் அப்போதைக்கப்போது அரசாங்கத்தின் கவனத்திலேதான் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. துரையரசன் :** தலைவர் அவர்களே, புதிதாக ஒரு உயர் நிலைப்பள்ளி துவக்க முதல் ஆண்டு ஐயாயிரம் ரூபாய், அடுத்த இரண்டு தவணைகளில் ஐயாயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அறந்தாங்கி வட்டத்தில் இதைப்போல பத்தாயிரம் ரூபாய் இரண்டு மூன்று தவணைகளில் கட்ட முடியாத நிலையில் நாலைந்து இடங்களில் கழக உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்க முடியவில்லை. மேலும், கட்டடம் கட்ட மக்கள் பங்குத் தொகை செலுத்த முடியாத நிலைமையும் அங்கு இருக்கிறது. ஆகவே, இத்தகைய பின் தங்கிய பகுதிகளுக்குச் சலுகை அளித்து, அரசாங்கமே எல்லாச் செலவுகளையும் ஏற்று, கழக உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்கும் வண்ணம் சட்டத்தில் ஏதாவது மாறுதல் செய்ய உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புதிதாகக் கழக உயர்நிலைப் பள்ளி அமைக்கப்படவேண்டுமென்றால், முதலில் ஐயாயிரம் ரூபாயும், அடுத்த தவணையில் மூவாயிரம் ரூபாயும், அதற்கும் அடுத்த தவணையில் இரண்டாயிரம் ரூபாயும் செலுத்தவேண்டு



மென்று நான் சொன்னேன். முதலில் ஐயாயிரம் ரூபாய் சேகரித்தால் கூட பள்ளிக்கூடம் வந்துவிடும். பாக்கித் தொகை கட்டவில்லை என்ற காரணத்திற்காக எந்தப் பள்ளிக்கூடமும் எடுக்கப்படவில்லை. ஆனால், அந்தத் தொகையும் கட்ட முடியாத அளவுக்குப் பிற்போக்குப் பகுதியாக இருந்து, அந்த இடத்தில் பள்ளிக்கூடம் திறக்கப்படுவதற்கு அவசியமும் ஏற்பட்டால், அது வேறு விஷயம். அதை அரசாங்கமே சர்க்கார் பள்ளியாக எடுத்துக்கொள்ளும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தலைவர் அவர்களே, சில கழக உயர்நிலைப் பள்ளிகளில் 'கேம்ஸ் ஃபீஸ்' என்பன போன்று அநேக கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு, அவை செலவு செய்யப்படாமல் அப்படியே இருக்கின்றன. அந்த நிதியைக் கட்டடம் கட்டுவதற்கு உபயோகப்படுத்த அரசாங்கம் அனுமதிக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டாலும் அல்லது எனக்கு எழுதி அனுப்பினாலும் கவனித்து வேண்டியதைச் செய்யலாம்.

**உயர்நிலைப் பள்ளிகள் (ஆலங்குடி தாலூகா)**

**140. கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் ஆலங்குடி தாலூகாவில் உள்ள ஆதனக்கோட்டை, வடகாடு, வல்லத்திராகோட்டை ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கப்பட்டனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இல்லை.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, 1963-ஆம் ஆண்டில் என்னுடைய கேள்வியில் கண்ட ஊர்களில் உயர்நிலைப்பள்ளிகள் துவக்க உத்தேசம் உண்டா என்கிற கேள்விக்கு, 1964-ஆம் ஆண்டில் பதில் வருகிறது. இந்த ஆண்டிலாவது பரிசீலனை செய்து, அந்த ஊர்களில் உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ? அத்துடன் ஆலங்குடியில் பெண்களுக்காக ஒரு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துவது பற்றி மாவட்டக் கல்வி அதிகாரியின் பரிந்துரை சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெண்கள் கல்வியைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். குறிப்பிட்ட கேள்வியைப் பொறுத்தமட்டில், என்னிடம் இருக்கும் தகவல்களிலிருந்து, இது வரை அந்த ஸ்தலத்திலுள்ள மக்கள் முன்வந்து இதை எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ததாகத் தெரியவில்லை.

**திரு. பி. முருகையன் :** கேள்வியில் கண்ட ஊர்களில் உள்ள பொது மக்கள் முயற்சி எடுத்து, அங்கு பங்குத் தொகை வசூல் செய்து, மாவட்டக் கல்வி அதிகாரியினுடைய நிபந்தனைப்படி கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதனை உத்தேசித்தாவது அங்கே இந்த ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உள்ளூர் மக்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டால் மேலும் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தார் இந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக பணம் கடனாக தருவதாக அமைச்சர் அவர்கள் . . .

கனம் சபாநாயகர்: முன் கேள்விக்குக் கனம் அங்கத்தினர் போய்விடுகிறார்.

SRI M. KAMALANATHAN : It is also concerned with high schools.

MR. SPEAKER : Then anything can be extended like that.

திரு. ம. கமலநாதன்: கடன் தவணை முறையில் கொடுக்கப்படும் என்று கருதுகிறேன். எவ்வளவு ஒதுக்கப்படும்? எவ்வளவு தவணைகளில் திருப்பிக் கட்டவேண்டும் என்ற நிலை இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நாங்கள் கேட்டது, முப்பது ஆண்டுத் தவணைகளில் திருப்பிக் கொடுக்க அனுமதிக்கவேண்டும், வட்டியும் குறைவாக இருக்கவேண்டும் என்பது. எவ்வளவு கொடுக்கிறார்களோ அதை வைத்துக்கொண்டு நாம் மேற்கொண்டு எவ்வளவு கட்டடம் கட்ட முடியுமோ கட்டலாம்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II. CALLING ATTENTION TO RETRENCHMENT OF EMPLOYEES BY THE MADRAS STATE ELECTRICITY BOARD.

திரு. து. ப. அழகமுத்து: தமிழ்நாடு மின்சார போர்டு, நிதி வசதிக் குறைவால் ஏராளமான ஊழியர்களை வேலையினின்று நீக்கி விட்ட (ஆட்குறைப்பு) காரணத்தால் எழுந்த நிலைமை பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

*THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the Capital expenditure on Power Projects during 1963–64 was expected to be of the order of Rs. 20.5 crores, against which a provision of Rs. 9 crores has been made in the State Budget for this year under 'Loans and Advances by State Governments—Loans to State Electricity Board'. But the actual expenditure has exceeded the anticipated outlay and it had to be restricted to Rs. 28 crores. An additional sum of Rs. 8 crores has been provided in the Supplementary Estimates presented to the Legislature in January 1964. In view of the ever increasing demand for power, the tempo of works on power projects was stepped up and new schemes like the Kodayar Hydro-Electric Scheme and the





extensions at Basin Bridge Thermal station have also been taken up. In the result, it has become necessary to slow down some of the Rural Extension Works due to paucity of funds. Consequently, some employees have been retrenched as a temporary measure as indicated below :

(i) Vellore Electricity System.—180 workers were retrenched due to closure of three subdivisions.

(ii) Tiruchirappalli Electricity System.—89 workers from Operation Subordinate Service and Work Charged Establishment and 1,700 temporary casual labourers have been retrenched as a temporary measure.

(iii) Madurai Electricity System.—600 temporary casual labourers have been retrenched.

Reports from Mettur and Tirunelveli Electricity Systems and Kundah, Pegumbahallah and Kodayar circles are awaited. There has been no retrenchment of workers in other systems or circles.

The Madras State Electricity Board Employees' Union has made a representation to the State Electricity Board and the Government against the retrenchment of workers in the Electricity Systems. The State Electricity Board has issued instructions to all the Electricity Systems to the effect that retrenched workers who are eligible for leave should be granted leave and that they should be gradually re-employed in the order of their seniority when the deferred works are taken up again after April 1964. Instructions have, however, been issued that no avoidable hardship should be caused and before discharging workers, it is also being examined whether such surplus workers could be absorbed elsewhere. It is hoped that the retrenched workers will be taken back before long.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964-65—*cont.*

MR. SPEAKER : Now the hon. member Sri K. S. Mani, will speak on the budget.

* திரு. கோ. சி. மணி: மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து, அதன் மீது விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நேரத்தில், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நிதி அமைச்சராகவும் கல்வி அமைச்சராகவும் மட்டும் இருந்தார். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கிற நேரத்தில், கல்வி அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் முதல் அமைச்சராகவும் நல்ல உயர் பதவியிலே அவர்கள் இன்றையதினம் இருக்கிறார்கள். ஆனால், அவருடைய தரம் உயர்ந்திருக்கிற அளவுக்கு, அவருடைய பதவி உயர்ந்திருக்கிற அளவுக்கு அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிற நிதி நிலை அறிக்கையினுடைய தரமும், பொது மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு நலனும் அதிலே காணப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இந்த பட்ஜெட்டில் துண்டு விழுகிற தொகையைச் சரிக்கட்டுவதற்காக நூலுக்கும், பஞ்சுக்கும் 1 சதவிகிதம் விற்பனை வரியில் கூட்டியிருக்கிறார்கள். இப்படி 1 சதவிகிதம் வரியைக் கூட்டுவதனால் கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த ஆண்டில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டாலும் வழக்கமாக யார் யாருக்கு அல்லல் ஏற்படுமோ அவர்களுக்கு இந்த ஆண்டும் ஏற்படத் தவறவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் நாட்டின் முதுகெலும்பாக இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், நெசவாளர்கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோர் இந்த வரவு செலவுத் திட்டத்தில் தங்களுக்கு ஏதாவது நிவாரணம் கிடைக்காதா என்று எவ்வளவு ஆர்வத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்களோ அவ்வளவுக்கு ஏமாற்றமும், அதிருப்தியும் அடைந்திருக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய நம்பிக்கையைக் குலைத்து, அவர்களுக்கு ஏமாற்றத்தையும், மனக் கொந்தளிப்பையும் ஏற்படுத்துகிற வகையில்தான் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது.

இன்றையதினம் கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படுகிற நூல்களின் விலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பது நமக்குத் தெரியும். 1962 முதல், 1964 வரையில் நூல் விலையை எண்ணிப் பார்க்கிறபோது விலையேற்றம் சொல்ல முடியாத அளவுக்கு ஏறியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். நூறும் நம்பர் நூல் பத்து ராத்தல் கொண்ட பெட்டி 1962 ஏப்ரலில் 85 ரூபாய் விற்றது என்றால் 1964-இல் பத்து ராத்தல் கொண்ட நூறும் நம்பர் பெட்டியின் மில் விலை 103 ரூபாய். இந்த விலைக்கும் கூட எல்லோருக்கும் தாராளமாகக் கிடைப்பது இல்லை. இந்த விலையைவிட ஒரு 20 ரூபாய் அதிகமாகக் கொடுத்தால்தான் கிடைக்கும். ஆகவே இந்த இருபது ரூபாயையும் சேர்த்துக் கொண்டால் நூறும் நம்பர் நூல் பத்து ராத்தல் கொண்ட பெட்டியின் விலை 124 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 1962-ல் 85 ரூபாய்; அதுவே 1964-இல் 124 ரூபாய் என்றால் எவ்வளவு அதிகமாக விலை உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அதே நேரத்தில் இப்போது இன்னும் 1 சதவிகிதமாவது வரியை நாம் கூட்டுகிறோம். மத்திய அரசாங்க பட்ஜெட்டிலும் நைஸ் நூலுக்கு என்று வரியை உயர்த்துகிறார்கள். இப்படி இரு முனையிலும் வரி விதிக்கப்படுவதன் காரணம் நூலின் விலை எவ்வளவு உயரக்கூடும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார். எத்தனை ஏழைகள் நூறும் நம்பர் கட்டுகிறார்கள் என்று கேட்கிறேன்.

**திரு. கோ. சி. மணி:** ஏழைகள் என்றால் நைஸ் உடை அணியவே கூடாது, அணிய விரும்பக்கூடாது என்று கனம் அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்களா என்று கேட்கிறேன். நைஸ் நூலின்





விலை மட்டும் இன்றையதினம் உயர்ந்திருக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை. எண்பதாம் நம்பர் நூலை எடுத்துக் கொண்டாலும் 1962-இல் பத்து ராத்தல் கொண்ட பெட்டி 65 ரூபாய் விற்றது என்றால் அதே நூல் 64-இல் மில் விலை 73 ரூபாயாகவும், வெளியில் சேர்த்துக்கொடுக்கக்கூடிய விலையோடு 93 ரூபாயாகவும் விற்கிறது. அறுபதாம் நம்பர் நூல் 1962-இல் 49 ரூபாய் விற்றது என்றால் 1964-இல் 52 ரூபாயாகவும், வெளியில் இருபது ரூபாய் கூட்டி 72 ரூபாயாகவும் விற்றுக்கொண்டிருக்கிறது. இப்படி நூறும் நம்பர் நூல் மட்டும் விலை உயரவில்லை. நாற்பதாம் நம்பர் நூல், இருபதாம் நம்பர் நூல் ஆகிய எல்லாமே விலை ஏறியிருக்கிறது. இருபதாம் நம்பர் நூலின் விலையேற்றம் பற்றிய புள்ளிவிவரம் இப்போது என்னிடம் இல்லாததால் குறிப்பிடவில்லை. ஆகவே நிச்சயமாக இந்த விலையேற்றம் நம்நாட்டு ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் என்பதோடுகூட நெசவாளர் பெரு மக்களையும் பாதிக்கிறது. அதே நேரத்தில் நெசவாளர்கள் ஏற்கனவே வாங்கியிருக்கிற கடனையும்கூடத் திருப்பிக்கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இது பற்றி கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் என் தொகுதியிலிருந்து [illegible] வந்திருக்கும். அரசாங்கம் இவர்களுக்கு எந்த வகையில் பரிகாரம் அளிக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

இதேபோல விவசாயப் பெருங்குடி மக்களது நிலையை எடுத்துக் கொண்டாலும் உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்று நாம் சொல்கிறோம். ஆனால் அந்த மக்கள் பலவகையில் எவ்வாறு பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைச் சிந்திப்பது இல்லை. உணவு உற்பத்தி பெருகி வருகிறது என்று நம்முடைய புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டினாலும்கூட உண்மையில் ஒரு டன்னாவது உயர்ந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்று சொல்ல முடியும். உணவு உற்பத்தியில் நாம் 1965-க்குள் 17 லட்சம் டன் அதிகமாக எதிர்பார்க்கிறோம். 65 முடிவிற்குள் 70 லட்சம் டன் நாம் உணவு உற்பத்தியை எதிர்பார்க்கிறோம். இதன் விளைவாக விலைவாசிகள் இறங்கும், தன் நிறைவு ஏற்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் எண்ணலாம். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதலில் 38 லட்சம் டன்னாக இருந்தது. அடுத்து 44 லட்சமாக உயர்ந்தது. பிறகு ஒன்பது லட்சம் அதிகரித்தது. பிறகு 53 லட்சமாயிற்று. மூன்றாவது திட்ட இறுதியில் 70 லட்சம் டன்னை நாம் உற்பத்தி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் நிச்சயமாக நான் சொல்கிறேன். நான் உயிரோடு இருந்தால் நானும் பார்ப்பேன். அமைச்சர்களும் பார்க்கலாம். இந்த லட்சிய அளவை நம்மால் மூன்றாவது திட்ட இறுதியில் பெற முடியாது, இதே ரீதியில் விவசாயப் பெருங்குடி மக்களது நிலை நீடிக்கலாமா?

சென்ற ஆண்டு கூட குறுவை நட்டவுடன் இந்த வருஷம் சரியாக மகசூல் கிடைக்கும் என்று அமைச்சர்கள் பத்திரிகைகளில் செய்திகள் விடுத்தார்கள். அறுவடை செய்கிறபோது ஒரு

ஏக்கருக்கு 35 கலம் எதிர்பார்த்தவர்கள் 12 கலம் தான் அறுவடை செய்தார்கள். இதே நிலைதான் ஆண்டுதோறும் ஏற்படுகிறது. இந்த ஆண்டு போட்டதைவிட இனிமேல் செயற்கை உரங்கள் போட முடியாது, இயற்கை உரங்களும் போட முடியாது. இனிமேல் புதியதாகத்தான் உரம் கண்டுபிடித்தாகவேண்டும். அப்படி இருந்தும் இந்த சம்பா அறுவடையில் நாம் எதிர்பார்த்த அளவு காணவில்லை. ஆகவே விலைவாசி ஏற்றத்தைத் தவிர்க்க வழி ஏற்படும் என்று தோன்றவில்லை.

விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்ன என்பதுபற்றி ஏற்கனவே இருந்த முதல் அமைச்சர் அவர்கள் ஒருவிதமாக விளக்கம் கூறினார்கள். இப்போதுள்ள முதல் அமைச்சர் ஒருவிதமாகக் கூறுகிறார்கள். ஏற்கனவே இருந்த முதல் அமைச்சர் அவர்கள் பொது மேடைகளிலேயே "விலைவாசிகள் ஏறாமல் என்ன செய்யும்? இப்படி ஏறியிருப்பதற்குக் காரணம் மக்களிடத்தில் வாங்கும் சக்தி அதிகரித்து இருப்பதுதான்" என்று சொன்னார்கள். (கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதை நான் இப்போதும் மறுக்கவில்லை) இப்போது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் "உருக்கு ஆலைகளிலும், கனரக மின்சாரத் தொழில்களிலும் போடப்படும் திரண்ட முதலீடுகள் குறுகிய கால எல்லைக்குள் பயன் தருவதில்லை. ஆனால் நம்முடைய நீண்ட கால் வளர்ச்சிக்கு அவை இன்றியமையாதவை. இத்திட்டங்கள் உருவாகிக்கொண்டிருக்கும்போது அவற்றிற்காகச் செலவாகும் தொகையெல்லாம் பலர் கையிலும் வருவாயாக மாறி ஏற்கனவேயுள்ள உபயோகச் சாதனங்களுக்குப் போட்டியிடுவதால் விலைவாசிகள் ஏறுகின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

9-30 a.m.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்தப் புத்தகத்திலேயே வேறு ஒரு பக்கத்தில் நான் சொல்லக்கூடிய பரிகாரமும் இருக்கிறது.

**திரு. கோ. சி. மணி:** இருக்கிறது. அரிசி விலை ஏறி இருப்பதற்குக் காரணம் நெல்லூர் அரிசி வராமைதான் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நெல்லூர் அரிசி வராததற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்த நிதி நிலை அறிக்கை சென்ற ஆண்டைவிடப் பக்கத்தில் மட்டும் குறைவானது அல்ல; மிகவும் ஜாக்கிரதையாக விஷயத்தையும் குறைத்துக் கொடுத்திருக்கிறார். விலைவாசி ஏறியிருக்கிற அதே சமயத்தில் வருமானத்தில் ஏற்றம் இல்லாதவர்களுடைய நிலைமை மிகவும் கஷ்டமான நிலைமையில் இருக்கிறது. இந்த நிலைமையைக் கடை நிலை ஊழியர்கள் பல நேரத்தில் எடுத்துக் காட்டி வருகிறார்கள். இவர்களுக்கு எப்போது நிவாரணம் அளிப்பது? அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வருவதற்கும் முன்பா, பின்னரா? அது பற்றித் தெளிவான விவரம் இந்த அறிக்கையிலே இல்லை. நெசவாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் அடிக்கடி பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆனால் நமது அமைச்சர் அவர்கள் வழக்கம் போலப்





பேசுகிற முறையிலேதான் பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நாம் தெளிவான, திட்டவட்டமான ஒரு விளக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறோம். அது முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் இல்லை; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் இல்லை; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் நிச்சயமாக இருக்கப் போவதில்லை. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை இந்த ஆண்டு கணிசமான அளவிற்கு விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. வாங்கிய கடனை விவசாயிகள் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் மீது போடப்பட்டிருக்கும் வரியை அமைச்சரவை நன்கு அறியும். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னால் நீர்வரி, நிலவரி உயர்வு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றி ஒரு ரூபாய்க்கு ஏறத்தாழ 45 புதுக் காசுகளை வரியாகக் கட்ட வேண்டுமென்று கூறினார்கள். அதுவும் இரண்டு பசலிக்கும் சேர்த்து ஒரே பசலியிலே வரியை வசூலிக்க வேண்டுமென்று சொல்லி 10 ரூபாய் வரி என்றால் 19 ரூபாய் வரி கட்ட வேண்டியிருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் பற்றித் தெரிவிக்க எங்கள் மாவட்டத்திலிருந்து ஒரு தூதுகோஷ்டி வந்து அமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள். அமைச்சர் அவர்களும் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். கவனித்து வரி வஜா செய்ய வேண்டுகிறேன். ஆனால் இந்த பட்ஜெட்டில் அது பற்றி சூசகமாகக்கூட அமைச்சர் அவர்கள் தெரியவில்லை. இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையை நாங்கள் வரவேற்பதற்கில்லை; மாறாக இதிலே எந்த விதமான புனிதத் தன்மையும் இல்லை; இதிலே மக்களுடைய நல்வாழ்வுக்கு எந்தவிதமான பரிகாரமும் இல்லாத காரணத்தால் இந்த பட்ஜட் மக்களுக்குத் தேவையில்லாத பட்ஜட், மக்கள் நல்வாழ்க்கைக்கு வழி காட்டாத பட்ஜட்; இதனாலே மக்களுக்குச் சிறிதளவுகூட, கடுகளவுகூட நன்மை ஏற்படாது என்ற காரணத்தால் இதைக் கண்டித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ரா. சுப்பிரமணியம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் 1964-65-ம் ஆண்டு வரவு-செலத் திட்டத்தை ஆதரித்து நான் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர் கோ. சி. மணி அவர்கள், தஞ்சை ஜில்லாவில் இருந்து வந்தவர்கள், 'அமைச்சர் அவர்கள் வழக்கமான முறையிலேயே இந்த பட்ஜட்டைத் தயாரித்திருக்கிறார்கள்' என்று அவர்கள் சொன்னார்கள். நண்பர் அவர்கள் பேசும்போதும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்களும் வழக்கமாக என்ன பேசுவார்களோ அதைத்தான் பேசினார்கள். முதலில் தஞ்சை ஜில்லா விவசாயிகளைப் பற்றி மிகவும் வருத்தப்படுவது போல் பேசிவிட்டு கடைசியில் அவருடைய கட்சிக் கொள்கைக்குப் போய் 'விலைவாசி ஏற்றம்' என்று பேசத் தொடங்கிவிட்டார். ஒரு பக்கத்தில் நெல் விளைச்சல் குறைந்து விட்டது என்று சொல்கிறார்; இன்னொரு பக்கத்தில் விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்கிறார். இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

[திரு. ரா. சுப்பிரமணியம்] [3rd March 1964

நம்முடைய குறிக்கோள், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 70 லட்சம் டன் உற்பத்தி காட்ட வேண்டுமென்பது. 17 லட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தியை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெருக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். இந்த மூன்று ஆண்டுகளிலேயே 8 லட்சம் வரை உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். மற்றக் காரணங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், இது குறைந்த அளவு என்று சொல்ல முடியாது. பருவக் கோளாறு காரணமாகவே கடந்த இரண்டு ஆண்டுகளாக விளைச்சல் குறைந்திருக்கிறது. இந்த வருஷம் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை—என்னுடைய எஸ்டிமேட் கன்சர்வேட்டிவ் எஸ்டிமேட்—விளைச்சல் எதிர்பார்த்ததை விட 40 சதவீதம் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் பருவக் கோளாறே தவிர வேறு ஒன்றுமில்லை.

கனம் முதலமைச்சர் அவர்கள் 'ரசாயன உரத்தை இப்போது குடியானவர்கள் முனைந்து போடமாட்டேன்' என்று சொல்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். உண்மையிலேயே குடியானவர்கள் ரசாயன உரத்தை அதிகமாக வாங்கிப் போடத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் தக்க தருணத்தில் இந்த உரம் கிடைப்பதில்லை என்பதுதான். கதிர் வரக்கூடிய சமயத்தில் உரம் போடவேண்டும். அந்தச் சமயத்தில் விவசாயிகளுக்கு உரம் போதுமான அளவு கிடைப்பதேயில்லை. இரண்டு மூட்டை சல்பேட் உரம் எனக்கே கிடைக்காமல் நான் அவஸ்தைப்பட்டேன். ஆகவே, குடியானவர்களுக்குத் தக்க தருணத்தில் உரம் கிடைக்கச் செய்யவேண்டும். ஏற்கனவே விவசாயிகளுக்கு சிந்திரி உரத்தைப் போட்டுப் பழக்கமாகப் போய் விட்டது. தற்பொழுது வேறுவித சல்பேட்டை கொடுக்கிறார்கள். அதைப் போட்டால் திப்பி திப்பியாகப் போகிறது. குடியானவர்களுக்கு அதன் மேல் நம்பிக்கை இல்லை. இந்த மாதிரியான கஷ்டங்களை விவசாயிகள் அனுபவிக்கிறார்கள். இந்த நிலைமையில் தஞ்சை ஜில்லாவில் விளைச்சல் பெருமளவு பாதிக்கப்பட்டுவிட்டது. இந்த நேரத்தில் ஒரு ரூபாய்க்குப் பதிலாக ஒரு ரூபாய் 90 பைசா வரி வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு சில இடங்களில் குறிப்பாக பாபநாசம் தாலுகாவில் மெலட்டூர் கிராமத்திலும், மற்ற சில கிராமங்களிலும் ஏக்கருக்கு ஐந்து மூட்டை, ஆறு மூட்டை நெல்தான் வந்திருக்கிறது. இந்த மாதிரியான இடங்களில் 'டாக்ஸ் ரெமிஷன்' கொடுத்தால் நல்லது. மற்ற ஜில்லா பூராவுக்கும் இரண்டு வருஷத்திற்கு வசூல் செய்வதை ஒரு வருஷத்திற்கு மட்டும் வசூலித்துக் கொண்டு மீதியை அடுத்த ஆண்டாவது வசூலிக்கும்படி உத்தரவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன், தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டில் எப்போதும் பேசப்பட்டு வருவது பாசன வடிகால் திட்டம். அந்தத் திட்டத்தைப் பற்றிக் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இதற்காக 14 கோடி ரூபாய் செலவில் ஒரு பெரிய திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருப்பதாக அறிகிறேன். இந்தத் திட்டத்தை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் தாண்டி அனுப்பி விட வேண்டாம் என்று கனம் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.



3rd March 1964] [திரு. ரா. சுப்பிரமணியம்]

இந்த ட்ரெய்னேஜ் ஸ்கீமை சீக்கிரத்தில் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள்ளாகவே கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று விவசாயத்தைப் பொறுத்த வரை அதிலுள்ள வருமானம் குறைச்சலாகயிருந்தாலும் விவசாயச் செலவு அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது. எவ்வளவோ விவசாய இயந்திரங்களை எல்லாம் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். ஐந்து அல்லது பத்து ஏக்கருக்கு உபயோகிக்கக் கூடிய விதத்தில் ஸ்மால் ட்ராக்டர்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு கிடைக்கும்படிச் செய்தால் அது மிகவும் பயன் அளிக்கக்கூடியதாக இருக்கும். இத்துறையிலும் சர்க்கார் போதிய கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, விலைவாசி ஏற்றம் பற்றி எல்லாம் கூறப்பட்டது. சாதாரணமாக திட்டங்களை ஏற்படுத்துவதினால் தான் இந்தப் பணப் புழக்கம் ஏற்படுகிறது. அப்படி பணம் புழக்கம் ஏற்படும்போது, அப்படி ஏற்படக்கூடியவர்கள், அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அம்மாதிரி பணப் புழக்கம் இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் சிற்சில இடங்களில்தான் பணப்புழக்கம் ஏற்படுகிறது. எங்கெங்கு திட்ட வேலைகளை ஆரம்பித்து பெரும் அளவில் செய்கிறார்களோ அங்குதான் பணப்புழக்கம் அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே விலையை உயர்த்துகிறார்கள். அதனால் பாதிக்கப்படுகிறவர்கள், கிராமங்களில் உள்ள பண வருவாய் அதிகம் இல்லாத மக்கள்தான். அவர்கள் தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இன்று 291 கோடி ரூபாயில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரித்திருக்கிறோம். அது 325 கோடி ரூபாய் அளவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமும், கம்யூனிட்டி டெவலப்மென்ட் ஸ்கீம் மூலமும் வரக் கூடிய பணம்தான் கிராமப்புறங்களுக்கு வந்து சேருகிறது. அதற்கு 25 கோடி ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். அதில் 12 கோடி ரூபாய் ஆபீசர்களின் சம்பளம் போன்றவற்றிற்காக போய் விடுகிறது. பாக்கியுள்ள பணம்தான் வந்து சேருகிறது மக்களுக்கு. ஆக பணப்புழக்கம் ஏற்படுவதின் காரணமாக விலைவாசிகள் ஏறி அதன் காரணமாக பண வருவாய் இல்லாத கிராமங்களில் உள்ள ஏழை மக்கள் கஷ்டப் படக் கூடிய நிலைதான் இருக்கிறது. ஆகவே இதற்கு ஏதாவது பரிகாரம் கண்டு பிடிக்க வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் ஒரு லட்சம் டன் அரிசியை இந்த ஆண்டு வாங்க வேண்டுமென்று அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். இதுவரை 10,000 டன்தான் வந்திருக்கிறது. பாக்கி 90,000 டன் அரிசி வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இப்போது கொடுத்து வாங்கக் கூடியது மணங்குக்கு 17 ரூபாய் என்று போட்டிருக்கிறது. ஒரு லட்சம் டன் தேவை என்றால் 14 லட்சம் மூட்டை அரிசி வேண்டும். அல்லது 27 லட்சம் மூட்டை நெல் வேண்டும். இந்த 27 லட்சம் மூட்டை நெல்லை மூன்று ரூபாய்

அதிகமாகக் கொடுத்து அதாவது 20 ரூபாய் என்று சப்ஸிடைஸ் செய்து வாங்கினால் இந்த ஒரு லட்சம் டன்னை சீக்கிரத்தில் வாங்க முடியும். அதற்காக செலவு செய்யக் கூடியது 80 லட்சம் ரூபாய் தான். சர்க்கார் நஷ்டமடைய விரும்பவில்லை என்றால் அந்த அள விற்கு விலையை நிர்ணயம் செய்து விற்றால் போதும். இதனால் மற்றவர்களுக்கு கஷ்டம் வந்து விடுகிறது என்று சொல்ல முடியாது. இதனால் பலன் அடைவது யார்? கிராமங்களில் உள்ளவர்கள் அல்ல. இதை பணப்புழக்கம் உள்ள, வருவாய் உள்ள இடங்களில் தான் விற்கிறார்கள். ஆகவே மூட்டை ஒன்றுக்கு மூன்று ரூபாய் அதிகமாக வைத்து விற்பதினால் எந்தவிதமான பாதகமும் யாருக் கும் ஏற்பட்டு விடாது. ஆகவே இதையும் சர்க்கார் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். கொள்முதல் விஷயத்தில் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் 20 சதவீதம் என்றும் பாக்கி ஜில்லாக்களில் 15 சதவீதம் என்றும் வைக்கப் பட்டிருக்கிறது. ஏன் இந்த வித்தியாசம் என்று தெரியவில்லை. தஞ்சை ஜில்லாவில் அதிகமாக விளைச்சல் இருக்கிறது, ஆகவே அங்கு 20 சதவீதம் என்று வைக்கப்பட்டிருக்கிறது என்றிருப்பது சரியல்ல. தஞ்சை ஜில்லாவில் கொள்முதல் செய்வதை மற்ற ஜில்லாக்களுக்கு போக விடாமல் வியாபாரிகள் தடங்கல் போட்டு நெல்லை கொள்முதல் செய்து தாங்கள் அதிக விலைக்கு விற்கலாம் என்ற முயற்சி நடக்கிறது. இது அரசாங்கத்திற்கும் தெரியும் என்றுதான் நான் நினைக்கிறேன். இம்மாதிரியான கஷ்டங்கள் போக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு குடும்பப் பென்ஷன் போன்றவை கொடுத்திருக் கிறார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு நாம் பஞ்சப் படியை உயர்த்திக் கொடுக்க வேண்டியது நியாயமானதே. ஆகவே அரசாங்கம் இதுபற்றி தீர ஆலோசித்து அவர்களுக்கு ஏதாவது வழிவகை செய்து பஞ்சப்படியை உயர்த்துவதற்கு ஏதாவது வழிவகை செய்யவேண்டுமென்று நான் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அடுத்தபடியாக, உயர்நிலைப் பள்ளி இறுதிவரை இலவசக் கல்வி வழங்க திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது மிகவும் வரவேற்க வேண்டியதே. சமூகத்தில் உள்ள 83 சதவீதம் பிள்ளைகளுக்கு ஏற்கனவே இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே பாக்கியுள்ளவர்களுக்கும் இலவசக் கல்வி புகட்டுவதில் எவ்விதக் கஷ்டமும் ஏற்படாது. அதை உத்தேசித்துத் தான் எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்க தயாராய் வந்திருக்கிறோம். சென்ட்ரல் கவர்ன்மென்ட் எம்ப்ளாயீஸும் இதில் வருகிறார்கள். அவர்கள் எல்லாவிதச் சலுகை களையும் பெற்றுக்கொண்டு அங்கு அதிகச் சம்பளமும் வாங்குகிறார் கள். அதே சமயத்தில் நம் ஸ்டேட் கவர்ன்மென்ட் எம்ப்ளாயீஸ் அதே சலுகையைப் பெற்று குறைந்த சம்பளம் வாங்கிக் கொண் டிருக்கிறார்கள். அவர்கள் வேண்டுமானால் டெல்லி செகரட்டேரி யேடில் உட்கார்ந்து கொண்டு அதிகச் சம்பளம் வாங்கினால் வயிற் றெரிச்சல் இருக்காது. இங்கு பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து





கொண்டு அவர்கள் எல்லாச் சலுகைகளையும் பெற்று இவர்கள் மட்டும் அச்சலுகைகளை பெறாது போகும்போது உண்மையிலேயே அவர்கள் மனம் சங்கடமாகத்தான் இருக்கிறது. ஆகவே இது குறித்து சர்க்கார் தீர ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். நல்ல திட்டங்களைக் கொண்டு வரும்போது அதற்கு ஏதாவது முட்டுக்கட்டை வரத்தான் செய்கிறது. Fee levying Schools -ல்தான் கல்வித்தரம் நன்றாகயிருக்கிறது என்கிறார்கள் ஒரு கோஷ்டியினர். ஜனநாயக சோஷியலிஸத்தை அமைக்க வேண்டும் என்பது நம் திட்டம். அப்படியிருக்க சிலர் நல்ல அறிவு பெறும் மற்றவர்கள் தாழ்ந்த அறிவும் பெறும் விதத்தில் கல்வி யைக் கொடுக்கமுடியாது. ஆகவே Fee levying Schools எங்களிடம் தான் நல்ல தரம் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்வதற்கில்லை. முன்பு சில எலிமென்டரி ஸ்கூல்ஸ்க்கு, வேண்டுமென்றால் வைத்துக் கொள்ளுங்கள், ஆனால் கிறான்ட் கொடுக்க முடியாது, ரிக்கக்னிஷன் கொடுக்கிறோம் என்று முன்பு சொல்லியிருப்பதால் இப்போது அதனால் நன்மை பெறலாம் என்று சிலர் வருகிறார்கள். எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரேவிதமான கல்வித்தரம் இருக்கவேண்டும். பண வசதியுள்ள பிள்ளைகளுக்கு நல்ல கல்வித்தரம், பண வசதியற்ற பிள்ளைகளுக்கு நல்ல தரம் அல்லாதவிதத்தில் கல்வி என்ற நிலைமை ஏற்பட்டால் ஜனநாயக சோஷியலிஸத்திற்கே அர்த்தம் இல்லை. எல்லாவிடங்களிலும் கல்வித்தரம் உயர்ந்திருக்கவேண்டும் என்ற முறையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இந்தியைப்பற்றி நேற்றெல்லாம் பேசினார்கள். நானும் என் அபிப்பிராயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தியைப் பொறுத்து, திரு. வீரபாகு அவர்கள் பேசியபோது இந்தியா விலுள்ள எல்லா ராஜ்யங்கள் பற்றியும் சொன்னார்கள். நான் மற்ற ராஜ்யங்களை விட்டுவிடுகிறேன். தென் இந்திய ராஜ்யங்களில் மற்ற மூன்று ராஜ்யங்களிலும் இந்தியைக் கட்டாயமாக வைத்திருக் கிறார்கள். இங்குதான் ஏனோதானோ என்று ஹிந்தி அல்லது வேறொரு இந்திய மொழி என்று வைத்திருக்கிறோம். இப்படி யிருந்தும் இங்கு இந்தி எதிர்ப்புப் போராட்டம். எவ்வளவு மாதங் களுக்கு என்றால் ஒரு வருடச் சொச்சத்திற்கு இந்தப் போராட்டம். எந்தெந்த தேர்தல்களை மனதில் வைத்திருக் கிறார்களோ, தெரியாது. இப்படியிருக்கிறது இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம். நான் கூற விரும்புவது என்னவெனில் இந்தி விஷயத் திலும் நாம் வருங்கால சந்ததிகளுக்கு ஒரு நன்மை செய்தவர்களாக இருக்கவேண்டும். மற்ற ராஜ்யங்களில் எல்லாம் கண்டிப்பாக அமல் நடத்தும்போது நம் ராஜ்யத்தில் மட்டும் இஷ்டபாடமாக வைத்திருக்கிறார்கள். இந்திக்கு ஏன் எதிர்ப்பு தெரிவிக்கவேண்டு மென்று எனக்குப் புரியவில்லை. முன்னால் இருந்த சட்டப்படி பார்த்தால் 1965-க்கு அப்புறம் இந்தி மட்டும்தான் இருக்கும். சட்டம் திருத்தப்படாவிட்டால் இந்தி மட்டும்தான் இருந்திருக் கும். இப்போது ஆங்கிலமும் சேர்ந்திருக்கிறது. ஆகவே அதில் தப்பு ஒன்றும் கிடையாது. ஆனால் இவர்கள் போராட்டம் நடத்து கிறார்கள். அவர்கள் சொல்வதற்கு செவி சாய்க்க வேண்டாம். (மணி அடிக்கப்பட்டது). அவர்கள் சொல்வது, நாங்கள் எல்லாம்

[திரு. ரா. சுப்பிரமணியம்] [3rd March 1964

மக்கள் பிரதிநிதிகள் என்று. நாங்களும் மக்கள் பிரதிநிதிகள் தான். நாங்களும் மக்கள் வோட் போட்டுத்தான் வந்திருக்கிறோம். வேறு யார் வோட் போட்டார்கள்? ஆகவே இம்மாதிரிப்பட்ட நல்ல காரியங்களை எல்லாம் அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI A. KUNJAN NADAR: Mr. Speaker, Sir, while dealing with the Budget, I wish to bring certain general facts to the notice of the House. If I happen to make any adverse observations against this Government, that should not be taken to mean that this Government is the worst Government possible. We, in Kanyakumari district, had the good fortune or misfortune to experience and taste other Governments also. We had the P.S.P. Government, we had the Communist Government—Poor men's Government. Without any hesitation, I can say that the Congress Government, in spite of all its weaknesses, is by far the best Government among these. Sir, I welcome the Budget. I welcome it not because, there are so many good features in it. I welcome it because there is no much of the tax burdens that everybody expected.

Regarding other things, I am sure, that small adjustments here and there is not going to help matters. Inspite of our spending crores of rupees for our plan projects and all that, the rich is becoming richer and poor is becoming poorer. We heard so much about the City election. What does it indicate? Not because that D.M.K. people exhibited 'Chinnasami' photo. The Congress party also exhibited bigger man's photos, the photos of Mahatma Gandhi and Pandit Jawaharlal Nehru. It is not because that people exercised false vote. The result would show that low class and lower middle-class people voted against the Government and the upper-middle class and the upper class people voted for the Government. It shows that lower class, working class are not satisfied with the Government. Because, their standard of living has not risen. There is a rise in National income. But there is also leaping rise in the prices. The progress is not in the forward direction, but in the reverse direction. Regarding this price spiral, the usual excuse is for developing economy rise in prices is inevitable. It is a lame excuse. I am not an economist, but I have consulted economists, it is a lame excuse. The prices can and should be controlled.

I fully agree that the dearness allowance of N.G.Os. must be raised. The Government is the biggest employer in the State and as such apart from all other things, Government has got the foremost duty to look after their welfare. However, it is not going to solve the problem. After another six months, the same problem will arise. Going on raising the dearness allowance is not going to solve the problem, but it would only create problems. The only solution is stabilisation of prices. For that, there are three ways open, i.e., (1) intensive and extensive production, (2) economic farming and (3) subsidised distribution of



3rd March 1964] [Sri A. Kunjan Nadar]

essential articles. As a temporary measure, I would suggest that at least rice must be distributed at a subsidised basis. That too is not a permanent solution. No Government can stand the strain of subsidised distribution for ever. Economic farming is only a distant goal with us. The permanent solution would be intensive and excessive production. But, Sir, can we solve that problem while we produce more and more mouths? We produce mouths simultaneously. When we produce one measure of rice, we produce also mouths to consume four measures of rice. We talk of Family Planning. We have got State Level Committees, District Level Committees, Panchayat Level Committees and so on. The members of these Committees themselves break the record (Laughter). Unless, we stabilies this population increase, we will not be able to solve the problem. This sort of family planning will not help us. I would suggest a sort of compulsory Family Planning. There must be a ceiling of three or even four children. After that they must compulsorily go to the hospital and they should have the necessary thing. Some may say it is against the religious sentiments and all that. If they do not abide by this restriction they must be sent to the jail. Going to jail is not against religion or religious sentiment. It is a preventive action, an action for good behaviour. This is the only solution to solve all these difficulties.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I would like to know from the hon. Member whether the counterpart should also be sent to the jail.

SRI A. KUNJAN NADAR: They should be put in separate jails. (Laughter).

Regarding the low paid officers, I would like to say a few words. We are experimenting with a gigantic scheme to build up a huge nation. For that, we want the willing co-operation of these people. They must feel the social responsibility in implementing the schemes and do everything before them. They must have a feeling that they are participating in this huge effort. For that, their service conditions must be improved very much. They cannot do these things with a hungry stomach.

With regard to Kanyakumari district, I have got the very same standing complaint about 'integration'. Sir, some integration is done, but they have created more problems. In many cases, integration is not done. I do not know what these Officers with fat salaries are doing. They come there like Princes and Maharajas along with their personal staff. Along with the tour programme, they send a long list of rich Menu, which ranges from chicken soup to orange juice. They are satisfied with the meagre food, which they get from their tyrant wife at home. The first thing they should be told is that they are the servants of the people and not the masters. They must be told that the East India Company has left long ago and the Britishers also have left. People's Government is functioning. They must realise this. They must

[Sri A. Kunjan Nadar] [3rd March 1964

feel that they are richly paid for every little thing they do. They are the servants of the people and not the masters. Something is wrong somewhere. Either the Ministers are not able to control them or they control the Ministers. I do not know. It is 8 years since the Travancore-Cochin State merged with the Madras State but
10-00 a.m. not a single individual there has got his pension. Sir, you know a pensioner has got a very heavy family liability. He will have two marriageable daughters and three sons studying in colleges. If he does not get his pension, you know the difficulty in which he would be put to.

Regarding the Education Department, that is the worst affected Department, no justice is done. Headmasters of lower primary schools of 25 years to 30 years' standing have been reverted. We all protested but in vain. All the M.L.As. of the district signed a memorandum, went on deputation and presented it but no action has been taken. Then the Headmasters had to resort to a Court of Law through a writ petition. The Court ordered that they should be restored to their original places and that the Director had no business to revert them. At once those Headmasters who filed the writs alone have been reinstated. But there are a lot of headmasters who have not been reinstated. The officers of the Department say : 'Let them go to the court and we are not going to reinstate them '. Sir, the greatest virtue in a democracy is the rule of law. If the Government have no respect for law and no respect for judiciary, it is no wonder that ordinary people have no respect for the Government. I brought this matter to the notice of the Hon. the Chief Minister who is also the Education Minister when he came there last and he said that he would take the necessary steps. I would appeal to him once again to reinstate them as early as possible.

Then, the allotted graduate-teachers of Kanyakumari district are getting Rs. 63 less than their juniors. Their juniors are getting Rs. 63 more than their seniors. That discrimination also must be removed.

Then, regarding the Contributory Provident Fund-Pension Scheme, it has been in force since 1958 in other districts but in the Kanyakumari district it has been given effect to only from 1962. I request the Government to give retrospective effect to it from 1958 onwards.

(The time bell was rung.)

Sir, one minute more.

With regard to industries, the most acute problem in the Kanyakumari district is the educated unemployment problem. No industry whatsoever has been set up there. In every house there is a graduate or an S.S.L.C. holder. We do not know what to do with them. In the last 8 years no industry has been established there. Now in the Budget under "Industries", we are given



3rd March 1964] [Sri A. Kunjan Nadar]

an ultra modern industry in the form of a school at Nagercoil for teaching people how to repair temple cars. Such a big and modern industry has come to us.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, two textile mills have been allotted to the Kanyakumari district—one co-operative and another private. If the hon. Member does not know it, I am sorry for it.

SRI A. KUNJAN NADAR : I do know the history of it also. I am coming to that. We wanted to establish a co-operative mill. We collected money from the poor people saying "Kalkulam and Vilavancode taluks are the poorest taluks. We are going to bring a mill for you. Please pay money. We will establish a mill in Vilavancode taluk". People gave land also. But when the time came, it came this side of the Kanyakumari district bordering Tirunelveli district. It is as good as establishing a mill in the Tirunelveli district. This is due to political reasons. There is scope for the establishment of a rubber factory, cement factory, sugar factory, starch factory, etc. My constituency Kulasekharam, is the richest rubber-producing belt not only in India but also in the world. There is scope for a rubber factory. There is scope for a cement factory. There is scope . . .

(The time bell was rung.)

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : கனம் சபாநாயகர் 10–
அவர்களே, 1964-65-ம் ஆண்டு வரவு-செலவு அறிக்கையின் பேரில் எனக்குத் தெரிந்த சில யோசனைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த உற்பத்தி பெருகவேண்டும். அதற்கு எனக்குத் தெரிந்த சில யோசனைகளை இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

முக்கியமாக க்ராப் இன்ஷ்யூரன்ஸ். இது சம்பந்தமாக மத்திய சர்க்கார்கூட ஒரு பில் தயார் செய்து மாகாண சர்க்காருக்கு அனுப்பி அபிப்பிராயம் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவந்தால் விவசாயத்தில் விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்படும்.

அதுபோக, விவசாய மக்களுக்கு இப்போது இருக்கக்கூடிய பெரிய கஷ்டம், பல பாதுகாப்புச் சட்டங்கள் இருந்தாலும் அவை களெல்லாம் நல்லமுறையில் அமுல் நடத்தும் நிலையில் இல்லை. டெனெண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட், ஃபேர் ரெண்ட் ஆக்ட் ஆகிய வைகளை ஒழுங்காக நடைமுறைக்குக் கொண்டுவராததால் பயிர் செய்யக்கூடியவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படாமல் உற்பத்தி செய்யும் ஊக்கத்தைக் குறைத்துக்கொண்டிருக்கிறது.

அதுபோக கடன் வசதி சம்பந்தப்பட்ட மட்டில் நடுத்தர வகுப்பாருக்குத்தான் கடன் வசதி கிடைக்கிறது. சாதாரணமாக, பாடுபடுகிற மக்களுக்கு கடன் வசதி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதற்காக ஏதாவது புதுத் திட்டம் வகுத்து உடனடியாகக் கடன் வசதி செய்துதரவேண்டும்.

அதுபோக, ரீ-மாடலிங். இப்போது எல்லா இடங்களிலும் மராமத்து செய்யப்பட்டிருக்கிறது. பழைய இடத்தை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறதே தவிர நல்ல விதத்தில் எல்லா மக்களுக்கும் தண்ணீர் வினியோகம் செய்யும் அளவில் செய்யப்படவில்லை. அதற்காக ஒரு ரீ-மாடலிங் ஸ்கீம் போடவேண்டும்.

அதுபோக, தண்ணீர் டிஸ்ட்ரிப்யூஷன் மூன்று பேர்களிடம் இப்போது இருக்கிறது. பி.டபிள்.யூ.டி., ரெவின்யூ டிபார்ட்மெண்ட் மற்றும் பஞ்சாயத்து யூனியன் ஆகியவர்களிடம் இருக்கிறது. இது ஒருவர் மேற்பார்வையில் இருக்கும் முறையில் அமல் நடத்தினால் வினியோகம் ஒழுங்காக நடக்கும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அதுபோக, இப்போது விதை வினியோகம் சர்க்கார் மூலமாக நடக்கிறது. ஓரளவுக்கு இதனால் நன்மை ஏற்பட்டாலும் எதிர்பார்க்கும் அளவுக்கு எல்லோருக்கும் காலாகாலத்தில் விதைகள் கிடைப்பதில்லை. இதற்காக மேல் நாட்டில் ஸீட் டிஸ்ட்ரிப்யூட்டிங் கார்ப்பொரேஷன் என்று வைத்திருக்கிறார்கள். அதுபோல இங்கேயும் விதை வினியோகத்தை தனிப்பட்ட கார்ப்பொரேஷனிடம் கொடுத்தால் வினியோகம் செவ்வனே நடக்கும். இப்போது வினியோகத்தில் கஷ்டம் என்ன என்றால் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நெல் கொடுக்கப்படுகிறது. அந்த விதை வினியோகம் தாமதப்பட்டால் அதிகாரிகளிடம் நேரடியாகத் தாக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. விதை அந்த இடத்தில் வினியோகம் செய்யும்போது அந்த அதிகாரி குறைந்த அளவு விதை கொடுத்து விட்டு இவ்வளவுதான் இந்த வருஷம் ஸ்டாக் என்று சொல்லுகிறார்கள். அதற்கு பதில் ஒரு கார்ப்பொரேஷனிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்தால் டிஸ்ட்ரிப்யூஷன் செவ்வனே நடக்கும்.

அதுபோக, உற்பத்திப் பெருக்கம் சம்பந்தமாக ட்ரை பாடி பற்றி (Semi-dry paddy) இப்போது ஆராய்ச்சி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது காணாது. ஏனென்றால் ஆங்காங்கு non-Delta ஏரியா ஸெமி-ட்ரை ஏரியாவாக இருப்பதால் ஒரு தண்ணீர், இரண்டு தண்ணீர் தட்டு ஏற்படுவதால் ஸெமி-ட்ரை பாடி பயிர் செய்ய ஏற்பாடு செய்தால் கஷ்டமில்லாமல் நல்ல விளைச்சல் ஏற்படும்.

அதுபோக, வெஸ்ட்-ஃப்ளோயிங் ரிவர் சம்பந்தப்பட்ட மட்டில் பேப்பரில்தான் பார்க்கிறோம். திருவனந்தபுரத்தில் பேசப் போகிறார்கள் என்று இருக்கிறதே தவிர இன்று வரையில் நடக்கவில்லை. இரண்டு மாநில அதிகாரிகளும் சுற்றிப் பார்த்தார்கள். பரிகாரம் செய்ய முடியுமா, செய்யப்படுமா என்று இல்லாமல் வெஸ்ட்-





ஃப்ளோயிங் ரிவர்ஸிலிருந்து சிக்கனமாகக் கிடைக்கக் கூடியதை செய்ய யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

அதுபோக, நம்மிடமே திட்டங்கள் இருக்கின்றன. ஆங்காங்கு இருக்கும் ரிவருக்கு ரிஸர்வாயர் மூலமாகச் செய்ய திட்டம் வகுத்திருக்கிறார்கள். ஒரு திட்டம் எடுத்து அது நடக்குமா நடக்காதா என்று சொல்ல இரண்டு வருஷம் ஆகிறது. ஒரு திட்டம் இருந்தால் இவ்வளவு நாளுக்குள் முடிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யவேண்டும்.

உற்பத்திப் பெருக்கத்திற்கு கால்நடைச் செல்வம் நல்ல நிலையில் இருக்கவேண்டும். இப்பொழுது லைவ்ஸ்டாக் இம்ப்ரூவ்மெண்டும் வெடரினரியும் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. வெடரினரியில் இருக்கக்கூடிய முன்னேற்றம் 'லைவ்ஸ்டாக்கில்' இல்லை. அதற்குப் பதிலாக 'லைவ் ஸ்டாக் இம்ப்ரூவ்மெண்டு அண்டு டையரி கமிஷன்' என்று ஒன்று ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். காரணம், 'லைவ் ஸ்டாக்கும்' 'டையரிக்கும்' நான்கு இலாகாக்கள் மூலமாக செலவு ஏற்படுகிறது. கோவாப்பரேடிவ் டிபார்ட்மெண்டு மூலமாகவும், மில்க் கமிஷனர் இலாகா மூலமாகவும், கம்யூனிடி டெவலப்மெண்டு மூலமாகவும், 'அனிமல் ஹஸ்பெண்ட்ரி' டிபார்ட்மெண்டு மூலமாகவும் இப்படி 4, 5 டிபார்ட்மெண்டுகள் மூலமாகவும் செலவு ஏற்படுகிறது. ஆதலால் 'லைவ் ஸ்டாக் இம்ப்ரூவ்மெண்டு' எதிர்பார்க்கக்கூடிய அளவில் இல்லை. அதே மாதிரி 'டையரி' சம்பந்தப்பட்ட வரையில் பால் உற்பத்தி குறைவாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. சராசரி ஒரு நபருக்கு 4 அவுன்ஸ் பால் கிடைக்கக்கூடிய நிலைமையில் இப்பொழுது இருக்கிறது. இது இரண்டையும் இணைத்து, ஒரு கார்ப்பரேஷனோ, அல்லது கமிஷனோ ஏற்படுத்தினால், 'மில்க் அண்டு லைவ் ஸ்டாக் இம்ப்ரூவ்மெண்டு போர்டு' அல்லது 'லைவ் ஸ்டாக் கம் டையரி கமிஷன்' போன்ற அமைப்பை ஏற்படுத்தினால், செவ்வையாக வேலை செய்வதற்கு வழி ஏற்படும். நான்கு விதமாக ஏற்படக்கூடிய செலவை ஒரு பக்கத்தில் 'பூல்' செய்து விநியோகம் செய்வதற்கும், உற்பத்தி செய்வதற்கும் வழி ஏற்படும்.

உற்பத்தி செய்த நெல்லையும் மற்ற உணவுப் பொருள்களையும் மார்கெட்டுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால், நல்ல ரோடு வசதி அவசியம். பஸ் ரூட் நன்றாக இருக்கவேண்டும். இப்பொழுது கொடுத்திருக்கக்கூடிய திட்டப் பிரகாரம் மாகாணம் பூராவும் சேர்ந்து 250 மைல்கள் ரோடுகளைத்தான் சர்க்கார் எடுத்துக் கொள்ளப்போவதாகத் தெரிகிறது. இது காணவே காணாது. உணவுப் பொருள்களை மார்க்கெட்டுக்குக் கொண்டுவருவதற்கு எவ்வளவு ஜாஸ்தியாக பஸ், லாரி வரக்கூடிய ரோடுகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு எடுத்துக்கொள்ள சர்க்கார் திட்டம் வகுக்கவேண்டும். பஞ்சாயத்துகளிடம் இருக்கக்கூடிய ரோடுகள் பலவற்றை அவர்கள் சர்க்காருக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். காரணம், அவர்களால் அந்த ரோடுகளை

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [3rd March 1964

பராமரிக்க முடியவில்லை. ஆகவே, உடனடியாக உணவு தானியங்களை கொண்டு போகக்கூடிய ரோடுகளை சர்க்கார் பராமரிப்பில் எடுத்துக்கொள்வதற்கு வழிவகைகள் செய்யவேண்டும்.

ஆங்காங்கு கம்யூனிடி வெல்கள் வெட்டுவதற்கு வழிவகுக்க வேண்டும். எங்கெங்கே ஊற்று இருக்கிறதோ அங்கெல்லாம் கம்யூனிடி வெல்களை வெட்டுவதன் மூலம் ஏழை மக்கள் அபிவிருத்தி அடைவதற்கும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வழி ஏற்படும். 'டீப் போர் வெல்' திட்டத்தையும் அதிகமாக நிறைவேற்றினால் நலம் என்று நினைக்கிறேன். கிட்டத்தட்ட 14 வழிகளில் உணவு உற்பத்தியை அதிகரிக்கலாம் என்று நினைக்கிறேன். வருஷத்திற்கு 2, 3 வழிகளை சர்க்கார் யோசித்து நடைமுறையில் கொண்டுவந்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏதோ திட்டங்கள் போடுகிறோம், உணவு உற்பத்திப் பெருக்கம் என்று சொல்லுகிறோம். பழைய திட்டங்களையே நாம் அமல்நடத்திக் கொண்டிருக்கிறோமே தவிர, ஏதாவது புதிய திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறோமா என்று பார்த்தால், இல்லை. 'கிராப் இன்ஷுரன்ஸ்' என்று 10 வருஷங்களாகச் சொல்லப்படுகிறது. 14 வழிகளில் வருஷத்திற்கு 2 வீதம் எடுத்து நடத்துவதற்கு வழி செய்தால், உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு வழி ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக 11-வது வகுப்பு வரையிலும் இலவசக் கல்வியை வரவேற்கிறேன். ஆனால், அதில் ஒரு கஷ்டம். மானேஜ்மெண்டாருக்கு 2 தடவை, 3 தடவைகளாகத்தான் கிராண்டு கொடுக்கப்படுகிறது. எலிமெண்டரி ஸ்கூல்களுக்குக் கிராண்டு கொடுப்பது போல் 'மன்த்லி கிராண்டு' கொடுத்தால் தனிப்பட்டவர்கள் பள்ளிகள் நடத்துவதற்கு கஷ்டம் இல்லாமல் இருக்கும்.

அதுபோக, ஒவ்வொரு தாலூகா தலைநகரத்திலும் ஒரு ஜுனியர் டெக்னிகல் ஸ்கூல் இருக்கவேண்டியது ரொம்பவும் அவசியம். பாலிடெக்னிக்கள் ஜில்லாவிற்கு ஒன்று அல்லது இரண்டு இருந்து கொண்டிருக்கிறது. ஒரு தாலூகாவிற்கு ஒரு ஜுனியர் டெக்னிகல் ஸ்கூல் இருந்தால் முதற்கண் அதிகமாகப் படிக்காதவர்கள் ஜுனியர் டெக்னிகல் ஸ்கூலில் சேர்ந்து படித்துவிட்டு, பின்னால் பாலிடெக்னிக் ஏற்படுத்தினால் அதில் சேருவதற்கு சௌகரியமாக இருக்கும்.

நிர்வாகத்தில் ஏகப்பட்ட செலவு ஏற்படுகிறது. எவ்வளவு வருமானம் வந்தாலும், காணாது என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அது சம்பந்தமாக பல கமிட்டிகள் போடப்பட்டு, ரிபோர்ட்டுகள் வந்திருக்கின்றன. ஆனால், ஒன்றாவது அமல் நடத்தப்படவில்லை.

அதுபோக, 'டிலிமிடேஷன் ஆப் டாலுக்ஸ்' எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, செங்கோட்டைக்கு ஒரு தாலுகாவாக இருப்பதற்கு சக்தியில்லை. சதுரமைல் விஸ்தீரணம் ரொம்பவும் குறைவாக இருக்கிறது. பக்கத்தில் இருக்கக்கூடிய தென்காசிக்கு



3rd March 1964] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

எட்டில் ஒரு பங்குதான் இருக்கிறது. இந்த இரண்டு பகுதியைப் பொறுத்த மட்டில் கொஞ்சம் 'டிலிமிடேஷன்' செய்யலாம். அதே மாதிரி கன்யாகுமரி ஒரு சிறிய ஜில்லா. பக்கத்தில் இருக்கக்கூடிய பெரிய ஜில்லாக்களான திருநெல்வேலியிலிருந்து ஒரு பகுதியை எடுத்து கன்னியாகுமரியோடு இணைத்து, அதன் அந்தஸ்தை உயர்த்தினால், கொஞ்சம் சிக்கனம் ஏற்படும்.

அடுத்தபடியாக, கலெக்டருக்கு 5 பர்சனல் அஸிஸ்டென்ட்கள் இருக்கிறார்கள். டெவலப்மெண்டு பர்ஸனல் அஸிஸ்டென்ட்கள் இரண்டு, 'பி.ஏ. 1, பி.ஏ. 2, டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீஸர் இப்படி 5 பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் வேலை இருப்பதாகத் தெரியவில்லை. இதையெல்லாம் சற்றுக் குறைத்தால் சிக்கனம் ஏற்படும். அதேமாதிரி 'எஜுகேஷன் எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்' ஒருவர் இருக்கிறார். அதே பகுதிக்கு 'டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்' இருக்கிறார். இரண்டு பேர்கள் ஒரே வேலையைச் செய்கிறார்கள். இதையெல்லாம் 'பூல்' பண்ணவேண்டும். எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்-கோவாப்பரேஷன், எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்-ஸ்டாடிஸ்டிக்ஸ் என்று ஒவ்வொரு பிளாக்குக்கும் அவசியமில்லை. இரண்டையும் ஒன்றாக 'பூல்' பண்ணலாம். அல்லது, இரண்டு பிளாக்குகளுக்கு ஒரு எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் வைக்கலாம். 'ஸோஷல் வெல்பேர் வொர்கர்' என்று வைத்திருக்கிறார்கள். அதற்கு லட்சக்கணக்கான ரூபாய் செலவு ஆகிறது. உண்மையில் அவர்கள் என்ன செய்கிறார்கள், யார் கண்காணிப்பில் இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இது அவசியமில்லாத ஒரு பதவியாக இருந்து கொண்டிருக்கிறது.

அதுபோக, 'டிலே இன் டிஸ்போஸல்' ஒரு பிரச்னை எடுத்துக் கொண்டால் அதைப் பைசல் செய்வதற்கு 6 மாதங்கள், 8 மாதங்கள் இப்படி ஆகிறது. அதன் மூலம் 'கரெப்ஷன்' ஏற்படுகிறது. இதை நிவர்த்தி செய்யவேண்டும். எந்த காரியமாக இருந்தாலும் அதை 'டிஸ்போஸ்' செய்வதற்கு 30 நாட்கள், 90 நாட்கள் என்று ஏதாவது ஒரு திட்டம் வகுத்து, அந்தக் கால அளவிற்குள் அதை முடிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நலமாக இருக்கும்.

எனது தொகுதியைப்பற்றி ரொம்ப வருந்தத்தக்க ஒரு விஷயம். 'காலேஜ் ஆப் இண்டியன் மெடிஸன்' சென்ற வருஷத்தில் வரும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டது. பன்னிரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இன்றுவரையில் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இந்த பட்ஜெட்டில் பார்த்தால் ஒரு ரூபாய் டோகனை அதற்காக போட்டிருக்கிறார்கள். ஒரு திட்டத்தை எடுத்து ஒரு வருஷம் வரையில் என்ன செய்தார்கள்? இப்படியெல்லாம் ஒரு முடிவு இல்லாவிட்டால் இதற்கெல்லாம் ஐந்தாண்டுத் திட்டம் என்று எதற்கு வைத்துக்கொள்ளவேண்டும்? ஐந்து ஆண்டுகளில் திட்டத்தை வகுக்க வேண்டும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஒரு திட்டம் போட்டால் கூட திருப்தியாக இருக்கும். ஒரு காலேஜ் வைப்பதாகச் சொல்லி

விட்டு, ஒரு வருஷத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இப்பொழுது அதற்காக ஒரு ரூபாய் டோகனை ஒதுக்கியிருப்பது பற்றி நாம் என்ன அபிவிருத்தி செய்கிறோம் என்று வருந்தக்கூடிய நிலைமையில் இருக்கவேண்டியிருக்கிறது.

மின்சாரம் சம்பந்தப்பட்டமட்டில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ரொம்ப 'டிலே' இருக்கிறது. சாதாரணமாக ஒரு 'எக்ஸ்டென்ஷன்' கேட்டால் ரொம்பவும் 'டிலே' ஆகிறது.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்தைக் குறித்து சில வார்த்தைகள் சொல்லுவதற்கு விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் சுமார் 7, 8 ஆண்டுகளாக விவசாயிகளுடைய நலனுக்காக நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக படிப்படியாக பல சட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆனால், அப்படிக் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டங்களின் மூலம் விவசாயிகள், உழவர்கள் எந்த அளவுக்கு பயன் அடைந்திருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்க்கப்போனால், என்னுடைய அனுபவத்திலிருந்து பார்க்கும்பொழுது, எந்த நோக்கத்திற்காக நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டதோ, அந்த நோக்கம் நடைமுறையிலே ஈடேறவில்லை என்றுதான் சொல்ல முடியும். ஆகவே அரசாங்கம் மிகவும் கவனமாக, இந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் நல்ல முறையில் அமுலாக்கப்பட்டிருக்கிறதா, அதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா, விவசாயிகளுக்கு அதன் மூலம் நிலம் கிடைத்திருக்கிறதா, உச்ச வரம்பு சட்டத்தின் மூலமாக உபரி நிலங்கள் கிடைத்திருக்கின்றனவா என்பதை எல்லாம் பரிசிலனை செய்ய ஒரு கமிட்டியை அமைத்தால் உதவியாக இருக்குமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலச்சீர்திருத்த சட்டத்தின் மூலமாக என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், சென்ற பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நிலத்திலே உழுதுகொண்டிருந்தவர்கள், குத்தகை சாகுபடி செய்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்று சாதாரண விவசாய தொழிலாளிகளாக ஆக்கப்பட்டு கூலி வேலை செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலை உத்தரவாதமில்லாமல் அவர்கள் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு தனியாக வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் செய்யவேண்டும் அது போன்று வேலை செய்கின்ற காலங்களிலே ஒரு நியாயமான ஊதியம் அவர்களுக்கு கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிலையில் பார்த்தால் இன்றைய தினம் ராஜ்யம் முழுவதிலும் பல லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் பெரும் அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கள் அத்தனைபேரும், சென்ற ஆண்டு நிலவரியின் மீது விதித்திருக்கக்கூடிய உபரி வரியின் காரணமாக, இப்பொழுது இரண்டு பசலிகளுக்கு சேர்த்து





அந்த வரியை வசூலிப்பதினால் தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்து கூறினார்கள். விளையாத நிலத்திற்குக்கூட வரி கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று பிடிவாதமாக கெடுபிடிகள் செய்கிறார்கள் அங்கேயுள்ள அதிகாரிகள். இதை மனதில் வைத்துக் கொண்டு, அவர்களிடமிருந்து இந்த வரியை இந்த வருஷம் வசூலிக்காமல் ரத்து செய்வதுதான் சரியாக இருக்கும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால், எங்களுக்கு அதிகாரமில்லை என்று கையை விரித்துவிடுகிறார்கள். ஆகவே அரசாங்கம்தான் அவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டும். இதைப்பற்றி அரசாங்கம் கலெக்டர் இடமிருந்து தகவல்களைப் பெற்று, அவர்களுக்கு உதவி அளிக்கக்கூடிய முறையிலே 1372-73 இரண்டு பசலிக்கான வரியை வசூலிக்காமல், உபரியாக போடப்பட்டிருக்கும் வரியை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல எந்த விவசாயியும் கடன் வாங்காமல் எந்த காரியமும் செய்ய முடியாது. கடன் வாங்கித்தான் விவசாயம் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய நிலங்கள் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, விவசாயிகள் அதிகமான கடன்களைப் பெற்று விவசாயம் செய்கிறார்கள். இந்த வருஷம் சரியான விளைச்சல் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே அவர்களிடமிருந்து வசூல் செய்யவேண்டிய கடன்களை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட்டுறவு நாணய சங்கங்களிலிருந்து அவர்கள் வாங்கியிருக்கும் கடன்களையும் வசூலிக்காமல் ஒத்தி போடவேண்டும். சம்பந்தப்பட்ட இலாகாவினர் அடுத்த ஆண்டு இதை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரை பிரதேசத்தில் இருக்கக்கூடிய கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதின் காரணமாக, அந்த நிலங்களில் விளைச்சல் எதுவும் இல்லாமல் விவசாயிகள் கூலி வேலை செய்யும் நிலையில் இருக்கிறார்கள். நெல்லை வாங்கி உணவை தயார் செய்து கொள்ளலாம் என்று சொன்னாலும், நெல் கிடைப்பதில்லை. ' ஆகவே அந்த கிராமங்களிலெல்லாம் மலிவு தானிய கடைகளை ஏற்படுத்தி, நியாயமான விலையில் அவர்களுக்கு உணவுத் தானியங்கள் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன முன்னேற்றத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு மனைகள் வாங்கிக்கொடுப்பதற்காக அதிகமான நிதியை ஒதுக்கியிருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த மனை வாங்கும் விஷயத்தை எடுத்துக்கொண்டால் இதிலே பெரிய தடைகள் இருக்கின்றன. ஆமை வேகத்தில்தான் வேலை நடந்துகொண்டிருக்கிறது. இதை சர்க்காரின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனைகளை வாங்கி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், ஹெல்த் டிபார்ட்மெண்டுக்கு போய்,

[திரு. ஆ. கு. சுப்பையா] [3rd March 1964

இடம் சரிதானா என்று பார்த்து அவர்கள் சிபார்சை பெறவேண்டிய நிலையில் இருக்கின்றது. சில சமயங்களில் அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை உபயோகப்படுத்திக் கொண்டு, அவசியமில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அதன் காரணமாக மனைகள் வாங்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. மேலும் அந்த கிராமத்திலுள்ள நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து கிரையத்திற்கு பெற்றுதான் நிலத்தை வாங்கவேண்டியிருப்பதால், அவர்கள் நிலத்தை கொடுப்பதற்கு சம்மதம் கொடுப்பதில்லை. நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தாலும், உயர்நீதி மன்றம் வரையிலும் போய் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். ஐந்து அல்லது பத்து வருஷங்களாகியும் நிலத்தை எடுத்துக் கொள்ளமுடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே ஒரு ஆண்டிற்குள் இந்த குடியிருப்பு மனைகளை ஹரிஜனங்களுக்கு ஜாரி செய்து கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்து, அதற்கான வகையில் சட்டங்களை திருத்துவது மிகவும் அவசியம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் விலைவாசி உயர்வினால் பெரும் அளவிற்கு நகரப் புறங்களிலுள்ள மக்களும் கிராமப்புறங்களிலுள்ள மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விலைவாசி உயர்வை கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கம் தைரியமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் காரணமாக அரசாங்கத்தின் போக்கை கண்டிக்கக்கூடிய முறையிலே இன்று தமிழ் நாட்டில் தொழிற் சங்கங்களில் சம்பந்தப்பட்ட தலைவர்கள் ஆயிரக் கணக்கானவர்கள் உண்ணாநோம்பு அனுஷ்டித்து வருகிறார்கள். ஆகவே விலைவாசியைக் கட்டுப்படுத்த தைரியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். உணவு தானிய உற்பத்தியைப் பற்றி பேசும் போது, ஜனப்பெருக்கத்தின் காரணமாக போதுமான உற்பத்தி செய்ய முடியவில்லை என்ற ஒரு சால்சாப்பு சொல்லப்பட்டு வருகிறது. ஜனப்பெருக்கத்தின் காரணமாக உற்பத்தி குறைகிறது என்று சொன்னால், அதை யாரும் நம்ப முடியாது. நிலத்தை நம்பி வாழக்கூடியவர்களுக்கு நம்பிக்கையற்ற ஒரு நிலைமையிருப்பதின் காரணமாகத்தான் இன்றைய தினம் உற்பத்தியை சரியான அளவுக்கு பெருக்கமுடியாத ஒரு நிலைமை இருந்து வருகிறது. அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் உற்சாகத்தை ஊட்டினால் உற்பத்தி பெருக வழி ஏற்படும். உற்பத்தி செய்கின்றவர்கள் அவர்களுடைய தானியங்களை நியாயமான விலைக்கு விற்பதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். விவசாயிகளை எடுத்துக்கொண்டால் இந்த வருஷம் நல்ல முறையில் சாகுபடி செய்து நல்ல ஆதாயத்தை அடையவேண்டுமென்று நினைத்து உழைத்தாலும்கூட, அடுத்த ஆண்டில் அதே நிலத்தில் அவர்கள் உழுது ஆதாயத்தை பெற முடியுமா முடியாதா என்ற சந்தேகம் அவர்களுக்கு இருந்து வருகிறது. இதற்கு காரணம் நிலச்சீர் திருத்த சட்டம் சரியான முறையில் நிறைவேற்றப்படாததுதான். நிலச்சீர்திருத்த சட்டம் இன்று பாதிக் கிணறு தாவின கதையாகத் தான் இருக்கிறது. நிலச்சொந்தக்காரர்களுக்கும் உற்சாகம் கிடையாது, உழுபவர்களுக்கு உற்சாகம் கிடையாது. அப்படிப்பட்ட



3rd March 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

இரண்டும் கெட்டான் நிலைமை தான் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமையை நீக்கி, விவசாயிகளுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுத்து உணவுத் தானியங்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் போக்குவரத்து வசதி மிகவும் குறைவாக இருக்கக்கூடிய ஒரு ஜில்லாவாக அது இருக்கிறது. ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு போக வேண்டுமென்றால் பல ஆறுகளை கடந்துபோக வேண்டும். ஆற்றின் குறுக்கே பாலங்கள் கட்டாமல் இருக்கிறார்கள். இதைப்பற்றி கேட்டால், நெருக்கடி நிலைமை என்ற காரணத்தைச் சொல்லி கையை விரித்துவிடுகிறார்கள். மற்ற மாவட்டங்களிலெல்லாம் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே தஞ்சை ஜில்லாவில் போக்குவரத்து வசதியில்லாத காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு, பாலங்கள் கட்டுவதற்கும், ரோடுகளை செப்பனிடுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை செல்வதற்கு ரெயில் போடுவதாக சொல்லி வெகுகாலமாகிறது. அங்கிருக்கக்கூடிய பஸ் முதலாளிகள் எல்லாம் அரசாங்கத்தைச் சரிக்கட்டி இந்தத் திட்டத்தை கைவிடவேண்டிய நிலைமையை ஏற்படுத்தியிருப்பதாக அங்குள்ள மக்கள் சொல்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை மார்க்கத்தை விட அவசரமானதும், அவசியமானதுமான எவ்வளவோ ரெயில்வே லைன்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்கிறார்கள். ரொம்ப நாட்களாகவே எனக்குத் தெரியும். நல்ல ரோடு இருக்கிறது. அங்கே பஸ்ஸிலேயே ரொம்பப் பேர்கள் போய்வருகிறார்கள். நல்ல ரோடாக இருக்கிறது. ஆகவே இந்த லைனுக்கு ரொம்ப லோ ப்ரையாரிடிதான் இருக்கும். இப்பொழுது எதிர்பார்ப்பதற்கே இல்லை என்றுதான் சொல்ல முடியும். 10-30 a.m.

**திரு. ஆ. கு. சுப்பையா:** அங்கே ஜனங்கள் அந்தமாதிரிப் பேசுகிறார்கள். அதனால்தான் நான் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அடுத்து, துரித பஸ் போக்குவரத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது சர்க்காரிலேயே துரிதமாகப் போகும் பஸ்கள் விடுகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து அதிகமாக அப்படிப்பட்ட பஸ்கள் விடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பட்டுக்கோட்டையிலிருந்து ஒரு பஸ் சென்னைக்கும், வேதாரணியத்திலிருந்து திருத்துறைப்பூண்டி, மாயவரம் வழியாக சென்னைக்கு ஒரு பஸ் என்று போட்டால், மிகவும் உதவியாக இருக்கும். இப்பொழுது சென்னைக்கு வர ஜனங்கள் மிக்க கஷ்டப்படுகிறார்கள்.

ரெயில்வேயில் இடம் கிடைப்பதில்லை. மிக்க கஷ்டமாக இருக்கிறது. ஆகவே துரித பஸ் போக்குவரத்தை இந்த மார்க்கங்களிலே விட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வடிகால் சம்மந்தமாக ஒரு வார்த்தை. வடிகால் வசதியை சீர் செய்து கொடுக்க சர்க்கார் என்ன செய்யப்போகிறார்கள் என்று தஞ்சாவூர் விவசாயிகள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு அவசரத் திட்டமாக அதை எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரெவின்யூ அமைச்சரவர்கள் நேரிலேயே தஞ்சைக்குச் சென்று வடிகால் இல்லாததைப் பார்த்து வந்திருக்கிறார்கள். ஆகவே அதற்கான ஒரு திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடுகூட, பழைய ஆறுகளில் தூர் எடுத்து எவ்வளவோ நாட்கள் ஆகின்றன. அவைகளையும் தூர் எடுத்துக் கொடுத்தால் விவசாயிகள் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

* **திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையானது நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டு இருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் தனது பழுத்த அனுபவத்தைக் கொண்டு இந்த அறிக்கையை கச்சிதமாக தயாரித்து சமர்ப்பித்து இருக்கிறார்கள். நமது நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக எத்தனையோ திட்டங்களை தீட்டி நல்ல முறையிலே செயல்பட ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் மத்திய சர்க்காரும் சரி, மாநில சர்க்காரும் சரி, அதிகப்படியான பணத்தை உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்பதற்காக செலவு செய்து வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் உணவு உற்பத்தி பெருக நிலச் சீர்திருத்தம், விவசாயிகளுக்கு அவசியமானது என்று திட்ட கமிஷன் முடிவு செய்து இருந்ததற்கு ஏற்ப பல கட்டங்களாக நிலச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இந்நிலையில் முன்பு இருந்ததைவிட உணவு உற்பத்தி பெருகி இருக்கிறது, என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் நாம் என்ன எண்ணினோமோ அந்தத் தன்மையை இன்னும் அடையவில்லை என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. விவசாயத்துக்கு பொறுக்கு விதைகள் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு அக்கரை ஏற்படக்கூடிய வகையில் பல உதவிகளை செய்து வருகிறார்கள். இருந்தபோதிலும் பயிரிடும் விவசாயிக்கு போதுமான அக்கரை ஏற்பட்டால்தான் இந்த நாட்டின் உணவு உற்பத்தியை எண்ணிய அளவில் பெருக்க முடியும். பயிரிடும் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்க பல சட்டங்களைக் கொண்டுவந்து இருக்கிறோம். அதன் காரணமாக அவனுக்கு விவசாயத்தில் ஓரளவு அக்கரை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எந்த எண்ணத்தில் சட்டங்கள் ஏற்பட்டனவோ அதன் முழுப்பயனை, தன்மையை அவன் அடையமுடியவில்லை. அதோடு நிலச்சீர்திருத்தத்தின் காரணமாக விவசாயத் தொழிலுக்கு சில வழிகளில் குந்தகமும் விளைந்திருக்கிறது. விவசாயத்தில் பழக்கம்





இல்லாதவர்களும் அத்தொழிலை செய்ய முற்பட்டிருக்கிறார்கள். ஒரு வியாபாரி மளிகைக்கடை வைத்திருந்தால் அவர் அந்தத் தொழிலில் நல்ல ஆற்றலும் திறமையும், அமைந்தவராக இருப்பார். அதே மாதிரி எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும் ஒருவருக்கு எந்தத் தொழிலில் பயிற்சி இருக்கிறதோ அதில்தான் அவர் முன்னேற்றம் பெற முடியும். அதுபோல பயிர்த் தொழிலை அதில் அனுபவம் பெற்றவர்கள் செய்தால்தான் உணவு உற்பத்தி பெருக முடியும். ஆகவே பயிரிடும் விவசாயி நிலத்தில் பூரண உரிமை பெற, சட்டத்தை திருத்தியோ, அல்லது நல்ல அமுலாக்குவதிலே அதிக கவனம் செலுத்தியோ, எந்த நோக்கத்தோடு சட்டத்தை கொண்டு வந்தோமோ, அந்த நோக்கம் பூரணமாக நிறைவேறும் வழியில் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு எத்தனையோ திட்டங்கள் தீட்டி, பெரிய பெரிய அணைக்கட்டுகள் கட்டி விவசாய உற்பத்தியைப் பெருக்க வழி வகைகள் செய்து வருகிறோம். எவ்வளவு செலவானாலும் நாம் கவலைப்படுவது இல்லை. உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்பது ஒன்று தான் நமது நோக்கம். இன்னும் நமது மாநிலத்தில் எவ்வளவோ நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. அந்த நிலங்களில் சாகுபடி செய்ய ஏழை எளியவர்கள் தயாராக இருக்கிறார்கள். சாகுபடிக்கு நிலம் இல்லாத ஏழைகள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அந்த தரிசு நிலங்களை எடுத்து நிலம் இல்லாத ஏழைகளுக்கு தலைக்கு 3 ஏக்கர் அல்லது 5 ஏக்கர் என்று கொடுத்து மற்ற உதவிகளும் செய்தால் உணவு உற்பத்தி இன்னும் அதிகமாகும். சர்க்காருக்குச் சொந்தமாக போதுமான நிலம் இல்லாவிட்டாலும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் தனிப்பட்டவர்களுக்கு சொந்தமாகி தரிசாக கிடக்கின்றன. ஒரு ஏக்கர் 10, 15 ரூபாய்க்கும் வாங்க முடியும். அப்படி ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் தரிசாக இருக்கின்றன. அதிலே ஓரளவுக்கு பரீட்சார்த்தமாககூட பார்க்கலாம். நிலம் இல்லாத விவசாயிக்கு நிலம் கொடுத்து நல்ல நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அது அவர்களுக்கும் நல் வாழ்வைக் கொடுக்கும். உணவு உற்பத்தியும் பெருகும். ஆகவே இன்றைக்கு புதிய அணைக்கட்டுகள் கட்ட நதிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் இம்மாதிரி ஒரு திட்டத்தை அமலாக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நாட்டில் விவசாயத் தொழிலைச் செய்கிறவர்கள்தான் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினால்தான் இந்த நாட்டில் நாம் சோஷலிச சமுதாயத்தை அமைக்க முடியும். பெரிய பணக்காரர்களுக்கு வரி போட்டால் மாத்திரம் அத்தகைய சமுதாயத்தை நாம் ஏற்படுத்திவிட முடியாது. ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்தால் உணவு உற்பத்தி பெருகுவதோடு சமுதாயத் துறையில் அவர்களும் முன்னுக்கு வர முடியும். விவசாயத்தை செய்கிறவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயத் தொழிலைச் செய்தாலும் அவர்களெல்லோரும் பெரும்பாலும் அப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் முன்னுக்கு வர நிலச் சீர்திருத்த திட்டங்களை சரிப்படுத்துவதோடு, தரிசு நிலங்களையும் பயிரிடக் கொடுக்கும் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டுமென்று நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும் ஏழைகளை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமானால், பொருளாதாரத் துறையில் அவர்களை உயர்த்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஏழை பிற்பட்ட மக்களுக்கும், ஹரிஜன மக்களுக்கும் இந்தச் சர்க்கார் அனேக நன்மைகளைச் செய்துகொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் இல்லை என்று சொல்ல நான் தயாராக இல்லை. கல்வித் துறையில் அனேக நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் அவர்கள் நிலை முன்னேறி வந்து கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் ஏழை பிற்பட்ட மக்கள் வசிக்கும் தெருவிலும், ஹரிஜன தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் தெருவிலும், ஏதாவது கணக்கு எழுதிக் கொடுக்க அடுத்த ஊரிலிருந்து ஆள் கொண்டுவந்து எழுதக்கூடிய நிலைமை இருந்தது. அந்த நிலை இன்று மாறி, இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திலும் ஏதாவது ஒன்றிரண்டு பிள்ளைகள் பி.ஏ., எம்.ஏ. படித்து முன்னேற்றமான நிலையை அடையும்படி இந்த சர்க்கார் செய்திருக்கிறது என்பதை ஆளும் கட்சியில் இருக்கும் நான் பெருமையோடு சொல்ல முடியும்.

பொருளாதாரத் துறையிலே நம்முடைய சர்க்கார் இப்பொழுது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். ஏழை எளிய விவசாயிகள் ஹரிஜனங்கள், பிற்பட்ட மக்கள் ஏதாவது தொழில் செய்தால் அவர்களுக்கு அதிக நன்மைகளைச் செய்யவேண்டும். அறிவுத் திறமை வாய்ந்த அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனை செய்து, தொழில் செய்பவர்களுக்கும், வியாபாரம் செய்பவர்களுக்கும் நல்ல முறையில் கடன் கொடுத்து உதவ வேண்டும். ஒரு சில தொழில் செய்பவர்களுக்கு கடன்கள் கொடுத்து வருகிறார்கள். ஆனால், எல்லாத் தொழில்களுக்கும் கடன் கிடைக்கவில்லை. ஹரிஜன, பிற்பட்ட வகுப்பினர்களும் பல தொழில்கள் செய்து முன்னுக்கு வர, அவர்களுக்கு சர்க்காரிலிருந்து எல்லாவிதமான கடன்களும் கொடுக்க வழி செய்தால் இந்த நாட்டில் ஏழை மக்களும் முன்னுக்கு வருவதோடு, பொருளாதார சமத்துவமும் ஏற்பட முடியும். சோஷலிச சமுதாயத்தையும் அப்பொழுதுதான் சீக்கிரமாக நாம் ஏற்படுத்த முடியும். கூட்டுறவு முறையில் ஹரிஜனங்கள் சேர்ந்து, ஒரு மோட்டார்த் தொழில் செய்தால் அவர்களுக்குக் கடன் கொடுக்க, ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் இந்த ஆண்டில் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அதைக் கூட்டுறவு முறையோடு மாத்திரம் நிறுத்திவிடக்கூடாது. லிமிடெட் கம்பெனி வைக்க ஹரிஜனங்கள் முன்வந்தால், அல்லது பிற்பட்ட மக்கள் முன்வந்தால் அவர்களுக்குக் கடன் கிடைக்க வழி இல்லை. அவர்களுக்கும்





இம்மாதிரி கடன் கொடுத்து உதவும் வகையிலே திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று நான் சர்க்காருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கல்வித் துறையில் இந்த சர்க்கார் எத்தனையோ நன்மைகள் செய்து வந்திருக்கிறது. எந்த ஜாதியினராக இருந்தாலும், ஜாதி மத வித்தியாசம் பாராமல் அத்தனை பேருக்கும் எஸ்.எஸ்.எல்.ஸி. வரை இலவசமாகப் படிக்க இந்தச் சர்க்கார் வசதி செய்த ஒரு காரியத்தை யாரும் மறுக்க முடியாது. சில சமுதாயத்தினருக்கு இலவசமாக இருந்து, மற்றவர்களுக்குச் சம்பளம் வைத்திருந்த காரணத்தால், ஏழை எளியவர்கள் எல்லோரும் தாசில்தாரிடம் சென்று வருவாய் சர்டிபிகேட் வாங்கக் காத்திருந்த காட்சி இனிமேல் இருக்காது. காரணம், எல்லோருக்கும் இலவசக் கல்வி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைக் குறித்தும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பள்ளிகளில் ஒரு ஆசிரியர் 45 பிள்ளைகளைக் கவனிக்க வேண்டும் என்ற முறை இருப்பதை அமைச்சர் அவர்கள் கூடிய சீக்கிரம் மாற்றியமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் ஆவன செய்தால் நலமாக இருக்கும்.

இந்தியைப்பற்றி ஒரு வார்த்தை. இப்பொழுதுதான் ஏழை எளிய ஹரிஜனப் பாட்டாளி மக்கள் ஓரளவு படிக்க முன்வந்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் ஆங்கிலம் படியாத காரணத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். இப்பொழுதும் தயவுசெய்து தாழ்த்தப்பட்டவர்களை, ஏழை எளியவர்களை 'இந்தி படியாதீர்கள்' என்று யாரும் சொல்ல வேண்டாம். அப்படி யாராவது சொல்வார்களானால் மேலும் அவர்களைக் கெடுத்துவிடக் கூடிய காரியமாகத்தான் இருக்கும். திராவிட நாடு வேண்டுமென்று சொன்னவர்கள், திராவிட நாடு வந்தால் இந்தி அவசியம் இல்லை என்று சொல்லி வந்தார்கள். அந்த வாதம் அப்பொழுது நியாயமாக இருந்திருக்கலாம். ஆனால், இன்று அந்தக் கொள்கையையும் அவர்கள் விட்டுவிட்ட காரணத்தால், இந்த நாட்டில் இந்தி வேண்டாம் என்று சொல்லி இனிமேல் ஏழை எளிய மக்களை முன்னேற விடாமல் தடுக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகின்றேன்.

***டாக்டர் பா. நடராஜன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டங்கள் வந்த பிறகு இந்த வருடாந்திர நிதி நிலை அறிக்கைக்கு அவ்வளவாக முன் இருந்த ஒரு முக்கியத்துவம் இல்லை என்றே சொல்ல வேண்டும். முன் இருந்த பரபரப்பும் மர்மமும் அதில் இப்பொழுது இல்லை. ஐந்தாண்டுகளுக்கு இவ்வளவு வரி போடுவது, இன்ன இன்ன இனங்களில் இவ்வளவு செலவு செய்வது என்று முன்னமே தீர்மானித்து இருக்கிறோம். அதற்கு எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறோம். எந்த எந்த வரிகளைப் போடுவது என்பதில்தான் நிதி அமைச்சருக்குப் பொறுப்பு இருக்கிறது. அதிலும் அவர்கள் ஒரு கோடிட்ட அரங்குக்குள்ளே விளையாட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

[டாக்டர் பா. நடராஜன்] [3rd March 1964

ஏனென்றால், மாநில வரி இனங்களில் பல நெகிழ்ச்சியற்றனவாகவே இருக்கின்றன. நமது மாநிலத்தில் நெகிழ்ச்சியுடைய வருமான இனங்கள் என்று சொல்லவேண்டுமானால், நான்குதான் இருக்கின்றன. 'வட்டி' என்கிற ஒரு இனம் இருக்கிறது. இந்த இனத்தில் 1955-56-ஆம் ஆண்டில் 52 லட்சம் ரூபாய் வந்தது. இப்பொழுது 13 கோடி 78 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. 1955-56-ஆம் வருஷத்திய பட்ஜெட் 52 கோடி ரூபாய் வருமானத்தை உடையது. அப்பொழுது மொத்த வருமானத்தில் ஒரு சத விகிதமாக இருந்தது இப்பொழுது பத்து சத விகிதமாக இருக்கிறது. இந்த இனம் மிக்க நெகிழ்ச்சி உடையதாக இருக்கிறது.

அடுத்து விற்பனை வரி. 1955-56-ஆம் ஆண்டில் இதன் மூலம் வருவாய் 9 கோடி 82 லட்சம் ரூபாயாக இருந்தது. சுமார் பத்து கோடி என்று வைத்துக்கொள்வோம். இப்பொழுது அது 30 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதாவது அன்று மொத்த வருமானத்தில் 16.6 சத விகிதமாக இருந்தது. இன்று 21.18 சத விகிதமாகியிருக்கிறது.

வாகன வரியைப் பார்ப்போம். இதுவும் 4 கோடி ரூபாயிலிருந்து 12 கோடியாகிவிட்டது. அன்று இது மொத்த வருமானத்தில் 7.7 சத விகிதமாக இருந்தது. இன்று மொத்த வருமானத்தில் 8.7 சத விகிதமாக இருக்கிறது. இதை சற்று நெகிழ்ச்சியுடையது என்றுதான் சொல்லலாம். அதிக நெகிழ்ச்சி உடையது என்று சொல்ல முடியாது.

'விவசாயம்' என்கிற ஒரு இனம் இருக்கிறது. கரும்பு செஸ், பண்ணைகள் நடத்துவது, விதைப் பண்ணை அமைப்பது போன்றவை இதில் வரும். இந்த இனத்தின் மூலம் வருவாய் 1955-56-ம் ஆண்டில் 80 லட்சமாக இருந்தது. இப்பொழுது 2 கோடி 45 லட்சம் ரூபாயாகி இருக்கிறது. அதாவது, 1.5 சத விகிதத்திலிருந்து 1.7 சத விகிதத்திற்கு உயர்ந்திருக்கிறது, மொத்த வருமானத்தில். இதுவும் சற்று நெகிழ்ச்சி உடையது என்றே சொல்ல வேண்டும்.

கோடிக் கணக்கில் பார்த்தால், இந்த நான்கு இனங்கள் போக இன்னும் நான்கு இனங்கள் இருக்கின்றன. அதாவது, நில வரி, முத்திரைத் தாள், பத்திரப் பதிவு, தொழில்கள் ஆகிய நான்கு. நில வரி 10 ஆண்டுகளுக்கு முன்பு 5 கோடி 97 லட்சமாக இருந்தது. இப்பொழுது 8 கோடி 40 லட்சமாக இருக்கிறது. அப்பொழுது மொத்த வருமானத்தில் 11 சத விகிதமாக இருந்தது. இப்பொழுது மொத்த வருமானத்தில் 6 சத விகிதமாகத்தான் இருக்கிறது. நில வரியில் நெகிழ்ச்சியே இல்லை. 'முத்திரைத் தாள்' என்ற தலைப்பில் 3 கோடி 59 லட்சம் வருவாய் வந்தது. இப்பொழுது 6 கோடி 44 லட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஏழு சத விகிதத்திலிருந்து 4.6 சத விகிதமாகக் குறைந்திருக்கிறது, மொத்த வருமானத்தில். இதையும் நெகிழ்ச்சியற்றது என்றுதான் சொல்ல வேண்டும்.



3rd March 1964] [டாக்டர் பா. நடராஜன்]

இதுபோலவே பத்திரப் பதிவு என்ற இனம் 1955-56-இல் 69.66 லட்சமாக இருந்தது. 1964-65 மதிப்பீடு 1,46.02 லட்சமாக இருந்தது. அதாவது மொத்த வருமானத்தில் பார்த்தால் 1.3 சதவிகிதமாக இருந்தது. இப்பொழுது 1 சதவிகிதம் ஆக இருக்கிறது.

மேலும் தொழில்கள் என்ற இனத்தில் 1955-56-இல் 117.52 லட்சம் வந்தது, 1963-64-ன் மதிப்பீடு 3,15.17 லட்சமாக இருக்கிறது. இதையும்கூட மொத்த வருமானத்தில் பார்த்தால், 2.4 சதவிகிதம் ஆக இருந்தது. 2.35 சதவிகிதம் ஆகத்தான் இருக்கிறது. ஆக, இதுவும் ஒரேமாதிரியாக, நெகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறது என்று சொல்லலாம்.

இவ்வாறாக, நெகிழ்ச்சி உள்ள வரி இனம் என்று சொல்ல வேண்டுமானால் அது விற்பனை வரி ஒன்றுதான். ஆகவே வரி போடுவதற்கு என்று அடியெடுக்கும்போது, தவறி விழுவதாக இருந்தாலும், நிதி அமைச்சர் இந்த விற்பனை வரியின்மீதுதான் விழவேண்டியிருக்கிறது. ஆகவேதான் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுகிற தொகையில் ஒரு பகுதியைச் சரிக்கட்ட நமது நிதி அமைச்சர் அவர்கள் விற்பனை வரியைத் துணைக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் ஒரு கோடி ரூபாய் சரிக்கட்டிக் கொள்ளும். விற்பனை வரி நெகிழ்ச்சியுள்ள வரி இனம். அதன் தலையில் கை வைத்திருக்கிறார்கள். இது முறையானது என்றுதான் சொல்ல வேண்டும். அதுவும் நமது நிதி அமைச்சர் அவர்கள் ஐந்தாண்டுகளில் திரட்ட வேண்டிய நிதியை கடந்த மூன்றாண்டுகளுக்குள்ளாகவே பெரும்பாலும் திரட்டிக் கொண்டுவிட்டார்கள். அவர்கள் வரியைத் திரட்டும் சூட்சுமத்தை நன்றாகத் தெரிந்தவர்கள். வள்ளுவர் சொல்வது போல,

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்து
ஒன்று உண்டாகச் செய்வான்வினை.

திரட்ட வேண்டிய நிதிகளை எல்லாம் காலாகாலத்தில் நமது நிதி அமைச்சர் திட்டத்துறையில் திரட்டிக்கொண்டுவிட்டதனால்தான், நமது இலக்கை தாண்டியும் 60 சதவிகிதம் சாதனையை அடைய முடிந்தது. மேலும் 291 கோடி ரூபாய் திட்டத்தை நாம் 325 கோடியாகப் பெருகும் நிலையில். இருக்கிறோம். ஆகவே நமது நிதி அமைச்சர் அவர்களுடைய வரிபோடுகிற சாதுர்யத்தை எதிர்க் கட்சிக்காரர்களும்கூட பாராட்ட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

ஆனால் இன்னொன்று. விற்பனை வரி முக்கியமானதாக இருப்பதால், அதில் வசூல் பாக்கி மிகுதியாக இருக்கக்கூடாது. கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டின் ஒரு அறிக்கை, ரூபாய்க்கு 12 பைசா மொத்தம் டிமாண்டு தொகையில் நிலுவையாக நிற்பதாக கூறுகிறது. அதாவது மொத்த டிமாண்டில் 12 சதம் பாக்கி விழுந்திருப்பதாகக் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இப்படி பாக்கி நிற்கும்படி விட்டுக்கொண்டே போனால், வசூல் வேலை கடினமாகும். பழைய பாக்கியை வசூல் செய்ய தகுந்தபடியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பட்ஜெட்டிலும் அதைப்

[டாக்டர் பா. நடராஜன்] [3rd March 1964

தொழில் இல்லாதவர்கள் மிகுதி. இந்த நிலைமையில், அந்தப் பகுதி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் ஒரு மில் தனியார் துறையில் ஏற்படப்போவதாக அறிகிறேன். வேறு பல தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் இருக்கின்றன. அரசாங்கம் அவற்றில் கவலை எடுக்க வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நிபுணர்கள் என்றால் கொஞ்சம் வேப்பங்காயாக இருக்கிறது. ஆனால் எல்லா நிபுணர்களும் அவாது பட்ஜெட்டைக் கரும்பு போல் சுவைக்க விரும்புவார்கள் என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** மதிப்பிற்குரிய சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் 3 கோடி ரூபாய் பற்றுக்குறையாகக் காட்டினார்கள். இந்த ஆண்டிலும் 3 கோடி 34 லட்சம் பற்றுக் குறையாக இருக்கிறது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கின்ற போது புது வரி எதுவும் இல்லையென்று சொன்னார்கள். ஆயினும் இரண்டொரு மாதத்திலே நீர்வரி, நிலவரியை உயர்த்தினார்கள். விற்பனை வரியிலே ஒருசில மாறுதல்களைச் செய்தார்கள். ஒரு [illegible] வரியாக இருந்தவற்றைப் பலமுனை வரியாக [illegible]. பலமுனை வரியாக இருந்தவற்றை ஒரு முனையாக [illegible]. இவற்றையெல்லாம் செய்து விட்டு புதிய வரி [illegible] கூறிக் கொள்கிறார்கள். சென்ற ஆண்டு நம் [illegible] நிதியமைச்சர் அவர்கள் எதிர்பார்த்த வரவு 124 [illegible] ரூபாய் என்றாலும் நிகரமாக வந்த வரவு ஏறக் [illegible] 130 கோடி ரூபாய் ஆகும்.

[illegible] எதிர்பார்த்ததை விட 6 கோடி 53 லட்சம் ரூபாய் [illegible]கமாக வருவாய் வந்திருக்கிறது. எதிர்பார்த்ததைவிட [illegible]திகச் செலவு 6 கோடி 83 லட்சம் ஆகியிருக்கிறது. சென்ற ஆண்டைப் போல் பட்ஜெட் சந்தர்ப்பத்தில் வரி விகிதத்தை உயர்வு செய்யாமல் நிதி அமைச்சர் அவர்கள் பொது விற்பனை வரியில் ஒருசில பொருள்கள் மீது இருக்கக்கூடிய வரியைக் கூட்டி சுமார் ஒரு கோடி ரூபாய் அதிக வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். உண்மையிலேயே ஒரு கோடி தான் வருமா என்றால் சென்ற ஆண்டு மத்திய அரசு விற்பனை வரியை ஒரு சதவிகிதம் உயர்த்தியது. அதன் பலனாக நம் மாநில அரசாங்கத்திற்கு 1 கோடி 70 லட்சம் ரூபாய் கூடுதலாக கிடைத்திருக்கிறது. இப்போது நம் நிதி அமைச்சர் அவர்கள் பருத்தி, பருத்தி நூல், பருத்தி நூல் கழிவு, பருத்திக் கழிவு ஆகிய பொருள்கள் மீதும், நார் பட்டு மீதும் 1 சதவிகிதம் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். பருத்தியிலிருந்து கடைசி விற்பனை முனையில் 1 சதவிகிதம் கிடைக்கும், அது பம்பாய் மாநிலத்திற்குப் போய் அங்குள்ள ஆலைகளில் நூலாக மாறி நம் மாநிலத்திற்கு திரும்ப வந்து கொள்முதல் செய்யும்போது இன்னும்



3rd March 1964] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

1 சதவிகிதம் அதிகமாகும். ஆகவே நாம் அதிகரிப்பது 1 சதவிகிதம் என்றாலும் இரண்டு சதவிகிதம் என்ற அளவில் ஆகிறது. அதே சமயத்தில் மெல்லிய நூலுக்கு மத்திய அரசும் ஒரு சதவிகிதம் கூட்டியிருக்கிறது. இதன் காரணமாக கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களிடமிருந்து நம் மாநிலத்தில் நாம் எதிர்பார்ப்பது ஒரு கோடி என்று மதிப்பிட்டிருந்தாலும் நான்கு கோடி வரும். அப்படியிருக்கும்போது கைத்தறி துணிகள் விற்பனையாகுமா? ஆகவே கைத்தறித் துணிகளுக்கு மார்க்கட் இல்லாமல் அதில் ஈடுபட்டிருக்கும் கைத்தறித் தொழிலாளர்கள் அவல நிலைக்கு ஆளாக வேண்டியிருக்கும். டாக்டர் நடராஜன் அவர்கள் சொன்னார்கள். இந்த ஒரு இனம்தான் இருக்கிறது, நல்ல இனம், இதை விட்டால் வேறு இனம் இல்லை, ஆகவேதான் நிதி அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப் பார்த்து இதைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நம் பற்றுக்குறையை எப்படிப் போக்குவது என்றால், உல்லாசப் பொருள்கள் மீது வேண்டுமானால் மேலும் விற்பனை வரியை உயர்த்தலாம். உல்லாசப் பொருள்களை, லக்ஷுரியஸ் ஆர்டிகிள்ஸை, உபயோகிப்பவர்கள் சமுதாயத்தில் மேல் கட்டத்தில் இருப்பவர்கள். ஆகவே கைத்தறித் தொழிலைப் பாதிக்காத அளவிற்கு நிதி அமைச்சர் அவர்கள் இந்த வரிவிதிப்பை திரும்பப் பெற்று உல்லாசப் பொருள்கள் மீது வேண்டுமானால் விற்பனை வரியை கூடுதலாக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் சமுதாயத்தில் மேல் மட்டத்தில் இருப்பவர்கள்தான் பாதிக்கப்படுவார்களே தவிர, விவசாயிகள் அல்லது கைத்தறித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். ஆகவே இது குறித்து நிதி அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, 1957-58ல் இருந்து சற்றேறக் குறைய புது வரிகளாக 75 கோடி 99 லட்சம் ரூபாய் அளவு வரை வரி உயர்வு செய்திருக்கிறார்கள். 1957-58ல் 62 கோடி 56 லட்சமாக இருந்தது, 1964-65-ல் 138 கோடி 48 லட்சமாக உயர்ந்திருக்கிறது. ஆக 75 கோடி ரூபாய் அளவில் உயர்ந்திருக்கிறது. இந்த அளவிற்கு வரிகளை உயர்த்தி, வரி விகிதங்களை மாற்றியமைத்து வசூலித்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. நம் ராஜ்யத்தில் பெரிய தொழில்களை எல்லாம் தேசியமயமாக்கினதால் இந்த வருமானம் வந்ததா என்றால் நிச்சயமாக இல்லை. மறைமுக வரிகள் காரணமாக, ஏழை எளிய பாட்டாளி மக்கள், நடுத்தர வகுப்பு மக்கள் இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பொருளாதார வல்லுனர்கள் கூறுகிறார்கள். ஆக, இப்படி மறைமுக வரிகளை உயர்த்திக் கொண்டு செல்வது நல்லதல்ல. நேர்முக வரிகளைப் போட முற்பட வேண்டும். புவனேஸ்வரில் கூடி ஜனநாயக சோஷலிஸம் என்று காங்கிரஸ் கட்சி முடிவு செய்தது. அதற்கேற்ப இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று [illegible] [illegible]. நான் கூர்ந்து பார்த்தேன். இதில் [illegible] சோஷலிச வாடை எந்த இடத்தில் [illegible] [illegible]

[டாக்டர் பா. நடராஜன்] [3rd March 1964

பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால், இந்த ஆண்டின் இறுதிக்குள் வசூல் திருந்தமடையும் என்று நினைக்கிறேன்.

அடுத்து, முக்கியமாக, நாம் கவனம் செலுத்த வேண்டியது நம்முடைய தொழில்துறைதான். "வரியையே இனி நம்பி இராமல் பொதுத்துறையில் தொழில்களை வளர்ச்சி அடையச் செய்தால், அதன் மூலம் அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்" என்றும் சிலர் கருதுகிறார்கள். இதற்கிடையில் புவனேஸ்வரத்தில் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். சோஷலிச சமுதாய அடிப்படையில் செயல்படுவதற்கு உடனடியாக, ஒன்றும் இல்லையென்றாலும் ரைஸ் மில்களையாவது தேசியமாக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தொழில்கள் இன்றையதினம் போய்க் கொண்டிருக்கிற நிலையைப் பார்த்தால், தேசியமாக்கும் திட்டத்தையே அரசாங்கம் விட்டு ஓடிவிட வேண்டும்போல் இருக்கிறது.

காரணம், குறிப்பாக நம்முடைய பஸ் டிரான்ஸ்போர்ட் நல்ல முறையில் நடக்கவில்லை. கன்னியாகுமரி பிராஜெக்டில்தான் லாபம் கிடைத்திருக்கிறது. சென்ட்ரல் வொர்க் ஷாப்பிலும் லாபம் கிடைத்திருக்கிறது. ஆனால் மெட்ராஸ் ஸிடி டிரான்ஸ்போர்ட்டில் நமக்கு இவ்வாண்டு ஒன்பது லட்சம் நஷ்டம். அடுத்த வருஷம் 19 லட்சம் நஷ்டம் எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி நாம் போய்க்கொண்டிருந்தால் தனியார்கள் பஸ் நடத்துவதே மேல் என்றாகிவிடும். பொதுவாக பஸ்துறையில் வரிகள் அதிகமாகி விட்டது என்று சொல்கிறார்கள். தொழிலாளர்களுக்கு அதிகக் கூலி கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். நம்மைவிட தனியார் துறையில் அதிகக் கூலி கொடுக்கப்படுகிறது. நம் போன்றே வரிகளையும் கொடுக்கிறார்கள். இன்னும், புத்தகத்தில் வராத வரிகளைக்கூட அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி இருக்க, நமக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்றால் இதற்குக் காரணம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். சென்ற முறை இதுபற்றி விவாதம் வந்தபோது, எதிர்க்கட்சியில் இருந்து ஒரு கமிட்டியைப் போட்டு பரிசீலிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிப் போட்டு பரிசீலிப்பது தவறு இல்லையென்றே இன்றைய கணக்கைப் பார்த்தால் தெரிகிறது.

அடுத்து, அக்ரிகல்சரல் இன்ஜினியரிங் வொர்க் ஷாப்பை எடுத்துக் கொண்டால் அது 1½ லட்சம் லாபத்தில் நடக்கிறது. ஆனால் வருகிற வருஷத்தில் இலாபம் 25 ஆயிரம் ரூபாயாகக் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அதற்கு பத்து லட்சம் முதலீடு போடவேண்டும் என்ற குறிப்பும் காணப்படுகிறது. ஒன்றரை லட்சம் லாபம் வந்து கொண்டிருக்கக் கூடியது திடீரென்று 25 ஆயிரமாகக் குறையக் காரணம் என்ன? அதைச் சிந்திக்க வேண்டும். அப்படி நஷ்டம் ஏற்படக்கூடிய ஒன்றுக்கு பத்து லட்சம் முதலீடு செய்வதால் என்ன ஏற்படப் போகிறது? இதையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும்.



3rd March 1964] [டாக்டர் பா. நடராஜன்]

மூன்றாவது, சிங்கோனா ப்ளான்டேஷன். அதிலே பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சிங்கோனா ப்ளான்டேஷனில் 1962-63-இல் எழுபத்தாறு லட்சத்து நாற்பத்தோராயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் 1963-64-ல் ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரம் ரூபாய் லாபம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்கிறார்கள். எப்படி 76 லட்சம் ரூபாய் நஷ்டம் வந்த ஒன்றில் ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரம் ரூபாய் திடீரென்று லாபம் வரப்போகிறது என்று எதிர்பார்க்க முடியும்? ஆக அந்த எஸ்டிமேட் தவறாகத்தான் இருந்திருக்கிறது. இப்போது ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் முப்பத்தாறு லட்சத்து எழுபத்தெட்டாயிரம் ரூபாய் நஷ்டம் என்று கணக்குக் காட்டுகிறார்கள். இவை பற்றியும் நாம் நன்றாக கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

இன்னொன்று. மெட்ராஸ் டெய்ரி அண்ட் மில்க் ப்ராஜெக்டைப் பொறுத்தமட்டில் 1961-62-ல் பதினொரு லட்சத்து எண்பத்தோராயிரம் ரூபாய் நஷ்டம். நடப்பு வருஷத்தில் 82 ஆயிரம் ரூபாய் நஷ்டம். அது 1964-65-இல் இருபத்தொன்பதாயிரமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முறையில் நமது அரசாங்கம் நடத்துகிற தொழில்கள் நீடித்துக்கொண்டு போவது நல்லது அல்ல. மத்திய அரசாங்கத்தின் கீழ் நடைபெறும் தொழில் ஸ்தாபனங்களில் 1 சதவிகிதம் 1½ சதவிகிதம் லாபம் வருகிறபோதே அதைப் பரிகசிக்கிறோம். அப்படி இருக்க நமது தொழில்கள் மிகவும் நஷ்டத்தில் நடைபெறுவதை அப்படியே விடக்கூடாது.

இனி செலவினங்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல 11-00
விரும்புகிறேன். நிதியமைச்சர் அவர்களால் செலவினங்களை a.m.
அதிகமாகக் குறைக்க முடியாது. முன் சொன்னதுபோல், ஐந்தாண்டுத் திட்டத்திற்காக இன்னன்ன இனங்களில் செலவு செய்ய வேண்டுமென்று செலவிடுவதோடுகூட, திட்டத்திற்குப் புறம்பான விஷயத்திலும்கூட செலவு செய்யவேண்டியிருக்கிறது. 'என் தொகுதிக்கு இன்னின்ன செய்ய வேண்டும்' என்று ஒவ்வொருவரும் எடுத்துக் கூறுகிறார்கள். ஜனநாயகத்தில் இது தவிர்க்க முடியாதது. முன்பு இருந்த நிலைமை வேறு. அப்போது நிதி அமைச்சருக்கு சர்வாதிகாரம் இருந்தது. கிளாட்ஸ்டன் இங்கிலாந்தில் நிதி அமைச்சராக இருந்த காலத்தில் மற்ற அமைச்சர்கள் பேசவே கூடாது. இப்போது அப்படி அல்ல. நிதி அமைச்சர் மற்ற அமைச்சர்களுடைய நெருக்கத்துக்கு இணங்க வேண்டியவராக இருக்கிறார். இங்கிலாந்தில்கூட அப்படித்தான். ஜனநாயக அரசாங்கத்தில் முதலமைச்சர், நிதியமைச்சர் ஆகிய இருவரும் ஒருவர் என்ற அளவிலே சிறப்பான அதிகாரம் இருக்குமே தவிர, பொதுவாக நிதியமைச்சர் என்ற முறையிலே தனிப்பட்ட சிறப்பான அதிகாரம் ஒன்றும் கிடையாது. சட்டசபை மெம்பர்களுடைய பலவிதமான கோரிக்கைகளுக்கு நிதியமைச்சர் இயன்ற அளவு செவி சாய்த்துத்தான் ஆகவேண்டும். ஆகவே, வருவாய்க்குத் தகுந்தபடி செலவு செய்யவேண்டுமென்பது இன்றைய நிலைமையில் முடியாது. சார்லஸ் டிக்கன்ஸ் என்னும் ஆங்கில நாவலாசிரியர் [illegible] ஷில்லிங் வருமானம்; 20 ஷில்லிங் 6 பென்ஸ்

செலவு; முடிவு துன்பம்; 20 ஷில்லிங் வருமானம்; 19 ஷில்லிங் 6 பென்ஸ் செலவு; முடிவு இன்பம்' என்று. இந்த நிலைமையெல்லாம் விக்டோரியா மகாராணி காலத்தோடேயே முடிந்து விட்டது. இப்போது, முதலிலே என்ன செலவு செய்ய வேண்டுமென்று வகுத்து விடுகிறோம். அந்தச் செலவுக்குத் தகுந்த வருவாயை எப்படிக் கண்டு பிடிப்பது. என்பதுதான் பின்னர் கவலையாக இருக்கிறது.

அந்த முறையில் பார்த்தால், 1955-56-ம் ஆண்டில்—10 ஆண்டுகளுக்கு முன்பு—நம்முடைய வருவாய் 52 கோடியாக இருந்தது. அன்று நம்முடைய பற்றுக்குறை 2½ கோடி ரூபாய். இன்று நம்முடைய வருவாய் 138 கோடியாக இருக்கும்போதும், நம்முடைய பற்றுக்குறை 2½ கோடிதான். இதை ஒரு பெரிய சாதனை என்றே சொல்லவேண்டும். இது தமிழக அரசாங்கத்தின் பழமையாக வரும் மரபுக்கு ஒத்து வருகிறது. நம்முடைய நிதித் துறை விழிப்போடு பணத்தைச் செலவு செய்கிற முறையைத்தான் இது காட்டுகிறது. இந்தச் செலவினங்களிலே, திட்டத்தைத் தவிர வேறு துறைகளிலே எவ்வளவு செலவு செய்கிறோம் என்று பார்த்தால், அதுவும் இந்த ஆண்டு சிறிது குறைவாகத்தான் இருக்கிறது. அதாவது நான்கு கோடி ரூபாய் அளவுக்குத்தான் திட்டத்திற்குப் புறம்பான முறையிலே செலவு செய்கிறோம்.

பழைய காலத்தில் நிதித் துறையின் முக்கிய கடமை "Saving the candle ends" என்பார்கள். அதாவது, மெழுகு வத்தி எரியத்தான் செய்யும். ஆனால் கடைசியில் அதன் மூட்டை எப்படிக் காப்பாற்றுவது என்ற நிலைமைதான் அப்போது நிதி இலாகாவுக்கு இருந்தது. ஆனால் இப்போது அப்படியும்கூட இல்லை. இப்போது நிதி அமைச்சருக்கு உள்ள நிலைமை, எந்த முறையில் நன்றாகச் செலவு செய்வது என்பதாகும். பொதுத் துறைக்கு இவ்வளவு, தனியார் துறைக்கு இவ்வளவு, உற்பத்திக்கு இவ்வளவு, சமூக நலனுக்கு இவ்வளவு என்று பல துறைகளில் பார்த்து ஒதுக்கி செலவு செய்வதாகும். இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால், இந்த ஆண்டு மூன்று புதிய செலவினங்களை நம்முடைய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. ஒன்று, 11-வது வகுப்பு வரையில் எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்ற திட்டம். இதன் காரணமாக அரசாங்கத்துக்கு 50 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. எண்பத்திமூன்று சதவீதம் பேர் ஏற்கெனவே சம்பளம் இல்லாமல் படித்துக் கொண்டிருக்கிறார்கள். சம்பளம் கட்டுவதிலிருந்து தப்ப முடியாத மீதிப் பெற்றோர்கள் மட்டும் சம்பளம் கட்டி வருகிறார்கள். இனி எல்லோருக்கும் இலவசம் என்று ஆக்கிவிட்டதன் காரணமாக, வருமானத்திற்குக் கள்ள சர்டிபிகேட் வாங்க வேண்டிய நிலைமை போய்விடுகிறது. ஆகவே, இலவசக் கல்வித் திட்டத்தை 11-வது வகுப்பு வரை கொண்டு வந்ததை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, பின் தங்கிய இடங்களில் ஐந்து கல்லூரிகளைத் தொடங்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். முதியோர் பென்ஷன் திட்டத்தை விரித்திருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கிற பென்ஷன் திட்டத்திலும் தாராளமான முறைகளையெல்லாம் வகுத்திருக்கிறார்கள். இவை எல்லாம் போற்றத் தக்கவையின்.





ஆனால் ஒரே ஒரு குறை. என்.ஜி.ஓ.-க்களுக்கு படியை உயர்த்தவில்லை. நம்முடைய சோஷலிசக் கொள்கையில் புவனேசுவரத்தில் வற்புறுத்திக் கூறியிருப்பது என்னவென்றால், பொருளாதார வேற்றுமைகளைக் குறைக்கவேண்டுமென்று. இயற்கையாகவே மத்திய அரசாங்க அலுவலாளருக்கு மாநில அலுவலாளரைவிட அதிகச் சம்பளம்; அதற்குமேல், மத்திய அரசாங்க அலுவலாளர்களுக்கு இப்போது சில சலுகைகளையும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தச் சலுகைகள் செய்வதுபற்றி நமக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் தங்களுடைய செயலால் மத்திய அரசாங்கம் பொருளாதார வேற்றுமையை அதிகப்படுத்தியுள்ளது. இது புவனேசுவரக் கோட்பாடுக்கு முரணாகும். ஆகவே மாநில அலுவலாளர்களுக்கும் சம்பள உயர்வு கொடுத்து, பொருளாதார வேற்றுமையைக் குறைப்பதற்காக மானியம் கொடுக்க முன்வரவேண்டியது மத்திய அரசாங்கத்தின் கடமையாகும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக அரசாங்க அலுவலாளர்களிடையே இருந்து பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அவர்களுடைய கஷ்ட நஷ்டம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டாமென்ற நினைப்பு அமைச்சர் அவர்களுக்கு இருப்பதாக நினைக்கக்கூடாது. மத்திய அரசாங்கத்திலிருந்து எந்த வகையில் நிதி பெறுவது என்ற யோசனையில் இருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். கட்டாயம் அதற்கு ஒரு வழி காணுவார்கள் என்று நம்புகிறேன்.

இனி என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரியை டவுன்ஷிப் ஆக்க வேண்டும். அது ஒரு யாத்திரீக ஸ்தலமாக இருக்கிறது. உலகத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். ஆகவே, அதை டவுன்ஷிப் ஆக்கவேண்டும். இரண்டாவது, கன்னியாகுமரியிலுள்ள மீனவர்களுக்கு வலைக்காக பருத்தி நூல் ட்வைன் கொடுக்கப்பட்டது. அதை நிறுத்தி நைலான் ட்வைன் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பண வசதி அவர்களிடத்தில் இல்லை. அவர்களுக்கு ஒன்றில் பருத்தி நூல் ட்வைன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் அல்லது. நைலான் கயிறு வாங்க ஏராளமான பண வசதி செய்ய வேண்டும். மூன்றாவதாக, குளச்சல் துறைமுகத்தை மீன் பிடித் துறைமுகமாக மாற்றினால் மீன் உற்பத்தி மிகுதியாகும். உணவு உற்பத்திப் பிரச்சினை சற்றுக் குறையும். நான்காவதாக, பாசன வேலைகளுக்கு, மராமத்து அல்லது மெயின்டனன்சுக்கு போதிய பணம் இல்லையென்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் கவனித்து, வேண்டியதைச் செய்ய வேண்டும். கடைசியாக, நன்றி கூறுவது முக்கியமானதாகும். தற்போது கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு கூட்டுறவு மில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எங்களுடைய மாவட்டம் ஏறத்தாழ கேரளத்தைப் போலத்தான். அங்கு படித்தவர்கள் மிகுதி; வேலை இல்லாதவர்கள் மிகுதி;

[டாக்டர் பா. நடராஜன்] [3rd March 1964

தொழில் இல்லாதவர்கள் மிகுதி. இந்த நிலைமையில், அந்தப் பகுதி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் ஒரு மில் தனியார் துறையில் ஏற்படப்போவதாக அறிகிறேன். வேறு பல தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் இருக்கின்றன. அரசாங்கம் அவற்றில் கவலை எடுக்க வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நிபுணர்கள் என்றால் கொஞ்சம் வேப்பங்காயாக இருக்கிறது. ஆனால் எல்லா நிபுணர்களும் அவரது பட்ஜெட்டைக் கரும்பு போல் சுவைக்க விரும்புவார்கள் என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** மதிப்பிற்குரிய சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் 3 கோடி ரூபாய் பற்றுக்குறையாகக் காட்டினார்கள். இந்த ஆண்டிலும் 3 கோடி 34 லட்சம் பற்றுக் குறையாக இருக்கிறது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கின்ற போது புது வரி எதுவும் இல்லையென்று சொன்னார்கள். ஆயினும் இரண்டொரு மாதத்திலே நீர்வரி, நிலவரியை உயர்த்தினார்கள். விற்பனை வரியிலே ஒருசில மாறுதல்களைச் செய்தார்கள். ஒரு முனை விற்பனை வரியாக இருந்தவற்றைப் பலமுனை வரியாக மாற்றினார்கள். பலமுனை வரியாக இருந்தவற்றை ஒரு முனையாக மாற்றினார்கள். இவற்றையெல்லாம் செய்து விட்டு புதிய வரி இல்லை என்று கூறிக் கொள்கிறார்கள். சென்ற ஆண்டு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் எதிர்பார்த்த வரவு 124 கோடி ரூபாய் என்றாலும் நிகரமாக வந்த வரவு ஏறக்குறைய 130 கோடி ரூபாய் ஆகும்.

நாம் எதிர்பார்த்ததை விட 6 கோடி 53 லட்சம் ரூபாய் அதிகமாக வருவாய் வந்திருக்கிறது. எதிர்பார்த்ததைவிட அதிகச் செலவு 6 கோடி 83 லட்சம் ஆகியிருக்கிறது. சென்ற ஆண்டைப் போல் பட்ஜெட் சந்தர்ப்பத்தில் வரி விகிதத்தை உயர்வு செய்யாமல் நிதி அமைச்சர் அவர்கள் பொது விற்பனை வரியில் ஒருசில பொருள்கள் மீது இருக்கக்கூடிய வரியைக் கூட்டி சுமார் ஒரு கோடி ரூபாய் அதிக வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். உண்மையிலேயே ஒரு கோடி தான் வருமா என்றால் சென்ற ஆண்டு மத்திய அரசு விற்பனை வரியை ஒரு சதவிகிதம் உயர்த்தியது. அதன் பலனாக நம் மாநில அரசாங்கத்திற்கு 1 கோடி 70 லட்சம் ரூபாய் கூடுதலாக கிடைத்திருக்கிறது. இப்போது நம் நிதி அமைச்சர் அவர்கள் பருத்தி, பருத்தி நூல், பருத்தி நூல் கழிவு, பருத்திக் கழிவு ஆகிய பொருள்கள் மீதும், நார் பட்டு மீதும் 1 சதவிகிதம் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். பருத்தியிலிருந்து கடைசி விற்பனை முனையில் 1 சதவிகிதம் கிடைக்கும், அது பம்பாய் மாநிலத்திற்குப் போய் அங்குள்ள ஆலைகளில் நூலாக மாறி நம் மாநிலத்திற்கு திரும்ப வந்து கொள்முதல் செய்யும்போது இன்னும்



3rd March 1964] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

1 சதவிகிதம் அதிகமாகும். ஆகவே நாம் அதிகரிப்பது 1 சதவிகிதம் என்றாலும் இரண்டு சதவிகிதம் என்ற அளவில் ஆகிறது. அதே சமயத்தில் மெல்லிய நூலுக்கு மத்திய அரசும் ஒரு சதவிகிதம் கூட்டியிருக்கிறது. இதன் காரணமாக கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களிடமிருந்து நம் மாநிலத்தில் நாம் எதிர்பார்ப்பது ஒரு கோடி என்று மதிப்பிட்டிருந்தாலும் நான்கு கோடி வரும். அப்படியிருக்கும்போது கைத்தறி துணிகள் விற்பனையாகுமா? ஆகவே கைத்தறித் துணிகளுக்கு மார்க்கட் இல்லாமல் அதில் ஈடுபட்டிருக்கும் கைத்தறித் தொழிலாளர்கள் அவல நிலைக்கு ஆளாக வேண்டியிருக்கும். டாக்டர் நடராஜன் அவர்கள் சொன்னார்கள். இந்த ஒரு இனம்தான் இருக்கிறது, நல்ல இனம், இதை விட்டால் வேறு இனம் இல்லை, ஆகவேதான் நிதி அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப் பார்த்து இதைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நம் பற்றுக்குறையை எப்படிப் போக்குவது என்றால், உல்லாசப் பொருள்கள் மீது வேண்டுமானால் மேலும் விற்பனை வரியை உயர்த்தலாம். உல்லாசப் பொருள்களை, லக்ஷுரியஸ் ஆர்டிகிள்ஸை, உபயோகிப்பவர்கள் சமுதாயத்தில் மேல் கட்டத்தில் இருப்பவர்கள். ஆகவே கைத்தறித் தொழிலைப் பாதிக்காத அளவிற்கு நிதி அமைச்சர் அவர்கள் இந்த வரிவிதிப்பை திரும்பப் பெற்று உல்லாசப் பொருள்கள் மீது வேண்டுமானால் விற்பனை வரியை கூடுதலாக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் சமுதாயத்தில் மேல் மட்டத்தில் இருப்பவர்கள்தான் பாதிக்கப்படுவார்களே தவிர, விவசாயிகள் அல்லது கைத்தறித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். ஆகவே இது குறித்து நிதி அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, 1957-58ல் இருந்து சற்றேறக் குறைய புது வரிகளாக 75 கோடி 90 லட்சம் ரூபாய் அளவு வரை வரி உயர்வு செய்திருக்கிறார்கள். 1957-58ல் 62 கோடி 56 லட்சமாக இருந்தது, 1964-65-ல் 138 கோடி 48 லட்சமாக உயர்ந்திருக்கிறது. ஆக 75 கோடி ரூபாய் அளவில் உயர்ந்திருக்கிறது. இந்த அளவிற்கு வரிகளை உயர்த்தி, வரி விகிதங்களை மாற்றியமைத்து வசூலித்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. நம் ராஜ்யத்தில் பெரிய தொழில்களை எல்லாம் தேசியமயமாக்கினதால் இந்த வருமானம் வந்ததா என்றால் நிச்சயமாக இல்லை. மறைமுக வரிகள் காரணமாக, ஏழை எளிய பாட்டாளி மக்கள், நடுத்தர வகுப்பு மக்கள் இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பொருளாதார வல்லுனர்கள் கூறுகிறார்கள். ஆக, இப்படி மறைமுக வரிகளை உயர்த்திக் கொண்டு செல்வது நல்லதல்ல. நேர்முக வரிகளைப் போட முற்பட வேண்டும். புவனேஸ்வரில் கூடி ஜனநாயக சோஷலிஸம் என்று காங்கிரஸ் கட்சி முடிவு செய்தது. அதற்கேற்ப இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நான் கூர்ந்து கவனித்துப் பார்த்தேன். இதில் ஜனநாயக சோஷியலிஸ வாடை எந்த இடத்தில் வீசுகிறது என்று

என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் யார் யாரிடம் பணம் குவிந்து கிடக்கிறதோ அவர்களுக்கு பாதகம் ஏற்படக்கூடிய விதத்தில் வரி விதிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அவர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படப்போவதில்லை. புவனேஸ்வரத்தில் ஜனநாயக சோஷியலிஸம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்கிறார்கள். முதலில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் செல்வத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். பொருளாதார ஏற்றத் தாழ்வு நீக்கப்பட வேண்டுமென்றும், சமப்படுத்தவேண்டுமென்றும் சொல்வது பெயரில் மட்டும் இருக்கிறதே தவிர இந்த பட்ஜெட்டில் அந்த ஏற்றத் தாழ்வை போக்க என்ன செய்யப்பட்டிருக்கிறது? மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஊதியத்திற்கும், இங்குள்ள நம் மாநில உத்தியோகஸ்தர்களின் ஊதியத்திற்கும் இடையே பெரிய ஏற்றத்தாழ்வு இருக்கிறது. அந்த ஏற்றத்தாழ்வைப் போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த பட்ஜெட்டைப் பார்த்தால் அப்படி ஒன்றுமே இல்லை. உத்தியோகம் உயர வேண்டுமென்று கூறவில்லை. என்.ஜி.ஓ.-க்கள் கேட்கக் கூடியது உடனடியாக எங்களுக்கு அலவன்ஸ் தாருங்கள், விலைகள் எல்லாம் விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது, வீட்டு வாடகை ஏறிக் கொண்டு போகிறது, ஆகவே அலவன்ஸை உயர்த்திக் கொடுங்கள் என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்காவது நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் கூறவேண்டும். அடுத்தபடியாக, நாம் திட்டங்கள் தீட்டுகிறோம். ஏறக்குறைய ரூபாய் 291 கோடிக்கு திட்டம் தீட்டி 325 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். நம் நாடு விவசாயப் பெருங்குடி மக்களைக் கொண்ட நாடு. 75 சதவிகிதம் விவசாயிகள்தான். அப்படியிருக்க மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், திட்டச் செலவு 325 கோடியாக உயர்ந்த பின்னரும், விவசாயத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருப்பது 74 கோடி 53 லட்சமாகும். அதாவது நம் திட்டச் செலவில் 23 சதவிகிதம் தான் விவசாயத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயத்தை நம்பி வாழ்பவர்களோ 75 சதவிகிதம் மக்கள். ஆக இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த 23 சதவிகிதம் தொகை போதுமானதா என்பதை அமைச்சரவை அருள்கூர்ந்து சிந்திக்கவேண்டும். விவசாயிகளுக்கு கடன் தருகிறோம், உரம் தருகிறோம், விதைகள் தருகிறோம், ஆனால் அவற்றை விவசாயிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏன் அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். நல்ல விதைகளை வாங்கக்கூடாது என்பதா, நல்ல உரத்தை வாங்கி பயன் படுத்தக்கூடாது என்பதா, என்றால் நிச்சயமாக இல்லை. கடன் கொடுக்கப்பட்டபோதிலும் அவற்றை வாங்கி உபயோகித்த பின்னர் வருட முடிவில் நல்ல அறுவடை இருந்தால்தான் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முடியும். அண்மையில் ரிசர்வ் பாங்க் சர்வே செய்து





ஒரு அறிக்கை மூன்று மாதங்களுக்கு முன்னால் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் உள்ளவர்கள் குடும்பக் கடன் நகரப்புறங்களில் உள்ளவர்களின் குடும்பக் கடனை விட அதிகமாக இருக்கிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது. சராசரி ஒரு விவசாயக் குடும்பத்தில் கடன் என்னவென்று பார்க்கும்போது 719 ஆகிறது. கிராமப்புறங்களில் உள்ள ஒரு குடும்பத்தின் கடன் சராசரி 654 ஆக இருக்கிறது, ஆனால் ஒரு விவசாயக் குடும்பத்தின் கடன் ஏறக்குறைய 65 அதிகமாக ஆகிறது. ஆக வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்கக் கூடிய நிலையில் இன்று விவசாயிகள் இல்லை. விவசாயிகளில் 75 சதவிகிதத்தினர் கடனை திருப்பிக் கொடுக்கக் கூடிய நிலையில் இல்லை. ஆகவே நல்ல தொகையை ஒதுக்கி சப்ஸிடைஸ் செய்து உரம், இம்ப்ளிமென்ட்ஸ், விதை போன்றவற்றை விவசாயிகளுக்கு கொடுத்து விவசாய உற்பத்தியை பெருக்கவேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் 148 மெகா வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்தோம். இப்போது ஏறத்தாழ 1151 மெகா வாட்ஸ் உற்பத்தி செய்கிறோம். இத்துறையில் நாம் வளர்ந்திருக்கிறோம். இதற்காக செலவு செய்த தொகை சற்றேறக்குறைய 120 கோடி ரூபாய். ஆரம்பத்தில் இதிலிருந்து வந்த வரவு 3 கோடி 18 லட்சம் ரூபாய். இப்போதுள்ள வருவாய் 23 கோடி ரூபாய். ஆக ஏறக்குறைய 120 கோடி ரூபாய் செலவு செய்து 20 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம். மின்சாரத் துறையில் நாம் போட்ட பணத்திற்கு சராசரி 16 சதவிகிதம் கூடுதலாக வட்டி வந்திருக்கிறது. இது ஒரு ப்ரொடக்டிவ் ஸ்கீமாக இருக்கிறது. அடுத்து, ஹொகனக்கலில் 840 மெகா வாட்ஸ் மின்சாரத்தை பெறும் திட்டத்தை 58 கோடி ரூபாய் செலவில் முடிக்க முடியும் என்று சொல்கிறார்கள். அத்திட்டம் காரணமாக இப்போதுள்ளதை விட 73 சதவிகிதம் மின்சாரத்தை அதிகப்படியாக பெறமுடியும். ஆகவே இத்திட்டம் குறித்து அமைச்சரவை கவனித்து அதை விரைவில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சேலம் இரும்பைப் பொறுத்தவரை பரிசோதனையில் இருக்கிறது, பரிசோதனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். கவர்னர் அவர்கள் உரையில்கூட சேலம் இரும்பை நெய்வேலி பழுப்பு நிலக்கரி கொண்டே உருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பழுப்பு நிலக்கரி கொண்டு உருக்கலாம், சுட்ட நிலக்கரி தேவையில்லை என்றால் சேலம் இரும்பு, உற்பத்திச் செலவும் குறைவாகயிருக்கும். நிலக்கரியை எப்படி பயன்படுத்துவது, எப்படி ஏற்றி அனுப்புவது, எப்படி உபயோகிப்பது, எப்படி சேகரிப்பது என்பது பற்றிய ஆராய்ச்சி அமெரிக்காவிலும், இந்தியாவிலும் நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எப்படி சேகரிக்கவேண்டும், எப்படி பயன்படுத்தவேண்டும், எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதெல்லாம் ஆராய்ச்சிக்குரிய ஒன்று என்றுதான் நான் நிச்சயமாக சந்தேகப்படுகிறேன். மற்ற நாடுகளில் எல்லாம் எப்படி

பயன்படுத்துகிறார்களோ, மற்ற நாடுகளில் எப்படி சேகரிக்கின்றார்களோ அதே போன்று நாமும் பயன்படுத்துவோம், அதேபோன்று சேகரிப்பது வைப்போம், மற்ற நாடுகளில் எப்படி வெளியிடங்களுக்கு அனுப்புகிறார்களோ அதே போன்று நாமும் அனுப்புவோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில், இதற்காக நில ஆர்ஜிதம் செய்கின்ற விஷயத்தில் 34 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு 10 ஆயிரம் ரூபாய் அதாவது மூன்றில் ஒரு பங்கு தான் செலவு செய்திருக்கின்றோம், பேஸிக் இன்டஸ்ட்ரீஸ் என்ற முறையில் நமது நாட்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெய்வேலி லிக்னைட் பிராஜெக்ட்டை கொண்டு வந்தோம். அதற்கு அடுத்தபடியாக இப்போது மூன்றாவது திட்டத்தில் சேலம் இரும்பு உருக்காலையை கொண்டு வருவதற்கு மத்திய சர்க்காரிடம் நமது மாநில சர்க்கார் வற்புறுத்திக்கூற வேண்டும்.

மேலும் என் தொகுதியில் சின்னாறு பகுதியில் 45 லட்சம் ரூபாயிலோ அல்லது 75 லட்சம் ரூபாயிலோ அணை கட்டலாம் என்று மதிப்பிட்டதாக சொல்லப்பட்டது. இப்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அந்த சின்னாறு திட்டத்தை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வந்தால் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதாக அமையும் என்பதை கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் மகாசபை புவனேஸ்வரத்தில் ஜனநாயக சோஷியலிஸ லட்சியத்தை நிறைவேற்றுவதற்குத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்தை அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள். குறிப்பாக எடுத்துப் பார்ப்போமானால் படிப்படியாக தாழ்ந்த நிலையிலுள்ள மக்களை ஓரளவு உயர்த்துவதற்கும், அதே சமயத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களை நீங்கள் கொஞ்சம் கீழே இறங்கி வாருங்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நாம் போடுகின்ற திட்டங்கள், சாதாரண மக்களுக்கு பயன்படக்கூடிய அளவில் அமைந்திருக்கின்றன. இதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்த விவாதத்தை முதல் முதலாக ஆரம்பித்து வைத்த கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த வரவு-செலவு திட்டமானது, ஏழை மக்களை இன்னும் ஏழை மக்களாக ஆக்குவதற்கும், பணக்காரர்களை இன்னும் பணக்காரர்களாக ஆக்குவதற்கும் தான் அமைந்திருக்கிறது என்ற அளவில்; ஒரு புலியையும் வளர்த்து, அதோடு புல் தரையையும் வளர்த்து, அதில் புலியை மேயவிட்டு அதே இடத்தில் ஒரு மானுக்கு பாதுகாப்பு என்றால் எப்படியிருக்குமோ அதே போன்று இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை என்ற அடிப்படையில் கூறினார்கள். இவ்விதம் கூறுகிற





வர்கள், இங்கே வந்து ஏழை மக்களுக்காக எதுவும் செய்யவில்லை என்று கூறக்கூடிய அங்கத்தினர்கள், பணக்காரர்கள் தான் இந்த நாட்டில் இருக்க வேண்டும், பணக்காரர்கள் இந்த நாட்டில் வாழ வேண்டும் என்று சொல்லக்கூடிய சுதந்திராக் கட்சியோடு எந்த முறையில் உறவு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல, இது எப்படியிருக்கிறது என்றால், ஒரு குழந்தையை தொட்டிலில் போட்டு, ஒரு கையால் தொட்டிலையும் ஆட்டி, ஆராரோ பாடிவிட்டு இன்னொரு கையால் குழந்தையை கிள்ளிவிடக்கூடியது மாதிரி பணக்காரர்களுக்கு பக்கபலமாக இருக்கக்கூடிய சுதந்திராக் கட்சியோடு சேர்ந்து கொண்டு இங்கே வந்து ஏழை மக்களுக்காக வாதாடுவதைப் பார்த்தால் அது வேடிக்கையாகவும் விந்தையாகவும் தான் இருக்கிறது.

அடுத்தாற்போல், அவர்கள் கூறினார்கள் காங்கிரஸ்காரர்கள் மக்களிடம் வோட்டு கேட்கும்போது, முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் இவைகளை மக்கள் மத்தியில் கூறித்தான் வோட்டுக் கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுதான், காங்கிரஸ் கட்சியினுடைய லட்சியம். உங்களுக்கு இன்னின்ன காரியங்களை திட்டங்களின் மூலமாக செய்திருக்கிறோம், இன்னின்ன காரியங்களை திட்டங்கள் மூலமாக செய்யப்போகிறோம். என்று மக்கள் மத்தியில் சொல்லித்தான் காங்கிரஸ் கட்சி மக்களிடம் வோட்டு கேட்கிறது. ஆனால் சென்னையைப் பொறுத்தளவில் திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் எதைச் சொல்லி வோட்டு கேட்டார்கள்? மேயருடைய அறையில் அண்ணாத்துரையின் படத்தை வைப்பதற்காகத்தான் நாங்கள் வோட்டு கேட்கிறோம் என்று சொல்லி வோட்டு கேட்டார்கள். காங்கிரஸ்காரர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களுக்கும் இருக்கிற வித்தியாசத்தை சென்னையில் வசிக்கக்கூடிய மக்கள் கண்டு கொண்டார்கள். மேயருடைய அறையில் அண்ணாத்துரையின் படத்தை வைப்பதுதான் அவசியம் என்று எண்ணியவர்கள் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களுக்கு வோட்டு போட்டார்கள். ஆனால் மற்ற கிராமங்களிலுள்ள மக்கள் மற்ற முனிசிபாலிட்டிகளிலுள்ள மக்கள் தங்களுக்கு திட்டம் தான் வேண்டும் என்ற அடிப்படையில் வோட்டு போட்டார்கள். இந்த அளவில்தான் தேர்தல் நடந்தது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னும் அவர்கள் பேசினதற்கு எல்லாம் பதில் சொல்லிக் கொண்டேயிருந்தால், என்னுடைய தொகுதி காரியங்களைப்பற்றி சொல்வதற்கு நேரம் இல்லாமல் போய்விடும். ஆகவே என்னுடைய தொகுதியைப்பற்றி ஓரிரண்டு கருத்துக்களை எடுத்துச் சொல்ல வருகிறேன். கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னார்கள், நம்முடைய நாட்டில் ஒரு சதுர மைலுக்கு 300-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று. நம் நாட்டில் பொதுவாக அதிகமாக குழந்தைகளை பெற்று விடுகிறார்கள். ஒருவருடைய குடும்பத்தை எடுத்துக்கொண்டால் ஏழு அல்லது எட்டு குழந்தை

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [3rd March 1964

கள் பெற்று விடுகிறார்கள், 10, 12 குழந்தைகள் வரை பெற்றிருக்கக் கூடிய குடும்பங்களும் இருக்கின்றன. இவர்கள் நல்ல முறையில் வளர்க்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இதைத் தடுக்கின்ற முறையில் குடும்பக்கட்டுப்பாடுத் திட்டம் கொண்டு வந்தால் அதையும் சிலர் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டில் இருக்கின்ற சமுதாயம் வளர்ந்து கொண்டிருக்கிறது; நாகரீகம் வளர்ந்து கொண்டிருக்கிறது. வளர்ந்து வருகின்ற சமுதாயத்திற்கு ஏற்ப தேவைகளும் பெருகிக்கொண்டு வருகின்றன. அந்த அளவுக்கு உணவு உற்பத்தியும் பெருக வேண்டும். அதற்காக இன்றைக்கு லட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து திட்டங்களைப் போடுகிறோம், பல லட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து பாசன வசதிகளை செய்து கொடுக்கிறோம். அது மட்டுமல்ல, எங்கு எங்கெல்லாம் தரிசு நிலங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பத்து ஏக்கருக்கு ஒரு பெரிய கிணறு மூலம் பாசன வசதி செய்து கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில், ஒரு திட்டத்தை கொண்டு வந்து, ஒவ்வொரு கிணற்றையும் 3,000, 4,000 ரூபாய் செலவு செய்து பெரிய கிணறுகளை வெட்டி, அதன் மூலம் பம்பு செட் ஏற்படுத்தி பாசன வசதி செய்து கொடுத்து, அதற்கு வேண்டிய நிதியையும் கொடுத்து, அதை எளிதான தவணையில் அதாவது பத்து வருடங்களிலோ அல்லது இருபது வருடங்களிலோ வசூல் செய்து கொள்ளலாம் என்ற அளவில், "வெல் இறிகேஷன்" முறையை செய்து கொடுத்தால், அதன் மூலம் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். ஏழை மக்களுக்கும் இது மிக வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தி பெருக்கத்திற்காக நாம் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்கிறோம். இருந்தும் சில நேரங்களில் பாதகங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. குறிப்பாக காவேரி, வைகை, பெரியாறு முதலிய நதிப் பகுதிகளில் அதிக மழை வந்து அதனால் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கின் காரணமாக, வெள்ளச் சேதம் ஏற்பட்டு பயிர்கள் எல்லாம் அழிந்து போகின்ற நிலைமை ஏற்படுகிறது. இதை நாம் தடுக்கவேண்டுமென்றால் வெள்ளச் சேதம் ஏற்படுகின்ற பகுதிகளில் எல்லாம் ரிவட்மெண்ட் கட்டி பாதுகாக்கக்கூடிய முறையில், எங்கெல்லாம் ஆற்றுப்பாசன வசதிகள் இருக்கின்றதோ அங்கெல்லாம் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில், ரிவட்மெண்ட் கட்டி தடுக்கக் கூடிய முறையில் பொதுப்படையாக ஒரு திட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், உரப்பொடிகள் காலாகாலத்தில் கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார்கள், காலாகாலத்தில் உரப்பொடிகள் கிடைக்காததால் விவசாயிகளுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இதை தடுக்கின்ற முறையில், விவசாயிகளுக்கு காலாகாலத்தில் உரப்பொடிகள் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



3rd March 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அடுத்தப்படியாக, பழ உற்பத்தியைப் பொறுத்தவரையில், எங்கள் பகுதியில் திராட்சைப்பழ உற்பத்தி அதிகமாக செய்து கொண்டிருக்கிறோம். இந்த திராட்சைப் பழ உற்பத்திக்காக அரசாங்கத்தினுடைய சலுகை ஒன்றும் இல்லை. கனம் முதல் அமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் இங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் ஆலோசித்துப் பார்த்து, திராட்சைப் பழ உற்பத்திக்கு போதுமான அளவு கடன் கொடுத்தோ, அல்லது மான்யமாகக் கொடுத்தோ திராட்சைப் பழ உற்பத்தியை பெருக்குவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசியைப் பொறுத்தளவில், எல்லோருக்கும் இந்தப் பிரச்னை ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. இந்த விலைவாசி பிரச்னை சென்னையில் மட்டுமல்ல, மற்ற பகுதிகளிலும் இந்த நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த விலைவாசியின் மூலம் கிடைக்கின்ற லாபம் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கும் கிடைப்பதில்லை, இடைத்தரகர்களுக்குத்தான் இந்த லாபம் போய்ச் சேருகிறது. அந்த அளவுக்கு விலை ஏறிக்கொண்டிருக்கிறது. உதாரணமாக, திராட்சைப்பழம் உற்பத்தி செய்கின்ற எங்கள் பகுதியில் திராட்சைப் பழம் ஒரு கிலோ ஒரு ரூபாய் அல்லது ஒன்றே கால் ரூபாய்க்கு கொடுக்கிறார்கள். ஆனால் சென்னையில் அதே திராட்சைப் பழம் ஒரு கிலோ மூன்றரை ரூபாய்க்கு விற்கிறார்கள். இந்த மாதிரியான நிலையை மாற்றி இடைத்தரகர்களுக்கு கிடைத்துக்கொண்டிருக்கின்ற லாபத்தை அகற்றுவதற்கு ஏதாவது வழிவகை செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான குளங்களை ரிப்பேர் செய்திருக்கிறோம். இன்னும் பல வரண்ட பிரதேசங்களில் குளங்கள் ரிப்பேர் செய்யப்படவில்லை. இதற்குக் காரணம் பஞ்சாயத்து யூனியனில் பணம் இல்லாமல் இருக்கிறது. இன்றைக்கு இதற்காக பணம் ஓரளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம். அது போதாது. எந்தெந்தக் குளங்களைத் தூர் எடுக்கவேண்டுமோ அவைகளையெல்லாம் தூர் எடுத்து தண்ணீர் தேக்கி வைத்து விவசாயத்திற்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட சபையிலேயே பல அங்கத்தினர்கள் பல முறை கூறியிருக்கிறார்கள் க்ராப் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைப் பற்றி பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பல இடங்களில் பயிர்கள் பூச்சியால் பாதிக்கப்பட்டு விடுகிறது, பல இடங்களில் பயிர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விடுகிறது. அப்பேர்ப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு, ஒரு வித பாதுகாப்பும் கொடுக்கா விட்டால் நன்றாக இருக்காது என்று கூறிக்கொண்டு அந்த மாதிரிப் பகுதிகளுக்கு பரீட்சார்த்தமாக சில ஜில்லாக்களையாவது எடுத்துக்கொண்டு க்ராப் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமலாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [3rd March 1964

அதற்கு அடுத்து பென்ஷன் திட்டம். எல்லோரும் வரவேற்கக் கூடிய பென்ஷன் திட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். பாராட்டக் கூடிய வகையில் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். இருந்தாலும் இந்தப் பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பது அரசாங்க ஊழியர்களுக்குக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, இதிலே ஆசிரியர்
11-30 a.m. களைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம். இன்றைக்கு பல ஆசிரியர்கள் 5 ரூபாய், 6 ரூபாய் என்று வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். 10 ரூபாய், 9 ரூபாய் என்று வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு வகை செய்திருப்பது போல ஆசிரியர் சமூகத்திற்கும் வகை செய்யவேண்டுமென்று பணிவாக ஆசிரியர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்தத் திட்டத்திலே பெண் ஊழியர்களைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அரசாங்க ஊழியருக்கு மனைவி இருந்தால் அவர் மறு விவாகம் செய்து கொள்ளும் வரையில் அல்லது அவருடைய ஆயுள் முடியும் வரை, குழந்தைகள் இருந்தால் குறிப்பிட்ட வயது வரையில் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் ஒரு கல்யாணம் ஆகாத பெண் ஒருவள் அரசாங்கத்திலே ஊழியம் செய்துகொண்டிருக்கலாம். அந்த கல்யாணம் ஆகாத பெண்ணை நம்பி தாய் தகப்பன்மார்கள் இருக்கலாம். ஆண் வாரிசு இல்லாத குடும்பங்களில், அந்த நிலையில் கல்யாணம் ஆகாத பெண் ஒருவள் ஓய்வு பெறும் வாய்ப்பு ஏற்பட்டால், அப்பேர்ப்பட்ட குடும்பத்தில் தாய் தகப்பன் ஆகியவர்களுக்கு பாதுகாப்பாக தாய் தகப்பன்மார்களுக்கு உதவித் தொகை கொடுப்பதால் போற்றக்கூடிய நிலை உண்மையாகவே ஏற்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இன்றைக்கு வியாதிகளைப் போக்குவதற்காக பணம் ஒதுக்கியிருக்கிறோம். நேற்றைய தினம் கேள்வி நேரத்தில் கூட ஒரு கேள்விக்கு அம்மாள் அவர்கள் பதில் சொன்னார்கள். காலரா நோய் பரவுவதைப் பற்றி கேள்வி வந்தபோது ஓவர்ஹெட் டாங்க் கட்டவேண்டுமென்றால் 15,000 ரூபாய் 20,000 ரூபாய் செலவுக்குக் குறைவில்லாமல் கட்ட வேண்டியிருக்கிறது என்று கூறினார்கள். அதை விட, காம்பாக்ட் ஸ்கீமாக, 5 மைல், 10 மைல் ரேடியஸ்ஸுக்கு ஒரு லட்சம் அல்லது இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்து அந்தப் பகுதியில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் கிடைக்க திட்டம் போட்டால், அதற்கு முதல் அமைச்சரும், சுகாதார அமைச்சரும் மத்திய அரசாங்கத்தை அணுகி நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீமைக் கொண்டுவர நல்ல சூழ்நிலை ஏற்படுத்தினால் இந்த காலராவைக் கட்டுப்படுத்தலாம், போட்டிருக்கிற பணத்தையும் நல்ல முறையில் உபயோகப்படுத்தலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



3rd March 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கடைசியாக, இப்போது பெண் கல்விக்காக அமைச்சர் அவர்கள் வாரி வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆண்கள் பள்ளிக்கு பணம் கொடுக்கவேண்டியதுதான். பள்ளி வேண்டுமென்றால் 5,000 ரூபாய் கொடுங்கள், 10,000 ரூபாய் கொடுங்கள் என்று சொல்லுகிறார்கள். கிராமங்களில் பெண்களுக்காக பள்ளி கட்ட வேண்டுமென்றால் பெண்களுக்கு பள்ளிக்கூடத்திற்கு என்ன அவசரம் என்று பணம் கொடுக்க முன்வருவதில்லை. பெண்களுக்காக உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே முயற்சி எடுத்து கட்டிக் கொடுத்தால் பெண்கள் இன்னும் அரசாங்கத்தைப் போற்றிப் புகழ்வார்கள் என்று கூறிக்கொள்கிறேன். மதுரை மாநகரத்தில் பெண்களுக்கு கல்லூரி போதவில்லை. சோழவந்தானில் இடம் கொடுக்கிறோம், ஆனால் பணம் கட்ட முடியாது என்று சொல்லியிருக்கிறோம். அரசாங்கத்தின் சார்பில் கட்டவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இந்த ஆண்டில் இல்லையென்றாலும் வருகிற ஆண்டிலாவது சோழவந்தானில் ஒரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு பல நல்ல காரியங்கள் செய்து வந்திருக்கிறோம். அவர்கள் விவசாயத்தில் உழவடை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை முதலாளிகள் அப்புறப்படுத்தி விடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட ஹரிஜனங்களுக்கு பாதுகாப்பு கொடுக்க கோர்ட்டுக்குப் போகும்போது கூட வசதிகளெல்லாம் செய்து அரசாங்கம் பணம் கொடுக்கும்போது, அவர்களை மாற்றுக் கட்சிக்காரர்கள் ஏமாற்றி விடுகிறார்கள். சில பகுதிகளில் அவர்கள் மாறிப் போய்விடலாம். நன்றி இல்லாமல் இருக்கலாம். ஆனால் பல இடங்களில் ஹரிஜன மக்கள் அரசாங்கத்தை மிகவும் போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எப்பேர்ப்பட்ட திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்றால், வீடு கட்டிக் கொடுக்கிறோம், நிலங்கள் வாங்கிக் கொடுக்கிறோம், எல்லாம் செய்கிறோம், ஆனால் பொருளாதாரத் துறையில் அவர்களை முன்னேற்றும் வகையில் பால் சொஸைடி போன்றவைகளை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும். பால் சொஸைட்டிகள் ஆரம்பிக்க பல மனுக்கள் இப்போது பெண்டிங்கில் இருக்கிறது. அதற்காகத் தனியாகப் பணம் ஒதுக்கி திட்டத்தைப் போட்டுக் கொடுத்தால், அதோடு கூட்டுறவு முறையில் பஸ் நடத்த ஏற்பாடு செய்து கொடுத்தால் ஹரிஜன மக்கள் தொழில் துறையில் முன்னேற வழிவகையாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட் விவாதத்திலே என்னுடைய வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் அங்கத்தினர்கள் பட்ஜெட் விவாதத்திலே பேசுகிற சமயத்தில் குறிப்பாக சென்னை நகரத்திலே திராவிட முன்னேற்றக் கழக வெற்றியைப் பற்றி அவர்கள் தங்களுக்கு இருக்கிற எரிச்சலையெல்லாம் காட்டிக் கொண்டார்கள்.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [3rd March 1964

எந்தக் காரணத்தினால் திராவிட முன்னேற்ற கழகம் சென்னையிலே வெற்றி பெற்றது, என்ன காரணத்தினால் காங்கிரஸ் தோற்றது என்றெல்லாம் அவர்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டு ஒருவரை ஒருவர் தூக்கியடித்துப் பேசிக்கொண்டிருக்கிற சமயத்தில் நான் நம்முடைய முதல் அமைச்சரும் போலீஸ் அமைச்சரும் தான் சென்னையில் காங்கிரஸ் தோற்றதற்குக் காரணம் என்று இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்னையிலே காங்கிரஸ் தோற்கிறது என்றால், ஹரிஜன மக்கள், ஸ்லம்களில் வசிக்கக் கூடிய ஏழை எளிய மக்கள், பெருவாரியானவர்கள் காங்கிரஸை எதிர்த்து ஓட்டளிக்கிறார்களென்றால் அந்தப் பகுதிகளில் போலீஸார் செய்கிற திருவிளையாடல்கள்தான் மூல காரணம். என்னென்ன திருவிளையாடல்கள் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்தார்கள். ஆகையால் தான் சேரி வாழ் பகுதியில் இருக்கும் மக்கள் அரசாங்கத்தின் பேரில் வெறுப்பு கொண்டு காங்கிரஸை எதிர்க்கிறார்கள். அரசாங்கம் செய்கிற சில தவறுகளை எடுத்துக் காட்டுகிற காரணத்தினால் எங்கள் பக்கத்திலே வருகிறார்கள்.

இரண்டாவது காரணம் நம் முதல் அமைச்சரைச் சார்ந்தது ஆகும். முன்பு இருந்த முதல் அமைச்சராக இருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும். இப்போது இருக்கும் முதல் அமைச்சர் எதையும் வெளிப்படையாகச் சொல்லிவிடக் கூடியவர். என்.ஜி.ஓ.-க்கள் சம்பள உயர்வு கேட்ட சமயத்தில் நம் பழைய முதல் அமைச்சராக இருந்தால், 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று சொல்லுவார். '29-ம் தேதி வரை பொறுத்திருங்கள், பட்ஜெட் வரட்டும் பார்க்கலாம்' என்று சொல்லுவார். 22-ம் தேதி தேர்தல் நடக்கும். தேர்தல் முடிவும் ஒரு தினுசாக இருக்கும். 29-ம் தேதி பட்ஜெட்டிலே சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டுப் போயிருப்பார். ஆனால் நம் முதலமைச்சர் அவர்கள் என்.ஜி.ஓ.-க்களிடம் 'உங்களுக்கு எந்த விதத்திலும் ஊதியத்தை உயர்த்தப் போவதில்லை' என்று வெட்ட வெளிச்சமாகச் சொன்னார்கள். இப்படிச் சொன்ன காரணத்தினால் இந்தப் பக்கத்தில் இருக்கிறவர்கள் காங்கிரஸை எதிர்த்துச் செய்ய வேண்டிய சூழ்நிலையை அவர்களே அமைத்துத் தந்து விட்டார்கள் என்பதற்காக அவர்களுக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பற்றி பலர் பல விதமாகத் தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட்டே இந்த வருஷம் கூட இருக்கிறதே தவிர இதிலே எந்தவித நன்மையோ அல்லது எந்தவித சந்தோஷ நிகழ்ச்சியோ கிடையாது. திருமணம் செய்து கொள்ளும்போது, வெளி இடத்தில் பெண் கொண்டால் மருமகள் எப்படி நல்லவளாக இருப்பாளா என்று பார்ப்பார்கள். வீட்டிலேயே வளருகிற பெண்ணாக இருந்தால் சமைத்து சமைத்து அவர்கள் பக்குவப்பட்டுப் போனவர்கள், வீட்டில் இருக்கிறவர்களாதலால் கறிகாய் வைக்கிற முறைதெரிந்தவர்கள், அவள் மருமகளாக வருகிறார் என்றால் வீட்டில் உள்ளவர்கள் ஏற்கெனவே பழக்கப்பட்டவர்கள். ஏற்கெனவே நன்றாக தெரிந்தவர்கள். அதே முறையில் நமது முதல் அமைச்சர்



3rd March 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

ஏற்கெனவே பட்ஜெட் போட்டுப் போட்டு பழகியவர்கள். ஏற்கெனவே பட்ஜெட் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள். அவர்கள் பட்ஜெட் எப்படி இருக்கும் என்று அதிகமாக விளக்க வேண்டியதில்லை. சென்ற பட்ஜெட்டிலே ஒரு வருஷம் சேர்த்துப் போடப்பட்டிருக்கிறதே தவிர வேறு எதுவும் நல்லது இருப்பதாக எனக்குச் சொல்ல முடியவில்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் சில கல்லூரிகளைத் திறந்து, எஸ்.எஸ்.எல்.ஸி. வரை இலவசக் கல்வி என்று சொல்லி, அதிலும் இப்போதே 83 சத வீதம் வரையில் மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூலிக்கப்படுவதில்லை, மேலும் 17 சதவீதத்தினருக்கும் இருக்கட்டுமே என்று சொல்லி இருக்கிற இந்த ஓரிரண்டு அம்சங்களைத் தவிர எந்த வித நலன்களையும் இதில் பார்க்க முடியவில்லை. சென்ற பட்ஜெட் கூட்டத்தில் என்ன செய்யவேண்டுமென்று சொல்லுங்கள், எதற்கு வரி போடவேண்டுமென்று சொல்லுங்கள் என்று கேட்டார்கள். நானும் என்னுடைய யோசனையை எடுத்துச் சொன்னேன். கட்டணத்தை உயர்த்தாமல் பஸ்ஸுக்கு வரி போடுங்கள் என்று சொன்னேன். ஒரு வேளை அப்படியே போட்டுவிடுவார்களோ என்று கூட எதிர்பார்த்தேன். சினிமாவுக்கு வரி போடுங்கள் கட்டணத்தை உயர்த்தாமல் என்று சொன்னேன். திராவிட முன்னேற்ற கழக சார்பிலிருந்து நான் அவ்வாறு கருத்துத் தெரிவித்தேன். ஆனால் என்ன காரணத்தைக் கொண்டோ என்னவோ, காங்கிரஸ் பக்கத்தில் இருக்கிற பஸ் முதலாளிகள் நமது முதல் அமைச்சர் அவர்களை விரட்டினார்களோ மிரட்டினார்களோ தெரியாது, பஸ்களுக்கு வரி போடவில்லை. என்ன காரணத்தைக் கொண்டோ டிக்கட் கட்டணத்தை உயர்த்தாமல் வரி போடவில்லை. எத்தனையோ திட்டங்களை எமர்ஜென்ஸி என்று சொல்லி நிறுத்தி வைத்திருக்கிறோம். திட்டங்களுக்காக கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகிறது. ரூபாய் தான் கோடிக்கணக்காக இருக்கிறதே தவிர, புதிய திட்டங்களை ஏதாவது எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. அரசாங்கத் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் பட்ஜெட்டைப் பொறுத்த அளவில், சென்ற வருஷம் போட்ட பட்ஜெட்டை காலத்தை நீட்டித்தான் கொடுத்திருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை.

நம்முடைய போலீஸ் அமைச்சர் அவர்களைப் பற்றி நான் பெருமைப்படுவது உண்டு. அவர் மிக்க சாந்தசீலர். ஆனால், அதிகாரிகள் இருக்கிறார்களே, இந்த நாட்டில் நல்ல அட்மினிஸ்ட்ரேஷன் நடக்கிறதா என்று பார்த்தால், இல்லை. குற்றம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் நாங்கள் சற்றும் பின்வாங்கியவர்கள் அல்ல. குற்றம் செய்பவர்களைப்பற்றி அமைச்சர்களுக்குத் தெரியாது. போலீஸ் ஸ்டேஷனிலுள்ள ரிகார்டை எடுத்துப் பார்த்தால் தெரியும். போலீஸ் ஸ்டேஷனில் சாராயம் வைக்கிற சாட்சியைப் பார்க்கும் பொழுது, இது எதற்காக? ஏழை எளியவர்களின்மீது எத்தனையோ வழக்குகள் போடப்படுகின்றன. சில இடங்களில் சாராயமீ

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [3rd March 1964

காய்ச்சுவதற்கு போலீஸ் உடந்தையாக இருக்கிறது. எத்தனை இடங்களில சப்இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், டெபுடி சூபரிண்டெண்டு உடந்தையாக இருக்கிறார்கள்? இந்த அட்மினிஸ்டிரேஷனை சீர்திருத்த வேண்டியது அவர்களுடைய கடமை அல்லவா? மதுவிலக்கு இன்றைக்கு இங்கே அமுலில் இருக்கிறது அல்லவா? நான் மதுவிலக்கை ஆதரிக்கிறேன். வெளி நாடுகளில் குடிப்பது ஒரு ஸோஷியல் கஸ்டம். நம் நாட்டில் குடிப்பதை வெறுத்து ஒழிக்கிற பழக்கம் இருக்கிறது. ஆனால் இப்பொழுது நம் நாட்டில் என்ன நிலை இருக்கிறது? போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சாராயம் காய்ச்சக்கூடிய அளவில் இருக்கிறது. போலீஸ் கான்ஸ்டேபிள் சாராயம் காய்ச்சக்கூடிய அளவில் இருக்கிறது. எந்தக் காரணங்களினால் அவர்கள் இப்படி உந்தப்படுகிறார்கள் என்பதை ஆராய வேண்டும். கதர் சொக்காய் போட்டுவிட்டால் சாராயம் காய்ச்சலாமா? சட்டத்தை யார் மீறினாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டும். மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி பிரசாரம் செய்ய வேண்டும். இப்பொழுது என்ன பிரசாரம் செய்கிறார்கள்? சட்டத்தின் மூலம் மட்டும் சமுதாயத்தில் சீர்திருத்தத்தை ஏற்படுத்திவிடமுடியும் என்று கருதுகிறீர்களா? மதுவிலக்குத் திட்டம் நல்ல முறையில் அமல் செய்யப்பட வேண்டுமென்றால், அதைப்பற்றி சற்று சிந்தித்து பிரசாரம் செய்யுங்கள்.

ஆஸ்பத்திரியில் யார் வந்து க்யூ வரிசையில் நிற்கிறார்கள்? கள்ளச் சாராயம், பட்டைச் சாராயம் எப்படி காய்ச்சப்படுகிறது? வாழைப் பழத் தோல், ஆலையிலிருந்து வெளி வருகிற கழிவு நீர், வெல்லப்பாகு இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு பட்டைச் சாராயம் காய்ச்சுகிறார்கள். பெரு வியாதியஸ்தன் தான் இதை எடுத்துச் செல்கிறான். பெரு வியாதியஸ்தன் தான் இதைக் காய்ச்சுகிறான். இதைக் குடிக்கிறவர்களுடைய உடல் நலம் எப்படி இருக்கும்? இதற்கு போலீஸ் உடந்தையாக இருக்கலாமா? ஏன் நாம் மதுவிலக்குத் திட்டத்தை திறம்பட செயல் நடத்தக் கூடாது? வாங்குகிற வரிப் பணத்தை, 'பைன்' பணத்தை நல்ல முறையில் செலவு செய்யுங்கள், நல்ல முறையில் பயன்படுத்துங்கள். பிரசாரம் செய்யுங்கள். குடிப்பது தவறு என்று சட்டம் போட்டுவிட்டால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடுமா? மதுவிலக்குச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பணக்காரர்கள் அல்ல. மதுவிலக்கு வழக்குகளில் சம்பந்தப்பட்டு அபராதம் கட்டுபவர்கள் பெரிய இடத்தில் இருப்பவர்கள் அல்ல. ஏழை எளிய மக்கள்தான் கிராமாந்திர மக்கள் தான். அதுவும் குறிப்பாக ஹரிஜன மக்கள் தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். ஹரிஜனங்கள், பிற்பட்டவர்கள் ஆயோர்களுடைய முன்னேற்றத்திற்காக எந்தச் சட்டத்தை, மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்தார்களோ அந்த சட்டத்தினாலேயே அவர்கள் பழிவாங்கப்படுகிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. நிரபராதிகள் பழி வாங்கப்படுகிறார்கள். பணக்காரர் சிக்கிக்கொள்கிறார்களா? பெரிய உத்தியோகஸ்தர்கள் சிக்கிக் கொள்கிறார்களா? அப்படிச் சிக்கினாலும் அவர்கள் உயர்நீதி மன்றம் வரையில் போவதற்கு வசதி இருக்கும். சாதாரண மக்கள்தான்



3rd March 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

ஏழை எளிய மக்கள்தான் இந்தச் சட்டத்தினால் துன்புறுத்தப்படுகிறார்கள். அதை நமது அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டு கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்.ஜி.ஓ.-க்களின் பிரச்னையைப் பற்றி நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் 2, 3 தினங்களுக்கு முன்பாக நடந்த அவர்களுடைய ஒரு கூட்டத்தில் கூட பேசியிருக்கிறார்கள். நேற்றையதினம்கூட சம்பளம் வாங்குகிற தினத்தன்று அவர்கள் துக்கதினம் கொண்டாடினார்கள். இது தேவையா? அவர்கள் துக்கதினம் கொண்டாட வேண்டிய நிலைமையை அரசாங்கம் அனுமதிக்கலாமா? அரசாங்கத்தின் சிப்பந்திகள் அரசாங்கத்தின் பிள்ளைகள் மாதிரி. அவர்கள் அழுதால் யார் அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பது? அரசாங்கம் அல்லவா துடைக்கவேண்டும். ஏன் துடைக்கவில்லை? முன்பு அரிசி என்ன விலை விற்றது, இப்பொழுது என்ன விலைக்கு விற்கிறது? ரூ. 120 சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தவர் முன்பு ஒரு படி அரிசி ரூ. 1-2-0 கொடுத்து வாங்கினார்கள். இப்பொழுது அதே ரூ. 120 சம்பளம் வாங்குபவர்கள் ஒரு படி அரிசி எப்படி ரூ. 1-12-0 கொடுத்து வாங்கமுடியும்? அவர்கள் தவறு செய்கின்ற வழிக்கு நீங்கள் அவர்களை இழுத்துச் செல்கிறீர்கள். குற்றம் சாட்டுகிறீர்களே தவிர, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கவில்லை. நமது முதல் அமைச்சர் அவர்கள்கூட அன்றைய கூட்டத்தில் 'லேபர் மாதிரி வந்துவிட்டீர்களே, தொழிலாளர்கள் புரட்சி பண்ணுகிறமாதிரி வந்துவிட்டார்கள்' என்று கோபமாகக்கூட பேசியிருக்கிறார்கள். இதற்கு என்ன கோபம்? லேபர் என்று சொல்லி ஏன் அவர்களை துரத்தவேண்டும்? ஏன் அவர்களுடைய குறைகளைத் தீர்க்கக்கூடாது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் பேசாததை பேசினேன் என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. நான் பேசியதைப் பற்றி கோபமாகப் பேசினேனா, எப்படி பேசினேன், என்று எப்படி வேண்டுமானாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லலாம் அவர்களுடைய வழக்கம் போல. ஏராளமான என்.ஜி.ஓ.-க்கள் மத்தியில்தான் நான் பேசினேன். அவர்களுக்கு நான் என்ன பேசினேன் என்பது தெரியும். கோபம் வந்ததா என்று அவர்களுக்குத் தெரியும். இப்பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் எப்படித் திருத்திப் பேசினாலும், அதை நான் பொருட்படுத்த போவதில்லை. அதை நான் மறுக்கப்போவதும் இல்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** அவர்கள் பேசிய சமயத்தில் நான் அங்கு இருந்தேன். அவர்கள் ஏன் என்.ஜி.ஓ.-க்களை பக்குவமாக அழைத்து 'உங்களுடைய நோக்கம் என்ன, தேவை என்ன, என்று விசாரித்திருக்கக்கூடாது? அப்படிச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஏன் கோபப்படவேண்டும், ஆத்திரப்படவேண்டும்?

[3rd March 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் அவர்களுடைய உபதேசம் எனக்குத் தேவையில்லை. கனம் அங்கத்தினர் அங்கு இருந்தார் என்றால் அதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். என்.ஜி.ஓ.-க்களை அப்படியாவது பிடிக்கலாமா, அவர்களை பயன்படுத்திக்கொள்ளலாமா என்று பார்க்கிற போக்கு சரியான போக்கு அல்ல.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** முதல் அமைச்சர் அவர்களே என்.ஜி.ஓ.-க்களை எங்கள் பக்கம் தள்ளுகிறார்கள் என்றால் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களுக்கு இருக்கிற கஷ்டத்தை அரசாங்கம் உணர்வதற்கு முடியாத நிலையில் இருக்கிறபொழுது, அந்த அளவுக்கு அதை நாங்கள் உணர்ந்து அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லுகிறோமே தவிர, எங்கள் கட்சியில் அவர்களைச் சேர்க்க வேண்டிய அவசியம் கிடையாது. நான் இதை ஏன் எடுத்துச் சொல்கிறேன் என்றால், அவர்களுடைய குறைபாடுகளை அரசாங்கம் தீர்க்கவில்லை. இதிலே அரசாங்கம் தோல்வி கண்டிருக்கிறது. அரசாங்க சிப்பந்திகள் அவர்களுடைய கஷ்டத்தை யாரிடம் எடுத்துச் சொல்வார்கள்? அவர்கள் கண்ணீரைத் துடைப்பது அரசாங்கத்தின் பொறுப்பு இல்லையா? அவர்கள் கருப்புச் சின்னம் அணிந்துகொள்ளும் நிலைமைக்குக் கொண்டு வந்துவிடவேண்டுமா? அவர்கள் எங்கே போய் தங்களுடைய குறையைச் சொல்வார்கள்? அவர்களுக்கு என்ன லேபர் யூனியன் இருக்கிறதா? அப்படியிருந்தால் டிரேட் யூனியன் ஆக்ட் இருக்கிறது. அவர்கள் ஸ்டிரைக் செய்யக்கூடாது. குறைகளை எடுத்துச் சொன்னால் கோபம். அப்படி ஏதாகிலும் கூட்டம் போட்டால், லேபர் மகாநாடு போல் இருக்கிறதே என்று சொல்லக்கூடிய ஒரு வகுப்பு . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் குறிப்பிட்டது எல்லாம், அந்த மெமோரியல் ஹால் கேட்டுக்கு வருவதற்கு இடம் தெரியவில்லை. என்னுடைய கார் வருவதற்கு முன்னமே அங்கே கூடியிருந்தார்கள். என்னுடைய கார் வரும்பொழுது 'பஞ்சப்படியை உயர்த்து' என்றுதான் சொன்னார்கள். இதையெல்லாம் என்.ஜி.ஓ.-க்கள் எப்படி பாடம் கற்றுக்கொண்டார்கள் என்று ஆச்சரியமாக இருக்கிறது. எனக்குப் புரியவில்லை, வேறு யாரோ பேசுவது மாதிரி இருந்தது என்றுதான் நான் தெரிவித்தேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** "பஞ்சப்படியை உயர்த்து" என்று சொல்வதற்குப் பதிலாக 'உயர்த்துங்கள்' என்று சொல்லியிருந்தால் நான் உயர்த்தியிருப்பேன்' என்று கனம் அமைச்சர் சொல்லியிருந்தால்கூட அவர்கள் அம்மாதிரி சொல்லியிருப்பார்கள். கஷ்டத்தின் காரணமாக அவர்கள் அப்படிச் சொன்னார்களோ என்னவோ தெரியாது. பிரச்னையை கனம் அமைச்சர் எந்த முறையில் அணுகுகிறார்கள் என்பதைத்தான் பார்க்கவேண்டியிருக்கிறது. அரசாங்க சிப்பந்திகளின் நிலைமையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அரசாங்க சிப்பந்திகள் தவறு செய்யக்



3rd March 1964] [*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி*]

கூடாது, லஞ்சம் வாங்கக்கூடாது. நம்முடைய அரசாங்கம் என்.ஜி.ஓ.-க்களின் குறைகளைச் சரிவர பூர்ணமாக புரிந்துகொண்டு அதைத் தீர்க்க முடியவில்லை என்று நான் இந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சட்டம் என்றால் எல்லோருக்கும் ஒன்றுதான். ஏற்கெனவே சட்டசபைக் கூட்டம் நடந்தபொழுது எல்லா மாணவர்களும் வந்தார்கள். எல்லாக் கல்லூரி மாணவர்களும் வந்தார்கள். இந்தி எதிர்ப்பு கோஷம் போட்டார்கள், இந்தியை எதிர்த்து தமிழ் வாழ்க என்றார்கள். அவர்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. முதல் அமைச்சர் அவர்களும் பார்க்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். சென்னையில் இருக்கிற எல்லாக் கல்லூரி மாணவர்களையும் தடுத்து நிறுத்தினர் போலீசார். முதல் அமைச்சர் அவர்களும் பார்க்கமாட்டேன் என்று சொன்னார்கள். ஆனால், நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னால் 200 பேர்கள் வந்தார்கள். யாராக இருந்தாலும் போலீசார் நடவடிக்கை எடுக்கவேண்டும். காங்கிரஸ்காரரை யார் தாக்கினாலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிலே நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் அவர்கள் உள்ளே வந்தார்கள். எப்படி வந்தார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எனக்குத் தெரிந்தவரையில் அப்படி ஒன்றுமில்லை. நான் எங்கும் போகவில்லை. ஞாயிற்றுக் கிழமைதான் வெளியூர் போயிருந்தேன். இருநூறு பேர்கள் ஒன்றும் வரவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** நானே பார்த்தேன். ஏறக்குறைய 200 பேர்கள் திரு. விநாயகமூர்த்தி தலைமையில் உள்ளே வந்தார்கள்.

முன்னர் மாணவர்கள் வந்தபொழுது அவர்கள் வந்த இடத்திலே போலீசார் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால் இப்பொழுது நம்முடைய உள்துறை அமைச்சர் கூடவந்து அவர்களைச் சந்தித்திருக்கிறார். உங்களுடைய கட்சியிலிருந்து வருகிறவர்களை சந்திக்க விரும்புகிறீர்களே, மற்றவர்களைச் சந்திக்க ஏன் மறுக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்னுடைய முக்கியமான ஆட்சேபம் அவர்கள் வகுப்புக்குப் போகாமல் கட்டுப்பாடாக இங்கே வந்திருக்கிறார்கள். அதைத் தெரிவிக்கும் முறையிலே, நான் அவர்களைச் சந்திக்கத் தயாராயில்லை என்று சொன்னேன். ஓரளவோடு வரவேண்டும். முன்கூட்டி கேட்டிருக்கவேண்டும். வகுப்பு நேரத்தில் வருவது தவறு என்று சொன்னேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** ஐந்து மணிக்கு மேலாகவாவது வரச் சொல்லக்கூடாதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் எதிர்க்கட்சித் தலைவர் ஐந்து மணிக்கு மேலே சந்தியுங்கள் என்று சொன்னார்கள். ஐந்து மணிக்கு மேல் நாலைந்து பேர் வரலாமென்று சொன்னேன். ஐந்து மணிக்கு மேல் சந்திக்கலாம் என்று சொன்னேன். யாரும் வரவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளே வரக்கூடாது. மாணவர்கள் வரக்கூடாது, ஆனால் காங்கிரஸ் தரப்பிலே இருக்கின்றவர்கள் வரலாமென்று சொன்னால் அது நியாயமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அன்று வந்த மாணவர்கள் அனைவரும் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்லுவதிலே மகிழ்ச்சி.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** அதைப்பற்றி நாங்கள் பெருமைப் படவேண்டிய நிலையில் இருக்கிறோம். (மணி அடிக்கப்பட்டது). இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்து விடுகிறேன். மாணவர்கள் மனதில் எங்களுடைய கட்சியை வளர்க்கவேண்டியதில்லை. இந்தியைப் பற்றி ஒரு வாசகத்தைச் சொல்ல விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. கோ. வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, பல நல்ல சலுகைகள் கிடைத்திருக்கின்றன என்ற மகிழ்ச்சி மக்கள் மனதிலே பரவிக்கொண்டிருக்கிறது. ஆனால், வழக்கம்போல் பட்ஜெட் விவாதத்தைப் பார்க்கும்பொழுது, பட்ஜெட்டிலே இருக்கிற விஷயங்களுக்கும், விவாதத்திலே சொல்லப்படுகிற விஷயங்களுக்கும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் பச்சையாகச் சில விஷயங்களை ஒப்புக்கொண்டார். சென்னை நகரசபைத் தேர்தலிலே தங்களுடைய வெற்றிக்கு மூல காரணம் என்.ஜி.ஓ-க்கள் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டதுதான் என்று சொன்னார். அப்படிப் புறக்கணிக்கப்படவில்லை என்று சொன்னால், முடிவு வேறாக இருக்குமென்று ஒப்புக்கொண்டார். வெளியிலே இருக்கிற அவர்களுடைய தலைவர்கள், தங்களுடைய சாதனைகளைப்பற்றி மார் தட்டிப் பேசும்பொழுது, சட்டமன்றத்திலே எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒரு அங்கத்தினர் என்.ஜி.ஓ-க்களின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டதுதான் முக்கியமான காரணம் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். வெளியிலே பேசுகிறவர்கள், இங்கே கிடைத்த பரிசு ஹிந்தி எதிர்ப்பை எதிர்த்ததனால் கிடைத்த பரிசு என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இதனை நன்கு ஆராயவேண்டியிருக்கிறது. நகரசபைத் தேர்தல்களிலே, முதல் கட்டத்திலே தி.மு. கழகம் தோல்வி அடைந்துவிட்டது. அதனால் இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறுகிறபொழுது பல நகரங்களுக்கு வந்து அவர்களுடைய பிரசாரத்தைப் பலப்படுத்திக்கொண்டார்கள். சேலத்திலே ஒரு கூட்டம் நடக்கிறபொழுது, ஒரு மிருகம் கூட்டத்திற்கு வந்தபொழுது, "அமைச்சர் வருகிறார், அமைச்சர் போகிறார்" என்று பொருத்தமற்ற முறையிலே பேசி அவர்களுடைய ஆத்திரத்தை வெளியிட்டார்கள். இரண்டாம் கட்டத் தேர்தலிலும் காங்கிரசுக்குப் பெரும் வெற்றி கிட்டியது. தங்களுடைய சாதனைகள் வெற்றி பெறவில்லை என்று தெரிந்தும், மற்ற இடங்களிலே பிரசாரத்தின்மூலம் வெற்றி பெற முடியாததால் அங்கே



கையாலாகாமல் போனதற்குப் பின்னர், வேட்டைக்காரனிடம் மண்டியிட்டார்கள். சென்னை நகரத்தில் கிடைத்த வெற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி அல்ல, அது வேட்டைக்காரனின் வெற்றி என்று சென்னை நகரத்திலும், தமிழ் நாட்டிலுள்ள பல நகரங்களிலும் எழுதிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பிரசாரத்தின் காரணமாக வெற்றிபெறுவிட்டால், தமிழ் நாட்டில் பல நகரங்களில் அவர்கள் தோல்வி அடைந்ததற்குக் காரணம் என்ன ? தமிழ் நாட்டில் பல நகரங்களில் அவர்களுடைய ஸ்தாபனம் செய்ய முடியாததை இங்கே ஒரு சினிமா நடிகர் செய்து விட்டார். (இந்த சமயத்தில் திரு. செ. மாதவன், திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி, திரு. எம். வி. கரிவேங்கடம் முதலியோர் "ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து நின்றார்கள்.)

**கனம் உதவி சபாநாயகர்:** ஆர்டர், ஆர்டர்.

SRI V. KRISHNAMOORTHY : On a point of order. Sir, can the Hon. member raise a discussion on men not represented in this House ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எந்த "மேனைப்" பற்றியும் அவர் பேசவில்லை. ஏதோ ஒரு சினிமாப் படத்தைப்பற்றி பேசுகிறார். இதிலே "பாயின்ட் ஆப் ஆர்டர்" ஒன்றும் இல்லை.

[மறுபடியும் திரு. எம். வி. கரிவேங்கடம், திரு. செ. மாதவன், புலவர் கா. கோவிந்தன் ஆகியோர் "ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்" என்று சொல்லிக்கொண்டு எழுந்திருந்தார்கள்.)

MR. DEPUTY SPEAKER : When the Chair is on its legs Members should resume their seats.

It is grossly improper for hon. Members to stand when the Chair is on its legs. No hon. Member should make a personal reference to any person who is not in the House.

The hon. Member Sri G. Venkataraman may now continue his speech.

**திரு. கோ. வெங்கட்டராமன்:** இன்றைய தினம் நகரசபையின் தேர்தலுக்கு வெற்றிக்கான காரணங்களை அவர்கள் சொல்லும் பொழுது, கார சாரமான குற்றச்சாட்டுகளை அமைச்சர் அவையின் மீதும், போலீஸ் இலாகாவின்மீதும் சுமத்தும்போது, குறிப்பிட்ட, அர்த்தமுள்ள, ஆதாரமுள்ள விஷயங்களை நாங்கள் பேசும்பொழுது அவர்கள் ஏன் மறுக்கவேண்டும்? தமிழ்நாடு முழுவதும் இந்த நகரசபை தேர்தல்கள் நடந்திருக்கின்றன. இன்றையதினம் மக்களுக்கு என்ன பரிசு கிடைத்திருக்கிறது? அந்தப் பரிசை வைத்துக்கொண்டு நாம் இதனை ஆராயவேண்டும், உயர்நிலைப் பள்ளிவரையில் எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளித்திருக்கிறோம். மாணவர்கள் தரமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம், அவர்களின் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமையவேண்டுமென்றும் நினைக்கிறோம். ஒவ்வொரு விஷயத்துறையிலும் பல கட்டுப்பாடுகள் விதித்துக் கொண்டிருக்கிறோம்.

[திரு. கோ. வெங்கட்டராமன்] [3rd March 1964

சினிமாவிலே கட்டுப்பாடு போர்டு என்று ஒன்று இருக்கிறது. சென்னை நகரத்திலும், தமிழ் நாட்டிலும் காட்டப்படுகிற தமிழ்ப் படங்களை அந்த தணிக்கை போர்டார் தணிக்கை செய்கிறார்கள். மாணவர்களுக்குப் பொருத்தம் இல்லாததை, வயது வராதவர்களுக்குத் தேவையில்லாததை ஒதுக்கித் தள்ளுவது அவர்களுடைய பொறுப்பாக இருக்கிறது. மாணவர்களுக்குத் தரமுள்ள கல்வி அளிக்கவேண்டுமென்று நாம் நினைக்கிறோம். இந்த நிலையில், தரம் இல்லாத படங்கள், "வயது வந்தவர்களுக்கு" என்று கொட்டை எழுத்துக்களிலே போட்டுக் காட்டப்படவேண்டிய படங்கள் எல்லோருக்கும் காட்டப்படுகின்றன. அந்தப் பரிசைப் பார்த்து, அதிலிருந்து ஏதாவது தேர்தல் பரிசு கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருந்த நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் அர்த்தமுள்ள கொள்கைகளை வைத்து நாட்டிலுள்ள மக்களை அவர்கள் பக்கம் இழுக்கவில்லை. திராவிட நாட்டுக் கொள்கையைக் காற்றிலே பறக்க விட்டார்கள். ஹிந்தித் திணிப்பை எதிர்ப்பதாகவும், திணிக்கப்படாத ஒன்றை எதிர்ப்பதாகவும் பாவித்துக் கொண்டார்கள். ஹிந்தியில் தேறினால்தான் எஸ்.எஸ்.எல்.சி.-யில் தேர்வாகக் கருதப்படும் என்ற நிலை இருக்கிறதா? தமிழ் மக்களிடம் "நாங்கள் வீராதி வீரர்கள், சூராதி சூரர்கள்" என்று சொல்லி நடத்திய நாடகம் எல்லாம் பலிக்காமல் அம்பலத்துக்கு வந்துவிட்டதை தமிழ்நாடு நன்கு நிரூபித்துக் காட்டிவிட்டது. இந்த நிலையில் ஹிந்தி திணிப்பு எதிர்ப்பால் கிடைத்த வெற்றி என்றும், என்.ஜி.ஓ.-க்கள் குறையைப் புறக்கணித்ததால் கிடைத்த வெற்றி என்றும் பேசக்கூடிய நிலையிலே இங்கு விவாதம் சென்று கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டு மக்களுடைய எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டுமென்று சொன்னால், சினிமாக் கட்டுப்பாடு நல்ல முறையில் இயங்கவேண்டும். பல சம்பவங்களைப் பற்றி நான் பேச முடியும். அவற்றின் அடிப்படை என்ன? மக்களுடைய மனதிலே ஏற்படுகின்ற மாறுதலுக்கு காரணம் என்ன? சென்னை நகரத்திலே வோட்டுப் போட்டவர்களுக்கும், மற்ற நகரங்களிலே ஓட்டுப் போட்டவர்களுக்கும் வித்தியாசம் என்ன? யாருக்கு என்ன சலுகை கிடைத்திருக்கிறது? இந்த நிலையில் "வெற்றி பெற்று விட்டோம், கோட்டையைப் பிடித்து விட்டோம்" என்று மார் தட்டிக்கொள்ளுகிறார்களே? ஒரு ஸ்தானத்தைக்கூட பெறாத சுதந்திராக் கட்சியினர் கூட இதிலே கலந்து கொண்டு மார் தட்டிப் பேசுகிறார்கள் என்றால் நிச்சயமாக வருங்காலம் உண்மையை எடுத்துக்காட்டும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இப்பொழுது பட்ஜெட்டைப்பற்றி பேசும்போது பருத்திக்கும் பருத்திக் கழிவுக்கும் வரி விதிக்கப்
12-00 noon. பட்டிருக்கிறது. மக்களுக்குத் தேவையான சலுகைகள் கொடுத்துக் கொண்டு இருக்கும்பொழுது இதையும் செய்ய வேண்டியிருக்கிறது. பருத்தி நூலைப் பொறுத்தவரையில் எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் அதை பம்பாயிலிருந்து வந்து தமிழ் நாட்டில் வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். அது சரியானதல்ல. தமிழ் நாட்டிலிருந்துதான் மற்ற மாநிலங்களுக்கு போகிறது. தமிழ் நாட்டில் காம்போஸிட் மில்களாக இல்லாமல் நூலை மட்டும் உற்பத்தி செய்யும் மில்கள் இருப்பதனால் கைத்தறிக்குத் தேவையான நூல் வெளி மாநிலங்களுக்கும்



3rd March 1964] [திரு. கோ. வெங்கட்டராமன்]

செல்கிறது. மத்திய, மாநிலங்கள் விதிக்கும் வரியை 2 சதவிகிதம் ஆக மாற்றுகிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு உபயோகமாகும் நூலைப் பொறுத்தவரையில் ஒரு சதவிகிதம் என்பதை 2 சதவிகிதம் ஆக மாற்றுவதனால் சில லட்சங்கள்தான் கிடைக்கும். இந்த வரியையும் மத்திய எக்ஸைஸ் வரியையும் வைத்துக் கொண்டு வியாபாரிகள் ஏராளமாக நூலின் விலையை உயர்த்தி விடுவார்கள். ஆகவே வாலண்டரி பிரைஸ் கண்ட்ரோல், விலைக் கட்டுப்பாடு சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை. இந்த அளவிலே பருத்தி கழிவுக்கு வரி இருந்தாலும் கைத்தறி நூலுக்கு வரி உயராமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே உயர்வினால் சரியான பில்கள் கொடுக்கப்படுவதில்லை. அந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து விற்பனை வரியைப் பொறுத்தவரை அதை அமுலாக்குவதில் தனிப்பட்ட கவனம் செலுத்த ஒரு தனிப்பட்ட கமிட்டியாவது போட்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டிலிருந்து ஆந்திராவுக்கு போகிறது என்றால், டெஸ்பாச் மெமோ, டெலிவரி நோட்டு, அவையெல்லாம் சட்டப்படி தேவையானவைகளை எல்லாம் கொடுத்தாலும், ஆந்திரா மாநிலம் ஒரு மாதத்திற்கு முன்பு இயற்றி இருக்கும் சட்டப்படி ஒரு தனி டெலிவரி நோட்டு தேவை என்று கருதுகிறார்கள். அப்படி டெலிவரி நோட்டு இல்லை என்றால் பெனல்டி போடும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தின் கீழ் சரக்கின் விலையில் 10 சதவிகிதம் பெனல்டியாக விதிக்கிறார்கள். ஆகவே இவைகளை எல்லாம் தக்க முறையில் திருத்தி வியாபாரிகளும் அறிந்து கொள்ளும் முறையில், குறைபாடுகளை நீக்கி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உதவி அதிகாரிகளுக்குக் கூட பெனல்டி போடும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் தக்க மாறுதல்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து சேலத்தைப் பொறுத்த வரையில் பாதாள சாக்கடை திட்டம் இல்லாததால் நகர சுகாதாரம் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்த மூன்றாவது திட்டத்திலேயே பாதாள சாக்கடையை அமைக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து கைத்தறி நெசவாளர்களில் கூட்டுறவு சங்கங்களில் சேராதவர்களுக்கு ஹாண்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பொரேஷன் ஏற்படுத்தி உதவி செய்ய மத்திய சர்க்கார் சம்மதம் தெரிவித்திருக்கிறது. இந்த நடைமுறை ஆண்டிலேயே நடவடிக்கை எடுத்து இந்த பட்ஜெட்டிலேயே வழிவகைகள் செய்து அதன் மூலம் கூட்டுறவுத் துறையில் சேராத கைத்தறிக்காரர்களுக்கும் உதவி செய்ய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த பட்ஜெட்டை நல்ல முறையில் தயாரித்து நல்ல

[திரு. கோ. வெங்கட்டராமன்] [3rd March 1964

பல சலுகைகள் கொடுத்திருப்பதற்காக என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

* **திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் சபை முன் சமர்ப்பித்திருக்கும் 1964-65-க்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர் கனம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த வரவு செலவு திட்டத்திலே எந்தவிதமான நல்ல திட்டமும் கிடையாது என்று குறை கூறினார்கள். அனேகமாக அவர்கள் இந்த வரவு செலவு திட்டத்தை சரியாக படிக்காமலேயே பேசி இருப்பார்களோ என்று நினைக்கிறேன். ஏன் என்றால் இந்த திட்டத்திலே புதிதாக 5 கல்லூரிகள் ஏற்படுத்தப் போவதாகவும், ஒரு புதிய யூனிவர்ஸிடி திறக்கப் போவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சாதாரணமாக செய்யக் கூடிய காரியமா என்று கேட்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உதவித்தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினருக்கு காது சரியாக கேட்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் காதுக்கு வைத்தியம் செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். நான் 5 கல்லூரிகள் திறப்பது குறித்து அமைச்சரை பாராட்டியிருக்கிறேன். யாரைப் படிக்கவில்லை என்கிறார்?

**திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்:** கனம் அங்கத்தினருக்குத்தான் அடிக்கடி உடம்பில் ஏதாவது வரும் போல் இருக்கிறது. அவர்கள் வைத்தியம் செய்து கொள்ளுவது நலமாக இருக்கும். உண்மையிலேயே இந்த வரவு செலவு திட்டம் நல்ல முறையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக கல்வியைப் பொறுத்தவரையிலும் உயர்நிலைப் படிப்பு வரை முழுச்சலுகை கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு அம்சம். அதே மாதிரி இந்த என்.ஜி.ஓ.-க்களுக்கு அவர்களுடைய படியை உயர்த்தவில்லை என்ற ஒரு காரணம்தான் எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு எளிதாகப் போய்விட்டது. உண்மையிலேயே முதல் அமைச்சர் அவர்கள் என்.ஜி.ஓ.-க்களிடம் எதிர் கட்சிக்காரர்களை விட அதிகப் பற்றுதல் உள்ளவர்கள் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், நிதி நிலை அறிக்கையில் ஏன் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்க வில்லை? அதிகமான தொகை தேவைப்படும், ஆதலால் நிச்சயமாக கொடுக்கக்கூடாது என்ற எண்ணம் கொஞ்சமும் கிடையாது. இப்பொழுது இல்லை என்றாலும் உபரி பட்ஜெட் வரும்போதாவது அல்லது சப்ளிமெண்டரி பட்ஜெட் வரும்போது நிச்சயமாக அவர்களுக்கு நிவாரணம் அளிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக அமைச்சர் அவர்கள் சினிமாத் தொழிலுக்கு அதிகமாக ஏன் வரிபோட தயங்குகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். சினிமா கதை எழுதுகிறவர்களுக்கு, நடிக்கும் நடிகர்களுக்கு, கருப்பு மார்க்கெட்டில் பணத்தை சேர்ப்பவர்களுக்கு வரி



3rd March 1964] [திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்]

போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். (குறுக்கீடு) கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்கள் கதை எழுதுவதற்கு, படத்திலே நடிப்பவர்களுக்கு எப்படி வரி போடலாம், எப்படி செய்தால் நன்றாய் இருக்கும் எனறு சொல்வார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் சொனனால் அந்த அறிவுரையைக் கேட்டு அமைச்சர் அவர்கள் வரி போடலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** இந்த வரி போடும் செயலை, எந்த வரியை எப்படி ஏற்றுக்கொண்டு போடுவார்கள் என்பதற்கான அரிய யோசனையை அருமை நண்பர் அவர்களே வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர்:** இதையே ஒரு விவாதத்திற்குரிய விஷயமாக வைத்துக் கொள்ளவேண்டாம்.

**திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்:** என்டெர்டெயின்ட் மென்ட் டாக்ஸைப் பொறுத்த வரையிலும் ஒவ்வொரு படத்திலிருந்தும் சர்க்காருக்கு என்ன வருகிறதோ, அதையே ஒரு விகிதாசாரமாக வைத்துக்கொண்டு, படங்களுக்கும், கதை எழுதுகிறவர்களுக்கும் போட்டால் நிச்சயமாக அதிக வரி போட முடியும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், உண்மையிலேயே நல்ல பல திட்டங்களை அரசினர் நிறைவேற்றியிருக்கிறார்கள். குறிப்பாக, மேட்டூரைப் பொறுத்த வரையிலும், கிட்டத்தட்ட முப்பது கோடி ரூபாய் செலவிலே பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், ஒரே ஒரு குறைபாட்டை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்ற தடவை பட்ஜெட் கூட்டத்திலே, மதிப்பிற்குரிய திரு. ராமையா அவர்கள் ஒன்று குறிப்பிட்டார்கள். இன்டர்ஸ்டேட் இகனாமிக் பண்டிலிருந்து கிட்டத்தட்ட 31½ லட்சம் ரூபாய் என்னுடைய தொகுதியில் இரண்டு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக மத்திய சர்க்காரிலே மினிஸ்டரி ஆஃப் ட்ரான்ஸ்போர்ட் அண்டு கம்யூனிகேஷன் இலாகாவின் 1962-63-ம் ஆண்டு அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மைசூர் மாநிலத்திற்குப் போகக்கூடிய ரஸ்தாவை அமைப்பதற்கும், காவேரிக்கு மத்தியிலே பாலம் கட்டுவதற்கும் ஆகிய இந்த இரண்டு திட்டங்களுக்காக 31½ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது மதிப்பிற்குரிய காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய காலத்திலே ஒதுக்கப்பட்டது. அது ஏன் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே வரவில்லை என்று கேட்டதற்கு அமைச்சர் கனம் திரு. ராமையா அவர்கள், "ஏதோ ஒரு அமைச்சருக்காகவோ அங்கத்தினருக்காகவோ செய்ய முடியாது" என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டம் நம்முடைய மாநில சர்க்காரிலே எல்லா விதமான பரிசீலனைக்கும் உட்பட்டு மத்திய சர்க்காருக்குச் சென்று அங்கிருந்து வந்த திட்டம் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. இது ஏதோ அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்களோ நானோ கடைக்குச் சென்று வாங்கி

கூடிய சாமானைப்போல, மத்திய சர்க்காரிலிருந்து வாங்கி வரவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1962-63-ம் ஆண்டில் வந்த தொகையானது இன்னும் எடுத்துச் செலவு செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இந்த 31½ லட்சம் ரூபாய் முழுக்க முழுகக மத்திய சர்ககாரிலிருந்து கிடைக்கக்கூடிய பணம். இந்தத் தொகை செலவழிக்கப்படாமல் லாப்ஸ் ஆகி விட்டால் உண்மையிலேயே அந்தத் திட்டம் நின்றுவிடும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்காக அமைச்சர் திரு. ராமைய்யா அவாகளிடத்திலும் முதல் அமைச்சர் அவர்களிடத்திலும் நான் பல தடவை எடுத்துச் சொல்லியும் அது இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படாமல் இருப்பதானது மிகவும் வருநத்தக்க விஷயமாக இருக்கிறது. மத்திய சர்க்காரிலிருந்து இனடர்ஸ்டேட் இகனுமிக் பண்டிலிருந்து வரக்கூடிய இந்தத் தொகையை உடனடியாகச் செலவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத்திலே டிராக்டர்கள் மிகவும் குறைவாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. டிராக்டர்கள் கொடுக்கப் பட்டிருந்தாலும், அவற்றுக்கெல்லாம் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. உணவு உற்பத்தி பெருகவில்லை, விலைவாசி ஏறுகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நல்ல முறையில் பல விவசாயிகளுக்கு ட்ராக்டர்கள் கொடுத்து, அதற்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ்களுக்கும் வகை செய்தால் உண்மையிலேயே உணவு உற்பத்தியைப் பெருக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ரயில்வே செஸ் பண்டிலிருந்து கிட்டத்தட்ட 20 லட்சம் ரூபாய் சேலம் ஜில்லாவில் மிச்சம் இருக்கிறது. அந்தப் பணத்திலிருந்து உடனடியாக ஒரு மருத்துவக் கல்லூரியை சேலம் ஜில்லாவில் இந்த ஆண்டில் துவக்க முடியாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் நன்ருக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூரில் இப்பொழுது பெருந் தொழில்கள் விரிவடைந்து வரக்கூடிய இந்த நேரத்திலே அங்கிருக்கும் தொழிலாளர்கள் வீட்டு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் அங்கிருக்கும் நிலங்கள் எல்லாம் சர்க்காருக்குச் சொந்மான நிலமாக இருப்பதன் காரணத்தினுலே அந்த நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கு உடனடியாக ஒரு ஸ்பெஷல் டெபுடி கலெக்டரை நியமித்து, அந்த நகரம் விரிவடையக் கூடிய இந்த நேரத்திலே நல்ல முறையில் நிலங்களைப் பிரித்து அவர்களுக்கு விநியோகம் செய்து கொடுத்தால் நன்ருக இருக்கும்.

பஞ்சாயத்து யூனியன் இருக்கக்கூடிய பல இடங்களில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் திறக்கப்படாமல் எமர்ஜன்ஸி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் சுகாதார





வசதி நல்ல முறையில் ஏற்பட வேண்டுமாளுல், பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கக் கூடிய இடங்களில் உடனடியாக ப்ரைமரி ஹெல்த் சென்டர்களைத் திறந்து வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேட்டூரைப் பொறுத்த வரையில், அங்கே பெரிய தொழில்கள் நடப்பதன் காரணமாக, வெளி மாநிலங்களிலிருந்து பலர் அங்கு பிரயாணம் வருகிருர்கள். அங்கு தங்குவதற்கு வேண்டிய இட வசதி இல்லாததால், பலர் கஷ்டப்படுகிருர்கள். அதற்கு ஒரு சுற்றுலா மாளிகை அங்கே கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேட்டூர்ப் பகுதியில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தினுல் நலமாக இருக்கும். அங்கிருப்பவர்கள் எல்லோரும் தொழிலாளர்களாக இருப்பதால், அங்கே அவர்கள் அந்தத் தொழிலை விட்டு ஓய்வு பெறும் நேரத்தில் பல சிறு தொழில்களைச் செய்யவேண்டுமென்ருல் அவர்களுடைய குழந்தைகள் நல்ல கல்வி அறிவு படைத்தவர்களாக இருக்கவேண்டும். அந்த இடத்திலே இருக்கும் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கும் நல்ல வாய்ப்பு ஏற்பட ஒரு பாலிடெக்னிக் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அத்துடன், அங்கு ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் திறக்க வேண்டுமென்று பல நாட்களாக நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். அங்கு ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு மறுபடியும் நல்ல வேலை கிடைக்க வேண்டுமென்ருல் சிறு தொழில் அங்கே ஏற்படுத்த வேண்டுமென்ருல் அங்கு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் வைத்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில் ஆகஸ்டு மாதத்திலே தண்ணீர் விட்டால் மறுபடியும் ஜனவரி மாதத்திலே அந்த வாய்க்காலை மூடுகிருர்கள். அந்தப் பிரதேசத்திலே எந்தவிதமான கட்டுத்திட்டமும் இல்லாமல் விவசாயிகள் நெல் பயிரிட வேண்டிய நிலை இருக்கிறது. வாய்க்கால் மூடின பிற்பாடு அங்கிருப்பவர்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கவேண்டுமென்ருல் அதற்கு ரெஸ்ட்ரிக்ஷன் வைத்திருக்கிருர்கள். லோயர் பவானி திட்டத்தை அனுசரித்து அங்கும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிருர்கள். அங்கு ஸப்சாயில் வாட்டரை எடுக்கவேண்டுமென்ருல் அங்கிருக்கும் கிணறுகளில் பம்ப் செட் வைக்கவேண்டும். அங்கு ஸப்சாயில் வாட்டர் எடுத்து இன்னொரு போகம் பயிரிட்டு நிலத்திலிருந்து விளைச்சலைக் கொண்டுவர வாய்ப்பு இருக்கிறது. அந்த வித்திலே திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்தக் கூடிய வகையில் பம்ப் செட் வைக்க வேண்டிய உத்தரவை உடனடியாக போட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[3rd March 1964

***திரு. நா. ராஜாங்கம்**: கனம் துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில், 'ரெவின்யூ கணக்கில் மொத்தம் 3 கோடியே 84 லட்சம் ரூபாய் பற்றுக்குறையோடு கடந்த ஆண்டு முடிவடைந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட் சமர்ப்பித்தபோது, 'வரி ஒன்றும் இல்லை, என்று குறிப்பிட்டபோதே, பற்றுக்குறையை ஈடு கட்டுவதற்காக ஏதாவது ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற சூசகம் இருந்தது என்று நான் சென்ற ஆண்டிலேயே குறிப்பிட்டேன். அதேபோல், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலும் 3 கோடி 34 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. ஆனால், பருத்திக்கும், பருத்தி நூலுக்கும், பருத்தி நூல் கழிவுக்கும் நார்ப் பட்டு முதலியவைகளுக்கும் ஒரு சத விகிதம் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு எந்த முறையைக் கையாண்டு துண்டு விழுகிறதைச் சரிக்கட்டுவதற்காக நமது முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் சாமர்த்தியமாகச் செய்தாரோ அதே போல, இந்த ஆண்டும், அவருடைய அனுபவத்தின் காரணமாகவே இந்த நிதி நிலை அறிக்கையிலே விற்பனை வரி ஒரு சத விகிதம் ஏறியிருக்கிறது. அதன் மூலம் வரி சுமார் ஒரு கோடியாக இருக்கும் என்று சொல்லுகிறுலும், நூல் பிற மாநிலங்களுக்குச் சென்று, நாம் வாங்கும் நிலைமைக்கு நம்முடைய மாநிலத்திற்கு வரும்போது, மேலும் ஒரு சத விகிதம் அதிகரித்துக் கொண்டு பல கோடி ரூபாய்களை அது உருவாக்கலாம். நாட்டுக்கு வருவாய்தான். இருந்தாலும் அது எப்படி முடிகிறது என்றால், அங்கே விற்பனை வரியாகப் போடுகிற வரியெல்லாம் ஏழை மக்களையும், அந்தத் தொழிலைச் செய்கிற கைத்தறி நெசவாளர்களையும் பாதிக்கக்கூடிய வரியாகத்தான் வருகிறது.

அடுத்தபடியாக, நேற்று இதே சபையில் பேசிய கனம் உறுப்பினர் திரு. சிதம்பரநாதன் அவர்கள் நமது போலீஸ் இலாகா அமைச்சரைப்பற்றிப் பேசுகையில் ஒரு சவால் விட்ட மாதிரி இருந்தது. அவர் இந்த மன்றத்தில் சொன்ன வார்த்தையை வேறு இடத்திலோ அல்லது தனியாகவோ சொல்லியிருக்கலாம். ஆனால் இதே சபையில், ஒரு நீதியை நிலைநாட்டுவதற்காக இருக்கும் சபையில், மக்கள் பிரதிநிதிகள் இருக்கும் சபையில் அவர்களைப் பார்த்து எச்சரித்தார். "தேர்தல் நேரங்களிலே ஹரிஜனங்கள் எதிர்க்கட்சிகளுக்கு வோட்டுப் போடுகிறார்கள். காங்கிரஸ் கட்சி ஹரிஜனங்களுக்கு ரொம்ப காரியங்கள் செய்திருக்கிறது. நன்றி கெட்டத் தனமாக இப்படிச் செய்கிறார்கள். போலீஸ் அமைச்சராக இருக்கக்கூடிய நீங்கள் அவர்களைக் கண்டிக்கவேண்டும். அடக்கவேண்டும்" என்று ஒரு வார்த்தை சொன்னார்கள். நான் சொல்கிறேன், எந்த அரசாங்கமாக இருந்தாலும் இந்த நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களை, ஏழை எளிய மக்களை முன்னேற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இங்குள்ளவர்கள் அத்தனை பேரும் 1947-இல் நாடு சுதந்திரம் பெற்று காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு கொடுத்த சலுகைகளைக் கொண்டே வந்துள்ளவர்கள் என்று சொல்ல முடியாது. 1947-இல் இந்த



3rd March 1964] [திரு. நா. ராஜாங்கம்.]

காங்கிரஸ் கட்சி மந்திரி சபை அமைந்தபோதே ஒரு பட்டதாரியைக் கொடுத்தது இந்த ஹரிஜன சமூகம். அவர் யார் கொடுத்த சலுகையில் படித்து வந்தார்? அடுத்த ஆண்டு இன்னொரு பட்டதாரியைக் கொடுத்தது. சஞ்சீவையா, கூர்மையா போன்றவர்கள் பட்டதாரிகள். கூர்மையா, எம்.ஏ.பி.எல். இப்போது அமைச்சராக இருக்கக்கூடியவர்களும் கூட செகண்டரி கல்வி பெற்றவர்கள். இந்தக் காங்கிரஸ் ஆட்சி கொடுத்த சலுகையினால் படித்தவரா? கிராமத்தில் உள்ள ஹரிஜனனுக்கு ஆண்டான் ஒரு வசதியைச் செய்து கொடுத்துவிட்டு அந்த அரிஜனன் தன் ஆயுள் முழுக்க தனக்குத்தான் அடிமை செய்யவேண்டும் என்று சொல்வதுபோல, இந்த காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் ஹரிஜனங்களுக்குத் தங்கள் கட்சிதான் நன்மை செய்கிறது, ஆகவே தங்களுக்கே அந்தச் சமூகத்தார் அடிமையாக இருக்கவேண்டுமென்று நினைப்பது அரசியல் நேர்மைக்கு உகந்தது அல்ல. அன்றைக்கு எந்த அரசாங்கத்தின் சலுகையைப் பெற்று இவர்கள் வந்தார்கள். காங்கிரஸ் கட்சி அமைத்த மந்திரி சபையில் தொண்டாற்றியவர்கள் காங்கிரஸ் கட்சி கொடுத்த சலுகையினால் முன்னேற்றம் அடைந்தார்களா? அந்த உறுப்பினர் இதை எல்லாம் மறந்து பேசக்கூடாது. காங்கிரஸ் கட்சி பதவிக்கு வருவதற்கு முன்பே அந்தச் சமூகத்திலும் சிறந்தவர்கள் இருந்தார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. நம்முடைய அரசியல் சட்டத்தை வகுத்துக் கொடுத்த பெரியவரே இந்தச் சமூகத்தில் இருந்து வந்தவர்தான். எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும்கூட பிற்பட்ட சமூகத்தவர்களின் முன்னேற்றத்திற்குச் செயல்படவேண்டியது அந்தக் கட்சியின் கடமை. அதை மறந்து பேசுவது மிக மிக வருந்தத்தக்கது என்று குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சமூகத்தார்களுக்கு நல்லது செய்து, அந்தச் சமூகத்தார்களுக்கு நன்மை செய்து வரக்கூடிய நேர்மையாளர்கள் அந்த அந்தச் சமூகத்தார்களாலே என்றைக்கும் ஆதரிக்கப்படுகிறார்கள். ஓரிடத்திலே காங்கிரஸ் கட்சி தோற்றது என்றால் அந்த கோபத்தால் அந்த இடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் நேர்மையற்றவராக இருப்பார். மக்களிடத்தில் அவர் நன்றாக நடந்து கொள்ளவில்லை என்பதுதான் பொருள். அதை உணர்ந்து கொள்ளாது கண்டபடி பேசுவது, அதுவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தார்களை இழித்துப் பேசுவது மிகவும் வருந்தத்தக்க செய்கையாகும். ஆகவே அந்த முறையில் எந்த அங்கத்தினரும் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதி மிகவும் வறண்ட பிரதேசம். ஆறோ, குளங்களோ இல்லாத பகுதி. அந்தப் பகுதியில் குடி தண்ணீர் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். அதை உடனே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் உப்பளாற்றின் மீது பாலம் அமைத்துக் கொடுத்தால் மிகவும் வசதியாக இருக்கும். அதேபோல் பரவனாறு மீதும், செங்கால் ஓடை மீதும் பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் மிக முக்கியமானது.

[திரு. நா. ராஜாங்கம்] [3rd March 1964

காடாம்புலியூர் பிர்க்கா குடி தண்ணீர் வசதியின்றி மிகவும் கஷ்டப்படுகிறது. நெய்வேலிக்குப் பக்கத்தில் உள்ள தொகுதி அது. அங்கே 300 அடிக்கும் கீழேதான் தண்ணீர் கிடைக்கும். ஆகவே குடி தண்ணீர் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்தக் கடற்கரை ஓரப்பகுதியில் ஆஸ்பத்திரி ஒன்றை ஏற்படுத்தவேண்டும். ஒரு பக்கம் கடல், ஒரு பக்கம் உப்பனாறு, ஆக இடையில் அந்தப் பகுதி ஒரு திட்டாக, ஆஸ்பத்திரி வசதியின்றி இருக்கிறது. ஆகவே பெரியகுப்பத்தில் சர்க்கார் ஆஸ்பத்திரி ஒன்றை அமைத்துக் கொடுக்கவேண்டும். இதுபற்றி டி.டி.ஸி. மூலம் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம்.

தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு கல்லூரியை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முன்வந்திருப்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் அந்தக் கல்லூரியைக் கடலூரில் ஏற்படுத்த வேண்டும் என்றும் தீர்மானம் போட்டிருக்கிறோம் அது இப்போது எந்த இடத்தில் ஏற்படுத்தப்படுமோ என்று கவலை இருக்கிறது. ஆகவே ஏற்படுத்த இருக்கிற கல்லூரியைக் கடலூரில் ஏற்படுத்த வேண்டுமென்று கல்வி அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும், முதல் அமைச்சராகவும் உள்ளவரைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக செகண்டரி எஜுகேஷன் போர்டின்கீழ் கீழ்குப்பம், பெரியகுப்பம், நடுத்திட்டு பகுதியில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முன்வரவேண்டும். மேலும் அந்தப் பகுதியில் சிறிய சிறிய ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளைப் பழுது பார்த்து நீர்ப்பாசனத்திற்கு வழி செய்யலாம். கிட்டத்தட்ட பதினெட்டு மைல் நீளம், பதினேழு மைல் அகலம் உள்ள அந்தப் பகுதியில் நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால் விவசாயம் வளர்ச்சி அடைவதற்கு வழியேற்படும். அதை உடனடியாக அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நமது பட்ஜெட்டிலே கல்விச் சலுகை அளித்திருக்கிறார்கள். இந்தக் கல்விச் சலுகையினால் என்னுடைய தொகுதி மக்கள் பயன்படவேண்டுமென்றால், பெரியகுப்பம் பகுதியில், தெற்குமல்லூர், காட்டுக்குப்பம் பகுதியில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

கடைசியாக, நான் முதலில் குறிப்பிட்டதுபோல, அரசியல் தன்மைகள் எப்படி இருந்தாலும் ஒரு சமூகத்தை இழித்துப் பேசுவது என்பது நல்லதாக அமையாது. அதுவும் சமூகத்தில் இருக்கும் ஐந்தாறு கோடி மக்களை முன்னேற்றம் அடையும்படியாகச் செய்வது சர்க்காருடைய பொறுப்பு. சர்க்காரின் நிர்வாகப் பொறுப்பை இன்றையதினம் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கலாம். நாளைக்கு வேறு ஒரு கட்சி ஏற்றுக்கொள்ளலாம். எந்தக் கட்சி பதவியில் இருந்தாலும்—சர்க்கார் சமூகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களது முன்னேற்றத்திற்குத் தொடர்ந்து செயலாற்ற வேண்டியதாக இருக்கிறது. எப்படியும் நல்லவர்கள் இந்தச்சபை பக்கு வருவார்கள். ஆகவே எந்தச் சமூகத்தையும், தாழ்த்தி, இழித்துப் பேசவேண்டாமென்று இங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களது பிரதிநிதிகளை வேண்டிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



3rd March 1964] [திரு. நா. ராஜாங்கம்]

* திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதிர்ந்த அநுபவம் பெற்ற நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி என் உரையை ஆரம்பிக்கிறேன். வழக்கமாக எந்த வருஷம் பட்ஜெட் வருவதாக இருந்தாலும் ஏதாவது புது வரி வந்துவிடுமோ என்று மக்கள் அஞ்சுவது வழக்கம். ஆனால் சென்ற ஆண்டும் சரி, இந்த ஆண்டும் சரி நமது முதல் அமைச்சர் அவர்கள் மக்களது உள்ளக் கருத்தை நன்றாக அறிந்து புது வரிப் பிரேரணை எதுவும் கொண்டு வரவில்லை. அதற்கு மாறாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அநேக நன்மைகள் மக்களுக்கு ஏற்பட இருக்கிறது. முதலாவதாக 11-வது வகுப்பு வரையில் எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக முதியோர் பென்ஷன் வழங்குவதில் 65 ஆண்டில் இருந்து 60 ஆண்டாகக் குறைத்து சலுகை அளிப்பது, என்.ஜி. ஓ.-க்களுக்கு லிபரலைஸ்டு பென்ஷன் அளிக்கும் திட்டம் எல்லாம் நல்ல ஏற்பாடுகள். இந்த நல்ல திட்டங்கள் எல்லாம் அடங்கிய பட்ஜெட்டை எதிர்க்கட்சிக்காரர்கள் குறை கூறுகிறார்கள் என்றால் அவர்கள் அப்படிக் குறை கூறவில்லை என்றால் எதிர்க்கட்சியாக இருக்கவேண்டிய அவசியமே இருக்க முடியாது என்ற காரணத்தால் அன்றி வேறில்லை. ஆகவே தான் எதிர்க்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

ஆனாலும் சட்டசபை அங்கத்தினர்களுடைய விடுதிக்காக அரசாங்கம் 45 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை யாருமே பாராட்டாமல் இருப்பது சரியல்ல. அங்கத்தினர்களுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்களை உணர்ந்து அங்கத்தினர்கள் விடுதியை அமைக்க அரசாங்கம் முன்வந்திருப்பதற்கு இந்தச் சபையின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்ஜெட் உரை பற்றிப் பேசும்போது சென்னை மாநகராட்சித் தேர்தலைப்பற்றியும் அங்கத்தினர்கள் பேசினார்கள். நாங்கள் எல்லாம் சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் முடிவைப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டோம். ஏமாற்றம் அடைந்தோம். ஏனென்றால் மற்ற மாவட்டங்களில் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத் தில்லுமுல்லுகளை அறிந்த மக்கள் அவர்களை . . .

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் அவர்கள் 'தில்லு முல்லு' என்ற வார்த்தையை உபயோகப்படுத்துவது நல்லதல்ல.

திரு. டி. கார்ச்சா கவுடர்: அவர்களுடைய போக்கை நன்றாக அறிந்த மக்கள் வெளி மாவட்டங்களில் அவர்களைத் தோல்வியடையச் செய்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு, சென்னை

மாநகர மக்கள் அரசியல் அறிவு படைத்த மக்கள், காங்கிரசை வெற்றி பெறச் செய்வார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்க ஏற்பட்ட முடிவு ஏமாற்றம் தரத்தக்கதாக இருந்தது. இந்த கார்ப்பரேஷன் தேர்தல் முடிவிலிருந்தும், அங்கத்தினர்கள் பேசிய திலிருந்தும் என்ன தெரிகிறது என்றால், ஹரிஜன மக்கள் உள்ள சேரிகளில் போய் உண்மைக்குப் புறம்பானவற்றைச் சொல்லி அவர்களை ஆசாபங்கம் அடையச் செய்து சென்னை நகரத்தைப் பொறுத்தவரை அவர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பது என் னுடைய கருத்து.

**திரு. இராம. அரங்கண்ணல்.:** சென்னை நகர மக்கள் ஜனநாயக முறையில் தீர்ப்பளித்திருக்கிறார்கள். அவர்களுடைய தீர்ப்புக்கு இங்கே விளக்கம் கற்பிப்பதோ, வேறுவிதமான காரணங்களைக் கற்பிப்பதோ மிக மிகத் தவறாகும். அது சென்னை மாநகர மக்களை இழிவு படுத்துவதாகும். ஆகவே, அந்த வார்த்தைகளைக் கனம் அங்கத்தினர் அவர்கள் வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது 'பாயின்ட் ஆப் ஆர்டர்' அல்ல. மக்களை இழிவு படுத்திப் பேசப்படுகிறது என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். அறிந்தோ அறியா மலோ இழிவு படுத்துகிறார்கள். பணத்தைக் கொடுத்து இழிவு படுத்துகிறார்களே. அதைத்தான் தவிர்க்க வேண்டுமென்று கூறுகிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து:** அமைச்சர் அவர்கள் 'பணத்தைக் கொடுத்து வாங்குகிறார்கள்' என்று சொன்னார்கள் . . .

MR. DEPUTY SPEAKER: The point of information should come only from the hon. Member, who is speaking. The hon. Member Sri T. Karcha Gowder may continue his speech.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** சென்னை நகரிலுள்ள கீழ்நிலையில் உள்ள மக்கள் ஆசாபங்கம் அடைய நிறையக் காரணங்கள் இருக் கின்றன. சினிமாக்காரர்கள் காரிலே போகிறார்கள். அலங்கார மாகப் போகிறார்கள். மற்றவர்களும் காரிலே போவதை அடிக்கடி பார்க்கிறார்கள். இதையெல்லாம் அடிக்கடி பார்த்து நாமும் ஏன் இந்த நிலைக்கு வரக்கூடாது என்று நினைக்கிறார்கள். அதன் காரண மாக அரசாங்கம் அவர்களுக்குச் செய்து வரும் நன்மைகளை யெல்லாம் அறிந்துகொள்ள முடியாமல் வோட்டளித்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சமயத்தில் உங்கள் மூலமாக எதிர்க்கட்சி யினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓ.-க்கள் சம்பள உயர்வு பற்றிப் பலரும் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் நம்முடைய அரசாங்கத்தையும், அரசாங்கம் தீட்டும் பல திட்டங்களையும், அன்றாட அலுவல்களையும் நடத்தக்கூடியவர்கள். சப்ளிமெண்டரி கிராண்டிலாவது நிதி ஒதுக்கி அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கான வழிவகை களைக் காணவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





அதுவுமன்றி என்.ஜி.ஓ- க்களுக்கென்று தனியாக நியாயவிலைக் கடைகள் வைத்து அரிசி முதலிய பொருள்களைக் குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

எங்களுடைய ஜில்லாவிலே ஹில் அலவன்ஸ் என்.ஜி.ஓ-க்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. கெசடட் ஆபீசர்களுக்குக் கொடுக் கப்படுவதில்லை. அவர்களுக்கும் ஹில் அலவன்ஸ் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கெல்லாம் உல்லன் துணிகள் வாங்கிக் கொள்வதற்காக அட்வான்ஸ் கொடுப்பதாக ஏட்டளவில் இருக்கிறதே தவிர நடைமுறையில் இல்லை. அவர் களுக்கு உல்லன் டிரஸ் வாங்கிக்கொள்ள அட்வான்ஸ் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டசபைக் கூட்டத்தை உதகையிலே நடத்த வேண்டுமென்று நான் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே கூறி வந்திருக் கிறேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டித் தலைவரான மதிப்புக் குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நீலகிரிக்கு வந்திருக்கிறார் கள். நீலகிரியினுடைய நிலைமையை அறிந்திருக்கிறார்கள். கமிட்டிக் கூட்டத்தை அங்கே நடத்துவதற்கு ஆட்சேபனை இல்லையென்றும் கூறியிருக்கிறார்கள். அந்த முறையில் எல்லா சட்டசபை அங்கத் தினர்களும் கோடை காலத்தில் 10, 15 நாட்கள் குளு குளு ஊட்டி யில் கொஞ்சம் ஓய்வு எடுத்து வருவதில் என்ன ஆட்சேபணை இருக்க முடியும் என்று உங்கள் மூலமாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. ம. கமலநாதன்:** ஊட்டியில் சட்டசபைக் கூட்டத்தை நடத்தினால் அங்கத்தினர் அவர்கள் என்ன விதமான வசதி களைச் செய்து கொடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** எதிர்க்கட்சியினருக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க நாங்கள் தயாராக இருக் கிறோம். எதிர்க்கட்சியினர் ஒரு தீர்மானம் கொண்டு வந்து ஏகோபித்து நிறைவேற்றினால் ஊட்டியில் சட்டசபைக் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக எங்களுடைய ஜில்லாவிலே தொழிற்சாலைகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. சமீபத்தில் 'பேபி புட் பாக்டரி' ஏற்படுத்துவது பற்றி முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அங்கு அதிக பசுக்கள் இல்லையென்ற காரணத்தால் அது நிறுத்தப்பட்டது. அங்கே நிறையப் பசுக்கள் இருக்கின்றன. இன்னும் அதை அதிகரிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிற்சாலையை உதகையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேல்ஸ்டாக்சாக 30 கோடி ரூபாய் வந்தாலும் சரி பாதி அளவுக்கு மேல் வரி ஏய்ப்பு நடைபெறுகிறது. அநேக வியாபாரிகள் இரண்டு-மூன்று கணக்குகள் வைத்துக்கொண்டு வரியைக் கொடுக்காமல் ஏய்க்கிறார்கள். அதற்கென்று தனி

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [3rd March 1964

அதிகாரிகளை போட்டு எந்த முறையில் அந்த வரி ஏய்ப்பைக் கண்டு பிடிக்க முடியுமோ அந்த வகையில் கண்டுபிடித்து அவற்றை வசூலித்தால் மேலும் நம்முடைய வருமானம் பெருகும்.

(மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. து. ப. அழகமுத்து :** மதிப்புக்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையிலிருந்து பொறுப்பான ஒரு பதவிக்குப் போயிருக்கின்ற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் காமராஜ் அவர்களுடைய தலைமையில் புவனேசுவரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், ஆவடியில் நிறைவேற்றிய மாதிரி சோஷலிசத்தை மாற்றி, ஜனநாயக சோஷலிசம் என்று தீர்மானம் போட்டு, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் சோஷலிசத்தை நன்றாக முற்றும் உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னால் எனக்கு என்ன கூறுவது என்பதிலே ஒருசில சந்தேகங்கள் வருகின்றன. இந்த பட்ஜெட்டினால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியவில்லை என்று நான் கூறினேனானால், அமெரிக்காவிலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்று முதலமைச்சர் பதில் கூறுவார்கள். இந்த பட்ஜெட்டினால் ஏழ்மை போக்கப்படவில்லை என்று சொன்னால், சோவியத் ரஷ்யாவிலும் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வார்கள். அண்டை மாநிலமான மைசூரில் என்.ஜி.ஓ-க்களுக்கு பஞ்சப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது, நம்முடைய மாநிலத்தில் உயர்த்தப்படவில்லை என்று சொன்னால், நம்முடைய மாநில நிதி நிலைமையைப் பாருங்கள் என்று பதில் கூறுவார்கள். ஆனால் அதே சமயத்தில் மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில் அதிகமாகத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம் என்ற பெருமையும் எடுத்துக் கூறுவார்கள். அடுத்து, நமது மாநில கல்வியின் தரம் தாழ்ந்திருக்கிறது என்று மத்திய அமைச்சர் கூறுகிறார் என்று கூறினால், 'உங்களுடைய அபிப்பிராயம் என்ன, கூறுங்கள்' என்று கூறுவார். புள்ளி விவர நிபுணர்கள் இப்படியெல்லாம் கூறுகிறார்களே என்று சொன்னால், 'அதை நான் படிக்கவில்லை; நீங்கள் என்ன கூறுகிறீர்கள்' என்று சொல்வார்கள். சரி, எங்களுக்குத் தெரிந்ததை சொல்லுவோமென எங்களுக்குத் தெரிந்ததை நாங்கள் கூறினால், "படித்துவிட்டு பேசுங்கள், படிக்காமல் பேசாதீர்கள்" என்று கூறுவார்கள். ஆகவே நான் என்ன கூறுவது என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் ஜனநாயக சோஷியலிஸ பாணியில் தீட்டப்பட்ட பட்ஜெட் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஜனநாயக சோஷியலிஸம் இந்த பட்ஜெட்டில் எந்த அளவிற்குக் காட்டப்பட்டிருக்கிறது என்று பார்க்கிறபோது சமூகப் பாதுகாப்பு என்ற பெயரால் முதியோர் பென்ஷன் தொகை, உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குக் குறைந்த அளவு பென்ஷன் ஆகியவைகள் தவிர வேறு பொருளாதாரத்தில் சம வாய்ப்புப் பெறக்கூடிய நிலை இந்த பட்ஜெட்டில் எந்தளவிற்கு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள



3rd March 1964] [திரு. து. ப. அழகமுத்து]

முடியவில்லை 11-வது வகுப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு உள்ளபடியே நாங்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் பொருளாதாரத் துறையில் மக்கள் சம வாய்ப்பு பெறக்கூடிய அளவிற்கு இந்த பட்ஜெட்டில் என்ன இருக்கிறது? எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒருசில இடங்களில் ஏற்படுகிற திட்டச் செலவு காரணமாக அந்த இடங்களில் மட்டும் பணப் புழக்கம் ஏற்பட்டிருக்கிறது என்றும் கிராமப்புறங்களிலுள்ள ஏழை மக்களிடம் அந்தப் பணப் புழக்கத்தை காண முடியவில்லை என்றும் கூறினார்கள். அந்த ஏற்றத்தாழ்வை நீக்க எல்லா இடங்களிலும் சமமான முறையில் வேலைகள் நடைபெற்று அதன் மூலம் எல்லாயிடங்களிலும் பணம் புழங்கக்கூடிய வாய்ப்பைப் பெற இந்த பட்ஜெட்டில் என்ன மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. அடுத்தபடியாக, புவனேஸ்வரத்தில் உணவுக் கொள்கையை வகுக்கும்போது இந்த நாட்டிலுள்ள அரிசி மில்களை எல்லாம் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள். நம் அமைச்சர் அவர்கள் அத்தீர்மானத்தின் மூலம் பாதிக்கப்படுகிறவர்களுக்கு அபயம் அளிப்பது போல் சர்க்காரே அரிசி மில்களை ஏற்றுக் கொள்ளவில்லை, தனியாரிடத்தில்தான் இருக்கும் என்று அபயம் அளித்திருக்கிறார்கள். உணவுக் கொள்கையைப் பொறுத்தவரை இந்த நாட்டில் பற்றாக்குறை இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் உற்பத்தி அளவை நாங்கள் எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுப்பிரமண்யன் அவர்கள், 19 லட்சம் டன் உற்பத்தி இலக்கு, இதுவரை 8 லட்சம் டன் தான் அடைந்திருக்கிறோம் என்று கூறினார்கள். எஞ்சியுள்ள இரண்டு ஆண்டுகளில் இந்த இலக்கை எப்படி அடையப் போகிறார்கள் என்று தெரியவில்லை. பொதுவாக புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படுவது சரியானதாக இல்லை. விவசாய அபிவிருத்திக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற நிலம் லட்சக்கணக்கான ஏக்கருக்கு அதிகமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் இதே சமயத்தில் நஞ்சை நிலங்கள் விவசாயத்திற்குரிய புஞ்சை நிலங்கள் பெருவாரியாக வீடு கட்டும் மனைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அது மட்டும் அல்ல. தொழிற்சாலைகளாகவும் மாற்றப்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் கழித்தா கூறியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை சர்க்கார் தருகிற புள்ளிவிவரங்கள் சரியானவை அல்ல என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்காக இத்திட்டத்தில், அவர்கள் குடியிருப்பு நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதினால் அதன் மூலம் ஏற்படுகிற வழக்குகளுக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்திருப்பதாக கூறுகிறார்கள். இந்த ஏற்பாடு எப்படியிருக்கிறது என்று பார்த்தால் கொக்கின் தலையில் வெண்ணையை வைத்துப் பிடிப்பதுபோல் தான் இருக்கிறது. வழக்குகள் வராது தடுக்கும் சக்தி சர்க்கார் கையில் இருக்கும்போது அது உற்பத்தியான பிறகு என்ன பாதுகாப்பு கொடுப்பது என்பது புரியவில்லை. ஹரிஜனங்களுக்கு

உதவி செய்வது போல் இது தோன்றுமே தவிர உண்மையில் இது உதவி செய்வதாக இருக்க முடியாது. நாட்டின் தற்காலத் தேவையைப் பூர்த்தி செய்வதாகவில்லை இந்த பட்ஜட். அடுத்தபடியாக, அண்மையில் நடைபெற்ற நகரசபை தேர்தல் பற்றிப் பலர் குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பலயிடங்களில் தோற்றுவிட்டது என்பதைப் பற்றியும் சென்னையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றதற்கு வீராப்பு பேசுகிறோம் என்றும் குறிப்பிட்டார்கள். பலயிடங்களில் தோற்றோம், ஆனால் இருந்ததை இழக்கவில்லை என்று சபாநாயகர் அவர்களே தங்கள் மூலம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்நாட்டின் தனிப் பெரும் கட்சி, சர்வ வல்லமை பொருந்திய காங்கிரஸ் கட்சி பல நகரசபைகளில் வேட்பாளரை நிறுத்துவதற்குள்ள தகுதியை இழந்து விட்டது. போட்டியிட்ட நகரசபைகளில்கூட எல்லா இடங்களிலும் போட்டி இடக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு இருக்கவில்லை. சிலயிடங்களை சிலருக்கு விட்டுக்கொடுத்துத்தான் அவர்கள் தேர்தலில் இறங்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டு விட்டது. நாங்கள் சுதந்திராக் கட்சியோடு கூட்டுசேர்ந்தது பற்றி கேலியாகப் பேசுகிறார்கள். சுதந்திராக் கட்சியோடு கூட்டு சேர்ந்திருக்கிறோம் என்றால் கொள்கை அடிப்படையில் அல்ல. தேர்தலுக்காக ஒரு உடன்பாடு செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் காங்கிரசார் செய்தது என்ன? யாருடன் கூட்டு வைத்துக் கொண்டார்கள்? கோயம்புத்தூரில் தேசத் துரோகிகள் என்று சொன்னவர்களை திருச்சியில் ஆதரித்தார்கள். கோயம்புத்தூரில் துரோகி என்று கூறியவர்களை தூத்துக்குடியில் நல்லவர்கள் என்று அமைச்சர்கள் பேசினார்கள். இப்படிப்பட்ட முரண்பாடுகள் அவர்களிடம் இருக்கும்போது எங்களைப் பற்றி கேலி செய்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை. பொறுப்புள்ள முதல் அமைச்சர் அவர்கள் பணம் கொடுத்து நாங்கள் வோட் வாங்கினோம் என்று சொன்னார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் அப்படிக் கூறவில்லை. பேசுவதை நன்கு கேட்டுப் பேசவேண்டும். அதுவும் இந்த சட்ட மன்றத்தில் பேசுகிறவர்கள், பொறுப்போடு பேசுகிறவர்கள், நான் பேசியதைத் திருப்பிச் சொல்லலாமே தவிர பேசாததைப் பேசுவது சரியல்ல.

**திரு. து. ப. அழகமுத்து :** பணம் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். இப்போது குறிப்பிடவில்லை என்று . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுவும் நான் சொல்லவில்லை.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த நிலையில், இப்படி பணம் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஒரு சிலர் பண மமதையால் ஏழை மக்களிடத்தில் வோட் கேட்கிறபோது 100 ரூபாய் நோட்டைக் காட்டிப் பேசினார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது.





**திரு. து. ப. அழகமுத்து :** கனம் அமைச்சர் அவர்களுக்கு தகவல் வந்திருக்கிறது. நான் நேரில் பார்த்திருக்கிறேன் எப்படி 100 ரூபாய் நோட்டை காட்டினார்கள் என்பதை. சட்டத்தையும், போலீஸ் பாதுகாப்பையும் வைத்துக் கொண்டு அவர்கள் பணம் கொடுத்தார்கள் என்பதை நான் அறிவேன். சட்டத்தை . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் சொல்லாததைச் சொன்னாலும் அதில் தவறு இல்லை; பணம் கொடுத்திருக்கிறார்கள் என்பதில்.

**திரு. து. ப. அழகமுத்து :** நான் பார்த்ததைச் சொல்கிறேன். சட்டத்தைக் கொளுத்துகிறவர்கள் பற்றி பேசுகிறார்கள். சட்டத்தைக் காப்பாற்ற விஸ்வாசம் எடுத்துக் கொண்டவர்கள் அவர்கள் ஆளுகையில் உள்ள போலீஸ் பாதுகாப்பை வைத்துக் கொண்டு இப்படிப்பட்ட அக்கிரமங்கள் எல்லாம் நடத்துகிறபோது யார் இதற்குப் பதில் சொல்ல இருக்கிறார்கள்? ஆகவே தேர்தல் பற்றி பேசும் போது இரண்டு பக்கமும் கூறுள்ள கத்தி என்பதை அவர்கள் மனதில் கொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. கே. பொன்னையன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நாம் இங்கு பட்ஜட் பிரசுரிப்பதற்கு முன்பே பல ராஜ்யங்களில் பிரசுரித்து விட்டார்கள். அதில் வரி இல்லை என்று சொன்னால் நம் பட்ஜட்டிலும் வரி இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய விதத்தில் ஒரு சிறிய டார்க்ஸைத்தான் விதித்திருக்கிறார்கள். பொருளாதார நிபுணரான டாக்டர் நடராஜன் அவர்களே அதை கரும்பு போல் சுவைத்தார்கள் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. எதிர்கட்சிக்காரர்கள், எதிர்கட்சிக்காரர்கள்தானே அவர்கள் எது வேண்டுமானாலும் பேசுவார்கள். இந்த பட்ஜட்டில் போற்றவேண்டியவை பல பல உள்ளன. இலவசக் கல்வித் திட்டம் மிகவும் போற்றத்தக்கது. ஏற்கனவே சொல்லிக்கொண்டிருந்த போதிலும் அதை அமலுக்குக் கொண்டு வந்த இந்த பட்ஜெட் மிகவும் வரவேற்கத்தக்கதே. இலவசக் கல்வித் திட்டத்தை மக்கள் வரவேற்கிறார்கள். அப்படி வரவேற்கும் நிலையில் நிறைய உயர் நிலைப் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும். அப்படிப் பள்ளிக்கூடங்கள் திறந்தால் நிறைய மாணவர்கள் வந்து படிப்பார்கள். அப்படிப் படித்துவிட்டு வருபவர்களுக்கு தொழில் நிலையங்கள் நிறைய ஏற்படுத்த வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, ஊழியர்களுக்கும் நல்லவிதமான உதவி செய்திருக்கிறார்கள். முன்பெல்லாம் 20 வருடங்கள் வேலை செய்தால் தான் பென்ஷன் கிடைக்கும் என்ற நிலைமை இருந்தது. இப்போது ஐந்து வருஷம் வேலை செய்தாலும் பென்ஷன் பெற தகுதியுள்ளவர்களாகிறார்கள் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, ஐந்து கல்லூரிகள் நமது மாநிலத்தில் ஏற்படப் போகின்றன என்றும், மதுரையில் ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்தப் போகிறோம் என்றும் பட்ஜட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்

பார்த்து உண்மையிலேயே எதிர்கட்சிக்காரர்கள் சர்க்காருக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள்.

அடுத்தபடியாக, அரசாங்க ஊழியர்களுக்கு இதற்கு முன்னால் ரிட்டயரான உத்யோகஸ்தர்கள் எல்லாம் பென்ஷனாக ஆறு ரூபாய் ஏழு ரூபாய் என்று வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது எல்லோருக்கும் 20 ரூபாய் கொடுக்கப்படும் என்று முடிவு எடுத்திருப்பதானது, அவர்கள் போட்ட கூச்சலுக்குப் பெரும் பயனாகவே இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நிறையப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். திட்ட வேலைகள் எல்லாம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வருகிறது. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் கல்லாறு, நீராறு இவைகளில் அணைகள் கட்டப்படும் என்று சொல்லப்பட்டது. இதன் மூலமாக விவசாயப் பகுதிகளை சீர்படுத்த முடியும் என்றும், அதற்காக 10 கோடி ரூபாய் செலவழிக்கப்போவதாகவும் பேப்பரில் பார்த்தேன். இதைக் கூடிய சீக்கிரத்திலேயே நிறைவேற்றினால் விவசாய உற்பத்தியை இன்னும் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் ஒரு ஸ்பெஷல் ஆபீஸரை கலக்டர் கிரேடில் போட்டிருப்பது மிகவும் உபயோகமாக இருக்கிறது. அங்கே அடிக்கடி வருகின்ற எஞ்சினியரிங்-லோக்கலைஸேஷன் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை எல்லாம் உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கு இந்த ஸ்பெஷல் ஆபீஸரினால் உதவியாக இருக்கிறது. ஆகவே இதை நான் மிகவும் வரவேற்கிறேன். காரணம் மேலும் அந்த ஏரியாவில் அடிக்கடி டிஸ்ட்ரிபூஷன் சரியாகப் போவதில்லை என்கின்ற புகார்கள் அடிக்கடி அமைச்சர்களுக்குக்கூட அனுப்பக்கூடிய சந்தர்ப்பங்கள் வருகின்றன. இப்போது அந்த சிக்கல்களை எல்லாம் தீர்த்து வைப்பதற்கு இந்த அதிகாரியினுடைய நியமனம் உதவியாக இருக்கிறது. மேலும் அந்தப் பகுதியிலுள்ள பூமிகளை நல்ல முறையில் சீர்திருத்துவதற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் மிகவும் வரவேற்கத் தக்கது. இதைக் கேட்டு அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் எல்லோரும் மிக மகிழ்ச்சி அடைகிறார்கள்.

அடுத்தபடியாக, பொள்ளாச்சி நகரமானது மிகவும் வளர்ந்து வருகிறது. வாணிபத் துறையிலும், தொழில் துறையிலும் மிகவும் வளர்ந்து வருகிறது. அப்படியிருந்தும் அந்த இடத்திற்கு இதுவரை நல்லபடியாக ஒரு ஆஸ்பத்திரி இல்லாதது இப்போது ஒரு குறையாகவே இருந்து வருகிறது. இதைப்பற்றி அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான கட்டிடம் கட்டுவதற்காக அங்கே 10; 12 ஏக்கர்கள் முனிசிபாலிட்டியார் வாங்கிப் போட்டிருக்கிறார்கள், எமர்ஜன்ஸி என்ற



காரணத்தின் பேரில் கட்டிட வேலையைத் தள்ளி வைத்திருந்தார்கள். இப்போது அந்த நிலைமை மாறி இருப்பதால், அந்த ஆஸ்பத்திரி கட்டிடத்தை கட்டுவதற்கு சர்க்கார் ஒரு ஸ்பெஷல் பெர்மிஷன் கொடுத்து, இந்தக் கட்டிடத்தை கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இப்போது என்னுடைய வட்டாரத்தில், பல யூனியன் ஆபீஸ் கட்டிடங்களும் கட்டப்படாமல் இருக்கிறது. கழிந்த வருடம் யூனியன் ஆபீஸ்கள் கட்டிடம் கட்டக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருந்தது. இப்போது அதை ரிலீஸ் பண்ணியிருக்கிறார்கள். இது மிகவும் போற்றத்தக்கது. என்னுடைய வட்டாரத்திலும் இரண்டு யூனியன் கட்டிடங்கள் கட்டவேண்டியிருக்கிறது. இப்போது அதைக் கட்டலாம் என்று நினைக்கிறேன். இதற்கு ஆதரவான முறையில் உத்தரவு போட்டது மிகவும் வரவேற்கத்தக்கது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வால்பாறை பிரதேசமானது நமது ராஜ்யத்தின் தென்கோடியில் இருக்கிறது. இங்கு எஸ்டேட்டு பிரதேசம் தான் அதிகமாக இருக்கிறது. இங்கிருந்து பிற இடங்களுக்கு போதிய அளவில் ரோடு வசதியில்லை. இங்கிருந்து மதுரைக்கு கம்பம், தேனி வழியாக ஒரு ரோடு போட்டால் அங்குள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும், இதன் மூலமாக வியாபாரம் செய்கின்றவர்களுக்கும் வசதியாக இருக்கும். அதோடு அந்த பிரதேசத்தில் ஹைஸ்கூல்கள் மிக தேவையாக இருக்கிறது. இதற்காக கட்டிடங்கள் கட்டவேண்டியிருக்கிறது. இங்கு வசிக்கின்ற மக்கள் எல்லாம் தொழிலாளிகள்தான், பிளான்டேஷன்காரர்கள் எல்லாம் இங்கே இருப்பது இல்லை., அவர்கள் எல்லாம் வேறு இடங்களில்தான் இருக்கிறார்கள், அவர்களுடைய மானேஜர்கள்தான் இங்கு இருக்கிறார்கள். அவர்களிடம் போய் பள்ளிக்கூட கட்டிடத்திற்காக உதவி கேட்கும்போது, நாங்கள் மானேஜர்கள்தான் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது, பிரின்ஸிபில் பிளான்டர்ஸ்களிடம்தான் கேட்க வேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள். இந்த நிலையில் அங்கு வாழ்கின்ற மக்கள் சாதாரண தொழிலாளர்களாய் இருப்பதால், கட்டிடத்திற்கு வேண்டிய பணத்தை அவர்களால் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இதைப் பற்றியும் அரசாங்கம் ஆலோசித்துப்பார்த்து, அந்தப் பிரதேசத்திற்கு இரண்டு மூன்று ஹைஸ்கூல்களையாவது ஆரம்பத்தில் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். ஏற்கனவே டவுன்ஷிப்பில் ஹைஸ்கூல் ஒன்று நடந்து வருகிறது. இப்போது அதையும்கூட நடத்த முடியாது என்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கார் இதையும் எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வால்பாறை பிரதேசம், பக்கத்தில் கிராமங்களை சேர்த்துக் கொள்ளாத பிரதேசமாகத்தான் இதுவரை இருந்து வந்திருக்கிறது. ஏதாவது திட்டங்களை செய்யவேண்டும் என்றால்கூட எஸ்டேட்டுக்குள்தான் செய்யவேண்டும். எஸ்டேட்தான் இருக்

கிறது, ஆகவே பக்கத்துலுள்ள நாலைந்து கிராமங்களையும் அகவையர் செய்து சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வால்ப்பாறை பகுதியானது டூரிஸ்ட் சென்டராக மாற்றப் போவதாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்லப்பட்டது. இது மிகவும் முக்கியமான டூரிஸ்ட் சென்டர் என்ற முறையில் இதையும் ஒரு டூரிஸ்ட் ஸென்டராக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மதிப்புக்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் இங்கே அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற நிதி நிலை அறிக்கையில், நான் முதன் முதலாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய துணிவையும் திறமையையும் பாராட்டுகின்றேன். ஏனென்றால், சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்தை இந்த அவை முன்னால் வைத்த போது, கனம் மதியழகன் அவர்கள் வரிகள் பற்றி பேசிக்கொண்டிருந்த நேரத்தில், அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, பதில் சொன்னார்கள், அதாவது, இப்போது முதலமைச்சராக இருக்கின்ற நமது அமைச்சர் அவர்கள் அன்றைக்கு "நானே நிதி அமைச்சராக இருந்து நானே பட்ஜெட்டை சமர்ப்பிப்பேனானால், நிச்சயமாக வரி போடுவேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதை இப்போது செயலிலும் காட்டியிருக்கிறார்கள். அதற்காக அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, இப்போது நடைபெறுகின்ற விவாதத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது, பட்ஜெட்டிலுள்ள விஷயங்களைக் காட்டிலும், நடந்து முடிந்த நகரசபை தேர்தல்களைப்பற்றி மிகவும் நல்ல முறையில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக ஒரு அங்கத்தினர் பேசும்போது, ஏதோ வேட்டைக்காரன் வெற்றி, வேட்டைக்காரன் வெற்றி என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை மட்டும் சொன்னார்களே தவிர, முன் பகுதியை சொல்ல மறந்து விட்டார்கள். "கோட்டைக்காரன் தோல்வி, வேட்டைக்காரன் வெற்றி" என்று தான் சொன்னார்கள். இதை கனம் அங்கத்தினர்கள் சரியாகச் சொல்லியிருக்க வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றி சொல்ல ஆரம்பித்ததால் தான் இதைப்பற்றி சொல்லியாக வேண்டியிருக்கிறது. "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்பது போல் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் வந்ததினால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் . . . .

**கனம் உதவி சபாநாயகர் :** மற்றவர்களைப் பற்றி பேசாமல் நீங்கள் பட்ஜெட்டின் மீது பேசுங்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அவர்கள் முன்னால் இதைப்பற்றிப் பேசினதால்தான் நானும் இதைப்பற்றி பேசவேண்டியிருக்கிறது. சினிமாவைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். எங்கள் கழகத்தில்





இருக்கின்ற புரட்சி நடிகர் எம். ஜி. ராமசந்திரன் அவர்கள் எம்.எல்.ஸி., எங்கள் கழகத்தில் இருக்கின்ற எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்கள், எம்.எல்.ஏ., எங்கள் கழகத்தைச் சேர்ந்த கே. ஆர். ராமசாமி அவர்கள், எம்.எல்.ஸி. இவர்கள் எல்லாரும் அரசியலோடு தொடர்பு கொண்டவர்கள். அரசியல் காரியங்களில் நேரடியாக பங்கு கொள்பவர்கள். ஆனால் சமீப காலத்தில் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ்காரர்களுக்கு எந்தெந்த சினிமாக்காரர்கள் உதவி செய்தார்கள் என்பதை என்னால் நிரூபித்துக்காட்ட முடியும். எவ்வளவு ரூபாய், யார் யாரிடத்தில் எந்த எந்த நடிகர்கள் கொடுத்தார்கள் என்கின்ற விபரத்தையும் என்னால் சொல்ல முடியும். அது மட்டும் அல்ல, சமீபத்தில் நடைபெற்ற மாநகராட்சி மன்ற தேர்தலில் எத்தனை சினிமா கம்பெனிக்காரர்களுடைய கார்கள் காங்கிரஸ்காரர்களுக்காகப் பயன்பட்டது என்பதையும் என்னால் சொல்ல முடியும். ஆகவே சினிமாக்காரர்களின் பெரும் உதவி காங்கிரஸ்காரர்களுக்குத்தான் இருந்தது. பிரபல சினிமா நடிகைகள் கார்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்குத்தான் வேலை செய்தது. அது மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சித் தலைவருக்கே விருந்து கொடுத்தது ஒரு பிரபல சினிமா நடிகர்தான் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சினிமாக்காரர்கள் காங்கிரஸ் கட்சிக்கும் ஆதரவு தந்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். ஆனால், சினிமா நடிகர்கள் ஒவ்வொரு வீட்டிலும் வந்து காங்கிரஸ் கட்சிக்காக நூறு ரூபாய் நோட்டை 1–00 p.m.
காட்டி வோட்டு கேட்டார்கள் என்று சொல்லாமல் இருந்ததற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சினிமாக்காரர்கள் அப்படிக் கேட்டார்களோ என்னவோ. அது இருக்கட்டும். சென்னையிலே 81-வது டிவிஷனுக்கு இந்த நகர சபைத் தேர்தலின்போது போயிருந்தேன். அங்கே ஒரு காங்கிரஸ்காரர் பணம் கொடுத்துக்கொண்டிருந்தார். 'என்ன ஐயா, காங்கிரஸ்காரர் இப்படி பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே, நீங்களும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே' என்று அங்கே இருந்த போலீஸ்காரரைக் கேட்டேன். அதற்கு அவர் சொன்னார், 'நீங்களும் கொடுங்களேன்' என்று. 'நாங்கள் எங்கே போவது பணத்திற்கு?' என்று நான் சொன்னேன். இதை நானே நேரில் போய் பார்த்தேன். முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் 'பணத்தைக் கொடுத்து ஜனங்களை இழிவு படுத்துகிறோம் அது தப்பு' என்று. அவர் 'பணத்தைக் கொடுத்து ஜனங்களை இழிவு படுத்துகிறோம்' என்று சொன்னார்கள். எனவே அவரும் சேர்ந்து ஒப்புக்கொள்ளுகிறார் என்று நான் நினைக்கிறேன். அப்படியானால் அவருக்கு எனது நன்றி. சினிமாக்காரர்கள்தான் இந்தக் கட்சியை நடத்துவது மாதிரி சிலர் எண்ணம். தங்களுடைய தோல்வியை மறைக்க அவர்களால் இதைத்தான் சொல்ல முடிந்தது. முன்னேற்றக் கழகத்தினால் முடியவில்லை என்று சொல்லுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் நான் ஒன்று சொல்லுகிறேன். சென்னை நகர சபைத் தேர்தலைப் பற்றி நினைக்கும்போது, சிங்காரச் சென்னையில்

பயங்ரகமான புலிகளும் காட்டு மாடுகளும் ஏழை. எளியவர்கள், பச்சிளம் குழந்தைகள் எல்லோரையும் சூறையாடப் புகுந்த வேளையில் ஜனநாயகம் என்கிற வேட்டைக்காரர் வந்தது உண்மை, வெற்றிபெற்றதும் உண்மைதான்.

அதைவிட்டு நகர சபைத் தேர்தல்களில் படு தோல்வி, படு தோல்வி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் படு தோல்வி என்று சொல்லுகிறார்கள். எப்படித் தோல்வி? ஆளும் கட்சிக்காரர்கள் நினைத்துப் பார்த்திருப்பார்கள். 'இப்படிப் போகும் போக்கைப் பார்த்தால் ஒரு நகர சபை கூட நமக்கு வராது போல் இருக்கிறதே, எல்லாமே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் போய் விடுமோ என்று. ஆனால் அவர்கள் பிடித்து விட்டார்கள். அதைக் கொண்டு மாபெரும் வெற்றி, மாபெரும் வெற்றி என்று சொல்கிறார்கள். எங்கள் எண்ணம் அப்படி அல்ல. நாங்கள் எல்லாவற்றிலும் வருவோம் என்று நினைக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தோல்வி, தோல்வி என்று கூறுகிறார்களே, எப்படி? பத்திரிக்கைகள்கூட அப்படி எழுதின. ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய பத்திரிக்கைகள், பத்திரிக்கை தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய பத்திரிக்கைகள்கூட 'தோல்வி, தோல்வி' என்று எழுதின. எங்கே தோல்வி? புதுக்கோட்டையில் முன்பு 5 பேர்கள் இருந்தார்கள். இப்போது அங்கே 12 பேர்கள் வந்திருக்கிறார்கள். இது தோல்வியா? திருநெல்வேலியில் ஒரு ஆள்கூடக் கிடையாது. அங்கே இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்திய பிறகு 9 பேர்கள் வந்திருக்கிறார்கள்.. இது தோல்வியா? எத்தனை ஊரில் சொல்லவேண்டும்? பொள்ளாச்சியில் எங்களுக்கு எவ்வளவு பேர்கள் இருந்தார்கள்? இரண்டோ என்னவோ. இப்போது 13 பேர்கள் இருக்கிறார்கள். இது தோல்வியா? முன்பு சென்னை நகரம் மட்டும் எங்களிடம் இருந்தது . . .

**சில அங்கத்தினர்கள் :** மதுரை என்ன ஆயிற்று? கோவை என்ன ஆயிற்று?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மதுரையிலே காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சி அமைத்திருந்தது. கோயம்புத்தூரில் எங்கள் நகர சபைத் தலைவர் இல்லை. தெரியாதனமாக கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் கட்சியோடு சேர்ந்து இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான் என்ற நிலைக்கு ஆளாகி, இருக்கிற இடம் தெரியாமல் இருக்கிறது. கோவையில் நகர சபையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இல்லை. அதுவும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் துணைத் தலைவராக இருந்தவர் இப்போது காங்கிரஸ் கட்சிக்குப் போய் விட்டார். இந்தத் தேர்தலில் முன்னேற்றக் கழகம் அதே தொகுதியில் நின்று அவரைத் தோற்கடித்திருக்கிறது. இது எங்களுக்குத் தோல்வியா? காஞ்சிபுரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைவர் பதவியைக் கைப்பற்றும் அளவுக்கு இப்போது இருக்கிறது. இது தோல்வியா? எத்தனை ஊரில் அதிகப்படியான இடங்களைப் பிடித்திருக்கிறது? இந்த நிலையில் முன்னேற்றக்





கழகத்திற்குத் தோல்வி, முன்னேற்றக் கழகத்திற்கு தோல்வி என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஒரு இடத்தில் கூட தோற்கவில்லை. முன்னே இருந்ததைவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி பல இடங்களில் தோற்றிருக்கிறது. திருப்பி திருப்பிப் பொய்யைச் சொன்னால் உண்மையாகப் போய் விடும் என்று பேசுகிறார்கள். அவர்களுக்கு இப்படி எண்ணம். ஜனங்கள் இன்னும் பைத்தியக்காரத்தனமாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள்.. சேரியில் இருக்கிறவர்கள் பணம் வாங்குகிறார்கள் என்று கூறுகிறார்கள். எனக்குத் தெரியும், பெருந்தை விட்டுக்காரர்கள்கூட பணம் வாங்கி இருக்கிறார்கள். 'என்ன ஐயா! நீங்கள்கூட இப்படி பணம் வாங்கலாமா?' என்று நான் கேட்டபோது, 'கொடுக்கும்போது வாங்காவிட்டால் தப்பாக நினைப்பார்கள். என்று சொல்லுகிறார்கள். சேரிகளில் இருப்பவர்கள் ஏழைகள் . அவன் ஏழையாக இருப்பான், கோழை அல்ல இன்னும் பலபேர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் பல விதமாக. பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். 'சிங்கத் தமிழன் சின்னசாமி படம் போட்டு முன்னேற்றக் கழகம் ஜெயித்து விட்டது' என்று சொல்லுகிறார்கள். இறந்த பின் ஒருவனுக்கு இரக்கம் காட்டுவது தமிழனின் தனிப் பண்பு.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இரக்கம் காட்டுவது உயர்ந்த பண்பாடுதான். படத்தைப் போட்டு சுவற்றிலே ஒட்டுவது பண்பாட்டுக்கு ரொம்பக் குறைவு.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** காங்கிரஸ் கட்சியினர் பாரதியாருடைய படத்தைப் போட்டு ஒட்டிக் காட்டுகிறார்களே, அது? நான் இங்கே வந்தவுடன் ஒரு யோசனை வந்தது. அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சி நாங்கள் எப்படி இன்று எதிர் கட்சியாக இருக்கிறோமோ அந்த மாதிரி வெள்ளைக்காரன் ஆட்சி காலத்தில் நாங்கள் இருக்கிற இடத்தில் இருந்திருக்கும். வெள்ளைக்கார ஆட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தப் பக்கத்தில் இருந்திருப்பார்கள். அப்போது கூட, திருப்பூர் குமரன் இறந்தபோது அந்தப் பக்கத்திலே இருந்தவர்கள் 'அவன் சும்மா அடிபட்டிருப்பான்' என்று தான் சொல்லியிருப்பார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வெள்ளைக்காரன்கூட அந்த மாதிரி பேசவில்லை. அவர்கள் அப்பேர்ப்பட்டவர்கள் அல்ல.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படியானால் இப்பொழுது உள்ள ஆளும் கட்சியினரைவிட அவர்கள் நல்லவர்கள் போலும். சிங்கத் தமிழன் சின்னசாமியைப்பற்றிக் குறைவாகப் பேசுகிறார்கள். பேசுவது சரியல்ல. இதனால் ஜெயித்தார்கள் என்று சொல்லுகிறார்கள். சென்னை நகரசபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் மற்ற இடங்களைவிட இது முக்கியத்துவம் வாய்ந்ததாகிவிட்டது. தமிழ்நாடு மாத்திரமல்லாமல் எல்லா இடங்களிலும் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அமைச்சர்கள் கூட தங்கள் வேலையை விட்டு விட்டு நகரசபைத் தேர்தல் முடிந்த பிறகு பார்ப்போம் என்று தேர்தலில் இறங்கினார்கள். நகர சபைத் தேர்தலுக்கு வந்த

அமைச்சர்கள் எங்கே பஞ்சாயத்துத் தேர்தலுக்கு வந்து விடுவார்களோ என்று பேசிக்கொள்கிறார்கள். ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், 'மந்திரி வந்து மூன்று தரம் சொல்லிப் போனார், என்ன செய்வது?' என்று சொல்லுகிறார்கள். 'மந்திரி சொன்னால் என்ன?' என்று கூட நான் கேட்கிறேன்.

SRIMATHI T N. ANANDANAYAKI: On a point of order, Sir, I would like to know whether this is a discussion on the budget or on the election.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: இதைக் கேட்கிறவர்கள் சட்டம் தெரிந்தவர்கள். எல்லாவற்றுக்கும் முன்னரே கேட்டிருக்கலாம். பாதி வந்த பிறகு கேட்டிருக்கவேண்டாம். எல்லோரும் பேசும் முன்னரே கேட்டிருக்கலாம்.

'மந்திரியே வந்து விட்டார்' என்று கேவலமாகச் சொன்னார்கள். அவ்வளவுக்கு ஆகிப் போய் விட்டது. இனிமேல் பஞ்சாயத்து எலெக்ஷனுக்கு பண்டித நேருவை அழைத்து வருவார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் நம் மந்திரிகள் சொன்னதை மக்கள் கேட்பதில்லை என்ற முடிவுக்கு வந்தாகி விட்டது . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஜனநாயகத்தில் மந்திரி கட்சி சார்பில் தேர்தல் பிரசாரம் செய்தது தவறு என்று எதிர் கட்சி அங்கத்தினர்கள் நினைக்கிறார்களா? பிரசாரம் செய்வது தவறு என்று கூறுகிறார்களா?

திரு. அ. பெ. தர்மலிங்கம்: உரிமை இருக்கிறது. வீடுவீடாக ஏறி இறங்கி இரவு பகல் என்று பாராமல் மந்திரி செய்யவேண்டியதில்லை. கூட்டத்தைக் கூட்டி அதில் பேசிவிட்டுச் செல்லலாம். வீடு வீடாக ஏறிப் போனதைத் தான் சொல்லுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எல்லாக் கட்சிகளும் வீடு வீடாகப் போவதில்லை என்று வைத்துக்கொண்டால் மந்திரிகளும் போக மாட்டார்கள். அந்தக் கருத்தைத்தான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மந்திரியாக இருந்தாலும் கட்சி அங்கத்தினராக இருந்தாலும் தேர்தல் காலத்தில் அவர்களும் கட்சி அங்கத்தினர்கள்தானேயொழிய மந்திரி அல்ல. ஜனநாயக முறையில் மந்திரிக்கு தனி இடம் கிடையாது. அப்படி தனி இடம் இருப்பதாக வைத்து தனி இடம் ஒதுக்க வேண்டும் என்று நினைப்பது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல.

திரு. மு. கருணாநிதி: சர்க்கார் செலவில் ஜனநாயகத்தில் தேர்தல் பிரசாரம் நடைபெற்றதை வருத்தத்தோடு நான் கண்டிக்கிறேன். மந்திரி ராமைய்யா அவர்களுடைய சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி திருச்சி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு, அதிலே இரண்டு தேதி குறிப்பிட்டு, மந்திரி அந்தத் தேதிகளில் அங்கே இருப்பார், எந்த நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்வார் என்பதை அங்கே உள்ள காங்கிரஸ் கட்சி காரியதரிசியிடமிருந்து கலந்து தெரிந்து கொள்ளவும் என்று எழுதப்பட்டிருந்ததை சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.





கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தத் தேர்தல் காலத்தில் ஜில்லாக்களுக்குப் போயிருந்தபோது சொந்தச் செலவில் போயிருக்கிறேனே தவிர அரசாங்கச் செலவில் அல்ல என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: நான் குறிப்பிடுவது கனம் அமைச்சருடைய சுற்றுப் பிரயாணத்தைத் தாங்கி வருவது அரசாங்க அஞ்சல் உறை. ஒவ்வொரு அஞ்சல் உறையிலும் ஒட்டப்பட்டிருப்பது அரசாங்க அஞ்சல் தலை. "நீங்கள் மந்திரியின் சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி காங்கிரஸ் கமிட்டியிடம் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கோட்டையிலிருந்து உத்தரவு பிறப்பித்தால் அது முறைதானா என்று கேட்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The hon. Member may continue his speech.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் மந்திரிகள் பிரசாரம் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. 21-ம் தேதி ராத்திரி நம் உள் துறை அமைச்சர் கனம் கக்கன் அவர்கள் 81-ம் டிவிஷனில் நல்லான் சாலை என்ற இடத்தில் போலீஸ் லாரியுடன் வந்ததை நானே பார்த்தேன். போலீஸ் லாரியுடன் அவருக்கு அங்கே என்ன வேலை? இதைத் தான் சொல்லுகிறோமே தவிர மந்திரிகள் பிரசாரம் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. மந்திரி சபையிலேயே ஒருவருக்கொருவர் சரியாக இல்லையோ என்று கூட எண்ண வேண்டியிருக்கிறது. முதல் அமைச்சருக்கு போலீஸ் நிர்வாகம் கட்டுப்படவில்லையோ, அல்லது அவர் இலாகாவிலே வேறுபாடுகள் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை என்று பேசிக்கொள்கிறார்கள்.

திட்டத்திலே ஒதுக்கப்படும் பணத்தைப் பார்க்கும்போது நிறைய பணம் ஒதுக்கப்படுகிறது. தோட்டத்தில் பாதி கிணறு என்பதுபோல பாதி வேலை செய்கிறவர்களுக்குப் போய்விடுகிறது. முழுப் பணமும் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. இப்போது பலவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகள் அதற்கு செலவழிக்கப்படுவதில்லை. ஒரு சில திட்டங்கள் டிஸ்டிரிக்ட் போர்ட் காலத்தில் போடப்பட்ட திட்டங்கள், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட திட்டங்கள் இதில் ஒன்றும் காணோம்.

அது என்ன என்று நான் யோசித்துப் பார்த்தேன். அப்படி திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நேரத்தில் அந்தப் பணத்திற்கு வேண்டிய எஸ்டிமேட் அதற்கு வேண்டிய திட்ட வேலைகளுடைய பெயரைக் கேட்டிருந்தார்கள். எங்களுடைய மாவட்ட மன்றத்தில் பல வேலைத் திட்டங்களைப் பொறுக்கி எடுத்து, இவைகள் முக்கியமானவை, இவைகளை உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டும் என்று சொல்லி இருந்தோம். அப்பொழுது கனம் உறுப்பினர் நல்லசாமி அவர்கள் மாவட்ட மன்றத் தலைவராக இருந்தார். அவர் காலத்தில் அனுப்பப்பட்டது. 1954-ல் அனுப்பப்பட்டது. அதற்குப் பிறகு இந்த பட்ஜெட்டில் கூட சேர்க்கப்படவில்லை. ஏன் என்று எனக்குப் புரியவில்லை. டிஸ்டிரிக்ட் போர்டு வொர்க்ஸ்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [3rd March 1964

க்கு முக்கியத்துவம் கொடுத்தால், அந்த வேலைகள் எந்த அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்பது தெரியவில்லை. பல இடங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் அம்மாதிரி வேலைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சாலைகளை எடுத்துக்கொண்டால் ஒரு பகுதி பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டுக்குச் சொந்தம், ஒரு பகுதி ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்குச் சொந்தம், ஒரு பகுதி மற்றொரு யூனியனுக்குச் சொந்தம். இப்படியெல்லாம் இருக்கிறது. இப்படியிருக்கக்கூடிய சாலைகளைப் பற்றி கேட்டால், ஹைவேஸ் டிபார்ட்மெண்டார் தங்களுக்குச் சொந்தமில்லை என்று சொல்லுகிறார்கள். பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டைக் கேட்டால் எங்களுக்குச் சொந்தமில்லை என்று சொல்லுகிறார்கள். யூனியனைக் கேட்டால் இந்த சாலையில் எங்களுக்குக் கொஞ்சம்தான் சொந்தம், பெரும்பாலும் வேறு யூனியனுக்குச் சொந்தம், அவர்கள் செய்யட்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பல வேலைகள் செய்யப்படாமலேயே இருக்கின்றன. லிங்க் ரோடுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் அதையும் காணோம். எங்களுடைய மாவட்ட வளர்ச்சிக் குழுவில் இதுபற்றி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது. ஆனால் ஒன்று கூட இதில் சேர்த்திருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. ஏதோ கணக்குக் காட்டுவதற்காக முடியும் வேலைகளை மட்டும்தான் இந்த பட்ஜெட்டில் சேர்த்திருக்கிறார்களா என்று எனக்கு தெரியவில்லை. போடப்பட்டிருக்கிற வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி குறிப்பாக மற்ற பகுதிகள் விவாதத்திற்கு வருகிற நேரத்திலே பேசிக்கொள்கிறேன் என்று சொல்லி, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுடைய விறுவிறுப்பும் வேகமும் குறைக்கப்படாமலும், எதிர்பார்த்த அளவுக்கு மேலேயே செலவழிக்கக்கூடிய நிதி நிலைமையில் சமாளித்தும், வரவு செலவு திட்டத்தில் அதிகமாகத் துண்டு விழாமல் பாதுகாத்தும், ஒரு செம்மையான வரவு செலவுத் திட்டத்தை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த நிலையில் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்திருப்பதால், எதிர்க்கட்சியினர் எதைப்பற்றிப் பேசுவது என்று தெரியாமல், கடந்த தேர்தலைப்பற்றி ஏதேதோ வேண்டாததைப் பற்றிப் பேசியும், மொழிப் பிரச்னையைப் பற்றி எடுத்துக்கொண்டு பேசியும் காலத்தைக் கடத்துகிறார்கள். வரவு செலவுத் திட்டத்தில் அவர்கள் எந்தக் குறையையும் எடுத்துக் கூறுவதற்கு சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். அது மாத்திரமல்ல. வரவு செலவுத் திட்டத்தை நாம் எடுத்துக்கொண்டு பார்த்தால், 124 கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்பட்ட வருமானம், சற்றேறக்குறைய 130 கோடி ரூபாயாக உயரக்கூடிய அளவுக்கு நம்முடைய நிர்வாகத் துறை மிகச் சிறந்த



3rd March 1964] [திருமதி டி. என். அனந்தநாயகி]

முறையில் இயங்கி வந்திருக்கிறது. அதற்காக நாம் அவர்களுக்கு பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் இதே மாதிரி நீடித்து கவனம் செலுத்தி அதிகமாக வரி வசூல் செய்வார்கள் என்று நம்புகிறேன். அவர்களைப் பாராட்டுவது அவர்களுக்கு உண்மையிலேயே மேலும் உற்சாகத்தைக் கொடுப்பதாக இருக்கும். நம்முடைய நிர்வாகத்தில் இவ்வளவு திறம்பட வருமானத்தை வசூலித்ததற்காகவும், கண்காணித்ததற்காகவும் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் ஆற்றல் மிகச் சிறந்த நிலையில் தான் இருந்திருக்கிறது. அதே போன்று துண்டு விழுகின்ற ரூ. 3 கோடியை சமாளிப்பதற்காக பருத்திக்கும், பருத்தி நூலுக்கும் இருந்த ஒரு சதவீதம் வரியை 2 சதவீதமாக உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வந்திருக்கிறார்கள். அதுகூட அவசியமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்தால் நன்றாக இருக்கும். ஏற்கெனவே அர்பன் லாண்டு டாக்ஸ் போட்டிருக்கிறோம். அதன் மூலம் சற்றேறக்குறைய 2 கோடி ரூபாய் வருமானம் எதிர்பார்க்கலாம். இம்மாதிரி துண்டு விழுகிற 3 கோடி ரூபாயை அதன் மூலம் சமாளித்துவிட முடியாதா என்று சிந்தித்துப் பார்த்தால் சிறந்ததாக இருக்கும். பருத்தி நூல் விலை ஏறிவிட்டால் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள்தான். காரணம், சேலைகளின் விலை அதிகரித்துவிடும். ஆகவே பெண்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்திற்காகவாவது முடிந்தால் அந்த வரியை விலக்குவதற்கு நாம் முயற்சிப்பது மிகவும் போற்றத் தக்கதாக இருக்கும்.

எப்படி நிதிநிலைமையை மேலும் வரி போட்டு சரிக்கட்ட வேண்டும் என்று எண்ணுகிறோமோ, அதே மாதிரி முடிந்தால் போட்டிருக்கிற வரிகளிலிருந்து சில விலக்குகள் அளிக்க முடியுமா என்பதையும் சிந்தித்துப் பார்ப்பது போற்றத் தக்கதாக இருக்கும். வாகன வரி மூலம் இன்றைக்கு ரூ. 12 கோடி வருமானம் வருகிறது. ஐந்து கோடி ரூபாய் வருமானம் வந்த இடத்தில் இன்றைக்கு 12 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. இந்தியாவிலேயே சென்னை மாநிலத்தில் தான் அதிகமாக வாகன வரி போடப்படுகிறது. அப்படிப்பட்ட வரியைக் கொடுப்பதற்குத் தயாராக இருந்தாலும், 5 பஸ்களுக்கும் குறைவாக வைத்திருப்பவர்கள் இன்றைக்கு மிகவும் கஷ்டப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். வரிச் சுமையை அவர்களால் தாங்க முடியவில்லை. சில இடங்களில் பஸ் ஓட்டுகிறவர்கள் எங்களால் பஸ் ஓட்டமுடியவில்லை என்று லைசென்ஸ் அதாரிட்டிக்கு சரண்டர் செய்திருக்கிறார்கள். லாரி ஓட்டுகிறவர்களுக்கு அதைவிட வரிச் சுமை அதிகமாக இருக்கிறது. அவர்களில் பெரும்பாலோர் தொழிலை நடத்த முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு அதன் மூலம் ஒரு கோடி அல்லது இரண்டு கோடி ரூபாய் வருமானம் குறைந்தாலும் பரவாயில்லை, 5 பஸ்களுக்கும் குறைவாக வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் லாரிகள் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும் வரிச் சலுகை செய்து கொடுத்தால் அவர்களுக்குப் பெரிய நிவாரணம் அளித்ததுபோல் ஆகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பார்க்கும்பொழுது, நாம் எதிர்பார்த்த அளவைக் காட்டிலும், மிக வேகமாக திட்டங்கள் விருவிருப்புடன் நிறைவேறிக்கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். அந்த அளவுக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதில் நாம் வெற்றி கண்டிருக்கிறோம் என்று இறுமாப்புடன் சொல்லிக்கொண்டாலும், அவ்வப்பொழுது அது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதைச் சோதித்துப் பார்க்க ஒரு 'எவால்யுவேஷன் கமிட்டி' போடுவது சிறந்தது என்று கருதுகிறேன். திட்டங்கள் முன்னேறிக்கொண்டு வருவதை ஆராய்வதற்கு ஒரு சிறிய ஆய்வுக் குழு ஏற்படுத்தினால், அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். இதையும் அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குறிப்பாக சென்னை நகரத்து மக்களுக்குத் தொல்லை தரக்கூடியது விலைவாசிப் பிரச்னை. அதனால் எதிர்க்கட்சிக்காரர்கள் ஓரளவுக்கு மக்களை ஏமாற்றி ஓட்டுகள் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதற்குக் காரணம் விலைவாசி ஏற்றம்தான். ஒரு படி நெல்லூர் அரிசி ரூபாய் 2. ரூபாய் 1-50-க்கு ஆர்க்காட்டுக் சிச்சடி சம்பா கிடைக்கிறது என்பதை எடுத்துச் சொல்லவேண்டும். அதை மக்கள் சுவைத்துப் பார்ப்பது கிடையாது. ஆர்க்காட்டு சிச்சலி சம்பா அரிசி நன்றாக இருக்கும் என்பதை நாம் எடுத்துச் சொல்லவேண்டும். அந்த அரிசியை இன்னும் அதிகமாக விற்பதற்கு நாம் வழிவகை காணவேண்டும். ஆர்க்காட்டுக் கிச்சலிச் சம்பா அரிசி குறைந்த விலைக்குக் கிடைப்பதால் அதை உடனே உபயோகிக்க வழிவகை தேடுவது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். அது மாத்திரமல்ல. நெல்லூருக்கும் சொல்லிவைக்கவேண்டும். தக்க சமயத்தில் மக்களை கஷ்டப்படுத்தாமல் இங்கு நெல்லூர் அரிசியைக் கொண்டு வரவேண்டும். இந்த 3,000 டன்கள் நெல்லூர் அரிசியை 30 நாட்களுக்கு முன்னால் கொடுத்திருந்தால் இத்தனை இடங்களில் எதிர்க்கட்சியினர் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இருந்திருக்க முடியாது. இனிமேல் காலதாமதம் இல்லாமல் அடுத்த மாகாணங்களிலிருந்து வருகிற பொருள்களையெல்லாம் வரவழைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். சற்றேறக்குறைய இரண்டு மாதங்களாகத்தான் இந்த அரிசிப் பிரச்னை இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் துரிதமாக மாகாணத்துக்கு மாகாணம் ஒத்துழைப்புக் கொடுத்து இந்தப் பிரச்னையை எவ்வளவு தூரம் சமாளிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சமாளித்தால் மிகவும் வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

பருப்பு, எண்ணெய் வித்துக்கள் இவைகளின் விலையும் ஏறிக்கொண்டுதான். போகிறது. காரணம் என்னவென்று புரியவில்லை. உளுத்தம்பருப்பு ஒரு படி ரூ. 2, துவரம்பருப்பு ஒரு படி ரூ. 1-80, எண்ணெய் சற்றேறக்குறைய ஒரு வீசை ரூ. 3-75, இப்படி விலை ஏற்றத்திற்குக் காரணம் என்ன? இதுபற்றி ஆர அமர யோசித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் ஒரு நல்ல முடிவுக்கு வர முடியும். 'பிரைஸ் விஜிலன்ஸ் ஸெல்' ஒன்றை ரெவின்யூ போர்டில் ஆரம்பித்திருக்கிறார்கள். அது போற்றத்தக்கது தான். அந்தச்





சிறு குழு துரிதமாக செயலாற்றி இதில் அக்கறை காட்டவேண்டும். இருக்கிற பிரச்னையை நீடித்துக்கொண்டே போகக்கூடாது. அந்தக் குழு எமர்ஜென்டாக 'ஆக்ஷன்' எடுப்பதற்கு வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களையும் செய்துகொடுக்கவேண்டும். அந்தக் குழு குறுகிய காலத்திலே இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். இது மிக மிக அவசரம் சென்னையைப் பொறுத்தமட்டில் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மாத்திரமல்ல. நம்முடைய விவசாய முன்னேற்றத்தைப் பார்த்தால், இரண்டு நாட்களுக்கு முன் இங்கு வந்திருந்த அமெரிக்க நிபுணர்கள் நமது விவசாயம் ஆரம்பக் கட்டத்தில்தான் இருந்துகொண்டிருக்கிறது, அதிக முன்னேற்றம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவில்தான் இருக்கிறது நிலைமை. எங்கேயோ தவறு இருக்கிறது. அதைத் துரிதமாகக் கண்டறிந்து, அந்தத் தவற்றை நீக்க வேண்டும். முடிந்தால் தீவிர சாகுபடித் திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும். அதன் மூலம் உணவு உற்பத்தி அதிகமாக ஏற்பட்டு விலைவாசிப் பிரச்னையைச் சற்றேறக்குறைய சமாளிப்பதற்கு வழிவகை ஏற்படும். எதிர்க்கட்சிக்காரர்கள் குறை கூறிக்கொண்டிருப்பார்களே தவிர, அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்குரிய வழிகளை எடுத்துச் சொல்லக்கூடிய தேசிய உணர்ச்சி அவர்களிடம் பஞ்சம். இந்த நிலையை நாமாவது உணர்ந்து, துரிதமாகக் குறைகளைக் களைந்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கு எல்லாவிதமான கவனமும் செலுத்தவேண்டும்.

ஜனநாயக சோஷலிஸ அடிப்படையில் ஒரு அம்சம் கூட இல்லாமல் இந்த வரவு செலவுத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று ஒரு எதிர்க்கட்சி அங்கத்தினர் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் கலர் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்க்கும்பொழுது அந்த அம்சம் அவர்கள் கண்ணுக்கு எப்படிப் புலப்படும்? அதுபற்றி நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். சமூகப் பாதுகாப்பிற்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம். 'லிபரலைஸ்டு பென்ஷன் ஸ்கீம்' வந்திருக்கிறது. அங்கஹீனம் படைத்தவர்களுக்கு பென்ஷன் பெறுவதற்கு வயதுத் தகுதி 60-க்குக் குறைக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச பென்ஷன் ரூ. 20 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இவ்வளவு சிறந்த அம்சங்கள் ஏழை மக்களின் நன்மைக்காகக் கொண்டுவந்திருக்கிறோம். இதைக் காட்டிலும் சமதர்ம உணர்ச்சியை எப்படிக் காட்ட முடியும் என்று எனக்குப் புரியவில்லை. அந்த நிலையில் பார்க்கும்பொழுது தாராளமான பென்ஷன் திட்டம் வரவேற்கத்தக்கது. ஆனால், கவர்ன்மென்டு பிரஸ் ஊழியர்கள் என்.ஜி.ஓ.-க்களைச் சேர்ந்தவர்களா, அல்லது அது இன்டஸ்டிரியல் ஸ்தாபனமாகக் கருதப்படுமா, அவர்களுக்கு பென்ஷன் ஸ்கீம் அமுலாக்கப்படுமா என்று சந்தேகம் இருக்கிறது. இதைக் கட்டாயமாக அவர்களுக்கும் அமுல் செய்ய வேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் என்ற நிலைமையை

அவர்களுக்கும் ஏற்படுத்தி இந்த லிபரலைஸ்ட் பென்ஷன் திட்டத்தை அரசாங்க பிரஸ் ஊழியர்களுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று அவர்களுடைய பிரதிநிதியாக இருக்கிற நான் வேண்டிக் கொள்கிறேன். அது போன்று போலீஸ் இலாகாவினருக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதில் நாம் பெரிய முன்னேற்றம் கண்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள், போலீஸ் படையினரில் 80 சதவிகிதத்தினருக்கு வீட்டு வசதிகளை அமைத்துக் கொடுக்கும் வகையில் அதற்கான நிதியை ஒதுக்கி இருப்பதானது ஒரு சமுதாயப் புரட்சித் திட்டம் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த போலீஸ் படையினருக்கு ஒரு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கியிருக்கும் லைன்களில் 9 மணிக்கு மேல் விளக்குகளை அணைத்து விடுகிறார்கள். இதனால் அவர்களுடைய பிள்ளைகள் இரவில் படிப்பதற்கு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பத்து அல்லது 11 மணி வரையிலாவது விளக்குகளை அணைக்காமல் இருக்க வேண்டும். அதனால் ஏதாவது செலவு ஏற்பட்டால் அதை அரசாங்கம் ஏற்க முன் வர வேண்டும்.

அடுத்தபடியாக எஸ்.ஏ.பி.-யில் வேலை செய்கின்ற போலீஸ்காரர்கள் ஆவடியில் இருந்தாலும்கூட வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் அங்கே வீடு கிடைக்காமல், நகரத்திலும் குவார்ட்டர்ஸ் கிடைக்காமல் வெளியே வாடகைக்கு குடியிருப்பவர்களுக்கு இந்த அலவன்ஸ் கொடுக்கப்படுவது இல்லை. இது அவர்களுக்கு ஒரு தொல்லை தரும் பிரச்னையாக இருக்கிறது. முடிந்தால் இதை உடனடியாகப் பரிசீலனை செய்து சப்ளிமெண்டரியிலேயே சேர்த்து அவர்களுக்கும் வீட்டு அலவன்ஸ் கொடுத்தால் அந்த ஏழைக் குடும்பங்கள் நமது சர்க்காரை மனமாரப் பாராட்டும்.

கல்வியைப் பொறுத்த வரையில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வட சென்னையில் வாழும் ஏழை மக்களுக்கு ஒரு பெரிய காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய நலனைக்கருதி அவர்கள் எதிர்பார்க்காமல் இருந்தும் வட சென்னையில் பெண்களுக்காக ஒரு கல்லூரி ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றி.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எதிர்பார்க்காமல் என்று சொல்வது தவறு. எப்பொழுதும் எதிர்பார்த்ததுதான்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** முன்னரே எதிர்பார்க்காமல் பின்னர் வந்தாலும் வரவு செலவுத் திட்டத்தில் வந்ததைக் குறித்து பாராட்டுகிறேன். இந்த நல்ல திட்டத்திற்கு பொது மக்களும் தங்களுடைய உதவியைச் செய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கல்லூரியை இந்த ஆண்டிலேயே துவக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்தத் திட்டத்திலே அடுத்த ஆண்டில் இருந்து 11-வது வகுப்பு வரை எல்லோருக்கும் இலவச கல்விச் சலுகையை நமது சர்க்கார் அளித்திருக்கிறார்கள். இதைக் காட்டி





லும் ஒரு சோஷலிச திட்டத்தை பார்த்தது உண்டா என்று நான் கேட்க விரும்புகிறேன். இத்தனை நல்ல அம்சங்கள் கொண்ட இந்த அறிக்கையை ஆராய்ந்து பேசுவதற்குக்கூட அன்பு உள்ளம் இல்லாதவர்கள் எப்பொழுதோ எங்கேயோ நடந்து எல்லாம் பற்றிப் பேசுவது அவ்வளவு நல்லதல்ல. அரசாங்கத்தைப் பாராட்டினால்தான் மேலும் மேலும் நல்ல காரியங்கள் நடக்கும். இது ஒரு சிறந்த திட்டம். பிற மாகாணங்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கும் ஒரு திட்டம். இப்படி ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்த நமது முதலமைச்சர் அவர்களை எல்லா ஏழைக் குடும்பங்களும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் போட்டியாக பீஸ் வாங்கும் பள்ளிகள் இருந்தாலும் அவைகளையும் அப்படியே விட்டு வைப்பதுதான் நல்லது. நான்-பீ லெவியிங் பள்ளிக்கூடங்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றால் இப்படி சம்பளம் வாங்கும் சில பள்ளிகளையும் நடத்தினால்தான் போட்டி மனப்பான்மையிலே நல்லதொரு கல்வித்தரத்தை நாம் எதிர்பார்க்கலாம். இங்கிலாந்திலேகூட டைரக்டர் கிராண்ட் பள்ளிகள் என்று வைத்து நடத்துகிறார்கள். 11-வது வரை இலவசப்படிப்பு இருந்தும்கூட, சம்பளத்தை வாங்கி நடத்துகிறவர்களுக்கும் கிராண்ட் கொடுக்கிறார்கள். ஹெல்த்தி காம்பெடிஷன் என்ற முறையில் கல்வியின் தரம் கெடாமல் இருப்பதற்காக இந்த மாதிரி ஒரு சூழ்நிலையை நாம் கட்டாயமாக அனுமதித்தாக வேண்டும். அப்படி அனுமதிக்கும்பொழுது முதல் வகுப்பிலிருந்து 5 வது வகுப்பு வரை இந்த அளவுக்குத்தான் சம்பளம் வாங்கலாம் என்ற ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வருவது மிக மிக அவசியம். சென்னை நகரத்திலே தனியார் துறை பள்ளிக்கூடங்களை எடுத்துக் கொண்டால், 1 வது வகுப்பிற்கே ரூபாய் 12 சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது ரொம்பவும் அதிகம். ஆக்வே பிரைமரி ஸ்கூல்களில் இந்த அளவுக்குத்தான் சம்பளம் வாங்கலாம், செகண்டரி பள்ளிகளில் இந்த அளவுக்குத்தான் சம்பளம் வாங்கலாம் என்று ஒரு திட்டம் கொண்டு வந்தால் அதை சென்னை நகர மக்கள் மிகவும் வரவேற்பார்கள்.

சில இனங்களிலே, குறிப்பாக பொது சுகாதாரத் துறையிலே, நாம் ஒதுக்கிய பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை. ஏன் குறைத்துச் செலவழித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஒதுக்குகிற பணத்தைச் செலவழிப்பதோடு அல்லாமல் அதிகமாக செலவழிக்கக்கூடிய வகையிலே அந்த இலாகாக்கள் செயல்பட்டால் சாலச் சிறந்ததாக இருக்கும். தொழில் இனத்தை எடுத்துக் கொண்டால் ரூ. 562 லட்சம் ஒதுக்கியதிலே ரூபாய் 525 லட்சம் தான் செலவழித்திருக்கிறார்கள். நடப்பு ஆண்டுக்கு ரூபாய் 576 லட்சம் கொடுத்திருக்கிறோம். இந்த நிலையில் பார்க்கும் பொழுது, நம்முடைய வரவு செலவுத் திட்டம் வீங்கி விடக் கூடாது என்ற காரணத்தையும் மனதில் வைத்துக் கொண்டு, தேவைப்படுகிற அளவுக்குப் பணத்தை ஒதுக்கி திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றுவதற்கு வழி வகை செய்வது மிகவும் அவசியம்.

[திருமதி. டி. என். அனந்தநாயகி] [3rd March 1964

சென்னை நகரத்திற்கு ஒரு மாஸ்டர் பிளான் கொண்டு வரும் திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது. அதை துரிதமாகக் கொண்டு வருவது மிகவும் அவசியம். சென்னை நகரத்திலே இன்னும் சில பாலங்கள் பழுதுபார்க்கப்படாமலும் புதுப்பிக்கப்படாமலும் இருக்கின்றன. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் பேஸின் பிரிட்ஜ் பாலம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு போடப்பட்டது. இப்பொழுது போக்குவரத்து அதிகமாகி விட்டது. ஆகவே இப்படிப்பட்ட மேம்பாலங்களில் சர்க்கார் அதிக அக்கறை காட்டி, அவைகளைப் புதுப்பிப்பதற்கு முன் வர வேண்டும். ஸ்லம் கிளியரான்ஸை எடுத்துக் கொண்டால், ஹௌஸிங் யூனிட்டுக்குக் கொடுத்தும் கூட இன்னும் முன்னேற்றம் ஏற்படவில்லை. சென்னையைப் பொறுத்தவரையில் இப்பொழுது ஒரு பெரிய அவதி ஏற்பட்டிருக்கிறது. நகர சபைத் தேர்தலுக்குப் பின்னர் நடக்கிற வெறியாட்டங்கள் மக்களுக்கு வேதனையை அளித்திருக்கின்றன. நுங்கம்பாக்கத்தில் ரூபாய் 17-க்கு ஒரு மாட்டை வாங்கி அதை தி.மு.க. தோழர்கள் ஒரு தடியை வைத்து குத்திக்குத்தி ஒரு வாயில்லாத ஜீவனை கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் செய்தி ஹிந்து பத்திரிகையிலும் வந்து இருக்கிறது. இவ்வளவு கோரமான செயல்களை . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப் பார்த்தவர்கள் யாராவது கனம் அங்கத்தினருக்குத் தெரியுமா?

திரு. அ. பெ. தர்மலிங்கம்: முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இதனைச் செய்தார்கள் என்று பார்த்தவர்கள் யாரும் இல்லை.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** பார்த்தவர்களும் இருக்கிறார்கள். இவ்வளவு கோரமான செயல்களைப் புரியும் வெறி பிடித்தவர்கள்மீது சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மையிலேயே சென்னை நகர மக்கள் எவ்வளவு தூரம் வேதனைப்படுகிறார்கள் என்பதைச் சொல்ல இயலாது. வெற்றி பெறுவது மட்டும் பண்பு அல்ல. அதற்குப் பிறகும் எல்லாக் கட்சிகளும் பண்போடு நடந்து கொள்ளுவதுதான் முறை என்பதை சென்னை நகர மக்களின் சார்பாகச் சொல்லிக்கொண்டு உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

## IV.—ANNOUNCEMENT.

### BUSINESS OF THE HOUSE.

MR. DEPUTC SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee which met this morning has recommended the following programme for Voting on Demands for Grants for the year 1964-65 :—

*Monday, the 9th March 1964.*

VI State Legislature.
VII Elections.
VIII Head of State, Ministers and Headquarters staff.



138003

3rd March 1964] [Mr. Deputy Speaker]

*Tuesday, the 10th March 1964.*

XXV Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes.

*Wednesday, the 11th March 1964.*

XX Industries.
XL Capital Outlay on Industrial Development.

*Thursday, the 12th March 1964.*

XVI Agriculture.
XVIII Animal Husbandry.
XXXIX Capital Outlay on Agriculture.
XLVI Capital Outlay on Schemes of Government Trading.

*Friday, the 13th March 1964.*

II Motor Vehicles Acts Administration.
XXX Road Transport Schemes.
XLIII Capital Outlay on Road Transport Schemes.

*Saturday, the 14th March 1964.*

IX District Administration and Miscellaneous.
XXXII Pensions.
XXXIII Miscellaneous.
XXXVI Other Miscellaneous Contributions and assignments.
XLV Commuted value of Pensions.
XLVII Loans and Advances by the State Government.

*Monday, the 16th March 1964.*

XXIV Labour including Factories.

*Tuesday, the 17th March 1964.*

XIII. Education.

*Wednesday, the 18th March 1964.*

XII Police.

*Thursday, the 19th March 1964.*

I Land Revenue Department.
IV Stamps Administration.
XXXI Famine Relief.
XXXVII Compensation to Zamindars.

[Mr. Deputy Speaker] [3rd March 1964

*Friday, the 20th March 1964.*

XXVI Irrigation.

XXVII Public Works—Works.

XXVIII Public Works—Establishment and Tools and Plant.

XLI Capital Outlay on Irrigation.

XLII Capital Outlay on Public Works.

*Saturday, the 21st March 1964.*

III General Sales Tax—and Other Taxes and Duties—Administration.

XIX Co-operation.

*Monday, the 23rd March 1964.*

XIV Medical.

XV Public Health.

XXXVIII Capital Outlay on Public Health.

*Tuesday, the 24th March 1964.*

X Administration of Justice.

XXI Cinchona.

XXII Khadi.

XXXV Forest Department.

XLIV Capital Outlay on Forests.

*Wednesday, the 25th March 1964.*

V Registration Department.

XI Jails.

XVII Fisheries.

XXXIV Stationery and Printing.

*Thursday, the 26th March and Saturday, the 28th March 1964.*

XXIII Community Development Projects, etc.

XXIX Public Works—Grants-in-aid.

Accordingly, in consultation with the Leader of the House also, the Hon. Speaker has fixed the above programme for voting on various Demands for Grants for the year 1964-65 allotting the date for the discussion of each Demand and also the order in which the Demands are to be taken up.

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

1-31 p.m. **The House then adjourned.**



3rd March 1964]

V.—PAPERS PLACED ON THE TABLE OF THE HOUSE.

**A. Statutory Rules and Orders.**

* 110. *Notification issued with G.O. Ms. No. 9, Revenue, dated 3rd January 1964, appointing the 1st February 1964 as the date on which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 other than sections 1, 2, 4, 5, 7, 8, 9, 58-A, 62, 67 and 68 which have already come into force, shall come into force in Ilankadambanur inam estate in Nagapattinam taluk of Thanjavur district. [Laid on the Table of the House under section 67(4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXXVI of 1948).]*

**B. Reports, Notifications and other papers.**

† 66. *Resume of work done by the Madras Legislative Assembly from 17th to 24th January 1964 [Fourth Session (Third Assembly) First Meeting.]*

67. *List of unstarred questions with answers thereto (from Question No 23 to Question No. 60.)*

---

* Placed on the Table of the House on 29th February 1964.

† Placed on the Table of the House on 2nd March 1964.

‡ Placed on the Table of the House on 2nd March 1964.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Wednesday, 4th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### QUESTIONS AND ANSWERS

### STARRED QUESTIONS

#### சிமெண்ட் பங்கீடு

*141 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் நடைபெற்ற வடாற்காடு மாவட்ட தென் வேலூர் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தங்கள் மாவட்டத்திற்குப் போதிய சிமெண்ட் தரப்படவில்லை என்றும் தரப்படும் சிமின்ட்டும் வட்டங்களிடையே சரிசமமாகப் பங்கிட்டுத் தரப்படுவதில்லை என்றும் உறுப்பினர்கள் முறையிட்டுக்கொண்டது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(இ) அப்படியானால், அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The quantity allotted to this State is far below its requirements. Hence, it will not be possible to set apart any additional quantity for consumption by the general public having regard to defence demands and priorities in the present emergency. It will not also be possible to supply cement according to the requirements of each area unless the State quota is increased when the supply position improves.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அளித்த பதில், 'சிமெண்ட் பற்றாக் குறையாக இருக்கிறது' என்ற அடிப்படையை வைத்து அளித்த பதிலாக இருக்கிறது. இப்பொழுது கலெக்டர் அவர்களிடம் நாங்கள் சிமெண்ட்டுக்கு மனுப் போடுகிற நேரத்தில், கலெக்டர் அவர்கள், ஏஜெண்டுகள் தங்களுக்கு எவ்வளவு சிமெண்ட் ஸ்டாக் வந்திருக்கிறது என்ற அறிவிப்பை தாசில்தாருக்கு அனுப்பு கிறார்கள் என்றும், அந்த அறிவிப்பின்பேரில் தாசில்தார்கள் தங்களிடம் வந்திருக்கும் விண்ணப்பத்திற்கேற்றாற்போல் பங்கிட்டுத் தருகிறார்கள் என்றும், எவ்வளவு வருகிறது என்கிற கணக்கு நமக்குத் தெரியாது என்றும் கூறுகிறார். வாகன் வசதி இருந்த இடத்தில் அதிக மூட்டைகளும் வாகன் வசதி இல்லாத

[4th March 1964

இடங்களில் குறைவாகவும் ஏஜெண்டுகளுக்குக் கொடுத்து வந்திருக்கிறார்கள். முன்பெல்லாம் ஒரு டெபோவிலிருந்து மற்றொரு டெபோவுக்கு மூட்டைகளை எடுத்துச் செல்ல வாய்ப்பு இருந்தது.

MR. SPEAKER: The Hon. Member's question is like a lecture.

**புலவர் கா. கோவிந்தன் :** அந்த வாய்ப்பு இல்லாத காரணத்தால் அந்த அடிப்படையை வைத்து சிமெண்ட் பங்கீடு செய்வது முறை தானா? அதை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டாமா?

**கனம் திரு. வெ. ராமையா :** கட்டுப்பாடு இருப்பதற்கு முன்பு, வியாபாரிகளே அவர்களுடைய சக்திக்குத் தகுந்த முறையில் சிமெண்ட் வாங்கி விநியோகம் செய்து வந்தார்கள். இப்பொழுது நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் முறைப்படி. ஸ்டாக்கிஸ்ட்களுக்குக் ஒரு க்வார்ட்டருக்குக் குறைந்த பட்சம் பத்து டன்னாவது கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். அது இல்லாமல், அரசாங்கம் அல்லது அரசாங்கத்தைச் சார்ந்திருக்கக்கூடிய பலவிதமான வேலைகளுக்கு அரசாங்கமே சிமெண்ட் விநியோகம் செய்கிறார்கள். இன்னும் மற்ற இடங்களில் பெரும்வேலைகளுக்குத் தனிப்பட்ட முறையில் இன்டஸ்ட்ரீஸ் டைரக்டருக்கு விண்ணப்பம் செய்து அந்த சிமெண்ட்டை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் முறை பிரகாரம் ஒவ்வொரு இடத்திலும் இருக்கும் ஸ்டாக்கிஸ்டுகளுக்குக் குறைந்த பட்சம் பத்து, பன்னிரண்டு டன் வரைக்கும் கொடுக்கிறார்கள். இன்னும் அதிகமாக சிமெண்ட் வரும் நேரங்களில் எல்லாம் அவர்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

**திரு. து. ப. அழகமுத்து :** மின்சாரம் விஸ்தரிக்கக்கூடிய பிரதேசங்களில் விவசாய பம்ப் செட் வைக்கக் கட்டடம் கட்டுவதற்காக சிமெண்ட் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுவதால், அதற்கு முன் சலுகை அளித்து விவசாயிகளுக்கு உடனடியாக சிமெண்ட் கிடைக்க ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமையா :** இதில் ஏதேனும் விசேஷ கஷ்டங்கள் இருந்து, கனம் அங்கத்தினர் அதைப்பற்றி எனக்கு எழுதி அனுப்பும் பட்சத்தில் அதில் கவனம் செலுத்தலாம்.

**திரு. செ. மாதவன் :** திட்ட வேலைகளுக்கு என்று தனியாக சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது. உணவு இலாகாவிலே செய்யப்படுகிற திட்டங்களுக்கென்றும் தனியாக சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது. ஆனால், சிறிய பாசனத் திட்டங்களுக்கென்று தனியாக சிமெண்ட் ஒதுக்கப்படுவதில்லை. அவர்கள் பொது மார்க்கெட்டிலே தாசில்தாரிடம் வாங்கவேண்டியிருக்கிறது என்ற புகார் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

**கனம் திரு. வெ. ராமையா :** இது போன்ற புகார் எனக்கு ஒன்றும் வரவில்லை. பொதுவாக, அரசாங்க வேலைகளுக்கு—செவினியூ இலாகாவிலே செய்யக் கூடிய வேலையாக இருந்தாலும்,



4th March 1964]

பஞ்சாயத்து யூனியனிலே செய்யக்கூடிய வேலையாக இருந்தாலும்—வேண்டிய சிமெண்ட்டை இந்த அரசாங்கக் கோட்டாவிலிருந்து தான் விநியோகம் செய்ய வேண்டும். ஏதேனும் வேறு விஷயம் இருந்து எனக்கு எழுதி அனுப்பினால் கவனம் செலுத்தலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** ஒரே ஏஜெண்டுக்கு ஒரு மாவட்டத்தில் பல தாலூகா தலைநகரங்களில் டெபோக்கள் இருக்கின்றன. ஆனால், அந்த ஏஜெண்டினுடைய எல்லா டெபோக்களுக்கும் சரி சமமாக ஸ்டாக் பங்கிட்டு வருவது இல்லை. வாகன் வசதி இருக்கும் இடங்களுக்கு அதிகமாகவும், வாகன் வசதி இல்லாத இடங்களுக்குக் குறைவாகவும் ஸ்டாக் வருகிறது. இதனால் தாலூகாவுக்குத் தாலூகா வித்தியாசம் இருக்கிறது. இதைப் போக்க, கலெக்டரே தங்கள் மாவட்டத்திற்கு வரும் ஸ்டாக் அத்தனையையும் சரி சமமாகப் பங்கிட்டு எல்லா டெபோக்களுக்கும் கொடுக்க ஏன் இந்த சர்க்கார் முன்வரக்கூடாது?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுது என்னிடம் இருக்கும் விவரத்தின்படி, குறைந்த பட்சம் ஒரு க்வார்ட்டருக்குப் பத்து அல்லது பன்னிரண்டு டன் வரைக்கும் ஒவ்வொரு ஸ்டாகிஸ்டுக்கும் விநியோகம் செய்வதாகத்தான் இருக்கிறது. அதற்கு மாறுபாடாக ஏதேனும் இருக்கும்பட்சத்தில் கனம் அங்கத்தினர் எனக்கு எழுதியனுப்பலாம்.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பம்ப் செட் வைக்கக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கடன் கொடுக்கிறோம். அப்படி விவசாய பம்ப் செட் வைப்பவர்களுக்குத் தேவையான சிமெண்ட்டை நேரடியாகக் கொடுக்க, பிரத்யேக அதிகாரம் கொடுக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுதிருக்கும் முறைப்படி, சிமெண்ட் தேவைப்படக் கூடியவர்கள், தங்களுக்கு என்ன காரணத்திற்காக சிமெண்ட் தேவை என்பதை மனுவில் குறிப்பிட்டு, அதற்கு வேண்டிய ஸ்கெட்சும் போட்டுக் கொடுத்தால்தான் தாசில்தார், அவர்களுக்கு வேண்டிய கோட்டா கொடுக்கிறார்கள். அந்த முறையில் பம்ப் செட் ரூம் கட்ட சிமெண்ட் வாங்குவதற்கு சிரமம் இருப்பதற்கில்லை. அதில் ஏதேனும் கஷ்டம் இருக்கும்பட்சத்தில் நான் முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொன்னபோது குறிப்பிட்டபடி, கனம் அங்கத்தினர் எழுதி எனக்கு அனுப்பினால் விசேஷ கவனம் செலுத்த நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் பஞ்சம் எப்பொழுது நிவர்த்தியாகும்?

**கனம் திரு. வெ. ராமையா :** அதற்கு இன்னும் நிறைய சிமெண்ட் உற்பத்தியாக வேண்டும். சமீபத்தில் இந்தப் பஞ்சம் நிவர்த்தி ஆகும் என்று நான் கருதவில்லை. திட்டங்களின் இலக்கைப் பார்க்கும்போது, இன்னும் ஏராளமாகக் கட்டடங்கள் கட்டியாக வேண்டும். பல வித ஆக்க வேலைகளெல்லாம் நாம்

[4th March 1964

இடங்களில் குறைவாகவும் ஏஜெண்டுகளுக்குக் கொடுத்து வந்திருக்கிறார்கள். முன்பெல்லாம் ஒரு டெப்போவிலிருந்து மற்றொரு டெப்போவுக்கு மூட்டைகளை எடுத்துச் செல்ல வாய்ப்பு இருந்தது.

MR. SPEAKER : The Hon. Member's question is like a lecture.

**புலவர் கா. கோவிந்தன் :** அந்த வாய்ப்பு இல்லாத காரணத்தால் அந்த அடிப்படையை வைத்து சிமெண்ட் பங்கீடு செய்வது முறைதானா? அதை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டாமா?

**கனம் திரு. வெ. ராமையா :** கட்டுப்பாடு இருப்பதற்கு முன்பு, வியாபாரிகளே அவர்களுடைய சக்திக்குத் தகுந்த முறையில் சிமெண்ட் வாங்கி விநியோகம் செய்து வந்தார்கள். இப்பொழுது நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் முறைப்படி, ஸ்டாக்கிஸ்ட்களுக்குக் ஒரு க்வார்ட்டருக்குக் குறைந்த பட்சம் பத்து டன்னைவது கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். அது இல்லாமல், அரசாங்கம் அல்லது அரசாங்கத்தைச் சார்ந்திருக்கக்கூடிய பலவிதமான வேலைகளுக்கு அரசாங்கமே சிமெண்ட் விநியோகம் செய்கிறார்கள். இன்னும் மற்ற இடங்களில் பெரும்வேலைகளுக்குத் தனிப்பட்ட முறையில் இன்டஸ்ட்ரீஸ் டைரக்டருக்கு விண்ணப்பம் செய்து அந்த சிமெண்ட்டை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் முறை பிரகாரம் ஒவ்வொரு இடத்திலும் இருக்கும் ஸ்டாக்கிஸ்டுகளுக்குக் குறைந்த பட்சம் பத்து, பன்னிரண்டு டன் வரைக்கும் கொடுக்கிறார்கள். இன்னும் அதிகமாக சிமெண்ட் வரும் நேரங்களில் எல்லாம் அவர்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

**திரு. து. ப. அழகமுத்து :** மின்சாரம் விஸ்தரிக்கக்கூடிய பிரதேசங்களில் விவசாய பம்ப் செட் வைக்கக் கட்டடம் கட்டுவதற்காக சிமெண்ட் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுவதால், அதற்கு முன் சலுகை அளித்து விவசாயிகளுக்கு உடனடியாக சிமெண்ட் கிடைக்க ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமையா :** இதில் ஏதேனும் விசேஷ கஷ்டங்கள் இருந்து, கனம் அங்கத்தினர் அதைப்பற்றி எனக்கு எழுதி அனுப்பும் பட்சத்தில் அதில் கவனம் செலுத்தலாம்.

**திரு. செ. மாதவன் :** திட்ட வேலைகளுக்கு என்று தனியாக சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது. உணவு இலாகாவிலே செய்யப்படுகிற திட்டங்களுக்கென்றும் தனியாக சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது. ஆனால், சிறிய பாசனத் திட்டங்களுக்கென்று தனியாக சிமெண்ட் ஒதுக்கப்படுவதில்லை. அவர்கள் பொது மார்க்கெட்டிலே தாசில்தாரிடம் வாங்கவேண்டியிருக்கிறது என்ற புகார் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

**கனம் திரு. வெ. ராமையா :** இது போன்ற புகார் எனக்கு ஒன்றும் வரவில்லை. பொதுவாக, அரசாங்க வேலைகளுக்கு—ரெவினியூ இலாகாவிலே செய்யக் கூடிய வேலையாக இருந்தாலும், பஞ்சாயத்து யூனியனிலே செய்யக்கூடிய வேலையாக இருந்தாலும்—வேண்டிய சிமெண்ட்டை இந்த அரசாங்கக் கோட்டாவிலிருந்து தான் விநியோகம் செய்ய வேண்டும். ஏதேனும் வேறு விஷயம் இருந்து எனக்கு எழுதி அனுப்பினால் கவனம் செலுத்தலாம்.



4th March 1964]

**புலவர் கா. கோவிந்தன் :** ஒரே ஏஜெண்டுக்கு ஒரு மாவட்டத்தில் பல தாலூகா தலைநகரங்களில் டெப்போக்கள் இருக்கின்றன. ஆனால், அந்த ஏஜெண்டினுடைய எல்லா டெப்போக்களுக்கும் சரி சமமாக ஸ்டாக் பங்கிட்டு வருவது இல்லை. வாகன் வசதி இருக்கும் இடங்களுக்கு அதிகமாகவும், வாகன் வசதி இல்லாத இடங்களுக்குக் குறைவாகவும் ஸ்டாக் வருகிறது. இதனால் தாலூகாவுக்குத் தாலூகா வித்தியாசம் இருக்கிறது. இதைப் போக்க, கலெக்டரே தங்கள் மாவட்டத்திற்கு வரும் ஸ்டாக் அத்தனையையும் சரி சமமாகப் பங்கிட்டு எல்லா டெப்போக்களுக்கும் கொடுக்க ஏன் இந்த சர்க்கார் முன்வரக்கூடாது?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுது என்னிடம் இருக்கும் விவரத்தின்படி, குறைந்த பட்சம் ஒரு க்வார்ட்டருக்குப் பத்து அல்லது பன்னிரண்டு டன் வரைக்கும் ஒவ்வொரு ஸ்டாகிஸ்டுக்கும் விநியோகம் செய்வதாகத்தான் இருக்கிறது. அதற்கு மாறுபாடாக ஏதேனும் இருக்கும்பட்சத்தில் கனம் அங்கத்தினர் எனக்கு எழுதியனுப்பலாம்.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பம்ப் செட் வைக்கக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கடன் கொடுக்கிறோம். அப்படி விவசாய பம்ப் செட் வைப்பவர்களுக்குத் தேவையான சிமெண்ட்டை நேரடியாகக் கொடுக்க, பிரத்யேக அதிகாரம் கொடுக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுதிருக்கும் முறைப்படி, சிமெண்ட் தேவைப்படக் கூடியவர்கள், தங்களுக்கு என்ன காரணத்திற்காக சிமெண்ட் தேவை என்பதை மனுவில் குறிப்பிட்டு, அதற்கு வேண்டிய ஸ்கெட்சும் போட்டுக் கொடுத்தால்தான் தாசில்தார், அவர்களுக்கு வேண்டிய கோட்டா கொடுக்கிறார்கள். அந்த முறையில் பம்ப் செட் ரூம் கட்ட சிமெண்ட் வாங்குவதற்கு சிரமம் இருப்பதற்கில்லை. அதில் ஏதேனும் கஷ்டம் இருக்கும்பட்சத்தில் நான் முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொன்னபோது குறிப்பிட்டபடி, கனம் அங்கத்தினர் எழுதி எனக்கு அனுப்பினால் விசேஷ கவனம் செலுத்த நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் பஞ்சம் எப்பொழுது நிவர்த்தியாகும்?

**கனம் திரு. வெ. ராமையா :** அதற்கு இன்னும் நிறைய சிமெண்ட் உற்பத்தியாக வேண்டும். சமீபத்தில் இந்தப் பஞ்சம் நிவர்த்தி ஆகும் என்று நான் கருதவில்லை. திட்டங்களின் இலக்கைப் பார்க்கும்போது, இன்னும் ஏராளமாகக் கட்டடங்கள் கட்டியாக வேண்டும். பல வித ஆக்க வேலைகளெல்லாம் நாம்

[4th March 1964

செய்து முடிக்க வேண்டும். மின்சாரப் பற்றாக்குறை எப்பொழுது தீர்கிறதோ அப்பொழுது தான் சிமெண்ட் பற்றாக்குறை கூடத் தீரும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** ஏரி மராமத்துக்களுக்காக எஸ்டிமேட் தயார் செய்யும் உணவு இலாகாவினர் எஸ்டிமேட்டிலே அதிகமான சிமெண்ட் ப்ரொவைட் பண்ணிவிடுகிறார்கள் போல இருக்கிறது. அதனால் கண்டிராக்டர் இதையெல்லாம் ப்ளாக் மார்க்கெட்டில் சுலபமாக விற்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, எஸ்டிமேட் போடும்போதே, தேவையான அளவு இவ்வளவு தான் என்று நிர்ணயிப்பது பற்றி அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய முயற்சிக்குமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இதிலே எஸ்டிமேட் போடுவதிலே ஒன்றும் தவறு இருக்க முடியாது. ஆனால், அதிலேயே கொஞ்சம் திருட்டுத்தனமான சில காரியம் நடப்பதற்கு கண்டிராக்டர்கள் என்ன என்னவோ செய்கிறார்கள். அந்த வேலை மட்டும் கண்காணிக்கக்கூடிய பொறுப்புள்ளவர்களால் சரிவரக் கண்காணிக்கப்படும் பட்சத்தில் வேலையின் தரமும் நன்றாக இருக்கும், சிமெண்டு இதுபோன்று திருட்டுத்தனமாகப் போவதும் தடைப்படும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** தற்போது சிமெண்ட் விநியோகிக்கும் பொறுப்பு தாலூகா அளவில் தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதில் அதிகமாகக் கால தாமதம் ஏற்படுவதால், இதை பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில் மாற்றிக்கொடுக்க அரசினர் ஆவன செய்ய முன்வருவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இதெல்லாம் பல தடவை பரிசீலனை செய்து, பல கேள்விகளுக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லியிருப்பது போல, இந்தப் பொறுப்பு தாசில்தாரிடம் இருப்பது தான் பொருத்தமாக இருக்கும் என்கிற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இப்போதுள்ள ஏற்பாட்டின்படி, ஸ்டாக்கிஸ்ட்களை சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா என்கிற ஸ்தாபனம் நியமித்து விடுகிறது. அந்த ஏற்பாட்டை மாற்றி, கலெக்டரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, எந்த எந்த தாலூகாவிலே யார் யார் மிகவும் நல்லவர், யோக்கியர் என்று பார்த்து, அவர்களை ஸ்டாக்கிஸ்ட்களாக நியமிக்க அரசாங்கம் உத்தரவிடுவார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுதிருக்கும் முறையிலே ஒன்றும் அதிக சிரமமோ கஷ்டமோ இருப்பதாகத் தெரியவில்லை. புது இடங்களில் ஸ்டாக்கிஸ்ட் வேண்டும் என்று கலெக்டர் சிபார்சு செய்யும் பட்சத்தில் அந்த இடத்திலே ஸ்டாக்கிஸ்ட்களை நியமனம் செய்ய இண்டஸ்ட்ரீஸ் டைரக்டர் என்ன என்ன முடிவுகள் எடுக்க வேண்டுமோ அதை எடுத்துக்கொண்டு வருகிறார்.



4th March 1964]

**புலவர் கா. கோவிந்தன் :** ஸ்டாகிஸ்ட்களுக்கு வரும் மூட்டைகள் பத்து டன்னுக்குக் குறையாமல் இருக்கும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும், மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற மூட்டை இவ்வளவு என்று கணக்கிட்டு, அந்த மூட்டைகளை எல்லாத் தாலூகாக்களுக்கும் சரி சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும் அதிகாரமாவது கலெக்டருக்குக் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** சரி சமமாக ஒவ்வொரு தாலுக்காவிற்கும் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சில தாலூகாக்களில் ஒரு சில மாதங்களில், அல்லது குறிப்பிட்ட க்வார்ட்டரில் அதிகமாக வேலை நடக்கும். ஆகவே, தேவைக்குத் தகுந்த முறையில் சிமெண்ட் ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. அ. ராகவ ரெட்டி:** சிமெண்ட் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஜனத்தொகை அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா ? அல்லது, எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

**கனம் திரு. வெ. ராமையா :** தேவைக்குத் தகுந்த முறையில்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** அரசாங்க வேலைகளுக்காக ஒதுக்கப்படுகிற சிமெண்ட் கள்ளமார்க்கெட்டுக்கு வருகிறது என்ற புகார் பரவலாக இருப்பதால், இவ்வாறு ஒதுக்கப்படுகிற மூட்டைகளுக்கு தனியாக ஏதாவது குறிபோடப்படுமா ? அப்படிச் செய்தால் கள்ளமார்க்கெட்டுக்கு வருகிற மூட்டை அரசாங்கப் பணிக்கு என்று ஒதுக்கப்பட்டது என்பதைக் கண்டுகொள்ளவும் அதன் மீது நடவடிக்கை எடுக்கவும் உதவும் என்பதை உணர்ந்து அரசு ஏற்ற உத்தரவு கொடுக்குமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** சிமெண்ட் ப்ளாக் மார்க்கெட்டில் விற்கப்படுவதாக சொல்லப்படுகிறதே தவிர, பொறுப்புள்ள அங்கத்தினர்கள் எந்த ஒரு இடத்திலாவது இப்படி நடந்திருந்தால் அதைக் குறிப்பிட்டு எழுதினால் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கும். பலமுறை நானும் சொல்லி வருகிறேன். அந்தமாதிரி எந்த அங்கத்தினரும் தனிப்பட்ட முறையில் இது வரை எனக்கு எழுதவில்லை. அதைப்பற்றி விசாரிக்கவும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** தற்போது திட்ட வேலைகளுக்கு சிமெண்ட் பற்றாக்குறையாக அங்கங்கே சினிமா தியேட்டர்கள் கட்டுவதற்கு சிமெண்ட் வழங்கப்படுவதை நிறுத்த . முன்வருவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அரசாங்கம் அதுமாதிரி வேறு பிரித்து ஒதுக்காமல் இருக்க முடியாது. அப்படி ஒன்றும் ஆலோசனையில் இல்லை.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்டுமெண்டு டைரக்டரும், கலெக்டரும் இன்னாருக்கு தான், ஸ்டாக்கிஸ்டு லைசென்சு கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்தாலும் சிமிண்டு

மார்க்கெட்டிங் கம்பெனியார் அதை ஏற்றுக்கொள்வது இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? இவர்களது சிபார்சை அவர்கள் ஏற்றுக்கொள்ள ஏதாவது வழிசெய்யப்படுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** அதுபோன்ற புகார் என்னுடைய பார்வைக்கு வரவில்லை. ஏதாவது இருந்தால் எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். பி. முத்து கருப்பணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, சிமெண்ட் விநியோக முறையானது தாசில்தாரிடம் இருப்பது நல்லது தான் என்றாலும் விவசாய காரியங்களுக்குச் சரியாகக் கொடுப்பது இல்லை. ஒரு தாலூகாவுக்கு வந்த இரண்டு மூன்று மாதங்கள் ஒழுங்காக நடக்கிறார். அப்புறம் என்ன காரணத்தினால் மாறிவிடுகிறார் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிந்து தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் அங்கத்தினர் சொல்வது போல தாசில்தார்கள் முறையாக விநியோகம் செய்யத்தான் முயற்சி எடுக்கிறார்கள். அப்புறம் பலவகையில் சிபார்சுகள் வந்து மோதுகிறபோது முறை தவறக்கூடும். சட்டசபை அங்கத்தினர்கள் மிகவும் ஜாக்கிரதையாகவும், பொறுப்புடனும் நடந்து கொண்டால் இதைத் தவிர்க்கலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** சிமெண்ட் கள்ளக் கடத்தல் சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை? தண்டனை அளிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை? விடுதலை செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

**கனம் திரு. வெ. ராமையா:** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** சிலர் வீடு கட்டுவதற்கு 50 டன் சிமெண்ட் வேண்டுமென்று அப்ளிகேஷன் போடுகிறார்கள். இது வருவதற்குள் பக்கத்தில் வாங்கியோ என்னமோ கட்டிவிடுகிறார்கள். பிறகு பர்மிட் வருகிறது. அதைக் கள்ளமார்க்கெட்டில் விற்கிறார்கள். இதைத் தவிர்க்க ஸி.ஐ.டி. மூலமாகவாவது பர்மிட் வழங்கும்போது அந்த அலாட்மெண்டைக்கொண்டு உண்மையாகவே கட்டிடம் கட்டப் போகிறார்களா என்பதை விசாரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் அங்கத்தினர் சொல்வது போல எந்த ஒரு இடத்திலாவது இதுமாதிரி நடந்திருப்பதாக என்னுடைய கவனத்திற்கு அங்கத்தினர் கொண்டு வந்தால் இப்படி பொதுவாக உத்தரவு போடவே நான் தயாராய் இருக்கிறேன்.

**திரு. அ. துரையரசன்:** தலைவர் அவர்களே, கள்ளக் கடத்தல் சம்பந்தமாகக் குறிப்பிட்டு அனுப்பும்படி கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் கடந்த ஆண்டு 1963 ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி 135 மூட்டைகள் கள்ளத்தனமாக அனுப்பப்படுவதை பிடித்து எழுதி அனுப்பியிருக்கிறேன். அதுபற்றி எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?





**கனம் திரு. வெ. ராமையா:** அதுபற்றி எனக்கு எழுதி அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** அவசர கால நெருக்கடியை உத்தேசித்து சிமெண்ட் ராணுவத்திற்கு அனுப்பப்பட்டதென்றும், அவ்வாறு அனுப்பப்பட்டதே மிஞ்சி இருப்பதாகவும் சொல்லப்படுகிறதே, அதன்காரணமாக சிமெண்ட் கண்டிரோலை எடுக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் அங்கத்தினரிடம் இருக்கும் விவரம் என்னிடம் இல்லை.

**திரு. கோ. சி. மணி:** சிமெண்ட் கோட்டா வழங்கப்பட்டால் ரயில் மூலமாகத்தான் எடுத்துச் செல்லப்படவேண்டுமென்ற கட்டுப்பாடு உண்டா? அல்லது லாரி மூலமாக எடுத்தும் செல்லலாமா?

**கனம் திரு. வெ. ராமையா:** அவ்வித கட்டுப்பாடு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ரயில் இணைப்பு இல்லாத பகுதிகளில் கூட ஸ்டாக்கிஸ்டு இருக்கலாம், பொதுமக்கள் இருக்கலாம். ஆகவே ரயில் மூலம் தான் கொண்டுபோகவேண்டும் என்பது இல்லையென்று நினைக்கிறேன். அப்படி இதில் ஏதாவது சங்கடம் இருக்கும் பட்சத்தில் எழுதி அனுப்பினால் கவனிக்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தனி நபர்கள் சிமிண்டு வேண்டுமென்று கேட்கிறபோது பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் யாருக்கு முதல் சலுகை அளிக்க வேண்டுமென்று சர்க்கார் தாக்கீது அனுப்பியிருக்கிறார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** அத்தியாவசியமான பல திட்ட வேலைகள் இருக்கின்றன. விவசாய வேலை, பம்பு செட்டு வேலை இப்படி இருக்கிறது. ஆகவே ஒரு பிரையாரிடி லிஸ்டு தயாரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Selection of Text-books*

* 142 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state the circumstances under which the Government directed the Collector of Tiruchirappalli to select Text-books for some of the standards without reference to the standing committees of the Development Councils of the district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have issued orders to all Collectors except the Collectors of Madras and Kanyakumari districts that in cases where the Standing Committee on Education of the District Development Council, is unable to arrive at a unanimous or majority decision in time, the Collector may select text books and the decision of the Collector on the issues shall be final. The Collector of Tiruchirappalli has acted accordingly.

[4th March 1964

**திரு. நு. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உள்ள எஜுகேஷன் கமிட்டியில் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் வந்ததாகத் தெரியவில்லை. ஒரு குறிப்பிட்ட புத்தக கம்பெனியாருக்கு சலுகை கொடுப்பதற்காக கலெக்டரின் பர்சனல் அசிஸ்டெண்டு இப்படியான ஒரு நிலைமையை உண்டாக்கிவிட்டார் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கூறுவது சரியல்ல.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, பொதுவாக உத்தரவு போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்களுக்கு மட்டும் நியமனக் குழுவைக் கலக்காமல் நியமனம் செய்வதற்கு உரிமை கொடுக்கக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் பாட புத்தகம் சம்பந்தமான விவாதம் வந்தது. ஆனால் முடிவு ஒன்றும் செய்யவில்லை. ஆகவே தான் இவர்கள் அதை எடுத்துக்கொண்டு நிர்ணயித்தார்கள்.

**திரு. ம. கமலநாதன் :** 1962-63-ஆம் ஆண்டு புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பஞ்சாயத்து யூனியன் கல்விக் குழுவுக்கு இருந்தது. சென்ற ஆண்டு அதை மாவட்ட அபிவிருத்தி மன்ற நிலைக்கு மாற்றப்பட்டது. இதில் உள்ள சங்கடம் என்னவென்றால் சிறிய சிறிய புத்தகப் பதிப்பாளர்களுடைய புத்தகம் நிராகரிக்கப் படுகிறது. அதே சமயம் பெரிய புத்தக பிரசுரகர்த்தாக்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்கள் புத்தகங்களை தேர்ந்தெடுக்கும்படி செய்கிறார்கள். இப்படி சிறிய பதிப்பாளர்கள் பாதிக்கப் படாமல் இருக்க பாதுகாப்பு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புத்தகம் நிர்ணயிக்கிற உரிமை பஞ்சாயத்து யூனியனிடம் இருந்தபோது ஒரு பஞ்சாயத்து யூனியன் எல்லையில் உள்ள புத்தகம் இன்னொரு பஞ்சாயத்து யூனியன் எல்லையில் இல்லாமல் இருந்தது. இதில் புத்தகப் பதிப்பாளரின் நலனை மட்டும் கருதுவதற்கு இல்லை. புத்தகத்தின் தரம் தான் முக்கியமானது. அந்த அடிப்படையில் தான் மாவட்ட மன்ற அளவிற்கு மாற்றப்பட்டது. இப்போது ஏற்பட்ட அனுபவத்தில் அதையும் மாற்றி ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கவேண்டுமென்பது சர்க்காரின் யோசனை.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் நிகழ்ந்த சம்பவத்தைப்பற்றி நான் கூறுவது சரியல்ல என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களே பத்திரிகைகளில் இந்த நடவடிக்கையைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்தக் கட்சியார் என்ன கூறினாலும் இருக்கிற நிலைமையை அரசாங்கத்தின் சார்பாக நான் கூறுகிறேன். பத்திரிகையில் என்ன அறிக்கை வெளியிட்டார்கள் என்பது எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதை மறுத்தது, குறிப்பிட்ட ஒரு பதிப்பாளருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக கலெக்டர் இந்த மாதிரிச் செய்தார் என்பதைத்தான்.



4th March 1964]

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மாவட்ட ரீதியாக ஒரே புத்தகம் இருக்கட்டும் என்று தெரிவித்தார்கள். ஆனால் என்னுடைய மாவட்டத்தில் நான்-ஸ்டாண்டிங் கமிட்டி தலைவராக இருந்தபோது குறிப்பிட்டு தேர்ந்தெடுத்த சில புத்தகங்களை அமல் படுத்தாத வகையில் சில யூனியன்கள் தடுத்தன. அதைப்பற்றிக் கலெக்டரைக் கேட்டதற்குச் சரியான பதில் இல்லை. இது பற்றி விவரத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. அதை வைத்துக் கொண்டுதான் சொல்கிறேன். இந்தத் திட்டமும் சரியாக இராது என்று. ஆகவே, இதையும் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** டெக்ஸ்ட் புக் கமிட்டி அப்ரூவல் கொடுக்கும்போதே தரமான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து. அப்ரூவல் கொடுத்தால் இந்தத் தொல்லை இராது. சுலபமாக எல்லோருக்கும் அப்ரூவ்டு பை டெக்ஸ்ட் புக் கமிட்டி என்று கொடுப்பதால்தான் இந்த நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இது பற்றி ஆலோசிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 'அப்ரூவல்' என்பது ஒரு விஷயம். செலக்ஷன் என்பது மற்றொரு விஷயம். புத்தகங்களை அங்கிகரிக்கிறவர்கள் அவ்வளவு கண்டிப்பாக இருக்க முடியாது. ஏதேனும் ஆட்சேபம் இருந்தால்தான் தடுக்க வேண்டுமே தவிர மற்றபடி புத்தகங்களை அங்கீகரித்து விடுகிறோம். எது நல்ல புத்தகம், பொருத்தமான புத்தகம் என்று பார்த்துத் தேர்ந்தெடுப்பது வேறு விஷயம்.

**புலவர் கா. கோவிந்தன் :** அமைச்சர் அவர்கள் வேறு திட்டம் வேண்டுமென்று கூறினார்கள். கோடை விடுமுறை முடிந்து இன்னும் 3, 4 மாதங்களில் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டுவிடும். அமைச்சர் அவர்கள் புதிய முடிவை எடுப்பதில் நீண்ட காலம் எடுத்துக் கொள்ளாமல் குறிப்பிட்ட காலத்தில் அந்தத் திட்டத்தை உருவாக்கி மாணவர்களுக்கு உரிய காலத்தில் புத்தகம் கிடைக்கச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புலவர் அவர்கள் கூறுகின்ற நல்ல யோசனையைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதில் கவனம் செலுத்தி புத்தகங்கள் தாமதம் இல்லாமல் பள்ளிக்கூடங்கள் திறக்கும் சமயத்திற்குள்ளாக வெளிவரவேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

[4th March 1964

**திரு. எஸ். மணி :** தலைவர் அவர்களே, நிலைக்குழு உறுப்பினர்கள் திருச்சி மாவட்டத்தில் பேசுகிறபோது கலெக்டர் பி.ஏ.-வுக்கும் கமிட்டி உறுப்பினர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தகராறு என்றால் என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. அபிப்பிராயபேதம் இருக்கலாம்.

**கனம் சபாநாயகர் :** நாம் தகராறு பண்ணுவது மாதிரி . . . (சிரிப்பு).

**திரு. எம். எஸ். மணி :** திருச்சி மாவட்டத்தில் நிலைக்குழுவில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் தாங்கள் சொன்ன புத்தகத்தை வைக்காத காரணத்தால் டி.டி.சி. கூட்டத்தைப் பகிஷ்காரம் செய்தனர் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகின்ற அளவுக்கு எனக்குத் தகவல் இல்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** மாவட்டந்தோறும் பல்வேறு புத்தகங்களுக்கு அங்கீகாரம் கொடுப்பதைவிட, ஒரே மாதிரியான புத்தகத்தை மாநிலம் முழுமைக்கு வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாநிலம் பூராவுக்கும் ஒரே மாதிரிப் புத்தகத்தை வைப்பது அவ்வளவு சரியாக இராது.

**திரு. சா. கணேசன் :** மாநிலம் முழுவதற்கும், பொதுவான பாடங்கள் சம்பந்தப்பட்டவரை ஒரே மாதிரியான புத்தகத்தை அரசாங்கம் தயாரித்து அதை வெளியிடுகிறவர்கள் இன்ன டைப்பில், இன்ன காகிதத்தில், இன்ன விலையில் இருக்கவேண்டுமென்று நிர்ணயித்து யார் வேண்டுமானாலும் வெளியிடலாம் என்று வரையறை செய்துவிட்டால் அதன் மூலம் புத்தகம் கிடைக்கவில்லை என்ற சிரமம் இல்லாமல், பாடமானதும் ஒரே சீராக அமையும் என்பதைக் கவனித்து அதற்கு வழிவகைகளைச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றிய எல்லா விஷயங்களும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அந்தந்த ஜில்லாக்களிலே கல்வி அதிகாரிகளைத் தலைவராகவும், தேச பக்தியும், திறமையும் உள்ள தலைமையாசிரியர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட கமிட்டியை நியமித்து இந்தப் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய யோசனை அரசாங்கத்திடம் இல்லை.

**திரு. கே. பொன்னையன் :** சில நடுத்தரப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிஸ் வைத்து ஆசிரியர்களே நல்ல புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து விற்கிறார்கள். அவர்களுக்கு கமிஷனும் கிடைக்கிறது. ஆகவே, கோவாப்பரேட்டிவ் சொஸைடிகளை இந்த விஷயத்தில் உற்சாகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?



4th March 1964]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கோவாப்பரேட்டிவ் சொஸைடிகளைப் பயன்படுத்திக் கொள்வது ரொம்ப நல்லதுதான். ஆனால் ஆசிரியர்கள் அந்தப் புத்தகங்களை விற்பதில் அக்கறை எடுத்துக் கொள்வது அவ்வளவு நல்லதல்ல.

*Over-bridges at Railway level-crossings*

* 143 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the approval of the State Government for the construction of over-bridges across the three Railway level-crossings in the Madurai City has since been withdrawn; and

(*b*) if so why?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Consideration of the following 4 schemes for the construction of overbridges at the existing level crossings within Madurai Municipal limits has been deferred along with ten other similar schemes within Municipal limits outside the City of Madras, in view of the National Emergency :—

(1) At mile 300/2 of N.H. 7 on Tirupparankundram road near Subramaniapuram.

(2) At mile 300/7 of N.H. 7 on Tiruparankundram road near Meenakshi Mills.

(3) At mile 296/8 of N.H. 7 on Thattaneri road in Madurai City.

(4) At Madurai-Theni road near Madurai Mills.

* 144 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Southern Railways have requested the Madras Government to permit them to construct bridges over certain level-crossings in this State;

(*b*) if so the details thereof; and

(*c*) what steps the Government have taken in this regard?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) & (*c*) : Do not arise.

**திரு. வை. சங்கரன் :** மதுரை சுப்பிரமணியபுரத்தில் உள்ள லெவல் கிராசிங்கில் கவர்னர்கள், மந்திரிகள் வந்தால்கூட 20 நிமிஷம், 30 நிமிஷம் நிற்கவேண்டியிருக்கிறது. பொது மக்களும் நிமிஷம், 30 நிமிஷம் நிற்கவேண்டியிருக்கிறது. பொது மக்களும் ரயிலுக்கு, பஸ்ஸுக்குப் போகவேண்டுமென்றால் இதனால் கால

தாமதமும் தடையும் உண்டாகிறது. இது மிகவும் அத்தியாவசியமாக இருக்கிற காரணத்தால் உடனடியாக இந்த வேலையைத் தொடங்க சர்க்கார் முன் வருமா?

**கனம் திரு. வெ. ராமையா:** இது ரொம்ப அத்தியாவசியம் என்று கருதித்தான் அரசாங்கம் இந்த மேம்பாலத்தை உடனடியாக நிறைவேற்ற திட்டமிட்டது. ஆனால் எமர்ஜன்சியின் காரணமாக தடைப்பட்டுவிட்டது. கொஞ்சம் நிலைமை சாதகமானவுடன் இதற்குப் பிரையாரிடி கொடுத்து எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** இந்த மூன்று முக்கிய பாலங்களுக்கும், ரயில்வே இலாகாவினர் தாங்கள் பங்கெடுத்துக் கொள்வதாகவும், முனிசிபாலிடி பங்கு தர தயாராக இருப்பதாகவும், பொது மக்கள் தயாராகயிருப்பதாகவும் அந்தப் பகுதியில் பஸ் விடுகிற டி.வி.எஸ். கம்பெனி தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அவை எல்லா இடங்களையும் இணைக்கக்கூடிய பாலங்களாக இருப்பதால் எமர்ஜன்சியைக் காரணமாகக் காட்டாமல் உடனடியாக எடுத்து நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் அங்கத்தினர் அவர்கள் அந்தப் பாலத்தைக் கட்டுவதில் பங்கு தர எல்லோரும் தயாராக இருக்கிறார்கள் என்று கூறினார்கள். அதே போன்று அரசாங்கமும் தயாராக இருக்கிறது. நான் முன்பே சொன்னதுபோல் சற்று சாதகமாக நிலைமை ஏற்பட்டவுடன் அதற்குப் பிரையாரிடி கொடுத்து எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கோயம்புத்தூரில் அவனாசி ரோட்டில் இருக்கக்கூடிய லெவெல் கிராசிங்கில் அதிகமாக வண்டிகள் வரும் காரணத்தால் அதில் ஒரு 'ஓவர்பிரிட்ஜ்' கட்ட அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. வெ. ராமையா:** அங்கும் ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று திட்டம் உருவாகிக் கொண்டிருந்த சமயத்தில் எமர்ஜன்சி வந்துவிட்டது. நாட்டிலே ஏற்பட்ட நெருக்கடியோடு நிதி நிலைமையிலும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறபடியால் சில திட்டங்களை ஒத்தி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நல்ல சூழ்நிலை ஏற்படும்போது அந்தத் திட்டங்களை அரசாங்கம் ஏற்று நிறைவேற்றும்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** வேலைக்கு போகிறவர்கள், தொழிலாளர்கள் இவர்கள் எல்லோரும், கேட் மூடி விட்டால் 3½ மணி நேரம் வரை காத்து நிற்க வேண்டியிருக்கிறது. இதை அமைச்சர் அவர்களே நேரில் பார்த்திருக்கிறார்கள். ஒரு சமயத்தில் 600 வண்டிகள் வரை நிற்க வேண்டியிருக்கின்றன.

MR. SPEAKER: The hon. Member is repeating the same question. He can ask any other question.



**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** பணக்காரர்கள் பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டி நடக்கமுடியாமல் செய்துவிடுகிறார்கள். ஆகவே எமர்ஜன்ஸி நிலையைக் கருதி இவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** கேட்டுக்கொள்கிறேன் என்றுதான் சொல்கிறார்கள்.

**திரு. வை. சங்கரன்:** டெபர்ட் வொர்க்ஸை, எஸன்ஷியல் வொர்க்ஸ்ஸாக மாற்றியமைத்து செய்ய முடியுமா?

(பதில் இல்லை.)

**திரு. எம். எஸ். மணி:** திருச்சி நகரத்தில் . . .

**கனம் சபாநாயகர்:** எங்கள் ஊர் பாலத்தையும், திருநெல்வேலியில் உள்ள பாலத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

**திரு. எம். எஸ். மணி:** திருச்சியில் மூன்று ரெயில்வே கேட்கள் இருக்கின்றன. அதன்மீது பாலம் கட்டாவிட்டாலும் பரவாயில்லை. அதை ¼ மணி நேரத்திற்கு முன்னால் சாத்தி விடுகிறார்கள். அதனால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே ரயில் வருவதற்கு இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்கு முன்னால் சாத்துமாறு மத்திய அரசாங்கத்தை நம் அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** இப்போதுள்ள முறைப்படி கேட்கள் அதிகபட்சம் 10 நிமிடங்களுக்கு மேல் சாத்தியிருக்கக் கூடாது என்பதுதான். கேட் கீப்பர் ஏதாவது தவறு செய்தால் எனக்கோ அல்லது ரயில்வே இலாகாவிற்கோ எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** தேச நெருக்கடியை விட ரெயில்வே கிராசிங் நெருக்கடி மிகவும் அதிகமாக இருக்கிறது. பலமுறை விண்ணப்பித்தும்கூட இன்னும் எவ்வித செயல்முறையும் உருவாக்கப்பட்டதாக தெரியவில்லை. ஆகவே கூடிய சீக்கிரம் அதுபற்றி கவனித்து அதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா? குறிப்பாக ஈரோட்டில் மிகவும் நெருக்கடியாக இருக்கிறது.

(பதில் இல்லை.)

**திரு. வி. எஸ். எஸ். மணி:** மதுரை மீனாட்சி மில் கேட்டிலும், சுப்பிரமணியபுரம் கேட்டிலும் மேம்பாலம் கட்டக் கூடாது என்று ஏதாவது ஆட்சேபனை மனு வந்திருக்கிறதா? பாதிக்கக்கூடிய மில் அதிபர்கள், கட்டட முதலாளிகள் ஏதாவது ஆட்சேபனை தெரிவித்திருக்கிறார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** அதுபோல் ஒன்றும் ஆட்சேபனை கிடையாது.

[4th March 1964

**திரு. சா. கணேசன் :** இந்தமாதிரி மேம்பாலம் கட்டுகிறபோது மத்திய அரசாங்கம் ரெயில்வே சார்பாகவோ அல்லது வேறு முறையிலோ எவ்வளவு தொகை நமக்கு இதற்காக உதவி தருகிறது? என்ன விகிதாசாரத்திலே என்றும் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** மேம்பால வேலைகளை எடுத்துக் கொள்கிறபோது ரெயில்வே இலாகாவைப் பொறுத்தவரையில் லைன் மத்தியில் கட்டும் பாலத்தின் முழுச் செலவையும் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். பக்கத்திலுள்ள அப்ரோச் ரோட்களை மாநில அரசாங்கம் போட்டுக் கொள்ளவேண்டும்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** ரெயில்வே லைன் போடும்போது எவ்வளவு அவசரமாக லைன் போடுவதற்காக நிலத்தை அக்வயர் செய்கிறார்களோ அந்த அளவிற்கு சீக்கிரம் பாலம் அமைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன? கேட்டை அடைக்கும் போது 1½ மணி நேரம் வரை மக்கள் இரண்டு பக்கங்களிலும் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே ஏற்கனவே காட்டப் பட்ட அவசரத்தை மேலும் காட்டுவார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** இரண்டு சம்பவங்களை சேர்த்து சொல்கிறார்கள் லைன் போடவேண்டுமென்று அரசாங்கம் முடிவு எடுத்ததற்குப் பிறகு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் எவ்வளவு துரித மாகச் செய்யமுடியுமோ அதைச் செய்கிறோம். ஆகவே பூமி ஆர்ஜிதம் சய்வது என்பது பிரச்னை அல்ல. அதைச் செய்து விட்டு திட்டம் உருவாக்கி நடத்த வேண்டிவந்தது. ஆனால் இடையில் நெருக்கடி நிலை ஏற்பட்டதால் அதற்கு ஹை பிரயாரிட்டி கொடுக்க முடியாமல் தாமதப்படுத்தி செய்கிறார்கள். ஆகவே நில ஆர்ஜிதப் பிரச்னை இதில் எழவில்லை.

**திரு. ம. கமலநாதன்:** கிராஸிங்கில் மேம்பாலம் கட்டுவதைவிட பக்கத்தில் தண்ணீர் போக சில அண்டர் பிரிட்ஜஸ். இருக்கின்றன. அதை பராமரிப்பதற்கு ஹைவேஸ்க்கு எழுதினால் அவர்கள் ரெயில்வே போர்டிடம் கேட்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இவற்றை பராமரித்தால் போக்குவரத்து நெருக்கடியை ஓரளவிற்காவது சமாளிக்கலாம் என்ற அபிப்பிராயம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா :** போக்குவரத்திற்கு பயன்படும் கீழ்மட்ட நிலையில் உள்ள பாலங்கள், அதற்கு வேண்டிய மராமத்து எல்லாம் ரெயில்வே இலாகாவும் நம் ஹைவேஸ் இலாகாவும் சேர்ந்து செய்கிறார்கள். அதில் ஏதாவது கஷ்டம் இருக்குமானால் எழுதி அனுப்பும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தேசீய நெருக்கடி காரணமாக பாலங்கள் கட்டுவதை நிறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பாலங்களைக் கட்டாத காரணத்தினால் தேசீய எக்கனமிக் வேஸ்ட் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் பரிந்து இந்த 12 பாலங்களையும் ஒரேயடியாக நிறுத்தி வைப்ப[illegible]



4th March 1964]

தவிர்த்து கோவை-அவினாசி ரோட்டிலும், மதுரை சுப்ரமணிய புரத்திலும் பாலங்களை கட்டுவதோடு ஆண்டு ஒன்றுக்கு ஒரு பாலம் என்றாவது கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படுமா?

**கனம் திரு. வெ. ராமையா :** தேசீய நெருக்கடி காரணமாக எல்லாப் பாலங்களையும் கட்டும் வேலையை நிறுத்தி விடவில்லை. ஹைகோர்ட் பக்கத்தில் போய் பார்த்தால் தெரியும், அங்கு வேலை நடப்பதை. மார்மலாங் பாலத்திலும் வேலை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. தேவையான பாலங்கள் அத்தனையும் மொத்தமாக கட்ட விருப்பம் இருந்தாலும் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் கட்ட முடியாமல் சில அவசரமான பாலங்களை இந்த ஆண்டும் பின்னர் நிதிநிலையைப் பொறுத்தும் நெருக்கடி நிலையைப் பொறுத்தும் மற்றவை எடுத்து கட்டப்படும். சென்னை ராஜ்யத்தில் மொத்தம் ஹைவேஸில் 22 மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு சென்னை நகரில் இரண்டு மூன்று பாலங்களில் வேலை நடந்து கொண்டிருப்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும்.

**திரு. இரா. நாராயணன்:** ரெயில்வே கிராஸிங் அமைக்கும் போது ரோட்டிலிருந்து கிராஸ் செய்ய மாட்டு வண்டிகள்கூட போக அனுமதிக்கப்படமாட்டாது என்று சொல்கிறார்கள். தென் பிராந்திய ரெயில்வேக்கு எழுதினோம். அவர்கள் அதற்கு பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் கேட் அமைக்க பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் அங்கு அதற்குத் தக்க நிதி வசதி இல்லை. ஆகவே அரசாங்கமே இந்த தொகையை ஏற்று பாலம் கட்டாது சாதாரணமாக மாட்டு வண்டி போக அனுமதிக்கப்படுமா?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த உப கேள்வி இதில் வர வில்லை. அங்கத்தினர் அவர்களின் கஷ்டத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இடங்களைக் குறிப்பிட்டு எனக்கு எழுதி அனுப்பினால் ரெயில்வே இலாகாவிற்கு எழுதி என்ன நிவாரணம் தேட வேண்டுமோ அதைத் தேட முயற்சிக்கப்படும்.

**திரு. கோ. சி. மணி :** தமிழ் நாட்டில் ஹைவேஸ் டிப்பார்ட் மெண்டார் 22 பாலங்கள் கட்டவேண்டுமென்று தெரிவித்திருப்ப தாக கூறினார்கள். அதில் கும்பகோணம் லெவல் கிராஸிங் கேட்டும், மாயவரம் லெவல் கிராஸிங் கேட்டும் அதில் இணைக்கப்பட்டிருக் கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா:** அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** மதுரையில் சுப்பிரமணிய புரம் பாலம் கட்ட திட்டம் போடப்பட்டதே, அதற்கு என்ன செலவாகும் என்ற கணக்கு இருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த எஸ்டிமேட் பிரகாரம் ரெயில்வே இலாகா செலவு செய்யவேண்டிய தொகை என்னிடம் இல்லை. நம் அரசாங்கம் செலவு செய்யவேண்டியது 10 லட்சம்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: தேசிய நெருக்கடி எப்போது தீரும் என்று தெரியாமல் இருக்கிறது. தேசிய நெருக்கடி தீர்ந்த பின்னுலாவது வேலைகளை எடுத்துக்கொள்ளும்போது, பிரையாரிட்டி கொடுக்கும் முறையில் மதுரையில் சுப்ரமணியபுரத்தில் கட்ட வேண்டிய மேம்பால வேலையை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: தேசிய நெருக்கடி இருக்கிறது என்று சொன்னாலும், நாம் சில மேம்பால வேலைகளை எடுத்துக் கொண்டு நடத்திக் கொண்டுதான் வருகிறோம். தேசிய நெருக்கடி தீர்ந்த பின்னால் வேலைகளை எடுத்துக்கொள்ளும்போது சுப்பிரமணியபுரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம்.

### கூவம் நதியில் ஆஸ்பத்திரிக் கழிவு நீர்

*145 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மத்திய மருத்துவமனையின் (Government General Hospital) பின்புறம் ஓடும் கூவம் ஆற்றில் அம் மருத்துவமனையின் கழிவுப் பொருள்கள் கலப்பதால் அவ்வயழியாக மின் வண்டியில் செல்பவர்கள் துர்நாற்றம் தாங்கமுடியாது அவதிப்படுவது அரசாங்கம் அறியுமா?

(இ) அவ்வாற்றின் நீர், சென்னை கோட்டையின் மேற்குப்புற வாசலின் அருகில் (near St. George Gate on the western side of Fort St. George) ஓடும் அகழியிலும் கலப்பதால் அப்பாதை வழியே வருவதற்கு இயலாத வகையில் துர்நாற்றம் வீசுவதை அரசாங்கம் அறியுமா?

(உ) இதனை உடனடியாக நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) ஜெனரல் ஆஸ்பத்திரியின் சாக்கடை நீர் ஒரு தொட்டியில் சேகரிக்கப்பட்டு, இரட்டைக் குழாய் மூலம், ஆஸ்பத்திரியின் வாயிலில் உள்ள சிலைக்கு அருகிலிருக்கும் கார்ப்பொரேஷன் மெயினில் பம்பு செய்து விடப்படுகிறது. மழைநீர் மட்டுமே கூவம் நதியில் விடப்படுகிறது. இந்த இடத்தில் துர்நாற்றம் வீச இது காரணமாக இருக்க முடியாது.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. முனு ஆதி: கூவம் ஆற்றில் வீசுகின்ற துர்நாற்றத்தை மாற்றுவதற்கு அரசினர் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? கூவம் ஆற்றிலுள்ள தண்ணீரை கடலில் கொண்டு விடுவதற்கு இப்போது இருக்கின்ற தடைகளை நீக்குவதற்கு, சர்க்கார் என்ன முயற்சி எடுத்திருக்கிறது?



கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கூவம் ஆற்றில் துர்நாற்றம் அடிப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இந்த ஆற்றில் நீண்ட தூரத்திலுள்ள தண்ணீர் எல்லாம் வந்து தேங்கி கிடக்கிறது. அதோடு அந்தத் தண்ணீர் உடனடியாக கடலில் போய் சேருவதற்கு வழியில்லாத காரணத்தினால் துர்நாற்றம் அடிக்கிறது. கடலில் கொண்டு போய் சேர்ப்பதற்கு முக்கியமாக என்னென்ன திட்டங்களை போட வேண்டுமோ அவைகளை என்ஜினியர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக இந்த ஆற்றிலுள்ள மண்ணை எடுப்பதற்கு டிரஜ்ஜர் வேண்டும். அதை இந்த நெருக்கடி காலத்தில் அயல்நாட்டிலிருந்து தருவிப்பது கஷ்டமாக இருக்கிறது. இதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். இதைப்பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

திரு. கே. ஆர். சம்பந்தம்: இந்தக் கூவம் நதியின் தண்ணீர் சமுத்திரத்தில் சேர முடியாமல், அடிக்கடி மண் வந்து தூர்ந்து விடுகிறது. அந்த மண்ணை அடிக்கடி எடுத்து விட்டால் இந்த நாற்றம் இராது. ஆகவே, இதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார், மண்ணை எடுப்பதற்குத்தான் இந்த டிரெட்ஜர் தேவை என்று சொன்னேன்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: கனம் தலைவர் அவர்களே, கூவம் நதியின் துர்நாற்றத்தின் காரணமாக நமது அமைச்சர் திரு. மன்றாடியார் அவர்கள்கூட மிகவும் அவதிப்படுகிறார்கள் என்று அறிகிறேன். சில நேரங்களில் சாப்பிடும் போது குமட்டல்கூட வருகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த நிலையை மாற்றுவதற்கு சர்க்கார் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திரு. கே. ஆர். சம்பந்தம்: இப்போதுள்ள 'எக்கானமி டிரைவ்'-இன் காரணமாக இந்த டிரெட்ஜர் இயந்திரம் வருவது தாமதப்படலாம். ஆகவே கூவம் ஆற்றிலுள்ள மண்ணை எடுப்பதற்கு ஆட்களை வைத்துக்கொண்டாவது வேலையை நடத்த முடியாதா? அவ்விதம் நடத்தினால், ஓரளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதற்கும் வழி ஏற்படும். இந்த வேலையையும் சுலபமாக செய்யமுடியும் என்று நம்புகிறேன். ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆட்களைக் கொண்டு இந்த வேலையை நடத்த முடியாது. நான் முன்னால் சொன்ன இந்த டிரெட்ஜர் கூடிய சீக்கிரம் வந்துவிடும் என்று நினைக்கிறேன். இந்த இயந்திரத்தின் மூலம் மண்ணை எடுத்தால்தான் இந்த ஆற்றிலுள்ள தண்ணீர் சமுத்திரத்திற்கு போக முடியும்.

[4th March 1964

## மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், ஆலங்குடி தாலுகா

* 146 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆலங்குடியில் இருக்கவேண்டிய தாலுகா மாஜிஸ்டிரேட், சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் தலைமை இடமான ஆலங்குடியில் இல்லாது புதுகோட்டையிலே உள்ளதால் அவைகளை ஆலங்குடிக்கு மாற்றிக் கொடுக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No, Sir.

திரு. பி. முருகையன் : இந்த மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் இதற்கு முன்பு பரமக்குடியிலும், ஆலங்குடியிலும் இருந்தது. இப்போது அதை மாற்றி புதுக்கோட்டையில் வைத்திருக்கிறார்கள். தாலுகா தலைநகரமாக இருக்கின்ற ஆலங்குடியில் இப்போது கோர்ட் இல்லாததால், சுற்றுவட்டாரத்திலுள்ள மக்கள் உடனடியாக நீதிமன்றத்திற்கு வந்து தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கோர்ட்டுகளை ஆலங்குடியில் அமைப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது அப்படி உத்தேசம் எதுவுமில்லை. இவ்விதம் மாற்றி அமைக்க வேண்டும் என்று ஏதாவது ரிப்ரசென்டேஷன் அனுப்பினால் அதை ஹைகோர்ட்டுக்கு அனுப்பி அவர்களுடைய உசிதம்போல் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

## *New Sub-Registry Offices.*

* 147 Q.—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Information be pleased to state—

(a) whether Sub-Registry Offices were opened newly during 1963; and

(b) if so, where?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) & (இ) 1—4—1963-லிருந்து 1963-ம் காலண்டர் ஆண்டில் இம்மாநிலத்தில் அடியிற்கண்ட சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகங்கள் திறக்கப்பட்டன :—

1. மதகுப்பட்டி (புதுக்கோட்டை ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

2. உடங்குடி (பாளையங்கோட்டை ரிஜிஸ்ட்ரேஷன் மவாட்டம்ம்).

3. குள்ளஞ்சாவடி (சிதம்பரம் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

4. பரூர் (சேலம் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

5. சத்தியமங்கலம் (கடலூர் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).



4th March 1964]

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், நடப்பு ஆண்டில் புதிதாக ஏதாவது சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறக்கவேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதில் மதுரை மாவட்டத்தில் மலைப்பிரதேசங்களில் ஏதாவது ரெஜிஸ்டிரார் ஆபீஸ் திறப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : புதிதாக சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் நடப்பு ஆண்டிலும் திறக்கவேண்டும் என்ற உத்தேசமிருக்கிறது. எந்தெந்த மாவட்டத்தில் என்று இப்போது சொல்வதற்கில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஸார், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் ஏதாவது சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போது என்னிடம் இருக்கின்ற தகவல்கள் 1963-ம் ஆண்டில் எத்தனை ஆபீஸ்கள் திறக்கப்பட்டன என்பதுபற்றி. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற விபரங்களை அறிந்து கொள்ள தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, புதிதாக சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறக்கப்போவதாக அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். அதேசமயத்தில் இப்போது சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ் இருக்கின்ற பல பழைய கட்டிடங்கள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. பழைய கட்டிடங்கள் எல்லாம் ஓட்டை ஒடிசல்களான நிலையில் இருக்கின்றன. உதாரணமாக மயிலம் போன்ற இடங்களிலுள்ள ஆபீஸ்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இதை பழுது பார்க்கின்ற வேலையில் சிறிது ஊக்கம் காட்டி, பழைய கட்டிடங்களை எல்லாம் நல்ல முறையில் சீர்படுத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அரசாங்க கட்டிடங்களை எல்லாம் ஆன்டு தோறும் ஒரு ப்ரோகிராம் போட்டு, அதன்படி ரிப்பேர் செய்து வருகிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று ஏதாவது குறிப்பாக இன்னின்ன இடங்களுக்கு உடனடியாக செய்யவேண்டும் என்று எழுதி அனுப்பினால் அதைப் பற்றி கவனிக்கலாம்.

திரு. அ. துரையரசன் : தலைவர் அவர்களே, புதிதாக சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறப்பதற்கு பஞ்சாயத்து மன்றங்களின் ஒப்புதல் பெறவேண்டும் என்றிருக்கிறது. இதன் காரணமாக ஒப்புறுதி கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இலாகாக்கள் மூலமாக புள்ளிவிவரங்களை, தயார் செய்து அதன் மூலமாக புதிதாக ரெஜிஸ்டிரார் ஆபீஸ்களை திறப்பதற்கு உத்தரவு போட முடியுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போதும் இலாகாக்கள் மூலமாக புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆகவே இப்போதுள்ள உத்தரவே போதும் என்று நினைக்கிறேன்.

[4th March 1964

### *Village establishments in South Arcot district*

* 148 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that some of the members of the village establishments in South Arcot district have been thrown out of employment consequent on some of the villages having been taken over for the use of the Neyveli Lignite Corporation; and

(*b*) if so, what are the alternative employments provided for them?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The Neyveli Lignite Corporation has agreed to absorb them in the Corporation staff subject to their eligibility. Instructions have also been issued to Divisional Officers to appoint them in other villages of Cuddalore and Vridhachalam Taluks as and when vacancies arise.

### *Relieving traffic congestion in the City*

* 149 *Q.*—Sri P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether any scheme has been sponsored by the Highways Department to cope up with the traffic problem in the City and the details thereof?

The Hon. Sri V. RAMAIAH : The roads within City limits are under the control of the Corporation of Madras. Hence the Highways and Rural Works Department has no direct Plans or Schemes to cope with the traffic problems in the City. The Highways and Rural Works Department, however, co-operates with the Police to help relieve the traffic difficulties. The implementation of the following proposals will to a certain extent relieve traffic congestion in the City Roads :—

(1) Formation of a ring road to connect the three National Highways.

(2) Formation of an East-Coast Road connecting from near the Oceanic Hotel.

(3) Improvements to road from Harbour to Ennore within City limits also.

(4) Improvements of road Harbour to Avadi via Aminjikarai.

(5) Improvements to G. S. T. Road from Marmalong bridge to St. Thomas Mount.

(6) Bypass for Basin Bridge area.

(7) Improvements to the road from Marmalong bridge to Velacheri and on to Irumbuliyur.

(8) Proposals for widening and strengthening of bridges in all important roads.

(9) Proposals for replacing certain level crossings by over or under bridges.



4th March 1964]

*Item* (3).—The Government have recently sanctioned the work at an estimated cost of Rs. 32 lakhs.

*Item* (5).—The existing Marmalong bridge has been taken up for widening from State Funds, and the foundation work is in progress.

The remaining works will be taken up for execution as and when funds become available.

### *Anti-cobra serum*

* 150 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any scheme to manufacture anti-cobra serum in our State?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : Yes.

*திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டத்தின் பூரண விவரங்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.*

*கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கிண்டி இன்ஸ்டிடியூட்டில் ஆண்டி கோப்ரா ஸீரம் தயாரிக்க கட்டிடத்திற்கு அரசாங்கம் ஸாங்ஷன் செய்திருக்கிறது. அதற்கு வேண்டிய ஸ்டாஃப் கொடுக்க ஸாங்ஷன் ஆகியிருக்கிறது. கட்டிடம் எல்லாம் முடிந்து உற்பத்தி ஆரம்பிப்பதற்கு ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

*கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.*

**(Note.—An asterisk * at the commencement of a speech indicates revison by the Member.)**

## II—CALLING ATTENTION TO DAMAGES TO ROADS AND CULVERTS IN TIRUNELVELI DISTRICT.

Sri M. S. SELVARAJAN : Sir, under Rule 41 of the Assembly Rules I wish to call the attention of the Hon. Minister for Works to a matter of urgent public importance, viz., damages caused to roads and culverts in Tirunelveli district due to heavy rains.

The Hon. Sri V. RAMAIAH : There was cyclonic and widespread rain in the east coast of the State from the 1st December 1963 to 7th December 1963. As a result the roads and the bridges thereon were damaged heavily in the districts of South Arcot and Thanjavur and to a lesser extent in the districts of Ramanathapuram and Tirunelveli.

In the Tirunelveli district, 63 Government roads for a total mileage of about 240 and 107 Panchayat and Panchayat Union Roads for a total mileage of 172 were affected by the rain. The roads were waterlogged and submerged for a few days and consequently the formation of road was weakened and the subgrade was

[Sri V. Ramaiah] [4th March 1964

damaged in certain roads. The surface of the roads was pitted and gullies formed in berms. The side berms were eroded and the embankments scoured. Some of the Panchayat Union roads and Panchayat roads were breached and in some metal surface was washed away.

The Highways and Rural Works Department took immediate action to restore all these roads to traffic within three days, after carrying out necessary urgent repairs except in portion of the Anjugraman Ovari road in mile 12/0 to 18/0. As there was vast water spread extending several furlongs in this road, this road was restored to traffic only on 30th December 1963 when the water subsided.

Two causeways and two culverts on Panchayat and Panchayat Union roads were affected by the heavy rain. Of the two causeways, one was damaged and one of the piers of the other causeway sunk due to scour in the upstream. The sunk causeway has to be reconstructed. Of the two culverts, one collapsed and the other damaged. Necessary action has been taken by the Department to restore the roads to traffic.

It will be seen that action has been taken to carry out necessary and urgent repairs to the affected roads and restore them to traffic within minimum possible time.

## III—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964-65—*cont.*

*** திரு. ஏ. சுவாமிதாஸ் :** மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, 1964-65-வது ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றிய பல கருத்துக்களை கனம் அங்கத்தினர்கள் இந்த அவை முன் வைத்தார்கள். இந்த நிதி நிலை அறிக்கையில் பல நல்ல அம்சங்கள் இருப்பதை நாம் பார்க்கிறோம். அந்த அம்சங்களைக் கொடுத்த முதல் அமைச்சர் அவர்களை நாம் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்லப்போனால் உயர்நிலைப் பள்ளி வரையும் அனைவருக்கும் இலவசக் கல்வி வசதி கொடுத்திருப்பதாகும். அத்துடன் சென்ற ஆண்டு கொடுத்த தொகையை விட அதிகத் தொகையைக் கல்விக்காகவும் ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன உணருகிறோம் என்றால் கல்விக்காகத் தமிழ்நாட்டு அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று அறிகிறோம். ஆனால் அனைவருக்கும் இலவசக் கல்வி என்ற நிலை வரும்போது மானேஜ்மெண்ட்களைப் பாதிக்கக் கூடிய நிலை இருக்கிறது என்பதையும் நாம் உணர வேண்டும். முன்னர் பள்ளி மாணவர்களிடமிருந்து கட்டணத்தை வாங்கி அதோடு அரசாங்கத்திடமிருந்து க்ராண்டையும் பெற்று அவர்கள் பள்ளிகளை நடத்தி வந்தார்கள். இப்போது கட்டணம் பெறும் நிலை மாறுகிறது. கன்னியாகுமரியைப் பொறுத்த அளவில் ப்ரைவேட் மானேஜ்மெண்ட் ஸ்கூல்களைப் பொறுத்த அளவில் திருவாங்கூர் கொச்சியில் இருந்த அந்த முறை அங்கே கையாளப்படுகிறது. அந்த மானேஜ்மெண்ட்டுகள் இப்போது பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்



4th March 1964] *[திரு. ஏ. சுவாமிதாஸ்]*

கின்றன. அதோடுகூட, ஆசிரியர்களுக்குப் பிராவிடண்ட் ஃபண்ட் ஸ்கீம் புகுத்தப்பட்டிருக்கிறது. மானேஜ்மெண்ட்காரர்கள் அதைப்பற்றிக் குறை சொல்லுகிறார்கள். 'எங்களுக்குக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு பிராவிடெண்ட் ஃபண்ட் கொடுக்க முடியவில்லை' என்று சொல்லுகிறார்கள். 'எங்களுக்குக் கொடுக்கும் பர் காபிடா அமௌண்டை அதிகரிக்க வேண்டும்' என்று சொல்லுகிறார்கள். அவர் குறைகளுக்கும் பரிகாரம் காண வேண்டும். ஆசிரியர்களைப் பற்றியும் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு நேரடியாக அரசாங்கம் சம்பளம் கொடுக்கிறது. இந்தத் திட்டத்தை இதர மாவட்டங்களுக்கும் புகுத்தினால் ஆசிரியர்களுடைய குறைபாடுகள் நீங்கும் என்று கருதுகிறேன்.

அதோடு ஹரிஜனங்களுக்குச் சட்ட உதவி அளிக்கும் திட்டத்தையும் இந்த பட்ஜெட்டிலே நாம் காண்கிறோம். ஹரிஜனங்கள் என்று சொல்லும்போது ஹிந்து ஹரிஜனங்கள் மட்டும் ஹரிஜன இலாகாவினால் பயன் அடைகிறார்கள். ஹிந்துக்களாக இருந்தவர்கள் கிருஸ்தவர்களாக மாறி இருந்தால் அந்த பயன் மறுக்கப்படுகிறது. ஹிந்துக்களாக இருந்தாலும், கிருஸ்தவர்களாக இருந்தாலும் பொருளாதாரத் துறையில் அனைவரும் பின் தங்கியிருக்கிறார்கள். கிருஸ்தவர்கள் என்று சொன்னவுடனே அவர்கள் முன்னேறிவிட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சலுகை கிடைக்கிறது என்று சொன்னவுடனே கிருஸ்தவர்களாக இருக்கும் ஹரிஜனங்கள்கூட ஹிந்துக்கள் என்று சர்டிஃபிகேட் வாங்கிச் சலுகை பெற முன் வருகிறார்கள். ஹரிஜனங்களுடைய பொருளாதாரத் துறையைப் பார்க்கும்போது யாராக இருந்தாலும் ஒரே நிலையில், பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் ஹிந்து ஹரிஜனங்களுக்கு என்ன கொடுக்கிறோமோ அவைகளை கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கிரிஸ்ட்டியானிட்டி என்று சொல்லுவதில் ஹரிஜன்ஸ் ஏது ?) ஹரிஜனங்கள் கிருஸ்தவர்களாக மாறியவர்களைக் குறிப்பிடுகிறேன்.

அதோடுகூட விலைவாசி உயர்வைத் தடுக்க உரிய நடவடிக்கைகளையும் இந்த பட்ஜட்டிலே பார்க்கிறோம். விவசாயியைப் பொறுத்தளவில் அதிகம் இன்னும் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். நமது அமைச்சரவைக்கு விவசாயியைப் பொறுத்த அளவில் அதிக அக்கறை இருக்கிறது என்று தெரிகிறது. இருப்பினும் அவர்கள் உணவு உற்பத்தி செய்வதில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயி இதரப் பயிர்களை உற்பத்தி செய்ய முன் வருகிறான். இது இயற்கை, ஏனென்றால் அவனுடைய வருவாய் குறைந்து கொண்டே இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது, எங்கெங்கெல்லாம் விவசாயிகள் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்களா, நெல் பயிரிடுகிறார்களோ, அந்த நிலங்களுக்கு வரி இல்லாமல் ஆக்கினால் அவர்களுக்குக் கூடுதல் ஊக்கம் ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [4th March 1964

அதோடு, முதியோர் பென்ஷனுக்காக் கழிந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது பல முதியோர்களுக்கு வழங்கப்பட்ட அந்த உதவித் தொகை இப்போது மறுக்கப்படுகிறது. 4-5 மாதங்கள் பென்ஷன் பெற்றவர்களுக்குக்கூட இந்த உதவி கிடைக்காமல் மறுக்கப்பட்டிருக்கிறது. நான் அதைப்பற்றி விசாரித்தபோது பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். ஒரு முதியவருக்கு 65 வயதுக்கு மேல் ஆகிறது என்று டாக்டர் சர்ட்டிஃபிகேட் செய்தாலும் வோட்டர் லிஸ்ட்டில் 62 ஆக இருக்கிறது. 60 இருக்கிறது என்று சுட்டிக் காட்டி மறுக்கப்படுகிறது. இன்னொன்று, யாராவது பிச்சை எடுக்கிறார்கள் என்று சொன்னாலும் அதை வைத்து மறுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் பிச்சை எப்போது எடுக்கிறார்கள் என்றால் பென்ஷன் தொகை மறுக்கப்பட்ட பின்னரே பிச்சை எடுக்கிறார்கள். இவ்வாறு காரணங்கள் காட்டி மறுக்கப்படுவது சரியல்ல. இதை விரிவாக அமுல் நடத்தி 65 வயதுக்கு மேல் யார் யாருக்கு அருகதை இருக்கிறதோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வயோதிகர்கள் எம்.எல்.ஏ. வீடுகளுக்குப் படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள். கிடைத்த வாய்ப்பையும் இழந்து விட்டுத் தவிக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் சுதந்திரம் பெற்று பல ஆண்டுகள் ஆயிற்று. இன்னும் பூரணமாக எல்லா இடங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இந்தக் குடிநீர்த் திட்டத்தை இன்னும் தீவிரமாக ஆக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் எல்லோருக்கும் குடிநீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். குடிநீர் வசதி இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது. நல்ல குடிநீர் கிடைத்தால்தான் மக்கள் சுபிட்சமாக வாழ முடியும். குடிநீர் எல்லோருக்கும் வழங்குவதற்கு நாம் முன்வரவில்லை என்றால், நம்மைப் பலரும் குறை சொல்லுவதற்கு ஏதுவாகும். நல்ல குடிநீர் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகளுக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் அளவிற்குத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டும். கடல் ஓரப் பிரதேசங்களில்தான் குடிநீர் வசதி

9–30 a.m. இல்லை. அதனால் காலரா போன்ற வியாதி பரவுகிறது. குடிநீர் வசதி இல்லாததால் கடற்கரை ஓரத்தில் அதிகமாகத் தொற்று நோய் பரவுகிறது. பக்கத்தில் தண்ணீர் இருக்கிறது என்றால், எமெர்ஜன்சி என்று கூடப் பார்க்காமல் அந்தத் தண்ணீரைக் கொண்டு கொடுப்பதற்கு வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். தண்ணீர் பக்கத்தில் இல்லாமல் இருந்தாலும், இப்பொழுது கடலில் உள்ள உப்பு நீரை நல்ல குடி நீராக ஆக்கலாம் என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். அம்மாதிரித் திட்டத்தையாவது வகுத்துச் சீக்கிரம் எல்லா இடங்களுக்கும் பூரணமாகக் குடிநீர் வசதி செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட, நம்முடைய டிரான்ஸ்போர்ட் இலாகா நஷ்டத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது என்று நாம் அறிக்கையில் பார்க்கிறோம். கன்யாகுமரியைப் பொறுத்த அளவில் சென்ற ஆண்டை-



4th March 1964] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

விட வருகிற ஆண்டு லாபம் குறைந்து கொண்டே வருகிறது. சென்னை நகரத்தில் கழிந்த ஆண்டைவிட வருகின்ற ஆண்டு நஷ்டம் கூடிக் கொண்டே போகிறது. இந்த நிலை ஏன் ஏற்படுகிறது என்பதைச் சிந்திக்க வேண்டும். பஸ் பிரயாணிகளுக்கு மிகவும் தொல்லை கொடுப்பது இந்தச் சில்லரை விஷயம். வண்டி ஏறிய உடனேயே சில்லரை இருக்கிறதா என்று கண்டக்டர் கேட்கிறார். ஆகவே நான் முன்னமே குறிப்பிட்டதுபோல், கட்டணம் 7, 9, 13, 19 நயா பைசா என்று இல்லாமல் 5, 10, 15, 20 நயா பைசா என்ற நிலையைக் கொண்டு வந்தால் ஓர் அளவுக்கு வருவாயையும் நாம் கூட்டிக் கொள்ள முடியும். டிக்கட் கட்டணம் நாம் குறைத்து வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறோம். ஆகவே கட்டணத்தை இத்தகைய நிலைமையில் மாற்றி அமைத்தால், பிரயாணிகளுக்கு வசதியாகவும் இருக்கும், கண்டக்டருக்கும் வசதியாக இருக்கும். ஓரளவுக்கு அரசாங்கத்தின் வருவாயையும் கூட்டிக் கொள்ள வசதியாகவும் இருக்கும்.

இன்னொன்று, பஸ்களுக்கு அடிக்கடி 'ப்ரேக்டவுன்' ஏற்படுகிறது. நாம் வாங்கிய வண்டிகளெல்லாம் நல்ல வண்டிகள். அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறோம். அப்படி இருக்கும்பொழுது அந்த வண்டிகளுக்கு அடிக்கடி 'ப்ரேக் டவுன்' வருவதற்குக் காரணம் 'மெகானிகல் ஸ்டாப்' நல்ல முறையில் இயங்கவில்லை என்பதுதான். டி.வி.எஸ். ஸ்தாபனத்தை எடுத்துக் கொண்டால் ஒரு வண்டி கூட 'ப்ரேக் டவுன்' ஆகாது. அந்தந்த வண்டியை ஓட்டிக்கொண்டு வந்த டிரைவர்கள் வண்டிகளை ஷெட்டில் விட்டவுடனேயே அவைகளில் என்னென்ன குறைகள் இருக்கின்றன, அதாவது பிரேக் சரியாக பிடிக்கவில்லை, ஆக்ஸெலரேடர் சரியாக வேலை செய்யவில்லை, என்றெல்லாம் இருக்கிற குறைகளை எழுதி வைத்துவிட்டுப் போவார்கள். வொர்க்ஷாப்பில் உள்ளவர்கள் அந்தக் குறைகளைக் கவனித்துச் சரிப்படுத்தி வண்டிகளை அடுத்த நாளில் லைனுக்கு அனுப்புகிறார்கள். இதே நிலையைத்தான் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் கையாளுகிறார்கள். அதெல்லாம் பேப்பரில் தான் இருக்கிறது. வொர்க்ஷாப்பில் 'போர்மென்னாக' வேலை செய்பவர்கள் சரியாகப் பணியாற்றுவதில்லை. ஆகவே, இதில் தீவிர கவனம் செலுத்தி வண்டிகளை நல்ல முறையில் வைத்துக்கொள்ள வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தின் வேலைப் பளு அதிகமாகிக் கொண்டே போகிறது. மந்திரிசபையில் மந்திரிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. நவமணிகளில் ஒரு மணி இப்பொழுது இல்லை. ஆகவே, மந்திரிசபையில் மந்திரிகளின் எண்ணிக்கையைக் கூட்டினால் துரிதமாக வேலை செய்வதற்கு வசதியாக இருக்கும். அல்லது ஒவ்வொரு அமைச்சரும் தனக்கென்று ஒரு பார்லிமெண்டரி செகரடரியை வைத்துக் கொண்டால் எளிதாகவும் வேலை சீக்கிரம் முடிவதற்கு வாய்ப்பாகவும் இருக்கும். மேலும் அங்கத்தினர்களும் தங்களுடைய தேவையைப்பற்றி நேரடியாகக் கலந்து கொண்டு செயலாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இதிலெல்லாம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். ஒரு வீட்டிற்கு, ஒரு எஸ்.எஸ்.எல்.ஸி. அல்லது "கிராஜுவேட்" படித்தவர்கள் இருக்கிறார்கள். படித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று நாம் பெருமையாகச் சொல்லிக் கொண்டாலும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

இன்னொன்று கூற விரும்புகிறேன். அரசாங்க ஊழியர்களை நியமிக்கும் பொறுப்பு இப்பொழுது இலாகாக்களுக்கு இருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கும் இருக்கிறது. இந்தப் பொறுப்பு முழுவதையும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடமே கொடுத்துவிட்டால் நலம் என்பது என்னுடைய அபிப்பிராயம். பியூனிலிருந்து எந்த அதிகாரியை நியமிக்க வேண்டியிருந்தாலும் சகல பொறுப்பையும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடம் ஒப்படைத்துவிட வேண்டும். பி.டபிள்யூ.டி. இலாகாவில் 20 கிளர்க்குகள் வேண்டுமானால், உடனே பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு எழுதி, அங்கிருந்து தருவித்துக் கொள்ள வேண்டும். அதேமாதிரி டெக்னிஷியன்ஸ் வேண்டுமென்றாலும், அங்கிருந்து தருவித்துக் கொள்ள வேண்டும். அந்த நிலையைக் கையாண்டால் மிகவும் வசதியாக இருக்கும்.

அடுத்தபடியாக, பள்ளிகள் அதிகமாகிக் கொண்டே போகிறது. இப்பொழுது ஒரு டைரக்டர், இரண்டு ஜாயிண்டு டைரக்டர், 2 டெப்யூடி டைரக்டர் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள். இதை இரண்டாகப் பிரித்தால் என்ன என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குத் தனியாக ஒரு டைரக்டர் ஆபீஸ், இதர மாவட்டங்களுக்குத் தனியாக ஒரு டைரக்டர் ஆபீஸ் வைத்துப் பணியாற்றினால் ஏன் கல்வித் தரம் உயராது? லஞ்ச ஊழலைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். லஞ்ச ஊழலைப் பொறுத்தவரைக்கும் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது. நாட்டில் சுரண்டல் மனப்பான்மை அதிகமாக வளர்ந்து கொண்டே இருக்கிறது. சிறிய குழைந்தைகள் முதற்கொண்டே எல்லோரிடத்தும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த மனப்பான்மையை மாற்றி நாட்டு மக்களிடத்தில் ஒழுக்கத்தையும், நல்ல பண்பையும் ஏற்படுத்த வேண்டும். குழந்தைகளிடத்தில் முக்கியமாக ஒழுக்க மனப்பான்மையை வளர்க்க வேண்டும். கல்விச் சீர்திருத்தம் இதற்கு மிகவும் அவசியம். அதை மாற்றி அமைத்தால் ஒழிய நாடு முன்னேறாது. ஆகவே, இந்தக் கல்வி இலாகாவை இரண்டாகப் பிரித்து, ஒரு டைரக்டர் ஆபீஸ் மதுரையிலும், இன்னொரு டைரக்டர் ஆபீஸ் சென்னையிலும் வைத்து நடத்தினால், மிகவும் வசதியாக இருக்கும். கல்வியின் தரத்தையும் உயர்த்த முடியும் என்று நான் ஆலோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை இன்னும் தீவிரமாக அமல் நடத்த வேண்டும். அதிகாரிகள் அதிகமாக மதுவிலக்குச் சட்டத்தை மீறு





கிறார்கள். எங்கள் பகுதியில் அரிஷ்டம் என்ற ஒருவகை மருந்து கடைகளில் விற்கப்படுகிறது. இதற்கு, அரசாங்கமும் உத்தரவு நல்கியிருக்கிறது. அரிஷ்டத்தில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம் ஆல்கஹால் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அரிஷ்டத்தை உற்பத்தி செய்வதற்கும், கடைகளில் வைத்து விற்பதற்கும் அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறார்கள். அரிஷ்டத்தை யாராவது ஒரு ஏழை போய் உட்கொண்டால் போலீசார் அவர்களை பிடித்துக் கொண்டு போகிறார்கள். அரிஷ்டத்தை உற்பத்தி செய்வதற்கு தடை விதிக்க வேண்டும். அதைக் கடைகளில் வைத்து விற்பதற்கும் தடை விதிக்க வேண்டும். கன்யாகுமரி மாவட்டத்தில் ரோடில் காரில் போனால் கள்ளுக்கடை வாடை அடிக்கும். காரணம் அதெல்லாம் அரிஷ்டம் உற்பத்தி செய்கிற இடம். அதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இது பற்றி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாக ஏறிக்கொண்டு போகிறது. ஆனால், இன்னும் அவைகளுக்குச் சரியான கட்டிடங்கள் இல்லை. ஒரு பள்ளியில் நடந்த வேடிக்கை என்னவென்றால், ஒரே கரும்பலகையில் மூன்று ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். அந்த நிலையில் பள்ளி இருந்து கொண்டிருக்கிறது. பள்ளிகளில் உட்காருவதற்குப் பெஞ்சு கிடையாது. 'அப்ளையன்ஸஸ்' கிடையாது. இதை நன்றாகக் கவனித்து, அதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து பள்ளிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். கட்டாயம் கல்வியின் தரத்தையும் உயர்த்த வேண்டும். சீருடை, சீரமைப்பு மகாநாடுகள் பள்ளிகளின் முன்னேற்றத்திற்காக நடத்துகிறோம். இதற்கு முக்கியமான பொறுப்பை

* * * *

(மணி அடிக்கப்பட்டது.)

**திரு. எம். தண்டாயுதபாணி:** சட்டமன்றத் தலைவர் அவர்களே நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாம் சுதந்திரம் பெற்ற பிறகு பொரு ளாதாரத் துறையிலும், சமுதாயத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு சிறப்பான உயர்ந்த வாழ்க்கையை எய்த வேண்டுமானால், கல் வித் துறையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தோடு நாம் பெருகிற வருவாயில் பெரும் பகுதியைக் கல்விக்காகச் செலவு செய் கிறோம். இப்பொழுது கிராமங்கள்தோறும் ஆரம்பப் பள்ளிகளும் ஐந்து மைல் சுற்றளவுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளியும் அமைத்து கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் நல்ல முறையில் கல்வி பெறுவ தற்கு வேண்டிய வசதிகளைச் செய்திருக்கிறோம். அதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், நிதிநிலை அறிக்கையில் உயர்நிலைப்பள்ளி இறுதிவரை எல்லோருக்கும் இலவசக் கல்விச் சலுகை அளிக்கப் பட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியது. மேலும் சிறப்பாக நமது நோக்கம் நிறைவேறவேண்டுமென்பதற் காக இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டபடி கடந்த மூன்று ஆண்டு காலத்தில் நாம் 600 உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்கியிருக் கிறோம். அந்த 600 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் போதுமான கட்

டிட வசதி சிறப்பாக இல்லை என்று நாம் கூற வேண்டும். கடந்த ஆண்டு நமது நிதி அமைச்சர் அவர்கள் துணை மானியக் கோரிக்கையின்போது ரூ. 25 லட்சம் அதற்காக ஒதுக்கி 200 பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு வேண்டிய வசதிகள் செய்திருக்கிறார்கள். அப்படி மேற்கொண்ட அந்தத் திட்டத்தை இன்னும் அதிகமாகப் பணத்தை ஒதுக்கி கடந்த மூன்று ஆண்டு காலத்தில், உயர் நிலைப் பள்ளிகளுக்குச் சிறப்பான கட்டடங்கள் வேண்டும் என்பதற்காகக் கட்டிக் கொடுக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன ; அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நமது மாநிலத்தைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 82 சதவிகிதம் மக்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். பொருளாதாரத் துறை முன்னேற வேண்டுமென்றால், அவர்களுடைய தரம் உயர வேண்டும். அவர்களுக்கு வேண்டிய பல வசதிகளையும் செய்து கொடுக்க பல திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம். அவர்களும் நல்ல பலனை அடைந்து விவசாய உற்பத்தியில் ஈடுபட்டு இருந்தபோதிலும், நாம் திட்டமிட்ட குறியீட்டு எண்ணை அடைய முடியவில்லை. ஏன் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உற்பத்தி செய்யும் பொருளுக்கு நியாயமான, கட்டுப்படியாகும் விலையை ஸ்திரமானதாக ஏற்படுத்த வேண்டும். அந்த நிலையை மனதில் கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். கடந்த ஆண்டு விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லின் விலை தலைகீழாக இருந்தது. அது பற்றி பல முறை இந்த மன்றத்திலேயே வற்புறுத்திப் பேசியிருக்கிறோம். இந்த ஆண்டில் நெல்லுக்குப் போதுமான அளவில் விலை கொடுக்கப்படுகிறது. நிர்ணயித்திருக்கும் விலை ரூபாய் 17.40 காசாக இருந்தபோதிலும் விவசாயிகளிடத்தில் வியாபாரிகளும் மில்காரர்களும் 57 கிலோ கிராம் கொண்ட ஒரு மூட்டை ரூ. 22-க்கு வாங்குகிறார்கள். இந்த மாதிரி ஒரு நிலையான தன்மை இருந்தால் அவர்களுக்கு நல்ல தரமான வாழ்க்கை அமையும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் தருணத்தில் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். விவசாயி உற்பத்தி செய்யும் பொருள்களுக்குக் குறைவான விலையையும், அதிகப்படியான விலையையும் நிர்ணயிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரிசி வாங்கி உண்ணும் மக்கள் நிறைந்த நம் மாநிலத்தில் அதிகமான நெல்லை விற்கும்போது அது ஒரு வரம்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இன்றைக்கு பெருகி வரும் வாழ்க்கை செலவையும், விவசாயக் கூலியையும் ஒப்பிட்டுப்பார்த்தால் குறைந்தபட்சம் மூட்டை ரூபாய் 20-க்கு விற்கப்பட்டால்தான் விவசாயிகளுக்கு உற்பத்தியில் ஆர்வம் இருக்கும். குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கும் போது, அதிகப்படியான விலையையும் நிர்ணயிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. குறைந்த விலை ரூபாய் 20 என்று வைத்தால் அதிகப்படியான விலை ரூபாய் 25 ஆகவும் நிர்ணயித்தால்தான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாக அவர்கள் நல்ல முறையில் செயல்பட முடியும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



அதற்கு அடுத்தபடியாக இந்த உற்பத்தி செய்கிறவர்களுக்கும், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் இடையிலே உள்ள வியாபாரிகள் அதிக லாபத்தை அடைகிறார்கள். இதனால் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் வாங்கி சாப்பிடுகிறவர்களுக்கும் எந்த நலனும் ஏற்படுத்துவது இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் அரிசி மில்களை எல்லாம் அரசாங்கம் தேசியமயமாக்க வேண்டும் என்பது பரிசீலனையில் இருக்கிறது. அது பற்றி நன்றாகப் பரிசீலனை செய்து, சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரிசி மில்களை சர்க்கார் மேற் கொண்டால் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் பெரும் அளவில் பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உதாரணமாக இப்பொழுது நிர்ணயித்திருக்கும் விலை ரூபாய் 17.40 ஆக இருந்தபோதிலும் மில் சொந்தக்காரர்கள் விவசாயிகளிடத்தில் ரூபாய் 22-க்கு கொள் முதல் செய்கிறார்கள். இவர்கள் இடையில் இருப்பதால் விவசாயிகளுக்கு அது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. அது மட்டுமல்ல, அரசினர் மில்களை மேற் கொண்டால் அரிசி தயாரிக்கும்போது தரமான அரிசியைத் தேவையான அளவுக்கு வேண்டிய நேரத்தில் செய்துவிட முடியுமா என்பதை மனதில் கொள்ளவேண்டும். தேசிய மயமாக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு மற்ற தொழில்களைப் போல இதையும் செய்தால், எதிர்பார்ப்பதற்கு நேர்மாறாகத்தான் பலன் ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு நியாயமான விலைக்கு அரிசி விற்கப்பட வேண்டும் என்பதற்காகச் சர்க்கார் ஒரு லட்சம் டன் கொள் முதல் செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கும் நிலைமை என்னவென்று பார்த்தால் எதிர்பார்த்தபடி கொள் முதல் செய்யப்படவில்லை என்பதை மறுக்க முடியாது. கடந்த கூட்டத்தில் நமது நிதி அமைச்சர் அவர்கள் பிப்ரவரி-மார்ச்சு மாதங்களில் ஒரு லட்சம் டன் கொள் முதல் செய்ய முடியும் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு நேர் மாறாகத் தற்போது 11 ஆயிரம் டன்கள் தான் கொள் முதல் செய்யப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்று நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் கொள் முதல் திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன என்று தெரியவில்லை. குறிப்பாகக் கூட்டுறவு சங்கங்களும் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் போது, வாங்கும் விலையோடு நியாயமான செலவுகளையும் சேர்த்து விற்பது என்றால் அவர்களுக்கு விலக்கு அளிப்பதில் நியாயம் உண்டு. தனிப்பட்ட வியாபாரி எப்படி அறுவடை காலத்தில் குறைவான விலைக்கு வாங்கி, 4, 5 மாதங்கள் கழித்து அதிகமான விலைக்கு விற்கிறாரோ அதே ஒரு நிலையைத்தான் கூட்டுறவு சங்கங்கள், தஞ்சையைப் பொறுத்தவரையில், மேற் கொண்டு இருக்

கின்றன. அப்படி இருக்கும் தருணத்தில் அவர்களுக்கு மட்டும் விலக்குக் கொடுத்திருப்பதற்குக் காரணம் புரியவில்லை. அதனால் பாதகமும், கால தாமதமும் தான் ஏற்படும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் கொள்முதல் பண்ணும் விஷயத்தில் லட்சம் டன்னை கொள்முதல் செய்து விடுவோம் என்று சொல்லவில்லை. லட்சம் டன் ஒரு இலக்காக இருக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். கூட்டுறவு சங்கங்களுக்கு விலக்கு அளித்திருப்பது பற்றி விளக்கம் கூற விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் கோரிக்கையின்படி, அரசாங்கத்தின் தேவைக்கு இணங்கிய முறையில் கொள்முதல் செய்தால் விலக்கு அளிக்கப்படும் என்பதுதான் நடைமுறையில் இருக்கும் உத்தரவு.

**திரு. எம். தண்டாயுதபாணி:** தலைவர் அவர்களே, குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் நமது சென்னை மாநகரத்தில் பெரிய கூட்டுறவு சங்கமாக விளங்கும் டி.யு.சி.எஸ். 10,000 மூட்டையை அரிசியாக மாற்றி சென்னைக்கு கொண்டு வந்து விற்பனை செய்ய அவர்களுக்கு விலக்கு வேண்டும் என்று கேட்ட பொழுதுக் கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு கூட்டுறவு சங்கங்களுக்கு விலக்கு கொடுத்திருப்பது எந்த அடிப்படையில் என்று விவரம் புரியவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாகத் தஞ்சை மாவட்டத்தில் 20 சதவிகிதம் என்றும் மற்ற மாவட்டங்களில் 15 சதவிகிதம் என்றும் கொள்முதல் செய்ய வேண்டுமென திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால் சாதாரணமாகத் தஞ்சை மாவட்டத்தில் இருந்து அடுத்த ஜில்லாக்காரர்கள் நெல்லை வாங்கி அரிசியாக மாற்றி 15 சதவிகிதம் கொடுக்கும் நிலைமை ஏற்படுகிறது. ஏற்கனவே அப்படி அடுத்த ஜில்லாக்காரர்கள் லாரிகளில் வாங்கிச் செல்லுவதை கலெக்டர் தடை செய்திருந்தார்கள். ஆனால் அந்தத் தடையுத்தரவு இப்பொழுது நீக்கப்பட்டு விட்டது. ஆகவே தஞ்சையில் இப்பொழுது கொள்முதல் செய்யப்படுவது சுறுசுறுப்பாக நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் அரிசித் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம் தரமான நெல்லூர் அரிசி கிடைக்கவில்லை என்பதுதான். இந்தத் தருணத்தில் இந்த அரிசித் தட்டுப்பாடு என் ஏற்படுகிறது, அதை நிவர்த்திக்க என்ன வழி என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் மாநிலத்தில் அரிசி உற்பத்தி செய்கிறோம். அந்த அரிசியில் பெரும்பகுதியை அண்டை மாநிலமான கேரளாவுக்கு அனுப்புகிறோம். ஆனால் அதே தருணத்தில் சென்னை நகரத்தைப் பொறுத்தவரை அரிசிப் பஞ்சம் ஏற்படுகிறது. சென்னை நகரத்தில் வாழும் நகர மக்கள் நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் அரிசியை உண்ண





விரும்பவில்லை. நம் அரிசியை உண்கிறவர்கள் கேரளாவில் இருக்கிறார்கள். ஒன்று சென்னை நகரத்தில் வாழ்பவர்கள் நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் அரிசியை உண்ண வேண்டும். அல்லது நெல்லூர் அரிசிக்குச் சமமான தரமுள்ள அரிசியை நாம் இங்கே உற்பத்தி செய்ய முயல வேண்டும். அப்பொழுது தான் இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கும் இந்தச் சிக்கல், சிரமம் நிவர்த்தியாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, நாம் சென்ற ஆண்டு உயர்த்திய நில வரியை இரண்டு ஆண்டு காலத்திற்குச் சேர்த்து ஒரே தடவையாக இந்த ஆண்டில் வசூல் செய்கிறார்கள். பருவ நிலை காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த சமயத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 15 கிஸ்தி கட்டி வந்தவர் இப்பொழுது ரூபாய் 25 கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. வரி வஜா செய்யாவிட்டாலும் கூட, அதிகப்படியாக வசூல் செய்கின்ற இந்த ரூபாய் 10-ஐ மூன்று தவணைகளில் வசூல் செய்தால் விவசாயிகளுக்குச் சிரமம் இல்லாமல் இருக்கும்.

காவேரி டெல்டாப் பிரதேசமான தஞ்சை ஜில்லாவிலும், அதற்கடுத்தாற்போலுள்ள காரைக்கால் பகுதியிலும் எண்ணெய் தோண்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்கள் அங்கு எண்ணெய் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று வலியுறுத்தியதன் காரணமாக, இந்த **வேலை** அங்கு நடந்து வருகிறது. இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நம்முடைய ராஜ்யத்தில் ஓர் இடத்தில் அமைக்கப் போவதாகத் தெரிய வருகிறது. எண்ணெய் கிடைக்கக் கூடிய காரைக்கால் அல்லது நாகப்பட்டிணம் போன்ற பகுதியில் இந்த ஆலையை அமைத்தால், தொழில் துறையில் பின்தங்கியுள்ள தஞ்சை மாவட்டம் நல்ல ஒரு நிலைக்கு வரும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக, நெருக்கடி நிலைமை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஞ்சாயத்துக் கூட்டு மன்றக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு அடிக்கல் நாட்டிய கட்டிடங்கள் வேலை நிறுத்தப்பட்டிருக்கும்பொழுது, இந்த உத்தரவு பிறப்பித்த பிறகு, புதிய கட்டிடங்களைக் கட்ட முயற்சித்து வருகிறார்கள். சில கட்டிடங்களின் வேலையையும் ஆரம்பித்திருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து, ஓராண்டு காலத்திற்கு முன்பு நிறுத்தி வைக்கப்பட்ட கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரைமரி சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்தும், கட்டிட வசதி இல்லாத காரணத்தினால், அவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் சீக்கிரத்திலேயே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

[4th March 1964

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சமீபத்தில் மத்திய அரசாங்கம் தன்னுடைய வரவு செலவுத் திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. மாநில அரசாங்கமும் வெளியிட்டிருக்கிறது. அந்த இரண்டு வரவு செலவுத் திட்டங்களைப் பொறுத்தவரையில் பெரிய அளவிலே வரி ஒன்றும் விதிக்கப்படவில்லை என்ற முறையிலே இங்கே வாதம் செய்யப்படுகிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் மத்திய அரசாங்கம் மறைமுகமான வரிகளை அநேகமாகப் போட்டு வருகிறார்கள். அதேபோன்று, மாநில அரசாங்கமும் தனது வரவு செலவுத் திட்டம் வருவதற்கு முன்பாகவே, போட வேண்டிய வரிகளைப் போட்டுவிட்டு, ரோடைக் கிளியர் பண்ணுகிறமாதிரி கிளியர் பண்ணி வைத்துக்கொண்டு, வரியே போடவில்லை என்று சொல்லும் முறையைக் கையாளுகிறார்கள். சமீபத்தில் ஏற்பட்ட நில வரி உயர்வானது இதை யொட்டித்தான் செய்யப்பட்டது என்று நினைக்கிறேன். அதன் மூலமாக நம்முடைய அரசாங்கத்திற்கு ரூபாய் 2 கோடி அதிகப்படியான வருமானம் கிடைக்குமென்று நினைக்கிறேன். ஆகவே, வரியே இல்லாத பட்ஜெட் என்று இதைச் சொல்ல முடியாது.

இன்றைக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பதாகச் சொல்லி நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துகள் இவைகளை யெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளுக்கு தங்களுடைய காரியங்களைச் செய்வதற்காகக் கொடுத்திருக்கக்கூடிய உரிமைகளைவிட, வரிகள் போடுவதற்குக் கொடுத்திருக்கக்கூடிய அதிகாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த அதிகாரங்கள் மூலமாக ஒரு பஞ்சாயத்து ஏறத்தாழ 10 அல்லது 15 இனங்களிலே வரி விதிக்கிறார்கள். அதுபோன்று வரி விதிக்கின்ற முறையிலே பல மறைமுகமான வரிகளும், இன்னும் ஸ்தல ஸ்தாபனங்கள் அடிப்படையிலே பலவிதமான வரிகளும் பொதுமக்கள் மீது விதிக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது ஜனங்களுக்கு மிகவும் தொல்லை கொடுக்கக்கூடிய முறையிலே இந்த வரிகள் அமைந்து இருக்கின்றன. அதுமட்டுமல்ல. அரசியல் சட்டத்திலே மாநில அரசாங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நெருக்கடி நிலைமையை உத்தேசித்தும் ஐந்தாண்டுத் திட்டங்கள் பெயராலும், மத்திய அரசாங்கம் அவைகளைக் கட்டுபடுத்தியிருக்கிறது என்பதையும் நாம் உணர வேண்டும். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது அதிகாரங்களை மக்களுக்குக் பிரித்துக் கொடுப்பதற்கான வழிமுறை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்றைக்குக் கிராமப் பஞ்சாயத்துகளை எடுத்துக் கொண்டாலும், பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டாலும், வரி விதிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அதிகமாக இருக்கின்றனவேயொழிய ஜனங்களுக்குச் சௌகரியங்கள் செய்து கொடுப்பதற்கு வழிவகை இல்லாமல் இருக்கிறது. அவர்கள் தீர்மானங்கள் போட்டு அனுப்பினால், சர்க்கார் அதற்குப் பதில் சொல்லுவதற்கு ஓராண்டு அல்லது இரண்டாண்டு காலம் ஆகிறது.



4th March 1964] [திரு. க. ர. நல்லசிவம்]

நம்முடைய வரவு செலவுத் திட்டத்திலே, நமது முதலமைச்சர் அவர்கள் அதிகமாக சோஷலிசத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். புவனேஸ்வரத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக சோஷலிஸத்தைப் பற்றியெல்லாம் அதிகமாகப் பிரஸ்தாபித்திருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் சோஷலிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர். அதனாலே, சோஷலிஸம் என்று சொல்லியதற்கு வேண்டுமானால் அவரிடம் நான் மன்னிப்புக் கேட்கத் தயாராயிருக்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** இந்த நாட்டிலிருக்கிற அத்தனைபேரும் சோஷலிசத்தைப்பற்றிப் பேச வேண்டுமென்று நினைக்கிறவன் நான். சுதந்திரக் கட்சி அதை யேற்றுக் கொண்டால்கூட நான் அதை வரவேற்கத் தயாராயிருக்கிறேன். எல்லோரும் அதைப் பற்றிப் பேசலாம்.. நான் சொல்லுவதெல்லாம், ஆளும் கட்சியானது, சோஷலிசத்தைப்பற்றிப் பேசும்பொழுது, அதற்கு ஆதாரமான சில விஷயங்களைச் செய்வது கிடையாது. உதாரணமாக, சர்க்கார் ஊழியர்கள் இருக்கிறார்கள். சர்க்கார் வேறுவகைகளிலே, நிலச் சீர்திருத்தங்கள் செய்வதன் மூலமாக, சமூகப் பாதுகாப்பு அளிப்பதன் மூலமாக, ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதன் மூலமாக சோஷலிசத்தை அமைப்பது ஒரு முறை. ஆனால் அவர்களின் கீழே வேலை பார்க்கக் கூடியவர்களுக்கு, சோஷலிசப் பாணியை அமல் நடத்திக் காட்ட வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில் சில சம்பள விகிதங்களைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது. "பிக்ஸட் பே" என்று ரூபாய் 15 போட்டிருக்கிறார்கள். அதே இலாகாவின் மேலதிகாரியின் சம்பளம் ரூபாய் 1,500-லிருந்து ரூபாய் 2,000 வரை இருக்கிறது. ஒரு விஷயத்தைச் சொல்லுவதற்கும் அதைச் செய்வதற்கும் ஏதாவது பொருத்தம் இருக்க வேண்டும். சொல்வதற்கும் செய்வதற்கும் பொருத்தமில்லை என்று சொன்னால், அது வெறும் நாடகமாகத்தான் இருக்குமே தவிர, நடைமுறைக்கு ஒவ்வாது. சீஃப் ஜஸ்டிஸுக்கு ரூபாய் 4,000 சம்பளம். அங்கே வேலை பார்க்கக் கூடிய ப்யூனுக்கு ரூபாய் 50 சம்பளம் என்ற நிலைமை இருக்கிறது. இது நியாயம்தானா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினருக்குத் தெரியாதது இல்லை. தவறுதலாக இருந்தால் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கனம் அங்கத்தினர் எந்தத் தொகுதி மக்களுக்காகப் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்களோ, அந்த மக்களுடைய வருவாயைப் பற்றி கனம் அங்கத்தினருக்குத் தெரியும். இந்த மன்ற அங்கத்தினர் என்ற வகையிலே அவருக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதை அவர் வாங்குவதில்லை என்று நினைக்கிறேன். இந்த ரூபாய் 150 பின்னர் ரூபாய் 250 ஆகப் போகிறது. அவருடைய தொகுதியில் இருக்கிறவர்களின் வருவாய் குறைந்திருக்கிறது என்பதற்காக, ரூபாய் 150 கூட அவர் வாங்குவதில்லையா என்று நான் கேட்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம் :** என் சம்பளத்தைப் பற்றியோ அல்லது இங்குள்ள அங்கத்தினர்களின் சம்பளத்தைப் பற்றியோ நான் பேசவில்லை. ஏறறத்தாழ்வுகள் இருக்கக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன். கனம் அமைச்சர்கள் ரூபாய் 1,500 வாங்குகிறார்கள், நாங்கள் ரூபாய் 150 வாங்குகிறோம் என்று நான் சொல்லவில்லை. நகரங்களிலும் சரி, கிராமப் பகுதிகளிலும் சரி, ஒருவர் குடும்பத்தை நடத்த வேண்டுமென்றால், குறைந்த பட்சம் ரூபாய் 100 வருவாய் இல்லாமலிருந்தால் மனிதனுக வாழ முடியாது. தங்களுடைய ஊழியர்களைப் பொறுத்த வரையிலாவது சர்க்கார் இதை அமலுக்குக் கொண்டு வந்திருக்கலாம். ஏன் நாம் இன்றும் மகாத்மா காந்தியைப் பற்றிப் பேசுகிறோம். அவர் சொன்ன கருத்துக்கள் இந்த விலைவாசி ஏற்றத்திற்கு ஒவ்வாததாக இருக்கலாம். குறைந்த பட்சம் ரூபாய் 100 சம்பளம், அதிக பட்சம் ரூபாய் 1,000 என்று ஏன் நிர்ணயிக்கக் கூடாது? இதிலே ஏன் தயங்க வேண்டும்? கிராமங்களில் இருக்கக் கூடிய தலையாரிகளும், வெட்டிகளும் சர்க்கார் ஊழியர்கள்தான். அவர்களுக்கு ரூபாய் 8, 10, என்று சம்பளம் வழங்கப்படுகிறது. சோஷலிசத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள் கொஞ்சமாவது தாங்கள் செய்வது பொருத்தமாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.
10-00 a.m. இங்கிருக்கும் காங்கிரஸ்காரர்களில் சிலருக்கு, "இந்தச் சர்க்கார் ஊழியர்களுக்கு எவ்வளவோ சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தும், இன்னும் பல வசதிகளைச் செய்திருந்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு வோட்டுப் போட்டு அவர்களை வெற்றி பெறச் செய்துவிட்டார்கள்" என்கிற மனத் தாங்கல்கூட இருக்கிறது. மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும் மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் இடையே சம்பள விகிதத்திலும், இதர படிகள் விகிதத்திலும் உள்ள வித்தியாசத்தை எந்த அளவுக்குக் குறைக்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் அரசாங்கத்தினுடைய கொள்கையைப்பற்றி அவர்கள் சிந்திக்க முடியுமே தவிர, மற்றப்படி அவர்கள் சிந்திக்க முடியாது. மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு ஆதரவு கொடுக்கத்தான் செய்வார்கள்.

சென்னை மாநகரம் 'ஏ' பிரிவு நகரமாக்கப்பட்டிருக்கிறது. அதனால் மத்திய அரசாங்க ஊழியர்கள் பயன் பெறுகிறார்கள். ஆனால், மாநில அரசாங்க ஊழியர்கள், இங்கே ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வின் காரணமாக மத்திய அரசாங்க ஊழியர்கள் அனுபவிக்கும் வசதிகளை அனுபவிக்கச் சந்தர்ப்பம் இல்லை. மத்திய அரசாங்க ஊழியர்கள், மாநில அரசாங்க ஊழியர்கள் இவர்களுக்கிடையே ஊதிய விஷயத்தில் பெரிய அளவில் வித்தியாசம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அது மாத்திரமல்ல. ஒரு நகரத்தை 'ஏ' பிரிவு நகரமாக்கிவிட்டார்கள். ஒரு பிரிவினருக்கு விலைவாசி உயர்வுக்கு ஏற்ப படிகள் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஒருவிதமான கடைகளும், மாநில அரசாங்க ஊழியர்களுக்கு வேறு விதமான கடைகளும், மார்க்கெட்டுகளும், சினிமாக் கொட்டகைகளும் இருக்கின்றனவா என்று நான் கேட்கிறேன். மாநில அரசாங்க ஊழியர்களுக்கென்று தனியாக ஏதும் கிடையாது.





நகர ஈட்டுப் படியைப் பொறுத்த வரையில், நிச்சயமாக சர்க்கார் நம்முடைய மாநில சர்க்கார் ஊழியர்களுக்காவது நகர ஈட்டுப்படி கொடுக்க வேண்டும். பொதுவாக ஐந்து ரூபாய் கிராக்கிப்படி உயர்த்தப் போகிறோம், பத்து ரூபாய் உயர்த்தப் போகிறோம் என்று சொல்வதிலே பயன் இல்லை. எனக்கு முன் இங்கு பேசிய ஒருசில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக் கூடிய முறையைப் பார்த்தால், ஏதோ சர்க்கார் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பது போன்ற தோற்றம் முதலில் ஏற்பட்டதாகவும், பின்னர் படிக்கும்போது ஒன்றும் காணப்படவில்லை என்றும் சொன்னார்கள். அது மிக மிக உண்மை. சர்க்கார் ஊழியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய குடும்பத்தின் க்ஷேம நலனுக்குச் சிலவற்றைச் செய்திருக்கிறோம். நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். "செத்த பின்பு சிவலோகமாக இருந்தால் என்ன? வைகுண்டமாக இருந்தால் என்ன?" என்று சொல்வதுண்டு. அதுபோல, "செத்ததற்குப் பின்னால் எது வந்தால் நமக்கு என்ன?" என்றுதான் பெரும்பான்மையானவர்கள் நினைப்பார்கள். அரசாங்க ஊழியர் இறந்த பின் குடும்பத்தாருக்கு . . .

**கனம் திரு. வெ. ராமைய்யா :** குடும்பத்தைப்பற்றி நினைப்பதே இல்லையா?

**திரு. க. ர. நல்லசிவம்:** பத்து சத விகிதத்தினர்தான் அவ்வாறு நினைக்கக் கூடும். செத்ததற்குப் பின்னால் குடும்பத்திற்குப் பத்து ரூபாய் கொடுப்பதைவிட, இருக்கும்போதே ஒரு ரூபாய் கொடுத்தால் மேலானது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னை நகரம் 'ஏ' பிரிவு நகரமாகிவிட்டது. மத்திய அரசாங்க ஊழியர்கள், மாநில அரசாங்க ஊழியர்கள் இவர்களுக்கிடையே சம்பளத்திலும், கிராக்கிப்படியிலும், வீட்டு வாடகைப் படியிலும் வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசம் நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். நகரத்திலுள்ள மாநில சர்க்கார் ஊயழிர்களுக்கு இந்தப் படிகள் உடனடியாக உயர்த்தித் தரப்பட வேண்டும். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், மத்திய அரசாங்க ஊழியருக்கு நகர ஈட்டுப் படி கொடுத்தவுடனே விலைவாசி அந்த அளவுக்கு உயர்ந்துவிட்டது. அதனால் மாநில அரசாங்க ஊழியர்களுக்கு வேதனையும் தொல்லைகளும் அதிகமாகியிருக்கின்றன. ஆகவே, மாநில சர்க்கார் இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு காரியங்கள் செய்ய வேண்டும். மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும் இடையே ஊதியங்களில் இருக்கும் வேறுபாடுகளைக் குறைப்பதோடு சென்னை நகரம் 'ஏ' பிரிவு நகரமாக்கப்பட்டிருப்பதால், மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் அளவுக்கு நகர ஈட்டுப் படியை மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் உடனடியாகக் கொடுக்க மாநில அரசினர் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

முதியோர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதுபற்றி எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அதைப் பொறுத்த வரையில் நான் உண்மை யென்றே நினைக்கின்றேன். ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன. அவைகளுக் கெல்லாம் கொடுத்தால் தொகை அதிகமாக வேண்டியிருக்கும் என்பதற்காக, குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்குத்தான் இந்த உதவித் தொகை கொடுக்க வேண்டும். அதற்கு மேற்பட்டவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று சர்க்கார் ரகசியமாக உத்தரவிட்டிருப்பதாக எனக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. அப்படிச் செய்திருந்தால் அந்த உத்தரவைத் தயவு செய்து எதாவது செய்யும்படி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். முதியோர்களுக்கு உதவித் தொகை அளிப்பதற்கு முன் பல சோதனைகளைக் கையாளுகிறோம். அதையெல்லாம் அனுசரித்து, இப்பொழுது சர்க்கார் போட்டிருப்பதாகச் சொல்லும் முட்டுக்கட்டையை எடுத்து எறியும்படி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

லஞ்ச ஊழலைப்பற்றி தேசம் பூராவும் பேசப்படுகிறது. லஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்றால் எதாவது ஒரு கமிஷனை அல்லது கமிட்டியோ போட்டால் மாத்திரம் போதாது. இரண்டு மூன்று நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதன் மூலமாக லஞ்சத்தை நாம் குறைக்க முடியும். லஞ்சத்தை அடியோடு ஒழிக்க நீண்ட காலம் ஆகும். லஞ்சத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், துணிவான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். சர்க்கார் ஊழியர்கள் பேரில் கொண்டுவரப்படும் இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளை விசாரிக்க அதற்கென்று எப்படி நாம் அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறோமோ, அதேபோல, தேர்ந்தெடுக்கப்படுகிற அங்கத்தினர்களைக் குறித்தும் சோதனை செய்வதற்கு, வருஷா வருஷம் அவர்களுடைய சொத்துக்களைக் கணக்கிடாவிட்டாலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது ஒட்டு மொத்தமாகக் கணக்கிடுவதற்கு நாம் ஏதாவது ஒரு ஏற்பாட்டை நிச்சயமாகச் செய்தாக வேண்டும். அப்படிச் செய்தோமானால் நிச்சயமாக ஒரு பெரிய மாறுதலை நாம் எதிர்பார்க்க முடியும்.

சர்க்கார் ஊழியர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள். அதிலும் குறிப்பாகக் கீழ் நிலையில் இருப்பவர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்பது குறித்து வருஷா வருஷம் மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் அறிக்கை கொடுக்கிறார்கள். யார் யார் லஞ்சம் வாங்கியிருக்கிறார்கள், யார் யார் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ஜாபிதாவைப் பார்த்தால், சாதாரணமானவர்கள்தான் அதிகமாக நீக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். சம்பளம் போதாதது அதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும். மற்றொரு காரணமும் இருக்கிறது. அந்தக் காரணத்தைச் சர்க்கார் நிச்சயமாக நீக்க முடியும். ஒரு விண்ணப்பமோ, ஒரு அறிக்கையோ ஏதாவது ஒன்று ஜனங்களிடத்திலிருந்தோ, சட்ட சபை அங்கத்தினரிடத்திலிருந்தோ வந்தால், அதனை ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாகப் பைசல் செய்து, "உண்டு", "இல்லை" என்று பதில் தந்துவிடக்கூடிய ஏற்பாட்டைச் செய்துவிட வேண்டும். ஏதோ, பத்து அல்லது பதினைந்து நாட்கள் அதிகபட்சமாக ஒரு மாதம்



என்று நிர்ணயித்துவிட வேண்டும். இப்படி ஒரு கால வரம்பு வைத்து விட்டால் அந்தத் துறையிலே ஏற்படுகிற லஞ்சம் கணிசமான அளவுக்குக் குறையும். அப்படிப்பட்ட ஏற்பாடு இல்லாத நிலையில், ஒரு மாதம், இரண்டு மாதம் தாமதமாகும் பட்சத்தில் யார்தான் என்ன செய்ய முடியும், என்னதான் சோஷலிசத்தைப் பற்றிப் பேசுகிறவராயிருந்தாலும், பேப்பர் வரவில்லை என்றால், அந்தப் பேப்பர் எங்கே போயிருக்கிறது, எங்கே உயிர்நாடி இருக்கிறது, யாரைப் பிடித்தால் காரியம் நடக்கும் என்று பார்த்து, எப்படியாவது காரியத்தை முடிக்க வேண்டும் என்கிற எண்ணம் தேசத்திலே பெருவாரியான ஜனங்களிடத்திலே இருக்கிறது. லஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்றால், அதிகாரிகளுக்காகத் தனியாக ஒரு நிர்வாகத்தை வைத்தால் மட்டும் போதாது. இன்றைக்கு என்னை சில பேர்கள் பார்க்க வந்தார்கள். "ஐயா, நகரசபை மெம்பர் ஓடிவந்துவிட்டார். நீங்கள் கண்டிப்பாக ஒத்தாசை செய்ய வேண்டும். உடனே இன்னும் சிலரை சேர்த்துக்கொண்டு போக வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். "எனக்கு சட்டசபைக் கூட்டம் இருக்கிறது; இதற்கெல்லாம் என்னைத் தொந்தரவு செய்யக்கூடாது" என்று சொல்லி அனுப்பி விட்டேன். தேர்ந்தெடுக்கப்படுகிற அங்கத்தினர்கள் மத்தியிலே கூட இன்றைக்கு இந்த நிலை பெருகி இருக்கிறதென்றால் இந்த நாடு உருப்படுமா? நாசமாகப் போகுமா? என்று சொல்ல முடியாத அளவுக்கு மிகப் பயங்கரமான முறையில் இது பரவியிருக்கிறது. இதை மாற்றுவதற்காக ஏதாவது செய்தாக வேண்டும். முதலில் அதிகாரிகளுக்காகக் கமிஷன் நியமிப்பதைப் போலவே, பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன், நகரசபை, மாநகராட்சி மன்றம், சட்டசபை, பாராளுமன்றம் ஆகிய பொது சபைகளில் அங்கம் வகிப்பவர்களைப் பொறுத்தும், ஒவ்வொருவருக்கும் ஒரு ஸி.ஐ.டி. வைத்தால்கூட நல்லது. நான் இவர்களைக் கேவலப்படுத்த விரும்பவில்லை. காரணம், அம்மாதிரி சூழ்நிலை இந்த நாட்டில் பரவிக்கொண்டு வருகிறது. இதை ஒரேயடியாகத் தடுக்க முடியாது. லஞ்சம் நாட்டில் இருப்பது எல்லோருக்கும் தெரிந்தது; எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடியது. "நான் லஞ்சம் வாங்கவில்லை, வோட்டுக்குப் பணம் கொடுக்கவில்லை" என்று யோக்கியப் பொறுப்பாகப் பேசுவதில் பயன் இல்லை. தேர்தல் சட்டங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். அந்தப்படி யார் நடக்கிறார்கள்? தேர்தல் சட்டத்தில் குறிப்பிட்ட அளவுக்குமேல் ஒரு அணாகூட அதிகமாகச் செலவு செய்யவில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? நான் யாரையும் கேவலப்படுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. யதார்த்த நிலைமை இப்படி இருக்கிறது. இதை மனத்தில் வைத்துக்கொண்டு, மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. நந்தா அவர்கள், "இரண்டு ஆண்டுகளுக்குள் நான் லஞ்சத்தை ஒழித்துவிடுவேன், இல்லாவிட்டால் போய்விடுவேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்லியிருந்தாலும், இரண்டு ஆண்டுகளில் அதைச் செய்துவிட முடியாது. இருபது ஆண்டுகள் திட்டமிட்டுச் செய்தாலும், முக்கால் பங்குதான் இதை ஒழிக்க முடியும். நம்முடைய மாநிலத்தில் லஞ்ச ஊழலைக் கண்டுபிடிக்க ஒரு நிர்வாகத்தை உண்டு பண்ணுவதைப்போல, தேர்ந்தெடுக்கப்

படுகிற அங்கத்தினர்களிடையே இத்தகைய ஊழல் இருந்தால் அதைக் கண்காணிப்பதற்கும், விசாரிப்பதற்கும், தண்டிப்பதற்கும் தேவையான அதிகாரத்துடன் ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தியாவிலேயே சென்னை மாநிலம் உதாரணமாக விளங்கத்தக்க வகையில், இதில் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், உண்மையிலேயே இந்த மாநில அரசாங்கம் செய்திருக்கும் நல்ல காரியத்தை நான் பாராட்ட விரும்புகிறேன். நம்முடைய மாநில அரசாங்கத்தின் வருவாயில் நாலில் ஒரு பங்கு தொகையைக் கல்விக்காக மட்டும் நாம் செலவு செய்கிறோம். இதன் காரணமாக ஓரளவுக்கு மக்கள் கல்வி வசதி பெறுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அதே நேரத்தில், இந்தக் கல்வி ஒரு நோக்கம் இல்லாத கல்வியாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். படிப்பது என்றால், ஏதாவது ஒரு வேலைக்கு விண்ணப்பம் போடுவதற்காகத்தான், சர்விஸ் கமிஷன் பரீட்சை எழுதி, ஏதாவது வேலையைத் தேடிக் கொள்வதற்காகத்தான் என்ற மனப்பான்மை வளர்ந்து வருகிறது. இந்த முறை நாட்டுக்கு நல்ல பலன் அளிக்காது.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் பேசியிருப்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். "அதிருஷ்டவசமாக எல்லையில் ஏற்பட்ட நெருக்கடி தளர்ந்துள்ளது. ஓரளவுக்கு நமது அச்சங்களும் பொய்த்துவிட்டன," என்று அவர்கள் பட்ஜெட் உரையில் பேசியிருக்கிறார்கள். அச்சங்கள் பொய்த்துவிடவில்லை. முதன் முதலில் படையெடுப்பு இருந்ததே அப்பொழுது எந்த நிலைமை இருந்ததோ, அது கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல முற்றிலும் நீங்கிவிடவில்லை. (கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஓரளவுக்கு....) அந்த ஆபத்தான நெருக்கடி இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை நாம் சமாளித்தாக வேண்டிய அவசியம் இருக்கிறது.

கல்வி கற்பது உத்தியோகம் சம்பாதிப்பதற்காகத்தான் என்ற மனப்பான்மை இருந்து வருகிறது. முன்பு முதல் அமைச்சராக இருந்த திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு யோசனை சொன்னார். அது சற்று குழப்பத்தை உண்டாக்கி அவரும் முதல் அமைச்சர் பதவியிலிருந்து போய்ச் சேர்ந்தார். நான் அப்படிச் சொல்லவில்லை என்றாலும், அவரவர்கள் எந்த எந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்களோ, அதைப்பற்றிய ஞானம் அவர்களுக்குத் தொடர்ந்து ஏற்படக்கூடிய முறையில் கல்வி அமைப்பு இருக்க வேண்டும். "படித்து விட்டதனால் உத்தியோகம் பார்த்தால் பார்ப்பேன், உத்தியோகம் கிடைக்கவில்லையென்றால் சும்மா வீட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பேன்" என்று சொல்லக்கூடிய ஒரு ஏற்பாட்டைத் தூக்கி எறிய ஏதாவது ஒரு ஏற்பாடு செய்தாக வேண்டும். வேலை கிடைக்காவிட்டால் சும்மா இருப்பதை ஒரு கௌரவமாகச் சொல்லக் கூடிய மனப்பான்மையை இந்த கல்வி முறை வளர்த்திருக்கிறது என்று கல்வி முறையின்மீது நான் குற்றம் சாட்டுகின்றேன். "நான் சும்மா இருக்கிறேன்" என்று சொல்லக்கூடிய



னப்பான்மை நீங்கவேண்டும். "நான் விவசாயம் செய்துகொண்டிருக்கிறேன், தச்சு வேலை செய்து கொண்டிருக்கிறேன்" அல்லது ஏதோ ஒரு வேலை செய்துகொண்டிருக்கிறேன்' என்று சொல்லக்கூடிய முறையில் அவனைத் திருத்தக்கூடிய கல்வியாக இருக்க வேண்டுமே தவிர, அரசாங்க உத்தியோகத்திற்குப் போகக் கூடிய மனப்பான்மையை வளர்க்கக்கூடிய கல்வியாக இருந்தால், அதற்கு 8 கோடி ரூபாய் என்ன 300 கோடி ரூபாய் செலவு செய்தாலும் பயன் இல்லை. கல்வியின் நோக்கத்தை மாற்றியமைக்கும் வண்ணம் முதல் அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்பது பற்றி ஓரளவு மேலிடத்தில் இருந்து திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி பலர் பிரஸ்தாபித்தார்கள். சாதாரணமாக நான்கு ஏக்கர், ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிற விவசாயி பத்து ரூபாய் கிஸ்தி கட்டவேண்டுமென்று சொன்னாலும்கூட அது பத்தில் ஒரு பங்கு, இருபதில் ஒரு பங்கு என்று வருமானத்தில் வந்துவிடும். சிறு வருமானக்காரர்களை இப்படி வரி கட்டச் சொல்வது அவர்களைப் பாதிக்கும். ஆதலாலே நான்கு அல்லது ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்காவது கிஸ்தியை ரத்து செய்துவிடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக உணவு உற்பத்திக்குத் தடங்கலாக இருப்பது என்ன என்று என்னால் சொல்ல முடியும். காரணம், நான் ஒரு விவசாயி. சட்டசபைக் காலங்கள் போக மற்ற சமயத்தில் காட்டுக்குப் போகிற பழக்கம் உண்டு. இன்றையதினம் உணவு உற்பத்திப் பெருக்குக்கு தடங்கலாக இருப்பது விவசாயப் பருவ காலங்களில் உர மூட்டைகளோ, கடன் வசதியோ கிடைக்காது இருப்பதுதான். அதுவும் தஞ்சை ஜில்லாவில் அதிகம் பாதிக்கப்படுவது பருவ காலங்களில் முதலீட்டுக்கு பணம் கிடைக்காமல் போவதுதான். எங்கள் ஜில்லாவில் உள்ளவர்கள் ஓரளவு மேல் கீழே விழுந்து நூற்றுக்கு இரண்டு மூன்று ரூபாய் வட்டி என்றாலும் பணம் வாங்கி முதலீடு செய்கிறார்கள். இப்படி கஷ்டப்படாமல் பருவ காலங்களில் முதலீடு செய்ய கடன் உதவி கிடைத்தால் உற்பத்தியைப் பெருக்க வழியேற்படும். ஒரு வண்டி குப்பை கொட்டுவதற்குப பதிலாகப் பணம் இருந்தால் ஒரு விவசாயி 25 வண்டி கொட்டுவான். இருபத்தைந்து வண்டி கொட்டினால் ஒன்றரை மடங்குதான் விளையும். ஆகவே பருவ காலங்களில் உர மூட்டைகள், முதலீடு வசதி கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஓரே ஒரு வார்த்தை. நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் சர்க்கார் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்கவேண்டும். காவேரி இருக்கிறது. அதன் உபநதிகளாக பவானி, அமராவதி, நொய்யல் போன்ற ஆறுகள் இருக்கின்றன. அங்கங்கே எல்லாப் பகுதிகளும் பாசன வசதி பெற வேண்டும்

என்பதை நாம் ஒப்புக்கொண்டாலும், இருக்கக்கூடிய பகுதி பாதிக்கப்படும் அளவுக்கு அவசரம் அவசரமாக வேறு ஒரு அணையைக் கட்ட நடவடிக்கை எடுப்பது சரியல்ல. காரணம் காவேரியில் தண்ணீர் கிடையாது. இன்றையதினம் அவிநாசி தாலுகா மிகவும் பிற்போக்காக இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அவர்களிடமிருந்து கோரிக்கையும் வந்திருக்கிறது. ஆனால் இன்றையதினம் கீழ் பவானிப் பகுதிக்குப் போதுமான தண்ணீரே கிடைப்பது இல்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்போது கீழ்பவானி நீர்த் தேக்கத்தில் வருகிற தண்ணீர் அந்தப் பகுதி ஆயக்கட்டுதாரர்களுடைய தேவைக்கு இரட்டிப்புப் பங்கு அதிகமாக இருக்கிறது.

**திரு. க. ர. நல்லசிவம்:** அப்போது ஏற்பட்ட ஒப்பந்தப்படி நாள் ஒன்றுக்கு 2,300 க்யூசெக்ஸ் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. உங்களிடத்தில் அதிகாரிகள் என்ன தகவல் கொடுக்கிறார்களோ தெரியாது. எங்களிடத்திலும் கணக்கு இருக்கிறது. எப்பொழுதாவது ஒருநாள், இரண்டுநாள் 2,300 க்யூசெக்ஸ் விடுகிறார்களே தவிர மற்ற சமயங்களில் ஆயிரத்து ஐநூறு, ஆயிரத்து தொள்ளாயிரம் க்யூசெக்சுக்குமேல் விடுவது கிடையாது. அந்தப் பகுதி அமைச்சர் கனம் மன்றாடியார் இங்கே இருக்கிறார். என் பகுதியில் ஓர் உடைந்த குளம் இருக்கிறது. அவர் பகுதியிலும் ஓர் குளம் இருக்கிறது. இந்தக் குளத்தை நாசம் செய்து அந்தக் குளத்தைச் செப்பனிடவேண்டும் என்ற கொள்கையை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. அந்த வகையில் நம்முடைய திட்டங்கள் எதுவும் அமையக் கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. முனு ஆதி:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தி எதிர்ப்பு அடிப்படையில் பார்லிமெண்டு மெம்பரும், மேல் சபை உறுப்பினரும் கீழ்சபை உறுப்பினரும் ஆகிய மூவரும் இன்றையதினம் சிறையில் இருப்பதனால் அவர்களுக்கு என்னுடைய மரியாதையைத் தெரிவித்துக் கொண்டு என் பேச்சைத் தொடங்குகிறேன்.

MR. SPEAKER: It would be better if the hon. Member speaks about the Budget.

**திரு. முனு ஆதி:** இவ்வாண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை வழக்கமாகச் சமர்ப்பிக்கப்படுவது போலத்தான் இருக்கிறது. எந்த வகையிலும் உற்சாகமூட்டுகிற அளவுக்கு இல்லை என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நமது அரசாங்க ஊழியர்களுக்கு இதில் ஏதாவது சலுகை கொடுக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தோம். அப்படி எதுவும் இல்லாத காரணத்தினால் அவர்கள் பெரிதும் வேதனைப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே நமது அரசாங்கத்தின்கீழ் பணிபுரிகிறவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் முறையில் ஊதியத்திலோ, பஞ்சப்படியிலோ கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க முன்வர





வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும், மாநில சர்க்கார் சிப்பந்திகளுக்கும் பெருமளவில் சம்பளத்திலோ, ஊதியத்திலோ வேறுபாடு இருக்கக் கூடாது என்று பலகாலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆகவே அந்த வேறுபாட்டைக் குறைக்கவும் தக்க கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கல்வித் துறையில் நாம் அதிகமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறோமே தவிர நடைமுறையில் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. நாம் இலவசக் கல்வி எல்லோருக்கும் அளிப்பது என்று ஒரு பக்கம் முடிவு செய்திருக்கிறோம். அதே சமயம் எஜுகேஷன் செஸ் என்று பஞ்சாயத்து யூனியன்கள் வரி விதிக்க அனுமதி அளித்திருக்கிறோம். எங்கள் கட்சி உறுப்பினர் திரு. அரங்கண்ணல் குறிப்பிட்டமாதிரி கிஸ்தி வசூல் செய்வதைக்கூடத் தள்ளிவிடலாம். அது எட்டு கோடிதான் வருகிறது. அது பெருமளவு உதவியாக இருக்கும். அது இல்லாவிட்டாலும் மேற்கொண்டு எஜுகேஷன் சர்சார்ஜ் என்று ரூபாய்க்கு 90 நையா பைசா போட்டு, துன்பப்படுத்துவதையாவது தயவு செய்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது. குறிப்பாக தாம்பரம் குடிதண்ணீர் திட்டத்திற்காக 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காபினெட் கூட்டத்தில், தாம்பரம் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரைத் தலைவராக எடுத்துக் கொண்டதால் அதைக் கைவிட்டுவிடவேண்டும் என்று தீர்மானம் செய்ததாக அறிகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** காபினெட் கூட்டத்தில் நடந்தது கனம் அங்கத்தினருக்கு எப்படித் தெரியும் என்பது ஒன்று. இரண்டாவது அப்படி எதுவும் செய்யவில்லை. நிரந்தரமாகவே தாம்பரத்தை எதிர்க்கட்சிக்குத் தத்தம் செய்துவிடவில்லை. அடுத்த தேர்தலில் அங்கே காங்கிரஸ் வரலாம். கட்சிக் கண்ணோட்டத்தோடு இதுமாதிரியான காரியங்கள் எதுவும் செய்வதில்லை.

**திரு. முனு ஆதி:** காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அந்த மாதிரியாகச் சொன்னார்கள். அந்தப் பகுதி குடிதண்ணீர் திட்டம் எடுத்துக் கொள்ளப்படாதது பற்றி அங்குள்ள மக்கள் வேதனைப்படுகிறார்கள். அத்திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கடந்த ஆண்டு நான் பேசுகிறபோது அயனாவரம் பால் பண்ணையில் உள்ள ஊழலைப் பற்றி எடுத்துக் கூறினேன். அதன் பேரில் அங்கிருந்த ஒரு சிலரை நீக்கினார்களே தவிர ஊழல் களையப்பட்டதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு கமிட்டியை நியமித்து விசாரித்திருக்கிறார்களே தவிர, முறையான நடவடிக்கைகள் எடுத்து ஊழல்கள் களையப்பட்டதாகத் தெரியவில்லை. அயனாவரம் பால்பண்ணை விஷயத்தில் அமைச்சர் அவர்கள் முறையாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிசை வாழ் மக்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஏராளமான ஏழை மக்கள் ஓட்டைக் குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக வீட்டு வசதி செய்து கொடுக்க உருப்படியான நடவடிக்கை ஏதும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்த பிரச்னையிலும் அமைச்சர் அவர்கள் முறையான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்தப் பிரச்னையானாலும் அமைச்சர் அவர்கள் கொடுக்கிற புள்ளி விவரம் இனிப்பாகத் தெரிகிறதே தவிர, நடைமுறையில் மக்களுடைய நிலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால் முன்னேற்றம் எதையும் காண முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். தென்னாப்பிரிக்காவில் ஸ்மட்ஸ் என்ற வெள்ளைக்காரன் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. தன்னுடைய நாட்டு மக்களுக்கு நாட்டின் முன்னேற்றம் குறித்தும் மற்றப் பிரச்சினைகள் குறித்தும் புள்ளி விவரத்தை அளிக்க வேண்டுமென்பதற்காக, தன்னுடைய காரியதரிசிகளை அழைத்து புள்ளி விவரங்களைத் தயாரித்துத் தரும்படி கேட்டான். மாதக் கணக்கு ஆகியும் அந்த அதிகாரிகளால் புள்ளி விவரத்தைத் தயாரித்துக் கொடுக்க முடியவில்லை. ஒரு நாள் ஸ்மட்ஸ் மிக அருமையாகப் புள்ளி விவரங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் சொன்னார். காரியதரிசிகள், 'இவ்வளவு அருமையாக புள்ளி விவரத்தை எங்கிருந்து தயாரித்து எடுத்துச் சொல்கிறார்' என்று ஆச்சரியப்பட்டார்கள். அது பற்றி ஸ்மட்ஸ் அவர்களிடம் கேட்டபோது 'நான் கேட்ட புள்ளி விவரத்தைக் கொடுக்க மாதக் கணக்காகியும் உங்களால் கொடுக்க முடியவில்லை. நான் இப்போது கொடுத்த புள்ளி விவரம் சரியா என்று கண்டுபிடிக்க பொது மக்களுக்கு ஆண்டுக்கணக்காகும். அதற்குள் நான் பதவியை விட்டுப் போய்விடுவேன்' என்று சொன்னாராம். மந்திரிகள் பதவியை விட்டுப் போய்விட வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. புள்ளி விவரங்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத்தான் நான் இதைக் கூறினேன். வெறும் புள்ளி விவரத்தினால் மட்டும் மக்களுடைய வாழ்க்கையிலே நிம்மதியை ஏற்படுத்தி விட முடியாது. திரு. நல்லசிவம் அவர்கள் கூறியது போல் மக்களுடைய வாழ்க்கையிலே அது பிரதிபலிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு அந்தந்தக் காலகட்டத்தில் கிடைக்க வேண்டிய உரம் முதலியவைகள் கிடைப்பதில்லை. பம்ப்செட் வைப்பதிலும் யார் லஞ்சம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குத் தான் சலுகை கொடுக்கப்படுகிறது. அம்மோனியா, யூரியா போன்ற உரங்களும் செல்வாக்குள்ளவர்களுக்குத்தான் கிடைக்கிறதே தவிர எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதோடுகூட இப்போது விவசாயிகளிடமிருந்து எஜுகேஷனல் சர்சார்ஜ் என்று வேறு வசூலிக்கிறார்கள். கல்வித் துறையில் அதிகம் செலவழிக்கிறோம் என்று சொல்லி அதற்காக விவசாயிகளிடமிருந்து இந்த சர்சார்ஜ் வாங்குவது சரியல்ல. அவர்கள் இந்த





ஆண்டு பசலியில் ஒரு ரூபாய் கட்ட வேண்டுமென்றால் 40 புதுக் காசு அதிகமாகப் போட்டு ரூ. 1-40 கட்ட வேண்டியிருக்கிறது. விவசாயிகள், உபகரணங்களும் மற்ற பொருள்களும் இல்லாமல் கஷ்டப்படும் நிலைமையில் மேலும் மேலும் அவர்களுக்கு இந்த மாதிரி சர்சார்ஜ் போடுவதால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

போலீஸ் இலாகா ஊழியர்களுக்கு ஏதோ குகையைப் போல் வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். அந்த வீடுகளுக்கு வருஷா வருஷம் வெள்ளையடிப்பதுகூடக் கிடையாது. மூட்டை பூச்சி அதிகரித்து விட்டால் அவர்கள் தாங்களாகவே செலவு செய்து தான் வெள்ளை அடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வருஷா வருஷ மெயிண்டினன்ஸ் என்ற முறையில்கூட வெள்ளையடிப்பதோ பழுது பார்ப்பதோ இல்லை. இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி ஒவ்வொரு ஆண்டும் பழுது பார்ப்பது, வெள்ளையடிப்பது போன்ற காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

குரோம்பேட்டையில் டிரான்ஸ்போர்ட் இலாகாவுடன் சேர்ந்த 'பாடி' கட்டும் ஒர்க்ஷாப் இருக்கிறது. அங்கு 1½, 2 லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள 'ஆங்கரை' எடுத்துவிட்டு, மவுண்ட் ரோடில் புதிதாகக் கட்ட ஆரம்பித்தார்கள். அங்கே இருக்கிற 'ஆங்கரை' அப்படியே விட்டுப் புதிதாக மவுண்ட் ரோடில் கட்டியிருந்தால் பரவாயில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அங்கே இருக்கிற 'ஆங்கர்' யுத்த காலத்தில் போடப்பட்டது. அதற்கெல்லாம் ஒரு காலம் இருக்கிறது. எடுத்து விட்டுப் புதிதாகக் கட்டுவதில் தவறு இல்லை.

**திரு. முனு ஆதி** : அவை அந்தக் காலத்தில் கட்டிய ஷெட்டுகள் தான். அதை மவுண்ட் ரோடுக்கு மாற்ற என்ன அவசியம் ஏற்பட்டது? அங்கு தொழிற்சாலை இருந்தாலும் பரவாயில்லை. ஒன்றுமே செய்யாமல் சும்மா இருந்த இடம். இதனால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை டிமாண்டின் போது புள்ளி விவரத்துடன் எடுத்துக் கூறுகிறேன். இவ்வாறு வீணாகும் பணத்தை ஊழியர்கள், தொழிலாளர்களுக்குக் கொடுத்தால் அவர்களாவது சந்தோஷமாக இருக்க முடியும்.

அடுத்து, வயது வந்தவர்களுக்குக் கொடுக்கிற பென்ஷன் சரிவர எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இந்தத் திட்டத்தைத் தயாரிக்கும்போதே வயது வந்தவர்களின் கணக்கை எடுத்து எவ்வளவு தொகை செலவாகும் என்று பார்த்துத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கவேண்டும். திட்டத்தைத் திடீரென்று கொண்டு வந்து விட்டு இன்று அந்தப் பணம் ஒரு தெருவில் நான்கு முதியவர்கள் இருந்தால் இரண்டு பேருக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறது. கடந்த ஆண்டு வந்த மனுக்களில் இந்தப் பணம் கொடுக்காதவர்களுக்கு முதல் சலுகை

கொடுத்த பிறகு இந்த ஆண்டு வருகிற மனுக்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீண்ட அனுபவம் வாய்ந்த நமது முதலமைச்சர் அவர்கள் 1964-65-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை மக்களுக்கு ஏற்ற முறையில், காங்கிரஸ் மகாசபையின் கொள்கைகளுக்கு இணங்க தயாரித்து அளித்திருப்பதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த அறிக்கையில் கல்விக்கு முதற் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. பல புதிய கல்லூரிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. அதோடு உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேலும் இந்த ஆண்டு அதிக வரிகளும் போடவில்லை.

தற்போது உள்ள விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க, முக்கியமாக நெல் விலை, அரிசி விலையைக் குறைக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதற்கு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டத்தைக் கொண்டு வந்த போதிலும், எவ்வளவோ ரூபாய் செலவு செய்த போதிலும் உற்பத்தி பெருகவில்லை. ஏதோ ஒருசில வயல்களில்தான் 15 மேனி, 20 மேனி விளைகிறதே தவிர, பெரும்பாலான விவசாயிகள் நாலைந்து மேனிக்கு மேல் காண முடிவதில்லை. அதற்குக் காரணம் அரசாங்கம் கொடுக்கும் உதவிகள் எல்லாம் நேரடியாக விவசாயிகளுடைய கைக்குப் போய்ச் சேராததே. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பாக்கேஜ் திட்டங்கள் கொண்டு வந்ததை அனுஷ்டானத்தில் சரியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏழை விவசாயிகளுக்குப் பணமாகக் கொடுத்துவிட்டால் அவர்கள் அதைச் சொந்தச் செலவுக்கு வைத்துக் கொள்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகை நேரடியாக விவசாயத்திற்குப் பயன்படும்படியான நிலைமைகளை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

-30 அதோடு விவசாயிகளுக்கு பல சலுகைகள் எல்லாம் செய்ய
.m. வேண்டுமென்று நினைக்கிறபோது அவர்கள் மீது அதிகப்படியான வரிகள் போடப்படுகிறது. விவசாய வருமான வரிக்காக தனி ஸ்டாப் போட்டு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. சர்ச்சார்ஜ், கல்வி வரிகள் போன்றவற்றைப் போடுவதின் காரணமாக விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்து ஒரு வரியாகப் போட்டால் அவர்கள் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். சென்ற பசலிக்கு 45 காசு இந்தப் பசலிக்கு 45 காசு என்று கொடுக்கவேண்டியிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது கேட்டுக்கொண்டதின் பேரில் முதல் பகுதியைக் கொடுத்து விட்டால் மற்றதை ஒத்தி வைப்பதாகச் சொன்னார்கள். இன்னும் ஆர்டர் போடாததால் அதை வசூல் செய்கிறார்கள். அதை ஒத்தி வைக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவில் நிலங்களை எடுத்து





அவற்றிற்கு ஐந்து, ஆறு ஆண்டு வரி கொடுக்கவேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு வருடத்திலே கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது மிகவும் கஷ்டம், ஆகவே ஆறு ஆண்டுகளாக பிரித்து வசூல் செய்தால் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சையில் ராஜா சரபோஜி கல்லூரியை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அங்கு கலைக் கண்காட்சியை ஆரம்பித்து அதிலிருந்து 5 லட்சம் ரூபாய் வசூல் செய்து அதன் மூலம் அந்தக் கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது. அந்தக் கல்லூரியை அரசாங்கத்தில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயம் நிரம்பியுள்ள தஞ்சை ஜில்லாவில் ஒரு விவசாயக் கல்லூரி வைப்பது மிகப் பொருத்தமாக இருக்கும். அப்படி ஒரு கல்லூரி ஏற்படுத்துவதன் காரணமாக அங்குள்ள விவசாயத்தையும் அபிவிருத்தி செய்யமுடியும் என்று கூறிக் கொண்டு அங்கு ஒரு விவசாயக் கல்லூரியைத் துவக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை ஜில்லாவிலிருந்து அரிசி கேரளாவிற்குப் போகிறதே தவிர சென்னைக்கு அரிசி நெல்லூரிலிருந்து தான் வருகிறது. அது வருவது தடைபடுவதால் விலை ஏறுகிறது. ஆகவே தஞ்சை ஜில்லாவிலும் மற்ற ஜில்லாக்களிலும் சென்னை நகரத்திற்கு வேண்டிய அரிசியை உற்பத்தி செய்து கொடுத்தால் நல்ல விலையும் கிடைக்கும், சென்னை நகர வாசிகளுக்கும் அரிசிக் கஷ்டம் இல்லாமலிருக்கும். சென்னை வாசிகள் எந்த அரிசியை விரும்புகிறார்களோ அதை இந்த மாநிலத்தில் உற்பத்தி செய்வதற்கு விவசாய இலாகா தக்க ஏற்பாடு செய்தால் மிகவும் வசதியாக இருக்கும். நெல்லூரிலிருந்து வராமல் இருந்தால்கூட தேவலையோ என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக, அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். அது அவசியமே. ஆனால் அப்படி சுற்றுப்பிரயாணம் செய்யும்போது அவர்கள் பொதுமக்களோடும், சட்டசபை பிரதிநிதிகளோடும் ஒரு தொடர்பு வைத்துக் கொண்டு அவர்களைக் கூப்பிட்டு அவர்கள் குறைகளை தெரிந்து கொள்ளும் பழக்கம் இருந்தால் அநேக விஷயங்கள் சுலபமாக நடைபெற வசதியாக இருக்கும். பஞ்சாயத்து ஆட்சியில் திட்டங்கள் நிறைவேற்றும்போது கன்சல்டேட்டிவ் கமிட்டி என்று போட்டு பல சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து அவைகள் தீர்க்கப்படுகின்றன. சில உத்தரவுகள் ஆலோசித்து மாற்றப்படுகின்றன. அதேபோல் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் வரும்போது நான் கூறியபடி மக்களோடும், பிரதிநிதிகளோடும் தொடர்பு வைத்து அவர்கள் பிரச்னைகள் குறித்து கேட்டு அவற்றைத் தீர்ப்பது பல குறைகள் உடனுக்குடனே தீர்க்கப்படும். ஆகவே மீண்டும் கேட்டுக் கொள்கிறேன், அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் நிகழ்ச்சியில் இதையும் குறிப்பிட்டால் அநேக விஷயங்களை அவர்கள் நேரில் தெரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும். அடுக்கபடி யாக, மெம்பர்களுக்கு ஹாஸ்டல் வசதி குறைவாக இருக்கிறது. புதுக்கட்டிடம் கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்குச் செலவு இரண்டு, மூன்று லட்சமாகலாம். இப்போதுள்ள ஹாஸ்டலில்

[திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை] 4th March 1964]

உள்ள இடங்களை மற்ற அரசாங்கக் காரியாலயங்களுக்குக் கொடுத்திருப்பதினால் தான் இந்த இடக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மெம்பர்கள் க்யூவில் நின்று ரூம் கிடைக்க கஷ்டப்படுகிறார்கள். ஒரு ரூமில் நாலைந்து பேர்கள் இருந்து கொண்டிருக்கிறார்ள்க. இதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். புதுக் கட்டடம் வருவதற்கு முன்பு இந்தக் காரியாலயங்களை அங்கிருந்து எடுத்துவிட்டால் ஓரளவு வசதியாக இருக்கும். ஒவ்வொரு அங்கத்தினரும் சௌகரியமாக இருந்து விரும்புகிறார்கள். இப்போது ஒரு ரூமில் நாலைந்து பேர்கள் விரும்புகிறார்கள். இப்போது ஒரு ரூமில் நாலைந்து பேர்கள் இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் வந்து நாலைந்து ரூம்களை ஒதுக்கிக் கொடுத்தார்கள். அநேக காரியாலயங்களைக் கொண்டு வந்து அங்கு வைப்பதின் காரணமாக ரூம் குறைந்திருக்கிறது. ஹவுஸ் கமிட்டியும் இதைக் கவனித்து அங்கத்தினருக்கு ஒரு ரூம் என்று அடுத்த கூட்டத்தில் எல்லோரும் ரூம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) கூட்டுறவு சங்கங்கள் 20 சதவிகிதம் லெவியை கொடுக்க வேண்டியதில்லை. என்றிருப்பது வரவேற்கத்தக்கது. இதனால் எந்த விலைக்கு கொள்முதல் செய்கிறார்களோ அந்த விலைக்கு அரசாங்கத்திற்கு அவசியம் ஏற்படும்போது கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். கமிட்டிகள் போட்டு பஞ்சாயத்து இலாகாவில் ஏற்படுகிற குறைகளை கவனித்து உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்கிறார்கள். அதேபோல் கூட்டுறவு இலாகாவிலும் கமிட்டிகள் போட்டு அவற்றில் ஏற்படுகிற குறைகளைத் தீர்த்து அவ்விலாகா துரிதமாக வேலைகளைச் செய்ய வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. செ. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்பித்திருக்கும் நிதிநிலை அறிக்கை இன்று நாட்டு மக்களின் உள்ளத்தில் இருக்கிற கருத்துக்களைப் பிரதிபலிக்கிறதா அல்லது எதிர்க்கட்சிக்காரர்கள் கோருவதை பிரதிபலிக்கிறதா என்று வாதிடுவதை விட ஆட்சியில் உள்ள காங்கிரஸ் தங்கள் திட்டம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறதே அந்தக் கொள்கைகளை இந்த அறிக்கை பிரதிபலிக்கிறதா என்று ஆராய வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் தைரியமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் கட்சி போட்டிருக்கக் கூடிய திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கை பிரதிபலிக்கவில்லை என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். சோஷியலிஸ சமுதாயத்தைப்பற்றி, இந்த பட்ஜெட் விவாதத்தில் நேற்று திரு. நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டதுபோல் நம் முதல் அமைச்சர் அவர்கள் தங்கள் உரையில் பலவிடங்களில் அதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். புவனேஸ்வரம் என்று சொல்லியிருக்கிறார்கள். சோஷியலிஸம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் தேடிப் பார்த்த வரையில் எட்டு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது புதுமையான பிரசாரம்தான். தங்கள் கட்சி மாநாட்டைப் பற்றி



4th March 1961] [திரு. செ. மாதவன்]

பட்ஜட் வாதத்தில் குறிப்பிட்டு எங்களுக்கு விளக்கம் தர முனைவது ஜனநாயக ஆட்சியில் காணப்படாத ஒரு புது முறை. எனக்குச் சந்தேகம், முதல் அமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப புவனேஸ்வரம் சோஷியலிசம், புவனேஸ்வரம் சோஷியலிசம் என்று குறிப்பிடுவதைப் பார்க்கும்போது ராமாயணத்தில் ராமனிடம் கண்டேன் சீதையை, கண்டேன் சீதையை என்று குறிப்பிடுவதைப் போல் நாங்கள் இன்னும் சோஷியலிஸத்தை விட்டு விடவில்லை, விட்டு விடவில்லை என்று அழுத்திக் கூறுவது போலத்தான் தோன்றுகிறது. நான் தாழ்மையுடன் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பல மந்திரிசபைகளில் பதவி வகித்து வந்த பின்னரும்கூட மக்களை சோஷியலிஸம் என்ற வார்த்தையால் ஏமாற்ற எண்ணுகிறீர்களா? 1955-ல் போட்டீர்களே சோஷியலிஸம் என்று, அந்த ஆவடி சோஷியலிசம் என்னவாயிற்று? அந்தத் தீர்மானத்தில் உள்ள திட்டங்களில் எதை நீங்கள் நிறைவேற்றினீர்கள்? அதைச் சிந்தித்துப் பார்த்தீர்களா? 1955-ல் போட்ட தீர்மானத்தை ஏற்று 1957-ல் தங்கள் கட்சி அமைப்புச் சட்டத்தை காங்கிரஸ் கட்சி திருத்திக்கொண்டதே அப்படி திருத்தியதற்குப் பின்னர் சோஷியலிஸ அமைப்பு முறையை இந்த நாட்டில் கொண்டு வர என்ன வழிவகை செய்தீர்கள் என்று அறிய ஆசைப்படுகிறேன். 1964-ல் புதுப் பாணியில் புனவேஸ்வர் சோஷியலிஸம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த புவனேஸ்வர சோஷியலிஸ திட்டத்திற்குப் பின்னாலாவது இந்த நிதி நிலை அறிக்கையில் என்ன புதிய திட்டத்தை தந்திருக்கிறீர்கள்? சோஷியலிச சமுதாய அமைப்பு என்றால் ஆட்சியிலுள்ளவர்கள் வரியில்லாத வருமானத்தை பெருக்கவேண்டும், மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும். இப்படிப் பட்ட அடிப்படை தத்துவங்கள் ஏதேனும் இந்த அறிக்கையில் காணப்பட்டிருக்கின்றனவா? சோஷியலிசம் என்ற வார்த்தையைத் தவிர, சோஷியலிஸ சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கு என்னென்ன வழிவகைகள் இதில் இருக்கின்றன? இதற்கான வழிவகைகள் ஒன்றும் காணப்படவில்லை. அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் அப்படியொன்றுமில்லை என்று பதில் சொல்ல முன் வருவார்கள். ஆனால் அவர்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தீர்மானத்தை திருப்பிப் படிப்பார்களேயானால் அவர்களுக்கு நான் சொல்வது நன்றாக புரியும் என்று எண்ணுகின்றேன். அந்த தீர்மானத்தில் குறிப்பாக சொல்லியிருக்கிறார்கள், இந்த நாட்டில் உணவு தான்யங்களை கட்டுப்படுத்துவதற்கு முதல் முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். அதிலும் முக்கியமாக அரசாங்கமே இதில் எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளவேண்டும். நாட்டில் இன்று வறுமையில் வாழும் மக்களை காப்பாற்றுவதற்காக எந்த திட்டத்தை தந்திருக்கிறது? இதற்கான திட்டங்களை அரசாங்கம் வகுக்கவேண்டும் என்பதுதான் அந்தத் தீர்மானத்தினுடைய கருத்தாகும். அதற்குப் பின்னால் இந்த நாட்டில் சமுதாயத்தில் இருக்கின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நீங்க வேண்டும் என்பதைத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். ஆவடி சோஷியலிஸத்தில் சொன்னார்கள். பின்னால் புவனேஸ்வர சோஷிய

[திரு. செ. மாதவன்] [4th March 1964

லிஸத்தில் சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் திரும்பத்திரும்ப சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய இதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு, சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை தடுப்பதற்கு என்ன திட்டத்தை இந்த அரசாங்கம் தர இருக்கிறது? வெறும் ஏமாற்றத்தைத் தவிர இந்த அரசாங்கம் எதையும் தந்திருப்பதாக நான் எண்ணவில்லை. ஆவடி சோஷியலிஸத்தில் சொன்னார்கள், சோஷியலிஸ சமுதாயத்தை, "சோஷியலிஸ்ட் பாட்டர்ன் ஆஃப் சொஸைடி" யை .... "ப்ரின்ஸிபிள் மீன்ஸ் ஆஃப் ப்ரொடக்ஷன்" அரசாங்கமே எடுத்துக் கொள்வதன் மூலமாக ஏற்படுத்தவேண்டும். அதாவது முக்கியமாக உற்பத்தி செய்யும் அமைப்புகளை எல்லாம் ஆட்சி கைப்பற்ற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்றைக்கும் அதை பேச்சளவில்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரை கலந்து கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்கார் முடிவு எடுத்த பின்னால்தான் இந்த மாநில சர்க்கார் முடிவு எடுக்க முடியும் என்கின்ற விளக்கத்தைத்தான் தரப்போகிறார்களே தவிர, கடந்த ஒன்பது ஆண்டுகளாக இதை நிர்மாணிப்பதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்? இதை நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். புவனேஸ்வரம் சோஷியலிஸத் தீர்மானத்தில் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருப்பது ..'Privilege disparity and exploitation should be eliminated' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எதைச் செய்திருக்கிறார்கள்? மனிதன் மனிதனைச் சுரண்டுவதை தடுத்திருக்கிறார்களா, பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆவதை தடுத்திருக்கின்றார்களா, தனிப்பட்டவர்களிடம் செல்வம் குவிவதை தடுத்திருக்கிறார்களா? இதில் எந்த திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் தந்திருக்கிறார்கள்? ஏதாவது ஒன்றை கனம் அமைச்சர் அவர்களால் சொல்ல முடியுமா? ஏதாவது விளக்கங்கள் இருக்கும் என்று தேடிதேடிப் பார்த்தோம், ஒன்றும் கிடைக்கவில்லை. நாங்கள் மட்டுமல்ல, இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள். இப்போது தரப்பட்டிருக்கிற அறிக்கை சாதாரண நகராட்சி, அல்லது பஞ்சாயத்து இவைகளில் இவ்வளவு வருமானம் வருகிறது, இன்னின்னவாறு செலவழிக்கப்போகிறோம், இன்னின்ன வருமானத்தைக் கொண்டு இன்னின்ன திட்டங்களை நடத்தப் போகிறோம் என்று சொல்லக்கூடிய அளவில்தான் அமைந்திருக்கிறதே தவிர, சோஷியலிஸ சமுதாய ஆட்சியில், ஒரு ஆட்சி வரியில்லாமல், இன்னின்ன முறையில் வருமானத்தை பெருக்கிக் கொள்ளப்போகிறோம், ஏழை எளியவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களை இந்தந்த திட்டங்கள் மூலமாக நிவர்த்திக்கப் போகிறோம் என்கின்ற அளவில் ஏதேனும் குறிப்புகள் இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை தயவு செய்து கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சி, பதவி ஏற்று 15 ஆண்டுகளுக்குப் பின்னாலும் இதேநிலைதான் இருந்து கொண்டிருக்கிறது என்றால் உண்மையில் இந்த காங்கிரஸ் ஆட்சிக்கு சமதர்ம ஆட்சியில் நம்பிக்கையில்லை என்றுதான் பொருளாகும். அவர்களுடைய தீர்



4th March 1964] [திரு. செ. மாதவன்]

மானத்தில் சொல்லியிருக்கிறார்கள், எப்படி சமதர்ம சமுதாயத்தை அமைக்கப்போகிறோம். மக்களுடைய சம்மதத்தைப் பெற்று சமாதான முறையில் ... அகிம்சையான முறையில் மக்களுடைய சம்மதத்தைப் பெற்று அமைக்கப்போகின்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை யார் எதிர்க்கிறார்கள்? இன்றைக்கு நாட்டில் இருக்கின்ற அரசியல் கட்சிகள் பெரும்பான்மையான கட்சிகளும் இந்த சமதர்ம சமுதாய அமைப்பை வரவேற்கின்றன. இன்றைக்கு காங்கிரஸ் கட்சி நாட்டில் ஒரு பலம் பொருந்திய கட்சியாக இருக்கிறது. இதே கட்சிதான் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் சமதர்ம சமுதாய அமைப்பை ஏற்படுத்தப் போகின்றோம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதை இன்றைக்கு நாட்டிலிருக்கின்ற பெரும்பான்மையான எதிர்கட்சிகள் எல்லாம்—திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட—வரவேற்றிருக்கின்றன. வரவேற்பதோடு மட்டுமல்ல, அதை ஆதரிக்கவும் தயாராய் இருக்கின்றன. அப்படியென்றால் இந்த சமதர்ம சமுதாய அமைப்பை ஏற்படுத்த இன்னும் ஏன் பயப்படுகின்றீர்கள்,? ஏன் அச்சப்படுகின்றீர்கள்? எதிர்கட்சிகளைப்பற்றி பயப்படுவதைவிட அமைச்சர்களுக்கு காங்கிரஸ் கட்சியிலேயே ஏதாவது எதிர்ப்பு இருக்கிறதோ என்றுதான் எங்களால் எண்ண முடிகின்றது. ஆகவே இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கை வரப் போகின்ற ஆண்டிலாவது இல்லாமல், வரியற்ற முறையில் வருமானத்தைப் பெருக்கி, உண்மையான சோஷியலிஸ சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு இன்னின்ன, திட்டங்களை தந்திருக்கின்றோம் என்ற அளவில் கொண்டுவருவார்கள் என்று நான் எண்ணுகின்றேன். அதற்கான வழிவகைகளில் அமைச்சர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே அனேகமாக எல்லா அங்கத்தினர்களும் எடுத்துச்சொன்னார்கள், அரசாங்க ஊழியர்களுக்கு கொடுக்கின்ற சலுகையை உயர்த்தவேண்டும் என்று அரசாங்க ஊழியர்களுக்குத் தரப்படுகிற சம்பளம், படி சலுகைகள் இவைகளைப்பற்றி எல்லோரும் குறிப்பிட்டார்கள். இதனுடைய அடிப்படை தத்துவத்தைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் உணர்ந்து இருப்பார்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். இந்த சட்டசபை கூட்டத்திலேயே கனம் அமைச்சர் அவர்கள் பல முறை, உபயோகித்த வார்த்தை கூட்டாட்சி, கூட்டாட்சி என்பதுதான். இவ்விதம் எதற்கெடுத்தாலும் கூட்டாட்சி, கூட்டாட்சி என்று சொல்லப்படுவதைப் பார்த்தால், நமக்கெல்லாம் ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது, யூனிட்டறி கான்ஸ்டிடியூஷன் என்ற அடிப்படையில், எல்லா விஷயங்களுக்கும் மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் கட்டுப்பட்டதாகும், மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு கீழ்ப்பட்டு கையாலாகாத முறையில்தான் இருந்து வருகின்ற ஒரு கூட்டாட்சி என்று சொல்வதற்குத்தான் இவர்கள் முயற்சிக்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகின்றேன். இந்த அரசாங்க ஊழியர்களின் சம்பளத் திட்ட விஷயமாக, சொல்லப்படுகின்ற வாதம், மாநில சர்க்கார் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் அதே

நேரத்தில் மத்திய சர்க்கார் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. மத்திய சர்க்காரில் இருப்பதும் காங்கிரஸ் ஆட்சிதான். மாநில சர்க்காரில் இருப்பதும் காங்கிரஸ் ஆட்சிதான். அப்படியானால் இந்த சம்பள விஷயத்தில் அடிப்படையான தத்துவத்தை இரண்டு சர்க்கார்களும் சிந்தித்திருக்கிறார்களா? இதற்காக என்ன முயற்சி எடுத்திருக்கிறார்கள்? உண்மையாகவே மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பள வித்தியாசம், படி வித்தியாசம் இருப்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்றே நம்புகிறேன். நூறு ரூபாய் அடிப்படை சம்பளம் என்றால், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையில் 17 ரூபாய் வேறுபாடு இருக்கிறது. இருநூறு ரூபாய் என்றால் 36 ரூபாய் வேறுபாடு இருக்கிறது, 400 ரூபாய் என்றால், 72 ரூபாய் வேறுபாடு இருக்கிறது. இப்படிப்பட்ட வேறுபட்ட நிலைமை ஏன் இருக்கவேண்டும்? அதிலும் காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னாலும் ஏன் இருக்க வேண்டும்? இதைப்பற்றி மாநில சர்க்காரிடத்தில் கேட்கும்போது மத்திய சர்க்காரிடத்தில் உதவித் தொகை கேட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தில் எனக்குத் தெரிந்த செய்தி முதலாவதாக இந்த மாநில சர்க்கார் நிதிநிலை அறிக்கை தயார் செய்யும்போது, ஐந்து ரூபாய் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்திருந்தார்கள். பின்னால் முடிவை திடீரென்று மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று யோசித்துப் பார்க்கும்போது, இப்போது அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பதிலிலிருந்து, இதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது, உதவி கிடைக்குமா என்று இப்போதும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக சொல்லுகிறார்கள். இதன் காரணமாகத்தான் தங்கள் முடிவை மாற்றிக்கொண்டார் என்று தெரிகிறது. நான் இப்போது சொல்லுகின்றேன், மத்திய அமைச்சர் அவர்கள் இதற்கான உதவித் தொகை கொடுக்கப் போவதில்லை என்று சொல்லிவிட்டார்கள். மாநில சர்க்கார்தான் தங்கள் ஊழியர்களுக்கு உதவி கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மற்ற மாநிலங்களை விட நமது மாநிலத்திலுள்ளவர்களுக்குத்தான் அதிகமாக சம்பளம் கிடைக்கிறது, ஆகவே இதை அதிகரிக்க வேண்டிய தேவையில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நான் இதில் சொல்ல விரும்புவது, 111 கோடிக்கு திட்டமிட்டுள்ள மைசூர் மாநில அரசாங்கம், அவர்களுடைய ஊழியர்களுக்கு ஐந்து ரூபாய் உதவித் தொகையில் அதிகரித்து இருக்கிறார்கள், அப்படியென்றால் 137 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டுள்ள நமது மாநில சர்க்கார் மட்டும் இந்த உதவித்தொகை கொடுப்பதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறது? ஏன் இந்த பாரபட்சம்? . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற புள்ளிவிவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. மைசூர் மாநிலத்தில் சென்ற ஆண்டு சம்பளத்தில் எவ்வளவு





அதிகரித்திருக்கிறார்கள், இப்போது அந்த மாநில சர்க்கார் ஊழியர்களுடைய சம்பள விகிதங்கள் என்ன என்கிற புள்ளி விவரங்களை கொடுத்தால் நான் அதை தெரிந்து கொள்ள தயாராய் இருக்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** இந்த நிதி நிலை அறிக்கையை தயார் செய்கின்ற இலாகாவிலேயே இந்தப் புள்ளிவிவரம் இல்லை என்று கேள்விப்பட்டேன். ஆகவே இதை என்னிடத்தில் கேட்பதில் எந்தவிதமான பொருளும் இல்லை. என்னுடைய வாதம், 111 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டுள்ள மைசூர் மாநில சர்க்கார் தங்கள் ஊழியர்களுக்கு ஐந்து ரூபாய் அதிகரித்திருக்கிறார்கள், அது மட்டுமல்ல, அங்கே 'காஸ்ட் ஆஃப் லிவிங்' இங்கேயிருப்பதைவிட குறைவாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது 137 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டுள்ள நமது மாநில சர்க்கார் தங்கள் ஊழியர்களுக்கு ஏன் அலவன்ஸை உயர்த்தக்கூடாது என்பதுதான். இன்னும் சொல்லுகின்றேன். புள்ளி விவரங்களை மட்டும் என்னிடத்தில் கேட்பதில் பிரயோசனமில்லை. நம்முடைய மாநிலத்தைவிட அதிகமாக சம்பளம்கொடுக்கும் பிற மாநிலங்களும் இருக்கின்றன, வேண்டுமென்றால், சில மாநிலங்களைவிட நாம் அதிகமாக கொடுக்கிறோம் என்று சுட்டிக்காட்ட விரும்பலாம். ஆனால் நம்மைவிட இன்னும் அதிகமாக சம்பளம் கொடுக்கக்கூடிய மாநிலங்களும் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களால் மறுக்க முடியாது. அதை உணர்ந்தாவது அரசாங்க ஊழியர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதற்கு பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த நிதி நிலை அறிக்கையிலும், விலைவாசியைப் பொறுத்தவரையில், பழைய பல்லவியைத்தான் இப்போதும் சொல்லியிருக்கிறார்கள். திட்டமிட்ட பொருளாதாரத்தில், பணப் பெருக்கம் அதிகமாகிறது, மக்களின் தொகை அதிகரிக்கிறது, ஆகவேதான் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள் இவையெல்லாம் வழக்கமாக புள்ளிவிவரங்களில் சொல்லப்படுவது தான். ஆனால் இவைகளை தடுப்பதற்கு அரசாங்கம் என்ன செய்ய முன் வந்திருக்கிறார்கள்? ஆகவே தீவிரமாக இதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நாங்கள் சொல்லுகின்றோம்.

இறுதியாக, ஹரிஜனங்களுக்கு சட்ட உதவி கொடுப்பதாக கூறப்பட்டுள்ளது. அதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஜனநாயகத்தின் ஒரு தீமையான நிலை என்னவென்றால், எந்த நன்மையைக் கொடுத்தாலும் கொடுக்கும்போது தங்களுடைய கட்சிப் பிரசாரத்திற்காக என்று திட்டமிடப்படுகிறதே தவிர, நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் எதுவும் செய்யப்படுவதில்லை. இந்த நிதி நிலை அறிக்கையில் இந்த சட்ட உதவி பற்றி விளக்கம் எதுவும் இல்லை. வக்கீல் வைத்து வாதாடுவதற்கு ஏற்பாடு செய்தால் அதுவும் சட்ட உதவிதான். அதே நிலையில் கோர்ட்டுக்குச் செல்லும்போது சில செலவுகளை ஏற்கவேண்டி

யிருக்கிறது. அது பற்றி தீவிரமாகச் சிந்தித்து மாநிலம் முழுவதற்கும் இது மாதிரித் திட்டத்தைப் போட்டு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய சில யோசனைகளையும் என்னுடைய தொகுதிக்கான சில யோசனைகளையும் சொல்ல என்னுடைய வார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

இது வரையிலும் பல பட்ஜெட் கூட்டங்களில் கேட்டதையெல்லாம் விட இந்தத் தடவை கேட்டது ஆச்சரியமான புதுப் பிரச்னையாக இருக்கிறது. இந்தத்தரப்பில் இருக்கிற கட்சிக்காரர்கள் ஏன் கட்சித் திட்டங்களையெல்லாம் சரிவர நிறைவேற்றவில்லை என்று எதிர் தரப்பில் இருக்கிறவர்கள் படுகிற அனுதாபத்தை ரொம்பவும் நன்றாக நாங்கள் கேட்கிறோம். அவர்களும் தயவு செய்து இந்தப் பக்கத்தில் வந்தால், உள்ளபடி சோஷலிஸத்தை விரும்பினால், உள்ளபடியே சர்க்கார் நன்றாக நடக்கவேண்டுமென்று அவர்களும் எதிர்பார்த்தால், சோஷலிஸ சமுதாயம் தான் நாட்டுக்கு நல்லது என்று அவர்களும் ஏற்றுக் கொண்டால் இந்தப் பக்கத்தில் இருக்கும் சோஷலிஸத்தை பலப்படுத்த அவர்களும் சேர்ந்து தீவிரமாகப் பாடுபட்டால் அதைத் தீவிரமாக அமல் நடத்தலாம். அது குறித்துச் சொல்லி இந்தக் கட்சிக்கு வக்காலத்து வாங்கவேண்டாம். அது சோஷலிஸம் அல்ல. அது வெறும் நாடக பாணி சோஷலிஸம் தான். சோஷலிஸம் என்றால் ஜனநாயகத்தில் சோஷலிஸத்தை அமல் நடத்துவதில் தொந்தரவு வருகிறது. அதிலே ஜனநாயகம் குறுக்கிடுகிறது. ஜனநாயகத்தை வரை முறை இல்லாமல் செய்து விட்டதன் காரணமாக, சோஷலிஸமே ஒரு வேளை வீணாகப் போய் விடுமோ என்று ஜனநாயகமும் சோஷலிஸமும் சேர்ந்த அமைப்பு வேண்டுமென்று ஒரு லட்சியப் பாதையை, நாட்டு நிலைமையை பணம் படைத்தவர்கள் தங்கள் கட்சிக்கு எப்படிப் பயன்படுத்தக் கையாளுகிறார்கள் என்று உணர்ந்து, புது முறை அமைப்பாக அமைக்கப்பட்டது புவனேஸ்வரம் தீர்மானத்திலே. வக்கீல் பணம் வாங்குகிறார். வாங்குகிற பணத்தை 'எனக்குப் பாதி, இந்தா நீ பாதியை வைத்துக்கொள்' என்று குமாஸ்தாவிடம் கொடுத்து, பாதி பாதியாகப் பிரித்துக் கொடுத்து விட்டு 'வித்தியாசம் இருக்கக் கூடாது நீ பாதி எடுத்துக்கொள்' என்று பெருமளவில் பணம் சம்பாதிக்கக் கூடிய எந்த வக்கீல் சோஷலிஸ பாணி என்று கொடுத்துவிடுகிறான். நாலு அடி அகலமுள்ள மேஜையில் 2 அடி அகலத்தில் நான் உட்காருகிறேன், அந்த இரண்டு அடி அகலத்தில் நீ உட்காரு என்று எத்தனை வக்கீல்கள் சோஷலிஸ திட்டத்தைப் படித்து. கற்று, அதற்கு இலக்கணம் வகுத்துச் செய்திருக்கிறார்கள்? சும்மா பிரத்தியாருக்கு வாத்தியாராக இருப்பதைத் தவிர தாங்களாகச் செய்கிற எதையும் செய்யப் பார்க்கவில்லை. ஏதோ தாங்கள் ரொம்பவும் அனுதாபத்தோடு இருப்பதாகக் காட்டிக் கொள்ள கிடைத்





ததை பாச்சைக்காயாக உருட்டி இருக்கிறார்கள். என்.ஜி.ஓ.க்களுக்காக கொட்டியிருக்கிற கண்ணீர் இருக்கிறதே சபையிலே இதுவரையிலே . . . .இல்லாத கண்ணீரைக் கொட்டி, சினிமாவிலே சாகாதவன் செத்தவன் மாதிரி நடிக்கும்போது அனுதாபப்பட்டு 3 அணா, 6 அணா காசு கொடுத்தவர்கள் எவ்வளவு அழுவார்களோ அதை விடக் கடுமையாக என்.ஜி.ஓ. க்களுக்காக அழுதிருக்கிறார்கள். அப்படி அழுது அழுது என.ஜி.ஓ.-க்களுடைய நிலைமையை ரொம்பக் கடுமையாக ஆக்கி விட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி சொன்னது ஆளும் கட்சிக்குப் பயன்படாதவர்கள் என்று ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் நினைக்க அந்தப் பிரச்னையை கடுமையாக்கி போலி நீலிக் கண்ணீர் வடித்ததன் காரணமாக அசல் பிரச்னையை அணுக விடாது செய்யவேண்டும், அசல் பிரச்னையை உணராமல் செய்யவேண்டும் என்று, அதுதான் அவர்களுடைய அழுகைக்குக் காரணமாகப் படுகிறது. என்.ஜி.ஓ.-க்களிடம் அவ்வளவு நமக்கு அனுதாபம் இல்லாமல் போய் விடுமா? நம் குழந்தைகள் அவர்கள். உறவு முறையாரிடத்தில் உள்ள குழந்தைகளுக்கு போட்டிருப்பது போல தம் குழந்தைகளுக்கும் நல்ல நகை போட்டு பார்க்கத் தாய் தந்தையருக்கு ஆசை இருக்கும். தலையில் சுட்டி வைக்கவேண்டும், மார்பில் பதக்கம் வைத்த மாலை போட வேண்டும். இடுப்புக்கு அரைஞாண் வைக்க வேண்டும் என்ற ஆசை தாய் தந்தையருக்கு இருக்கத்தான் செய்யும். ஆனால் நிதி நிலைமையைப் பார்க்கும்போது, நிதிவசதி இல்லையே என்று பார்க்கும் போது, அடுத்த வீட்டுக் குழந்தை போட்டிருந்தாலும், எந்த வகையில் நம் குழந்தையை அழகுபடுத்தலாம் என்று பார்க்க, சிந்திக்க நேரம் வேண்டும். செலவுக்காக வரி போட்டால் அப்போதும் கூக்குரல். ஒரே சமயத்தில் டிக்கெட் சார்ஜையும் குறைக்க வேண்டும், வண்டிகளையும் அதிகமாக விட வேண்டும். வண்டியில் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும், வேகத்தையும் அதிகப்படுத்தவேண்டும், ரயில் நிலையங்களையும் விஸ்தரிக்க வேண்டும் என்றால் இந்த வித்தையை சினிமாவில் காண்பிக்கலாமே தவிர நடைமுறையில் நடக்காது. பண வருவாய் எவ்வளவு என்று பார்த்து தக்கபடி செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதை விட்டு, பணமும் பத்தாக இருக்க வேண்டும், பெண்ணும் முத்தாக இருக்க வேண்டும் என்றால் எப்படி சாத்தியம் என்று நமக்குத் தெரிந்த அரசியலில் புரிந்துகொள்ளும் நிலை இல்லை. ஆனால் ஒன்றை உணர வேண்டும். நம்முடைய சோஷலிஸமும், ஜனநாயகமும் இரண்டும் சேர்ந்து தண்டவாளத்தில் ஓடினால் தான் நாடு நன்றாக இருக்கும். இல்லையானால் ஜனங்கள் சோஷலிஸத்தை சாப்பிட்டு ஜீர்ணித்துக்கொள்ள முடியாத அளவுக்குத் தான் இருக்கும். இன்றைக்கு பணம் சிலரிடத்தில் இருக்கிறது. பணத்தை வைத்துக்கொண்டு எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமை ஜனநாயகத்தில் வளர்ந்து வந்திருக்கிறது. பணம் கொடுத்தால் ஓட்டு கிடைக்கும் நிலை வந்து விட்டது. ஜனநாயகத்தில் பணக்காரர்களுக்கு மாத்திரம் பயன் தரக் கூடிய நிலை இருப்பதால் சோஷலிஸமும் சேர்ந்து வரவேண்டும் என்று

கேட்டுக் கொண்டிருக்கிறோம். சோஷலிஸத்தில் மேல் தட்டில் இருக்கிறவர்களுக்கும், அடித்தட்டில் இருக்கிறவர்களுக்கும் இருக்கிற வித்தியாசத்தைக் குறைத்து, ஒரு சில மடங்கு வித்தியாசம் இருக்கிற அளவில் சமுதாயத்தைத் திருத்தி அமைத்தால் ஜனநாயகம் நல்ல முறையில் நடைபெறும் என்று புவனேஸ்வரம் காங்கிரஸில் தீர்மானம் போட்டோம். அந்த மந்திரத்தை பட்ஜெட்டைப் படித்து திரும்ப திரும்ப எண்ணி பார்ப்பதன் மூலமாக அத்தனை தரம் உச்சரிக்க நம் கனம் முதன் மந்திரி அவர்கள் அத்தனை தடவை குறிப்பிட்டிருக்கிறார்கள். எதிர் தரப்பில் இருக்கக் கூடிய கனம் அங்கத்தினர் 15 தடவைகள் திரும்பத் திரும்ப வந்திருப்பதாகச் சொல்லும்போது ரொம்ப மகிழ்ச்சி. இந்த முறையில் இங்கேயுள்ளவர்கள் ஒருவர்கூட எண்ணவில்லை. இப்படி 15 தடவை எதிர்கட்சியினரை முதன் மந்திரி அவர்கள் சிந்திக்க வைத்திருக்கிறார்கள் என்றால் சோஷலிஸத்தை நல்ல நன்மைகளில் அதுவும் ஒன்று. நம் தரப்பில் நாம் நினைக்க வேண்டியது, ஜனநாயக அமைப்பும் சரியாக அமைய வேண்டும், சோஷலிஸமும் வெற்றிபெறவேண்டும்.

எதிர்க்கட்சிகளுக்கு வேறு ஆயுதம் இல்லாத போது நம் குறை அவர்கள் ஆயுதம். இங்கே எதிர் தரப்பில் பேசிய யாராவது, இன்னின்ன வரிகள் மூலமாக, இன்னின்ன வரிகள் போட்டாவது மேலும் வருவாய் பெற்று என்.ஜீ.ஓ.-க்களுக்கு சம்பளம் அதிகம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. இப்போது ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கிறார்கள். சரிதான் என்று புதிதாக ஏதாவது வரி போட்டால் ஏன் வரி போட்டீர்கள் என்று கேட்கிறார்கள். இந்த பட்ஜெட்டிலே ஒருவர் கூட அந்தத் தரப்பிலிருந்து பென்ஷன் திட்டத்தைப் பற்றி, அதிகப்படுத்தியிருக்கிறீர்களே என்று, யாரோ ஒருவரோ இருவரோ சொன்னதாகக் கேள்விப்பட்டேன், இதைப்பாராட்டி இதைச் செய்யத் தவறியிருக்கிறீர்கள் என்று சொல்லி, இதைச் சேர்த்துச் சொல்லியிருந்தால் ஜனநாயகப் பண்பாட்டில் நல்ல பண்பாடாக இருக்கும். அந்த முறையில் பேசியிருந்தால் எதிர் கட்சிக்கு நல்ல பண்பு இருக்கிறது என்று கருதும் நிலை உண்டாகியிருக்கும்.

எங்கள் ஊரைப் பற்றிய வரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். ஜனநாயகமும் சோஷலிஸமும் இணைந்து செல்ல வேண்டிய சர்க்காரை அமைக்கும் நாம் எவரெல்லாம் வீடு கட்டிக் கொடுக்கிறோம். எங்கள் ஊரில் கட்டியிருக்கிற வீட்டையெல்லாம் இடிக்க, சர்க்காரில் நடவடிக்கை எடுக்கவில்லை, கோவிலில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கோவிலில் சூப்பரின்டெண்டெண்ட் என்று ஒருவர் இருக்கிறார், கடவுள் பாரம்பரை. சொந்தச் செலவு ஒரு அணா, பைசா செலவு செய்யாமல் கோவில் பணத்தை எடுத்து செலவு செய்து விரோதிகளை ஒழிக்க முன்சீப் கோர்ட், அதைத் தாண்டினால் சப் கோர்ட், அதைத் தாண்டினால் டிஸ்ட்ரிக்ட் கோர்ட், அதைத் தாண்டி இங்கே ஹைகோர்ட் வரை





வந்து, வீடு சொந்த வீடு என்று இல்லாமல் கோவில் வீட்டில் ஆயிரம் ஆயிரம் வருஷங்களாக இருந்து கொண்டிருக்கிற ஒருவன் ஹைக்கோர்ட் வரையில் வந்து 'நான் 7½ அணா, 10 அணா பகுதி கொடுத்துக் கொண்டிருக்கும் மனிதன், வீடு நான் காலம் காலமாக இருப்பதால் எனக்குச் சொந்தம், பகுதி மட்டும் கொடுக்க கட்டுப்பட்டவன்' என்று கட்சியாடி அந்த நிலையை உண்டாக்கிக் கொள்ள இயலாத நிலையில் வீட்டை வேண்டாம், ஆளை விட்டால் போதும் என்று கொண்டு வந்து நடவடிக்கை எடுத்து மக்களை அப்புறப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் கோவில் நிர்வாகிகள். அப்படி பல நடவடிக்கைகள் இருந்து கொண்டே இருக்கின்றன. நாம் கூட சென்ற சில வருஷங்களுக்கு முன் சட்டம் செய்தோம். ஏதோ முதலில் வந்த சட்டத்தின் உருவம் ஒரு மாதிரியாக இருந்தது. அப்புறம் நடைமுறையில் பார்க்கிறபொழுது அதற்கு நேர் எதிரிடையான உருவத்தைப் பெற்றுவிட்டது. விவசாய சீர்திருத்தச் சட்டங்கள் செய்தோம். குளிக்கப்போனவன் சேற்றைப் பூசிக்கொண்டான் என்று சொல்வார்கள். அதை நாம் ரொம்பச் சிறந்த முறையில் செய்திருக்கிறோம். சேற்றைப் பூசிக் கொண்டோமோ அல்லது சந்தனத்தைப் பூசிக்கொண்டோமோ, விவசாயிகள் தினம் தினம் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். ஏதோ கன்ஸிலியேஷன் போர்டு என்று ஒன்று இருக்கிறது. ஆனால் அது விவசாயிக்கு எந்த விதமான நன்மையும் செய்ததாக நான் பார்க்கவில்லை. சில கோவில்களில் வீட்டை விற்பதற்குக் கொடுத்து விட்டார்கள், சில கோவில்கள் கொடுக்கவில்லை. இந்தப் பிரச்னையை உடனடியாக கவனித்து, சட்டப் பூர்வமாக தடுக்கிறதோ அல்லது கோர்ட்டு நடவடிக்கை எடுப்பதோ அல்லது கோவில் டிரஸ்டியைக் கொண்டு ஏதாவது ஏற்பாடு செய்வதோ, ஏதாவது நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். கோவில் நிலத்தினால் பூராவும் கோவிலுக்கும் லாபம் இல்லை. மேலே இருக்கும் அதிகாரிகளுக்கும் லாபம் இல்லை, இடையிலே இருப்பவர்கள் கோவில் நிலத்தை விற்று புதிய குத்தகைக்காரர்கள் குழிக்கு ஒரு ரூபாய், 2 ரூபாய் என்று கொடுத்து தங்களுக்குள்ளேயே பிரித்துக்கொள்ளும் அளவில் நிலைமை இருக்கிறது. சுவாமியை ஏமாற்ற சர்க்கார் சட்ட சலுகை கொடுக்கிற அளவிற்கு துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு கமிட்டியாவது போட்டு நிலைமையை பரிசீலனை செய்யவேண்டும். நிலச்சீர்திருத்த அதிகாரி என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரு கார். அடிக்கடி பல பேர்கள் அவர் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர் காரில் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருக்கிறார். அவர் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. முன்பு சாதாரண சட்டை போட்டுக் கொண்டிருந்தவர் இப்பொழுது புதிய சட்டை போட்டுக் கொண்டு, கொஞ்சம் ஜாஸ்தி ஜெஜம் கொண்ட சட்டையைப் போட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால், ஜனங்களுக்கு ஏதாவது நன்மை செய்திருக்கிறாரா என்றால், ஒன்றுமில்லை. இதற்கு ஒரு கமிட்டி போட்டாவது பரிசீலனை செய்யவேண்டும். நான் எம்.எல்.ஏ. கேட்டாலாவது ஏதாவது பதில் சொல்லக்கூடாதா?

11-00 a.m.

'எனக்கு அதிகாரம் இல்லை' என்று சொல்லிவிடுகிறார். இதைச் சொல்லுவதற்கு ஒரு அதிகாரி, ஒரு கார், ஒரு ஆபீஸ். இதற்கு ஒரு போர்டு, நிலச் சீர்திருத்த அதிகாரி, நில உச்சவரம்பு அதிகாரி என்று பெயர். பெயரளவில் இருக்கிறதே தவிர, நிலத்திற்கு ஏதாவது உச்ச வரம்பு கட்டியிருக்கிறாரா என்றால் இல்லை. அல்லது உச்சவரம்பு கட்டுவதற்கு துவக்கத்திலாவது இருக்கிறாரா என்றால், ஒன்றையும் காணோம். ஏதோ மிராசுதார் கார் வந்து கொண்டிருக்கிறது, போய்க்கொண்டிருக்கிறது. ஏதோ மிராசுதார், பரம்பரை பாத்தியதை என்று சொன்னாலும், அதையாவது ஓரளவுக்கு விட்டுக் கொடுக்கலாம். அதை நான் ரொம்பவும் வற்புறுத்தத் தயாராக இல்லை. ஆனால், கோவில் சம்பந்தமாக அதிகாரம் நம் கையில் இருக்கிறது. எங்கள் ஊரில் கோவில் அதிகாரிக்கு சூபரிண்டெண்டெண்டு என்று பெயர். அவர் ஏதாவது போலீஸ் இலாகாவிலிருந்து திரும்பிவந்தவரா? அவரைக்கண்டு பாக்கி ஜனங்கள் பயப்படவேண்டும் என்பதற்காக கோவில் சூபரிண்டெண்டெண்டு என்று பெயர் வைத்திருக்கிறார்களா? கோவில் நிர்வாகி என்று பெயர் வைத்தாலே போதும். இம்மாதிரி நிலத்தை குத்தகைதாரர்களே தங்களுக்குள் பிரித்துக் கொண்டு குழிக்கு ரூ. 1, ரூ. 2 கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. கோவில் வீட்டை விற்காமல் இருக்கவேண்டுமென்றால் இவ்வளவு பணம் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும். கோவிலுக்கு நல்ல காரியம் செய்வதற்காக வீடு வேண்டும் என்று கேட்பது வழக்கம். கோவிலுக்குள் விஸ்தாரமாக இருக்கிற பூமியில் ஒரு வில்வமரம் கூட வைத்து வளர்த்தது கிடையாது. நெரிஞ்சி முள் நிறைந்திருக்கிறது. கோவிலுக்கு வெளியில் எத்தனையோ மைலுக்கு அப்பாலுள்ள வீட்டின்பேரில் நடவடிக்கை எடுத்து, கோவிலுக்காக அவசியம் வீடு வேண்டும், வீட்டைக் காலி பண்ணவேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டும்.

இன்னொரு பெரிய விபரீதம். விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால், நிலத்திற்குள்ளே ஜாதி பிரிக்கிறார்கள். டவுன் நிலம் பாக்கேஜ் ஏரியாவில் சேரவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு வரப்புக்கு அப்பால் உள்ள நிலம் பாகேஜ் ஏரியாவில் வரும். இப்பாலுள்ள நிலம் டவுனில் இருப்பதால் அது அதில் சேராதாம். பாகேஜ் ஏரியாவைச் சேர்ந்த நிலச்சொந்தக்காரர்கள் ஏகர் ஒன்றுக்கு ரூ. 100, 200 சலுகை பெற்று உற்பத்தியைப் பெருக்கவேண்டும். வரப்பிற்கு அப்பால் இருக்கும் டவுன் நிலத்திற்கு எந்தவிதமான சலுகையும் கிடையாது. நானும் எம்.எல்.ஏ.-வாக பல வருஷங்கள் இருக்கிறேன். நான் கூப்பிட்டால் விவசாய அதிகாரி வருவது கிடையாது, பி.டி.ஓ. வருவது கிடையாது. மருந்து கேட்டால், பாகேஜ் ஏரியா பகுதி பூராவும் முதலில் கொடுத்துவிட்டுத்தான் பிறகு லேட்டாக இங்கு வருவார்களாம். அப்படியே சொல்லுகிறார்கள். அங்கே இருந்து பூச்சியை உற்பத்தி பண்ணிவிடுவார்கள். பிறகு மருந்து தெளிப்பார்கள். இந்த





வரப்பிற்கு அப்பால் பூச்சியை உற்பத்தி பண்ணிவிடுவார்கள். இம்மாதிரி நிலம் சம்பந்தப்பட்ட வரையில் ஜாதி பிரிக்கக்கூடாது. எந்த நிலமாக இருந்தாலும் விளையும் நிலம்தான். டவுன் நிலம், கிராமப்புற நிலம் என்று பாகுபாடு செய்யாமல் இருக்க வேண்டும். ஏற்கெனவே நம்முடைய விவசாயத்துறை அமைச்சர் அவர்கள், பெரிய அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து இதைப்பற்றி சர்ச்சை செய்து, விவசாயத்துறையிலே இம்மாதிரி பாகுபாடு தேவையில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. அதையும் கொஞ்சம் (மணி அடிக்கப்பட்டது.)

*** திரு. தா. சின்னசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தற்பொழுது நமது சென்னை மாநிலத்தில் ஜனநாயகத்தின் பெயரால், காந்தியினுடைய பெயரைக்காட்டி, கொள்கையைக் காட்டி கட்சியை வளர்ப்பது மிகவும் முக்கியமாக இருக்கிறது. நமது தமிழகத்தில் எந்த இடத்தில் பார்த்தாலும், கதர் துணி அணிந்துகொண்டு வந்தால், பிளாக்கில் உள்ள கமிஷனர் காண்டிராக்டருக்கு நூற்றுக்கு 5, 10 தள்ளிக்கொடுத்தவருக்கு டெண்டர் கொடுப்பதில்லை. கதர் துணி அணிந்தவர்களுக்கு ஒரு காலணா கூட தள்ளிக்கொடுக்காதவர்களுக்கு வேலை கொடுத்துவிடுகிறார். அது ஏன் அப்படி? நமது காந்தியடிகளின் கொள்கை ஏழை எளியவர்கள் வாழவேண்டுமென்பது. ஜாதி அடிப்படை இல்லாமல் ஏக ஒப்பந்தத்துடன் எல்லோரும் ஓர் குலம் என்று சொல்லக் கூடிய முறையிலே வாழவேண்டும். பாண்டிச்சேரியிலிருந்து எத்தனையோ பிராந்தி புட்டிகளைக் கொண்டு வருகிறார்கள் கதர் துணி அணிந்தவர்கள். அவர்களையெல்லாம் பிடிப்பதில்லை. எங்களுடைய மாவட்டத்தில் யாராவது ஒருவர் சாராயம் காய்ச்சுகிறார் என்று சொன்னால், அங்கிருக்கும் சப் இன்ஸ்பெக்டர் வந்து சும்மாகவாவது பல பேர்களை பிடித்துக் கொண்டுபோய் கேஸ் போட்டு விடுகிறார்கள். நமது மாநிலத்தில் அரசாளக்கூடிய அமைச்சரவர்கள் வருங்காலம், சென்ற காலம், நிகழ் காலம் என்ற மூன்று காலங்களையும் அறிந்து அரசு நடத்தவேண்டும். நம்முடைய சென்னை மாநிலத்தில் ஆதித்திராவிடர்களாக இருந்து ஹரிஜனங்களாக மாறிய வகுப்பினர்கள் சார்பாகவும், நம்முடைய உதவி சபாநாயகர் சார்பாகவும் கேட்கிறேன். நமது ஹரிஜன நல இலாகா அமைச்சர் அவர்கள் பதவியேற்ற காலத்திலிருந்து எந்த மாவட்டத்திலாவது தீண்டாமையை ஒழித்திருக்கிறோமா, எந்த மாவட்டத்திலாவது தீண்டாமை ஒழிப்பு நல்லமுறையில் அமல் நடத்தப்பட்டு வருகிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதே நேரத்தில் நேற்று இங்கு பேசிய திரு. ஜி. வெங்கட்டராமன் அவர்கள் மிக ஆர்வத்தோடு எதிர்க் கட்சியைத் தாக்கிப் பேசினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் பொறுப்பு வாய்ந்தவர். வெகு நாட்களாக அரசியல் நிர்வாகத்தை வெகு திறமையோடு நடத்திச் செல்லுபவர். அவர் முன்னிலையில்

அவர் பொறுப்பில் இருக்கும்பொழுது சொல்லுகிறேன். சேலம் மாவட்டத்தில் ராசிபுரம் தாலுகாவில் ஏழை ஹரிஜனங்கள் பின் தங்கிய வகுப்பினர்கள் ஊருக்குள்ளே வேஷ்டி கட்டிக்கொண்டு போக முடியாது. முதல் பாயிண்டு, அவர்கள் கொளத்தில் கையை வைத்தால், விரலை நறுக்கிவிடுவார்கள். சேலம் மாவட்டத்தில் காந்தி அடிப்படையில் காங்கிரஸ் ஆட்சி என்று சொன்னால், ஜாதி மத பேதம் திரவேண்டும். எல்லோரும் ஓர் குலம் என்று நினைக்க வேண்டும். 1947-ல் திரு. கக்கன்ஜி அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்து பிரசாரம் செய்தார்கள். மற்ற காங்கிரஸ்காரர்கள் அத்தனை பேர்களும் பிரசாரம் செய்தார்கள். ஏழாயிரம் மைலுக்கு அப்பாற்பட்ட அன்னியர்கள் நமது நாட்டிலிருந்து ஆளுகிறார்கள். அந்த ஆட்சியை நீக்கி நாமே நம்மை ஆண்டு கொள்வோம், நாம் எல்லோரும் முன்னேறுவோம், தீண்டாமையை ஒழிப்போம் என்று சொன்னார்கள். ஆனால், இன்று காங்கிரஸ்காரர்கள் அந்த வேலையைச் செய்யவில்லை என்று காங்கிரஸுக்கு வோட்டுப் போடுகிறார்களோ, வோட்டுப் போடுகிறவர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கு மாத்திரம் சலுகை செய்கிறார்கள் சர்க்கார் நிர்வாகத்தில் உள்ள அத்தனை பேர்களும், பெரிய பணக்காரர்கள், படை உள்ளவர்கள் வந்தால் எந்தக் காரியத்தையும் சாதித்துக்கொள்ளலாம். ஆனால், ஏழை என்னதான் காரணத்தைக் காட்டி கேட்டாலும், அவனுக்கு ஒன்றும் நடப்பதில்லை. சரக்கு முடுக்கா, செட்டியார் முடுக்கா என்று கேட்கிறோம். நல்ல முறையில் ஆட்சி நடந்துகொண்டால் மக்களே காங்கிரஸ் பெயரால் வோட்டு அளிப்பார்கள். காங்கிரஸ்காரர்கள் அங்கு போக வேண்டியதில்லை. அதற்காக மாவட்டரீதியாக கட்சிக்காரர்கள் அங்கு போய் ரொம்ப உற்சாகத்தோடு வேலை செய்யவேண்டியதில்லை. பொது ஜனங்களே பார்த்து தீர்ப்பு அளிப்பார்கள். நம்முடைய ஆட்சியில் சரக்கு பலமாக இருக்கவேண்டும். அவர்கள் முடுக்காக இருக்கிறார்கள். பணக்காரர்களாக இருந்தாலும் சரி ஏழைகளாக இருந்தாலும் சரி ஜனநாயக அடிப்படையில் எல்லோரும் சமம். ஜனநாயக அடிப்படையில் சட்ட மன்றத்திற்கு ஒரு அங்கத்தினர் வந்தால், அவர் 1,50,000 பேர்களுக்கு ஒரு பிரதிநிதி. அப்படி தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர்களாக இங்கே வந்தபிறகு இந்தக் கட்சி மனப்பான்மை தேவை இல்லை. நாம் இங்கு இருக்கிற ஐந்து வருஷ காலத்தில், எல்லாரும் ஒரே குலத்தில் பிறந்தவர்கள் என்ற உணர்ச்சி ஏற்படவேண்டும். இப்பொழுது காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். டி.எம்.கே. கட்சிக்காரர்கள் வேறு, சுதந்திரக் கட்சிக்காரர்கள் வேறு இதைத் தவிர லீகர்கள் வேறு இருக்கிறார்கள். எங்கள் தொகுதியிலே ஒரு பஸ் ஸ்டாண்டு திறப்பு விழாவிலே கனம் உதவி சபாநாயகர் கலந்துகொண்டார். நானும் யதேச்சையாக உட்காரப் போனேன். கள்ளக்குறிச்சி தொகுதி எம்.எல்.ஏ. கலந்து கொள்கிறார் என்றாவது போடக் கூடாதா? எனக்கு வந்த அழைப்பில் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். அவர் முன்னிலையில் இரண்டொரு வார்த்தைகள் பேச வேண்டுமென்று கேட்டேன். அங்கே இருந்த இரண்டு, மூன்று



தலைவர்களைக் கேட்டேன். தாலுகாக் கமிட்டித் தலைவரையும் கேட்டேன். உதவி சபாநாயகர் அவர்களையும் கேட்டேன். சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்பொழுதாவது கனம் உதவி சபாநாயகர் ஐந்து நிமிஷம் கொடுத்தால் பாராட்டுக்குரியதாக இருக்கும். (சிரிப்பு.)

என்னுடைய தொகுதியிலே கோமுகி நதித் திட்டம் வேலை நடந்துகொண்டிருக்கிறது. புதிதாக வெட்டுகிற வாய்க்கால் வடக்குப் பக்கம் போகிறது. கள்ளக்குறிச்சிக்குத் தென்புறத்தில் தான் வரண்ட பிரதேசம் இருக்கிறது. ஆட்டுப்பண்ணை வரையில் இந்தத் தண்ணீரைக் கொண்டுவந்தால் அங்கேயுள்ள தண்ணீர்ப் பஞ்சம் ஓரளவுக்கு நீங்கும். இதைப் பற்றி அண்மையில் ஒரு கேள்வி போட்டு, அந்த வாய்க்காலை நீட்டும் உத்தேசம் உண்டா என்று கேட்டேன். கணக்குப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று என்னைக் கேட்டார்கள். கணக்குப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் என்சினியர்களுக்கு அனுப்பி, எவ்வளவு தூரம் கொண்டு போகலாமென்று பார்க்க வேண்டுமே தவிர, நான் என்ன கணக்குப் போட்டுச் சொல்ல முடியும்? கள்ளக்குறிச்சி வட்டம் மிகவும் பிற்போக்கான பகுதி. ஆகவே இந்த அணைக்கட்டுத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படும்படிச் செய்யவேண்டும்.

எங்கள் பகுதியில் ஹரிஜன மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்பட்டு, 100, 200 வீடுகள் வெந்து போய்விடும். கனம் உதவி சபாநாயகர் தொகுதியிலேகூட தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஒரு தீ அணைக்கும் படையை அங்கே நிறுவுவதற்கு, கனம் முதல் அமைச்சர் அவர்கள், அவர்களுடைய ஆட்சி காலத்திலேயே ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

மற்றுமொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். துரியனிடம் மகாவிஷ்ணு தூது போனபொழுது, இது யார் வீடு என்று கேட்டதற்கு, விதுரர் மாத்திரம் தங்களுடைய அரண்மனை என்று சொன்னாராம். அப்பேர்ப்பட்ட மனிதர் ஒருவரைத்தான் பார்க்கிறேன் என்று அவர் சொன்னாராம். முன் நாட்களில் இதை எல்லாம் சொல்லுவார்கள். அந்த முறையிலே என்னுடைய தொகுதியிலே ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு அரசுமணி என்பவர் பி.டீ.ஓ. ஆக வந்தபிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் சோமசுந்தரம் என்பவர், ஹரிஜனச் சேரியிலே ஒட்டர் 750 பேர் ஜனத்தொகை கொண்ட இடத்திலே ஒரு ஓவர் ஹெட் டாங்க் கட்ட கல் நாட்டு விழா செய்து வைத்தார். அந்த திட்டத்தை அரசுமணி ரத்து செய்துவிட்டார். எனக்குச் சிரிப்பு வருகிறது. நமது மாநிலத்திலே உள்ள பல பிளாக்குகளில் ஒன்றான சின்னசேலம் யூனியனிலே சின்னசேலம் ஹரிஜன காலனியில் ஒரு ஓவர்ஹெட் டாங்க் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைக் கட்டினால், அங்கேயுள்ள ஹரிஜன மக்களுக்கு தண்ணீர் வசதி கிடைக்கும். நல்ல முறையில் அவர்கள் வாழ வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, ராயப்பனூர் எல்லையைச் சேர்ந்த 150 எக்கர் நிலத்தை திரு. சீதாபதி என்ற ரெவின்யு டிவிஷனல் ஆபீசர் இதர ஜில்லாக்காரர்களுக்கு அடமானம் செய்ததை, திரு. சின்னப்பன்

என்ற தாசில்தார் முயற்சியினாலே, அதை ரத்து செய்து, இன்றைக்கு அது விவாதத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக கனம் அமைச்சர் ராமைய்யா அவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். தரிசு நிலத்தை வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏழை எளியவர்களுக்குக் கிடைப்பதில்லை. கணக்குப்பிள்ளை 'பில்' தயார் செய்கிறேன் என்று சொல்லுகிறார். பிறகு நில அடமான தாசில்தார் 'பைல்' போடவில்லை என்று சொல்லுகிறார். சில நாட்கள் கழித்துப் பார்த்தால், 5 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் பணக்காரனுக்குக் கொடுக்கப்படுகிறது. ரூபாய் 500 கொடுத்தால் பணக்காரனுக்கு நிலம் போய்ச் சேருகிறது. இதை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ர. ஜீவரத்னம்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மனப்பூர்வமாக வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு எங்களுக்கு ஒரு சந்தோஷமான ஆண்டு. நாங்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த கல்லூரியை எங்கள் ஜில்லாவிலே திறப்பதற்கு முன் வந்ததற்கு கனம் முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய ஜில்லாவிலே எங்களுக்குப் பல தேவைகள் இருக்கின்றன. இருப்பினும் இந்தக் கல்லூரியை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். 'சோஷலிச சமுதாயம்' என்பதைப் பற்றி இங்கே பலவிதமாகப் பேசப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில் ஒரு மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு, படிப்பதற்கு வசதி, இந்த நான்கு குறிக்கோள்களும் நிறைவேறினால், அதுவே சோஷலிஸம் என்று சொல்லுவேன். அந்த முறையில் பார்க்கும்பொழுது, 'சோஷலிஸம்' என்று வெளியிலே பிரமாதமாகப் பேசுகிறவர்களுடைய வார்த்தைகளை எடுத்துக்கொள்ளாமல், சோஷலிஸப் பாணியிலே நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதற்கு இந்த பட்ஜெட்டிலே பல உதாரணங்கள் இருக்கின்றன. இலவசக் கல்வித் திட்டம் இந்த ஆண்டு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, ஆண், பெண் இரு பாலாருக்கும் 11-வது வகுப்பு வரை இலவசக் கல்விச் சலுகை அறிவித்திருப்பதை சரித்திரத்திலே முதன்மையாகக் கருதவேண்டும். அந்த அளவுக்கு புவனேஸ்வர சோஷலிஸ லட்சியம் நம்முடைய மாநிலத்தில் முதன்முதலாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதற்காக நம்முடைய முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக வீட்டு வசதியைப் பற்றிப் பேச விரும்புகிறேன். நமது சமுதாயத்திலே குற்றங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக இருக்கக்கூடிய போலீசாருக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுப்ப





தற்கு இந்த ஆண்டு பட்ஜெட்டிலே தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக கனம் நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இங்கே போலீசாரைப் பற்றி பிரமாதமாகப் பேசுகிறவர்கள்தான் அவர்களுக்கு அதிகமாகத் தொந்தரவைக் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள போலீசாரின் நிலை பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது. ஜனநாயகம் என்ற போர்வையிலே பொதுக் கூட்டங்கள் போடுகிறார்கள். கண்டபடி பேசி மக்களுடைய ஆவேச உணர்ச்சியைத் தூண்டிவிடுகிறார்கள். பொதுக் கூட்டத்திலே பேசினால், சுருக்கெழுத்தாளர் குறிப்பு எடுக்கிறார்கள் என்பதற்காக, முஸ்லீம் லீகர்கள் மசூதிகளிலே கூட்டம் போட்டுப் பிரசாரம் செய்கிறார்கள். நகரசபைத் தேர்தலின்போது, லீகர்கள் மசூதிகளில் கூட்டம் போட்டு, கிழக்கு வங்காளக் கலவரங்களைப் பற்றியும், நமது முதலமைச்சரைப் பற்றியும், அகில இந்திய காங்கிரஸ் மகாசபைத் தலைவரைப்பற்றியும், பண்டித நேருஜி அவர்களைப் பற்றியும் கேவலமாகப் பேசியிருக்கிறார்கள். அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுத்தால் மிக நன்றாக இருக்கும். இந்த நிலைமை வளர்ந்து கொண்டே போனால் வகுப்பு துவேஷம் ஏற்பட்டு, வகுப்பு கலவரம் ஏற்படும் நிலைமை என்னுடைய பகுதியில் இருக்கிறது என்பதை முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய பகுதியில் பொற்கொல்லர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

திரு. ப. உ. சண்முகம்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். "வகுப்புக் கலவரம் என்னுடைய பகுதியில் ஏற்படும்" என்று அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். வகுப்புக் கலவரத்திற்கு பேசுகிற அங்கத்தினரே தூபம் போடுகிறாரா என்று கேட்கிறேன்.

**MR. DEPUTY SPEAKER:** அங்கத்தினர் அவர்கள் தொடர்ந்து பேசலாம். There is no point of order.

திரு. ர. ஜீவரத்னம்: வகுப்புக்கலவரம் ஏற்படும் நிலைமையை முஸ்லீம்கள் உருவாக்கி வருகிறார்கள். அதற்குச்சிலர் உடந்தையாக இருந்து கண்ட கண்டபடி அகில இந்திய காங்கிரஸ் அக்கிராசனர், பிரதம மந்திரி அவர்களைப் பற்றி தாக்குகிறார்கள். ஒரு மனிதன் எத்தனை நாட்களுக்குத்தான் இதையெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்க முடியும். மனிதனை மனிதன் தாக்குவதே அநாகரிகமானது. அரசியல் ரீதியில் பேசலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட மனிதனை தாக்குவது சட்டத்திற்கு, நியாயத்திற்கு, நீதிக்கு உகந்தது அல்ல என்று உதவி சபாநாயகர் அவர்கள் மூலமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. ர. ஜீவரத்னம்] [4th March 1964

பொற்கொல்லர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று இந்த நிதி ஆண்டில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் சமீபத்திலே நடந்த பொற்கொல்லர்கள் மாநாட்டில் மதிப்பிற்குரிய கைத்தொழில் அமைச்சர்கூட கலந்து கொண்டார்கள். நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் கொடுக்கப்பட்டன. அந்த நிவாரணங்களை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

போலீஸ்காரர்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். கடந்த ஆண்டு விலை வாசிப் போராட்டம் என்று ஒரு போராட்டம் நடத்தி போலீஸ்காரர்களை தாக்கி பலரும் அடித்தார்கள். பலபேர் ஆஸ்பத்திரியில் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல போலீஸ்காரர்களுக்கு வீடுகள் இல்லாமல் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அந்த அலவன்ஸ் நகர்ப்புறங்களில் அதிகமாக கூட்டிக் கொடுக்க வேண்டும். அல்லது வருஷத்துக்கு இவ்வளவு வீடு என்று நிர்ணயித்து கட்டிக் கொடுக்க வேண்டும். கட்டும் வீடுகளிலும் விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்டிருக்கும் பல நவீன வசதிகளையும், டிசைன்களை மாற்றியும் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்களுடைய ஜில்லாவில் ஹைஸ்கூல்கள் அதிகமாக இருந்தாலும் வேண்டிய கட்டிடங்கள் இல்லை. அதைப்பரிசீலனை செய்து வருஷத்துக்கு இவ்வளவு என்றாவது நிர்ணயித்து கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவு உற்பத்தியைப் பற்றிப் பேசும்போது தஞ்சைக்கு அடுத்தபடியாக வட ஆற்காடுதான் உணவு உற்பத்தி செய்கிறது. ஓர் அளவு தஞ்சையைப்போல் பாசன வசதி இல்லாவிட்டாலும் கிணற்றுப்பாசனத்தின் மூலம் உணவு உற்பத்தியை பெருக்கி வருகிறோம். இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய பாலாறு பேசின் விதிகள் குறுக்கே நிற்கின்றன. இந்த விதிகளை ரத்து செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறோம். இந்த பாலாறு பேசின் விதியை ரத்து செய்தால் உணவு உற்பத்தி அதிகமாகும் என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் எடுத்துச் சொல்லி, அவர்கள் இந்த விதிகளை ரத்து செய்தால்தான் உணவு உற்பத்தியும் முன்னேற முடியும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது இல்லாத வரையில் மனு போட்டு ஒரு வருஷம், 8 மாதம், 9 மாதம் என்று காத்திருக்கும் சூழ்நிலையை மாற்ற வேண்டும்.

மதுவிலக்கை தீவிரமாக அமுல் நடத்தவேண்டும். மது வகைகள் சாதாரணமாக கிளப்புகள் எந்த இடங்களில் இருக்கின்றனவோ அங்குதான் அதிகமாக இருக்கின்றன. இவைகளை துரிதமாக கண்டுபிடித்து, கிளப்புகளை எல்லாம் சோதனை செய்து, அதற்கு வேண்டிய அதிகாரத்தை போலீசுக்கு கொடுத்து தக்க



4th March 1964] [திரு. ர. ஜீவரத்னம்]

நடவடிக்கை எடுத்தால் இம்மாதிரி மது வகைகள் எங்கு கிடைக்கின்றன என்று அறிய முடியும். மது விலக்கு கண்டிப்பாக வேண்டும். யாரோ சொல்கிறார்கள், என்பதற்காக அதை ரத்து செய்து விடுவது நல்லதல்ல. மது விலக்கு காந்தியடிகளின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று. மகாத்மா காந்தியின் முயற்சியால் தான் நம் நாடு சுதந்திரம் பெற்றது. ஜனநாயகத்தின் பெயரால் இன்றைக்கு கன்னாபின்னா என்று பேசும் உரிமை ஏற்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியின் திருநாமம் உலகம் உள்ளவரையில் இருக்கும். அது வரை மதுவிலக்கும் இருக்க வேண்டும், அதைக் கண்காணிப்போடு அமுல் நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய பகுதியிலிருந்து வெல்லம் வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அண்டை ராஜ்யங்களுக்கு செல்லக் கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியை தளர்த்தி வெளிராஜ்யங்களுக்கு செல்லும் அளவிற்கு அனுமதி அளிக்குமாறு பரிசீலனை செய்யவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களையும் விவசாய இலாக்கா அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அதை நிவர்த்திக்க பரவலாக தொழில்கள் வேண்டுமென்று கேட்கிறோம். அதற்கு இரண்டு நூற்பு மில்கள் எங்கள் பகுதிக்கு அளித்திருக்கிறார்கள். இன்னும் பரவலாக தொழில்களை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத் தலைநகரத்தில் வீடுயில்லாத பிரச்னை இருக்கிறது. அதனால் மத்திய தர வகுப்பினர் அவதிப்படுகிறார்கள். ஆகவே, வேலூர் நகரத்திற்கு ஒரு வருஷத்திற்கு நூறு வீடுகள் என்ற வகையில் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

*** திரு. கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் வரவுசெலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இது ஒரு மாடல் பட்ஜெட். நம் நாட்டில் இந்த ஆண்டில் 334 லட்சம் துண்டு விழும் என்று காட்டப்பட்டிருக்கிறது. அதைச் சரிகட்ட பருத்தி நூல், பருத்திக் கழிவு, நாற்பட்டு முதலிய இனங்களில் 1 பர்சன்டிலிருந்து 2 பர்சன்டாக வரி ஏற்றப்பட்டிருக்கிறது. இதை சரியாக நல்ல முறையிலே அமல் படுத்தினால் ஓரளவுக்கு சரிகட்ட முடியும்.

வருவாய்துறைகளில் வசூல் செய்யப்படுவதைப்பற்றி ஒரு வார்த்தைச் சொல்ல விரும்புகிறேன். சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ்களில் கிராம மக்கள் தங்கள் ஸ்தாவர சொத்துக்களை விற்று வாங்குவதில்

ரெஜிஸ்டர் செய்யும்பொழுது சொத்துக்களின் மதிப்பை குறைத்துப் போடுவதால் வருவாய் குறைகிறது. அந்த சொத்துக்களின் மார்க்கட்டு வேல்யுவை தெரிந்து சப் ரிஜிஸ்டிரார் பத்திரங்களை பதிவு செய்ய முடியுமானால் அந்த வருவாய் துறை நல்ல முறையில் இயங்க முடியும். எவ்வளவு சட்டம் இயற்றினாலும், திட்டம் போட்டாலும், மக்கள் ஒத்துழைப்பு முக்கியமாக வேண்டும். உதாரணமாக, மதுவிலக்கு செயல்பட கள்ள மார்க்கெட்டை ஒழிக்க, மருந்து கலப்படம், எண்ணைக் கலப்படம், இவற்றை தடுக்க, லஞ்சத்தை ஒழிக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும், முக்கியமாக நம் நாட்டில், தமிழ் நாட்டில், இந்த மூன்றாவது திட்டத்தில் அரிசி 17 லட்சம் டன் அதிகம் உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டமிட்டு இருக்கிறோம், கண்டிப்பாக அப்படிச் செய்ய முடியும் என்று சொல்ல விரும்புகிறேன். அந்த முறையில் விவசாயிகளுக்கு நல்ல முறையில் ஊக்கம் அளிக்க வேண்டும். பண வசதியும், சரியான காலத்தில் உர விநியோகம் செய்யவும் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்; இந்த சமயத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் யூரியா உரத்தை டன் ஒன்றுக்கு ரூபாய் 100 என்று குறைத்திருக்கிறார்கள். அது போற்றத் தக்கது.

விவசாயி எவ்வளவு பாடுபட்டாலும், பருவம் உதவி செய்ய வேண்டும், இயற்கை உதவி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவன் முயற்சிகள் பயனளிக்காது. விவசாயியின் விளைச்சலை பூச்சி வெட்டு, எலி வெட்டு பாதிக்கிறது. அவற்றைத் தவிர்க்க பூச்சி நாசினிகள் நல்ல தருணத்தில் இல்லாததால் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய லாபம் கிடைக்காமல் போய்விடுகிறது. இதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கன்ஸுமர்களுக்கும் ப்ரொட்யூசர்களுக்கும் ஸாடஸ் பாக்டரியாக இருக்கும்படி விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்கின்றன. அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதில்லை. அந்தக் கஷ்டத்தை தவிர்க்க அரசாங்கம் நியாய விலைக் கடைகளை வைத்து அத்தியாவசியமான பண்டங்கள் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்து வருவது போற்றத் தக்கது. நம்முடைய நாட்டில் ஒரு லட்சம் டன் அரிசி இந்த ஆண்டிலே வியாபாரிகளிடமிருந்தும் மில்காரர்களிடமிருந்தும் கொள்முதல் செய்வதென்று சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

நாம் எவ்வளவோ முயற்சி செய்து நம்முடைய நாட்டிலுள்ள பெரிய நதிகளின் குறுக்கே நீர்த்தேக்கங்கள் கட்டி, கால்வாய் வெட்டி, நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்திக்கொண்டுவிட்டோம் மேற்கொண்டு அணைகள் கட்டுவதற்கு நமக்கு வசதி இல்லை. இந்த நிலையில் அண்டை மாநிலங்களில் உள்ள நதிகளின் உபரித் தண்ணீரை நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டுவர ஆவன





செய்யவேண்டும். அதன் மூலமாக நம்முடைய நாட்டில் இன்னும் அதிகமாக விவசாய உற்பத்தியைப் பெருக்கி, விலை ஏற்றத்தைக் குறைக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

சிறு பாசனத் திட்டங்களும் நாட்டில் அமுலாகிக் கொண்டிருக்கின்றன. கோமுகி நதித் திட்டத்திற்கு 93 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. கடானா நீர்த்தேக்கத் திட்டத்திற்கு 89 லட்ச ரூபாய் செலவழிக்க இருக்கிறோம். இது மிகவும் வரவேற்கத்தகுந்த திட்டங்களாகும். பூமிக்கு அடியில் இருக்கும் நீரை ஆர்டீஷியன் வெல்ஸ், டீப் வெல்ஸ், ஃபில்டர் பாயிண்ட் வெல்ஸ் ஆகியவை மூலமாக மேலே கொண்டுவந்து விவசாயம் செய்ய வசதி செய்வதற்கும் இதிலே பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன். ஆற்றோரங்களில் ரிவர் பம்பிங் ஸ்கீம் இன்ட்ரட்யூஸ் செய்து, அதன் மூலமாக மக்களுக்குத் தண்ணீரை நிறைய வழங்க வகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை முக்கியமாக எல்லாக் கிராமங்களுக்கும் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இது மிகவும் போற்றத் தகுந்தது. குந்தாத் திட்டம், மேட்டூர் சுரங்க நீர் மின்சாரத் திட்டம், கோதையாறு திட்டம் இவைகளுக்கெல்லாம் நாம் பணம் செலவழிக்கிறோம். தென்னாற்காடு ஜில்லாவில் நெய்வேலித் திட்டத்தில் நான்கு யூனிட்கள் வேலை செய்யத் தொடங்கியுள்ளன. ஐந்தாவது யூனிட்டும் வேலை செய்யத் தொடங்கியிருக்கிறது. அதோடு, ஹோகனக்கல் திட்டத்தைக் குறித்து, அண்டை மாநிலமான மைசூர் மாநில சர்க்காரோடு நல்ல முறையில் பேசி, அதையும் எடுத்துக்கொண்டு நிறைவேற்றினால் நமக்கு மின்சாரப் பற்றாக்குறை இருக்காது என்று நான் சொல்லிக் கொள்ளுகின்றேன். இந்த நிலையில் அணு மின்சார நிலயத்தைக் கல்பாக்கத்தில் விரைவாக ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கனரகத் தொழிற்சாலைகள் நம் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. அதன் மூலம் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இரும்பு உருக்குத் தொழிற்சாலையை சேலத்தில் நிறுவுவதாகத் திட்டமிட்டு, நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிலக்கரி, எரிபொருள் எல்லாம் தென்னாற்காடு ஜில்லாவில் நெய்வேலியிலிருந்து போக வேண்டியிருக்கிறது. அதைக் கொண்டு போக வாகனங்கள் இல்லை. சேலத்திலிருந்து இரும்புத் தாதுப் பொருளை எடுத்து நெய்வேலிக்குக் கொண்டுவந்தால் நெய்வேலியில் இரும்பு உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பெரிய நதித் திட்டங்களைக் கொண்டுவந்திருந்தாலுங்கூட கிராமப் புறங்களிலே, அதுவும் சில வட்டங்களிலே இருக்கும் நீர் நிலைகளை நல்ல முறையில் பராமரிப்பு செய்து கொடுக்கவேண்டும்.

லட்சக்கணக்காகப் பணம் செலவு செய்தால் மட்டும் போதாது. அதைச் சீர்திருத்தம் செய்து, தூர் வாரி நல்ல முறையில் விவசாயத்திற்குப் பயன்படச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக, விருத்தாசலம் தாலுகாவில் வெலிங்டன் ரிசர்வாயர் 28,000 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கக்கூடியதாகும். இந்த ஏரியில் சரியான முறையில் தண்ணீர் பிடிக்காததால், 20,000 ஏக்கரில்கூட பயிர் ஏறவில்லை. இதற்கு வேறொரு கால்வாய் கொண்டுவரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். சாத்தனூர் தேக்கத்தின் உபரித் தண்ணீரை கள்ளக்குறிச்சி வழியாகக் கொண்டுவந்து 22-வது மைலில் வெள்ளாற்றில் விட்டு, அதன் மூலம் விவசாயத்திற்கு மேலும் பாசன வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சிமெண்ட் தொழிற்சாலை, சர்க்கரைத் தொழிற்சாலை ஆகியவைகளை நிறுவும்போது, சிறிய சிறிய ஆலைகளை மாவட்டங்களில் நிறுவினால் நன்றாக இருக்கும். தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் ஒரு கூட்டுறவு சர்க்கரைத் தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. அதே போல், தென்னாற்காடு ஜில்லாவில் விருத்தாசலம் தாலுக்காவில் பெண்ணாடத்தில் தனியார்த் துறையில் அருணா ஷுகர் பாக்டரி ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பொழுதுதான் அதற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அதைச் சீரிய முறையில் விரிவாக்கிச் செயல்படுத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தென்னார்காடு ஜில்லாவில் முந்திரி அதிகமாக விளைகிறது. விவசாயிகளுக்கு இன்சென்டிவ் அதிகமாகக் கொடுக்க வேண்டும். அங்கே ஒரு முந்திரித் தொழிற்சாலை ஏற்படுத்தினால் முந்திரி எண்ணெய் தயாரிப்பது, முந்திரிப் பழத்திலிருந்து ஜாம் தயாரிப்பது, முந்திரித் தோலிலிருந்து ப்ளாஸ்டிக் செய்வது ஆகியவற்றைச் செய்ய உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நெய்வேலித் திட்டம் சிறந்த முறையில் நிறைவேறி வருகிற காரணத்தால், கடலூர் துறைமுகத்தைச் சீரிய முறையில் அபிவிருத்தி செய்வதோடு கூடிய விரைவில் அதற்குத்தேவையான இம்ப்ரூவ்மெண்ட் செய்யவேண்டும்.

விருத்தாசலத்திலிருந்து சேலத்திற்கு ரயில் பாதையை ப்ராட் கேஜ் ஆக்குவதோடு, கடலூர்-விருத்தாசலம் ரயில் பாதையில் மின்சார ரயில் விட ஏற்பாடு செய்ய மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சுகாதாரத் துறையில் நல்ல முறைகளை நம்முடைய அரசாங்கம் கையாண்டு வருகிறார்கள். ஆங்காங்கு காலரா நோய் பரவியிருந்தாலுங்கூட, தென்னாற்காடு மாவட்டத்தில் காலராவினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம். மற்ற ஜில்லாக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தென்னாற்காடு ஜில்லாவில் இது சற்று அதிகம்தான்.





என்றாலும் கூட, சுகாதார இலாகாவினர் நல்ல முறையில் இதைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக, நான் அந்த இலாகாவினரை பாராட்டுகிறேன்.

திட்டக்குடியிலும், விருத்தாசலத்திலும் உள்ள சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் ஆப்ரேஷன் தியேட்டரும், எக்ஸ்-ரே ப்ளாண்டும் அமைக்கப்பட வேண்டும். படுக்கை வசதிகளும் அதிகமாகப் பெருக்கப்படவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஃபயர் என்ஜின் முக்கியமாக முனிசிபல் நகரங்களில் தான் வைக்கலாம் என்று விதி இருக்கிறது. அந்த விதியைத் தளர்த்தி தாலுக்கா தலைநகரங்களிலும் வைக்க வகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விருத்தாசலம் தாலுக்காவில் அதிக தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. நெய்வேலியில் ஃபயர் என்ஜின்கள் இருக்கின்றன. அந்த ஃபயர் என்ஜின்களைக் கொடுத்து உதவ நம்முடைய மாநில சர்க்கார் முன்வரவேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கின்றேன். எனக்கு இதுவரையில் பேச சந்தர்ப்பம் கொடுத்த கனம் உதவி சபாநாயகருக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

* திரு. அ. துரையரசன்: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே என்னுடைய கருத்துக்களையும் தங்கள் மூலம் இந்த மன்றத்தில் எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

1964-65-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் போலீசுக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். காந்தியார் அவர்கள் போலீஸ் இல்லாத ஆட்சியையே விரும்பினார்கள். நம்முடைய அமைச்சர்கள் போலீசை நம்பி ஆட்சி நடத்துகிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாக அமைந்திருக்கிறது. எல்லையிலே ஏற்பட்டிருக்கிற தொல்லைகள் தளர்ந்து வருகின்றபோதும் திட்டமிட்ட பல வேலைகளை, எல்லைகளிலே ஏற்பட்ட தொல்லைகளைச் சுட்டிக்காட்டி, இன்னமும் காலம் தாழ்த்தி வருவது சரியல்ல. ஆகவே, சம்பந்தப்பட்ட இலாக்காக்களுக்கு உத்தரவிட்டு துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மாநிலத்தில் திட்டங்களை நிறைவேற்றுவதில் மனக்கிலேசமும் சங்கடமும் ஏற்பட்டிருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கேற்பட்ட காரணங்களைக் கண்டறிந்து, [illegible] செயல்படவேண்டுமாய் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. அ. துரையரசன்] [4th March 1964

விலைவாசி ஏற்றத்தைப்பற்றி நாங்கள் எடுத்துச்சொன்னபோது கேலியும் கிண்டலும் பேசினார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களே, "விலைவாசி ஏற்றத்தினுடைய சங்கடங்களை நான் அறிவேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைந்தாலும் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி அடிக்கடி இப்பொழுது அந்தத் தரப்பிலே பேசப்படுவதைப் பார்த்தால், இது 1967-ஆம் ஆண்டுக்கு அஸ்திவாரமோ என்று வாக்காளர்கள் சந்தேகப்படுகிறார்கள்.

பெரு நகரங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படுவது குறித்து மகிழ்ச்சி அடைந்தாலும், ஒவ்வொரு வட்டத் தலைநகரத்திலும் நியாய விலைக் கடைகள், விறகு டிப்போக்கள் திறக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத்தைப் பெரும்பாலோர் நம்பியிருக்கிறார்கள் என்று உண்மையிலேயே நம்முடைய அமைச்சர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்

என்று பாரதியார் பாடினார்கள். ஆனால், புதிதாகப் போடப்பட்டிருக்கிற வரி ரூபாய்க்கு 90 காசு, ஏற்கனவே பஞ்சாயத்து போர்டுகள், பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் விதித்திருக்கின்ற வரி, இந்த ஆண்டு குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பருவ மழை தவறியதால் ஏற்பட்டிருக்கிற பஞ்சம் ஒரு பக்கம், பாசனப் பகுதிகளில் ஏற்பட்ட விளைச்சல் பாதிப்பு ஒரு பக்கம், இவைகளுக்கு மத்தியிலே சர்க்கார் கடன் தொல்லைகள், சர்க்கார் கிஸ்தி வகையறுக்களை பழைய பாக்கிகளை சேர்த்து வசூலிப்பது, கட்டாயக் கொள்முதல், இவைகளுக்கு மத்தியிலே விவசாயிகள் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை எண்ணிப் பார்க்கின்றபோது,

உழவுக்கும் தொழிலுக்கும் நிந்தனை செய்வோம், வீணில்
உண்டு களித்திருப்போரை வந்தனை செய்வோம்

என்று பாடுவதில் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். நெல் கொள்முதல் வியாபாரிகளுக்கு வேண்டாத தொல்லைகளைத் தருகிறது. அவைகளை எல்லாம் போக்க அரசாங்கம் முன்வர வேண்டும். பூச்சி மருந்துகளை இன்னமும் மலிவான விலைக்கு காலா காலத்தில் கொடுக்க வழி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வரி வஜா செய்யவும், மற்ற பகுதிகளில் கடன், வரி வசூல் ரெண்டு காலத்திற்கு தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒத்திவைக்கவும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

65 வயதுக்கு மேற்பட்ட அனைத்து முதியவர்களுக்குப் பென்ஷன் அளிப்பது என்பதை 60 வயதுக்கு மேற்பட்ட என்று குறைத்திருப்பதற்கு நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். என்றாலும் நியாயமாகப் பென்ஷன் கிடைக்கவேண்டியவர்களுக்குக்கூட இன்னும் கிடைக்காமல் இருக்கிறது. வேண்டப்படாதவர்களுக்கும் டாக்டர் சர்டிபிகேட் வாங்கி வரவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இருப்பதனால் சிரமமான நிலை ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக இதற்கென்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தாசில்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் போட்டு வந்திருக்கக்கூடிய விண்ணப்பங்களை எல்லாம் பரிசீலிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் விதவைகளுக்கும் உச்ச வரம்பு வயது நிர்ணயிக்காமல் எல்லோருக்கும் பென்ஷன் அளிப்பதற்கும் சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பகல் உணவுத் திட்டம் செம்மையாக நடைபெறுகிறது என்று பெருமைப் படலாம். அது தேர்தல் காலத்தில் ஆளும் கட்சியினர் வோட்டு வாங்குவதற்குப் பயன்படுகிற திட்டமாக இருக்கிறதே தவிர நூற்றுக்கு 90, 95 இடங்களில் சரியாக நடைபெறவில்லை என்பதை நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



4th March 1964] [திரு. அ. துரையரசன்]

மதுரையில் பல்கலைக் கழகம் வருவது பற்றி மகிழ்ச்சி. தமிழுக்கு உறைவிடமான அந்த இடத்தில் இந்தப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்துவது பற்றி மகிழ்ச்சி அடைவதாக அமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அதேசமயம் தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழர்களது பண்பாடு அழியும் வரையில் இந்தி இன்றையதினம் திணிக்கப்படுவதைக் கண்டு வருந்தாமல் இருக்க முடியாது. அந்தத் தரப்பில் உள்ளவர்கள் இந்திக்கு உதட்டளவில் ஆதரவு தெரிவித்தாலும் அதனால் நம்முடைய தாய் மொழி நிச்சயமாகப் பாதிக்கப்படும் என்பதை உணருகிறார்கள். உலகத் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தையும், உள்ளாட்சி நிர்வாகத்திற்கு தாய் மொழியான தமிழையும் தான் வைக்கவேண்டும் என்று நம்முடைய அரசாங்கம் மத்திய அரசுக்கு வற்புறுத்த வேண்டும், இந்தி கூடவே கூடாது என்பதை நான் தங்கள் மூலமாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதோடு வரலாற்றில் கறைபடியாமல் அமைச்சர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் கிராமப்புறங்களில் விவசாயத்திற்கும், பம்பு செட்டு வைப்பதற்கும் தாராளமாக மின்சாரம் வழங்கப்படவேண்டுமென்று உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாக் குழந்தைகளுக்கும் 11-வது வகுப்பு வரை இலவசக் கல்வி அளிப்பது என்று எடுத்திருக்கும் முடிவானது மகிழ்ச்சியை அளிக்கிறது. இதனால் 11-ஆவது வரை படித்து வெளி வருகிறவர்களுடைய தொகை அதிகமாகலாம். ஏற்கனவே குறைந்திருக்கிற கல்வித் தரம் இதனால் மேலும் குறைந்து போகாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் அறந்தாங்கி வட்டத்தில் ஒன்னரை லட்சம் மக்கள் இருக்கிறார்கள். பக்கத்து நகரங்களில் உள்ள கல்லூரிகளுக்குச் சென்று படிக்க முடியாத ஏழை மக்களாக இருக்கிறார்கள். ஆகவே அந்தத் தாலுக்கா தலைநகராகிய அறந்தாங்கியில் ஒரு கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது ஹைக்கோர்ட் ஜெட்ஜ் நியமனம், கவர்னர் சிபார்சின் பேரில் ஜனாதிபதி நியமிப்பதாக இருக்கிறது. ஆகவே நீதிபதிகள் கூட கட்சிக்கண்ணோட்டத்தோடு தீர்ப்பு வழங்க இட மேற்படுவதாக மக்கள் சந்தேகப்படுகிறார்கள். அப்படியின்றி சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கொண்ட ஒரு கமிஷனை நியமனம் செய்து அந்தக் கமிஷன் மூலமாக உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமனம் செய்யுமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் அரசியல் வாதிகளின் தயவுக்கு உட்பட்டு அவர்கள் செயல்படாதிருக்க வழியேற்படும். சுதந்திரம் காக்கப் படுவதுடன் ஜனநாயகம் நிலைத்து நிற்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் ஹைக்கோர்ட் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அவர்களை நேராகச் சொல்லவில்லையென்றாலும், மறைமுகமாக அவர்கள் கொடுக்கிற தீர்ப்பை குற்றம் சொல்லும் வகையில் கனம் அங்கத்தினர் பேசுவது கூடாது. இந்த மாதிரி அவர்கள் பேசினார்கள் என்றால் அதற்குப் பதில் இங்கிருந்து அதுபற்றி யாராவது பேசலாம். இரண்டு பக்கத்திலும் இருந்துமே நீதிமன்றங்களைப் பற்றி இங்கே பேசுவது கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. துரையரசன் :** கனம் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்ட காரணத்தினால் அதை நான் விட்டுவிடுகிறேன். அடுத்து தமிழக அரசாங்க ஊழியர்களின் நிலைமையைப்பற்றி பேசுகிற போது அந்தத் தரப்பில் உள்ளவர்கள் இது நீலிக்கண்ணீர் என்றும், போலிக் கண்ணீர் என்றும் பேசினார்கள். இது நீலிக் கண்ணீரும் அல்ல, போலிக் கண்ணீரும் அல்ல, உண்மையான நிலவரத்தைத் தான் எடுத்துச் சொல்கிறோம். அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து நமது முதல் அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அவர்களுடைய பஞ்சப்படியை உயர்த்த முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மொழியினால் பாதிக்கப்பட்டிருக்கிற இலங்கை வாழ் தமிழர்களுக்கு புனர்வாழ்வளிக்க நாம் மிகவும் கடமைப்பட்டிருக் கிறோம். இதுபற்றி மத்திய அரசாங்கம் போதுமான அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நமது அரசாங்கம் வற்புறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தமாக பல இடங்களில் எஸ்.ஹ.பி. டிவிஷன் வேலையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது. அறந்தாங்கி பகுதியில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள அணைக்கட்டுப் பகுதிக்கு போவதற்கு ரோடு வசதி கிடையாது. அதற்கு நிதி வசதி இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே ஸ்பெஷல் கிராண்டு கொடுப்பதன் மூலம் உடனடியாக இந்த அணைக்கட்டு வேலைகளுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அறந்தாங்கி போன்ற நிலையம் கட்டுவதற்கு கடன் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கடன்





உதவியையும் அளிக்கவேண்டும். இன்றையதினம் அறந்தாங்கியில் குடிதண்ணீர் சப்ளைக்காகக் கட்டப்பட்டுள்ள ஒரு டாங்க் போதவில்லை. கோடைக்காலத்தில் தண்ணீர் கஷ்டம் ஏற்படுகிறது. எனவே மேலும் ஒரு ரிசர்வாயர் கட்ட உதவி செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். புதிதாக இந்திய சர்க்கார் 12 நூற்பு ஆலைகளைத் தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். அதில் ஒரு நூற்பு ஆலையை அறந்தாங்கிப் பகுதியில் ஏற்படுத்த வேண்டும் என்று தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக் கிறோம். அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அந்தப் பகுதி தொழில் துறையில் மிகவும் பிற்போக்காக இருப்பதனால் உடனடியாக அந்தப் பகுதிக்கு அந்த நூற்பு ஆலையை அலாட் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற முன்வந்துள்ளேன். கனம் அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தினுடைய நிதி நிலை எவ்வளவு சிரமமாக இருந்தாலும் அதிகமாக வரி விதிக்காமலும் அதேசமயத்தில் பல சலுகைகளைக் கொடுத்திருப்பதும் பெரிதும் வரவேற்கத்தக்கது. உண்மையில் இதை நான் பாராட்டுகிறேன். 11-வது வகுப்பு வரை எல்லோருக் கும் கல்விச் சலுகை அளிக்க முன் வந்திருப்பது பாராட்ட வேண்டிய விஷயம். அதுமாத்திரம் அல்லாமல் ஹரிஜனங்களுக்கு ஏதாவது கஷ்டம் நேரும்போது அவர்களுக்கு கோர்ட் முதலியவற்றுக்குச் செல்ல லீகல் எய்ட் கொடுக்க முன் வந்திருப்பதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். முதியோர் பென்ஷன் திட்டத்தை இன்னும் அதிகமான பேர்கள் பயன் அடையக்கூடிய வகையில் அமைத்திருப்பதும் சிறப்பானது. இது விஷயத்தில் இருக்கக்கூடிய சங்கடங்களை நல்ல முறையில் தீர்ப்பது அவசியம் என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வோட்டர் லிஸ்டில் இருக்கக்கூடிய வயதை வைத்து பென்ஷன் முடிவு செய்வது மிகவும் சிரமமாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குடிதண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் ஆங்காங்கு கிணறுகள் வெட்டுகிறோம். ஆனால் ஓராண்டு கழித்து 'வாட்டர் டேபிள்' கீழே போய்விடுகிறபடியால் திரும்ப வும் அடி வெட்டு வெட்டக் கூடிய நிலைமையில் இருக்கிறோம். இந்த மாதிரி செய்து கொண்டே போனால் பணம் தான் அதிகமாகச் செலவாகிறதே தவிர, குடிதண்ணீருக்கு நிரந்தரமான ஒரு ஏற்பாடு காணமுடியவில்லை. ஆகவே, இந்த மாதிரி இடங்களில் 'ரன்னிங் வாட்டர் சப்ளை' கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். காவிரி போன்ற இடங்களில் இருந்து தண்ணீரைப் பம்ப் செய்து ஆங் காங்கு கிராமங்களுக்கு ரன்னிங் வாட்டர் சப்ளை செய்வதற்கான திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். சேலம் போன்ற வறண்ட

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [4th March 1964

பிரதேசங்களில், குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் இடங்களில் உடனடியாக இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் ஜில்லாவில் ஒரு புதிய கல்லூரி நிறுவப்படும் என்று நிதி நிலை அறிக்கையில் கண்டிருக்கிறது. அதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சேலத்தில் மட்டுமல்லாது மற்றும் சில இடங்களிலும் கல்லூரிகள் ஏற்படுத்தப் படும் என்று அறிவித்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன். இந்த மாதிரி கல்லூரிகள் ஏற்படுத்தும்போது அந்தப் பகுதியில் எவ்வளவு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன, அந்தப் பகுதியின் ஜனத்தொகை எவ்வளவு என்று பார்த்து கல்லூரிகளை அமைக்கவேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் சேலத்தில் ஒரு கல்லூரி மட்டும் போதாது. இன்னும் அதிகமாகத் தேவைப்படும் என்பதையும், அதற்கு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக கொள்கிறேன்.

சேலத்தில் எஞ்சினியரிங் காலேஜ் ஏற்படுத்துவதற்காக நில ஆர்ஜிதம் எல்லாம் செய்யப்பட்டு வருகிறது. 1964-65-ம் ஆண்டிலேயே அதை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும். ஒரு மெடிகல் காலேஜை சேலத்தில் வைப்பதா அல்லது திருநெல்வேலியில் வைப்பதா என்ற பிரச்னை இருந்தது. சேலத்தில் என்ஜினியரிங் காலேஜ் வர இருப்பதால் மெடிகல் காலேஜை திருநெல்வேலியில் வைக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று நினைக்கிறேன். மேலும் செங்கற்பட்டிலும் ஒரு மெடிகல் காலேஜ் ஏற்படுத்தப்பட இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சேலமும் மெடிகல் காலேஜ் வைப்பதற்கு மிக உகந்த இடம். செங்கற்பட்டில் வைக்கவேண்டாமென்று நான் சொல்லவில்லை. சேலத்திலும் ஒரு மெடிகல் காலேஜை வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தி விஷயத்தில் அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள். பெர்டிலைசர் உரம் தேவையான அளவுக்குக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தால் மாத்திரம் போதாது. அதோடு மாத்திரமல்லாமல் 'சாயில் டெஸ்டிங் லெபாரடரி' ஒன்றை பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று வீதம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு 'அபாரடஸ்' வாங்க 'ஃபாரின் எக்ஸ்சேஞ்சு' கிடைக்கக் கஷ்டமாக இருக்கிறது, என்று சொல்கிறார்கள். பெர்டிலைசர் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்கு இதுவும் முக்கியம். ஆகவே, இதற்கான ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்கள் எல்லாம் எமர்ஜன்ஸி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. எமர்ஜன்ஸி என்று சொல்லி பூரணமாக பிரைமரி ஹெல்த் சென்டர்களை நிறுத்துவது என்பது உசிதமான காரியம் அல்ல. இந்த ஆண்டிலிருந்தாவது வருஷத்திற்கு இத்தனை சென்டர்களை ஏற்படுத்துவது, கட்டடங்கள் கட்டுவது என்று திட்டமிட்டு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று



4th March 1964] [திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]

கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் கட்டடங்களையும் எமர்ஜன்ஸி என்ற காரணம் காட்டி நிறுத்தி வைத்திருப்பதை விட்டு, அந்தக் கட்டடங்களையும் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உணவு உற்பத்திக்கு நல்ல விதைகள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். நல்ல உயர்ந்த ரக நெல் எங்கே நன்றாக விளையும் என்று பார்த்து அந்த இடங்களில் அவற்றைப் பயிர் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தால், உற்பத்தி நல்ல முறையில் உண்டாகி உயர்ந்த ரக நெல் விளைவதன் காரணமாக நல்ல லாபம் வரும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை விவாதத்திலே நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்த பட்ஜட்டை எல்லாத் தரப்பினரும் ஒத்துக்கொள்ளக்கூடிய நிலைமையிலே வெகு சிரமப்பட்டு நல்ல முறையிலே தயாரித்திருக்கிறார்கள். இதிலே வரிப் பளு அதிகமில்லாத காரணத்தால் பொதுமக்களாலும் வரவேற்கப்படுகிறது.

இன்று பொதுவாக கல்வித் தரம் குறைந்திருக்கிறது என்பது நாம் அறிந்த உண்மை. அதற்குக் காரணம் இன்று ஒரு ஆசிரியருக்கு இத்தனை மாணவர்கள் இருக்கவேண்டுமென்ற எண்ணிக்கையை உயர்த்தியதுதான். உதாரணமாக ஒரு வீட்டிலே நாலைந்து பிள்ளைகள் இருந்தால் விடுமுறை நாளிலே அந்தப் பிள்ளைகளைச் சமாளிப்பது பெற்றோர்களுக்கு மிகச் சிரமமாக இருக்கிறது. நாலைந்து பிள்ளைகளைச் சமாளிப்பதே அவ்வளவு சிரமமாக இருக்கும்போது ஒரு ஆசிரியர் 40 மாணவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றால் கல்வித் தரம் எப்படி முன்னேற முடியும்? ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்க முடியாத படிக்கு மந்தை மாதிரி பையன்களை அடைத்து வைத்திருக்கிறார்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. இந்த நிலைமை பள்ளிகளில் இருக்கிற காரணத்தால், பணம் அதிகமாகக் கேட்டாலும் ஏழைகளாக இருக்கிறவர்கள் முதற்கொண்டு தங்களுடைய பிள்ளைகளைக் கான்வென்டில் சேர்த்து விடுகிறார்கள்.

அடுத்தபடியாக, மாணவர்களுக்கு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களைப் பற்றியும், சுதந்திர சரித்திரத்தைப் பற்றியும் நன்கு தெளிவாக எடுத்துக் கூறப்படவில்லை. ஆகவே சுதந்திரம் ஏதோ விலைக்கு வாங்கப்பட்ட மாதிரி நினைத்து இப்போதுள்ள மாணவர்களுக்கு சுதந்திர தாகம் இல்லாமல் இருக்கிறது. நாட்டுப் பற்று இல்லாமல் இருக்கிறது. ஆகவே கல்விப் பாடத்திட்டங்கள் அமைக்கும்போது சுதந்திரச் சரித்திரம் பற்றி ஒவ்வொரு மாணவனும் படிக்கும் நிலையில் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்கள் கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், இவைகள் எல்லாம் நிரம்பப்பெற்றவர்களாக 12-00 noon

மாணவர்கள் இருத்தல் வேண்டும். எதிக்ஸ் என்று சொல்லி முன்பெல்லாம் வாரத்திற்கு ஒரு பீரியட் ஒதுக்கப்பட்டு வந்தது. இப்போது அந்த பீரியட் இருக்கிறதே தவிர, சாதாரணமாக கான்வென்டிலும், கிருஸ்தவப் பள்ளிகளிலும்தான் அதை நன்கு பயன்படுத்துகிறார்களே தவிர, பிற தனியார் நடத்தும் பள்ளிகளிலும் மற்ற பஞ்சாயத்து யூனியன் உயர்நிலைப் பள்ளிகளிலும் அவை போதிக்கப்படுவதில்லை. ஆகவே அதற்கான ஒரு திட்டத்தை வகுத்து, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், பல கலைகளை உணரும்படியான நுண்ணறிவைப் பெறும் நிலையில் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் துறையில் நடத்தும் பள்ளிகளில் இப்போது மூன்று நான்கு மாதங்களுக்கு ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அதன் காரணமாக ஆசிரியர்களின் ஒத்துழைப்பு குறைகிறது. இன்று அட்வான்ஸ் கிராண்டு இரண்டு மூன்று தடவைகளாகக் கொடுக்கப்படுகிறது. அந்த கிராண்ட் 8 மாதங்களுக்குத்தான் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதை மாற்றி கேரளாவில் உள்ள முறையையோ அல்லது இன்று எய்டட் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுப்பதைப் போன்று அந்த ஆசிரியர்களுக்கும் சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி கடைசியாக மானேஜ்மெண்ட் கிராண்ட் என்று கொடுத்தால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நல்ல பலன் ஏற்படக்கூடிய முறையில் கல்விச்சாலை இயங்க வழி ஏற்படும். மாலைக் கல்லூரி கொண்டு வருவது பற்றிய திட்டம் இருக்கிறது. அதை வரவேற்கிறேன். விவசாயம் நிரம்பியுள்ள தஞ்சை ஜில்லாவில் ஒரு விவசாயக் கல்லூரி இல்லாமல் இருப்பது ஒரு பெரும் குறையாக இருக்கிறது. ஆடுதுறையில் நல்ல ஒரு இடம் இருக்கிறது. அதற்கான பயிற்சி முகாம்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைப்பதில் எந்த விதமான கஷ்டமும் இருக்காது. இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்தைப் பொறுத்தவரையில் தஞ்சையில் பாசனத்திற்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. குடி மராமத்து என்ற முறையில் அங்கு வாய்கால் எல்லாம் நன்கு தூர் எடுக்கப்படுகிறது. ஆனால் வடிகால் சரியான முறையில் கவனிக்கப்படாததால் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கீழ் பிரதேசத்தில் உள்ள, சீர்காழி, மாயவரம், நாகபட்டணம், திருத்துறைப்பூண்டி போன்ற இடங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டு கால் பாகம்கூட விளைச்சல் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி சமுத்திரக்கரை ஓரமாக உள்ள பெரிய பெரிய வடிகால்கள் ஆறுகளாக வருகிறது. அவற்றில், ரிவட்மெண்ட், கரை போட்டு தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று தஞ்சை ஜில்லாவில் வரண்ட பிரதேசத்தில் உள்ளது போன்று பம்ப் செட்ஸ் வைக்கக்கூடிய நிலை வந்துவிட்டது. இந்த மூன்று ஆண்டு காலத்தில் ஒரு ஆண்டு பெய்து கெட்டது, ஒரு ஆண்டு காய்ந்து கெட்டது, ஒரு ஆண்டு உடைப்பு எடுத்துக் கெட்டது என்று இப்படி சென்ற மூன்று ஆண்டுகளாக தஞ்சையில் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.





ஆகவே அங்கு மின்சார வசதி கொண்டு பம்ப் செட்ஸ் ஏற்படுத்தக்கூடிய நிலையை ஏற்படுத்தினால் இந்தக் குறுவை சாகுபடிக்கு முன்கூட்டியே விதை விட்டு தண்ணீர் வரும்போது நடும் நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு இந்தமாதிரி சேதம் அதிகமாக இருக்க முடியாது. ஆகவே தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு வேறு எதுவும் இல்லாவிட்டாலும் கிராமந்தோறும் மின்சார வசதி அளிக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அங்கு தனியார் துறையில் உள்ள ஸவுத் மதராஸ் எலெக்ட்ரிசிட்டி கார்ப்பரேஷன் போன்றவர்கள் எந்த விதமான உற்சாகமும் இல்லாமல் எதற்கெடுத்தாலும் சர்க்கார் லோன் வரவேண்டும், அதுவரை விஸ்தரிப்பு செய்ய முடியாது, அங்கே போய் பாருங்கள் என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே இதை சீக்கிரத்தில் நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது உபயோகப்படுத்தும் டிராக்டர்களை முனிசிபல் எல்லைகளுள் எரு ஏற்றுவதற்கோ அல்லது வேறு கருவிகளை டவுனிற்குச் சென்று ஏற்றி வர விவசாயிகள் முற்படும் காலத்தில் ஆர்.டி.ஒ. போன்ற அதிகாரிகள் தடுத்து வரி கட்டும் நிலையை ஏற்படுத்துகிறார்கள். அவர்கள் சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்கிறார்களே தவிர, நெல்லைக் கொண்டு மில்லில் போடுவதற்கோ அல்லது வாடகைக்கு விடவோ செய்வதில்லை. ஆகவே அப்படி அவர்கள் நெருக்கப்படுவதைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சையில் இப்போது விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஒதுக்கி வைத்த வரியை இந்த ஆண்டு வசூலித்துவிட்டு இந்த ஆண்டு வரியை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒத்தி வைப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ப்ளாக்கள் ஏற்பட்டதும் தாசில்தார்களுக்கு வரி வசூல் செய்வதைத் தவிர, வேறு வேலை இல்லை. இன்று சிமெண்டுக்கு பர்மிட் கொடுக்கிறார்கள். அதுதான் அவர்கள் வேலை. இந்த தாசில்தார்களை எடுத்து ப்ளாக் லெவலில் நடத்தும் முறை பற்றி சர்க்கார் யோசனை செய்து வருகிறது. சீக்கிரமே அந்தமாதிரி வேலைகளை செய்து முடிக்கால் அதிகமான அதிகாரிகள் வேலை இல்லாதிருக்கும் நிலை மாறிவிடும். அதேமாதிரி ப்ளாக்குகளில் கோஆப்பரேடிவ் ஆபீசர்கள், டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேட்டிவ் ஆபீசர்கள் என்றிருக்கிறார்கள், வெல்பேர் ஆபீசர்கள் இருக்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசர்கள் இருக்கிறார்கள், ஒவ்வொரு ப்ளாக்கிற்கும் ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். ஆக, இப்படிப்பட்ட அதிகாரிகள் இருப்பதால் வேலை நடக்காவிட்டாலும் அதிகச் செலவு ஆகிறது. இவைகளையெல்லாம் சீக்கிரத்தில் ஒற்றுமைப்படுத்தி நல்ல முறையில் வேலைகள் நடைபெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பஞ்சாயத்து நிர்வாகத்தில் உள்ள ஜில்லா போர்ட் ரோடுகள் எல்லாம் அவர்களால் பராமரிக்க முடியாத நிலையில் இன்று இருக்கின்றன. அந்த வேலைகளை யாரும் செய்யாது அவை கவனிப்பாற்ற நிலையில் இருக்கின்றன. ஆகவே விவசாயிகளுக்கு நெல்லைக் கொண்டு போவதற்கோ அல்லது மில்லில் கொண்டு போடுவதற்கோ எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அவைகளை சர்க்கார்

ஏற்று எடுத்து நடத்தும் நிலையில் ஏற்பாடு செய்ய வேண்டும். பஞ்சாயத்தின் நிதி நிலை சரியாகவில்லை என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்துக்களில் போடப்பட்ட கப்பி ரோடுகளைக் கூட அவர்க ளால் பராமரிக்க முடிவதில்லை. புதிது புதிதாக கப்பி ரோடுகள் போடப்படுகிறதே தவிர, போடப்பட்ட கப்பி ரோடுகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுவதில்லை. கட்டடங்களும் அப்படியே யிருக்கின்றன. நான் வந்ததிலிருந்து இரண்டு ஆண்டு காலமாக இந்த சட்டசபையிலும் சரி, அமைச்சர் அவர்களிடமும் சரி ஆக்கூர் ப்ரைமரி ஹெல்த் சென்டர் பற்றி பல முறை சொல்லி வந்திருக்கிறேன். ஆனால் இதுவரை அந்தக் கட்டிடத்தை பி.டபிள்யூ.டி.-யோ அல்லது ஹைவேஸோ அவற்றை எடுத்து ரிப்பேர் நடத்த முடியாத நிலையில் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கட்டடங்களை எல்லாம் பழுது பார்ப்பது யார் என்று தெரியாத நிலையில் இருக்கிறது. ஆகவே சட்டச் சிக்கல்களை எடுத்து விட்டு அவற்றை பி.டபிள்யூ.டி. எடுத்து நடத்தும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜில்லா போர்டா ரால் நடத்தப்பட்ட ஆஸ்பத்திரிகள் இன்று கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. சங்கரம்பந்தலில் ஒரு டாக்டர் காரைக்காலுக்குப் போவது, லாகிரி வஸ்துக்களை உபயோகித்து ஆஸ்பத்திரிக்கு வரும் மக்களுக்கு நல்ல முறையில் வைத்தியம் செய்வது கிடையாது. இதுகுறித்து பஞ்சாயத்து போர்ட் பலமுறை தீர்மானம் போட் டாகிவிட்டது. நானும் அமைச்சர் அவர்களிடம் சொல்லி விட்டேன். இரண்டு ஆண்டுகளாக சொல்லி வருகிறேன். இதை யெல்லாம் பார்த்துவிட்டு மக்கள் டாக்டரை அடிக்கக்கூட போய் விட்டார்கள். டி.எம்.ஓ. அவர்கள் “He is not fit to be a doctor and he must be removed from service” என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் அது டிஸ்ட்ரிக்ட் போர்ட் டிஸ்பென்சரியாக இருப்பதால் சர்க்கார் எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் யார் செய்வது, என்ன செய் வது என்ற சிக்கல் இருக்கிறது. இதற்கு உடனடியாக நிவாரணம் அளிக்கப்படாவிட்டால் மக்களிடமிருந்து எதிர்ப்பு ஏற்படும். ஆகவே சீக்கிரம் அதை சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பட்டது). இந்த சபை அங்கத்தினர்களுக்கு சில அதிகப்படியான சலுகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல் இருக்க வேண்டும். மைசூரை எடுத்துக் கொண்டால் அங்குள்ள அங்கத்தினர்களுக்கு ரூம் வாடகை கிடையாது சட்டசபை சம்பந்தமாக வரும்போது. இங்கு சாதா ரணமாக ரூம் கிடைப்பதே கஷ்டமாகயிருக்கிறது. இங்கு இப் போது வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ள கட்டடங்களை எடுத்து ரூமாகத் தடுத்து புதுக் கட்டடம் கட்டி முடிகிற வரையில் எல்லா அங்கத்தினர்களுக்கும் அங்கு ரூம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாராளுமன்றத்தில் இருப்பவர்கள், தாங்கள் பாராளுமன்ற கூட்டத்திற்கு போகும்போது டில்லியில் எந்த ரூமில் தங்குகிறார்களோ, எந்த ரூமை எடுத்துக்கொள்கிறார்களோ, அதையே ஐந்து ஆண்டு முடிகிற வரை தகர் விசேஷமாக கொடுக்





கிறார்கள். ஆனால் இங்கு அப்படிக் கிடையாது. இந்தத் தடவை எந்த ரூமை எடுத்துக் கொள்கிறார்களோ, அதையே ரிசர்வ் செய் தாலும் அடுத்த தடவை அது இன்னொருவருக்குக் கொடுக்கப்பட்டு போய் விடுகிறது. ஆக, இடம் கிடைக்காது ஹோட்டல்களைத் தேடிப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே நல்லமுறையில் வேலை செய்ய சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது. அடுத்தபடியாக, இப் போது ஹாஸ்டலில் இருக்கின்ற இந்தியன் பாங்கை இங்கேயே செக்ரட்டரியேட்டிலேயே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் சட்டசபை கலைவதற்கு ஒன்றரை மணி ஆகிவிடுகிறது. அதன் பின்னால் போய் செக் மாற்ற முடிவதில்லை. ஆகவே வசதியாக செக் மாற்றுவதற்கு இந்தியன் பாங்கை சட்டசபை கட்டடத்திற்கு அருகில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

*** திரு. வி. ஆர். பெரியண்ணன்:** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையை சமர்ப்பிக் கின்ற நேரத்தில் இந்த நாட்டின் நிலைமையை ஆலோசித்து உணவு உற்பத்தியை நாம் இன்னும் அதிகமாக பெருக்க வேண்டும் என்று பல பெரிய பாசனத் திட்டங்களையும் பல சிறிய பாசனத் திட்டங் களையும் நாம் நிறைய எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் காண்கின்றோம். ஆனால் என்னுடைய சேலம் மாவட்டத் தைப் பொறுத்தவரையில், பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் எந்தவிதமான திட்டங்களும் இல்லை என்பதை பார்க் கும்போது உண்மையிலேயே மிகவும் வருந்த வேண்டிய நிலைமை யில் இருக்கிறோம். இந்த சட்டமன்றத்தில் இரண்டு ஆண்டுகளா கவும், மற்ற முறைகளிலும், அமைச்சர்கள் எங்கள் பகுதிகளுக்கு வருகின்ற நேரத்திலும் பல முறை, திருமணிமுத்தாறு, பொன்னி யாறு திட்டத்தைப்பற்றி சொல்லியிருக்கிறோம். அப்படியிருந் தும், இதில் ஒன்றும் சேர்க்கப்படாமல் இருப்பது மிகவும் வருந் தத் தக்கது. குறிப்பாக சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ராசி புரம், திருச்செங்கோடு இந்த இடங்களில் எல்லாம் விவசாயத் திற்கு தண்ணீர் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், நான் குறிப்பிடப் போகின்ற ஏரிகள் மூலமாக தண்ணீரை அனுப்பினால் அந்தப் பகுதியிலுள்ள பல ஏரிகளில் தண்ணீர் நிறைவதற்கு வழி ஏற் படும். இவ்விதம் ஏரிகளில் தண்ணீர் நிறைகின்ற நேரத்தில் பக்கத்திலுள்ள கிணறுகளில் எல்லாம் ஊற்றுகள் பெருகுவதற் கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டிலாவது எடுத்துக் கொள்வோம் என்ற முறையில் ஒரு உறுதியையாவது கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந் தத் திட்டமானது, மேட்டூர் அணையின் உபரித் தண்ணீரை சேத்த மலை ஓரமாக ஒரு கால்வாய் மூலமாக கொண்டுவந்து, பக்கநாடு, பூலாம்பாடி, இருப்பாளி, சித்தூர், ஆவணிப்பேரூர், மேல்முகம், கீழ்முகம், செட்டிமாங்குறிச்சி, வேம்பனேரி, சமுத்திரம், குரும்பப்

பட்டி, சாணார்பட்டி, ஐயனேரி, மகுடஞ்சாவடி, மங்களம் வழியாக பொன்னியாற்றில் விட்டால், இயற்கையாக மல்லசமுத்திரம், பருத்திப்பள்ளி ஏரி மார்க்கமாக வந்து கொன்னையாறு என்ற இடத்தில் திருமணிமுத்தாறில் கலந்து, இருப்பிலி, செருக்கலை போன்ற ஏரிகளின் வழியாக வேலூருக்கு அருகில் காவிரியில் கலக்கும். அதேபோன்று, மகுடஞ்சாவடிக்கு அருகில் கிழக்குப் புறமாக செல்லும் வாள்ளவாரியின் மூலம் காளிப்பட்டி ஏரி, மதியம்பட்டி ஏரி, அக்கரப்பட்டி ஏரி, பாலமேடு ஏரி, சேமூர் ஏரி, மொஞ்சனூர் ஏரி, பொன்குறிச்சி ஏரி, கல்யாணி ஏரி, மின்னாம்பள்ளி ஏரி, நாட்டாமங்கலம் ஏரி, நவணி ஏரி, ஏலூர் ஏரி, முசிரி ஏரி, புத்தூர் ஏரி, தளுகை ஏரி, பிராந்தகம் ஏரி, இருட்டணை ஏரி வழியாக கூடச்சேரி என்ற இடத்தில் திருமணியாற்றில் கலக்கும். காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற நேரத்தில் இந்த ஏரிகளில் எல்லாம் தண்ணீர் கிடைக்கும். அதோடு கிணற்றுப் பாசனத்திற்கும் சௌகரியமாக இருக்கும் என்ற எண்ணத்தோடு இதைப்பற்றி பல முறை எடுத்துச் சொல்லியும், இந்தத் திட்டத்திற்கு அடையாள ஒதுக்கீடாகக்கூட ஒன்றும் காணவில்லை. ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தின்மீது சிறிது கருணைவைத்து இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு 1960-லிலேயே ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தப்போவதாகவும் இதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்போவதாகவும் இதற்கான உத்தரவு அனுப்பப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால், இதுவரை நில ஆர்ஜித வேலை துவக்கப்படாமல் இருக்கிறது.

மேலும் சேலம் இரும்பைப்பற்றி அடிக்கடி எல்லோரும் பேசி வருகிறோம். இந்த வேலை இந்த ஆண்டிலாவது முடிக்கப்படுமா என்று பார்த்தால் அதற்குரிய அறிகுறிகள் ஒன்றும் இல்லை என்றுதான் தெரிகிறது. அதோடு ஒகனேக்கல் திட்டம் ஒன்று இருக்கிறது. அதைப்பற்றியும் திட்டவட்டமாக இப்போது நடைபெறுமா என்று சொல்ல முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி பக்கத்திலுள்ள மாநிலங்களோடு பேசி முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. இதைப்பற்றியும் உடனடியாக வேண்டிய பேச்சுவார்த்தைகள் நடத்தி, இந்தத் திட்டத்தையும், தொழிற் பேட்டையையும், இரும்புத் தொழிற்சாலையையும் எங்கள் மாவட்டத்தில் ஏற்படுத்துவார்கள் என்று எங்கள் மாவட்டத்திலுள்ள மக்கள் எல்லாம் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் ஒன்றும் இல்லாத நிலைமையில் இருக்கின்றது. இந்த நிலைமையில் எங்கள் மாவட்டத்திலுள்ள மக்கள் எல்லாம் பேசிக்கொள்வது என்னவென்றால், மற்ற மாவட்டங்களுக்கெல்லாம் அமைச்சர்கள் இருக்கிறார்கள், சேலம் மாவட்டத்திலிருந்து எந்த அமைச்சரும் இல்லாத காரணத்தினால்தான் இவ்வாறு பிற்போக்காக இருக்கிறது என்று அங்குள்ள மக்கள் பரவலாகப் பேசிக்கொள்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டிலாவது இதை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக திருமணியாறு—பொன்னியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டில் இதற்கான ஆரம்ப





வேலைகளையாவது எடுத்துக் கொள்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது உறுதி தரவேண்டும் என்று தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேந்தமங்கலத்தில் குடிதண்ணீர் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தபோதும் இதைப்பற்றி அங்குள்ள மக்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் மின்சார துவக்க விழாவுக்கு வந்த நேரத்தில் பஞ்சாயத்து சார்பாக இதைப்பற்றி முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் கடந்த ஆண்டு மே மாதத்தில் குடிதண்ணீர் திட்டத்திற்கான வேலைக்கு முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களால் கல்நாட்டு விழா நடத்தப்பட்டது. இப்போதும் இந்தக் குடிதண்ணீர் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. இதை தீர்ப்பதற்கு அரசாங்கம் ஏதாவது சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறதா என்று பார்க்கிற நேரத்தில் அவசரமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் தெரிகிறது. ஆகவே இந்த விஷயத்தில் அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு பயன்படுகின்ற மின்சாரம் சம்பந்தமாக பேசுகின்ற நேரத்தில் விவசாயிகளுக்கு இருக்கின்ற கஷ்டத்தைப்பற்றி சொல்லியிருக்கின்றேன். அதாவது டிரான்ஸ்பாமர் இல்லாத காரணத்தினால், மோட்டார்களை எல்லாம் அமைத்து ஒழுங்கு படுத்தியிருந்தும் மின்சார இணைப்பு கிடைக்காமல் இருக்கிறது என்று நேற்றுகூட சேந்தமங்கலத்திலிருந்து விவசாயிகள் எனக்கு மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஒரு டிரான்ஸ்பாமரின்கீழ், 26 மோட்டார்கள் வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 23 மோட்டார்களை கிணற்றில் பொருத்திவிட்டோம், இவ்வாறு மோட்டார்களை வைத்து, இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டது, இன்னும் மின்சார இணைப்பு கிடைக்கவில்லை என்றும், இன்னொரு கிராமத்தில் ஒரு டிரான்ஸ்பாமருக்கு 14 மோட்டார்கள் வைக்க வேண்டும் என்று சொல்லியிருந்ததாகவும், அதன்படி 14 மோட்டார்களும் பொருத்தப்பட்டு இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டது என்றும், இன்னும் இதற்கான மின்சார இணைப்பு கிடைக்கவில்லை என்றும் இரண்டு மனுக்கள் எனக்கு வந்திருக்கின்றன. இதைப்பற்றி கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சற்று கவனம் செலுத்தி டிரான்ஸ்பாமர்களை சீக்கிரமாக அனுப்பி மின்சார இணைப்பு கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவை மாவட்டத்தில் பருத்திக்கு தீவிர சாகுபடித் திட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதேபோன்று, அதோடு இணைந்திருக்கிற எங்கள் சேலம் மாவட்டத்திலும் பருத்திக்கு தீவிர சாகுபடித் திட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கு பல கனம் அங்கத்தினர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்தியை மற்ற மாநிலங்களில் எல்லாம் கட்டாய பாடமாக ஆக்கிவிட்டார்கள், நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான் விருப்பப்பாடமாக இருக்கிறது. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் இந்தியை எதிர்க்கின்றார்கள் என்ற காரணத்திற்காக, அவர்களிடம் ஏமாந்து போய் நாம் திட்டத்தை விட்டுவிடக் கூடாது, எப்படியும் இந்தியை கட்டாய பாடமாக வைக்க வேண்டும் என்று பல அங்கத்தினர்கள் அரசாங்கத்திற்கு யோசனை கூறினார்கள். நான் கூற விரும்புவது என்னவென்றால் இப்போதும் இந்தி கட்டாய பாடமாகத்தான் இருக்கிறது என்பதைத்தான். இப்போது வருகின்ற தேர்தலில்கூட, தேர்வு எழுதுகின்ற மாணவர்கள் இந்தி பரீட்சையில் மார்க் எடுப்பது எப்படியிருந்தாலும், பரீட்சைக்கு உட்கார வேண்டும், அப்படி இந்தி பரீட்சைக்கு உட்கார்ந்தால்தான் பாஸ் செய்ய முடியும், இல்லாவிட்டால் பாஸ் செய்ய முடியாது என்று ஓர் சுற்றறிக்கை விட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தி பரீட்சைக்கு உட்கார வேண்டுமென்றால் என்ன பொருள்? இந்தி கட்டாய பாடமாக இருக்கிறது என்பதுதானே பொருள். அதுமட்டும் அல்ல, உயர் நிலைப்பள்ளியில் மாணவர்கள் சேரும்போது, சேரும்போது கொடுக்கவேண்டிய மனுவில், 'இந்தி பயில விரும்புகிறாயா?' என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதில் மாணவர்கள் "விரும்புகிறேன்" என்று எழுதிக் கொடுத்தால்தான் அந்தப் பள்ளியில் இடம் கிடைக்கும். இல்லாவிட்டால் இடம் கிடைக்காது. இதற்குப் பொருள் என்ன? இந்தி கட்டாய பாடமாக இருக்கிறது என்பதுதானே பொருள். ஆகவே இந்த இந்திப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண்பதற்காக மீண்டும் அரசாங்கம் நல்லமுறையில் பரிசீலனை செய்து கட்டாய பாடமாக இல்லாத முறையில் ஒரு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. பி. பழனி:** சட்ட மன்ற உதவிச் சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் வைப்பதற்கு ஆசைப்படுகிறேன். சிறந்த கருத்துக்களை, சிறந்த அம்சங்களை தன்னகத்தே தாங்கி இந்த நிதிநிலை அறிக்கையானது திகழ்கிற காரணத்தினால் இதனைப் பாராட்ட வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

நமது முதல் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் தற்காப்புக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் உதவும் வகையிலே வரவு-செலவுத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சீன நாடு போர் தொடுத்த நேரத்திலே, திட்டமே தேவையில்லை என்று பேசுகிறவர்களெல்லாம், திட்டத்தை வெட்டவேண்டும் என்று பிரசாரம் செய்த போதிலும், நிச்சயமாக திட்டத்தையும், அதே நேரத்தில் தற்காப்புப் பணியினையும் செய்ய இயலும் என்று நம் அரசாங்கமானது செயல்பட்டு திட்ட அபிவிருத்தி வேலையிலும், அதே நேரத்தில் தற்காப்புப் பணியிலும் வெற்றி பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.





Defence and at the same time development என்ற முறையில் அந்த அம்சங்களை இந்த உரையில் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒன்று ஆகும்

நமது முதல் அமைச்சர் தன்னுடைய உரையிலே இன்றைய நாட்டிலே இருக்கக்கூடிய இன்றியமையா விலைவாசிப் பிரச்னை பற்றிப் பேசியிருக்கிறார். அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது உருக்கு ஆலைகள் கன ரக மின்சாரத் தொழில்கள் போன்ற மிகப் பெரிய திட்டங்களை அரசாங்கம் தீட்டி வருகிற காரணத்தினால், அதிகப்படியான மூலதனம் மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருக்கிற காரணத்தினால் விலைவாசி உயர்வு என்பது இன்றியமையாத ஒன்று என்று விலைவாசி உயர்வைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். எதிர்க்கட்சி அன்பர்களும் விலைவாசிகளைக் குறைப்பதற்கான காரணகாரியங்களை, வழிவகைகளை எடுத்துச் சொன்னால்தான் உண்மையிலேயே அவர்களுக்கு விலைவாசிகளைக் குறைப்பதில் அக்கறை இருக்கிறது என்று உணர முடியும். விலைவாசி உயர்வு என்பது ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சிக்கு உரிய பிரச்னை அல்ல—அது ஒரு தேசியப் பிரச்னை. விலைவாசி உயர்வைப்பற்றி குறை கூறும் அன்பர்கள் விலைவாசிகளைக் குறைப்பதற்கான காரணங்களை எடுத்துச் சொன்னால்தான் எதிர்க் கட்சியினர் தங்கள் பணியினை, தங்கள் பங்கினை பொறுப்போடு செய்தவர்கள் ஆவார்கள் என்று நான் தங்கள் மூலமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நமது முதலமைச்சர் அவர்கள் ஜனநாயகத்தோடு இணைந்த சோஷியலிஸம்தான் நமது லட்சியம் என்று சொல்லி, சோஷியலிஸ சமுதாயத்தை உருவாக்கக்கூடிய பணியில் நாடு ஈடுபாடு கொண்டிருக்கிறது என்ற கருத்தினை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசுகிற நேரத்தில், 'ஆவடி சோஷியலிஸம் என்ன ஆயிற்று? எதற்காக இப்போது மக்களை ஏமாற்றும் அளவுக்கு புதியதொரு சோஷியலிஸத்தை மக்கள் மத்தியில் பேசி வருகிறீர்கள்' என்று சொன்னார்கள். அவர்களுக்கு உங்கள் வாயிலாக நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். 'தேர்தல் காலத்தில் சுதந்திரா கட்சியோடு, சோஷியலிஸத்தில் அறவே நம்பிக்கையில்லாத அந்தக் கட்சியோடு உடன்பாடு அல்லது ஒப்பந்தம் வைத்துக்கொண்டு, சட்ட மன்றத்தில் சோஷியலிஸத்தை தீவிரமாகச் செயல்படுத்தவில்லையே' என்று கூறுவது புரியாத ஒன்று. மாறுபட்ட, முரண்பட்ட வாதம் என்று நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். தேர்தல் காலத்தில் 'காங்கிரஸ் சோஷியலிஸம் இனிக்காது, காகிதப்பூ மணக்காது' என்று பேசுகிற நபர்கள், உண்மையான சோஷியலிஸம் என்ன என்று கூறட்டும். ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற நாங்கள் தொழில் உற்பத்தி, அதன் காரணமாக வேலை வாய்ப்பு சோஷியலிஸம் என்று கூறுகிறோம். விவசாய உற்பத்தி, அதன் காரணமாக உணவுப் பஞ்சத்தை போக்குவது சோஷியலிஸம் என்று கூறுகிறோம். எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுப்பது

சோஷியலிஸம் என்று கூறுகிறோம். வயது முதிர்ந்த பெரியவர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கும் திட்டத்தை அளிப்பது சோஷியலிஸம் என்று கூறுகிறோம். இந்த சோஷியலிஸத்தில் குறை காண்கின்ற அன்பர்கள் 'இதைத்தான் நாங்கள் சோஷியலிஸம் என்று கருதுகிறோம்' என்று அவர்கள் எடுத்துச் சொன்னால் அது அரசாங்கத்திற்கு ஏற்ற ஆலோசனையாக இருக்கும். நிச்சயமாக நமது அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளும் என்கிற உண்மையை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அரசாங்க ஊழியர்களின் குடும்ப பென்ஷன் பெறும் காலத்தை 20 ஆண்டிலிருந்து 5 ஆண்டாகக் குறைத்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்க ஒன்று ஆகும். அதுபோல அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய பென்ஷன் தொகை எக்காரணத்தைக் கொண்டும் 20 ரூபாய்க்குக் குறைந்து இருக்கக் கூடாது என்ற கருத்தையும் முதல் அமைச்சர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் வரவேற்கத் தக்க அம்சமாகும். அதே நேரத்தில் இந்தத் திட்டத்தின்கீழ் ஆசிரியர்களையும் சேர்க்க வேண்டும் என்று நான் முதல் அமைச்சருக்கு தாழ்மையோடு இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று இருக்கக்கூடிய திட்டத்தில் 62,000 முதியவர்கள் பென்ஷன் வாங்கிக்கொண்டு வருகிறார்கள் என்பதையும் நமது அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டமானது உண்மையிலேயே வரவேற்கத் தக்க ஒன்றாக பொதுமக்கள் மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

கல்வித் திட்டத்தைப்பற்றி, எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்கக்கூடிய ஒரு சிறந்த திட்டத்தை இப்போது நமது அமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு 83 சதவீதம் பேர்கள் இந்தத் திட்டத்தின் பலனை அடைந்திருந்தார்கள். இப்போது எல்லோரும் அடையும் அளவுக்கு இலவசக் கல்வி கொடுத்திருப்பது வரவேற்கத் தக்க ஒன்று ஆகும். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல கல்வி மட்டும் கொடுப்பதோடு நின்றுவிடாமல் பண்பாட்டை வளர்க்கும் ஒரு கல்வியாக விஞ்ஞானத்தை வளர்க்கும் ஒரு கல்வியாக வளர அதற்கான காரியங்களில் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதற்கடுத்து, ஐந்து கல்லூரிகள் அமைப்பதற்கும், அதிலும் குறிப்பாக மதுரையில் புதிதாக ஒரு பல்கலைக் கழகம் அமைக்கக் கூடிய திட்டத்தையும் அரசாங்கம் கொண்டு வந்திருப்பது வரவேற்கத் தக்க ஒன்றாகும். நம் அமைச்சர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் "நாட்டின் விடுதலைக்குப் பிறகு, முதன் முதலாக, நாம் அமைக்க விரும்பும் இப்பல்கலைக் கழகம், சங்க காலம் முதற்கொண்டே தமிழ்ப் பண்பாட்டின் உறைவிடமான





மதுரையில் அமைவது மிகவும் பொருத்தமானது என்பதில் ஐயம் எதுவுமில்லை" என்று மகிழ்ச்சியோடு, பெருமிதத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், புலவர் அவர்கள், இலக்கியத்தை நன்றாக உணர்ந்தவர்கள், ஒரே வார்த்தையில் குறிப்பிட்டுவிட்டார். 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த இடம் தானே, புதிதாக இந்த அமைச்சரவை கொண்டு வருகிறதா' என்று குறிப்பிட்டார்கள். சாதகமான வாதத்திற்கு கடந்த காலத்தை, சங்க காலத்தை, தமிழர் பொற்காலத்தைப்பற்றி பேசும் அவருக்கு, உங்கள் வாயிலாக ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன், 'அன்று நாட்டு மக்கள் கொடுத்த வரிப் பணம் என்ன?' 'ஆறில் ஒன்று அரசருக்கு நல்குவர்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே, 'இன்று எந்தக் குடிமகனாவது ஆறில் ஒன்று அரசாங்கத்திற்கு வரிப்பணமாகக் கொடுப்பதாக நிரூபிக்க முடியுமா?' என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி பண்டைக்காலத்தில் இருந்த ஒன்று என்று சொல்லிவிடுவது அவ்வளவு சிறந்த ஒன்று அல்ல என்று நினைவுபடுத்த ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜன மக்களுக்கு நம் அரசாங்கமானது அவர்களுடைய முன்னேற்றத்திற்கு பல்வேறு சலுகைகளைக் கொடுத்து வருகிறது என்று நமக்கு நன்றாகத் தெரியும். உத்தமர் காந்தியடிகள் சர்வோதய லட்சியத்தைக் கனவு கண்டார்கள். சமுதாயத்தில் பின்தங்கிய மக்கள் சமுதாய அந்தஸ்து பெற வேண்டும். பொருளாதார அந்தஸ்து பெறவேண்டும் என்று பாடுபடும் நேரத்தில் ஒரு சில சந்தர்ப்பங்களில் சட்டத்தால் பாதிக்கப்படுகிற ஒரு அவல நிலையை மாற்றி அமைக்க வேண்டுமென்று எண்ணினாலும் வழக்குரை மன்றங்களிலும் ஹரிஜனங்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள இயலாமல் இருப்பது இந்த மாமன்றத்திற்கு நன்றாகத் தெரியும். எனவே தகுதியுள்ள ஹரிஜனங்களுக்கு சட்ட உதவி அளிக்கும் திட்டத்தை அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே எல்லா ஹரிஜன மக்களுக்கும் இந்த உதவி கிடைக்கக்கூடிய அளவக்கு இந்தக் திட்டம் வழி வகுக்கும் என்றால் அது மிகையாகாது. எனவே, இந்த ஒரு அம்சமும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

தன்னுடைய உரையின் இறுதியிலே முதல் அமைச்சர் அவர்கள் 12-30
"இம்மாநிலத்தின் பொருளாதாரத்தின் இன்றைய நலன்களையும். தொலை நோக்குடன் நெடுங்கால நலன்களையும் பேணி வளர்க்கும் வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்திருப்பதைக் காணலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு பொருளாதார அமைச்சரின் அமைச்சரின் பொறுப்பு என்ன, ஒரு பொருளாதார அமைச்சரின் பணி என்ன என்பதைப்பற்றி எழுதுகிற பொருளாதார மேதை அழகாக எழுதுகிறார். "The Finance Minister should take into consideration not only the prosperity but also the posterity" ஒரு பொருளாதார அமைச்சரின் வேலை, ஒரு பொருளாதார

[திரு. கே. பி. பழனி] [4th March 1964

அமைச்சரின் பணி, ஒரு பொருளாதார அமைச்சரின் பொறுப்பு ஒரு நாட்டினுடைய வளத்தைப் பெரிதுபடுத்துவது, ஒரு நாட்டை வளப்படுத்த சிந்தித்து செயல்படுவது மட்டுமல்ல, வருங்கால சந்ததிகளையும் பற்றி சிந்தித்து செயல்படவேண்டும் என்று அந்தப் பொருளாதார மேதை குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த வாசகத்தை சிந்தித்துப் பார்த்து நமது பொறுப்பு, கடமை உணர்வு ஆகியவற்றை எந்த அளவுக்கு உணர்ந்து நமது நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது.

அடுத்து, இரண்டு நாட்களாக இந்த மாமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திலே நமது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பொது விவாதமாக இருக்கிற காரணத்தினாலோ என்னவோ கடந்த நகரமன்றத் தேர்தல்களைப்பற்றிய ஒரு சில பிரச்னைகளை எழுப்பினார்கள். ஆகவே, அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இந்தத் தேர்தல் முடிவுகளிலிருந்து எந்த அளவுக்கு காங்கிரஸ் இயக்கத்திற்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு ஏற்பட்டிருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். முன்பு 34 இடங்களைக் கைப்பற்றியிருந்த காங்கிரஸ் இயக்கம் 1964-வது தேர்தலில் 56 இடங்களில் வெற்றி பெற்றதன் மூலம் 22 நகர மன்றங்களை அதிகமாக கைப்பற்றியிருக்கிற காரணத்தினால், எந்த அளவுக்கு காங்கிரஸ் இயக்கத்திற்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருகிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திருவண்ணாமலையில் கடந்த தேர்தலில் 15 பேர்களாக இருந்ததில், 14 பேர்கள் முறியடிக்கப்பட்டு, ஒரே ஒருவர் இடம் மாற்றி வெற்றி பெற்ற தஞ்சைத் தொகுதி உள்பட பார்க்கப்போனால் நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றிருக்கிறது என்றால் எந்த அளவிற்கு காங்கிரஸுக்கு மக்கள் ஆதரவு அளித்திருக்கிறார்கள் என்பதை உண்மையிலேயே இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். (மணி அடிக்கப்பட்டது). வணக்கம்.

* **திரு. மீ. அழகர்சாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சட்டசபை முன்பு வைக்கப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையைக் குறித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தினுடைய நிதி நிலையானது 1955-56-ஆம் ஆண்டில் ரெவின்யூ கணக்கின் ரூ. 52 கோடியாக இருந்தது, 1964-65-ல் ரெவின்யூ கணக்கின் கீழ் ரூ. 138 கோடியாக உயர்ந்திருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக நம்முடைய நாட்டிலே திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியும், விவசாயத்துறையில் கண்டுள்ள முன்னேற்றமும் இந்த வருவாயின் காரணமாக என்று சொன்னால், அது மிகையாகாது. தொழில் புரட்சி ஏற்பட்ட காலத்தில் நம்முடைய நாடானது அடிமைப்பட்டு இருந்த காரணத்தினால், தொழில்



4th March 1964] [திரு. மீ. அழகர்சாமி]

துறையிலே நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். பல மேலை நாடுகளைப் பார்க்கும்பொழுது, நமது அண்டை நாடாகிய ஜப்பானைப் பார்க்கும்பொழுதுகூட, அந்த நாடுகளைக் காட்டிலும் தொழில் துறையிலே நாம் பல ஆண்டுகள் பின்தங்கியிருக்கிறோம். இதை மனதில் வைத்துப் பார்க்கும்பொழுது, அந்த நாடுகளுடைய ஒரு வளர்ச்சியை நாமும் எட்டிப் பிடிக்கவேண்டுமானால், நம்முடைய திட்டங்களும், திட்டங்களுடைய வேகமும் அதிகமாக அமைய வேண்டும் என்பது இயற்கையாகிவிடுகிறது. அந்த முறையிலே நமது திட்டங்களைப் பெரியதாக அமைத்திருக்கிறார்கள். திட்டங்கள் செயல்படும் வேகமும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாக நாம் தொழில் துறையிலாகட்டும், விவசாயத் துறையிலாகட்டும், பல்வேறு முன்னேற்றத்தைக் காண்கிறோம். நம் நாட்டு மக்களுடைய வாழ்க்கைத்தரம் பல மடங்கு உயர்ந்திருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த ஒரு விஷயமாகும். தொழில் வளர்ச்சியின் காரணமாகவும் நாட்டிலே விவசாயத்துறையில் கண்டிருக்கக்கூடிய முன்னேற்றத்தின் காரணமாகவும் திட்டங்களில் நாம் போடக்கூடிய முதலீடுகள் ஏராளமாக இருக்கக்கூடிய காரணத்தைக்கொண்டும் நம்முடைய நாட்டில் விலைவாசியினுடைய ஏற்றமானது அதிகரித்துக் கொண்டேபோவது இயற்கையாக இருக்கிறது. இருந்தபோதிலும் விலைவாசி ஏற்றத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த விலைவாசி ஏற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு முக்கியமாக நாம் செய்ய வேண்டியது உற்பத்தியை பெருக்க வேண்டியதுதான். அதுவரையிலும் நாம் காத்துக்கொண்டிருக்க முடியாது. இடைக்காலத்தில் ஓரளவு விலைவாசியின் ஏற்றத்தைத் தவிர்ப்பதற்கு உணவு விநியோகத்தை கூட்டுறவு சங்கங்களின் மூலம் விநியோகிக்கும் முறையைக் கையாளவேண்டும். அப்படிச் செய்தால் விலைவாசி ஏற்றத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நம்முடைய ராஜ்யம் பல துறைகளிலே முக்கியமான சாதனைகளைக் கண்டிருந்தாலும்கூட, கல்வித் துறையிலே நாம் கண்டிருக்கக்கூடிய ஒரு சாதனையாவது மிகச் சிறந்தது என்று சொன்னால், அதை நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள். கல்வித் துறையில் நாம் அன்று இருந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது 1955-56-ஆம் ஆண்டிலே கல்விக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1964-65-ல் பார்க்கும்பொழுது கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். இவ்வளவு பெரிய தொகை செலவு செய்வதற்குக் காரணம், கிராமத்தில் இருக்கக் கூடிய மக்கள் முன்னேறவேண்டும், பள்ளி இல்லாத கிராமமே இருக்கக்கூடாது என்ற ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்பதுதான். அந்த நிலை ஏற்பட்டுக்கொண்டு வருவதை நாம் இப்பொழுது பார்க்கிறோம். மேலும், கடந்த 3, 4 ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகளை விஸ்தரிப்பதற்கு நம்முடைய சர்க்கார் மிகுந்த சிரத்தை காட்டிவருகிறது. அதன் காரணமாக பெரிய கிராமங்களில் எல்லாம் உயர்நிலைப் பள்ளி இருக்கக்கூடிய ஒரு நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது.

ஜனநாயக அமைப்பில் ஜனநாயகம் சரியான முறையில் செயல்படவேண்டுமென்றால், நாட்டு மக்கள் நல்ல கல்வி பெற்றவர்களாக இருக்கவேண்டும். கல்வி இல்லாத நிலை ஏற்பட்டால் ஜனநாயகம் வெறும் கேலிக்கூத்தாகத்தான் முடிந்து விடுகிறது. அந்தக் கேலிக்கூத்தை சமீபத்தில் தேர்தல் நடந்த பொழுது பல இடங்களில் பார்த்தோம். ஆகவே, ஜனநாயகம் நல்ல முறையில் செயல்படவேண்டுமென்றால், நாட்டு மக்கள் எல்லோரும் நல்ல கல்வி பெறுவதற்கு வழி இருக்கவேண்டும். மேலும், இன்று இருக்கக்கூடிய யுகத்தில் அன்றாடம் புதுப்புதுக் கருத்துக்கள் வெளிவந்துக்கொண்டிருக்கின்றன. ஆராய்ச்சி மூலம் பல புது முறைகள் தொழில் துறையிலும் சரி, விவசாயத்துறையிலும் சரி வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அவைகளை நல்ல முறையில் அறிந்து, ஏற்று, செயலாற்றக்கூடிய முறையில் இந்த நாட்டு மக்கள் அமையவேண்டும். அந்த முறையில் அவர்கள் பொதுக் கல்வி பெற்றிருக்கவேண்டும். குறிப்பாக, தொழில் நுட்பக் கல்வியானது பரவலாக நாட்டு மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஜப்பான் தேசத்தை எடுத்துக்கொண்டால், குறுகிய கால அளவில் பெரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ள ஒரு தேசமாக நம் கண் முன்னே நிற்கிறது. அதற்குக் காரணம் அந்த நாட்டு மக்கள் எல்லோரும் தொழில் நுட்பக் கல்வி பரவலாகப் பெற்றிருந்ததுதான். ஒரு சிறிய நாடாக இருந்தாலும்கூட அது தொழில் துறையிலே வெகுவாக முன்னேறியிருக்கிறது, தவிர, அந்த நாடு விவசாயத்துறையிலும்கூட ஒரு சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டிருப்பதற்குக் காரணம் அந்த நாட்டில் விவசாயத்துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய மக்கள்கூட இந்தத் தொழில் நுட்பக் கல்வியைப் பரவலாகப் பெற்றிருப்பதுதான். இந்தக் கல்வித் துறையைப்பற்றி சொல்லும்பொழுது தொழில் நுட்ப பொறி இயல் கல்லூரியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வருஷம் ஒன்றுக்கு பல நூறு மாணவர்களுக்கு நாம் தொழில் நுட்பக் கல்வி அளித்துவருகிறோம். அவர்களுடைய பாடதிட்டங்களில் ஒரு சில மாறுதல்களைச் செய்ய வேண்டும். பட்டம்பெற்ற என்ஜினியர்கள் சாதாரண மதிப்பீடுகளைக் கூட தயார் செய்ய முடியாத அளவுக்கு அவர்களுடைய நிலை இருக்கிறது. ஆகவே, இந்தப் பாட திட்டங்களில் சில மாறுதல்களைச் செய்யவேண்டியது மிகவும் அவசியம் என்பது என்னுடைய கருத்து. ஒரு பஞ்சாயத்து யூனியனில் வேடிக்கையாக ஒரு தீர்மானம் போட்டார்கள். ஆனால், அது மிக அர்த்தமுடைய தீர்மானம். அந்தத் தீர்மானம் என்னவென்றால் 'நீங்கள் பட்டதாரிகளை எங்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு என்ஜினியராக நியமிக்கவேண்டாம். அனுபவம்பெற்ற சூபர்வைசர்கள் அல்லது ஓவர்ஸீயர்களை நியமித்தால்கூட போதும்' என்று அவர்கள் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், பட்டம் பெற்று வெளியே வரக்கூடிய என்ஜினியர்கள் சாதாரண மதிப்பீடுகளைக்கூட தயார் செய்ய முடியாத அளவுக்கு அவர்கள் பாடத்திட்டம் அமைந்திருக்கிறது. ஆகவே நிச்சயமாக





அவர்கள் பட்டம் பெற்று வெளியே வருகிற காலத்தில் நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால், அந்தப் பாடத் திட்டத்தில் ஒரு சில மாற்றங்களைச் செய்யவேணடும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில வார்தைகள் சொலல விரும்புகிறேன. என்னுடைய தொகுதியில்தான் நமமுடைய ராஜ்யததிலேயே தலைசிறந்த வாசஸ்தலமான கோடைக்கானல் இருககிறது. அங்கே பல அபிவிருத்தி வேலைகள் செய்ய வேண்டியிருககிறது. கோடைக்காலங்களில் வரக்கூடிய பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதறகாக அன்று இருநத முனிசிபல் நகராட்சி அந்த வசதிகளை செய்து கொடுக்க முடியாத நிலையிலே இருந்ததல காரணமாக, ஒரு நகர அமைப்பை 4 ஆண்டுகளுக்கு முன்பு அமைத்தார்கள். சில பகுதிகளிலே பல நல்ல காரியங்களை மானியங்கள் கொடுப்பதன் மூலமாக சர்க்கார் செய்து கொடுத்திருக்கிறார்கள். கோடைக்கானலைப் பொறுத்தவரையில், அங்குள்ள ரோடுகளை நல்ல முறையில் செப்பனிட வேண்டும். மேலும புதிய ரோடுகளையும் அமைக்க வேண்டியிருக்கிறது. சர்க்கார் கொடுத்திருக்கும் மானியம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் இன்னும் அதிகமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கு வரக்கூடியவர்களுக்கு நல்ல குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதற்கு வேண்டிய மானியத் தொகையை கொடுக்க வேண்டும் என்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது ஒவ்வொரு ஆண்டிலும் அதிகமான பிரயாணிகள் கோடைக்கானலுக்கு வந்து கொண்டு இருக்கிறார்கள். ஓரிரு நாட்கள்கூட தங்குவதற்கு வசதிகள் இல்லாத காரணத்தினால், வரக்கூடிய பிரயாணிகள் உடனே திரும்ப வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதிகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. அ. ராகவ ரெட்டி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே முக்கியமாக கல்வியைப்பற்றி நமது அரசாங்கம் எடுத்த முடிவைக் குறித்து, அதாவது 11-வது வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் இலவசக்கல்வி அளித்ததைக் குறித்து நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம்மாதிரி எல்லோருக்கும் இலவசமாக கல்வி அளிக்க ஏற்பாடு செய்திருக்கும்பொழுது, அந்தக் கல்வியின் தரம் கெடாமல் பயிற்சி நடக்குமா என்பது தான் பலருடைய சந்தேகமாக இருக்கிறது. குறிப்பாக சென்ற ஆண்டிலே சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட எல்லா பள்ளிகளையும் எடுத்துக் கொண்டு பார்த்தால், அங்கே 25 சதவிகிதம்தான் மாணவர்கள் தேர்வு பெற்று இருக்கிறார்கள். அதே நேரத்தில் தனியார் துறைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் 50-ல் இருந்து 75 சதவிகிதம் வரை தேர்வு பெற்று இருக்கிறார்கள். இனிமேல் சம்பளம் இல்லாமல் படிப்பது என்று சொன்னால் இது 20 அல்லது 10 சதவிகிதத்திற்கு வந்து விடும்

என்று நினைக்கிறேன். அப்படியில்லாமல் சர்க்கார் சம்பந்தப்பட்ட பள்ளிகளிலே நல்ல முறையில் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக 2, 3 நாட்களுக்கு முன் நம்முடைய செகரடேரியட்டிலே வேலை செய்யும் எல்லோரும் கருப்பு பாட்ஜுகளை மாட்டிக்கொண்டு, 'மோர்னிங் டே'—அதற்கு என்ன தமிழ் வார்த்தை சொல்லுவது என்று தெரியவில்லை—(கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'துக்க தினம்') துக்க தினம் அனுஷ்டித்தார்கள். அந்த பாட்ஜுகளைப் பார்க்கும்பொழுது, அது யாராக இருந்தாலும், என்ன நினைப்பது என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஒரு அரசாங்கம் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால், அதிலே பணி புரியும் அதிகாரிகளும், ஊழியர்களும் சந்தோஷத்துடன் வேலை செய்தால்தான் நிர்வாகம் நன்றாக நடக்கும். துக்க தினம் கொண்டாடிக்கொண்டு வேலை செய்தால் நிலைமை எப்படி இருக்கும், அலுவலகத்தில் அவர்கள் செய்ய வேண்டிய வேலையை எவ்வளவு தூரம் நல்ல முறையில் செய்வார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். ஆகவே அமைச்சர்கள் இதை உடனடியாகக் கவனித்து, என்ன செய்யக் கூடுமோ அதைச் செய்து, அவர்களுக்குக் குறைந்தபட்சம் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கக் கூடிய படியையாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளை எடுத்துக் கொண்டால், நம்முடைய அரசாங்கம் தினந்தோறும் அவர்களுக்கு அது செய்து விட்டோம், இது செய்து விட்டோம் என்று சொல்லுகிறார்களே தவிர, நம்முடைய மாநிலத்திலே சில நீர்த்தேக்கத் திட்டங்களை கட்டியிருக்கிறார்களே தவிர, உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை 1948-ம் வருஷத்திற்கு முன்பு அவர்கள் இருந்த நிலைமை என்ன, இன்று அவர்கள் இருக்கும் நிலைமை என்ன என்பதை ஆராய்ச்சி செய்து பார்த்தால் தெரியவரும். இங்கே புள்ளிவிவரங்களைக் காட்டி, இவ்வளவு லட்சம் டன் அதிகமாக உற்பத்தி ஆகியிருக்கிறது. அவர்களுக்கு அதைச் செய்திருக்கிறோம், இதைச் செய்திருக்கிறோம் என்று அமைச்சர்களும் அதிகாரிகளும் நினைத்துக் கொண்டிருந்தால், அவர்கள் ஒரு நாளும் முன்னேற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக தண்ணீர் வசதி இல்லாத கிராமங்களுக்கு இந்த சர்க்கார் சுதந்திரம் அடைந்து 15 ஆண்டுகளுக்குப்பிறகும் என்ன செய்திருக்கிறார்கள்? ஏதோ நாங்கள் இவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம், அதை எல்லாம் செலவழித்து வருகிறோம் என்று சர்க்கார் சொல்லுகிறார்களே தவிர, நேராகச் சென்று பார்க்கும்பொழுது 1948-ம் வருஷத்துக்கு முந்தி இருந்த நிலைதான் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. சர்க்கார் நினைக்கிறபடி அபிவிருத்தி வேலைகள் ஒன்றும் நடக்கவில்லை. விவசாயத்தைப் பற்றி நாம் ஒவ்வொரு சட்டசபைக் கூட்டத்திலும் பேசுகிறோம். ஆனால் இங்கே பேசிவிட்டுப் போனபிறகு அதைப்பற்றி





யாரும் கவனிப்பது இல்லை. இதற்கு ஒரு குழு அமைத்து, அவர்கள் நம்முடைய மாநிலம் பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்து எந்த எந்த வேலைகளை எந்த அளவுக்குச் செய்து இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். முழுக்கடன் திட்டம் என்ற பெயரில் விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 100 ரூபாய் கடன் பெற வேண்டும் என்றால் சுமார் ரூ. 15 வரை பிடித்துக் கொண்டுதான் கொடுக்கிறார்கள். பங்குத் தொகைக்காக ரூபாய் 10-ம் டெபாசிட்டுக்காக ரூ. 5-ம் பிடித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் ரூ. 100-க்கும் வட்டி வசூலிக்கிறார்கள். எங்கள் பகுதியில் இந்த முழுக் கடன் திட்டம் அமலாகியிருக்கிறது. மேலும் கிணறுகள் வெட்டுவதற்கும் கடன் கொடுக்கிறார்கள். சமீபத்தில் நானே கடனுக்காக ஒரு மனுப்போட்டிருந்தேன். எனக்கு ஏன் கிடைக்கவில்லை என்று கேட்டபொழுது, வில்லங்க சர்ட்டிபிகேட் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். சர்க்கார் கடன் கொடுக்கும்பொழுது, அவர்களே சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸுக்கு எழுதி உத்தேசிக்கப்பட்ட அடமான நிலத்தின் பேரில் முன் அடமானம் இருக்கிறதா என்று பார்ப்பார்கள். அவ்வாறு பார்த்துவிட்டு கொடுப்பதற்கு வழி இருந்தால் கொடுப்பார்கள். இப்பொழுது விசாரித்துப் பார்த்ததில் ரூ. 500 கிணறுக்காக கடன் வாங்க வேண்டும் என்று சொன்னால், ரூ. 22.50 வில்லங்க சர்ட்டிபிகேட்டுக்காகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மேலும் ரூ. 25 அல்லது 50 செலவு செய்தால்தான் இந்தக் கடன் தொகையைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை ரத்து செய்து, ஏற்கெனவே இருந்த மாதிரி கடன்கள் வழங்குவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆரணி ஆற்றுக்கு குறுக்கே, அன்னப்ப நாயக்கன் குப்பத்தில் அணைக்கட்டு கட்டுவதற்காக 25 ஆண்டுகளுக்கு முன்பாகவே திட்டம் போடப்பட்டிருந்தது. நெருக்கடி நிலைமையை உத்தேசித்து அது ஒத்தி வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கம்யூனிடி டெவலப்மெண்டில் செய்யக்கூடிய வேலைகளைப்பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவற்றைப்பற்றி நம்முடைய அரசாங்கத்திற்கும் அமைச்சர்கட்கும் நன்றாகத் தெரியும். இந்த வேலைத் திட்டங்கள் மூலமாக சென்ற 10 ஆண்டில் எவ்வளவு கோடி செலவு செய்திருக்கிறார்கள், அந்தச் செலவுக்குத் தகுந்தபடி கிராமங்கள் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கின்றன என்பதற்கு சர்க்கார் ஒரு குழு அமைத்து இனிமேலாவது நல்லபடியாக நடப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியில் கவரைப்பேட்டை என்ற இடத்தில் ஒரு செக் போஸ்ட் இருக்கிறது. அதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்த செக்போஸ்ட்

வழியாகத்தான் நெல்லூர் அரிசி சென்னைக்கு வரவேண்டி இருக்கிறது. தினந்தோறும் ஏராளமாக லாரிகளில் நெல்லூரிலிருந்து அரிசி வருகிறது. ஆந்திர ராஜ்ய உத்தரவுப்படி பகிரங்கமாக வர முடியவில்லை. ஆகவே, ஆந்திரா ராஜ்யத்தில் ஒரு லாரிக்கு சுமார் ரூ. 100 கொடுத்து கொண்டு வருகிறார்கள். பிறகு இந்த செக் போஸ்டில் மறுபடியும் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த நெல்லூர் அரிசிப் பிரச்சினை தீர, ஆந்திர அமைச்சர்களோடு நம் அமைச்சர்கள் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டியது அவசியம், அப்பொழுதுதான் இந்த அக்கிரமங்களை தடுத்து நிறுத்த முடியும். அரிசிப் பிரச்னையும் தீர முடியும். ஒரு சி.ஐ.டி. அதிகாரியையாவது அனுப்பி அங்கே நடக்கும் அக்கிரமங்களை கண்காணிக்கச் செய்ய வேண்டும். தினந்தோறும் அங்கே ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வசூலிக்கிறார்கள். ஆகவே இதைத் தடுக்க உடனடியாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். சமீபத்திலேகூட அந்தப் பக்கத்து கிராமத்தில் உள்ள மக்கள் ஒரு மனு கொடுத்திருந்தார்கள். எல்லைப்புறத்தில் இருந்து மக்கள் ஆடுமாடுகளை விற்பனைக்கு ஓட்டிக்கொண்டு போனால்கூட அதற்கு வரி கட்ட வேண்டும் என்று ஆந்திர சர்க்கார் வரி வசூலிக்கிறார்கள். இது நம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து இருக்கிறதோ என்னவோ தெரியாது. இது அன்றாடம் நடக்கும் விஷயம். ஆகவே இதிலும் நம் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மதுவிலக்கு சம்பந்தமாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி மாநிலத்தின் வடக்கு கோடியில் இருக்கிறது. அங்கே ஆந்திர எல்லையில் ஒரு பர்லாங்குக்கு ஒரு கடை வீதம் கள்ளுக்கடைகளை வைத்து இருப்பதினால் தமிழ் நாட்டில் இருந்து மக்கள் எல்லைக்கு வந்து குடிக்கிறார்கள். பல சமயங்களில் போலீஸார் கண்காணித்து பொன்னேரி, திருத்தணி முதலிய இடங்களில் குற்றம் செய்தவர்களுக்கு அபராதம் போடுகிறார்கள். இந்தத் தொல்லையைத் தடுக்க எல்லையில் இருந்து 5 அல்லது 10 மைல் ட்ரை பெல்ட் ஏரியா என்று செய்து அதற்கு அப்பால்தான் கள்ளுக்கடைகளை வைக்கலாம் என்று ஆந்திர சர்க்காரோடு கலந்து ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்ததாக ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன். ஆரணி ஆற்றுக்கு குறுக்கே, பெரியபாளையம் என்ற ஊரில் ஒரு பாலம் இல்லாததால் ஒவ்வொரு வருஷமும் பஸ்கள் கீழே விழுந்து பிரயாணிகள் பாதிக்கப்படுகிறார்கள். சென்ற வருஷம்கூட அரசாங்க பஸ் 70, 80 பிரயாணிகளுடன் ஆற்றில் விழுந்து விட்டது. நல்லகாலமாக உயிருக்கு ஆபத்து இல்லாமல் இருந்தது. அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்ற விஷயம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சர்க்காரால் ஒத்துக் கொள்ளப்பட்டது. அதை இப்பொழுதாவது எடுத்துச் செய்ய வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன்.





* **திரு. சி. பொன்னுசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது முதல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நடப்பு ஆண்டு நிதி நிலை அறிக்கையின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லி ஆதரித்து பேச விரும்புகிறேன். இது ஒரு நல்ல, எல்லோரும் ஏகோபித்து ஆதரிக்கக்கூடிய நிதி நிலை அறிக்கை. இது பல அம்சங்களின் மூலம் நன்றாகத் தெரிகிறது. இந்த நிதி நிலை அறிக்கையிலே 42 புது விதைப்பண்ணைகள் விவசாயத்திற்காக தொடங்கவும், 5½ கோடி ரூபாய் செலவில் புதிய நீர்ப்பாசன திட்டங்களையும் இன்னும் புதிய முறையில் பென்ஷன் முறையை அமைத்தும், ஓல்ட்-ஏஜ் பென்ஷன் மக்களுக்குக் கொடுக்க வசதி செய்தும், கல்வியை எடுத்துக் கொண்டால் 11-வது வகுப்பு வரைக்கும் எல்லோரும் சம அந்தஸ்தோடு இலவசமாக படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியும், மூன்று ஆண்டுகளில் 650 உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்தியும், இந்த ஆண்டில் புதிதாக 2 மருத்துவக் கல்லூரிகளையும் 4 கல்லூரிகளும் குறிப்பாக மதுரை மாநகரிலே ஒரு சர்வ கலாசாலையையும் கொண்டு வருவதற்காக திட்டமிட்டு இருப்பதாகவும் அறிந்து யாரும் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது. அதிலும், 4, 5 ஆண்டுகளாக போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக பெரும் தொகையை ஒதுக்கி வைத்திருப்பது வரவேற்கத் தக்கதே. அதேபோன்று பல துறைகளிலும் முதல் அமைச்சர் இந்த பட்ஜெட்டை நல்ல முறையிலே தயாரித்து இருக்கிறார்கள். அதே சமயத்திலே வருமானத்தை பெருக்கும் முயற்சியிலும் மக்களுக்கு கஷ்டம் இல்லாத வகையில் செய்திருக்கிறார்கள். ஒரு சத விகிதம் சேல்ஸ் டாக்ஸில் ஒரு சில பண்டங்களுக்கு மட்டும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். போட்டிருக்கும் பண்டங்கள் யாரையும் பாதிக்கவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். எதிர்கட்சி அங்கத்தினர்கள் நூலுக்கும் பருத்திக்கும் விற்பனை வரியை ஒரு பர்ஸண்டிலிருந்து 2 சத விகிதம் ஆக உயர்ந்திருப்பதால் தனிப்பட்ட முறையிலே இயங்கும் நெசவாளர்களுக்கு கஷ்டம் ஏற்படும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே சற்று சிந்தித்துப் பார்த்தால் அது சரியல்ல என்பது தெரியும். 12 50 p.m

தமிழ் நாட்டில் உள்ள டெக்ஸ்டைல் மில்களின் வரவு செலவுக் கணக்கையும் லாபநஷ்டக் கணக்கையும் பார்த்தால் அவர்கள் வருஷா வருஷம் குறைந்தது 25 சத விகிதம் டிவிடெண்ட் கொடுக்கும் நிலையில் நல்ல லாபம் அடைந்து வருகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. மில் அதிபர்கள் நூல் விலையை அதிகப்படுத்தவில்லை என்றால் கட்டாயம் நெசவாளர்களுக்கு நிவாரணம் இருக்கும்.

[திரு. சி. பொன்னுசாமி] [4th March 1964

இப்பொழுது நாம் விவசாயத்தை எடுத்துக்கொண்டால் நல்ல முன்னேற்றமடைந்திருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படி இருந்தபோதிலும் நாட்டில் உயிர் நாடியான, முதுகு எலும்பான விவசாயம் இன்னும் நல்ல நல்ல பலன்களை கொடுக்க வேண்டும் என்றால் மாநில சர்க்கார் மத்திய சர்க்காரோடு ஒத்துழைத்து ஒரு மாபெரும் திட்டத்தை செயல்படுத்தினால்தான் அது சாத்தியமாகும். அப்படி இல்லை என்றால் இந்த விலைவாசி உயர்வை தடுக்க வேண்டிய வழிமுறைகளை கண்டு பிடிக்க முடியாது. சில மாவட்டங்களில் நடக்கும் விவசாயத்தை நான் பார்த்தேன். வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு முதலிய மாவட்டங்களில் பல இடங்களில் நெல் வயல்கள் தோன்றி யிருக்கின்றன. அவைகள் நெல் வயல்களா அல்லது புல் வயல் களா என்று தெரியவில்லை. எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் கையாளப்படும் விவசாய முறைகள் இங்குள்ள விவசாய நண்பர் களால் கையாளப்படுவதாகத் தெரியவில்லை. ஏரில் பூட்டியிருக்கும் மாடுகள், ஏர் உழுவது இவற்றைப் பார்த்தால் இவர்கள் ஆழ உழுவதாகவே தெரியவில்லை. அகல உழுவதைவிட ஆழ உழுவதே அவசியம் என்பது பண்டைக்கால பழமொழி. நாம் எவ்வளவு மினரல் உரங்களை போட்டாலும்கூட அது மட்டும் போதாது. இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத் தில் 4, 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை நிலங்களை பண்படுத்த வேண்டும். நிலங்கள் தாமாகவே உயர்ந்து விடும். உரம் போட்டுப் போட்டு உயர்ந்து விடும். சத்தும் போய் விட்டு இருக்கும். விவசாயம் பண்ண முடியாது. ஆகவே அங்கே தார் எடுப்பது சம்பிர தாயம். தார் எடுப்பது என்றால் ஒரு அடி, 1½ அடி ஆழத்திற்கு வயலில் பள்ளங்கள் தோண்டி மண்ணை எடுத்துவிட்டு பதிலுக்கு குளத்துக் கரிசல் மண்ணைபோட்டு நிரப்புவது வழக்கம். சாணி, குப்பை உரம், அதற்குமேல் தண்ணீர் விட்டு உழுது, பிறகு பசும்தாள் உரம் போட்டு அது அழுகிற பிறகு விதை விதைத்தால் வளமாக இருக்கும். அதற்கு மேல் 2, 3 மாதங்களுக்குப் பிறகு மினரல் உரங்களைப் போட்டால் நல்ல லாபத்தைக் கண்டு பிடிக்க முடியும். இது எங்கள் மாவட்டத்தில் கையாளப்படும் முறை. இங்கே நான் கண்டது அப்படியில்லை. ஏதோ உள்ளதுபோதும் என்று செய்வதுபோல்தான் இருக்கிறது. With what you have, be satisfid, and lead a contented life— என்று இருப்பதாகத்தான் தெரிகிறது. தேசத்துக்கு வேண்டுமே, மக்களுக்கு அவசியமே என்ற எண்ணமோ லாப எண்ணமோ இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இவைகளில் எல்லாம் ஒரு "டிரைவ்" கொடுத்தால் நலமாக இருக்கும். விவசாய உத்தியோகஸ்தர்களும் விவசாயிகளும் கலந்து பேச சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்து அனுபவம் உள்ள விவசாயிகளும் இந்த மாவட்டங் களில் உள்ள விவசாயிகளும் ஒன்றுகூடி பேசக்கூடிய ஒரு மாநாடு நடத்தினால்கூட நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



4th March 1964] [திரு. சி. பொன்னுசாமி]

விவசாயத்திற்குத் தேவையான இயந்திரக் கலப்பைகள் போன்றவை வழங்கப்பட வேண்டும். மத்திய சர்க்காரை எடுத்துக் கொண்டால் கன ரக இயந்திரத் தொழிலில்தான் அவர்களுடைய கண்ணோட்டம் பூராவும் இருந்துகொண்டிருக்கிறது. அத்தகைய இயந்திரத் தொழில்களிலிருந்து வரும் பொருள்களை விவசாயத் திற்குத் தாராளமாக வழங்க வகை செய்யவேண்டும். அமெரிக்கா வில் ஒருவர் விவசாயம் செய்தால் 23 பேர் சாப்பிடக் கூடிய நிலை மையில் அங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. அது போல, நம் முடைய நாட்டிலே விவசாய உற்பத்திக்குத் தீவிரமான முயற்சி மத்திய சர்க்காரிலும் சரி, மாநில சர்க்காரிலும் சரி, எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தெரிகிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடியும் நேரத்தில் நம் நாட்டுக்குத் தேவை பத்து கோடி டன் உணவுத் தானியங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. அந்தப் பத்து கோடி டன் உணவுத் தானிய உற்பத்தி எல்லையை நாம் வேகமாக அடைய எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளவேண்டும். ஜப்பான் நாட்டில் 1927-ஆம் ஆண்டு 9 லட்சம் டன் உணவுப் பற்றுக்குறை இருந்தது. அவர்களுடைய தேவை யைப் பெரும்பாலும் பர்மாவிலிருந்து வாங்கிக் கொண்டிருந்தார் கள். சைனாவிலும்கூட அப்படிப்பட்ட நிலைமைதான் இருந்தது. ஜப்பானைப் பொறுத்த வரையில் இரண்டு ஆண்டுகளாக அவர்கள் தீவிரமாகப் பாடுபட்டு விவசாயத்தைப் பெருக்கி 9 லட்சம் டன் பற்றுக்குறையை அவர்கள் தீர்த்துவிட்டார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், விவசாயத்தை அதிவேகமாகத் தீவிரப்படுத்தவேண்டும் என்பதிலே நமக்கு ஒரு கண்ணோட்டம் வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். 1-00 p.m.

தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதை நாம் இந்த அறிக்கையிலிருந்து பார்க்கிறோம். இந்தத் திட்டத்தின்படி ஏக்கரா ஒன்றுக்கு 151 பவுண்டு அரிசிதான் அதிகமாகக் கிடைக்கிறது என்பது கணக்கு மூலமாகத் தெரிகிறது. பருத்தி ஒரு ஏக்கராவுக்கு 12 பவுண்டு தான் அதிகமாகக் கிடைக்கிறது. இதெல்லாம்தான் ஒரு தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் கிடைக்கிறது என்பதை நினைத்தால் என் போன்றவர்கள் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குத்தகைக்கு விட்டாலும் குறைந்தது ஐம்பது சத விகிதம் அதிகப்படுத்தக்கூடிய சக்தி விவ சாயிகளுக்கு உண்டு. ஆகவே, இவைகளையெல்லாம் நான் சொல் வது விவசாயத்தில் நாம் இன்னும் அக்கறை காட்டி, தீவிரப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். குறிப்பாக, மத்திய சர்க்காரை அணுகி, ட்ராக்டர்கள், புல் டோஸர்கள், இயந்திரக் கலப்பைகள் ஆகியவற்றை எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்து தரமுடியுமோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்து தரச்சொல்லி விவசாயிகளுக்குக் கொடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இருபது லட்சம் ஏக்கர் நிலம் தமிழ் நாட்டில் விவசாயம் செய்யப்படாமல் இருக் கிறது. பத்து லட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய முடியும். ஆனால், மேற்கொண்டு பத்து லட்சம் ஏக்கரில் விவசாயம்

[திரு. சி. பொன்னுசாமி] [4th March 1964

செய்ய முடியாது. அந்த நிலத்தில் விவசாயம் செய்ய அதிகமாகப் பணம் செலவழிக்க வேண்டும். இயந்திர சாதனங்கள் வேண்டும். இயந்திர சாதனங்களைக் கொண்டு கல் முதலியவற்றை வேண்டாதவற்றை எடுத்துவிட்டால், மக்கள் மிகவும் இலேசாக, கடினமற்ற முறையில் விவசாயம் செய்ய முடியும். உணவு உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். ஆகவே, இந்த நவீன முறைகளை நாம் கையாளுவதற்கு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விவசாயத்தில் இன்னொரு குறை இருக்கிறது. மாவட்ட வாரியாக விவசாயத்தைப் பெருக்குவதற்குப் புள்ளி விவரம் எடுக்கப்படுகிறதே தவிர, தாலுகா வாரியாக எடுப்பதில்லை. தாலுகா வாரியாக எடுத்தால்தான் எங்கெங்கே விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள் இருக்கின்றன, எங்கெங்கே விவசாயம் செய்ய சரியான வசதி இருக்கிறது, எங்கெங்கே தண்ணீர் கிடைக்கிறது என்பதைத் தாலுகாவாரியாகக் கண்டுபிடித்தால்தான் வளர்ச்சியைப் புரிந்து கொள்ள முடியும்.

அதற்கும் அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு அரசாங்கம் கடன் கொடுக்கிறது. அதைத் தொகையாகக் கொடுத்துவிடுகிறார்கள். தொகையாகக் கொடுப்பதினால், ஒரு சிலர் விவசாய வேலைகளுக்காக அதில் ஒரு பகுதியைச் செலவழித்துவிட்டு மற்ற பகுதியைத் தங்களுடைய சொந்த செலவுக்காக உபயோகப் படுத்திக் கொள்ளுகிறார்கள். தொகை முழுவதும் விவசாயத்திற்கு உபயோகப்படுவதில்லை. கலப்பை வாங்குவது, மாடு வாங்குவது, விதை வாங்குவது, உரம் வாங்குவது போன்றவற்றுக்கு இந்தக் கடன் தொகையை செலவழிப்பதோடு, அதில் ஒரு பகுதியைத் தங்களுக்குச் செலவிட்டுக்கொள்கிறார்கள். ஆகவே, கடன் கொடுக்கும்போது, மேற்கண்டவற்றுக்காகத் சாமான்கள் கொடுப்பதோடு, கூலி முதலிய செலவுகளுக்கென்றும் ஒரு பகுதி பணம் கொடுக்கும் முறையைக் கையாளவது நலம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தியா பூராவும் எடுத்துக்கொண்டால் 6.2 சத விகிதம் தேசிய வருமானம் உயர்ந்திருக்கிறது. ஆனால், விலைவாசி 7.2 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. ஆக, ஒரு சத விகிதம்தான் வித்தியாசம் இருப்பதாக மத்திய சர்க்காருடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதாக நான் பத்திரிகை வாயிலாகப் பார்த்தது ஞாபகம் இருக்கிறது. விலைவாசி உயர்வால் ஒருசில மக்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மொத்த வருமானம் 'டிஸ்ட்ரிப்யூஷன்' ஆவது சரியாக இல்லை. ஒரு சிலருக்கு வாங்கும் சக்தி இருக்கிறது. ஒரு சிலருக்கு வாங்கும் சக்தி இல்லை. வாங்கும் சக்தி இல்லாதவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றால், அவர்களுக்கு வாங்கும் சக்தியை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். என்.ஜி.ஓ.-க்கள், அவர்களைவிடக் கீழ் நிலையில் இருப்பவர்கள் ஆகியவர்களுடைய கஷ்ட நிலைமையைப் போக்க வேண்மானால் ஒரு வேஜ் போர்டு,



4th March 1964] [திரு. சி. பொன்னுசாமி]

ஸாலரி போர்டு வைத்து, அவர்களுக்குரிய கஷ்டங்களைக் கண்டுபிடித்து, அவற்றை நிவர்த்தி செய்ய உடனடியாக ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். வாங்கும் சக்தி இல்லாத இவர்களுக்கு வாங்கும் சக்தியை அதிகரிக்க வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நமது மத்திய சர்க்கார் ஒரு நல்ல காரியம் செய்ய முன்வந்திருக்கிறார்கள் என்பதை நான் பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டி நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அதனுடைய பலன்கள் ஒரு சிலருக்குப் போயிருக்குமோ என்கிற சந்தேகத்தின் பேரில் அதைக் கண்டுபிடிக்க ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, அதற்கு ஒரு நீதிபதியை நியமித்திருக்கிறார்கள். அது நல்ல ஒரு அறிகுறி என்று நான் கருதுகிறேன்.

நான் இந்த விவாதத்தில் பேசவேண்டாம் என்று எண்ணியிருந்த போதிலும் நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள் பேசியதைப் பார்த்து நானும் பேசவேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், என்னுடைய அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். அந்தக் கட்சிக்குப் பக்கபலமாக ஒரு பலாத்காரக் கூட்டம் இருக்கிறது என்பதை அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எதிலிருந்து சொல்கிறேன் என்றால், 100 பேர்கள் அரெஸ்ட் செய்யப்பட்டதைக் குறித்து நமது முதல் அமைச்சர் அவர்கள், "அவர்கள் ஒன்றும் தப்பு செய்ய மாட்டார்கள்; விட்டுவிடுங்கள்" என்று சொல்லி, 100 பேர்களை விடுதலை செய்துவிட்டுவிட்ட பிறகு, தேர்தல் முடிந்தவுடனே பார்த்தால், அந்த 100 பேர்களும் மறுபடியும் தப்பு செய்ததன் காரணமாக அரெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் இதிலிருந்து ஒரு பலாத்காரக் கும்பல் இருக்கிறது என்பது நமக்கு தெரிகிறது.

தூத்துக்குடியில் நடந்த சில சம்பவங்களை நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். தூத்துக்குடியில் ஐந்தாவது வார்டில் ஜெயித்த ஒரு முனிசிபல் கவுன்சிலரைத் திராவிட முன்னேற்றக் கழக மெம்பர் அடித்துவிட்டார். 1-ஆம் வார்டில் நடந்த தேர்தல் தி.மு.க. வினர் கல் எறிந்து 147 செக்‌ஷன் கேஸ் ரிஜிஸ்டராகி இருக்கிறது . . .

(மணி அடிக்கப்பட்டது.)

* திரு. ஏ. ஆறுமுகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், நாட்டு மக்களாலும், குறிப்பாக எதிர்க்கட்சிக்காரர்களாலும் மனமார உள்ளத்திலே போற்றக்கூடிய அளவிற்கு சிறந்த முறையில் அவருடைய நிதி நிலை அறிக்கையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். முனிசிபல் தேர்தல் நேரத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் பேசும்போது, "29-ம் தேதி முதல் அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை வாசிக்கிறபோது ஏராளமான வரிகளை ஏழை மக்கள் தலை மேல் போடப்

[திரு. ஏ. ஆறுமுகம்] [4th March 1964

போகிறார்கள், அப்படிப்பட்டவர்களுக்கு உங்களுடைய வோட்டுக்களை எல்லாம் போட்டு ஏமாந்து விடப் போகிறீர்கள்" என்று பேசிக்கொண்டு வந்தார்கள். அதையெல்லாம் நம்பிக்கூட சில பகுதியிலே அவர்களுக்கும் வோட்டு போட்டு விட்டார்கள். எந்தப் பகுதியிலே என்ன பேசினார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் திருவண்ணாமலையைப் பொறுத்த அளவிலே, "முதல் அமைச்சர் அவர்கள் 29-ந் தேதி இந்த நாட்டுக்குப் பெரிய பாரமாக உள்ளதை ஏழை மக்களுடைய தலையிலே சுமத்துவதற்காக வரி போடப் போகிறார்கள். அதனால்தான் 29-ந் தேதிக்கு முன்னாலே எல்லாத் தேர்தலையும் நடத்தவேண்டும் என்று திட்டம் போட்டு இந்த முனிசிபல் தேர்தலை வைத்திருக்கிறார்கள்" என்று மக்கள் மத்தியில் சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்களுக்கு இப்பொழுது ஒரு பெரிய ஏமாற்றமாகவும், நமக்கெல்லாம் பேரானந்தமாகவும் இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது. அவர்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றம். நாமெல்லாம் இதை நன்றாகக் கொண்டாடுகிறோம். கொண்டாட்டமாக நாம் இதை நினைக்கிறோம். அவர்களுக்குத் திண்டாட்டமாக இருக்கிறது. அதை அவர்களும் நன்றாக உணர்கிறார்கள். அந்த வகையில், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், தங்களுக்கே உரித்தான முறையில், நல்ல புரட்சிகரமான காரியங்களை நம்முடைய தமிழகத்திலே செய்துகொண்டு வருகிறார்கள். இந்த நாட்டிலே நெருக்கடி நிலை இருந்தாலும்கூட, மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய ஏராளமான பெரும் திட்டங்களை, மக்களுக்கு வரிப் பளு ஏதும் இல்லாமல், கொண்டுவந்திருக்கிறார்கள், அதற்காக அவர்களுக்கு நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அவர்கள் தம்முடைய உரையிலேயே விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம் வந்தது. திருவண்ணாமலை திருக்கோவிலூர் பகுதிகளுக்கு அதனால் நன்மை ஏற்படக்கூடும். மேலும் அந்த ஆற்றின் தென் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் அந்தப் பாசன வசதியை கொஞ்சம் தென் பக்கத்திற்கும் திருப்பிக்கொடுக்கவேண்டும் என்று கோருகிறார்கள். நடைமுறையில் அது சாத்தியம் இல்லையென்பதாக அரசாங்கத்திடமிருந்து பதில் வந்துவிட்டது. ஆயினும் இந்தப் பகுதியில் ஏரிகளும், ஆறுகளும் இருக்கின்றன. பாம்பாறு ஓடுகிறது. அது ஜீவ நதியாக ஓடும் வகையில் தானிப்பாடி, வேளூர், மலமஞ்சனூர்புதூர் போன்ற பகுதிகள் நன்மை அடையக்கூடிய வகையில் புட் ப்ரொடெக்ஷன் திட்டத்தின் கீழ் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு எஸ்டிமேட் எல்லாம் தயாரிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் அந்த வேலை நடைபெறாமல் இருக்கிறது. அந்த வேலையைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சாத்தனூர் பகுதியில் சில ஆயக்கட்டுப் பகுதிகளைச் சேர்க்க வேண்டும். அதையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். எங்கள் மாவட்டத்தில் மின்சாரத்தினால் தான் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். ஏராளமான பம்பு செட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் அங்குள்ள விவசாயிகள் அதிகம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம் பம்பு செட்டு வைப்பதற்கு முன்னால் அதிகமான சர்டிபிகேட்டுகள் பெறவேண்டியதாக இருக்கிறது. உடனடியாக சால்வன்ஸி சர்டிபிகேட்டை தாசில்தார்கள் வழங்கவேண்டுமென்று உத்திரவிட கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லையென்றால் ஸால்வென்ஸி சர்டிபிகேட் கொடுத்தால்தான் மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார போர்டார் சொல்கிற கட்டுப்பாட்டையாவது எடுத்துவிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று, பாலாறு பேசின் விதியை அடியோடு எடுத்துவிட வேண்டுமென்று அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திலும்கூட சொல்லியிருக்கிறோம். அந்த விதியை தளர்த்தியிருப்பதாகச் சொன்னார்கள். ஆயினும் இன்னும் சர்டிபிகேட் வாங்குகிற முறை இருப்பதனால் அதிகாரிகள் பின்னே போகக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு சாகுபடி காலங்களில் மிகுந்த கஷ்டம் உண்டாகிறது. ஆகவே அந்த ஜில்லா மக்களுடைய கஷ்டத்தை உணர்ந்து கனம் அமைச்சர் அவர்கள் அதைப் போக்க முன்வர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

அடுத்தாற்போல தொழில் துறையில் வடாற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அங்கே என்ன என்ன கனிப் பொருள்கள் கிடைக்கக் கூடும் என்பதை நல்லமுறையில் உடனடியாகப் பரிசீலனை செய்ய வேண்டும். மேலும் நூற்பு ஆலை ஒன்றை அங்கே நிறுவதற்கு தனியார் துறையில் முன்வந்தால் போதுமான உதவி அளிப்பதாக முன்பு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடாற்காடு ஜில்லாவில் வேலூரில் ஒரு நூற்பு ஆலையை அமைக்க முன்வந்திருப்பதற்குப் பாராட்டுகிறேன். செங்கம், வந்தவாசி, போளூர், செய்யாறு, திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் பல தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மாவட்டத்தின் தென் பகுதியில் நூற்பு ஆலையை அமைத்துக் கொடுத்தால் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அந்த மாவட்டத்தில் ஒரு கல்லூரியை ஏற்படுத்த அரசாங்கம் முன் வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். அந்தக் கல்லூரி எங்கு அமையும் என்று தெரியவில்லை. சாத்தனூரில் அமைந்தாலும் நல்லது. அல்லது திருவண்ணாமலையில் ஒரு உயர் நிலைப் பள்ளியைத் திறந்து வைக்க அமைச்சர் அவர்கள் முன் வந்தபோது, "இது கல்லூரிக் கட்டிடம் போல இருக்கிறது" என்று பாராட்டினார்கள். அவரது உள்ளக் கிடக்கை போல—காலஞ் சென்ற தேசத் தியாகி அண்ணாமலை பிள்ளையின் ஞாபகார்த்தமாக

திருவண்ணாமலையிலேயே அந்தக் கல்லூரியை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தாலும் மிகவும் நன்றாக இருக்குமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் முக்கியமாக செங்கத்தில் ஒரு ஆஸ்பத்திரி புதிதாக கட்ட வேண்டுமென்று ரூ. 31/2 லட்சத்தில் ஒரு திட்டம் தயாரித்தார்கள். துரதிருஷ்ட வசமாக தேசிய நெருக்கடி காரணமாக அது நிறுத்தி வைக்கப்பட்டது. அதை உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டும்.

* **திரு. பி. முருகையன்:** மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டும் நிதி நிலை வழக்கம் போல துண்டு விழுகிற நிலைமைதான் இருக்கிறது. சோஷலிசம் என்ற திட்டத்தை அமைச்சர் அவர்கள் இதிலே பல இடங்களில் சொல்லியிருக்கிறார்கள். ஆவடியில் ஆரம்பித்த சோஷலிசத் திட்டத்தைப் புவனேஸ்வரத்தில் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறார்கள். இதை இன்னும் எங்கு கொண்டு போய் நிறுத்துவார்களோ என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இதிலே, ஏழை விவசாயிகளுடைய முன்னேற்றங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உரம், பொறுக்கு விதைகள் எல்லாம் எங்கள் பகுதியைப் பொறுத்தவரை காலாகாலத்தில் கிடைப்பதேயில்லை. புதுக்கோட்டைப் பகுதி மிகவும் வரண்ட பிரதேசமாக இருக்கிறது. பருவ மழை சரியான காலங்களில் பெய்வது இல்லை. விவசாய மக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏக்கருக்கு இரண்டு மூட்டை நெல் கூடத் தேறுவதில்லை. என்னுடைய தொகுதியில் நில வரி வசூலிக்கின்றனர். சென்ற ஆண்டு உபரி வரி பாக்கி 45 காசு இந்த ஆண்டு நில வரி ரூ. 1-95 காசு ஆக மொத்தம் ரூ. 2-40 காசு சேர்த்து வசூலிக்கின்றனர். இதை சென்ற கூட்டத்திலும் எடுத்துக் கூறியுள்ளேன். அத்துடன் இல்லாது கடன்களையும் வசூலிக்க நெருக்கடி செய்கிறார்கள். இந்த நிலைமையில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடனை தவணைகளாகத் திரும்பப் பெறாமல் ஒரே முறையில் இரண்டு தவணைகளை ஒன்றாகச் சேர்த்து கொடுக்க வேண்டுமென்று டிமாண்ட் செய்து அதை வசூலிக்க சொத்துக்களை ஜப்தி செய்தும் விவசாயிகளை அலங்கோலப் படுத்துகிறார்கள். இந்த நிலைமை பற்றியெல்லாம் அமைச்சர் அவர்களிடம் நேரிலேயே கூறினோம். ஆனால் அமைச்சர் அவர்கள் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. புதுக்கோட்டைப் பகுதிக்கு ஒரு அமைச்சரே கிடைத்தும் இந்த நிலைமை இருக்கிறதே என்று காங்கிரஸ்காரர்களே பேசிக் கொள்கிறார்கள். என்னிடம் கேட்கும் காங்கிரஸ்காரர்களிடம் அமைச்சரை வைத்துக் கொண்டு இப்படிக் கூறுகிறீர்களே என்று கூட நான் கூறியுள்ளேன். ஆகவே, அந்த வரண்ட பகுதியை முன்னேற்ற காட்டாறுகளில் சிறுசிறு அணைகளைக் கட்டி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நீர்பாசன வசதி செய்து தரவேண்டுமென்று தங்கள் மூலமாக அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.





புதுக்கோட்டை பகுதிக்குக் காவிரித் தண்ணீரைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள் என்ற காரணத்தால் மறுத்து விடுகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டையில் காங்கிரஸ் ஊழியர்களிடத்தில் பேசுகிறபோது காவிரித் தண்ணீரை எப்படியும் கொண்டு வர முயற்சி செய்வேன் என்று கூறியிருக்கிறார். புதுக்கோட்டை தனி எஸ்டேட்டாக இருக்கும்போதே காவிரித் தண்ணீரை குளித்தலைக்கு மேற்கே 10 மைல் தூரத்தில் உள்ள ஐயர் மலைப் பகுதி வழியாகக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு கைவிடப்பட்டது. எப்படியும் அந்தத் திட்டத்தை நன்றாகப் பரிசீலனை செய்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.-க்களுக்கு எந்த விதமான சம்பளச் சலுகையும் கொடுக்கப்படாதது வருந்தத்தக்கது. தமிழாசிரியர்களைப் பொறுத்தவரை பயிற்சி பெறாத தமிழாசிரியர்களை பல ஆண்டுகளாக வேலை பார்த்து வந்தவர்களை வேலையிலிருந்து நீக்கக் கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாலைந்து ஆண்டுகள் வேலை பார்த்து, பிராவிடண்ட் பண்ட் எல்லாம் பிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்களை சர்விசில் இருந்து நீக்காது பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுடைய நலன்களுக்காக இந்த ஆண்டு அதிகமான நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் கோர்ட்டுகளில் சென்று நீதி பெறுவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகைகள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படியாகக் கண்காணிக்க வேண்டும். தகுதி உள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகை கிடைக்கும் என்று நிதி நிலை அறிக்கையில் இருக்கின்றன. இதில் யார் தகுதி உடையவர் யார் தகுதி அற்றவர் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. முதல் நாள் அன்று விவாதத்தில் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் காங்கிரஸ் சர்க்கார் எவ்வளவோ சலுகைகள் கொடுத்தும் அவர்கள் மாற்றுக் கட்சியினருக்கு வாக்களித்து விட்டார்கள், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும், என்று கூறினார். வெள்ளைக்காரன் ஆட்சியிலேயே பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தன. அதைப் பெற்றுக் கொண்டுதான் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்து வந்தார்கள். அதைத்தான் இந்த காங்கிரஸ் ஆட்சி பின்பற்றி வருகிறது. ஜனநாயக நாட்டிலே ஒரு பிரஜைக்கு தன்னுடைய எண்ணப்படி வாக்களிக்க உரிமை இருக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வது எந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

[திரு. பி. முருகையன்] [4th March 1964

முதியோர்களுக்குப் பென்ஷன் தொகை வழங்குவதில் இந்த ஆண்டு அதிகமான தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் பற்றி பல அங்கத்தினர் பேசிவிட்டார்கள். புதுக்கோட்டை பகுதியில் எண்ணற்றவர்களுக்கு இந்தத் தொகை கிடைக்கவில்லை. அரசாங்கம் நல்ல முறையில் பரிசீலித்து அனைவருக்கும் இந்தத் தொகை கிடைப்பதற்கான வழிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் அக்கினியாறு ரிசர்வாயர் ஸ்கீம் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்த ரிசர்வாயர் திட்டத்தினால் இப்போது அந்த ஆற்றில் புலவன் காட்டிற்கு அருகில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற அணையின் மூலம் பாசன வசதி பெறும் பெரும் பகுதியான நிலங்கள் பாதிக்கப் படுகின்றன. இதனை நன்கு பரிசீலனை செய்து ரிசர்வாயர் திட்டத்தை நிறுத்திவிட்டு புலவன்காட்டு திட்டத்தை பலமுள்ளதாக கட்டினால் மழையூர்; ஆலங்குடி பிர்க்காக்களும் பாசன வசதி பெறும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அணையை பலமாகக் கட்டினால் ஆலங்குடி தொகுதியைப் பொறுத்தவரை தண்ணீர் வசதி கிடைக்குமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and
1-29 p.m. meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

### IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

‡ 111. *Notification issued with G.O. Ms. No. 2735, Home, dated 27th November 1963 amending Rule 117 of the Madras Motor Vehicles Rules, 1940 relating to the appeal against orders passed by the Registering Authority or other prescribed authorities. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].*

112. *Notification issued with G.O. Ms. 2704, Rural Development and Local Administration, dated 24th December 1963 amending the Conduct of Election of Municipal Councillors Rules, 1962. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].*

113. *Notification issued with G.O. Ms. No. 30, Rural Development and Local Administration, dated 4th January 1964 delegating the functions of State Government to the Commissioner, etc., in respect of requisitioning of premises, vehicles, vessels, animals, for election purposes. [Laid on the Table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919)].*

### B. Reports, notifications and other papers.

Nil.

‡ Placed on the table of the House on 3rd March 1964.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 5th March 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, MR. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### ஸ்தல நிர்வாக ஊழியர்கள்

*** 151 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னாள் மாவட்ட நாட்டாண்மைக் கழகங்களில் பணிபுரிந்த கணக்கர்களையும், மேலெழுத்தர்களையும் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு மாற்றும்போது மற்றவர்களைப்போல அவர்கள் கருதப்படுகிற காரணத்தால் அவர்களின் உத்தியோக உயர்வு பாதிக்கப்படுவதை அரசாங்கம் உணர்கிறதா?

(இ) ஆமெனில் அதற்கு என்ன செய்ய உத்தேசம்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) இல்லை. பழைய ஜில்லா போர்டுகளில் வேலை செய்துள்ள அக்கவுண்டண்டுகளும், மேல் பிரிவு குமாஸ்தாக்களும் அரசாங்கச் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பிறகு மற்ற வெளியார்களைப்போல் கருதப்படுவதில்லை. அவர்களது பதவி உயர்வு வாய்ப்புக்கள் முறைப்படி கவனிக்கப்படுகின்றன. அவர்களில் பலர் பஞ்சாயத்து யூனியன்களில், மானேஜர்கள், அக்கவுண்டண்டுகள் போன்ற பதவிகளுக்கு அதிகச் சம்பள வீதங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களைத் தாராள பென்ஷன் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் போது, பழைய ஜில்லா போர்டுகளில் அவர்கள் செய்த சேவைக் காலம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஜில்லா போர்டுகளில் அவர்களுடைய லீவ் இருப்பும் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜில்லா போர்டுகளில் அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்துக்கு மேல் அடுத்த கட்டத்தில் அரசாங்க ஊழியர்களாக அவர்களது சம்பளம் நிச்சயிக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 152 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to reserve certain posts to the persons belonging to Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes in the services under Panchayat Union Councils;

(b) the details of the same; and

[5th March 1964

(c) the instructions issued to the Panchayat Union Councils, in this regard ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) ஆம்.

(இ) & (உ): பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களில் நேரடியாகச் செய்யும் நியமனங்களைப் பொறுத்தவரையில், 25 சதவீதத்தை பின்னிலை வகுப்பினர்களுக்காகவும், 16 சதவீதத்தை ஷெட்யூல் வகுப்பினர்களுக்காகவும் ஆதிவாசிகளுக்காகவும் ஒதுக்கி வைக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் இதற்காகப் பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மசோதா விதிகள்—இதற்கு ஆட்சேபணைகளோ அபிப்பிராயக் குறிப்புகளோ அனுப்புவோர் அவ்வாறே அனுப்பலாம்—1963 நவம்பர் 27-ம் தேதியுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஜெட், V-ம் பாகத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

ஆட்சேபணைகளையும் அபிப்பிராயக் குறிப்புகளையும் அனுப்புவதற்கான கால அளவு 14—1—1964-ல் முடிவடைந்தது. மசோதா விதிகள் விரைவில் உறுதிப்படுத்தப்படும். மேற்படி விதிகள் உறுதிப் படுத்தப்பட்டவுடன் அவற்றின் நகல் ஒன்று சபையில் வைக்கப்படும்.

**திரு. வை. சங்கரன்:** இப்போது வேண்டிய அளவு ஸ்தானங்களுக்குத் தகுந்த அளவு அப்ளிகன்ட்ஸ் வராவிட்டால் மற்றவர்களுக்கு அவை கொடுக்கப்படுமா? இல்லாவிட்டால் அது நிறுத்தி வைக்கப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அத் தகவல் என்னிடம் இல்லை.

**திரு. செ. மாதவன்:** பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு வேலைக்கு எடுக்கும்போது இதற்கு ஒரு சர்வீஸ் கமிஷன் நியமித்து அதன் மூலம் வேலைக்கு ஆள்களை எடுக்க வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அது பற்றி என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அதுபற்றித் தனியாக ஒரு கேள்வி வருகிறது. அப்போது பதில் சொல்கிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து:** பஞ்சாயத்து யூனியனில் பதவிகளுக்கு ஆட்களை எடுக்கும் பொறுப்பு அப்பாயின்ட்மென்ட்ஸ் கமிட்டிக்கு இருக்கிறது. அதில் பெரும்பாலோரும் மேல் ஜாதிக்காரர்களாக இருப்பதால் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகை கிடைக்காமல் இருக்கிறது. இதை நீக்குவதற்கு என்ன வழிவகை செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இதற்கும் தனியாக ஒரு கேள்வி வருகிறது, அப்போது பதில் சொல்கிறேன்.

**திரு. இரா. நல்லமுத்து:** பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் சரிவர வழங்கப்படவில்லை என்ற ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.



5th March 1964]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அம்மாதிரி பிற்பட்ட வகுப்பினர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட சீட்களுக்கு நபர்கள் வரவில்லை என்றால்தான் அப்பாயின்ட்மென்ட்ஸ் மற்றவர்களுக்கு வழங்கப்படுகிறது. அப்படி பிற்பட்ட வகுப்பினர்களிடமிருந்து நபர்கள் வந்து அவர்களைப் போடவில்லை என்றிருந்தால் அதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கவனிக்கலாம்.

*** 153 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை கார்ப்பரேஷன், முனிசிபல், பஞ்சாயத்துக்களுக்கு நியமிக்கப்படும் எல்லாவித ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள் முதலான பணியாளர்களை Employment Exchange மூலமாகவே நியமிக்க உத்தேசமுண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** நகராட்சிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் அதற்கு வேண்டிய எல்லாவித பணியாளர்களையும் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்சுகள் மூலமாக நியமிக்கும்படி உத்தரவு இடப்பட்டுள்ளது. ஆனால் சென்னை மாநகராட்சி மட்டும் இம்முறையை அனுசரிக்க ஒப்பவில்லை. இந்த விஷயம் மேலும் சர்க்கார் பரிசீலனையில் உள்ளது.

**திரு. செ. மாதவன்:** எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்ச் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இருப்பதுபோல் மாநகராட்சி, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சி போன்றவற்றிற்கு ஒரு கமிஷன் நியமித்து அதன் மூலம் வேலையில் சேர்க்கக் கூடிய ஏற்பாட்டைச் செய்ய உத்தேசம் உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அடுத்த கேள்வியில் இதற்கு பதில் வருகிறது.

**திரு. சா. ராமசாமி:** குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நபர்களின் நம்பரை மட்டும் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேன்சிடம் கேட்டு அதற்கான எண்ணை மட்டும் தெரிவித்துக் கொண்டு வேண்டியவர்களைச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களில் நியமித்து விடுகிற காரணத்தால் பாதிக்கப்படுபவர்களின் பிரச்னையைத் தீர்க்க என்ன வழிவகை செய்யப்படும்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** மாநிலம் பூராவும் இம்மாதிரியுள்ள திட்டத்தைத்தான் அமுல் நடத்த வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன்களுக்கும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் உத்தரவு இடப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் பஞ்சாயத்து யூனியனிலோ அல்லது டவுன் பஞ்சாயத்திலோ ஏதாவது கோளாறு நடந்தால் அதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[5th March 1964

**திரு. செ. மாதவன் :** எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேன்ச் மூலம் வேலைக்கு எடுப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் என்று சொன்னார்கள். ஒப்புக்கொள்ளாமலும் இருக்கலாமா? இதுதவிர வேறு முறையில் வேலைக்கு எடுக்க விதிவிலக்கு தரப் பட்டிருக்கிறதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. தகுதி உள்ளவர்கள் இல்லாமல் இருக்கலாம். அப்போது லோக்கலாக அட்வர்டைஸ் செய்து பின்னால் தகுதியான காண்டிடேட்ஸை எடுக்கலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கார்ப்பரேஷன் மட்டும் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேன்ச் மூலம் ஆட்களை எடுக்க ஒப்புக் கொள்ளவில்லை என்று சொல்லக் காரணம் என்ன? ஏதாவது விவரம் தெரிவித்திருக்கிறார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கவுன்சில் சம்மதிக்கவில்லை.

**திரு. நா. சௌந்திரபாண்டியன் :** சென்னை மாநகராட்சி மட்டும் சம்மதிக்கவில்லை என்றால் அப்படி மற்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இந்த விதிவிலக்கு அளிக்கப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சம்மதிக்கவில்லை என்றால் சம்மதித்தவர்களை எல்லாம் திரும்பிப் போ என்று சொன்னால் வண்டிக்குப் பின்னால் குதிரையைப் போடுவது போல் இருக்கும்.

**திரு. வை. சங்கரன் :** தற்போது முனிசிப்பாலிட்டிகளில் உள்ள அப்பாயின்ட்மென்ட்ஸ் கமிட்டி போன்ற அமைப்புகளை எல்லாம் எடுத்து விட வேண்டுமென்ற உத்தேசமா அல்லது எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேன்ச் ரெக்கமென்ட் செய்யும் நபர்களைக் கமிட்டி தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அபிப்பிராயமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அப்பாயின்ட்மென்ட்ஸ் கமிட்டி, சமீபத்தில் உள்ள எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேன்சை கேட்டு லிஸ்ட் பெற்று, பிடித்தபடி, வரிசைக்கிரமமான முறையில் எடுக்கிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கார்ப்பரேஷன் கவுன்சில் சம்மதிக்கவில்லை என்றால் சம்மதிக்கும்படி சர்க்கார் ஜீ. ஓ. பிறப்பிக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? சம்மதிக்கவில்லை என்றால் ஒவ்வொருவரும் சம்மதிக்க முடியாது என்று எல்லா பஞ்சாயத்து யூனியன்களும் சொல்லிவிட்டால் பின்னால் அரசாங்கத்தின் கொள்கை என்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** முதலில் அவர்கள் கேட்டதற்கு சம்மதிக்கவில்லை. மறுதடவையும் கேட்கப்பட்டது. அவர்கள் அதற்கும் சம்மதம் தெரிவிக்கவில்லை. பின்னால் சர்க்கார் ஆலோசித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**திரு. ஆர். ரங்கசாமி :** கார்ப்பரேஷனுக்கு மட்டும் அந்தமாதிரியான விதிவிலக்குச் சட்டத்திலேயே அளிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதையும் சேர்த்து சட்டம் செய்து மற்ற கவுன்சில்களில் அது பரவாமல் இருக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?



5th March 1964]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சட்டத்தில் எல்லா லோக்கல் பாடீஸும் ஒன்றுதான். தனியாக இஷ்டம்போல் செய்து கொள்ளலாம் என்பதில்லை. மற்றவர்களுக்கு விட்ட மாதிரி அவர்களுக்கும் விட்டோம். அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது. தகுந்தபடி, சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

* 154 கேள்வி.—திரு. சா. ராமசாமி : திரு. கே. ஏ. மதியழகன் : } கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் சர்வீஸ் ஊழியர்களை அரசாங்க சர்வீஸ் சேர்ப்பதற்கான உத்தேசமுண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நகராட்சிப் பணியாளர்களை அரசாங்க ஊழியத்தில் சேர்த்துக் கொள்ளலாமா, அப்படிச் சேர்த்துக் கொண்டால், நகராட்சி மன்றங்களைச் சேர்ந்த பற்பல வகைப் பதவிகளிலுள்ள ஊழியர்களுக்கு அரசாங்க ஊழியத்தில் பதவிகளை ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி மன்றங்கள் சட்டம், 1920-ஐத் திருத்தலாமா என்பவை போன்ற பிரச்சினைகளை அரசாங்கம் யோசித்து வருகிறது.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, முனிசிபல் சர்வீஸையும் அரசாங்க சர்வீஸையும் சேர்ப்பது என்பது வேறு விஷயம். ஆனால் அரசாங்க ஊழியர்களைப் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுப்பது போன்று லோக்கல் பாடீஸிலுள்ள ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு தனியாக ஏதாவது ஒரு கமிஷன் நியமிக்க முடியுமா? இல்லையென்றால் பப்ளிக் சர்வீஸ் கமிஷனே இந்த ஊழியர்களையும் தேர்ந்தெடுக்க அதிகாரம் கொடுக்கப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அரசாங்க ஊழியர்களைப் போன்று இந்த ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தற்போது விதிகள் இல்லை. மேலும் லோக்கல் போர்டிலுள்ளவர்களை தேர்ந்தெடுப்பதற்குத் தனியாக கமிஷன் வைக்க முடியுமா என்கின்ற விஷயம் பற்றி சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது என்று என்னுடைய விடையில் சொன்னேன். இதற்கு அதிகமான பணம் செலவாகும். இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. வை. சங்கரன் :** இந்த ஆலோசனை முடிய எவ்வளவு காலம் ஆகும்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஆலோசனை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** எவ்வளவு துரிதம் தேவையோ அதற்குத் தகுந்தபடி ஆலோசனை நடக்கும்.

[5th March 1964

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்றங்களில் இருக்கக்கூடிய அதிகாரிகள் ஒரே இடத்தில் இருந்து வேலை செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இவர்களுடைய மாறுதலுக்கான எந்தவிதமான வாய்ப்பும் வசதியும் இல்லாமல் இருக்கிறது. இதன் காரணமாக நிர்வாகத்தில் கோளாறுகள் ஏற்படலாம். ஆகவே பொதுவாக உள்ளாட்சி மன்றங்களில் இருக்கின்ற ஊழியர்களை மாற்றுவதற்கான வாய்ப்பும் வசதியும் இருந்தால் நிர்வாகம் ஒழுங்காக நடப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறதா? அப்படியென்றால் அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகின்ற கருத்தையும் கவனத்தில் கொண்டு தான் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களில் வேலை பார்க்கின்ற அரசாங்க ஊழியர்கள், அங்கேயிருக்கின்ற உள்ளாட்சி மன்ற ஊழியர்களோடு இருந்து ஒரே வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு லோயர் டிவிஷன் கிளார்க்கை எடுத்துக்கொண்டால் அரசாங்க ஊழியர்கள் 90 ரூபாய் விதத்தில் தான் சம்பளம் பெறுகிறார்கள். உள்ளாட்சி மன்ற ஊழியர்களும் 90 ரூபாய் விதத்தில் தான் சம்பளம் பெறுகிறார்கள். ஆனால் அரசாங்க ஊழியர்களுக்கு 4 ரூபாய் இன்கிரிமென்ட் இருக்கிறது, உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கு 3 ரூபாய் இன்கிரிமென்ட் இருக்கிறது. இந்த வேறுபாடு இருப்பதினால் இவர்களிடம் ஒத்துழைப்பு வருவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இந்த இரண்டு சர்வீஸ்களும் வெவ்வேறு அடிப்படையில் உள்ளவை என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே இப்போது அதில் ஒன்றும் செய்வதற்கில்லை.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களில் வேலை பார்க்கின்ற அதிகாரிகள் எல்லோரும் சாதாரணமாக இப்போது ஒரே அளவில் வந்துவிட்டார்கள். ஆகவே லோக்கல் போர்ட், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து போர்டு இவைகளில் எல்லாம் வேலை செய்யும் ஊழியர்களை ஒரே பிரிவு "கேட்டிகரி" (Category) என்ற அளவில் ஆக்குவவதற்கு சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இது தனியாகப் பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, இதே கேள்வியை சென்ற ஆண்டு கேட்ட போது, கனம் முதலமைச்சர் அவர்கள் "இப்போது பரிசீலனையில் இருக்கிறது, அடுத்த ஆண்டில் இன்கிரிமென்ட் விஷயத்தில் இருக்கின்ற வித்தியாசத்தை அகற்றிவிட்டோம்" என்று உறுதி அளித்தார்கள். இன்னும் அந்தப் பரிசீலனை முடியவில்லையா? அல்லது ஏதாவது முடிவு எடுக்கப்பட்டு விட்டதா?



5th March 1964]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

### கூட்டுறவுச் சங்கங்கள், இராமநாதபுரம் மாவட்டம்.

*155 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன?

(இ) எத்தனை சங்கங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன?

(உ) அவை ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுகிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :**

(அ) 31—12—1961 வரை 1,658 சங்கங்கள் இருந்தன.

(இ) அண்மையில் கிடைத்த அறிக்கையின்படி, 1649 சங்கங்களின் கணக்குகள் கீழ்க்கண்டவாறு தணிக்கை செய்யப்பட்டன—

| | |
|---|---|
| (1) கூட்டுறவு ஆண்டு (ஜூன் 1961 முடிய) | 1385 |
| (2) நிதி ஆண்டு (மார்ச்சு 1961 முடிய) | 244 |
| (3) காலண்டர் ஆண்டு (டிசம்பர் 1961 முடிய) | 20 |
| | 1649 |

(உ) ஆம்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கங்களில் ஏதாவது தவறுதல்கள் நடந்தால், அந்தத் தவறுகளை சங்கத்திலுள்ள அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னால் தான் விசாரிக்கப்படும் என்கின்ற நிலை இருக்கிறதா? அல்லது அதிகாரிகளே சென்று பண ஊழல் ஏதாவது நடந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு அதிகாரம் இருக்கிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சங்கத்திலுள்ள அங்கத்தினர்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், அதிகாரிகள் விசாரிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** பொதுவாக கூட்டுறவு சங்க அதிகாரிகள், மெஜாரிட்டி எந்தப் பக்கம் இருக்கிறதோ, அந்தப் பக்கத்திற்கு சாதகமாகத்தான் நடந்து வருகிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் மெஜாரிட்டி, மைனாரிட்டி ஒன்றும் கிடையாது. இதற்கென்று தனியாக விதிகள் இருக்கின்றன. அதற்குத் தகுந்தபடி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

[5th March 1964

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை கூட்டுறவு சங்கங்கள் மீது ஊழல் குற்றம் இருக்கிறது? இவைபற்றி விசாரிக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்போது 23 சங்கங்களில் தவறுதல்கள் நடந்திருப்பதாக, ஆடிட் செய்ததின் பிரகாரம் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கங்களில் ஏதாவது பண ஊழல்கள் நடைபெற்றிருந்தால், இதற்குப் பொறுப்பானவர்கள் பணம் கட்டுவது வரையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டாம், அதன் பின்னால் நடவடிக்கை எடுத்தால் போதும் என்று ஏதாவது சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அவ்விதம் உத்தரவு ஒன்றும் பிறப்பிக்கப்படவில்லை.

*Scheduled Caste members in Government service*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The the Chief Minister be pleased to state—

(a) whether any proposal for reserving quotas for promotion in State Government services for employees belonging to the Scheduled Castes and Scheduled Tribes, was discussed at a meeting of the Southern Zonal Council during 1963;

(b) the details of the proposal; and

(c) whether any final decision on the proposal has been communicated by the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The question was considered generally by the Southern Zonal Council but details were not discussed.

(c) Yes. It is under consideration.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஸார், அரசாங்க ஊழியத்திலுள்ள ஷெட்யூல் வகுப்பினருக்கும் ஆதிவாசிகளுக்கும் வேலை உயர்வு கொடுப்பதற்காகக் கோட்டா ஏற்படுத்துவது இந்திய அரசியல் சட்டத்தின் 14-வது விதியின் பிரகாரம் விரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறதா? அப்படியானால் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சுப்ரீம் கோர்ட், இதில் தவறுதல் ஒன்றும் இல்லை என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இதையொட்டி மத்திய அரசாங்கம் சில முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி தான் இந்த அரசாங்கமும் ஆலோசனை செய்தது.

**திரு. செ. மாதவன் :** ஷெட்யூல் வகுப்பு, ஆதிவாசிகள் என்று இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, இத்துடன் பின்தங்கிய வகுப்பையும் சேர்ப்பதற்கு உத்தேசம் உண்டா?



5th March 1964]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மத்திய அரசாங்கம் ஷெட்யூல்ட் வகுப்பினர், ஹில் ட்ரைப், அதாவது ஆதிவாசிகள்? இவர்களைப் பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

*Coaching of I.A.S. and I.P.S. candidates*

* 157 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to formulate a scheme for coaching candidates for I.A.S. and I.P.S. examinations; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

*Officers of Co-operative Central Banks and other apex institutions*

* 158 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the duties and responsibilities of the Deputy Registrars of Co-operative Societies lent on foreign service to Central Banks and other apex institutions are defined; and

(b) whether it is a fact that they are not vested with independant powers?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர்கள் சென்ட்ரல் பாங்குகளிலும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் செயலாளர், நிர்வாக அதிகாரி, தொழில் மானேஜர் போன்ற பதவிகளில் நியமிக்கப் பெற அயலிடப் பணி நிபந்தனைகளின் கீழ் பொதுவாக அனுப்பப்படுகிறார்கள். இப்பதவிகளின் கடமைகளும், பொறுப்புகளும் அந்தந்தச் சங்கங்களின் துணைவிதிகளிலோ அச் சங்கக் கமிட்டிகள் செய்துள்ள ரெகுலேஷன்களிலோ நிறைவேற்றியுள்ள தீர்மானங்களிலோ சொல்லப்பட்டுள்ளன.

(இ) சந்தர்ப்பத்திற்கேற்ப, இந்தத் துணை விதிகள், ரெகுலேஷன்கள் அல்லது தீர்மானங்களின்படி இந்த அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தனித்த அதிகாரங்களை இவர்கள் செலுத்துவதில் எவ்வித கட்டுப்பாடும் கிடையாது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஸார், இவ்விதம் ஃபாரின் சர்வீஸில் போகின்ற டெப்யூடி ரெஜிஸ்டிரார், அவர்கள் வேலை செய்கின்ற சங்கங்களில் ஏதாவது தவறுதல்கள் நடந்தால், அதைப் பற்றி 'கான்ஃபிடென்ஷியல் ரிப்போர்ட்' அனுப்புவதற்கு அதிகாரம் இருக்கிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அவர்களுடைய பொறுப்பே அது தான். அதோடு எல்லா வேலைகளையும் கண்காணிப்புச் செய்ய வேண்டியதும் அவர்களுடைய பொறுப்பு.

[5th March 1964

*Central Co-operative Institutions.*

* 159 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal for the de-centralisation of powers of the Central Co-operative Institutions; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :**

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஒரே இடத்தில் இம்மாதிரியான அதிகாரங்கள் எல்லாம் குவிந்து கிடப்பதால் கீழேயுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்கள் எல்லாம் சரியாக வேலை செய்ய முடியவில்லை என்பதைச் சர்க்கார் அறியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதிகாரங்கள் எங்கே குவிந்து கிடக்கின்றன என்று கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் கேட்டிருக்கும் கேள்வியில் சென்ட்ரல் கோவாப்ரட்டீவ் பாங்கைப்பற்றி எண்ணியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதனிடத்தில் அதிகாரங்கள் ஒன்றும் குவிந்து கிடக்கவில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** சென்ட்ரல் பாங்க்குக்கு உள்ள அதிகாரங்கள் ஏற்கெனவே யூனியனுக்குப் பகிர்ந்து கொடுத்தாற் போல இப்போது யூனியனுக்கு அதிகாரங்களைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்போது ஐந்து விதமாக இருக்கிறது. ஒன்று, கூட்டுறவு சென்ட்ரல் பாங்க்; இரண்டு, கோவாப்பரேட்டிவ் டிஸ்ட்ரிக்ட் பாங்க்; மூன்று, கோவாப்பரேட்டிவ் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன், தஞ்சாவூர்; நான்கு, டிஸ்ட்ரிக்ட் ஹாண்ட்லூம் வீவர்ஸ் ஃபெடரேஷன்; ஐந்து, கோவாப்பரேட்டிவ் மில்க் சப்ளை யூனியன். இவைகளுக்குச் சேர்ந்த சங்கங்களைக் கண்காணித்து வருகிறார்கள். தனியாக இந்த அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அதை பரிசீலனை செய்துதான் சொல்ல முடியும்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அரசாங்கக் கணக்குகளைப் பரிசீலிக்க தனியாக ஒரு அமைப்பு இருக்கிறது. அது போல கூட்டுறவு ஸ்தாபனங்களின் கணக்குகளைப் பரிசீலிக்க தனியாக ஒரு அமைப்பு இருக்கிறதா ? இல்லையென்றால் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கணக்குகளைத் தணிக்கை செய்ய கூட்டுறவு ஆடிட்டர்கள் தனிப்பட்ட முறையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.



5th March 1964]

**திரு. ம. கமலநாதன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க உத்தேசம் இல்லையென்றாலும் சென்ட்ரல் பாங்குகளையாவது பிரிக்க உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சென்ட்ரல் பாங்க் என்று சொன்னால், நான் நினைக்கிறேன் அவர்கள் சொல்லுவதிலிருந்து, பெரிய டிஸ்ட்ரிக்ட் பாங்குகளை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்று. தற்சமயம் அந்த விதமான அபிப்பிராயம் இல்லை.

**திரு. செ. மாதவன் :** கூட்டுறவு ஸ்தாபனங்களிலேயே ஆடிட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களே அந்த ஸ்தாபனங்களின் கணக்குகளைப் பார்க்கிறார்கள். சர்க்கார் அலுவலகங்களின் கணக்குகளைத் தனியாக அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீசில் தணிக்கை செய்கிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்கள் அதிகமாக ஆகிவிட்ட காரணத்தினால் தனியாக அக்கவுணட்ஸ் டிப்பார்ட்மெண்ட் என்று வைத்து தணிக்கை செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** நான் முன்பே சொன்னேன், தனியான ஸ்தாபனங்களுக்கும் அவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாத முறையில் தான் ஆடிட் செய்து கொண்டிருக்கிறார்கள்

*Qualification of Government employees for promotions*

* 160 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any Government Order barring the Government servants from further promotions if they have not secured 40 per cent of marks in English and Tamil in the S.S.L.C Class, even if they have got long service; and

(*b*) if so, whether it would be applicable to the Government servants belonging to the Scheduled and most backward classes?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) In the Service Rules definite academic or professional qualifications have been prescribed at every stage of appointment to the various categories of posts. A person who gets exemption from the prescribed qualification and is appointed to the lowest category cannot be promoted to the higher categories of the same service or other posts in any other service unless he acquires the qualification prescribed for those categories or unless the relevant rules relating to qualification are relaxed in his favour at every stage as the exemption granted to him for appointment to the lowest category is valid in respect of his appointment to that category only. Where the rules prescribe the " minimum general educational qualification ", the candidate should have obtained at the S.S.L.C. examination not less than 40 per cent of the marks in English and Tamil. In the case of candidates belonging to the Scheduled Castes or Scheduled Tribes, this minimum percentage is 35. This concession is not applicable to other backward classes.

[5th March 1964

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஸார், 40 சதவீதம் தமிழில் வாங்காத காரணத்தினால், ஏற்கெனவே சர்வீஸில் உள்ள பல ஊழியர்களை ரிவர்ட் செய்வதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விதிப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO REMISSION OF LAND REVENUE AND POSTPONEMENT OF COLLECTION OF LOANS IN RAMANATHAPURAM DISTRICT

**திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, பருவ மழை தவறிய காரணத்தால் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு நிலவரித் தள்ளுபடி செய்வதும், அவர்களிடமிருந்து கடன்கள் வசூலிப்பதை ஒத்திப் போடுவதும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, during 1963-64, the rains occurred rather late in Thiruppathur taluk of Ramanathapuram district but there was no total failure of the monsoon. The normal rainy season in the above area is from October to January and water should be available in the tanks in October itself to facilitate sowing of seeds for transplantation. As there was very little rain in September 1963 and as the rains came late only in the second fortnight of October 1963, the wet crops raised in 28 villages of Tiruppattur taluk were affected.

For want of adequate rains during the cultivation season of September to December 1963, six major tanks and 217 minor irrigation tanks in Tirupattur taluk did not receive adequate water supply. As a result, there was total failure in a major area of paddy crop cultivated in the ayacut of the above 223 tanks. Out of the 34,212 acres of paddy raised in all the ayacuts of Tiruppattur taluk, the area affected is given below :—

| | ACRES. |
|---|---|
| Left waste for want of water .. .. | 10,564 |
| Number of acres gone "Shavi" (total loss) | 2,832 |
| Total .. | 13,396 |

The paddy crops in the ayacuts of Karaikudi sub-taluk also have been affected due to the inadequate supply of water. In view of the failure of wet crops in certain areas of Tiruppattur



5th March 1964] [Sri V. Ramaiah]

taluk and Karaikudi sub-taluk, the Government are considering the question of grant of remission of wet assessment for fasli 1373 for the affected lands.

I may therefore assure the House that relief will be afforded in the matter of collection of land revenue and loan arrears to the extent necessary.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964-65—*Cont.*

*** திரு. எம். எஸ். மணி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1964-65-வது ஆண்டு நிதி நிலை அறிக்கையை நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே பற்றாக்குறையாக 334 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பருத்திக்கும் நூலுக்கும் வரி போட்ட காரணத்தினால் ஒரு கோடி ரூபாயைச் சமாளித்து விடுவதாகவும் குறிப்பிட்டு இருக்கிறார். பாக்கி 234 லட்சம் ரூபாயை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று குறிப்பிட வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மத்திய சர்க்கார் இன்றைய தினம் பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறது. அவர்கள் பட்ஜெட்டிலே 5,185 லட்சம் ரூபாயை மீதமாகக் காட்டியிருக்கிறார்கள். அண்டை மாநிலமாகிய கேரளா 358 லட்சம் ரூபாயை மீதமாகக் காட்டியிருக்கிறது. அதே போல மைசூர் மாநிலம் 7 லட்சம் ரூபாயை மீதமாகக் காட்டியிருக்கிறது. ஆனால் நமக்கு இப்படி அடிக்கடி துண்டு விழுகிற பட்ஜெட்டைச் சமர்ப்பிக்காமல் துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்கு சென்ற பட்ஜெட்டிலே நம் நிதி அமைச்சர் அவர்கள் கூறியது போல நெருக்கடி நிலை இருப்பதால் மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து நிதி உதவியைக் கேட்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார், இன்றையதினம் நெருக்கடி நிலை இல்லை. ஆகவே மத்திய அரசாங்கத்தை உரிமையோடு போராடிக் கேட்டு அதிக உதவியைப் பெற்று நிதி நிலையைச் சமாளிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விலைவாசி பற்றிக் குறிப்பிடுகிற போது விலைவாசி ஏறியிருக்கிறது, ஏறியிருக்கிறது என்று சொன்னால், அதற்காக வெறும் விளக்கத்தையும் காரணத்தையுமே சொல்லிக்கொண்டிருந்தால் விலைவாசி குறைந்து விடாது. எனவே, அதில் தீர்வு காண உண்மையிலேயே நமது சர்க்காருக்கு அக்கறை இருக்குமானால், இந்த அவையிலேயே எங்கள் எதிர் கட்சித் தலைவர் சொல்லியது போல சர்வ கட்சிகளும் அடங்கிய குழு அமைத்து, விலைவாசியைக் குறைக்க பரிகாரம் தேடவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த விலைவாசியைக் குறைக்கவேண்டும் என்பதற்காக All India Trade Union Congress தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. எம். எஸ். மணி] [5th March 1964

ஜனநாயக சோஷலிஸத்தைப் பற்றி நேற்றைய தினமும், அதற்கு முன் தினமும் பலர் விளக்கமாகப் பேசினார்கள். அதிலே குறிப்பாக காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் திரு. பழனி அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சோஷலிஸம் என்பதற்கான விளக்கம் தான் இன்றையதினம் பென்ஷன் கொடுக்கிறோம். அப்படி பென்ஷன் கொடுப்பது சோஷலிசம் இல்லையா என்று கேட்டார். நான் கேட்க விரும்புகிறேன். வெள்ளைக்காரர் ஆட்சியிலே பென்ஷன் கொடுக்கவில்லையா? அப்பொழுது வெள்ளைக்காரர் ஆட்சியை சோஷலிஸ ஆட்சி என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கருதுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இலவசக் கல்வி கொடுத்திருக்கிறோம், அது சோஷலிஸம் இல்லையா என்று கேட்கிறார். முன்பெல்லாம் ஏழைகளுக்கு இலவசக் கல்வி கொடுத்தார்கள். இன்றையதினம் பணக்காரர்களுக்கு இலவசக் கல்வி நம்முடைய அரசாங்கம் கொடுக்கிறது. இதுதான் சோஷலிஸமா 9-00 p.m. என்பதைத்தான் கனம் அங்கத்தினர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். எனவே, இந்த சோஷலிசம் பணக்காரர்களுக்கு வாய்ப்பை உண்டாக்கி யிருக்கிறதே ஒழிய, ஏழைகளுக்கு அவர்களுடைய வாய்ப்பை உயர்த்தவில்லை என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கருத்துக்கள் தெரிவிக்கிறபொழுது இலவசக் கல்விக்கு ஆட்சேபம் இருந்தால் அதையும் திட்டவட்டமாகச் சொல்லிவிடவேண்டும்.

**திரு. எம். எஸ். மணி :** நான் அதற்கு ஆட்சேபம் சொல்லவில்லை. பணக்காரர்கள் நிலையை சரிசம அந்தஸ்துக்குக் கொண்டுவர வேண்டும் என்பது புவனேஸ்வரத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அது எழுத்தளவில் இருக்கிறதே தவிர நடைமுறை நிலைமை பணக்காரர்களுக்கு மேலும் வாழ்வு அளிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதைத் தான் குறிப்பிட்டேன். ஏழைகளுக்கு இலவசக் கல்வி கொடுக்கவேண்டாம் என்று நான் சொல்லவில்லை.

என்.ஜி.ஓ-க்களுக்கு இன்றையதினம் சம்பளப் பற்றாக்குறை இருக்கிறது. மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுப்பது போல தங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். இந்த நேர்மையான கோரிக்கையை நாம் எடுத்துச் சொன்னால், அவர்களுக்கு ஆதரவாகப் பேசுகிறோம் என்று குற்றம் சாட்டுகிறார்கள். கோரிக்கையில் நியாயம் இருக்கிறது என்பதை அமைச்சர்கள் உணரவேண்டும். மத்திய சர்க்கார் சிப்பந்திகளும் சென்னையிலே இருக்கிறார்கள். மாகாண சர்க்கார் சிப்பந்திகளும் சென்னையிலே இருக்கிறார்கள். இரண்டு பேர்களும் கடையிலே போய் ஒரு சாமானை வாங்கினால், இரண்டு பேர்களும் ஒரே விலைக்குத் தான் வாங்கவேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு அதிக விலையிலும், மாகாண சர்க்கார் சிப்பந்திக்கு



5th March 1964] [திரு. எம். எஸ். மணி]

குறைந்த விலையிலும் கடைக்காரர்கள் கொடுப்பதில்லை. எனவே அதில் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக ஒரு மனைவியும், கணவனும் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதே மாதிரி மத்திய சர்க்காராக இருந்தாலும், இந்த சர்க்காராக இருந்தாலும், அப்பர் டிவிஷன் கிளார்க்குக்கு ஒரு சம்பளம் லோயர் டிவிஷன் கிளார்க்குக்கு ஒரு சம்பளம். இரண்டு பேர்களும் ஒரு அரிசி தான் சாப்பிடவேண்டியிருக்கிறது. ஒரே வயிற்றைத்தான் நிரப்ப வேண்டியிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** ஒரே குடும்பத்தில், கணவன் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்களுடைய நோக்கத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். அப்பர் டிவிஷன் கிளார்க், லோயர் டிவிஷன் கிளார்க், சூபரிண்டெண்டெண்டு, அஸிஸ்டெண்டு செகரடரி எல்லோருக்கும் ஒரே மாதிரி சம்பளம் தரவேண்டும் என்று சொல்லுகிறார்களா?

**திரு. எம். எஸ். மணி :** அவரவர்கள் செய்கின்ற வேலை, தொழில் வெவ்வேறாக இருக்கிறது.

Sri V. Krishnamoorthi rose.

The Hon. Speaker rang the bell.

SRI V. KRISHNAMOORTHI : Sir, I want to explain . . .

MR. SPEAKER : The hon. Member should not speak now. Is he going to abide by the rules of the House or not?

SRI V. KRISHNAMOORTHI : I just wanted . . . .

MR. SPEAKER : The hon. Member may please resume his seat. He cannot talk and pass remarks when another hon. Member is speaking. The Hon. Chief Minister put some questions to the hon. Member Sri M. S. Mani and wanted him to clarify certain points. It is for the hon. Member to say whether he can answer or does not want to answer the points. The hon. Member Sri V. Krishnamoorthi cannot go on talking in the House as if he is talking outside.

**திரு. எம். எஸ். மணி :** மத்திய சர்க்கார் சிப்பந்திகள் எந்த வேலையைச் செய்கிறார்களோ அதே வேலையை மாகாண சர்க்கார் சிப்பந்திகளும் செய்கிறார்கள். அதிலே நாம் ஒருமைப்பாட்டை விரும்ப வேண்டுமென்றால் அவர்களுக்கு ஒரே சம்பளம் கிடைக்க வேண்டும். அமைச்சர்களுக்கும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருப்பதை நான் குறிப்பிடவில்லை என்று நான் கனம் அமைச்சர் அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு பேர்கள் குடும்பத்தில் சம்பாதிக்

கிருர்கள் என்று சொன்னல், மனைவி மத்திய சர்க்கார் சிப்பந்தியாக அதிக சம்பளம் வாங்கி, கணவன் மாகாண சர்க்கார் சிப்பந்தியாகக் குறைந்த சம்பளம் வாங்கக்கூடிய நிலைமை இருந்தால், அந்த வீட்டில் எப்படி ஒருமைப்பாடு வளரும்? இந்தியா பூராவும் ஒருமைப் பாடு வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்த நிலைமையில் ஒருமைப்பாடு எப்படி வளரும்? குடும்பத்தில் இம்மாதிரி ஏற்றத்தாழ்வு இருந்தால், ஒருமைப்பாட்டு உணர்ச்சியும், சம அந்தஸ்தும் ஏற்படுவதற்கு வழி இல்லை. புவனேசுவர மகாநாட்டில் தீர்மானம் போடப்பட்டது ஜனநாயக சோஷலிஸத்தைப் பற்றி. ஆகவே, உண்மையிலேயே ஜனநாயக சோஷலிஸம் ஏற்படுவதற்கு வழி செய்யவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நூலுக்கும் பஞ்சுக்கும் வரிபோட்ட காரணத்தினுல், கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நாங்கள் குறிப்பிட்டோம். அவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல, 100-ம் நம்பர் வேட்டிகளை தொழிலாளர்கள் கட்டுவார்களா, அவர்கள் வாங்குவார்களா என்று கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் கேட்டார்கள். சோஷலிஸத்தை நாம் விரும்புகிருேம் என்று சொல்லக்கூடிய நேரத்தில் தொழிலாளர்கள் 100-ம் நம்பர் வேட்டி கட்டக்கூடாது என்று கனம் அமைச்சர் அவர்கள் விரும்புகிருர்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கட்டாயமாக தொழிலாளர்கள் அம்மாதிரி 100-ம் நம்பர் வேட்டி கட்டுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அதுதான் சோஷலிஸம் என்று நாங்கள் கருதுகிருேம். நம்முடைய அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசும்பொழுது 'முன்பெல்லாம் தொழிலாளிகள் ஒரு வேட்டி கட்டிக்கொண்டார்கள், இன்றையதினம் நான்கு வேட்டிகள் கட்டிக் கொள்கிருர்கள் என்று பெருமைப்பட்டுக் கொண்டார்கள். பெரியார் ராமசாமி அவர்கள் முன்பெல்லாம் ஜாகெட் போடாத பெண்கள் இன்று ஜாகெட் போட்டுக்கொண்டிருக்கிருர்கள் என்று பெருமைப்பட்டுக் கொண்டார்கள். நாங்களும் பெருமைப்படுகிருேம். ஆனல், இன்றைய தினம் நிலைமை என்ன? அப்படி ஒரு வேட்டி தான் கட்டவேண்டும், நான்கு வேட்டிகள் கட்டக்கூடாது என்பதற்காக பஞ்சுக்கும், நூலுக்கும் வரி போடுகிருர்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்ருல், தஞ்சை மாவட்டத்தில் நான் ஒரு மாதத்திற்கு முன்னல் ஒரு கூட்டத்திற்கு செல்கிறபொழுது ஆற்றில் ஒருவர் குளித்துக்கொண்டிருந்தார். இரண்டு மணி நேரமாகக் குளித்துக்கொண்டிருந்தார். இவ்வளவு நேரம் குளித்துக் கொண்டிருக்கிருரே என்ன காரணம், அழுக்கு விடவில்லையா என்று பார்த்தேன். அவர் எதிரே ஒரு மரத்தில் துணியை காயவைத்திருந்தார். அந்தத் துணி காய்கிற வரையில் நிர்வாணமாகக் குளித்துக்கொண்டிருக்கிற ஒரு நிலை தமிழகத்தில் இருக்கிறது. எனவே, அந்த நிலையை மாற்றி அமைக்கவேண்டும்





என்று இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER: Is it any scene?

**திரு. எம். எஸ். மணி:** நான்கு வேட்டி கட்டுகிருர்கள் என்று சொல்லப்பட்டது. ஒரே வேட்டியைக் காயவைத்து திரும்பவும் கட்டுகிற நிலைமை இருக்கிறது என்பதைத் தான் குறிப்பிட்டேன்.

இந்தியைப் பரப்ப இந்திப் பிரசார சபைக்கு இன்றையதினம் மத்திய சர்க்கார் ஏராளமான மான்யம் தருகிறது. அதைப்போல தமிழை வளர்ப்பதற்காகவும் பிரசாரம் செய்வதற்காகவும் நாமும் மத்திய சர்க்காருடன் போராடி ஏராளமான மான்யத்தைப் பெற வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தி, மற்றும் மாநில மொழிகளை வளர்ப்பதற்காக மத்திய சர்க்கார் இந்த பட்ஜெட்டில் 24 லட்சம் ஒதுக்கியிருக்கிருர்கள் மான்யமாக. அந்த 24 லட்சம் ரூபாயில் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற மதுரை தமிழ்ச் சங்கம் போன்ற சங்கங்களை வளர்ப்பதற்காக, தமிழை நல்ல முறையில் பிரசாரம் செய்வதற்காக, நல்ல பங்கு விகிதாசாரத் தொகை பெறவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல இந்தியை இன்றையதினம் கட்டாயமாகப் புகுத்துவதற்கு ஒரு திட்டமிட்டு அதைப்பற்றிப் பரிசீலிக்க மாநில முதல் அமைச்சர்கள் 12-ம் தேதி டெல்லிக்கு அழைக்கப்பட்டிருக்கிருர்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் அங்கே செல்ல இருக்கிருர். அவர் தமிழில் நல்ல ஆர்வம் உள்ளவர். அங்கே சென்று இந்தியைப் புகுத்தாமல் இருப்பதற்குரிய காரணகாரியங்களை எடுத்துச்சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். அப்படிச் சொல்லுவதற்கு அச்சப்பட்டாலும், தமிழகத்தில் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர்கள் அதற்காகப் போராடி சிறையில் இருக்கிற அந்த நிலைமையை எடுத்துக்காட்டவேண்டும். அப்படிச் செய்வதற்கு சங்கடப்பட்டாலும், சென்னையிலே ஏற்பட்ட தோல்வியை எடுத்துக்காட்டி, இந்தியை மறைமுகமாகப் புகுத்தக்கூடாது என்று நமது முதல் அமைச்சர் அவர்கள் வாதாட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகராட்சித் தேர்தலில் "சென்னை மேயர் அறையில் அண்ணு படத்தை மாட்டுவதற்காக நீங்கள் வோட்டுப் போடுங்கள்" என்று கேட்டதாகச் சொன்னுர்கள். பல இடங்களில் பேசும்பொழுது நீக்கப்பட்ட படம் அந்த இடத்திற்கு வரவேண்டும் என்று எங்களுடைய தலைவர்கள் சொல்லியிருக்கிருர்கள். முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் உருவச் சிலையை நாங்கள் அமைத்திருக்கிருேம், மற்றும் பலருக்கும் சிலை அமைத்திருக்கிருேம். அதில் பாகுபாடு ஒன்றுமில்லை. அண்ணு படத்தை மேயர் அறையில் மாட்டுவதில் தவறு ஒன்றுமில்லை. கைத்தறி நெசவாளர்கள் துயரைத் துடைக்க அண்ணு அவர்கள் பாடுபட்டிருக்கிருர்கள். புயல் அடித்து மக்கள் அல்லலுற்றபோது ஏழை விவசாயிகளுக்கு

[திரு. எம். எஸ். மணி] [5th March 1964

உதவி செய்திருக்கிறார்கள் அண்ணா அவர்கள். விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து அதற்காகச் சிறையில் இருந்திருக்கிறார். சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டபொழுது, அதைத் தவிர்ப்பதற்கு நம்முடைய அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்து நல்ல நிதியையும் பெற்றுத் தந்திருக்கிறார்கள். தமிழ் வளர்வதற்கு ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவரின் படத்தை மாட்ட வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம். இங்கே சில அங்கத்தினர்கள் பேசும்பொழுது 'வேட்டைக்காரன் வந்தான்' என்றெல்லாம் சொன்னார்கள். காங்கிரஸ் தரப்பிற்கும் ஒரு பாட்டுக்காரன் ஆதரவு தந்தார். பாட்டுக்காரனும் வந்தார், வேட்டைக்காரனும் வந்தார், வேட்டைக்காரன் வெற்றி பெற்றார் என்ற விதத்தில் தான் சொல்லுகிறார்கள். வக்கீல் ஒரு கட்சியில் இருந்தால் அது வக்கீல் கட்சியா?

MR. SPEAKER: The hon. Member may come to the Budget proper.

**திரு. எம். எஸ். மணி:** பட்ஜெட்டைப்பற்றித் தான் பேசுகிறேன்.

MR. SPEAKER: The hon. Member is not talking on the Budget.

**திரு. எம். எஸ். மணி:** அவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். நகராட்சி மன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வி அடையவில்லை. நகராட்சி மன்றத் தலைவர் இடத்தை நாங்கள் எங்கும் இழக்கவில்லை. அதற்கு மாறாக, காங்கிரஸ் ஆட்சி செய்த 5, 6 நகரமன்றங்களை நாங்கள் கைப்பற்றியிருக்கிறோம். எங்கள் நகரமன்றத் தலைவர் பதவி ஒன்றும் போகவில்லை.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இந்த பட்ஜெட் கானல் நீர் போன்றது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குக் காரணம் என்ன? நேற்றைய தினம் ஒரு அங்கத்தினர் சொன்னார். பட்ஜெட்டில் பார்க்கும்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதி ஒன்றைப் புதியதாகக் கட்டுவதற்காக ரூ. 40 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். தூரத்திலிருந்து பார்ப்பதற்கு அப்படித்தான் தெரிகிறது. ஆனால், ரூ. 10 லட்சம் முன்னாலேயே ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடம் கட்டி முடிவதற்குள்ளாக நமது பதவி காலமே முடிந்துபோய்விடும்.

**கனம் சபாநாயகர்:** இப்பொழுது இருக்கிற அங்கத்தினர்களுக்கே சொந்தமாகக் கட்டுகிறார்கள் என்று கனம் அங்கத்தினர் நினைக்கிறார்களா?

**திரு. எம். எஸ். மணி:** நேற்று ஒரு அங்கத்தினர் சொன்னார். நமக்கு எல்லாம் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார்கள் என்று.



5th March 1964]

**கனம் சபாநாயகர்:** யார் யார் அங்கத்தினர்களாக வருகிறார்களோ அவர்களுக்குத் தான் அதில் தங்க வசதி அளிக்கப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன், சார்.

**கனம் சபாநாயகர்:** இதிலே கிளாரிபிகேஷனுக்கு என்ன இருக்கிறது?

**திரு. எம். எஸ். மணி:** இறந்தால் பென்ஷன் தரப்படும் என்ற திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அருகில் வந்து பார்க்கும்பொழுது இதில் ஒன்றுமில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். தூரத்திலிருந்து பார்க்கும்பொழுது ஏதோ பெரிதாகத் தெரியும். இருக்கும்பொழுது ஒன்றுமில்லை, இறந்தால் பென்ஷன் என்று சொன்னால், இருக்கிறவர்கள் நல்வாழ்வு பெறக்கூடிய நிலைமை இல்லை. முதியோர்களுக்கு அளிக்கும் பென்ஷன் திட்டத்தைப் பற்றிப் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியிலே இரண்டு மாதங்களுக்குக் கொடுக்கப்பட்டு, பின்னர் பென்ஷன் கிடையாது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. முதலிலே நன்கு விசாரித்துத் தான் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு "நீங்கள் பிச்சை எடுக்கிறீர்கள், உங்களுக்கு மகன் இருக்கிறான்" என்று சொல்லி, நிறுத்தி விடுகிறார்கள். அவ்வாறு இல்லை என்று கிராம முன்சீப் சொன்னாலும் பென்ஷன் கொடுப்பதில்லை. இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தபொழுது, இவ்வளவு வயதானவர்கள் இருப்பார்கள் என்று சர்க்கார் நினைக்கவில்லை. அதைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான், இப்பேர்ப்பட்ட கேள்விகளைப் போடுகிறார்கள். இந்த வரவு செலவுத் திட்டம் ஒரு நல்ல திட்டமல்ல என்பதைக் கூறி, அது வெறும் கானல் நீர் போல இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். சின்னய்யன்:** கனம் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சில விஷயங்களைப் பற்றிச் சொல்ல முற்படுகிறேன். இந்த அறிக்கையில் சொல்லி இருக்கிற திட்டங்கள் அனைத்தையும் பார்க்கிறபொழுது, உள்ளபடியே நல் வாழ்வுக்கான திட்டங்கள் எல்லாம் இதிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். இதை மாற்றுக் கட்சியில் உள்ளவர்கள் வேறு விதமாக நினைத்தாலும் கூட, உள்ளபடியே எண்ணிப் பார்க்கிறபொழுது, நாட்டிற்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், நல்ல முறையிலே இந்த உரை நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்பதை எல்லா அங்கத்தினர்களும் அறிவார்கள்.

நமது நாட்டிலே அனாதையாக, ஆதரிப்பதற்கு நாதியற்ற மக்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நல்வாழ்வு அளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த முதியோர் பென்ஷன் திட்டம் ஒன்றே போதும் இந்த அரசாங்கத்தினுடைய நல்ல சாதனைகளுக்குச் சான்றாக விளங்குவதற்கு. பிள்ளை குட்டி

[திரு. எஸ். சின்னய்யன்] [5th March 1964

கள் இல்லையே ஆதரிப்பதற்கு என்று ஏங்கிக் கொண்டிருந்த முதியோர்கள், இருந்த இடத்திலேயே இன்று மாதம் ஒன்றுக்கு ரூ. 20 பெற்றுக்கொண்டு, இந்த அரசாங்கத்தை வாழ்த்திக்கொண்டு சௌக்கியமாக இருக்கிறார்கள். இது ஒன்றே போதும் எடுத்துக் காட்டிற்கு என்று நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், இந்த பட்ஜெட்டிலே ரூ. 115 லட்சம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாய மக்களுக்கு இந்தத் துறை எவ்வளவு நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆகையினால் குற்றங் குறைகளை மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, போடப்பட்ட திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேறுவதற்கு, அவை நல்ல முறையில் செயல்படுவதற்கான வழிவகைகளை எனது அருமை எதிர்க்கட்சித் தோழர்கள் சொல்லுவார்களேயானால், இன்னும் நல்ல முறையில் தமிழ் நாட்டு மக்கள் சுபிட்சமாக வாழ்வதற்கு வழி செய்து கொடுக்க முடியும் என்று நான் நம்புகிறேன். ஆகையினால் இந்த பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கும் திட்டங்கள் அனைத்தும், சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கக் கூடிய, நாட்டிலே இருக்கின்ற எல்லா மக்களுக்கும் சம வாய்ப்பு, சம அந்தஸ்தை அளிக்கக் கூடிய ஒரு பட்ஜெட்டாக அமைந்திருக்கிறதே தவிர வேறு முறையில் அல்ல என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மருத்துவத் துறையிலே, ஆஸ்பத்திரிக்கான கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 11 லட்சம் இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனது தொகுதியிலேயிருக்கிற நாமக்கல் தாலுகா தலைநகரத்திலே இருக்கிற ஆஸ்பத்திரிக்கு கட்டடங்கள் கட்டுவதற்காகப் பல ஆண்டுகளாக முயற்சி எடுத்தும் இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது. நாமக்கல் ஒரு பெரிய தாலுகாவின் தலைநகரம். ஆகவே, இந்த ரூ. 11 லட்சத்திலிருந்து நாமக்கல் ஆஸ்பத்திரிக்கு கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், இந்த முதியோர்களுக்குப் பென்ஷன் அளிப்பதினால் நல்ல வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இதிலே, மேலும் கொஞ்சம் அக்கறை காட்டவேண்டுமென்று அரசாங்கத்தை நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். ஏன் அப்படிச் சொல்லுகிறேன் என்றால், அதிகாரிகள் இம்மாதிரியான மனுக்களை பரிசீலனை செய்யும்பொழுது நல்ல வாய்ப்பும், வசதியும் உள்ளவர்கள் இதை வெகு சுலபமாகப் பெறுவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆகவே, இதைச் சற்று உன்னிப்பாக கவனித்து, இந்த முதியோர் பென்ஷன் திட்டம் எந்த மக்களுக்காக கொண்டுவரப்பட்டதோ, அந்த மக்களுக்கு போய்ச் சேருகிறதா என்பதை கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



5th March 1964] [திரு. எஸ். சின்னய்யன்]

நமது மாநிலத்திலே மின்சாரத் துறையை எடுத்துக்கொண்டால், எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் எந்த அளவுக்கு மின்சாரம் முன்னேறி இருக்கிறது, எப்படி எப்படி எல்லாம் அவைகள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்பதைப் பார்க்க முடியும். பல இடங்களிலே, இந்த மின்சாரத் துறையினால் தொழில் துறையும் அதிகமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. விவசாயத் துறை இந்த மின்சார வசதியினால், நல்ல முறையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை இந்த நாட்டிலே உள்ள மக்கள் யாவரும் நன்கு அறிவார்கள். இவ்வாறு மின்சாரம் இவ்வளவு அதிகமாக முன்னேற்றம் அடைந்திருக்கிற நேரத்திலே, இதனால் பாதிக்கப்பட்டவர்கள் யார் யார் என்பதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். சேலம் ஜில்லாப் போன்ற வரண்ட பிரதேசங்களில், கிணறுகளைத் தோண்டி வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த விவசாயிகள் எல்லாம் இன்றைக்கு இந்த மின்சார வசதியினால் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். 200 அடி ஆழத்தில் இருக்கிற தண்ணீரைக் கூட மின்சார இயந்திரத்தின் உதவியினால் வயல்களுக்கு வெகு சுலபமாக பாய்ச்சக்கூடிய ஒரு நிலைமை இன்று நிலவி வருகிறது. மின்சார முன்னேற்றம் அடையாத காலத்தில் இருக்கும் தண்ணீரை வயலுக்கு இறைக்க, வயல் வெளிக்குக் கொண்டு வர பக்க பலமாக இருந்த தொழிலாளிகள் யார் என்று சற்று நன்றாகச் சிந்திக்க வேண்டும். அவர்கள் தான் பறி தைக்கும் தொழிலாளர்கள். அந்தத் தொழிலாளிகளை அன்றைக்கிருந்த ஸ்ரீமான் வெள்ளையங்கிரி கௌண்டர் அவர்கள், இந்தத் தொழிலாளிகள் விவசாயத்தின் முதுகெலும்பு என்று சொல்லி எங்கள் மாவட்டத்தில் நாமக்கல்லில் நடந்த மாநாட்டில் பாராட்டிப் பேசினார்கள். அன்று விவசாயத்துக்கு முதுகெலும்பாக இருந்தவர்கள் இன்று முதுகு ஒடிந்து போய் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள்.. சென்ற ஆண்டிலும், இரண்டு ஆண்டுகளாகவே இந்த சபையில் இந்த மக்களின் நிலையைப் பற்றி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலும், அந்தத் தொழிலைச் செய்தவன் என்ற காரணத்தினாலும், அவர்களுடைய கஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தொழிலை அவர்கள் செய்து கொண்டிருந்த காலத்தில், ஒரு விவசாயிக்கு 10 மூட்டை தானியம் வந்தால், அவனுக்கு 2 மூட்டை நிச்சயம் கிடைக்கும், அவன் ஐந்து பண்ணைகளில் வேலை செய்தால் அவன் வீட்டில் ஒரு போகத்திற்கு 10 மூட்டை கிடைக்கும். இன்றைக்கு பம்பு செட்டுகள் வந்த பிறகு, அவன் தொழில் பாதிக்கப்பட்டு அவன் வீட்டில் ஒரு மூட்டை தானியம் கூட இல்லாத நிலையில், ஒரு மூட்டை தானியத்துக்குக் கூட யோக்கியதை அற்றவனாக, தரித்திர நாராயணர்களாக காட்சி அளிக்கிறார்கள். தயவு செய்து அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். சேலம் ஜில்லாவில் ஏதாவது கிராமத்திற்குச் சென்று, ஒரு பறி தைக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவனை, "நீ இதற்கு முன்பு இருந்த நிலைமை என்ன, இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன" என்று ஒரு தடவையாவது கேட்டால் உண்மை நிலை புலப்படும். அப்படி அவர்

கள் இருக்கும் அவல நிலைக்கு விமோசனம் அளிக்க மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று இந்த அமைச்சர் அவையை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ரொம்பவும் நசித்துப் போய் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வை வளம் உள்ளதாக செய்து தரித்திர நிலையைப் போக்க ஏதாவது மாற்றுத் தொழில் அமைத்துக் கொடுத்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். சிலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள், அவர்களிடம் இருந்து ஏதாவது அஜிடேஷன் கிளம்ப வேண்டும் அல்லது யாராகிலும் அவர்களுடைய நிலையை எடுத்துச் சொல்லவேண்டும் என்று. அப்படி எடுத்துச் சொல்வதற்கு அந்த சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்கள் யாராவது இருக்கிறார்களா ? அல்லது படித்துப் பட்டம் பெற்றவர்களா இருக்கிறார்கள். நன்றாகப் படித்தவர்களே கிடையாது. தலைவர்களும் கிடையாது. இந்த சட்ட சபையில் தப்பித்தவறி ஒன்று இரண்டு பேர்கள் மகான் காமராஜருடைய கருணையினால் வந்திருக்கிறோம். ஆகையால் இங்கே சொல்வதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் எங்கள் கஷ்டத்தை எடுத்து சொல்லி அந்த சமுதாயத்திற்கு ஒரு விமோசனம் தேட வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். இது பற்றி பல தடவைகள் பல மாநாடுகள் கூட்டி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அப்பவும் கூட எங்கள் குறைகளை கவனிக்க யாரும் முன் வரவில்லை. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த அமைச்சர் அவையையும் இந்த அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவு செய்து இந்த மக்களுக்கு, ஏற்கனவே நன்றாக வாழ்ந்த மக்கள், சுபிட்சமாக இருந்த மக்கள், அவர்கள் இன்றைக்கு கால் வயிற்று கஞ்சிக்குக் கூட வழி இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஏதாவது ஒரு மாற்றுத் தொழில் அமைத்துக் கொடுத்து அவர்கள் வாழ்க்கையை வளம் பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. அ. அப்பாலூ தேவர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1964-65-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை பாராட்டி, ஆதரித்து சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் மிக்க அனுபவம் வாய்ந்தவர். நம் மாநிலத்தில் கல்வி துறையில் நாம் மிக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. கல்வித் துறைக்காக நமது நிதியில் கால் பாகம் செலவிடப்படுகிறது. அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அது பாராட்டத்தக்க விஷயம். இன்னும் சில கிராமங்களில் எலிமெண்டரி ஸ்கூல்கள் ஏற்படாமல் இருக்கின்றது. அவைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவைகளுக்கெல்லாம் கட்டிடங்கள் இல்லாமல் இருந்தால் அவைகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடி திட்டம் சம்பந்தமாக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் நாம் நினைத்த அளவுக்கு பலன்கள் கிடைக்கவில்லை. முன்பு இருந்ததைவிட இப்பொழுது இருக்கிற நிலப்பரப்பு அதிகமாக இருக்கிறது. அவைகளில் தகுந்த விளைச்சல் இல்லாமல் இருக்கிறது. நம் தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டம் எல்லா தாலூகாக்களிலும் இருந்து வருகின்றன. ஆனாலும், முன்பு இருந்ததைவிட இப்பொழுது விளைச்சல் அவ்வளவு போதாது என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. முன்பு நிலப்பரப்புக் குறைவு. இப்பொழுது நிலப்பரப்பு அதிகம். அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கும் பொழுது சாகுபடி குறைவாக இருக்கும் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இப்பொழுது விளைவதைவிட இரண்டு மூன்று மடங்கு உயர்ந்தால் தான் திட்டத்துக்கு பலன் ஏற்படும் என்பது என் அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் வடிகால் சம்பந்தமாக சொல்லும் பொழுது சில கிராமங்களில் ஒவ்வொரு வருஷம் வடிகால் இன்மையால் பலத்த சேதங்கள் ஏற்படுகின்றன. இந்த வடிகால் சம்பந்தமாக சென்ற ஆண்டில் கூட இந்தச் சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே இந்த வடிகால் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த ஒரு ஸ்பெஷல் அதிகாரியை நியமித்து இதை அவசர விஷயமாக கவனிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், இந்த வடிகால் திட்டம் சரிவர இல்லாததால் தஞ்சை ஜில்லாவிலே கால்வாசி சாகுபடிக்குறைவு ஏற்படும் என்று எண்ணுகிறேன். அதைத் தவிர்க்க வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவுக்கு டிராக்டர்கள் அளிப்பதில் பற்றாக்குறை இருக்கிறது. ஒவ்வொரு தாலூகாவிலும் மூன்று பிளாக்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிளாக்குக்கும் 2 டிராக்டர்களாவது கொடுத்து உதவினால் தான் சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன். டிராக்டர்கள் குறைவினால் விவசாயிகளுக்கு சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. டிராக்டர்கள் கிடைக்கும் என்று நம்பி மாடுகள் வாங்காமலே இருந்து விடுகிறார்கள். பிறகு சாகுபடி டிலே ஆகிறது. ஆகவே, ஒரு பிளாக்குக்கு 2 டிராக்டர் வீதம் கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

எரு வினியோகம் செய்வது மிக்க டிலேயாக நடப்பதனால் சாகுபடி கஷ்டம் ஏற்படுகிறது. எரு கிடைக்கும் என்று காத்திருந்து தக்க காலத்தில் வராததனால் எரு போட முடியாமல் நஷ்டம் அடைகிறார்கள். அதனால் விளைச்சல் மிக்க கம்மியாகப்போய் விடுகிறது. அதையும் கவனிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் இந்த வருஷம் அதிக மழை பெய்ததன் காரணமாகவும் பூச்சிகளின் தொல்லை காரணமாகவும், எலி வெட்டு காரணமாகவும் சாகுபடி மிகவும் குறைவாக ஏற்பட்டிருக்கிறது.

[திரு. அ. அப்பாவு தேவர்] [5th March 1964

9–30 a.m. ஒன்றுக்குப் பாதிதான் சாகுபடி கண்டிருக்கிறது. அரசாங்கம் இதையெல்லாம் கவனித்து, அதிகப்படியாகப் போட்டிருக்கும் வரியைத் தள்ளி வைத்து வசூலித்தால் சௌகரியமாக இருக்கும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களையும் கனம் ரெவினியூ அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஒருவர் 100 ரூபாய் செலுத்தவேண்டியதாக இருந்தால், அதிகப்படியான வரி 90 ரூபாய் சேர்த்துச் செலுத்த வேண்டியிருக்கிறது. இப்படி 190 ரூபாய் இந்த வருஷம் செலுத்த வேண்டியிருக்கிறபடியால், அந்த அதிகப்படியான 90 ரூபாயை மூன்று வருஷங்களில் வசூலித்தால் ஏழை விவசாயிகளுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்குச் சில கிராமங்களில் ரோடு வசதி, வீட்டு வசதி, குடி தண்ணீர் வசதி முதலியவை சரியாக இல்லாமல் இருக்கின்றன. நானும் கலெக்டரும், ரெவினியூ டிவிஷனல் ஆபீசரும் சில கிராமங்களுக்குச் சென்று பார்த்தோம். அப்பொழுது பாபநாசம், ஒரத்தநாடு தாலூகாவில் உள்ள சில கிராமங்களுக்குப் போக பாதை இல்லை என்று மக்கள் சொல்லிக்கொண்டார்கள். அதுபற்றி நான் கலெக்டரிடம் சொன்னேன். அவரும் அதைப் பற்றிக் கவனிப்பதாகச் சொன்னார்கள். நில ஆர்ஜிதம் செய்வதிலே கால தாமதம் ஏற்படுவதாக அவர்கள் சொன்னார்கள். இம்மாதிரி விஷயத்தை உடனடியாக அரசாங்கம் கவனித்து, நிலத்தை ஆர்ஜிதம் செய்ய ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடிக்கின்றேன். வணக்கம்.

* திரு. மா. இராசாங்கம்: மாமன்றத் தலைவர் அவர்களே, 1964-65 ஆம் ஆண்டுக்கான இந்த நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்போது, இதில் ஒரு முறையோ, முடிவோ, முழுமையோ எனக்குக் காணப்படவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு விலைவாசி ஏற்றத்திற்கு இரண்டு காரணங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பெரும் அளவில் முதலீடு செய்யும் திட்டமும், வளர்ந்து வரும் மக்கள் தொகையின் பெருக்கமும் இதற்குக் காரணங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இவை இரண்டுமே காரணம் அல்ல என்று நான் மறுக்கிறேன். விலைவாசி ஏற்றத்திற்கு முழு முதற் காரணம் கொள்ளைலாப வியாபாரிகள்தான் என்று நான் குறிப்பிடுவேன்.

கூண்டிலே ஒரு கோழி. அதற்குப் பல குஞ்சுகள். ஒவ்வொரு குஞ்சும் ஒவ்வொரு நாளும் காணாமல் போய்க் கொண்டிருந்தது. ஒருவர் சொன்னார், பூனை தின்றுவிட்டது என்று. மற்றொருவர் சொன்னாராம் பெருச்சாளி தின்றுவிட்டது என்று. ஆனால், கூண்டுக்குள்ளே பார்க்கும்போது ஒரு கருநாகமே இருந்ததாம். இன்றைய பொருளாதார கூண்டிலேயிருக்கும் கருநாகம் தான் வியாபாரி. ஆக, பெருச்சாளி தின்றுவிட்டது என்று சொல்வதும் பொய்; பூனை தின்றுவிட்டது என்று சொல்வதும் பொய்.



5th March 1964] [திரு. மா. இராசாங்கம்]

திட்டங்களில் முதலீடு என்ற பூனையோ ஜனப் பெருக்கம் என்ற பெருச் சாளியோ விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் அல்ல. உண்மைக் காரணம் என்ன என்பதைக் காங்கிரஸ் அரசாங்கம் சொல்ல மறுக்கிறது. உண்மைக் காரணமான வியாபாரிகளை மறைத்து விட்டு, வேறு காரணங்களைக் காட்டி, மக்களைத் திசை திருப்பி விடுகிறது காங்கிரஸ் அரசாங்கம் என்றே நான் சொல்வேன். காங்கிரஸ் அரசாங்கம் கொள்ளை லாப வியாபாரிகளைக் கொண்ட கருநாகப் புற்றாகிவிட்டது. பாரதப் பொருளாதாரமே வியாபாரிகளின் கைவழி ஆடுகின்ற பொம்மலாட்டமாகிவிட்டது என்று நான் தங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்வேன். விலைவாசி ஏற்றத்தைப் போக்க சில வழிகளைச் சொல்லி, அதிலே அவர்களுக்கே நம்பிக்கை இல்லாமல் நழுவி, கடைசியில் ஒரே ஒரு உறுதியான வழியாக உற்பத்திப் பெருக்கம் அவசியம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். நடப்பு ஆண்டில் நெல் அதிகமாகத்தான் விளைந்திருக்கிறது. இன்னும் அரிசி விலை குறைந்தபாடில்லை. உற்பத்திப் பெருக்கத்திற்கும் விலைவாசி இறக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. உற்பத்தி பெருகினால் உடனே விலைவாசி இறங்கி விடாது. அதைவிட வியாபாரிகளின் உள்ளம் மாறினால் விலைவாசி இறங்க வழி இருக்கிறது. அதை உணர இந்த அரசாங்கம் மறுக்கிறது. உணராமல் மறைகிறது என்பது இந்த பட்ஜெட் மூலமாக எனக்குத் தெரிகிறது.

அடுத்து, விலைவாசி ஏற்றம் பற்றிச் சொல்லும்போது, விலைவாசி ஏற்றம் விவசாயிகளுக்கு லாபம். ஆகவே நகர மக்கள் விலைவாசி ஏற்றத்தைச் சற்று சகித்துக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே இந்த பட்ஜெட் பேசுகிறது. நான் கேட்கிறேன் விலைவாசி ஏற்றம் உண்மையிலேயே விவசாயிகளுக்கு லாபமா? அல்லது வியாபாரிகளுக்கு லாபமா? குறைந்த விலையிலே விற்கிறான் விவசாயி; அதை வாங்கி அதிகக் கொள்ளை லாபத்திற்கு விற்கிறார் வியாபாரி. இதில் யாருக்கு லாபம்? குறைந்த விலையில் வாங்கிக் கொள்ளை லாபத்திற்கு விற்கிற வியாபாரிகளுக்குத்தான் லாபம் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயினுடைய களத்து மேட்டில் நெல் மண்ணாக மதிக்கப்படுகிறது. ஆனால் வியாபாரியினுடைய கிடங்குக்கு போனவுடனே அது பொன்னாக உயர்ந்து போகிறது. இதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உணவுப் பொருள்களின் விலைவாசி ஏற்றம் விவசாயிகளுக்கு லாபம் என்று சொல்வது போலி வாதமாகும். உண்மையிலேயே சொல்வேன்—உணவை உற்பத்தி செய்கிறவனுக்கும் உண்பவனுக்கும் இடையே இருக்கும் நடு மனிதன் (மிடில் மேன்) தான் லாபம் பெறுகின்றான். அவனை நெருங்க அஞ்சி அரசாங்கம் வேறு காரணங்களைக் காட்டி திசை திருப்புகிறது என்று நான் சொல்லிக்கொள்வேன்.

நியாய விலைக் கடைகள் திறந்திருப்பது விலைவாசி ஏற்றத்திற்கு ஒரு பரிகாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நியாய விலைக் கடைகள் உண்மையாகவே இதற்கு நேரடியான பரிகாரம் ஆகாது. 'நியாய விலைக் கடை' என்று சொல்லும்போது, அங்கே அநியாய

விலைக் கடைகளும் பரவலாக இருக்கின்றன என்றுதான் பொருள். 'அநியாய விலையை ஒழியுங்கள்' என்று நாங்கள் சொன்னால், காங்கிரஸ் அரசாங்கம் 'நியாய விலைக் கடைகளைத் திறந்திருக்கிறோம்' என்று சொல்கிறார்கள். அநியாய விலையை ஒழிப்பதற்கு நியாய விலைக் கடைகளைத் திறந்தால் மட்டும் போதுமா? சந்தியிலே பாய்கிற சாக்கடையை அகற்றுங்கள் என்றால் "அங்கே நாங்கள் சந்தனக் கடை வைக்கிறோம்" என்று சொல்கிறார்கள். 'அடுத்த வீட்டுக்காரன் அடிக்கிறான்' என்று தகப்பன் காலில் மகன் விழுந்தால், தகப்பன் என்ன செய்ய வேண்டும்? "ஏன் அடித்தாய்?" என்று அடுத்த வீட்டுக்காரனைக் கேட்கவேண்டும். அல்லது, இனிமேல் அடிக்காமலாவது பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாமல், அடித்த காயத்திற்கு மருந்து போட்டு அத்தோடு மவுனமாகிவிட்டால் அந்தத் தகப்பனைப் பற்றி மகன் என்ன நினைப்பான்? தகப்பனை மகன் மதிப்பானா? ஆகவே, விலைவாசி ஏற்றத்திற்கான காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை அகற்றாமல், காயத்திற்கு மருந்து போடுவது போல், நியாய விலைக் கடைகளைத் திறந்து வைத்திருப்பது, சரியான நிவாரணம் ஆகாது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அநியாய விலைகளை இறக்க நியாய விலைக் கடைகள் பரிகாரமே ஆகாது, தலைவலியைப் போக்க தலையணையை மாற்றினால் போதுமா என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, விலைவாசி ஏற்றத்திற்கு ஜனப் பெருக்கம்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. இது ஆடத் தெரியாத நாட்டியக்காரி தெருக் கோணல் என்றாளாம். ஆளத்தெரியாத அரசாங்கம் ஜனப்பெருக்கத்தை காட்டுகிறது. விலைவாசியை இறக்கத் தெரியாமல் ஜனப் பெருக்கத்தைக் காரணமாகக் காட்டுவது அப்படித்தான் இருக்கிறது. பிறக்கிற குழந்தை ஒவ்வொன்றும் உண்ணுவதற்கு வெறும் வாயும், வயிறோடு மட்டும் பிறக்கவில்லை. உழைக்க இரு கரத்தோடும், உடல் உரத்தோடும் பிறக்கிறது. உழைக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தால் உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பு இருக்கிறது. இடு இடு என்று விலைவாசி இறங்க வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்யாமல் வேறு காரணங்களைக் காட்டி, மக்களுடைய கவனத்தை வேறு பக்கமாகத் திசை திருப்பிக் கொண்டிருப்பது அவ்வளவு பொருந்தாது என்று நான் உங்கள் மூலமாக அமைச்சரவைக்குச் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

என்.ஜி.ஓ. க்களின் **N.G.O. Pay Commission** ரிபோர்ட்டில் 29-வது பக்கம், 13-வது பாராவில் உள்ள ஷரத்தை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய அரசாங்க ஊழியர்களின் பஞ்சப் படி உயரும்போது, மாநில அரசாங்க ஊழியர்களின் பஞ்சப் படியும் உயரவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது மத்திய அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்ந்திருக்கிறது. ஆனால், மாநில அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயரவில்லை. ஏன் இந்த ஏற்றத்தாழ்வு? அதே நேரத்





தில், இந்த மாநில அரசாங்க ஊழியர்களுக்கு இந்த அரசாங்கம் பஞ்சப்படி அளிக்காமல் ஏன் ஏமாற்ற வேண்டும்? நேற்று ஒரு கனம் உறுப்பினர் பேசும்போது, "என்.ஜி.ஓ.-க்களுக்காக கண்ணீர் வடிப்பதுபோல் பேசுகிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள். கண்ணீர் வடிப்பது கண்ணீர் விடுகிறவர்களுக்குத்தான் தெரியும். பன்னீர் விடுகிற மந்திரிகளுக்குக் கண்ணீரைப் பற்றித் தெரியாது என்று உங்கள் மூலமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் கண்ணீர் விடத் தெரிந்தவர்கள் என்று சொன்னது எனக்குப் புரியவில்லை. அவர்களுக்குத்தான் 'கண்ணீர் துளிகள்' என்று பெயர். அதை நினைத்துப் பேசுகிறார்களா?

**திரு. மா. இராசாங்கம்:** அது காங்கிரஸின் கையில் இருக்கிற பெரியாருக்குத்தான் தெரியும் என்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் தங்கள் சிப்பந்திகளிடத்தில் இருந்து பெற்று வந்த கட்டாய டெபாசிட்டை நிறுத்திக் கொண்டார்கள். அது போல நாமும் நிறுத்த வேண்டாமா? சம்பளத்தை கூட்டித்தராவிட்டாலும் உடனடியாக இந்த கட்டாய டெபாசிட் வாங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நீண்ட காலத்திற்கு பிறகே பயன் அளிக்கக்கூடிய பெரிய வேலைத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாட்டன் பதித்த பனங்கொட்டை பேரன் காலத்தில்தான் பயன் அளிக்கும். எனவே நீண்டகாலத்திற்கு பின்னால்தான் பயனளிக்கக்கூடிய திட்டங்களிலேயே இந்த பட்ஜெட்டினுடைய முதல் கவனம் திரும்பியிருப்பதால், இந்த பட்ஜெட் தாத்தா பதித்த பனங்கொட்டை, அது தற்காலத்தில் பயனளிக்காது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவு அறிக்கையை நான் வரவேற்று என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எங்கள் பகுதியில் இலை நாற்று நடுவது உண்டு. அந்த நாற்று நடும்போதே பெண்கள் பாட்டுப் பாடுவார்கள். அதற்கு ஒப்பேரி அல்லது ஒப்பாரி என்று பெயர். யாராவது இறந்து போனால் இறந்தவர்கள் வீட்டில் பாடுகிற அந்த ஒப்பேரி பாட்டு ஒருவகை அகவல் பா இனம். அந்தப் பாட்டை எங்கள் பகுதியில் இலைநாற்று நடுகிறபோது பாடுவது என்னமோ ஒரு வழக்கமாகப் போய்விட்டது. அதை நான் இங்கு சொல்லப்போவதில்லை. இது சட்டசபை இல்லையா?

ஒருநாள் நான் வயலுக்குப் போயிருந்தபோது ஒரு பெண் ஒரு வரி பாடுகிறாள். மற்றவர்கள் அந்த வரியைச் சொல்கிறார்கள். திடீரென்று ஒரு வரியைப் பாடியவுடன் முதலில் பாடுகிற பெண் ரொம்ப அழுதாள். மற்றவர்கள் "இப்போது நீ ஏன் அழுகிறாய்?"

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [5th March 1964

என்று மற்றவர்கள் கேட்டதற்கு, “போன ஆண்டு, என்னுடைய ஆண் மகவு ஒன்று இறந்து போயிற்று இல்லையா? அதை நினைத்து அழுதேன்” என்றாளாம். அதுபோல நிதி நிலை அறிக்கையைப் பற்றி பேசுகிறபோது சில உறுப்பினர்கள் வேறு எதை எதையோ நினைந்து பேசுவதை நான் கேட்டேன். அவர்கள் கூறுகிற குறைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கும் அவற்றுக்கும் சம்பந்தமே இல்லை.

முக்கியமாக எதிர்க்கட்சியினர் ஜனநாயக சோஷலிஷம் என்றால் என்ன என்று சொல்லவில்லை என்பதாகக் குறிப்பிட்டார்கள். ஜனநாயக சோஷலிசம் என்றால் என்ன என்பதைப் பற்றி கம்பர் சொல்கிறார். காலஞ்சென்ற ஜீவானந்தம் அவர்கள் ஒரு இரண்டு பாடல்களை வைத்துக்கொண்டு அந்த சோஷலிச தத்துவத்தை விளக்குவார். அதை நானே கேட்டிருக்கிறேன். கம்பர் கோசலநாட்டைப் பற்றிச் சொல்ல வரும்போது

கூற்றம் இல்லையோர் குற்றமி லாமையால்
சீற்ற மில்லை தஞ் சிந்தையிற் செம்மையால்
ஆற்ற நல்லற மல்ல திலாமையால்
ஏற்ற மன்றி யிழித்தக வில்லையே

என்று சொன்னார். அவர் சொல்கிற சோஷலிச நாட்டில் கோர்ட்டுகள் இல்லையாம். காரணம் குற்றம் செய்பவர்களே கிடையாது. ஆகவே குற்றங்களுக்கு தண்டனை விதிக்கக் கூடிய கோர்ட்டுகள் கிடையாது. அங்கு வாழ்கிற மக்களிடத்தில் கோபம், தாபம், மதம், மாச்சரியம் ஆகிய கெட்ட குணங்களே கிடையாதாம். அதற்குக் காரணம் அவர்களுடைய மனது அவ்வளவு பண்பட்டு இருந்தது.

ஆற்ற நல்லற மல்ல திலாமையால்
ஏற்ற மன்றி யிழித்தக வில்லையே.

அற நிலையைத் தவிர வேறு ஒரு கீழ் நிலை கிடையாது. அப்படி தனிப்பட்ட மனிதர்களுக்கு பூரண சுதந்திரம் கொடுத்து அவர்களது பெரு முயற்சிகள் சமுதாயத்திற்கு நல்லதாக ஆக்கிக் கொள்வதுதான் சோஷலிசம். அப்படி தனி மனிதனுடைய சுதந்திரத்தினால் அவனது பெரு முயற்சிகள் சமுதாயத்திற்குப் பயன் அளிக்கவேண்டுமென்றால் அதற்குச் சில கட்டுப்பாடுகள் அவசியம். அந்த கட்டுப்பாடுதான் அறம். அந்த அறம் என்ற கட்டுப்பாட்டை வைத்து அந்த அறத்தை எல்லையாகக் கொண்டு, தனி மனிதர்கள் தாம் பெற்ற சுதந்திரத்தைக்கொண்டு செய்கிற முயற்சிகள் தாம் சமுதாயத்திற்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருக்கும்.

வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்

அங்கே இரு கையையும் நீட்டி ஏற்பார் இல்லாமயாலே கேட்போரும் இல்லையென்று கூறுகிறார். அதுதான் பொருளாதார வகையிலே நாம் நாடுகின்ற சமத்துவ சமூக வாய்ப்பு.



5th March 1964] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

வண்மை யில்லையோர் வறுமை நன்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்

வீரம் என்கின்ற நிலையே கிடையாது. அந்த நாட்டிற்குப் பகைவன் கிடையாது என்ற காரணத்தினாலே அந்த மக்களுக்குத் தங்களுடைய மனத்தில் இருக்கும் வீரத்தைப் புலப்படுத்து நிலை ஏற்படவில்லை என்று கூறுகிறார்.

ஒண்மை யில்லையேல் கேள்வி யோங்கலால்

ஒண்மை என்று சொல்லப்படுகிற இழிதகைமையான நிலைமை அந்த ஜனநாயக சோஷலிச கோசல நாட்டில் இல்லை என்பதற்குக் காரணம் அங்கு கேள்வி ஞானம் அதிகமாக இருக்கிறது என்று கூறுகிறார். அதையொட்டித்தான் நமது அரசாங்கத்தின் அறிவிப்பிலே 11-வது வகுப்பு வரையிலே பயிலுகின்ற மாணவர்களுக்குச் சம்பளம் இல்லாத நிலைமையை ஏற்படுத்தி கல்வியை வளர்க்கின்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ‘சாதாரணமாக, ஜனநாயக சோஷலிசத் தத்துவத்தைக் காங்கிரஸ் கட்சியின் வழியாக நின்று இயங்குகின்ற அரசாங்கம் அடிக்கடி எடுத்துச் சொல்கிறது. ஆனால் நடைமுறையில் என்ன செய்தது?’ என்பதுதான் எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டு. நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்—ஜனநாயக சோஷலிசம் என்று சொல்லப்படுகின்ற பண்பு அல்லது குணத்திற்கு அடிப்படையான ஓர் அம்சம் அல்லது அது இயங்குகின்ற மத்திய புள்ளி (செண்டர் ஆப் கிராவிடி) என்ன என்று நோக்கினால் அஹிம்சைதான், சத்தியந்தான் ஜனநாயக சோஷலிசத்தை இயங்க வைக்கின்ற மத்திய புள்ளியாக இருக்கிறது என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருப்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது. கொல்லாமை என்று சொல்லக்கூடிய குணத்தை அகிம்சை என்ற பொருளிலே விரிவுபடுத்திக் கொள்ளவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அந்த அகிம்சையை—

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

என்று கூறுகின்ற வகையிலே நோக்குமிடத்து, பொய்யாமை என்ற ஒரு நிலைமையை அகிம்சைக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி நோக்குமிடத்து காங்கிரஸ் கட்சியானது இந்த வகையில் என்ன பணியை ஆற்றியது முன் காலத்திலே என்று பார்க்கவேண்டும். சாதாரணமாக, காங்கிரஸ் கட்சி மகாத்மா காந்தியடிகள் அவர்கள் தலைமையின்கீழ் இந்திய நாட்டிற்கு சுதந்திரத்திற்காகப் போராடிற்று என்று சொன்னால் அதற்குக் காரணம் ஜனநாயக சோஷலிசத் தத்துவத்தை இந்தப் பரந்து விரிந்து கிடக்கிற நாட்டிலே நிலை நிறுத்துவதற்காகத்தான் என்பதை உங்களிடத்தில் சொல்லிக்

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [5th March 1964

கொள்ள ஆசைப்படுகிறேன். சுதந்திர இயக்கம் நடந்த பிற்பாடு, சுதந்திரம் அடைந்த பிற்பாடு, ஜனநாயக சோஷலிசத்தை ஸ்தாபிப்பதற்காக எடுத்துக் கொண்ட முதல் முயற்சி என்ன வென்றால் இந்த நாட்டிலே வாழ்கின்ற ஆண் பெண் அனைவருக்கும் 21 வயது அடைந்தவுடன் வாக்குரிமை என்ற பெரிய வாய்ப்பை ஈந்ததாகும். அந்தக் காலத்தில் அமிர்தத்தை எடுக்க வேண்டு மென்பதற்காகத் தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். மந்தாகிரி என்ற மலையை மத்தாக நட்டு, வாசுகி என்ற பாம்பைக் கயிறாக்கி இழுத்தார்கள். அவ்வாறு இழுத்த போது அவர்கள் எதிர்பார்த்தது அமிர்தம். ஆனால் வந்ததோ ஆலகால விஷம். அதே போன்று, பரந்து கிடக்கின்ற பாரத நாட்டினுடைய மக்களுடைய மனத்தை அரசியல் என்கின்ற ஒரு கோலை நட்டு . . . .

**கனம் சபாநாயகர் :** இது பட்ஜெட் விவாதம் . . . (சிரிப்பு).

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** மக்களுடைய மனத்தைக் கடைகின்ற வகையிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்வியறிவு இல்லாத நாட்டிலே, அரசியல் பண்பு இல்லாத நாட்டிலே இத்தகைய தேர்தலை நடத்துவதில் ஆபத்தான நிலைமை இருக்கிறதென்று பல அறிஞர்கள் சொன்னார்கள். அப்படி இருந்தும் துணிகரமாக மூன்று தேர்தலை நடத்தி—அதனால் ஆலகால விஷம் தோன்றவில்லை—அமிர்தத்தைக் கடைந்தெடுத்தது ஜனநாயக சோஷலிசத்தின் அடுத்த நடவடிக்கை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER: I can allow only three more minutes to the hon. Member.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** அடுத்தபடியாக ஜனநாயக சோஷலிசத் தத்துவத்தை நிலைநிறுத்துவதற்காகக் காங்கிரஸ் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை ஐந்தாண்டுத் திட்டங்களை தீட்டியதுதான். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக, இந்த நாட்டிலே எங்கெங்கு நீர் வளம் இருக்கிறதோ அங்கெல்லாம் அணைகளைக் கட்டி, மேட்டுப் பாங்கான இடங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டது. இது ஜனநாயக சோஷலிசத் தத்துவத்தின்படி எடுத்துக் கொண்ட அடுத்த நடவடிக்கை என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டு இறுதியில் நாம் இருக்கிறோம்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்

என்று கூறுகின்ற வள்ளுவப் பெருந்தகை வாக்குக்கு இணங்க, பொருள் உற்பத்தித்தான் ஜனநாயக சோஷலிசத் தத்துவத்திற்கு அடிப்படையான காரணம் என்பதை உணர்ந்து பலவகையான



5th March 1964] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

பொருள்களையும் பெருக்குவதற்குத் தக்க நடவடிக்கைகளை ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் நடத்திக் கொண்டு வருகிறோம் என்பதை இந்தச் சபை நன்கு அறியும். அப்படி எல்லாம் செய்து கொண்டிருக்கும்போது, 'இந்த அரசாங்கம் ஜனநாயக சோஷலிசத் தத்துவத்தைப் பேசுகிறதே தவிர, நடவடிக்கைகளில் இறங்கவில்லை' என்று கூறுவது பொருத்தமற்ற வாதம் என்பதைத் தங்கள் மூலமாக மற்ற அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்ற 11-வது வகுப்பு வரையிலே இலவசப் படிப்பு என்கிற ஒரு நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும். குமரகுருபர சுவாமிகள் சொல்லியுள்ளபடி, கல்வியை மட்டும் ஒரு நாட்டிலே வளர்த்து விட்டால் அந்த நாட்டிலே இல்லாத செல்வங்கள் இருக்க முடியாது. அந்த வகையிலே நம்முடைய தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி என்று ஏற்பட்டதோ அன்றிலிருந்து கல்விக்கான பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, கல்விச்சாலைகளை ஆங்காங்கு ஏற்படுத்தி, கல்விச்சாலைகள் இல்லாத இடங்களே இல்லையென்று சொல்லும்படியான நிலைமையினை ஏற்படுத்தியிருக்கிறார்கள், என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதற்கு மேலும் வழி வகுக்கவேண்டுமென்பதற்காகத்தான் இலவசப் படிப்பு என்கிற ஒரு சீரிய கொள்கையை நிதி நிலை அறிக்கையிலே அறிவித்திருக் கிறார்கள். 10-00 a.m.

அடுத்து, மேல் படிப்பிற்காக நாலைந்து இடங்களில் கல்லூரிகள் வைப்பதாக முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. மேலும் சங்கம் வளர்த்த தமிழ் மதுரையில் பல்கலைக்கழகம் ஒன்றை, அண்ணாமலை யூனிவர்சிட்டி போன்று, ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்கின்ற ஒரு நிலையைக் காணுமிடத்து தமிழகம் மிக மிக முற்போக்குக் கொண்ட ஒருநிலையில் இயங்கு கிறது என்பதை நாம் அனைவரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். எதிர்க்கட்சியாக இருந்தாலும் குற்றத்தை குற்றம் என்று எடுத்துக் காட்டுவதுதான் ஜனநாயகத்தின் ஆணி வேர் என்பதை நான் மறுக்கவேயில்லை. இடித்துக் கூறும் பண்பை ஆளும்கட்சி வரவேற்கிறது. ஆனால் வாழ்த்துவதை வாழ்த்தி இடித்துக் கூறவேண்டியதை இடித்துக் கூறினால் எங்களுக்கு நன்றாகயிருக்கும். ஆனால் எடுத்ததற்கெல்லாம் குறை கூறுவது என்றால் மனிதனின் அறிவு மங்கிவிடும். அதனால் செயலாற்றும் தோது குறைந்து விடும் என்று கூறிக் கொண்டு எனக்கு பேச அவகாசம் தந்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியை யும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம் மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் ஆகிய அமைச்சர் அவர்கள் இங்கு சமர்ப் பித்திருக்கும் இந்த நிலை அறிக்கை மீது நான் ஒரு சில

கருத்துக்களை சொல்ல நினைக்கிறேன். இந்த மாதம் மாசி மாதம். ஹோலிப் பண்டிகை மாதிரி தமிழ் நாட்டில் காமன் பண்டிகை கொண்டாடுகிறார்கள். அதில் எரிந்த கட்சி எரியாத கட்சி, என்று இரண்டு கட்சிகள் உண்டு.

**கனம் சபாநாயகர் :** தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பழைய ஞாபகத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது கனம் அங்கத்தினர் காமன் பண்டிகைக்குப் போய் விட்டார்களே.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** அதுபோல் இங்கும் ஏற்பட்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. கவுண்டர் அவர்கள் கம்பராமாயணப் பிரசங்கத்தை நல்லமுறையில் செய்தார்கள். கம்பன் பாடிய கோசல நாடு, கற்பனையில் பார்த்த நாடாகும். ஆனால் நாம் ப்ராக்டிகலாக இருக்கவேண்டும். ஆகவே எதிர்கட்சிக்காரர்கள் ஆகிய நாங்கள் குற்றம் சொன்னால் அதற்காக வருத்தப்படக் கூடாது. இன்று நாட்டின் நிலையை எடுத்துக்கொண்டால் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருக்கிறோம். நாடு முன்னேறியிருப்பதாக பெருமைப் படுகிறார்கள். முன்னேற்றம் என்பது இருக்கிறது. யாரும் இல்லை என்று சொல்லமுடியாது. ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா? பணம் வீணாக்கப்படாமல் காரியங்கள் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். முன்னேற்றம் இல்லை என்று எதிர்கட்சிக்காரர்கள் சொல்ல முடியாது, அப்படிச் சொல்பவர்கள் இங்கு இருக்க மாட்டார்கள் என கருதுகிறேன். எதிர்கட்சியினர் சொல்லக்கூடிய கருத்துக்களில் ஆளும்கட்சியினருக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ சில கருத்துக்கள் புண்படும்படி இருந்தாலும் தயவுசெய்து அவர்கள் அதை கொஞ்சம் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

> "செவிகைப்பச் சொல் பொறுக்கும் வேந்தன்
> கவிகைக்குள் தங்கும் உலகு."

என்று நாயனார் கூறியபடி முதல் அமைச்சர் அவர்கள், எதிர் கட்சியினர் பேசும்போது குறுக்கிட்டு சில கருத்துக்களைச் சொல்வது வரவேற்கத்தக்கதே. ஆனால் அப்படி அவர்கள் பேசும் போது எதிர்கட்சியினர் மனம் புண்படுவதைப் பார்க்கும்போது எனக்கு கஷ்டமாக இருக்கிறது. நாங்கள் சொல்வதற்கு பதில் அளிக்க அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது நல்ல முறையில் பதில் அளிக்கலாம். அடுத்தபடியாக, இன்றையதினம் நாட்டில் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்த அளவிற்கு வளர்ச்சி அடையவில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு, விலைவாசிப் பிரச்னையை எடுத்துக் கொண்டால் நாடெங்கும் அது ஒரு பிரச்னையாக இருக்கிறது. காங்கிரஸ் அரசாங்கத்தை ஒரு நல்ல பெயரிட்டு அழைக்கவேண்டுமென்றால் ப்ராப்ளம் கவர்ன்மெண்ட் (பிரச்னை சர்க்கார்) என்றுகூட சொல்லலாம். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஏதாவது ஒரு பிரச்னை வந்து கொண்டே இருக்கிறது. சிமெண்ட் பிரச்னை, சர்க்கரைப் பிரச்னை இப்படி ஏதாவது ஒரு பிரச்னை வந்து கொண்டேயிருக்கிறது. திடீரென்று விலைவாசி ஏறுகிறது. காய்கறி விலை திடீரென்று ஏறி





விடுகிறது. ஆக, மாதத்திற்கு ஒரு திருவிழா மாதிரி ஒவ்வொரு பிரச்னையும் வந்து கொண்டேயிருக்கிறது. இதைக் கண்டு மக்கள் ஆத்திரப்படுகிறார்கள், கஷ்டமும் அடைகிறார்கள். உற்பத்தியைப் பெருக்கவேண்டும், அதுதான் வழி என்று சொல்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்கும் மார்க்கங்களில் மக்கள் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இல்லை என்று கூற முடியாது. இந்த பட்ஜெட் வரி போடாத பட்ஜெட். சிறிய அளவிற்குத்தான் வரி போடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமானாலும் சரி அல்லது மாநில அரசாங்கங்களானாலும் சரி எங்கும் நிலவுவது காங்கிரஸ் கட்சிதான். நாடு பூராவிலும் இன்று வரி போடாத நிலையில் பட்ஜெட் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றால் வரி போடாதிருக்கவேண்டுமென்ற நல்ல நோக்கம் அல்ல காரணம். போட வேண்டிய வரிகளை எல்லாம் உச்ச அளவிற்கு போட்டு விட்டார்கள். உலகத்திலேயே ஏழ்மையான நாடு இந்தியா, உலகத்திலேயே அதிகமான வரி உள்ள நாடும் இந்தியாதான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். இனிமேல் வரி போட முடியாது என்ற நிலையில் இனி செய்யவேண்டியது என்ன? வரிச் சலுகைகள் கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அக விலைகள் ஏறுவதால் மற்ற விலைகள் ஏறுகிறது. ஆகவிலை ஏறக் காரணம் உற்பத்தி பெருகவில்லை என்று சொல்கிறார்கள். விவசாயிகள் விவசாயத்தை ஒழுங்காகத்தான் செய்து கொண்டு வருகிறார்கள். விவசாயிகள் அசிரத்தையாக இருக்கவில்லை. பருவநிலை தவறி விடுவதாலும், அரசாங்க உதவிகள் காலாகாலத்தில் செய்யாமல் இருப்பதினாலும்தான் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே இனி வரி விலக்கு கொடுத்து நிவாரணம் அளிக்கவேண்டுமென்றால் அதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டியது, விவசாயிகளுக்கு. விவசாயிகள் மீது இன்று அதிகப்படியான வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஏன் அவற்றை குறைக்கக் கூடாது? கராச்சி தீர்மானத்தில் நில வரியை ரத்து செய்வோம் என்று 1932-ல் அகில இந்தியக் காங்கிரஸில் முடிவு எடுத்தோம். நான் அரசாங்கத்திற்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். அந்த வரியை ரத்து செய்யாவிட்டாலும் சிறு விவசாயிகளுக்கு குறைந்த பட்சம் ஐந்து ஏக்கர் அல்லது இரண்டு மூன்று ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு எல்லாம் பரிபூர்ணமாக நில வரி இல்லாமல் செய்து ஒரு பரீட்சை பார்க்கக் கூடாதா என்று நான் கேட்கிறேன். உச்சவரம்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனால் 30 ஏக்கருக்கு மேல் ஒருவரும் வைத்துக் கொள்ள முடியாது. 30 ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்கள் அதிகமாக இருக்கமுடியாது. 10 ஏக்கர்களுக்கு உட்பட்டிருப்பவர்கள்தான் அதிகம். அப்படியிருக்க இந்த விவசாய வருமான வரியை வைத்திருப்பது கொஞ்சம்கூட நியாயம் அல்ல. விவசாய வருமானம் என்பது நிர்ணயிக்கப்பட்ட ஒரு வருமானமும் அல்ல. என்னைப் பொறுத்தவரையிலேயே சொல்கிறேன். சென்ற ஆண்டு கிடைத்ததைவிட இந்த ஆண்டு பாதிக்குக் குறைவாகத்தான் கிடைத்திருக்கிறது. காரணம், பருவ மழை தவறி விட்டது. முற்றிய நாற்றைக் கொண்டு பயிர் செய்ததால் ஆறு மூட்டைக்கு இரண்டு மூட்டைகள்தான்

கிடைத்தது. அதிகாரிகளுக்கு இது தெரிவதில்லை. இந்தக் கணக்கை நம்பமாட்டோம் என்கிறார்கள். சென்ற வருடம் 600 ரூபாய் போட்டோம், அதையே இப்போதும் கொடு என்றால் என்ன அர்த்தம்? விவசாய வருமான வரி மூலம் ஒரு கோடி ஆறு லட்சம் வருவதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஏன் அதை வஜா செய்யக்கூடாது என்று கேட்கிறேன். விவசாயச் செலவு ஏறிக் கொண்டே போகிறது. வேலைக்கு ஆள்கள் கிடைப்பதில்லை. இரண்டு ரூபாய் கேட்கிறார்கள் கூலி. ஆறு மூட்டை அறுவடை செய்ய இரண்டு மூட்டைகள் கூலியாக கேட்கிறார்கள். விவசாயப் பிரச்னை பற்றி நன்கு அறிந்தவர்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள். அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் விலை மோசமான விலை. அதை உயர்த்த பாடுபட்டு வருகிறார்கள், முடியவில்லை. அகில இந்திய ரீதியில் பிணைக்கப்பட்டிருப்பதால் மேற்கொண்டு இரண்டு ரூபாய் கட்டிக்கொடுக்க முடியாமல் இருக்கிறது. எவ்வளவுதான் தேசாபிமானம் உள்ளவர்களாக இருந்தாலும் 27 ரூபாய்க்குள்ளதை 17 ரூபாயாகக் குறைத்துக்கொடுக்க மனம் வராது. அரசாங்கமே உணவுப்பொருள்களின் வியாபாரம் முழுவதும் ஏற்று நடத்துவது அவசியமில்லை என்று குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மார்க்கெட் ரேட்டிற்கு ப்ரொக்யூர் செய்யலாம். தக்க விலை கொடுககாவிட்டால், அதாவது 21 ரூபாயாவது கொடுக்காவிட்டால் நிச்சயமாக விவசாயிகளை ஊக்குவிக்க முடியாது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இரண்டாவது, ஆட்சி சம்பந்தப்பட்டவரையில் எங்கு பார்த்தாலும் மக்களிடத்தில் வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. மக்கள் எல்லோரும் அதிகப்படியான அளவில் வரி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மூன்றாவது, வேலையில்லா திண்டாட்டமும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. கல்வி சம்பந்தப்பட்டவரையில் நாம் எவ்வளவோ செலவு செய்து நிறைய பள்ளிக்கூடங்களை எல்லாம் திறந்து கொண்டிருக்கிறோம். இலவசக் கல்வியை படிப்படியாகக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதே சமயத்தில் படித்தவர்களுக்கு வேலை கிடைப்பது என்பதும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பத்தாவது வரை படித்தவர்கள், கல்லூரியில் படித்தவர்கள் இவர்கள் எக்கச்சக்கமாக நாட்டில் குவிந்து கொண்டேயிருக்கிறார்கள். இவர்களுக்கு தகுந்த வேலை கிடைக்க எந்தவிதமான வழியும் இல்லாமல் இருக்கிறது. அணைகள் எல்லாம் அனேகமாக கட்டியாய் விட்டன. பாலங்கள் எல்லாம் அனேகமாக கட்டியாய் விட்டன, ரோடுகள் போட்டாய்விட்டன. பெரிய வேலைகள் எல்லாம் தீர்ந்து விட்டதினால் வேலை வாய்ப்பு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே வேலை வாய்ப்பை அதிகமாக்கச் செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுவது மிகவும் அவசியம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, உணவுப் பிரச்னை சம்பந்தப்பட்டவரையில், முன்பு வெள்ளைக்காரன் காலத்தில் அன்னிய நாட்டிலிருந்து சில





ரக அரிசிகளை வரவழைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த முறையில் இப்போதும் ஏன் செய்யக்கூடாது என்பதைப் பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவேண்டும். இதற்கு வேண்டுமென்றால் சிறிது அன்னிய செலவாணி கஷ்டம் ஏற்படலாம், அந்தக் கஷ்டங்களை ஏற்றுக்கொண்டாவது, முடிந்த அளவுக்கு ஏதாவது அரிசியை வரவழைக்க முடியுமானால், ஓரளவுக்கு இப்போது இருக்கிற கஷ்டத்தை நிச்சயமாக நீக்க முடியும் என்று நினைக்கிறேன்.

அடுத்ததாக, குடும்பக்கட்டுப்பாடு திட்டம் சம்பந்தமாக பேசும்பொழுது இப்பொழுது ஜனப் பெருக்கம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் பல கஷ்டங்களும் ஏற்படுகின்றன என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் குடும்பக்கட்டுப்பாடு திட்டம் எந்த நிலையில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை பார்ப்போமானால், இந்தத் திட்டம் பரிபூர்ணமான அளவில் தோல்வி அடைந்திருக்கிற ஒரு இயக்கம் என்று தான் சொல்ல வேண்டும். காரணம் அதற்குத் தகுந்த சூழ்நிலை நமது நாட்டில் இல்லை. முக்கியமான காரணம் என்னவென்று பார்க்கும்போது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், சினிமாக்கள் அதிகமாகிவிட்டன. எந்த சினிமாவைப் பார்த்தாலும் காதல் காட்சிகள்தான் பெருகிக் கொண்டு வருகின்றன. நேற்று முன்தினம் ஒரு சினிமாவுக்குப் போயிருந்தேன். சாதாரணமாக முன்பெல்லாம் ஒரு ஜோடி தான் காதல் செய்வதை பர்க்க முடியும். இப்போதுள்ள சினிமாக்களைப் பார்த்தால், இரண்டு ஜோடி காதல் நடத்துவதைப் பார்க்க முடியும். அதுவுமல்லாமல், நான் பார்த்த சினிமாவில் கடைசியில் மூன்று ஜோடிகள் காதல் நடத்துகிறார்கள். மாற்றி மாற்றி காதல் நடத்துகிற, காதல் காட்சி மயமாக அமைந்திருக்கிறது. இவ்வளவு காதல்களையும் நடத்திவிட்டு கடைசியில் இந்த படத்திற்கு 'காதலிக்க நேரமில்லை' என்று வேறு பெயரும் கொடுத்திருக்கிறார்கள். மூன்றே கால் மணி நேரம் இந்தப் படத்தைப் பார்க்கின்ற யாராக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, வெளியில் வந்த பின்னால் என்ன நடக்கும் . . . (சிரிப்பு) இப்படியிருந்தால் எப்படி குடும்ப கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க முடியும் என்று கேட்கிறேன். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மைலுக்கு ஒரு சினிமாக் கொட்டகை வைத்துக் கொள்வதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். சினிமா வேண்டியது தான். மக்களுக்கு பொழுது போக்கிற்கு வேண்டிய ஒன்று தான். முன்பிருந்த கர்நாடக சங்கீதத்தின் பெருமை எல்லாம் போய்விட்டது. சினிமா தான் இன்று முதல்படியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே சினிமாவை ஓரளவுக்கு குறைக்கவேண்டும். அதிலும் முக்கியமாக சினிமா காதல் காட்சிகளை குறைக்கவேண்டும். நான் சொன்ன சினிமாவைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது நண்பர் ஒருவர் கேட்டார், தணிக்கையாளர்கள் என்ன செய்கிறார்கள் என்று . . . அதற்கு இன்னொருவர் சொன்னது என்னவென்றால், இம்மாதிரிப்பட்ட படங்களைப் பார்க்கும்பொழுது தணிக்கையாளருக்கும் குஷி ஏற்பட்டுவிடுகிறது என்கிறார்கள். அதனால் தான் இம்மாதிரிப்

பட்ட படங்கள் வருகின்றன. வர வர காதல் காட்சிகள் எப்படியிருக்கிறது என்றால்—காதல் காட்சி இருக்கவேண்டியதுதான்—ஆனால் முன்பெல்லாம் இவ்வளவு தூரத்திற்கு நெருங்கி நடிப்பது கிடையாது. இப்போது வர வர ஆணும் பெண்ணும் நெருங்கிப் புகுந்து காதலிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள் . . .(குறுக்கீடு) . . . ஆம், அப்படித்தான் பேப்பரில் போடுகிறார்கள் . . புகுந்து விளையாடுகிறார்கள் . . என்று போடுகிறார்கள். இம்மாதிரிப்பட்ட காதல் காட்சிகள் எல்லாம் இருப்பதால்தான் நமது திட்டங்கள் மக்களிடத்தில் தோற்றுப்போய் விடுகிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஏதோ ஆப்ரேஷன் மூலம் ஜன பெருக்கத்தை தடுக்கலாம் என்று சொல்லப்பட்டு ஆப்ரேஷன்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆப்ரேஷன் செய்த பின்னால் கூட, மனைவிக்கு கர்ப்பம் தரிக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது (சிரிப்பு) உண்மையில் நடந்த விவரத்தைத் தான் சொல்லுகிறேன். நாலைந்து குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு குடும்பத்தில், அந்த நண்பர் ஆப்ரேஷன் செய்து கொண்டார், அதன் பின்னால் மனைவிக்கு கர்ப்பம் ஏற்பட்டு விட்டது. இதன் காரணமாக அவர்களுடைய குடும்பத்தில் பெரிய தகராறு ஏற்பட்டுவிட்டது. கடைசியில் அந்த அம்மையாரை சமாதானப்படுத்துவதற்கு பெரிய கஷ்டமாகி விட்டது. கடைசியில் அவரை ஆப்ரேஷன் செய்த டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போய், ஆப்ரேஷன் செய்தாலும், சில நேரத்தில் குழந்தைகள் பிறக்கும் என்று சொன்ன பின்னால்தான் சமாதானம் அடைந்தார்கள். அந்த அளவுக்கு கஷ்டமாகி விட்டது. என்னுடைய யோசனை இதில் என்னவென்றால் . . . ஏதாவது எதிர்கட்சியிலுள்ளவர்கள் 'கன்ஸ்ட்ரக்டீவ்வாக ஐடியாக்கள்,' காரியார்ந்த யோசனைகளை சொல்லவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், அந்த முறையில் சொல்லுகிறேன். இப்போது கிராமங்களில் எல்லாம் கம்யூனிட்டி சென்டர்கள் இருக்கின்றன. அந்த இடத்தில் வந்து, அந்த ஊரிலுள்ளவர்கள் . . மணமான . . ஆண்கள் வாரத்திற்கு ஆறு நாட்கள் வந்து படுத்துக்கொள்ளவேண்டும், ஒரு நாள் மட்டும்தான் வீட்டில் படுக்கலாம், மற்ற நாட்களில் எல்லாம் ஏகாந்தம் . . . (சிரிப்பு) என்ற முறையில் ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டால் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை ஓரளவுக்கு சரியாக நடத்த முடியும் என்று நான் நினைக்கிறேன். இதை அரசாங்கம் யோசனை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், இந்த விஷயத்தில் என்ன முறைகளை அனுசரித்தாலும் ஒன்றும் வெற்றி காண முடியாது என்பதுதான். ஆண்டவனுடைய படைப்பை நாம் ஒன்றும் செய்ய முடியாது. உலகத்தில் பிறக்க வேண்டியது பிறந்து தான் தீரும், அழிய வேண்டியது அழிந்துதான் தீரும். ஆகவே முடிந்த அளவுக்கு ஜனப்பெருக்கத்திற்குத் தகுந்தவாறு நாம் வேலை வாய்ப்பை தேடிக்கொடுக்கவேண்டும். நம்மிடத்தில் பெரிய அரசியல் நிபுணர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இதை எந்த முறையில் தீர்க்கலாம் என்பதைப்பற்றி நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யவேண்டும்.





விலைவாசிப் பிரச்னையைப் பொறுத்தளவில், இப்போது இருப்பது போல் போய்க் கொண்டிருந்தால் பெரிய கபளீகரமாகப் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது. வளர்ந்து வரக்கூடிய சமுதாயத்தில் இப்படித்தான் விலைவாசி உயர்ந்து கொண்டே போகும் என்றெல்லாம் இங்கு நாம் சொல்லிக்கொண்டிருக்கலாம். படித்தவர்கள் வேண்டுமானால் இதைப்பற்றி தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் சாதாரண பாமர மக்கள் இதை எப்படி புரிந்து கொள்ள முடியும்? நேற்றுப் பார்த்தேன் சென்னை நகரில் 25 காய்கறி நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று. இதனால் மட்டும் நம்முடைய விலைவாசி இறங்கிவிடும் என்று நான் நம்பவில்லை. எத்தனை நியாயவிலைக்கடைகளை திறந்தாலும் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடாது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், என்ன காரணமோ தெரியவில்லை, ஒரே சமயத்தில் ஏறின விலை அப்படியேதான் இருக்கிறது, பின்னால் இறங்கவே முடிவதில்லை. காய்கறி விலையைப்பற்றி எனக்கு சொந்தமாக செரியும். வெறும் பத்து மூட்டை தான் கிடைக்கிறது என்றால், அன்றைக்கு முக்கால் ரூபாய் என்று விற்பார்கள். அதே நேரத்தில் 200 மூட்டை கிடைக்கிறது என்றால் நான்கு அணுவுக்கு விற்கின்ற நிலைமையும் ஏற்படுகிறது. இதனால் யாரும் வருத்தப் படுவதும் இல்லை. ஆனால் சில இடங்களில் ஏறின விலை அப்படியே இருக்கிறது. இவ்விதம் விலை ஏறியே யிருக்கவேண்டிய அவசியமில்லை. ஜனநாயக ஆட்சியில் இதற்குக் காரணமாக இருக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இவர்களிடம் சென்று கேட்டால், பின்னால் நமக்கு வோட்டுப் போடுவார்களோ மாட்டார்களோ என்ற சந்தேகம் இருக்கவே கூடாது. ஆகவே இம்மாதிரியான நிலைமையை இன்னும் நாம் வளர்த்துக்கொண்டிருந்தால் நிச்சயமாக சமுதாயம் அழிந்து போகக்கூடிய நிலைமை தான் ஏற்படும் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில், கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி அப்பர் பெரியாறு (கல்லாறு) ஸ்கீமை நிறைவேற்றலாம் என்று இருந்தது. இப்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை தருவார்கள் என்று நம்புகிறேன். கிழக்கு ராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதி மிகவும் பிற்போக்கான பகுதி, அது ஜமீன் பிரதேசமாக இருந்த காரணத்தினால் மக்களுக்கு போதுமான வசதியில்லாததின் காரணமாக இப்போது சுமார் 72 லட்சம் ரூபாய் தீர்வை பாக்கியாக இருக்கிறது. இங்குள்ள மக்கள் வேண்டுமென்றே கொடுக்காமல் இருக்கவில்லை. கொடுக்க முடியாத நிலைமையில் தான் இருக்கிறார்கள். இப்பொழுதுள்ள பாக்கியையும் சேர்த்தால், சுமார் ஒரு கோடி வரும் என்று ஜில்லாக் கலெக்டர் அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னார். அவர்கள் அபிப்பிராயப்படுவதும் என்னவென்றால், குறைந்த பட்சம் பாதியையாவது வஜா செய்து கொடுத்து விட்டால் பாக்கியுள்ளதை பின்னால் வருஷா வருஷம் வசூலிப்பதற்கு வசதியாக இருக்கும்.

[திரு. டி. எல். சசிவர்ண தேவர்] [5th March 1964

இதைப்பற்றி இரண்டு வருஷத்திற்கு முன்னால் எஸ்டிமேட் கமிட்டி அங்கு வந்திருந்த நேரத்தில் ராமனாதபுரம் கலெக்டர் அவர்கள் இந்த நல்ல கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். இதையும் அரசாங்கத்தின் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் ஆகவே இதை அவசியம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திட்டம் நிறைவேறக்கூடிய இந்தக் காலத்தில் நாம் அதிகாரிகளை அதிகமாக நியமித்துக்கொண்டேயிருக்கிறோம். நமக்கு கிடைக்கின்ற வருமானத்தில் பெருமளவு இவர்களுடைய சம்பளத்திற்காகவே ஒதுக்குகின்றோம். சென்றகாலத்தில் ஒரு தாசில்தார் செய்த வேலையை இப்போது 9 தாசில்தார்கள் செய்கிறார்கள். முன்னால் 2 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் செய்த வேலையை இப்போது 20 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் செய்கிறார்கள். அப்படியிருந்தும் வேலை சரியாக நடப்பதில்லை. ஆகவே இதைப் பற்றி சரியாக விசாரிக்க ஒரு கமிட்டியை நியமித்து, எந்த அளவுக்கு நிர்வாகத்தை சீர்படுத்த முடியும் என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திட்டங்களைப் போடுகின்றோம், அதே சமயத்தில் சிலர் திட்டங்கள் எல்லாம் சரியாக நடைபெறவில்லை என்பதையும் சொன்னார்கள். 'நிலத்தில் பாதி கிணறு, அதிலும் பாதி தரிசு' என்று சொல்வது போல்தான் இருக்கிறது, இப்போதுள்ள திட்டங்களின் நிலைமை. திட்டத்தின் பெயரால் பல இடங்களிலும் லஞ்ச ஊழல்கள் நடைபெறுகின்றன. சாதாரணமாக திட்டத்தின் பெயரால் ஒரு ரூபாய் செலவு செய்தால், அதில் கால் ரூபாய் அளவுக்குக் கூட நல்ல முறையில் ஜனங்களுக்குப் பயன் கிடைப்பதில்லை.

இரண்டாவது, ஜனநாயக சோஷலிஸத்தைப் பற்றிச் சொன்னார்கள் கனம் அங்கத்தினர் கவுண்டர் அவர்கள் ஜனநாயக சோஷலிஸத்தைப் பரிபூர்ணமாக நிறைவேற்றுவதை நான் வரவேற்கிறேன். ஜனநாயக ரீதியாக சோஷலிஸத்தை நிறைவேற்ற முடியுமா என்பது வேறு விஷயம். ஜனநாயகம் என்பது வேறு, சோஷலிஸம் என்பது வேறு. இரண்டையும் எப்படிச் சேர்ப்பது என்று புரியவில்லை. மக்களுக்காக அவர்கள் செய்யப் பார்ப்பதில்லை நடவடிக்கை எடுக்கப் பார்ப்பதில் வெற்றி கண்டால் அரசாங்கத்தை பூமாலை போட்டு வாழ்த்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதை எல்லா எதிர் கட்சிகளும் வரவேற்கும் என்றும் சொல்லிக்கொள்கிறேன். தாயுமானவர் அடிகள் அந்த நாளில் பாடினார், 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்று. அதே அடிகளார் இப்போது இருக்கும் ஆட்சியைப் பார்த்துப் பாடியிருந்தால் 'எல்லோரும் துன்புற்றிருக்கச் செய்வதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்று பாடுவாரே தவிர வேறு விதமாகப் பாடியிருக்க மாட்டார் என்பதைக் கடைசியாக சுட்டிக் காட்டிக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



5th March 1964]

*** திரு. க. அங்கமுத்து நாயக்கர் :** மதிப்பிற்குரிய கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 1964-65-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச நான் முன் வந்திருக்கிறேன். இந்த அறிக்கையானது நம்முடைய வாழ்விற்கும், நம் வரும் கால சந்ததிகள் வாழ்விற்கும் உள்ள வழிவகைகளைச் செய்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையில் இந்த அறிக்கையானது நம்முடைய மாகாணத்தின் நல்ல முன்னேற்றத்தைக் கருதி இந்த அறிக்கையைத் தயார் செய்து அதைச் செயலில் காட்ட முன் வந்த அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொதுவாக இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி பலர் பலவிதமாக பல கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். பொதுவாக தேர்தல் விஷயத்தை எடுத்துக்கொண்டால் அவர்கள் தேர்தலில் பல கஷ்ட நஷ்டங்களையும் சொல்லுகிறார்கள். சுதந்திரம் அடைந்த பிறகு நமது ஆளும் கட்சியார் இது வரையில் தேர்தலில் கண்டிராத அளவுக்கு அதிகப்படியான முனிசிபாலிட்டிகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்கள் தான் என்று சொன்னால் அது மிகை ஆகாது. சுதந்திரம் கிடைப்பதற்கு முன் நாம் இருந்த நிலைமையை ஆராய்ந்து பார்த்து, இப்போது இருக்கும் நிலைமையை நாம் பார்ப்போமானால் நம் வாழ்க்கைத் தரம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று நாம் உணராமல் இருக்க முடியாது. எதிர் கட்சி நண்பர்கள் சொல்லுகிறார்கள் இந்த அறிக்கையில் எந்த வித முன்னேற்றமும் இல்லை, இந்தத் திட்டத்தினால் யாரும் முன்னேறவில்லை, இதனால் ஒரு வேஷ்டி கட்டியிருக்கின்றவன் கூட குளிக்கப் போய் குளித்து விட்டு கட்டிக்கொள்ள இன்னொரு வேஷ்டி இல்லாமல் உட்கார்ந்திருக்கிறான் என்று சொல்லுகிறார்கள். இது வாஸ்தவமா என்று பார்த்தால் சொல்லுக்கு அலங்காரமாகத் தான் சொல்லியிருக்கிறார்கள் என்பது எனது அபிப்பிராயம். இந்த நிலையில் நாம் பார்ப்போமானால் நம்முடைய இந்த அறிக்கையில் நம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல வழிகளை நாம் கையாண்டிருக்கிறோம்.

பொதுவாக இலவசக் கல்வியைப் பொறுத்த வரையில் 11-வது வகுப்பு வரையில் இலவசமாக கல்வி இந்த ஆண்டிலிருந்து அமலுக்கு வருகிறது என்று இந்த அறிக்கையில் காணப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சி நண்பர்கள் அதற்குக் கூட பாராட்டு சொல்லாமல் வேண்டுமென்றே இதில் ஒன்றும் இல்லை என்றும் இப்படி சொல்வதும் சரியல்ல அது பணக்காரர்கள் தான் வாழ வகை செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லுவதானது முற்றிலும் தவறானது என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்த நம்முடைய மாகாணத்தின் நிலைமையைப் பார்க்கும்போது எவ்வளவு பள்ளிக்கூடங்கள் இருந்தன, இப்போது எவ்வளவு பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன

என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். மேலும் மேலும் எல்லா கிராமங்களிலும், கூடுமான வரையில் மூன்று மைல்களுக்குள் இருக்கும் கிராமங்களில் உயர்நிலைப்பள்ளிகளை அமைத்துக் கொண்டு வருகிறோம். இதை யாரும் மறுக்க முடியாது. எந்த வகையிலே இந்த திட்டம் குறைவுபட்டிருக்கிறது, அதைச் சரி செய்ய முடியவில்லை என்று சொன்னால் அதையும் நாம் ஆராய்ந்து செய்ய வழிவகை ஏற்படும் என்று அவர்களுக்கும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த அளவுக்கு நாம் கல்வித் தரத்தில் அதிகமாக முன்னேறியிருக்கிறோம். மேலும் மேலும் உயர் நிலைப் பள்ளிகளைத் திறக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது. நம் வாழ்க்கைத்தரம் உயர, தம் வருங்கால சந்ததிகளின் வாழ்க்கை வளம் பெற வழிவகை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று மனமாற பாராட்டவேண்டியது நமது கடமை என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பார்த்தால் இந்தியாவிலேயே இல்லாத சிறந்த முறையில் நல்ல வகையில் இந்த டிபார்ட்மெண்ட் விவசாயிகளுக்கு செய்துகொடுத்திருக்கிறார்கள், தொழில் துறைக்கும் செய்து கொடுத்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே முடிக்கவேண்டுமென்ற திட்டத்தை முன் கூட்டியே நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று பார்த்தால் நம் வேலைத்தாம் எவ்வளவு அதிகமாக, எவ்வளவு முழு முயற்சியோடு செய்யப்பட்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மின்சார டிபார்ட்மெண்ட்டிலே சில கிராமங்களுக்கு செய்து கொடுக்க இன்னும் முன்வரவில்லை. அதற்குக் காரணம் சில உபகரணங்கள் இல்லை என்று தெரிகிறது. அவைகளுக்கும் இந்த மூன்றாவது திட்ட இறுதிக்குள் உடனடியாக செய்து கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். அதே நோக்கில் விவசாயத்தைப் பெருக்க நம் விவசாயிகளுக்கு அதில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்க நவீன முறையில் கருவிகளை வாங்கிக் கொடுத்து அதற்கு வேண்டிய பொருளையும் கொடுத்து அவர்களுக்கு ஊக்கமூட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியிருந்தால்தான் விவசாயப் பெருக்கத்தை அதிகமாகப் பெருக்க முடியும். கூட்டுறவு முறையில்கூட விவசாயத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் 20 வருஷமாக, அல்லது 10 வருஷமாக பயிரிட்ட, பட்டா வாங்கிக்கொள்ளாமல் பயிரிட்ட, தென்னை, மா போன்றவைகளை உற்பத்தி செய்து வைத்திருக்கிற சில நிலங்களைக் கூட விவசாயப் பண்ணைகளில் சேர்க்க முற்பட்டிருக்கிறார்கள் என்பது வருந்தத் தக்க காரியம். கூட்டுறவு முறையில் செய்வது என்றால் சில தரிசு நிலங்கள் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன, அதை எடுத்து பங்கிட்டுக் கொடுத்து அதன் மூலம் விவசாயப் பெருக்கத்திற்கு வழி செய்தால்தான் அதிகமாக விவசாயப் பெருக்கத்தை அடைய முடியும். சிலர் பயிர் செய்து கொண்டே இருக்கும் நிலத்தில் அவர்கள் பட்டா வாங்காத





காரணத்தினால், அதை எடுத்து மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து விவசாயம் செய்வது என்றால் எப்படி ஜாஸ்தி உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று தெரியவில்லை. அந்த வகையில் விவசாயத்தைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும். அப்போதைக்கப்போது உரம், தழை போக்குவரத்துகளைக் கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும். காலம் தவறிக் கொடுத்தால் விவசாயத்திற்கு பயன்படாமல் போகிறது. எல்லா இடத்திலும் அந்தக் குறை இருந்துகொண்டு தான் இருக்கிறது. அந்தந்தக் காலத்தில் உரம் முதலியவைகள் கிடைக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ரைஸ் மில்லைப் பொறுத்தவரைக்கும் தேசியமயமாக்கவேண்டும் 10-30 a.m. என்று சிலர் சொல்லுகிறார்கள். அந்த வகையில் தேசியமயமாக்குவதைக் காட்டிலும், முன் கூட்டியே பரீட்சார்த்தமாக 4, 5 மில்களை சர்க்கார் எடுத்து நடத்திப் பார்த்து, பிறகு ரைஸ் மில்களை தேசியமயமாக்கினால் ஆட்சேபனை இருக்காது. சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுகா ரொம்பப் பிற்போக்கான பகுதி. அங்கே உற்பத்தி ரொம்ப அதிகமாக இல்லை. காரணம், அங்கே கிணறுகளிலிருந்து தான் தண்ணீர் இறைத்து பாய்ச்சவேண்டியதாக இருக்கிறது. அது எங்களுடைய பழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே சிறிய பாசன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறிய நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால், சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுகாவில் அதிக உற்பத்திக்கு இடமுண்டு. இப்பொழுது கிணற்றுத் தண்ணீரை இறைத்துத்தான் பாய்ச்சவேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் சிறிய நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுப்பதற்கு வழி வகைகள் காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பட்டா கொடுப்பதிலே சில தாமதங்கள் ஏற்படுகின்றன. 2 வருஷம், 4 வருஷங்களுக்கு முன்பு சொந்தமான நிலத்திற்குக்கூட இன்னும் பட்டா கொடுக்கப்படவில்லை. அந்த மாதிரி இடங்களில் உடனடியாக பட்டா வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆத்தூர் ஆஸ்பத்திரி ரொம்ப பிற்போக்கான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. அதை மேலும் வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும். அதற்கு மேலும் ஒரு டாக்டர் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மருந்து சப்ளை செய்வதிலே ரொம்பவும் கவனக் குறைவாக இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆஸ்பத்திரியில் எல்லா மருந்துகளும் வழங்கப்படவில்லை. சில மருந்துகளைத்தான் ஆஸ்பத்திரியில் கொடுக்கிறார்கள், சில மருந்துகளை வெளியில் போய் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று சொல்லி விடுகிறார்கள். உடனடியாக எல்லா மருந்துகளையும் சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த கனம் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். ரெங்கசாமி:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் வருஷ நிதி நிலை அறிக்கையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் ஜனநாயக சோஷலிஸம் என்று கூறப்படாமல் இருந்தால் அநேகமாக சில அங்கத்தினர்கள் குறை சொல்லுவதற்கு காரணம் இருந்திருக்காது என்று நினைக்கிறேன். ஜனநாயக சோஷலிஸம் என்று அதில் குறிப்பிட்டிருப்பதினால் தான், அதற்குத் தகுந்த வழிமுறைகள் ஒன்றும் அதில் சொல்லப்படவில்லை என்று சில அங்கத்தினர்கள் குறை கூறினார்கள். கனம் சோஷலிஸ்டு அங்கத்தினர் கூட 'சோஷலிஸம் என்று நீங்கள் எப்படி பெயர் சொல்லலாம்' என்று கோபம் கொண்டார்கள்.

நேற்று இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசிய திரு. மாதவன் அவர்கள், சீதையைக் கண்டேன் என்று நிதிநிலை அறிக்கையில் சோஷலிஸத்தைப் பற்றி சொல்லியிருக்கிறதே ஒழிய, அதில் உண்மையிலேயே வேறு ஒன்றுமில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். ஆனால், சீதையைக் காண்பதற்கு எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருந்தது. எந்த சூழ்நிலையிலே ஹனுமார் சீதையைக் கண்டுபிடித்தார், அதை எப்படி வந்து ராமனிடம் சொன்னார், சீதையைக் கண்டேன் என்று சொல்வதற்குப் பதிலாக கண்டேன் சீதையை என்று ஏன் சொன்னார் என்பதெல்லாம் ராமாயணத்தைப் படித்தவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். கண்டேன் சீதையை என்று ஒரே வாக்கியத்தோடு ராமாயணம் முடிவடையவில்லை. சீதையைக் கண்டேன் என்று சொன்னபிறகு தான் அநேகமாக ராமாயணம் வளர்ந்திருக்கிறது என்பது ராமாயணம் படித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அப்போது ஜனநாயக காலம் இல்லை. இருபது, முப்பது வோட்டுகளை கூரையில்லாத வீடுகளிலே பதிந்து வைத்துக்கொண்டு, வோட்டுகளை வாங்கி வெற்றிபெரும் காலம் அல்ல அது. அப்போது சீதையைப் பார்த்தேன் என்று அவசரமாக ஹனுமார் சொல்லி விட்டார். ஏதாவது வாங்கிக்கொண்டு சொல்லலாம் என்று நினைக்கிற காலம் இல்லை அது. அது தர்ம காலம். ஆகையால் பார்த்ததை பார்த்தபடி கண்டேன் சீதையை என்று உடனடியாக ஹனுமார் ராமரிடம் சொல்லிவிட்டார். ராமாயணத்தைப் படித்தவர்களுக்குத் தெரியும். எவ்வளவு கஷ்டப்பட்டு ஒரு பெரிய யுத்தத்தை நடத்தி ராவணாதி கும்பகர்ணாதிகளை தோற்கடித்து, சீதையை மீட்கவேண்டியிருந்தது? அதே மாதிரி சோஷலிஸத்தை அடைவதற்கு எத்தனையோ ராவணாதிகளை . . . .

**கனம் உதவி சபாநாயகர்:** வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி தான் பேசவேண்டும் மற்றவைகளைப்பற்றி யெல்லாம் ரொம்ப விவரமாகப் பேசவேண்டியதில்லை.

**திரு. ஆர். ரெங்கசாமி:** எத்தனையோ ராவணாதி, கும்பகர்ணாதிகளை எதிர்த்துப் போராடி சோஷலிசத்தை அடையவேண்டியிருக்கிறது என்பதை எல்லோரும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். பொதுவாக எல்லோருக்கும் குறை உண்டு. மத்திய சர்க்கார்





ஊழியர்களுக்கு சம்பளம் ஜாஸ்தியாக இருக்கிறது. நமது மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பளம் குறைவாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், நமது நிலை என்ன என்பதைப் பற்றி யாரும் சொல்லுவதில்லை. ஏனென்றால் சொல்லுவதற்கு வெட்கம். நமது கூடவே இருந்து கிராமத்தில்வாழக்கூடியவர்கள் பார்லிமெண்டிற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளம் என்ன? நம்முடைய சம்பளம் என்ன? எந்த அங்கத்தினரும் தைரியமாக வெளிப்படையாகச் சொல்லவில்லை. அதற்கெல்லாம் காரணம் என்ன? எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அங்கு இருக்கக்கூடிய வசதிகள், அவர்கள் செய்யக்கூடிய வேலை இவைகளை வைத்து சம்பளத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். நம் கூடவே இருந்து தேர்தலில் நின்று வெற்றிபெற்றவர்கள் பார்லிமெண்டிற்கு சென்றிருந்தார்கள், அவர்கள் அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால், குறை சொல்லுவது என்பது எல்லோருக்கும் வெகு சுலபமாக உள்ளது. இப்பொழுதெல்லாம் கடவுளிடத்தில் கூட சோஷலிஸம் பரவுவதில்லை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஒரு சில கோவில்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. ஒரு சில கோவில்களுக்கு லட்சக் கணக்கான வருமானம் வருகிறது. எல்லோருக்கும் நல்லபடியாக வரனைக்கொடுக்கிற விநாயகர் கோவிலுக்கு வெற்றிலை பாக்குக்குக் கூட வசதியில்லாமல் இருக்கிறது. அம்மாதிரி நிலையில் விநாயகர் உட்கார்ந்திருப்பது நமக்குத் தெரியும். ஆனால், இப்பொழுது நமது முதல் அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கூட சோஷலிஸ பாணியில் அமைக்கவேண்டும் என்று கருதி, அதிகப்படியான நிதி வசதி உள்ள கோவில்களிலிருந்து நிதியை எடுத்து சாதாரணமாக பாழடைந்து கிடக்கும் கோவில்களை ரிப்பேர் செய்வதற்கும் மற்றும் பல வசதிகள் செய்து கொடுப்பதற்கும் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த முறையில் பார்க்கும்பொழுது இன்னும் எவ்வளவோ குறைகளை நாம் நிவர்த்தி செய்யவேண்டியிருக்கிறது.

விலைவாசி ஏற்றத்தைப்பற்றி அநேகமாக கண்டிப்பாக சட்டசபை கூடும்போதெல்லாம் ஒரு புகார் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதிலும் குறிப்பாக மார்ச்சு மாதத்தில் இது மாதிரி ஏற்படுகிறது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் விவசாயப் பொருள்களின் விலையை நாம் கணக்கிட்டுப் பார்த்தால், அநேகமாக நெல் ஒன்றைத் தவிர எல்லாவற்றின் விலையும் குறைந்திருக்கிறது என்பது கிராமப் பகுதிகளிலிருந்து வரக்கூடிய விவசாயிகளுக்கு நன்றாக தெரிந்திருக்கும். நமது சர்க்கார் குறிப்பாக உபயோகப்படுத்துபவர்களுடைய நலனைத் தான் இதுவரையிலும் கவனித்து அவர்களைப் பற்றிதான் மனதிலே கொண்டு திட்டங்களை தீட்டுகிறார்களே ஒழிய, உற்பத்தி செய்பவர்களைப் பற்றி எப்பொழுதுமே, யாரும் கவலைப்பட்டதில்லை என்று ஒரு நிலை தான் இப்பொழுது இருக்கிறது. உபயோகிப்பவர்களுக்கு ஏதாவது ஒரு பொருளின் விலை கூடிவிட்டால், அதற்காக பெரிய கிளர்ச்சி உண்டுபண்ணி, அதன் மூலம் விலையைக் குறைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையையும், சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திகொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக எடுத்துக்கொண்டால் சென்ற ஆண்டு வெல்லத்தின் விலை மணங்கு ரூ. 12, 13; மிளகாய் விலை ரூ. 26, 27 என்று விற்றது. சென்ற ஆண்டு இன்னும் மற்ற விவசாயப்பொருள்களெல்லாம் எவ்வளவு கூடுதல் விலைக்கு விற்றது என்று பார்த்தால், இன்று இருக்கக்கூடிய விலையைக் கவனித்தால் வெல்லம் யாரும் விற்க முடியாத ஒரு கீழான விலையில் ரூ. 6-க்கு விற்கிறது. மிளகாய் ரூ. 17, 18 என்று விற்கக்கூடிய நிலையில் இருக்கிறது. சென்ற ஆண்டில் மிளகாய் ரூ. 27 என்ற விலைக்கு விற்ற பொழுது, ஏராளமாக விலை ஏறிவிட்டது என்று இந்த மன்றத்தில் கூச்சல் போடப்பட்டது. இப்பொழுது ஒரேயடியாக விலை குறைந்துவிட்டது.

**கனம் உதவி சபாநாயகர்:** இந்த மன்றத்தில் கூச்சல் போடுகிறார்கள் என்று சொல்லுவது கனம் அங்கத்தினர் அவர்களுடைய மரியாதைக்கே குறைவாக இருக்கிறது. ஆகவே, அம்மாதிரி சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். ரெங்கசாமி:** அப்படி என்றால் அந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். ஆகையினாலே உபயோகிப்பவர்களின் நலனை மட்டும் மனதிலே கொண்டு திட்டம் தீட்டப்படாமல், உற்பத்தியாளர்களுக்கு என்ன சௌகரியம் செய்துகொடுத்தால் அதுவும் உபயோகிப்பவர்களுக்கு பலனாக அமையும் என்பதை சர்க்கார் மனதில் வைத்துக்கொண்டு திட்டத்தை அமைக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடுகூட, இந்த நிதி நிலை அறிக்கையிலே உயர்நிலைப் பள்ளி படிப்பு வரை இலவசமாக கற்றுக்கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சில இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பது என்றால், அங்குள்ள மக்கள் ரூ. 4,500 கட்டவேண்டும், அதற்காக 5 ஏகர் நிலம் தரவேண்டும், அதற்கு வேண்டிய வசதிகள் செய்துதரவேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருக்கிறது. இந்த ஆண்டிலிருந்து உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதால், இதை நமது முதல் அமைச்சர் அவர்கள் கவனித்து தொகை கட்டவேண்டும், 5 ஏகர் நிலம் கொடுக்கவேண்டும் என்று நிபந்தனை போடாமல் அந்தந்த கிராமங்களில் ஏதாவது நிலத்தை இலவசமாகக் கொடுத்து, அந்த கிராம மக்களுக்கு வசதி செய்துகொடுத்தால், உயர்நிலைப்பள்ளியை அங்கே உடனே ஏற்படுத்தவேண்டும் என்று ஒரு திருத்தத்தையும் இதில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட நமது மாநிலத்திலே எத்தனையோ காலேஜ்கள் வேண்டுமென்று எல்லோரும் கேட்கிறார்கள். தனிப்பட்ட முதலாளிகள் காலேஜுகளை ஏற்படுத்துவதற்கு தயாராயிருக்கிறார்கள். காலேஜ் கட்டிடத்திற்காகத் தரவேண்டிய தொகையைத் தவிர, யுனிவர்சிட்டிக்கு செக்யூரிடியாக ரூ. 2 லட்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி ரூ. 2 லட்சம் கட்டத்தேவையில்லை, அந்தப் பணத்தையும் அவர்கள் காலேஜுக்காகப் பயன்படுத்திக் கொள்ள





லாம் என்று சொன்னால், தனிப்பட்டவர்கள் பல காலேஜுகளை ஆரம்பிப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு முக்கியமானது மின்சாரம். இப்பொழுது அந்த மின்சாரம் நல்ல முறையில் கொடுக்கப்படுகிறதா, அவர்களுக்குப் பயன் தரக்கூடிய வகையிலே கொடுக்கப்படுகிறதா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில்கள் அதிகமாக அதிகமாக, விவசாயத்திற்கு மின்சாரம் கிடைப்பது குறைவாக இருக்கிறது. என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்கிறேன், காலையில் எழுந்தவுடன் ஸ்விச்சைப் போட்டால், பம்புசெட் மோட்டார் ஓடக்கூடிய அளவுக்குக் கூட கரண்ட் கிடைப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திண்டுக்கல்லைச் சுற்றியுள்ள 16 கிராமங்களில் தோல் பதனிடும் தொழில் நடத்துவதினால், தண்ணீர் கெட்டுப் போய், விவசாயிகள் பாதிக்கப்பட்டு, உற்பத்தி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக இதை எடுத்துச் சொல்லியும், இன்னும் வேறு முயற்சிகள் செய்தும், நிவர்த்திக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு குடிதண்ணீர் கூட கிடைக்க முடியாத அளவுக்கு இன்று துன்பப்படுகிறார்கள். இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த வரவு செலவுத் திட்டத்தில் அதிகமான தொகை கல்விக்காகவும், உணவு உற்பத்திக்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி அதிகமாகத் தொகை செலவழிக்கப்படுவதை வரவேற்றாலும், அப்படி செலவழிக்கும் முறையிலுள்ள கோளாறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பாதுகாப்புத் துறைக்கும், போலீஸ் துறைக்கும் மானியங்களை நாம் ஒதுக்குகின்ற நிலையிலே, இந்தக் காவல் படையினர் இந்த நாட்டிலுள்ள எந்த மதத்தினருக்கும், எந்த வகுப்பினருக்கும் கட்சி வேறுபாடு இன்றி பாதுகாப்பு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த நகராட்சித் தேர்தல், சென்னை மாநகராட்சி தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர், இங்கேயுள்ள அரசியல் கட்சிகளும், குறிப்பாக ஆளும் கட்சியிலுள்ள தோழர்களும், இந்த நாட்டு மக்களின் தொகையில் ஏறத்தாழ பத்தில் ஒரு பங்காக உள்ள முஸ்லீம் சமுதாயத்

[திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி] [5th March 1964

தினரை, நகராட்சி தேர்தலில் தங்களுடைய கட்சிக்கு ஆதரவு தரவில்லை என்பதற்காக, சென்ற 10 நாட்களாக இந்த நகரில் நடைபெறும் கூட்டங்களிலும், வெளியிலே மாவட்டங்களில் நடைபெறும் கூட்டங்களிலும், இழிவு படுத்தித் தாக்கிப் பேசி காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தராத அந்த சமூகத்தினர் இந்த நாட்டில் வாழக்கூடத் தகுதியில்லை என்ற முறையில் ஆளும் கட்சியிலுள்ள தலைவர்களும், அவர்களைச் சேர்ந்த கூட்டுக்கட்சியினரும் மிகவும் பலாத்காரமான முறையில் பேசியிருக்கிறார்கள். இது வரையிலும் அந்தப் பேச்சாளர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை நாங்கள் கவலையோடு கண்காணித்துக் கொண்டு வருகிறோம். ஆனால் வேறு கட்சியில் உள்ளவர்கள் எப்படியிருந்தாலும், எங்கே இருந்தாலும் அவர்களை ஏதாவது ஒரு சதியில் மாட்ட வைத்து கடும் தண்டனை அளிக்க முன்வரும் ஆட்சியாளர்களுக்கு இந்த மாதிரிப் பேச்சுக்கள் காதில் விழவில்லையா? இந்த ஆட்சித் துறையின் ரிப்போர்ட்டர்கள் குறிப்பு எடுப்பதில்லையா என்று நான் கேட்கிறேன். ஆகவே கட்சி வேறுபாடு இன்றி இந்தக் காவல் துறையினரை நல்ல முறையில் பயன்படுத்தி, நாட்டு மக்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த அமைச்சரவையை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளை எடுத்துக் கொண்டால், அவர்கள் எப்படி இருந்தார்கள், இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஊக்கம் அளிக்க என்ன முயற்சிகள் எடுக்கிறீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆரம்பத்தில் உற்பத்திச் செலவு என்ன இருந்ததோ, அதைவிடப் பத்து மடங்கு அதிகமாக இப்பொழுது இருக்கிறது. மேலும் பல வரிகளுக்கு உள்ளாகி, புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு கட்டவேண்டிய வரித் தொகையை கட்டிக் கொண்டு வந்தும், சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக எல்லா வகைகளிலும் அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதினால் உற்பத்தி திறன் குறைந்து இருக்கிறது. மேலும், இப்பொழுது சர்க்கார் கடைப் பிடிக்கும் கொள்முதலின் காரணமாக அவர்கள் பலவிதத்திலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தக் கொள்முதலை யாரிடமிருந்து செய்யவேண்டும் என்பதை ஆட்சியாளர்கள் இன்னும் சரியாக விளக்கவேண்டும். மில்காரர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட வேண்டுமா, அல்லது நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட வேண்டுமா, அப்படியென்றால் ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு கொள்முதல் செய்யவேண்டும் என்கின்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று விலைவாசி ஏறிக்கொண்டு போவதற்கு முக்கிய காரணம் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியாமல் இருப்பதுதான். பழங்காலத்தில் கையாளப் பட்டுவந்த முறைகளில் உற்பத்தி செய்



5th March 1964] [திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி]

வதாலும், இப்பொழுது கூறப்படுகின்ற புதிய முறைகளுக்குத் தேவையான கருவிகள் கிடைக்காததாலும் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு குறைந்த விலையில் நவீன விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்விக்காக நம்முடைய மாநில சர்க்கார் ஒதுக்கியிருக்கும் அதிகமான தொகைக்கும், இப்பொழுது உயர் நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி அளித்ததற்காகவும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால், பள்ளிகளை ஆரம்பித்தால் மட்டும் போதாது. அதற்கு தேவையான கட்டிடங்களைக் கட்டவேண்டும். என்னுடைய தொகுதியில் இரண்டு மூன்று உயர்நிலைப் பள்ளிகள் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. குறிப்பாக பாளையங்கோட்டை, பரிவிளாகம் போன்ற இடங்களிலே கூறைக் கீற்றுகளை வைத்து பள்ளிகள் அமைத்திருப்பதினால் மழைக்காலங்களில் பள்ளிக்கூடங்களை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவற்றிற்கு தேவையான கட்டிடங்களை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், ஆதித்திராவிடர்களுக்காக சட்ட உதவி அளிக்கும் வகையிலே பாதுகாப்பு கொடுக்கும் முறையை நான் வரவேற்கிறேன். அதற்கு தகுதியுள்ள ஆதித்திராவிடர்கள் யார் என்று குறிப்பிடும்பொழுது, தகுதியில்லாதவர்களே இல்லை என்பதையும், கட்சியைக் கருதி வேண்டுமானால் ஆட்சியாளர்கள் பார்க்கலாமே தவிர, எந்தக் கட்சி வேறுபாடுகளையும் கொள்ளாமல் எந்த ஆதித்திராவிடருக்கு இன்னல்கள் ஏற்பட்டாலும் அவற்றை நீக்குவதற்கு வேண்டிய உதவியை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறிய நீர் பாசனத்தைப் பொறுத்தவரையில், அதிலும் எவ்வளவு இன்னல் ஏற்படுகிறது என்பதைக் கூற விரும்புகிறேன். எவ்வளவு குறைகளைச் சொன்னபோதிலும் 2, 3 ஆண்டுகாலமாகப் பார்க்கிறோம், அவை எல்லாம் கவனிக்கப்படுவது இல்லை. திரு. கவுண்டர் அவர்கள் குறிப்பிட்டது போல பாட்டு வேண்டுமானால் பாடலாம். வேறு வழியில்லை. என் தொகுதியில் பிராநந்தபுரம், கண்டமங்கலம் கிராமங்களில் 2,000-ம் 3,000-ம் ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டு ஒவ்வொரு வருஷமும் வெள்ளம் வந்து, தண்ணீர் தேங்கி துன்பம் ஏற்படுகிறது. கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட. சமீபத்தில் அங்கே பார்வையிட்டு வந்தார்கள். ஆகவே உடனடியாக அங்கே வடிகால் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் ஏதாவது செய்வார்கள் என்ற நம்பிக்கையை மக்கள் வைத்திருக்கிறார்கள். எங்கள் பகுதியில் உள்ளது வீராணம் ஏரி, அது ஒரு பெரிய ஏரி என்பது யாவரும் அறிந்ததே. அந்த ஏரி கிட்டத்தட்ட 60 ஏக்கர் பரப்புள்ளது. அதன் நடுவே

காடு ஏற்பட்டு ஏரி தூர்ந்துகொண்டே வருகிறது. உடனடியாக அந்தக்காட்டை அழித்து மேடுகளை அப்புறப்படுத்தி கரைகளை உயர்த்தினால்தான் தண்ணீர் தேங்கும் வாய்ப்பு இருக்கும்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் மாவட்ட ரீதியாக தொழில்கள் ஏற்படுத்தப்படுவது இல்லை. இதற்குப் பரிகாரம் காணவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெய்வேலியில் உள்ள ஒரு சிறிய குறைபாட்டை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நெய்வேலி மத்திய சர்க்காருடைய பொறுப்பாக இருந்தாலும் மாநில சர்க்காருக்கும் அங்கே மேற்பார்வையிடும் பொறுப்பு இருக்கிறது என்று அறிகிறேன். அங்குள்ள நிரந்தர பணியாளர்களுக்கு கன்ஸ்ட்ரக்ஷன் அலவன்ஸ் கொடுப்பதில் குறை இருக்கிறது. கடலூர், சிதம்பரம், விருதாசலம் வட்டத்தி லிருந்து வேலை செய்யும் நிரந்தர ஊழியர்களுக்கு இந்த அலவன்ஸ் கொடுக்கப்படுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் குறையை நீக்க வேண்டிய முயற்சிகளை செய்து அதை நல்ல முறையிலே தீர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. வை. சங்கரன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன் உள்ள வரவு செலவு அறிக்கையைப் பாராட்டி, ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன். அப்பிரைஸல் ஆப் தி ப்ளான் ஏற்கெனவே கொடுக்கப்பட்டு விட்டதால் இதுவரை செய்து இருக்கும் திட்ட வேலைகளைப் பற்றி இந்த வரவு செலவு அறிக்கையில் அதுபற்றிய முழு விவரங்கள் விரிவாக கொடுக்கப்படவில்லை. தனியாகவும் சொல்லப்படவில்லை, இருந்தாலும் கூட இதில் கூட செய்ய உத்தேசித்திருக்கும் சில நல்ல காரியங்களை நாம் காண முடிகிறது. லிபரலைஸ்ட் பென்ஷன் ஸ்கீம் சம்பந்தமாக சொல்லும்போது அது ஏற்கெனவே இருந்ததை இப்பொழுது இன்னும் வெகுவாக விரிவுபடுத்தியிருக்கிறார்கள். இறந்த ஊழியருடைய மனைவிக்கு ஆயுள் வரைக்கும், 18 வயது வரை மகனுக்கும், 21 வயது வரை அல்லது மணமாகும் வரை மகளுக்கும் இந்த தொகை கொடுக்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதிலே ஒன்று சொல்ல விரும்புகிறேன். மகனுக்கு 18 வயது என்று போட்டிருப்பதை 21 வயதாக போட்டால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். இன்றைக் குள்ள நிலைமையிலே சாதாரணமாக ஒருவன் படித்து உத்தி யோகத்திற்குச் செல்ல 21 வயது ஆகிவிடும். ஆகவே மகனுக்கு 18 வயது என்பதையும் 21 என்று மாற்றினால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக சர்க்கார் ஊழியர்களுக்கு உதவி அளிப்பது குறித்து எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் வெகுவாகப் பேசினார்கள். நாங்களும் சர்க்கார் ஊழியர்களுடைய பிரதிநிதிகள்தாம். எங்களுக்கும் அவர்கள் விஷயத்தில் அக்கறை உண்டு. என்.ஜி.ஓ.க் களுக்கு டி.ஏ.வை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதில் எங்களுக்கும் கவலை உண்டு ஆனால் எதிர்க்கட்சி அங்கத்தினர்



சொல்வது போல சர்க்காருக்கு நல்ல எண்ணம் இல்லை என்று சொல்லுவது உண்மைக்குப் புறம்பானது. சென்னை 'ஏ' நகரம் ஆக வேண்டும் என்று இந்த சர்க்காரிலே உள்ள அமைச்சர்கள் மத்திய அரசாங்கத்துடன் வாதாடி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 'பே' கமிஷனில்கூட மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படி உயர்த்துகிறார்களோ, அதேமுறையில் மாநில சர்க்காரும் உயர்த்த வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. 'ஏ' நகரமாக ஆக்க முயற்சிகள் எடுத்துக் கொண்ட போது, அந்த தத்துவத்தை உணடந்துதான் பாடுபட்டு இருக்கிறார்கள். இப்பொழுது மத்திய சர்க்காரிடம் இருந்து சப்ஸிடி பெற்று உதவி அளிக்க முடியுமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. செய்ய வேண்டாம் என்ற கெட்ட எண்ணம் யாருக்கும் கிடையாது. அப்படி எதிர் கட்சி அங்கத்தினர்கள் பேசுவது உண்மைக்கு புறம்பானது. சீக்கிரத்திலேயே நல்ல முறையிலே தமிழக அரசாங்கம் என்.ஜி.ஓ.-க்களுக்கு ஆவன செய்ய வேண்டும் என்று நானும் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக இலவசப் படிப்பு எஸ்.எஸ்.எல்.ஸி. வரைக்கும் எல்லோருக்கும் இலவசப் படிப்பு என்பது உண்மையிலேயே வர வேற்கத்தக்க அம்சம். கல்வியைப் பற்றி மற்றொரு விஷயம் கூற விரும்புகிறேன். அது பல ஆண்டுகளாகவே விவாதத்தில் இருந்து வந்திருக்கிற விஷயம். மத்திய சர்க்காரிலே எகனாமிக் பேஸிஸ், பொருளாதார அடிப்படையில் சம்பளச் சலுகைகள் போன்ற வைகளை கொடுப்பது என்று கொள்கை வகுத்து நடைமுறையிலே செயல்பட வருகிறது. ராஜ்யங்களின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டுள்ளது. இங்கே இருக்கும் கம்யூனல் அடிப்படையில் இருக்கும் சலுகைகள் அடியோடு தவறு என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு 10 சதவிகிதத்தையாவது ஏழ்மையில் இருக்கும் மாணவர்களுக்கு திறமை அடிப்படையில் கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். ஏழை மாணவர்களுக்கு, ஜாதி மத பாகுபாடு இல்லாமல் ஒரு 10 சத விகிதம் சலுகையாவது திறமை அடிப்படையில் கொடுப்பது நலமாக இருக்கும். அம்மாதிரி திறமையுள்ள மாணவர்களுக்கு ஏழ்மை அடிப்படையில் கொடுப்பது நமது ராஜ்யத்திற்கும் பொது மக்களுக்கும் பயன் அளிப்பதாக இருக்கும். திறமைக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் வகையில் சலுகைகள் அமைந்தால்தான் ராஜ்யத்தின் பிற்கால வாழ்விற்கு நன்மைப் பயப்பதாக இருக்கும். ஒரு 10 சதவிகிதம் அம்மாதிரி செய்தால்கூட போதும். பாக்கியுள்ள 90 சதவிகிதம் மற்ற அடிப்படைகளுக்கு வைத்துக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக, ஓல்ட் ஏஜ் பென்ஷன் சம்பந்தமாக சில திருத்தங்கள் தேவை என்று நினைக்கிறேன். ஆரம்பத்திலே ஒரு ஆண்டு நடைமுறையிலே பார்த்தபின் ஏற்படும் சிக்கல்களையும் கஷ்டங்களையும் திருத்த ஏற்பாடு செய்வோம் என்ற உறுதி அளிக் கப்பட்டது. ஒருவருக்கு பிள்ளை இருக்கிறார் என்பதற்காக

[திரு. வை. சங்கரன்] [5th March 1964

மட்டும் உதவி கிடையாது என்பது அவ்வளவு சரியாக இராது. பிள்ளை இருக்கிறான் என்று உதவியை மறுக்கிறார்கள். இருக்கும் பிள்ளை இடியெட்டாகவோ, இம்பெஸிலாகவோ இருந்தால் என்ன பயன். தன்னையும் காப்பாற்றிக் கொண்டு, பயித்தியம் பிடித்த பிள்ளையையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது அந்தத் தாய்க்கு. அதே நேரத்திலே அந்தத் தாய் தனக்கு பிள்ளை இல்லை என்று சொல்ல முன் வர மாட்டாள். ஆகவே பிள்ளை இருக்கிறான் என்ற ஒரே காரணத்திற்காக உதவியை மறுப்பது சரியாகாது. அந்தப் பிள்ளையால் பிரயோஜனம் இருக்கிறதா என்று ஓரளவு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். எடுத்த எடுப்பில் பிளாட் ஆக மறுப்பது சரியல்ல. பிள்ளை இருக்கலாம், அவன் தாயை கைவிட்டு விட்டு எங்கேயோ வெளிப்பிராந்தியத்தில் இருக்கலாம், தாயை கவனிக்காமல் இருக் கலாம். அவன் தாய்க்கு உதவி செய்ய மறுக்கலாம். அப்படி டெஸர்ட்டட்டாக இருக்கிறவர்களுக்கு ஓல்ட் ஏஜ் பென்ஷன் கிடைக்கச் செய்வதுதான் அரசாங்கத்தின் கடமை. ஆகவே அந்த முறையில் இதைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். இன்னொன்றும் சொல்ல விரும்பு கின்றேன். இந்த பென்ஷன் மணியார்டர் மூலம் செட் செட்டாக அவ்வப்பொழுது அனுப்புகிறார்கள். அதிலே பல பகுதியினருக்கு கிடைக்க 3 அல்லது 4 மாதம் தாமதம் ஆகிறது. இது கண்ணைக் கொடுத்து பின்னால் பறித்தது போல் ஆகிறது. கொடுக்காமலே இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் ஒரு மாதம் இரண்டு மாதம் கொடுத்துவிட்டு அடுத்து பல மாதங்கள் தாமதமாகும்போது அவர்கள்பாடு மிக்க திண்டாட்டமாக போய் விடுகிறது. அப்படிப் பட்ட பல கேசுகள் எங்கள் கவனத்திற்கு வந்திருக்கிறது. அவர் களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது அவசியம். மணியார்டர் அனுப்பும் கிளார்க்குகளை அதிகமாகவாவது போட்டு, உடனுக் குடன் அடுத்த மாத ஆரம்பத்திலேயே யாவற்றையும் அனுப்பக் கூடிய ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். மூன்று, நான்கு மாதங்கள் கழித்து கொடுப்பதால் பிரயோஜனம் இல்லை.

மதுரையில் ஒரு பல்கலைக்கழகம் துவக்கப் போவதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே வரவேற்கத்தகுந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இதைப்பற்றி குறிப்பிடும்போது "1964-ஆம் ஆண்டில் இது
11-00 a.m. ஆரம்பிக்கப்படும்" என்று சொல்லப்பட்டது. ஆனால், அதற்கு அடுத்த ஆண்டில், "இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளே ஆரம்பிக்கப்பட்டு விடும்" என்று உறுதி அளிக்கப்பட்டது. தற்போது கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படிப் பின்னுக்குப் போய்க் கொண்டிருப்பது வருந்தத்தக்க விஷயம். மதுரையில் ஒரு பல்கலைக்கழகம் துவக்கவேண்டும் என்று கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட பிறகு, அந்தப் பல்கலைக் கழகம் எப்பொழுது வரும் என்பது பற்றி ஏன் இன்னும் முடிவு



5th March 1964] [திரு. வை. சங்கரன்]

எடுக்கவில்லை என்று தெரியவில்லை. நாங்கள் பகீரதப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டதின்பேரில் மதுரையில் இந்த சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கு முன்பு இதற்கெல்லாம் பல சாக்குப்போக்குகள் சொல்லப்பட்டன. தடைகள் எல்லாம் ஒருவாறு நீங்கியிருக்கும் இந்தச் சமயத்தில், இதைத் துவக்கும் காலம் பின்னுக்குப் போய்க் கொண்டிராமல் உடனடியாக முன்னுக்குக்கொண்டுவர திட்டமிடவேண்டும். கூடிய சீக்கிரத்திலேயே அந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயக் கல்லூரி ஒன்று மதுரை ஜில்லாவில் துவக்குவது பற்றி அதற்காக இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் டோக்கன் க்ராண்ட்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஓரளவுக்குப் பின்னால் தள்ளிப் போடப்பட்டு விடுமோ என்கிற ஐயம் ஏற்படுகிறது. அதுவும் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும்.

அத்துடன் வெடரினரி காலேஜ் ஒன்றையும் மதுரை ஜில் லாவில் எங்காவது ஒரு இடத்தில் ஆரம்பிக்கவேண்டும். பல் கலைக்கழகம் ஆரம்பிக்கப்படுவதால் அதையொட்டி இப்படிப்பட்ட பலதரப்பட்ட கல்லூரிகளையெல்லாம் ஆரம்பிப்பது நல்லது.

இன்டஸ்ட்ரீஸ் சம்பந்தமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சேலம், நெய்வேலி, தூத்துக்குடி போன்ற இடங்களில் கெமிகல் இன்டஸ்ட்ரீஸ், ஸ்டீல் இன்டஸ்ட்ரீஸ், இன்ஜினீரிங் இன்டஸ்ட்ரீஸ், ஃபிஷரீஸ் இன்டஸ்ட்ரீஸ் ஆரம்பிப்பது நன்றாக இருக்கும். தூத்துக்குடியில் ஆயில் ரிஃபைனரீஸ் வருவதும் நமக்கு நல்லது. இன்டஸ்ட்ரீஸ் இராஜ்யம் பூராவும் பரவினால் நன்றாக இருக்கும். மேலும், தூத்துக்குடியிலிருந்து ப்ராட் கேஜ் அமைக்கவும் நடவடிக்கை எடுப்பதற்கு இத்த கைய தொழில்கள் வருவது நல்லது. எல்லாத் தொழில்களையும் சென்னை நகரத்திற்கு அருகாமையிலே குவிப்பது நல்லதல்ல. ஆதலால், ஆயில் ரிஃபைனரியை சென்னைக்கு மாற்ற உத்தே சிப்பது அனுகூலமாக இருக்காது.

கனரகத் தொழில்களைப் பொறுத்தவரையில், மதுரை மற்ற மாவட்டங்களைவிட ஓரளவுக்குப் பின் தங்கியிருக்கிறது. மதுரை இந்த வகையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். ஒரு குடும்பத்தில் மூன்று நான்கு பேர்கள் சொந்தமாக, தனிப்பட்ட முறையில், சில டெக்ஸ்டைல் மில்களும் ஸ்பின்னிங் மில்களும் வைத்திருக்கலாமே தவிர, முக் கியமாக சர்க்கார் துறையில் எந்த விதமான கன ரகத் தொழிலும் மதுரையில் துவக்கப்படவில்லை. மதுரை நகரத் திலோ அதைச் சுற்றியோ மதுரைமாவட்டத்தில் சில கன ரகத் தொழில்களை ஆரம்பித்தால்தான் மதுரை ஓரளவுக்கு முன் னேற வாய்ப்பும் வசதியும் இருக்கும்.

[திரு. வை. சங்கரன்] [5th March 1964

மதுரையில் ஆர்ட் சில்க் தொழிலில் ஏராளமானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அது ஒரு முக்கியமான பிழைப்பாக இருக்கிறது. 100, 150 ரூபாய் போட்டு பட்டுப் புடவை வாங்குவதற்குப் பதிலாக, சிக்கனமாக, ஏதோ 30, 35 ரூபாய் கொடுத்து ஒரு ஆர்ட் சில்க் புடவை வாங்கிக் கொள்ளலாம் என்ற வகையில் இந்தப் புடவைகளுக்கு நல்ல கிராக்கி இருப்பதால், இந்தத் தொழிலை நம்பி பல லட்சக் கணக்கான மக்கள் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நெருக்கடி நேரத்தில் "துப்பாக்கி வாங்கவேண்டும், ஆர்ட் சில்க் வேண்டாம்" என்று அவர்களிடம் ஒரு அதிகாரி சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். துப்பாக்கி வேண்டியது தான். ஆனால், மக்கள் தொழில் செய்து பிழைக்க வகை இருந்தால்தான் துப்பாக்கி பிடிக்க முடியும். **An army marches on its stomach** என்று சொல்வார்கள். நாட்டு மக்களுக்கு முதலில் பிழைக்க வழி இருக்கவேண்டும். மதுரையில் ஒரு பெரும் பகுதியினருக்கு இந்த ஆர்ட் சில்க் தொழில் அடிப்படைப் பிழைப்பை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. பிற ராஜ்யங்களுக்கும் ஆர்ட் சில்க் துணி அனுப்பப்படக்கூடிய அளவில் தொழில் நடந்து வருகிறது. லைசன்ஸ் கிடைப்பதில் சிரமம் இருப்பதால், அவர்களுக்கு ஒரு வருடத்தில் 15 நாட்களுக்குக்கூட வேலைக்கு ஆர்ட் சில்க் கிடைக்காத நிலை இருந்து வருகிறது. இதிலே பூரண கவனம் செலுத்தி, நம்முடைய ராஜ்யத்தில் அந்தத் தொழில் நல்ல முறையில் வளர்ந்திருக்கிறது, ஆர்ட் சில்க் தொழிலுக்கு தேவைக்கு போதுமான அளவு ஆர்ட் சில்க்கிற்கு லைசன்ஸ் கொடுக்க மத்திய சர்க்காரோடு கலந்தாலோசித்து ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பெரிய நகரங்களைச் சுற்றி ஸாட்டிலைட் டவுன்கள் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். நகரத்திலிருந்து கோ டவுன்களை அங்கே மாற்றி ஏற்படுத்தினால் நகரத்திலுள்ள நெருக்கடியைப் போக்க உதவியாக இருக்கும்.

மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஒரு பிரச்சினை என்னவென்றால், நகரத்தில் குடியிருப்பு வீடுகள் இருக்கும் இடங்களில் இரண்டு மூன்று வீடுகளுக்கு ஒரு வீட்டை லாட்ஜிங் ஆக மாற்றிவிடுகிறார்கள். அதை ஓரளவு தடுத்து, ரெஸ்ட்ரிக்ட் செய்தால் நன்றாக இருக்கும்.

முக்கியமான நகரங்களுக்கு மாஸ்டர் ப்ளான் மிகவும் அவசியம். மதுரைக்கு ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரயில்வே சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமானால், நாகர் கோயில்-திருநெல்வேலி இருப்புப்பாதை அமைப்பதற்குச் சர்வே செய்வதற்கு ஏற்பாடு ஆகியிருக்கிறது. அதை விரைவுபடுத்த வேண்டும். திருச்சியிலிருந்து தூத்துக்குடி வரையில் இருப்புப் பாதையை ப்ராட் கேஜாக ஏற்படுத்த வேண்டும்.



5th March 1964] [திரு. வை. சங்கரன்]

நிலக்கரிக்கு ஃபிக்ஸெட் ப்ரைஸ் வைக்காததால் தென் பிராந்திய ரயில்வேயினருக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று தவறாகக் கணக்கு காட்டப்படுகிறது. மண்ணெண்ணெய், பெட்ரோல் முதலியவற்றிற்கு எப்படி நாடு பூராவும் ஒரே விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த முறையில் நிலக்கரியைப் பொறுத்தும் விலையை மத்திய அரசாங்கம் நிர்ணயிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது ராஜ்யத்திற்கு மகாராஷ்டிராவிலிருந்து துவரையும், துவரம் பருப்பும் வருவது இப்பொழுது தடைபட்டிருப்பதாகத் தெரிகிறது. விலைவாசிப் பெருக்க நெருக்கடியைத் தவிர்க்கவேண்டுமென்றால், இதுபோன்ற 'இன்டர்-ஸ்டேட் பான் எடுக்கப்பட வேண்டும். நமது ராஜ்யத்திற்குத் தேவையான துவரம்பருப்பு சப்ளை 90 சத விகிதம் மகாராஷ்டிரத்தில் இருந்துதான் வருகிறது. அதைத் தடை செய்தால் நெருக்கடி ஏற்படும். துவரம் பருப்பை பொறுத்தவரையில், இன்டர்-ஸ்டேட் பான் இருந்தால், நாமும் கேரளத்திற்கு அரிசி சப்ளை செய்வதை பான் செய்ய வேண்டியிருக்கும். இந்தத் தடையை நீக்க வேண்டும். இதுபோன்ற ராஜ்யத்தடைகளை மற்ற ராஜ்யங்கள் விதிக்கக்கூடாது என்று நம் சர்க்கார் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. சி. கோதண்டராம பாகவதர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட்டை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதிலே புதிதாக எந்த விதமான வரியும் கிடையாது. எல்லா மாணவர்களும் எஸ்.எஸ்.எல்.ஸி.வரை இலவசமாகப் படிக்க நல்லதொரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. முதியோர்களுக்குப் பென்ஷன் வழங்க 1 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மதிய உணவுத் திட்டத்திற்காக 1 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்கள் தங்குவதற்காக 45 லட்சம் ரூபாய் செலவில் ஒரு ஹாஸ்டல் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. இன்னும் ஐந்து கல்லூரிகள் திறக்கவும் திட்டமிட்டிருக்கிறார்கள். மேலும் கல்லூரிகள் அதிகமாகக் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. விலைவாசி ஏற்றம் அரசாங்க ஊழியர்களையும், நெசவாளர்களையும், தொழிலாளர்களையும், பொற்கொல்லர்களையும் பாதிக்கிறது. தமிழ்நாட்டிலே தங்கக் கட்டுப்பாடு காரணமாக பல பொற்கொல்லர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 14 காரட் நகை செய்வதற்கான இயந்திரங்கள் வாங்குவதற்கு ஐயாயிரம் ரூபாய் வரையில் கடன் உதவி அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களுடைய நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இராமனாதபுரம் ஜில்லாவில்கூட ஐந்து லட்சம் ரூபாய் பெறுமான கைத்தறித் துணி விற்காமல் தேங்கியிருப்பதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. நெசவாளர்களுக்கும்

[திரு. சி. கோதண்டராம பாகவதர்] [5th March 1964

அரசாங்க ஊழியர்களைப்போல எல்லாவிதமான வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். சர்க்காருக்குச் சொந்தமான புறம் போக்கு நிலங்களில் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள அனுமதி அளிக்கப்படவேண்டும். இன்னும் எல்லாவிதமான சலுகைகளும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று நான் தெரிவித்துக் டுக்கொள்கிறேன்.

விலைவாசி ஏறிக்கொண்டு போகிறது. சென்னையிலிருந்து ஏராளமான பருப்பு மூட்டைகள், துவரை மூட்டைகள், சர்க்கரை மூட்டைகள், சிமெண்ட் மூட்டைகள் லாரிகளில் வெளியே போய்க் கொண்டுதான் இருக்கின்றன. எல்லாம் செக்போஸ்ட் வழியாகப் போவது இல்லை. பூந்தமல்லி, இராணிப்பேட்டையில் செக்போஸ்ட் இருக்கிறது. அந்த வழியாகப் போகாமல், போளூர், குன்றத்தூர், ஸ்ரீபெரும்பூதூர், காஞ்சிபுரம் முதலிய ஊர்களின் வழியாக வடாற்காடு, தென்னாற்காடு ஜில்லாக்களுக்கெல்லாம் சரக்குகள் போகின்றன ஆகவே, வியாபாரிகளும் அதிகாரிகளும் ஒத்துழைத் தால்தான் விலைவாசியைக் குறைக்க முடியும். உணவு உற்பத்தி பெருகிவிட்டால் மாத்திரம் விலைவாசி குறையாது. ஆகவே, வியாபாரிகளையும் ஒத்துழைக்கச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆரணியில் ஒரு ஃபயர் சர்விஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டும். பிப்ரவரி மாதம் 17-ம் தேதி திடீர் என்று ஒரு தீ விபத்து ஏற்பட்டு ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் எரிந்து சாம்பலாயின. ஒரு ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன் இல்லாத காரணத்தால், லாரிகள் வர ஒன்றரை மணி நேரம் ஆகிறது. ஆகவே, உடனடியாக ஆரணியில் ஒரு ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி தாலுக்காவில் பூசமலைக்குப்பத்திற்குச் சமீபத்தில் சர்க்காருக்குச் சொந்தமான கட்டடம் இருப்பதோடு 150 ஏக்கர் நிலமும் இருக்கிறது. அங்கு எல்லாவிதமான மூலிகைகளும் கிடைப்பதால், அங்கே ஒரு சித்த வைத்தியக் கல்லூரியை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேவிகாபுரம் அருகில் செய்யாற்றுக்கு ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரணி தாலூக்கா கஸ்தம்பாடி பஞ்சாயத்துக்கு ஒரு கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. கு. சின்னராஜி: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் குடிதண்ணீர் திட்டத்திற்கு இரண்டு கோடியே. எண்பது லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் சென்னை நகராட்சிக்கும், மற்ற மற்ற நகராட்சி மன்றங் களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எங்களது திருப்பத் தூர் நகர சபைக்கு ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. திருப்பத்தூர்



5th March 1964] [திரு. சி. கு. சின்னராஜி]

நகர சபை பழங்கால நகரசபையாகும். நூறு ஆண்டு காலமாக இயங்கி வருகிறது. அந்த நகரசபைக்கு குடிதண்ணீர் திட்டம் தான் முக்கியமாக தேவையாக இருக்கிறது. ஆகவே அந்த நகர சபை குடிதண்ணீர் திட்டத்திற்கு சர்க்கார் கடனாகவும், மானிய மாகவும் பண உதவி செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, எனது திருப்பத்தூர் தாலுக்காவில் கரும்பு உற்பத்தி அதிகம். சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுத்தது போக வடாற்காடு ஜில்லாவில் ஏராளமான கரும்பு வெல்லமாகக் காய்ச்சப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் வெல்லக் கட்டுப் பாட்டைக் கொணர்ந்து ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குப் போகக் கூடாது என்று தடை விதித்திருப்பதனால் சென்ற டிசம்பர் மாதம் 100 கேஜ் க்விண்டால் 110 ரூபாயாக இருந்தது. இன்று 55 ரூபாய்தான் விற்கிறது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மாகாணத்தை விட்டு வெளியே போகக் கூடாது என்ற உத்தரவை தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் செங்கம் கிராமத்தில் செய்யாறு மேம்பாலம் கட்ட அரசாங்கத்தார் எஸ்டிமேட் எடுத்து, ஏலம் விட இருந்தபோது தேசீய நெருக்கடி ஏற்பட்டது. அதை நிறுத்தி விட்டார்கள். அதை இவ்வாண்டாவது உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செங்கத்தில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கு ஓரே ஒரு டாக்டர்தான் இருக்கிறார். தினசரி இருநூறு, முந்நூறு பேர்கள் வருகிறார்கள். ஆகவே அங்கு ஒரு பெண் டாக்டரையும் அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருப்பத்தூர் தாலூக்காவில் சிம்மணபுதூர் கிராமத்தில் தண்ணீர் தேக்கி வைக்க ஒரு அணைக்கட்டு திட்டம் தயாரிக்கப்பட்டது. அதையும் உடனடியாகக் கட்டித் தரும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து செங்கம் தாலுக்காவின் தலைநகரமாக இருக்கிறது. தீ விபத்து அங்கு ஏற்பட்டால் திருவண்ணாமலையில் இருந்துதான் பயர் என்ஜின் வரவேண்டியிருக்கிறது. அதற்குள் எல்லாம் எரிந்து தணிந்து போகிறது. ஆகவே செங்கத்தில் ஒரு பயர் என்ஜின் ஸ்டேஷன் ஏற்படுத்தித் தரும்பயாகக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு சிமிண்டு வேண்டுமென்றால் கிடைப்பது இல்லை. கூட்டுறவு மூலமாக விவசாயிகளுக்கு சிமிண்டு கிடைக்கும்படி செய்ய வேண்டும். புறம்போக்கு நிலங்களும் கூட இன்னும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. விவசாயிகளிடம் சர்சார்ஜ்தான் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து விவ சாயிகளுக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

[திரு. சி. கு. சின்னராஜி] [5th March 1964

மூன்றுவது திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எங்கள் பகுதியில் எந்த வேலையும் நடக்காமல் இருக்கிறது. அவற்றை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வெ. எல்லம நாயுடு:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக உணவுப் பண்டங்களின் விலை, அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டு வருகிறது என்பதை எல்லா அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். அதற்கு ஏதாவது செய்தாகவேண்டும்.

நம்முடைய மாகாணத்தில் மிகப் பெரும்பான்மையான மக்கள் விவசாயிகள். அவர்கள் பாடுபட்டு உற்பத்தி செய்கிற பொருள்களைத்தான் நாம் உபயோகப்படுத்தி வருகிறோம். அத்தகைய விவசாயிகளுக்கு நாம் மேலும் மேலும் ஊக்கத்தை அளித்தால்தான் அவர்கள் நல்லமுறையில் விவசாயத்தில் ஈடுபட முடியும். அதற்கு முதலாவதாக நம்முடைய மாகாணத்தில் உள்ள நிலங்கள் எல்லாவற்றையும் சர்வே செய்து—தரிசு நிலங்களாக உள்ளவற்றை நிலமற்ற விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டும். மேலும் விவசாயத்திற்கு அதிக அளவு மின்சாரம் கொடுக்கப்பட வேண்டும். இயற்கைக் கோளாறினால் பல இடங்களில் சாகுபடி பாதிக்கப்படுகிறது. மின்சாரப் பற்றாக்குறை இருப்பதனால் போதுமான அளவு மின்சாரமும் கொடுக்க முடிவதில்லை. கிணற்றின் மூலமாக பாசனம் செய்யலாம் என்றால் மின்சாரம்தான் தேவையாக இருக்கிறது. ஆகவே மின்சாரப் பற்றாக்குறையை நீக்க மாற்று முறையைக் கண்டுபிடித்தாகவேண்டும். மேலும் தொழில்களுக்கு—ஆயில் என்ஜின், ஜெனரேட்டர்கள் வைத்துக் கொண்டு கொஞ்சம் மின்சாரத்தைக் குறைக்கலாம். விவசாயிகளுக்கு முதல் சலுகை அளித்தால்தான் விவசாயம் நல்லமுறையில் நடைபெறும், தரிசு நிலமும், புஞ்சை நிலமும் பயிரிட வழியேற்படும்.

அடுத்தபடியாக உரம், கடன் போன்றவைகள் எல்லாம் காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். மேலும் விவசாயிகளுக்கு சிமிண்டு கிடைக்கும்படி செய்ய வேண்டும். சிமிண்டு கால்வாய் கட்டிவிட்டு நீரைப்பாய்ச்சினால் ஒரு பத்து ஏக்கருக்கு பாயக்கூடிய தண்ணீர் பன்னிரண்டு ஏக்கருக்குப் பாயக்கூடும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்குப் போதுமான சிமிண்டு கிடைக்கவும் வழி செய்ய வேண்டும்.

மேலும் மாடுகள், இயந்திரக் கருவிகள் ஆகியவை எல்லாம் எளிதில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். அதுவும் சமீபத்தில் டிராக்டர்களுக்கு வரி விதிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படியின்றி விவசாயக் கருவிகள் எதற்கும் வரி போடாது, குறைந்த விலையில் அவை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும்.



5th March 1964] [திரு. வெ. எல்லம நாயுடு]

பென்ஷன் திட்டத்தை இந்த ஆண்டு விஸ்தரித்திருக்கிறோம். இது நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. எதிர்க்கட்சியினர்களால் கூட இதை எதிர்க்க முடியாது. குறை சொல்பவர்களும் வேண்டுமென்றே சொல்லலாம். இன்னும் அதிகப் பணம் ஒதுக்கி வயது முதிர்ந்தவர்களுக்கு எல்லாம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக முதல் மந்திரி அவர்களைப் பாராட்டுகிறேன்.

கடந்த ஆண்டு முதியோர் பென்ஷன் 62,000 பேருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆண்டு ஒரு லட்சம் பேருக்கு அந்தப் பென்ஷன் தொகையைக் கொடுக்கும்படியான நிலைமையை உண்டாக்கவேண்டும்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வரை இலவசக் கல்வி என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது பாராட்டுக்குரியதாகும். மாற்றுக் கட்சியினர் எதையும் எதிர்ப்பதற்காகக் குறை கூறுவார்களே தவிர, அவர்களையும் தனிப்படக் கேட்டால் நல்ல திட்டம் என்பதை ஒப்புக் கொள்வார்கள். இந்த நாட்டிலே கல்வியை நல்ல முறையிலே நாம் வளர்த்து வருகிறோம். கோவையிலே பல கல்லூரிகளும், பல தொழில் ஸ்தாபனங்களும் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் கோவையிலே ஒரு வைத்தியக் கல்லூரியையும், பல்கலைக் கழகத்தையும் ஏற்படுத்திக் கொடுத்து கல்வியின் தரத்தை மேலும் உயர்த்த ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கெல்லாம் காரணமாக இருப்பது அரசாங்கத்தின் வருவாய்த் துறை. இந்த ஆண்டு பட்ஜட்டில் துண்டு விழுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட நூலின் மீதும் பஞ்சின் மீதும் ஒரு சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள். நமக்கு வரவேண்டிய வருமானத்தைச் சரிவர வசூலித்தாலே இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தித்து விடலாம். பத்திரப் பதிவு முத்திரைத் தாள்களில் மிக மிக ஏமாற்றுவதாகத் தெரிகிறது. இதை அவசியம் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சேர வேண்டிய வருவாய் இது. பத்திரப்பதிவிலிருந்து வரவேண்டிய வருவாயைப் போலவே சினிமா கொட்டகைகள் மூலம் வரவேண்டிய வருவாயும் சரிவர வந்து சேருவதில்லை. பாதிக்கு மேல் டிக்கட் விற்பனையை மறைத்து விடுகிறார்கள். டூரிங் சினிமாக்கொட்டகைகளிலும், மற்ற சினிமாக்கொட்டகைகளிலும் இந்த நிலைமை இருக்கிறது. இதைக் கண்காணிப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவசரக்கால நிலையை ஒட்டி பிரைமரி ஹெல்த் சென்டர்கள் துவக்குவதை நிறுத்தி வைத்தோம். கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில் பல இடங்களிலே முதல் உதவி சிகிச்சை நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டு அவசர நிலைமையின் காரணமாகக் கைவிடப்பட்டன. அவைகளையெல்லாம் உடனடியாக எடுத்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு வீடுகள் கட்டுவதற்காக பணம் ஒதுக்கியிருக்கிறோம். ஹவுசிங் போர்டார் நிலங்களை ஆர்ஜிதம் செய்து வீடுகளைக் கட்ட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். கோவையைப் பொறுத்தவரை சுண்டக்காமுத்தூர், கவுண்டன் பாளையம் பகுதியில் விவசாயத்திற்குத் தகுதியான நிலத்தை 500 ஏக்கர் வரை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். வீட்டு வசதியைப் பெருக்குவது அவசியந்தான் என்றாலும் இந்தமாதிரி விவசாய நிலங்களை அதற்கு எடுத்துக் கொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, கோவையில் தற்போது ஆர்ஜிதம் செய்துள்ள விவசாய நிலங்களை விட்டுவிட்டு, பிளச்சி, சீரபாளையம் பகுதியில் அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்தால் விலையும் குறைவாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு பல வசதிகளை அரசாங்கம் செய்து கொண்டு வருகிறது. அவர்களுக்குப் பாதகம் ஏற்படும் நிலையில் அவர்கள் கோர்ட்டுகளுக்குச் சென்று நீதி பெறும் வகையில் நிதி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியை அவர்கள் பாதிக்கப்பட்ட பின்பு கொடுப்பதை விட, பாதகம் ஏற்படாத முறையில் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு குடி தண்ணீர், ரோடு, பாலம் போன்ற வசதிகள் செய்து கொடுப்பதற்காக அதிகத் தொகை ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அதிகப் பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை பாசன வசதியிலே பின்தங்கியிருக்கிறது. அமராவதி, லோயர் பவானி, பரம்பிக்குளம் போன்ற திட்டங்களைக் கோவையில் ஏற்படுத்தியிருந்தும் மத்தியிலுள்ள பல்லடம், கோவை தாலுகா, அவனாசி, போன்ற இடங்களில் பாசன வசதி மிகவும் பிற்போக்காக இருக்கிறது. அவனாசி தாலுகா பஞ்சப் பிரதேசமாகவே காட்சியளிக்கிறது. நொய்யலாற்றுக்கு குறுக்கே கோணுக்கு மேற்கே ஒரு அணை கட்டியும், குந்தா நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் வரும் தண்ணீரையும் எடுத்து உபயோகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: கனம் சட்டமன்ற உதவி சபாநாயகர் அவர்களே, 1964–65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த பட்ஜட்டிலே முக்கியமாகக் குறிப்பிடத் தக்க ஒரு அம்சம் 11-வது வகுப்பு வரையிலே ஏழை பணக்கார் வித்தியாசம் இன்றி எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுப்பது என்று முடிவு செய்திருப்பது. இது வரவேற்கத்தக்க அம்சம். இதன்





மூலம்தான் நாம் புவனேசுவரத்தில் செய்திருக்கின்ற ஜனநாயக சோஷலிசத்தை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும் என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

அடுத்து, இங்கு சற்று நேரத்திற்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சசிவர்ணத் தேவர் அவர்கள் இந்தச் சபையிலே பேசக்கூடாத ஒரு முறையிலே பேசியதானது எங்களுக்கு வருத்தத்தை அளித்தது. அம்மாதிரிப் பேசக்கூடிய கனம் அங்கத்தினர்கள், முன் கூட்டியே கனம் சபாநாயகர் அவர்களுக்கு அறிவித்து விடுவார்களேயானால் பெண்களாகிய நாங்கள் வெளியே எழுந்து போய்விடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அவர் அந்த முறையில் இந்தச் சபையில் பேசி சபையின் அந்தஸ்தைக் குறைப்பது நல்லதல்ல என்ற கருத்தைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து இந்த பட்ஜெட்டில் 3 கோடி 34 லட்சம் துண்டு விழுகிறது என்பதையும் அதனைச் சரிக்கட்ட பருத்தியின் மீதும், பருத்தி நூலின் மீதும் ஒரு சதவிகிதமாக இருக்கின்ற விற்பனை வரியை இரண்டு சதவிகிதமாக ஆக்கப் போகிறோம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய விற்பனை வரி கூடுதலாக இருக்கிற காரணத்தால் நமது மாகாண விற்பனை வரி குறைவாக இருந்தால் நமக்குக் கிடைக்கக்கூடிய மத்திய விற்பனையின் அளவு குறைந்து போய்விடுகிறது என்ற காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

11-30 a.m.

அது ஓரளவு உண்மை என்று சொன்னாலும் கூட இதன் மூலம் தறிக்காரர்கள்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஏனெனில் ஏற்கெனவே 80-ம் நம்பர் நூல், 100-ம் நம்பர் நூல் கிடைப்பது மிக மிக அரிதாக இருக்கிறது. அதற்கு ஒரு விலை நிர்ணயம் செய்து, நிர்ணயம் செய்த விலைக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால் அது ஓரளவுதான் கொடுக்கப்படுகிறதே தவிர பூராத் தேவைக்கும் அது கொடுக்கப்படுவதில்லை. ஒரு தறிக்காரருக்கு ஒரு சங்கத்திற்கு ஏறக்குறைய 35 பேல் தேவை என்றால் மூன்று அல்லது ஆறு பேல்தான் 80, 100-ம் நம்பர் நூல் கொடுக்கப்படுகிறது. 35 எங்கேயிருக்கிறது, 3, அல்லது 6 எங்கேயிருக்கிறது? ஆகவே இதை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது கூட்டப்பட்டிருக்கும் வரி காரணமாக இன்னும் 80-ம் நம்பர் 100-ம் நம்பர் நூலின் விலை அதிகமானால் தறிக்காரர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது, 30 நாட்களுக்கு அவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது என்பது அச்சமாக இருக்கிறது. நூல் விலை ஏற்றத்திற்குத் தக்கபடி துணியின் விலையும் ஏறிவிட்டால் பாதகம் இல்லை. கைத்தறியைப் பொறுத்தவரை மில்களோடு போட்டியிட்டுதான் கைத்தறித் துணிகளை விற்பனை செய்யவேண்டியிருக்கிறது. காலத்திற்கேற்ப, நாகரீகத்திற்கேற்ப டிசைன்களை மாற்றிப் போட்டால்தான்

கைத்தறித் துணிகள் எல்லாம் விற்பனைக்குப் போகும். இல்லாவிடில் இன்று நடப்பதுபோல் பொருள்காட்சியில் வைத்து தங்கிக் கிடக்கக் கூடிய துணிகளை விற்பனை செய்தால்தான் துணிகளை விற்க முடியும். ஆக இன்று நூல் கஷ்டம் ஒரு பக்கம். பின்னர் மத்திய விற்பனை வரி அதிகமாயிருப்பதால் வரிக் கஷ்டம் வேறு. அதோடு நம் மாநில அரசாங்கமும் பருத்தி, பருத்தி நூல் மீது வரி போட்டால் எந்த விதத்தில் நெசவாளிகள் பிழைப்பது? எப்படி அவர்கள் 30 நாட்களுக்கு வேலை கிடைத்து வாழ்க்கையைக் கழிப்பது என்ற பெரிய பிரச்னை தோன்றியிருக்கிறது. நிற்க, இப்போது ஸ்டேட் சொஸைட்டியில் இருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படுகிற நூல் அதாவது 80, 100-ம் நம்பர் நூல் எப்படி இருக்கிறது என்று கேட்டால் அது பாவுக்கு வருவதில்லை. பாவுக்கும் நூல் வேண்டியிருக்கிறது. வெட்டுக்கும் நூல் வேண்டியிருக்கிறது. இப்போது கிடைக்கும் நூல் பாவுக்கு வருவதில்லை. வெட்டுக்குத்தான் பயன்படுகிறது. வார்ப்புக்கு போட வேண்டியதை வெளியிலிருந்துதான் வாங்க வேண்டியிருக்கிறது. ஐந்து கிலோ கட்டு மில்வாசல் விலை 75 ரூபாய் 35 காசு என்றால் வெளிமார்க்கெட்டுகளில் 102 ரூபாய் விலை ஆகிறது. எனவே அதிகப்படியான ரூபாய் கொடுத்து வெளியிலிருந்துதான் வாங்க வேண்டியிருக்கிறது. ஆக, கூட்டுறவுச் சங்கங்களுக்கே நூல் சரிவர கிடைக்கவில்லை என்றால் தனிப்பட்டவர்களுக்கு இது எந்த அளவிற்குக் கிடைக்கும், கிடைக்கக் கூடும், கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த வரி தறிக்காரர்களுக்கு நேரடியாகப் போடப்படுவதில்லை என்று கூறினாலும் அது தறிக்காரர்களைத்தான் பாதிக்கிறது. இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சொஸைட்டிகளுக்கு, அல்லது உற்பத்தி செய்கிற சங்கங்களுக்கு கோன் யார்ன் அதிகமாகக் கிடைப்பதில்லை. அப்படி அது கிடைத்தாலும் கூட எப்படியாவது சமாளித்து விடுவார்கள். அதையும் செய்யாமல் மில்காரர்கள் அது எங்கே தேவைப்படுகிறதோ அங்கு அதை அதிகமான விலைக்கு விற்று விடுகிறார்கள். ஆக, நடைமுறையில் எந்த அளவிற்கு நாம் தறிக்காரர்களுக்காக 80-ம் நம்பர், 100-ம் நம்பர் அளவு போட்டுக் கொடுக்கிறோமோ அதை விட நாலைந்து மடங்கு அளவில் கொடுத்தால்தான் அவர்கள் பிழைப்பதற்கு வழிவகை செய்ய முடியும். ஆகவே இப்போது கொடுப்பதை விட அதிகமான அளவிற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர் சங்கங்களையும், மாஸ்டர் வீவர்ஸ், உற்பத்தி செய்து கொண்டிருக்கக் கூடிய அவர்கள் சங்கங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அடுத்து கோவாப்ரேட்டிவ் சொஸைட்டிகளில் தயார் செய்யப்படுகின்ற உற்பத்தி துணிகள் ஸ்டேட் சொஸைட்டிகள் மூலம்தான் விற்கப்படுகிறது. முன்பெல்லாம் ப்ரைமரி சொஸைட்டிகள் நேரடியாக எம்போரியத்திற்கு வந்து அவர்களிடம் உள்ள டிஸைன்களைக் காட்டி எந்தெந்த சொஸைட்டித் துணிகள் அவர்களுக்கு வேண்டும் என்று தெரிந்து கொண்டு டிஸைனுக்கு ஏற்றபடி சப்ளை செய்துகொண்டு வந்தார்கள். இப்போது அந்த முறை மாற்றப்பட்டிருக்கிறது. இப்போது மார்க்கட்டிங் ஆபீசர் என்று ஒரு





ஆபீசர் இருக்கிறார்: இப்போது எந்த சொஸைட்டி துணி வேண்டுமென்று எந்த எம்போரியமும் சொல்லக் கூடாது என்று செய்திருக்கிறார்கள். மதுரையில் தயார் செய்த துணி என்று மட்டும்தான் போடவேண்டும். நான் எந்தத் துணியைக் கொடுக்கிறேனோ அதைத்தான் உங்கள் விற்பனை நிலையத்தில் வைக்கவேண்டுமென்று முறை மாறியிருக்கிறது. ஆகவே எம்போரியங்களில் அவரவர்களுக்குத் தேவையான துணி இருப்பதில்லை, தேவையற்ற துணிகள் வந்து விடுகின்றன. இதன் காரணமாக விற்பனையாகாது தேங்கிக் கிடந்து வேறு ஊருக்கு அனுப்பப்படுகிறது. இந்தமாதிரியான நிலை இருக்கக் கூடாது. எந்தெந்த விற்பனை நிலையம் எந்த எந்த ரகத் துணிகள் வேண்டும், எந்தெந்த ப்ரைமரி சொஸைட்டியிலிருந்து வேண்டுமென்று கோருகிற அந்தத் துணிகளை மட்டும்தான் அங்கு கொடுப்பது நல்லமுறையாக இருக்கும். ஆகவே அப்படித் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பெல்லாம் அதிகமான அளவில் கொள்முதல் செய்து கொண்டிருந்தார்கள், ஸ்டேட் சொஸைட்டியிலிருந்து. இப்போது ஸ்டேட் சொஸைட்டிகள் கொள்முதல் செய்வதை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள், 25 சதவிகிதம் வரை. ஆகவே ப்ரைமரி சொஸைட்டிகளில் அதிகப்படியான நோக்கம் ஏற்பட்டு விடுகிறது. அதைச் சமாளிப்பது மிக மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே முன்போலவே அதிகமான அளவில் ப்ரைமரி சொஸைட்டிகளிடம் இருந்து ஸ்டேட் சொஸைட்டி துணிகளைக் கொள்முதல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மதுரையில் ஒரு மன நோய் ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சரவைக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதியோர் பென்ஷன் திட்டம் பற்றி ஒரு வார்த்தை, பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். பலருக்கு முதியோர் பென்ஷன் திட்டப்படி பென்ஷன் சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனால் நெருக்கடி நிலை ஏற்பட்ட பிறகு அது கொடுக்கப்பட்டு வந்தவர்களுக்குக் கூட நிறுத்தப்பட்டது. பின் போட்டோ வேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்படி போட்டோ அனுப்பிய பின்னரும் பலர் இன்னும் அதை வாங்கமுடியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்டு வந்த இந்தப் பென்ஷன் இரண்டு மாதங்களுக்கு நின்று போனது. அதை விட்டு விட்டு அடுத்த மாதப் பணத்தை மட்டும்தான் வாங்கிக் கொள்ளவேண்டும், அதை வெளியே சொல்லக் கூடாது என்று சொன்னதாகப் பலர் என்னிடம் கூறினார்கள். முதியோர் எங்கள் இல்லங்களில் படை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இத்திட்டம் மிக உயர்ந்த திட்டம், குழந்தை குட்டி இல்லாதவர்களுக்கு, உண்மையிலேயே கஷ்டப்படுபவர்களுக்கு இதைக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு மூலம் அரசாங்கம் தெரிவித்து அதை அமுல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. செ. கோ. விஸ்வநாதன்:** கனம் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை எதைக

காட்டுகிறது என்றால் ஆளுகிற பொறுப்பில் உள்ள அமைச்சரவையும் அமைச்சரவையால் இயங்கி வைக்கப்படுகிற அரசாங்க இயந்திரமும் ஒன்றை ஒன்று தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையைத்தான் இந்த அறிக்கை காட்டுகிறதே தவிர ஏழை மக்கள் வாழ்க்கை நிலை உயருவதற்கு, நடுத்தர மக்களின் வாழ்க்கை நிலை உயருவதற்கு, தொழிலாளர்களின் நலன்கள் பெருகுவதற்கு அடிகோலும் விதத்தில் இந்த அறிக்கை அமையவில்லை. இம்மாதிரி நிதிநிலை அறிக்கை இந்தச் சபையில் ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்பட்டு பல திட்டங்களுக்காகப் பெரிய தொகைகள் ஒதுக்கப்பட்டு செலவிட்டபோதிலும் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற நிலையில் இந்த நிதி நிலை அறிக்கை அமையவில்லை. ஏழை மக்களின், நடுத்தர மக்களின் அடிப்படைத் தேவைகள் இதுவரை தீர்ந்தபாடில்லை என்பதை என் குற்றச்சாட்டாக இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக கிராமப் பகுதியில் இருக்கின்ற மக்கள் சுகாதாரமற்ற முறையில் வாழ்கின்ற காரணத்தினாலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் அவர்களுக்குக் கிடைப்பதற்குக் கஷ்டமாக இருப்பதாலும், இந்தக் கிராமங்களிலுள்ள மக்கள் காலரா வியாதியால் பாதிக்கப்பட்டு, செங்கற்பட்டு தாலூகா, மதுராந்தகம் தாலூகா, காஞ்சிபுரம் தாலூகா போன்ற இடங்களில் எல்லாம் சமீப காலமாக நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து போயிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன், ஆகவே இப்பேர்ப்பட்ட கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவருவதின் மூலமாக இம்மாதிரிப்பட்ட நோய்களைத் தடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் பகுதியிலுள்ள மக்களுக்கு ரூரல் ஹௌஸிங் ஸ்கீம்—என்ற முறையில் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியைப் பெற்று செயல்படுவதாக சர்க்கார் மூலமாகத் தகவல் இருக்கிறது. இந்தத் திட்டம் எந்தெந்த ஜில்லாக்களில் செயல்படுகிறது, இதன் பலன் என்ன என்பதைப்பற்றித் தெரியவில்லை. ஆகவே இதைப்பற்றியும் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மாதிரியான திட்டம் வேகமாகச் செயல் படுவதின் மூலமாக கிராமப் புறங்களில் சுகாதாரமற்ற முறையில் இருக்கின்ற வீடுகளை மாற்றி சுகாதாரமான முறையில் வீடுகளைக் கட்டுவதற்கு நல்லதொரு திட்டமாக அமையும், ஆகவே இதை மாநில சர்க்கார் வேண்டிய அளவு மத்திய சர்க்காரிடமிருந்து உதவியைப் பெற்று நல்ல முறையில் இதைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சார இலாகாவைப் பொறுத்த அளவில், முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இன்னும் சில கிராமங்களில் பல இடைஞ்சல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்போது மின்சார இலாகாவுக்குத் தேவையான உபகரணங்கள், மின்சாரக் கம்பிகள் இவைகள் எல்லாம் வெளி மாகாணத்திலிருந்து நம் மாகாணத்திற்கு வரவேண்டியிருப்பதால், மின்சார வேலைகள் தடைபடுவதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகவே நம்முடைய தேவைக்குத் தகுந்த மின்சார உபகரணங்களையும், மின்சாரக் கம்பிகளையும் தயாரித்துக்கொள்வதற்கு வேண்டிய தொழிற்





சாலையை அமைத்து, நமக்கு வேண்டிய பொருள்களைத் தயாரித்து மின்சார வேலைகளை எல்லாம் செய்து முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகரசபைக்குக் குறைவான அதிகாரங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. பழைய சட்டங்களைத்தான் இப்போதும் வைத்துக்கொண்டிருக்கிறோம். இப்போதுள்ள அதிகாரங்கள் மிகவும் குறைவாக இருக்கிறது. ஏதாவது முடிவு எடுத்தாலும் கூட, அதைச் செயல்படுத்துவதற்கு சக்தியற்ற நிலையில் நகர சபைகள் இருந்து கொண்டிருக்கின்றன. சென்னை மாநகர சபையைப் பொறுத்தவரையில் பெருந்தொகைகளையும் உதவிகளையும் மான்யமாகவும் கடனாகவும் சர்க்கார் கொடுக்கிறது. ஆனால் அதே அளவுக்கு மற்ற நகரசபைகளுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே நகரசபைகளுக்கு வேண்டிய நிதி வசதிகளைத் தாராளமாகத் தருவதின் மூலமாக, அவைகள் நல்ல முறையில் செயல்படுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நகரசபை சிப்பந்திகளைப் பொறுத்தவரையில், அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் பென்ஷன் திட்டம், இன்னும் இது போன்ற சலுகைகள் எல்லாம் நகரசபையில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கும் கிடைக்குமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நகரசுத்தித் தொழிலாளர்கள் குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டு அதாவது 35 ரூபாய் என்ற அளவுக்குச் சம்பளத்தை வாங்கிக்கொண்டு, வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற தொழில் ஒரு புனிதமான தொழில் என்று நான் கருதுகிறேன். ஆகவே அவர்களுக்கு வாழ்க்கைக்குப் போதுமான அளவுக்காவது சம்பளத்தை உயர்த்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* * * *

செங்கற்பட்டில் ஒரு கல்லூரி அமைப்பதற்காக வகை செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்தமாதிரி அமைக்கப்படவிருக்கும் கல்லூரி பெண்களுக்கான கல்லூரியாக அமையும் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் முன்பு ஒரு தடவை சட்டசபையில் 'செங்கற்பட்டில் தனியார் துறையில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படவிருக்கிறதா' என்று கேட்டதற்கு 'இல்லை' என்று சொன்னார்கள். ஆனால் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் அவ்விதம் ஒரு தனியார் துறையில் ஒரு மருத்துவக் கல்லூரி திறப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்விதமான ஒரு மருத்துவக் கல்லூரி மிகவும் தேவை. அதைச் சீக்கிரமாக நடைமுறையில் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* Expunged as ordered by the Chair.

[திரு. செ. கோ. விஸ்வநாதன்] [5th March 1964

மேலும், அணுசக்தி மின்சார நிலையம் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மகாபலிபுரத்தில் வரப்போவதால் அதன் பக்கத்திலுள்ள கிராமப்புற மக்கள் எல்லாம் காலி செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி அந்தக் கிராம மக்களும் காலி செய்ய முன் வந்திருக்கிறார்கள். இவ்விதம் காலி செய்ய முன் வந்திருக்கிற கிராமமக்களுக்கு விவசாயம் செய்து கொள்வதற்கும், தங்கிக் கொள்வதற்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்:** கனம் சட்டமன்ற உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள், நன்றாக ஆராய்ந்து கவனித்து, சிறப்பாக இந்த ஆண்டில் எந்தவிதமான வரியையும் போடாமல் பட்ஜெட்டைத் தயாரித்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நன்றாகக் கணித்துக் கூடத் தயாரித்து இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆயிரத்தைநூறு ரூபாய் வருமானத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்குத்தான் 11-வது வகுப்பு வரையிலும் இலவசக் கல்வி என்ற நிலைமை இருந்தது. இப்போது எல்லோருக்கும் இலவசக் கல்வி என்பதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முன்னால் 1,500 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்கள் என்பதை நிரூபிப்பதற்கு சர்டிபிகேட் வாங்குவதற்காக ஒவ்வொரு தாலுகா ஆபீஸிலும் சென்று தவம் கிடக்கக்கூடிய நிலைமை இருந்தது. இப்போது யாரும் அப்படிப் போகவேண்டிய நிலைமையில்லாத வகையில் அந்த தவத்திற்குப் பலன் அளித்திருக்கிறார்கள். ஏழைகளுக்கு முக்கியமாகச் செய்ய வேண்டிய சலுகைகளில் இது முக்கியமானது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இதன் காரணமாக அதிகப்படியான மாணவர்கள் உயர்தரப் பள்ளியில் வந்து படிப்பதற்கு வாய்ப்பு இருப்பதால் உயர்தரப் பள்ளிகள் அதிகமாக வேண்டும். இப்போதுள்ள நிலைமையில் எட்டு மைல், பத்து மைல் தூரத்திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளி என்ற முறையில் கிராமங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. அதோடு போதிய அளவு ஆசிரியர்கள் இல்லாத குறையும் இருந்து கொண்டிருக்கிறது. கிராமங்களிலிருந்து தூரத்தில் இருப்பதால் சில மாணவர்களுக்குப் படிப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே கிராமங்களில் பக்கத்திலேயே, மூன்று நான்கு மைல்களுக்குள் ஒரு உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்ற ஆன்றோர் வாக்குப்படி அறிவுக் கண்களை மக்களுக்கு வழங்கியுள்ளார்கள்.

இலவசக் கல்வி என்றால் எல்லோருக்குமே படிக்கவேண்டிய ஆர்வம் ஏற்படுகிறது. ஆனால் சில கிராமப் பகுதிகளை எடுத்துக் கொண்டால் அங்கே ஆசிரியர்கள் தேவையாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கு நல்ல வீடுகள் கிடைப்பதில்லை. வாடகை கொடுத்தாலும் நல்ல வீடுகள் கிடைப்பதில்லை. அதனால் அவர்களுக்குக் கிராமங்களில் தங்கியிருப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய



5th March 1964]
[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

வழிவகை செய்ய வேண்டுமென்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது கல்வியை இலவசமாகச் செய்துவிட்டோம். புத்தகங்களின் விலை மிக மிக அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. அந்த முறையில் பார்க்கும்போது இலவசக் கல்விக்குப் பதில் கல்விக்கே ரூபாய் கொடுத்து விட்டால் பரவாயில்லை, புத்தகங்கள் இலவசமாகக் கிடைத்தாலே போதும் என்று கூடத் தோன்றுகிறது. புத்தகங்களின் விலைகளை மிக மிகக் குறைத்து, குறைந்த விலையில் கிடைக்க வழி செய்யவேண்டுமென்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரணமாக ஹைஸ்கூல்களாக இருந்தாலும் அல்லது காலேஜ்களாக இருந்தாலும்கூட மாணவர்களைச் சேர்க்கும் காலங்களில் பெற்றோர்கள் மிக மிகக் கஷ்டப்படுகிறார்கள். ஏன்? ஆசிரியர்களுக்கு 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்று ஆன்றோர் வாக்கு இருந்தது அன்றைய நாளில். மாணவர்களைச் சேர்க்கும் அந்த இரண்டொரு நாளில் ஆசிரியன் இறைவனாக இல்லாமலேயே ஆகிவிடுகிறான். மாணவர்களைச் சேர்க்க பெற்றோர்கள் தவம் கிடக்கிறார்கள். அந்த நிலைமையையும் மாற்றிக் கொடுக்க வேண்டுமென்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது கமிட்டிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆரம்ப ஆசிரியர்கள் படிப்புக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் நடந்ததை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனது தொகுதியில் ஒரு மாணவன். எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்தவன். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் படிப்புக்குச் சேர விண்ணப்பித்திருந்தான். அவனுக்குக் கடைசி வரையில் எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. கடைசியாக, கால் கொஞ்சம் ஊனமாக இருப்பதால் பாடசாலையில் எடுத்துக்கொள்ள எங்களுக்கு வழியில்லை என்று தெரிவித்துவிட்டார்கள். அதற்கு மேல் கல்வி இலாகா டைரக்டரிடமிருந்து எங்களுக்கு உத்திரவு வந்தால் மட்டும் சேர்த்துக்கொள்வோம் என்று சொன்னார்கள். திரும்ப அந்த மாணவன் இங்கு வந்தான். நான் அப்போது மதராஸில் இருந்தேன். அவனை அழைத்துக்கொண்டு டைரக்டரிடம் போனேன். அவர்கள் பார்த்ததும் 'இந்தப் பையனைச் சேர்த்துக்கொள்ளலாமே, அதில் எந்த விதத் தப்பும் கிடையாது' என்று சொன்னார். அந்தப் பையன் 3-4 மைல் தினமும் நடந்து பள்ளிக்குப் போய்விட்டு வந்தவன். எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் கமிட்டி முடிந்துவிட்டது, இனிமேல் இப்போது முடியாது என்று சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு அவனை, யூனியனில் ஏதாவது பள்ளியில் சேர்ந்து ஆசிரியராகப் பணியாற்றி வா, பிறகு பார்க்கலாம்' என்று சொன்னேன். இந்த ஆண்டு இரண்டு மாதங்களுக்கு முன் அந்த மாணவன் என்னிடம் வந்தான். அவனைக் கோயம்புத்தூர் டி.ஈ.ஓ.-விடம் கூட்டிக் கொண்டு போனேன். விவரமெல்லாம்

[5th March 1964

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

சொன்னேன். அப்போது அவர்கள் 'நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது, இது மாதிரி உள்ளவர்களுக்கு டைரக்டர் அவர்களிடமிருந்து உத்திரவு வேண்டும்' என்று சொன்னார்கள். உடனே இங்கே வந்தோம். இங்கே கேட்டபோது 'உத்திரவை ஏற்கெனவே அனுப்பி விட்டோம்' என்று சொன்னார்கள். திரும்ப அங்கே சென்று 'உத்திரவு அனுப்பியிருக்கிறார்களாமே' என்று கேட்டோம். 'கமிட்டி அபிப்பிராயம் இருந்தால் எடுத்துக்கொள்ளலாம்' என்று உத்திரவு அனுப்பப்பட்டிருந்தது. அந்த முறையில் எங்களுக்கு தைரியம். டைரக்டர் தான் சொல்லியிருக்கிறாரே, கமிட்டியில் இருக்கிறவர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்று நினைத்தோம். கடைசியிலே எடுக்கவேயில்லை. எடுக்காததற்கு என்ன காரணம்? எந்த விதமான காரணமும் இல்லை. ஏழை மாணவன். நன்றாகப் படிக்கக் கூடியவன். கஷ்டப்பட்டு வேலை செய்யக் கூடியவன். நடந்தே 3-4 மைல் பள்ளிக்கு போய் வந்தவன். 'ஏன் இப்படி ஆன்றோர் வாக்கு பொய்த்து விட்டது இன்றைய நிலையில்?' என்று எண்ணினேன். இன்றைக்கு அவன் நிலைமை என்ன? அவதியான நிலைமையில் இருக்கிறான். இன்னும் ஏதாவது பாடசாலையில் சேர்ந்து பள்ளி ஆசிரியர் படிப்பு படிக்க அவனுக்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சியில் ஆஸ்பத்திரி கட்டடம் ஒன்று மிக மிகத் தேவையாக இருக்கிறது. இப்போது பொள்ளாச்சி நகரம் மிகவும் விரிவு அடைந்திருக்கிறது. எவ்வளவோ காலேஜ்களும், மில்களும் ஏற்பட்டு, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டங்கள் போன்றவைகள் வருவதால் ஆஃபீசர்களும் மற்றவர்களும் நிறையக் கூடுகிறார்கள். ஆஸ்பத்திரியில் படுக்கை இடமே கிடையாது. அந்தப் பக்கம் புதிதாக யாராவது போனால் 'பொள்ளாச்சி சந்தை பெரிதாக இருக்குமே, இது தான் சந்தையோ?' என்று எண்ணுகிறார்கள். அவ்வளவு கூட்டமாக இருக்கிறது. அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் நெருக்கடி காரணமாக இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தாலும் சில முக்கியமான காரியங்களை எடுத்துச் செய்யலாமே. பொள்ளாச்சி ஆஸ்பத்திரியைக் கூடிய விரைவில் கட்ட அரசாங்கம் ஆதரவு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு டிராக்டர் வாங்குவதில், இன்றைக்கு விவசாயம் செய்யவே ஆட்கள் கிடைப்பதில்லை, டிராக்டர் இருந்தாலும் உழுது பயிரிட சவுகரியமாக இருக்கும். டிராக்டர் வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தாலும் 3-4 வருஷங்கள் ஆகின்றன வருவதற்கு. மூன்று வருஷங்களுக்குப் பிறகு அந்த விவசாயி எப்படி விவசாயம் செய்ய முடியும்? விவசாயிகளுக்குக் கஷ்டங்கள் பல வகைகளில் இருக்கின்றன. அதைப் பற்றி மான்யங்களின்போது பேசிக்கொள்கிறேன். டிராக்டர்கள் கூடிய விரைவில் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து விண்ணப்பம் கொடுத்த 2-3 மாதங்களில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



5th March 1964]

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

பம்ப்செட்டுக்கு 3 வருஷம் என்று இருந்ததை 10 வருஷம் அல்லது 12 வருஷம் என்று செய்யவேண்டுமென்று சொன்னேன். மூன்று வருஷத்தை 10 வருஷமாக ஆக்கி விட்டார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் ஒரு திருத்தம். 1—4—1963 என்று இருப்பதை இன்னும் கொஞ்சம் முன்பாகத் தள்ளிப் போட்டால் முன்பாக வாங்கி இன்னும் கடன் முழுவதையும் கட்டாமல் இருக்கிறவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, சபையில் இவ்வளவு நேரம் பேச அனுமதி கொடுத்த துணைச் சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

***திருமதி அ. கிருஷ்ணவேணி** : மதிப்புக்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் 1964-65-ம் ஆண்டுக்கான இந்த பட்ஜெட்டைக் கொண்டு வந்திருப்பதை முழு மனதோடு வரவேற்று ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே, சரித்திரத்திலேயே முதல் இடம் பெற்ற வயோதிகர் பென்ஷன் திட்டத்தையும், இன்னும் கல்விச் சலுகை திட்டத்தையும், மதிய உணவுத் திட்டத்தையும் உருவாக்கிய நமது மாபெரும் தலைவர் உத்தமர் காமராஜ் அவர்களை அகில உலகமும் புகழ்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் பென்ஷன் திட்டத்தை நல்ல முறையிலே, அதிகப்படியான நிதியை ஒதுக்கி கொண்டு வந்திருப்பதற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பென்ஷன் அதிகாரிகள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள முதியோர்களுக்கு, மிகவும் திக்கற்றவர்களாக இருக்கிறவர்களுக்கு, கை-கால் முடவர்களாக இருக்கிறவர்களுக்கு, அத்தகைய எல்லோருக்கும் மேற்படி உதவியை வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தற்போது நமது மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்கள் ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசமின்றி எல்லா மாணவர்களுக்கும் சம்பளம் இல்லாமல் இந்த கல்விச் சலுகை அளித்திருப்பதற்காக கனம் அமைச்சருக்கு என்னுடைய நன்றியைச் செலுத்திக்கொள்கிறேன்.

மேலும், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு ஊதியம் கிடைப்பது 12-00 noon.
போன்று நம் மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும் சரிசமமான ஊதியம் கிடைப்பதற்குத் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நமது நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதி மிகவும் வறண்ட ஒரு பின்தங்கிய பகுதியாகும் என்பது நமது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஆண்டிப்பட்டியில் வைகையில் அணைக்கட்டை கட்டி முடித்தவுடன் அங்குள்ள வட்டார மக்கள் கஞ்சித் தொட்டி நிறுவுகிறார்கள், பஞ்சத்தால்

பட்டினியால் வாடும் ஏழை எளிய மக்களுக்கு அவசியம் கஞ்சி ஊற்றிவிடுவார்கள் என்ற எண்ணத்தோடு நினைத்து காத்துக் கொண்டிருந்தார்கள். அந்த மக்களை மறந்து விட்டு, லாரியில் கஞ்சித் தொட்டியை ஏற்றிச் செல்லுவது போல், 50 மைலுக்கு அப்பால் இருக்கும் நிலங்களுக்கு பாசன வசதி செய்துகொடுத்து அங்குள்ள மக்கள் செழுமையான முறையில் விவசாயத் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். ஆகையால், நமது அரசாங்கம் தயவுசெய்து ஆண்டவனால் கைவிடப்பட்ட ஆண்டிப்பட்டி வட்டாரத்திலுள்ள ஏழை எளிய விவசாய மக்கள் விவசாயத் துறையில் முன்னேற்றம் அடைவதற்கு வைகை அணையிலிருந்து தென் கிழக்காக ஒரு புதிய கால்வாயை வெட்டினால், அங்குள்ள மக்கள் நஞ்சை விவசாயத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். ஆகையால், தயவுசெய்து மராமத்து அமைச்சர் அவர்கள் இதைச் சிந்தித்துப் பார்த்து மேற்படி திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படியாக அங்குள்ள ஏழை எளிய விவசாய மக்கள் சார்பாக நான் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேடப்பட்டி பிர்க்கா, உசிலம்பட்டி, பேரையூர் எழுமலை ரஸ்தாக்கள் நீண்ட நாட்களாக போக்குவரத்திற்கு லாயக்கு இல்லாமல் இருக்கிறது என்று பல தடவை இந்த சட்ட மன்றத்தில் எடுத்துக் கூறியும் பலனளிக்கவில்லை. குறிப்பாக உசிலம்பட்டி–பேரையூர் ரஸ்தா இரண்டு இடங்களில் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. சின்னக்கட்டளைக்கு வடக்கில் ½ பர்லாங்கு தூரத்தில் பெரிய ஓடை இருக்கிறது. மேற்படி ஓடைக்குத் தெற்குப்புறத்தில் சேடபட்டிக்கும் சின்னக்கட்டளைக்கும் இடையே பெரிய ஓடை ஒன்று இருக்கிறது. குறிப்பாக அந்த ரஸ்தாக்களில் ஏராளமாக சர்வீஸ் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பொது ஜனங்களும் அதிகமாக கால்நடையாகப் போகிறார்கள். மாட்டு வண்டிகளும், பார வண்டிகளும் அதிகமாக வந்துபோய்க்கொண்டிருக்கின்றன. பெரிய மழை காலத்தில் மேற்படி இரண்டு ஓடைகளிலும் அதிகப்படியாக வெள்ளம் ஓடிக்கொண்டிருப்பதினால், தெற்கிலிருந்து வரக்கூடிய பஸ் அங்கேயே நின்றுவிடுகிறது. அதே மாதிரி வடக்கேயிருந்து தெற்கே வரக்கூடிய பஸ் அங்கேயே நின்று விடுகிறது. கால்நடையாக வரும் பொதுமக்களும் அதே நிலையில் அந்தத் தண்ணீரைக் கடந்து வரமுடியாமல் நின்றுவிடுகிறார்கள். ஆகையால், தயவுசெய்து இரண்டு இடங்களிலும் இந்த ஆண்டிலேயே பாலங்களைக் கட்டி முடிக்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை மாவட்டத்தில் அல்லிநகரம் பஞ்சாயத்து முனிஸிபாலிட்டியாகிவிடப்போகிறது. ஆனால் ஒரு மருத்துவமனைகூட கிடையாது. பொதுவாக, அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் மிகவும் ஏழை மக்கள். அவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டால், சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டுமென்றால், 10 மைல்களுக்கு அப்பால் இருக்கக்கூடிய பெரியகுளம், போடி, சின்னமனூர் ஆகிய ஊர்களுக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஏழை எளிய மக்களின் நலனைக் கருதி அல்லி





நகரம் பஞ்சாயத்தைச் சேர்ந்த தேனியில் ஒரு அரசாங்க மருத்துவமனை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கனம் சுகாதார அமைச்சர் அம்மையார் அவர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்கள் கல்வித்துறையில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். ஆனால், பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையவில்லை. காண்டிராக்ட் எடுத்து தொழில் நடத்தவும் வாணிபம் செய்யவும் அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவ ஹரிஜனநல இலாகா மான்யத்திற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தை மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒரு ஜில்லாவுக்கு 5 ஹரிஜன நபர்களாவது பஸ் சர்வீஸ் நடத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பஞ்சமா பாதகத்தில் ஒன்றான கள்ளுக்கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று தூண்டுகின்ற கருங்காலிகளின் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அப்பேர்ப்பட்ட தீய உள்ளம் படைத்தவர்களைக் கூடிய சீக்கிரம் சிறையில் அடைக்கவேண்டும் என்று கனம் போலீஸ் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. அருணாசலம்:** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்பேரில் என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு வரவுக்கு மிஞ்சிய செலவு இருக்கும் நிலையில் பட்ஜெட்டை நமது நிதி அமைச்சர் அவர்கள் இங்கே அளித்திருக்கிறார்கள். துண்டு விழுகிற தொகை ரூ. 3 கோடி 34 லட்சம். பஞ்சுக்கும் நூலுக்கும் வரி போடுவதின் மூலம் ஒரு கோடி ரூபாயைச் சரிகட்டப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எஞ்சிய தொகையை ஈடுகட்டுவதற்கு வரிபாக்கிகளை வசூலிப்பதன் மூலம் வருமானம் அதிகரிக்கும் என்று நினைக்கிறார்கள். இந்த அரசாங்கம் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்ததினாலும், வகுத்த வருமானத்தை நாடாமல் இருந்ததினாலும், தொழில் வளத்தை மேலும் வளர்க்காததினாலும், சில தொழில்களை தேசீயமயமாக்காததினாலும் ஏற்படும் விளைவுக்கு இந்தத் துண்டுவிழும் நிதிநிலை அறிக்கை ஒரு சான்றாக அமைந்திருக்கிறது என்றால், அது மிகையாகாது.

அடுத்து, கொள்முதல் திட்டத்தைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஒரு லட்சம் டன் கொள்முதல் செய்யவேண்டுமென்று உத்தரவு இடப்பட்டிருந்தாலும் இன்றையதினம் 10,000 டன் தான் கொள்முதல் செய்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் மில்காரர்களிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்தாலும், அவர்கள் பொதுமக்கள் தலையிலும், விவசாயிகள் தலையிலும்தான் அந்த பாரத்தை சுமத்துவார்கள். எனவே, நில உச்ச வரம்பிலிருந்து

[திரு. வி. அருணாசலம்] [5th March 1964

விதிவிலக்கு அளிக்கப்பட்ட ஸ்தாபனங்களிடமிருந்து ஏன் நெல்லைக் கொள்முதல் செய்யக்கூடாது? தேவஸ்தானங்களுக்கும், கோவில்களுக்கும் சொந்தமாக இருக்கிற பல ஆயிரக்கணக்கான நஞ்சை நிலங்களிலிருந்து கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொள்முதல் செய்யப்பட்ட பிறகு, எஞ்சியுள்ள அரிசியை மில்காரர்களிடமிருந்து கொள்முதல் செய்வது நல்லது என்று நான் எண்ணுகிறேன்.

இன்றையதினம் பஞ்சாயத்து யூனியன் மூலம் கிராம சகாயத் திட்டங்கள் என்று சில திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். இந்தத் திட்டம் கிராம சகாயக்குகள் மூலமாக விவசாயிகளுக்கு நல்லவிதமான விதைகளை அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த திட்டமாக இருந்தாலும், இதுவரையில் கிராம விவசாய மக்களுக்கு நல்ல முறையில் பக்குவப்பட்ட விதைகளை வழங்குவதற்கு முன்வரவில்லை. அதற்காகச் செலவழிக்கும் தொகை வீணாக வியரமாக ஆகிறது. எனவே ஒவ்வொரு வட்டாரத்திலும் இருக்கிற பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு விதைப்பண்ணையை நிறுவி அதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல விதைகள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமத்தில் இருக்கிற புறம்போக்கு நிலங்களை அளித்து, அல்லது தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்வதன் மூலமாகவாவது விதைப் பண்ணைகளை நிறுவி நல்ல விதைகளைத் தயார் செய்தால், கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியில் மீனவர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால், சென்ற சில மாதங்களுக்கு முன்பு புயலினாலும், மழையினாலும் பாதிக்கப்பட்டு, மிகவும் கஷ்டப்படுகிற நிலையில் இருக்கிறார்கள். இம்மாதிரி தத்தளித்துக் கொண்டிருக்கிற மீனவர்களுக்கு உதவி அளிப்பதற்காக குறிப்பாக இந்த பட்ஜெட்டில் ஒரு தொகை ஒதுக்கி திட்டம் ஒன்றும் போடாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

கடற்கரை ஓரங்களில் இருக்கிற நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான புறம்போக்கு நிலங்களை மீனவர்களுக்கு 'அஸைன்' செய்துகொடுத்து, அவர்கள் வாழ்க்கை வளம் பெற உதவவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ரேடியோ அமைக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 75 சதவீதம் உள்ள பஞ்சாயத்துக்களில் இருக்கிற ரேடியோக்கள் வேலை செய்யாமல் சீர்கெட்டுப்போய் இருக்கின்றன. இந்த ரேடியோக்கள் பயன் அற்ற நிலையில் இருக்கின்றன என்று பலர் குறை கூறுகிறார்கள். விவசாயக் காரியங்களுக்காக ஸ்ப்ரேயர்கள் கொடுக்கப்படுகின்றன. அவைகளும் நல்ல முறையில் வேலை செய்யாமல் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே விவசாயிகளுக்கு பூச்சி மருந்து இலவசமாக அளித்து உற்பத்தியை பெருக்குவதற்கும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.



5th March 1964]

* **திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள 1964-65-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

11-வது வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் இலவசக்கல்வி அளிக்க முன்வந்ததற்காகவும், இந்த நிதிநிலை அறிக்கையிலே கல்விக்காக தாராளமாக பணம் ஒதுக்கியிருப்பதற்காகவும் என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஏற்றத்தாழ்வு அற்ற ஒரு சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னால் கல்வி என்ற கண்ணோட்டத்தில் தான் அதை நிறைவேற்ற முடியும். "கண்ணுடையரென்பவர் கற்றோர்" என்று வள்ளுவரும் கூறியிருக்கிறார். கல்வி ஒன்று இருப்பதனால் தான் ஜாதிசமய வேறுபாடுகளை ஒழித்து, ஓர் அளவுக்கு நமது சமுதாயம் முன்னேற முடியும் என்ற அடிப்படையிலே 11-வது வகுப்பு வரையிலே இலவசக்கல்வி அளிக்கப்பட்டிருக்கிறது. சிறப்பாக அதனால் பயன் அடையக் கூடியவர்கள் கிராமப்புறங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களும், ஏழை மக்களும், கூலி வேலை செய்து பிழைப்பவர்களும், மில்களில் வேலை செய்கின்றவர்களும், அரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் தான். அப்படிப்பட்ட ஏழை மக்கள் இந்தத் திட்டத்தை நிச்சயமாக வரவேற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த விவசாயிகளுடைய, ஏழை மக்களுடைய பிரதிநிதிகளாக வந்திருக்கும் எங்களைப் போன்றவர்கள் இந்தத் திட்டத்தை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்காக எங்களுடைய வணக்கத்தையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் முதியோர்களுக்கு அளிக்கக்கூடிய பென்ஷன் தொகையையாவது, அதாவது ரூ. 20-ஆவது கொடுக்க வேண்டும் என்று இந்த பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காகவும் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஓய்வு பெற்று இருக்கும் கோயம்புத்தூர் ஜில்லாவில் உள்ள சுமார் 2,400 அரசாங்க ஊழியர்களிலே சுமார் 340 பேர் ஒரு ரூபாயிலிருந்து 7 ரூபாய் வரை பென்ஷன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக அவர்கள் குறைந்தபட்சம் ரூ. 20 பென்ஷன் பெறுவார்களேயானால், அது அவர்களுடைய குடும்பத்திற்கும், மனைவி மக்களுக்கும் பெரும் ஆதரவாக இருக்கும். ஆகவே இந்த அரசாங்க ஊழியர்களின் சார்பாக கனம் அமைச்சருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் அரசாங்க ஊழியர்களுடைய குடும்பத்தில் இருக்கும் ஆண்களும் பெண்களும் நல்ல முறையில் படித்து தொழில் செய்யும் முறையில், இந்தப் பென்ஷன் திட்டத்தை விரிவு செய்ததற்காகவும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் ஜில்லாவிலே பரம்பிக்குளம் நீர்ப்பாசன திட்டத்திற்காக கோடிக்கணக்கான பணம் செலவழிக்

[திருமதி சி. குழந்தையம்மாள்] [5th March 1964

கப்படுகிறது. அதற்காக சர்க்காருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தப் பரம்பிக்குளம் திட்டத்தின் மூலம் சூலூர் பிர்க்கா, அவனாசி பிர்க்கா, அன்னூர் பிர்க்கா, பல்லடம் பிர்க்கா போன்ற பகுதிகள் ஓரளவுக்காவது பயன் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கே உள்ள மக்கள் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் கிணறுகள் வெட்டித்தான் வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஒவ்வொரு கிணறும் 120 அடி ஆழத்திற்கு இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் மாதத்திலே தான் குடி தண்ணீர் கஷ்டம் வரும். ஆனால் இந்த ஆண்டிலே பிப்ரவரி மாதத்திலேயே சூலூர் பிர்க்காவில் குடி தண்ணீர் கஷ்டம் வந்து விட்டது. கிட்டத்தட்ட 30, 40 கிராமங்களில் உள்ளவர்களுக்கு குடி தண்ணீர் இல்லை. ஆகவே இந்தப் பரம்பிக்குளம் திட்டத்தின்கீழே நீண்ட அளவுக்கு வாய்க்கால்களைக் கொண்டு வந்து சிறிய பெரிய குளங்களை அமைத்து அவற்றில் தண்ணீரை தேக்கி வைத்தால் அந்த வட்டாரங்களில் உள்ள விவசாயிகளின் கிணறுகளில் ஊற்று ஏற்படுவதற்கு வழிவகை செய்ய முடியும். அப்படி இல்லை என்று சொன்னால் எங்கள் பிராந்தியத்தில் இருக்கக்கூடிய பகுதிகள் எப்பொழுதும் பஞ்சப் பிரதேசமாக ஆகி விடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு 2 பக்கத்திலும் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தண்ணீர் இல்லாத கஷ்டம் ஒரு புறம். பருத்திப்பயிரில் பூச்சி விழுந்து ஏராளமான நஷ்டம் அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. மேலும் விளை பொருள்களும் தாராளமாக வருவதற்கு சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே இவற்றை எல்லாம் பார்த்து, விவசாயிகளுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோவை ஜில்லாவில் சர்க்கார் தரப்பிலிருந்து பெண்களுக்காக ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வந்திருக்கிறது. அதற்காக எங்கள் ஜில்லா பெண் மக்களின் சார்பாக நான் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன். சர்க்கார் இன்னும் ஒரு உதவியும் செய்ய வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த பெண்கள் கிளார்க், டெலிபோன் ஆப்பரேட்டர் முதலிய வேலைகளுக்கு மட்டும் தகுதியுடையவர்கள் என்று சொல்லாதபடி எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பிற்கு மேலே பாலிடெக்னிக்கில் இடம் பெறாதவர்களுக்கு சீனியர் டெக்னிகல் பள்ளிகளை ஏற்படுத்தி தொழில் துறையில் அவர்களுக்கு பயிற்சி அளித்தால் இந்தப் பெண்கள் ஓரளவு சம்பாதித்து அவர்களுடைய குடும்பத்தை நடத்த முடியும். ஏழை எளிய மக்களின் பெண்களும், விவசாய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும், வருமானம் குறைந்தவர்களின் பெண்களும் இந்த சீனியர் டெக்னிகல் பள்ளிகளில் சேர்ந்து படித்து அதன் மூலம் பயன் பெற முடியும். இவற்றை அமைப்பதற்கு இந்த அறிக்கையிலே பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவிலும் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



5th March 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பருத்தி, சோளம், கம்பு முதலிய பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்று சொன்னால் பிர்க்காவிற்கு ஒரு கூட்டுறவு மார்க்கெட்டில் சொசைட்டி ஏற்படுத்தி, உற்பத்தியாகும் பொருள்களை அவர்களிடம் இருந்து உடனடியாக வாங்கி லாபகரமாக விற்று, விவசாயிகளுக்கு லாபம் வரக்கூடிய முறையிலே இந்தச் சங்கங்கள் செயல்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இடையிலே உள்ள வியாபாரிகள் அதிக லாபம் பெற்று, உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு கஷ்டத்தை உண்டாக்காதபடி செய்ய வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் நேற்றும் இன்றும் பேசிய பொழுது, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பலர் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். "சோஷலிசம், சோஷலிசம்" என்று 1957-லும், 1964-லும் ஆவடியிலும் புவனேஸ்வரத்திலும் கூடிய மகாநாடுகளில் காங்கிரஸ்காரர்கள் அந்த வார்த்தைகளை கண்டார்களே அல்லாது செயலில் ஒன்றும் இல்லை என்று சொல்லி, இது "கண்டனன் சீதையை, கண்டனன் சீதையை" என்ற அளவிலே இருக்கிறது என்று சொன்னார்கள். கம்பர் "கண்டனன் சீதையை" என்று சொல்லவில்லை. "கண்டனன் கற்பினுக்கணியைக் கண்களால்" என்று தான் சொன்னார். அதாவது கற்பில் நிலை குறையாத ஒரு பெண் தெய்வத்தைக் கண்டதாகச் சொன்னார். அது போல செயல் முறையிலுள்ள உயர்ந்த சோஷலிசத்தைக் கண்டோம். விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள், மில்களில் கூலி வேலை செய்கின்றவர்கள், கிராமப்புறங்களில் உள்ள சாதாரண மக்கள் ஏழை எளியவர்கள் எல்லோரும் படித்து முன்னுக்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலையைஏற்படுத்தி சட்டசபையிலே அங்கம் வகித்து பல முன்னேற்றங்களை மக்களுக்கு செய்து கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை சுதந்திரம் பெற்ற பிறகுதான் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே வெறும் வார்த்தைகளால் சோஷலிசத்தைக் காணவில்லை, பொருளோடு கண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். நேற்று பேசும் பொழுது காங்கிரஸ்காரர்கள் எதற்கு எடுத்தாலும் ஏமாற்றுகிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். சிலர் இது ஏதோ இலக்கிய பட்ஜெட் உரை என்ற முறையில் அடுக்கு மொழிகளை அடுக்கி முறையோ, முடிவோ, முழுமையோ இதிலே காண வேண்டும் என்று துருவித் துருவி பார்த்தோம் என்று குறிப்பிட்டார்கள். இது இலக்கிய சொற்பொழிவாக இருந்தால் அடுக்கு மொழிகள் பொருத்தமாக இருக்கும். உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் பொருள்களின் விலை குறையாது என்று குறிப்பிட்டார்கள். அது அவ்வளவு பொருத்தமாக இல்லை. உற்பத்தியைப் பெருக்கினால் தான் பொருள்களின் விலை குறைய வழி ஏற்படும். ஆனால் ஒரு திட்டம் பயன் தருவதற்கு நான்கு ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. அது வரையிலும் திட்டத்திற்காக செலவு செய்த பணம் மக்களின் கையில் வரும்பொழுது, பொருள்களின் விலையும் ஓர் அளவுக்கு

[திருமதி சி. குழந்தையம்மாள்] [5th March 1964

வருகிறது. ஆகையினால் அப்படி ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். ஏற்கனவே போட்டிருக்கும் பரம்பிக்குள திட்டத்தின் மூலம் எங்கள் பிர்க்காவிற்கு தண்ணீர் கொடுக்கும் விஷயத்தையும் சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பருத்தி செடியில் நோய் விழுவதைத் தடுக்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இருபது ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகளின் நன்மைக்காக, பருத்திச் செடிகளில் புழு விழுவதை தடுக்க இன்ன தேதியில் நடவேண்டும், இவ்வளவு நாட்களில் செடிகளை பிடுங்க வேண்டும் என்று ஆங்கிலேயர்களின் நாளில் தண்டோரா போடுவார்கள். சில நாட்கள் அதிகமாக செடிகள் பூமியிலேயே இருந்து விட்டால் புழுக்கள் மற்ற செடிகளுக்கும் பரவி ஆயிரக்கணக்காக உற்பத்தியாகிவிடும். அதை எல்லாம் தடுப்பதற்கே இம்மாதிரி விவசாயிகளுக்கு முன் கூட்டி அறிவிக்கும் வேலையை சர்க்கார் செய்து வந்தார்கள். இந்த ஆண்டாவது அம்மாதிரி ஏதாவது செய்ய முடியுமா என்று சர்க்கார் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த புழுக்களின் தொல்லையினால் 20,000 ரூபாய்க்கு பருத்தி விற்க வேண்டிய ஒரு விவசாயி 4,000 ரூபாய்க்குக்கூட விற்க முடியாத நிலைமையில் இருக்கிறான். செலவு செய்த பணமே கிடைப்பது கூட அரிதாக இருக்கிறது. சென்ற ஆண்டு இந்த பூச்சிகளை தடுப்பதற்கு ஏரோப்பிளேனில் இருந்து மருந்து அடிக்க வேண்டும் என்று நாம் சொன்னபோது அங்கே பரவலாக நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் சேர்ந்தாற்போல் இல்லை என்று சொன்னார்கள். இன்ன தேதியில் நடவேண்டும், இன்னதேதியில் பிடுங்கவேண்டும் என்ற கால வரையை விவசாயிகளுக்கு அறிவிப்பதாவது நலமாக இருக்கும். இந்த யோசனையை சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க மார்க்கெட்டிங் சொசைட்டிகள் பஞ்சாயத்து யூனியன்களில் அமைக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். இரண்டு வயதில் இருந்து 5 வயது வரை உள்ள குழந்தைகளின் நலனுக்காக சிசுப்பரிபாலிக்கும் நிலையங்களை ஏற்படுத்த பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தப் பணம் கிராமப்புற குழந்தைகளுக்கும் உபயோகப்படுமாறு செயல்படுத்த வேண்டும். அப்பொழுது தான் கிராமப்புறங்களில் பெண் பிள்ளைகள் காலையில் வேலைக்கு செல்லும்போது தங்கள் குழந்தைகளை இந்த சிசு பரிபாலிக்கும் நிலையங்களில் விட்டு செல்ல ஏதுவாக இருக்கும். அது கிராமப்புறத்தின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும். தாய்மார்களுக்கும், ஆதரவாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு கூட பெண்களுக்கு ஒரு சீனியர் டெக்னிகல் ஸ்கூலை கோவையில் அமைக்க வேண்டும் என்றும் கனம் தொழில் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களை பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். பெண்கள் இளார்க்கு வேலைக்குத் தான் போக வேண்டும் என்பதில்லை, அவர்களும் தொழில் துறையில் பணிபுரியக்கூடிய



5th March 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

வாய்ப்பை ஏற்படுத்த முயலவேண்டும் என்றும், அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு கூட மின்சார இலாகாவிலிருந்து, அடிக்கடி செக்யூரிடி வேண்டும் என்று கேட்கிறார்கள். அதை விடுத்து எப்பொழுதாவது ஒரு முறை மட்டும் கேட்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று ஞாபகப் படுத்திக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ந. சுப்பிரமணிய செட்டியார் :** தலைவர் அவர்களே, இந்த 1964-65-க்கு சம்பந்தப்பட்ட பட்ஜெட்டை கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயாரித்து சமர்ப்பித்து இருக்கிறார்கள். எந்த வரிகளும் இல்லாவிட்டாலும் கூட, துண்டு விழுந்திருக்கும் 334 லட்சம் ரூபாயில், ஒரு கோடியை மட்டும் சரி கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இரண்டு கோடி ரூபாயை துண்டாகவே விட்டு இருக்கிறார்கள்.

இந்த ஆண்டில் செய்திருக்கும் முக்கியமான நன்மை, எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளித்திருக்கிறார்கள் என்பதுதான். இதற்கு முன்பு தாசில்தார் முதலியவர்களிடம் சர்டிபிகேட்டு வாங்கவே பொழுதெல்லாம் போய்க் கொண்டிருந்தது. இதையே தொழிலாக வைத்துக் கொண்டு பலரும் பொய் சர்டிபிகேட்டும் வாங்கி இதை ஒரு தொழிலாகவே நடத்தி வந்தார்கள். அந்த தொல்லைகளெல்லாம் இப்பொழுது நீங்கி விடும்.

பென்ஷன் கொடுப்பதில் சில கோளாறுகள் இருக்கின்றன. வயது ஆனவர்களுக்கெல்லாம் கொடுப்பது என்று வரும் போது, அவர்கள் வயது சம்மந்தமாக தகராறுகள் வருகின்றன. மீண்டும் மீண்டும் எம்.எல்.ஏ.-க்கள் தான் சர்ட்டிபிகேட்டு கொடுக்க வேண்டியிருக்கிறது. மதிப்பிற்குரிய திரு. காமராஜர் அவர்கள் எந்த எண்ணத்தில் இதைக் கொண்டு வந்தார்களோ, அது பூராவாக நிறைவேறவில்லை. எல்லோரும் அந்தக் குறையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். வயதை அறுபது ஆக மாற்றினாலும் நல்லது. ஒரு கோடி ரூபாய் செலவானாலும் தகுதிப் பெற்றவர்கள் எல்லோருக்கும் இந்த உதவி கொடுக்கப்படவேண்டும்.

இந்த ஆண்டில் ஒரு லட்சம் டன் மில்காரரிடமிருந்தும் வியாபாரிகளிடமிருந்தும் கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டமிட்டுயிருக்கிறோம். நெல்லாக கொடுத்தாலும் வாங்கிக்கொண்டால் நலமாகயிருக்கும். சிலர் அரிசியாக மாற்றி கொடுக்க வசதியில்லை என்று நெல்லாகவே கொடுக்கிறேன் என்றால்கூட அதை பெற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஒருவர் இரண்டாயிரம் மூட்டை நெல் கொடுக்கவேண்டுமென்றால் ஆயிரம் மூட்டை அரிசியாகக் கொடுத்தால்தான் அவருக்கு கிளியரன்ஸ் சர்டிபிகேட் கிடைக்கிறது. அதுவொரு பெரிய குறையாக இருக்கிறது. நெல்லாகவே வாங்கிவிட்டால் வியாபாரிகளுக்கு சௌகர்யமாகயிருக்கும். நாம் திட்டமிட்டது ஒரு லட்சம் டன் என்றாலும் இந்த மாதம் வரை

[திரு. ந. சுப்பிரமணிய செட்டியார்] [5th March 1964

யிலும் கிட்டத்தட்ட 15 ஆயிரம் டன்கள் தான் கொள்முதல் செய்திருக்கிறோம். மீதி 85 ஆயிரம் டன் வசூலிக்க பெரிய சிரமமாகயிருக்கும். இதைப்பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறோம். கஷ்டமில்லாத முறையில் இதை செயல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். நம் மாநிலத்திலிருந்து கேரளாவிற்கு சுமார் 3 அல்லது 4 லட்சம் டன் அரிசி அனுப்புகிறோம். ஆனால் அதே சமயத்தில் ஆந்திராவிலிருந்து அரிசி நம் மாகாணத்திற்கு வர தடை ஏற்பட்டிருப்பதால் சென்னையிலே நெல்லூர் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மக்கள் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டம் திருச்சியிலிருந்து கேரளாவிற்கு அனுப்பும்போது மூட்டை ரூ. 50-க்கு விற்கிறோம். அதே சமயத்தில், 34 ரூபாய் என்று நிர்ணயம் செய்தால் விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. மார்க்கட் ரேட் விவசாயிகளுக்கு கிடைக்கும்படி கவனித்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கொள்முதலுக்காக 15 சத விகிதம் அரிசியை கொடுத்தாலும்கூட ஜி.பி.ஓ.-க்கள் காலா காலத்தில் கிளியரன்ஸ் சர்டிபிகேட் கொடுப்பதில்லை. அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அனுபவம் இல்லாதவர்கள்தான் ஏதோ இந்த அரிசி மில்லில் பெரிய லாபம் வந்துவிடுகிறது என்று நினைப்பார்கள். உண்மை நிலை அது அல்ல. எவ்வளவோ இன்னல்களும் தொந்தரவுகளும் இருக்கின்றன. எதிர் கட்சி அங்கத்தினர் கனம் ராஜாங்கம் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒன்று பார்க்கவேண்டும். ஒரு ராத்தல் ஏலக்காய் என்ன விலை? கேரளாவிலிருந்து வரும் மற்ற சாமான்களின் விலை ஒரு கிலோவுக்கு எவ்வளவு? அதே சமயத்தில் 100 கிலோ கொண்ட ஒரு குவிண்டால் அரிசியின் விலை என்ன? இங்கு குறிப்பாக தஞ்சை திருச்சியிலுள்ளவர்கள் நெல்லை மட்டும் நம்பி வாழ்கிறார்கள். அதே சமயத்தில் ஒரு நூற்பாலையை எடுத்துக்கொண்டால் அவர்கள் 25 சத விகிதம் டிவிடெண்ட் கொடுக்கிறார்கள். இதெல்லாம் அரசாங்கத்திற்கு கண்ணுக்குத் தெரியவில்லையா. எக்ஸ்போர்ட் இம்போர்ட் என்ற பெயரால் எவ்வளவு லாபம் அடிக்கிறார்கள். இதெல்லாம் சர்க்காருக்குத் தெரிவதில்லை. நாட்டுப்புறத்தில் ஒன்று சொல்வார்கள், 'கூத்தரிசிக் காரி என்று' ஒரு மூட்டை அரிசியை விற்றால், அவளுக்கு மிஞ்சிப் போனால் ஒரு படிதான் கிடைக்கும். இதை
12-30 p.m. ஒரு பெரிய தொழிலாக நினைத்துக் கொள்கிறார்கள் மற்றவர்கள். இதையெல்லாம் முதல் அமைச்சரவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது கூட்டுறவு சங்கங்களுக்கு விலக்கு அளித்திருப்பது நியாயம் அற்றது. கூட்டுறவு ஸ்டோர்ஸ் இருபது ரூபாய்க்கு நெல் வாங்கி அவர்கள் நெல்லை அரைத்துப் பொது ஜனங்களுக்குக் கொடுத்தால் நாங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை ஆனால், அவர்கள் எல்லாம் அந்த நெல்லை வாங்கி, மூன்று மாதம் கழித்து என்ன லாபம் கிடைக்கும் என்று டெண்டர் விடுகிறார்கள் கூட்டுறவு ஸ்டோர்ஸ் 30 ஆயிரம் மூட்டைகள் வாங்கி, மூட்டை



5th March 1964] [திரு. ந. சுப்பிரமணிய செட்டியார்]

ஒன்றுக்கு 3 ரூபாய் லாபம் வைத்து, வருஷக் கடைசியில் 27 ஆயிரம் ரூபாய் நஷ்டம் என்று கணக்கு காட்டுகிறார்கள். திருச்சி மார்க்கெடிங் கோவாபரேடிவ் சொஸைட்டியிலே இந்த ஆண்டில் 27 ஆயிரம் ரூபாய் நஷ்டம் காட்டியிருக்கிறார்கள். நெல்லை டெண்டர் மூலமாக 18 ரூபாய் 19 ரூபாய்க்கு சென்ற ஆண்டில் வாங்கி 23 ரூபாய்க்குமேல் விற்றும்கூட, அவர்கள் ஒருவிதமான சௌகரியமும் பொது ஜனங்களுக்குச் செய்யவில்லை. நம்முடைய அரசாங்கம் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸுக்கு எவ்வளவு உதவி செய்தாலும், அவர்கள் அந்த எண்ணத்தைக் கொண்டு பொது ஜனங்களுக்கு விநியோகம் செய்யவில்லை. மார்க்கெட்டில் என்ன விலைக்கு அரிசி விற்கிறதோ, அதே விலைக்கு விற்கிறார்கள். எங்கள் கடைக்கு ஃபோன் செய்து விலையைக் கேட்டுக்கொண்டு நான் கோவாபரேடிவ் மார்க்கெடிங் சொஸைட்டி விலை நிர்ணயம் செய்கிறார்கள். நாங்கள் அறுபது ரூபாய் என்றால் அதே அறுபது ரூபாய்க்குத்தான் அவர்களும் பொது மக்களுக்கு விற்கிறார்கள். இருபது ரூபாய்க்கு வாங்கியதை 44, 48 ரூபாய்க்கு விற்றால் அதை நாங்கள் வரவேற்கிறோம். அவர்களுக்கு இன்னும் வேண்டிய உதவி செய்யுங்கள் என்று சொல்கிறோம். ஆனால் ஒரு கோவாபரேடிவ் சொஸைடி முப்பதாயிரம் மூட்டைகள், நாற்பதாயிரம் மூட்டைகள் வாங்கி வியாபாரி விற்கும் விலையையே வைத்து விற்று அந்த லாபத்தை எப்படி அவர்கள் கணக்குக் காட்டுகிறார்கள் என்று தெரியவில்லை. திருச்சி கோவாபரேடிவ் மார்க்கெடிங் சொஸைட்டியிலே இப்படி ஒரு தொழில் நடந்து கொண்டு வருகிறது. சென்ற ஆண்டு 30,000, 40,000 மூட்டைகள் நெல் வாங்கி வைத்து விற்றதில் அவர்களுக்கு 27,000 ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறதென்றால் அது எப்படி என்பதைக் குறித்து கனம் முதல் அமைச்சர் அவர்கள் விசாரித்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீரங்கம் தொகுதியில் சில பகுதிகளில் மின்சாரம் வேண்டுமென்று ஒரு ஆண்டுக் காலமாகக் கேட்டும் அது கிடைக்கவில்லை. எஸ்.எம்.ஈ.எஸ். கார்ப்பரேஷனிலிருந்து நமது அரசாங்கமே எடுத்துக்கொண்டு நடத்தும் காரணத்தால், ஒரு ஆண்டுக்குள் அவர்கள் எங்கிருந்து எங்கு லைனைக் கொண்டுவருவது என்ற முடிவு தெரியாமல் இருக்கிறார்கள். வருகிற ஏப்ரல் மாதத்திலாவது என்னுடைய தொகுதியில் சில கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்.ஜி.ஓ.-க்களுக்கு அதிக அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் கோருவது விலைவாசி உயர்வின் காரணத்தைக் கொண்டுதான் என்று நான் கருதுகிறேன். அதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

*திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கை

[திரு. ம. கமலநாதன்] [5th March 1964

சமர்ப்பித்த நேரத்திலே கொஞ்சம் அவசரம்கூட இருந்தது. அன்று வழக்கமாக இருந்த கேள்வி நேரம்கூட ஒரு பத்து நிமிஷத்திற்குள்ளேயே முடிந்துவிட்டது. சாதாரணமாக பத்து கேள்விகள் வருவதுண்டு. ஆனால், அன்றைக்கு ஐந்து கேள்விகள் தான் இருந்தன. இதற்கு காரணம் என்ன என்று சந்தேகப்பட்டுக் கேட்ட நேரத்திலே அன்றைக்கு சனிக்கிழமை, ஒன்பது மணியிலிருந்து இராகு காலம், அதற்குள்ளே இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்கிற அவசரத்தில்தான் கேள்வி நேரத்தைக் குறைக்க வேண்டியிருந்தது என்று நான் அறிந்தேன். அவ்வளவு நல்ல நேரத்திலே சமர்ப்பிக்கப்பட்ட அந்த நிதி நிலை அறிக்கையிலே வரவேற்கக்கூடிய அம்சங்கள் ஒன்றிரண்டு இருக்கின்றன. "நிதி நிலை அறிக்கையை வரவேற்பதற்கு ஒன்றும் இல்லை" என்று சென்ற தடவை நான் சொன்ன நேரத்திலே, "எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வரவேற்க வேண்டும் என்பதற்காக நான் நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கவில்லை" என்று கனம் அமைச்சர் அவர்கள் சற்றுக் கோபமாகப் பேசினார்கள். ஆனால், எனக்கு திருப்தி அளித்த, மகிழத்தக்க ஒரே ஒரு அம்சம், சேலம் மாவட்டத்தில் கல்லூரி ஒன்று துவக்கப்படும் என்று நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுதான். அந்த ஒன்றே ஒன்றுக்காக நன்றி தெரிவித்துவிட்டு, வேறு எதுவும் பேசக் கூடாது என்று நினைத்திருந்தேன். ஆனால் வடசென்னையைச் சேர்ந்த அம்மையார் பேசும்போது, ஏழைத் தொகுதியாகிய வட சென்னையில் ஒரு கல்லூரி துவக்குவதற்காகப் பாராட்டு தெரிவித்ததோடு, பணம் கட்டாமலேயே அந்தப் பகுதியில் கனம் அமைச்சர் அவர்கள் அந்தக் கல்லூரியைத் திறக்க முன்வந்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் சொன்னார்கள். ஆனால் நாங்கள் மிக மிகக் கஷ்டப்பட்டு ஒரு லட்சம் ரூபாய் கட்டியிருக்கிறோம். அதை நாங்கள் அங்கே வசூலிக்க முனைந்த நேரத்தில், பழைய எம்.எல்.ஏ. ஒருவர் "உங்களுக்கு வேறு வேலை இல்லையா? கவர்ன்மென்டிலிருந்து கட்டிக் கொடுப்பது நன்றாகத் தெரியும். நீங்கள் பணம் கட்டினாலும், கட்டாவிட்டாலும் அவர்கள் கொடுக்கப்போகிறார்கள்" என்று அளவிற்குச் சொன்னார். அவர் அவ்வாறு சொன்னது மட்டுமல்ல; பணம் கட்டுபவர்களையும் கொடுக்கக்கூடாது என்ற நிலையையும் உருவாக்கி வந்தார். அந்த நிலையிலும் எங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு கிடைப்பது அரிது. சேலம் மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். கனம் முதல் அமைச்சர் அவர்களை நாங்கள் இரண்டு மூன்று முறை சந்தித்த நேரத்தில், "ஸ்தலத்திலே இருப்பவர்கள் அதிகமான அக்கறை காட்டினாலொழிய, உங்களுக்குக் கல்லூரி கிடைக்காது" என்று சொன்னதன் பேரில். சேலத்தில் எப்படியாவது கல்லூரி வந்துவிடவேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்ன அந்தக் கண்டிஷன்களுக்கெல்லாம் கட்டுப்பட்டு, நாங்கள் அந்தப் பணத்தை கட்டியிருக்கிறோம். வட சென்னையில் அமைக்கப்படும் கல்லூரிக்கு மட்டும் அப்படி நிதி ஒன்றும் தேவை இல்லையா? நாங்கள் கட்டித்தான் தீரவேண்டுமா? இப்படிப்பட்ட ஒரு சந்தேகம் எங்களுக்கு வருகிறது. அவர்களும் கட்ட



5th March 1964] [திரு. ம. கமலநாதன்]

வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், அந்தச் சலுகை எங்கள் மாவட்டத்திற்கும் அளிக்கப்பட்டால், உண்மையிலேயே பிற்பட்ட மாவட்டமாக இருக்கும் எங்கள் சேலம் மாவட்ட மக்களுக்குப் பெரிய உதவி செய்வதாகும். அதற்காக கனம் அமைச்சர் அவர்களை நாங்கள் போற்றுவோம்; பாராட்டுவோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பு பன்முறை சொல்லியிருக்கிறேன். இப்பொழுது கிராமங்கள்தான் நகரங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. நகரத்திலே அவ்வளவு விழிப்பு இல்லை. கிராமங்கள் வழிகாட்டுவதைப் பார்த்துத்தான் நகரங்கள் விழிப்பு ஏற்பட வேண்டும். இப்பொழுது மாவட்டங்களில் சர்க்காரால் அமைக்கும் கல்லூரிகளுக்கு நன்கொடையாக ஐந்து லட்சம் ரூபாய் மக்கள் அளித்துவிட்டால் ஒரேயடியாக அளிக்காவிட்டாலும், இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகளில் அளித்துவிட்டால்—அதற்குப் பிறகு சர்க்கார் மற்ற பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளும் என்று சொன்னேன். சேலத்திற்கும் அது தான். லட்சம் ரூபாய் கொடுப்பது பற்றி மகிழ்ச்சி. பாராட்டுகிறேன். மேலும் அவர்கள் நன்கொடை அளிப்பார்கள் என்று நினைக்கிறேன். வட சென்னையில் துவக்கப்படும் கல்லூரியைப் பொறுத்தும் பணம் கட்ட வேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன். அவர்களும் கட்டப் போகிறார்கள். அந்த அம்மையாரும் கூடக் கட்டப் போவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ம. கமலநாதன்:** எல்லா மாவட்டங்களையும் விட தனிப்பட்ட முறையில் சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கனம் அமைச்சர் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். சேலம் மாவட்டம் எந்த வகையில் முன்னேறி இருக்கிறது? மற்ற மாவட்டங்களைப் பார்க்கும்போது அங்கெல்லாம் ஏராளமான முன்னேற்றங்கள் காணப்படுகின்றனவே, அவற்றில் ஒன்றையும் சேலம் மாவட்டத்தில் காண முடியாது.

முன்னாள் முதலமைச்சராக இருந்த ஒருவர், மேல் சபையில் பேசும்போது, எந்த எந்த மாவட்டத்திலிருந்து அமைச்சர்கள் வந்திருக்கிறார்களோ, அந்த மாவட்டங்களெல்லாம் நல்ல முறையில் வளர்ந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். 'எங்கள் மாவட்டத்தில்' என்று அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில், 'உங்கள் மாவட்டத்திற்கு ஒரு மந்திரி இருக்கிறார்' என்ற ஒரு குரல் கேட்டதும், உடனே அவர் 'புதிதாக வந்திருக்கிறார் அவர் என்ன செய்ய முடியும்?' என்று சமாதானம் சொன்னாராம். ஒரு அமைச்சர் இருந்தும் திருப்தி இல்லை. ஆனால் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இதுவரையிலும் இந்த அமைச்சரவையில் அந்த மாவட்டத்திற்கு ரெப்ரஸன்டேடிவ் ஆக ஒரு அமைச்சர் கூட இருந்தது கிடையாது. (கனம் திரு. எம். பக்தவத்சலம்: டாக்டர் சுப்பராயன் . . .) அதெல்லாம் தென் சேலத்தைப் பொறுத்த ரெப்ரசென்டேஷனாக இருக்கலாம். (சிரிப்பு) எங்கள் மாவட்டத்தினருக்கு அமைச்சரவையில் ரெப்ரசென்டேஷன் வேண்டுமென்று சொல்வது ஒரே ஒரு காரணத்திற்காகத்

தான். நீலகிரி மாவட்டத்திற்கும் அமைச்சரவையில் ரெப்ரசென்டேஷன் இல்லை என்பதை கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் சைகையாகக் குறிப்பிடுகிறார். அவருடைய நீலகிரி மாவட்டம் எந்த அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறதோ, அந்த அளவு அபிவிருத்திகூட எங்களுடைய மாவட்டத்தில் இல்லை. உதகைக்கு உல்லாச பிரயாணிகள் வருவதன் மூலம் கிடைக்கிற பணத்திலிருந்தே அந்த மாவட்டத்தின் அபிவிருத்தியை ஓரளவுக்குச் செய்துகொள்ளக் கூடும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சேலம் மாவட்டத்தில் மேட்டூரில் வைத்திருக்கிற தொழில்கள் மாத்திரம் சற்றேறக் குறைய 40 கோடி ரூபாய் முதலீடு உள்ளவை ஆகும்.

**திரு. ம. கமலநாதன் :** அதற்காக நன்றி செலுத்துகிறேன். என்னதான் மேட்டூரில் தொழில்களை ஆரம்பித்தாலும், அதெல்லாம் வட சேலக் கணக்கில் வராது. தென் சேலத்தோடுதான் அதெல்லாம் சேரும். ஆனால், வட சேலத்தில் குறிப்பாக எங்கள் நான்கு வட்டங்களை பார்க்க வேண்டும். எற்கனவே, மிட்-டர்ம் ரெவ்யூனில் கூட நான் சொன்னேன். ஐம்பதாயிரம் ஜனத்தொகைக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கிறது என்பதற்குப் புள்ளி விவரங்கள் நான் கொடுத்தேன். ஆகையால் இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. அதனால், எல்லா அமைச்சர்களும் சேர்ந்து கவனம் செலுத்தினால்தான் எங்களுடைய பின் தங்கிய சேலம் மாவட்டமானது ஓரளவுக்கு முன்னுக்கு வர முடியும்.

பொதுவாக நான் சொல்கிறேன். என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் நான் சொல்லவில்லை. சேலம் மாவட்டத்தை ஒட்டினாற்போல் ஒரு பக்கம் மைசூர் மாநிலமும் இன்னொரு பக்கம் ஆந்திர மாநிலமும் இருக்கிறது. அங்கெல்லாம் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளை நாங்கள் பார்க்கும்போது, சேலம் மாவட்ட வாசிகளாகிய எங்களுக்கு வயிற்றெரிச்சல் ஓரளவுக்கு ஏற்படுகிறது என்று சொல்லலாம். ஆந்திரப் பிரதேசத்திலிருந்து கிருஷ்ணகிரிக்கு வந்து அவர்களுடைய லாரிகள் முதலியவற்றுக்குப் பெட்ரோல் போட்டுக்கொண்டு போகிறார்கள். அதேபோல், மைசூர் மாநிலத்திலிருந்து ஹோசூருக்கு வருகிறார்கள். அடிக்கடி இந்தப் பகுதிகளுக்கு வந்து பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் அங்குள்ளவர்களுக்கு இருப்பதால், சேலம் மாவட்டத்தை, நல்ல அபிவிருத்தி செய்து வைத்திருந்தால் அவர்கள் நம்முடைய பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகளைப் பார்த்து, "சென்னை மாநிலத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது, பரவாயில்லை" என்று ஓரளவுக்கு ஆச்சரியப்படும்படியாகக் கூட இருக்கும். ஆகையால், இந்தக் காரணத்திற்காகவாவது, அரசாங்கம் தயவு செய்து எங்கள் சேலம் மாவட்டத்தை, குறிப்பாக வட சேலத்தை முன்னுக்கு கொண்டுவர வேண்டுமென்று அமைச்சரவையிலுள்ளவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.





உணவு தானியக் கொள்கையைப் பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் உண்மையிலே நல்ல பயன் ஏற்படுமானால் நானும் மகிழ்ச்சி அடைவேன். உணவு தானியக் கொள்கையைப் பொறுத்து, அகில இந்தியாவுக்கும் ஒரு கொள்கையை புவனேசுவர மாநாட்டில் வகுத்திருக்கிறார்கள். இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, வழிகாட்டி, அதை விசுவாசத்தோடு நாங்கள் பின்பற்றுவோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் டைரக்ஷன் தான் கொடுத்திருக்கிறார்கள். அந்த மாநாட்டின் தீர்மானம்தான் நிறைவேற்றி இருக்கிறார்களே தவிர, ஆனால் வெற்றிதான் கிட்டவில்லை. கிராமப்புறத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு அரசாங்கம் எந்த வகையில் என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும ஏதோ கீழே இருக்கிற சிப்பந்திகள் கொடுக்கிற புள்ளிவிவரங்களைக் காட்டிவிட்டால் போதாது. அவர்கள் கொடுத்த புள்ளிவிவரப்படியே 1962-63-ல் விளைந்த சராசரி அரிசியை விட 1963-64-ல் சராசரி உற்பத்தி ஐந்து ராத்தல்தான் அதிகப்பட்டிருக்கிறது என்றால் இவ்விஷயத்தில் நாம் செலவு செய்திருக்கும்படியான தொகை எவ்வளவு? ரசாயன உரம் எவ்வளவு மூட்டை போட்டிருக்கிறார்கள்? பசுந்தழை எவ்வளவு போட்டிருக்கிறார்கள்? அப்படி இருந்தும் சராசரி 5 ராத்தல்தான் அதிகப்பட்டிருக்கிறது என்றால் இது குறித்து நாம் பெருமைப்பட முடியாது.

இன்னமும் கிராமத்தில் உள்ள விவசாயிகள் பழைய முறைப்படியே தான் சாகுபடி செய்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கிற விதைகளிலே அவர்களுக்கு நம்பிக்கை இருப்பது இல்லை. கிராம சகாயக்குகள் மூலமாகத்தான் நாம் விதை விநியோகம் செய்து வருகிறோம். டைரெக்டாக விதை வாங்கி பயன்படுத்துகிற அளவுக்கு விவசாயிகளுக்கு நம்பிக்கை இல்லை. இரண்டு மூன்றாண்டு விதைகள் கூடக் கொடுக்கப்படுகிறது என்று குறை சொல்லப்படுகிறது. தழை உரம் தயாரிக்க பஞ்சாயத்துக்கள் புறம்போக்கு நிலத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இன்றையதினம் புறம்போக்கு நிலம் ஏழை எளிய ஹரிஜனங்களிடம் இருக்கிறது. அவர்களை நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தினால் தான் இங்கே தழை உரங்களை தயாரிக்க முடியும். இதில் பல சிக்கல் இருப்பதனால் இந்த ஏற்பாடும் பலனுள்ளதாக இல்லை. மேலும் பஞ்சாயத்து பழத் தோட்டம் என்ற முறையில் நாம் பண உதவி செய்கிறோம். அநேக இடங்களில் இந்த இனத்தில் பணத்தைச் சுரண்டலாம் என்பதனாலேயே பழத் தோட்டங்கள் போடுவதற்கு புறம்போக்கு நிலங்களில் இருந்து ஹரிஜனங்கள் பலாத்காரமாகக் கூட வெளியேற்றப்படுகிறார்கள். பண விரயம் ஆகக் கூடிய ஒன்றாக இந்தத் திட்டம் இருக்கிறதே தவிர, பலனுள்ளதாக இல்லை.

மேலும் பயிர்களுக்கு பூச்சி விழுகிறபோது பெரிய நிலச்சுவாந்தார்களால் தான் பூச்சி மருந்து அடிக்க முடிகிறது. ஒரு ஏக்கர் ஒன்றரை ஏக்கரா வைத்துக்கொண்டுள்ள விவசாயினால் இப்படிச் செய்ய முடிவதில்லை. அதனால் பெரிய நிலச்சுவாந்தார் அடித்தும்

பயன் இல்லை. காலரா, ப்ளேக் வரும்போது எப்படி அரசாங்கத்தில் இருந்தே தடுப்பு முறையில் எல்லோருக்கும் ஊசி போடுகிறோமோ அதுபோல பயிர்களுக்கு பூச்சி விழுகிறபோது—அந்தப் பகுதி முழுவதற்கும் அரசாங்கத்தின் மூலமாகவே மருந்து அடித்து பயிருக்கு ஏற்பட்ட நோயை போக்க ஏற்பாடு செய்தால்—நன்றாக இருக்கும். வேண்டுமானால் அதற்கு ஆகும் செலவு நிலவரியோடு நிலத்திற்குத் தகுந்தவாறு பிரித்து வசூல் செய்து கொள்ளலாம் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எல். ஆனந்தன்:** மதிப்பிற்குரிய சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, 1964-65-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச முன்வந்துள்ளேன். 1963-64வ ரவு செலவு திட்டத்தில் கோமுகி நதி நீர்த் தேக்கத்திற்கு 87 லட்சம் ரூபாயும், 1964-65 வரவு செலவு திட்டத்தில் மணி முத்தா நதி நீர்த் தேக்கத்திற்காக 91 லட்சம் ரூபாயும் நமது அரசாங்கம் ஒதுக்கியிருப்பதாக கள்ளக்குரிச்சி வட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு கோமுகி நதி நீர்த்தேக்க வேலைகள் துரிதமாக நடைபெறத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மேலும் அந்தப் பகுதியில் உள்ள கச்ராப்பாளையம் என்ற இடத்தில் அந்த ஆற்றுக்கு ஒரு மேல்பாலம் கட்டவேண்டியதாக இருக்கிறது. அதையும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் கோமுகி நதி நீர்த்தேக்க என்ஜினியர் ஜீப் கார் வேண்டுமென்று கேட்டு நான்கைந்து மாதங்கள் ஆகின்றன. இன்னும் ஜீப் கார் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதனால் திட்ட வேலைகள் தடைபடுகிறது. உடனடியாக ஜீப்கார் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேற்படி நீர்த்தேக்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ( Project allowance) ) கொடுத்தால் வேலைகள் துரிதமாக நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் வடமாமந்தூர் பகுதியில் கனிப்பொருள் இருப்பதாக, நிபுணர்கள் சுமார் 5 வருடகாலமாக பரிசீலனை செய்து தெரிந்தும்கூட இன்னும் மேற்கொண்டு வேலை எதுவும் நடைபெறவில்லை. அதையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தீ விபத்துக்கள் ஏற்பட்டால் தீ அணைக்கும் படை வருவதற்குள் எல்லாம் எரிந்து சாம்பலாகிவிடுகிறது. தீ விபத்தைத் தவிர்ப்பதற்கு தாலுக்காவுக்கு ஒரு தீ அணைக்கும் படையையாவது அமைத்துத் தருவது நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டும் அல்ல. கச்சராபாளையத்தில் ப்ரைமரி சுகாதார நிலையம் ஒன்று 1956-ல் ஆரம்பிக்கப்பட்டது. பணியாளர்களுக்குத்தான் கட்டிடம் கட்டப்பட்டதே தவிர, ஆஸ்பத்திரி கட்டவில்லை. போர் நெருக்கடி காரணமாக அதை நிறுத்திவிட்டார்கள். உடனடியாக அந்த ஆஸ்பத்திரி கட்டிடத்தையும் கட்டித் தரும்படி







யாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது டாக்டர் வீட்டில் தான் ஆஸ்பத்திரி இருக்கிறது. என்னுடைய தொகுதியில் மணலூர் பேட்டை வடபொன்பரப்பி, கச்சாரபாளையம் ஆகிய ஊர்களுக்கு பத்திரப் பதிவு நிலையங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். அதுபற்றி கனம் செய்தித்துறை அமைச்சர் என் தொகுதியில் 1952-ல் சுற்றுப் பிரயாணம் வந்தபோது நான் ஒரு விண்ணப்பம் கொடுத்துள்ளேன். ஆகவே உடனடியாக ஆங்காங்கே பத்திரப்பதிவு நிலையங்கள் திறக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கள்ளக்குரிச்சிக்கு மேல் குடி நீர் திட்டம் வேண்டுமென்று பல ஆண்டுகாலமாக நகர மக்களும், நகர பஞ்சாயத்தும் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டும் இன்னும் வேலை ஆரம்பிக்கவில்லை. அந்த வேலையையும் உடனடியாக ஆரம்பித்து பாதி தொகையைக் கடனாகவும், பாதியை மானியமாகவும் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் தியாக துர்கத்திலிருந்து திருவரங்கம் வரையிலுள்ள ரோடு 18 மைல் நீளம். ரிஷிவந்தியத்திலிருந்து மங்கலம் வரை உள்ள ரோடு 25 மைல். மணலூர் பேட்டையிலிருந்து காங்யனூர், பள்ளிப் பட்டு, வாணாபுரம் வரையிலுள்ள ரோடு நீளம் 25 மைல் தியாக துர்க்கம், பழைய சேறுவங்கூர்; விரியூர் குளத்தூர் வரை உள்ள நீளம் 19 மைல். இந்த நான்கு ரோடுகளையும் பல பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் பராமரிக்க வேண்டி இருப்பதன் காரணமாக மேற்படி ரோடுகளைச் செப்பனிடும் வேலை சரியானபடி நடைபெறவில்லை. ஆகவே, மெற்படி ரோடுகளைச் செப்பனிடும் பொறுப்பைப் பொதுப்பணித் துறையினரே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அங்கு பஸ் ரூட்டும் விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். சேலம் ஜில்லாவில் என்னுடைய தொகுதியான சேர்வாராயன் மலை-ஏற்காட்டு தொகுதியிலுள்ள குறைபாடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சேர்வாராயன் மலையிலே இருக்கிற சாமியின் பெயர் சேர்வாராயன். அந்த சாமி இருக்கிற பகுதியிலே இப்போது மாக்கல் வெட்டி வருகிறார்கள். அந்த மலைப் பக்கத்திலே இருக்கிற இன்னும் நான்கு மலைகளிலும் மாக்கல் வெட்டுகிறார்கள். அந்த சாமி மலை ஜாதியினருக்குக் குல தெய்வம். ஒவ்வொரு ஆண்டும் சாமிக்குப் பூந்தேர் கட்டி இழுத்து சேவித்து வருகிறோம். அந்த சாமி இருக்கும் இடம் ஒரே பாறையாக இருக்கும். பாறையின் உள்ளே வங்காகப் போகிறது. நாலைந்து மைல் போகிறது. அதற்குள் நான் 10, 20 அடி

போனேன். அதற்கு மேல் போக முடியவில்லை. அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கொல்லி மலை, பால மலை, பெரிய மலை போன்ற பகுதிகளில் இருக்கும் எல்லா மலை ஜாதியினருக்கும் அந்தச் சாமி குல தெய்வம். திரு விழா சமயத்தில் சேலத்தில் இருந்து கூட ஜனங்கள் வருகிறார்கள். கடைகள் எல்லாம் வைக்கிறார்கள். அந்த சாமி இருக்கும் இடத்தில் கல் வெட்டுகிறவர்கள் இந்த ஆண்டு திருவிழாவைத் தடுத்து விட்டார்கள். அது பற்றி மலைஜாதியினர் எல்லாம் சேர்ந்து ஒரு அறிக்கையை என்னிடம் கொடுத்தார்கள். சாமி இருக்கிற இடத்தில் கல் வெட்டி அந்த வங்கு விழுந்துவிட்டால் சாமிக்கு சிலாக்கியமில்லாமல் போய்விடும். ஆகவே, சாமி இருக்கும் இடத்தில் மட்டும் மாக்கல் வெட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பலாக்காட்டிலிருந்து ஐந்து மைல் தூரமுள்ள கொட்டச் சேரிக்கு ரோடு வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம். கொட்டச் சேரியிலிருந்து ஏற்காட்டுக்கு 25 மைல் வரவேண்டும். 25 மைல் வந்தால்தான் ஜனங்கள் உப்பு, புளி மிளகாய் போன்றவற்றை வாங்கக் கூடிய சந்தையைக் காணமுடியும். ஆண்கள் சாக்குகளிலும், பெண்கள் கூடைகளிலும் சந்தையிலிருந்து பொருள்களை வாங்கிக் கொண்டு நடந்தே திரும்பிச் செல்வார்கள். அவர்கள் போகவர 50 மைல் நடந்து செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, தற்போதுள்ள ரோடு கொட்டாச்சேரி வரை இருப்பதை மேலும் ஐந்து மைல் தூரம் போட்டு பாலக்காடு வரை ரோடு வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓமலூர் 5,000 ஜனத்தொகையுள்ள இடம். அந்த ஊருக்கு ஒரு பெண் டாக்டர் வேண்டுமென்று கனம் அமைச்சர் அம்மையார் அவர்களைக் கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நான் ஊருக்குச் சென்றால் 'இங்கு ஒரு பெண் டாக்டர் வேண்டும்' என்று என்னைப் பேய் போல எல்லோரும் பிடித்துக் கொள்கிறார்கள். யாருக்கு என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் ஆபீசைத் திறக்கவந்த சமயத்தில்கூட இது பற்றி எடுத்துச் சொன்னது அவர்களுக்கு ஞாபகம் இருக்குமென்று நினைக்கிறேன். உடனடியாக ஒரு பெண் டாக்டரைப் போட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காடயர்ம்பட்டிக்கும் டேனிஸ்பேட்டைக்கும் இடையிலே ஒரு ஆறு ஓடுகிறது. அங்கு ஒரு பாலம் கட்டினால் ஜனங்கள் ரயில்வே ஸ்டேஷனுக்கு வரவும் மற்றும் போக்குவரத்துக்கும் வசதியாக இருக்கும். டேனிஸ்பேட்டையிலிருந்து ஓமலூருக்கு காடயாம்பட்டி ஊர் வழியாக பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





பனைமரத்துப் பட்டியில் தும்பல்பட்டி கிராமம் நட்ட நடுக்காட்டில் இருப்பது கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்களுக்குத் தெரியும். அங்கே குறுக்கே ஒரு ஆறும் ஓடுகிறது. வண்டி போக வசதி இல்லை. அங்கு ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும். அதோடு அந்தப் பகுதியில் ஒரு பள்ளிக் கூடம் இருப்பது மிகவும் மோசமாக இருக்கிறது. அது பற்றியும் கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்களிடம் சொன்னது ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். ரோடு ஓரமுள்ள கம்மாளப் பட்டியிலுள்ள மூன்று ஏக்கர் நிலத்தை வசதியுள்ள ஒருவர் பிடித்துக் கொண்டு விடமாட்டேன் என்கிறார். அந்த இடத்தை எடுத்து, அதில் பஞ்சாயத்து யூனியன் ஆபீசும், பள்ளிக் கூடமும் கட்டிக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். இதைப் பற்றிக் கலெக்டருக்கு எழுதினோம். ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் எல்லோரும் வந்து பார்த்தார்கள். இதை உடனடியாகச் செய்கிறோம் என்று கூட அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஒரு அறிக்கை கொடுத்தார்கள்.

அடுத்தபடியாக வசதியில்லை என்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்வது எங்களுக்கு வருத்தத்தைத் தருகிறது. இந்த அரசாங்கம் நல்ல அரசாங்கம்தான். ஆனால் ஆபீசர்கள் இப்படியெல்லாம் சொல்கிறார்கள். முதலில் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள், அடுத்தபடியாக இப்படிச் சொல்கிறார்கள். அங்குள்ள, புறம்போக்கு நிலத்தை எடுத்து விவசாயம் செய்பவர்களை அப்புறப்படுத்தி பள்ளிக்கூடம் போன்றவை கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1-00 p.m.

ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் போன்றவை கட்ட வேண்டுமென்று மூன்று வருடங்களாக கேட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். மதராஸிலிருந்து அங்கு வந்து பார்த்து கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அதில் இன்னும் சரியான கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள். மலை ஜாதிக்காரர்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் பள்ளிக்கூடங்கள், ஹாஸ்டல்கள் போன்றவை கட்டவேண்டும்.

(மணி அடிக்கப்பட்டது.)

* திரு. எஸ். முத்துலிங்கம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 1964-65-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கைமீது நான் சில பல கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். அரசாங்கம் விவசாயிகளுக்குக் கடன் மூலம் ட்ராக்டர்கள் கொடுக்கிறார்கள். விவசாயத்தை அபிவிருத்தி செய்ய அவை உபயோகப்படுகிறது. வந்தவாசியில், அந்த ட்ராக்டர்களை விவசாயிகள் வாங்கிச் சென்று விவசாயத்தை மேலும் மேலும் விருத்தி செய்து கொண்டு வருகிறார்கள். அப்படி விவசாயத்தை விருத்தி செய்து வரும்போது அந்த ட்ராக்டர்களுக்கு அரசாங்கத்தால் டாக்ஸ் எக்ஸெம்ப்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திலிருந்து அந்த ட்ராக்டர்களை கடனுகை வாங்கும்போது

ஆர்.ஸி. புத்தகத்தில் அவர்கள் அக்ரிகல்சரல் பர்பஸ்க்கு என்று தான் எழுதியிருக்கிறது. அப்படி எழுதியதை அந்தப் பகுதியில் உள்ள ஆர்.டி.ஓ., ப்ரேக் இன்ஸ்பெக்டர், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இவர்கள் எல்லாம் சேர்ந்து அப்படியிருப்பது சரி அல்ல டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சரல் எஞ்சினியரிடம் இருந்து விவசாயத்திற்கு என்று சர்டிபிக்கட் வாங்கி வந்தால்தான் அந்த எக்செம்ஷன் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். அதுபோல் அக்ரிகல்ச்சரல் எஞ்சினியரிடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்குவது என்பது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே அதை நிவர்த்திக்க வழிவகை செய்யவேண்மென்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் ட்ராக்டர்களை உபயோகிக்கும்போது அந்தந்த கிராமங்களிலுள்ள நிலங்களில்தான் உபயோகிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். விவசாயிகள் மெயின் ரோடிற்குச் சென்று விவசாயத்திற்கு வேண்டிய புண்ணாக்கு, உரம் போன்றவற்றை வாங்கி வருவதானாலும் சரி அல்லது எஞ்சின் கெட்டுப் போனால் அதை ரிப்பேர், செய்ய டவுனுக்கு வரவேண்டியிருப்பதால் அப்படி டவுனுக்கு வரும்போது மெயின் ரோட்டில் வரக் கூடாது என்று விதி இருக்கிறது என்று போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும் ப்ரேக் இன்ஸ்பெக்டரும், ஆர்.டி.ஓ.-ம் அதை மெயின் ரோடிற்கு வரவிடாமல் தடுப்பதற்காக வேண்டி ட்ராக்டர் ஓனர்கள் மீது வேண்டுமென்றே பல சாக்குப் போக்கு சொல்லி கோர்ட்டுக்கு இழுத்து பலவித கஷ்ட நஷ்டங்களை உண்டு பண்ணி வருகிறார்கள். விவசாயத்தைப் பெருக்க ட்ராக்டர்கள் கடனாக வாங்கப்பட்டிருந்தும் விவசாயிகளுக்கு பெரிய கஷ்ட நஷ்டங்களை உண்டு பண்ணுவதை தவிர்க்க தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று. கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு காலாகாலத்தில் பிண்ணாக்கு, உரம் போன்றவை சரிவர கிடைப்பதில்லை. அப்படி கிடைக்காததால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு நல்லமுறையில் உரம் கிடைப்பதற்கு சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து விவசாயத்திற்காக பம்ப் செட்ஸ் வாங்கி அதைப் பொருத்திக் கட்டுவதற்காக சிமெண்ட் முதலியவை உடனடியாகக் கிடைப்பதில்லை. சிமெண்ட் தேவை என்று தாசில்தாரிடம் மனு செய்தால் தாசில்தார் ஆபீஸிலிருந்து ஆறு மாதங்கள் கழிந்து ஒரு மூட்டை சிமெண்ட்டுக்குமேல் கிடைப்பதில்லை. இப்படிக் கொடுத்தால் எப்படி பம்ப் செட்ஸ்களை வைத்து பொறுத்த முடியும் என்பதை சிந்தித்துப் பார்த்து, விவசாயிகளுக்கு சிமெண்ட் சரளமாகக் கிடைக்கத் தக்க அளவில் சர்க்கார் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கிராமங்களில் சர்க்கரை கிடைப்பது அரிதாக இருக்கிறது. சர்க்கரையை நாங்கள் பார்த்ததேயில்லை என்று சில பகுதிகளில் இருந்து ரிப்போர்ட் வந்து கொண்டிருக்கிறது. கிராமங்களில் உள்ள பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம்





சர்க்கரையை விநியோகிக்குமாறு அதற்கு வேண்டிய வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, வந்தவாசியில் குடிநீர் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று பத்து ஆண்டுகளாக அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தோம். அம்முயற்சி காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக அங்கு குடிநீர் திட்டத்தை அமல் செய்யவேண்டுமென்று திட்டம் இடப்பட்டது. ஆனால் இன்னும் அது வரவில்லை. கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் வந்தவாசிக்கு வந்திருந்தபோது இந்த விஷயம் பற்றி அங்குள்ள மக்களும், நானும் அவர்களிடம் கூறினோம். எமர்ஜன்ஸி காலத்தை முன்னிட்டு அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் கோரியபடி துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றுவரை அது பற்றி நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது. அங்குள்ள மக்கள் பலவித கிணறுகளில், ஏரிகளில், குட்டைகளில் இருந்து தண்ணீர் எடுத்து குடிக்கிறார்கள். அப்படி தண்ணீர் எடுத்து அருந்துவதால் நரம்புச் சிலந்தி அம்மை, காலரா போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள். இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று அரசாங்கத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஹரிஜன மக்கள் குடியேறியிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் அந்த இடத்திலிருந்து ஹரிஜன பெருங்குடி மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி அங்கு பழ மரங்களை வைக்கவேண்டுமென்று பஞ்சாயத்து போர்ட் பிரெசிடெண்ட்களும், பொறுப்புள்ள நபர்களும் சேர்ந்து அவர்களை காலி செய்யும்படி துன்புறுத்துகிறார்கள். அங்கு பழ மரங்களை வைப்பதனால் பத்து ஆண்டுகள் கழித்துத்தான் அது பலன் தரும். அதனால் சர்க்காருக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டு விடாது. ஆகவே, அந்த பாமர மக்கள் அங்கு வாழ வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் எந்தவிதமான பெரிய தொழிற்சாலையோ அல்லது எந்தவிதமான சிறிய தொழிற்சாலையோ இதுவரையிலும் ஏற்படுத்தியதில்லை. எங்கள் பகுதியிலிருந்து எந்த அமைச்சரும் இல்லாததினால்தான் இந்தக் குறைகள் இருக்கின்றனவோ என்னவோ தெரியவில்லை. இவ்வளவு காலமாக எங்களுடைய வந்தவாசி பகுதிக்கு வரப்போகிறது என்று சொல்லிக்கொண்டிருந்த நூற்பு ஆலையை இப்போது வேலூருக்கு கனம் தொழில் அமைச்சர் அவர்கள் மாற்றி கொடுத்துவிட்டார்கள். இந்த விஷயத்தில் நான் மிகவும் வருத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

மேலும், எங்கள் வந்தவாசிப் பகுதியில் அமையப்பூண்டி, கீழ்கொங்கலூர் குன்னத்தம்பூண்டி, கொட்டை, வழூர், [illegible], பொன்னூர், தேசூர் ஆகிய கிராமங்களில் எல்லாம்

நெசவாளர்கள் அதிகமாக இருப்பதினால் அவர்களுக்கு விசேடமாக எந்தவிதமான சலுகையும் இல்லாமல் இருப்பதினால் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த நெசவாளர்கள் முன்னேறுவதற்குரிய வழியில் அவர்களுக்கு ஒரு நூற்பு ஆலையை அமைத்துக்கொடுப்பதற்கு தொழில் அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. க. தா. பெருமாள் ராஜு:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில கருத்துக்கள் தெரிவிக்க விரும்புகிறேன். சமீபத்தில் புவனேஸ்வரத்தில் நடந்த மகாநாட்டில் நிறைவேற்றிய சோஷியலிஸ சமுதாய அமைப்பு தீர்மானத்தை உருவாக்குவதற்கு நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். நாம் அன்றாடம் உபயோகிக்கின்ற உணவு தான்யங்களைப் பொறுத்த வரையில், அடிக்கடி புஞ்சை தான்யங்களையும் நஞ்சை தான்யங்களை மாற்றி மாற்றி பரிமாறிக் கொள்ள வேண்டும். மேலும், துணி வகையிலும் நாம் ஆடம்பர வாழ்க்கையை நடத்தக் கூடாது. அதோடு லான்ட் ரிபார்ம் சட்டத்தை திருத்தி அமைத்து ஸ்டான்டர்ட் ஏக்கரை இன்னும் ஓரளவுக்கு குறைத்து திருத்தவேண்டும். இப்படி பல காரியங்களை செய்தால் நாம் நம்முடைய லட்சியத்தில் வெற்றி பெற முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியைப் பொறுத்த வரையில் சமீபத்தில் லோயர் பவானிப் பிரதேசத்தில் அங்குள்ள தீர்வையை பயிர்வாரியாக சீர்படுத்துவதற்காக சில அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறாகப்போய்விடும் என்று நான் நினைக்கிறேன். இப்போது இருக்கின்ற முறையே நல்லதாகத்தான் இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் நன்கு பரிசீலித்து விவசாயப் பெருமக்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, பழைய ஆயக்கட்டு பிரதேசத்தில் அதாவது தடைப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனவசதியுள்ள பிரதேசத்தில் முன்னால் இருந்த நிலைமையை விட இப்போது மிகவும் மோசமாக இருக்கிறது. கனம் அங்கத்தினர் குழந்தை அம்மாள் அவர்கள் இந்த பிரதேசத்திற்கு இருக்கின்ற தீர்வைப் பற்றி உயர்த்துவதற்கு பரிசீலிக்கவேண்டும் என்று முன்பு சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு லோயர் பவானி பிரதேசத்தில் ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் மதிப்பு இருக்கிறது. ஆனால் பழைய கால்வாய் பாய்கின்ற இடங்களில் தரம் மிகவும் குறைந்து வருகிறது. இப்போது தடைப்பள்ளி, அரக்கன் கோட்டை பாசன வசதியுள்ள பிரதேசத்தில் எல்லாம் நிலங்கள் மிகவும் க்ஷீணித்து வருகின்றன. லோயர் பவானி பிரதேசத்தில் ஒரு ஏக்கருக்கு 30 மூட்டை கிடைக்கிறது என்றால் தடைப்பள்ளி-அரக்கன்கோட்டை சானல் பிரதேசத்தில் ஒரு ஏக்கருக்கு 20, 25 மூட்டைதான் விளைகிறது. ஆகவே இப்போது இருக்கின்ற தீர்





வைமுறையில் ஏதாவது திருத்தங்கள் செய்து ஓரளவுக்கு சமப்படுத்துவதற்கான ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கின்ற நிலத்தீர்வையை எடுத்துக் கொண்டால் முன்னால் ஏக்கர் ஒன்றுக்கு 30 ரூபாய் என்றிருந்தது. இப்போது 40 ரூபாய் அளவில் உயர்ந்திருக்கிறது. அதோடு கிஸ்தி வசூல் செய்யும் விஷயத்தில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதத்தில் வசூல் செய்கிறார்கள். இந்த விஷயத்தில் நான் தெரிவிக்க விரும்புவது, இப்போது வசூல் செய்கின்ற முறையில் சிறிது மாற்றம் ஏற்படுத்தி ஆண்டில் இரண்டு தடவைகள் வசூல் செய்தால் நல்லது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது இப்போது இருப்பதை மாற்றி இரண்டு தடவையாக, ஆண்டில் ஒரு தடவை செப்டம்பர் மாதத்திலும், இன்னொரு தடவை மார்ச் மாதத்திலும் வசூல் செய்தால் நலமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நாம் அதிகப்படியாக சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்காக ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். என்னுடைய கருத்து என்னவென்றால், சர்க்கரை ஆலைகள் பெருக பெருக உணவு தான்ய அபிவிருத்தி குறைந்து கொண்டே போகும் என்பதுதான். ஓரளவுக்கு சர்க்கரை ஆலை விஸ்தரிப்பை குறைப்பதற்கு முயற்சிக்கவேண்டும். இல்லையென்றால் உணவு தான்யங்களின் விலை அதிகரித்துக்கொண்டே போகும். ஆகவே இதைப்பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல் சம்பந்தமாக, கோயம்புத்தூர் ஜில்லாவில் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு மூட்டை வீதம் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் மூன்று ஏக்கர்கள், நான்கு ஏக்கர்கள் உள்ளவர்களுக்கெல்லாம் ஓரளவுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நெல் விலை இப்போது 30 ரூபாய் என்று விற்கப்படுகிறது. இதே அளவுக்கு ப்ரொக்யூர்மென்ட் செய்யும் போதும் நெல்விலை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்களுடைய தாளவாடி பிர்க்காவில், ஒரு பட்டு ஃபாக்டரி நடந்து கொண்டு வருகிறது. இதை நல்லமுறையில் நடத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே இதை சர்க்காரே எடுத்து திறம்பட நடத்தி, ஏழை மக்கள் இதன் மூலம் நன்மை பெறுகின்ற அளவுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தாளவாடி பஞ்சாயத்து யூனியனில், ஹொசூர் என்ற இடத்தில் கம்பளி நெசவு நடைபெறுகிறது. இந்த இடத்தில் வந்து மைசூரிலுள்ளவர்கள் கம்பளி உரோமம் வாங்கிக்கொண்டு போகிறார்கள். ஊட்டியிலுள்ள ஆட்டுக்கடாக்களை வாங்கிக் கொடுத்து அதன் மூலம் உரோமத்தை கொண்டு நல்லமுறையில் பயன்படுத்துவதற்கான வசதியிருக்கவேண்டும். இந்தப் பகுதியில் முக்கியமாக விவசாயம் அபிவிருத்தி அடைய

[திரு. க. தா. பெருமாள் ராஜு] [5th March 1964

முடியவில்லை. இங்குள்ள மக்கள் எல்லாம் ஏழை எளிய மக்களாக இருக்கிறார்கள். கல்வி அறிவு இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் நல்லமுறையில் வாழ்வதற்கான ஏதேனும் வழி வகை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தாளவாடியில் ஜீப் சர்வீஸ் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக 16 மைல் காட்டு இலாக்கா ரோடு இருக்கிறது. இந்த ரோட்டை பாரஸ்ட் டிப்பார்ட்மென்டார் ஹைவேஸ்-ஸிடம் கொடுத்துவிட்டார்கள். இப்போது ஹைவேஸ் டிப்பார்ட்மென்ட் இதை நல்லமுறையில் வைத்துக் கொள்ளாமல் இருப்பதினால் ஜீப் சர்வீஸ் ஒழுங்காக நடத்த முடியவில்லை ஆகவே ஒவ்வொரு வருடத்திற்கும் நான்கு மைல், ஐந்து மைல் என்ற அளவிலாவது ரோட்டை பழுது பார்த்தால் ஜீப் சர்வீஸை நல்லமுறையில் நடத்த முடியும். ஆகவே இதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாளவாடி, பர்கூம் பகுதிகளில் அதிகமாக அரிஜன மக்கள் வாழ்கிறார்கள். அரிசன மான்யத்தில் இவர்களுக்காக அதிகமாக செலவிடப்போவதாக காணவில்லை. மேலும் அரிசன மக்களுக்கென்று ஜில்லாவாரியாக சுமார் 80 வீடுகள் வருஷம் ஒன்றுக்கு கொடுக்கப்போவதாக திட்டம் வகுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை தாளவாடி, பர்கூர் போன்ற பகுதிகளுக்கு விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. டி. கடம்பவனசுந்தரம்:** மதிப்புக்குரிய கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நடைமுறை ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் மீது கடந்த மூன்று தினங்களாகவும் இன்றும் தொடர்ந்து நடைபெறும் இந்த விவாதத்திலே சர்க்கார் நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே 234 லட்சம் ரூபாய் துண்டு விழுவதாகக் காட்டப்பட்டிருக்கிறது. அதுவும்கூட குறிப்பிட்ட ஒருசில பொருள்களுக்கு விற்பனை வரியில் ஒரு சதவீதத்தை அதிகப்படுத்தி அதன் மூலமாக 1 கோடி ரூபாய் வருமானத்தைப் பெற்று, மிச்சமாகத்தான் 234 லட்சம் ரூபாய் துண்டு விழுவதாகக் காட்டப்பட்டிருக்கிறது. பருத்திக்கும், பருத்தி நூலுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. வரி விதித்திருக்கக் கூடிய காரணம் சரியானாலும்கூட, இந்த வரி விதிப்பதனால் நூல் விலைகள் அதிகமாகக் கூடி விடாது என்றாலும்கூட, சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து சாதாரணமாக சொல்லுவது போல, நொண்டி மாட்டுக்கு சறுக்கினது சாக்கு என்று, எந்தக் காரணத்திற்காக எந்தச் சந்தர்ப்பத்தில் விலையைக் கூட்டலாம் என்று எதிர்பார்த்திருக்கக் கூடிய ஆலை முதலாளிகளும், இடையில் உள்ள வியாபாரிகளும் நூல் விலையைக் கூட்ட முயற்சி செய்வார்கள். அந்த மாதிரி ஆபத்து இந்த வரி விதிப்பினால் இருக்கிறது என்பதை இங்கே நான் எடுத்துக்



5th March 1964] [திரு. டி. கடம்பவனசுந்தரம்]

காட்ட விரும்புகிறேன். இந்த வரி விதிப்பினால் கைத்தறித் தொழில் பாதிக்கப்படுமானால் போதிய நிவாரணம் அளிக்கப்படும் என்று முதன் மந்திரி அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். சாதாரணமாக கைத்தறிக்கு ஆபத்து வரும் சந்தர்ப்பத்திலெல்லாம் நிவாரணம் அளிக்கும் முறையில் அதிக நாளாக இருப்பது விற்பனையில் கழிவுத் தொகை கொடுப்பதும், நியாய விலையில் நூல் கொடுக்க நூல் பேல்களைக் கொள்முதல் செய்து கொடுக்கும் வழக்கத்தை நம் சர்க்கார் கையாண்டு வந்திருக்கிறார்கள். இந்த இரண்டு முறையிலும் பலன் அடையக் கூடிய நெசவாளர்கள் கூட்டுறவு முறையில் சேர்ந்தவர்களுக்குத்தான் இருக்க முடியும். மீதம் உள்ள நெசவாளர்களாகிய 50 சதவீதத்தினர் வரையில் கூட்டுறவு முறையில் சேராத நெசவாளர்களுக்கு எந்த விதத்தில் நிவாரணம் அளிக்கப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. சமீப காலத்தில் கூட்டுறவு முறையில் சேராத நெசவாளர்களுடைய நன்மைக்கு ஏற்படுத்தப்படவிருக்கிற கைத்தறி நிதிக் கார்ப்பரேஷனுக்கு மத்திய சர்க்காரிலே அனுமதி அளிக்கப்பட்டுவிட்டது என்று சில தினங்களுக்கு முன் பத்திரிகையில் பார்த்தோம். கடந்த 2—3 தினங்களுக்கு முன் 10-வது அகில இந்திய கைத்தறி பொருட்காட்சியைத் திறந்து வைத்த தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் ஒரு மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு விடும் என்றும் உறுதி அளித்திருக்கிறார்கள். கூட்டுறவு முறையில் சேராத நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஒரே திட்டமாக எதிர்பார்க்கும் இந்த கார்ப்பரேஷனை ஆரம்பித்தால்தான் இந்த வரி விதிப்பினால் ஏற்படும் ஆபத்தான விலை உயர்விலிருந்து கூட்டுறவில் சேராத நெசவாளர்களைக் காப்பாற்ற முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிற நேரத்தில் எதிர் கட்சி நண்பர்கள் இந்த நிதி நிலை அறிக்கை எப்படி இருக்கிறது என்று சொன்னார்களென்றால், சிலர் சாரம் அற்றது என்று சொன்னார்கள், சிலர் புரட்சிகரமான திட்டங்கள் எதுவும் இல்லை என்று சொன்னார்கள், சிலர் கானல் நீர் போன்றது என்று சொன்னார்கள். இந்த மாதிரி முறையில் கருத்துக்களை இங்கே பரிமாறினார்கள். திட்டமிட்ட பொருளாதாரத்தை ஒப்புக்கொண்டு அந்த வகையிலே ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, அவைகளை நிறைவேற்றுவதற்குக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிற ஒரு சர்க்கார் ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போதும் நிதி நிலை அறிக்கையிலே எந்த வித புரட்சியையும் ஏற்படுத்தி விட முடியாது என்று உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஐந்தாண்டுத் திட்டத்திலே குறிப்பிட்ட ஆண்டில் என்னென்ன திட்டங்களைச் செய்யவேண்டும், அதற்கான நிதி வசதிகளை எப்படி திரட்டவேண்டும். அதோடுகூட அதிகப்படியாக என்னென்ன காரியங்கள் செய்யலாம் என்கின்ற நோக்கமே இருக்கவேண்டும். அந்த நிலைமையில்தான் இந்த நிதி நிலை அறிக்கையில் நல்ல அம்சங்களைப் பார்க்கிறோம்.

[திரு. டி. கடம்பவனசுந்தரம்] [5th March 1964

முதல் முதலாக எல்லா மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர் வருமானத்தைக் கணக்கிடாமல் இலவசக் கல்வி என்று அறிவித்திருக்கிறார்கள். இரண்டாவதாக, விலை உயர்வைத் தடுக்க தாற்காலிக நடவடிக்கையாக உபயோகிப்போர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவ வழிவகை செய்திருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு சமூகக் காப்புத் திட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். முதியோருக்கு நிரந்தரமாக பென்ஷன் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதோடு அவசர கால நிலைமைக்காக கடந்த ஆண்டில் ஒத்தி வைக்கப்பட்ட திட்டமான பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகப்படி மான்யம் கொடுக்க, ரோடுகளை விஸ்தரிக்க, பஞ்சாயத்து அலுவலகக் கட்டடங்கள் கட்ட, அலுவலர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. அதுவும் இன்றைய நிதி நிலை அறிக்கையில் அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள், செயல்படுத்த திட்டமிட்டிருக்கிறார்கள். அதோடுகூட நகர்புற தண்ணீர் திட்டமும் இங்கே சேர்க்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நீர்பாசனத் திட்டத்தில் புதிதாகக்கூட மணிமுத்தாறு நீர்த்தேக்கமும், கடானா நீர்த்தேக்கமும் அமைக்க, அவைகளை அமல் நடத்த ஒப்புக்கொண்டு அதற்காக அடையாள மான்யமும் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி பல நல்ல காரியங்களைப் புகுத்தி இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு நமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

கல்வியில் நாம் முன்னேறியிருக்கிறோம். இந்த ஆண்டு அதற்கு முடிவைத்தாற்போல எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிப்பது என்று புகுத்தியிருக்கிறோம். கடந்த ஆண்டிலேயே இந்தத் திட்டம் அறிவிக்கப்படும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் என்ன காரணத்தினாலோ அது இந்த ஆண்டுதான் புகுத்தப்பட்டிருக்கிறது. இதனால் பயனடையும் 17 சதவீதம் மாணவர்களை விட 83 சதவீதம் மாணவர்களுடைய பெற்றோர்கள் பெரிய இக்கட்டிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்கிற உண்மைதான் முக்கியமானது.

பொதுவாக நமது தமிழ்நாட்டுக்கு ஒரு நல்ல பெயர் உண்டு. 'முதன் முதலாக நல்லவை யாவும் முனைந்து முடிப்பது தமிழ்நாடு' என்ற நற்பெயர் உண்டு. நல்ல திட்டங்கள் யாவையும் எடுத்து முடித்து நல்ல பெயர் வாங்கிக் கொடுப்பதில் நமது தமிழ்நாட்டு சர்க்கார் என்றும் முன்னணியில் இருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையிலும் முன்னணியில் இருக்கும் பல அம்சங்களை இங்கே புகுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய தொகுதி பற்றி ஒரு வார்த்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நகர்ப்புற தண்ணீர் திட்டத்தை அமல் நடத்துவதற்கென்று 2 கோடியே சில்லறை ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே அருப்புக்கோட்டை தண்ணீர் திட்டத்தைப் பற்றி கடந்த பட்ஜெட் கூட்டத்திலே பேசினேன், மான்ய விவாதத்திலும் பேசினேன்.



5th March 1964] [திரு. டி. கடம்பவனசுந்தரம்]

64 லட்சம் ரூபாய்க்கு திட்டம் தயாரிக்கப்பட்டு சுகாதார அமைச்சர் அங்கீகரித்து, முதல் அமைச்சரும் அங்கீகரித்தாகிவிட்டது. இந்த மான்யத்திலேயே இந்தத் திட்டம் செயல்படும் முறையில் அடையாள மான்யமாவது ஒதுக்கி தண்ணீர் கஷ்டத்தால் கஷ்டப்படும் அருப்புக்கோட்டை மக்களுக்கு நிவாரணம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். மேலும் என் தொகுதி பூராவுமே எந்த நதிப் பாசனமும் உள்ள தொகுதி அல்ல. கண்மாய் பாசனத்தையும் மழை காலத்தில் பெருக்கெடுத்து ஓடும் காட்டாறுகளையும் கொண்ட பகுதி அது. மேலும் அங்கே பெருவாரியான விளைச்சல்பொருள் பருத்தி. பருத்தி தீவிர சாகுபடித் திட்டத்தை அருப்புக்கோட்டை தொகுதிக்கு விஸ்தரித்தால் அங்கு உள்ள விவசாயிகளுக்கு நல்ல நிலைமை ஏற்படும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு இந்த அறிக்கையில் வாய்ப்பை அதிகப்படுத்தியிருக்கிறோம். கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலும்கூட இதற்கு அதிக மான்யம் ஒதுக்கியிருந்தோம். என்னுடைய தொகுயில் எல்லா திட்டங்களும் பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனை முடிந்தபிறகுதான் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியும் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில், மாவட்டம்தோறும் ஒரு 'இன்வெஸ்டிகேஷன் செக்ஷன்' ஏற்படுத்தி, அந்தப் பகுதியில் என்னென்ன நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று பரிசீலனை செய்து, திட்டங்களை தயாராக வைத்து இருந்தால், பிறகு சர்க்கார் மான்யம் ஒதுக்கும் போது, அதை உடனே நிறைவேற்ற வசதி இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to morrow. 1-30 p.m.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

114. *Notification issued with G.O. Ms. No. 3482, Food and Agriculture, dated 28th November 1963 declaring "mangoes" as an agricultural produce for the purposes of the Madras Agricultural Produce markets Act, 1959. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

115. *Notification issued with G.O. Ms. No. 3521, Food and Agriculture, dated 2nd December 1963 regarding regulation of trade in paddy in Chingleput district. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

116. *Preliminary Notification issued with G.O. Ms. No. 3592, Food and Agriculture, dated 10th December 1963 regarding regulation of trade in Cashewnut in the Thanjavur district. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

117. *Notification issued with G.O. Ms. No. 3600, Food and Agriculture, dated 10th December 1963 regarding market area and notified market areas to markets at Mannargudi, Kuttalam and Kumbakonam for the purposes of the Madras Agricultural Produce Markets Act, 1959 in respect of paddy. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

**B. Reports, Notifications and other papers.**

***Nil.***

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 6th March 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.*

* 161 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** *கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) ஆரம்பச் சுகாதார நிலையங்களின் ஆட்சிப் பொறுப்பு மருத்துவத் துறையிலிருந்து பொது சுகாதாரத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளதா?*

*(இ) ஆமெனில், அம்மாற்றத்திற்குக் காரணமென்ன?*

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** *(அ) ஆம்.*

*(இ) ஆரம்பச் சுகாதார நிலையங்களின் ஆட்சிப் பொறுப்பு கீழ்க்கண்ட முக்கியமான, இரு காரணங்களுக்காக 1963-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்து பொதுச் சுகாதாரத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:—*

*(1) கிராமப் பகுதிகளில் நோய்த் தடுப்பு நோய்ச் சிகிச்சைப் பள்ளிகளை இன்னும் நல்ல முறையில் ஒருமுகப்படுத்துவதற்கு.*

*(2) கிராமப் பகுதிகளில் குடும்பக் கட்டுப்பாடு, மலேரியா, பெரியம்மை ஒழிப்புத் திட்டங்களைச் சித்திகரமாய் நிறைவேற்றுவதற்கு.*

**புலவர் கா. கோவிந்தன்:** *இப்பொழுது ஆங்காங்கு இருக்கிற நோய்களைத் தடுப்பதற்குத் தனி இயக்கங்கள் இருக்கின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் வருகின்ற நோய்களைப் போக்குவதற்காக இருக்கின்றவை. நோய்களைப் போக்குவதற்கான இடங்களில் இப்படி தடுப்பு நடவடிக்கைகளையும் இணைப்பது நலமாக இருக்குமா?*

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** *நோய் பரவாமல் இருப்பதுதான் அத்தியாவசியமானது. சில சமயங்களில் நோய்கள் வராமல் தடுப்பதற்கும், சிகிச்சை அளிப்பதற்குமாக பிரைமரி ஹெல்த் சென்டர்கள் பணியாற்றி வருகின்றன. நோய் வந்த பிறகும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.*

**திரு. ம. கமலநாதன்:** *பிரைமரி ஹெல்த் சென்டர்கள் டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் கண்டிரோலுக்குப் போய்விட்டதால், அதிலுள்ள டாக்டர்கள் மீது, அதிகாரம் இழந்துவிட்ட*

காரணத்தால் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீஸர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு, அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது உண்மையா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அம்மாதிரி எதிர்ப்பு ஒன்றும் வரவில்லை. டி.எம்.ஓ.-க்கள் மகாநாட்டில் கூட, டி.பி.எச். இடம் ஒப்படைத்து விட்டால் நல்லது என்று சொன்னார்கள். அதனாலே எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்களிடம் ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. ஹெல்த் டிபார்ட்மென்டிடம் ஒப்படைத்ததனால், மெடிகல் இலாக்காவில் இருக்கிற சில சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்குமோ, கிடைக்காதோ என்று நினைக்கிறார்கள். அது வெறும் பிரிவென்டிவ் ஒர்க்காக இருக்கிறதே என்று நினைக்கிறார்கள்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் நெருக்கடி நிலைமை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது அவைகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கட்டடம் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பிக்காவிட்டாலும், அத்தியாவசியமான இடங்களில் எங்கே பிரைமரி ஹெல்த் சென்டர்கள் தேவையிருக்கிறதோ அங்கெல்லாம் வாடகைக் கட்டடங்களில் ஆரம்பிக்கலாமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** மருத்துவத் துறையையும், பொது சுகாதாரத் துறையையும் இணைப்பதாக இருந்ததே. மருத்துவத் துறையில் இருந்ததைப் பொதுச் சுகாதாரத் துறைக்கு மாற்றிவிட்டதனால், இந்த இணைப்புத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆம்.

**புலவர் கா. கோவிந்தன் :** அமைச்சர் அவர்கள் விடையளிக்கின்ற நேரத்தில் டாக்டர்கள் அந்தத் துறைக்குச் செல்வதற்கு அச்சப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். பொதுவாகக் கிராமப் பகுதிகளிலே உள்ள நிலையங்களுக்குச் செல்வதற்கே டாக்டர்கள் முன்வருவது இல்லை. இப்படி ஒரு நிலையிலிருந்தால் பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு டாக்டர்கள் வருவது அடியோடு நிறுத்தப்பட்டு விடுமோ என்று மக்கள் அஞ்சுகிறார்கள். அந்த அச்சத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன உத்திரவாதம் அளிக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** டாக்டர்கள் பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குப் போவதில் அச்சமொன்றுமில்லை. மெடிகல் ஸைடில் இருக்கிறவர்கள் ப்பளிக் ஹெல்த் ஸைடுக்கு வந்தால் அது வெறும் பிரிவெண்டிவ் ஸைடு தானே, அதனால் மருத்துவ பிராக்டிஸ் இருக்காதோ என்று ஒரு அச்சம் ஏற்படுகிறது. இந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் இல்லாத குறை ஏற்படக்கூடாது என்று கருதி, ஹவுஸ் சர்ஜன்ஸ் கோர்ஸ் முடிந்தவுடனே கட்டாயமாக பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு ஒரு வருஷம் போகவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது.



138003
N 21/31 1964
J 64 : 18

**திரு. அ. துரையரசன் :** கிராமப் புறங்களில் [illegible] வை ஒழிப்பதற்காக மருந்துகள் தெளிப்பதின் காரணமாக, மூட்டைப் பூச்சிகள் ஏராளமாக உற்பத்தியாகின்றன என்ற [illegible] அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கொசு மருந்தினால் மூட்டைப் பூச்சிகள் வருகின்றன என்று சொல்வதற்கில்லை [illegible] கனவே இந்த சட்டசபையில் இதைப்பற்றிக் கேள்விகேட்டு, [illegible] பதிலளித்திருக்கிறேன். கொசு மருந்தினால் மூட்டைப்பூச்சி உற்பத்தியாகாது. மூட்டைப் பூச்சிகள் ஏற்கனவே இருக்கிற இடத்திலே வேண்டுமானால் கொஞ்சம் விருத்தியாகலாம்.

**திரு. ந. சுப்பிரமணிய செட்டியார் :** மண்ணச்சநல்லூரில் கட்டடம் கட்டிக் கொடுத்து பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னோம். ஆனால் ஒரு மாவட்டத்திற்கு ஐந்து வரையில்தான் கொடுக்க முடியுமென்று சொல்கிறார்கள். கட்டடம் கட்டிக்கொடுக்க முன்வந்தால், பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** யார் ஆஸ்பத்திரியைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ந. சுப்பிரமணிய செட்டியார் :** என்னுடைய ஊரிலே நாங்களே சொந்தமாக ரூ. 40,000 செலவழித்து கட்டடம் கட்டியிருக்கிறோம். இன்று வரையிலும் பிரைமரி ஹெல்த் சென்டர் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு எங்கள் செலவிலேயே கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வந்தால், அரசாங்கம் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிக்க முன் வருமா ?

Mr. SPEAKER : That question does not arise. The hon. Member cannot have a building in a particular place and request that a primary health centre should be located there. The power of location of primary health centres is not with the Health Department but with some other department.

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : It is selected by the Health Department also.

Mr. SPEAKER : Is it not done by the Rural Development and Local Administration Department?

**திரு. கரு. சீமைச்சாமி :** பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தீர்மானம் போட்டு இந்த ஊரிலே பிரைமரி ஹெல்த் சென்டர் வைக்கலாம் என்று சொன்னால், அங்கே வைக்கலாம்.

Mr. SPEAKER : That is what I say. It is with the Rural Development and Local Administration Department.

Anyhow the hon. Member may put his supplementary question.

**திரு. ந. சுப்பிரமணிய செட்டியார் :** தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கேட்டிருந்தும் அது ஏற்படுத்தப்படாமல் இருக்கிறது. அதன் பிறகு பஞ்சாயத்து யூனியனில் தீர்மானம் போட்டு கட்டடம் கொடுத்தும்கூட இதுவரை அந்த நிலை

[6th March 1964

யத்தை அங்கே நிறுவ அனுமதி கொடுக்கப்படவில்லை. அதை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பஞ்சாயத்து கொடுக்கும் கட்டடத்தை ப்ரைமரி ஹெல்த் சென்டராக கன்வர்ட் பண்ண முடியாது. அப்படி சென்டர் வேண்டும் என்று வேண்டுகோள் வந்தால் அது பரிசீலனை செய்யப்படும்.

MR. SPEAKER : There are two points. One is the location of the primary health centre and the other is the building. The two things are confused.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு ப்ரைமரி ஹெல்த் செண்டர் அமைக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் அது தேசீய நெருக்கடி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இப்பொழுது நெருக்கடி தீர்ந்துக்கொண்டு வரும் காரணத்தினால், ஹெல்த் சென்டர்கள் கிராம சுகாதாரத்திற்காக இன்றியமையாதது என்ற காரணத்திற்காக, அதை இப்பொழுது உடனடியாக அமல் நடத்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதற்கு முன்னால் கூறிய பதிலில் இதுவும் " கவர் ' ஆகி விட்டது. அவசியமாக இருந்தால், சரியான ப்ரைவேட் கட்டடம் கிடைத்தால்கூட அதைச் செய்யலாம்.

**திரு. இரா. நாராயணன் :** தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் எந்த அடிப்படையில் நிறுவப்படுகின்றன. பஞ்சாயத்து யூனியன் தீர்மானத்தை ஒட்டியா, அல்லது ஜனத்தொகையின் அடிப்படையிலா அல்லது போக்குவரத்துச் சாதனங்களின் அடிப்படையிலா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஒவ்வொரு ப்ளாக்கிலும் ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் அமைப்பது என்று அரசாங்கம் ஆலோசனை செய்தது. அதன் பிறகு ஜனத்தொகை மற்ற எல்லா அடிப்படையிலும் தான் ஆரம்பிக்கப்படுகிறது. ஆனால் அதில் முதலில் ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர் தான் இருக்க வேண்டும். ப்ரைமரி ஹெல்த் செண்டர்களுக்கு என்று நமக்கு யூனிஸெஃப் UNICEF கிராண்ட், எய்ட் எல்லாம் வருகிறது. அவர்களும் எம்.பி.பி.எஸ். டாக்டர் தான் குறிப்பாக ப்ரைமரி ஹெல்த் சென்டரில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். ஆகவே, அப்படி டாக்டர்கள் அவெய்லபிள் ஆன பிறகு சென்டர்கள் ஆரம்பிக்க உத்தரவு அளிக்கப்படுகிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், பிரைமரி ஹெல்த் சென்டருக்கு டாக்டர் நியமிக்கும் பொறுப்பு டைரக்டர் ஆப் மெடிகல் சர்விஸிடம் இருக்கிறது. இப்பொழுது சொல்லப்பட்ட மாறுதலால் அந்த அதிகாரம் ( D.M.S. ) டைரக்டர் ஆப் மெடிகல்



6th March 1964]

சர்விஸஸ் இடமே இருக்குமா அல்லது டைரெக்டர் ஆப் ப்பளிக் ஹெல்த் ( D. P. H. ) அவர்களுக்குப் போகுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ப்ரைமரி ஹெல்த் சென்டர் டைரக்டர் ஆப் ப்பளிக் ஹெல்த்துக்கு ட்ரான்ஸ்பர் ஆன பிறகும், டாக்டர்கள் நியமிப்பதில் அது ஒரு காமன் ரெக்ரூட்மென்ட்டாகத்தான் செய்யப்படும். அதில் டி.எம்.எஸ். டி.பி.ஹெச்., எல்லோரும் இருப்பார்கள், சேர்ந்துதான் செய்வார்கள்

**திரு. ம. கமலநாதன் :** ப்ரைமரி ஹெல்த் சென்டரில் உள்ள டாக்டர்களுக்கு ப்ரமோஷன் ஹெல்த் ஸைடில் இருக்குமா அல்லது மெடிகல் ஸைடில் இருக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அவரவர்கள் விருப்பம் போல் இருப்பார்கள்.

**திரு. எம். தாண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, பிரதம சுகாதார நிலையம் வைக்க தகுந்த இடம் இல்லாத காரணத்தால் ஆரம்பிக்கப்படாமல் இருந்த இடங்களில் தற்போது, கட்டடம் கட்ட உத்தரவு இடுவார்களா ? கட்டடம் கட்ட காலதாமதம் என்றால், கிராமத்தில் மக்கள் ஆஸ்பத்திரி வைக்க வீடுகள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அந்த நிலையத்தை வைக்க உத்தரவு இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** புதுக்கட்டடம் கட்ட இப்பொழுது முடியாது. கிராம வாசிகள் கொடுக்கும் கட்டடம் ப்ரைமரி ஹெல்த் சென்டர் வைக்க எல்லாத் தகுதிகளும் உள்ளதாக இருந்தால், அந்த பில்டிங்குகளைக் கொண்டு ஆரம்பிக்கலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, டாக்டர்கள் கிடைப்பதைவிட, இந்த ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு மருந்துகள் கிடைப்பதில்தான் அதிகக் கஷ்டம் இருக்கிறது. தற்போது ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு மருந்துகள் சப்ளை செய்வதில் என்ன நிலைமை என்று விளக்க முடியுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதெல்லாம் சில மாதங்களுக்கு முன்பு இருந்த குறைகள். இப்பொழுது அந்த சென்டர்களில் சர்ப்ளசாக இருக்கின்றன மெடிஸின்ஸ்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே மக்கள் ஜனத்தொகை எவ்வளவுக்கு ஒரு டாக்டர் என நியமிக்கப்பட்டிருக்கிறது ? நகரப்புறங்களில் எவ்வளவு ஜனத்தொகைக்கு ஒரு டாக்டர் இருக்கிறார் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சுமாராக 10,000 அல்லது 15,000 ஜனத்தொகை உள்ள வில்லேஜை எடுத்து, ' within a radius five mile என்று நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது.

[6th March 1964

* 162 *Q.*—Sri N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Public Health be pleased to state the nature of assistance rendered by the "UNICEF" to the Primary Health Centres in this State?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : The "UNICEF" gives assistance to Primary Health Centres in this State in the shape of equipment; drugs; diet supplements; public health nursing kits; bicycles; and vehicles.

*Gur (Movement Control)*

* 163 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the reasons for enforcing restrictions on the export of gur to other States; and

(*b*) the quantity of gur allotted for export to other States for each quarter during 1963–64?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** (அ) கிடைக்கக்கூடிய கரும்பைப் பயன்படுத்துவதில் சர்க்கரை விலை மிக உயர்ந்ததாலும் இந்திய அரசாங்கம் செல்ல (ஏற் பட்டுள்ள போட்டியைத் தவிர்க்கவும், வெல்ல உற்பத்திக்காக கரும்பை ஏராளமாகப் பயன்படுத்தி வந்ததால் வெல்லத்தின் விலை மிக உயர்ந்தாலும் இந்திய அரசாங்கம் வெல்ல (ஏற் றுமதிக் கட்டுப்பாடு) உத்தரவை 1963-ல் வெளியிட்டது.

(இ) வெல்ல (ஏற்றுமதிக் கட்டுப்பாடு) உத்தரவு 30–10–1963 -லிருந்து அமுலுக்கு வந்தது. 1963 நவம்பர், டிசம்பர், 1964 ஜனவரி மாதங்களுக்காக முறையே 3,100 மெட்ரிக் டன், 2,600 மெட்ரிக் டன், 3,500 மெட்ரிக் டன் வெல்லத்தை, மற்ற மா நிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய கோட்டாவாக இந்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது வேறு மாநிலங்களுக்கு வெல்லம் ஏற்றுமதி இல்லாததால், வெல் லத்தின் விலை மிகக் குறைந்திருக்கிறது. அதனால் வெல்லம் உற்பத்தி செய்யும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலையைத் தவிர்க்க சர்க்கார் என்ன ஏற்பாடுகள் செய்ய இருக்கிறார்கள்?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** என்னுடைய பதிலில் வெல்லத்தின் விலையும், சர்க்கரை ஆலை களுக்குக் கரும்பு சப்ளை குறித்தும் கண்ட்ரோல் செய்யப்பட்டிருக் கிறது என்றும் சொன்னேன். அதன் நிமித்தம் விலை ஒரு கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் தலைவர் அவர்களே, பொதுவாக ஆந்திர மாநிலத்திற்கும் வெல்லம் ஏற்றுமதி செய்வது நிறுத்தப் பட்டதால் அங்கு இருந்து வருகிற அரிசியும் தடை படுத்தப்பட் டிருக்கிறது, என்பது உண்மையா?



6th March 1964]

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** ஆந்திரா விற்கு வெல்லமே நாம் அனுப்பவில்லை. கேரளா; குஜராத், மகா ராஷ்டிரா, வெஸ்ட் பெங்கால் முதலிய மாநிலங்களுக்குத்தான் அனுப்புகிறோம்.

**திரு. சி. கு. சின்னராஜி :** சார், வட ஆற்காடு ஜில்லாவிலே திருப்பத்தூர் தாலூகாவிலே ஏராளமாக கரும்பு மில்களுக்குச் சென்றது போக பாக்கி வெல்லமாக மாற்றப்பட்டு விவசாயிகளிடம் அதிகப்படியான வெல்லம் தேங்கிக் கிடக்கிறது. தேங்கிக் கிடக்கும் வெல்லத்தைக் கேரளாவுக்கு மட்டும் ஏற்றுமதி செய்ய லாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல மற்ற மாநிலங்களுக்கும் அனுப்ப அனுமதி கொடுக்கப்படுமா, எப்போது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** என்னி டத்தில் இப்பொழுது தகவல் இல்லை. தனிக் கேள்விதான் போட வேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சார், நமது ராஜ்யத்தில் எவ்வளவு வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** தனிக் கேள்வி போடுங்கள்.

**திரு. எல். ஆனந்தன் :** தலைவர் அவர்களே, தற்போது வெல் லத்தை ரயில் மூலமாகத்தான் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. அதைத் திருத்தி லாரிகள் மூலமும் அனுப்ப லாம் என்று உத்தரவு போட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** அப்படி ஒன்றும் கட்டுப்பாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, இதர மாநிலங் களுக்கு ஏற்கனவே வெல்லம் அனுப்பிக் கொண்டிருந்தோம். அது இப்பொழுது தடைபடுத்தப்பட்டிருக்கிறது. மறுபடியும் இதர மாநிலங்களுக்கு வெல்லம் அனுப்ப, தடையைத் தளர்த்த சர்க்கா ருக்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** தற்சமயம் அப்படிப்பட்ட பிரச்னை எதுவும் இல்லை.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** சபாநாயகர் அவர்களே, வெல்லக் கட்டுப்பாட்டினால் இப்பொழுது விலை மிகவும் குறைந்திருக்கிறது. அதனால் கரும்பு உற்பத்தி செய்பவர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள், என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து இருக் கிறதா? வந்து இருந்தால் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள்,

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** அதைத் தான் சொன்னேன். எல்லோரும் குறை கூறுகிற அளவுக்கு விலை குறைந்து விடவில்லை. ஸ்டேபிளாகத்தான் இருந்து கொண்டு இருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பிரச் னையே இப்பொழுது இல்லை.

[6th March 1964

**திரு. சி. கு. சின்னராஜி:** வெல்ல உற்பத்தி ஏராளமாக ஆகி, சரக்கு மிகவும் தேங்கிக் கொண்டிருக்கிறது. 1963 டிசம்பரில் இருந்த விலை இப்பொழுது பாதியாகக் குறைந்து விட்டிருக்கிறது. டிசம்பர் மாதத்தில் குண்டால் 120 ரூபாயாக இருந்தது இன்று 55 ரூபாய்க்கு விற்கிறது. வெல்லம் ஏராளமாகத் தேங்கியிருக்கிற படியால், அதை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய கண்ட்ரோல் என்னும் தடை நீக்கப்படுமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** எந்த மாதத்தில் என்ன விலை என்பது பற்றி என்னிடம் விவரம் இப்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. இரா. நாராயணன்:** வெல்லக் கட்டுப்பாட்டினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் அரசாங்கம் வெல்லக் கட்டுப்பாட்டை நீக்கி ஆந்திராவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி கொடுக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** ஆந்திராவுக்கு வெல்லம் போவது இல்லை என்று நான் முன்பே சொன்னேன். வேறு நான்கைந்து வெளி ராஜ்யங்களுக்குப் போகிறது. ஆந்திராவுக்கு வெல்லம் போவது பற்றிய பிரச்னை இல்லை.

**திரு. ம. கமலநாதன்:** மற்ற மாநிலங்களுக்கு வெல்லம் போகக் கூடாது என்கிற தடை இருக்கும்போது கேரளாவுக்கு மட்டும் எந்த அடிப்படையில் வெல்லம் போக அனுமதிக்கப்பட்டது?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** இன்ன இன்ன ராஜ்யத்திற்கு இன்ன இன்ன மாதத்தில் எவ்வளவு வெல்லம் கொடுக்கவேண்டும் என்பது குறித்து மத்திய சர்க்கார் ஒரு கோட்டா நிர்ணயிக்கிறார்கள். அதை வைத்துத்தான் எங்கெங்கே கொடுக்கவேண்டுமோ அங்கு நாம் வெல்லம் அனுப்பிக் கொண்டு இருக்கிறோம்.

**திரு. க. தா. பெருமாள் ராஜு:** கரும்புப் பயிர் அதிகமாக உற்பத்தி ஆவதனாலே உணவு தானிய உற்பத்தி பாதிக்கப்பட்டதா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. கே. பி. பழனிசாமி:** சர்க்கரை குறைந்த விலைக்கு விற்கும் போது, வெல்லம் மாத்திரம் அதிக விலைக்கு விற்கக் காரணம் என்ன?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** விலையில் வித்தியாசம் இருக்கும். (சிரிப்பு).

**திரு. ஆர். ரங்கசாமி:** வெல்ல உற்பத்தி செய்கின்ற சாதாரண விவசாயியைக் காட்டிலும் சர்க்கரை சாப்பிடக் கூடியவர்களுக்கு அதிகச் சலுகை காட்டுவதற்கு ஏதாவது விசேஷ காரணம் இருக்கிறதா?



6th March 1964]

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** உடலில் சர்க்கரை இல்லாதவர்கள் சர்க்கரை சாப்பிடுகிறார்கள். அந்தப் பிரச்னையை நாம் இப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** சாதாரண ஏழை மக்கள் வாங்கி உபயோகிக்கக்கூடிய இந்தப் பொருளின் விலை அளவுமீறி உயர்ந்த நேரத்தில், இம்மாதிரி கண்ட்ரோலைக் கொண்டுவந்த செய்தி மக்களிடையே வெல்லமாக இனித்தது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** நமக்கு சர்க்கரை வேண்டுமென்ற பிரச்னை வந்த போதுதான் இதைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இருந்தது. ஆலை ஓடாமல் நின்று விடுமோ என்ற நிலையில் சர்க்கரை தேவை என்ற நிலையும் ஏற்பட்டதால்தான் இந்தக் கட்டுப்பாடு வரவேண்டியிருந்தது. அதையொட்டி தான் மத்திய சர்க்காரிலிருந்து அந்த உத்தரவு நமக்கு வந்தது.

**திரு. எல். ஆனந்தன்:** தென்னாற்காடு ஜில்லாவில் உற்பத்தியாகும் வெல்லம் கட்டி வெல்லமாக இருப்பதால் கேரள மாநில மக்கள் அதை விரும்புவதில்லை. அதனால் தென்னாற்காடு ஜில்லாவில் உற்பத்தியாகும் இந்தக் கட்டி வெல்லங்கள் சரியான விலையில் அங்கு விற்பதில்லை. ஆகவே, மைசூர், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு இந்த வெல்லத்தை அனுப்ப சர்க்கார் உத்தரவிடுமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** அந்த மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று மத்திய சர்க்காரிலிருந்து உத்தரவு வந்தால் அனுப்ப முடியும். அதற்கு ஆட்சேபணை ஒன்றும் இருக்காது.

**திரு. ந. சுப்பிரமணிய செட்டியார்:** தலைவர் அவர்களே, இப்படிக் கோட்டா கொடுக்கும்போது, ரயில் மூலமாகத்தான் சரக்குகளை அனுப்ப வேண்டுமென்று சொல்வதனால், கோயமுத்தூர் வரையிலும் லாரிகளில் ஏற்றிச் சென்று, அதற்குப் பிறகு பாலக்காட்டிற்கும் போகிறது. மூட்டை ஒன்றுக்கு ஐந்து ரூபாய் லாரிச் செலவானாலும் கூட, பர்மிட் வாங்காமலேயே, அதற்குள்ள விலை அதிகமாகக் கிடைக்கிறது. அந்தக் காரணத்தால், லாரிகளில் போக அனுமதிக்கக்கூடாது என்ற விதி இருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ? கரூரிலே வாங்கின சர்க்கரையைத் திருச்சிக்குக் கொண்டுவந்து, திருச்சியில் லைசன்ஸ் உள்ளவர்கள் மூலமாக விற்கவேண்டியிருக்கிறது. இதைத் தவிர்க்க, நேரடியாகவே சரக்குகள் லாரி மூலமாகப் பிற இடங்களுக்குச் செல்கிறது என்கிற புகார் அரசாங்கத்திற்கு ஏதாவது வந்திருக்கிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** அப்படி ஒன்றும் இல்லை.

[6th March 1964

**திரு. பி. வி. சீராமுலு :** இந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் கரும்பைக் கொண்டு எத்தனை டன் சர்க்கரை செய்யப்படுகிறது, எத்தனை டன் வெல்லம் காய்ச்சப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்பொழுது என்னிடத்தில் அந்தக் கணக்கு இல்லை. தனியாகக் கேள்வி கேட்கலாம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** க்ரிஸ்டல் ஷுகரை (Crystal Sugar) அன்னிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பது போல், நாட்டு சர்க்கரையையும் (Brown Sugar) அன்னிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ஏதாவது வழிவகை இருக்கிறதா? அப்படிச் செய்ய முடியுமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. நம்முடைய தேவைக்கு மேல் இருந்து, அன்னிய நாட்டுக்கு அனுப்பக்கூடிய சௌகரியம் இருந்தால் அப்பொழுது இதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் தலைவர் அவர்களே, வெல்லத்தின் விலை குறைந்து போய்விட்டது என்று சொல்லக் கூடிய அளவிலே பற்றுக்குறை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** 'வெல்லம் விலை குறைந்து போய்விட்டது' என்று சொல்லக் கூடிய அளவிலே குறையவில்லை. கண்ட்ரோல் போட்டதற்குப் பிறகு விலை ஸ்டேபிள் ஆக இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைக்காகக் குறிப்பிட்ட பிரதேசங்களை ஒதுக்குவது எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது ? அப்படி ஒதுக்குகிற போது அந்தந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுடைய அபிப்பிராயத்தைக் கலந்துகொண்டு செய்யப்படுகிறதா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** அம்மாதிரி ஒதுக்குகின்ற நிலை ஏற்பட்டாலும், ஒழுங்காகக் கரும்பு கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் ஏற்கனவே டைரக்டர்களாகவும், பங்குதாரர்களாகவும் இருப்பவர்களைக் கலந்து கொண்டுதான் இதெல்லாம் செய்கிறார்கள்.

*Cane gur and Kandasari Sugar Factory*

* 164 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to start a **Cane, Gur and** Kandasari Sugar Factory in the State; and

(*b*) if so, when?



6th March 1964]

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ), (இ) கோயம்புத்தூர் மாவட்டம் இடுக்கரையில் தனியார் துறையில் கண்டசாரி சர்க்கரை ஆலை ஒன்று ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி 1963 வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** மேலும் எந்த இடத்திலாவது இந்த ஆலையை ஆரம்பிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தப் பிரச்னை பற்றி நான் இரண்டு மூன்று கேள்விகளுக்கு இந்தச் சபையிலே பதில் சொல்லியிருக்கிறேன். சர்க்காரைப் பொறுத்த வரையில், சிறு சர்க்கரை ஆலைகள் வைக்க யார் முன்வந்தாலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் கொடுத்திருக்கிறோம் என்றும் அதற்காக ஒரு தனி 'நோட்' தயார் செய்திருக்கின்றோம், வேண்டியவர்கள் அதை வாங்கிக்கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கிறோம்.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** கண்டசாரி சர்க்கரைக்கும் அஸ்கா ச்ர்க்கரைக்கும் என்ன வித்தியாசம் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கண்டசாரி சர்க்கரை என்று சொன்னால் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் மூலமாகத் தயாரிக்கப்படுவது என்று அர்த்தம். சர்க்கரையில் ஒன்றும் வித்தியாசம் இல்லை. நான் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸில் தயாரித்த சர்க்கரையை ஒரு பாட்டிலிலும் ஆலையில் தயாரித்த சர்க்கரையை இன்னொரு பாட்டிலிலும் போட்டு எதை எதை எதில் தயாரித்தது என்று சொல்லாமல், பல பெரியவர்களிடம் கொடுத்து, சர்க்கரையைச் சாப்பிட்டுப் பார்க்கச் சொன்னதில், வித்தியாசம் இருப்பதாகச் சொல்லவில்லை. வித்தியாசம் தெரியாது. ரொம்ப நல்ல 'டேஸ்ட்' இருக்கிறவர்களுக்கு, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் மூலமாகத் தயாரிக்கிற அந்த சர்க்கரையிலே கொஞ்சம் மோலாஸஸ் டேஸ்ட் கடைசியில் இருக்கும். அதுதான் வித்தியாசம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** இந்த கண்டசாரி சர்க்கரை ஆலைக்கு அனுமதி வழங்கிறபோது, குறிப்பிட்ட பிரதேசத்தில் ஏற்கனவே பெரிய சர்க்கரை மில் இருந்தாலும் அனுமதி வழங்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன். 9—30 a.m.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எந்த இடத்தில் சிறு தொழில் செய்வதற்கு யார் முன் வந்தாலும் முதலிடம் சிறு தொழில்களுக்குத்தான் அளிக்கப்படும். அதுதான் சர்க்காரின் கொள்கை.

**புலவர் கா. கோவிந்தன் :** ஸார், "இம்மாநிலத்தில் வெல்லம், பழுப்புச் சர்க்கரை ஆலை ஒன்றைத் துவக்கும் உத்தேசம் உண்டா ?" என்பதுதான் முதலில் போடப்பட்டிருக்கும் கேள்வி. கனம் அமைச்சர் அவர்கள் கண்டசாரி சர்க்கரையைப் பற்றிச் சொல்கிறார்கள்.

**MR. SPEAKER : The main question relates to Kandasari. It reads as follows :—**

**'Whether there is any proposal to start a cane, Gur and Kandasari Sugar Factory in the State . . .'**

[6th March 1964

**புலவர் கா. கோவிந்தன் :** தமிழ்க் கேள்வியில் வெல்லம், பழுப்புச் சர்க்கரை என்றுதான் இருக்கிறது.

Mr. SPEAKER : I understand that ' Kandasari Sugar ' means 'பழுப்புச் சர்க்கரை'.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்கரை சம்பந்தமான பொறுப்பு மூன்று இலாகாக்களிடம் இருக்கிறது. கரும்பு உற்பத்தி விவசாய இலாகாவிடம் இருக்கிறது. விலை நிர்ணயிப்பது கூட்டுறவு இலாகா. தொழிற்சாலை சம்பந்தமானது என்னிடம் இருக்கும் இலாகா. ஆகையினால் கண்டசாரி என்பதற்குப் பழுப்புச் சர்க்கரை என்று தவறாகத் தெரியாதவர்கள் சொல்லியிருக்கக் கூடும். கண்டசாரி சர்க்கரை என்பது மில் சர்க்கரையைப் போன்றதுதான். சர்க்கரை ஆலைகளில் வாகூம் பான் ப்ராசெஸ்ஸில்தான் செய்யப்படுகிறது. கண்டசாரி ஓபன் பான் ப்ராசெஸ்ஸில் செய்யப்படுகிறது. வாகூம் பான் ப்ராசெஸ்ஸில் செய்கிறபோது அதிகம் காண்கிறது. இரண்டும் சல்படைசன் ப்ராசஸ்தான். ஆகவே கண்டசாரி என்பது பழுப்புச் சர்க்கரை அல்ல.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மூலக் கேள்வி போட்ட அங்கத்தினரே இங்கு இருந்தால் கண்டசாரி என்றால் பழுப்புச் சர்க்கரை என்று எண்ணிப் போட்டார்களா என்பதை விளக்கி விடலாம்.

Mr. SPEAKER : Will the hon. Member, Sri Veerappa Chettiar, please make it clear in what sense he used the words ' Kandasari Sugar '?

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** பழுப்புச் சர்க்கரை.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : In English it may be brown sugar and not kandasari.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கண்டசாரி என்பது எந்த மொழிச் சொல் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தி மொழிச் சொல்.

**புலவர் கா. கோவிந்தன் :** கண்டசாரி என்பது பழுப்புச் சர்க்கரை அல்ல என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**கனம் சபாநாயகர் :** இப்போது அது கனம் அங்கத்தினருக்கு விளங்கிவிட்டது இல்லையா அதை வைத்துக்கொண்டே மேலும் குழப்ப வேண்டாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** இப்பொழுதே வெல்லம், பழுப்புச் சர்க்கரை போன்றவை தேங்கிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். இந்நிலையில் பாக்டரி மூலம் உற்பத்தி செய்யப்பட்டால் மேலும் அது பாதிக்கப்படாதிருக்க ஏதாவது பாதுகாப்பு அளிக்கப் படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பழுப்புச் சர்க்கரை செய்வதற்கு பெரிய பாக்டரிகள் தேவை இல்லை. குடிசைத் தொழிலாகச் செய்யப்படுகிறது. அதற்கு பாதுகாப்பு, உதவி செய்வதாக இல்லை. நான் சொன்னது கண்டசாரி சர்க்கரைப் பற்றியதுதான்.



6th March 1964]

## கரும்பின் விலை நிர்ணயம்.

* 165 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பல்வேறு கரும்பாலைகளுக்கும் 1962-63 சீசனில் சப்ளை செய்த கரும்புக்கு முடிவான விலை நிர்ணயிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) இல்லையெனில், 1963-64 சீசனுக்கு நிர்ணயிக்கப்பட்டபடி 1962-63 சீசனுக்கும் கரும்புக்கு முடிவான விலை நிர்ணயிக்கப் படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

* 166 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the reasons for issuing orders under D.I.R. compelling sugarcane growers in Lalgudi, Udayarpalayam and Perambalur taluks in Tiruchirappalli district, to sell sugarcane only to Kothari Sugars and Chemicals, Limited, Kathur;

(*b*) whether the price has been fixed; and

(*c*) the period for which these orders will be in force?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) சர்க்கரை உற்பத்திக் குறியளவை அடைய, இம் மாநிலச் சர்க்கரை ஆலைகளுக்கு 1963-64-ல் போதிய அளவில் கரும்பு சப்ளை செய்வதற்காக அரசாங்கம் அந்தந்தச் சர்க்கரை ஆலைகளிலிருந்து 30 மைல் சுற்றளவிலுள்ள கரும்பு விளையும் பகுதிகளை இந்தியப் பாதுகாப்பு விதிகளின்படி, ஒதுக்கி வைக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளது.

(இ) ஆம். காட்டூரில் இருக்கும் கோத்தாரி ஷுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆலைக்கு 1963-64 கரும்புப் பருவத்தில் ஒரு குவிண்டல் ரூ. 4.89 வீதம் கரும்பிற்குக் குறைந்த பட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(உ) இந்தியப் பாதுகாப்பு விதிகளின்படி அந்த ஆலைக்கு 1963-ம் வருஷம் ஜுலை மாதம் 1-ம் தேதி முதல் 1964-ம் வருஷம் ஜுன் மாதம் 30-ம் தேதி வரையுள்ள காலத்தில் கரும்பு விளையும் பகுதிகள் ஒதுக்கித் தரப்பட்டுள்ளன.

**திரு. சா. ராமசாமி :** அமைச்சர் அவர்கள் காட்டூர் சர்க்கரை ஆலைக்குத்தான் கரும்பை அனுப்பவேண்டுமென்று சொன்னார்கள். முப்பது மைல் சுற்றளவுக்கு அந்த பாக்டரியைச் சுற்றிப் பயிரிடப் படுகிறது. மொத்த உற்பத்தி 27 ஆயிரம் டன்னுக்கு மேல் இருக்கிறது. ஆலையின் கபாஸிடி 17 ஆயிரம் டன்தான். ஆகவே பாக்கியுள்ள கரும்பை அவர்களும் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே சர்க்கரை ஆலைக்குத் தேவையானது போக பாக்கியை நல்ல முறையில் வேறுவகையில் பயன்படுத்த ஒரு திட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[6th March 1964

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆலைக்குத் தேவையான கரும்பைத் தான் ஆலைக்கே கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதாக நினைக்கிறேன். ஆலையின் தேவைக்குப் போக மிஞ்சி இருந்தால் அதைப் பயன்படுத்துவதுபற்றி யோசித்து முடிவு செய்வார்கள்.

### நர்சுகள் பயிற்சி.

*** 167 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆண்களுக்கு 'நர்ஸ்' பயிற்சி அளிக்கும் திட்டம் கைவிடப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

(உ) கைவிடப்பட்டிருந்தால், மீண்டும் துவக்க உத்தேசமுண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) (உ):— மருத்துவத் துறையில் தேவைக்கு மேற்பட்ட ஆண் நர்சுகள் இருப்பதால் ஆண் நர்சுகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மருத்துவத் துறையிலுள்ள ஆண் நர்சுகள், பெண் நர்சுகள் இவர்களின் விகிதாச்சாரம் 1 : 6 ஆகும்போது ஆண் நர்சுகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவது குறித்து யோசிக்கப்படும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, மருத்துவ நிலையங்களிலே ஆண், பெண் நோயாளிகளின் எண்ணிக்கை சரி பாதியாக இருக்கிறது. ஆனால் நர்சுகளைப் பொறுத்தவரை ஆண் நர்சுகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. நோயாளிகளைத் தூக்குவது போன்ற காரியங்களை ஆண் நர்சுகள் செய்வது நலமாக இருக்குமென்ற நிலையில், ஆண் நர்சுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த ஏன் இந்தச் சர்க்கார் மயங்குகிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பெண் நர்சுகள் வேண்டுமென்றுதான் எல்லோரும் கேட்கிறார்கள். அவர்கள்தான் நோயாளிகளை மெதுவாகத் தூக்கி நன்றாகக் கவனித்துக் கொள்வதாகக் கூறுகிறார்கள்.

**திரு. ம. கமலநாதன் :** பொதுவாக நர்ஸ் வேலைக்குப் பெண்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் அவர்களுடைய அன்பான பேச்சும், மென்மையான போக்கும் தான் என்று கூறுவார்கள். ஆனால் பெண் நர்சுகள் அந்த அளவுக்கு அன்புடனும், பண்புடனும், மென்மையுடனும் நடந்து கொள்ளாமல் முரட்டுத் தனமாக நடந்து கொள்வதால் நோயின் தன்மை அதிகமாகுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நர்சுகள் செய்யும் பணியானது ரொம்பக் கஷ்டமான பணி. எவ்வளவு நல்ல குணம் உள்ளவர்களாக இருந்தாலும் ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் மாறத்தான் செய்யும். பெண் நர்சுகளைப் பொறுத்தவரை அந்த மாதிரி நிலைமை அதிகம் ஏற்படவில்லை.



6th March 1964]

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் அங்கத்தினர் பெண் நர்சுகள் முரட்டுத் தனமாக நடந்து கொள்கிறார்கள் என்று கூறினார்கள். ஆனால் சில நோயாளிகள் பெண் நர்சுகளிடம் மிகவும் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிற சூழ்நிலை ஏற்படும் போது. . .

(மணி அடிக்கப்பட்டது.)

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** ஆண் தன்மையுடைய இயற்கைப் பண்பை நோக்கி, நர்சுகள் என்ற பணியைப் பெண்களுக்கே தனியாக ஒதுக்கக்கூடிய நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்துமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆண் நர்சுகள் எதற்காக இருக்கிறார்கள் என்றால், முக்கியமாக போலீஸ் ஹாஸ்பிடல், மெண்டல் ஹாஸ்பிடல் ஆகிய இடங்களில் அத்தியாவசியமாக இருப்பதுதான்.

**கனம் சபாநாயகர் :** திரு. தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் போன்ற மென்மையான ஆட்கள் இருக்கிறார்கள் இல்லையா ?

* 168 *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of persons who applied for Nurses' Training in 1963 in Government hospitals;

(*b*) how many of them were selected; and

(*c*) how many of them belong to Tamil-Nad and how many belong to other States?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Three hundred and seventy-five candidates (all from Madras State) applied for admission to the Nurses' Training Course which commenced on 1st January 1963. For the training course which commenced on 1st July 1963, 893 candidates from Madras State and 50 from other States applied for admission.

(*b*) Three hundred and nineteen and four hundred and fifty candidates were selected for the Nurses' Training Courses which commenced in January and July 1963 respectively.

(*c*) All the selected candidates belong to Madras State.

**திரு. இராம. அரங்கண்ணல் :** போதிய பெண் நர்சுகள் இல்லையென்று அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அப்படியானால் விண்ணப்பித்த எல்லோருக்கும் ஏன் வாய்ப்புக் கொடுத்திருக்கக் கூடாது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** விண்ணப்பித்த எல்லோருக்கும் கொடுப்பது என்பது இயலாத காரியம். 'பிரிஸ்கிரைப்டு குவாலிபிகேஷன்' இருப்பவர்களை மட்டுந்தான் எடுத்துக்கொள்ள முடியும்.

## மருத்துவ பொது சுகாதாரத் துறைகளை இணைத்தல்.

*169 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் தேதி 216-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி மருத்துவத் துறையையும் பொது சுகாதாரத் துறையையும் இணைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்**: மாநில, மாவட்ட நிலைகளில் மருத்துவத் துறையும், பொதுச் சுகாதார துறையும் தனித் தனி யூனிட்டுகளாகவே தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என அரசினர் முடிவு செய்துள்ளனர்.

**திரு. ம. கமலநாதன்**: ஹெல்த், மெடிகல் இலாகாவை நிர்வகிப்பதில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அஸிஸ்ட் செய்யலாமென்ற ஒரு அபிப்பிராயம் இருந்தது. அது இன்னும் ஆலோசனையில் இருக்கிறதா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்**: ஆம்.

**திரு. ம. கமலநாதன்**: டி.எம்.எஸ்., டி.பி.எச்.-ன் கீழ் ஐ.ஏ.எஸ். அதிகாரி வேலை செய்ய மறுத்தது உண்மையா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்**: அம்மாதிரி தகவல் ஒன்றும் இல்லை.

**கனம் சபாநாயகர்**: "Is the post a higher post or a lower post" என்று கேட்கலாம்.

**திரு. ம. கமலநாதன்**: சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தின்மீது பதிலளிக்கும்போது, 'ஐ.ஏ.எஸ்.' அதிகாரிகள் டி.எம்.எஸ்., டி.பி.எச். கீழ் வேலை செய்ய ஒத்துக் கொள்வதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்**: அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்று நான் சொல்லவில்லை. ஐ.ஏ.எஸ். அதிகாரி அட்மினிஸ்ட்ரேட்டிவ் போஸ்ட். **If I remember correct, ' Not less than I.A.S. in rank "**, ஒரு அதிகாரியைப் போடவேண்டுமென்றுதான் அரசாங்கம் யோசனையில் இருக்கிறது என்று நான் சொன்னேன். டி.எம்.எஸ்.-க்கும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் அதிகாரிக்கும் சம்பந்தம் இல்லை.

### *Supply of clothes to scavenging workers.*

*170 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any G.O. has been issued to municipalities to reduce the supply of clothes to the scavenging workers; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the table of the House?





THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

MR. SPEAKER: Questions are over.

[**Note—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member**]

## II—EXPUNCTION OF OBJECTIONABLE MATTER

MR. SPEAKER: I would like to bring to the notice of the hon. Members that under Rule 67 (iv) of the Madras Assembly Rules, a member, while speaking, must not reflect upon the conduct of the President or Governor or any Court of Justice. It has been brought to my notice that the hon. Member Sri C. G. Viswanathan, while speaking in the Assembly on 5th March 1964 during the general discussion on the budget when the Deputy Speaker was presiding, made certain remarks reflecting on the conduct of a Court of Justice. As the remarks might be construed as contempt of Court, under Rule 285 of the Assembly Rules I have ordered the expunction of those remarks from, and the making of consequential alterations in, the official report of the proceedings.

## III—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964-65—*cont.*

***திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்**: கனம் தலைவர் அவர்களே, 1964-65-ம் வருஷ நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு ஏற்பட்ட சங்கடங்களால் அங்கிருந்து வருகின்ற அகதிகளைப் பராமரிப்பதற்காகக் கோடானு கோடி ரூபாயைச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் அந்த நிலை தீர்ந்த பாடாக இல்லை. இப்போது நமது மாகாணத்திலிருந்து அயல் நாடுகளுக்குச் சென்று பிழைத்துக் கொண்டிருந்தவர்கள் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மலேயா, பர்மா, சிலோன் போன்ற இடங்களில் இருந்து ஏராளமானவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு பத்திரிகையில்கூடப் பார்த்தேன். ஒரு லட்சம் பேர் சிலோனில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது பெருங்கவலைக்கிடமான விஷயமாக இருக்கிறது. குறிப்பாக கிழக்கு இராமனுதபுரத்திலிருந்தும், திருநெல்வேலியிலிருந்தும் சென்றவர்கள்தான் இன்று வெளியேறி வருபவர்களில் பெரும் பகுதியினர். அவ்வாறு வெளி நர்டுகளுக்குச் சென்று குடியேறியவர்கள் எல்லாம் தொழில் செய்து கொண்டிருந்தவர்கள். அவர்கள் இந்த நிலைமையிலே வெளியேற்றப்படும்போது என்ன நிலைமையிலே அவர்கள் ஆதரிக்கப்படப் போகிறார்கள் என்பதைப் பற்றி இந்த பட்ஜெட்டிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனது பகுதியைப் பொறுத்த மட்டில், கிழக்குக் கடற்கரையோரத்திலுள்ள முஸ்லீம்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கும் பிற்பட்ட வகுப்பினர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்காக என்று

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

ஏதாவது ஒரு தொழிற்துறையை நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், அதுபற்றி மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கூற வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது எழுத்தளவில் இருக்கிறதே யொழிய எதுவும் நிறைவேற்றப்பட்டதாக இல்லை. ஆகவே உடனடியாக சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியிலே தொண்டியில் துறைமுகம் இருந்தது, இப்போது இல்லாமல் இருக்கிறது. இந்த சபையில் நான் இதுபற்றி பல தடவை கூறியிருக்கிறேன். தொண்டி யிலிருந்து மதுரை சமீபத்தில் 60 மைலில்தான் இருக்கிறது. ஆகவே இந்தத் தொண்டி துறைமுகம் ஏற்பட்டால் மதுரை, செட்டி நாடு போன்ற பகுதிகளுக்கும், கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்கும் நல்ல தொழில் வாய்ப்பு அளிப்பதாக இருக்கும். அதனால் தொழில் துறை அபிவிருத்தி அடைய வாய்ப்பாக இருக்கும் என்பதையும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆகவே உடனடியாக இதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப் போது ஆங்காங்கே சில மில்களை ஏற்படுத்தியிருக்கிறது அரசாங்கம். இந்த மில்கள் ஏழைகளுக்கு பயன் அளிக்கக்கூடியனவாகயில்லை. இந்த மில்களில் இருந்து வரும் வருமானம் ஏழைகளுக்கு பலன் அளிக்கக்கூடிய நிலையில் இல்லை. பண வசதி படைத்தவர் களுக்குத்தான் பெர்மிட் கிடைத்திருக்கிறது. அவர்கள்தான் மில் களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கிழக்கு ராமநாத புரம் பகுதியில் அதிகப்படியான கூட்டுறவு மில்களைக் கொடுத்து ஏழை மக்கள் வாழ வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிழக்கு ராமநாதபுரம் பகுதியிலும், திருநெல்வேலி ஜில்லாவிலும் பனை மரங்கள் ஏராளமாக இருந்து அவை அழிக்கப் பட்டு வருகின்றன. பனை ஓலைகள் கொண்டு அபூர்வமான சாமான் கள் எல்லாம் செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பனைகளில் உள்ள மற்றப் பொருள்கள் எல்லாம் உணவுப் பொருள்களுக்கு மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது. இப்போது பனை மரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு சுண்ணாம்புக் காளவாய்களுக்கு பயன் படுத்தி எரிக்கப்பட்டு வருகிறது. இந்த மன்றத்தில் இது பற்றி நான் ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே இந்த பனை மரங்களை மீண்டும் அபிவிருத்தி செய்யவேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். கிழக்கு ராமநாதபுரம் பகுதி மிகவும் வறண்ட பகுதி என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே அங்கு நீர்ப்பாசன வசதி செய்து தருவதற்கு வைகைத் திட்டம் என்று சொல் கிறார்கள்; ஆனால் அது ஏட்டளவில் இருக்கிறதேயொழிய அதனால் யாதொரு பயனும் ஏற்படவில்லை. ஆகவே அதையும், அப்பர் பெரியாறு திட்டத்தையும் எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தால் கிழக்கு ராமநாதபுரம் பகுதி முன்னேற நல்ல வாய்ப் பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அதற்கு





[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

எந்தவித வழிவகையும் செய்யாமல் தட்டிக் கழித்துக்கொண்டு வருகிறார்கள். கேரளா சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை, ஒத்துக் கொள்ளவில்லை என்று கூறுகிறார்கள். இரண்டு இடங்களிலும் காங்கிரஸ் அரசாங்கம்தான் இருக்கிறது, ஆகவே இரண்டு அரசாங்கமும் கலந்து பேசிச் செய்யாமல் வேண்டுமென்றே கிழக்கு ராமநாதபுரம் பகுதியைப் பொறுத்தவரை அதைத் தட்டிக் கழித்துக்கொண்டு வருகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். காவிரி நதியில் வெள்ளம் வந்து கடலில் போய் சேருகிற தண்ணீரை யாவது கால்வாய் வெட்டி கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்கு கொடுக்க என்ன தடை இருக்கிறது? தண்ணீர் கடலில் போய் சேருகிறது. ஆகவே அப்படி வீணாகிப்போகிற தண்ணீரை கால் வாய் வெட்டி எங்கள் பகுதிக்குக் கொடுக்க முன்வரக்கூடாதா, எங்கள் மீது அத்தனை கோபம் என்ன, அமைச்சரவைக்கு என்று நான் கேட்கிறேன். முன்பு முதல் அமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்களுக்கு எங்கள்மீது கொஞ்சம் கோபம். ஏனென்றால் கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் இருந்து எதிர்க் கட்சிக்காரர்கள் அதிகமாக தேர்ந்தெடுத்து வருகிறார்களே என்ற கடுப்பு

MR. SPEAKER: Let not the hon. Member make any personal charge.

அப்போதிருந்த சர்க்கார் சரியாகச் செய்யவில்லை என்று வேண்டு மானால் சொல்லலாம். ஆனால் பர்சனலாகப் பேசிக் கொண்டு போகக் கூடாது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: இப்போ துள்ள கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், எங்கள் பகுதியில் இருக்கும் கஷ்டம். இவர்கள் காலத்திலாவது எங்க ளுக்கு ஏதாவது நன்மை ஏற்படுமா என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே அதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசி ஏற்றம்பற்றி இந்த மன்றத்தில் பல அங்கத்தினர்கள் கூறியிருக்கிறார்கள். விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம், திட்டம் பெயிலானதுதான். திட்டம் பெயிலான காரணத்தினால் விலைவாசி ஏறிக்கொண்டே வருகிறது. விலைவாசியைக் கட்டுப்படுத்த நம் அரசாங்கத்தினால் முடியாத நிலையில் விலைவாசிகள் ஏறிக்கொண்டே வருகின்றன என்றுதான் கூறமுடியும் விலைவாசியைக் குறைத்து நல்லதொரு நிலையை இந்த நாட்டில் ஏற்படுத்தவில்லை என்றால் அராஜகமான நிலைதான் ஏற்படுமேயொழிய நல்ல சுபிட்ச நிலை ஏற்பட வாய்ப்பில்லை. ஆகவே உடனடியாக விலைவாசிகளைக் குறைப்பதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விலைவாசி என்றால் உடனேயே அரிசியின் விலை உயருகிறது என்பதுதான் எல்லோர் கண்களிலும் படுகிறது. எல்லாப் பொருள்களின் விலையும் ஏறிக் கொண்டே போகிறது. விவசாயிகள் வாங்கக் கூடிய சாமான்கள், இதர பொருள்கள்

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

இவற்றின் விலைகள் ஏறிக் கொண்டு வருகின்றன. விவசாயிகள் மீது இனிமேல் வரி போட முடியாத நிலையில் எல்லா வரிகளையும் போட்டுப்போட்டு அவர்களை கடனாளியாக்கி விட்டோம் இன்னும் கடன் வாங்கத்தான் விவசாயிகள் தயாராயிருக்கிறார்கள். எப்பொழுது விவசாயிகள் கடன் வாங்கத் தயாராயிருக்கிறார்கள் என்ற நிலை வந்து விட்டதோ அதனால் விவசாயிகள் கஷ்ட நிலையை அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். அவர்கள் இன்று தங்கள் வாழ்க்கை நிலையைச் சரிப்படுத்த முடியாத நிலையில் கடன்களை பெற்று வருகிறார்கள். சர்க்கார், விவசாயிகள் அத்தனை பேர்களையும் கடனாளியாக்கிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் கடன் வாங்கி வாங்கி ஓட்டாண்டிகளாகும் நிலைக்கு வந்துவிட்டார்கள். கிழக்கு ராமநாதபுரத்தில் பருவமழை கோளாறு காரணமாக பலவிடங்களில் பயிர் சாவியாகிவிட்டது. வரி பாக்கிக்காக விவசாயிகளை கஷ்டப்படுத்துகிறார்கள். இரண்டு மூன்று ஆண்டு பாக்கிக்கு ஜப்தி செய்து வசூல் செய்து கொண்டு வருகிறார்கள். ஜப்திக்கு உள்ளாகிற விவசாயிகள் வரி பாக்கியைக் கட்டமுடியாத நிலையில் அவர்கள் மிகவும் சங்கடமான நிலையில் இருக்கிறார்கள். விளையாத நிலையில் இரண்டு மூன்று பசலி வரிகளை ஒரேயடியாக வசூல் செய்தால் விவசாயிகள் என்ன செய்வார்கள்? பக்கத்தில் உள்ள ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அங்குள்ள விவசாயிகள் கஷ்டம். அங்கு உடனடியாக சென்று பார்த்தால் அவர்கள் நல்லநிலையில் இல்லாது கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள் என்பது தெரிய வரும். ஆகவே இந்த வரியை உடனடியாக வசூல் செய்யாமல், இரண்டு மூன்று ஆண்டுகளில் விகிதாசாரத்தில் வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று ரெவின்யூ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதுள்ள உணவுப் பண்டங்கள் எல்லாம் கலப்படமாக இருக்கிறது. எந்தப் பொருளை எடுத்தாலும் கலப்படம். ஏந்த சாமானையும் வாங்கிச் சாப்பிட முடியாத நிலையில் கலப்படம் ஏறியிருக்கிறது. இந்த நிலை இருப்பதால்தான் வியாதிகள் அதிகமாக ஏற்படுகின்றன. ஆகவே அதிகப்படியான ஆஸ்பத்திரிகள் வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த உணவுக் கலப்பட்த்தை தடை செய்வதற்கு அரசாங்கம் அதிகப்படியான அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் உள்பட ஒரு கமிட்டியைப் போட்டு இந்த உணவுக் கலப்படத்தைத் தடுப்பதற்கு விரைவிலே ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லஞ்சம் அதிகமாகிக் கொண்டே போகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். சாதாரணமாக லஞ்சம் வாங்குகிறவர்கள் மீது தான் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்கிறோம். இப்போது வோட் வாங்குவதற்கு எல்லாம் லஞ்சம் இல்லாமல் எங்கேயாவது வோட் வாங்குகிறார்கள் என்ற நிலையைக் குறிப்பிட முடியுமா?





[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

எல்லோரும் லஞ்சம் கொடுத்து வோட் வாங்கும் நிலை ஏற்பட்டு விட்டது. அதற்குக் காரணம் யார். அரசாங்கம்தான் காரணம். லஞ்சம் கொடுத்தால்தான் வோட் வாங்க முடியும் என்ற நிலை இந் நாட்டில் ஏற்பட்டதற்கு அரசாங்கம்தான் காரணம் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிலை நாட்டை விட்டுப் போகவேண்டும். இந்த நாடு நல்ல சுபிட்ச நிலை அடைய வேண்டுமென்றால் வோட்டுக்கு லஞ்சம் கொடுக்கும் நிலை போக வேண்டும். அப்படிப் போனால்தான் இந்த நாடு உருப்படுமே தவிர சாதாரணமாக வாய் அளவில் சொல்லிக் கொண்டிருந்தால் ஒன்றுமே செய்ய முடியாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். யாரை எடுத்தாலும், எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும், மந்திரியாக இருந்தாலும் இப்போது இருக்கும் பிரச்னையெல்லாம் ஓட்டு வாங்குவதில் தான் இருக்கிறது. ஓட்டு கிடைத்தால் எது வேண்டுமானாலும் 9-30 a.m, செய்யலாம் என்ற நிலை உருவாகிவிட்டது. எங்காவது கிராமத்தில் இருக்கிற ஓட்டுகள் மொத்தமாகக் கிடைக்குமா, அதற்கு என்னென்ன பர்மிட்டுகள் கொடுக்கலாம், எந்தெந்த வகையில் அபிவிருத்தி செய்யலாம் என்ற நிலை இந்த நாட்டிலே ஏற்பட்டு விட்டது. அந்த நிலை இந்த நாட்டிலேயிருந்து போகவேண்டும். இந்த மாதிரி ஓட்டுப் பிடிக்கிற வகையிலே எதையெதைச் செய்ய வேண்டும் என்ற நிலை நீங்கி இந்த நாட்டிலே மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்யவேண்டும் என்று அவைகளைச் செய்தால், எப்படி நாடு மேம்பட முடியும் என்று அதற்கேற்ற முறையில் செய்தால்தான் நாடு நல்ல நிலையை அடையும் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

SRIMATHI B. LAKSHMINARASAMMA: Mr. Speaker, Sir, I wish to join the chorus of tributes paid to our Hon. Chief Minister for his remarkable Budget Speech while presenting the well-planned and impressive budget of our State for the coming year. That education will be free up to the secondary level is a welcome and happy news. The joy of our people would have been greater still, if simultaneously some tax relief had been announced for the benefit of the middle class and lower income groups, who now find themselves plunged in depths of misery due to the ever increasing prices of essential commodities. But the large allotments on the Third Plan schemes, increased expenditure on many developmental activities and liberalisation of social security measures have made it necessary to continue the present tax structure without any possibility of relief. That is perhaps the sacrifice we of the present generation have to make to meet the needs of not only the present emergency but also to carry out the Plan schemes so that the coming generation can live in freedom with peace and plenty.

Sir, the three-tier system of Panchayat Raj was introduced in our State with the ideal of betterment of our villages and uplift of our rural population. But, I am afraid, although the Panchayat set-up has been there for a considerable time, it has not touched

as yet the fringe of the problems of the village population. The progress in our villages has not been appreciable or up to the desired extent. Going round the villages, one can only see disgusted, dissatisfied and disgruntled faces pouring forth their anger and indignation towards their elected representatives. This, I should say, is mostly due to the lack of correct vision of the ideal of rural development on the part of those concerned with the panchayat administration and their failure to work in a spirit of dedicated service. Paucity of funds to meet the demands of expenditure may also be another factor for the slow or poor progress. I, therefore, request the Government to increase the finances of the panchayats and Panchayat Union Councils and see that this system of decentralised administration is a great success and confers great benefits to the village population. I also venture to suggest that the entire land revenue collected in the area may be allotted to the panchayat union councils to augment the resources of the panchayats and union councils, so that they can discharge their functions without any handicaps whatsoever. The union councils, besides being asked to concentrate on agricultural production, should also be asked to give necessary facilities to agriculturists for the establishment of small units of production in villages with better tools and run by electric power. It may be very difficult to convince our conservative farmers to take to new methods of production to improve their agriculture and income. Every effort should be made by the Panchayat Raj institutions to rouse the enthusiasm of the agriculturists and make them adopt new practices. This can be secured only by greater co-ordination between the officials of the various Government Departments, the Block Development Officers and the various Extension Officers working under them.

Coming next to my own constituency, Tirukoilur, I must say, it continues to be backward and lags behind all other constituencies in our State. There have been no improvements whatsoever for several years in industrial, agricultural, educational and transport facilities. I request the Government to give greater attention to this area at least in the near future.

Speaking on the availablity of medical facilities in my taluk, I must say that the medical aid so far provided falls short of the actual requirements of the area. The Government Hospital there is located in a small building with poor clinical facilities. No improvements have been made for decades and the sick who come to the hospital for treatment find themselves in a hopeless atmosphere. I therefore request the Government to take immediate steps to provide the hospital with better building facilities and clinical amenities at an immediate future.

Again, Tirukoilur town, in spite of the fact that it is a major panchayat with a large revenue and is also the revenue headquarters of the area, has not yet been provided with protected water supply and underground drainage. In summer months, people are put to considerable hardship for drinking water. I understand that





certain proposals are before the Government and it would be a great boon to the people if these schemes are accorded early sanction.

Thank you, Sir, for giving me this opportunity to speak.

*** திரு. நா. சௌந்திரபாண்டியன்:** மதிப்புக்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 1964-65-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

நமது அரசு விவசாய அபிவிருத்திக்காக அதிக அளவு பணம் செலவு செய்தபோதிலும், நாம் திட்டமிட்ட குறிக்கோளை அடைய முடியவில்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து யூனியன்களிடம் விவசாய அபிவிருத்திக்கு அதிக அளவு பணம் அளிக்கப்பட்டிருந்தாலும் கூட, அவைகளை மருந்து தூவும் கருவிகளாகவும், மருந்து தெளிக்கும் கருவிகளாகவும் வாங்கி செலவழிக்கிறார்களே தவிர விவசாய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, விவசாய மக்களின் நன்மைக்காக செலவு செய்வதாகத் தெரியவில்லை. கிராமாந்திரங்களில் கூடுதலாக விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தி, விவசாய மக்களை அவைகளில் ஈடுபடுத்துதல் நலம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எல்லா கிராமங்களிலும் நிலப் பரிசோதனை செய்து எந்த நிலத்தில் என்னென்ன பயிர் செய்யலாம், என்ன உரங்கள் போடலாம் என்பதைப் பற்றி திட்ட வட்டமான முறையில் கண்டறிந்து, கிராம மக்கள் பயனடையும் முறையில் அரசு திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தீவிர சாகுபடித் திட்டம் சில மாவட்டங்களில் இருக்கின்றது. அதை எல்லா மாவட்டங்களிலும் அமல்படுத்தினால் ஓரளவு உற்பத்தி அதிகமாகும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகள் கஷ்டப்படும் நேரத்தில் பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஏற்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக விவசாய மக்களின் உழைப்புக்கும், முதலீட்டுக்கும் ஏற்ற திட்டத்தை நாம் வகுக்க வேண்டிய பொறுப்பு உள்ளவர்களாக இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய வாழ்வுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக மின்சாரம் எல்லா கிராமங்களிலும் நல்ல முறையில் அமைந்திருந்தாலும் கூட விவசாயத்திற்கு முதலிடம் கொடுப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்க அரசு பாடுபட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கால்நடைச் செல்வங்கள் நமது நாட்டில் மிகவும் பின் தங்கியிருக்கிறது என்று வருத்தத்துடன் சொல்லிக்கொள்ளுகிறேன். நல்ல தரமான கால்நடைகளை கிராமாந்திரங்களில் உருவாக்கத்

[திரு. நா. சௌந்திரபாண்டியன்] [6th March 1964

தகுந்த நடவடிக்கை எடுத்தபோதிலும் அந்த நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் விவசாய அபிவிருத்திக்கு ஒரு டிராக்டர் கொடுக்க வேண்டுமென்று பல தீர்மானங்கள் போட்டும் கூட அரசு அதைச் செய்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக, பின்தங்கிய வட்டாரங்களில் புன்செய் நிலங்கள், தோட்டப் பயிர் செய்யும் நிலங்கள் 10, 15 ஏக்கர்களைச் சேர்த்து உழக்கூடிய நிலை இருப்பதால், அந்தப் பிரதேசங்களுக்காவது டிராக்டர் வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கல்வியை எடுத்துக் கொள்ளும்போது கூட நமது மாநிலம் கல்வியில் முன்னேறியிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள நான் சந்தோஷப்படுகிறேன். குறிப்பாக இந்த நிதி நிலை அறிக்கையில் நமது அமைச்சர் அவர்கள். உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு வரையில் இலவசக்கல்வி அளித்திருப்பது பாராட்டக் கூடிய விஷயம். சில அங்கத்தினர்கள் பேசும்போது கூட 83 சதவீதத்தினர் முன்னரே பயனடைகிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மை. ஆனால், அந்த 83 பேர்களும் பட்ட கஷ்டத்தைப் பார்க்கும்பொழுதுதான் நாம் இப்பொழுது சந்தோஷப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அவர்கள் பட்ட கஷ்டம், திண்டாட்டம் இவைகளைப்பற்றி நினைக்கும்பொழுது, இப்பொழுது எல்லா மாணவர்களுக்கும் பள்ளி இறுதி வகுப்பு வரையில் இலவசக் கல்வி போதிப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதுபற்றி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். மேலும், இந்த நிதி ஆண்டில் 5 கல்லூரிகள் திறக்க இருப்பதுபற்றி நாம் சந்தோஷம் அடைகிறோம். குறிப்பாக, பின்தங்கிய தாலுகாவாகிய நாங்குனேரி தாலுகாவில் ஒரு கல்லூரி அமையாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். அடுத்த ஆண்டிலாவது அங்கு ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேலும், சங்கம் வளர்த்த நமது மதுரையில் ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க இருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. அதற்கு உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பெண்கள் கல்வி அபிவிருத்திக்காக, எங்கள் பகுதியில் வள்ளியூர், திசையன்விளை ஆகிய இடங்களில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டில் அங்கு இரண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செட்டிகுளத்திலும் ஒரு உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருநெல்வேலியில் தனியார் துறையில் ஒரு பொறி இயல் கல்லூரி அமைக்க அரசு அனுமதி கொடுத்திருந்தது. ஆனால், இதுநாள் வரையில் அங்கே



6th March 1964] [திரு. நா. சௌந்திரபாண்டியன்]

பொறி இயல் கல்லூரி ஆரம்பிக்கப்படவில்லை. அங்கு பொறி இயல் கல்லூரி ஆரம்பிப்பதற்கு தனியார் முன்வராவிட்டால், அரசே முன்நின்று அதை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்காக நமது அரசு போதிய அளவு செலவு செய்கிறது. சிறிய நீர்ப்பாசனம், கால்வாய் பாசனம், பெரிய அணைக்கட்டுகள் கட்டி அதன் மூலம் பாசனத் துறைகளில் அரசாங்கம் விவசாயிகளுக்கு தகுந்த முறையில் உதவி செய்து வருவது பாராட்டத்தக்கது. சிற்றூர் பட்டணங்கால் திட்ட வேலையை துரிதப்படுத்தி, அதில் ராதாபுரம் கால்வாய் திட்டத்தையும் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மணிமுத்தாறு பாசனத்தில் உள்ள விஜயநாராயணன்குளத்திலிருந்து கால்வாய் வெட்டுவதற்கு 40,000 ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றிக்கொடுத்தால், அந்தப் பிராந்திய மக்கள் நலன் அடைவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மணிமுத்தாறு கால்வாய் திட்டத்தை திசையன்விளை பகுதிக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வடமலையான் கால்வாயை செப்பனிட வேண்டிய பொறுப்பு பொதுப்பணித் துறையைச் சேர்ந்தது. அந்தக் கால்வாயை கூடிய சீக்கிரம் செப்பனிடுவதற்கு நல்லதொரு முயற்சி எடுக்கவேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன். வள்ளியூர் பெரியகுளம் தூர்ந்து பழுதடைந்திருக்கிறது. பொதுப்பணித் துறையார் அந்தக்குளத்தை ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்தி செப்பனிடுவதற்கு போதிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். கன்யாகுமரியில், பொய்கை அணைத்திட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதிலுள்ள தண்ணீரை ராதாபுரம் உபதாலுகாவைச் சேர்ந்த வடக்கன்குளம், காவல்கிணறு, வேப்பிலாங்குளம், தனக்கர்குளம் ஆகிய கிராமங்களுக்குக் கொண்டு வருவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கன்யாகுமாரி மாவட்டத்தில் தென்கோடி நிலங்களுக்கு பயன்பட்டுவரும் என்.பி. சானலிலிருந்து பிராந்திநேரி குளத்திற்கு வெட்டவிருக்கும் வாரியூர் கால்வாய் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்ட வேலையை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், குடமாடியில் ஒரு அணை கட்டுவதற்கான திட்டத்தை சீக்கிரம் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரத்தைப் பொறுத்தவரையிலும், நமது மாநில சர்க்கார் சுகாதார அபிவிருத்திக்காக பல வேலைகளைச் செய்திருக்கின்றனர். பஞ்சாயத்து யூனியனிலுள்ள சுகாதார சிப்பந்திகள், சுகாதார அலுவல்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். அங்கு வேலை செய்யும் சுகாதார சிப்பந்திகள் பஞ்சாயத்து யூனியனுக்கு கட்டுப்பட்டவர்களா அல்லது ஆரம்ப சுகாதார நிலைய அதிகாரி

*[திரு. நா. சௌந்திரபாண்டியன்]* [6th March 1964

களுக்கு கட்டுப்பட்டவர்களா என்பதைப்பற்றி திட்டவட்டமாக அரசு உத்தரவு இல்லை. அதைப்பற்றி பரிசீலிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், பஞ்சாயத்து யூனியன்கள் நடத்துகிற ஆஸ்பத்திரிகளுக்கு 50 சத விகிதம் மான்யம் கொடுக்க அரசு முன்வந்திருக்கிறது. அது பாராட்டுதலுக்குரியது. அதை விட முக்கியமாக படிப்படியாக அந்த ஆஸ்பத்திரிகளை அரசு எடுத்துக்கொள்வதற்கு ஒரு திட்டம் வகுத்து, ஒரு வருடத்தில் இத்தனை ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்வது என்று தீர்மானித்து அம்மாதிரி அரசே எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வது நலம் என்று கருதுகிறேன்.

அடுத்து, தொழில்வளத்தைப் பார்க்கும்பொழுது கூட, தொழில் துறையில் கிராமங்கள் பின்தங்கியிருக்கின்றன என்று சொல்லிக் கொள்கிறேன். தொழில் அபிவிருத்தி பெரும்பாலும் நகர்புறங் களில் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது, ஏற்பட்டுவருகின்றன. பரவலான முறையில் எல்லா கிராமங்களுக்கும் தொழில் வளம் பெருகினால்தான் நல்லதொரு முன்னேற்றம் அடைய முடியும் என்று கருதுகிறேன். நமது தொழில் அமைச்சர் அவர்கள் பெரிய தொழில்களின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்திவருவது பாராட்டுதலுக்குரியது. இருந்தாலும், கிராமக் கைத்தொழில் வளர்ச்சி சம்பந்தமாக அவர்கள் இன்னும் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டு மென்றால் கிராமக் கைத்தொழில்கள் பெருகவேண்டும். மத்திய அரசு கிராமக் கைத்தொழிலில் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொண்டுவருகிறது. மாநில அரசும் கொஞ்சம் அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவில் பஞ்சாபில் கிராமக் கைத்தொழில் நல்ல முறையில் பரவி இருப்பதாகத் தெரிய வருகிறது. இங்குள்ள நிபுணர்களையும் அதிகாரிகளையும் அங்கு அனுப்பி, அங்கே கிராமக் கைத் தொழில்கள் எப்படி நடக்கின்றன என்பதைப் பார்த்து வந்து நம்முடைய மாநிலத்திலும் நல்ல கிராமக் கைத்தொழில்களை ஏற்படுத்துவதற்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று தாழ்மை யுடன் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளியூரில் அரசு ஒரு சிமெண்டுத் தொழிற்சாலையை நிறுவ ஆலோசனை இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றி ஒன்றும் குறிப்பு காணப்படவில்லை. தொழில்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து இதில் கவனம் செலுத்தி, இதை துரிதப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நமது பனை ஏறும் தொழிலாளர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமுல் செய்து, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு நல்ல பல திட்டங்களை வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



6th March 1964] *[திரு. நா. சௌந்திரபாண்டியன்]*

அடுத்தபடியாக, நமது மாநிலம் நீர் வளம், நில வளம் படைத்தது. நீர் வளம் என்றால் கடற்கரை அதிகமாக உள்ள மாநிலம். மீன்பிடி தொழிலை பெருக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், கடலோரப் பிரதேசங்களில் வாழ் கின்ற மீனவர்களுக்கு நாம் செய்திருக்கிற தொண்டு ஒரு சிறிது அளவுதான். அவர்கள் கட்டுமரத்தையும், சிறிய விசைப் படகு களையும் நம்பியிருக்கிறார்கள். நல்ல முறையில் அவர்களுக்கு நைலான் வலை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டத்தை வகுத்து அரசு அதை அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் உணவுப் பற்றாக்குறை ஓரளவுக்குத் தீரும். கன்னியா குமரியிலுள்ள லீபுரத்தை மீன்பிடித் துறைமுகமாக ஏற்படுத்த வேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போக்குவரத்தை எடுத்துக்கொண்டால், திருநெல்வேலிக்கு தெற்கே யாதொரு ரயில் வசதியும் கிடையாது. திருநெல்வேலி-கன்னியாகுமரி ரோடு செப்பனிடப்படவில்லை. அதை விரிவுபடுத்தி செப்பனிடவேண்டும். மேலும், கிழக்குக் கடற்கரை ரோடை பழுதுபார்த்து, ஆங்காங்கு பாலங்களைக்கட்டி தார் போடவேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க பஸ் சர்விஸை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ராதாபுரம் உபதாலூகாவிற்கு விஸ்தரிக்கவேண்டும். அப்பகுதி மக்கள் விஸ்தரிக்கவேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறார்கள். ராதாபுரத்திலிருக்கிற பல கிராமங்களுக்கும் கன்னியாகுமரி யிலிருந்து பஸ் போக்குவரத்தை நீட்டிக்கொடுக்க முன் வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பல கிராமங்களில் நல்ல ரோடு வசதியிருந்தும் அங்கு பஸ் போக்குவரத்து ஏற்படுத்தப்பட வில்லை. அந்த இடங்களிலெல்லாம் கூடுதலாக பஸ் போக்கு வரத்து ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு குடும்பப் பென்ஷன் திட்டம் கொண்டு வரப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத் தக்கது. அந்தத் திட்டம் ஆசிரியர்களுக்கும் பயன்படும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசி ஏற்றத் தால் மாநில அரசு ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் பஞ்சப் படியை உயர்த்தவேண்டும் என்பதற்காக 4, 5 நாட்களுக்கு முன்பாக கருப்புச் சின்னம் அணிந்திருந்தார்கள். இதைச் சிலர் அரசியல் கட்சிக்கு பயன்படுத்தி பேசியிருக்கிறார்கள். இந்த நிலை யை அரசியல் கட்சிகள் பயன்படுத்திக்கொள்ளாமல் அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டியது நமது கடமை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை (Budget) விவாதத்திற்கு பதில் அளிக்கும்பொழுது, இதில் கவனம் செலுத்தி, நல்லதொரு திட்டத்தைக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன் என்று சொல்லிக்கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. பி. பழனிசாமி** : கனம் சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதி நிலையறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். நம்முடைய நாடு சுதந்திரம் பெற்று சுமார் 15 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்பொழுது நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 135 கோடி வரையிலும் செலவு செய்யப்போகிறோம் என்பது குறிப்பிடத் தக்கது. குறிப்பாக நம்முடைய நாட்டிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி. வரை இலவசக் கல்வியளித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒரு திட்டமாகும். இது இந்த நாட்டில் உள்ள ஏழை மக்கள் எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய விஷயம். குறிப்பாக நம்முடைய நாட்டில் உள்ள ஹரிஜன மக்கள் பல ஆண்டுகளாக பொருளாதாரத் துறையிலும் சரி, கல்வித் துறையிலும் சரி முன்னேற்றமடையாமல் தாழ்த்தப்பட்ட நிலையிலே இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பிரத்தியேகமான சலுகையொன்றும் கொடுக்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் அவர்களுக்கு வருட வருமானம் ரூபாய் 1,500 இருந்தால் சம்பளம் கட்டவேண்டுமென்று இருந்தது. இப்பொழுதும் ஹாஸ்டலிலே சேருவதற்கு ரூ. 1,500 வருமானம் இருந்தால் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவது இல்லை. ஆகவே, ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் கட்டாயக் கல்வி இலவசமாக அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அவர்கள் பல ஆண்டுக் காலமாக வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஹரிஜனங்களில் ஆயிரத்துக்கு ஒருவர் வேண்டுமானால் சற்று பணமுள்ளவராக இருக்கலாம். இப்போதும் கிராமங்களை எடுத்துக் கொண்டால், 100-க்கு ஒரு சதவிதம் கூட படிப்பதற்கு வாய்ப்பில்லாமல் அவர்கள் இருக்கிறார்கள். பொருளாதாரத் துறையில் அவர்கள் இன்னும் பிற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஏதாவது வியாபாரம் செய்யவேண்டுமென்று சொன்னாலும் அதற்குக்கூட அவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஏதோ ஒரு லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று சொன்னால் எந்த ஆபீசரைப் போய்ப்பார்க்க வேண்டும், எப்படி லைசென்ஸ் வாங்கவேண்டுமென்று அவர்களுக்குத் தெரியாது. புவனேசுவர காங்கிரஸ் மாநாட்டில் ஒரு நல்ல சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற ரீதியிலே நாம் ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அது நல்ல முறையில் உருவாகவேண்டுமென்று சொன்னால், இத்தனையாண்டுக் காலமாக கஷ்டப்பட்டு வந்த பாமர மக்களின் வாழ்க்கைத் தரம் இவ்வளவு சதவீதமாவது உயரவேண்டும். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்ற ரீதியிலே நாம் திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

நமது நாடு ஒரு விவசாய நாடு. எழுபது சதவீத மக்கள் முக்கியமாக விவசாயத்தை நம்பித்தான் வாழவேண்டியிருக்கிறது. ஆகவே நல்ல முறையில் விவசாயம் செய்து உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால், பூமியின் தரம் குறையாமல் இருக்க வேண்டும். நாம் இப்பொழுது டவுன்களை பெருக்கிக் கொண்டு வருவதினால், அந்த டவுன்களை அடுத்த பூமிகளையெல்லாம் வீடுகள் கட்டுவதற்கு உபயோகிக்கிறார்கள். அதற்கு ஈடாக வேறு பூமியை எடுத்து பண்படுத்தி விவசாயம் செய்யவேண்டுமென்று சர்க்கார் உத்திரவுபோட்டால் நலமாக இருக்கும். முன்பெல்லாம் ஒரு புல்டோசர் அல்லது டிராக்டருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ. 12 அல்லது ரூ. 13 வாடகை என்று இருந்தது. இப்பொழுது ஒரு மணிக்கு ரூ. 25 கட்ட வேண்டுமென்று சொல்வதினால் நடுத்தர விவசாய மக்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை. ஏதோ பெரிய விவசாயிகள், 100 ஏக்கர், 300 ஏக்கர் என்று பூமி வைத்து இருப்பவர்கள், ரூ. 10,000 வரையில் செலவு செய்து அந்த பூமியை பண்படுத்தி வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட வாய்ப்புகள் சாதாரண குடியானவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, அரைப் பங்கு தொகையையாவது மானியமாகக் கொடுத்து இரண்டு ஏக்கர் அல்லது 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் தங்களுடைய பூமியை பண்படுத்துவதற்கு உதவிசெய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் பூமியை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.





என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் அது ஒரு பெரிய தொழில் பிராந்தியம். அங்கெல்லாம் குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதைப் பற்றி ஒவ்வொரு பட்ஜெட் உரையின்போதும் நான் எடுத்துச் சொல்லியும் இதுவரையிலும் இந்தப் பிரச்னை நல்ல முறையில் தீர்க்கப்படவில்லை. சிறுவாணி ரிசர்வாயரை ஆழப்படுத்த வேண்டும், அகலப்படுத்த வேண்டுமென்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதுவரையிலும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏற்கனவே 30,000 ஜனத்தொகையுள்ள காலத்திலே இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. இப்போது கோவையைச் சுற்றியுள்ள அர்பன் ஏரியாவிலும் ரூரல் ஏரியாவிலும் சுமார் 6 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அந்த 6 லட்சம் மக்களுக்கும் ஏற்கனவே இருந்த குடிதண்ணீர் வசதிதான் இருக்கிறது. குறிப்பாக, பீளமேடு, சிங்கநல்லூர் போன்ற பெரிய பஞ்சாயத்துக்களிலே கூட குடிதண்ணீருக்கு வசதி கிடையாது. அங்கெல்லாம் 150 அடி தோண்டி மோட்டார் வைத்துத்தான் தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்பேர்ப்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு இந்த சிறுவாணி ரிஸர்வாயரை ஆழப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இப்பொழுது பவானித் திட்டத்திலிருந்து பெரியநாயக்கன்பாளையம் வரையில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்திலே இப்பொழுது ஒரு கவர்ன்மெண்ட் பிரஸ் வந்திருக்கிறது. மேலும், பைப்புகளை போட்டு அதை கோவை நகரம் வரை விரிவுபடுத்தினால், கோவை அர்பன் ஏரியாவுக்கும் ரூரல் ஏரியாவுக்கும் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும். தொழிலாளர்களுக்கு குடிதண்ணீர் மிகவும் அவசியம். இயந்திரங்களும்கூட உப்புத் தண்ணீரினால் துருப் பிடிக்கிறது. இதை உடனடியாக எடுத்துச் செய்ய வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில் ஹவுஸிங் போர்டுகள் ஏற்படுத்தி அதன் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்க முயற்சி செய்கிறார்கள். கோவையை எடுத்துக்கொண்டால் ஒரு சென்ட் நிலம் ரூ. 1,000-லிருந்து ரூ. 2,000 வரை விற்கப்படுகிறது. விளைந்த நல்ல பூமிகளையெல்லாம் இந்த ஹவுஸிங் போர்டார் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சுண்டக்காமுத்தூர்க்கும் கவுண்டர்பாளையத்திற்கும் பக்கத்திலுள்ள சுமார் 500 அல்லது 600 ஏக்கர் நிலத்தை எடுத்திருக்கிறார்கள். ஒரு சென்ட் ரூ. 1,000-க்கு விற்கக் கூடிய நேரத்தில், அவர்கள் ஒரு ஏக்கருக்கு ரூ. 1,300 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதனால் கிடைக்கும் லாபத்தை யாருக்குக் கொடுக்கப் போகிறார்கள்? ஆகவே இந்த ரூ. 1,300-க்குப் பதிலாக ஏன் ரூ. 3,000 அல்லது ரூ. 4,000 என்று கொடுக்கக் கூடாது? திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதே, அவர்கள் இது சம்பந்தமாக ஒரு டெபுடேஷன் வந்து மகசர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த ஏழைக் குடியானவர்களுக்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடி தண்ணீர் வசதிக்காக போதனூரில் ரூ. 13 லட்சத்திற்கு எஸ்டிமேட் போட்டார்கள். இன்வெஸ்டிகேஷன் செலவிற்காக ரூ. 6,000 வரையில் போதனூர் பஞ்சாயத்து டெபாசிட் பண்ணியிருக்கிறார்கள். அதையும் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. மு. பொ. வடிவேல்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது நடக்கும் விவாதத்தில் நானும் கலந்து கொண்டு என்னுடைய உரையை ஆற்ற விரும்புகிறேன். இந்த மாமன்றத்தில் பேசிய பல உறுப்பினர்கள் போலீஸ் நிர்வாகத்தைப் பற்றிக் குறை கூறிப் பேசினார்கள். சமீப கால சில போக்குகளைப் பார்த்தால், போலீஸ் துறை இருப்பது பொதுமக்களுடைய நலனுக்கா அல்லது ஆளும் கட்சி உறுப்பினர்களுடைய நலனுக்கா என்று புரியவில்லை. 29-2-'64 அன்று என்னுடைய தொகுதியில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அங்கே ரெட்டியூர் பஞ்சாயத்து இருக்கிறது. அதில் கொத்தூர், முல்லை, ரெட்டியூர் என்ற மூன்று பகுதிகள் அடங்கியிருக்கின்றன. முல்லைப்பகுதியில் மாடு விடும் திருவிழா நடைபெறுவது வழக்கம். முல்லை கிராமவாசிகள் மாடு விடும் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்தார்கள். உடனே அங்குள்ள காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ஒரு மனு மேலதிகாரிகளுக்குச் சென்றது. "இந்த ஊரிலே மாடு விடும் திருவிழா நடைபெற்று விட்டது, மீண்டும் நடத்தினால் கலவரம் ஏற்படும்" என்று தெரிவித்தார்கள். அதைப் பார்த்து, 28-ம் தேதி மாலை 3-மணிக்கு சட்ட மன்றத்தின் உறுப்பினரும், என்னுடைய நண்பருமான திரு. ஆர். சம்பங்கி அவர்கள் என்னை டெபுடி சூப்பிரண்டு அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று சொல்லி, வாணியம்பாடிக்கு டெலிபோன் செய்தார். நானும் அவரும் டெபுடி சூப்பிரண்டிடம் சென்றோம். "இம்மாதிரி மனு வந்திருக்கிறது, என்ன" என்று கேட்டார்கள். நாங்கள், "அங்கே பரம்பரையாகச்



செய்யக்கூடிய விழா இது, மனுவில் எழுதியிருப்பது தவறு. நான் அந்த ஊர் பஞ்சாயத்து தலைவர். அப்பகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர். அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. நீங்கள் வேண்டுமானால் நேரில் வந்து விசாரியுங்கள்" என்று சொன்னோம். உடனே மாலை வருவதாக வாக்களித்தார்கள். டெபுடி சூப்பிரண்டும், உதவி கலெக்டரும், தாசில்தாரும் இரவு 9-மணிக்கு வந்தார்கள். ஊரிலுள்ள அத்தனை பேரையும் விசாரித்தார்கள். நாற்பது வருடமாக முனிசீபாக இருந்து ஓய்வு பெற்றவரையும் விசாரித்தார்கள். கிராம முன்சீப்பைக் கேட்டார்கள்; கர்ணத்தைக் கேட்டார்கள்; எங்களைக் கேட்டார்கள்; முல்லை கிராமவாசிகளை எல்லோரையும் யாருக்காவது எந்தவிதமான கஷ்டமாவது உண்டா என்று கேட்டார்கள். 10–00 a.m.
அவர்கள் எந்தவிதமான கஷ்டமும் இல்லை, எந்தக் கலவரமும் கிடையாது, 30 வருஷ காலமாக நாங்கள் இந்த விழாவை நடத்தி வருகிறோம், என்று சொன்னார்கள். உடனே உதவி கலெக்டர் அவர்களும் டெபுடி சூப்பிரண்டெண்டு அவர்களும் கேட்டார்கள்: இந்த முல்லை கிராமத்தில் யாருக்காவது இந்த விழா நடத்துவதில் ஆட்சேபம் உண்டா என்று, ஒரு முறை அல்ல, 10 முறை கேட்டார்கள். ஆட்சேபம் என்று சொல்லிக்கொண்டு யாரும் முன்வரவில்லை. உதவி கலெக்டர் அவர்களும் சூப்பிரண்டு அவர்களும் எங்களிடம் சொன்னார்கள், உங்கள் பக்கத்தில் நியாயம் இருக்கிறது, என்று. நாங்கள் சொன்னோம் காங்கிரஸ்காரர்கள்தான் ஆட்சேபம் சொல்கிறார்கள். எங்களுக்கு தாங்கள் சலுகை காட்ட தேவை இல்லை. நியாயம் எப்படி இருக்கிறதோ அப்படியே செய்யுங்கள் என்று சொன்னோம். நான் அந்த கிராமத்தின் தலைவன் என்ற முறையிலும், அந்த பஞ்சாயத்து யூனியன் சேர்மன் என்ற முறையிலும், அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையிலும், இந்த விழாவின் காரணமாக அந்த கிராமத்தில் எந்தக் கலவரமும் ஏற்படாது என்று சொன்னேன். ஆட்சேபித்தவர்கள் சாமி கோபித்துக் கொள்ளுவார், அதனால் காலரா, பிளேக் வரும் என்று சொன்னார்கள். அப்பொழுது உதவி கலெக்டர் அவர்கள் அந்த காலரா பிளேக் உங்களுக்குத்தான் வருமா, அவர்களுக்கு வராதா என்று கேட்டு உங்களிடம் நியாயம் இல்லை என்று சொல்லிவிட்டு கோபமாக போய் விட்டார்கள். மறு நாள் எனக்கு 144 உத்தரவு போடப்பட்டது. என்ன காரணத்திற்காக? நீதியும், நிர்வாகமும் தனி இலாக்காவாக இயங்குகின்றன என்று நினைத்தோம். நாடும் கருதிற்று. ஆனால் இந்தச் செய்கைகளில் இருந்து பார்த்தால் நீதி, நிர்வாகத்தில் இருந்தே நீக்கப்பட்டு விட்டதோ என்ற ஐயம் தான் ஏற்படுகிறது. மண்டல காங்கிரஸ் கமிட்டியார் போலீஸ் அதிகாரிகளை மிரட்டுகிறார்கள். அவர்களுக்குப் பயப்படுகிற போலீஸ்காரர்கள் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அலட்சியம் செய்யும் நிலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள். மக்களுக்கு பீதியை உண்டாக்கும் காரியங்களில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். முல்லை கிராமம் ஒரு சிறிய கிராமம். அந்த ஊரிலே 200 போலீஸ்காரர்கள் திடீர் என்று இறங்கி காவல் புரிய வந்ததால் கிராமத்தில் பீதி ஏற்பட்டிருக்கிறது—முதல் அமைச்சர் அவர்கள் பதவி ஏற்றுக் கொண்ட நாளில் கிராமங்களில் மக்கள் என்ன

பேசிக் கொண்டார்கள். கனம் பக்தவத்சலம் அவர்கள் நல்ல சிறந்த அறிவாளி. இனி தேர்தலில் நிற்க மாட்டார்கள். இருக்கும் வரையில் நீதியோடு நிர்வாகம் நடத்துவார்கள். மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக காரியங்களை செய்வார்கள் என்று நம்பினார்கள். ஆனால் எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி, காங்கிரஸ்காரர்கள் என்றால் வேறொரு நீதி. காங்கிரஸ்காரர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அதிகாரிகள் இம்மாதிரி நிலைமைக்கு ஆளாகிறார்கள். இது நியாயமா, தருமமா, முறைதானா? முதல் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி நன்றாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு என்னத்திற்காக 144 போட வேண்டும். நான் அந்தத் தொகுதியில் இருப்பவன். நானா மாடு பிடிப்பவன், நானா மாடு பின்னால் ஓடுகிறவன். ஏற்கனவே விசாரணையின்போது உதவி கலெக்டர் அவர்களும், டெபுடி சூப்பிரண்டு அவர்களும் நியாயம் என் சார்பில் இருக்கிறது என்றுதான் சொன்னார்கள். இருந்த போதிலும் ஏன் மறுநாள் வேறுவிதமான காரியம் செய்ய வேண்டும்? அதை நான் இந்த சபைக்கே விட்டுவிடுகிறேன். காங்கிரஸ்காரர் வேறு, ஆளும் கட்சி, நீதி நிர்வாகம் வேறு. எதிர்கட்சிக்காரர்கள் என்பதற்காக காரியங்கள் செய்யப்பட்டால், இந்த வடிவேல் சேர்மனாக இருந்தாலும், எம்.எல்.ஏ.-ஆக இருந்தாலும் **காங்கிரஸ்**காரர்கள் என்றால் அதிகாரிகள் அஞ்சு**கிறார்கள்**.

SRI V. SANKARAN : On a point of Order, Sir. The Hon. member is casting some aspersion against an individual Congressman, who is not present in this House. Can he make an allegation like that?

MR. SPEAKER : It is not a point of order.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம் வேண்டும், கனம் அங்கத்தினர் முடிப்பதற்கு முன்னால். இது ஜல்லிக்கட்டு பற்றிய விஷயம். கட்சி என்று வந்தால், இது தி.மு.க. ஜல்லிக்கட்டா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. மு. பொ. வடிவேல் :** காங்கிரஸ்காரர்கள் நடத்தினால் இது காங்கிரஸ் ஜல்லிக்கட்டா என்று கேட்கிறேன். இதிலே கட்சியே கிடையாது. இது ஒவ்வொரு கிராமத்திலும் நடக்கும் விவசாயிகளின் விழா.

MR. SPEAKER : Now we are discussing the budget. But the hon. Member has spent most of his time in " Jallikattu ".

**திரு. மு. பொ. வடிவேல் :** எது வேண்டுமானாலும் பேசலாம் என்று சட்டமன்ற விதி கூறுகிறது.

MR. SPEAKER : The hon. Member should speak on the Budget. But he is commenting on a particular grievance which is not related to the Budget at all.





**திரு. மு. பொ. வடிவேல் :** ஆகவே போலீஸ் நிர்வாகத்தில் சீர்கேடான நிலைமை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. எதிர்க்கட்சிக்காரர்கள் உடமைக்கும் உயிருக்கும் அஞ்ச வேண்டிய சூழ்நிலை தான் உருவாகிக்கொண்டு வருகிறது என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் அம்மாதிரியான நிலைமைகளை கண்காணிப்போடு கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்பெற்று இருக்கிற நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டிலே புது வரிகள் பிரமாதமாக இல்லை என்று பாராட்டுகிறோம், பாராட்டுகிறார்கள். புது வரிகள் இல்லை என்பது உண்மை தான். காரணம் இனி புது வரி போட முடியாத நிலைமை நிலவுகிறது. அதையும் மறந்துவிடப்படாது. புது வரி என்று ஒன்றைத் தவிர வேறு இல்லை என்று சொன்னாலும் அதிக திருப்திபட்டுக்கொண்டு விட முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். வரிச்சுமை தாங்க முடியாமல் இருக்கிறது. இந்த வரிச்சுமையை அதிகப்படுத்தவில்லை என்பது ஒரு ஆறுதலாக இருக்கிறதே தவிர இறக்கப்பட வேண்டியவற்றை இறக்கியிருக்கிறார்களா என்பதையும் பார்க்க வேண்டும். பாரம், பளு குறைந்திருக்கிறதா, அதனால் ஆறுதல் ஏற்பட்டு இருக்கிறதா, என்று கவனிக்கும்போது குறிப்பிடப்பட வேண்டிய வரிகள் பல உள்ளன. அவற்றிலே எந்த அளவும் குறைக்கப்படவில்லை. புது வரி இல்லை என்பது அதற்கு ஒரு ஆறுதலாக ஆகிவிட முடியாது என்பதை குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். போட்டிருக்கிற வரி கூட பிரமாதமான லாபத்தைத் தரக்கூடியது அல்ல. மற்றொரு வகையில் சிரமம் தரக்கூடியது தான். நூலுக்கும், நூல் கழிவுப் பொருள்களுக்கும், ஆர்ட்டிபிஷியல் சில்க் என்று சொல்லுகிறோமே அந்த செயற்கைப் பட்டிற்கும் போடப்பட்டிருப்பது, பெரும்பாலும் கைத்தறிக்காரர்களை மிகவும் பாதிக்கக்கூடியது. அதனால் நாட்டிலே பொருளாதாரத் துறையிலும், தொழில் துறையிலும் பல தீமைகள் வளரும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். முடிந்த அளவு வரியைக் குறைத்திருக்க வேண்டும். அதை மேலே விவரமாக சொல்லுகின்றபோது நான் அமைச்சர் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முதலாவதாக விவசாயத் துறையை எடுத்துக் கொள்ளலாம். விவசாய வருமான வரி என்பது ஒன்று. அக்ரிகல்சுரல்-இன்கம் டாக்ஸ். அது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வருகிறது. அப்படிக் குறைந்து கொண்டே வருவதற்குக் காரணம் என்ன என்று பட்ஜெட்டிலே அடிக்குறிப்பிலே கண்டு இருக்கிறார்கள். நில உச்சவரம்பு சட்டம் வந்து விட்டதால் பல நிலங்கள் பிரிக்கப்பட்டு விட்டதால் நில வருமான வரி அருகிக் கொண்டு

[திரு. சா. கணேசன்] [6th March 1964

வருகிறது அல்லது குறைந்து கொண்டு வருகிறது. இந்தக் காரணத்தை அடிக்குறிப்பிலே கண்டு இருக்கிறார்கள். ஒன்றை நாம் மனதிலே கொள்ள வேண்டும். நில வருமானவரி அவசிய மானது. அதை நான் மறுக்க இல்லை. ஆனால் இப்பொழுது இருக்கிற நிலைமையிலே நில வருமானவரி பயன் அற்ற ஒன்றாக ஆகிவிட்டது. நிலம் உண்மையிலேயே பலர் கைகளுக்கு மாறினவோ என்னவோ தெரியாது; ஆனால் நிலங்கள் மிகவும் துண்டாடப்பட்டு பெயர் பிரிவுகளில் பலர் பெயரில் பதிவாகியிருக் கின்றன என்பதை பலர் மறுக்க மாட்டார்கள். நிலத்தினுடைய உடைமை இன்னும் ஒருவர் அல்லது ஒரு குடும்பத்தைச் சார்ந்த வர்களிடம்தான் இருக்கிறது. ஆனால், ஏற்கனவே ஒருவர் பெயரிலே இருந்த அந்தப் பெயர்ப்பட்டியல் இன்று பல பெயர்களிலே போடப்பட்டு, பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கர், இருபது ஏக்கர் என்று நிலம் பிரிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் விவசாய வருமான வரி விதிக்கக்கூடிய வாய்ப்பை அரசாங்கம் இழந்துவிட்டிருக்கிறது என்று நான் சொன்னால் அதை யாரும் மிகை என்று கூற மாட்டார்கள். அப்படியிருக்கிற நிலையில் இப் பொழுது விவசாய வருமான வரியிலே கிடைப்பது ஒரு கோடி 22 லட்சம் ரூபாய். அதிலே 'ரீஃபண்டு' செய்வதாகப் போட்டிருப்பது 6 லட்சம் ரூபாய். அது போக, நிகரமாக வரக்கூடியது 1 கோடி 16 லட்சம் ரூபாய். அதை வசூலிப்பதற்கு ஏற்படுகிற செலவு என்று சொல்வது, சென்ற ஆண்டு பட்ஜெட்டின்படி, 12 லட்சம் 95 ஆயிரம் ரூபாய். சுமார் 13 லட்சம் ரூபாய் என்று வைத்துக்கொள்ள லாம். இந்த 13 லட்சம் ரூபாயைக் கழித்துவிட்டால் நிச்சயமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவது ஒரு கோடி மூன்று லட்சம் ரூபாய். சுமார் ஒரு கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படு வதாகச் சொல்லலாம். இப்படி நிலங்கள் பிரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இடையூறு காரணமாக, வரி விதிக்கப்பட்டாலும் எத்தனை வருமானம் குறையும் என்பதையும் நாம் கவனத்தில் கொண்டால் நிச்சயம் ஒரு கோடிக்குக் கீழேதான் வரும். மேலே போகமாட்டாது என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்லக்கூடிய நிலை அமைந்திருக்கிறது. இப்படி இருக்கிற இந்த வரியை எடுத்து விட்டால் சுலபம் இல்லையா? இதனால் இருக்கிற கஷ்டம், வரிப் பளு நீங்கிவிடும் இல்லையா? இந்தத் துறை சம்பந்தப்பட்டவர்களைப் பொறுத்த வரையில் அக்கறை இல்லை. அவர்களுக்கு இந்த பளு அதிகமாக ஆக மாட்டாது. ஆனால், வீண் தொந்தரவு, விலைப் பெருக்கம், அனாவசியமாக உத்தியோகஸ்தர்கள் பெருக்கம் இதெல் லாம் இருக்கிறது. இப்பொழுது பண்ட உற்பத்தி பெருகிறதோ இல்லையோ, அது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், எந்தத் துறையில் எடுத்தாலும், உத்தியோகஸ்தர்களுடைய தொகை பெருகிக் கொண்டே போகிறது. இப்படி உத்தியோகஸ்தர்களின் தொகை பெருகிக்கொண்டு போகும் முறை அந்த நெறியிலே செயல்பட்ட நாட்டிலே ஜனநாயகம் என்பதே அற்றுப் போய் விடும் என்று சொல்ல வேண்டிய ஒரு கட்டம் வந்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.



6th March 1964] [திரு. சா. கணேசன்]

இன்னும் பார்த்தால், இந்த வரி வசூல்களிலே ஏற்படுகிற தொல்லைகள் அநேகம் இருக்கின்றன. விவசாயிகள் கிஸ்தி கட்டு கிறார்கள். கிஸ்தி என்ற சொல்லுக்குப் பொருள் இப்பொழுது மறைந்து கொண்டே வருகிறது. கிஸ்தி என்று சொல்லுக்கு வரி என்ற பொருள் தான் இப்பொழுது எல்லோருக்கும் தெரிகிறது. ஆனால் 'கிஸ்தி' என்ற உருதுச் சொல்லுக்கு 'வாய்தா' என்பது தான் உண்மையான பொருள் ஆகும். "வாய்தா கட்டியாச்சா"? என்று கிராமப் புறங்களில் இன்றும் கேட்பதுண்டு. எல்லா ஏழை களுக்கும், எடுத்த எடுப்பிலேயே பெரிய பணக்காரர்கள் மாதிரி செக் மூலமாக 'டாக்ஸ்' கட்டும் வாய்ப்பு வசதி இல்லாத காரணத் தால், அதை இரண்டு, மூன்று தவணைகளில் கட்டுகிற காரணத் தால், "வாய்தா கட்டி ஆச்சா?" என்று கேட்கிற மரபு, பழக்கம், இன்றும் கிராமப் புறங்களில் இருக்கும் நிலைமையை நாம் அறிவோம். ஆனால், இப்பொழுது வரி மொத்தமாகக் கொடுக்கப் படவேண்டும் என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்ல. அதை விட ஒரு வேடிக்கை—கஷ்டம்—என்னவென்றால், இப்பொழுது பல விதமான வரிகள், அடிஷனல் அசெஸ்மென்ட், அடிஷனல் வாட்டர் செஸ் என்றெல்லாம் போட்டு, 1962-ஆம் வருஷத்திலிருந்தே அவை அமலுக்கு வந்துவிட்டதாகச் சொல்லி விதிகள் செய்திருக்கிறோம். இப்பொழுது வசூலிக்கப்படுகிற இடத் திலே போய்ப் பார்த்தால், அந்த வரிகளை வசூலிக்கின்றவர்கள் உபரி வரிகளையும், உபரித் தீர்வைகளையும் வசூலிப்பதில் தான் பிரதான்யம் கொடுத்து, இவற்றை முதலில் வசூல் செய்கிறார்கள். அதிலும் ஒரு வேடிக்கை—சென்ற ஆண்டில் பல்வேறு இடங்களில் விளைச்சல் இல்லை. அந்த சட்டத்திற்கு ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத் திருந்தாலும் அதற்குப் போதிய காலம் இல்லை என்ற காரணத்தால் சென்ற ஆண்டு அதை வசூலிக்க முடியவில்லை. அந்த வகையில் அடிப்படை வரி விகிதாசாரம் (பேசிக் டாக்ஸ் ரேட்) 45 சதவிகிதம் ஆகிறது. இப்பொழுது இந்த இரண்டு ஆண்டுக்குள்ள அந்த உபரி வரி சுமார் 90 சதவீதமாக ஆகிறது. இந்த அளவுக்கு விவசாயிகள் உபரி வரி கட்டவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருக் கிறார்கள். ஆகிலும், இந்த ஆண்டில் பல்வேறு பகுதிகளில் விளைச்சல் பாழ். நமது தமிழ் மாநிலத்திலேயே மிக உன்னதமான உணவு தரும் 'நெல் களஞ்சியம்' என்று சொல்லக்கூடிய தஞ்சை ஜில்லாவை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். எதற்காக தஞ்சையை எடுத்துக்கொள்கிறேன் என்றால், சீரும் சிறப்பும், செய் நேர்த்தியும், வளமான நன்செய் நிலமும் உள்ள பகுதியாதலால், அதை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுகிறேன். அங்கே டிசம் பரில் பெய்த மழையினால் பூ உதிர்ந்து விட்டது. பின்னே தண்ணீர் இல்லாமல் நஞ்சைப் பயிர் பால் வைத்தது கருக்காய் ஆகிவிட்டது. இது புதியதொரு நிலைமை. ஒரு மாவுக்குப் பத்து காணும் என்று கருதியவர்கள், மாவுக்கு நான்கு கூடக் காணவில்லையே என்று கவலைப்படுகிறார்கள். அவர்களில் பலர், மாவுக்கு நான்கு கண்டாலே போதும் என்று திருப்தி கொள்ளக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். காரணம் என்ன? நீர் ஒரு புறம்; உரம் மற்றொரு புறம். அடிக்கடி நீர்ப் பிடிப்பு உள்ள நிலங்களுக்கு உரம் அவசியம். எங்கள் பகுதி

அப்படி அல்ல. வெயில் நிரம்ப அடிக்கிற பொட்டல் காட்டுக்கு இந்த ரசாயன உரம் தேவை இல்லை. சூரியனிடமிருந்தே பெற்றுக் கொண்டுவிடுகிற பூமி அது. ஆனால், தண்ணீர் பிடிப்பு இருக்கும் பூமி சூரியனிடத்திலிருந்து நேரடியாகச் சத்தைப் பெற இயலாது என்பதை விஞ்ஞானத்தைப் படித்த அளவில் என் போன்றவர்கள் கூடப் புரிந்து கொள்ளுகிறார்கள். இந்த நிலையிலே அந்தப் பகுதிகளுக்கு உர விநியோகம் செம்மையாகக் கிடைக்கவில்லை. மற்றொரு பகுதியிலே உரம் கிடந்து மட்கிக் கெட்டுப் பாழாகிப்போன கதையும் நமக்குத் தெரியும். இப்படி எங்கு தேவையோ அங்கு அது பயன்படவில்லை. எங்கு தேவை இல்லையோ அது அங்கு விரயம் ஆகிறது. ஒன்று செய்யாமை, இன்னொன்று தேவை இல்லாத இடத்திலே செய்வது.

செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

என்று வள்ளுவன் சொன்னானே அதைப்போல, செய்ய வேண்டியவற்றை, செய்யவேண்டிய இடத்திலே செய்யாதது தீமை, செய்ய வேண்டாததை, வேண்டாத இடத்திலே செய்வது தீமை என்பதற்கு இந்த உர நிலையே நமக்கு உண்மையைப் புலப்படுத்துகிற ஒன்றாக அமைந்திருக்கிறது. இம்மாதிரி நிலையிலே, 90 சதமான உபரி வரியையும், இயல்பாக அமைந்திருக்கிற வரியையும், அதற்கு மேலே அவர்கள் வாங்கியிருக்கிற கடன்களுக்காக உள்ள பகுதிப் பணம் அல்லது மொத்தம் இவ்வளவையும் சேர்த்துக்கட்டு என்று சொன்னால் என்ன ஆவது? இந்த ஆண்டில் பெரும் பகுதி இடங்களில் மழை இல்லை, நீர் இல்லை, என்கிற இந்தக் காரணங்கள் வேறு இருக்கின்றன. இவற்றில் பலர் என்ன எண்ணுகிறார்கள் என்றால், தஞ்சையிலே உரத்திற்குச் செலவழித்த பணத்தின் அளவுக்காவது தானியங்களை விற்றுக் கடனைக் கொடுத்துவிட்டால் போதும் என்ற நிலை விவசாயிகட்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது பிரத்யட்ச நிலைமை. இது யாருடைய தனிப்பட்ட விஷயமும் அல்ல; கட்சி விஷயமும் அல்ல; அல்லது எந்தக் கொள்கை அடிப்படையின் மீதும் உள்ளது அல்ல. ஆட்சியாளர்கள் மிக்க அக்கறையாக இதைக் கவனித்து, இதற்கு வேண்டிய நிவாரணத்தை, விமோசனத்தைச் செய்ய வேண்டும், செய்யக்கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை உங்கள் மூலமாக நான் பணிவோடு, ஆனால் அழுத்தமாக, விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

அதைவிட இன்னொரு வேடிக்கை. புள்ளி விவரங்கள், கண்டு முதல்கள் விளைவின்மை இவற்றையெல்லாம் பற்றிக் கணக்குக் கொடுக்கிற கர்ணங்கள் அல்லது கணக்கர்கள் இருக்கிறார்களே, இவர்கள் கணக்குக் கொடுப்பதைக் கொண்டு செயல்படுகிற அடிப்படை முறை இருக்கிறதே, அது இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. விளைவைப் பார்க்கின்றபோது, சில இடங்களில், சில தவறுகளும் நடக்கலாம். பரிசு விஷயத்திற்குக் காட்டுகிறபோது, ஆயிரம் ஏக்கர் நிலத்திலே நடுவிலே போய்ப் பார்த்து, எங்கே செழுமையாக, கொழுமையாக, நன்றாக விளைந்திருக்கிறதோ அந்த இடத்தில் ஒரு சென்ட் அறுத்து, அதை அடித்துவிட்டு, சராசரிக் கணக்கு





போடுவதற்கு அந்தப் பெரும் வளமான வளர்ச்சியைக் கணக்கில் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். அந்த வளமான நிலை எல்லா இடங்களிலுமா இருக்கிறது? அந்தப் பரிசு வாங்குகிறவர், அல்லது சபாஷ் பட்டம் பெறுகிறவர்கள் அந்த கணக்குப்படி அவருடைய நிலம் முழுவதும் பயிரிட்டு விளைவைப் பெறுகிறார் என்றால் எத்தனை ஆயிரம் டன் அவருக்கு வந்திருக்க வேண்டும்? அப்படியா நடக்கிறது? இதையெல்லாம் மனத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். என்ன நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். புதிது அல்ல. அதிசயமாகவோ, கற்பனையாகவோ நான் ஒன்றும் சொல்லிவிடவில்லை.

இந்தமாதிரி வரி போடுகிறபோது வேண்டாதவர்களுக்கு வளமான பகுதியைக் கொண்டு கணக்கிடுவதும், வேண்டியவர்களுக்கு வளம் இல்லாத பகுதி, உரம் செம்மையாகப் பிடிக்காத பகுதி, நரி பிடித்த நெல் என்று சொல்லக்கூடிய பகுதியைக் கணக்கிட்டு வரி போடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு அடிப்படையை வைத்துக் கொண்டு கணக்கு தயாரிக்கப்படுகிறதே தவிர ஒரே அடிப்படையில் சீராக நியாயமாக அங்கங்கே வரி நிர்ணயிக்கப் படுவதில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வரி போடும் விஷயத்தில் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்த்துப் போடுவதாகச் சொன்னார்கள். அப்படி எங்காவது அதிகாரிகள் பட்சபாதமாக நடந்து கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சா. கணேசன் :** நான் சொன்னது அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட விஷயம். சொந்த விருப்பு வெறுப்போடு பார்க்கக் கூடாது. கணக்குப் பிள்ளைகள் கொடுக்கிற புள்ளிவிவரங்கள் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது என்பதை இங்குள்ள அனைவரும் உணர்வார்கள். இந்த நிலைமையில் இவ்வாண்டு 90 சதவிகிதம் அடிஷனல் வரியை முதலில் வசூலித்து விடுகிறார்கள். அடிப்படை நிலவரி பிறகு வசூலிக்கப்படுகிறது. இதனால் ஏற்படுகிற சிரமங்கள், கஷ்டங்கள் விவசாயிகளுக்குக் கொஞ்சநஞ்சமல்ல. இவற்றை எல்லாம் மனதில் கொள்ளவேண்டும்.

இன்னும் பல விவசாயிகளுக்கு எதற்காக எந்த எந்தத் தொகை வாங்கப்படுகின்றது என்கிற விவரங்களே தெரியாது. "நீ இவ்வளவு பணம் கட்ட வேண்டும்" என்று கணக்குப் பிள்ளைகள் சொல்கிறார்களே தவிர, ஒரு விவசாயி நூறு ரூபாய் கட்டினால் அதில் அடிஷனல் வாட்டர் செஸ் எவ்வளவு, அல்லது அடிஷனல் அஸெஸ்மெண்டு எவ்வளவு, அடிப்படை நில வரி எவ்வளவு அடிப்படை தண்ணீர் தீர்வை எவ்வளவு என்கிற விவரங்கள் எதுவும் தெரிவதில்லை. ஒரு பத்து ரூபாய் கட்டினால் அது எதற்காகக் கட்டப்பட்டது என்கிற விவரம் கிடையாது. ஆகவே இதுபற்றி என்னுடைய ஆலோசனை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது முனிசிபாலிட்டிகளில் வீட்டு வரி வசூலிக்க டிமாண்ட் நோட்டீஸ், வரி ரசீது கொடுப்பதில் வீட்டு வரி, தண்ணீர் வரி

கல்வி வரி என்று அந்த ரசீதுகளின் பின்னாலேயே தொகை இன்னதற்காக வாங்கப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறதோ அது போலவே விவசாயிகளிடம் இருந்து வரி வசூல் பண்ணுகிறபோது, அவர்களுக்குக் கொடுக்கிற ரசீதின் பின்னாலேயே அந்த வரி இன்னவற்றிற்காக வாங்கப்பட்டது என்பதும் குறிக்கப்படவேண்டும். இப்படிச் செய்வது சாத்தியமானது, சுலபமானது. எந்த நியாயமான அடிப்படையில் கணக்கிடப்பட்டு தம்மிடம் வரி வசூல் செய்யப்படுகிறது என்பதை ஒவ்வொரு விவசாயியும் தெரிந்துகொள்ளும்படியாக வரி கணக்கிடும் முறையில், பணம் வாங்குவதற்குக் கொடுக்கப்படுகிற ரசீதில் அது இன்னவற்றிற்காக இன்ன அடிப்படையில் வாங்கப்பட்டுள்ளது என்கிற விவரமும் கொடுக்கப்படவேண்டும் என்கிற என் ஆலோசனையை கொஞ்சம் அழுத்தமாக, ஆனால், பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி ஜில்லா கலெக்டர்களிடம் விபரம் கேட்டு வழி வகுக்கவேண்டும். ஜில்லா கலெக்டர்கள் அத்தனைபேரும் சேர்ந்து நடைபெறுகிற மகாநாட்டில் இவ் விஷயத்தை ஆலோசித்து ஒரு தரமான முறையைக் கையாள்வதற்கு வழிவகை செய்தாக வேண்டும். அந்த அடிப்படையில் ஒரு முறை வகுக்கப்பட்டதாக வேண்டும்.

அடுத்து கல்வித் துறை. அதைப் பொறுத்த வரையில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் புரட்சிக்கண்ணோட்டத்தோடு தடபுடலென்று எந்த மாறுதல்களையும் செய்யாமல் சீராக, முறையாக செயல்பட்டு வருவதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். திடீரென்று மாற்றங்களும், குழப்பங்களும் ஏற்படாமல் இருப்பது வரவேற்கத்தக்கது. ஆழ்ந்த நோக்கத்தோடு நிதானமாக, நுணுகி, இவ்விஷயத்தை அணுகி வருகிறார்கள் என்பதை அவரது ,பட்ஜெட்டில் இருந்தும், பட்ஜெட் உரையிலிருந்தும் நாம் புரிந்து கொள்ளலாம். இப்படி கல்வி அமைச்சரை பாராட்டுகிற நேரத்திலே குறைபாடுகளையும் சொல்ல விரும்புகிறேன். எஸ்.எஸ்.எல்.சி.-யை ஒரு மையக் கட்டமாக எடுத்துக்கொண்டால் அதில் தேர்ச்சி பெற்றவர்கள் நிலை வேறு. தேர்ச்சி பெறாதவர்கள் எந்த ஒரு படிப்புக்கும் வேலைக்கும் தகுதியற்றவர்களாகிறார்கள். பரிட்சை என்பது இப்படி பொதுவானதாக அமைவது சிறப்பில்லை. மேலை நாடுகளை எடுத்துக்கொண்டால் அங்கே ஐ.க்யூ. (Intellegence quotient) அதாவது கூர்மை அளவு" அடிப்படையில் சோதனை செய்யப்பட்டு மாணவர்கள் தரம் பிரிக்கப்படுகிறது. இங்கே நாம் ஒரு வகுப்பில் 300 பேர்கள் இருந்தால் நாற்பது நாற்பது பேர்களாகச் சேர்த்து அப்படி ஒவ்வொரு செக்ஷன் என்று பிரிக்கிறோம். மேல் நாடுகளில் அவ்வாறு பிரிப்பது இல்லை. அந்த 300 மாணவர்களுக்கும் புத்திக் கூர்மை அளவு எப்படி என்று கணிக்கிறார்கள். புத்திக் கூர்மை அளவு 120 புள்ளி அதிகம் என்று வைத்துக்கொண்டால் குறைவு 60 புள்ளி என்று நிர்ணயித்துக்கொள்கிறார்கள். நூறுக்கு மேல் நூற்றிருபது வரை புத்திக் கூர்மை அளவு புள்ளி உள்ளவர்களை ஒரு செக்ஷனாகப் பிரிக்கிறார்கள். எண்பது



புள்ளியில் இருந்து நூறு புள்ளி உள்ளவர்களை ஒரு செக்ஷனாகப் பிரிக்கிறார்கள். இப்படி புத்திக் கூர்மை அளவுப் புள்ளி அடிப்படையில் மாணவர்கள் பிரிக்கப்படுவதனால் போதனை செய்கிற முறையிலும் பல உத்திகளைக் கையாண்டு மாணவர்களின் திறனை அதிகப்படுத்த முடிகிறது. புத்திக் கூர்மை அளவு புள்ளி அதிகம் உள்ளவர்களுக்கு சாதாரணமாகப் பாடம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர் இருந்தால் போதும். காட்டினால் பிடித்துக்கொள்கிற ஆற்றல் உள்ள மாணாக்கர்கள் அவர்கள் தமிழ் முறையில் இவர்களைக் கற்பூரப்புத்தியாளர் என்பார்கள். எரிகிற நெருப்புக் குச்சியால் தொட்டால் போதும், கற்பூரம் பற்றி எரியத் தொடங்கிவிடும்.

புத்திக் கூர்மை அளவு புள்ளி சற்று குறைவாக உள்ளவர்களுக்கு கொஞ்சம் திறமை, அனுபவம் எல்லாம் அமையப்பெற்ற ஆசிரியர் இருக்கவேண்டும். ஆசிரியரின் சிரமத்திற்கேற்பப் பயன் உண்டு. பற்றவைக்கச் சிறிது சிரமம். பற்றிக் கொண்டு விட்டால் அணையாது. இதைக் கரிப் புத்தி என்பர் மேலோர். ஊதி ஊதி முயன்றால்தான் நெருப்பைப் பிடித்துக் கொள்ளும் கரித் துண்டு. அப்படிப்பட்ட மாணவர்களுடைய மூளையில் விஷயத்தைத் திணிக்கக் கூடிய வல்லமை பெற்ற ஆசிரியர்கள் இத்தகைய மாணவர்களுக்கு அமையவேண்டும்.

60 புள்ளிக்கும் கீழே உள்ள புத்தி கூர்மை அளவுப் புள்ளி உள்ளவர்களைப் பற்றி கவலைப்படவேண்டாம். அவர்களது. சேவையை வேறு பல துறைகளில் பயன் படுத்திக் கொள்ளலாம். எவ்வளவு முயன்றாலும் நெருப்பைப் பற்றிக் கொள்ளாது கதலி. ஆனதால் இதைக் கதலிப்புத்தி என்பார்கள். கதலி என்றால் வாழை. வாழை தண்டில் எத்தனை தான் நெருப்பை வைத்தாலும் பிடித்துக்கொள்ளுமா என்ன?

ஆக இப்படி மாணவர்களின் தரம் பிரித்து, பாடம் போதிப்பது நாட்டின் வளம் அத்தனையையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுவதாக அமையும். இதையும் கனம் அமைச்சர் அவர்கள் மனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து தேர்வு முறையிலும் கூட ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். ஒரு மாணவன் தமிழில் 65 சத விகிதம் வாங்கியிருக்கலாம். கணிதத்தில் நூற்றுக்கு நூறு வாங்கியிருக்கலாம். பௌதிகத்தில் 80 சத விகிதம் வாங்கியிருக்கலாம். ரசாயனத்தில் 90 சத விகிதம் எடுத்திருக்கலாம். இந்தியில் 12 சத விகிதம் வாங்குகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள்—இந்தி வேண்டாம்—நான் சொல்ல வந்தது தவறாகப் போய்விடக் கூடாது. (சிரிப்பு) சரித்திரத்தில் 12 சத விகிதம் வாங்குகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். நம்முடைய கல்வி திட்ட அமைப்பில் அவன் தேர்ச்சி பெறாதவன் தான். ஆனால் மேலைநாட்டு முறைப்படி அவன் என்ஜினியரிங் படிக்கலாம். அதற்கு வேண்டியது கணிதம், பௌதிகம், ரசாயனம் தானே. இங்கே தாஜ்மகால் எங்கே இருக்கிறது என்று கேட்டதற்கு இந்தியாவில் இருக்கிறது என்று சொன்னதனாலேயே தேர்ந்து எடுக்கப்படவில்லை என்பதாகக் கேள்விப்படுகிறோம். இதுவும் சரியான முறையாகாது.

**[திரு. சா. கணேசன்]** [6th March 1964

மேலைநாட்டு கல்வி அமைப்பில் ஒன்றும், பத்து, பதினொன்றாவது வகுப்பு என்றால் அந்த மூன்றாண்டுப் படிப்புக் காலத்திலேயே மாணவர்கள் இரண்டு அடிப்படையில் பிரிக்கப்படுகிறார்கள். ஒன்று 'ஏ' லெவல், மற்றொன்று 'ஓ' லெவல். ஏ லெவல் என்றால் அட்வான்ஸ் லெவல். ஒன்பதாம் படிவத்தில் இருக்கும்போதே அவன் 11-ஆம் படிவத்து கணக்குகளைப் போடக்கூடிய ஆற்றல் உள்ளவனாக இருப்பான். அத்தகையவர்கள் ஒன்பதாம் படிவத்தில் இருக்கும் போதே 11-ஆம் படிவ கணித பரீட்சை எழுதி தேர்ச்சியும் பெற்று விட முடியும். 'ஓ' லெவல் என்பது ஆர்டினரி லெவல். இப்படித் தரம் பிரித்து மாணவர்கள் கல்வி அறிவு, தொழில் அறிவு போதிக் கப்பட்டு, சமூகத்திற்கு சிறந்த முறையில் பயன்படக்கூடியவர் களாக ஆக்கப்படுகிறார்கள். பரீட்சை என்கிற பொது நிர்ப்பந்தம்
10–30 a.m. கிடையாது. இன்றைக்கும் அமுலில் அங்கே இருக்கிற முறை இது

இலவசக் கல்வி என்பதை வைத்துவிட்ட பிறகு பையன்கள் எல்லாம் இரண்டு வருஷம் 'கூடிப் பிரியேல்' என்ற நிலைமையை உண்டாக்காமல் இருக்க அப்படி பாஸ் செய்து வெளியே வந்தால் அந்த இடத்திலே இன்னொருவன் படித்துத் தேறி நாட்டிற்கு வளம் தருவதற்கு வேண்டிய வசதியும் வாய்ப்பும் இருக்குமல்லவா? பல்கலைக்கழகமும், அரசாங்கமும் சேர்ந்து கலந்து இதற்கு ஒரு வழி முறையை வகுக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள் கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஸ்கூல் பைனல் பரீட்சையைப் பொறுத்தமட்டில் தேர்வு பெற்றாரா இல்லையா என்பதை அரசாங்கம் முடிவு செய்வதில்லை. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஸ்கூல் பைனல் கம்ப்ளீட் ஆகிவிட்டது என்ற அளவுக்குத் தான் கூறும். ஆனால் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தமட்டில் பல்கலைக் கழகத்தில் சேர்த்துக்கொள்ள இவ்வளவு மார்க்குகள் இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் பாஸ், ஃபெயில் என்று இல்லை.

**திரு. சா. கணேசன்:** மிக்க நன்றி. நான் மீண்டும் விண்ணப் பித்துக்கொள்கிறேன். இங்கிலாந்தில் 'ஜெனரல் சர்டிபிகேட் ஆப் எஜுகேஷன்' (ஜி.ஸி.இ.) என்று ஒன்றைக் கொடுக்கிறார்கள். அங்கே அவன் வகுப்பிலே முழுத் தேர்வு பெறாவிட்டாலும், எந்த எந்தத் துறையில் அவன் பூரணத்துவம் அடைந்து விட்டான் என்பதற்குச் ஒரு சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். சாதாரணமாகச் சொல்வார்கள்—பிசிக்ஸ்-லெவல்—பாஸ், கெமிஸ்ட்ரி லெவல்—பாஸ் மாதமாடிக்ஸ் ஏ லெவல் பாஸ், ஹிஸ்டரி ஓ. லெவல் பாஸ் அல்லது பெயில் என்று இப்படிப் போட்டுவிடுவார்கள். எல்லாப் பாடங் களிலும் பாஸ் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. ஆகவேதான், யூனிவர்சிடியும், அரசாங்கமும் சேர்ந்து இந்த அடிப் படையில் வழிவகுக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள் கிறேன்.



6th March 1964] **[திரு. சா. கணேசன்]**

இந்த பட்ஜெட்டிலே அடையாள பூர்வமான ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது; பாராட்டத் தக்கது. மசூதிகளிலே குரான் பயிற்சிக்காக ஒரு தொகை ஒதுக்கப் பட்டிருப்பதை நன்றியறிதலோடு பாராட்டுகிறேன். நமக்குச் சமய வேறுபாடு துளியும் கிடையாது. 'ஈஸ்வர அல்லா தேரே நாம்' என்று மனப் பூர்வமாக நம்புகிறவர்கள் நாம். 'ராம ரகீம் என்றும், கிருஷ்ண கரீம்' என்று வழிபடுகிற பழக்கம் உள்ளவர்கள் நாம். அந்த மன நிறைவோடு நான் விண்ணப்பித்துக் கொள் கிறேன். இந்து கோயில் என்றால் வேதம், திருமுறை, ஆகமம், திவ்விய பிரபந்தம் கற்பிப்பதற்கும், கிறிஸ்தவக் கோயில்கள் என்றால் அங்கே பைபிள் தொடர்பான நூல்களைக் கற்பிப்பதற்கும் ஒரு ஆக்கத்தை—அரசாங்கம் முழுத் தொகையும் செலவழிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை—ஆக்கத்தை, உற்சாகத்தை கொடுக்கிற அளவிலே ஆட்சி அதற்கு ஓரளவு துணை புரிய வேண்டு மென்று நான் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த மட்டில் இரண்டு துறையையும் ஒன்றாக இணைத்திருக்கிறார்கள். சுபீட்சமான எண்ணத்துடனேயே அவ்வாறு இணைத்திருக்கிறார்கள். சாலைப் போக்கு வரத்து மட்டும் ஒரு நாட்டை வளப்படுத்தி விட முடியாது. நீர்ப்போக்குவரத்தும் கணிசமான அளவு வளர்ச்சியுற வேண்டும். நீர்ப் போக்குவரத்துத் துறையிலே நாம் கணிசமான அளவு, அல்லது எந்த அளவிலும் முன்னேறாவிட்டாலும் கூட, இரண்டையும் இணைத்தே பட்ஜெட்டிலே கூறியிருப்பதைப் பாராட்டுகிறேன். நம்முடைய தமிழகத்தில் கடலோரப் பகுதிகள் சுமார் 400 மைல் தூரம் கிடக்கின்றது. 400, 500 கிராமங்களுக்கு மேலே கடலோரத்தில் அமைந்திருக்கின்றன என்று கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கணக்கிலே பார்க்கிறபோது, நமக்கு சாலைப் போக்குவரத்தில் ஏற்படுகிற நெருக்கடி, அதனால் ஏற்படுகின்ற விரயங்கள், சாலைப் பராமரிப்பு ஆகியவற்றுக்காக செலவாகும் தொகை பெருகிக் கொண்டே போவதை மறந்து விடாமல் கவனத்தில் கொள்ள வேண்டும். நம்முடைய நாட்டில் ஆற்றுப் போக்கு வரத்தைப் பொறுத்தவரை சாத்தியமல்ல. இங்கே உள்ள ஆறுகள் எல்லாம் ஒழிவழிப் பெருக்காய்—கிழக்கு நோக்கியவைகளாகத்தான் இருக் கின்றன. எந்த ஆற்றிலும் பெருக்கு-வடிவு என்பதே இல்லை. பாலாறு 'பாழாறாக' இருக்கிறது. எங்கள் பகுதியில் தேனாறு என்று இருக்கிறது. தேன் எவ்வாறு துளிதுளியாக வருமோ அதே போன்றே தேனாற்றில் தண்ணீர் இருக்கிறது. எந்த ஆற்றிலும் ஆண்டு முழுவதும் நிரம்ப நீர் ஓடுவதுமில்லை. ஆகவே, நாம் கடல் போக்குவரத்தைச் செம்மையாகச் செய்யவேண்டும். கடற்கரை ஓரத்தில் படகுகள், விசைப்படகுகள், சிறு பாய்மரக் கப்பல்கள் மூலம் ஏராளமான பண்டங்களை அனுப்ப போக்குவரத்து வசதிக்கு வழி செய்யலாம். இவ்வாறு செய்வதன் மூலம் பெரும் லாபம் வரும். ரோட்டிலே லாரிகள் எல்லாம் போய் தேய்மானம் வருவ தைப் போன்ற கஷ்டம் இதிலே ஒன்றுமில்லை. ஏதோ சில நேரங் களில் மண் மேடிட்டதன் காரணமாக தூர்ந்துபோன பகுதிகளை

வெட்டவேண்டிய நிலைமை ஏற்படலாம். அதனால் இவ்வளவு அதிகமான செலவு ஏற்படாது. சாமான்களையும் கஷ்டம் இல்லாமல் கொண்டு போகலாம். கூலியும், செலவும் மிகக் குறைவாக ஆகும். இதை விரைவிலே ஏற்படுத்தவேண்டும். தனிப்பட்டவர்கள் இதிலே முயற்சி எடுக்கும் வகையிலும் அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இப்படி உள்நாட்டுப் போக்குவரத்தைச் செய்வதன் மூலம் இன்னொரு லாபமும் ஏற்படும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். இந்த மாதிரி உள்நாட்டுப் போக்குவரத்திலே அனுபவம் பெற்று விடுவார்களானால், இதன் மூலம் வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்துக்கான பயிற்சியும் கிடைக்கும் என்பதை உணர வேண்டும். இந்தத் துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் சிட்டகானியன்கள் மாதிரி உலகத்தில் வேறு எங்கும் இல்லை. நம்முடைய தமிழ் நாட்டில் அந்த நிலை ஒரு காலத்தில், ராஜராஜன் காலத்தில், ராஜேந்திரன் காலத்தில் இருந்தன. அன்று கடாரம் சென்றான் மலையூர் சென்றான், சிர்விஜயம் சென்றான் வென்றான்; கண்டான் கொண்டான் என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள். அந்த நிலையை மீண்டும் பெற ஆட்சி வழிவகை செய்யவேண்டுவது ஆட்சிக்குரிய கடமையாகும் என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகம், அதே போல் மற்ற சிறு துறைமுகங்களையும் சாத்தியமான அளவுக்குச் செம்மையாகவும், விரிவாகவும் செய்யவேண்டும். சேதுசமுத்திரத் திட்டம் வந்து விடும், வந்து விடும் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இதிலே நடைமுறையில் ஏற்படுகின்ற சிரமங்களையெல்லாம் உணருகிறேன். அவ்வாறு உணருகின்றபோதே துரிதப்படுத்துங்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன். வெறும் பாலங்களுக்கெல்லாம் வரும் டோல்கேட் வரியை விட லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும் என்று சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகிறேன்.

(குறுக்கீடு : "பாலங்கட்குச் செலவான பணத்தைப் பெற வேண்டாமா ?")

கோவிலுக்கு போட்ட முதலிலிருந்து என்ன வட்டி வரும் என்று பார்த்தா பணம் கொடுத்தார்கள் அரசர்கள், பணக்காரர்கள், பெரிய மனிதர்கள் எல்லாம் ? அதைப் போலத்தான் பாலங்களையும் கருத வேண்டும். அடுத்து, புதுத்துறைகளை ஏற்படுத்தும் போது லாப நஷ்டத்தை நாம் கணித்து உணர வேண்டும். சர்க்கார் நடத்தும் தொழில்களில் எதிர்பார்த்த அளவு லாபம் வருவதில்லை; நஷ்டமே ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த பட்ஜெட்டே புலப்படுத்துகிறது. டிரான்ஸ்போர்ட் துறையில் சுமார் ஆறு கோடி ஒன்பது லட்சம் ரூபாய் வரவு எதிர்பார்க்கப்படுகிறது. செலவு ஆறு கோடி 28 லட்சம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆக 19 லட்சம் ரூபாய் நஷ்டம் எதிர்பார்க்கப்படுகிறது. அது சிறிது குறையலாம் அல்லது கூடலாம். ஆகவே இந்த மாதிரி நிலையை வளர்த்துக்கொண்டு போவது சரியல்ல, நல்லதல்ல. இதைச்



சிந்தித்துப் பார்க்கவேண்டும். லாபம் வராது நஷ்டம் வந்து கொண்டிருப்பது நியாயமா ? இது தேவையா ? கொள்கை என்ற ரீதியில் பிடிவாதம் காட்டாமல் வீண்விரயம் செய்யாமல் லீஸுக்கோ அல்லது 40 அல்லது 50 பேர்களுக்கு இதைப் பிரித்துக் கொடுத்து விட்டால் அரசாங்கத்திற்கு லாபம் வராதா என்பதை நாம் கணிக்க வேண்டும். அப்படிக் கணித்து எது லாபத்தை தருகிறதோ, எது நன்மையைத் தரத்தக்கதோ, எது நிலையான பலனைத் தரத்தக்கதோ அதைக் கைக் கொள்ளவேண்டும். அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளாமல் இதை மட்டும் கூறுகிறேன். இம்மாதிரி விஷயங்களில் பிடிவாதத்தை விட்டு விட்டு பலாபலன்களைக் கருத்தில் கொண்டு எதையும் அணுக வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குறுக்கிட வருந்துகிறேன். ஆனால் அப்போதைக்கப்போது விளக்கம் தெரிந்து விட்டால் நலம் என்றுதான் கேட்க விரும்புகிறேன். சர்க்கார் நடத்தும் பஸ்கள் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மக்களின் வசதியைக் கவனித்து இதில் ஈடுபட்டிருக்கிறோம். இது வேண்டாம் என்ற கருத்தா ? அல்லது சர்க்கார் நடத்துவதை விட தனிப்பட்டவர்கள் நடத்தினால் நமக்கு இந்த நஷ்டம் வராது மக்களுக்கு வசதிகள் அளித்து அவர்களும் லாபம் சம்பாதித்துக் கொள்வார்கள் என்பதா ? தனிப்பட்டவர்கள் நடத்துவதாகயிருந்தால் அவர்கள் நஷ்டத்தில் நடத்தமுடியாது, அப்படி நடத்துவோர்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை மக்கள் வசதியைக் கவனிப்பதுதான் முக்கியமானது. ஆகவேதான் அரசாங்கம் ஏற்று நடத்துவது. ஆகவே இதுகுறித்து விளக்கம் கூறவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன் :** மக்களுடைய வசதிகளைக் குறைக்க வேண்டும் என்பதல்ல. அது கூடாது என்றும் சொல்கிறேன். அதேகாலத்தில் தனியார் ஓட்டுகிற பஸ்களை விட அரசாங்கம் நடத்துவது திறமையாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. நான் டி.வி.எஸ். பஸ்ஸில் பல ஊர்களுக்குச் சென்றிருக்கிறேன். இதைவிட டி.வி.எஸ். பஸ் சிறிது சுத்தமாகக் கூட இருக்கிறது என்பதை நான் நிரூபிக்க முடியும். அதுவும் லாபத்தில்தான் ஓடுகிறது. நான் ஆடிட்டர் இல்லை, இன்கம் டாக்ஸ் ஆபீசரும் இல்லை, கேட்பதைக் கூறுகிறேன். ட்ரைவர்கள், கண்டக்டர்கள் இவர்களுக்கு கொடுக்கப்படும் போனஸ் அடிப்படையில் கூறுகிறேன், லாபம் இருக்கிறது என்று.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டி.வி.எஸ். சொந்தக்காரர்களே சொல்லியிருக்கிறார்கள் என்னிடம், சில பஸ் போக்குவரத்தை அவர்கள் விட்டு விட வேண்டியிருந்தது நஷ்டம் வந்ததால் என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** இருக்கலாம். எனக்கு வந்த ந்யூஸ் அது அல்ல. நஷ்டத்திற்காக அல்ல அப்படிச் சொல்வது. நாஷனலைஸ் செய்யப் போகிறார்கள், வரி வகைகளும் அதிகமாகிவிட்டது.

ஆனதால் நாம் வேறு துறையில் போய் விட்டால் தேவலை என்று தான் சொல்கிறார்கள். அந்த ரூட்களுக்கும் பலர் அப்ளிகேஷன் போட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள் . . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ரூட்டை ப்ரைவேட் ஆப்பரேட்டர்ஸ் சரண்டர் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சரண்டர் செய்வதுபோல் சர்க்காரும் சரண்டர் செய்வதாகயிருந்தால், அப்படிச் செய்வது சரி என்றால் ஏற்றுக்கொள்ளலாம். பட்ஜெட் விவாதத்தின்போது, அம்மானியம் வரும்போது இதற்கு பதில் அளிக்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** புது ரூட்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** இனி, பொது விஷயங்களை விட்டு விட்டு என் தொகுதி விஷயத்திற்கு வருகிறேன். நானும் ஒரு தொகுதியை ரெப்ரசென்ட் செய்கிறேன். என் தொகுதியைப் பொறுத்தவரை நிரூபிக்கக் கூடிய உண்மை. இப்போது என் தொகுதி ரொம்பவும் மெலிந்திருக்கிறது. அதாவது தொகுதியில் உள்ளவர்கள் மெலிந்து விட்டார்கள். வீடுகள் எல்லாம் இடிக்கப்பட்டிருக்கின்றன. அதை எல்லாம் முன்பு கூடப் பேசினேன். என் தொகுதியில் வருடம் ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் வரையில் இன்கம் டாக்ஸாக 45 ஆண்டுகளாக கொடுத்து வந்திருப்பது எனக்குத் தெரியும். அதற்கான ரிக்கார்ட்ஸ் இருக்கின்றன. ஆனால் அங்கு அரசாங்கத்தார் ஒரு எலிமெண்டரி ஸ்கூல் கூட வைத்ததில்லை. ஒரு டிஸ்பென்சரிகூட வைத்ததில்லை. ஒரு ஆஸ்பத்திரிகூட வைத்ததில்லை. ஒரு ஸ்கூல் கூட வைத்ததில்லை. பணம் இருந்தவர்கள் செய்து கொடுத்தார்கள். ரோடு போட்ட போது திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் ஜில்லா போர்டில் இருந்தார்கள். ரோடு போட்டு அதற்கு மேல் மெயின்டென்ஸ் காண்ட்ரிப்யூஷன் என்று 10,000 ரூபாய் கொடுத்ததன் பேரில்தான் ஒப்புக் கொண்டார்கள் ரோடு போட. பாலங்கள் கட்டவேண்டுமென்றால் கட்டும் செலவோடு மெயின்டனன்ஸ்க்கும் தொகை கொடுக்கவேண்டும். லட்சம் ரூபாய் செலவில் பாலம் கட்டிக் கொடுத்து விட்டு ரிப்பேர் போன்ற செலவுகளுக்கு 10,000 ரூபாய் கொடுத்ததால்தான் திறந்தார்கள். இருக்கிற இடத்திலிருந்து எடுத்து இல்லாத இடத்திற்கு கொடுக்கவேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. அது நியாயம் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இருக்கிற இடத்திலிருந்து எடுக்க வேண்டும் ஆனால் கொடுக்கக் கூடாது என்பது சரியா? பால் கறக்கவேண்டும் ஆனால் பசுவிற்கு தீனி கூடப் போடக்கூடாது என்பது சரியல்ல. பால் கறந்து கொள்ளட்டும், ஆனால் பால் கறக்கும் அளவிற்காவது புல் போட வேண்டாமா? ஆக அந்தப் பகுதியில் ஒரு ஆஸ்பத்திரி கூட இல்லை. ஐந்து லட்சம் ரூபாய் செலவில் ஒரு சானடோரியம் கட்டப்பட்டிருக்கிறது. 100 ஏக்கருக்கு மேல் இடம் இருக்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மற்ற நாடுகளில் இருந்து ஏராளமான சாதனங்கள் வந்து பெட்டி உடைக்கப்





படாமல் இருக்கிறது. ஆனால் டாக்டர்கள் இல்லை. அதனால் காச நோய்க்காரர்கள் கஷ்டப்படுகிறார்கள். நான் அவர்களைக் கூட்டி வந்து சுகாதார அமைச்சர் கனம் அம்மையாரிடத்தில் காட்டி எங்கேயாவது சேர்த்து விடுங்கள் என்று கேட்டிருக்கிறேன். பத்து லட்சம் ரூபாய் பெறுமான எல்லாம் ரெடியாக இருக்கும் போது அதை ஏற்று நடத்தாமல் இருப்பது நியாயமா? பத்து ஏக்கர் நிலத்தில் காரைக்குடி டவுனிற்குள்ளே ஆஸ்பத்திரிக்கு நல்லவிதமாக கட்டப்பட்ட கட்டடத்தைக் கொடுத்து விடுகிறோம். ஏற்று நடத்துங்கள் என்று சொல்கிறோம். நான் குறை கூறவில்லை. ஆனால் இன்னும் வேலை நடக்க மாட்டேன் என்கிறது. காரைக்குடியில் டிஸ்பென்சரிதான் இருக்கிறது. ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் முதல் வந்தாகிவிட்டது. நாகரீகம் வளர வளர வியாதிகளும் புதிது புதிதாக வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். நான் சொல்வதில் ரெக்கரிங் எக்ஸ்பண்டிச்சர் உள்ளதே தவிர காப்பிட்டல் எக்ஸ்பெண்டிசர் இல்லை, ஆகவே இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சியில் உள்ள ரோடுகள் எல்லாம் மட்டமாக இருக்கின்றன. காரைக்குடி முனிசிபல் பட்ஜெட்டைப் பற்றி எனக்குத் தெரியும். அங்கு வரும் வருமானத்தில், மொத்த வருமானத்தில் 85 சதவிகிதம் மாதச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே பாக்கியுள்ள 15 சதவிகிதத்தைக் கொண்டு மருந்துகளுக்காக என்ன கொடுப்பது லைட் போடுவதற்கு என்ன, ரோடு போடுவதற்கு என்ன, சாக்கடைச் சுத்தத்திற்கு என்ன என்று தொகை ஒதுக்க வேண்டும்? ஆகவே பெரிய ரோடுகளை எல்லாம் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும். திருச்சி, தஞ்சை, தொண்டி போகிற வண்டிகள் காரைக்குடி வழிதான் செல்கின்றன. மதுரை, அறந்தாங்கி போன்றயிடங்களுக்குச் செல்லும் வண்டிகளும் காரைக்குடி வழிதான் செல்கின்றன. காரைக்குடிக்கு மட்டும் சொல்லவில்லை. எல்லாயிடங்களுக்கும்தான் சொல்கிறேன். பெரிய ரோடுகளை சர்க்காரே நேரிடையாக எடுத்து நடத்தவேண்டும். அடுத்து நகராட்சி சிப்பந்திகள் நியமனம் எல்லாம் ஆங்காங்கே போடுவதால் எவ்வளவோ சச்சரவுகள், ஊழல்கள் குறைபாடுகள் ஏற்படுகின்றன. சாதாரணமாக ஒரு சிறிய தொழிற்சாலையில் கூட எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து குறிப்பிடும் ஆட்களை எடுக்கும் போது முனிசிபாலிடிகளில் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்றால் ஸ்டாண்டேர்ட் குறைந்து விடும். ஸ்டேண்டேர்ட் குறைவதின் காரணமாக என்ன எழுதுவது, என்ன செய்வது என்று கூட அவர்களுக்குத் தெரியவில்லை. நான் சேர்மனாகயிருந்தால் ஒருவரை போட்டுவிடுகிறேன். அவருக்கு ஒன்றுமே தெரியாது என்றிருந்தாலும் அவரை கமிஷனர் கோபித்துக் கொள்ள முடியாது. ஆகவே தகுதியும் திறமையும் உள்ளவர்களை எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சைக் கேட்டு நியமிப்பது என்ற நிர்ப்பந்தத்தை உண்டாக்கவேண்டியது அவசியம். அதேபோல் மாநில அளவில், மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் மாநில சர்க்கார் சிப்பந்திகளுக்கும் சம்பள வித்தியாசம் வைத்திருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வித்தியாசம் இருக்கவேண்டாம்

என்று நான் சொல்லவில்லை. இருக்கவேண்டும். ஆனால் சென்னை நகரத்தில் இருந்து கொண்டு வேலை செய்யும் ஒரு டைப்பிஸ்டை எடுத்துக்கொள்வோம். இங்கும் வேலை செய்கிறார்கள், அங்கும் வேலை செய்கிறார்கள். ஒரேயிடத்தில் ஒரேமாதிரி வேலையைத்தான் செய்கிறார்கள். அப்படியிருக்க மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஒரு வகையிலும் மாநில சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஒரு வகையிலும் சம்பளம் என்ற நிலை இருக்குமானால் அது சரி அல்ல. இதுபற்றி சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரோடு போராட வேண்டும். இருக்கிற நிலைமைக்கு தக்க, விலைவாசிக்குத் தக்க சம்பளத்தை வகுத்துக்கொடுக்கவேண்டும். மத்திய சர்க்காரில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கும் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் பெருமளவில் வித்தியாசம் இருக்கக்கூடாது . . .
(குறுக்கீடு) இதைப் பற்றிய விவரங்களை ஆட்சியாளர் கேட்கட்டும், நான் சொல்லுகிறேன், மேற்கு வங்காளம், கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களிலுள்ள சர்க்கார் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான சம்பளம் தான் இருந்து வருகிறது. இதற்கு காரணம் என்ன என்பதை பார்க்க வேண்டுமென்றால் கொஞ்சம் சரித்திரத்தைப் பார்க்கவேண்டும். முன்னால் நமது இந்தியாவினுடைய தலைநகர் கல்கத்தாவாக இருந்தது. ஆகவே தான் மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் மாநில சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஒரே விதமான நிலைமை இருந்தது. அதே போன்றுதான் இன்று வெஸ்ட் பெங்கால், பம்பாய் போன்ற இடங்களில் மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் சம்பள அடிப்படையில் தான் நிர்ணயித்திருக்கிறார்கள். இதை யெல்லாம் நாம் கணக்கிட்டாகவேண்டும். அந்தந்த மாநிலங்களில் இருக்கின்ற விலைவாசிக்கு ஏற்ப, அங்கு இருக்கின்ற போக்குவரத்து வசதி, மற்றுமுள்ள வசதிகள் இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து சிப்பந்திகளின் சம்பளத்தை நிர்ணயிக்கவேண்டும். சென்ட்ரல் கவர்மெண்ட் சிப்பந்திகளுக்கு 100 ரூபாயும், மாநில சர்க்கார் சிப்பந்திகளுக்கு 80 ரூபாயும், என்ற முறை இருக்கக்கூடாது. ஆகவே இந்தமாதிரியான வித்தியாசத்தை போக்குவதற்கு மத்திய ஆட்சியோடு போராட வேண்டிய கடமை இந்த மாநில ஆட்சிக்கு இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் சென்ற முறையும் குறிப்பிட்டேன், இப்போதும் குறிப்பிட விரும்புகிறேன். நான் குறை சொல்லுகிறேன் என்று மட்டும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மந்திரிகளுடைய கார் ரிப்பேர் செய்கிற விஷயத்தில் செலவு அதிகமாக போடப்படுகிறது. ஒரு இடத்தில் நான் கண்ணால் பார்த்தேன். சாதாரணமாக ஒருவருடைய காருக்கு ஐந்து ரூபாய் ரிப்பேர் சார்ஜ் போடப்படுகிறது என்றால், மந்திரிகளுடைய காருக்கு 50 ரூபாய் சார்ஜ் போடப்படுகிறது. இதை நானே பார்த்திருக்கிறேன். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை, சொல்லவும்படாது, சொல்வது நாகரிகமாகவும் இராது. நான் இதில் தெரிவிக்க விரும்பும் கருத்து என்னவென்றால், மந்திரிகளுக்கு வேண்டுமென்றால் "இன்டரஸ்ட் ஃப்ரீ லோன்" என்ற முறையில் அதாவது வட்டியில்லாக் கடனாக, கார் வாங்குவதற்கு என்று தொகையை அரசாங்கத்திலிருந்து கொடுத்துவிடலாம். அதோடு கார் அலவன்ஸ் என்று மாதம் 500 ரூபாய் கொடுத்துவிடலாம். இவ்விதம் கொடுக்கப்பட்டால், நிச்சயமாக அரசாங்கத்திற்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் லாபப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதைப் பற்றி அரசாங்கம் சிந்திக்கவேண்டும். தயவு செய்து இதை நான் விருப்பு வெறுப்பின் மீது சொல்வதாக யாரும் எண்ணக்கூடாது, துளிகூட கல்மஷம் இல்லாமல் சொல்லுகிறேன். தூய, நல்ல எண்ணத்துடன் சொல்லுகிறேன். இதைப்பற்றி கவனிப்பதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.





MR. SPEAKER : Each hon. Member is requested to take only seven to eight minutes because there are still twenty-four hon. Members who want to speak.

Now the hon. Member Sri P. K. Muthuvelappa Gounder may speak.

*திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு, நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது நமது கணேசன் அண்ணாச்சி அவர்கள் சில விஷயங்களைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை ஓரளவுக்கு ஆதரிக்க வேண்டியதுதான். காரைக்குடியில் சர்க்கார் ஒரு சிறிய எலிமெண்டரி பள்ளி கூட கட்டவில்லை. இருந்தாலும் காலேஜ் இருக்கிறது என்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். இதைப்பற்றி அவர்கள் சொல்லும்போது, இதுவரை அரசாங்கம் இதைப்பற்றி கவனிக்கவில்லை, இனிமேலாவது கவனிக்கும் என்று சொன்னார்கள். இதுவரை அரசாங்கம் ஏன் கவனிக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது, தமிழகத்திலுள்ள வட்டிகள் எல்லாம் அங்கே தான் சென்று கொண்டிருந்தது, இதன் காரணமாகத்தான் அங்கிருந்து வருடத்திற்கு இரண்டு கோடி ரூபாய் இன்கம்-டாக்ஸ்-ஸாக கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது முன் இருந்தது போல் இல்லாமல், வட்டிகள் ஒன்றும் செல்லாமல் இருப்பதால், அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டதால், இனி மேல் அரசாங்கம் காரைக்குடியை நன்றாக கவனித்து, அங்கு பள்ளிக்கூடம், ஆசுபத்திரி இவைகள் எல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நேற்றைக்கு முன்தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர், நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களைப்பற்றி கேவலமான முறையில் பேசினார்கள். நான் சொல்ல விரும்புவது . . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் இப்போது அதற்குப் பதில் சொல்லப்போகிறார்களா ? அவர் சொன்னதை விட்டுவிட்டு பட்ஜெட் மீது பேச வேண்டும். பட்ஜெட்டை விட்டுவிட்டு வேறு

விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தால், பட்ஜெட்டைப்பற்றி ஒன்றும் படிக்கவில்லை என்று எண்ண வேண்டியிருக்கும். ஆதலால் பட்ஜெட் மீது கனம் அங்கத்தினர் தன் அபிப்பிராயத்தைக் கூறலாம்.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** அவர்களும் எங்கள் அமைச்சர்களைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் இருக்கும்படி கனம் சபாநாயகர் அவர்கள் உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** அதைப்பற்றி பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, விலைவாசி ஏற்றம் அதிகமாக இருக்கிறது என்பது உண்மைதான். ஆனல் இந்த விலைவாசி ஏற்றத்திற்கு காரணம் என்ன ? இப்போது தமிழகத்தில் அறுவடையாகிக் கொண்டிருக்கிறது. ஏராளமான நெல் விளைச்சலாகிக் கொண்டிருக்கிறது. இவ்விதம் விளைச்சல் கூடுதலாக இருந்தும் கூட விலைவாசி ஏறுமுகமாகத்தான் இருந்து கொண்டிருப்பதன் காரணம் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் திட்டப்படி விவசாயிகளிடத்திலிருந்து வியாபாரிகள் மூலமாக நெல்லை வாங்கி குறைந்த விலையில் மக்களுக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் விலைவாசி ஏருமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள விவசாயிகளுக்கு 4 மூட்டைக்கு 62 ரூபாய் கொடுப்பது என்றும் திட்டத்தை வகுத்தார்கள். அதற்காக சென்ற மாதத்தில் நமது முதலமைச்சர் அவர்களிடத்தில் தமிழகத்திலுள்ள அரிசி வியாபாரிகள் எல்லாம் வந்து 15 சதமானம் தருவதாக ஒப்புக்கொண்டு சென்றுர்கள். இவ்விதம் சென்ற பின்னுல் விவசாயிகளிடத்தில் போய் வியாபாரிகள் கொள்முதலுக்காக போன போது, 62 ரூபாய்க்கு பதிலாக 100 ரூபாய் தரவேண்டும், இல்லையென்றுல் நெல்லை போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இதன் காரணமாக விவசாயிகள் நெல்லை இருப்பு வைத்து விட்டார்கள். அதே நேரத்தில் இவர்களிடத்தில் வாங்கி வாழ்க்கை நடத்தவேண்டியவர்கள் வேறு வழியின்றி, கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாக நெல்லின் விலை உயர்ந்து விட்டது. மேலும் இப்போது கொடுக்கின்ற விலை குறைவு என்கின்ற காரணத்தினுலும், அரிசி உற்பத்தி செய்கின்றவர்கள் சரியான நேரத்தில் விநியோகம் செய்யாததாலும், மக்களுக்கு அரிசி கிடைப்பதற்கு கஷ்டம் ஏற்படுகிறது. இதன் காரணமாக விலையும் ஏறுகிறது. இதற்காக நல்லதொரு திட்டத்தை தீட்டி, ஏதாவது வெளி முறையிலாவது நெல்லை வாங்க வேண்டும். இப்போதுள்ள முறையில் கூடுதல் விலைக்கு நெல்லை வாங்கினுல் நஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணி வியாபாரிகள் நெல்லை வாங்காமல் இருக்கிறுர்கள். இப்போது விவசாயிகளிடத்தில் நெல் இருப்பு இருந்து கொண்டிருக்கிறது. வியாபாரிகள் தான் நெல்லை பதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறுர்கள் என்று சொல்வது உண்மையல்ல. இதை அரசாங்கம் நன்ருக உணர்ந்து விவசாயிகளிடத்தில் இருந்து நெல்லை வாங்குவதற்கு தகுந்ததொரு திட்டத்தை வகுக்கவேண்டும் என்று





கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் நல்லமுறையில் வாங்கி குறைந்த விலையில் மக்களுக்கு கொடுப்பதற்கு வழி செய்தால்தான் இந்த கஷ்டம் தீரும் என்பது என் அபிப்பிராயம். மேலும் லெவி முறையில் வியாபாரிகளிடத்திலிருந்து வாங்காமல் ஏதாவது ஒரு திட்டத்தை வகுத்து மிராசுதார்களிடமிருந்து நெல்லை வாங்கி தக்க நேரத்தில் மக்களுக்கு கொடுப்பதுதான் நல்லது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (கனம் உதவி சபாநாயகர் தலைமை) அதோடு இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை மிகவும் குறைவாக இருக்கிறது, இதன் காரணத்தினுல் விவசாயி 11-00
கள் நெல் கொடுக்க மறுக்கிருர்கள் என்றும் சொல்லப்படுகிறது. a.m.
கோயம்புத்தூர் ஜில்லாவில் விவசாயிகளிடத்தில் அங்குள்ள கலெக்டர் அவர்கள் பேசி, ஒரு ஏக்கருக்கு ஒரு மூட்டை கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறுர்கள். அதை விவசாயிகளும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். ஆனல் அந்த ஒரு மூட்டை வாங்குவது எப்படி ? கூட்டுறவு சொஸைட்டி மூலமாக, ஸ்டோர் மூலமாக அதை வாங்கத் திட்டம் வகுத்தார்கள். ஸ்டோர் வாங்க வேண்டுமானுல் விவசாயிகளிடத்தில் சென்று ஒவ்வொருவரிடமும் ஒரு மூட்டை வாங்க ஏராளமான கூலி ஏற்படுகிறது போக்குவரத்துக்கு, ஒன்று சேர்க்க அதிகச் செலவு ஆகி விடுகிறது என்று அதன் பேரில் வாங்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். விவசாயிகளெல்லாம் ஒரு இடத்தில் கொண்டுவந்து போட்டால் நாங்கள் வாங்க முடியும் என்று சொல்லி விவசாயிகளிடத்தில் வசூல் இல்லாமல் நின்று விட்டது. அதற்கும் ஒரு நல்ல திட்டத்தை வகுத்து, விவசாயிகளே இவ்வளவு கொண்டு வந்து கொடுத்து விட வேண்டுமென்று திட்டத்தை வகுத்து அதைக் கொண்டு குறைந்த விலையில் போட்டால்தான் இந்த விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது லோயர் பவானி ஏரியாவிலே இப்போது டர்ண் ஸிஸ்டம் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மதகிலே வருஷத்திலே 4 மாதம், மற்றொரு மதகிலே அடுத்த 4 மாதம் தண்ணீர் விடுவது என்று தண்ணீரைப் பிரித்துக் கொடுத்து 2 லட்சம் ஏக்கர் வரையில் தண்ணீர் பாய்ந்து நெல் சாகுபடி செய்துகொண்டிருக்கிருர்கள். இந்த ப்ராஜெக்ட் ஆரம்பத்தில் புன்செய் தானியத்திற்கு என்று சொல்லி புன்செய் தானியத்திற்கு இந்த மதகில், இந்த வாய்க்காலில், இந்த அளவு தண்ணீர் என்று கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்த பூமிகளில் புன்செய் தானியம் நல்ல முறையில் விளையாத காரணத்தினுல் நெல்லை வைத்தால் நன்கு விளைகிறது என்று வைத்தார்கள். அப்போது அவர்கள்மீது ஏராளமான தண்டத்தைப் போட்டார்கள். அப்படி தண்டத்தைப் போட்டு விவசாயிகளைக் கட்டுப்படுத்தியும் நல்ல முறையில் நெல்தான் வருகிறது என்ற முறையில் அவர்கள் நெல் விவசாயத்தில் ஈடுபட்டு, அதன் மீது தண்டத்தைப் போட்டு பெரிய புரட்சியே ஏற்பட்டது. அதன் பிறகு இப்போது டர்ண் ஸிஸ்டம் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு இந்த வருஷம் தண்ணீர் இல்லாமல் ஒரு பக்கத்திற்கு தண்ணீர் கொடுக்க முடியாமல் போய்விட்டது. அது இயற்கையின் கூற்று. அடுத்த வருஷம் இப்படி இருக்காது, தண்ணீர் கிடைக்கும் என்று நம்புகிறேன். இப்போது [illegible]

[திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்] [6th March 1964

டர்ன் லிஸ்டத்தை மாற்றினால் புன்செய் தானியம் வைக்க மாட்டார்கள். மாறி நெல் வைத்தால் அப்போது தண்டத்தை போட்டால் புரட்சி ஏற்பட்டு எதிர் கட்சி நண்பருக்கு ஈரோடில் புரட்சியை நடத்த சாதகமாக இருக்கும் என்று நம்புகிறேன். அந்த முறையில் விவசாய மக்களுக்கு இப்போது டர்ண் லிஸ்டத்தை மாற்றாமல் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட லோயர் பவானி ஏரியாவில் அக்ரிகல்சுரல் டாக்ஸ் இருக்கிறது. அதற்காக இப்போது அதனுடைய தாரத்தை 1.60 ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கராகப் போடப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 8 ரூபாய்க்கு மேல் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றும், 8 ரூபாய்க்குக் கீழ் 1.60 கட்டவேண்டுமென்றும் சட்டம் இருக்கிறது. இப்போது ஸ்டாண்டர்ட் ஏக்கராக நிர்ணயித்திருப்ப தானது திட்டம் தீட்டப்பட்டு சர்க்காரில் உத்திரவு பிறப்பிக்காமல் இருக்கிறது. இந்த வருஷம் தண்ணீர் இல்லாமல் தாரம் குறைந்திருக்கிறது. மற்றொரு பக்கம் தண்ணீரே இல்லாமல் இருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய பூமிக்கு ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் 1.60 ஆக மாற்ற வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர்:** மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த 1964–65-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

பொதுவாக விவசாயிகளுக்கு பல சலுகைகள் அரசாங்கத்தில் வழங்கப்படுகிறது. விவசாயிகளுடைய நலனுக்காக மட்டுமல்லாமல் உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கவேண்டும் என்ற காரணத்திற்காகவும் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக அதில் பெரும் பகுதி பஞ்சாயத்து யூனியன்களில் இருந்து விவசாயிகளுக்கு கடன்களாகக் கொடுக்கப்படுகின்றன. அம்மாதிரி லோன்கள் கொடுப்பதில் சாதாரண விவசாயிகள் அந்த லோன்களை சுலபமாக அடைய முடியவில்லை. கிராம சேவக்குகள் அல்லது கிராம அதிகாரிகள் ஆகியவர்கள் சிபாரிசு செய்தால்தான் விவசாயிகள் அந்த லோன்களைப் பெற முடிகிறது. அவர்கள் சிபாரிசு செய்வதென்றால் சாதாரண ஏழை விவசாயிகளுக்குச் சிபாரிசு செய்வதே கிடையாது. வசதி உள்ளவர்களுக்கும், கடன் வாங்காமலேயே விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கும்தான் இந்த லோன்கள் சிபாரிசு செய்யப்படுகிறதே தவிர சாதாரண விவசாயிகளுக்கு அவர்கள் சிபாரிசு செய்வதில்லை. கிராம அதிகாரிகளைப் பார்த்து 'வசதி இருக்கிறவர்களுக்கு சிபாரிசு செய்கிறீர்களே, விவசாயம் செய்ய முடியாது இருக்கிறவர்களுக்கு சிபாரிசு செய்யக் கூடாதா?' என்று கேட்டால் அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள்? 'சதாரண குறைந்த ஊதியம் பெருகிற கிராம சிப்பந்திகளாகிய எங்களிடம் அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய் பணத்தைக் கொடுத்து விவசாயிகளுக்கு லோன் கொடுக்கச் சொல்லுகிறார்கள்; அதை வசூல் செய்ய வேண்டிய பொறுப்பும்



6th March 1964] [திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர்]

எங்களிடம்தான் கொடுக்கிறார்கள். லோனை வசூல் செய்வதில் தாமதம் ஏற்பட்டால் எங்கள் மேல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. 10-30 ரூபாய் சம்பளம் வாங்கும் நாங்கள் என்ன செய்வது? கொஞ்சம் வசதி உள்ளவர்களுக்குக் கொடுத்தால் காலாகாலத்தில் கொடுத்த லோன் வசூலாகிவிடும். நீங்கள் சொல்லும் விவசாயிகளுக்குக் கொடுத்தால் கொடுத்த லோனை திரும்ப வாங்க முடியாது' என்று கூறுகிறார்கள். அதனால் நாம் எந்த அளவு விவசாயம் அபிவிருத்தி அடையவேண்டுமென்று எண்ணுகிறோமோ அந்த அளவுக்கு அபிவிருத்தி அடைவது தடைபடுகிறது. மேலும் அரசாங்கம் கொடுக்கும் லோன்கள் ஏழைகைக்கு மெய்யாகவும், உடன் தேவைக்கும் கிடைப்பதில்லை. விவசாயிகளுக்கு எளிய முறையிலும் அந்த லோன்கள் எளிய முறையில் கிடைக்காததால் சாதாரண விவசாயிகள் பழக்கப்பட்ட உள்ளூர் லேவாதேவிக்காரர்கள் மத்தியில் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எந்த முறையில் அந்த லேவாதேவிக்காரர்கள் பணம் கொடுக்கிறார்கள் என்றால் அறுவடை ஆகும் போது 12 ரூபாய்க்கு ஒரு மூட்டை என்ற கணக்கில் நெல்லோ கடலையோ கொடுப்பதாக உறுதி வாங்கிக்கொண்டுதான் கொடுக்கிறார்கள். சரியாக விளைந்தாலும் விளையாவிட்டாலும் அவர்கள் சாக்குகளைக் கொண்டு வந்து ஒப்பந்தப் பிரகாரம் உள்ளதைக் கட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். இப்படி விவசாயிகள் லேவாதேவிக்காரர்கள் மத்தியில் பெரும் தொல்லை படுகிறார்கள். கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரர்கள் ஏராளமாகப் பெருகிவிட்டார்கள். சுயராஜ்யம் வருவதற்கு முன்பு கனம் ராஜாஜி அவர்கள் ½ வட்டி மசோதா என்று ஒரு சட்டம் போட்டிருந்தார்கள். அதனால் விவசாயிகள் உள்ளபடியே மகிழ்ச்சியோடு இருந்தார்கள். அப்புறம் லேவாதேவியைக் கட்டுப்படுத்த நமது சர்க்காரிலே சட்டம் கொண்டு வந்தார்கள். லேவாதேவி என்று சொன்னால் சட்டம் கொண்டு வந்த காலத்தில் அதிக வட்டி ஒரு சதவிகித வட்டியாக இருந்தது. இப்போது ஆரம்ப வட்டி 2 சதவிகிதம். நூற்றுக்கு 25 சதவிகித வட்டி கட்டவேண்டிய நிலையில் லேவாதேவி முறை மாறிவிட்டது. 10க்கு கால் ரூபாய் என்று ஒரு லேவாதேவி முறை இருக்கிறது (கெந்து வட்டி முறை). வாரத்திற்கு 1¼ ரூபாய் தரவேண்டும். அது நூற்றுக்கு 15 சதவிகித வட்டி ஆகிறது. அந்த முறையில் கிராமங்களில் ஏராளமான கடைகள் ஏற்பட்டிருக்கின்றன. நான் இருக்கும் கிராமத்தில் 25 வீடுகளே இருக்கின்றன, ஆனால் 4 லேவாதேவிக் கடைகள் அங்கே இருக்கின்றன. சுமார் 1,000 ரூபாய் முதலீடு போட்டு மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாய் லாபம் வருகிறது. இதைவிட லாபகரமான தொழில் வேறு கிடையாது. அந்தக் காலத்திலே பழமொழி ஒன்று சொல்வார்கள் 'துட்டுக்கு எட்டு சட்டி வாங்கி, சட்டிக்கு எட்டு துட்டு என்று கொடுத்தால் வட்டிக்கு நிகரில்லை' என்று. அந்தப் பழமொழியை அடிப்படையாக வைத்துக் கொண்டு விட்டார்கள். ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, 2,000 ரூபாய்க்கு எழுதி வாங்கி, செலவோடு சேர்த்து 3,000 ரூபாய்க்கு கோர்ட்டில் டிக்ரி வாங்கி 10,000 ரூபாய் சொத்தை பாத்தியமாக ஆக்கிக்கொள்கிறார்கள். இப்போது அரசாங்கமே லேவாதேவி செய்கிற நிலையில் லோன்கள் வாங்குவதில் ஏராளமான சிரமங்கள்

இருக்கின்றன. 100-க்கு 50 ரூபாய் செலவழிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிற காரணத்தினால் லேவாதேவிக்காரர்களிடம் சிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. 30 வருஷ அனுபவத்தில் இப்போது லேவாதேவிக்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஈடு பத்திரம், ப்ரோ நோட் என்று பணத்தைக் கொடுக்கிறார்கள். நிலத்தையும் அனுபவிக்கிறார்கள். வட்டியும் வாங்கிக் கொள்கிறார்கள். பஞ்சாயத்து பைசலுக்காக எழுதிய ப்ரோ நோட் இருக்கிறது. கோர்ட்டுக்குப் போகிறது. கோர்ட்டில் 'கையெழுத்து போட்டாயா?' என்று கேட்கிறார்கள். 'போட்டேன்' என்று அந்த ஏழை விவசாயி சொன்னால் டிக்ரி ஆகிறது. இந்த மாதிரி நிர்ப்பந்தங்கள் விவசாயிகள் மத்தியில் இருக்கிறது. நானும் 6-7 வருஷங்களாக இதைப்பற்றி எதிர் கட்சி அங்கத்தினர்களாவது சொல்லுவார்கள் என்று நினைத்தேன். அவர்கள் பகுதியில் இந்த மாதிரி தொல்லை இல்லையோ என்னவோ. என்னுடைய பகுதியில் இந்தத் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஆதலால் இந்த அரசாங்கம் இந்த லேவாதேவிக் கணக்குகளை தனியாக கோர்ட் வைத்து கணக்குகளெல்லாம் சரியா, கொடுத்தது எவ்வளவு, கொடுத்ததை எழுதியிருக்கிறார்களா என்று பார்த்து தேவாதேவிக்காரர்களிடமிருந்து உடனடியாக விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

மேலும் இந்தவிதமான லேவாதேவியை தனிப்பட்ட யாரும் செய்யக்கூடாது என்று அரசாங்கம் கடுமையான சட்டம் கொண்டு வரவேண்டும். இந்தச் சட்டத்தை மீறுகிறவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இப்படித் தனிப்பட்டவர்கள் இஷ்டம் போல் லேவாதேவிக் கடைகள் வைத்துக்கொள்வதினால், நமது முக்கிய லட்சியங்களில் ஒன்றாகிய கூட்டுறவு பாங்கி மூலம் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்துதவும் முறை பாதிக்கப்படுகிறது. எனவே கூட்டுறவு பாங்கி மூலம் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில் உள்ள சில விதிமுறைகளைத் தளர்த்தி விவசாயிகளுக்கு எளிய முறையில் தேவைப்படும் பொழுது கடன் கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

முக்கியமாக தனிப்பட்ட லேவாதேவி முறையை அடியோடும், உடனடியாகவும் ஒழிக்க வேண்டும். விவசாயிகள் தேவைப்படும் பொழுது உடனே கூட்டுறவு பாங்கி மூலமோ, அல்லது வேறு வகையிலோ கடன் உதவி பெற ஆவன செய்ய வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. பி. ஜெயராஜ்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற 1964-65-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இந்த பட்ஜெட் பொது மக்கள் நலனை உத்தேசித்து, எந்தவித வரியும் போடாமலும், நாட்டு மக்களுக்கு நல்ல வகை செய்யும் முறையில் அமைந்திருப்பது பற்றி பாராட்டாமல் இருக்க முடியாது. குறிப்பாக, சர்க்கார் ஊழியர்களுக்கு குடும்பப் பென்ஷன் திட்டம் கொண்டு





வந்திருப்பது மாநில சர்க்கார் ஊழியர்கள் ரிடையர் ஆகிற பொழுது, அவர்களுக்கு நல்ல முறையில் பயன் அளிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. மேலும், வயது வந்தவர்களுக்கு பென்ஷன் திட்டம் கொடுக்கும் வகையில் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 166 லட்சமாக அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் ஆதரவற்றவர்களுக்கு பென்ஷன் கிடைப்பதற்கு இது வழி செய்கிறது.

கல்வித் துறையைப் பார்க்கப்போனால், கடந்த மூன்று ஆண்டுகளில் 600 உயர்நிலைப் பள்ளிகளை நமது சர்க்கார் ஆரம்பித்திருக்கிறது. அந்த அளவுக்கு நமது தமிழக மாநில மக்கள் சீரும் சிறப்புமாக கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு கிராமந்திரங்களில் உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த பட்ஜெட்டானது கல்வித் துறையில் மேலும் முன்னேற்றம் காணுவதற்கு வழி செய்வதாகவும், சர்க்கார் ஊழியர்களுக்கும், மற்றும் வயது வந்தவர்களுக்கும், அனாதைகளுக்கும் ஆதரவு அளிக்கக்கூடிய வகையிலும் அமைந்திருக்கிறது. குறிப்பாக, மேலும் பாராட்டக்கூடிய நிலையிலே ஏழை, பணக்காரர்கள் என்று வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் இலவசக் கல்வி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் ரூ. 1,200 வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே இலவசக் கல்வி அளிக்கப்பட்டுவந்தது. பிறகு ரூ. 1,500 வருமானம் வரக்கூடியவர்களுக்கும் இலவசக் கல்வி முறை விஸ்தரிக்கப்பட்டது. இப்பொழுது எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஏற்றத்தாழ்வற்ற நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு தமிழக மாநில அரசு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்று சொல்லும்பொழுது, அதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்றைய நிலையில் நாட்டில் விவசாய உற்பத்திப் பெருக்கம் எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது, நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ்கிறார்களா என்று பார்த்தால், அரசாங்கம் நல்ல உரம் கொடுப்பது, கடன் கொடுப்பது போன்ற வசதிகளை செய்து கொடுத்திருந்தாலும், இந்த ஆண்டு ஓரளவுக்கு உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லவேண்டும். குறிப்பாக தஞ்சை ஜில்லாவில் விவசாய மக்கள் பெரும் அளவுக்கு பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பருவக் கோளாறு காரணமாக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் பெய்த மழையினால் தஞ்சை ஜில்லா பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 20 மூட்டைகள் விளைகின்ற நிலத்தில், இன்று 10 மூட்டைக்கும் குறைவாக விளையும் அளவுக்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ரசாயன உரம், மற்றுமுள்ள உரங்கள் போட்டாலும்கூட இந்த ஆண்டு அவர்கள் மிகவும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் மூலமும், கூட்டுறவு சங்கங்களின் மூலமும் அவர்கள் உழவு மாடுகள் முதலியவைகள் வாங்குவதற்காக பெற்றுக் கொண்ட கடனை இந்த ஆண்டு திருப்பிக்கொடுக்க முடியாத அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் போட்டிருக்கிற வரியை 100-க்கு 90 நயா பைசா அதிகப்படுத்தி

[திரு. பி. ஜெயராஜ்] [6th March 1964

பட்டிருக்கிற முறையில் இந்த ஆண்டில் வரி வசூல் செய்தால், தஞ்சை ஜில்லா விவசாய மக்கள் அந்த வரியைக் கொடுப்பதற்கு முடியாமல் மிகவும் அவதிப்படுகின்ற நிலையில் இருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக, கீழ்த்தஞ்சை கடலோரப் பகுதியில் இருக்கிற தாலூகாக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. காரணம் வடிகால் கிழக்கு நோக்கிச் செல்கிறது, மேற்கிலிருந்து தண்ணீர் வருகிறது. சீர்காழி, மாயவரம், நாகப்பட்டினம், நன்னிலம், திருத்துறைப்பூண்டி ஆகிய தாலூக்காக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் இருக்கிற அதிகாரிகளிடமிருந்து, குறிப்பாக ஜில்லா கலெக்டரிடமிருந்து வந்திருக்கிற அறிக்கைகளைப் பரிசீலனை செய்துபார்த்து, எந்த அளவுக்கு அங்கே விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்து, அங்கு இருக்கிற விவசாயிகளுக்கு வரி விலக்கு செய்வதிலே என்ன தவறு இருக்கிறது என்பதை அரசாங்கம் கவனித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இன்றைய நிலையில் விவசாயிகளுக்கு வருமானத்தில் குறைவு ஏற்பட்டிருக்கிறது, விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறபொழுது, சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் போட்ட வரியை இந்த ஆண்டு வசூலிப்பது என்றால் விவசாயிகளுக்கு அது மேலும் கவலையை அளிக்கிறது. அடுத்த ஆண்டிலாவது விவசாயிகள் ஊக்கத்தோடு நல்ல முறையில் செயல்படுகிற அளவுக்கு நிலைமையை உண்டாக்க வேண்டும். சர்க்கார் மூலமாகவும், கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் கொடுக்கப்பட்ட கடன் தொகையை திருப்பி வசூலிப்பதை கொஞ்சம் ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி அதிக வரி இந்த ஆண்டு வசூலிப்பதையும் ஒத்தி வைத்து, அடுத்த ஆண்டு வசூல் செய்து கொள்ளலாம். இதற்கு ஆவன செய்யவேண்டுமென அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்களுக்கு பஞ்சாயத்து யூனியன் மூலம் சில நன்மைகள் செய்யப்படுகின்றன. சமுதாய நல திட்டத்தின் மூலம் ஹரிஜன மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதற்காக மாநில அரசாங்கம் 15 சதவிகிதம் நிதி ஒதுக்கி ஹரிஜன மக்களுக்கு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்திருப்பது பாராட்டத்தக்கது. ஆனால், ஹரிஜனங்களுக்கான பெரும்பகுதி வேலைகள் பஞ்சாயத்து யூனியனால் செய்யப்படாமல் இருக்கின்றன. காரணம் 'பப்ளிக் காண்டிரிப்யூஷனை' ஹரிஜன மக்கள் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதுதான். அதனால், ஹரிஜன மக்களுக்கு ரோடு வசதி செய்து கொடுப்பது, கல்வர்ட்டுகள் கட்டி வசதி செய்து கொடுப்பது இவைகளெல்லாம் ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டு மூலம் தான் செய்து கொடுக்க முடியும், தங்களுக்கு ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டு மூலம் அதிகமாக நிதி ஒதுக்கப்படவில்லை என்று பஞ்சாயத்து யூனியன் சொல்லுகிறார்கள். இதற்கு உறுதுணையாக நல்ல வாய்ப்பு கொடுப்பதற்கு இந்த பட்ஜெட்டில் 6½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநில ஹரிஜன மக்களுக்கு குடிநீர் திட்டம், நல்ல ரோடு வசதி செய்து கொடுப்பதற்கு



6th March 1964] [திரு. பி. ஜெயராஜ்]

திட்டம் ஆகிய திட்டங்களை அமைத்திருப்பது பாராட்டுதலுக்குரியது. நாட்டு மக்கள் நல் வாழ்வு வாழ்வதற்கு, நாட்டு மக்களுக்கு நல்ல சேவை செய்வதற்கு இந்த பட்ஜெட்டில் நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன.

கடைநிலை ஊழியர்களுக்கு போதிய அளவு சலுகை கொடுக்கப்படவில்லை, அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை என்ற கூக்குரல் எழுப்பப்படுகிறது. அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருந்தாலும் கூட, நமது நிதிநிலை அதற்கு இடம் கொடுக்கவேண்டும். இதை அரசாங்கம் நன்றாக கவனித்து, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு எந்த அளவுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மனதில் கொண்டு, எந்த அளவுக்கு மாநில சர்க்காரில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியுமோ, அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு அரசாங்கம் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களின் மூலம் நாட்டில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுக்கும் அளவுக்கும், ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கக்கூடிய அளவுக்கும் இந்த பட்ஜெட்டை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்ததற்கு அவர்களைப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## IV. ANNOUNCEMENT

### Conviction of a Member

MR. DEPUTY SPEAKER: I have to inform the House that the following communication regarding the conviction of an hon. Member of the House has been received from the District Magistrate, Chingleput.

'Dear Mr. Speaker,

I have the honour to inform you that Sri S. J. Ramaswamy, Member of the Madras Legislative Assembly (Arkonam Constituency) was tried at the District Magistrate's Court, before me on a charge of being a member of an unlawful assembly and obstructing public servants from doing their lawful duties on 1st February 1964 at Kancheepuram, after a trial lasting for 12 days. I found him guilty of the above offences and sentenced him to imprisonment for a period of four months'.

## III. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964-65—*Cont.*

* திரு. ர. சம்பங்கி: மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத்தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு விளைச்சல் எந்த அளவுக்கு

உயர்ந்திருக்கிறது என்பதை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியான விரிஞ்சிபுரத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான, அத்தியாவசியமான உரம் போன்ற விவசாயப் பொருள்கள் கிடைப்பதில்லை. விரிஞ்சிபுரம் கிட்டத்தட்ட 400 குக்கிராமங்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும். அங்கே வேலூர் மத்தியாக வைக்கப்பட்டு ஆரணித் தாலூகாவை அதோடு இணைத்து, அங்கே தான் கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தேவையான பொருள்கள் வழங்கப்படுகின்றது. ஆரணிக்கோ, வேலூருக்கோ போய்தான் அவர்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும், விளைச்சல் பெருகவேண்டுமென்று கருதுகிற நாம், ஆங்காங்கே கிராமங்களில் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களை அமைத்து, அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்கள் கிடைக்கும்படி, 10 கிராமங்களை ஒன்றாக இணைத்து, ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாக பொருள்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரணி வட்டத்தில் ஊசிமலைக்குப்பம் என்கிற ஊரிலே, காட்டிலாகாவினர் தைலச் செடி, முந்திரிச் செடிகள் வளர்ப்பதற்காக திட்டம் போட்டு ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே கால்நடையை நம்பி வாழ்கின்ற 'மந்திரி' என்ற இனத்தவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று மேய்ச்சல் நிலத்தைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சுமார் இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் நான் எனது தொகுதிக்குப் போன சமயம் அங்குள்ள மக்கள் இந்தக் குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். முந்திரிச் செடிகளும், தைலச் செடிகளும் அவசியமாக இருந்தாலும், அந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் கால்நடையை நம்பி வாழவேண்டியிருப்பதால் அந்தப் பகுதியிலே கால்நடை போவதற்கு வழிசெய்து தரவேண்டும் என்று காட்டிலாகாவினரை நாங்கள் கேட்டபொழுது, தகுந்த நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். இன்றுவரையிலும் ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர்த் திட்டத்திற்காக இந்த ஆண்டு நிதிநிலையறிக்கையில் பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே ஓடுகிற பாலாறு எங்கள் மாவட்டத்தைச் சுற்றி வருகிற ஒரு ஆறு ஆகும். அந்த ஆற்றை நம்பியிருக்கிற வட ஆற்காடு வாசிகள் குடிதண்ணீர் பஞ்சத்தினால் மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற நகரங்களுக்கெல்லாம், குறிப்பாக ஆம்பூர், திருப்பத்தூர் போன்ற தாலூகாக்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு ஒரு திட்டம் இருந்தது. என்ன காரணத்தினாலோ தெரிய





வில்லை, அந்தத் திட்டம் இதிலே இடம்பெறவில்லை. எங்கள் மாவட்டத்திலுள்ள முக்கிய நகரங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக மதிப்பிற்குரிய சுகாதார அமைச்சர் அவர்களிடம் மாவட்ட ரீதியிலே நாங்கள் முறையிட்டிருக்கிறோம். இதை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அரசினர் கொடுக்கும் கடன் உதவியை எங்கள் மாவட்டத்திலும் பரவலாக எல்லா மக்களுக்கும் கிடைக்கும் வகையில் கடன் வசதி அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு ஸ்தாபனங்களைப்பற்றிச் சொல்லும்போது ஆம்பூர் நகரத்திலே ஒரு கூட்டுறவு பாங்கு தேவை. இப்பொழுது எல்லாம் கூட்டுறவு பாங்கின் மூலம் வீடுகளை அடமானமாக வைத்துக் கொண்டு பணம் கொடுக்கும் திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்தமாதிரி ஒரு பாங்கை ஆம்பூரில் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பேசுகையில் ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் எல்லாம் இது வரியே இல்லாத ஒரு பட்ஜெட் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் பருத்திக்கும், பருத்தி நூலுக்கும் இந்த பட்ஜெட்டிலே வரிபோட்டிருக்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கைத்தறி நெசவாளர்களின் நிலைமை மிகவும் மோசமாகி, என்னுடைய கட்சித்தலைவர்கள் எல்லாம் வியாபாரிகளாக மாறி "கைத்தறி சேலை, கைத்தறி சேலை" என்று கூவிக்கொண்டு விற்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. அந்தமாதிரி ஒரு நிலைமை பத்து ஆண்டுகளுக்கு பின்னர் வந்துவிடுமோ என்று எங்கள் தலைவர் கேட்டபொழுது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அந்த அவல நிலைமை வராது, பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இது எப்படியிருக்கிறது என்றால் தொட்டிலையும் ஆட்டி அதிலே தூங்குகிற பிள்ளையைக் கிள்ளிவிடுவது போல்தான் இருக்கிறது. ஆகவே, இந்த வரிவிதிப்பை எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. மாரப்ப கவுண்டர் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய நமது முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கும் 1964-65-ஆம் ஆண்டு நிதிநிலையறிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அறிக்கையில் எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். சுதந்திரம் அடைந்த பிறகு ஜனநாயக சோஷலிஸத்தை அமைப்பதற்கு ஏற்றவாறு இந்த பட்ஜெட்டிலே எல்லோருக்கும் இலவசக் கல்வி அளித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அடுத்தபடி முதியோர் பென்ஷன் திட்டம். இரண்டு வருஷங்களுக்கு முன்பு இந்த முதியோர் பென்ஷன் திட்டத்தை நமது அரசாங்கம் கொண்டு வந்தது. இன்று பார்த்தால் கிட்டத்தட்ட 62,000 முதியோர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுவும் பாராட்டுக்குரிய விஷயமாகும்.

[திரு. க. மாரப்ப கவுண்டர்] [6th March 1964

கோயம்புத்தூர் ஜில்லாவில் அவிநாசித் தொகுதி மிகவும் பிற்போக்கான தொகுதி என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சில அங்கத்தினர்கள், தங்கள் பகுதிகளில் கால்வாய்கள் இருந்தும் கூட தண்ணீர் குறைவாக இருக்கிறது, அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். என்னுடைய தாலுக்காவைப் பொறுத்தவரையில் இந்த வருஷத்திலே மழை மிகவும் குறைவாகப் பெய்தது. மழை பெய்யும் காலமாகிய புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் ஐந்தாறு அங்குலங்கூட மழை பெய்யவில்லை. அதன் காரணமாக அவிநாசித் தாலுகாவிலே குடி-தண்ணீருக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நமது அரசாங்கம் அவிநாசித் தாலுகாவிற்கு செய்யவேண்டிய ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை பல வருஷங்களாக தள்ளிப்போட்டுக்கொண்டு வந்தது தான் இந்த நிலைமைக்குக் காரணமென்று நினைக்கிறேன். இன்றைய நிலையிலே குடி-தண்ணீரைப் பொறுத்த வரையில் பவானி ஆற்றிலிருந்து திருப்பூருக்கு குடி-தண்ணீருக்காக குழாய்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஆரம்ப காலத்திலே, எனது தொகுதியிலுள்ள ஆறு, ஏழு கிராமப் பஞ்சாயத்துக்கள் இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அந்த ஏழு பஞ்சாயத்துக்களுக்கும் குழாய்கள் வைத்து, தண்ணீர் சப்ளை செய்கிறார்கள். குறிப்பாக, அன்னூர், அவிநாசி என்ற மேஜர் பஞ்சாயத்துக்களிலே பத்தாயிரம் பேர் வசிக்கிறார்கள். அங்கே ஒரு கிணற்றில்லுங்கூட தண்ணீர் கிடையாது. இந்த குழாய் தண்ணீரை வைத்துக் கொண்டுதான், அவர்கள் வாழ வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அதிலும் சில சந்தர்ப்பங்களில் காலை 3 மணி நேரம், மாலை 3 மணி நேரம் என்று வைத்துக்கொண்டு தண்ணீர் பிடிக்கிறார்கள். எப்பொழுதும் குழாய்களில் பெரிய கஷ்டம் இருக்கிறது. போலீசுக்கு போகக் கூடிய அளவுக்கு சில சமயங்களில் தண்ணீர் தகராறு ஏற்படுகிறது. ஆகையால் இந்த இரண்டு பஞ்சாயத்துக்களுக்கும் பத்து அல்லது பதினைந்து குழாய்கள் போட்டு தண்ணீர் சப்ளை செய்வதற்கான ஒரு திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். எஞ்சினியர்கள் பரிசீலனை முடிந்து, அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பி அதன் காரணமாகக் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டால், இடைக்காலத்தில் இன்னும் ஒன்றிரண்டு குழாய்கள் வைத்து குடி-தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

11-30 a.m. அடுத்தபடியாக பாசன திட்டம். நான் இந்த மன்றத்திற்கு வந்து ஏழு வருஷங்கள் ஆகி இது எட்டாவது பட்ஜெட் என்று நினைக்கிறேன். இந்த ஏழு எட்டு ஆண்டுகளாக அவிநாசி நிலைமையைப்பற்றி விளக்கி, பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டே வந்திருக்கிறேன். முன்பு இருந்த முதல் அமைச்சரவர்கள், திரு. காமராஜ் அவர்கள், எங்கள் பகுதிக்கு வந்து, விவசாயிகளின் நிலைமையை நன்கு உணர்ந்து ஒரு பாசன திட்டத்தை உருவாக்கி, வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று நல்ல முயற்சிகள் செய்து வந்தார்கள். அதன்



6th March 1964] [திரு. க. மாரப்ப கவுண்டர்]

காரணமாக தேர்தலுக்கு முன்பே கூட ஒரு திட்டத்தை நல்ல முறையிலே தீட்டினாலும் இன்னும் அந்த திட்டம் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருவதாகத் தெரிகிறது. அந்த நல்ல திட்டத்தை இன்று அரசாங்கம் நல்ல முறையிலே செயல்படுத்தி, அவனாசி தாலூகாவிலுள்ள விவசாயிகளின் ஒரு பெரிய கஷ்டத்தை நிவர்த்தி செய்து அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டிய நல்ல காரியத்தை உடனடியாக, எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்து கொடுத்து அந்த மக்களை வாழ்விக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். (மணி அடிக்கப்பட்டது). இன்னும் ஒரு நிமிஷம். விவசாயத்தைப் பொறுத்தமட்டில் அங்கே கிணற்றில் தண்ணீர் கிடையாது. ஆழமாக வெட்டினாலும் செலவு அதிகமாகிறது. அதோடு கூட கூலி ஆட்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. முன்பு அவனாசியில் 51-வது வருஷ ஜன கணிதப்படி மூன்று லட்சம் ஜனத்தொகை இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு 20,000 ஜனங்கள் குறைந்து விட்டார்கள். அங்கே அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. மழை சரியாக பெய்யவில்லை. விவசாயம் நடக்கவில்லை. ஆகவே அந்த கூலியாட்கள் கோயமுத்தூர் போன்ற தொழில்கள் நிறை இருக்கக்கூடிய நகரங்களுக்கு சென்றுவிட்டார்கள். ஆகையால் அவனாசி பகுதியில் கிணறு வெட்ட வேண்டுமானால் "பிளாஸ்டிங் மிஷின்" வைத்திருக்கும் விவசாய இலாகாவிடம் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் அப்ளிகேஷன்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் இருக்கிற மிஷின்கள் 3 தான் என்கிறார்கள். ஆகவே கிணறு வெட்ட முடியாமல் போய் விடுகிறது. பிளாஸ்டிங் மிஷின்களை தேவைக்கு ஏற்ற அளவு அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன் (மணி அடிக்கப்பட்டது) இத்துடன் என் வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. செ. சீனிவாசன்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கை ரொம்ப திருப்திகரமான அறிக்கை. ஏதோ ஒருசில குறைவுகள் இருந்தாலும் அது வளர்ச்சித் திட்டங்களினுடைய நிறைவை பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கிறதே தவிர ஏதோ வேண்டும் என்றே போடப்பட்டதாக கருதக்கூடியது அல்ல. மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பேசும்போது கெஜட்டு பதவி இல்லாத ஊழியர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் உடனடியாக கொடுக்காததைப்பற்றி பேசினார்கள். அதிலே ஓரளவு உண்மை இருந்தாலும் கெஜட் பதவி இல்லாத ஊழியர்களுடைய நன்மை இந்த சர்க்காருடைய கவனத்தில் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை எடுத்து காட்டத்தான் இந்த லிபரலைஸ்ட் பென்ஷன் ஸ்கீம் பட்ஜெட்டிலே இடம் பெற்று இருக்கிறது. சமுதாயத்திலே பல வளர்ச்சி பெறும் திட்டங்கள் நிறைவேறிவரும் தருவாயில் நிதி பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாக உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் அளிக்க பட்ஜெட்டிலே இடம் இல்லை. இருந்தாலும் இந்த கெஜட் பதவி இல்லாத ஊழியர்களுடைய குறை மிகவும் அவசியமாக தீர்க்க வேண்டியது. அதை உடனடியாக கவனிக்க வேண்டியது

என்று நான் உள்பட மற்ற அங்கத்தினர்கள் எல்லோரும் வற்புறுத்துகிறோம். ஆற்றலும் அனுபவமும் மிக்க உள்ள முதல் அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏதாவது அவர்களுக்கு நிவாரணம் அளிக்க, முடியுமானால் இந்த பட்ஜெட்டிலேயே, வழி செய்வார்கள் என்ற நம்பிக்கையை நானும் மற்ற அங்கத்தினர்களோடு சேர்ந்து தெரிவிக்கிறேன்.

இங்கே ஏற்படும் பற்றுக்குறையை சமாளிக்க நூல், பட்டு நூல், (declared goods என்ற ரகம் அது) இவைகளுக்கு வரி போடப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். நமது ஜனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்டிலேயே இதற்கு ஒரு வழி செய்யலாம், ஒரு மார்க்கம் இருக்கிறது. அதை பரிசீலனை செய்யவேண்டும் என்று உங்கள்மூலம் முதல் அமைச்சர் அவர்களை மன்றாடி கேட்டுக் கொள்ளுகிறேன். 1939-ல் ஜனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்டை பிரேம் பண்ணும்போதே வரி விதிக்கக்கூடிய அளவு ரூ. 10,000 என்று வைத்திருந்தோம். 1959-ல் அந்த ஆக்டை மறுபடியும் திருத்தி அமைத்தபொழுது அதே பத்தாயிரத்தை வைத்துக் கொண்டிருக் கிறோம். இப்பொழுது வளர்ந்து வந்திருக்கும் வியாபார நிலையை மனதில் கொண்டு டாக்ஸபிள் லிமிட்டை 7,500 அல்லது 8,000 என்று வைத்தால் போதும். அதிகப்படியான வரி வருவதற்கு வழியாக அமையும். அதைக் கொண்டு என்.ஜி.ஓ.-க்களுக்கு அதை பிரயோசனப்படுத்த முடியுமா என்று ஆராய வேண்டும் என்று உங்கள்மூலம் முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக இந்த மாநிலத்திலே செகண்டரி எஜுகேஷன் இலவசமாக கொடுக்கப்படுவதை இந்த பட்ஜெட்டின் சிறந்த அம்சமாக மாநில மக்கள் எல்லாம் வரவேற்கிறார்கள். இதற்காக அதிகப்படியாக செலவாகக்கூடிய தொகை ரூ. 50 லட்சம் என்று ஒரு புள்ளி விவரம் போடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கல்வி நிபுணர்களை கலந்து பேசியபோது இந்த மதிப்பீடுகூட அதிகம் என்று அவர்கள் எண்ணினார்கள். அதிக பட்சம் 15 அல்லது 20 லட்சம்தான் ஆகும். அந்த வகையில் குறைந்த பட்சம் 30 அல்லது 20 லட்சம் மீதம் வரும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். அப்படி உண்மையிலேயே மீதம் வருமானால் அதையும் என்.ஜி.ஓ.-க் களுக்கு பிரயோஜனப்படுத்தலாம் என்கிற யோசனையையும் உங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பகுதி ஒரு பிற்போக்கான தன்மையை உடையது. அதற்கு வேண்டிய நிவாரணங்களை கோரவேண்டியது என்னுடைய கடமை. சாதாரணமாக உற்பத்தி பெருக வேண்டும் என்று ஒரு திட்ட லட்சியத்தை கைக்கொண்டு இருக்கும் நாம் என்னுடைய மாவட்டத்திலுள்ள வைகை கால்வாய்களுக்கு சீர் அமைப்புத் திட்டம் வரப்போவதாக இருந்தது. அதற்கு பரிஷார்த்தமாக கிராண்ட் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் வருஷங்கள் இரண்டாகியும் எந்த அபிவிருத்தியும் காணவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை வைகைத் தண்ணீர் சரியாக கிடைப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.





சமீபத்திலே நடந்த ஒரு காரியத்தை மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். வைகையில் இந்த மாதம் 24 முதல் 29 தேதி வரைக்கும் மதுரைக்கு கிழக்கே மானாமதுரைக்கு மேற்கே தண்ணீர் தரப்போவதாக இருந்தது. ஆனால் திடீரென்று அந்தத் தண்ணீரை பெரியார் பாசனத்திற்கு காலவரையறையின்றி தேதி குறிப் பிடாமல் திறந்து விடப்பட்டிருக்கிறது. ராமநாதபுரம் பகுதியில் இதனால் சுமார் 15,000 ஏக்கரா பாழாய் போகின்றன. இந்தமாதிரி சங்கடங்கள் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு அடிக்கடி ஏற்படுகிறது. ஆகவே வைகையிலும், பெரியார் பாசனத்திற்கும் ஆக இரண்டுக்குமாக தனித்தனியாக பங்கிட்டுக் கொடுக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டை செய்தால் அது உபகாரமாக இருக்கும் என்பதை உங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கிறேன்.

அடுத்தபடியாக, பரமக்குடியில் ஒரு தாலுக்கா தலைமை ஆஸ்பத்திரி துவக்கப்பட வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே பிரயாசை எடுக்கப்பட்டதன்பேரில், இந்த ஆண்டு பட்ஜெட்டிலே 9,000 ரூபாய் ஆஸ்பத்திரி கட்டுவதற்குரிய நிலத்தின் விலைக்காக ஒதுக்கப்பட்டிருப்பதை அறிந்து உண்மையிலேயே நான் சந்தோஷப்படுகிறேன். அந்தத் திட்டத்தை உடனடியாக பரமக் குடியில் அமுல் நடத்தவேண்டுமென்று நான், உங்கள் மூலமாக, கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 1-4-1964 லிருந்து பக்கத்திலுள்ள பஞ்சாயத்தையும் சேர்ந்து சுமார் 40,000 ஜனத்தொகை கொண்டிருக்கக்கூடிய ஒரு முனிசிபல் நகரமாக பரமக்குடி ஆவதன் காரணத்தை உத்தேசித்து உடனடியாக அங்கு இந்த ஆஸ்பத்திரியை விரைவில் துவங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருவாடானையிலிருந்து பரமக்குடி வழியாக தெற்கே கடற்கரை வரையிலும் எந்தவிதமான ரோடு வசதியும் இல்லாமல் ஜனங்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள். பிற்போக்கான மக்கள் அதிகமாக உள்ள இந்தப் பகுதியிலே சாலை வசதிகள் வேண்டுமென்று பல விண்ணப்பங்கள் அமைச்சருக்குப் பல சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நயினார்கோவிலிருந்து தேவிபட்டணம் வரையிலும், அனந்தூரி லிருந்து இராமனாதபுரம் தாலுக்காவிலுள்ள காவனூர் வரையிலும் முக்கியமான இந்த இரண்டு ரோடுகளையாவது, இந்த வருஷத்தில் இல்லாமற்போனாலும், அடுத்த வருஷத்திலாவது, நெருக்கடி நிலைமை என்ற காரணத்திலிருந்து விலக்களித்து, ஏற்படுத்தித் தரவேண்டு மென்று நான் இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொண்டு, இந்த பட்ஜெட் வளர்ச்சி அடைந்து வரும் இந்த சமுதாயத்தின் அளவைக் காட்டக்கூடிய ஒரு சிறந்த பட்ஜெட் என்று கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. பெ. ராஜகோபால்** : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த நிதிநிலை அறிக்[illegible]நான் வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொ[illegible]ரும்புகிறேன்.

எதிர்க்கட்சியில் இருக்கும் கனம் அங்கத்தினர்கள் முதல் அமைச்சர் அவர்களுடைய அறிவையும் அனுபவத்தையும் திறனையும் வெகுவாகப் பாராட்டியிருக்கின்றார்கள். ஆனால், அதே நேரத்தில், அத்தகைய அனுபவம் வாய்ந்த, திறமை வாய்ந்த, நுண்ணறிவு படைத்த முதலமைச்சர் அவர்கள் தயாரித்திருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்காததோடு, பல்வேறு வகையிலே குற்றங்களைச் சாட்டிக் குறை கூறியிருக்கின்றார்கள். முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டி, அதே நேரத்தில் அவருடைய நிதி நிலை அறிக்கையை இகழ்வது மிகவும் ஒரு கேவலமான நிலை எதிர்க்கட்சியில் இருக்கின்ற கனம் அங்கத்தினர்களைச் சாரும் என்று நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்கின்றபோது, அவசியமான ஒருசில கருத்துக்களை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். திட்ட முதலீட்டின் உயரவும், திட்டமிட்ட பொருளாதார அமைப்பு ஏற்படவும், விலைவாசிப் பிரச்னை, உணவு தானியக் கொள்கை, அரசாங்க ஊழியர்களுக்குப் பென்ஷன் திட்டம், உத்தரவாதமுள்ள நீண்டகாலப் பென்ஷன் திட்டம், முதியோர் பென்ஷன் திட்டம், இலவச உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, இவற்றைப்பற்றியெல்லாம் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த நமது சர்க்கார், தமிழகத்தினுடைய வருவாய்க்கு ஏற்ற வகையிலே அந்தந்தப் பகுதிக்கு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழக மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களுடைய பொருளாதார நிலை உயர்வடையும், இன்னும் எல்லா வகையிலும் மக்கள் சிறப்புறவும், நல்ல ஒரு திறமை வாய்ந்த, நுண்ணறிவோடு கூடிய முறையில் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து, இந்தச் சபைமுன் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதை எல்லோரும் வரவேற்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, இன்னொரு குறிப்பிடத்தக்க முக்கியமான விஷயத்தைப் பற்றியும் இங்கே சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய வாணியம்பாடித் தொகுதி கனம் அங்கத்தினர் தம்முடைய தொகுதியில் ஏற்பட்ட ஒரு சிறு நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏதோ ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அநீதியையும் அதர்மத்தையும் செய்வதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். இதை அமைச்சரவை நன்கு கவனித்துப் பரிசீலித்துத் தக்க நீதி வழங்க வேண்டும் என்றும் சொன்னார்கள். நான் ஒன்றுமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை மாநகராட்சியை அவர்கள் கைப்பற்றிய தன் காரணமாக, ஒரு மாட்டை விலைக்கு வாங்கி அடித்துக் கொன்றிருக்கிறார்கள். அதே அடிப்படையில் மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் அவர்கள் முல்லைக்கொம்பு கிராமத்தில் மாடு விடும் திருவிழாவைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிடும் போது, "இதற்கு முன்பு அதே கிராமத்தில் மாடு விடும் திருவிழா நடைபெற்றிருக்கிறது. ஆனால், 29-ந் தேதியன்று நடைபெற இருந்த மாடு விடும் திருவிழாவை நடைபெறக்கூடாது என்று





தடை விதித்துவிட்டார்கள்" என்று குறிப்பிட்டார்கள். இதற்கு முன்பு அத்தகைய நிகழ்ச்சி ஏற்படவில்லை, ஆனால், 29-ந் தேதியன்றுமட்டும் மாடு விடும் திருவிழாவிற்குத்தான் தடை என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை எல்லோரும் நன்றாகக் கவனிக்கவேண்டும். மாடு விடும் திருவிழா எந்த அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டது? சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றி விட்டார்கள் என்பதற்காக அந்த வெற்றி விழாக் கொண்டாட்டத்திற்கு முல்லைக்கொம்பு கிராமத்திலே ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த விழாவிற்கு இந்தச் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தலைமை தாங்குவதாக இருந்தது. விழாவின் முக்கியமான நோக்கம் என்னவென்றால், மாட்டின் கொம்பில் மயில் பீலியைக் கட்டிவிடுவது வழக்கம். ஆனால், அன்று தலைவர்களுடைய படங்களை வைத்து விடுவதாக அவர்கள் பல இடங்களில் பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள். குறிப்பாக, திரு. அண்ணாதுரை போன்ற தலைவர்களுடைய படத்தை மாட்டின் கொம்பின் முன்னால் வைத்து விடுவதாகச் சொல்லியிருந்தார்கள். இது எதைக் குறிக்கிறது? சென்னை மாநகராட்சியை அந்தக் கட்சியினர் கைப்பற்றியதைக் குறிக்க அந்தத் தலைவர்களின் படத்தை மாட்டின் கொம்பிற்கு முன்னால் வைத்து சவாரி செய்வதன் மூலம் கேவலமான நிலைமையை ஆளும் கட்சியினருக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

**திரு. மு. பொ. வடிவேல்:** கனம் சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் பேசுவது தவறானது. அம்மாதிரியான எண்ணமே எங்களுக்குக் கிடையாது. அந்தத் தேவதைகளுக்கு டிஸ்ப்பிளஷர் ஆகிவிடும் என்ற அடிப்படையின் மீதுதான் 144 தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் தவறாகச் சொல்கிறார் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. பெ. ராஜகோபால்:** அவர்கள் சொல்வது வேண்டுமானால் அவர்களுக்கு நியாயமாக இருக்கலாம். ஆனால், நான் கேட்ட வார்த்தையை வைத்து, எங்கள் பக்கம் நீதி இருக்கிறது என்ற அடிப்படையில் நான் பேசுகிறேன். மாற்றுக் கட்சியினர் அவர்கள் தலைவர்களுடைய படங்களை மாட்டின் மீது வைத்து விட்டார்கள் என்றால், நாங்களும், எங்களுடைய காங்கிரஸ் தலைவர்களுடைய படங்களை வைத்து விட்டோம் என்றால், பிறகு ஏதாவது ஒரு பெரிய அசம்பாவிதம் ஏற்படக்கூடும் அல்லவா? காங்கிரஸ்காரர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் அதனால் பெரிய கலகம் ஏற்பட்டிருக்கும் அல்லவா? அப்படி ஏதாவது ஒரு கலகம் ஏற்படப்போகிறதே, அப்படி ஏற்படாமல் தடுக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான், முன்னதாகவே போலீஸ்காரர்களுக்குத் தெரிவித்து, அந்த விழாவைத் தடை செய்தார்கள் என்று மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினருக்கும் மற்றுமுள்ள இந்தச் சபையில் உள்ள எல்லாக் கனம் அங்கத்தினர்களுக்கும் இதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இதைப்பற்றி எல்லோரும்

[திரு. பெ. ராஜகோபால்] [6th March 1964

அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன். நீதி அவர்கள் பக்கம் இருப்பதாகவும் நாங்கள்தான் அநீதி விளைவிக்கின்றோம் என்ற அடிப்படையிலும் அவர்கள் பேசியது தவறு என்று சுட்டிக்காட்டுவதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டேன்.

* **திரு. எஸ். முருகையன் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் முன் தாக்கல் செய்திருக்கும் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1964-65-ம் ஆண்டுக்கான வரவு 137 கோடியே 48 லட்சம் ரூபாய் இருக்கும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு, நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, வருவாய் 124 கோடி என்று குறிப்பிட்டிருந்தார்கள். அப்போது அவர்கள் சொன்னார்கள், "இது ஒரு வரி இல்லாத பட்ஜெட்" என்று. அப்படி 124 கோடி ரூபாய்க்கு வரவு செலவுத் திட்டம் தயாரித்த போது, வரி இல்லாத பட்ஜெட் என்று சொல்லிவிட்டு, இந்த ஆண்டு சென்ற ஆண்டு வருவாய் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 137 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வரி இல்லாத பட்ஜெட் என்று 124 கோடிக்குத் தாக்கல் செய்திருந்தாலும், வரியே இல்லாமல் எந்த வகையில் 13 கோடி ரூபாய் உயர்ந்ததோ தெரியவில்லை.

அதோடு மட்டுமல்ல. இந்த ஆண்டு பருத்திக்கும், பருத்திக் கழிவிற்கும், நூலுக்கும் விற்பனை வரி ஒரு சதவிகிதம் இருந்ததை இரண்டு சதவிகிதமாக உயர்த்தியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதன் மூலமாக வருவாய் ஒரு கோடி கிடைக்கும் என்றும் சொல்கிறார்கள். நான் நினைக்கிறேன், கிட்டத்தட்ட மூன்று கோடிக்கு மேல் அந்த வகையில் வருவாய் கிடைக்கலாம். இப்படி வரியைப் போட்டுவிட்டு, குறைவாக மதிப்பிட்டுவிட்டு, பிறகு அது அதிகமாக உயருகிறது. இப்படியெல்லாம் வரியைப் போட்டுவிட்டு, வரி இல்லாத பட்ஜெட் என்றும், ஏதோ சிறிது வரிதான் என்றும் சொன்னால் அது எந்த வகையிலே பொருந்துமோ தெரியவில்லை. அதற்கு உதாரணம், சென்ற ஆண்டு 13 கோடி ரூபாய் வருவாய் உயர்ந்துள்ளதுதான். அப்படியிருக்க இதை வரி இல்லாத பட்ஜெட் என்று எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? அதோடு மட்டும் அல்ல. மக்கள் இந்த வரிகளை கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வரி கட்டும் சக்திக்கும் மீறி இப்படி வரிகள் அதிகரித்துக்கொண்டே போனால் எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடக்கூடும் என்பதைச் சிந்திக்கவேண்டும். சென்ற ஆண்டு நமது முதலமைச்சர் அவர்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப்படி 17 லட்சம் டன் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதாகச் சொன்னார்கள். ஆனால் கடந்த இரண்டாண்டு காலத்திலே உணவு உற்பத்தி 5 லட்சம் டன் தான் உயர்ந்திருக்கிறது என்று இப்போது சொல்கிறார்கள். பணம் ஏராளமாகச் செலவாகியிருக்கிறது. இருந்தும் 5 லட்சம் டன்



6th March 1964] [திரு. எஸ். முருகையன்]

தான் உற்பத்தியாயிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நாம் செலவிடுகிற பணம் விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. நாம் திட்டமிடுகிறோமே தவிர, நம்முடைய திட்டங்களின் பலனை விவசாயிகளால் பெற முடிவதில்லை.

சர்க்கார் புள்ளிவிவரங்களின் படியே ஒரு விவசாயி ஒரு ஏக்கர் சாகுபடி செய்கிறார் என்றால் அதிலிருந்து அவனுக்கு விவசாய சிலவு போக 90 ரூபாய்தான் கிடைக்கிறது. அந்த 90 ரூபாயை கொண்டு அவன் மேலும் எவ்வாறு சாகுபடி செய்ய முடியும்? இதர மற்ற செலவுகளை எவ்வாறு செய்ய முடியும்? விவசாயிகள் உற்பத்தி செய்கிற தானியங்களை கிடங்குகளில் கொண்டுபோய் வைத்து நல்ல விலை வருகிறபோது விற்கலாம் என்று சொல்கிறார்களே தவிர, இன்றையதினம் விவசாயக் கிடங்குகளில் உள்ள நெல் மூட்டைகளில் நூற்றுக்கு 90 மூட்டை வியாபாரிகளுடையதாகத் தான் இருக்கும். விவசாயிகளுக்கு அங்கே வசதி கிடையாது. இரண்டு மாதத்திற்கு முன்பு திருவண்ணாமலையில் 64 படி கொண்ட ஒரு மூட்டை நெல் 27 ரூபாய் விற்றது. கையில் பணம் இல்லாத விவசாயிகள் தங்கள் நெல்லை மூட்டை 27 ரூபாய் என்று விற்றார்கள். ஆனால் இன்றைய தினம் அந்த ஒரு மூட்டை நெல்லுக்கு 10 ரூபாய் விலை அதிகமாகியிருக்கிறது. இந்த லாபம் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை. நடுவிலே உள்ள வியாபாரிகள், இடைத் தரகர்கள் இந்தக் கொள்ளை லாபத்தைப் பெறுகிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. இப்படி ஒரு பக்கம் அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏறுகிறது, இன்னொரு பக்கம் வரிச் சுமை அதிகரித்துக்கொண்டே போனால் மக்கள் எந்த முறையில் மகிழ்ச்சி யாக வாழ்க்கை நடத்த முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்றையதினம் நல்ல விதை வேண்டுமென்றால் விவசாயிகளுக்குக் கிடைப்பது இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு விதை வேண்டும் என்று கணக்கு எடுத்து, அந்த அடிப்படையில் விதை விநியோகம் செய்யப்படுவதில்லை. சப்சிடி பெறுவதற்காக கிராம சகாயக்குகள் மூலம் இத்தனை விதை மூட்டைகள் விநியோகம் செய்யப்பட்டன, திரும்ப இவ்வளவு மூட்டைகள் அவர்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்பதாக எல்லாம் கணக்கு தயாரித்து கொடுக்கப்படுகிறதே தவிர உண்மையில் இந்தத் திட்டம் நல்லமுறையில் செயல்முறைக்கு வருவது கிடையாது.

குறிப்பாக இன்றையதினம் எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் மின்சாரம் தேவை என்றால் மின்சார இலாகா "நிலத்திற்கு ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுக்க வேண்டும், அப்போதுதான் மின்சாரம் தருவோம்" என்கிறார்கள். தாசில்தாரிடம் போய் கேட்டால்" ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுக்கும்படி எங்களுக்கு ஒன்றும் அரசாங்கத்திடம் இருந்து உத்தரவு வரவில்லை" என்கிறார்கள். இதுபற்றி சர்க்காரிடம் விண்ணப்பித்துக் கொண்டதற்கும், ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுக்கும்படி உத்தரவு போடுவதாகச்

சொன்னார்களேதவிர இன்னும் அத்தகைய உத்தரவைப் பிறப்பித்
திருப்பதாகத் தெரியவில்லை. இதனால் விவசாயிகள் மின்சாரம்
பெற முடியாது மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

* **திரு. பி. ஊர்க்காவலன் :** சட்டமன்ற உதவித் தலைவர் அவர்
களே, மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் சமர்பித்துள்ள
வரவுசெலவுத் திட்டத்தை ஆதரித்து நான் ஒருசில வார்த்தைகள்
பேச விரும்புகிறேன். நாம் திட்டமிட்ட பொருளாதார அடிப்
படையில் பல காரியங்களைச் செய்து வருகிறோம். அதிலும்
விவசாய மக்கள், தொழிளாளர் மக்கள் நன்மை அடைய பல
திட்டங்களை வகுத்திருக்கிறோம். இருந்தபோதிலும் கூட விவ
சாய மக்களுக்கு நாம் செலவிடும் பணம் போய்ச் சேருவது
மிகவும் குறைவானது. விவசாய உற்பத்தி குறைவு, விவசாய
பண்டங்களின் விலை ஏறுகிறது என்றெல்லாம் சத்தம்
போடுகிறோமே தவிர விவசாயிகளுக்கு எந்த விதமான நன்மையும்
செய்வதாக இல்லை. இந்த சட்டமன்றத்தில் நான் பட்ஜெட்
விவாதத்தில் கலந்து கொள்வது 13-வது தடவையாகும்.
பதிமூன்று வருஷங்களாக நானும் இந்தச் சபையில் சொல்லி
வருகிறேன். இங்கே சட்ட மன்ற உறுப்பினர்கள் சொல்வதை
அதிகாரிகளோ, அமைச்சர் அவையோ கவனித்து எந்தக்
காரியத்தையும் செய்வதாகத் தோன்றவில்லை. சிறிய நீர்ப்
பாசனத் திட்டத்தின் கீழ் வயாலமலையடிப்பட்டி குளம்
மராமத்து செய்யவேண்டுமென்று நானும்தான் சொல்லி வரு
கிறேன். பதிமூன்று ஆண்டுகள் ஆகியும்கூட அந்தக் காரியம்
நடைபெறவில்லை என்றால் பொதுமக்கள் தங்களுடைய பிரதிநிதி
களைப் பற்றியும், கட்சியைப் பற்றியும் என்ன நினைப்பார்கள் என்
பதை யோசிக்கவேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்களாகிய
நாங்களும் இங்கே வந்து பேசுவதனால் என்ன பயன்? இதை
அரசாங்கம் யோசிக்க வேண்டும்.

குறிப்பாக, சங்கரன்கோயில் தாலூக்கா குடிப்பதற்குக்கூடத்
தண்ணீர் இல்லாத பகுதி. இப்போதுதான் அங்கு குடிதண்ணீர்த்
திட்டம் வந்து கொண்டிருக்கிறது. அதை புளியங்குடி மக்க
ளுக்கும் உபயோகப்படும்படி, பூரணமாக நிறைவேற்றுவதற்கு
உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

கீரியாறு, பம்பையாறு பிரச்னையை நெடுநாட்களாக இந்தச்
சட்ட மன்றத்தில் கூறி வருகிறோம். இந்த மூன்றாவது திட்டத்
தில்கூட அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி ஒன்றும்
காணோம். அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க முடியும் அல்லது முடி
யாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டால்கூடப் பரவாயில்லை.
இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஆவன
செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தி
லிருந்து விவசாயிகளுக்கு விதை, உரம், உழவுக் கருவிகள் ஆகிய
வற்றை வாங்கிக் கொடுக்கிறோம். ஆனால் அவ்வாறு வாங்கிக்





கொடுக்கும் கருவிகள் எவ்வாறு இருக்கிறது என்று பார்த்தால்,
மாட்டை கலப்பையில் பூட்டி ஒரு அடி ஓட்டினவுடன் கலப்பை
வேறு, நுகத்தடி வேறு என்று போய்விடுகிறது. ஏதோ
ஒரு கைத்தொழிற்சாலையில் உற்பத்தியான கலப்பையை விவ
சாயிகளுக்குக் கொடுக்கிறோம். அது அவர்களுக்கு பிரயோசனம்
இல்லாமல் போய்விடுகிறது. இந்த நாட்டுக் கலப்பை அடுப்புக்கு
விறகாக எரிக்கக்கூட ஆகாது. இப்படி வீணாக விரயம் பண்ணு
வதைவிட விவசாயிகளுக்குப் பணமாகக் கொடுத்துவிட்டால்
அவர்கள் தங்களுக்கு தேவையான நல்ல கலப்பையாகப் பார்த்து
வாங்கிக் கொள்வார்கள். இல்லையென்றால், நல்ல கலப்பைகளாகப்
பார்த்து வாங்கி அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய
வேண்டும்.

பல ஆயிரக் கணக்கான தரிசு நிலங்களைப் பஞ்சாயத்து
யூனியன்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அந்த நிலங்கள் 20,
30 வருஷங்களாக விவசாயிகள் சாகுபடி செய்து வந்த நிலங்
கள். இப்போது அந்த விவசாயிகளை அப்புறப்படுத்திவிட்டு
பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றை எடுத்துக் கொண்டன.
நிரந்தரமாக விவசாயம் செய்பவர்களை இவ்வாறு நிலத்திலிருந்து
வெளியேற்றி விட்டால் உற்பத்தியை எவ்வாறு பெருக்கமுடியும்?
விலையை எவ்வாறு குறைக்க முடியும்? இதையெல்லாம் உடனடி
யாகப் பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்
கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்
கிறேன்.

* **திரு. எஸ். சதாசிவம் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர்
அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்
கிறேன். காரணம் ஏதோ ஒரு சிறிய வரி உயர்வுடன் எல்லா
அம்சங்களும் பொருந்திய நிதிநிலை அறிக்கையாக நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதை வரவேற்காமல்
இருக்க முடியாது. முதலாவதாக, 11-வது வகுப்பு வரை இலவசக்
கல்வி அளித்த முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, இந்த மன்றத்தில் பெரும் பகுதியாக பேசப்பட்டது
விலைவாசி உயர்வு பற்றியதாகும். இன்றுள்ள நிலைமையில் விவ
சாயிகளுடைய நிலைமையைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயப் பொருள்களின் விலை
யைக் குறைக்கும்போது பல முக்கிய அம்சங்களை மனத்தில்
கொள்ளவேண்டும். விவசாயப் பொருள்களின் உற்பத்தியை
அதிகரித்தால்தான் விலைவாசி குறையும். அதற்கு நீர்வளத்தைப்
பெருக்கிக் கொடுத்திருக்கிறோம். பெரிய திட்டங்களையெல்லாம்
நிறைவேற்றி விட்டோம். இனி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை
நிறைவேற்றுவதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். உணவு
உற்பத்தியைப் பெருக்க வெறும் ரசாயன உரங்களை மட்டும் நம்பி
யிருப்பதில் பயன் இல்லை. நீர்ப்பாசன வசதி செய்யும் பகுதியில்
தழை உரங்களும், இயற்கையான உரங்களும் கிடைப்பது
அவசியம்.

என்னுடைய தொகுதியைப் பொருத்தவரையில் திருச்சி ஜில்லாவிலுள்ள கரூர் தாலுகா மிகவும் பிற்பட்ட பகுதி என்பதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் உணருவார்கள். அங்கு நேரடிப் பாசன வசதியுள்ள நிலம் சுமார் 19,000 ஏக்கருக்கு உள்ளதாகத்தான் இருக்கும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு பல திட்டங்களை நிறைவேற்றி பாசன வசதியைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. லோயர் பவானித் திட்டம், அமராவதித் திட்டம் ஆகியவற்றால் எங்கள் பகுதிக்கு பாய்ச்சல் ஆதார வசதி செய்ய வாய்ப்பு இருந்தும் எந்த விதமான நன்மையும் கிடைக்கவில்லை. பாம்பிக்குளத் திட்டத்தின் மூலமாக வரும் நீர் கரூர் தாலுகாவில் எல்லைவரைகூட வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தத் திட்டத்தை விஸ்தரிப்பது பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் கனம் ராமையா அவர்கள் மேல் சபையில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது கூறியிருக்கிறார்கள். அதை எங்கள் பகுதி மக்கள் சார்பாக நான் வரவேற்கிறேன். விஸ்தரிக்கவும் வழிவகை செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் நொய்யலாற்று அணைத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறோம். எஞ்சினியரிங் இலாகாவிலே இதைப் பற்றிப் பரிசீலனை செய்து இதனை மேற்கொள்ளலாம் என்று ரிப்போர்ட்டிலேயே தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளும் திட்டத்தில் அது காணப்படவில்லை. இதுவரை ஏதோ சில காரணங்களால் அது தள்ளி வைக்கப்பட்டிருந்தாலும் இந்த ஆண்டாவது மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இந்த ஆண்டும் ஏமாந்தோம். இதனை இந்த ஆண்டிலேயே துவக்குவதற்கான ஏற்பாட்டை முதலமைச்சர் அவர்களும் மராமத்து இலாகா அமைச்சர் அவர்களும் வந்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமராவதியாற்றிலும், நொய்யலாற்றிலும் பம்பு செட்டுகள் வைத்து நேரடியாகத் தண்ணீரைக் கொண்டு வந்து பாசன வசதி செய்ய அந்தப் பகுதி மக்கள் ஏராளமான பொருளைச் செலவிட்டு வந்திருக்கிறார்கள். இதைப் பற்றிக் கலெக்டர் அவர்களிடம் கூறினோம். டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில்கூட சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறார்கள். இதுவரை அவ்வாறு வைத்துள்ள பம்பு செட்டுகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி வறண்ட பிரதேசமாக இருக்கிறபடியால் இதுபோன்ற பல நீர் பாசனத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மண் அரிப்புத் திட்டம், தடுப்பு அணைகள் கட்டுதல், குட்டைகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் ஆழக் குழாய் கிணறுகள் அமைத்தல் போன்ற பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





**திரு. எடி. எ. பி. சவுந்தரவேல் சேர்வை:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் 1964-65-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம் நாட்டில் இன்று விலைவாசி உயர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே விலைவாசி உயர்வைக் குறைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களை சர்க்கார் அதிக விலை கொடுத்து வாங்கி மக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி அளித்திருப்பது வரவேற்கத்தக்கது, போற்றத் தக்கது. அதே போல் கல்லூரிப் படிப்பிற்கும் ஊக்கம் அளித்து விட்டால் நம் நாடு புத்துயிர் அளிக்கப்பட்ட நாடாகிவிடும். அப்போது வருங்கால சந்ததியினரும் அதிருஷ்டசாலிகளாக காணப்படுவார்கள். என் தொகுதியைப் பொறுத்தவரை மேற்கே ஒரு ஓரத்தில் மலையோரப் பிரதேசமாக திருவிதாங்கூர் பார்டரை ஒட்டியிருக்கிறது போடிநாயக்கனூர் தொகுதி. இங்கு அதிகப்படியாக மலைப் பிரதேசங்களாகவும், மணல் பிரதேசங்களாகவும்தான் இருக்கின்றன. இங்கு வாழும் மக்கள் திருவிதாங்கூர் மலையில் விளையும் ஏலத்தை நம்பித்தான் ஒரு சிலர் வாழ்கிறார்கள். சென்ற மூன்று நான்கு ஆண்டு காலமாக அவர்கள் நிலை மிகவும் கஷ்டமானதொரு நிலையில்தான் இருக்கிறது. ஏலத்தின் விலை மிகவும் குறைவாகி இருப்பதால் ஏல விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வைகை நீர்த்தேக்கத்திலிருந்து வரும் தண்ணீர் கீழ் ராமநாதபுரம் ஜில்லாவிலும் திருமங்கலம் தாலுகாவிற்கும்தான் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது. அந்நிலையில் போடி பிராந்தியத்தில் உள்ள மலைப்பிரதேசங்களில் இருந்து வரும் தண்ணீர் அங்குள்ள மக்களுக்கு பயனளிக்காமல் இருக்கிறது. சிறுசிறு ஜமீன் பிராந்தியக் குளங்கள்தான் அங்கிருக்கிறதே தவிர சிறு அணைகளைக்கூட கட்டுவதற்கு இயலாத நிலையில் அந்த பிராந்தியம் வறண்டிருக்கிறது. ஆகவே அப்பிராந்தியத்தில் மலைகளிலிருந்து வரும் தண்ணீரை எஞ்சினியர்களை வைத்து கணக்கு எடுத்து சிறிய அணைகளைக்கட்டி தண்ணீரை அப்பகுதி மக்களுக்கு கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போடித் தொகுதியில் போடி ஜமீன், தேவாரம் ஜமீன் ஆகிய இரண்டு ஜமீன்களைக் கொண்ட கிராமங்கள் நிறைய இருக்கின்றன. அவை ஜமீன் பிரதேசங்களாக இருப்பதினால் அங்குள்ள விவசாயிகளுக்கு அதிகக் கஷ்டம் இருக்கின்றன. ஏழு ஆண்டுகளாக சர்வே செய்யப்பட்டு செட்டில்மெண்ட் நடவடிக்கைகள் எடுக்கப்படும் செட்டில்மெண்ட் அதிகாரிகள் நல்ல முறையில் கவனிக்காது அவரவர்கள் நிலத்திற்கு சரியான பட்டாக்கூட இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதோடு, சர்க்கார் செய்து கொடுக்கக்கூடிய வசதிகளையும் [illegible]

[திரு. எடி. எ. பி. சவுந்திரவேல் சேர்வை] [6th March 1964

பாங்க் வசதிகளையும் பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கு தண்ணீர் தீர்வை அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது. செட்டில்மெண்ட் அதிகாரிகள் நல்லமுறையில் கணக்கு எடுக்க தவறிவிட்டதால் தீர்வை அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விவசாயியும் 10, 20 மடங்கு அதிகப்படியாக கட்டும் நிலையில் அவதிப்படுகிறார்கள். ஆகவே இதுகுறித்து கவனித்து தண்ணீர் தீர்வையை அங்கு குறைப்பதற்கு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பிராந்தியத்தில் தொழிற்சாலைகள் ஒன்றும் கிடையாது. எல்லோரும் விவசாயத்தை நம்பியே வாழ்வதால் அங்கு ஒரு தொழிற்சாலையை எற்படுத்தி என் தொகுதியில் தொழில் வளம் பெற ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக ஜமீன் காடுகளில் ஜமீந்தார்களின் விவசாயிகளாக இருந்து விவசாயம் செய்து வந்த ஒவ்வொருவரும் 5, 10 ஏக்கர் நிலங்களை, பட்டா இருந்தும், இல்லாமலும், விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் வகையில், பட்டா இல்லாத விவசாயிகளின் நிலையை பரிசீலித்து பட்டா இல்லாதவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதுடன் இந்த 1964-65-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மீண்டும் வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ப. உ. சண்முகம்: மன்றத் துணைத்தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்து நடைபெறும் விவாதத்தில் நானும் கலந்து கொண்டு என் கருத்துரைகளையும் சேர்க்கின்றேன். அமைச்சர் அவர்கள் 140 கோடி ரூபாய்க்கு செலவுத் திட்டத்தைக் கொடுத்து அதில் 70 கோடி ரூபாய் திட்டத்திற்காக செலவு செய்யப்போகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். பாக்கி 70 கோடி நிர்வாக இயந்திரத்திற்கு செலவு செய்யும்போது, என்.ஜி.ஓ.-க்களுக்கு எவ்வித பரிகாரமும் அளிக்காமல் செலவு செய்வது வேதனை அளிக்கக் கூடியதாகத்தான் இருக்கவேண்டும். என்.ஜி.ஓ.-க்களைப்பற்றி பேசும்போது அவர்களை திராவிட முன்னேற்றக் கழகம் தங்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். நான் அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். என்.ஜி.ஓ.-க்களை திராவிட முன்னேற்றக் கழகம் தங்கள் பக்கம் இழுக்கப் பார்ப்பதற்கு முன்பு நீங்களாகவே அவர்களை எங்கள் பக்கம் துரத்தி விடாதீர்கள், அவர்களுக்கு தக்க வசதிகள் செய்து கொடுத்து, அவர்களுக்கு நன்மை செய்து அவர்களைக் கட்சி சார்பற்றவர்களாக ஆக்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசிபற்றி இந்த அறிக்கையில் விரிவாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள் "... ஒரு பொருளாதாரத் திட்டம், நாட்டின் பொருளாதார இயந்திரத்தை அதன் உச்ச நிலையில் இயங்கும்படித் தூண்டிக் கொண்டேயிருக்கிறது ..." என்றும், ஆகவே கட்டடப்



6th March 1964] [திரு. ப. உ. சண்முகம்]

பொருள்களின் பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம் இவையெல்லாம் எதிர்பார்க்கக் கூடியதே என்றும் கூறியிருக்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், திட்டம் போட்ட காலத்தில் இவற்றை எதிர்பார்த்திருந்தால் அதற்கேற்றபடி செய்ய ஏன் சர்க்கார் தவறிவிட்டது என்று? இன்னொரு பக்கத்தில், "... கனரக மின்சாரத் தொழில்களிலும் போடப்படும் திரண்ட முதலீடுகள் குறுகிய கால எல்லைக்குள் பயன் தருவதில்லை. ஆனால் நம்முடைய நீண்டகால வளர்ச்சிக்கு அவை இன்றியமையாதவை. இத்திட்டங்கள் உருவாகிக் கொண்டிருக்கும்போது அவற்றிற்காகச் செலவாகும் தொகையெல்லாம் பலர் கையிலும் வருவாயாக மாறி, ஏற்கெனவேயுள்ள உபயோகச் சாதனங்களுக்குப் போட்டியிடுவதால் விலைவாசிகள் ஏறுகின்றன ..." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதால் விலைகள் உயருகின்றனவா? அல்லது போட்டியிடுவதின் காரணமாக உயர்ந்திருக்கிறதா? என்பதை அருள்கூர்ந்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உற்பத்திச் செலவு குறைவு என்று சொன்னால் விலைகளைக் கட்டுப்படுத்த என்ன கஷ்டம் இருக்கிறது? விலைவாசி உயர்வுபற்றி குறிப்பிடும்போது மக்கள் தொகையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு சொல்கிறார்கள். மூன்று காரணங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னர் உரை மீது பேசும்போதே குறிப்பிட்டிருக்கிறேன். விலைவாசி உயர்விற்கு புதுப் புதுக் காரணங்களை கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர விலைவாசியைக் குறைப்பதற்கு என்ன செய்திருக்கிறார்கள்? கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ஆரம்பிக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளினால் மக்களுக்கு என்ன லாபம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து சொல்லவேண்டுமென்று தங்கள் மூலம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நிர்வாக இயந்திரத்தின் செலவைத்தான் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதே தவிர விலையை சப்ஸிடைஸ் செய்து கொடுப்பதற்கு முன்வந்துள்ளதா என்று கேட்க விரும்புகிறேன். முன்வந்துள்ளதா என்றால் கிடையாது என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. இந்தக் கூட்டுறவு சங்கங்களினால் விலை குறைந்து விடும் என்ற நம்பிக்கை இல்லை. அதை நடைமுறையில் கொண்டு வந்து விலையைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் தேவையில்லை. வழிவகைகள் சொல்லவேண்டுமென்று கேட்கவில்லை, குறைத்துக் காட்டுங்கள் என்று கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்று நாட்டில் உள்ள இந்திப் பிரச்னை. நேற்றைய சுதேசமித்திரனில்கூட ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. இந்திப் பிரச்னையை பொறுத்தமட்டில் அமைச்சர் அவர்கள் இதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொந்தப் பிரச்னையாகக் கருத வேண்டாம். நாட்டின் தேசியப் பிரச்னை இது என்பதை மறந்துவிடக் கூடாது. பல மாநிலங்களில் உள்ள மக்களை நாட்டின்

இரண்டாந்தர குடிமகளுக்கும் இந்த இந்திப் பிரச்னையை கட்சி சார்பற்ற முறையில் யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறையில் இருக்கின்ற திரு. அண்ணா அவர்களைப் பற்றி எண்ண வேண்டாம். நாட்டில் சிதைந்து கொண்டிருக்கின்ற தமிழைப்பற்றி அரசாங்கம் எண்ணிப்பார்க்க வேண்டும். நமது கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் நடைபெறப் போகின்ற முதலமைச்சர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளப் போகின்றார்கள். அதிலும் முக்கியமாக நடைபெற இருக்கின்ற இந்தி மொழிப்பற்றிய விவாதத்தில் கலந்து கொள்ளப் போகிறார்கள். அப்போதாவது தமிழகத்தில் இருக்கின்ற நிலைமையை அப்புடியே அருள்கூர்ந்து தைரியத்தோடு எடுத்துக் கூறுங்கள் என்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் எங்கே அழிந்து கொண்டிருக்கிறது, பண்டை காலத்தில் எல்லாம் தமிழ் அழிந்து கொண்டுதான் இருந்ததா என்று வேண்டுமானால் என்னைப்பார்த்துக் கேட்கக்கூடும். அப்படி முன்னாலேயே தமிழ் அழிந்துவிடாமல் இருந்ததற்குக் காரணம், என்னுடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில், தமிழை அழிக்கவேண்டும் என்ற நோக்கமுள்ளவர்கள் அந்த நாளில் நாட்டில் இருக்கவில்லை. தமிழர்களை இரண்டாந்தர ஆட்களாக ஆக்குவதற்கு வேலை செய்த ஆட்கள் அப்போது இல்லை. நாட்டிலிருக்கின்ற நிலைமையையும், தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருக்கின்ற பேராபத்தைப்பற்றியும் அருள்கூர்ந்து தைரியத்தோடு, முதலமைச்சர்கள் மகாநாட்டில் வாதாட வேண்டும் என்று தங்கள் மூலமாக கனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்திப் பிரச்னையைப்பற்றி நாங்கள் கூறுவதை வேண்டுமென்றால் விட்டுவிடுங்கள். மேல் சபையில் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் இதைப் பற்றி நன்றாக குறிப்பிட்டிருக்கிறார்கள். காரணம் இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்னை மட்டுமல்ல, இன்றைய தினம் இது தமிழகத்தின் பிரச்னையாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இதை எடுத்துச் சொல்கிறது என்பதற்காக இதை எதிர்க்கவேண்டிய தேவையில்லை. மொத்தமாக இது இன்றையதினம் நாட்டில் இருக்கின்ற முக்கியமான பிரச்னைகளுள் ஒன்று என்ற அடிப்படையில் யோசித்துப்பார்த்து இதற்கு ஒரு முடிவு எடுக்கவேண்டும். இந்தியின் மூலமாக, இந்தியை கட்டாய மொழியாகக் கொண்டு வருவதின் மூலமாக தமிழ் மக்களை இரண்டாந்தர மக்களாக ஆக்கப் போகிறார்கள். பரீட்சையில் இந்தி எழுதியாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். அதை எழுதினால்தான் தேர்வு கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது, இந்த பேராபத்தை நீக்கவேண்டாமா? நாங்கள் சொல்வதை விட்டுவிடுங்கள், இதைப்பற்றி எல்லாம் 'சுதேசமித்திரன்' பத்திரிகை எழுதியிருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கம் யோசிக்க வேண்டாமா?

அண்மையில் நடைபெற்ற மாநகராட்சி தேர்தல் பற்றி இங்கு பலவிதமாக பேசப்பட்டது. நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, அண்மையில் நடைபெற்ற தேர்தல், எந்தவிதமான சூழ்நிலையில் நடைபெற்ற தேர்தல் என்பதை





நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தி எதிர்ப்பு போராட்டம் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தால் நடத்தப்பட்டிருக்கிற நேரத்தில்தான் மாநகராட்சி மன்ற தேர்தல் நடைபெற்றிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இம்மாதிரியான ஒரு போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஏற்பட்டிருக்கின்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றிருந்தால், 'எங்கே உங்கள் இந்திப் போராட்டம், உங்களுக்கு எங்கே ஆதரவு இருக்கிறது, உங்களுடைய போராட்டத்தில் எந்த விதமான அர்த்தமும் இல்லை' என்று இங்கேயுள்ள அத்தனை காங்கிரஸ் அங்கத்தினர்களும் பேசியிருக்க மாட்டார்களா? ஆனால் இன்றையதினம் நடைபெற்றிருக்கின்ற தேர்தலில் திராவிட முன்றேற்றக் கழகம் அதிகமாக வெற்றிபெற்றிருக்கிறது என்றால், இந்தி இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்றுதானே மக்கள் இன்று தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். இதற்கு அரசாங்கம் என்ன சொல்லுகிறது? பம்பாயிலிருந்து மகாராஷ்டிரம் தனியாக பிரிந்து போக வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில்தான் பம்பாய் கார்ப்பரேஷன் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. அதன் பின்னால் தான் மகாராஷ்டிரத்தை தனியாக பிரித்துக் கொடுத்தார்கள். இந்தத் தேர்தலில் ஏற்பட்ட முடிவை எண்ணிப்பார்த்தாவது, இந்திக்கு பெரியதொரு எதிர்ப்பு இந்த நாட்டில் இருக்கிறது என்பதை வடநாட்டில் இருக்கின்ற இந்தி வெறியர்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற வகையில் இந்த அரசாங்கம் துணிந்து செயலாற்றவேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நான் இதைச் சொல்லாவிட்டால், தமிழ் மக்களுக்கு நான் செய்யவேண்டிய கடமையிலிருந்து தவறியவனாவேன் என்ற எண்ணத்தில் கூறுகின்றேன். தென்னாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய ஜனாதிபதி மக்கள் சபையில் இந்தியில்தான் உரையாற்ற வேண்டும், ஆங்கிலத்தில் பேசக் கூடாது என்று வற்புறுத்தப்பட்டதும், பின்னால் துணை ஜனாதிபதி இந்தியில் உரையாற்றிய நிகழ்ச்சியையும் நாம் அறிவோம். இந்தமாதிரி ஆங்கிலத்தில் பேசவொட்டாமல் இந்திவெறியர்கள் செய்துவிட்டார்கள் என்றால் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஜனாதிபதி அவர்கள் தனக்குத் தெரிந்த மொழியில் பேசியிருப்பார்கள். ஆனால் அவர்கள் உரையாற்றுகின்ற சில நாட்களுக்கு முன்னால் அவர்களுக்கு கண் ஆபரேஷன் நடந்தது, அதன் காரணமாக உதவி ஜனாதிபதி அவர்கள் உரையாற்றினார்கள். அவர்கள் இந்தியில் பேச தெரியுமாதலால் இந்தியில் பேசிவிட்டு பின்னால் ஆங்கிலத்தில் பேசினார்கள். ஆகவே ஜனாதிபதி அவர்களை தடுத்துவிட்டார்கள் என்று சொல்வது சரியல்ல.

**கனம் உதவி சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் அவர்களுக்கு, ஒரு விதியைப்பற்றி கவனப்படுத்த விரும்புகிறேன். நமது சட்டசபை விதிகள் 67-ல் . . .

[உதவி சபாநாயகர்] [6th March 1964

" A member while speaking must not use the Governor's or President's name for the purpose of influencing a debate . . . . என்றிருக்கிறது. ஆகவே ஏதோ ஜனாதிபதி அவர்களை பேசவொட்டாமல் செய்துவிட்டார்கள் என்று சொல்வது நமது சபை விதிகளுக்கு உட்பட்டதல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம்:** என்னுடைய பேச்சுக்கு, ஆதாரவாக மட்டும் நான் ஜனாதிபதி அவர்களுக்கு ஏற்பட்ட நிலையைப்பற்றி எடுத்துக்கொள்ளவில்லை. இந்த நாட்டிலுள்ள பத்திரிகைகள் எல்லாம், பத்தி பத்தியாக எழுதியது. அந்த முறையில்தான் என்னுடைய வாதத்தை நிரூபிக்கின்ற முறையில் இதை நான் எடுத்துக்காட்டினேன். இதைப்பற்றி நான் இங்கு பேசாமல் இருந்தேனானால் நான் தமிழ் நாட்டுக்கு துரோகம் இழைத்தவன் ஆவேன். இதைப்பற்றி பத்திரிகையில் வந்ததை யாரும் பார்க்காமல் இருந்திருக்க மாட்டார்கள். இந்தி மொழியின் கட்டாயத்தால் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற கொந்தளிப்பை, உண்மையாகவே அவர்களுக்கு தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி அக்கரை கொள்ள வேண்டிய தேவையில்லை. ஆனால் தென்னகத்து மக்கள் இந்த இந்தி மொழிப்பிரச்னையினால் இரண்டாந்தர மக்களாக ஆக்கப்படுகிறார்கள் என்பதை தைரியத்தோடு எடுத்துச் சொல்லவேண்டும் என்பதுதான் எங்கள் வேண்டுகோள். இதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டத்தைப்பற்றி நினைக்க வேண்டிய தேவையில்லை, நாட்டிலுள்ள பொதுவான பிரச்னை என்ற அடிப்படையில் அரசாங்கம் ஈடுபட தவறக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியைப் பொறுத்தவரையில் மத்திய சர்வீஸ் பரீட்சைகளில் இந்தியில் எழுதலாம் என்று சொல்லி விட்டார்கள். வேண்டுமானால் இது வடநாட்டுக்காரர்களுக்கு வசதியாக இருக்கலாம். அதே நேரத்தில் தமிழ்நாட்டுக்காரர்களுக்கு இழைக்கப்படும் துரோகமல்லவா இது? இந்தியில் பரீட்சை எழுதலாம் என்று சொல்லும்போது, அவரவர் தாய்மொழியில் எழுதிக்கொள்ளலாம் என்று ஏன் சொல்லவில்லை? இதைப்பற்றி எல்லாம் நடைபெற இருக்கின்ற முதலமைச்சர்கள் மகாநாட்டில், நமது கனம் முதலமைச்சர் அவர்கள் துணிவோடு, தைரியத்தோடு, தமிழ்நாட்டு நிலையை, தமிழ் நாட்டு மக்களின் நிலையை இங்கிருக்கின்ற கொந்தளிப்பை அருள் கூர்ந்து தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சி. ம. அம்பிகாபதி:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இங்கு விவாதத்தில் இருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான வரியும் இல்லாமல் இருப்பது பொதுமக்களை மிகவும் கவர்ந்திருக்கிறது. 11-வது வகுப்பு வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி அளித்திருப்பது பொது மக்களுக்கு மிகவும் ஆறுதல் அளித்திருக்கிறது. விவசாயத்திற்கு நல்ல ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவேண்டும் என்பதற்காக



6th March 1964] [திரு. சி. ம. அம்பிகாபதி]

ரசாயன உரங்களை அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்றும், விவசாயிகள் நல்ல முறையில் பயன் அடையவேண்டும் என்பதற்காகவும் திட்டத்தில் மிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடி அமலாக்கப்பட்டிருக்கிறது. இந்த தீவிர சாகுபடித் திட்டத்தால், முன்பு ஏக்கர் ஒன்றுக்கு 30 கலம் நெல் கண்டுமுதல் செய்தவர்கள் இப்போது 40 கலம் நெல் கண்டுமுதல் செய்கிறார்கள். 10 கலம் நெல் அதிகமாக திட்டத்தால், பயன் அடைகிறான் ஒரு விவசாயி. இருந்தும் கூட இத்திட்டத்தால் விவசாயம் வெற்றி அடையவில்லை என்று நான் சொல்ல வேண்டும். அதாவது அதிகமாக கிடைக்கும் பத்து கலத்தில் 40-60 முறையில் கணக்கிட்டுப் பார்த்தால் ஆறு கலம் தான் விவசாயிக்குக் கிடைக்கும். இதற்காகின்ற செலவைப்பார்த்தால் 100 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரை ஆகிறது. இதிலிருந்து விவசாயிக்கு நஷ்டம் தான் ஏற்படுகிறது என்பது புலனாகிறது. இத்திட்டத்தால் விவசாயிகள் லாபமடைய முடிவதில்லை. விவசாய இலாகாவிலுள்ள அதிகாரிகள் இதை நன்கு ஆராய்ச்சி செய்து திட்டத்தை வெற்றியடையச் செய்ய எந்த முறையில் மாற்றி அமைப்பது என்பதைப்பற்றி பரிசீலனை செய்து விவசாய இலாகா முழு அளவுக்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நாம் அதிகமாக பாசன வசதி செய்திருந்தும் தஞ்சை ஜில்லாவில் ஆண்டு தோறும் ஏற்படும் வெள்ளப் பெருக்கம், உடைப்புகள் ஏற்படுவதை தடுத்தபாடில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. நமது முதலமைச்சர் அவர்கள் 1948-ம் ஆண்டு பொது மராமத்துப் பணியில் இருந்த நேரத்தில் தஞ்சை ஜில்லாவில் ஒரு டிரைனேஜ் ஸ்கீம் கொண்டு வரவேண்டியது மிகவும் அவசியம் என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த 13, 14 ஆண்டுகாலமாக முயற்சி செய்தும் கூட, நல்ல டிரெயினேஜ் ஸ்கீம் முற்றுப் பெறாத நிலைமை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஆண்டுதோறும் அடிக்கடி மழை காலத்தில் உடைப்புகள் ஏற்படுவதின் காரணம் என்ன என்பதைப்பற்றி சம்பந்தப்பட்ட இலாகாக்கள் மேலும் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். ஓடிக் கொண்டிருக்கும் ஆறுகளுக்கு தூர் எடுக்காதிருப்பதுதான் முக்கிய காரணமாய் இருக்கும் என்பது தெரியவருகிறது. 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு பெரிய ஆறுகளுக்குத் தூர் (silt clearence) எடுக்கப்பட்டதோ என்னவோ. சமீபத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. மழைக் காலங்களில் பெய்யும் கன மழையால் ஆற்றுக்கரைகள் கரைந்து நாளடைவில் ஆறுகள் மேடிட்டுப் போகிறது. ஆற்றில் வரும் தண்ணீரை தாங்கும் சக்தி கரைகளுக்கில்லாதிருப்பதால் உடைப்புக்கு ஏதுவாகிறது. ஆனால் ஆண்டுதோறும் நிதிகளை ஒதுக்கி கரைகளை சீர்படுத்தும்படியான நிலைமையைச் செய்து தான் இருக்கிறார்கள். சரியான கண்காணிப்பு இல்லாத காரணத்தினால் ஆறுகள் மேடு

[திரு. சி. ம. அம்பிகாபதி] [6th March 1964

12-30 p.m. களாக ஆகிக்கொண்டிருக்கிறது. அமைச்சர்களும் நாமும் தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது பல ஆறுகளில் மண்மேடிட்டிருப்பதைப் பார்க்கிறோம். அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். கரைகள் போதுமான அளவுக்குத் தண்ணீரை தாங்காத நிலையில் Weak bund ஆக இருப்பதால் இதைப் பண்படுத்த சம்பந்தப்பட்ட இலாகா மிகவும் கவனமாக செயலாற்றவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். ஆற்றங்கரைகளையே நெடுஞ்சாலையாக எடுத்து ஆண்டு தோறும் ரோட்டை maintenance செய்வதால் புதிதாக போடப்பட்ட மண் இறுகி, வாகனங்கள் போவதற்கு ஏதுவாக அமையும். கரைகளுக்கு நல்ல கவனிப்பும் ஏற்படும். அடிக்கடி ஏற்படும் உடைப்புகளும் breach ஏற்படாது. கரைகள் நல்ல முறையில் அமையும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1956-ம் ஆண்டுக்கு முன் இர்ரிகேஷன் அட்வைஸரி கமிட்டி இருந்ததாகத் தெரிகிறது. நாளடைவில் ஏனோ அந்தக் கமிட்டியைக் கலைத்து விட்டார்கள். மீண்டும் அந்தக் கமிட்டியை அமைத்து நல்ல எக்ஸ்பெர்ட்டுகளை வைத்து நடத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் தஞ்சை ஜில்லா விவசாயம் மேட்டூர் அணையைப் பொறுத்திருக்கிறது. மேட்டூர் அணையில் 40 அடி தண்ணீர் நிறைந்திருக்கிறது என்று தெரிந்தவுடனே தஞ்சை ஜில்லாவில் இருக்கக் கூடிய ஓரிரு விவசாயிகள், வசதி உள்ளவர்கள் 500-600 ஏக்கருக்குள்ள குறுவை நெல்லை முன்னதாகவே விதை விட்டு வைத்துக்கொண்டு தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார்கள். தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அவர்கள் கேட்கும் பகுதிக்குப் போவதில்லை. அதனால் தண்ணீர் விரயம் ஆகிறது. தண்ணீர் திறப்பதிலே நிரந்தரமான நியதி இருக்கவேண்டும். மேட்டூரில் இவ்வளவு தண்ணீர் இருந்தால் தான் திறக்கப்படும் என்று கண்டிப்பாக சொல்லி விடவேண்டும். தண்ணீர் திறந்துவிடப்படும் தேதியை ஒரு மாதத்திற்கு முன்னர் தெரிவிக்கவேண்டும். இந்த தேதியில் தான் தண்ணீர் திறக்கப்படும் என்ற முன் அறிவிப்பை கொடுத்தால்தான் பயனுள்ளதாகும். முன்னதாகவே கேட்பவர்களுக்கென்று தண்ணீர் அணையிலிருந்து திறக்காமல் எல்லோரும் பயனடையும்படியாக, சிறிது காலம் தாழ்த்தி திறந்தால் நம்பிக்கையோடு சாகுபடி செய்ய முடியும். சரியான கண்டிப்பில் தண்ணீர் திறக்காததால் சாகுபடியில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு, விவசாயம் பிந்தி மழை காலத்தில் பயிர்கள் பாதிக்கப்பட்டு சேதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் மிக கவனமாக இருந்து தண்ணீர் திறக்கவேண்டும். ட்ரைனேஜ் ஸ்கீம் மிகவும் அவசியம். பல பகுதிகள் சென்ற ஆண்டு பெய்த கன மழையாலும், வெள்ளத்தாலும் இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை ஜில்லா கீழ் கடலோரப் பகுதியில் சரியான ட்ரைனேஜ் இல்லை. இவைகளுக்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுத்து இவ்வாண்டிலேயே ட்ரைனேஜ் வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். கட்டாயம் இந்தத் திட்டத்தில் சேர்த்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த பட்ஜெட்டை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.



6th March 1964]

*திரு. கோ. ராஜாராம்: மதிப்பிற்குரிய மன்றத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதி நிலை அறிக்கையை ஆதரித்துப் பேசுகிற நேரத்தில் குறைந்த பட்சம் 10 நிமிட நேரமாவது எனக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று வேண்டுகோளோடு என்னுடைய உரையைத் துவக்குகிறேன். 12-30 p.m.

பஞ்சசீலத் தத்துவத்தை கேலிக்குரியதாக்கிய வஞ்சக சீனருடைய துரோகத்தாலே நாடு நலிவுற்றிருந்த நேரத்தில் சென்ற ஆண்டு இந்த மன்றம் நிதி நிலை அறிக்கையைச் சிந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்தது. ஆனால் இன்றைய தினம் நாட்டிலே நல்ல தெளிவும், சூழ்நிலையிலே மகிழ்ச்சிக்குரிய மாற்றமும் விளைந்திருக்கிறது என்பதை நமக்கெல்லாம் உணர்த்தும் வகையிலே இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். சென்ற ஆண்டிலே தான் தமிழக அரசியல் பல புதுமைகளை, புரட்சிகளை, பெருமைக்குரிய நிகழ்ச்சிகளை, அதே சமயத்தில் வேதனைக்குரிய நிகழ்ச்சிகளை, மாறி மாறி சந்தித்தது. கொள்கைக்காக, கொள்கையின் உயர்வுக்காக பதவியைத் தூக்கியெறிந்த பெருந்தலைவனை இந்த நாடு கண்டு, போற்றி, மகிழ்ந்து, பெருமை பெற்றது. அதே நேரத்தில் சுக வாழ்வு கெடக் கூடாது என்பதற்காக, இனிய வாழ்வுக்கு இன்னல் வரக்கூடாது என்பதற்காக லட்சியத்தைத் தூக்கியெறிந்த விசித்திரமான லட்சியவாதிகளை இந்த நாடு அடையாளங்கண்டு வெட்கப்பட்டது, வேதனை கொண்டது. கட்சியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட தலைவனின் தலைமையிலே கூடிய புவனேசுவரம் காங்கிரஸ் நாட்டின் எதிர்கால நல்வாழ்வை மனதிலே கொண்டு, நாட்டின் சுபீட்சத்தைக் கருத்திலே கொண்டு ஜனநாயக சோஷலிஸம் என்கிற அரிய தத்துவத்தை உருவாக்கி ஏற்றுக் கொண்டுள்ளது. அந்தத் தத்துவத்தின் சாயலாக அந்த சித்தாந்தத்தின் பிரதிபலிப்பாக இன்றைய தினம் நமது ஆற்றல் மிக்க, அனுபவமிக்க, திறமை மிக்க முதலமைச்சர் கொண்டு வருகிற நிதிநிலை அறிக்கை விளங்குவது நாட்டின் நல்வாழ்வு விரும்பும் அத்தனை பேருக்கும், ஜனநாயக சோஷலிஸ வாதிகள் அத்தனை பேருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது, மன நிறைவைத் தருகிறது.

இப்படி இந்த நிதிநிலை அறிக்கையை நாம் பாராட்டி மகிழ்ச்சி தெரிவிக்கிற நேரத்தில் அதனைக் குறை கூறியும், குற்றஞ்சாட்டியும், குதர்க்கம் பேசியும், கேலி மொழிந்தும் அணுகுகிற நண்பர்களிடத்தில் நமக்கு ஆத்திரம் வருவதற்கு பதிலாக அனுதாபமே பிறக்கிறது. காரணம், ஆளுகின்ற கட்சியை இழித்தும் பழித்தும், ஆளுகின்ற கட்சியைப் பற்றி தவறான கருத்துக்களை எடுத்துச் சொல்லியும், உண்மைக்குப் புறம்பான செய்திகளை மக்கள் மன்றத்திலே எடுத்துக் கூறியும் தான் கட்சி நடத்த முடியும், அரசியல் [illegible] நடத்த முடியும் என்ற [illegible] கட்டத்திற்கு, அவல நிலைக்கு [illegible] தள்ளப்பட்டிருக்கிறார்கள். [illegible] [illegible] [illegible] [illegible]யோடு இலங்கை [illegible] இராவணனைப் [illegible]

அரசியல் களத்திலே கொள்கையை இழந்து விட்டு நிற்பவர்கள் அவர்கள். "தடையா? எங்கே தடை? தடை என்றால் படை திரளும், பகை மிரளும், தடை அகலும்" என்றெல்லாம் வீர முழக்கமிட்டவர்கள் 'தயாராகிறது தடைச் சட்டம்' என்ற ஒரு சொல் கேட்ட உடனேயே "விடை கொடு தாயே களம் புக" என்று கேட்காமல், கொள்கைக்கே விடை கொடுத்தனுப்பிய வேடிக்கை காட்சியை இந்த நாடு கண்டது. "இலட்சிய வெற்றி அல்லது இடுகாடு" என்றவர்கள் இலட்சியத்தையே சுடுகாட்டுக்கனுப்பிய விந்தையை இந்த நாட்டு அரசியல் கண்டு நாணியது. இந்த நிலையில் "எங்கே நாடு? எங்கே லட்சியம்? எங்கே உங்கள் முழக்கம்?" என்றெல்லாம் நாமல்ல--அவர்களைத் தொடர்ந்து வந்த ஆயிரமாயிரம் இளைஞர்கள், இளந்தொண்டர்கள், உற்சாகம் நிரம்பிய ஊழியர்கள் வினா தொடுத்தால், கேள்விக்கணை வீசினால் என்ன பதில் சொல்வது என்ற அச்சத்தாலே அவசர அவசரமாக அவர்கள் கண்களுக்குத் திரை போடவும் அவர் தம் திசைத் திருப்பவும் ஆளுகின்ற கட்சி மீது புழுதிவாரி இறைத்துக்கொண்டும், ஆர்ப்பாட்ட அரசியல் நடத்திக்கொண்டும் அரசியல் உலகிலே உலாவிவந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேதான் திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றம் என்ற லட்சியத்தை ஏற்றுக்கொண்டு அந்த லட்சியத்தை எய்துவதற்கான வகையிலே திட்டங்களைத் தீட்டியும், சட்டங்களை உருவாக்கியும், அந்த அடிப்படையிலே நிதிநிலை அறிக்கைகளைத் தயார் செய்துகொண்டு நாம் விவாதித்துக்கொண்டிருக்கிற நேரத்திலே கூட சட்ட எரிப்புப் போராட்டம் போன்ற சாகசப் போராட்டங்களிலே அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

சட்ட எரிப்புப் போராட்டக்காரர்களை எண்ணுகின்ற போது எனக்கு புராண காலத்துப் பஸ்மாசுரன் கதை தான் நினைவுக்கு வருகிறது. யாருடைய தலையிலே கையை வைத்தாலும் அவர்களை எரித்துவிடுகிற சக்தியை, வரத்தை பரமசிவனிடத்திலேயிருந்து பெற்ற பஸ்மாசுரன், பிறகு அந்த பரமசிவன் தலையிலேயே கையை வைக்க அவரைத் தேடி அலைய, அவர் ஓடி ஒளிய .. இப்படி புராணக் கதை நீளுகிறது. எண்ணச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகிய அடிப்படைச் சுதந்திரங்களையெல்லாம் அள்ளி வழங்குவது நமது அரசியல் சட்டம். மனித உரிமைகளை மதித்து அடிப்படை சுதந்திரங்களையெல்லாம் வழங்குகிற அரசியல் சட்டத்தை, கட்சி அமைக்கவும் கருத்தை வழங்கவும் சுதந்திரமளிக்கிற அரசியல் சட்டத்தை வரம் தந்த பரமசிவனையே அழிக்கப் போன பஸ்மாசுரனைப் போல இன்றைய தினம் எரிக்க முற்பட்டிருக்கிறார்கள். அரசியல் பஸ்மாசுரர்கள். புராணகால பஸ்மாசுரனுக்கு ஏற்பட்ட முடிவை நான் சொல்ல வேண்டியதில்லை. அது இந்த மன்றத்திலே உள்ளவர்களுக்கு எல்லோருக்கும் தெரியும்.

கடந்த நான்கு தினங்களாக இங்கு நடைபெற்ற விவாதத்திலே வேட்டைக்காரனும் பாட்டுக்காரனும் தான் இந்த மன்றத்திற்கு அழைக்கப்பட்டு பலமாக விவாதிக்கப்பட்டார்கள். நல்ல வேளையாக ஆட்டக்காரி பிரச்சினை இங்கு எழாமற்போனது இந்த மன்றம் செய்த அதிர்ஷ்டமே. குறிப்பாக எதிர் கட்சி உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கை மீது காட்டிய ஆர்வத்தை விட, அக்கறையை விட, மாநகராட்சி வெற்றி பற்றியும், வர இருக்கிற 1967 தேர்தல் பற்றியும் அதற்குப் பின்னாலே இந்தப் பக்கத்திலே வந்து உட்காரவேண்டுமென்பதில் அவர்களுக்கு இருக்கிற பேரார்வத்தைப் பற்றியும் பெரிதும் வெளிப்படுத்தி உரை நிகழ்த்தினார்கள். நடந்து முடிந்த நகர சபைத் தேர்தல்கள் மூலம் நாடு நல்ல தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பு தந்த தோல்வி, தோல்வியின் விளைவால் ஏற்பட்ட எரிச்சல், இந்த எரிச்சலைத் தீர்த்துக்கொள்ள கோடை காலத்தில் கோடைக்கானலுக்கும் ஊட்டிக்கும் செல்கின்ற உல்லாசிகளைப் போல சென்னைக்கு வந்து குளிர்ச்சி தேட முனைந்திருக்கிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். காசிக்கும் ராமேசுவரத்திற்கும் சென்று பாபத்தை தொலைக்க நினைக்கும் பக்தர்களைப் போல கார்ப்பரேஷனை தரிசிப்பதன் மூலம் நாடு முழுவதும் போட்ட சூட்டை மறக்க, மறைக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்களைக் கண்டு நாம் பரிதாபப்படுகிறோம். அடுத்து இந்தப் பக்கத்திலே வந்து அமரவேண்டுமென்று ஆர்வம் தெரிவித்த நண்பர்களுக்கு இந்த நேரத்திலே நான் நல்லதொரு யோசனையை, அரிய யோசனையை கூற விரும்புகிறேன். சுதந்திரப் போராட்ட காலத்திலே ஒதுங்கியிருந்தார்கள். சுதந்திரம் பெறுவதற்கு இடையூறாக இருந்தார்கள் என்ற அவப் பெயரைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பெயர் சரித்திரத்திலே நிலைப்பதற்கு முன்னால் அதற்குக் கழுவாய் தேடுவது போல பொருளாதார சுதந்திரத்தை, சமுதாய சுதந்திரத்தைப் பெற நாடு முனைந்திருக்கிற நேரத்தில் ஆக்க வேலைகளில் அவர்களை ஈடுபடுத்திக்கொண்டு, தேசீய அணியிலே இணைவார்களானால் அவர்களும் இந்தப் பக்கம் வரலாம், எங்களோடு அமரலாம், அந்த வாய்ப்பை நாடு அவர்களுக்கும் தரும். அதனை விடுத்து உருவத்தை மாற்றிக் கொள்ளாமல் இருக்கின்ற இடத்திலேயே இருந்துகொண்டு, இருக்கின்ற சூழ்நிலையிலேயே இருந்துகொண்டு இந்தப் பக்கம் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டால் அது நிலவைப் பிடித்து விளையாட எண்ணும் பிஞ்சுக் குழந்தையின் ஆசையாகத்தான் இருக்க முடியும். நண்பர்களுக்கு வசனம் மறந்திருக்காது என்று நினைக்கிறேன். "வேடமணியாத வேதாந்தி, மோடி செய்யாத மாது, ஜோடியில்லாத மாடப்புறா, சேடியில்லாத ராஜகுமாரி இருக்க முடியாதா?" என்று கேட்டார்கள். இவையெல்லாம் நாட்டிலே இருக்க முடியும். ஆனால் கொள்கையில்லாத கட்சி நாட்டிலே இருக்க முடியாது—இருக்கவும் கூடாது. "சாட்சியம் இல்லாத வழக்கு, சாரீரம் இல்லாத சங்கீதம் அம்பலமேறாது" என்பது புரிந்த எதிர் கட்சி துணைத் தலைவருக்கு "இலட்சியமில்லாத இயக்கம், கொள்கையில்லாத கழகம் வாழ முடியாது" என்பதும் புரியும் என்று நினைக்கிறேன். கார்ப்பரேஷன் வெற்றிகளைக் காட்டி கொள்கை இல்லாத கட்சிகளை மக்கள் மன்றத்திலே அதிக நாள் நிலைக்க வைக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று. மாநில அரசு ஊழியர்கள் விஷயத்தில் அவர்கள் நல்வாழ்வில் எதிர் கட்சியினருக்கு இருக்கிற ஆர்வத்தை விட, அக்கறையை விட, எங்களுக்கு அதிக ஆர்வமும், அக்கரையும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் நெஞ்சில் அமைதி இருந்தால் தான், அவர்கள் வாழ்வில் நிம்மதி இருந்தால் தான் நல்லரசு இயங்கும், நாட்டில் சுபிட்சம் நிலவும் என்பதை நாங்கள் உணருகிறோம். இந்த நேரத்தில் நான் கனம் அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன், நாம் எதைச் செய்தாலும், எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும், அது எங்கள் முயற்சியின் விளைவு என்று தங்கள் முத்திரை பதித்து நாட்டிலே வெளிச்சம் போட்டுக் காட்ட முயற்சிக்கிறார்கள் எதிர் கட்சியினர். விதைப்பவன் ஒருவன், அறுப்பவன் ஒருவன் என்ற நிலையை சென்னை 'ஏ' பிரிவு நகரமானபோது கண்டோம். எனவே மாநில அரசு ஊழியர்கள் விஷயத்தில் எதைச் செய்தாலும் நாம் செய்தோம், நாமே செய்தோம் என்ற நிலைமையை உருவாக்கித் தரவேண்டும். இந்த விஷயத்தில் கனம் அமைச்சர் அவர்கள் சர்வ ஜாக்கிரதையோடு இருந்து மாநில அரசு ஊழியர்கள் குறைகளை களைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. இரா. நல்லமுத்து**: மதிப்பிற்குரிய உதவி சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயிகளுக்கு பலவித நன்மை செய்து, விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று அரசாங்கம் எண்ணி, இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குப் பலவிதமான நன்மைகள் செய்திருந்தாலும், சேலம் மாவட்டத்து விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்க வாய்ப்புகள் இருந்த போதிலும், இது நாள் வரையில் அரசாங்கம் அது சம்பந்தமாக எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. சேலத்தில் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மழை காலத்தில் அதிகமாக வரும் தண்ணீரை திருமணிமுத்தாறு, பொன்னிலாறு முதலிய ஆறுகளில் விட்டு, ஏரிகளின் மூலமும் கால்வாய்களின் மூலமும் கிணறுகளில் நீர்ஊற்றின் மூலமும் சுமார் 45,000 ஏகர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க முடியும். அதுபற்றி பல விவசாயிகள் மகாநாடுகளில் அமைச்சர் அவர்களுக்கு மகஜர்கள் கொடுத்தும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையினால், இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி காலத்திலாவது இந்தத் திட்டத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து வரும் கிழக்குக்கரைக் கால்வாய் பள்ளிப்பாளையத்தில் முடிவடைகிறது. அதை ஜேடர்பாளையம் வரையில் 15 மைல்களுக்கு நீட்டினால், மேலும் 10,000 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். காவேரி நதியிலிருந்து தன்னுடைய சொந்தச் செலவிலேயே பம்பு செட்டுகள் வைத்து தண்ணீர் இறைத்து





விவசாயம் செய்யக் கூடியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு பெர்மிட் அளிக்கப்பட்டு சாதாரண வரி விதிக்கப்பட்டிருக்கிறது. 2—10—1961-ம் தேதிக்கு பின் வைத்த பம்பு செட்டுகளுக்கு சாதாரண பம்பு செட்டுகளுக்குள்ள தீர்வையைப் போல் 20 மடங்கு தண்டத்தீர்வை விதித்திருக்கிறார்கள். அதற்கு உடனே ஆவன செய்து 1961-ம் ஆண்டுக்குப் பின் வைத்த பம்பு செட்டுகளுக்கும் சாதாரணத் தீர்வை விதித்து அவர்களுக்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் விஸ்தரிப்பினால் சேலம் ஜில்லாவில் 25,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சாதாரணமாக பறிதைக்கும் தொழிலாளர்கள். மின்சார விஸ்தரிப்பின் காரணமாக இந்தப் பறிதைக்கும் தொழிலாளர்களின் பரம்பரை தொழில் நசுக்கப்பட்டு, 25,000 குடும்பங்கள் எந்தவிதமான தொழிலும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பறிதைக்கும் தொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழில் அளித்து, அவர்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எந்தக் கிராமங்களுக்குச் சென்றாலும் நிலம் இல்லாமல் ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பட்டா நிலங்களில் குடியிருக்கிறார்கள். பட்டாதாரர்கள் சொல்லுவதைக் கேட்காவிட்டால் அவர்கள் ஹரிஜனங்களை தங்கள் சொந்த நிலத்திலிருந்து அப்புறப்படுத்துகிற நிலைமை ஏற்படுகிறது. பட்டாதாரர்கள் சொல்லுவதைக் கேட்கவில்லை என்றால், அவர்கள் வெளியே செல்வதற்குக்கூட அனுமதியில்லை. குடிநீருக்கு வசதி கிடையாது. விவசாயக் கிணற்றிலிருந்துதான் குடிநீர் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. மேலும், அவர்களுக்கு சுடுகாடு வசதி, போக்கு வரத்து வசதி முதலிய வசதிகள் செய்துதர வேண்டும். இந்த வசதிகள் இல்லாமல் ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதில் உடனடியாக கவனம் செலுத்தி, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே நமது சென்னை மாநில அரசாங்கம் ஊழியர்களுக்கு குடும்பப் பென்ஷன் போன்ற வசதிகள் மேலும் தாராளமாக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் ஆசிரியர்களையும் சேர்ப்பார்களா என்பதுபற்றி குறிப்பிடவில்லை. ஆசிரியர்களையும் அந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சில ஹரிஜன மக்கள் விவசாயம் செய்து பிழைக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு யூனியனிலும் ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. 10, 15 ஆண்டுகளாக ஹரிஜனங்கள் இந்த நிலங்களில் விவசாயம் செய்துகொண்டு வருகிறார்கள். இந்தப் புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்களிடம் இப்பொழுது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஹரிஜன மக்களை இந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தும் நிலை ஏற்படு-

டிருக்கிறது. இதனால், ஹரிஜன விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அருள் கூர்ந்து அந்த விவசாயிகள் அந்த நிலங்களில் பயிர் செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ரெ. தங்கவேலு**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, போராற்றல் படைத்த நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த அறிக்கை நாட்டு மக்களிடையே நல்லெண்ணத்தை வளர்த்திருக்கிறது. இலவசக் கல்வியை நுகராத 17 சதவிகிதம் மக்களுக்கு இலவசக் கல்வி விஸ்தரிக்கப்பட்டிருக்கும் திட்டத்தை நிச்சயம் அந்த மக்கள் வரவேற்காமல் இருக்க முடியாது. இந்த அறிக்கையில் ஆரம்பக்கல்விக்காக அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிற இந்த நேரத்தில் ஆரம்பப்பள்ளிகளில் தற்போது நிலவிவருகிற 'பியூபில்-டீசர் ரேஷியோவை' 'லிபரலைஸ்' செய்து கல்வித்தரம் உயர்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் பெரு வெள்ளத்தின் காரணமாகவும், மழையின் காரணமாகவும் என்னுடைய பகுதியில் விவசாயம் பொய்த்துவிட்டது. ஏக்கருக்கு 50, 60 மூட்டைகள் விளையும் நிலங்கள் எல்லாம் 10, 15 என்று குறைந்துவிட்டது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு நிலச்சொந்தக்காரர்கள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று அவர்களை நிலத்தை விட்டு எவிக்ஷன் செய்யக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் அரசாங்கம் தலையிட்டு, விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளித்து, நெல்லை தவணையில் கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கோட்டையமேடு நீர்ப்பாசனத் திட்டம் மிகவும் முக்கியமான திட்டம். அதன் மூலம் பல ஏக்கர் நிலங்களை விளைச்சலுக்குக் கொண்டுவரலாம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், என்னுடைய தொகுதி நல்ல பலனை அடையும். நமது மதிப்பிற்குரிய வொர்க்ஸ் மினிஸ்டர் சென்ற சில மாதங்களுக்கு முன்பு இந்த இடத்தை நேரில் பார்வையிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எப்படியாவது அமுல் நடத்தி, என்னுடைய தொகுதியில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கும் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியில் 'பெட் பெஸிலிடீஸ்' மிகவும் குறைவாக இருக்கிறது. ஜில்லா டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டத்தில்கூட 36 பெட்களாக விஸ்தரிக்கவேண்டுமென்று தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். எமெர்ஜன்ஸி காரணமாக அந்த வேலை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி மீண்டும் சிந்தனை





செய்து அந்த வேலையை சாங்ஷன் செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொள்ளிடம் பாலம் தஞ்சை மாவட்டத்தையும் தென் ஆற்காடு மாவட்டத்தையும் இணைக்கிறது, அதனால் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது என்றாலும் அங்கு 'ஆக்சிடெண்டுகள்' அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே, கொள்ளிடம் பாலத்தில் இருபக்கமும் மின்சார விளக்குகளை ஏற்றுவதற்கு அரசினர் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனைக்காரன் சத்திரம் பஞ்சாயத்து யூனியனில் கொள்ளிடம் பாலத்திற்கு மின்சார விளக்குகள் போடவேண்டும் என்று தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதையும் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மீனவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். தொடுவாய், கூழையார், கீழமூவர்கரை, நாட்டாங்குப்பம் போன்ற பகுதிகளில் மீனவர்கள் அதிகம் வசிக்கிறார்கள். அந்தப் பகுதிகளுக்கு நமது முதல் அமைச்சர்கூட வந்திருக்கிறார். சில இடங்களில் போக்குவரத்திற்கு பாதை அமைப்பதற்கு வழிவகை இல்லாமல் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் 50 சத விகிதம் தான் மான்யம் தருகிறார்கள். 'பப்ளிக் கண்டிரிபியூஷன்' ஏழை மக்களால் கொடுக்க முடியவில்லை. இந்த நிலைமையை அனுசரித்து மீனவர் இலாகாவிலிருந்து போதிய தொகை அளித்து மீனவர் மக்களுக்கு வேண்டிய போக்குவரத்து பாதைகளை அமைத்துக் கொடுப்பதற்கு திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓ.-க்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது மிகவும் முக்கியம். அந்த நிவாரணம் எப்பொழுது, எப்படி அளிக்க வேண்டும் என்பது நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதை அனுசரித்து அவர்கள் என்.ஜி.ஓ-க்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் ஹரிஜன மான்யத்திற்கு அதிகமான தொகையை சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட தொகையில் ஹரிஜன ஹாஸ்டல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் 'பாய்ஸ் ஹாஸ்டல்' ஒன்று, 'கேர்ல்ஸ் ஹாஸ்டல்' ஒன்று ஆகிய இரண்டு ஹாஸ்டல்கள் இருக்கின்றன. ஒன்றுக்காவது சொந்தக் கட்டிடம் இல்லை. வாடகைக் கட்டிடத்தில்தான் அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வாடகைக்குக் கொடுப்பவர்கள்கூட பயப்படுகிறார்கள். ஏனென்றால், வாடகை சரியாக வருவதில்லை. இந்தப் பகுதியில் சர்க்காருக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அல்லது நிலத்தை ஆர்ஜிதம் செய்தாவது இரண்டு ஹாஸ்டல்களில், ஒரு ஹாஸ்டலுக்காவது சொந்தக் கட்டிடம் கட்டிக்கொடுத்து என்னுடைய தொகுதி மக்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. எல். ராமகிருஷ்ண நாயுடு:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். சுதந்திரம் அடைந்து 15 வருடங்களாக நமது நாட்டை எந்த அளவுக்கு முன்னேற்றம் செய்யமுடியுமோ, அந்த அளவுக்கு வரி விதித்து நாடு முன்னேற்றம் அடைவதற்கான பல ஆக்க வேலைகளை நமது சர்க்கார் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் ஒவ்வொரு துறையும் எந்த அளவுக்கு முன்னேற வேண்டுமோ அந்த அளவுக்கு முன்னேற வேண்டுமானால் இந்த பட்ஜெட்டால் மட்டும் முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஒவ்வொரு இலாகாவிற்கும் வேண்டிய தொகையை நாம் ஒதுக்கியிருக்கிறோமா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ரூபாய் 140 கோடி பட்ஜெட்டில் கல்விக்காக மட்டும் ரூ. 32 கோடி ஒதுக்கியிருக்கிறோம். இது நாலில் ஒரு பங்கு என்று சொன்னாலும் கல்விக்காக ஒதுக்கப்படும். இந்தத் தொகை போதாது என்றுதான் நான் சொல்லுவேன். ஒவ்வொரு ஊரிலும் பாடசாலை வைத்திருந்தாலும், கட்டிட வசதிகள், வாத்தியார் வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. இந்த் நிலை போகவேண்டுமானால் இந்த ரூ. 140 கோடியையும் கல்விக்காகவே செலவழிக்க வேண்டியிருக்கும். அதே மாதிரி ஒவ்வொரு துறைக்கும் அதிகமாக செலவழிக்க வேண்டியிருக்கும். இப்பொழுது போடப்பட்டிருக்கும் வரியே அதிகம் என்று பேசுகிறார்கள். இந்த நிலையிலே படிப்படியாகத்தான் நாம் முன்னேற முடியும்.

நமது கனம் முதல் அமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். ஒவ்வொரு வருஷமும் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்பொழுது என்ன வரிகள் போட்டிருக்கிறார்கள், என்ன சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்று பொது மக்கள் பேசிக் கொள்வார்கள். இந்தத் திட்டத்தில் 11-வது வகுப்புவரை எல்லோருக்கும் இலவசக்கல்வி அளித்திருப்பது மிகவும் வரவேற்கக் கூடியதாகும். அதே மாதிரி ஏழை மக்களுக்காக சென்ற 15 ஆண்டு காலமாக நமது அரசாங்கம் பல நன்மைகளைச் செய்து வருகிறது, "ஜனநாயகத்தின் அடிப்படையில் தனிமனிதனின் கௌரவத்துக்கும், சமூக நீதிக்கும் முக்கியத்துவம் கொடுத்து சோஷலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அனைவருக்கும் சம வாய்ப்புக் கொடுப்பதுதான் ஒரு சோஷலிச சமுதாயத்தின் முக்கியமான லட்சியம்" என்று இந்த உரையிலே கூறியிருக்கிறார்கள். இந்த லட்சியத்தை அடைய வேண்டுமானால் படிப்படியாகத்தான் அடைய முடியும். ஒரே நாளில் அடைந்துவிட முடியாது. இந்த லட்சியத்தை நோக்கிக் கொண்டு போக வேண்டும் என்பதுதான் புவனேசுவரத்தில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் எடுத்த தீர்மானம். அதை அடைவதற்காகத்தான் நமது சர்க்கார் பாடுபட்டுக் கொண்டு இருக்கிறது. எதற்கு முக்கியத்துவம் அதிகப்படியாக கொடுக்க வேண்டுமோ அதற்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது தான் என்னுடைய அபிப்பிராயம்.



கனம் முதல் அமைச்சர் அவர்கள் விலைவாசி குறைய வேண்டுமானால் உற்பத்தி பன்மடங்கு பெருக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எந்த மக்கள் உற்பத்தி பெருக வேண்டும் என்று உழைக்கிறார்களோ, அந்த மக்கள் சமுதாயத்திலேயே மிகவும் குறைந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள். ஒரு நாளைக்கு அவர்களுக்கு ரூ. 1½ அல்லது ரூ. 2 கூட கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆனால் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கிறவர்கள், மில்களில் வேலை பார்க்கிறவர்கள் தினமும் ரூ. 3 அல்லது 4 ஊதியம் பெறுகிறார்கள். ஆகவே கிராம மக்கள் தொழிற்சாலைகளுக்கு போகிறார்கள். கிராமங்களிலே கூலி வேலைக்கு ஆள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அவர்களுடைய கூலி உயர்ந்தால்தான் விவசாயமும் முன்னேற்றம் அடையும். இப்பொழுது போதுமான ஊதியம் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு போதுமான ஊதியம் கிடைப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். எப்படி கல்விக்காக அதிகப்பணம் கொடுக்கிறோமோ அதைக்காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் துறைக்கு, எந்த மனிதர்கள் இல்லாவிட்டால் மனிதன் ஜீவிக்க முடியாதோ, அப்படி உற்பத்தி செய்கின்ற விவசாய மக்களுக்கு இந்த சர்க்கார் அதிகமான பணத்தை ஒதுக்கி உதவி செய்ய வேண்டும். கல்விக்கு ஒப்பாக விவசாயத் துறைக்கும் பணம் ஒதுக்கினால்தான் நமது நாடு முன்னேறும், விவசாயமும் முன்னேறும். ஆகவே விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. காஞ்சி மணிமொழியார்:** மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரவு செலவு திட்டத்தின் மீது நடைபெறுகிற விவாதத்தில் நானும் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தை இரண்டு காரணங்களுக்காக வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். இந்த வரவு செலவு திட்டம், அண்மையிலே நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஜனநாயக சோஷலிச தீர்மானத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு தயாரிக்கப்பட்டு இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவது, இந்தத் திட்டத்திலே வரி ஒன்றும் விதிக்கப்படவில்லை என்பது. நான் இந்த இரண்டு காரணங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன். ஜனநாயக சோஷலிசத்தை அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே தவிர ஆவடியில் சில ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டிலே சோஷலிஸ்ட் பாட்டர்ன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இத்தனை ஆண்டுகளாக அது முளை விட்டிருக்கிறதா என ஏழைகள் தேடிக்கொண்டு இருக்கும் நேரத்தில், முளையும் வராமல், செடியும் முளைக்காமல் திடீர் என்று ஜனநாயக சோஷலிசம் என்ற பழம் நம் கையில் தரப்படுவது என்றால் அது ஒரு மாந்திரீகன் ஒரு மாங்கொட்டையை நட்டு சில விநாடிகளுக்குள் அதில் இருந்து ஒரு மாம்பழத்தை எப்படி

[திரு. காஞ்சி மணிமொழியார்] [6th March 1964

பறித்துத் தருவதாகக் கூறுகிறானே அதைப்போல் ஒரு மாந்திரீகச் செயலாக இருக்கிறது. உண்மையிலேயே சென்ற சில ஆண்டுகளாக இந்த நாட்டிலே சோஷலிசம் பரவி இருக்கிறதா, ஏழை மக்களுடைய வாழ்வு மலர்ந்து இருக்கிறதா என்று நாம் பார்க்க வேண்டும். நாளுக்கு நாள் பணக்காரர்களுக்கும் ஏழை மக்களுக்கும் இடையே இருக்கிற பள்ளம் இடைவெளி விரிந்துக் கொண்டுதான் போகிறது.

கிராம மக்களிலே பெரும்பாலானவர்கள் விவசாய மக்கள். நமது நாட்டிலே கிராமங்களில் இருக்கிற மக்களில் முக்கால் பங்கு விவசாய மக்கள். இந்திய நாட்டிலே பொதுவாக எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 62 சதவீத விவசாய மக்கள் கடன் தொல்லையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வு என்றுமே மலருவதாக இல்லை. அவர்களுக்கு இன்பம் இல்லை, எழுச்சி இல்லை. அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்படவில்லை. ஏறி இருக்கிற விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்கவோ தேவையான பொருள்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவோ முடியவில்லை. சர்க்காரைக் கேட்டால், வளர்ந்து வருகிற பொருளாதார அமைப்பிலே இந்த விலைவாசி உயர்வு இயற்கையாக ஏற்படக்கூடியதுதான் என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக இருக்கக்கூடிய ஏழை மக்கள், விவசாய மக்கள், நடுத்தர மக்கள் இந்த விலை ஏற்றத்தினால் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். கிராமத் திட்டங்கள் நாளுக்கு நாள் வளர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக கிராமங்களிலே கைத்தொழில்கள் வளர வேண்டும். அதற்காக பெரும் தொகை ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். மேலும் கிராமங்களில் குடி தண்ணீர்த் திட்டங்களுக்காக இந்த வரவு செலவு திட்டத்திலே பணம் ஒதுக்கப்படாதற்கு காரணம் என்ன ? எல்லா கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது மிகவும் அவசியம். கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூபாய் 13,000 ஒதுக்கியிருப்பதைப் பார்க்கிறோம். மூன்று லட்சம் அல்லது நான்கு லட்சம் என்று ஒதுக்கப்பட்ட தொகை இப்பொழுது குறைக்கப்பட்டிருப்பது ஏன் ? கிராம மக்களுக்குத்தான் இந்த சர்க்கார் அதிக உதவி செய்ய வேண்டும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன். கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் நகரங்களிலே வாழ்கின்ற மக்களுக்கும் பொருளாதாரத்திலே உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்ற முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நாட்டிலே இருக்கிற பெரும்பாலான ஏழை மக்கள், நடுத்தர மக்கள், விவசாய மக்கள் இவர்களுடைய வாழ்வு மலருவதற்கு வழி வகை ஏற்படும். கிராமத் தொழில்களுக்கும், சிறு கைத் தொழில்களுக்கும் இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தைவிட அதிகமாக ஒதுக்கி, கிராமங்
1-00 p.m. களிலே இந்தத் திட்டங்களை அதிகமாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தொழில் பேட்டைகள் நகர்ப் புறங்களை ஒட்டியும் நகரப்பகுதிகளிலுமே ஏற்படுத்தப்படுகின்றன. அதோடுகூட கிராமப் பக்கங்களிலும் சிறு சிறு தொழிற் பேட்டை



6th March 1964] [திரு. காஞ்சி மணிமொழியார்]

களை அமைத்தால் கிராம மக்கள் நகரத்தை நோக்கி நகராமல் கிராமத்திலேயே பற்று ஏற்பட்டு கிராமப் புறம் நல் வாழ்வை அடையும். இன்றைய தினம் கிராம மக்கள் சிறிது சிறிதாக கிராமங்களை உதறிவிட்டு நகரங்களை நோக்கி வருவதற்குக்காரணம் அந்த இடத்தில் அவர்களை இழுத்து நிறுத்தக் கூடிய சக்தி கிராமங்களுக்கு இல்லை. சிறு சிறு கைத்தொழில்களை வளர்க்கவும் படித்தவர்கள் கிராமங்களில் தங்கவும் கிராமங்களை சக்தி உள்ளவைகளாக ஆக்கக் கூடிய திட்டங்களை தீட்ட வேண்டும். நாம் இப்பொழுது இரண்டு திட்டங்களை முடித்து விட்டோம். மூன்றாவது திட்டத்தின் மூன்றாவது ஆண்டில் நிற்கிறோம் இன்னமும் நாம் வறுமையை போக்குவதற்கு வேண்டியதை சாதிக்க முடியவில்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் என்ன என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சமீபத்தில் வினோபாஜி அவர்கள் வருத்தத்துடன் தெரிவித்திருக்கிறார். இந்த நாட்டில் ஒருமைப் பாட்டை ஏற்படுத்தவோ வறுமையை ஒழிக்கவோ காங்கிரஸ் கட்சிக்கு சக்தியும் இல்லை திறமையும் இல்லை. மகாத்மா காந்தியடிகள் கூறிய வண்ணம் காங்கிரஸ் கட்சியை மாற்றி லோக் சேவக் சங்கமாக அமைத்திருந்தால் எப்பொழுதோ வறுமையைப் போக்கி இருக்க முடியும் என்று கூறியிருக்கிறார். இங்கே பேசிய கனம் அங்கத்தினர் அம்மையார் ஒருவர் ஏழைகள் உயரவும் பணக்காரர்கள் விட்டுக் கொடுத்து கீழே இறங்குங்கள் என்று கூறக் கூடிய வரவு செலவுத் திட்டம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே பணக்காரர்கள் கீழே இறங்கக் கூடிய வாய்ப்பு எங்கே இருக்கிறது என்று துருவித் துருவிப் பார்த்தேன். எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் பணக்காரன் கீழே இறங்கவேண்டும் என்று சொல்லவில்லை. கீழே இருக்கிறவர்களை மேலே தூக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். மேலே இருப்பவர்களை கீழே இறக்க வேண்டும் என்பதல்ல என் கோரிக்கை. அந்த வகையில் திட்டங்களை தீட்ட வேண்டும். அதற்கான பணத்தை அதிகமாக ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது இங்கே கைத்தறி நிதி உதவி கார்ப்பொரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. தொகையும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக என் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த நிதி உதவி கார்ப்பொரேஷன் கைத்தறி நெசவாளர்களுக்கு நேரடியாகப் பயன் படும் முறையில் செயல்படவேண்டும். அதற்கான முயற்சிகளை செய்ய வேண்டும். ஸ்டேட் ஹாண்ட்லூம் சொசைட்டியிலே இன்றைக்கு நூல் கொடுக்கிறார்கள். ஆனால் நூல் யாருக்கு கொடுக்கிறார்கள் என்றால் சொசைடியிலே யார் ரூ. 1,050 கட்டுகிறார்களோ அவர்களுக்குத்தான் அந்த சொசைட்டியில் நூல் கொடுக்கிறார்கள். அவர்கள் 78 ரூபாய்க்கு வாங்கிய நூலை கிராமப்புறங்களில் உள்ள நெசவாளர்களுக்கு ரூ. 115-க்கு பிளாக் மார்க்கெட்டில் விற்கிறார்கள். இதை நான் நேரிடையாக என்னுடைய கிராமப் பகுதியில் பார்த்திருக்

[திரு. காஞ்சி மணிமொழியார்] [6th March 1964

கிறேன். ஆகையினால் 1,050 ரூபாய் கட்டி நூல் பெற ஏழை கைத்தறி நெசவாளர்களால் முடியுமா? நெசவாளர்கட்கு பயன் படாத முறையில் இருப்பதை மாற்ற வேண்டும். கிராமப்புறங்களிலே உள்ள உற்பத்தியாளர்களுக்கு சப்டெபோக்கள் வைத்து அதன் மூலம் நேரிடையாக சரக்கு பெற்றுக்கொண்டு நூல் வினியோகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுது தான் கிராமப் புறத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு . . .

(மணி அடிக்கப்பட்டது)

* **திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய நிதி நிலை அறிக்கையை வரவேற்கிறேன். இந்த நிதி நிலை நடப்பு ஆண்டில் திட்டமிட்டப்படி கூடுமான வரையில் இருந்திருக்கிறது. எந்த எந்த இடங்களில் செலவுகள் எப்படி ஆகும் என்று நினைத்தோமோ அது 100-க்கு 99 பாகம் அதே அளவில் இருந்திருக்கிறது. அது திட்டமிட்டவர்களுடைய திறமையை எடுத்துக் காட்டுகிறது. வருகிற ஆண்டுக்கு போட்டிருக்கும் பட்ஜெட்டும் அதே நியதியை அனுசரித்துத்தான் தயாரிக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

வரிவிதிப்பில் ஒரு கோடி ரூபாய்க்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இதிலே எதிர்பார்க்கப்பட்டிருக்கக் கூடிய வருமானம் எந்த வில்லங்கமும் இருக்கக் கூடியது அல்ல. இன்னும் மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்கார் பெறக் கூடிய இனம் ஒன்று உண்டு என்று கருதுகிறேன். உப்புத் தொழிலுக்கு உதவியாக செஸ் வசூலிக்கப்படுகிறது.. இது மத்திய சர்க்காரால் வசூலிக்கப்படுகிறது. கோடிக்கணக்கான ரூபாய் இந்த வகையில் வசூல் ஆகிறது. ஏறக்குறைய ஒரு லட்ச உற்பத்தியாளர்கள் நம் ராஜ்யத்தில் இருந்து கொடுக்கிறார்கள். நாட்டின் தேவையில் குறிப்பிடத் தகுந்த அளவு உப்பு இங்கே உற்பத்தியாகிறது. ஆகவே நம் அரசாங்கம் இந்த செஸ் நிதியில் இருந்து இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களின் நலனுக்காக குறிப்பிட்ட தொகையை பெறுவதற்கு வழி வகை இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேண்டிய சுகாதாரம், மருத்துவம், கல்வி முதலிய இனங்களுக்கு செலவு செய்ய உதவியாக இருக்கும். அந்த நிதியில் இருந்து, மத்திய சர்க்காரிலிருந்து ராஜ்ய சர்க்கார் ஒரு பகுதியைப் பெற்றால் அனேகமாக ஒரு கோடி ரூபாயை பெற முடியும், முன்பு பெற வேண்டியது இப்பொழுது பெற வேண்டியது இவற்றை எல்லாம் சேர்த்து கணித்துப் பெறலாம். தொழிலாளிகளுக்கும் வேண்டிய உதவி செய்யலாம் என்பதைப்பற்றி தீவிரமாக யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றொன்று சொல்ல விரும்புகிறேன். ஒரிஸா மாநிலத்தில் நடத்தக்கூடிய லாட்டரி சீட்டுக்கு நம் ராஜ்யத்தில் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. நமக்கும் நிதி வேண்டும் என்று விரும்புகிற சந்தர்ப்பத்தில் அதே போல லாட்டரி சீட்டு மூலமாக வசூல் செய்யலாமா என்று யோசிக்கலாம்.



6th March 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

இந்த சந்தர்ப்பத்தில் விவசாயிகளுடைய அதிக விலை கஷ்டங்களை ஓர் அளவுக்கு குறைக்க முடியாதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் விவசாயிகளுக்கு விதிக்கப்படும் வரிகள் பல துறைகளில் இருந்து போடப்படுகின்றன. பஞ்சாயத்து யூனியனில் ஆரம்பித்து சர்க்கார் வரை சிறிது சிறிதாக அது கணிசமான அளவுக்கு உயர்ந்து இருக்கிறது. அது எந்த அளவுக்கு என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு இந்த வரிகள் குவிந்து விவசாயி மீது விழுந்து இருக்கிறது என்பது பற்றி தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டும். விவசாயப் பொருள்களின் விலை சம்பந்தப்பட்ட மட்டில் உற்பத்தி பெருகினால் அது தகுந்த பரிகாரமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. எனக்கு ஒரு சிறு யோசனை தோன்றுகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய ரோடுகள் போட பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களால் விதிகளின்படி முடியாமல் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனால் செய்ய முடியாத காரியத்தை விவசாயிகள் "ஒப்படி நெல்" வசூலில் இருந்து செய்து கொள்ள முடியுமானால் அதற்கு உதவி செய்யலாம். அம்மாதிரி விவசாயிகள் சங்கம் நிறைய இருக்கின்றன. ரோடுகளை ஒழுங்கு படுத்தும் அளவுக்கு, சிறு சிறு பாலங்கள் கட்ட, களமேடு விருத்தி செய்ய இன்னும் இம்மாதிரி சிறிய காரியங்களை செய்ய அவைகளை உபயோகப்படுத்தலாம். எல்லா ஒப்படி சங்கங்களையும் ரிஜிஸ்டர் செய்யச் செய்து வருமானத்தில் ஒரு பகுதியை மேற்காட்டிய வேலைகளுக்காக ஒதுக்கும்படி செய்யலாம். அது சம்பந்தமாக விதிகள் கூட செய்யலாம். விவசாயப் பொருள்களைக் கொண்டு வரவும், உரம் தழைகளை எடுத்துப் போகவும் வசதிகள் செய்யலாம். ஆங்காங்கே கிராமாந்தர உரங்களை, நாட்டு உரங்களை உபயோகிக்க வழி செய்தால், செலவினங்களை குறைக்க வழியாக இருக்கும்.

இன்றைய தினம் உணவு உற்பத்திக்காக பெருவாரியான பணம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த அளவுக்கு உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதற்குச் சரியான அளவு கோல் தேவை. உபயோகிக்கும் விதை, நவீன உரம் இவைகளால் இவ்வளவு கூடுதல் அளவு உற்பத்தி அதிகரித்திருக்கக்கூடும் என்றே தான் ஊகிக்கிறோம். எந்த எந்த இனங்களில் விவசாய உற்பத்தி அதிகமாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறோம். அதுதான் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கும் அளவு. இந்த அளவுகோல் போதுமானதல்ல. இது சம்பந்தமாக ஒரு வாரமே கூட, உற்பத்தி வாரம் என்று ஏற்பாடு செய்து அதில் ஆசிரியர்களும், கிராம சேவக்குகளும் ரெவின்யூ இலாகா அதிகாரிகளும் சேர்ந்து அதை உபயோகமுள்ள ஒரு காலமாக செய்யலாம். குறிப்பிட்ட சீஸனில், அந்த அந்த ஜில்லாவிற்கு ஏற்றாற்போல எங்கே எங்கே என்னென்ன பொருள்கள் உற்பத்தியாகுமோ அந்த அந்த பொருள்கள் சம்பந்தமாக—ஒரு வாரத்தைத் தேர்ந்தெடுத்து விழாவாகக் கொண்டாடி, உற்பத்தியாகியிருக்கும் பொருட்களின் புள்ளி விவரம் சேகரிப்பதுடன் அதன் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு எடுத்து உணர்த்தும் முறையில் ஏற்பாடு செய்யலாம். கடைக் கோடியில் இருக்கும் குளங்களுக்குத் தண்ணீர் போய்ச் சேருவதில் தாமதம்

ஏற்படுகிறது. அதனால் பயிர் செய்வதில் கூட காலதாமதம் ஏற்படும். விளைவில் கூட பாதகம் ஏற்படும். இந்தக் கஷ்டங்கள் சில பகுதிகளிலே ஏற்படுகிறது. வேறு பகுதிகளில் விவசாயம் செய்ய ஆரம்பித்து ஒரு மாதம் கழித்த பிற்பாடு கூட தண்ணீர் சேராத இடங்கள் இருக்கின்றன. இந்தக் கஷ்டங்களைத் தீர்க்க தண்ணீர் பெரிய குளங்களுக்குப் போய் அங்கிருந்து கீழே உள்ள குளங்களுக்குப் போவதன் தாமதத்தைத் தவிர்க்க தனி கால்வாய் அமைத்துத் தரக்கூடிய திட்டம் உருவாக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் மருதூர்க் கால்வாயிலிருந்து நொச்சிகுளம் கால்வாய் கடம்பாக்குளத்திற்குக் கீழேயுள்ள 12 குளங்களை இணைக்கக்கூடிய ஒரு தனிக்கால்வாய்த் திட்டம் பரிசீலிக்கப்படுகிறது. இது போன்று மாநிலம் முழுவதும் இருக்க வேண்டும். அந்த அளவுக்கு இவ்விஷயத்தில் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் குறிப்பிட்ட நேரத்தில் விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்க உதவியாக இருக்கும், அதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாக ஒரு முடிவு செய்வது நல்லது.

இந்த பட்ஜெட்டில் வரவேற்கத்தகுந்த பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. பதினோருவது வகுப்பு வரையில் இலவசக் கல்வி கொடுக்கத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. இதை ஒரு சாதாரண விஷயம் என்று கருதுவதற்கில்லை. 83 சதவிகிதத்தினருக்கு ஏற்கனவே இத்தகைய வசதி இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. நான் நினைக்கிறேன், 50 சத விகிதத்தினருக்குத்தான் ஒழுங்காகக் கிடைத்திருக்கும். பாக்கி 33 சதவிகிதத்தினர் எப்படியோ பெற்றுக்கொண்டிருந்திருப்பார்கள். இப்பொழுது எல்லோருக்கும் இந்த உதவி ஒருவிதக் கஷ்டமும் இல்லாமல் கிடைக்க இருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்ததாகும்.

என்.ஜி.ஓ-க்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசாங்கம் எப்பொழுது அவர்களுடைய சிப்பந்திகளுக்கு நல்ல உயர்வு கொடுக்க நினைக்கிறார்களோ, அப்பொழுது நிச்சயமாக மாநில சர்க்காரையும் அவர்கள் கலந்து கொள்ள வேண்டும். அதன் மூலமாகத்தான் ஆங்காங்கு நாம் என்ன செய்ய முடியும் என்று பார்க்கலாம். பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாக பொருளாகக் கொடுத்தால் ஓரளவுக்கு நலமாக இருக்கும். பொருள்களாக எந்த அளவிற்கு நாம் கொடுக்கிறோமோ அந்த ஒரு வகையில்தான் இந்தப் பிரச்னையில் சிறந்த பரிகாரம் நாம் காண முடியும் என்று நான் கருதுகிறேன். என்.ஜி.ஓ.-க்களுக்கு இந்த பட்ஜெட்டில் கொடுத்திருக்கும் குடும்பப் பென்ஷன் திட்டத்தை ஆசிரியர்களுக்கும் போலீஸ் சிப்பந்திகளுக்கும், மற்ற ஊழியர்களுக்கும் நீடிப்பதற்கு அரசாங்கம் உதவிகரமாக இருக்க வேண்டும். முன்பெல்லாம் ரயில்வே இலாகாவில் தங்களுடைய சிப்பந்திகளுக்கான கோவாபரேடிவ் ஸ்டோர்கள் வைத்து, அதிலே எல்லாவிதமான பொருள்களையும் சுலபமான விலையில் கொடுக்க ஒரு திட்டம் இருந்தது. அதைப்போல நமது அரசாங்கம் கூட, ஒரு ஏற்பாட்டைச் செய்து, ஸப்ஸிடி கொடுத்து, சென்னை நகரத்திலும் ஜில்லாத் தலை நகரங்களிலும், தாலூக்காத் தலைநகரங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் வைப்பதன் மூலமாக அரசாங்க ஊழியர்களுக்கு இந்த உதவி செய்து கொடுக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.





*** திரு. ஆ. தங்கவேலு :** கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்கைக் குறித்துப் பேச எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக முதற்கண் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்கே நடைபெற்ற விவாதத்தில் என்.ஜி.ஓ.-க்களுக்குப் பஞ்சப்படி கொடுக்கப்படவில்லை என்பதைக் குறித்து இங்கே எல்லோரும் கருத்துத் தெரிவித்தார்கள். அதைப்பற்றி இன்றைக்குப் பொதுவான ஒரு செய்தி நாட்டிலே உலவுகிறது. அது என்னவென்றால் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு இந்தப் பஞ்சப்படி கொடுப்பதிலே அக்கறை உண்டு. அவர் அதைத் தீர ஆலோசித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், அவர் தருணம் அறிந்து செய்யக் கூடியவர்கள், தக்க நேரத்திலே காரியங்களைச் செய்யக் கூடியவர்கள். அதனால் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்திற்கு முன்னால் அதை அளித்து அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் செய்ய இருக்கிறார்கள் என்ற செய்தி ஒரு பக்கம் உலவிக் கொண்டிருக்கிறது. எப்படி இருந்தாலும், முதல் அமைச்சர் அவர்கள் இன்றைய விலைவாசி ஏற்றத்திற்குத் தக்க அளவிலே கொஞ்சமாகக் கொடுப்பதாக இருந்தாலும், அதை உடனடியாகக் கொடுத்து, தக்க முறையில் நல்லதொரு எண்ணத்தை உண்டாக்கும்படி அவர்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மது விலக்கு சம்பந்தமாக நம்முடைய முன்னாள் மது விலக்கு அமைச்சராக இருந்த கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள், தாம் அந்தப் பொறுப்பில் இருந்த காலத்தில், சில பெரிய மனிதர்களை, பெரிய இடங்களிலே குடிப் பழக்கம் உள்ளவர்களைப் பிடிக்க முன்வந்தார்கள். குறிப்பாக, சென்னையில் லேனா செட்டியார் போன்ற பெரிய மனிதர்களை எல்லாம் .....

**கனம் உதவி சபாநாயகர் :** பெயர்களையெல்லாம் கனம் அங்கத்தினர் குறிப்பிட வேண்டாம்.

**திரு. ஆ. தங்கவேலு :** அந்தப் பழக்கத்தையே ஒழிக்கின்ற அளவுக்கு அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்தார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் அந்த அளவிலே, இப்பொழுது போலீஸ் அமைச்சராக வந்திருக்கக்கூடிய கனம் திரு. கக்கன் அவர்கள், இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்ட உடனேயே, "நான் மது விலக்குத் திட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தியே தீருவேன். குடிப் பழக்கத்தை அறவே ஒழிக்க என்னாலான முயற்சியை எடுத்தே தீருவேன்" என்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலே சொன்னார்கள் என்பதைப் பத்திரிகை வாயிலாகக் கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். மதுப் பழக்கம் சீக்கிரத்திலேயே ஒழிக்கப்படுவதிலே அவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளுகிறார்

[திரு. ஆ. தங்கவேலு] [6th March 1964

கள். ஆனால், அவருடைய எண்ணத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியவர்கள் எப்படி இருக்கிறார்கள்? கனம் அமைச்சர் அவர்களைத் திருப்திப் படுத்தும் வகையில், இன்றைக்கு அந்தந்தப் பகுதியிலே உள்ள போலீஸ் அதிகாரிகள் வேறுவித மாக நடந்து கொண்டிருக்கிறார்கள். சில போலீஸ் அதிகாரிகள், இந்த மது வளர்ந்து கொண்டு போவதற்குக் காரணமாக இருப்ப வர்களை அனுமதித்து, தங்களுக்கு மாமூல் என்ற பெயரை அங்கங்கே உண்டாக்கி, அதை உப தொழிலாக வைத்துக்கொண்டி ருப்பது எல்லோரும் அறிந்ததே; இது ரகசியம் அல்ல. அமைச் சர் அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுப்பார்களானால், அவர் களுடைய நிலை மாறும், அவர்கள் வருமானம் கூடப் போகும் என்பதற்காக, குடிக்கின்ற பெரிய மனிதர்கள் அத்தனை பேரும் அப்படியே இருந்துகொண்டிருக்க, பாமரர்கள், ஒன்றும் அறியா தவர்கள், நிரபராதிகள் பாதிக்கப்படக்கூடிய வகையில் ஆங் காங்கே உண்மைக்கு மாறான வழக்குகளை ஏராளமாகப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், அமைச்சர் அவர்களைத் திருப்தி செய்யும் வகையிலே. அந்த வகையிலேதான் திண்டிவனத்திலே புதியதாக ஒரு டிஓய்.எஸ்.பி. வந்திருக்கிறார். 'அவர் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய சொந்தக்காரர் அல்ல' என்று முதல் அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் மறுத்திருக்கிறார் கள். முதல் அமைச்சருக்கு அவர் சொந்தக்காரர் அல்ல என்று இங்கே முதல் அமைச்சர் அவர்கள் மறுத்தாலும், தான் முதல் அமைச்சருக்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக்கொண்டு, அவர் அங்கே முழு நேரமும் யாரை வேண்டுமானாலும் பிடித்துக்கொண்டு வந்து, திடீர் திடீர் என்று பொய் வழக்குகளை, அதாவது உண் மைக்கு மாறான வழக்குகளைப் போடுகிறார்கள். என்னுடைய நண் பர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, போலீஸ் ஸ்டேஷனிலே பாட்டில்களை ஏராளமாக வைத்துக்கொண்டு, அங்கே உண்மைக்கு மாறாக, நிரபராதிகள் பாதிக்கப்படும் வகை யில் நடந்துகொண்டு வருகிறார்கள். நான் ஒரு சமயம், ஒலி பெருக்கிக்கான பர்மிஷன் வாங்குவதற்குச் சென்றபோது, "என்ன ஐயா, இப்படி ஊரிலே நிறையப் பேசிக்கொள்ளுகிறார் களே, ஏன் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது?" என்று அங்கே நான் விசாரித்தேன். அங்கே ஒரு நண்பர் ஒரு அறைக்கு என்னை அழைத்துக்கொண்டு போய்க் காண்பித்தார். பார்த்தால், நிறைய சாராய பாட்டில்கள், பிராந்தி பாட்டில்கள் அடுக்கி வைத் திருக்கிற நிலைமையைக் கண்டபோது, 'இது போலீஸ் நிலையந் தானா? அல்லது பிராந்தி ஷாப்பா' என்று சந்தேகிக்கத்தக்க அள வுக்கு மிக மோசமாக இருந்தது.....

**கனம் திரு. பூ. கக்கன்:** இப்பொழுது அங்கே வந்திருக்கும் டிஓய்.எஸ்.பி. அவர்கள் மிகவும் திறமைசாலி. நன்றாக வேலை செய்து அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அதிகாரியினுடைய வேலையைக் குறை சொல் லும் வகையிலே, போலீஸ் ஸ்டேஷனில் சாராயத்தை வைத்துக் கொண்டு சில பேர் பொய்க் கேஸ்கள் போடுவதாகச் சொல்வது சரியல்ல. சட்ட மன்றத்திலே கனம் அங்கத்தினர்கள் எது வேண்டுமானாலும் பேசலாம் என்றாலும், உண்மையாக வேலை செய்



6th March 1964] [திரு. பூ. கக்கன்]

கின்ற அதிகாரியைப் பற்றி இவ்வாறு கனம் அங்கத்தினர் அவர் கள் சொல்வது நல்லதல்ல. இதுபற்றி எனக்குத் தெரியும். பல கிராமத்தார்கள் கூட்டம் கூட்டமாக டின் டின்னாக நகரத்திற்குக் கொண்டுவந்தார்கள். அதையெல்லாம் அந்த அதிகாரி தக்க ஏற்பாடு செய்து நிறுத்தியிருக்கிறார்கள் என்று இந்த சமயத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆ. தங்கவேலு:** நான் குறிப்பிட்டதைப்போல, அமைச் சர்களைத் திருப்தி செய்வதற்காகத்தான் உண்மைக்கு மாறான வழக்குகளை அவர்கள் போட்டிருக்கிறார்கள், தன்னுடைய பதவியை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தான் அப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் சொன் னதை கனம் அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒப்புக்கொள்ளு வதுபோல் அந்தப் போலீஸ் அதிகாரி திறமையானவர் என்று சொல்கிறார். ஆனால், அந்தப் பகுதியில் இத்தகைய செயல்களை நாங்கள் இதற்கு முன்னால் பார்த்தது கிடையாது. இதற்கு முன்னால், இப்படி எதிர் பாராத அளவு இப்படி ஒருவர் செய்தது கிடையாது. கூட்டம் கூட்டமாக அந்தப் பகுதியில் விற்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எந்தப் பகுதியில் இல்லை? அமைச்சர்கள் இருக்கும் இந்த சென்னை நகரத்தில் இல்லையா? நான் சொல்வது என்னவென்றால், உண்மைக்கு மாறாக நிரபராதிகளைப் பாதிக்கும் வகையில் கேஸ் போடுகிறார்கள். குடிப்பவர்களை, விற்பவர்களைப் பிடிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. விற்கக் கூடியவர் களைப் பிடித்தால் அதில் தவறு இல்லை. ஆனால், நிரபராதிகளைப் பிடித்து உண்மைக்கு மாறான கேஸ்கள் போடுவதைப்பற்றித்தான் நான் குறிப்பிடுகின்றேன். அமைச்சர் அவர்களை நான் கேட்கின் றேன்—இது வரையில் அந்த டிஓய்.எஸ்.பி. அவர்கள் எந்தப் பெரிய மனிதரையாவது பிடித்துக் கேஸ் போட்டிருக்கிறார்களா? அப்படிப் போட்டிருந்தால் அவர்கள் சொல்வதிலே நியாயம் இருக் கிறது. நிரபராதிகள், ஒன்றும் அறியாதவர்கள், ரோடிலே போய்க் கொண்டிருந்தாலும், எங்கே இருந்தாலும் பிடித்துக்கொண்டு போவதென்றால், அது அந்த அதிகாரி தன்னுடைய பதவியை உயர்த்திக்கொள்வதற்காகச் செய்கின்ற காரியமே தவிர, உண்மை யிலேயே அவர்கள் சொல்கிற மாதிரி அல்ல. அப்படியிருந்தால், இதுவரையில் மது விலக்குக் குற்றங்களுக்காகப் போட்ட வழக் கிலே எந்தப் பெரிய மனிதரையாவது அவர் பிடித்து வழக்குப் போட்டிருப்பதாகச் சொன்னால் நான் அவர் சொல்வதைச் சிர மேற்கொண்டு, ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இனி மேலாவது அவர் உண்மையான வழக்குகளைப் போட்டு, ஜனங்களிடத்தில் பெரு மதிப்பைத் தேடிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர்கள் பதவி உயர்வைத் தேடிக் கொள்ள வேண்டுமே தவிர, மற்றப்படி எந்தவிதமான காரியத்திற் காகவும் நான் யாரைப்பற்றியும் தவறாகச் சொல்லக்கூடியவன் அல்ல என்பதைச் சொல்லிக்கொண்டு, உண்மையான வழக்கு களைப் போடும்படியான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

[6th March 1964

* **திரு. க. கோமதிசங்கர தீக்ஷிதர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நாட்டின் நலனில் மிக்க அக்கறை கொண்டு பணியாற்றி வரும் நமது முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1964-65-ஆம் வருஷ வரவு செலவு திட்ட அறிக்கையை ஆதரித்துப் பேச முன்வந்திருக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் எவ்வளவு தூரம் புவனேசுவரத்தில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஜனநாயக சோஷலிசக் கொள்கை அடங்கி இருக்கிறது என்பதைப்பற்றி பலர் ஆராய்ந்து இந்த நிதி நிலை அறிக்கையில் ஜனநாயக சோஷலிச அடிப்படை எதுவும் இல்லையென்பதாகத் தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

உண்மையாகவே மக்களுடைய சுபிட்ச வாழ்வுக்காகப் பாடுபட்டு வருகிறது நமது காங்கிரஸ் அரசாங்கம். மக்களுடைய க்ஷேம நல அரசாங்கமாக—தேசப் பிதா காந்திஜியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி செயலாற்றி வருகிற நமது முதல் மந்திரி பக்த வத்சலம் அவர்கள் இதை நிர்வகித்துக்கொண்டு போகிறார்கள். இந்த உண்மையை நன்றாக ஊன்றிப் பார்த்தால் எல்லோரும் நன்கு தெரிந்து கொள்ளலாம். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையை அரசியல் நிறங்களை வைத்துப் பார்ப்பதனால் நிச்சயமாக அந்த உண்மையைப் பார்க்க முடியாது. அதைப் பார்க்க வேண்டிய கண் நாட்டு மக்களுக்கு நலம் பார்க்கிற கண்ணாக இருக்க வேண்டும்.

பட்ஜெட் அறிக்கையிலும் சரி, தம்முடைய உரையிலும் சரி கனம் அமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுடைய நன்மைக்காக இந்த அரசாங்கம் செய்து வருகிற பல காரியங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வயது முதிர்ந்தவர்களுக்கு பென்ஷன் அளிக்க 160 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் 65 வயதுக்கு மேற்பட்டு என்று இருந்ததை 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே அளிக்க முன் வந்திருக்கிறார்கள். சுதந்திரம் பெற்ற இந்த நாட்டில் தன் இறுதி நாளை அமைதியாக, அல்லலின்றி கழிப்பதற்கு இந்த அரசாங்கம் முதியோர்களுக்கு அளித்துள்ள உதவியை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்னும் பென்ஷன் பெற்றுள்ள எயிடெட் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் என்று அவர்கள் பென்ஷன் பெற்று வருகிறார்கள். ஒரு நீண்ட காலம் இந்த நாட்டின் நன்மைக்காக சேவை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கு முதியவர்களுக்கு அளிப்பது போலாவது குறைந்த பட்சம் 20 ரூபாய் பென்ஷன் என்ற முறையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கும் 20 ரூபாய் என்ற அளவில் பென்ஷன் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன் வரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் உணவு உற்பத்தியைப் பற்றியும், விலைவாசி ஏற்றத்தைப் பற்றியும் பலர் கவலை தெரிவித்தார்கள். விலைவாசி ஏற்றம் மக்களுக்கு கஷ்டத்தை உண்டுபண்ணி வருகிறது. ஒரு விஷத்தன



6th March 1964] [திரு. க. கோமதிசங்கர தீக்ஷிதர்]

மான வட்டத்தில் நாம் இப்போது சிக்கிக் கொண்டிருக்கிறோம். இதிலிருந்து விடுபட வேண்டுமென்றால் அரசாங்கத்துடன் பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும். எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். மக்களிடத்தில் தார்மீக எண்ணம் வளர வேண்டும். வியாபாரிகளிடத்திலும் உண்டாக வேண்டும். இத்தகைய தார்மீக உணர்ச்சியைப் பரப்புவதற்காக வேண்டிய பிரசாரங்களை நாம் மேற்கொண்டாக வேண்டும். மேலும் பொது மக்களை பாதிக்கக்கூடிய அளவுக்கு வளர்ந்து போகிற விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் தக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்க நமது அரசாங்கம் பல வகையில் நீர்பாசனத் திட்டங்களைப் போட்டு வருகிறது. அம்பாசமுத்திரப் பகுதியில் கடனா நதி திட்டத்தை மேற்கொண்டிருப்பதற்கு அந்தப் பகுதி மக்கள் ஆறுதல் அடைகிறார்கள். இன்னும் ராமநதி அணைக்கட்டு திட்டம் இருக்கிறது. அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விக்கிரமசிங்கபுரத்தில் முப்பதாயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேர்மாதேவி ஆகிய இடங்களுக்கு குடி தண்ணீர் அளிப்பதற்காக 25 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் போட்டு இருந்தார்கள். அது நிறைவேறவில்லை. அதைப்பற்றி ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலில் கூட வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படாத காரணத்தினால் பொதுச் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்போதுகூட 1963-64-இல் காலரா நோயினால் அம்பாசமுத்திரம் தொகுதியில் மட்டும் ஏறக்குறைய 1,200 சொச்சம் பேர்கள் மாண்டார்கள். அதற்கு முக்கியமான காரணம் இந்த தாம்பரபாணி நதியின் உற்பத்தி ஸ்தானத்தில் நல்லதொரு குடிதண்ணீர் திட்டம் அமையாததுதான். மேலும் கனடியன் கால்வாய் தண்ணீர் அதோடு கலப்பதனால்தான் இந்த வியாதி ஜில்லாவெங்கும் ஏற்படுகிறது. அந்தக் குடிதண்ணீர் திட்டத்தை அங்கு சீக்கிரம் நிறைவேற்றிக் தரவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய ராஜ்யத்தில் தான் மதுவிலக்குத் திட்டம் பூராவும் அமுல் செய்யப்படுகிறது. காந்தியின் அடிச்சுவட்டில் பணியாற்றி வருகிற நமது முதல் அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை உறுதியாக தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்று சொன்ன கருத்தை நான் ஆதரிக்கிறேன். மதுவிலக்குத் திட்டத்தினால் பல ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை தொடர்ந்து சிறப்பான முறையில் அமுலாக்குவதுதான் நல்லது.

இன்னும் எனது அம்பாசமுத்திரம் தொகுதியில், செவ்வந்திபுரம், கோடாரங்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படடுக் கொண்டிருக்கிறார்கள். காரணம் அவைகள் இனாம் பூமிகள். இப்போதுதான் நிறைவேற்றப்பட்டுள்ள இனாம் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் அவைகளைக் கொண்டுவந்து

[திரு. க. கோமதிசங்கர தீக்ஷிதர்] [6th March 1964

அவர்களுடைய பிற்போக்குத் தன்மையைப் போக்க, அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்திவிட தக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த நிதி நிலை அறிக்கை இப்படி பலவகையில் சோஷலிச தன்மை பெற்றுள்ளதாக அமைந்திருக்கிறது. அதை நல்ல முறையில் நிறைவேற்றிக் தருவது அரசாங்க ஊழியர்களுடைய கடமை. தங்களுடைய கோரிக்கைகளையே அவர்கள் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அவர்களிடத்திலும் சேவை உணர்ச்சி பெருக வேண்டும். நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்க ஊழியர்களுடைய குறைகளை எந்த அளவுக்கு நிவர்த்தி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய கருத்தைச் சொல்லி, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன். ஜெய்ஹிந்த்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

1-30 p.m. The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

118. *Notification issued with G.O. Ms. No. 3941, Home, dated 18th December 1963 amending the Madras Distillery Rules, 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*

### B. Reports, Notifications and other papers.

Nil.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, 7th March 1964**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

**ரிசர்வ் காடுகளில் மரங்கள் வெட்டிக் கடத்தப்படல்**

*171 **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் நீலகிரி ஜில்லா, கூடலூர் தாலூகா ரிசர்வ் காடுகளிலிருந்து (தொரப்பள்ளி எஸ்டேட் பக்கம்) சுமார் 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தேக்கு, ரோஸ்வுட், வெந்தேக்கு மரங்கள் கள்ளத்தனமாக வெட்டப்பட்டுக் கடத்தப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், விவரமென்ன?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) No.

(b) Does not arise.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கூடலூர் தொரப்பள்ளியில் 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மரங்களைப் பக்கத்துத் தோட்டத்துக்காரர் வெட்டி யானையின்மேல் வைத்துக் கடத்திக் கேரளாவுக்குக் கொண்டு போய்விட்டதாகக் கூறப்படுகிறது. டிப்பார்ட்மெண்ட் மூலமாகக் கம்பவுண்டிங் பண்ணுவதாகச் சொல்லப்படுகிறது. இது பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள்?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** கேள்வியில் மூன்று லட்சம் ரூபாய் என்று சொல்லியிருப்பதைத் தான் நான் 'இல்லை' என்று சொன்னேன். ஆனால் கம்பவுண்டிங் பண்ணிக் கொடுத்த தொகை 19,900 ரூபாய்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** முதலில் District Forest Officer மதிப்பு போட்டு ஒரு லட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று கூறி அதற்குப் பிறகு 19,000 ரூபாயாகக் குறைக்கக் காரணம் என்ன?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** தோட்டத்துக்குச் சொந்தக்காரர் ஒருவர் வெட்டியிருக்கிறார். அவருக்குத்தான் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. மற்றவர்

[7th March 1964

களுக்கெல்லாம் 100 ரூபாய் விதம் 12 பேர்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 21,000 ரூபாய் கம்பவுண்டிங் போடப்பட்டிருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த விதமாக அநேக மரங்களை வெட்டி அந்த வழியில் கேரளாவுக்குக் கொண்டு போகிறார்கள். இப்போதுள்ள ஏற்பாட்டின்படி சௌக்கியை டவுனுக்குள் வைத்துக் கொண்டிருப்பதால், கூடலூருக்கு அந்தப் பக்கம் 30 மைல் தள்ளி பார்டர் இருப்பதால் கள்ளக் கடத்தலுக்கு வசதியாக இருக்கிறது. ஆகவே, கேரளா, தமிழ்நாடு பார்டரில் ஒரு சௌக்கியை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்போது வைத்திருக்கிற சௌக்கி நல்ல முறையில் வேலை செய்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனையைப் பரிசீலனை செய்து அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இவ்வாறு வெட்டப்பட்ட மரம் சர்க்கார் ரிசர்வ் பாரஸ்டில் இருந்ததாகும். சுமார் ஆறு மாத காலமாகவே அங்கிருந்து மரங்கள் வெட்டப்பட்டு யானையின்மேல் வைத்துக் கடத்திக்கொண்டு போனதாகச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் மூன்று லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள மரம் வெட்டப்பட்டுக் கடத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தில் பாதி டி.எப்.ஓ.க்கு லஞ்சமாகக் கொடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விசாரித்தார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அப்படி எந்த விதமான தகவலும் என்னிடத்தில் இல்லை. டி.எப்.ஓ. முயற்சியால்தான் கேஸ் கண்டுபிடிக்கப்பட்டு தோட்டச் சொந்தக்காரருக்குக் கம்பவுண்டிங் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** நீலகிரி ஜில்லாவில் கூடலூர் பகுதியில் பந்தலூர் தேவாலயத்திற்குச் சொந்தமான சுமார் 400 ஏக்கரில் Jungle பாரஸ்டை அழித்து ஒருவருக்குக் காண்ட்ராக்டுக்கு விடப்பட்டு மரங்கள் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிட்டு, பின்னர் அது முடியவில்லை என்று விடப்பட்டதன் காரணமாகப் பெருவாரியான நஷ்டம் ஏற்பட்டது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அதன் பேரில் சி.ஐ.டி. ரிப்போர்ட் கேட்கப்பட்டதா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. து. ப. அழகமுத்து :** வெட்டப்பட்ட மரங்களின் மொத்த கன அடி எவ்வளவு ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** வெட்டப்பட்ட மரங்களின் மதிப்பைக் கணக்கிட்டுதான் இந்த 'ஃபைன்' போடப்பட்டிருக்கிறது.



7th March 1964]

**திரு. பி. வி. சீராமுலு :** இந்த மாநிலத்தில் வேறு எந்த எந்த இடத்தில் இவ்வாறு கள்ளத்தனமாக மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன ?

MR. SPEAKER : That is a general question. How can the Hon. Minister give the answer to a general question? The hon. Member may put a specific question about this matter.

**திரு. து. ப. அழகமுத்து :** வெட்டப்பட்ட மரங்களின் மொத்த கன அடி எவ்வளவு ? எந்த ரேட்டின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** என்னிடம் அந்த விவரம் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** மரங்கள் வெட்டப்பட்ட செய்தி சர்க்காருக்கு எப்போது வந்தது ? சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டது எப்போது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்தத் தேதி பற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர் :** விறகு 'கூப்'கள் எடுக்கிறவர்கள் தங்கள் கூப்புகளைச் சுற்றியுள்ள சர்க்கார் காடுகளில் இருந்து ஏராளமாக விறகுகளைக் கொண்டு போய்விடுகிறார்கள். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சில இடங்களில் அந்த மாதிரிப் புகார்கள் இருக்கின்றன. பாரஸ்டர்கள், பாரஸ்ட் கார்டுகள் எல்லாம் இதற்கான நடவடிக்கைகளை நல்ல முறையில் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அந்த மாதிரி வெட்டிக் கொண்டு போகிறவர்களுக்கு சட்ட சபை உறுப்பினர்கள் சிபார்சு செய்யாமலிருந்தால் போதும்.

**திரு. ர. ஜீவரத்தினம் :** வட ஆற்காடு ஜில்லாவில் வேலூர் அருகில் உள்ள அமிர்தி காட்டில் கள்ளக்கடத்தல் புகார்கள் வந்து இருக்கின்றனவா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அங்கிருந்து புகார் வந்திருக்கிறது. அதற்காக திடீரென்று காரில் சென்று கண்காணிக்கக்கூடிய மொபைல் யூனிட் ஒன்றை வைத்திருக்கிறோம். அது டி.எப்.ஓ. பொறுப்பில் இருந்து வருகிறது. அவர்கள் உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நீலகிரியில் இந்தச் சம்பவம் நடந்து ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிறது. ஆனால் இப்போது போலீசார் சில நிரபராதிகளைப் பிடித்து கேஸ் போட்டுக்

கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரிப் புகார்க் கடிதங்களும் எனக்கு வந்திருக்கின்றன. கம்பவுண்டிங் போட்டதற்குமேல் போலீசார் இந்த மாதிரி நடவடிக்கை எடுக்கக் காரணம் என்ன?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்த மாதிரித் தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான காடுகளிலேயே மரத்தை வெட்டினால் 300, 500 என்று அபராதம் விதிக்கக்கூடிய நிலைமை இருக்கும்போது அரசாங்கக் காடுகளில் அத்தனை மரத்தையும் வெட்டும்வரை டி.எப்.ஓ.-வும் மற்ற அதிகாரிகளும் ஏன் எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்தக் கேள்விக்கு ஆரம்பத்திலிருந்தே, என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவை எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கிறேன். உதகை போன்ற மலைப் பகுதியில் மரங்களை வெட்ட ஆரம்பித்தால் அதன் அழகு போய்விடும் என்ற காரணத்தால்தான் தனியார் தங்களுக்குச் சொந்தமான தோட்டங்களில் மரத்தை வெட்டினாலும் அதைத் தடுப்பதற்கான சட்டத்தை வைத்திருக்கிறோம். அதேபோன்று ரிசர்வ் பாரஸ்டுகளிலும் மரத்தை வெட்டி விடாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** என் தொகுதியில் சேர்வராயன் மலையில் புறம்போக்கு மரங்களை வெட்டிக் கொண்டு போனதாக கர்ணம் சர்க்காருக்குத் தெரிவித்ததின் காரணமாக 30 பேர்கள் அவர்களை அடித்துத் தொல்லை கொடுத்தது சர்க்காருக்குத் தெரியுமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்த கர்ணபரமாத்மா பற்றி எனக்குத் தெரியாது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** வெட்டியவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பது ஒருபுறமிருக்க பார்த்துக் கொண்டிருந்த, இதுவரை சும்மாயிருந்த டி.எப்.ஓ. அவர்கள்மேல் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்? நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், அப்படி இருக்கக் காரணம் என்ன?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** டி.எப்.ஓ. பார்த்திருந்தார் என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கைகள் எடுத்திருப்பார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அமைச்சர் அவர்கள் ஒரு உப கேள்விக்குப் பதில் அளிக்கும்போது அந்தந்த சட்டசபைத் தொகுதி அங்கத்தினர்கள் சிபார்சு செய்யாமல் இருந்தால்





நல்லது என்று சொன்னார்கள். மரங்களை வெட்டக் கூடாது என்பதைத்தான் சிபார்சு செய்கிறார்களே தவிர வெட்டவேண்டுமென்று சொல்லவில்லை.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர், கனம் அமைச்சர் அவர்களுக்குப் பதில் சொல்கிறார்களா? கேள்வியைக் கேட்கலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அவ்விதமாக சிபார்சு செய்யாமல் இருந்தும்கூட, அதிகாரிகள் உடந்தையாக இருந்து அரசாங்கக் காடுகளில் இருந்து மரங்களை வெட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

[பதில் இல்லை.]

*Foreign Tour of State Police Officer*

* 172 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have granted permission to any State Police Officer to visit the United States of America, in November 1963;

(*b*) the purpose of the visit; and

(*c*) the expenditure incurred by the Government in the matter?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Inspector-General of Police, Madras, was permitted to leave India on earned leave from 21st October 1963 to 4th November 1963.

(*b*) Private.

(*c*) Nil.

**திரு. து. ப. அழகமுத்து :** எவ்வளவு நாட்கள் அவர்கள் லீவில் போயிருந்தார்கள்?

**கனம் சபாநாயகர் :** அதைத்தான் சொன்னார்களே.

**கனம் திரு. பூ. கக்கன் :** ப்ரைவேட் விஸிட் என்று சொன்னேன்.

*Madhavaram Dairy and Milk Project*

* 173 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any loss has been incurred by Madhavaram Dairy and Milk Project during the year 1961–62;

(*b*) if so, the reason therefor ; and

(*c*) the action taken to make good the loss?

[7th March 1964

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ஆம். 1961-62-ல் மாதவரம் பால்பண்ணைத் திட்டத்திற்கு ஏற்பட்ட நிகர நஷ்டம் ரூ. 14,16,086.

(இ) 1961-62-ல் ஏற்பட்ட நஷ்டத்திற்கு முக்கிய காரணங்கள்: பாலைப் பதப்படுத்துவதற்கு வசதிகள் இன்மையால் பால் அடிக்கடி கெட்டுப்போயிற்று. ஓரளவு பால், நெய், பாலடைக்கட்டி போன்ற உபபொருள்களாக மாற்றப்பட்டு வந்தது. இது தவிர அசல் தொகைக்கு 5½ சதவிதம் வட்டி ஒதுக்கப்பட்டதாலும் நஷ்டம் அதிகமாயிற்று.

(உ) மாதவரம் பால்பண்ணைத் திட்டத்தில் உள்ள மத்தியப் பண்ணை 28—1—1963 முதல் வேலை துவங்கியது. நாள் ஒன்றுக்கு 75,000 லிட்டர் பாலைப் பதப்படுத்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இதன் மூலம் பால் கெட்டுப்போவது குறைந்துவிட்டது. உபபொருள்களாக மாற்றுவதும் குறைந்துவிட்டது. பால் தயாரிப்பை அதிகப்படுத்துவது மூலமாகவும், கிராமக் கூட்டுறவு பால்வழங்கு சங்கங்களிலிருந்து பாலைச் சேகரிப்பது மூலமாகவும் பாலில் மொத்த உற்பத்தி அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது.

நஷ்டத்தைக் குறைப்பதற்காகவும், லாபமோ, நஷ்டமோ இன்றி இத் திட்டத்தை நடத்திவருவதற்காகவும், பாலின் விற்பனை விலை 1—10—1963 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

Sri C. CHIRANJEEVULU NAIDU : As the selling price of milk has been enhanced, has any representation been made by the sellers who have supplied milk to the project to enhance the price of milk supplied by them?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No such representation has been received.

**புலவர் கா. கோவிந்தன் :** சென்னையில் 96 பைசாவிற்கு விற்கப்படுகிற பால் வெளியில் 60 பைசாவிற்குத்தான் வாங்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இடையில் 36 பைசா வந்து வீணாக செலவு என்ற பெயரால் போடப்படுகிறது என்பது தெரியுமா? ஆகவே வாங்குகிற விலையைக் கூட்டி விற்கிற விலையைக் குறைக்க அரசு முன்வருமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** கூட்டுறவு சொஸைட்டியிலிருந்து வாங்குகிற பால் எருமைப் பாலுக்கு 62 பைசா என்றும் பசும்பாலுக்கு 55 பைசா என்றும் கொடுக்கப்படுகிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** நான் சொன்னதைவிடக் குறைவாக வாங்கியதாக கனம் அமைச்சர் கணக்கு கொடுக்கிறார்கள். விற்பது 96 பைசாவிற்கு என்பதை மறுக்கவில்லை. ஆகவே வாங்குகிற விலையைக் கூட்டி விற்கிற விலையைக் குறைக்க என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்?



7th March 1964]

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** வாங்குகிற விலைக்கும் விற்கிற விலைக்கும் இரண்டு பைசாதான் வித்தியாசம் இருக்கிறது. காலனியில் வாங்கும் பசும்பால் ஒரு லிட்டர் 80 பைசாவிற்கு வாங்கப்பட்டு, 82 பைசாவிற்கு விற்கப்படுகிறது. எருமைப் பால் 92-க்கு வாங்கப்பட்டு 94-க்கு விற்கப்படுகிறது. வெளியிலிருந்து வரும் பாலையும் இதே விலைக்குத்தான் கொடுக்கிறோம். டிரான்ஸ்போர்ட் சார்ஜ் போன்றவைகளை வைத்துப் பார்க்கும்போது இந்த வித்தியாசத்தில்தான் விற்க முடிகிறது. இப்படியிருந்தும் இவ்வளவு நஷ்டத்தில் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** வெளியிலிருந்து பால் கொண்டு வருவதால் ஒரு லிட்டருக்கு என்ன செலவாகிறது? ஈரோடு, கோவை போன்ற இடங்களில் இருந்து கொண்டு வர என்ன செலவாகிறது? கிராமப்புறங்களில் இருந்து கொண்டு வர என்ன செலவாகிறது?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** ஈரோட்டில் இருந்து ரெயில் மூலம் வந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றாகக் கணக்கு கொடுக்க என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

Sri C. CHIRANJEEVULU NAIDU : What are the areas that are covered by this project ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** விரிவான தகவல் என்னிடம் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** ஈரோடு, கோவை போன்ற தொலை இடங்களில் இருந்து வருகிற பாலுக்கு 3 பைசாவிலிருந்து 4 பைசா வரைதான் லிட்டருக்கு செலவாகிறது என்றிருக்க 30, 40 மைல்களுக்கு உள்ளாக இருக்கக்கூடிய இடங்களில் இருந்து வாங்குகிற பாலுக்கு 13 முதல் 15 பைசா வரை செலவு எனக் கணக்கு எழுதப்படுவதை அரசு அறியுமா? அந்த ஏற்றத்தாழ்வைப் போக்க அரசு முன்வருமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** மாதவரம் பால்பண்ணையிலிருந்து சப்ளை செய்யும் பாலில் பால் பாட்டிலில் மீன் குஞ்சு இருந்தது என்று சொல்கிறார்கள். அது எப்படி வந்தது? இந்த நஷ்டத்தை சரிக்கட்ட தண்ணீர் ஏதாவது கலந்தார்களா என அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** உயிரோடு இருந்ததா? செத்திருந்ததா?

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** உயிரோடு இருந்தது.

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** என்னிடம் அந்தப் புகார் வந்தது. மறுநாளே நான் ஒருவருக்கும் தெரியாமல் அங்கு சென்று பார்த்தேன். எந்தவிதமான சின்ன

[7th March 1964

தூசும் அங்கு போக முடியாது. மெஷினில் பாலை ஊற்றி பாஸ்டரைஸ் செய்து கை படாமலேயே பாட்டிலில் அடைத்து அனுப்புகிறார்கள். பாலை ஊற்றுகிற இடத்தில்தான் பார்க்க முடியும். நல்லபடியாக அடைத்து, நல்ல முறையில்தான் பாட்டில்கள் அனுப்பப்படுகின்றன. பாட்டிலில் அடைத்து லாரியில் ஏற்றி அனுப்புகிறார்கள். அப்படியிருக்க உயிரோடு மீன் இருந்தது என்று சொல்வது ஆசரியமாயிருக்கிறது. ஆகவே யாராவது கொண்டு போகிறவர் "மிஸ்சீப்" செய்திருக்கவேண்டும்.

### *Foreign Tours of Ministers*

* 174 Q.—Sri MUNU ADHI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Ministers and the places visited by them abroad during the years 1957—1962;

(b) whether these visits were made at the expense of the concerned Ministers or of the Government; and

(c) if the expenditure is met by the Government, the amount of expenditure so incurred?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) Three Ministers went abroad during 1957–1962. Sri R. Venkataraman, Minister for Industries, proceeded to Geneva in 1957, as a Member of United Nations Administrative Tribunal and in 1958 as Leader of the Indian Delegation to attend the 42nd Session of the International Labour Conference. He also proceeded to New York during the previous years 1958, 1959, 1960 and 1961 to attend the United Nations General Assembly.

Sri M. Bhaktavatsalam, who was previously Minister for Finance and now the Chief Minister, visited the Soviet Union in July 1960. Sri C. Subramaniam, the previous Minister for Finance, visited the United Kingdom in September 1960 and United States of America in 1961. On his way back, he visited West Germany, France, Switzerland and Italy in 1960 and Union of Soviet Socialist Republic, Canada, Japan, Hongkong and Singapore in 1961.

(b) No expenditure was incurred by the State Government in connection with the visits of Sri R. Venkataraman and Sri M. Bhaktavatsalam. Sri C. Subramaniam visited the United Kingdom in 1960 at the invitation of the Government of United Kingdom and the United States of America at the invitation of that Government in 1961.

(c) The expenditure incurred by the State Government in respect of Sri C. Subramaniam's visit abroad is Rs. 4,466.12 nP.



7th March 1964]

* 175 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராக கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் ஆண்டுதோறும் செல்லும்போது ஏற்படுகின்ற அவர்களது செலவினை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்கிறதா? அல்லது மாநில அரசு ஏற்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: This State Government does not bear any expenditure in connection with the visit of Sri R. Venkataraman, Minister for Industries, to the United Nations Organization.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தமிழக சட்டசபை அங்கத்தினர்களைக் பாராளுமன்ற தூதுகோஷ்டி என்ற முறையில் வெளிநாடுகளுக்கு போய்வர சர்க்கார் வசதி செய்து கொடுக்குமா? ஆம் என்றால் எப்போது? இல்லையென்றால் என்ன காரணம்?

(சில அங்கத்தினர்கள் கை தட்டினார்கள்.)

Mr. SPEAKER : Members should not clap hands.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இத்தகைய யோசனை ஒன்றும் இப்போது அரசாங்கத்தினிடத்தில் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸார், நம்முடைய மாகாணத்தில் சிறு தொழில்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு, அயல் நாடுகளில் எம்மாதிரி சிறு தொழில்கள் எல்லாம் நடக்கின்றன என்பதை போய்ப் பார்த்து வருவதற்காக நமது தொழில் அமைச்சர் அவர்களை அடிக்கடி வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நமது தொழில் அமைச்சர் அவர்கள் வேறு அலுவல்கள் நிமித்தமாக வெளிநாடுகளுக்கு செல்லும்போதெல்லாம், அயல்நாடுகளில் சிறு தொழில்கள் மட்டுமல்ல, பெரிய தொழில்கள் இவைகளினுடைய வளர்ச்சியைப்பற்றி கவனம் செலுத்தி வருகிறார்கள். அவ்வாறு கவனம் செலுத்துவதால் அதே முறையை எந்த அளவுக்கு இந்த நாட்டில் அமலாக்க முடியும் என்பதைப்பற்றி ஆலோசிப்பதற்கு வசதியாக இருக்கிறது.

### அரிசனங்களுக்கான பால் சொசைட்டிகள்

* 176 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் அரிசனங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பால் சொசைட்டிகள் எத்தனை, ஜில்லாவாரியாக?

The Hon. Sri P. KAKKAN: A statement [a] is placed on the Table of the House.

---

[a] Printed as Appendix on page 499 infra

[7th March 1964

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, மேஜை மீது வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் 122 சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 122 சொஸைட்டிகளில் இன்னும் பல சொஸைட்டிகளுக்கு ஷெட் போடுவதற்கான 4,000 ரூபாய் மான்யத் தொகை இன்னும் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பால் வினியோக சப்ளை சொஸைட்டிகள் ஏற்படுத்துவதற்கு முதலில் அரசாங்கம் 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கியது. இப்போது இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் பணநெருக்கடிதான் காரணம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, இன்னும் பல சொஸைட்டிகளிலிருந்து ப்ரபோசல்களை அனுப்பியிருந்தும் அவைகள் ஸாங்ஷன் செய்யப்படாமல் இருக்கின்றன. இதற்கு வேண்டிய பணத்தைச் செலுத்தி மூன்று வருடம் மூன்றரை வருடம் ஆகிறது. இன்னும் ஸாங்ஷன் கொடுக்கவில்லை. ஆகவே இதற்குத் தனியாகப் பணத்தை ஒதுக்கி உடனடியாக ஸாங்ஷன் செய்து இவைகளுக்குக் கொடுக்க வேண்டிய ரூ. 4,000 மான்யத் தொகையை கொடுப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எவ்வளவு சீக்கிரமாக ஸாங்ஷன் செய்து நிதி ஒதுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தலைவர் அவர்களே, பால் வழங்கும் சங்கத்தில் மாடுகளை வாங்குவதற்காக அரிஜனங்களுக்குப் பாதித்தொகை மான்யமாக கொடுப்பது என்கின்ற ஒரு திட்டம் இருந்தது. இந்தத் திட்டம் அரிஜனங்களுக்குப் பெரும் உதவியாக இருப்பதால் அவர்களுக்கு வேண்டிய தொகையை மான்யமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போதும் பசு மாடு வாங்குவதற்காக 250 ரூபாய் கடனாகவும் மான்யமாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் இப்போது அமலில் இருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** இப்போது ஆங்காங்கு பல பால் சொஸைட்டிகள் பெருகியிருக்கின்றன. இதைக்கண்டு அரிஜன மக்களும் தங்கள் காலனிகளில் இம்மாதிரி சொஸைட்டிகளை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் இதற்கான பங்குத் தொகை செலுத்த முடியாமல் தயங்குகிறார்கள். ஆகவே இதற்கான பண உதவியை அரசாங்கம் செய்து கொடுக்க வழிவகை செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதில் கொடுக்கவேண்டிய பங்குத் தொகை மிகவும் சொற்பம். இதைக் கொடுக்க முடியவில்லை என்றால் பால் பண்ணையை ஏற்படுத்த முடியாது. ஆகவே இதைக் கொடுத்துத்தான் தீரவேண்டும்.



7th March 1964]

## சட்டப்பேரவை, நகராட்சிமன்ற அங்கத்தினர்களின் சொத்து

*177 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சட்டசபை மெம்பர்களாகவும் சட்டமன்ற மெம்பர்களாகவும் நகராட்சி மன்ற உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படுபவர்களிடமிருந்து அவர்களுடைய சொத்தின் மதிப்பைக் கணக்கெடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : The Government have no such intention.

**திரு. செ. மாதவன் :** அரசியலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் அவர்களுடைய அதிகாரத்தை உபயோகித்து தங்கள் சொத்தை பெருக்கிக்கொள்கிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டு நாட்டில் பரவலாக இருக்கிறது. ஆகவே இதை அறிந்து கொள்ளுகின்ற வகையில் ஒரு சட்டம் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது பரவலாக இருக்கிறது என்று நான் கருதவில்லை. வேண்டுமென்றால் சிற்சில இடங்களில், சிற்சில துறைகளில் இந்த எண்ணம் இருப்பதாகக் கூறலாம். தற்போது இந்த மாநில அரசாங்கத்திற்கு இம்மாதிரியான ஒரு சட்டம் கொண்டு வருவதாக உத்தேசமில்லை.

**திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, அரசாங்க அதிகாரிகள் தங்களுடைய சொத்துக்களைப்பற்றி விவரம் கொடுக்க வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறது. அந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற அங்கத்தினர்களுடைய சொத்துக்களையும் கணக்கெடுக்கவேண்டும். என்ற ஒரு விதியைக் கொண்டு வருவதற்கு சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய உத்தேசம் இப்போது அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஸார், தற்போது நியமித்திருக்கின்ற லஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரி, பொதுஜனப் பிரதிநிதிகள் லஞ்சம் முதலிய குற்றங்களைப் புரிந்தால், அவர்களை விசாரிப்பதற்கு இந்த அதிகாரிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் தலைவர் அவர்களே, எங்கு லஞ்சம் இருந்தாலும், அதை விசாரிப்பதற்கு இந்த அதிகாரிக்கு வாய்ப்புண்டு.

**திரு. அ. சேனாபதி கவுண்டர் :** தலைவர் அவர்களே, சொத்து மதிப்பீட்டுக்கு விதி இருக்க வேண்டும் என்று சொல்வதைப் பார்த்தால், அரசியலுக்காகத் தங்கள் சொத்தை இழந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசியல் தியாகிகளுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இதற்காக சட்டம் கொண்டு வரப்போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இருந்தாலும் கொள்கை அளவிலாவது இம் மாதிரி ஒரு விதி இருக்கவேண்டும் என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதில் கொள்கை அளவு ஒன்றும் இல்லை. காங்கிரஸ் கட்சி இதைப்பற்றிக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

## பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்

*178 கேள்வி.—**திரு. மு. பொ. வடிவேல் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களில் சிலர் சட்டசபை அங்கத் தினராகவும் இருப்பதால் சட்டசபைக் கூட்டம் நடக்கும்போது தலைவர், தலைமை இடத்தில் இல்லாத காரணத்தால் அவரின் கையொப்பம் பெறமுடியாத நிலையில் சில வேலைகள் தடைபடுவ தால் தலைவரின் எழுத்தரை அந்தக் காலங்களில் மட்டும் சென்னைக்கு அனுப்பி அவசரக் கடிதங்களைத் தலைவர் பார்வையிட அனுமதி தர விதிகளைத் திருத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அத்தகைய உத்தேசம் எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Government consider the desirability of so amending the Act as to prohibit M.L.As from contesting as chairmen of panchayat union councils and presidents of panchayats?

THE HON. SRI S. M. A. MAJID : No, Sir.

## *Village Courts*

*179 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties and hardships of the public in view of the fact that Village Courts do not function; and

(*b*) if so, whether there is any proposal to vest powers in the Village Headmen as per the Panchayats Act, 1958?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :**

(அ) ஆம்.

(இ) அத்தகைய உத்தேசம் எதுவும் இல்லை.



**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** 1958-ம் வருடத்திய பஞ்சா யத்து சட்டத்தில் இந்த வில்லேஜ் கோர்ட்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை அதிகரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால் இது அமலுக்கு வரவில்லை. இவ்விதம் அதிகாரம் கொடுத்தால்தான் கிராமத்திலுள்ள ஏழை மக்கள் தங்கள் வழக்கு களைப் போடுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதைப்பற்றி தனியாகக் கேட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, பழைய பஞ்சாயத்து சட்டப்படி பஞ்சாயத்துக்களுக்கு வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது அது அமலில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இப்போது இந்த விஷயத் தில் அரசாங்கத்தின் கொள்கை மாறிவிட்டதா ? அல்லது பஞ்சா யத்துக்களே இதை விசாரிக்கலாம் என்ற கருத்தை ஏற்றுக்கொள் கிறதா ? அப்படியென்றால் இதை எப்போது நிறைவேற்றும் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** ஸார், பஞ்சாயத்து யூனியன் வந்த பிறகு ஒரு சில மாறுதல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. வேறு சில விவரங்களுக்கும் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் கிடைத்த பின்னர் தான் முடிவு செய்யப்படும்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள் வழக்குகளை விசாரிக்கலாம் என்று இருந்தது. அந்தக் கொள் கையை இப்போது அரசாங்கம் கைவிட்டு விட்டதா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதெல்லாம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. இரா. நாராயணன் :** தலைவர் அவர்களே, இப்போது இந்த மாதிரி சிவில் வழக்குகளைக் கிராமப் பஞ்சாயத்துகள் நடத்தலாம் என்று இருந்து வந்ததை கிராம முன்சீப்களிடம் ஒப்படைத்து விசாரிக்கலாம் என்று உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால் சட்டத்தில் கிராம முன்சீப் தனியாக விசாரிக்க முடியாது என்று கிராம ஆக்டில் இருக்கிறது. இதன் காரணமாக இப்போது பெருவாரியாக ஏழை மக்கள் இந்த வழக்குகளின் வசதியை பயன்படுத்திக்கொள்ள முடியாமல், தங்கள் வழக்குகளைத் தொடர முடியாமலும் இருக்கிறார்கள். ஆகவே சட்டப்படி இதற்கான பஞ்சாயத்து கோர்ட் எப்போது அமைக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதைப்பற்றி கூடுதல் விவரங்கள் அறிய வேண்டுமானால், கனம் அங்கத்தினர் அவர்கள் நமது முதல் அமைச்சர் அவர்களுக்கும், லா-மினிஸ்டர் அவர்களுக்கும் தனியாகக் கேள்வி போட வேண்டும். 9-00 a.m.

[7th March 1964

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, வில்லேஜ் கோர்ட்ஸுக்கு பவர் கொடுக்கவேண்டுமென்று சட்டம் மாநிலத்தில் இருக்கிறதா? அந்தச் சட்டத்தின் கதி என்ன ஆகியது?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதைப் பற்றி கனம் சட்ட அமைச்சருக்கு தனிக் கேள்வி போடலாம்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நம் உணவு அமைச்சர் முதல் அமைச்சரைப் பார்க்கிறார்கள். நான் முதல் அமைச்சரைக் கேட்கிறேன். வழக்கு மன்றங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக பண அளவில் ஜுரிஸ்டிக்ஷனைப் பஞ்சாயத்து யூனியனுக்கு கொடுப்பது சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது அரசாங்கத்தின் கொள்கையாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தக் கொள்கை இப்போது மாறியிருக்கிறதா? அதை அமலுக்குக் கொண்டு வர அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது உள்ள சட்டத்தில் அம்மாதிரி ஒப்புக்கொள்ளப்படவில்லை என்று கூறுவேன். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுப்பது சரியல்ல என்பது என்னுடைய கருத்து. அரசாங்கத்தின் கருத்தும் அதுதான்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, 50 ரூபாய்க்கு மேற்பட்ட தொகையாக இருந்தால் தான் முன்சீப் கோர்ட்டில் போடலாம். அதற்குக் குறைந்து இருந்தால் பஞ்சாயத்து கோர்ட்டில்தான் போட வேண்டும். இப்போது பஞ்சாயத்து கோர்ட்டும் கிடையாது. எந்தக் கோர்ட்டுக்கு அவர்கள் செல்ல வேண்டும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது கிராம முன்சீப் கோர்ட்டுக்கு அந்த ஜுரிஸ்டிக்ஷன் இருக்கிறது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஸார், கனம் அமைச்சர் அவர்கள் கிராம முன்சீப் கோர்ட்டுக்கு பவர் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இப்போது ஏழை மக்கள் சூட்களைப் போட டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்குப் போகவேண்டியிருப்பதால் மிகவும் செலவு ஏற்படுகிறது. ஆகையால், கிராம முன்சீப்களுக்கு பவர் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? அல்லது பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை நிறுவ அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா?

**கனம் திரு. எம். பக்வத்சலம் :** இப்போதைய சட்டப்படி பஞ்சாயத்துக்கு இந்த அதிகாரம் இல்லை. இந்த அதிகாரத்தைக் கிராம முன்சீப்புக்குக் கொடுப்பது என்று இப்போது இருக்கிறது.

### *Teachers' Constituencies in the Legislative Council*

* 180 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are in favour of abolishing Teachers' Constituencies in the Legislative Council;



7th March 1964]

(*b*) whether they have intimated the Union Government to that effect; and

(*c*) if so, the reasons therefor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : Yes.

(*c*) The Government regret that they cannot disclose the reasons at this stage when the matter is under the consideration of the Government of India.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஸார், ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் சட்ட மன்றத்திலே அங்கத்தினராக இருப்பதன் மூலம் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருந்தது. அந்த வாய்ப்பினை மேலும் உண்டாக்குவதற்காக நம் அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலுமாவது ஆசிரியர் தொகுதிகளை நீடிக்கலாம் என்று அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. இராம அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குக் கூட இடம் வேண்டுமென்று அரசாங்கத்திற்கு அவர்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆரம்ப ஆசிரியர்கள் கூட வேண்டுமென்று கூறுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, சமுதாயத்தில் ஆசிரியர்கள் நிலை மிகவும் சிறப்புடைய நிலை ஆகும். அப்படிப்பட்ட ஆசிரியர்களுடைய அறிவுரை கேட்டு நடக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதையொட்டித்தான் மேல் சபையில் அவர்களுக்கு இடம் இருந்து வந்திருக்கிறது. அதை நீக்க அரசாங்கம் ஏன் கருத்தைத் தெரிவித்திருக்கிறது என்று தெரியவில்லை. ஆசிரியர்கள் பெரும்பாலும் வெற்றி பெறுகிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகச் சார்புடையவர்கள் வந்துவிடுகிறார்கள் என்று அந்தக் காரணமாகத்தான் இதைக் கைவிட அரசாங்கம் முன் வந்திருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் வேண்டுமானால் பெருமைகொள்ளலாம். அப்படி ஒன்றும் இல்லை. அந்த அச்சம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆசிரியர் தொழில் போல வேறு தொழில்கள் இருக்கின்றன. ஆசிரியர்கள் தொழிலுக்கு மட்டும் தனியாகப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்பது இப்போது இருக்கும் கருத்து.

**திரு. ஏ. ஆறுமுகம் :** என்.ஜி.ஓ.-க்களுடைய பிரதிநிதி ஒருவர் யாராவது ஒருவர் சட்ட மன்றத்திற்கு வர ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

[7th March 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதற்குச் சட்டம் இடம் தரவில்லை. அத்தகைய உத்தேசமும் அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** நமது மாகாணத்தில் 15,000 கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்காக ஒருவரும் சட்ட மன்றத்தில் பேச இல்லாமல் இருப்பதால் அவர்களுக்காக பிரதிநிதித்துவம் கொடுக்க மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கிராம அதிகாரிகளுக்காகப் பேசக் கூடிய கனம் உறுப்பினர்கள் இல்லை என்று சொல்லுவதை நான் பலமாக மறுக்கிறேன். இங்கே உள்ள உறுப்பினர்கள் யாவரும் கிராம அதிகாரிகள் விஷயத்தில் அக்கறை கொண்டவர்கள் தான்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் வல்லுநர்கள், நிபுணர்கள் அடங்கிய அவையாக இருப்பதே மேல் அவை என்று கூறப்படுகிறது. இந்த மன்றத்திலே நிறைவேற்றப்படுகிற பல்வேறு சட்டங்களை மேற்கொண்டு தெளிவு படுத்த நல்ல வல்லுநர்கள் அமைந்த அவையாக மேலவை இருக்கிறது. பல்வேறு துறைகளில் இருக்கிறவர்களுடைய கருத்துக்களைக் கேட்டுப் பயன் அடையக்கூடிய அவையாக அது இருக்கிறது. ஆசிரியர்கள், மற்றத் தொழிலாளர்கள் ஆகியவர்களுடைய கருத்துக்களை நேரடியாகக் கேட்டு அறியக் கூடிய வகையில் இந்தத் துறைகளுக்குப் பிரதிநிதித்துவம் ஏற்படுவது நல்லது. ஆகையால்தான் நியமன முறையில் நிபுணர்களை நியமிக்கிறார்கள். அந்த நிலை இருப்பது நல்லதல்லவா? அரசாங்கம் இப்போது கைவிடுவதாக இருந்தாலும் இதைப் பற்றி மேலும் யோசித்து அந்த முறையை நிலைநாட்ட அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு எம். பக்தவத்சலம்:** மேல் சபை மிகவும் உபயோககரமாக இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை நான் முன்பு கூறியது போல, ஆசிரியர் தொழில் என்பது ஒன்று. ஒரு தொழிலுக்கு மட்டுமல்லாமல் பல தொழில்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும். அப்படி எல்லாத் தொழில்களும் பிரதிநிதித்துவம் அளிப்பது என்பது சாத்தியமல்ல. அதை அறிந்துதான் ஒரு தொழிலுக்கு மட்டும் வேண்டாம் என்று கருதப்படுகிறது. சட்ட மன்ற அங்கத்தினர்கள் எல்லாரையும் பிரதிபலிக்கிறவர்கள் இப்படி எல்லாரையும் பிரதிபலிக்கக் கூடிய அங்கத்தினர்களின் பிரதிநிதிகள் அங்கே மேல் சபையில் இருக்கிறார்கள்.

**திரு. இராம அரங்கண்ணல்:** அப்படியானால் மேல் சபையையே எடுத்து விட உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்போது தான் கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள், நானும் கூறினேன் ஒத்துக் கொண்டு. மேல் சபை உபயோககரமாக இருக்கிறது. அதை எடுத்துவிடும் உத்தேசம் இல்லை.



7th March 1964]

**கனம் சபாநாயகர்:** ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்றவுடன் சபையையே எடுத்து விடலாம் என்று சொல்லுகிறார்கள் போல இருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன்:** அம்மாதிரி இன்னும் பல துறைகள் இருக்கின்றன, அவைகளுக்கு இடம் தரவேண்டும் என்ற காரணத்தினால் ஆசிரியர் துறையில் இருக்கிறவர்களுக்கு இடம் இல்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு இடம் இல்லை என்று இவர்களுடைய இடத்தைப் பறிக்கவேண்டாம். அவர்களுக்கும் இடம் தர ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எல்லாத் தொழில்களுக்கும் இடம் அளிப்பது என்பது சாத்தியமல்ல. சட்ட சபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் எல்லாத் தொழில்களையும் பிரதிபலிப்பார்கள் என்பது தான் இப்போது உள்ள கருத்து.

**திரு. இராம அரங்கண்ணல்:** பட்டதாரிகள் சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் இடம் இருக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதை எடுத்து விடுவதாக இப்போது ஒன்றும் உத்தேசம் இல்லை.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** ஆசிரியர்கள் தொழிலை ஒரு தொழில் என்று கணக்கிடாமல் சமுதாயத்தை உருவாக்குகிறவர்கள் ( "Teachers are the makers of a Nation" ) என்ற முறையில் சமுதாயத்தை உருவாக்குகிறவர்களாக இருக்கிற காரணத்தினால் தொழிலை அடிப்படையாக வைக்காமல் சமுதாயத்தை அடிப்படையாக வைத்து அவர்களுக்கு இடம் அளிக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆசிரியர்கள் சமுதாயத்தை உருவாக்குகிறவர்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு இந்தச் சமுதாயத்தை உருவாக்குவதில் சட்ட மன்றத்தின் மூலம் பணி செய்ய வேண்டிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

**திரு. மு. கருணாநிதி:** இப்போது நீக்கப்படுகிற ஆசிரியர் தொகுதி வேறு எந்தத் தொகுதியோடு இணைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது எல்லாம் மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஒருக்கால் கிராஜுவேட் தொகுதியை இன்னும் அதிகப்படுத்தலாம்.

**திரு. க. ர. நல்லசிவம்:** மேல் சபையில் தற்போது பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய ஆசிரியர் தொகுதியை ரத்து செய்து விட்டால் மேல் சபையிலே சந்தர்ப்பம் கொடுக்க முடியாவிட்டாலும், அவர்

[7th March 1964

களுடைய ஆலோசனைகளைப் பெறக் கூடிய முறையில் அவர்களைக் கொண்ட அட்வைஸரி கமிட்டிகளையாவது வைக்க அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப் பற்றி முடிவு ஏற்பட்டு ஆசிரியர் தொகுதி ரத்து செய்யப்படுமானால் வேறு என்ன செய்யக் கூடும் என்பது பின்னால் யோசிக்க வேண்டிய விஷயம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஆசிரியர் தொகுதியை நீக்கிவிடுவது என்ற பிரச்னை முக்கியமான பிரச்னையாக இருப்பதால் அதைப் பற்றி விவாதிக்க ஒரு வாய்ப்பு இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திருத்தச் சட்டம் பார்லிமெண்டிலே வரவேண்டும். அந்தச் சட்டம் இங்கேயும் வரும். அப்போது எல்லோரும் பேசலாம்.

**திரு. ப. உ. சண்முகம் :** ஆசிரியர்கள் தொகுதி ரத்து செய்யப்பட்ட பிறகு பட்டதாரிகள் தொகுதி விரிவுபடுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி விரிவுபடுத்தும் நேரத்தில் ஆசிரியர்கள் பட்டதாரிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஓட்டுப் போடும் உரிமை வழங்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியப் பட்டதாரிகளெல்லாம் ஓட்டுரிமை பெறுவது மட்டுமல்லாமல் அவர்களே முக்கியத்துவம் பெறுவார்கள் என்று நான் கூறுவேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** தலைவர் அவர்களே, மற்ற தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டம் பயன்படுகிறது. ஆனால், ஆசிரியர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு அந்தப் பாதுகாப்புச் சட்டம் பயன்படுவதில்லை. ஆகையினால், ஆசிரியர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகுதியை அப்படியே விட்டுவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு இருக்கிறது. ஆகையினால், அதை ஒட்டி பிரதிநிதித்துவத்தை வைத்துக் கொள்ளவேண்டும் என்ற நியதி இல்லை.

**திரு. இரா நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற தொகுதியை நீக்கிவிடவேண்டும் என்ற யோசனை மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா அல்லது மாநில அரசாங்கம் இந்த யோசனையை மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மத்திய அரசாங்கத்திலிருந்து தான் இந்த யோசனை வந்திருக்கிறது. அவர்களுக்கு யார் தெரிவித்தார்களோ எனக்குத் தெரியாது. அந்த யோசனைக்கு ஆட்சேபம் இல்லை என்று இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறது.



7th March 1964]

**திரு. ஆர். ரெங்கசாமி :** ஆசிரியர் தொகுதியை நீக்கிவிட்டு பட்டதாரி தொகுதி இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பட்டதாரிகளாக இருக்கக்கூடிய வாத்தியார்கள் வோட்டு அளிக்கலாம் என்று சொன்னார்கள். ஜனநாயக ரீதியிலே சாதாரணமாக செகண்டரி ஸ்கூல் ஆசிரியர்களும் அந்தத் தொகுதியில் வோட்டு அளிக்கக்கூடிய முறையில் அந்தத் தொகுதியை மாற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பட்டதாரி தொகுதியில் வோட்டு அளிப்பதற்குப் பட்டதாரியாக இருக்கவேண்டும். ஆசிரியர்களிலும் பல பட்டதாரிகள் இருக்கிறார்கள். தமிழ்ப் பண்டிதர்கள் கூடப் பட்டதாரிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அதில் வோட்டு அளிப்பதற்கு இடம் இருக்கும்.

**கனம் சபாநாயகர்:** கேள்விகள் முடிவடைந்தன.

**[ Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—GOVERNMENT MOTION.

### CHANGE IN THE ORDER OF BUSINESS.

Mr. SPEAKER : The Hon. Chief Minister may now move for the change in the order of Demands for Grants.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I move—

" *That—*

*Demand IX—District Administration and Miscellaneous;*

*Demand XXXII—Pensions ;*

*Demand XXXIII—Miscellaneous ;*

*Demand XXXVI—Other Miscellaneous Contributions and Assignments ;*

*Demand XLV—Commuted Value of Pensions ; and*

*Demand XLVII*—Loans and Advances by State Government ; scheduled to be taken up on 14th March 1964 be taken up on 10th March 1964 and that Demand XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes scheduled to be taken up on 10th March 1964 be taken up on 14th March 1964.

கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய சௌகரியத்தை ஒட்டி இந்தப் பிரேரபணையைப் பிரேரேபித்திருக்கிறேன். முதலில் நான் டெல்லிக்குப் 10-ம் தேதி செல்வதாக இருந்தது. அந்தத் திட்டம் இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. 11-ம் தேதி சென்று. 14-ம் தேதிதான் வரமுடியும். ஆகையினாலே இந்தப் பிரேரபணையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

The motion was put and carried.

[7th March 1964

### III. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964–65.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, I would like to say a few words on the budget estimate for 1964–65, which is presented before this House. The Hon. Chief Minister while presenting the budget to this House said that the budget has been prepared taking into account the long-term interests of the State. It is true that the interests of the State are to-day safeguarded to the extent possible with the revenues at our disposal. Whenever a budget is presented it is generally welcomed when there are no taxation measures and when certain relief measures are announced. As regards the additional taxation proposed in the present budget for cotton yarn, the Hon. Chief Minister has assured that it would not affect the handloom industry. To that extent we are happy and the same assurance should be implemented so that handloom industry and the weavers would not be affected by the taxation imposed to-day. Generally the provisions made for capital work is a thing which go a long way in the improvement of the State. The expenditure on capital works and amount allotted under capital outlay would go a long way for improving the State's progress and development; thereby the entire villages might develop. To-day we see the progress the State has made in the matter of capital works. There has been a steady progress and an increase of expenditure from Rs. 18 to Rs. 22 to Rs. 24 crores in that direction. To-day a sizable amount has been allotted for capital expenditure and the amount spent on capital works would be a boon to the State and that would go a long way for augmenting our future resources and development of the State.

The important thing to-day is that there had been an announcement in the Budget regarding social security measures. To-day most of the minds are agitated over the way in which certain newspapers are writing articles and cinemas being produced and are being shown which would mislead the minds of the younger generation. The Government should take steps to see that the younger generation is not misled and that proper cinemas are produced which would educate rather than exploit the minds of younger generation. At present the students' mind become agitated by these cinemas and Government should take steps to see that our country's prestige is safeguarded. Government should take early steps to see that the interests of the younger generation are taken particular care of and that they are led on correct lines so that the State also might progress on proper lines.

Regarding language policy I want to say a few words. It might be a party question but the policy adopted by this Government in regard to 'Hindi' leaves much to be discussed. It has done the greatest dis-service to the students. Saying that students might study 'Hindi', but that they need not get any stipulated pass marks and that even if they could get 'zero' they would pass the examination, is not at all good. That gives a sort of notion in the young minds of children that whether he studies



7th March 1964] [Sri C. Chiranjeevulu Naidu]

or not, whether he gets marks or not, he would pass. That is not a healthy thing. Either you try to develop Hindi as a national language and say that the children should study it compulsorily and that they should get prescribed marks for a pass in the examination or say that they need not study Hindi at all. Protogonists and anti-protogonists of Hindi are also there. I would request the Government to prescribe some standard for a pass so far as Hindi is concerned. It is a very important thing that Government should see that something is done in this direction.

Regarding my constituency I would like to say a few words. Tiruttani is a pilgrim centre. A water-supply scheme has been there for a long time for that area and it is still pending with Government. Large number of pilgrims come there and there is no proper water-supply. I thought that the scheme would have been sanctioned and included in the present Budget. I would request that the drinking water-supply scheme, as well as construction of taluk headquarters hospital might be pursued and sanctioned. River bridges over Kushesthali river near Pallipat Kanakammachatram and Nellatoor villages in Tiruttani taluk may be taken up which are pending with the Government for a long time. With these words, I conclude my speech. Thank you, Sir.

* திரு. மு. கருணாநிதி: சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப்பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிற எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னதோடு, இந்த வரவு செலவுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்படாததும், நிவாரணம் அளிக்கப்படாததுமான பல பிரச்னைகளை இந்த மன்றத்தின் முன்னே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பஞ்சப்படியை உயர்த்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிற என்.ஜி.ஓ. பிரச்னையை அலட்சியப் படுத்தியது பற்றியும், மத்திய அரசு, மாநில அரசு ஊழியர்களுடைய ஊதியத்திலே இருக்கிற ஏற்றத்தாழ்வு குறித்தும், கல்விப் பிரச்னையைப்பற்றி பக்கம் பக்கமாக இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆசிரியர்களுடைய நிலை உயர்வதற்கு உகந்த வழிகள் பற்றி ஒரு வரிகூட இந்த வரவு செலவுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்படாததற்காக வருத்தம் தெரிவித்தும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டிய பிரச்னை குறித்து இந்த மன்றத்திலே பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்களுக்குக் கட்டித்தருவது போல ஆசியர்களுக்கும் கிராமங்களிலே வீடுகள் கட்டித்தரவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இந்த மன்றத்திலே எடுத்து வைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த வரவு செலவு திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று எண்ணியோ என்னவோ சட்டமன்ற உறுப்பினர்களுடைய தங்கும் இடத்திற்கு ரூ. 40 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்கிற

செய்தி காணப்படுகிறது. ரூ. 40 லட்சம் செலவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தங்கும் விடுதி இவ்வளவு அவசரம், அவசியமாகக் கட்டப்பட வேண்டியதுதானா என்பது விவாதத்திற்கு உரிய பிரச்னையாகும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப்பற்றித் திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவித்தால் அதை வைத்துக் கொண்டு நாங்கள் புனராலோசனை செய்யத் தயாராய் இருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி:** நான் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதிக்கு வசதி தேவையில்லை என்று திட்டவட்டமாக அறிவிப்பேன் என்றும், அதன் மூலமாக என் மீது சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் ஒரு விரோத உணர்ச்சியை ஏற்படுத்தலாம் என்றும் நினைத்து, தனக்கே உரிய சாதுரியமான பாணியில் அமைச்சர் அவர்கள் என்னை மடக்கப்பார்க்கிறார்கள் போலும் (சிரிப்பு). ரூ. 40 லட்சம் என்கிற அதிகத் தொகை இதற்கு தேவையில்லை. பெரும்பான்மையான அளவுக்கு அந்தத் தொகையைக் குறைக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஏனென்றால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒரு இடத்தில், தஞ்சையிலுள்ள மருத்துவக் கல்லூரிக்கு 400 கட்டில்களைக் கொண்ட ஒரு மருத்துவமனை அமைக்கிற செய்தியை நான் படிக்கிறேன். தஞ்சை மருத்துவ மனையிலாகட்டும் வேறு பல மருத்துவ மனைகளில் ஆகட்டும் நோயாளிகளுக்கான வசதிகளைக் கண்காணிக்கிற நேரத்தில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் கட்டிலில் படுப்பதற்கு வழி இல்லாமல் தாழ்வாரங்களிலே கீழே தள்ளப்பட்டிருக்கும் உருக்கமான காட்சியை நாம் காணத் தவறுவது இல்லை. அப்படிப்பட்ட மருத்துவ மனைகளில் 400 கட்டில்கள் என்பதை 600 கட்டில்கள் ஆக்குவதற்கும், தஞ்சையில் மட்டும் அல்லாமல் அவதிக்குள்ளாகியிருக்கிற பல்வேறு மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு வசதி செய்யவும், இந்தப் பணத்தில் பெரும் பகுதியை செலவழிக்கலாம். நானூறு கட்டில்களை விஸ்தரிப்பதற்கு ரூ. 5 லட்சம் செலவழிக்கப்படுகிறது என்றால், இன்னும் 10 லட்சம் செலவழித்து இருமடங்கு வசதிகளை நோயாளிகளுக்குச் செய்து கொடுக்கலாம். இப்பொழுதிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களின் வசதிகளை ஓர் அளவிற்குப் பெருக்கினால் போதும், ரூ. 40 லட்சம் அதற்காகச் செலவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வரவு செலவுத் திட்டத்தில் விலைவாசி உயர்வு பற்றி அமைச்சர் அவர்கள் வழக்கமாகச் செய்கிற ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை இந்த வரவு செலவுத் திட்டத்திலும் கொடுத்திருக்கிறார்களே தவிர விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு, தக்க வழிகள் உடனடி நடவடிக்கைகள், உறுதியான செயல்கள் என்ன என்பதைத் தெரிவிக்கவில்லை. ஆனால் "விலைவாசி எங்கே ஏறியிருக்கிறது. விலைவாசி எங்கே ஏறியிருக்கிறது" என்று கேட்ட நிலை போய், விலைவாசி ஏறியிருக்கிறது என்ற நிலையை உணர்ந்து அதைக் குறைக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள்





ஒப்புக் கொள்ள வந்தது வேண்டுமானால் பாராட்டுதற்குரியதாக இருக்கலாம். உணவுப் பொருள்களுடைய விலை இறங்கினால் மாத்திரம் போதாது. அதை விளைவிக்கின்ற விவசாயிகளுக்குத் தேவையான பொருளின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எதிர் கட்சியில் உள்ள நாங்கள் சொல்லியிருக்கிறோம். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தவிர விவசாய உற்பத்திச் செலவும் அதிகரித்திருக்கிறது. இவற்றிற்கேற்ப விவசாய விளை பொருள்களுக்கு நியாயமான, நிலையான குறைந்தபட்ச விலை கிட்டும் முறையில் நாம் ஒரு கொள்கையை வகுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட ஒரு கொள்கை இங்கிலாந்து நாட்டில் 47-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, விவசாயத் திட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு கொள்கை வரையறுக்கப்பட்டு இருப்பதை நான் கவனமூட்ட விரும்புகிறேன். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் நிலையான விலைகளை உறுதி செய்வதற்கும் அரசாங்கத்திற்கு அந்தச் சட்டத்தின் மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்டது. இரண்டாவதாக ஆண்டு தோறும் விவசாய நிலைமையை ஆராய்ந்து, அதற்கு ஏற்ப விவசாயப் பொருள்களின் விலை தீர்மானிக்கப்பட்டது. உற்பத்தி பெருகினால் விலைவாசி ஏற்றம் குறைந்துவிடும் என்கின்ற முழக்கம் நாட்டில் ஆளும் கட்சியினரால் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் உற்பத்தி பெருக வேண்டும் என்கிற அந்தக் கொள்கை நல்ல முறையில் செயல்பெற்று இருக்கிறதா என்றால், இல்லை. உற்பத்தியைப் பெருக்குவதில் விவசாயிகளுக்கு மேலும் அக்கறையும் அவ்வாறு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்கிற நல்ல நோக்கமும் ஏற்படுவதற்கு இங்கிலாந்து நாட்டு 1947-ஆம் ஆண்டு சட்டத்திலே காணப்படுகிற சில விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு நிலத்தின் சொந்தக்காரரோ, சாகுபடியாளரோ நிலத்தை நன்றாகப் பராமரிக்காவிட்டாலும் சரியாக சாகுபடி செய்யாவிட்டாலும், அதனை அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவர அதிகாரம் அளிக்கப்பட்டது. அந்த ஒரு ஆண்டில் சரியான அளவு உற்பத்தி ஏற்படாவிட்டால், நிலத்தின் உரிமையாளரிடம் நிலத்தை விலைக்கு வாங்கவோ, சாகுபடியாளரை விலக்கவோ, அரசாங்கம் அதிகாரம் பெற்றது. இந்தச் சட்டம் நல்ல முறையில் விவசாயம் நடைபெறுவதற்கான வழி வகைகளை வகுத்தது என்று இங்கிலாந்து வேளாண்மைத் துறையின் நிர்வாகம் சொல்லிக் கொண்டு இருக்கிறது. விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும். குறிப்பாக சென்ற ஆண்டிலும், இந்த ஆண்டிலும் தஞ்சையிலும், திருச்சியில் சில வட்டாரங்களிலும் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதம் நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் தஞ்சையில் இருக்கிற திருச்சி வட்டாரத்தில் இருக்கிற பெருங்குடி மக்கள் சென்ற தடவை செலுத்த வேண்டிய கிஸ்தியைச் சேர்த்து இன்று கிஸ்தி செலுத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. சென்ற தடவை 45 காசு, இந்தத் தடவை 45 காசு, இரண்டையும் சேர்த்து 90 காசு செலுத்த வேண்டிய

[திரு. மு. கருணாநிதி] [7th March 1964

அவதிக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். அது பற்றி அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அது கவனிக்கப் படவில்லை. இப்பொழுது கவனிக்கப்படாவிட்டாலும் அவர்களை ஊக்குவிப்பதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும், அடுத்த ஆண்டிலாவது வரி விலக்கு அளித்து விவசாயிகளை ஊக்கப்படுத்துகிற முயற்சிகளை அமைச்சர் அவை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் புவனேசுவர மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஜனநாயக சோஷலிசக் கொள்கை அடிப்படையில் அமைந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று இடங்களில் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சோஷலிசத்தைப்பற்றி உத்தமர் காந்தியார் கூறிய வாக்கியத்தை மாத்திரம் நான் இங்கே ஞாபகப் படுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். "சோஷலிசம் தன்னைத்தானே மாற்றிக் கொள்ளும் முதலாவது ஆளுடன் ஆரம்பமாகிறது. அத்தகைய ஒருவர் இருந்தால் அந்த ஒன்றுடன் பக்கத்தில் பூஜ்யங்களைச் சேர்த்துக் கொண்டே போகலாம். ஒன்று பத்தாகவும், பத்து நூறாகவும் இவ்வாறு சேர்க்கும் ஒவ்வொரு பூஜ்யமும் முன் இருப்பதைப் பத்து மடங்காகப் பெருக்கிவிடும். ஆனால் ஆரம்பிப்பவரே பூஜ்யமாக இருந்தால், பிறகு பூஜ்யங்களை எவ்வளவுதான் சேர்த்தாலும், அதன் மதிப்பு பூஜ்யமாகவே இருக்கும். அந்தப் பூஜ்யங்களை எழுதுவதற்குச் செலவான காகிதமும் நேரமும் வீணாகும்."

ஆரம்பமே பூஜ்யமாக இருந்தால் அடுத்தடுத்து, போடப்படுகிற பூஜ்யங்களுக்கு மதிப்பில்லை என்று காந்தியார் கூறியிருக்கிறார்கள். சோஷலிசம், ஜனநாயக சோஷலிசம், புவனேசுவர சோஷலிசம் என்று எல்லாம் பேசுகிற காங்கிரஸ் ஆட்சியாளர்கள் காங்கிரஸ் கட்சியிலுள்ள சோஷலிசக் கொள்கைகளை வைத்துக் கொண்டு அந்தக் கொள்கைப்படியாவது நடத்திச் செல்லுகிறார்களா? உண்மையிலேயே சோஷலிசக் கொள்கைக்கு காங்கிரஸ் கட்சி மதிப்பு அளித்திருக்கிறதா? "சோஷலிசம்" என்கிற தித்திப்பான வார்த்தையை மக்களிடத்திலே அடிக்கடி பேசி, தேர்தல் அறுவடையை ஏற்படுத்தித் கொள்வதற்காக அதை ஒரு தந்திரமாகக் கையாளுகிறார்களா என்பதை நாம் பார்க்க வேண்டும். உண்மையிலேயே சோஷலிசத்திலே நம்பிக்கை இருந்தால் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சி பஸ் முதலாளிகளையும், ஆலை அரசர்களையும் நம்பி இருக்க வேண்டியதில்லை. பஸ் முதலாளிகளும், ஐஸ்வரியச் சீமான்களும் இல்லா விட்டால் தேர்தல் காலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி வாய்ப்புக்கு இடம் இல்லாமல் போய்விடும் என்பதற்காக, ஒரு புறத்திலே பஸ் முதலாளிகளையும் ஆலை அரசர்களையும் வளர்த்து, அவர்களுக்கு அதிகமான லாபத்தை உண்டாக்கி, அவர்களையெல்லாம் கொழுக்க வைத்து அவர்கள் மூலமாகக் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டு இன்றைக்கு சோஷலிசம் பேசுகிறார்கள். காந்தியாரின் வார்த்தையின்படி இந்த சோஷலிசம் ஒன்று என்ற எண்ணிலிருந்து ஆரம்பிக்கப்படாமல், பூஜ்யத்தி
9-30 a.m. லிருந்து ஆரம்பிக்கப்பட்ட சோஷலிசமே தவிர, வேறு இல்லை



7th March 1964] [திரு. மு. கருணாநிதி]

என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அப்படிப்பட்ட முரண்பட்ட கொள்கைக்குத்தான் தமிழ் நாட்டு மக்கள் அண்மைக் காலத்தில் தங்களுடைய மேலான தீர்ப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தீர்ப்பு திருச்செங்கோட்டில் வழங்கப் பட்டது. பிறகு திருவண்ணாமலையில் தொடர்ந்தது. இப்பொழுது 9-30 a.m.
சென்னை மாநகராட்சித் தேர்தலிலே வழங்கப்பட்டிருக்கிறது. தோல்வி அடைந்த காங்கிரஸ் நண்பர்கள் அந்த நல்ல தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல, கேலி பேசும் அளவுக்கு முற்பட்டிருக்கிறார்கள். "அது கொள்கைக்குக் கிடைத்த வெற்றி அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிடைத்த வெற்றி அல்ல ஏதோ சில சினிமா நடிகர்களுக்காகக் கிடைத்த வெற்றி என்றும், சினிமா நடிகர்கள் தேர்தல் பிரசாரம் செய்யலாமா" என்றும் சட்டமன்றத்திலே கேள்விகள் எழுப்பப்பட்டன என்பதை நாம் நன்றாக அறிவோம். சினிமா நடிகர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டால் அது தங்களுடைய உள்ளத்தில் பெரிய எரிச்சலை ஏற்படுத்தும் என்று கருதுகிறார்களே அவர்கள் அமெரிக்க நாட்டு ஜனாதிபதி தேர்தலில், கென்னடி வெற்றி பெற்றதற்குப் பாடுபட்டது சினிமா நடிகர்கள் என்பதை மறந்து விட்டார்களா? இந்தியத் துணைக்கண்டத்தில் கிருஷ்ண மேனன் பம்பாயிலே தேர்தலில் போட்டியிட்ட நேரத்திலே, கிருஷ்ணமேனனின் வெற்றிக்குப் பாடுபட்டது வட பாகத்தில் இருக்கிற பிரபல சினிமா நடிகர்கள் என்பதை ஏனோ மறந்து விட்டார்கள். சினிமா என்றால் ஏதோ ஒரு தீண்டத்தகாத ஒன்று என்றும் சினிமா என்றாலே நாட்டிலே இருக்கக்கூடாதா ஒரு கலை என்றும் எண்ணக் கூடிய எண்ணம் காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஒரு சில அமைச்சர்களுக்கு இல்லாவிட்டாலும், காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலோருக்கு இருப்பது ஏனோ எனக்குப் புரியவில்லை. அதே காங்கிரஸ் கட்சி பிலிம் சேம்பர் ஆப் காமர்ஸ் இடமிருந்து தேர்தலுக்கு 4 நாட்களுக்கு முன்பு, 18-ம் தேதி அல்லது 19-ம் தேதி என்று கருதுகிறேன், சென்னை சினிமா வர்த்தக சங்கத்தினிடமிருந்து ரூ. 10,000 தமிழ்நாடு காங்கிரஸ் நிதிக்காகப் பெற்று இருக்கிறது. ஆனால் இன்றையதினம் அவர்களே சினிமா நடிகர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடலாமா என்ற வினாக்களை எழுப்பும் நேரத்தில் எனக்கு சிரிப்பு தான் வருகிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பிலிம் சேம்பரிலிருந்து ரூ. 10 ஆயிரத்தைத் தேர்தல் நிதிக்காகப் பெற்றுக் கொண்டு, அவர்களே இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து அது ஒரு சினிமா கட்சி என்று கூறுகிறார்களே அது தான் பெரிய வேடிக்கையாக இருக்கிறது. ஒரு அம்மையார் ஒரு காலத்தில் கலை உலகத்தில் புகழ் விளக்காக விளங்கியவர்கள் இன்றைக்கும் மறையாத புகழோடு இருப்பவர்கள் தன்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதும் போது கூறுகிறார்கள் "அந்தக் காலத்தில் காங்கிரஸ் மேடையில் நான் பாடாவிட்டால் கூட்டம் சேராது! திருவாளர் சத்தியமூர்த்தி நான் எங்கே இருந்தாலும் என்னைத் தேடி அழைத்து வந்து விடு

[திரு. மு. கருணாநிதி] [7th March 1964

வார். நான் தேசிய கீதம் பாடியதும் தான் கூட்டம் ஆரம்பிக்கும். என்னுடைய கணவர் இறந்தபிறகு நான் கூட்டங்களில் கலந்து கொள்ளுவதை நிறுத்தி விட்டேன். பின்பு தமிழ் நாட்டுக்கு மகாத்மா காந்தியடிகள் வந்த காலத்தில் என்னை அழைத்து 'கணவன் இறந்தால் கணவனைக் காலம் முழுதும் நினைத்துக் கொண்டு வருந்தப்போகிறாயா, கூட்டங்களில் மறுபடியும் கலந்து கொள்ள வேண்டும்' என்று எனக்கு ஆணையிட்டார்கள்" என்று குறிப்பிடுகிறார்கள்! கலை உலகத்தில் ஒளியாக இருந்த கொடுமுடி கோகிலம், சுந்தராம்பாள் அம்மையார் அவர்கள் தான் இவ்வாறு தன் வாழ்க்கைச் சரித்திரத்தில் எழுதியிருக்கிறார். காங்கிரஸ் கட்சி சினிமாவை சினிமாக்காரர்களை ஒதுக்கி விட்டது போலும், அவர்களுக்கும் தங்களுக்கும் ஒட்டுறவு வேண்டாம் என்பதைப்போலவும் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் சினிமா நடிகர்களோடு இணைந்து வாழ்ந்து கொண்டு இருப்பதாகப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

மாநகராட்சித் தேர்தலில் தோல்வியை அணைந்துக் கொண்டவர்கள், எங்களை சினிமா நடிகர்களை இணைந்துக் கொண்டார்கள் என்று சொல்லுவது மட்டுமல்லாமல், சின்னசாமி படத்தை வெளியிட்டீர்கள், அதனால் தான் நீங்கள் வெற்றி பெற்றீர்கள் என்றும் சொல்கிறார்கள். சின்னச்சாமி படத்தைப் போடுவது முறையா என்று கேட்கிறார்கள். நண்பர் அன்பில் தர்மலிங்கம் கூடக் கேட்டார்கள். இறந்தவருக்கு ஒரு மரியாதை செலுத்துவது கூட தவறா என்று. உடனடியாக முதல் அமைச்சர் அவர்கள் எழுந்து "மரியாதை செலுத்தலாம், ஆனால் படத்தை வெளியிட்டு ஓட்டிக் கொண்டது பண்பல்ல" என்று குறிப்பிட்டார்கள். சின்னச்சாமி படத்தை வெளியிட்டது பண்பல்ல. ஆனால் திருப்பதி வெங்கடாசலபதி படத்தைக் காளைமாட்டுச் சின்னத்தோடு இணைத்துப் போட்டு வெளியிட்டது பண்பா என்று நான் முதல் அமைச்சர் அவர்களை மிக்க மரியாதையோடு கேட்கிறேன். திருப்பதி வெங்கடாசலபதிக்குப் பக்கத்தில் காளை மாட்டைத் தேர்தலில் போடுவது மதப் பிரசாரத்தின் மூலமாகக் கடவுளை வைத்து ஓட்டுப் பெற்று வெற்றி அடைவது என்பதற்கு சரியாகும் என்ற காரணத்தினால் அது தேர்தல் சட்டப்படி தவறு என்பது என் கவனம். திருப்பதி வெங்கடாசலபதி படத்தைத் தேர்தல் சின்னத்தோடு காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஒரு வட்டத்தில் அல்ல பல வட்டங்களில் வழங்கினார்கள். அப்படி அவர்கள் பெரிய சாமி படத்தை போடலாம் என்றால் நாங்கள் இந்த சின்னசாமி படத்தைப் போடுவது தவறா என்று கேட்டால் அதற்கு அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்ற பிறகு 17 ரூபாய்க்கு ஒரு காளை மாட்டை வாங்கி அதைத் துரத்தி அடித்துக் கொன்று போட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். கனம் அமைச்சர் அவர்களும் வெகு அவசர அவசரமாக எழுந்து "கறியைத் தின்றுவிட்டார்களா" என்று கேட்டார்கள். எனக்குக் கூட ஒரு சந்தேகம், அமைச்சர்



7th March 1964] [திரு. மு. கருணாநிதி]

கேட்ட அவசரத்தைப்பார்த்தால் "கறி மிச்சம் இருக்கிறதா!" என்று கேட்பது போல் இருந்தது. இந்தச் செய்தி பற்றி ஒரு பத்திரிகையில் பார்த்தேன், "லெடர்ஸ் டு தி எடிட்டர்" தலைப்பில் வந்தது ராயப்பேட்டை பக்கத்தில் 17 ரூபாய்க்கு ஒரு மாட்டை வாங்கி விரட்டினார்கள் என்று. அதை அம்மையார் அவர்கள் நுங்கம்பாக்கத்தில் என்று சொன்னார்கள். பதினேழு ரூபாய்க்குக் காளை மாடு சென்னையில் வாங்குவது என்பது எவ்வளவு வேடிக்கையானது. நான் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அவ்வளவு மலிவாக மாடு கிடைக்கிறது என்றால் நான் கூடப் பத்து பதினைந்து மாடுகளை வாங்கி வீட்டிலே வளர்க்கத் தயாராக இருக்கிறேன் என்பது தான். ஆனால் 17 ரூபாய்க்குக் காளை மாட்டை வாங்கிக் கொன்றார்கள் என்று கூறிய நேரத்திலே எனக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. காங்கிரசைத் தீவிரமாக ஆதரித்து வருகிற பெரியார் ராமசாமி சமீபத்தில் ஆரோக்கியமாக இருப்பதற்கு மாட்டு இறைச்சி சாப்பிட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஒரு வேளை காங்கிரஸ்காரர்களும் திராவிடக் கழக நண்பர்களும் பெரியார் அவர்களுடைய ஆணையை நிறைவேற்றுவதற்காகக் காளை மாட்டை அடித்திருக்கலாம் என்ற சந்தேகம் தோன்றியது. திராவிட முன்னேற்றக் கழகத்தார் அப்படிப்பட்ட கொடூரமான காரியங்களில் ஈடுபட்டார்கள் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. ஆகவே சட்ட மன்றத்திலே பொறுப்புள்ள அம்மையார் அவர்கள் ஆதாரம் இல்லாததைப்பற்றி அப்படிப் பேசியதற்கு நான் வருந்துகிறேன்.

இன்றைய தினம், காங்கிரஸுக்குள்ளே இருக்கிற பொறுப்பான அமைச்சர்களைக் குறைகூற மாட்டேன். ஆனால் அவர்கள் அறிந்தோ, அறியாமலோ காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒரு பயங்கரமான சக்தி ஊடுருவிக் கொண்டு வருகிறது. அந்த சக்தி காங்கிரஸோடு கூட்டணி அமைத்துக்கொண்டு பரவுகிறது. அண்மையில் கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் ராமநாதபுரத்தில் பேசியதை ஒரு பத்திரிகையில் படித்தேன். அவர்கள் அங்கே தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது இதுதான் "சீன ஆக்கிரமப்பின் பயனாக இந்தியப் பொதுவுடைமையாரின் உண்மை வடிவம்; அவர்களின் போக்கு எல்லாம் நமக்கு நன்கு தெரிந்து விட்டதே; இந்நிலையில் அவர்களுக்கு ஆதரவு அளிப்பது மகாபாபம்; பாபம் மட்டுமல்ல; அது தெரிந்து செய்யும் பெருங்குற்றமாகும்; வெட்கக்கேடுமாகும்." இந்த வகையிலே ராமநாதபுரம் கூட்டத்திலே பிப்பிரவரி 11-ம் தேதி மதிப்பிற்குரிய போலீஸ் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அணி சேர்ந்திருக்கும் கூட்டணிக்காரர்கள் தங்களை முற்போக்கு சக்தி என்று கூறிக் கொண்டு நாங்கள் இணைந்திருந்து 3 பேரும் ஒன்றாகயிருந்து பிற்போக்கு சக்திகளை முறியடித்தே தீருவோம். என்கின்ற இந்த திரை மறைவு நாடகத்தின் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தை கொலை வெறிக்கு ஆளாக்குகிற தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு இருந்தார்கள். தேர்தல் முடிந்தபிறகும் அதே பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

ஆயுள் கைதி என்றால் பொதுவாக 20 வருஷ காலம் தண்டிக்கப்பட்டு அவர் குறைந்த காலத்தில் விடுவிக்கப்பட்டால் மிச்சமுள்ள காலம் வரை போலீசார் அவர்களை கண்காணிப்பார்கள். ஆனால் அரசியலில் ஈடுபடும் ஆயுள் கைதி இந்த ஆட்சியில் இப்படிப்பட்ட கண்காணிப்புக்கு உட்படுவது இல்லை போலும். அப்படிப்பட்ட ஆயுள் கைதிக்கு காங்கிரஸ் அரசு ஆதரவு அளிப்பதால் அந்த கைதிக்கு இப்படிப்பட்ட கண்காணிப்பு இல்லையா என்று நாம் அறியோம். இப்படிபட்ட சூழ்நிலையை வளரவிட்டால் காங்கிரஸ் அரசியலில் கடைசியில் ஆயுள் கைதிகள் தான் மிச்சப்படுவார்கள், வேறு யாரும் மிச்சப்படமாட்டார்கள் என்பதை மிக்க பணிவோடு அரசியல் நாகரிகத்தைக்கருதி எடுத்து தெரிவிக்கிறேன். அந்த ஆயுள் கைதி, "தூக்கு மேடை ஏறினாலும் சரி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்தே தீருவேன்" என்று ஒரு கூட்டத்திலே பேசியிருக்கிறார். காங்கிரஸ் கட்சியினுடைய பிரதான ஏட்டில் கொட்டை எழுத்தில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கட்சி சாதாரண எதிர்க்கட்சி. அதை ஒழிப்பதால் அவர் தூக்கு மேடை ஏற வேண்டும் என்றால், அதிலுள்ள உள் நோக்கம் எல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள ஒரு சில குறிப்பிட்ட தலைவர்களை ஒழிப்பது என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கும் எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? "நாங்கள் யாரோடு சேர்ந்திருக்கிறோம் தெரியுமா? ஆளுங் கட்சி எங்களுக்கு அரவணைப்பு. ஆகவே எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது" என்ற ரீதியிலே அவர் பேசுகிறார்.

இன்னொரு நண்பர் பத்திரிகையிலே எழுதுகிறார். சொல்ல நாவு கூசுகிறது. இங்கே அமர்ந்திருக்கிற மதிப்பிற்குரிய அமைச்சர்களை நான் கேட்கிறேன். இந்த மாமன்றத்தில் மாட்டப்பட்டிருக்கும் படத்தில் உள்ளவரும் நமது மரியாதைக்கு உரியவரும் ஆன திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்களைக் குறித்து, தமிழ்த் தேசியக் கட்சி நண்பர் ஒருவர், "ஆச்சாரியார் அவர்களே! உம்முடைய தலையைவிட காமராஜருடைய செருப்புக்கு விலை அதிகம்" என்று ஒரு பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறார். அமைச்சரவையில் உள்ளவர்களுக்கு நான் தங்கள் மூலமாகச் சொல்கிறேன், அப்படிப்பட்டவர்களை உங்கள் கூட்டணியில் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; ஆச்சாரியார் என்கிற அறிவாளியினுடைய படம் இந்த மாமன்றத்தில் அலங்கரிக்கத் தேவை இல்லை; அதை விட உயர்ந்தது என்று சொல்கிறாரே ஒன்று, அதை மாட்டுவதுபற்றி சிந்திப்போம். ஆச்சாரியாருடைய படம் இங்கே இருக்க லாயக்கா? ஆச்சாரியாரின் தலையினுடைய விலையை எதோடு மதிப்பிடுகிறார்? இதையெல்லாம் நீங்கள் வளர்த்துக்கொண்டு போனால், இந்த அமைச்சரவையின் ஆதரவு தங்களுக்கு இருக்கிறது என்று, காங்கிரஸ் கட்சியைத் தங்களோடு இணைத்துக்கொண்டு பேசுமானால், தமிழ் நாட்டின் எதிர்காலம் என்ன ஆகும்? தமிழ் நாட்டின் எதிர்காலம் எவ்வளவு இருளடைந்து விடும்? அரசியல் நாகரிகம் எந்த அளவுக்குக் கெட்டுப் போய்விடும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.



இன்னொரு சட்ட மன்ற உறுப்பினர்—மதிப்பிற்குரிய நண்பர், மரியாதைக்கு உரியவர்—நாகப்பட்டிணத்திலே பேசுகையில், "அண்ணாதுரை, கருணாநிதி என்ற காலிப் பயல்கள்" என்று குறிப்பிட்டார். உடனே பெரும் குழப்பம் ஏற்பட்டது. கூட்டம் நடந்த மறுநாள், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்த காங்கிரஸ் வேட்பாளர் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களைச் சந்தித்து, அந்த நிகழ்ச்சிக்காக வருத்தம் தெரிவித்தார்கள். "அப்படிப் பேசிய பேச்சுக்கு நீங்கள் யாரும் வருந்தக் கூடாது" என்று அந்தப் பேச்சுக்காக வருத்தம் தெரிவித்திருக்கிறார். இந்த நிலைமைக்கு அரசியல் நாகரிகம் தேர்தலிலே உச்ச கட்டத்தை எட்டிப் பிடித்திருக்கிறது. இது எங்கே போய் நிற்குமோ!

நேற்றையதினம் கனம் உறுப்பினர் திரு. ராஜாராம் அவர்கள் எதற்கோ சொன்னார் பஸ்மாசுரன் கதையை. பஸ்மாசுரன் கதை வேறு யாருக்குப் பொருந்தினாலும் பொருந்தாவிட்டாலும், இன்றைய தினம் காங்கிரஸ் தலைவர்களுக்கு மிக மிக நன்றாகப் பொருந்தும். அவர்கள் தான் இப்படிப்பட்ட நிலைமையை வளர்த்துவிட்டிருக்கிறார்கள். இப்படி வளர்க்கப்பட்ட காரணத்தால் தான் 27—2—1964 அன்று, இதே சென்னை மாநகரத்தில் மாதவப் பெருமாள் கோயில் தெருவில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். "இந்த நாட்டினுடைய அமைச்சர்கள், அதிலும் குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சாதகமாக இருப்பதாகத் தெரிகிறது. அவர் அப்படி சாதகமாக இருப்பாரேயானால், நாம் கொடுக்கின்ற முதல் அடி—நான் 'அடி' என்று கௌரவமாகக் குறிப்பிடுகிறேன்—முதல் அமைச்சர் பக்தவத்சலம் முதுகிலே விழ வேண்டும்" என்று பேசியிருக்கிறார். நான் குறிப்பிட்டதற்குக் காரணம், நீங்கள் வளர்த்துவிடுகிற அலாவுதீன் பூதத்திற்கு வேலை கொடுக்காவிட்டால், அது ஆணையிட்டவரையே விழுங்கிவிடும் என்பதை ஞாபகப்படுத்துவதற்காகத்தான். அதைப்போல, வரம் கொடுத்த பரமசிவன் தலையிலேயே கை வைத்த பஸ்மாசுரனைப் போல, நண்பர் நினைவுபடுத்திய கதையைப்போல, அமைச்சருடைய தலையிலேயே கைவைக்க வந்திருக்கிறார்கள். அமைச்சர்களுக்கே இந்தக் கதியானால், எங்களுடைய கதி என்ன?

எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் என்ன என்ன பேசினார்கள் என்று சுருக்கெழுத்தாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டங்களுக்கு வந்து அவர்களுடைய பேச்சுக்களைப் பதிவு செய்கிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெறுகிற கூட்டங்களுக்கு அவர்கள் அனுப்பப்படுவது இல்லை. இனிமேலாவது அமைச்சர்கள் அருள் கூர்ந்து அப்படிப்பட்ட பேச்சுக்களை குறிப்பு எடுப்பதற்கு அனுப்பி வைப்பார்களானால், நிலைமையை நன்றாகப் புரிந்து கொள்ள வசதி ஏற்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். (மணி அடிக்கப்பட்டது.)

நான் பஸ்மாசுரன் கதையைப்பற்றிக் குறிப்பிட்டேன். இந்தி என்கிற இன்னொரு பகாசுர சக்தி தமிழகத்தை உருக் குலைப்பதையும், அந்தப் பகாசுரச் சக்தியை அழித்து ஒழிப்பதற்காக திராவிட

முன்னேற்றக் கழகம் வெளிப்படையாக அறப் போர்க் கோலம் கொண்டிருந்தாலும், தமிழகத்திலே இருக்கும் புலவர் பெருமக்கள், சான்றோர்கள், நல்லோர்கள் எல்லோரும், இந்தியினுடைய ஆதிக்கம் தமிழகத்திலே பரவுமானால் பேராபத்து தமிழகத்திற்கு விளையும், தமிழ்நாட்டுக் குடிமக்கள் இரண்டாந்தர மக்களாகி விடுவர்கள் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்று இந்தியாவில் மத்திய அரசு உத்தியோகங்களுக்கான யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வு எழுதுபவர்கள் எந்த மொழியைப் பயன்படுத்துவது என்பதை ஆலோசனை செய்ய நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செல்கிற இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, முதல் அமைச்சர் அவர்கள் முன் வைப்பதற்கு நான் விரும்புகிறேன். மத்திய அரசினுடைய உத்தியோகங்களுக்கான தேர்வு எழுதுவதற்கு தமிழ் போன்ற பிரதேச மொழிகள் பயன்படா என்று அமைச்சர் திரு. நந்தா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன் தமிழ் போன்ற பிரதேச மொழிகளை விட, இன்றைய தினம் ஒரு பிரதேச மொழியின் தகுதியிலே இருக்கிற இந்தி எந்த அளவுக்கு உயர்ந்து விட்டது என்று எனக்குப் புரியவில்லை இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அங்கே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செல்ல இருக்கிறார்கள். அங்கே செல்ல இருக்கிற முதல் அமைச்சர் அவர்களை நாங்கள் வேண்டி விரும்பி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாத்திரம் அல்ல. எதிர்க் கட்சியினுடைய சார்பாக, தமிழ் நாட்டு மக்களுடைய சார்பாக, இந்தி பேசாத மாநிலங்களினுடைய சார்பாக, பணிவோடு கேட்டுக் கொள்கிறோம். தயவு செய்து அங்கே போய் தைரியமாக நிமிர்ந்து உட்கார்ந்து அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்காகப் போராடவேண்டும்; வங்கத்துச் சிங்கம் பி. ஸி. ராயை அவர் தம்முடைய மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும்; இந்தியை எதிர்த்துப் பேசினால் காங்கிரஸ்காரர்கள் வருத்தப்படுவார்களோ என்று கருதக்கூடாது; அவர்களுக்குப் பக்கபலமாக இந்த ஒரு விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்பதை அவர் மறந்து விடக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தார் மாத்திரமல்ல, காங்கிரசிலே கூட இந்தக் கருத்தை வெளியிலே சொல்லப் பயந்துகொண்டு பலபேர் அவர்களுக்குப் பக்க பலமாக இருக்கிறார்கள். கனம் சபாநாயகர் மூலமாக, கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், அவர்கள் அங்கு செல்வதற்கு முன்பு, என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோள், இந்த மன்றத்தைக் கூட்டி, இந்த மன்ற அங்கத்தினர்களுடைய கருத்தை அறிந்து கொள்வதற்காக ஒரு விவாதத்தைத் தொடங்கி அதன் மூலமாக அங்கத்தினோர்களுடைய கருத்தைப் பெற்று, முதல் அமைச்சர் அவர்கள் டில்லி மாநகரத்திற்குச் சென்று, அங்கே சேரன் செங்குட்டுவனைப் போல, நெடுஞ்செழிய பாண்டியனைப் போல, கரிகால் பெருவளத்தானைப் போல, நிமிர்ந்து உட்கார்ந்து, தமிழ் நாட்டுக்காக, தம்முடைய



நாட்டுக்காகப் பணி புரிகிறோம் என்கிற வீரத்தோடு, அவர்கள் சென்று வரவேண்டும். "சென்று வருக, வென்று வருக" என்று அவர்களுக்கு நான் வாழ்த்து கூறுகிறேன். அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதற்குச் செல்கிற நேரத்தில் இந்த வார்த்தைகளை உபயோகப்படுத்தியதாகக் கூறி சதிக் குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டிருந்தாலும் கூட, "சென்று வருக, வென்று வருக" என்று நான் இப்பொழுது சொல்வது தமிழ் நாட்டைக் காப்பாற்றுவதற்காக, தமிழைக் காப்பாற்றுவதற்காக என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்**: கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் வரி இல்லாத வரப்பிரசாதமான திட்டம் என்று சொல்வதற்கு முடியாத நிலையில் இருக்கிறது. ஏற்கனவே போடப்பட்ட வரிகள் தாங்க முடியாத அளவுக்கு இருக்கின்றன. அந்தப் பளு ஓரளவுக்காவது நீங்குமா என்று ஏக்கத்தோடு எதிர்பார்த்தவர்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏதாவது வரவேற்கத்தக்க அம்சம் இருக்கிறதா என்றால் இல்லை என்ற நிலைமை தான் இன்று இருக்கிறது.

விலைவாசி உயர்வைப் பற்றி ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் குறிப்பிட்டார்கள். நம் நாட்டில் உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருகினால் விலைவாசி இறங்கிவிடும் என்ற ஒரு கருத்து கூறப்படுகிறது. அதற்கடுத்தபடியாக, ஜனத்தொகை பெருகிக் கொண்டே போகிறது, அதைக் குறைப்பதற்குக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் மிகவும் முக்கியம், அதை நிறைவேற்றினால் விலைவாசியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம் என்று சொல்லப்பட்டது. இந்த இரண்டு காரணத்தையும் வைத்து நம் மாநிலத்தைப் பார்த்தால், உணவுப் பொருள்களின் உற்பத்தி நம் மாநிலத்தில் பெருகியிருக்கிறது என்று சொல்லப்பட்டாலும் விலைவாசி இறங்கினபாடில்லை. குடும்பக் கட்டுப்பாட்டை எடுத்துக் கொண்டாலும், மற்ற எல்லா மாநிலங்களையும் விட நமது மாநிலம் இதில் முதல் இடம் பெற்றிருக்கிறது, அதற்குரிய முதல் பரிசும் வாங்கியிருக்கிறது. அப்படியிருந்தும் விலைவாசி குறைந்தபாடில்லை. இதெல்லாம் எதைக் காட்டுகிறது? உணவு உற்பத்தி பெருகினாலும், ஜனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினாலும் கூட இந்த விலைவாசி உயர்வுப் பிரச்னையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இது அகில இந்தியப் பிரச்னை. அகில இந்தியப் பிரச்னை மட்டுமல்ல. இது திட்டத்தை ஒட்டியது. இன்று நாம் கொண்டிருக்கிற கொள்கையை ஒட்டிய திட்டத்தைத் தீட்டுகிறபோது வாங்கப்பட்ட கடன், கடனுக்கும் மேலாக, வாங்கிய கடனைத் திட்டத்திற்காக ஒதுக்கிச் செலவழிப்பதில் வீண் விரயம் ஆக்கப்பட்டது ஒரு காரணம். அதற்கும் மேலாக, இந்திய நாடு முக்கியமாக விவசாய நாடாக, கிராமத்தைப் பெரும்பாலும் கொண்ட நாடாக இருக்கக்கூடிய நிலையில், விவசாயத் திட்டமாக (அக்ரிகல்சரல் ப்ளான்) வகுத்திருந்தால் ஒரு வேளை உற்பத்தி ஏராளமாகப் பெருகியிருக்கக்கூடும். அப்படியில்லாமல் இன்டஸ்ரியல் ப்ளான் என்ற நிலைமையில், தொழில் உற்பத்தியைப் பெருக்கி, 'ரூரல் இந்தியா' வை தொழில்

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [7th March 1964

மயமாக மாற்றி அபிவிருத்தி செய்துவிட முடியும் என்ற கனவு கண்ட காரணத்தால், அது தோற்று விட்ட நிலையை இன்று நாம் பார்க்கிறோம். உணவு உற்பத்தி பெருகுவதற்குப் பதிலாக பயிர்களுக்கு நோய்ப் பெருக்கம் அதிகமாகிவிட்டது. அதற்கு மேலாக அளவுக்கு மிஞ்சின வரி. அதற்கும் மேலாக, காலஞ் சென்ற ஆர். ஏ. கோபாலசுவாமி அவர்கள் குறிப்பிட்டது போல, நம்முடைய திட்டத்தினுடைய முக்கியமான கோளாறு, நாம் தொழிலை மையமாக வைத்து, மெஷின்களை உற்பத்தி பண்ணுவது தான். (குறுக்கீடு) நான் சென்ஸஸ் கமிஷனராக இருந்தவரைச் சொல்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் யாரைக் குறிப்பிடுகிறார்?

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** காலஞ்சென்ற திரு. ஆர். ஏ. கோபாலசுவாமி மத்திய சர்க்கார் மந்திரியாகக்கூட இருந்தவர் . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** திரு. ஆர். ஏ. கோபாலசுவாமி அவர்கள் நம் மாநிலத்தில் சீப் செக்ரடரியாக இருந்தவர். அவர்தான் சென்ஸஸ் கமிஷனராக இருந்தார். அவர் இப்பொழுது உயிரோடு நல்ல திடகாத்திரராகவும் சௌக்யமாகவும் இருந்து கொண்டிருக்கிறார்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** திரு. கோபாலசாமி அய்யங்காரைக் குறிப்பிடுகிறேன். அவர் சென்ஸஸ் கமிஷனராக . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அவர் சென்சஸ் கமிஷனராக இருக்கவில்லை. நம்முடைய சீப் செக்டரியாக இருந்த திரு. ஆர். ஏ. கோபாலசாமி அவர்கள்தான் சென்சஸ் கமிஷணராக இருந்தார்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** மன்னிக்கவும். யாராய் இருந்தாலும் பரவாயில்லை.

**கனம் சபாநாயகர்:** யாராய் இருந்தாலும் பரவாயில்லை என்று சொல்லக்கூடாது. உயிரோடு இருக்கிற ஆளை இறந்துவிட்டதாகச் சொல்வது தவறு.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இருக்கிறவர்களைப் போய் விட்டதாகச் சொன்னால் அவர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள் என்று சொல்வது உண்டு. அப்படி இவர் நீண்ட காலம் வாழ வேண்டும்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** அவரும் இருக்கிறார். அவர் தீட்டிய திட்டமும் இருக்கிறது. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். முக்கியமாக நம்முடைய திட்டத்தில் நாம் தொழில் களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து உணவை வாங்கவேண்டியதாக இருக்கிறது. இதேபோல நம்முடைய உணவுப் பற்றாக்குறையைப் போக்க வெளிநாடுகளில் இருந்தே உணவு வாங்கிக்கொண்டிருக்க முடியுமா? ஆகையால்



7th March 1964] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

நிச்சயமாக நம்முடைய திட்டம் விவசாயத் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டால்தான் நம் நாடு முன்னேற முடியும். இல்லாத வரையில் விலைவாசி ஏற்றத்தைத் தணிக்க முடியாது. இது பைவ் இயர் ப்ளான் இல்லை. பைல்யூர் ப்ளான். இதன் மூலம் உற்பத்தி யைப் பெருக்க வழியில்லை. ஆகையால் It is a disastrous Plan என்று குறிப்பிடுகிறார்கள். மதிப்பிற்குரிய திரு. நேரு அவர்களே, சமீபத்தில் பஞ்சாபில் பேசுகையில் 'I hang my head in shame,when weare completely dependent on foreign countries for our food grains என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி யெல்லாம் இருக்கிறபோது விலைவாசியைக் கட்டுப்படுத்திவிடலாம் என்று நினைப்பது தவறாகத்தான் முடியும். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் நம்முடைய திட்டத்தையே மாற்றி அமைத்தாக வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்ற விவசாய திட்டமாக இதை மாற்றி அமைக்க முயற்சிக் காமல் ஜனத்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி சரிக் கட்டலாம் என்று நினைப்பது சரியான முறையாக இருக்காது. திரு. நேரு அவர்கள் இப்படி நினைப்பது ஒருகாலும் நிறைவேறாது. Beds in India are producing more than fields in India. என்பதாக குழந்தை குட்டிகள் பெருக குடும்பங்கள்தான் பெருகிக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் ஜப்பான் நாட்டிலே . . .

Mr. SPEAKER: The hon. Member Sri T. L. Sasivarna Thevar had already referred to Japan. So he need not dilate on that subject too much.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** திரு. குமரப்பா போன்றவர் கள் விவசாயம் போன்ற பல துறைகளில் நம் நாடு இன்றையதினம் ஜப்பான் நாட்டைத்தான் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்டசபை உறுப்பினர்களிடையே பேசும்போதும் கூட ஜப்பான் நாட்டை வழிகாட்டியாகக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள் என்றால் ஜப்பான் என்று சொல்வதிலே தவறு இல்லை.

**கனம் சபாநாயகர்:** அந்த வார்த்தை தவறு என்று சொல்ல வில்லை.

What I was saying was that the hon. Member Sri Sasivarna Thevar had referred to Japan. He referred to family planning there and an hon. Lady Member had objected to it. I was not here at that time. I read it in the news papers.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** அந்தமாதிரியாக சசிவர்ண தேவர் பிறர் புண்படுவதற்காகக் குறிப்பிடவில்லை. நம்முடைய பண்பாடு, கலாசாரம், நாகரீகம், ஒழுக்கம் எல்லாம் சினிமாவின் காரணமாக எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை கனம் உறுப் பினர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்றுதான் சொன்னார். அதைப் பெண் அங்கத்தினர்கள் எதிர்ப்பதற்கு, அல்லது வருந்து வதற்கு ஒன்றும் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [7th March 1964

இன்னொரு முக்கியமான விஷயம் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். புவனேசுவரத்தில் நடந்த காங்கிரஸ் தீர்மானத்தின்படி ஜனநாயக சோஷலிசம் என்பது இந்த நிதி நிலை அறிக்கையில் காணப்படவில்லை என்று. ஜனநாயக சோஷலிசம் என்ருல் என்ன என்பதே இப்போது கேள்வி. 1947-ஆம் வருஷத்தில் காந்தியக் கொள்கை என்ருர்கள். அதன்படி பல திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனுல் இன்றையதினம் கதர் சட்டைதான் அடையாளமாக நிற்கிறதே தவிர அந்தத் திட்டம் எங்கே போயிற்று என்று தெரியவில்லை. அந்தத் திட்டத்திஞல் இந்த நாடு முன்னேற முடியுமா, முடியாதா என்ற பிரச்சினையே விளக்கப்படவில்லை. அடுத்து ஆவடியிலே சோஷலிச சமுதாயம் என்று தீர்மானம் போட்டார்கள். அதையும் மக்கள் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொண்டு ஒத்துழைக்க முன்வரவில்லை. அல்லது அவர்களுக்குப் புரியவைத்து ஒத்துழைப்பைப் பெற அரசாங்கம் முயற்சிக்கவில்லை. அடுத்து பெங்களூர் மகாநாட்டில் கூட்டுறவு விவசாயத்தைப்பற்றி தீர்மானம் போட்டார்கள். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்ஞர்கள். அது எங்கே போயிற்ரே தெரியவில்லை. பார்லிமெண்டில் உறுப்பினராகவும், முன்னுள் அமைச்சராகவும் உள்ள திரு. தியாகி அவர்கள் இன்றுள்ள நிலைமையைப்பற்றி ஒரே ஒரு வார்த்தை குறிப்பிட்டுள்ளார்கள்.

" It is slavish. All these Congress Leaders are after the note-givers and not after the rural vote givers ".

இதுதான் அதற்கு விளக்கம். அதற்குப் பிறகு புவனேசுவர் காங்கிரஸ் தீர்மானம் ஜனநாயக சோஷலிசம் என்பது. இப்படி ஏதோ புதுப் புதுப் பெயர்களைச் சொல்லி—மக்களை ரூ மந்திரக் காளி என்று சொல்வது போல ஏமாற்றுவதாக இருக்கிறதே தவிர நடைமுறையில் மக்களுக்கு உண்மையில் நலம் செய்யத்தக்க ஏதுவும் செயல்படுத்தப்படவில்லை. சாதாரணமாக தமிழ் நாட்டில் விரால் மீன் என்று சொல்வார்கள். விரால் மீன் தலை பாம்பு போல் இருக்கும். அதன் தலையைக் கண்டவுடன் பாம்புகள், அதைக் தன் இனம் என்று எண்ணி விட்டுவிடும். பெரிய மீன்கள் வரும்போது வாலைக் காட்டும். வால் மீன் வால் போல் இருக்குமாதலால் மீன்கள் அதைத் தம் இனம் என்று விட்டு விடும். இப்படி இரண்டு வர்க்கத்தையும் ஏமாற்றி நிலையில்லாமல் துள்ளுகிற விரால் மீன்களைப் போல ஆளும் கட்சியின் கொள்கை தேர்தலில் வெற்றிக்கு வழிவகுத்துக்கொள்வதாக இருக்கிறதே தவிர அடிப்படைத் திட்டத்தின் குறைபாடுகளை மாற்ற முயற்சிக்காமல் பெயர் மாற்றத்திலேயே காலத்தைக் கழிப்பது சரியாக இருக்காது.

என்.ஜி.ஓ.-க்களுக்கு ஏதோ செய்யப்போவதாக இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்போது? செத்த பிறகு. செத்த பிறகு அவரது மனைவிக்கோ, பிள்ளைக்கோ ஒரு ஐந்து, பத்து வருஷத்திற்கு பத்து ரூபாயோ, பதினைந்து ரூபாயோ கொடுப்பதனுல் நாம் சரியான காரியம் செய்துவிட்டதாக ஆகாது. இன்றையதினம் அவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் தவிக்கிருர்கள். நம்முடைய திட்டங்கள் நல்ல முறை



7th March 1964] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

யில் வெற்றி பெறவேண்டுமென்ருல் நிர்வாகத்தில் உள்ளவர்கள் திருப்தியாகச் செயல்படக்கூடிய ஒரு சூழ்நிலையைத்தான் முதலில் அமைக்கவேண்டும். குடும்பத்தை நடத்த முடியாத நிலையில் அவர்களை விட்டுவிட்டு, அரசாங்கத்தின் பல திட்டங்களை அவர்கள் நல்ல முறையில் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்காது.

இன்றையதினம் சாதாரணமாக ஒரு குமாஸ்தாவின் வாழ்க்கை தரம் எப்படி இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். எனக்குத் தெரிந்தவர், மிகவும் யோக்கியமானவர், அவர் அரசாங்கத்தின் அப்பர் டிவிஷன் க்ளார்க்காக இருக்கிருர். திருமணமாகியிருக்கிறது. அவருக்கு மொத்த சம்பளம் 195 ரூபாய். அடிப்படை சம்பளம் 150, அலவன்ஸ் 30, வீட்டு வாடகை அலவன்சு 15 ஆக 195 வாங்குகிருர்.

MR. SPEAKER : The hon. Members time is up. He can finish that point and conclude his speech.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** ஒவ்வொரு மாதத்திலும் பார்க்கிறபோது 30 ரூபாயிலிருந்து 35 ரூபாய் கடன் பட்டுச் செலவு செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிருர்கள். அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிற அவர்களுக்கு இப்போதுள்ள நிலைமையில் பஞ்சப்படி கொடுக்கவில்லையானுல் அவர்களால் எவ்வாறு உற்சாகமாக வேலை செய்ய முடியும்? ஆகவே, உடனடியாக அவர்களுடைய பிரச்சினையைக் கவனித்து அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** கனம் சபா நாயகர் அவர்களே, சென்ற வருஷ பட்ஜெட் விவாதத்தின் போது நான் சில யோசனைகளைச் சொன்னேன். குறிப்பாக 'நான்-பிளான் எக்ஸ்பெண்டிசரை'க் குறைக்கலாம் என்று சொன்னேன். 1963-64-ம் பட்ஜட்டில் ரெவின்யூ 124 கோடி; செலவு 117 கோடி; பிளான் எக்ஸ்பெண்டிசர் 52 கோடி; நான்-பிளான் எக்ஸ்பெண்டிசர் 67 கோடி, ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் நான்-பிளான் எக்ஸ்பெண்டிசர் 65 கோடிதான். இரண்டு கோடி ரூபாய் மிச்சப்படுத்தியிருக்கிருர்கள். உபரியாக 9 கோடி ரூபாய் வந்திருக்கிறது. அதைப் பிளான் எக்ஸ்பெண்டிசர் ஆகச் செலவு செய்திருக்கிருர்கள். இந்த வருஷ பட்ஜட்டில் ரெவின்யூ 138 கோடி; எக்ஸ்பெண்டிசர் 140 கோடி;
அதிலே பிளான் எக்ஸ்பெண்டிசருக்கு 70 கோடி; நான்-பிளான் 10-00 a.m.
எக்ஸ்பெண்டிசருக்கு 70 கோடி. கடந்த ஆண்டில் ரிவைஸ்டு எஸ்டிமேட் படி நான்-பிளான் எக்ஸ்பெண்டிசரில் இருந்து 5 கோடி அதிகமாக ஒதுக்கியிருக்கிருர்கள். வருகிற ஆண்டிலும் உபரியாக 7 கோடி வரை கிடைக்கும். இந்த வருஷமும் நான்-பிளான் எக்ஸ்பெண்டிசரில் ஜாஸ்தியாகச் செலவு செய்யாமல் கண்காணித்து மிச்சம் பிடிப்பதன் மூலம் அந்தத் தொகையை கொண்டு விவசாயிகளுக்கு உள்ள கஷ்டங்களைப் போக்க வழிகள் இருக்கின்றன என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது நம்முடைய திட்டத்தினுடைய அடிப்படையான கொள்கை. ஆனால் அதைப் பொறுத்தவரையில் நாம் நம் மாகாணத்தைப் பொறுத்தமட்டில் அல்லாமல் இந்தியா பூராவையும் பொறுத்த அளவில் தோல்வியடைந்திருக்கிறோம். இந்தத் தோல்விக்கு என்ன காரணம் என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். மத்திய அரசாங்கம், 'நாங்கள் என்ன செய்வது? விவசாயம் எல்லாம் மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்தது' என்று பழியைப் போடுகிறார்கள். மாநில அரசாங்கமோ விவசாயிகள் பேரிலே பழியைப் போடுகிறது. இவ்வாறு ஒருவர் மேல் ஒருவர் பழியைச் சுமத்துவதிலே இருக்கிறார்களே தவிர, உண்மையான காரணத்தைக் கண்டு பிடிக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை. விவசாயத்தைப் பொறுத்தவரை ஒரு ஸ்திரமான, உறுதியான கொள்கையை, மத்திய அரசாங்கமானாலும் சரி, மாகாண அரசாங்கமானாலும் சரி, கடைப்பிடிக்கவேண்டும். இரண்டு அரசாங்கங்களும் அப்படி ஒரு ஸ்திரமான, உறுதியான கொள்கையைக் கடைப்பிடிக்கத் தவறிய காரணத்தால்தான், விவசாயத் துறையிலே தோல்வி அடைந்தார்கள் என்று நிச்சயமாக நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். எங்கு பார்த்தாலும் விவசாயத்தைப் பற்றிப் பேசப்படுகிறது. சில பேர் கண்ட்ரோல் வேண்டுமென்று சொல்கிறார்கள்; சில பேர் கண்ட்ரோல் வேண்டாமென்று சொல்கிறார்கள். ஸ்டேட் டிரேடிங் வேண்டுமென்கிறார்கள்; வேண்டாமென்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் வேண்டுமென்கிறார்கள் வேண்டாமென்கிறார்கள். 'மிடில் மென்' அதிகமாகப் பணம் சம்பாதித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். உணவு உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால் விவசாயிகளுக்கு ஊக்கம் இருக்கவேண்டும். அவனுக்கு ஊக்கம் இருக்கவேண்டுமென்றால் விவசாயப் பொருள்களுக்கு—மினிமம் காரண்டி—விலை நிர்ணயம் இருக்க வேண்டும். பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அந்தக் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்தது. அதிலே மினிமம் ப்ரைஸ், மாக்சிமம் ப்ரைஸ் இரண்டையும் நிர்ணயிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். குறைந்த பட்ச விலைக்கும் கீழே விலை குறைந்து விட்டால் அரசாங்கம் வாங்க வேண்டும். அதிகபட்ச விலைக்கு மேல் ஏறிவிட்டால் அரசாங்கம் விற்க வேண்டும். அப்போதே சொன்ன இந்த யோசனையை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. அமெரிக்காவில் வெற்றிகரமாக உணவுப் பொருள் உற்பத்தி இருப்பதற்குக் காரணம் மினிமம் பிரைஸ், மாக்சிமம் பிரைஸ் காரண்டி இருப்பதுதான். ரஷ்யாவில் 40 வருஷமாகத் திட்டம் போட்டு, கடைசியில் இப்போது இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்க முயன்றிருக்கிறார்கள்.

இப்போது நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டில் இருக்கிறோம். இந்தியாவில் இதுவரை அந்நிய நாட்டிலிருந்து 1,300 கோடி ரூபாய் அளவுக்கு உணவுப் பொருள்களைத் தருவித்திருக்கிறோம். அந்நியச் செலாவணிக்கு இருக்கும் கஷ்டமான நிலைமையில் இவ்வளவு தொகைக்கு அந்நிய நாட்டிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்திருக்கிறோம். இந்தப் பணத்தை விவசாயத்திற்காகச் செலவு செய்திருந்தால் எவ்வளவோ தூரம் உற்பத்தியைப் பெருக்கி இருக்க முடியும். இந்த விஷயங்கள் எல்லாம் நம்முடைய தலைவர்களுக்குத் தெரியாதது அல்ல. பின் ஏன் அவர்கள் செய்யவில்லை? பயப்படுகிறார்கள். உணவுப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்துவிட்டால் விலை ஏறிவிடும்; நகரப் பகுதியில் இருப்பவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கும்; பல சிக்கல்கள் ஏற்படும்; இன்ப்ளேஷன் வந்து விடும் என்று பயப்படுகிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமை என்ன? இன்றைக்கும் அரிசி விலை அதிகமாகத்தான் விற்கிறது. உற்பத்தி பண்ணுகிற விவசாயிக்குப் பயன் இருக்கிறதா என்றால் இல்லவே இல்லை. மத்தியிலே இருப்பவர்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, நான் சொன்ன கருத்திலே முக்கியமாக அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். நான் முதல் மந்திரி அவர்களை 'நான் ஒரு விவசாயி' என்ற முறையிலே கேட்டுக் கொள்கிறேன். நாம் இந்தத் திட்டத்தை மேற்கொண்டு வெற்றி பெற்றுவிட்டால் அது மற்ற மாகாண அரசாங்கங்களாலும், மத்திய அரசாங்கத்தாலும் பின்பற்றப் படுவதற்கு வழி ஏற்படும். பட்ஜட் உரையிலே அமைச்சர் அவர்கள் 'மத்தியிலே இருப்பவர்களுக்கு அதிகமாக லாபம் போகாமல் பார்த்துக் கொள்ளலாம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எப்படிப் பார்த்துக் கொள்ள முடியும் என்று எனக்கு விளங்கவில்லை. சிவகங்கை தாலுகாவிலுள்ள ஒரு விவசாயிடம் உணவுப் பொருளை வாங்கி சென்னையிலே இருக்கிற ஒரு வியாபாரி பொதுமக்களுக்கு விற்கிற வரையிலே இடையிலே எத்தனை தாகர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கு இருக்கிறதா? டிவிடன்ட் கொடுப்பதா? ஆகவே அதைக் கட்டுப்படுத்த முடியாது. ஸ்டேட் ட்ரேடிங் செய்யலாம் என்று விவசாயி என்ற முறையில் கூறுகிறேன். ஸ்டேட் ட்ரேடிங் பண்ணுங்கள். விவசாயிகளுக்கு உரம், விதைகள், கருவிகள் போன்றவை காலாகாலத்தில் கொடுக்க வேண்டும். பூச்சி மருந்து கொடுக்கப்படுகிறது, ஒரு சிலர் அடிக்கிறார்கள், ஒரு சிலர் அடிப்பதில்லை. காலரா, அம்மை போன்ற தொத்து நோய்கள் வரும்போது எப்படி ஹெல்த் டிப்பார்ட்மெண்டிலிருந்து ஊசி போட்டு அவற்றைத் தடுக்கிறார்களோ அதே போல் இந்த பூச்சி விஷயத்திலும் அரசாங்கமே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். க்ராப் இன்ஷூரன்ஸ், காட்டில் இன்ஷூரன்ஸ் போன்றவற்றை செய்யவேண்டும். பின்னர் தொழில் பற்றி நமக்கு ஒரு கொள்கை இருத்தல் வேண்டும். இப்போது மத்திய அரசாங்கத்திலிருந்து லைசென்ஸ் வாங்குகிறார்கள். உதவி கேட்கிறார்கள் அரசாங்கத்தினிடம், வேண்டிய உதவிகள் அளிக்கப்பட்டும் வருகின்றன. சாதாரணமக்கத்தான் காரியங்கள் நடக்கிறதே

அல்லாது சரியான திட்டம் போட்டு நடக்கவில்லை. இன்டஸ்ட்ரியல் சர்வே செய்யவேண்டும். இதற்கு என ஒரு தனி டிப்பார்ட்மெண்ட் வேண்டும். எந்தெந்தப் பகுதிகளில் தொழில்கள் அமைக்கவேண்டும், எங்கெங்கு எந்தத் தொழில்களை அமைத்தால் மக்களுக்கு பயன் அளிக்கக் கூடியதாகயிருக்கும் என்று பார்த்து அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் இன்டஸ்ட்ரியல் செமினார் நடத்தினார்கள். அரசாங்கமே அவற்றை ஏற்றெடுத்து நடத்த வேண்டும். நிபுணர்களைக் கொண்ட ஒரு டிபார்ட்மென்டை வைத்து அதன் மூலம் மாநிலம் பூராவும் சர்வே செய்து ரிசர்ச், மார்க்கட்டிங், ப்ளான் ப்ராஜக்ட்ஸ் போன்றவற்றை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. திருவேங்கடம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என் திருமங்கலம் தொகுதியில் செட்டிபிள்ளையார்பாளயத்திலிருந்து அரசபட்டிக்கு இடையில் உள்ள செவரக்கோட்டை, தும்பக்குளம், குராயூர் போன்ற கண்மாய்களிலிருந்து மண் வெட்டி எடுத்தால் ஆயிரக்கணக்கான நஞ்சைகளில் நல்ல விளைச்சல் ஏற்பட ஏதுவாயிருக்கும். அடுத்தபடியாக, கல்லுப்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த யானைகஜம் பள்ளத்தாக்கில் ஒரு சிறிய அணை கட்டினால் 20 மைல் தூரத்திற்கு தண்ணீர் போக ஏதுவாக இருக்கும். போன பட்ஜட் விவாதத்தின்போதே இதுபற்றி கூறியிருக்கிறேன். அதைச் செய்து தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கல்லுப்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சில கிராமங்களுக்கு பம்ப் செட்களுக்கு மின்சாரம் வேண்டுமென்று ஏறக்குறைய 1½ ஆண்டுகளுக்கு முன்னதாக மனு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதையும் துரிதப்படுத்தவேண்டுமென்று தங்கள் மூலம் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, விலைவாசி குறைவதற்கு உற்பத்திப் பெருக்கம், குடும்பக் கட்டுப்பாடு திட்டம் இவற்றை தீவிரப்படுத்தவேண்டுமென்பது உண்மையே. சில நகரங்களில் பெரிய வியாபாரம் உள்ள நகரங்களில் வியாபாரிகள் சங்கம் சேர்ந்து கொண்டு விவசாயிகள் கொண்டு வரும் தானியங்களை இன்ன விலைக்குத்தான் வாங்கவேண்டுமென்று ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். அதோடு அவற்றை வாங்கி இன்ன விலைக்குத்தான் விற்பது என்பதுபற்றியும் ஒப்பந்தம் செய்து கொள்வதால் விலையை இறங்க விடாமல் செய்கிறார்கள். ஆகவே வியாபாரிகளை கண்காணிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, எங்கள் பஞ்சாயத்து யூனியனில் ஐந்து ஓவர் ஹெட் டாங்க்ஸ் கட்டியிருக்கிறோம். அழகாக நல்லமுறையில் அவை முடிந்திருக்கிறது. ஒன்றைத் தவிர மற்ற நான்கிலும் தண்ணீர் சப்ளை செய்ய முடியாத நிலை இருக்கிறது. இன்னும் கிணறுகள் வெட்டவில்லை. அப்படி கிணறுகள் வெட்டினாலும் தண்ணீர் வராது. ஆகவே இவற்றை வீணாக்காமல் டிப்பார்ட்





மெண்ட்டிலிருந்து பார்த்துக் கொள்ளவேண்டும். ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் கள்ளிக்குடி பஞ்சாயத்து யூனியன் ஜீப்பை கமிஷனர் பழக வேண்டுமென்று எடுத்துப் போய் ஒரு கிராமத்தில் ஒரு பாலத்தை நொறுக்கி விட்டார்கள். அதனால் அந்த ஜீப்பும் சேதம் அடைந்தது. அந்த கிராம வாசிகளுக்கு அந்த ஜீப் போனதுபற்றிக் கூட கவலை இல்லை. பாலம் நொறுங்கி விட்டதால் ஊருக்குள்ளே செல்ல பாதையில்லை. ஆகவே பாலம் நொறுங்கி விட்டது என்று தந்தி அடித்தார்கள் கலெக்டருக்கு. நானும் சென்று கலக்டரைப் பார்த்துக் கூறினேன். அதுகுறித்து ஆர்.டி.ஓ. மூலம் பஞ்சாயத்து யூனியனிடம் ரிப்போர்ட் கேட்டு கடைசியில் ஆக்ஸிடன்டே ஆகவில்லை என்ற ரிக்கார்ட் வைத்திருக்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் விசாரிக்க வந்தால் என்னால் நிரூபிக்க முடியும். கலெக்டரிடமும், ஆர்.டி.ஓ. யிடமும் விசாரிக்க வேண்டுமென்று சொன்னபோது விசாரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். பேப்பர் எப்படியிருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்களின் சுற்றுப்பிரயாணம் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். டூர் ப்ரோக்ராம் அனுப்புகிறார்கள். அமைச்சர்கள் புறப்பட்ட பின்னர்தான் டூர் ப்ரோக்ராம் புறப்படுகிறது. ஆகவே இரண்டு மூன்று தினங்கள் தாமதமாகி வருகிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். திரு. மஜீத் அவர்களும், ஜோதி அம்மாள் அவர்களும் வந்திருந்தார்கள் என் தொகுதிக்கு. கடைசி வரை எனக்கு தகவல் இல்லை. ஜனவரி 25-ம் தேதி எங்கள் பஞ்சாயத்து யூனியனில் வரவேற்பு கொடுத்திருக்கிறார்கள். அத்தகவல் கடைசிவரை எனக்குத் தெரியாது. திரு. சுவாமிதாஸ் அவர்கள் கூறியதுபோல் சட்டசபை அங்கத்தினர்கள் கூட இருந்தால்தான் விஷயங்களைக் கலந்து காரியங்களைச் செய்ய ஏதுவாகயிருக்கும். ஆகவே இப்படிப்பட்ட தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ரா. ராஜகோபாலசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் இந்த சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் தங்களது அனுபவத்தினாலும், திறமையினாலும் நல்லதொரு நிதிநிலை அறிக்கையை சமர்பித்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்றாகும். குறிப்பாக அதில் விலைவாசிப்பிரச்னை பற்றியும், பரிகார நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துரைத்திருக்கிறார்கள். விவசாயிகள் நலனில் மிக அக்கரை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். உணவு தான்யக் கொள்கை பற்றியும் நல்ல விதத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டம், குறைந்தபட்ச பென்ஷன் திட்டம், போன்றவை பற்றி எடுத்துரைத்திருக்கிறார்

கள். முதியோர் பென்ஷன் திட்டத்தை விரிவாக்கி கூடுதல் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஜனநாயக சோஷியலிசம் பற்றி சமவாய்ப்பு பற்றி நல்லமுறையில் எடுத்துரைத்திருக்கிறார்கள். மேலும் 11-வது வகுப்பு வரைக்கும் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்க வேண்டிய விஷயம். இததோடு கல்லூரிகளைப் பொறுத்த வரையில் நமது மாகாணத்தில மேலும் ஐந்து கல்லூரிகள் ஏற்படுத்தப்போவதாக சொல்லியிருக்கிறார்கள. இது மிகவும் வரவேற்க வேண்டியதொன்றாகும். இப்படியாக பல நல்ல காரியங்களை செய்வதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு புதிய திட்டங்களை ஆரம்பிக்கப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை இன்னும் நல்ல பெருக்கம் காண வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நெல்லூர் அரிசி சென்னையில் போதிய அளவு கிடைப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. இதில் குறிப்பாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நமது மாகாணத்திலும் நெல்லூர் நெல்லை அல்லது அதற்கு ஒப்பான நெல்லை நமது மாகாணத்திலே விவசாயத் துறையின் ஒத்துழைப்போடு பயிர் செய்யவேண்டும். அதை செய்து முடித்தால் இந்தக் கஷ்டம் இல்லாமல் போகும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் கூடுதல் பணம் செலவானாலும், இந்தத் திட்டம் பல நோக்கங்களைக் கொண்டதாகவும், முற்போக்கானதாகவும் உள்ள நல்லதொரு திட்டமாக அமையும். மின்விசையும், நீர்ப்பாசன வசதியும் நல்லபடியாக கிடைக்கும் என்று தெரிகிறது. இதன் மூலம் 2 லட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் என்றும் 1,80,000 கிலோவாட் மின்சாரம் கிடைக்கும் என்றும் தெரிகிறது. இந்தத் திட்டம் செயல்படுவதைப் பார்த்தால் இந்தத் திட்டத்திற்கு விஜயம் செய்திருந்த நமது மத்திய சர்க்கார் பாசன மின்சார அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் நமது மாநில எஞ்சினியர்களை மிகவும் பாராட்டியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட திட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்றுவதற்காக கேரள சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்தி, எவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்ற முடியுமோ, அவ்வளவு தூரம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக இந்தத் திட்டத்தினால் பயனடையும் மக்களின் சார்பாக நான் அரசாங்கத்தைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். விவசாய உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாய உற்பத்தியை பெருக்கித்தான் ஆகவேண்டும். இதை ஒரு இன்டென்ஸிவ் டிரைவ் முறையில் ஏதாவது வழிமுறைகள் ஏற்படுத்தினால்கூட அது மிகையாகாது என்றுதான் சொல்ல வேண்டும். காரணம் என்னவென்றால் இன்றைய விவசாயிகள் நிலைமையைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள்





நன்றாக அறிவார்கள். நேற்றையதினம் பேசிய சுதந்திராக் கட்சித் தலைவர் கனம் திரு. சா. கணேசன் அவர்கள், விவசாயப் போட்டியில் தேர்ச்சி பெறுபவர்களை தேர்ந்தெடுப்பதற்காக ஒரு சென்ட் நிலத்தில் அறுவடை செய்து கண்டுமுதல் பார்த்து பரிசு கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் தெரியாமல் சொல்லியிருக்கிறார்கள் என்று எண்ணுகின்றேன். குறைந்தது 50 சென்ட் நிலத்தை அறுவடை செய்து கண்டு முதல் செய்து கணக்கிடுகின்றார்கள். அவர்கள் சொல்வது போல் ஒரு சென்ட் நிலத்தில் அல்ல. அதோடு இதற்கென்று ஒரு சில சட்ட திட்டங்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலிப்பதற்காக பிளாக் லெவலில் அதிகாரிகளும் பொதுமக்களும் அடங்கிய குழு இருக்கிறது. அதே போன்று ஜில்லா மட்டத்திலும் ஒரு குழு இருக்கிறது. அதே போன்று மாநிலம் முழுவதற்குமாக ஒரு குழு இருக்கிறது. இதன் மூலமாக விவசாயிகள் நல்லபடியாக இன்டென்ஸிவ் மெதட் ஆஃப் கல்டிவேஷன் முறையில் விவசாயம் செய்து உற்பத்தியை பெருக்குவதற்கு வசதியாக இருக்கிறது. இதை எல்லோரும் வரவேற்கவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு சர்க்காரால் பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பதினைந்து வருடங்களுக்கு முன்னால் இருந்த நிலைமை என்ன? பதினைந்து வருடங்களுக்கு முன்னால் விவசாயிகள் எந்த முறையில் விவசாயம் செய்து கொண்டு வந்தார்கள். இதை எல்லாம் நாம் சிறிது ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்போது அரசாங்கத்தில் விவசாயிகளுக்கு பல சலுகைகள் கொடுக்கிறார்கள். பொறுக்குவிதை என்றால் அதை கொடுக்கிறார்கள், பூச்சி மருந்தை எடுத்துக்கொண்டால் பாதி விலையிலோ அல்லது முக்கால் விலையிலோ கொடுக்கிறார்கள். அது மட்டுமல்ல. விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீரை தேவைப்படுகின்ற நேரத்தில் அமைச்சர் அவர்களிடத்தில் வந்து மன்றாடி கேட்டுக்கொண்டால் குறிப்பிட்ட நாட்களுக்கு அணைகளிலிருந்து தண்ணீர் கொடுக்கிறார்கள். இதற்காக நாம் அரசாங்கத்தை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். எப்படியிருந்தாலும் விவசாயிகளுக்கு பல குறைகள் இருந்து கொண்டேதான் இருக்கும் முக்கியமாக நாட்டிலுள்ள மக்கள் முன்னேற, முன்னேற தேவைகளும் பெருகிக்கொண்டே போகிறது. முக்கியமாக விவசாயச் செலவு அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள் தம்முடைய உரையில் விவசாயிகளுக்கு எந்தவிதமான கஷ்டமும் அரசாங்கம் கொடுக்க முன்வராது என்று சொல்லியிருக்கிறார்கள். தற்காலம் செலவு சற்று கூடுதலாக இருந்தாலும், நாளடைவில் நிச்சயமாக பலன் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. விவசாயிகளுக்கு ஏற்படும் குறைகளை அவ்வப்போது அரசாங்கம் நிவர்த்தி செய்யும் என் நம்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் என்னுடைய பகுதியில் நிறைவேறிக்கொண்டு

வருகிறது. இதில் முக்கியமாக உடுமலைப்பேட்டை பகுதியில்
கிழுவங்காடு போன்ற சில இடங்கள் விடப்பட்டிருக்கின்றன.
அவைகளுக்கும் பாசன வசதி செய்து கொடுப்பதற்காக சேர்த்துக்
கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவையைப்
பொறுத்தவரையில், தொழில்களிலும், மற்ற விஷயங்களிலும்
அது முன்னுக்கு நிற்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த
விஷயம். ஆனால் ஒரே ஒரு குறை இருந்து கொண்டிருக்கிறது. அதா
வது அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி இல்லாமல் இருப்பதுதான்.
ஆகவே அங்கே உடனடியாக ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்து
வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு
பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி
தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி செகதாம்பாள் வேலாயுதம்:** மதிப்பிற்குரிய சட்ட
மன்றத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு நிதிநிலை
அறிக்கையில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு என்
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது உடையார்பாளையம்
தாலுகா மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. ஜனத்
தொகையை எடுத்துக் கொண்டாலும் அதிகமாக இருக்கிறது.
சென்னையிலிருந்து போகக்கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்ஸை ஜெயங்
கொண்டம், அரியலூர் வழியாக திருச்சிராப்பள்ளிக்குப் போவ
தற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் குடிதண்ணீர் நிலைமை மிகவும்
கஷ்டமாக இருக்கிறது. கொள்ளிடத்திலிருந்து குழாய் மூலம்
தண்ணீர் கொண்டு வந்து இந்தக் கஷ்டத்தை ஓரளவு நீக்க
முடியும். இதைப்பற்றியும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இப்போது
ஜெயங்கொண்டத்திலிருந்துவரும் மருத்துவமனையை விரிவு
படுத்த வேண்டும். இதற்காக மூன்றேகால் லட்சம் ரூபாய்
சாங்ஷன் செய்திருப்பதாக தெரிகிறது. இருந்தும் நாளது வரை
எந்த வசதியும் செய்து கொடுக்கவில்லை என்பதை வருத்தத்துடன்
தெரிவித்துக்கொள்வதோடு, உடனடியாக இந்த மருத்துவ
மனையை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் பஞ்சாயத்து யூனியன்
பிரதேசத்தில் டெலிபோன் வசதி செய்து கொடுக்கவேண்டும்
என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஜெயங்கொண்டம். பஸ்
ஸ்டாண்டில் ஒரு மணிக் கூண்டு வைக்க வேண்டுகிறேன். ஆண்டி
மடம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் பஸ்கள் எல்லாம் கண்ட
இடத்தில் நிற்க வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆகவே பொது
வாக பஸ்கள் எல்லாம் நிற்பதற்கு ஒரு பொது பஸ் நிலையம்
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டத்தில் பெண்கள் படிப்பதற்கான வசதியை
செய்து கொடுக்கின்ற வகையில் இலவச விடுதி வசதி செய்து
கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும்
ஜெயங்கொண்டம் பகுதிக்கு மின்சார வசதி சரியான முறையில்



கிடைக்கவில்லை. இதற்கான போஸ்டே இன்னும் நடாமல் இருக்
கிறது. ஆகவே இதைப்பற்றி கவனம் செலுத்தவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். மேலும், உடையார்பாளையம் தாலுகாவில்
பல கிராமங்களிலும் குடிசை வாழ் மக்கள் அதிகமாக இருப்ப
தால் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. ஆகவே இதை தடுக்
கின்ற முறையில் அங்கே உடையார்பாளையம் தாலுகாவில் ஒரு தீ
அணைக்கும் படையை நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

மேலும் ஜெயங்கொண்டத்தில் முதலியார் தெருவில் தண்ணீர்
குட்டை ஒன்று இருக்கிறது. இதில் அடிக்கடி மணல் அடித்து
தூர்ந்து விடுவதால் தண்ணீர் நிறைவதற்கு வசதி இல்லாமல்
இருக்கிறது. இதில் தண்ணீர் தேங்கி இருந்தால் குடி தண்ணீர்
கஷ்டம் ஓரளவு நீங்கும். ஆகவே இதை நல்ல முறையில் தூர்
எடுத்து சீர்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். உடையார்பாளையத்திற்கு தெற்கே 3 மைல் தொலைவில் 10-30 a.m.
உள்ள சோழங்குரிச்சி கிராமத்தில் பஞ்சாயத்து யூனியன் ரோடு
எடுத்திருக்கிறார்கள். ரோடு வண்டிகள் போக முடியாத நிலையில்
இருக்கிறது. அந்தப் பகுதியில் சவுக்கை கட்டைகள் இருக்கிற
காரணத்தினால் அந்த சவுக்கை கட்டைகளை கொண்டு வர
இயலாத நிலை இருக்கிறது. இங்கே ஒரு பாலத்தை அமைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தாலுகா ஜனத்தொகை அதிகமாக இருக்கின்ற தாலுகா
வாக இருக்கிற காரணத்தினால், இப்போது 12 தொழில்
பேட்டைகள் நிறுவுவதாகக் கேள்விப்படுகிறேன், என்னுடைய
தாலுகாவில் ஒரு தொழில் பேட்டையை ஆரம்பிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குறைகளையெல்லாம் கனம் முதல் அமைச்சர் அவர்கள்
பெரிய மனது வைத்து தீர்த்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த கனம்
சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு
என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** கனம் சபாநாயகர்
அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள
வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் வகையிலே ஒரு சில
வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் வரவு-
செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும்போதும் அதில் ஏதோ விசேஷ
அதிசயங்கள் காணவேண்டும் என்ற கருத்து கொண்டு, 'இதில்
உப்பொன்றுமில்லை, சப்பொன்றுமில்லை, காரம் ஏதும் இல்லை'
என்று பலவாறாக முதலில் குறிப்பிடுகிறார்கள். வரி இல்லை என்று
சொன்னால், 'போதிய அளவுக்கு மக்கள் மீது வரிகளைச் சுமத்தி
யாகி விட்டது, இனிமேலும் வரி சுமத்த சந்தர்ப்பங்களோ, அதற்
கான வாய்ப்புகளோ இல்லாத காரணத்தினால் இப்போது வரி
யேதும் சுமத்தப்படவில்லை, அதை ஒரு பெரிய சலுகையாகவோ,

நாட்டுக்கோ மக்களுக்கோ செய்த நன்மையாகவோ எடுத்துக் கொள்ள முடியாது' என்று இவ்வாறாக வரவு-செலவுத் திட்டத்திற்குப் பாதகமாக தங்களுடைய மனத்திலே உள்ள அதிருப்திக்கு என்னென்ன காரண காரியங்களைக் கூறி அதற்காக அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமோ அவ்வாறெல்லாம் சபையிலே பேசப்படுவதை நாம் பார்க்கிறோம். இந்த விவாதத்திலே பல்வேறு திட்டங்களை, கொள்கைகளைப் பற்றி எல்லோரும் சொன்னார்கள். முக்கியமாக விவசாயப் பிரச்னை பற்றி மட்டுமே சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு, நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் விவசாயத் தொழில் மற்ற தொழில்களைப் போன்று லாபகரமாகச் செய்யக் கூடிய தொழில்தான் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க இயலாது. அதனால்தான் விவசாயத்திலே விளைவு அதிகரித்தும் இருக்கிறது. அதனால்தான் விவசாயத் தொழிலில் பலரும் நாட்டம் செலுத்துகிறார்கள். அதனால் நாட்டிலே தொழில்களுக்கான வாய்ப்புகளும், நல்வாழ்வும் விவசாயிகளுக்கு ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் பெருகி வந்திருக்கின்றன. ஆனால் மொத்தமாக எதிர் தரப்பிலே சொல்லப்படுகிறது, 'சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் மக்கள் என்ன அனுகூலம் அடைந்தார்கள்? என்ன பிரயோசனம் ஏற்பட்டிருக்கிறது? விவசாயிகளுக்கு என்ன பிரயோசனம் ஏற்பட்டிருக்கிறது?' என்று இந்த முறையில் முக்கியமாக கிராம விவசாயிகளைப் பற்றியே பேசப்படுகிறது. அரிக்கு, விளைபொருள்களுக்கு, உணவுப் பொருள்களுக்கு விலைகள் ஏறிவிட்டன என்று சொல்லப்படுகிறது. கனம் அங்கத்தினர் சசிவர்ண தேவர் அவர்கள் பேசும்போது கூட குறிப்பிட்டார்கள். எல்லாவிதமான புன்செய் தானியங்களையும் கூட எல்லோரும் உபயோகிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் அதற்கான வழிவகைகளைக் கையாளவேண்டும் என்று சொன்னார்கள். அதுவும் நல்லதுதான். அரிசிக்கு மிகுந்த கிராக்கி ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்று யோசித்துப் பார்க்கவேண்டும். கிராமங்களில் முன் நாளில், சுதந்திரம் வருவதற்கு முன், அன்றாடம் வேலை செய்கிறவர்களுக்கு தானியமாகக் கூலி கொடுப்பது உண்டு. அப்படிக் கொடுப்பதில் நெல் கொடுத்தால் வாங்க மாட்டார்கள் கூலி வேலை செய்கிறவர்கள். 'அது கட்டுப்படியாகாது, குடும்பத்தில் அதிக நபர்கள் இருக்கிறார்கள், புன்செய் தானியமாகக் கொடுத்தால்தான் கஞ்சியாகக் காய்ச்சி சாப்பிட உபயோகமாக இருக்கும்' என்று சொல்லுவார்கள். நெல்தான் கொடுப்போம் என்று சொல்லி வேலை செய்ய கூப்பிடுகிறவர்களுக்கு வேலை செய்யவும் மறுத்து விடுவார்கள். ஏதாவது விசேஷம் அல்லது பண்டிகை நாளில் நெல் வாங்கிக்கொள்வார்கள். தானியமாகத் தான் கொடுப்பது வழக்கம் அப்போது. கிராமங்களில்கூட இப்போது அரிசியையே விரும்பும் பழக்கம் அதிகப்பட்டு விட்டது. காரணம் என்ன? கம்பு என்றால் அந்த தானியத்தை எடுத்து அதை கஞ்சியாகக் காய்ச்ச வேண்டுமானால் கம்பை இடித்து, வெய்யிலிலே வைத்து, இன்னும் என்னென்னமோ செய்து, ஒவ்





வொன்றுக்கும் அவகாசம் கொடுத்து அதைச் சமைக்கவேண்டும். அதே போல சோளத்தை எடுத்துக்கொண்டால் சோளச் சோறு, சோளக் கஞ்சி என்று இரண்டு விதமாகச் செய்வார்கள். வரகு என்று எடுத்துக்கொண்டால் வரகை பொங்குவது உண்டு, அல்லது வரகை வடிப்பதும் உண்டு. இதே முறை குதிரைவாலிக்கும் பொருந்தும், சாமைக்கும் பொருந்தும். இவ்வாறு பல்வேறு வழிகளில் பல்வித பக்குவத்தோடு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக வீட்டிலே யாராவது காத்திருந்து வெய்யிலிலே வைக்க வேண்டும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வீட்டிலே எடுத்து வைக்கவேண்டும், எந்த சந்தர்ப்பத்திலே உப்பு கலந்து புளிக்க வைக்கவேண்டும் என்றெல்லாம் இருப்பதை கவனித்து அதற்குத் தக்கபடி செய்யவேண்டும். புன்செய் தானியங்களை பக்குவம் செய்ய வீட்டிலே சில பேர்கள் காத்திருக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போது வேலைகளெல்லாம் அதிகரித்து வருகிறது. விவசாயத்திற்கான வேலைகளெல்லாம் அதிகரித்து வருகிறது. வேலை செய்து விட்டு மாலை 5 மணிக்கு வீட்டுக்குத் திரும்புவது, உடனே அரை மணி நேரத்தில் அரிசி மற்றும் அதற்கு வேண்டிய பண்டங்களை வாங்கி வருவது, அரிசி வாங்கப் போவதற்கு முன் பாகவே கூட உலையில் நீரைப் போட்டு விட்டுச் சென்றால், திரும்பி வந்தவுடன் நீர் காய்ந்துகொண்டிருக்கும். காய்ந்துகொண்டிருக்கிற நீரில் அரிசியைக் களைந்து கொட்டினால் சில நிமிஷங்களில் சோறாக ஆகி விடுகிறது, அதோடு ஏதோ குழம்பு, கறி வைத்து எல்லாம் ஒரு மணியில் முடித்து விடுகிறார்கள். இது மிகவும் சுலபமாக இருக்கிறது என்று நகர்ப்புறத்தில் இருக்கிறவர்கள் கருது கிறார்கள். இதே நிலை கிராமத்திலும் பரவி வருகிறது. இப்படி பல்வேறு வேலைக்குச் செல்லக் கூடியவர்கள் ½ மணி நேரத்தில் உணவு தயாரிக்கும் வேலையை முடித்து விட்டு, சாப்பிட்டு விட்டு எல்லோரும் படக்காட்சி ஆகிய பொழுதுபோக்குகளுக்கு தொழிலாளர்களும் மற்றவர்களும் போய்க்கொண்டிருக்கிறார்கள்.. கிராமங்களிலும் இந்த நினைப்பை உடையவர்கள் அதிகரித்து வருகிறார்கள் என்று சொல்லவேண்டும். நாகரீகத்திலே தீமைக்கோ அல்லது நன்மைக்கோ கிராமங்களிலே கூட நிரந்தர சினிமா தியேட்டர்கள் கட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன, கட்டப் பட்டும் வருகின்றன. அதோடு கூட தாற்காலிகமாக அமைக்கப் படும் சினிமா தியேட்டர்கள் வேறு பெருகிக்கொண்டு வருகின்றன. இதன் காரணமாக சேமித்து வைத்துக்கொள்ள சந்தர்ப்பங்கள் கூலி வேலை செய்கிறவர்களுக்கு ஏற்படுவதில்லை, விவசாயிகளுக்குக் கூட ஏற்படுவதில்லை. நாகரீகம் என்ற தவறான மனப்பான்மையால் தேவையற்ற பண்டங்களை அதிகமாக வாங்காமல் சிக்கனமாக வாழ்க்கை நடத்தவேண்டுமென்ற நிலைமை விவசாயிகள் வீடுகளில் குறைந்து கொண்டு வருகின்றன. நாகரீகம் என்ற பெயரில் மவுண்ட் ரோட்டில் இருக்கும் எல்லாப் பொருள்களும், எல்லா கண்கவர் பொருள்களும் நாம் வாங்கி துய்ப்பதற்காகத்தான் இருக் கின்றன, மனிதன் வாங்கி அனுபவிப்பதற்குத் தான் இருக்கின்றன, நம் மீது இறக்கப்பட்டுத்தான் இதையெல்லாம் வாங்கி வைத்திருக் கிறார்கள் என்று மனிதர்கள் நம்பக் கூடிய வகையில்

எல்லோரும் வாங்கி உபயோகிக்கவேண்டுமென்ற ஆசைகள் ஏற்பட்டு வருகின்றன. வாழ்க்கைக்கு அத்தியாவசியப்பொருள்களை மட்டும் வாங்கி உபயோகிப்பது என்பது அரிதாகி வருகிறது. சென்னையில் வாழ்கிறவர்கள், அரசாங்க காரியாலயங்களில் வேலை செய்கிறவர்கள், மற்ற இடங்களில் வேலை செய்கிறவர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடியவர்கள் மாலை நேரங்களில் உணவுப் பண்டங்களை தாங்களாகத் தயார் செய்து கொள்ளுவது குறைந்து வருகிறது என்பது சென்னைக்கு அடிக்கடி வருகிற நமக்குத் தெரிகிறது. குறைந்த வருமானம் இருக்கிறவர்கள் கூட மாலை நேரத்தில் தம்பதி சமேதராக, குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்குச் சென்று இரவு நேரத்தில் வீட்டில் உணவு ஏதும் தயாரிக்காத நிலையில் மாலையிலே சாப்பிட்டுக் கொள்ளும் பழக்கத்தைப் பார்க்கிறோம். இவ்வாறு பார்க்கும்போது உணவுப் பண்டங்களின் விலை ஏறுவது இந்தக் காரணத்தினால் ஏற்பட்டு விட்டது. முன்னால் நல்லெண்ணை, விளக்கெண்ணெய் ஆகியவைகளை வீட்டில் வாங்கி வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்திய குடும்பங்கள் எத்தனை இருந்தன என்பதை 50 அல்லது 60 வயது உள்ளவர்கள் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். எண்ணெய் சிட்டி வீட்டிலேயே கிடையாது. பழைய காலத்தில் ஒரு அணாவுக்கு 12 பைசா இருந்த காலத்தில், ஒரு பைசா மீதம் இருந்தால் அதற்காகக் கொஞ்சம் எண்ணெயை வாங்கி தலையில் தேய்த்துக்கொண்டு போவார்கள். 100 வீடுகளில் 10 வீடுகள், 5 வீடுகளில் கூட அன்றாட உபயோகத்திற்காக 1 படி ½ படி நல்லெண்ணெய் வாங்கி வைத்துக்கொள்கிற பழக்கம் இல்லை. தினந் தோறும் ஜீரகம், புளி போன்ற சமையலுக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் உபயோகத்தில் இருக்குமா என்பது சந்தேகம். ஒரு வருஷத்திற்கு ஒரு முறை, இரண்டு முறைதான், பண்டிகை சந்தர்ப்பங்களில்தான் எல்லாப் பொருள்களையும் கொண்டு அவர்கள் சமையல் செய்து ருசியாக சாப்பிடுவார்கள். அவ்வாறு நிலைமை அந்தக் காலத்தில் இருந்தது. ஆனால், இப்பொழுது எந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது? ஒவ்வொரு வீட்டிலும் சென்று பார்த்தோமானால், எல்லாவிதமான எண்ணெய்களையும் வாங்கி வைப்பதற்கு பாட்டில்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அந்தஸ்துக்குத் தகுந்தமாதிரி இதனால் விலை ஏற்றத்திற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. விலை ஏற்றம், விலை ஏற்றம் என்று பேசக்கூடியவர்கள் அந்தக் காலத்தில் இருந்த நிலைமை என்ன, அப்பொழுது வீடுகளில் என்னென்ன பொருள்கள் இருந்தன, இப்பொழுது என்னென்ன பொருள்கள் இருக்கின்றன என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். மனிதனுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகிற உணவுப் பண்டங்கள் எல்லா வீடுகளிலும் உபயோகப்படுத்தாமல் இருந்த நிலை அப்பொழுது இருந்தது. ஆனால், அந்தப் பொருள்கள் இன்றையதினம் ஒவ்வொரு குடும்பத்திலும் உபயோகப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் நாளுக்கு நாள் அந்தப் பொருள்



களின் உபயோகம் அதிகப்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக விலை ஏற்றம் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

விவசாய உற்பத்தியை அதிகரிக்கவில்லை என்று அரசாங்கத்தைக் குறை கூறுவது ஒரு சம்பிரதாயமாக ஏற்பட்டுவிட்டது. அதற்கான வழிவகைகளை அரசாங்கம் எடுத்துக் கூறியிருக்கிறது. விவசாயப் பயிர்களுக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால் அதற்கான மருந்து கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய உரம் தரப்படுகிறது. விவசாயிகள் புதிய புதிய சாகுபடி முறைகளைக் கையாளவேண்டும். உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு சொல்லக்கூடிய யோசனைகளை எவ்வளவு தூரம் கிராமத்திலுள்ள விவசாயிகள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை சட்டமன்ற அங்கத்தினர்கள் கவனிக்கவேண்டும் என்று தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் என்ன இருக்கின்றன, விவசாயப்பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் யாவை, புதிய முறைகளை விவசாயிகள் கையாளுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்கு வெளியே எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை, பொது மக்கள் அந்தத் திட்டங்களின் மீது நம்பிக்கை கொண்டு அந்த வழிமுறைகளை பின்பற்றி, விவசாயப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கான முயற்சியில் எத்தனை பேர்கள் இந்த மன்றத்திற்கு வெளியே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கு மாறாக, அரசாங்கம் வகுக்கக்கூடிய வழிகளில், அவர்கள் செய்யும் முறைகளில் நம்பிக்கை ஏற்படாமல், அவர்களை அதிருப்திக்காரர்களாக ஆக்கும் வழியிலே செயல்படக்கூடாது. சர்க்கார் வகுக்கக்கூடிய திட்டங்களை விவசாய மக்கள் ஏற்றுக் கொண்டு, அவைகளைக் கையாளும் வழியில் பிரசாரம் செய்ய வேண்டும். அவர்கள் மனதை அதிருப்திப் படுத்தி அவர்களை வேறு பக்கத்தில் திருப்பக்கூடிய வழியில் பிரசாரம் இருக்கக்கூடாது. அரசாங்கம் வகுக்கும் வழிவகைகளை, புதிய திட்டங்களை மக்கள் ஏற்றுக்கொண்டு அவைகளை நிறைவேற்றும்படியான முறையில், ஆக்க ரீதியிலே அவர்களுக்கு என்ன யோசனைகளைச் சொல்ல வேண்டுமோ அந்த முறையிலே சொல்லவேண்டும் நாட்டின் நன்மையைத்தான் கருத்தில் கொள்ளவேண்டும். கட்சி வேறுபாடுகள் ஒருபுறம் இருக்கட்டும். நாட்டில் உணவு உற்பத்தி அதிகமாகப் பெருக வேண்டும். விலை ஏற்றம் அதிகமாக இருக்கிறது. விலைவாசி குறைய வேண்டும் என்பதை மனதில் கொண்டு அதற்கான திட்டங்களை வகுத்துக்கொண்டு பொது மக்களுக்கு நல்ல ஆலோசனைகளை ஆக்க ரீதியிலே கூறவேண்டும். பொது மக்களின் எண்ணத்தை திட்டத்திற்கு இணக்கமான வகையிலே திருப்ப வேண்டும், அவர்கள் ஆக்க ரீதியிலே செயல்படும்படியான முறையிலே நாம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் உற்பத்தியை அதிகப்படுத்தி விலைவாசியைக் குறைக்க முடியும், நல்ல காரியங்களை, நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும் நம்முடைய மாறுபட்ட எண்ணங்களை தொடர்ந்து வைத்துக்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [7th March 1964

கொண்டு உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான இணைப்பான முயற்சிகளை எடுப்பது மிகவும் குறைவாக இருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, நாம் எல்லோரும் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு முக்கியமாக பயிர் பாதுகாப்புக்காக இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று நாம் யோசித்துக்கொண்டிருக்கிறோம். டிராக்டர்கள் வாங்குவதற்கும், மற்றபடி உரம் முதலியவைகள் வாங்குவதற்கும் கடன் கொடுக்கப்படுகிறது. டிராக்டர்கள் வைத்துக்கொள்பவர்கள் 'ட்ரெயிலர்'கள் வைத்துக்கொள்ளவேண்டுமென்றால், அதற்கு அவர்கள் தனியாக லைசென்ஸ் வாங்கவேண்டும். அதனால் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மற்ற வகைகளில் உதவி செய்தும், பிரத்தியட்ச அனுபவத்தில் பார்க்கும்பொழுது மேலும் இம்மாதிரி சிறிது அளவு உதவி செய்யாமல் இருப்பதன் காரணமாக அதிருப்தி ஏற்படுகிறது. அதற்குச் சரியான பரிகாரம் காணுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பல இடங்களில் போலீஸ் ஸ்டேஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சில இடங்களில் ரோடு கிடையாது. மிகவும் பிற்போக்கான நிலைமையில் உள்ள இடங்களில் போலீஸ் ஸ்டேஷன்கள் அமைக்கப்பட்டும், அங்கு போக்குவரத்திற்கான வசதியும், மற்ற வசதிகளும் இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் ரோடுகள் போடுவதற்கு வசதியற்ற நிலைமை இருந்தால் அரசாங்கமே அப்படிப்பட்ட இடங்களுக்கு ரோடு போடுவதற்கான வேலைத் திட்டங்களை எடுத்துக் கொண்டு சீக்கிரம் அந்த ரோடு வேலைகளை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. சேனாபதி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே அபிவிருத்தி திட்டங்களுக்காக நிறைய பணம் ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டக்கூடிய அம்சமாகும். அதோடு சமுதாய முன்னேற்றத்திற்காக, ஆசிரியர்களுடைய முன்னேற்றத்திற்காக இதிலே நிறைய பணத்தை ஒதுக்கி அவர்களுடைய மேம்பாட்டிற்கு வழிவகை செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். மேலும், நமது முதல் அமைச்சர் அவர்கள் கல்வித் துறையில் எல்லோருக்கும் 11-வது வகுப்பு வரையில் இலவசக் கல்வி போதிக்கப்படும் என்று குறிப்பிட்டிருப்பதானது மிகவும் பாராட்டுக்குரிய விஷயம். அதிலே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், 11-வது வகுப்பு வரைக்கும் படித்த பிறகு அவர்களுக்கு ஏதாவது ஒரு வேலை கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். அந்த முறையிலே கல்வித் துறையில் சீர்திருத்தம் செய்வது மிகவும் அவசியம் என்று நினைக்கிறேன். முன்காலத்தில் கிராமத்திலுள்ள குடிமகன் தன்னுடைய பையன்களை கிராமத்திலேயே விவசாயத்திற்கு உதவியாக வைத்துக்கொண்டு காலக்ஷேபம் நடத்தி



7th March 1964] [திரு. அ. சேனாபதி கவுண்டர்]

வந்தான். இப்பொழுது படிப்பு இலவசமாக அளிக்கப்படும் பொழுது அவர்கள் பையன்களை பள்ளிக்கு அனுப்பிவிடுவார்கள். ஆகவே விவசாயத்திற்கு வேண்டிய ஆட்கள் கிராமப்புறங்களிலே இல்லை. படித்த பிறகு அவர்களுக்கு விவசாயத்தில் அக்கறை இருக்குமா என்றால் நிச்சயமாக இல்லை. அவர்கள் கை கால்களை உபயோகித்து வேலை செய்வதற்குத் தயாராக இல்லை. ஏதோ ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டு குமாஸ்தா வேலை பார்ப்பதற்குத்தான் தயாராக இருக்கிறார்கள். யாருடைய தலையிலாவது பொறுப்பை சுமத்திவிட்டு சௌகரியமாக இருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். அவர்கள் 11-வது படித்த பிறகு அவர்களே ஒரு தொழில் செய்து சொந்தமாக சம்பாதித்துச் சாப்பிடக்கூடிய அளவுக்கு, பெற்றோர்களுக்கும் பெரியோர்களுக்கும் விவசாயத் தொழிலில் உதவியாக இருக்க அவர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு வழி வகுத்துக் கொடுத்தால், அவர்கள் படிப்பு நன்றாக அமையும். தொழிலாளி மகனாக இருந்தால் தொழில் துறையில் அவன் ஈடுபட்டு சம்பாதிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும். படித்த பிறகு வேலை இல்லாத காரணத்தினால் அவன் அரசாங்கத்திற்கோ அல்லது அரசாங்கக் கட்சிக்கோ விரோதமான காரியங்கள் செய்வதற்கு அவனுடைய மனது செல்ல ஆரம்பிக்கிறது. அது இயற்கைதான். ஆகவே, வாலிபர்கள்தான் நம்மை எதிர்த்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு முக்கியமாக வேலை இருந்தால் இந்த வேலைக்கு அவர்கள் வரமாட்டார்கள். வேலை இல்லாததினால்தான் அவர்கள் அரசியலுக்கு வந்து, அதில் ஈடுபாட்டை வளர்த்துக் கொள்கிறார்கள். ஆகவே, அவர்கள் படித்து முடிந்தவுடனேயே அவர்களுக்கு உற்சாகமாக வேலை கிடைக்கக் கூடிய அளவுக்கு, வேலைக்கு லாயக்காக இருக்கக்கூடிய நிலையில் படிப்பு அமைய வேண்டும். அந்த முறையிலே இந்த ஆண்டிலேயே சிறந்த முயற்சி எடுத்து, கனம் முதல் அமைச்சர் அவர்கள் தங்கள் காலத்திலேயே வேலை கிடைக்கக்கூடிய அளவுக்கு முக்கியமான படிப்பை உண்டாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல அபிவிருத்தித் திட்டங்களும், பல புதிய அபிவிருத்தித் திட்டங்களும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொடுத்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக உள்ள பணத்திலேயே, அபிவிருத்திக்கு என்று ஒதுக்கப்பட்ட பணம் சில குறைகளில் மிச்சப்பட்டதாகக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், இந்த அபிவிருத்தி திட்டங்களை ஏற்று நடத்தக் கூடிய தலைமை அதிகாரிகளுக்கு முதலில் அதிலே நம்பிக்கை வேண்டும். நமது கால்நடை இலாகா தலைமை அதிகாரியை எடுத்துக் கொண்டால், அவர் இந்த மருத்துவத் துறையிலே சிரத்தை காட்டுகிறார்களே தவிர அபிவிருத்தித் துறையில் காட்டவில்லை என்பது இப்பொழுது எங்கள் வட்டாரத்தில் உள்ள கிராம கேந்திர கால்நடை நிலையங்களைப் பார்த்தால் தெரிய வரும். இப்பொழுது இருக்கக் கூடிய டாக்டர்கள் அபிவிருத்தித் திட்டங்களிலே உற்சாகமே இல்லாதவாறு இப்பொழுது இருக்கிற

தலைவருடைய நடவடிக்கைகள் இருக்கின்றன என்பதை நான் பல உதாரணங்கள் மூலமாக விளக்க முடியும். அனேக கேந்திர நிலையங்களில் டாக்டர்களே இல்லாத நிலைமை இருக்கிறது. அவ்வாறு ஒரு இடத்திலே டாக்டர் இல்லாவிட்டால் எப்படி அபிவிருத்தி ஏற்படும் என்று தெரியவில்லை. அபிவிருத்தித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் அந்தத் துறைக்காக செலவழித்திருந்தால், சென்ற 6 அல்லது 7 ஆண்டுகளில் அடைந்த நல்ல முன்னேற்றம் தடைப்படாமல் இருக்கும். அரசாங்கத்தின் கொள்கைகளை ஆதரிக்கக்கூடிய முறையில் தலைமை அதிகாரிகள் நடந்து கொண்டால்தான் நல்ல முன்னேற்றம் காண முடியும். எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அந்தத் துறையை நடத்துகிற தலைமை அதிகாரி அந்த அபிவிருத்தித் திட்டங்களிலே நம்பிக்கை உள்ளவராகவும் நல்ல ஊக்கம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தை அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத் துறையில் எக்ஸ்டன்ஷன் ஆபீசர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். பிளாக் லெவலிலே இருக்கிற விவசாயப் அபிவிருத்தி அதிகாரிகளுக்குள்ள பொறுப்பைப் பார்த்தால், அவர்கள் குமாஸ்தா வேலை செய்வதற்குத்தான் நேரம் இருக்கிறது. எவ்வளவோ நிறைய எழுத வேண்டியிருக்கிறது. ஒரு கிராமத்திற்கு வந்து ஆலோசனை கூறுவதற்கோ, விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற விவசாயப் பொருங்குடி மக்களோடு பழகுவதற்கோ நேரம் இல்லை. ஏதோ கணக்கு எழுதி அனுப்புகிறார்கள். இந்த மாதிரி ஒரு நிலைமை இருந்தால் விவசாயத் துறையில் அதிக முன்னேற்றம் ஏற்படாது. ஆகவே பழைய காலத்தில் இருந்தது போல் பத்தாவது வகுப்பு வரையில் படித்தவர்களையோ அல்லது மூன்றாவது ஃபாரம் பாஸ் செய்தவர்களையோ விவசாய மேஸ்திரிகளாக நியமித்தால் அந்த விவசாய குடும்பங்களோடு பழகி, காலாகாலத்தில் செய்ய வேண்டிய காரியங்களை செய்ய தூண்டுவதற்கும், மருந்து அடிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லுவதற்கும் நலமாக இருக்கும். அந்தமாதிரி ஊழியர்களை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் விவசாயம் முன்னேறும்.

என்னுடைய தொகுதியாகிய ஒட்டன்சத்திரம் ஒரு வரண்ட பகுதி. கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த தாராபுரம் தாலூகாவை ஒட்டியிருக்கிற காரணத்தால் நீர்பாசன வசதியில்லாமல் இருக்கிறது. அந்தப் பகுதி எல்லாம் ஒரு காலி இடமாக காட்சி அளிக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு சிறிய நீர்ப்பாசன வசதிகள் செய்து தருவதோடு, பரப்பலாறுத் திட்டம் என்று ஒரு திட்டம் இருந்தது. 30, 40 வருஷங்களாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று அங்குள்ள மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய முறையில் நமது அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மேலும் என்.ஜி.ஓ.க்களுக்கு ஏதாவது பரிகாரத்தை நமது முதல் அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் மூலமாக பல திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்களுக்கு நம்பிக்கை அளித்திருக்கிறார்கள். அவசரப்பட்டு தவறுதலான முறையில் அவர்கள் இறங்குவது சரியல்ல. நிச்சயமாக அவர்களுக்கு நல்ல வழி பிறக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பிரைமரி ஹெல்த் சென்டர் கிடையாது. அதை கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற பட்ஜெட்டில் சென்னை குடி தண்ணீர் பிரச்னையைப் பற்றிப் பேசும்பொழுது, குடி தண்ணீர் வசதியை அதிகரிப்பதற்கான சில யோசனைகளைக் கூறியிருந்தேன். இன்னும் ஒன்றும் செய்யாமல் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு ஏரிகளில் கீழே வசிக்கிற விவசாயிகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அரசாங்கத்தினிடமிருந்து எந்தவிதமான சலுகைகளையும் பெறுவதற்கு வழியில்லாமல் அங்குள்ள விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நிலத்தை சீக்கிரமாக ஆர்ஜிதம் செய்து அந்த விவசாயிகளுக்கு ஆதரவு கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் இப்பொழுது அதிகமாகப் பயிர் செய்வதினால் நல்ல விளைச்சல் ஏற்பட்டு அந்த நிலங்களில் மாடுகள் மேய்கின்றன. அந்தமாதிரி மாடுகளைக் கொண்டு அடைப்பதற்கு ஏற்கனவே ஒரு கிராமத்திற்கோ அல்லது நான்கு கிராமங்களுக்கோ ஒரு பவுண்டு இருந்தது. மாடுகள் பயிர்களை மேய்கின்றன என்று சொன்னால் பவுண்டுகளுக்கு ஓட்டிச் செல்லக் கூடாதா என்று கேட்கிறார்கள். ஆனால் பவுண்டுகள் இல்லாத காரணத்தினால், மாடுகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் பயிர்களில் மேய்ந்து நாசத்தை ஏற்படுத்துகின்றன. இம்மாதிரி பவுண்டுகள் கட்டுவதற்கு அரசாங்கம் பணம் ஒதுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, பணத்தை ஒதுக்கி பவுண்டுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் மில்க் காலனியில், பால் பண்ணைக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டி, நல்ல வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். 5,000 மாடுகளுக்குத் திட்டம் போட்டு, 4,000 மாடுகளுக்குத் தேவையான பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் கூடிய சீக்கிரத்தில் 1,000 மாடுகளுக்கு ஏற்பாடு செய்வதாக இருக்கிறார்கள். சென்னை நகரத்திலுள்ள மக்க

[திரு. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு] [7th March 1964

ளுக்குப் போதுமான அளவுக்கு பால் வசதி செய்து கொடுத்ததற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். மாடுகளைக் கழுவும் போது தண்ணீர்க் கழிவு ஏற்படுகிறது. அந்தத் தண்ணீரை சிமிட்டிக் கால்வாய்கள் மூலம் போகும்படிச் செய்தால் எங்காவது போய்விடும். அப்படிக் கால்வாய்கள் கட்டாத காரணத்தினுல் மழை காலத்தில் தண்ணீர் தேங்கி லைசென்சுதார்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். சுகாதாரமும் பாதிக்கப்படுகிறது. இது ஒரு சிறிய வேலையானதால், உடனே இதைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து, வசதிகளைச் செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் பலர் குடியேறி இருக்கிறார்கள். அவ்வாறு குடியிருக்கும்படியான நிலங்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கும்படிக் கேட்டிருக்கிறார்கள். சென்னைக்கருகில் உள்ள எருக்கஞ்சேரியில் சுமார் 100 ஹரிஜனங்கள் சென்ற 40 வருஷ காலமாகக் குடி இருந்து, நல்ல கட்டடங்களைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் ஜமாபந்தி காலத்தில் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், கவனிக்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, பட்டா கொடுக்கப்படவில்லை. சமீபத்திலே ஒரு மகாநாடு நடந்தது. கலெக்டர் அவர்கள் கலந்துகொண்டார்கள். நண்பர் திரு. எழுமலையும் நானும் போனோம். "நாங்கள் 10 வருஷங்களாக பட்டா கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அதிகாரிகள் கவனிக்கவில்லை" என்று திரு. எழுமலை அவர்கள் சொன்னார்கள். "இந்த வருஷம் நான் கண்டிப்பாக கவனிக்கிறேன்" என்று கலெக்டர் சொன்னார். யார் கலெக்டராக வந்தாலும் சொல்லிவிட்டுப் போகிறார்களே தவிர, பின்னர் கவனிப்பதில்லை.

சென்னையிலிருந்து 1,000 மைல் நீளத்திற்கு ஜி.என்.டி. ரோடு போகிறது. பேசின் பிரிட்ஜில் மூன்று பாலங்கள் ஒன்றாக இருக்கின்றன. இரண்டு பஸ்கள் ஒரே காலத்தில் போனால் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ள வேண்டியிருக்கிறது. வேகமாகப் போக முடியவில்லை. அரை மணி நேரம் காலதாமதம் ஆகிறது. மேலும் பக்கிங்காம் கால்வாயில் துர்நாற்றம் அடிக்கிறது. அந்த நாற்றத்தைப் பருகாமல் வேகமாகவும் போவதற்கில்லை. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு இங்கே பேசியபொழுது கனம் அமைச்சர் அவர்கள், எந்தவிதமான நெருக்கடி இருந்தாலும், முக்கியமான பாலங்களைக் கட்டிக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். இது ஒரு முக்கியமான பாலமாக இருப்பதால், நல்ல முறையில் வேறொரு பாலத்தை அமைத்து, போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த பிரிட்ஜ் மேலே பிஷரீஸ் டிபார்ட்மெண்ட் மீன் கொண்டு வந்து இறக்குமதி செய்கிறார்கள். அது போக்குவரத்துக்கு மிக்க இடைஞ்சலாக இருக்கிறது. ஒரு நூறு கஜம் முந்தியோ பிந்தியோ இறக்குமதி செய்தால் போக்குவரத்துக்கு பாதகம் இல்லாமல் இருக்கும். சென்னையிலிருந்து வடக்கே போகும் மொபஸல் பஸ்கள் கூவத்தின் கரையில் போகிறது. தாங்க முடியாமல் துர்நாற்றம் அடிக்கிறது. ஆகவே இதை வேறு இடத்திற்கு மாற்றினால் ஜனங்களுக்கு சாதகமாக இருக்கும். அடுத்த படியாக இப்

11 00 a.m.



7th March 1964] [திரு. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு]

பொழுது கிணறுகள் அமைக்க பஞ்சாயத்து யூனியன் சாங்க்ஷன் செய்கிறது. ஆனால் எந்த கிராமத்திலும் இன்னும் கட்டப்படவில்லை. கண்ட்ராக்டரைக் கேட்டால் கிராண்டில் ஒதுக்கியிருக்கும் பணம் போதாது, இது எப்பவோ நான்கு வருஷங்களுக்கு முன்பு போட்ட திட்டம், இப்பொழுது இருக்கும் பொருள்களின் விலைவாசியில் இது கட்டுப்படியாகாது, ஆகவே ஏதாவது பர்ஸண்டேஜை சேர்ந்து போட்டு அனுமதி கொடுத்தால் தான் செய்ய முடியும் என்கிறார்கள். ஆகவே அப்படிச் செய்தால் தான் கிராமங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும்.

எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் பல இடங்களில் விவசாயத்திற்காக போர் செட்டுகள் அமைக்கிறார்கள். ஆனால் ஒரால் சாயிலாக இருப்பதால் அதிகமாக கீழே போக முடியவில்லை. கோயம்புத்தூர் போல பாறைகளாக இருந்தால் எவ்வளவு ஆழம் வேண்டுமானாலும் போகலாம். எங்கள் பகுதியில் மண்ணை நம்பி கீழே இறங்க பயப்படும் அளவில்தான் இருக்கிறது. ஆகவே அதற்கு வேண்டிய அளவில் போர் செட்டுகளை அதிகப்படுத்தி வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த நேரத்திலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்த சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* SRI N. RAMACHANDRA REDDI: Mr. Speaker, Sir, I wish to say a few words while welcoming the budget presented by the Hon. Finance Minister for the year 1964-65. In the era of planned economy we are now in the midst of the Third Five-Year Plan. Our State has got the distinction of achieving many important achievements in agriculture, irrigation, education and also in industries. The Plan has been implemented against the background of serious threat from Chinese and continuance of emergency. I would like to say with great pride that our State is one of the very few States in India that has committed no default in implementing the Plan to the best of our endeavours.

Coming to the present Budget, the adoption of a glorious resolution in the recent Bhuvaneshwar Congress session on socialism constitutes an important land-mark in the history of our national economy because the main basis of the resolution is the need for providing food, clothing, education and health to each and every individual. That is the basic principle. In accordance with this basic resolution, our well experienced Chief Minister has presented his budget for 1964-65. It is warmly welcomed not only by the ruling party members but also by the hon. Members sitting on the Opposite side also in their heart of hearts. So it is no misnomer in saying that this budget is apply wedded to the famous resolution on 'Democratic Socialism' of the Bhuvaneshwar session; I mean to Socialism not by force but only by consent. While speaking on socialism the hon. Deputy Leader of the Opposition has stated rather vehemently that Government is preaching socialism on the one hand but encouraging the bus-

[Sri N. Ramachandra Reddi] [7th March 1964

operators on the other hand. With great respect to him, I would say that it is not correct because Government is collecting the maximum possible tax from bus-owners. The main reason for not monopolising the whole bus transport will probably be mentioned by the Hon. Minister in his reply. I also want to say another thing. It is not as if Government wants to scrap all cinemas. What we want is that bad scenes and bad conversation, which would turn the minds of youngsters and children to evil ways should be curtailed. That is what we members of the ruling party, require from the cinema industry.

Coming to the Budget proper, let me say that ours is a mainly agricultural country and it is only by improving agriculture that our country could develop. In regard to education it is gratifying to note in the budget many new schemes had been introduced; the provision of free education upto the S.S.L.C. class for *all* and provision of mid-day meals, opening of new colleges, etc., are all welcome features. In this respect I would like to request Government that when they are going to open five new colleges (Salem also would get one) considering the population and size of the Salem district, one more college could be opened in Salem district. I am requesting this because Salem is a backward district and everything possible should be done for its improvement. My constituency, Hosur, is really very backward. I am very grateful to Government for having decided to open an engineering college in Salem. Now that Salem is going to be bifurcated into two districts, North Saletm and South Salem, I would request Government to be kind enough to open a medical college in North Salem.

The rise in prices has become a chronic disease; it has become a chronic subject for criticism. Government are taking many important steps in curtailing the rise in prices. The only way to curtail the rise in prices is increased production. If only Government could take proper steps in securing green manure, proper seeds and fertilisers to the poor ryots, we could easily reach the anticipated target in agricultural production. The main reason for the backwardness in this respect is due to the fertilisers and seeds not reaching the ryot in proper shape and in proper time. That is the main reason. Government are no doubt granting loans for agricultural purposes. But if an agriculturist wants to get a loan of Rs. 500 from the Revenue Department or the Community Development Department, how much money he has to spend? In the Blocks, they only 'spend the money'. They do not care 'how to spend money, where to spend the money and how much to spend'. Their principle is "to spend money, rightly or wrongly". This attitude should change. Government should do the necessary thing in this direction. For getting a loan of Rs. 500, the poor ryot has to spend Rs. 100 for travelling expenses and he has then to spend some other thing also, about which the less said the better. So I request Government to take proper measures to check all these things.



7th March 1964] [Sri N. Ramachandra Reddi]

Coming to any constituency, Hosur, I feel ashamed to say in all meetings that Hosur is very backward. I would request Government to take proper measures for improving Hosur in all spheres, especially in regard to medical facilities and irrigation. We are a population of 3½ lakhs and there is provision only for four beds in the Government hospital there. In regard to maternity facilities, not even one lady doctor is there. It is a common saying that females are more kind, softer and more generous towards the suffering. So I would request the Hon. Minister for Health, who belongs to that privileged sex, to take immediate steps to improve the medical facilities in Hosur taluk. With regard to irrigation I would request the Hon. Minister to take proper steps to construct three or four anicuts, proposals for which are pending with Government and also to restore and repair existing tanks, which are the only sources of irrigation in our taluk.

Not only in regard to Irrigation but also in other spheres, the Hosur taluk is backward. So, I request all Hon. Ministers to have a sympathetic look at my taluk and improve it to a large extent.

Also, lastly, though not least in importance, I request our Hon. Chief Minister to start a Government Girls' High School in that taluk in this year itself. I thank you for having given me his opportunity to speak. With these words, I conclude my speech.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த பட்ஜெட் அறிக்கையை ஆதரித்துப் பேசும்போது, அரசாங்கத்தின் கவனத்திற்குச் சில யோசனைகளை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டோடு சோஷலிசம், ஜனநாயகம் என்பதெல்லாம் இணைத்துப் பேசப்படுகிறது. உலகத்திலேயே யாரும் சாதிக்காத ஒரு காரியத்தை உலகத்திலேயே நடக்காத ஒரு காரியத்தை இந்தியாவில் நாம் சாதித்திருக்கிறோம். அகிம்சையின் மூலமாக இந்தியாவில் நாம் சுதந்திரத்தை அடைந்திருக்கிறோம். இம்மாதிரி உலகத்தில் ஜனநாயகமும் சோஷலிசமும் ஒன்றாக இருக்க முடியுமா என்பதைப்பற்றியெல்லாம் எதிர்க் கட்சி நண்பர்கள் பேசும்போது, உலகத்தில் நடக்க முடியாத காரியத்தைச் சாதித்துக் காட்டிய காங்கிரஸ்காரர்கள் இதையும் சாதித்துக் காட்ட முடியும் என்பதற்காகத்தான் சோஷலிசத்தையும் ஜனநாயகத்தையும் இணைத்திருக்கிறோம் என்று நான் அவர்களுக்குச் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டில் பல்வேறு முற்போக்கான காரியங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை எதிர்க் கட்சி நண்பர்களும் மறுக்க முடியாது. குறிப்பாக, விவசாயத்தை எடுத்துக் கொள்வோம். விவசாயத்தைப் பற்றி எல்லோரும் பேசுகிறோம். எதிர் கட்சி அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி, ஆளுங் கட்சி அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி, விவசாயத்தை அபிவிருத்தி செய்து,

உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதன் மூலமாகத்தான் இந்த நாட்டில் இருக்கும் வறுமையைப் போக்குவதோடு, விலை ஏற்றத்தையும் தடுக்க முடியும் என்று சொல்கிறோம். ஆனால், ஒன்றை எல்லோரும் மறந்து விடுகிறோம். நெல் உற்பத்தியை பெருக்குவதனால் மாத்திரம் நாம் உணவுப் பிரச்னையைத் தீர்த்து விட முடியாது. விவசாயிகளுடைய பிரச்னையும் தீர்ந்து விடாது. நெல்லைத் தவிர, மற்ற உணவுப் பொருள்களும் இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடுகிறோம். அரசாங்கமும் அதை நிச்சயமாக மறந்திருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்த தேசத்தைத் தவிர, வேறு எந்த தேசத்திற்குச் சென்று பார்த்தாலும், அங்கே அரிசிக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிப்பதில்லை. கோதுமைக்குக்கூட அவ்வளவு முக்கியத்துவம் இல்லை. மீன், மட்டன், கோழி முட்டை, பால், இன்னும் இவை போன்றவற்றுக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதே தவிர, நெல்லுக்கு முக்கியத்துவம் இல்லை (டாக்டர் பா. நடராஜன் : காய்கறிகள் . . . .) அதற்குப் பின்னால் வருகிறேன். உணவுப் பொருள் என்று சொல்லும்போது, நாம் நெல்லை மாத்திரம் வைத்துக்கொண்டு, உணவுப் பற்றாக்குறை இருக்கிறது என்று அரசாங்கமும் சொல்கிறது, நாமும் சொல்கிறோம். மீன் வளத்தை நாம் எந்த அளவுக்கு உபயோகப்படுத்தி இருக்கிறோம் என்று பார்த்தால், நாம் 4 சதவிகிதம், 5 சதவிகிதம் கூட உபயோகப்படுத்தவில்லை. கால்நடையைப்பற்றி கனம் நண்பர் திரு. சேனாபதி அவர்கள் பேசினார்கள். கால்நடை, பௌல்ட்ரி இவைகளையெல்லாம் எந்த அளவு விருத்தி செய்ய வேண்டுமோ அந்த அளவு விருத்தி செய்ய அரசாங்கம் கவனம் செலுத்தவே இல்லை என்று நான் சொல்வேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கவனம் செலுத்தாமல் இல்லை. நூற்றுக் கணக்கான கால்நடைப் பண்ணைகள், கோழிப் பண்ணைகள் இருப்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் பஞ்சாயத்துக்களில் சென்று பார்த்தால் தெரியும்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** கால்நடைப் பண்ணைகளையும் கோழிப் பண்ணைகளையும் நான் பார்க்காமல் இல்லை. பல அன்னிய நாடுகளுக்கும் நான் சென்று பார்த்திருக்கிறேன். இந்த நாட்டிலும் நான் பார்த்தேன். நமது கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்களை பிற நாடுகளுக்கு அனுப்பவேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பாகச் சொல்கிறார். ரொம்ப சந்தோஷம். அவசியமாக அவர் வெளிநாடுகளுக்குப் போய் வர வேண்டும். கால்நடை வளம், மீன் வளம், பௌல்ட்ரி வளம் அந்த நாடுகளில் எப்படியெல்லாம் இருக்கிறது என்பதை அவர்கள் நிச்சயமாக கண்டறிந்து வரவேண்டும். கனம் முதல் அமைச்சர் அவர்கள் நிச்சயமாக கனம் திரு. கக்கன் அவர்களை வெளி நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கெஞ்சி கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் திரு. கக்கன் அவர்கள் அவசியம் வெளிநாடுகளுக்குச் சென்று வரவேண்டும்.





ஏதோ சில திட்டங்களைப் போட்டுக்கொண்டு ஆங்காங்கு பௌல்ட்ரிகள் வைத்திருக்கிறார்கள். அங்குமிங்கும் ஏதோ கோழிகளைக் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்திருக்கும் கோழிகள் எப்படியிருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் நான் குறைவு படுத்திப் பேச இஷ்டப்படவில்லை. கோழிப் பண்ணைகளை 'அப்-டு-டேட்' டாக, 'லேடஸ்ட் மாடல்' ஆக உலகத்தில எந்த அளவு அபிவிருத்தி செய்திருக்கிறார்கள் என்பது நம் அரசாங்க அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரிகிறது. திட்டம் வைத்திருக்கிறார்கள். 100, 500, 1,000 என்றெல்லாம் கோழிகள் வளர்க்கிறார்கள். எந்தக் கிராமத்தில் போனாலும், அந்தக் கிராமத்தில் எவ்வளவு கோழிகள் இருக்கின்றன, எத்தனை முட்டைகள் கிடைக்கின்றன என்பதையெல்லாம் கணக்கிட்டு, எவ்வளவு செல்வம் இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். சென்னைக்குக் கோழி முட்டை வர வேண்டுமானால், 400, 500 மைல்களுக்கு அப்பாலிருந்து வரவேண்டியிருக்கிறது. (டாக்டர் பா. நடராஜன்: மார்த்தாண்டத்திலிருந்து) . . . ஆம். வெகு தொலைவிலிருந்து சென்னைக்குக் கோழி முட்டைகள் வருகின்றன. அங்கிருந்து வருவதற்குள்ளே 50 சதவிகிதம் முட்டைகள் கெட்டுப் போய்விடுகின்றன. விலை என்ன? ட்ரான்ஸ்போர்ட் செலவு என்ன? நஷ்டம் எவ்வளவு ஏற்படுகிறது? இதையெல்லாம் கவனித்துத் திட்டமிட வேண்டும்.

காய்கறி உற்பத்தியை எடுத்துக் கொள்வோம். காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களும், அதைவிடத் தீவிரமாக கனம் விவசாய அமைச்சர் திரு. கக்கன் அவர்களும் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். செங்கற்பட்டைச் சுற்றி பத்து, பதினைந்து மைலுக்குக் காய்கறியை தவிர வேறு எதுவும் பண்ணக் கூடாது, காய்கறிதான் உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காக 'இன்ஸென்டிவ்' அரசாங்கம் கொடுக்கட்டும். வெறும் உத்தரவு போட்டால் மாத்திரம் போதாது. காய்கறி உற்பத்தியைப்பற்றி என்னுடைய சொந்த அனுபவத்தை நான் சொல்ல விரும்புகிறேன். விவசாய இலாகாவிலிருந்து விதைகள் வாங்கிப் போட்டால், முளைப்பதில்லை. புடலங்காய் விதை வாங்கிப் போட்டேன். முளைக்கவில்லை. பாவற்காய் விதை வாங்கிப் போட்டேன். அதுவும் முளைக்கவில்லை. நான் ஏதோ 'ஹியர்ஸே' யாகச் சொல்லவில்லை. நானே விதைகள் வாங்கிப் போட்டிருக்கிறேன். விவசாய இலாகா நடத்தும் விதைப் பண்ணைகள் சரியானபடி கண்காணிக்கப்படுவதில்லை. சர்க்காரை நான் குறை சொல்லவில்லை. உற்பத்தியை ஜாஸ்திப்படுத்தவேண்டும் என்று சர்க்கார் நிச்சயமாக நினைக்கிறார்கள். சப்ஸிடி கொடுக்கிறார்கள். பாதி விலைக்குக் கொடுக்கிறார்கள். இனாமாகக் கூட கொடுக்கிறார்கள். ஆனால், எப்படி நடக்கிறது என்று கண்காணிக்க வேண்டும். ஆகவே, செங்கற்பட்டைச் சுற்றி 15 மைலுக்கு காய்கறி உற்பத்தி தீவிரமாகச் செய்யப்படவேண்டும். இந்தக் காய்கறி உற்பத்தி செய்வதிலே இன்னொரு தொந்தரவு என்னவென்றால், பூச்சியினாலும் பாதகம் ஏற்படுகிறது. நானே இரண்டு, மூன்று ஏக்கரில் காய்கறிப் பயிர் வைத்துப்

[திரு. கே. டி. கோசல்ராம்] [7th March 1964

பார்த்தேன். பூச்சித் தொந்தரவு சகிக்கமுடியவில்லை. டிபார்ட்மென்டாரிடம் சொன்னால், ஏதோ பார்க்கிறார்கள். ஆனால், பூச்சித் தொல்லையிலிருந்து பயிருக்கு நிவாரணம் அளிக்க முடியவில்லை. வெண்டைக்காய்ச் செடிக்குப் பூச்சி விழுவதையே க்யூர் பண்ண முடியவில்லை என்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. உலகத்தில் மனிதன் எதை எதையோ சாதித்துக் காட்டுகிறான். விஞ்ஞான ரீதியில் எத்தனையோ அற்புதங்களைச் செய்கிறான் மனிதன். ஆனால், வெண்டைக்காய்ச் செடிக்குப் பூச்சி விழுந்தால், அதைக் க்யூர் பண்ண முடியாமல், கோயமுத்தூருக்கு ஸ்பெஸிமன் அனுப்பி, அவர்களும் அதில் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. நேரடியாக ஏற்பட்ட அனுபவத்தை நான் சொல்கிறேன். விவசாய அமைச்சர் கனம் திரு. கக்கன் அவர்கள் ஒன்றை எடுத்துக்கொண்டால் அதை நிச்சயமாக, நல்ல எண்ணத்தோடு முடிக்கக் கூடியவர். எதையும் நல்ல நோக்கத்தோடு, நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று அவர்கள் செய்வார்கள் என்பது தமிழ்நாட்டிலுள்ள எல்லோருக்கும் தெரியும். நல்ல சிந்தனை உள்ளவர், நல்ல நெஞ்சு உள்ளவர், மக்களுக்காகப் பாடுபடக்கூடியவர் அவர். அதில் சந்தேகம் இல்லை. ஆனால், அவர்கள் நினைக்கக் கூடிய நல்ல காரியங்களை 'எஃபெக்டிவ்' ஆக எப்படிச் செய்ய வேண்டும் என்பதிலே அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஒரு குறிப்பிட்ட இடத்தை எடுத்துக்கொண்டு, இப்படித்தான் செய்யவேண்டும், நாங்கள் இவ்வளவு இன்ஸென்டிவ் கொடுக்கிறோம் என்று சொன்னால், காய்கறி மூட்டை மூட்டையாக மக்கள் விளைவிக்க முடியும். ஜப்பான் தேசத்தோடு கொலாபரேஷன் பண்ணுகிறோம் என்று சொல்கிறார்கள். எங்கள் ஊரிலே புன்னக்காயல் பக்கத்தில் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு பெரிய திட்டம் போட்டு ஐந்து கோடி ரூபாய் செலவழிக்கிறோம் என்று பேசப்பட்டது. திட்டம் போட்டார்கள். கடைசியில், அதைக் கைவிட்டுவிட்டதாகச் சொன்னார்கள். மீன் வளத்தைப் பெருக்க விஸ்தாரமாக ஒன்றும் செய்ய முடியவில்லை. ப்ளாக் மூலமாகவும் செய்ய முடியவில்லை. கவர்ன்மென்ட் நேரடியாக எடுத்துக்கொண்டு, எப்படிச் செய்வது என்பதைப் பரிசீலிக்கவேண்டும். அன்னிய நாட்டிலிருந்து புத்தி இரவல், ரூபாய் இரவல் என்றெல்லாம் வாங்குகிறோம். அப்படி வாங்குவதில் ஒன்றும் தவறு இல்லை. எந்த நாட்டுக்கும் அந்த அவசியம் இல்லாமல் இல்லை. அந்த வகையிலும் கவனம் செலுத்தி, மீன் வளத்தை அதிகப்படுத்தும் பட்சத்தில் இன்றைக்கிருக்கும் உணவுப் பிரச்னை என்கிற கஷ்டத்தைக் கண்டிப்பாக நிவர்த்திக்க முடியும். அதன்பிறகு விவசாயிகள் மிக்க ஊதாரித்தனமாக செலவழிக்கிறார்கள், சினிமாவுக்கு போகிறான், டிராமாவுக்கு போகிறான், அதனால் தான் விவசாயம் கெட்டுப் போயிற்று என்று நாம் கீதோபதேசம் பண்ணலாம். ஆனால் நாம் போவதில்லையா? நாம் காலத்தையும், பொருளையும் ஊதாரித்தனமாகச் செலவழிக்காமல் அவர்களுக்குச் சொன்னால், அது இன்சென்டிவ்வாக இருக்கும். அப்படிச் செய்யவேண்டுமே



7th March 1964] [திரு. கே. டி. கோசல்ராம்]

தவிர விவசாயிகளை மாத்திரம் ஊதாரித்தனமாகச் செலவை செய்யாதீர்கள் என்று கீதோபதேசம் செய்வதில் பயன் இல்லை.

அடுத்து மோட்டார் போக்குவரத்து தேசீயமாக்கவேண்டுமென்று சொன்னார்கள். இன்றையதினம் தேசீயமயமாக்கப்பட்ட பஸ் டிரான்ஸ் போர்ட் எப்படி நடைபெறுகிறது? இந்த ஆண்டு 26 லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 1964-65-இல் 47 லட்சம் நஷ்டம் எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற கன்னியாகுமரி ப்ராஜெக்ட் வொர்க் ஷாப் இவற்றில் வருகிற லாபத்தைக் கழித்தால் நம்முடைய நஷ்டம் 26 லட்சமாகக் குறையும் என்றால் இந்தத் துறையையே தேசீயமாக்குங்கள் என்று சொல்லி என்ன பயன்? இவ்வளவு நஷ்டம் வருகிற துறையில் இவ்வாண்டு 47 சதவிகிதம் ஓவர்ஹெட் என்றால் அதை 78 சதவிகிதம் ஆக உயர்த்துவதில் லாபம் என்ன? லாபம் வருகிற தொழில்கள் பல இருக்கின்றன. முதலாளிகள் மிகவும் சாமர்த்தியமாகவே, இந்த சுண்டைக்காய், வெண்டைக்காய் தொழில்களாகிய பஸ் டிரான்ஸ்போர்ட், ரைஸ் மில் இவற்றையெல்லாம் தேசீயமாக்குங்கள் என்று போக்குக் காட்டுகிறார்களே தவிர—அப்போது தானே சர்க்கார் எதை தேசீயமாக்கினாலும் அதில் நஷ்டம் தான் வரும் என்று சொல்லலாம்—நாட்டில் உள்ள பெரிய பெரிய தொழில்கள் எல்லாம் எங்கே போயிற்று?

அடுத்தபடியாக கல்வியைப் பற்றி ஒரு விஷயம். 11-ஆவது வகுப்பு வரையில் மாணவர்களிடையே வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க முன் வந்திருப்பதாக அரசாங்கத்துக்கு வாழ்த்துக் கூறிக்கொள்வதுடன் இன்றைக்கு இருக்கிற கல்வி முறையே அடியோடு மாற்றி அமைக்கப்படவேண்டும். இவ்வாண்டு புதியதாக ஒரு பல்கலைக் கழகம் வரலாம், மூன்று கல்லூரிகள் வரலாம். ஆனாலும் அடிப்படைக் கல்வி முறையை மாற்றி டெக்னிகல் எஜுகேஷன் கொண்டுவரப்பட்டாலொழிய நாட்டின் வறுமையைக் போக்க முடியாது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாது. நமது முதல் அமைச்சர் அவர்கள் நல்ல அநுபவம் உள்ளவர்கள். தீரி, ப்ராக்டிகல் ஆகிய இரண்டு முறையிலும் எந்தப் பிரச்சினையும் அணுகி, சாமார்த்தியமாக நடந்துகொள்ளக்கூடியவர். இந்த பட்ஜெட்டிலேயே நமது கல்வி முறை டெக்னிகல் எஜுகேஷன் என்ற அளவில் அமைக்கப்படும் என்று நான் எதிர்பார்த்தேன். மிகுந்த ஏமாற்றமும் அடைந்தேன். நிச்சயமாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. இரா. நெடுஞ்செழியன்**: மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, 1964–65ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைக் கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையில் இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லி, எதிர் காலத்தில் இன்னும் என்ன என்ன செய்யப்படவேண்டும் என்பவைகளைக் எடுத்துக் கூறி மன்ற உறுப்பினர்கள் பேசியுள்ளார்கள். இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறவைகள் அத்தனையும் எந்த ஒரு நன்மையையும் பயக்கா என்று நான் குறிப்பிட விரும்பவில்லை.

*[திரு. இரா. நெடுஞ்செழியன்]* [7th March 1964

நம்முடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் இது அமைந்திருக்கிறது என்று இதை முழுமனதுடன் பாராட்டுகின்ற முறையிலும் நான் இருக்கவில்லை. இதில் உள்ள நல்ல பல காரியங்களை வரவேற்கின்ற முறையிலும், இதில் விடப்பட்டனவற்றுக்காக வருந்துகின்ற முறையிலும் தான் நான் இங்கே நிற்கிறேன். நிறைவும், குறைவும் விரைவி வருகின்ற நிலையில்தான் அறிக்கை இவ்வாண்டு இங்கே வைக்கப்பட்டு இருக்கிறது.

ஏறத்தாழ முதல் அமைச்சர் அவர்களுடைய போக்கை ஒட்டியே இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. சிரிப்பும், சினமும் எப்போதும் அவர்களிடத்தில் கலந்து உறவாடுகின்றன. அதைப் போலவே இந்த நிதி நிலை அறிக்கையும் வரவேற்கத்தக்க அம்சங்களையும் கொண்டு இருக்கின்றன. அதே நிலையில் வருந்தத்தக்க நிலைமைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன. இதை மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவை அவற்றுக்கு எல்லாம் செவிமடுத்து எதிர்காலத்தில் நல்ல மாறுதல்களையும், சூழ்நிலையையும் ஏற்படுத்துவதற்கு உதவுகின்ற முறையில் செயல்பட வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கும் முறையில் நான் இங்கே என்னுடைய சில கருத்துக்களை வைக்க முன் வந்திருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் போல எவ்விதப் புது வரியும் கொண்டுவரப்படாததாக அமைந்திருக்கிறது என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள வரி இனங்களே விவசாயப் பெருங்குடி மக்களால் தாங்க முடியாதனவாக இருக்கின்றன, நிலத் தீர்வை, தண்ணீர்த் தீர்வை போன்ற இனங்களில் விவசாயப் பெருங்குடி மக்களது வரிப் பளு குறைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியில் இருந்து பலர் குறிப்பிட்டார்கள். அந்த நிலவரி, தண்ணீர் தீர்வை ஆகியவற்றை பொறுத்த வரையிலும் இந்த ஆண்டே குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அத்தகைய குறைப்பு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஏற்படாமல் இருப்பது உண்மையில் இன்னும் வருந்தத்தக்க சூழ்நிலையைத் தான் உண்டாக்கி இருக்கிறது.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையோடு, இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட ஏழு கோடியே நாற்பத்தொன்பது லட்சம் பெருகியிருக்கிறது. அதே போன்று செலவினம் 1963-64-இல் திருத்த மதிப்பீட்டின்படி 134 கோடியாக இருந்தது வருகிற ஆண்டில் நூற்று நாற்பது கோடியே எண்பத்தொரு லட்சமாக உயர்ந்திருக்கிறது. ஆக சென்ற ஆண்டை விட இவ்வாண்டு இவ்வினத்தில் மட்டும் ஆறு கோடிக்கும் அதிகமாக, கிட்டத்தட்ட ஏழு கோடி அதிகமாகியிருக்கிறது. மேலும் கூடுதலான வரி ஒரு கோடிக்குப் போட வேண்டி வரும் என்றும், அதற்குப் பிறகும் இரண்டு கோடி சில்லரை பற்றுக்குறையாக விழும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.



7th March 1964] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

வருவாய் இனத்தை எடுத்துப் பார்க்கிறபோது, மத்திய அரசினர் மத்திய வரிகளில் இருந்து கிடைக்கிற தொகையில் நமக்குக் கொடுத்தது 1963-64-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி 19.69 கோடியாகும். ஆனால் 1964–65-ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டின்படி நமக்கு 19.17 கோடிதான் கிடைக்கும் என்று தெரிகிறது. இதன் மூலம் நம்முடைய வருவாய் 52 லட்சம் குறைவாகக் காணப்படுகிறது. இந்திய அரசினர் வழங்கும் உதவி மானியத்தைப் பொறுத்த வரையில் 15.01 கோடி 1963–64-ஆம் வருஷத்திய திருத்த மதிப்பீட்டின்படி கிடைத்தது என்றால், வருகிற ஆண்டிற்குப் போடப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு 15.62 கோடியாகும். இதன்படி கிட்டத்தட்ட 61 லட்சம் ரூபாய் அதிகப்படியாக இந்த ஆண்டு கிடைக்கும் என்று கூறப்பட்டு இருக்கிறது. மாநில அரசாங்கத்தின் வரிகளின் மூலம் நமக்குக் கிடைத்தது, 1963–64-ம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி 63.20 கோடியாகும். ஆனால் 1964–65 திட்ட மதிப்பீடு படி வருகிற ஆண்டில் இவ்வினத்தில் 67.92 கோடி எதிர் பார்க்கிறோம். கிட்டத்தட்ட மாநில வரிகள் மூலமாக நமக்கு 4.72 கோடி அதிகமாக வர இருக்கிறது. வரியில்லா இன வருவாய் மூலமாக நமக்கு 1963—64-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி 33.08 கோடி கிடைத்தது. வருகிற 1964–65-ஆம் ஆண்டு திட்டமதிப்பீடு இவ்வினத்தில் 35.77 கோடி தான். ஆக இரண்டு கோடியே அறுபத்தொன்பது லட்சம் ரூபாய் அதிகமாக வர இருக்கிறது. எனவே நம்முடைய வருமானம் 1963–64-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி 130 கோடி சொச்சம் அல்லது 131 கோடி ஆக இருந்தது என்றால் 1964–65-ஆம் ஆண்டைய திட்ட மதிப்பீட்டின்படி 138 கோடியே 47 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அதிகப்படியான வருமான உயர்வு நமது மாநிலத்தைப் பொறுத்த இனங்களின் மூலமாகத் தான் என்பதை உணரவேண்டும்.

மேலும் சென்ற ஆண்டு மத்திய அரசாங்கத்தில் இருந்து மானியமாகக் கிடைக்கும் தொகையில் போர் காரணமாக அதிகமான மானியத்தை நாம் எதிர்பார்க்க முடியாத நிலைமையில் இருந்தோம். இந்த ஆண்டு மத்திய அரசாங்கத்தினர் நிதிநிலை அறிக்கையில் அவர்கள் 54 கோடி ரூபாய் மிச்சப்படுகிற கணக்கையே சமர்ப்பித்திருக்கிறார்கள். எனவே திட்டங்களை மேற்கொள்ளுகிற வகையிலும், கல்வி போன்ற இதர துறைகளில் அதிகமான செலவினத்தை எதிர்பார்க்கிற அளவிலும் இருப்பதால் அவர்களிடம் இருந்து பெறுகிற நிதி உதவியை அதிகப்படுத்திக்கொள்ள முயல வேண்டும். நம்முடைய நிதிநிலை அறிக்கையையும், அவர்களுடைய அறிக்கையையும் ஒப்பிடுகிறபோது இதை நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

இந்த வருவாய் இனத்திலே கூட நஞ்சை முதலிய நிலங்களுக் 11-30 a.m.
குத் தீர்வை உயர்வின் காரணமாக இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படுகிற தொகை ஒரு கோடி ரூபாய். விற்பனை வரி கூட ஒரு கோடி ரூபாய் என்ற அளவிலே எதிர்பார்த்து, 2 கோடிக்கு மேல்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th March 1964

மிச்சப்படுத்துகிற அளவுக்கு இருக்கிறது. சாதாரணமாக மற்றைய வருமான இனத்திலும் அதிகமாக வரும் நிலைமை இல்லை. ஏதோ கொஞ்சம் கொஞ்சம் வந்திருக்கின்றன. திட்டத்தைப் பொறுத்த வரை 10 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவு செய்து நிறைவேற்றி வைக்கின்ற முயற்சியினை மேற்கொண்டிருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிற தொகையை விட பல வகையில் அதிகமாகச் செலவாவதால் அந்தச் செலவை ஈடுகட்ட வரிகளைப் பெருக்கிக் கொள்ளும் வகைகளும் இல்லையென்ற காரணத்தால், மத்திய அரசிடம் இருந்து பெறக்கூடிய தொகையை அதிகப்படியாகக் கேட்டுப் பெற வேண்டும். அவ்வாறு கேட்டுப் பெறுவதற்கான சூழ்நிலையும் இப்போது இருக்கிறது. மத்திய அரசு மிச்சப்படுத்துகிற நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கும் இந்தச் சமயத்தில் அவ்வாறு கேட்டுப் பெறுவதிலும் எந்த வித கஷ்டமும் இல்லையென்ற காரணத்தால், அதற்கான முயற்சிகளிலே அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரை அதிக முயற்சியினை இந்த அரசு மேற்கொண்டிருப்பதை நாங்கள் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையில் இரண்டு கோடி ஒரு லட்சம் கல்வித் துறைக்காக இவ்வாண்டு அதிகமாகச் செலவழிக்கப் படுகிறது. நம்முடைய மாநில நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்ற போது, மற்ற எந்த இனத்தையும் விட, கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அந்த முறையில் புதிய ஐந்து கல்லூரிகளை ஏற்படுத்துகிற செயலையும், நீண்டகாலமாகக் கோரப்பட்டு வருகிற மதுரைப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான முயற்சியினை மேற்கொள்கின்ற தன்மையையும் வரவேற்கிறோம். கனம் உறுப்பினர் கருணாநிதி அவர்கள் கூறியது போல் ஆசிரியர்களுடைய குறைபாடுகளை நீக்குகிற அளவு இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகைகள் காணப்படவில்லை. புதிய கல்லூரிகளையும், பல்கலைக் கழகத்தையும் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும் ஆசிரியர்களுடைய நிலையை உயர்த்துவதற்கான வழிவகைகள் காணப்படாது இருப்பது வருந்தத்தக்க ஒன்றுதான். மற்றத் துறைகளைப் பொறுத்தவரையிலும், விஞ்ஞானத் துறை, மருத்துவத் துறை, பொது சுகாதாரத் துறை விவசாயத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, தொழிற் துறை, சமுதாயத் அபிவிருத்தித் திட்டம், மலை ஜாதியினருக்கு அட்டவணையில் கண்ட ஜாதியினருக்குச் சலுகைகள் வழங்கும் துறை போன்ற எந்தத் துறையை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை அதிகமான நிதி ஒதுக்கப் படவில்லை. ஏறத்தாழ சென்ற ஆண்டு ஒதுக்கிய அதே அளவ தொகைதான் இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறை, கூட்டுறவுத் துறை, பாசனம் பொதுப்பணித்துறை ஆகிய துறைகளைப் பார்த்தால் சென்ற ஆண்டை விட வருகிற ஆண்டுக்குக் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தொழிலாளர் வேலை வாய்ப்புக்குக்



7th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கடந்த ஆண்டு 1 கோடி 35 லட்சம் ஒதுக்கப்பட்டது என்றால், வருகிற ஆண்டு 1 கோடி 28 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏழு லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை எடுத்துக் கொண்டால் நடைமுறை ஆண்டை விட வருகிற ஆண்டுக்கு 13 லட்சம் ரூபாய் குறைவாகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் 3 லட்சம் ரூபாய் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்றது. பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரை வருகிற ஆண்டுக்கு ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை 32 லட்சம் ரூபாய் குறைவாக இருக்கிறது. பொதுவாக, ஐந்தாண்டுத் திட்டத்தை விரிவுபடுத்துகிற முறையிலே, மின்சாரத் துறைக்கும், தொழில் வளர்ச்சித் துறைக்கும், மற்றைய முற்போக்குத் துறைகளுக்கும் அதிகமாகச் செலவழித்து வருகிறார்கள். மின்சாரத் துறையைப் பொறுத்தவரையிலே அதன் வளர்ச்சி குறித்து இந்த மன்றம் அடிக்கடி தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்திருக்கிறது.

புதிய கல்லூரிகள் ஏற்படுத்துகிற நிலையைத் தெரிவிக்கும் போது திருநெல்வேலியில் ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பது பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் கீழ்ப்பாக்கத்திலிருக்கும் மருத்துவக் கல்லூரியைத் தான் திருநெல்வேலிக்குக் கொண்டு செல்வதாக இருக்கிறதே தவிர, திருநெல்வேலியிலே புதிய ஒரு நிலையிலே கல்லூரியை ஏற்படுத்த நிலைமை இல்லை. நான் சென்னை நகர மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்—கீழ்ப்பாக்கத்தில் இருக்கிற மருத்துவக் கல்லூரியை இருக்கின்ற இடத்திலேயே நிலைநாட்டி விட்டுப், புதிய மருத்துவக் கல்லூரியைத் திருநெல்வேலியில் உருவாக்குவதற்கான முயற்சியை முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எந்த அடிப்படையிலே திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை கூறுகின்றபோது 'டெமாக்ரடிக் சோஷலிசத்தின்' அடிப்படையில் தான் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்தைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகத்திற்கோ அல்லது சோஷலிசக் கொள்கைக்கோ மாறுபட்ட கொள்கையைக் கொண்டதல்ல. ஜனநாயக சோஷலிசத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவே செய்கிறது. இதைச் சுட்டிக்காட்டும்போது, மன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்த ஐயப்பாட்டைப் போக்க விரும்புகிறேன். சோஷலிசக் கருத்தைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் சுதந்திராக் கட்சியினரோடு எப்படிக் கூட்டணி அமைத்துக் கொண்டார்கள் என்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், சுதந்திராக் கட்சியும் நூற்றுக்கு நூறு கொள்கையில் ஒன்றிப் போய் இருக்கின்றன என்ற அடிப்படையிலே கூட்டணி அமைத்துக் கொள்ளவில்லை. ஜனநாயக ஆட்சியிலே எதிர்க் கட்சியினர் எந்த அடிப்படையிலே, எந்த

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th March 1964

நிலையிலே தங்களுக்குள் ஒரு கூட்டைச் செய்துகொள்ள வேண்டுமோ அந்த வகையில் தான் எதிர்க் கட்சியினர் தேர்தல் கூட்டணியை அமைத்துக் கொண்டார்கள். கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் கட்சியாக இருந்த சமயத்தில், காங்கிரஸ் கட்சி முஸ்லீம் லீக் கட்சியோடும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியோடும் ஒரு கூட்டணியை அமைத்துக் கொண்டார்கள். அவ்வாறு கூட்டணி அமைத்துக் கொண்டதால் ஒரு கட்சியின் கொள்கையை மற்றொரு கட்சி நூற்றுக்கு நூறு ஒத்துக் கொண்டதா? ஒத்துக் கொள்ள வேண்டுமென்று எப்படிச் சொல்ல முடியும்? தி.மு.க. சுதந்திராக் கட்சி ஆகிய இரண்டு கட்சிக்கும் ஒரே கருத்துத்தான் என்றால், இரண்டு அமைப்பு இருக்க வேண்டிய அவசியம் என்ன? இரண்டு கொடி இருக்க வேண்டிய அவசியம் என்ன? இரண்டு தலைவர்கள் இருக்க வேண்டிய அவசியம் என்ன? எதிர்க்கட்சியினர் இப்படிப்பட்ட கூட்டணியைச் சூழ்நிலைகளைப் பொறுத்து, ஆளும் கட்சியின் யதேச்சாதிகாரத் தன்மையைப் பொறுத்துத்தான் அமைத்துக் கொள்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயகக் கட்டுக்கோப்புக்குள் சோஷலிசம் வளரவேண்டுமென்ற கருத்தைக் கொண்டது. சோஷலிசத்தை நிறுவுவதில் இரண்டு வகை இருக்கிறது. ஒன்று சர்வாதிகார முறையில் சோஷலிசம் மேற்கொள்ளப்படுவது; மற்றொன்று ஜனநாயக முறையில் சோஷலிசம் மேற்கொள்ளப்படுவது. சர்வாதிகார சோஷலிசத்தைக் கொண்டுள்ள கம்யூனிஸ்ட் நாடுகளும், நேஷனல் சோஷலிசத்தைக் கொண்டுள்ள நாடுகளும், பொதுமக்கள் கருத்திற்கு மதிப்பு அளிக்காமல் ஆளுகிறவர்கள். டெமாக்ரடிக் சோஷலிசம் என்று சொல்கிறபோது ' Socialism by Parliament என்ற அளவிலே பாராளுமன்றத்தின் சம்மதத்தின்பேரில் அதற்கான அதிகாரத்தைப் பெற்று நடைமுறைக்குக் கொண்டு வருவது என்று பொருள் கொள்ளப்படுகிறது.

Democratic Socialism does not envisage a class war but only an economic conflict.

என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். ஜனநாயக சோஷலிசம் என்பது வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் கொண்டுவரப்படுவதல்ல; கம்யூனிஸ அடிப்படையில் கொண்டுவரப்படுவதல்ல. பொருளாதார ஏற்றத் தாழ்வைக் குறைப்பதற்கான முயற்சியிலே ஒன்றுதான் அது.

In the field of economic theory it is a democracy carried into business because its main feature is a larger nationalisation of industries.

Unlike in Communism or National Socialism where the State acts without the consent of the people, in Democratic Socialism the State is presumed to act with the people's consent and derives its power thereform.



7th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

என்றும் கூறப்படுகிறது. பாராளுமன்ற ஜனநாயகக் கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தால், ஜனநாயக சோஷியலிசத்தின் அடிப்படையான நோக்கம் முக்கியமான தொழில்களைத் தேசியமயமாக்குவது ஆகும். இது அதன் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

' The new step involves the replacement of public capital for private capital and State management for private management, if not in the whole field of industry, at least in a larger part where it is necessary to do so to abolish the concentration of wealth and monopolies.

என்ற அடிப்படையில்தான் ஜனநாயக சோஷியலிஸம் அமைகிறது. எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்கவேண்டும் என்றில்லாவிட்டாலும், முக்கிய தொழில்களைத் தேசியமயமாக்கவேண்டும். தனியார் துறையில் உள்ள முதலீடுகளை மெல்ல மெல்ல அரசாங்க முதலீடுகளாக மாற்றுகிற பணியில், அதை நிர்வகிக்கிற முறையை தனியாரிடம் இருந்து விடுவித்து அரசாங்கமே அதை நிர்வகிக்கும் முறையில் மாற்றவும், முழுதும் இல்லாவிட்டாலும் முக்கியமான தொழில்களை அரசாங்கமே மேற்கொள்ளும் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பது சோஷியலிஸக் கொள்கை. சோஷியலிசக் கொள்கையை இந்த அரசு பல ஆண்டுகளாக கடைப்பிடித்து வருகிறது. இப்போது 'டெமாக்ராட்டிக்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. டெமாக்ராட்டிக் சோஷியலிஸம் என்ற பெயர் இப்போது புதியதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. சோஷியலிஸக் கொள்கையின் அடிப்படையில்தான், இந்த அரசு பணியாற்றி வருகிறது என்ற கருத்து இந்த மன்றத்தில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை பாராளுமன்ற முறையின் அடிப்படையில் தான் இந்த சோஷலிச முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது 'டெமோக்ராட்டிக்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவு இந்த ஜனநாயக சோஷியலிஸம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதில் தான் கருத்து வேறுபாடு கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, ஜனநாயக சோஷியலிஸம் என்று சொல்லப்படுகிறதே தவிர அதை நிறைவேற்றுகிற வகையில் இந்த அரசு சொன்ன அளவிற்கு நிறைவேற்றவில்லை என்ற குற்றம் சாட்டத்தான் எதிர்க் கட்சியினராகிய நாங்கள் எடுத்து வைக்கிறோம். வரவினத்தைப் பெருக்கும் முறையில் தனியார் துறை மூலம் வருகிற வருவாய் துறைகளை எல்லாம் அரசாங்கத்திற்கு மாற்றுவதன் மூலம் வரிச் சுமை மக்களை வாட்டும் நிலை ஏற்படாமல் இருக்க சோஷியலிஸ நிலை ஏற்படவும், ஏற்றத்தாழ்வுகள் அகலவும் இடைவெளியில் உள்ள முறைகள் மாறி விடும் விதத்திலும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கிறதா? என்று துருவிப் பார்க்கும்போது, அப்படி ஒரு திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் வகுக்கப்படவில்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. சில பல பள்ளிகளை ஏற்படுத்துவதனால் இந்தக் கொள்கை முழுவதையும் நிறைவேற்றிவிட்டதாகவோ அல்லது ஒவ்வொரு இனத்தின் பேரிலும்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th March 1964

அதிகப்படியான பணம் செலவு செய்யப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு நிறைவேற்றி விட்டதாகவோ சொல்லுவதற்கில்லை. ஈரோடு அங்கத்தினர் அவர்கள் கூறியதுமாதிரி, இதுதான் ஜனநாயக சோஷியலிஸத்தைக் குறிப்பிடுகிறது, என்று சொல்வதற்கில்லை. ஜனநாயக சோஷலிச உணர்வை மக்களிடமும், அரசாங்க அதிகாரிகளிடமும், அரசியலிலும் ஏற்படுத்த இந்த அரசு தவறியிருக்கிறது. சோஷியலிஸ பண்பை உணர்த்தவோ அதற்கான முறைகளை மேற்கொள்ளவோ அரசு ஒன்றும் ஏற்படுத்தவில்லை. ஆக, டெமோக்ராட்டிக் சோஷியலிஸம் என்பதைப்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அதை நடைமுறையில் செயல்படுத்த என்ன திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றால், அப்படி ஒரு திட்டமும் இந்த அறிக்கையில் அமையவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நாங்கள் இங்கு கூற முற்படுகிறோம். விவசாயத்தைப் பொறுத்த வரையில் இந்த மன்றத்தைச் சார்ந்த பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள். விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம்தான் முடியும், மற்ற வகைகள் எல்லாம் இயலாத வகையில் அமைந்திருக்கின்றன. இதன் மூலமாகத்தான் விலைவாசி இறக்கம் ஏற்பட முடியும் என்ற நிலையை எதிர்பார்க்கிறோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்பார்க்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிற அளவிற்கு நிலைமை அமைந்திருக்கிறதா? என்றால், இம்மன்றத்தின் இரு பகுதிகளைச் சார்ந்த அங்கத்தினர்களும் கூறிய கருத்துக்களில் இருந்து அந்த நோக்கம் நிறைவேறக் கூடிய நிலைமை இப்போது அமையவில்லை என்ற சூழ்நிலையைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

விவசாயத் துறையை அபிவிருத்தி செய்யும் விதத்தில் விவசாயிகளுக்குச் சரியான வசதிகள், கோருகிற அளவிற்கு அமையவில்லை என்ற கருத்தை பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயத் துறையில் அதிகப்படியான கவனம் செலுத்தப்படுவதின் மூலம், விவசாயிகளின் குறைகளைத் தீர்ப்பதின் மூலம் அவர்களுக்குத் தேவைப்படும் பொருள்களுக்குப் பணமாக வழங்காமல் பொருள்களாகவே வழங்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவேண்டும். விவசாயிகளுக்கு இன்ஸ்ஷூரன்ஸ் திட்டம் போன்ற திட்டங்களும் வகுக்கப் பெறவேண்டும். இந்த அறிக்கையில் விலைவாசியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தீவிர முயற்சிகள் ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் வருத்தத்தோடு தெரிவிக்கவேண்டியவனாக இருக்கிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இந்திய அரசினர் பெரும் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்தும் பெரும் பொறுப்பு மத்திய அரசுக்கும், மீதி பொறுப்பு மாநில அரசாங்கத்தின் கையிலும் இருக்கிறது. ஆனால் அப்படி மத்திய அரசு இதற்கென எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை மத்திய அரசு நிதிநிலை அறிக்கையிலிருந்து காணமுடியும். முதலாளிகளுக்கும், வர்த்தகர்



7th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

களுக்கும், பெரும் பணக்காரர்களுக்கும் அரசு பீடத்தில் இருப்பவர்கள் அஞ்சுகிற காரணத்தினால்தான் இத்தகைய நிலைமையில் நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச்சர் பதவிக்கு வருவதற்கு முன்னால் தற்போதைய நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் நிதிநிலை அறிக்கையில் விலைவாசிக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இங்கேயாவது விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்றால் இல்லை. விலைவாசிகள் அவற்றின் போக்கில் ஏறிக் கொண்டே போகின்றன. விலைவாசி ஏறுவதற்கான காரணங்கள் பொருளாதார நிபுணர்களாலும் அரசினராலும் எடுத்து வைக்கப்படுகின்றன. பணவீக்கம், ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை, கள்ளக்கடத்தல், கள்ள வாணிபம் செய்வது, பதுக்கி வைத்து பின்னால் விற்பது, இடைத்தரகர்கள், உற்பத்திப் பற்றாக் குறை போன்றவைகள்தான் விலைவாசி ஏறுவதற்கான காரணங்கள் என்று தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் விலைவாசிகள் ஏறிக் கொண்டே போகின்றன. இதைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு பெரும் பொறுப்பு எடுத்துக் கொள்ளவேண்டும், மாநில அரசும் பொறுப்பு எடுத்துக் கொள்ளவேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் நியாயவிலைக் கடைகள் திறப்பதும், வாங்குவோர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்துவதும் தேவை இல்லை என்று நான் கூறவில்லை. ஆனால் அவை இப் பிரச்னையைத் தீர்க்கும் வழியில் அமையவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நியாய விலைக் கடைகள் மூலமாகவும் வாங்குவோர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துகிற நடவடிக்கைகளை செய்துவிட முடியும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. நியாயவிலைக் கடைகளும், வாங்குவோர் கூட்டுறவு சங்கங்களும் எல்லா மக்களின் அவதியையும், முழுவதும் போக்கக்கூடிய அளவிற்கு வலிவு படைத்தது என்று சொல்வதற்கில்லை. நியாயவிலைக் கடைகள் மூலம் கொடுக்கப்படும் பொருள்கள் யாரிடம் போய்ச்சேர வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, யாருக்குப் போய் சேர்ந்தால் இதன் பலன் கிடைக்கும் என்று நாம் நினைக்கிறோமோ அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று கண்காணிக்கும் நிலை இருந்தால்தான் இத்திட்டத்தின் பயனை மக்கள் பெற முடியும். ஆக, சிலருக்குப் பயன்படலாமே தவிர விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு இவற்றினால் முடியவில்லை. ஆகவே இதுகுறித்து தீவிரமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். அப்படி கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால், விபரீதமான முறைகளை அரசினர் மேற்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் தங்கள் கிராக்கிப்படியையும், மற்ற படிகளையும் உயர்த்த வேண்டுமென்று கோருகிறார்கள். இந்த ஊழியர்களின் கோரிக்கையைக் கவனிக்க வேண்டுமென்று எதிர்க் கட்சியினராகிய நாங்கள் கூறும்போது நாங்கள் தூண்டி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th March 1964

விட்டு அவர்கள் கேட்கிறார்கள் என்ற தவறான கருத்தை அமைச்சரவை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் கூட இப்பிரச்னையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்களின் நலனில் அரசாங்கத்துக்கு எப்போதும் அக்கறை உண்டு என்று முதல் அமைச்சர் அவர்கள் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இந்த விலைவாசிப் பிரச்னையிலிருந்து பல்வேறு பிரச்னைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஆகவே அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுடைய கோரிக்கையில் நியாயம் இருக்கின்றது என்ற காரணத்திற்காக, அவைகளை இந்த மன்றத்தின் முன் வைப்பதின் மூலமாக அவர்களுடைய பிரச்னைக்கு ஏதாவது வழிவகை செய்யலாம் என்ற அடிப்படையில் தான் எதிர்க் கட்சியினரும், மற்றவர்களும் தங்கள் கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கிறார்கள். இவர்களுடைய கோரிக்கையில் நியாயம் இருக்கின்றனவா அல்லவா என்று பார்க்கின்ற நேரத்தில் 1946-வரையிலும் மத்திய மாநில அரசாங்கங்களுடைய சம்பளம், படி இவைகளில் எல்லாம் ஓரளவு சமமாக இருந்திருக்கின்றன. பின்னால் விலைவாசி ஏறுகின்ற நிலைமைக்கு ஏற்றவாறு மத்திய அரசாங்கம் தங்களுடைய ஊழியர்களுக்கு கிராக்கிப் படியை ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அம்மாதிரி முயற்சியை மேற்கொள்ளுகின்ற நேரத்தில் மாநில அரசாங்கம் தங்களுடைய ஊழியர்களுடைய சம்பளத்தையும் படியையும் உயர்த்துவதற்காக அதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக, இரண்டாவது சம்பள கமிஷன் ஒன்றை நியமித்து, அந்தக் கமிஷன் பலவிதமான கருத்துக்களை ஆராய்ந்து சில முடிவுகளை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்த நிலை வந்த நேரத்தில் ஓரளவுக்கு கமிஷனுடைய முடிவுகளை எல்லாம் அரசாங்கம் ஏறிக் கொண்டிருக்கின்ற விலைவாசிகளுக்கு ஏற்ப கமிஷன் கொடுத்த முடிவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதோடு இரண்டாவது சம்பளக் கமிஷன் கொடுத்த அறிக்கையில் கடைசியில் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருப்பதானது:

"We have concluded that the best course would be to keep the new rates of dearness allowance in line with the rates of dearness allowance fixed for the employees of Central Government in pursuance of the recommendation of the Second Central Pay Commission."

என்று கூறுகிறது.

மேலும் அந்த அறிக்கை கூறுகிறது:—

"If our proposal, viz., that the rates of dearness allowance of employees of State Government should be brought in line with the Central rates is accepted, we would further strongly urge that any increase in the future in the rates of dearness allowance for Central Government employees should be accompanied by an equivalent increase in the rates of dearness allowance of the employees of State Government."



7th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

என்று இரண்டாவது சம்பளக் கமிஷன் சொல்லியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும், ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தில் அதிக வேறுபாடு இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் தங்களுடைய ஊழியர்களுக்கு நாட்டில் இருக்கின்ற நிலைமையை அறிந்து கொண்டு, கிராக்கிப்படி முதலிய சலுகைகளை கொடுக்கும்போது, மாநில அரசு கொடுப்பதற்கும் முயற்சி செய்வார்கள் என்ற கருத்தை முன்பு நிதி அமைச்சராக இருந்த அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தை "ஏ" பிரிவு நகரமாக்கியதன் காரணமாக ஏற்படுகின்ற சூழ்நிலை காரணமாகவும், விலைவாசி ஏற்றத்தின் காரணமாகவும் கிராக்கிப் படி, நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி இவைகளை எல்லாம் மத்திய அரசாங்கம் தங்கள் ஊழியர்களுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அந்த நிலைமையில் நமது மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் உயர்த்த வேண்டும் என்கிற கோரிக்கையை மாநில அரசாங்க ஊழியர்கள் முன் எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு இருக்கிறது. இந்தக் கோரிக்கையில் நியாயமிருக்கிறது. ஆகவேதான் இவர்களுக்கும் உயர்த்த வேண்டும் என்று ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்கும், எதிர் கட்சியிலுள்ளவர்களும் தங்கள் கருத்தை அழுத்தம் திருத்தமாக இந்த மன்றத்தில் சொன்னார்கள். இதில் எதிர்கட்சியினர் யாரும் எதிர்ப்பதாய் இல்லை, ஆதரவு தருவதற்கும் ஊக்கம் தருவதற்கும் தயாராய் இருக்கின்ற முறையில்தான் எதிர்கட்சியினர் இந்த கருத்தினை ஆளும் கட்சிக்கு எடுத்துச் சொல்கிறார்கள். ஏற்பட்டிருக்கின்ற வரவினத்தையும், செலவினத்தையும் பார்க்கின்ற நேரத்தில், பெருமளவு உயர்ந்திருக்கிறது. இந்த முறையில் எவ்வாறு நம்முடைய வரவினத்தைப் பெருக்கிக்கொள்வது, எவ்வாறு நமது செலவினத்தை வகுத்துக்கொள்வது விலைவாசிகளை எப்படி கட்டுப்படுத்துவது என்பதற்கெல்லாம் திட்டம் தீட்டுகின்றார்கள். இந்த நிலைமையில் அரசாங்க ஊழியர்களுக்கு கொடுக்கும் உயர்வால் ஏற்படும் செலவினத்திற்கும் வழிவகை காணமுடியாத ஒன்று அல்ல. கனம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் சென்னை "ஏ" பிரிவு ஆக்கப்பட்டிருப்பதன் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்பவும், விலைவாசி உயர்வுக்கு ஏற்பவும் அரசாங்க ஊழியர்களுடைய வருமானத்தை ஈடுகட்டுகிற வகையில் வாடகைப்படி உயர்வு, நகர ஈட்டுப்படி, கிராக்கிப்படி உயர்வு இவைகளை கொடுப்பதற்கு அதிக மான்யத்திற்காக மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். நிச்சயமாக இதை நிறைவேற்றுவதற்கு முயலுவோம் என்று உறுதி அளித்தார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்னால் பேசும்போது, மாநில அரசாங்க ஊழியர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு, அவர்களுடைய கோரிக்கைகளை நிவர்த்திப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதன்படி இந்த நிதிநிலை அறிக்கை அமையும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி அமையவில்லை, அதே நேரத்தில் குடும்ப பாதுகாப்பு திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். அது வரவேற்க வேண்டிய ஒன்று தான்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th March 1964

பென்ஷன் திட்டத்தை விரிவு படுத்தியிருக்கிறார்கள். அதுவும் வரவேற்க வேண்டியதொன்றுதான். இவைகள் எல்லாம் தேவையில்லை என்று நான் சொல்ல வரவில்லை. இருப்பினும் இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள், நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி உயர்வுக்கு ஏற்ற அளவில், அந்த அடிப்படையில், இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் ஈடுபட்டனவாகா. தேவையை நிவர்த்தி செய்வதற்கு போதுமானதாக இராது. கோரப்பட்ட கோரிக்கைகளுக்கு ஈடுசெய்ததாக அமையாது என்ற அளவில், உடனடியாக, வேலை பார்க்கின்ற அரசாங்க ஊழியர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களை போக்குகின்ற முறையில் கிராக்கிப்படி உயர்வு, வீட்டுவாடகை உயர்வு, நகர ஈட்டுப்படி இவைகளை தருவதின் மூலமாக அவர்களை நிறைவுசெய்கின்ற வழிவகைகளில் இவ்வரசினர் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள், ஓய்வு பெற்றதற்குப் பின்னால், திடீரென்று இறந்து போய்விட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு பாதுகாப்பு இருக்கவேண்டும் என்ற முறையில் அளிக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் ஆகும். இதற்காக வழங்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் பயன்படத் தக்கவை அல்ல என்று நான் சொல்ல முன் வரவில்லை. அதிலும் கூட மத்திய அரசாங்கத்து ஊழியர்களைப் பொறுத்தவரையில் ஓராண்டு பணி புரிந்தால் போதும் என்று இருக்கின்ற அதே நேரத்தில், இங்கே ஐந்தாண்டு பணி புரிந்திருந்தால்தான் பென்ஷன் கொடுக்க முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலும் வேறுபாடு அமைந்திருக்கிறது. மருத்துவ வசதிகளைக் குறித்தும் வேறுபாடுகள் அமைந்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது. இம்மாதிரிப்பட்ட சலுகைகளை எல்லாம் நிதிநிலை அறிக்கையில் பார்க்கின்ற நேரத்தில் கூட, இந்த மன்ற அங்கத்தினர்கள் உடனடியாக அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய கோரிக்கைகளைப்பற்றி எடுத்துரைத்தார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் இவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிற வகையில் தங்கள் முடிவை இந்த மன்றக்கூட்டத் தொடர் காலம் முடிவடைவதற்குள் இந்த மன்றத்திலேயே அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இம்மாதிரியான சலுகைகளை கொடுக்கின்ற நேரத்தில், உடனடியாக அவர்களுடைய தேவைகளையும் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளையும் காணமுடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி ஏற்றத்திற்கு தக்கபடி, திட்டத்தை நிறைவேற்றுகின்ற விஷயத்தில் சிமிண்டின் விலை ஏறிவிட்டது, இரும்பின் விலை ஏறிவிட்டது, மற்ற கட்டிட பொருட்கள் எல்லாம் விலை ஏறிவிட்டன என்கின்ற காரணத்தால், நாம் இதற்கெல்லாம் ஈடு செய்கின்ற முறையில் நம்முடைய செலவினத்தை பெருக்கிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். அதே போன்று மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகமான அளவில் மானியத்தை பெற்று மாநில அரசாங்க ஊழியர்களுடைய குறைபாடுகளை போக்குவதன் மூலம், அவர்களிடையே ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெருக்குவதற்கு அரசினர் வழிவகை காணவேண்டும் என்று நான் அமைச்சரவையை கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்தக் கட்சியை சார்ந்த



7th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வர்களாகவும் இருக்கவில்லை. அவர்களுக்காக பரிந்து பேசுகின்ற முறையில், இன்றையதினம் ஆளும் கட்சியிலுள்ளவர்களும் எதிர் கட்சியிலுள்ளவர்களும் சேர்ந்தே அவர்களுடைய பிரச்னையைப் பற்றி பேசியிருக்கிறார்கள். எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பணி புரிகின்ற ஊழியர்கள் ஒரே நிலையில்தான் இருப்பார்கள். அரசாங்க ஊழியர்கள் அரசைச் சார்ந்தவர்கள், என்ற முறையில் இரு சாராருக்கும் அவர்கள் பேரில் அக்கறை இருக்க நியாயம் உண்டு. அந்த அடிப்படையில்தான் அரசாங்க ஊழியர்கள் வேலை செய்கிறார்கள்... மக்கள் வருவார்கள், மக்கள் போவார்கள். நான் ஓடிக்கொண்டேயிருப்பேன்.... Men may come and ment may go but I go on for ever. என்று.. சிற்றாறு பாடிக்கொண்டே இருக்கிறது என்று ஆங்கிலப் புலவன் டென்னிஸன் கூறினான். " Ministry may come and ministry may go but we go on for ever " என்று கூறத்தக்க நிலையில் அரசாங்க ஊழியர்கள் இருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை ஆட்சி மாறிக் கொண்டேயிருக்கும். ஆனால் ஊழியர்கள் நிரந்தரமாக அதே ஆட்சியில் பணி புரிந்து கொண்டிருக்கிறவர்கள், ஆகவே அவர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்லர், அவ்வாறு தவறாக ஏதேனும் மாறுபட்ட கருத்துக்கு இடம் கொடுக்காத வகையில், தயக்கத்திற்கோ, ஐயத்திற்கோ இடமளிக்காத வகையில், அவர்களுடைய நிலையை சீர்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருமானத்தை பெருக்கிக் கொள்கின்ற அளவில், வரியின் மூலமாகத்தான் வருமானத்தை பெருக்கிக் கொள்கின்ற நிலைமையைத்தான் இந்த அரசும், மத்திய அரசும் ஏற்படுத்தியிருக்கின்றன. வரியில்லாத அளவுக்கு வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான பெரும் போக்கினை அரசினர் மேற்கொள்ள வேண்டும். மேலும் மேலும் நம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு, ஜனநாயக சோஷியலிஸ முறையை கைக்கொள்ளும் வகையில் பல ஏற்பாடுகளை அரசினர் செய்ய முன்வர வேண்டும். அந்த அளவில், விவசாயத்திற்கு அக்கறை காட்டி, அதன் மூலம் வருமானம் பெருகுவதற்கான வழி முறைகளை நாம் கைக்கொள்ள முயற்சிக்கின்றோம். அதோடு, கடலில் இருக்கின்ற வளத்தையும் உபயோகித்து, நல்ல முறையில் செயலாற்றினால் நம்முடைய வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். அந்த முறையில் பார்க்கின்ற நேரத்தில் மீன் துறைக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்ற தொகை மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இந்திய அரசைப் பொறுத்தளவிலும், இதற்கு ஒதுக்கப்பட்டிருக் கின்ற நிதி குறைவாகவே இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் கடல் வளம் ஏராளமாக இருக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் செலவு செய்கின்ற செலவைக்காட்டிலும் கிடைக்கின்ற வருமானத்தைவிட அதிகமாக, அதே செலவில் கடல் வளத்திலிருந்து அதிகமாக பெருக்கிக் கொள்ள முடியும். கடல் வளத்தில் அக்கறை செலுத்தி மீன்வளத்தைப் பெருக்கிக்கொள்வதின் மூலமாக உணவுப் பிரச்னையை தீர்க்க முடியும் என்று நிபுணர்கள் எடுத்துச்

சொல்லியிருக்கிறார்கள். அதில் கொஞ்சம் அதிக அக்கறை செலுத்துவதன் மூலமாக மீன் வளத்தைப் பெருக்கி, அந்தத் துறையை பெருக்குவதன் மூலமாக வருமானத்தைப் பெருக்க

12-00 noon. அதற்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்ற முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசினருக்கு நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையிலும் இந்த மன்றத்திலே கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னாலும் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மொழிப்பிரச்னை நாட்டைப் பொறுத்த முக்கிய பிரச்னையாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவை நன்றாக அறியும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் இந்தப் பிரச்னை குறித்து திட்டவட்டமாகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறோம். இந்தி அறவே இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் அவசியம் இல்லை என்ற கருத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். தாய் மொழியாகிய தமிழ் இந்த மாநிலத்திலே மாநில மொழியாக, பாட மொழியாக, பயற்சி மொழியாக, மாநில ஆட்சி மொழியாக ஏற்படுதல் வேண்டும். அகில உலகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள, விஞ்ஞான அறிவை வளர்த்துக்கொள்ள, உலகத் தொடர்பு கொள்ள என்றும், எப்பொழுதும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருக்கிறது. அதே ஆங்கிலம் அகில இந்திய மொழியாக ஏற்படுத்தப்படுமானால், ஏற்படக் கூடிய வீண் மனஸ்தாபங்களும் வீண் மாச்சாரியங்களும், பல்வேறு குழப்பங்களும், மற்றவைகளும் ஏற்படாத நிலை ஏற்பட முடியும். இப்போதுள்ள நிலைமையில் மாச்சாரியங்களும், அவற்றின் காரணமாக பிணக்குகளும், குழப்பங்களும் மற்றவைகளும் ஏற்பட்டுள்ளதை அரசாங்கம் உணரும். குழப்பங்களுக்கெல்லாம் காரணமாக இந்தி மொழிப் பிரச்னை அமைந்திருக்கிற காரணத்தினால், இத்தகைய காரணங்களை கனம் முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசினருக்கு எடுத்துத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாட்டிலே உள்ள இந்தி பேசாத மாநிலங்கள் அத்தனையும் மிகத் தெளிவாகத் தம் கருத்தை வற்புறுத்திச் சொல்லியிருக்கின்றன. சமீபத்தில் மேல் சபையிலே பேசிய டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் கூட அழுத்தம் திருத்தமாக இந்தப் பிரச்னை பற்றிக் கூறியிருக்கிறார்கள். இனிமேல் அகில இந்திய சர்விஸ் கமிஷன் தேர்வுகளை இந்தியிலும் எழுதலாம் என்ற யோசனையைக் கூட நடைமுறைப் படுத்தும் நிலையை மத்திய அரசின் உள் துறை அமைச்சர் கொண்டுவர இருப்பதாகத் தெரிவித்து அதற்காக முதல் அமைச்சர் கொண்ட மாநாடு ஒன்றைக் கூட்டியிருக்கிறார். அந்த முறையிலே அந்த மாநாட்டிலே கலந்துகொள்ளக் கூடிய முதல் அமைச்சர் அவர்கள் இந்தி பேசாத மாநிலங்களின் நிலையை எடுத்து விளக்க வேண்டும் "இப்போது அவசியமில்லை, இப்போது இருக்கக்கூடிய முறையையே நீடிக்க விடுவதன் மூலமாக ஆங்கிலமே தொடர்ந்து அகில இந்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகள் எழுதக்கூடிய மொழியாக இருக்க வேண்டும் என்று பல்லாண்டு காலத்திற்கு முன் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்





பட்ட தீர்மானத்தை, அரசினர் தங்கள் கொள்கையாக ஏற்றுக் கொண்ட அந்தத் தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்தி, ஆங்கிலமே சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் உபயோகிக்கப்படும் மொழியாக நீடிக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ளுகின்றேன்.

இப்போது இந்திய அரசு கோடிக்கணக்கான ரூபாயை, பலன் தராத, எந்த வகையிலும் பலன் அளிக்காத, குறிப்பிட்ட ஒரு பகுதி மக்களால் பேசப்படுகிறது என்ற காரணத்தைக்கொண்டு, நினைத்ததை செயலாற்றும் அளவுக்கு, ஆட்டிப் படைக்கிற அளவுக்கு அரசாங்க அமைப்பு இருக்கிறது என்ற காரணத்தினால், அந்த மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்கு இடம் தேடிக்கொடுக்க முற்படுவதன் மூலமாக, அவசரம் அவசரமாக அதற்காக நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக, இந்தி பேசாத மக்களைப் புறக்கணிக்கும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அந்தக் கருத்துக்களை இந்த மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் நல்லதொரு சூழ்நிலை உருவாகும் முறையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதன் மூலமாக, அதற்கான முயற்சிகளை எடுப்பதன் காரணமாக வீண் விபரீத நிலையை ஏற்படுத்தாத அளவுக்கு பாதுகாப்பு ஏற்படுத்துகிற நிலையில் இந்திய அரசினரை வற்புறுத்தவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்தியை எல்லா வகையிலும் பரப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்போது 11-வது வகுப்பை முடித்துக்கொண்டு கல்லூரி சேரவேண்டுமானால் இந்தி பரீட்சைக்கு உட்கார்ந்து எழுதவேண்டும் என்ற நிலையில், அப்படி எழுதாத மாணவர்கள் கல்லூரியில் சேர வாய்ப்பில்லை என்ற திட்டத்தை இந்த அரசாங்கம் மேற்கொண்டு அதற்கான சுற்றறிக்கை விட்டிருப்பதாக பத்திரிக்கையில் செய்தி வந்தது. அந்த நிலைமை மறைமுகமாக இந்தி படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தும் நிலைமையை உண்டாக்கும் ஒன்றாக இருக்கிறது. இங்கே இந்தி படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த வில்லை என்று சொல்லப்பட்டாலும் இப்போது இந்தி படிக்க வேண்டும் என்ற சூழ்நிலைதான் இருந்துவருகிறது. அரசாங்கம் சொல்லி வந்த கொள்கைக்கு ஏற்ப, சூழ்நிலைக்கு ஏற்ப, இந்திப்பேசாத மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் பல்வேறு இந்திப் பேசாத மாநிலங்கள் எடுத்து வைத்தும் கூட, தக்க கவனம் தராத காரணத்தினால் அறப் போராட்டத்தின் மூலமாக இதை நிலை நிறுத்த வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களைத் தாங்களே வருத்திக் கொள்ளும் முறையில் எரிப்பு போராட்டங்களிலும், மறியல் போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர். அரசினரின் கவனத்தை ஈர்க்க, நாட்டின் கவனத்தை ஈர்க்க இந்தப் பிரச்னைக்கு முக்கியத்துவம் ஏற்படுத்தி,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th March 1964

இதனை அரசினர் கண்டறிந்து, மீண்டும் இந்தப் பிரச்னையைப் பரிசீலித்து, தக்கதொரு முடிவு காணவேண்டும் என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறது. எதிர்கட்சிகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் மீண்டும் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளுவதன் மூலம் எதிர் காலத்தில் நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று அமைச்சர் அவையை இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றைய நிலைமைகளைப்பற்றி மானியங்களின் மீது விவாதம் வரும்போது விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் முக்கியமாக இரண்டொரு கருத்துக்களைப்பற்றி மட்டும் இப்போது கூற விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் சேரி ஒழிப்புத் திட்டத்தை இன்னும் தீவிரமாக நடத்த முன்வரவேண்டும். சேரி ஒழிப்பு திட்டம் என்று எடுத்துக்கொண்டாலும், மெரீனா பீச்சுக்கு அருகில் இருக்கும் குப்பங்களை சீர்திருத்த முயற்சி எடுத்து, அத்தகைய குப்பங்களில் நல்ல சுகாதார நிலையை உண்டாக்கக் கூடிய வகையில் குப்பங்களில் உள்ள சீர் கெட்ட நிலைமைகளைச் சீராக்கி வைக்க முயற்சி செய்தல் வேண்டும். இத்தகைய குப்பங்களையெல்லாம் இப்போது மாற்றி, கட்டட வசதி ஏற்படுத்தி, பக்கத்திலே பணி புரிகிற மீனவர்களுக்குத் தருகிற வாய்ப்பு தவறி விடுமானால், மத்திய அரசினராலோ அல்லது மாநில அரசினராலோ வேறு பல காரியங்களுக்காக அந்த இடம் பறித்துக்கொள்ளப்படும் என்ற அச்சம் அங்கே உள்ளவர்களுக்கு இருக்கிறது. மெரீனா பீச்சுக்கு அருகில் இருக்கிற காரணத்தினால் மத்திய அரசினரின் கண்களோ அல்லது மாநில அரசின் கண்களோ பட்டு, மத்திய அரசு அல்லது மாநில அரசு ஏற்படுத்துகிற வேறு பல கட்டடங்கள் ஏற்பட்டாலும் அங்கு இருக்கிறவர்கள் துரத்தி அடிக்கப் படுகிற சூழ்நிலை வரும். மீனவர்கள் பக்கத்துக் கடலில் தொழில் நடத்துகிறவர்களாக இருக்கிற காரணத்தினால், மெரீனா பீச்சின் அழகைச் சீர்குலைக்கவும் அது காரணமாக இருப்பதால் இதற்கு முதலிடம் தந்து அங்கு இருக்கும் குப்பங்களைச் சீரான சுகாதாரமுள்ள சூழ்நிலைக்குக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

கூவம் நதி, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவைகளைச் சீர்திருத்த ஒரு திட்டம் இந்த அரசினரிடத்தில் இருக்கிறது. இதை நடைமுறைப் படுத்தாததால் விளைவுகள் ஏராளம் என்று அறிகிறேன். சென்னை மாநகரத்தின் சுகாதார நிலை கெடுகிறது. அதனால் நோய் நொடிகள் பரவும் நிலை ஏற்படுகிறது. பல்லாண்டு காலமாகப் படிந்திருக்கிற வண்டல்கள், சேருகள் ஆகியவைகளை எடுப்பதன் மூலமாக வேறு நிலங்களுக்கு உரமாகப் பயன்படுத்தும் நிலையில் அந்த வகையிலும் அது பயன்படும். சென்னை நகரத்தின் தூய்மைக்கும் பயன்படும். சுகாதாரம் கெடாமல் மற்ற நலன்கள் ஏற்பட விரைவாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்து, இவைகளை ஆழப்படுத்துவதன் மூலமாக படகுப்



7th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

போக்குவரத்தை விரிவுப்படுத்தி, போக்குவரத்தை விரிவுப் படுத்த முடியும். பல்வேறு பிரச்னைகள் இதில் அடங்கியிருப்பதால் அந்த முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பேசும்போது நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையைப்பற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அண்மையில் நடைபெற்ற நகராட்சி மன்றங்களின் தேர்தல்களைப் பற்றியும், மாநகராட்சி மன்றத் தேர்தல்களைப் பற்றியும் பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நகராட்சி மன்றத் தேர்தல்களைப் பற்றி நான் விரிவாக எடுத்துக் கூற விரும்பவில்லை. என்றாலும் ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றம் ஆகிய தேர்தல்களைப் பொறுத்தவரையில் பல்வேறு கருத்துக்கள் இங்கே பேசப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலும் அது ஒரு அரசியல் கட்சியாக இருக்கிறது. அத்தகைய நிலைமையில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் செல்வாக்கு இழந்து வருகிறது, மதிப்பு இழந்து வருகிறது என்ற முறையிலே ஆளும் கட்சியினரால் கருத்துக்கள் இந்த மன்றத்தில் பரிமாறப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தோல்விகள் என்று எந்த அடிப்படையிலே சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. நான் இதைப்பற்றி ஒரு கருத்தை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். 1959-ஆம் ஆண்டில் இருந்த சூழ்நிலையை விட, 1964-ஆம் ஆண்டு நகராட்சி மன்றத் தேர்தலில் வலிவு பெற்றிருக்கிறதே தவிர, வளர்ச்சி பெற்றிருக்கிறதே தவிர வீழ்ச்சி அடையவில்லை என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலையை எடுத்துக் காட்டுகிற வகையில் நான் சொல்ல விரும்புகிறேன். 1959-ல் 36 நகராட்சிகளுக்கு நடந்த தேர்தலில், தி. மு. கழகத்திற்கு மொத்தம் 60 இடங்கள் இருந்தன. இப்போது நடைப்பெற்று முடிந்த தேர்தலில் 161 இடங்களை அதே 36 நகராட்சி மன்றங்களில் கழகம் பெற்றிருக்கிறது. இது வளர்ச்சிக்கு அறிகுறியே தவிர வீழ்ச்சிக்கு அறிகுறி அல்ல. இரண்டாவது தவணையாக 28 நகராட்சி மன்றங்களுக்கு நடைப் பெற்ற தேர்தலிலும் கழகத்திற்கு மிகவான வெற்றிதான். திருவொற்றியூர் அப்போது இல்லை, இப்போது புதிதாக வந்திருக்கிறது, அதை நீக்கி விட்டு மற்ற நகராட்சிகளைக் கணக்கில் கொண்டு பார்த்தால், 1959-ல் 42 இடங்களைப் பெற்றது. இப்போது அதே நகராட்சி மன்றங்களில் 104 இடங்களைப் பெற்றிருக்கிறது. இப்படி வளர்ச்சி பெற்றிருக்கிறதே தவிர வீழ்ச்சி அடையவில்லை. அதுமட்டுமல்லாமல் பல்வேறு நகராட்சி மன்றங்களில் அன்றி ருந்த இடங்களை விட, கூடுதலாகப் பெற்றிருக்கக்கூடிய அளவுக் குத் தான் நிலைமைகள் இருக்கின்றன. இழந்திருக்கிற இடங்கள் ஒன்றிரண்டுதான். அந்த ஒரு இடமும் இரண்டு இடமும் சுதந்திரக்கட்சியால், முஸ்லீம் லீகால் மீட்கப்பட்டிருக்கின்றன. இழந்தவர்கள் சுயேச்சையாக இருப்பவர்கள்தான், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் கோவையில் ஏற்பட்ட இழப்பு கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஏற்பட்ட இழப்புதான். மதுரையில் ஏற்பட்ட இழப்பும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஏற்பட்ட இழப்பு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th March 1964

தான். கழகத்தைப் பொறுத்த வரையில், கழகத்திற்கு மதுரையில் இருந்த இடம் ஒன்று தான். அந்த ஒன்று இப்பொழுது இல்லை. ஆனால், கழகத்தினால் ஆதரிக்கப்பட்டவர்கள் 2, 3 பேர்கள் இப்பொழுது வந்திருக்கிறார்கள். கோவையில் இருந்தது 6 இடங்கள், இழந்தது 2 இடங்கள், கிடைத்தது 4 இடங்கள். கழகத்தினால் ஆதரிக்கப்பட்டவர்களில் இரண்டு பேர்கள் வந்திருக்கிறார்கள். ஆக, ஆறுக்கு ஆறு என்ற நிலைமை தான் இருக்கிறது. இழக்கும் படியான நிலைகள் இல்லை. ஏற்கனவே இல்லாத நகராட்சி மன்ற இடங்களில் சில பல இடங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் புதிதாகப் பெற்றிருக்கிறது என்ற சூழ்நிலை இருப்பது வளர்ச்சிக்கு அறிகுறியே தவிர, வேறு ஒன்றுமில்லை.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் முன்பிருந்ததைவிட திடீரென்று வேறு பல நிலைமைகள் ஏற்படவில்லை. 1959-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் இருந்த நிலைமைகள் என்ன, 1962-ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது இருந்த நிலைமைகள் என்ன, 1964-ம் ஆண்டு நடந்த சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் ஏற்பட்டிருக்கிற நிலைமை என்ன என்று கணக்குப்போட்டுப் பார்த்தால், ஒரே சீரான நிலை தான். சென்னை மாநரத்தில் மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்று, வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை கழகத்திற்கு இருக்கிறது. திடீரென்று ஏதோ சில பல சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்டது ஒன்றுமில்லை என்பதை புள்ளிவிவரம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. 1959-ம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் 100 இடங்களுக்குப் போட்டி போட்டு, 32 சதவிகிதம் வாக்குகளைப் பெற்றது. கழகம் 90 இடங்களுக்குப் போட்டி போட்டு, 35 சதவிகிதம் வோட்டுகளைப் பெற்றது. காங்கிரஸ் 37 இடங்களில் வெற்றி பெற்றது. கழகமோ 45 இடங்களில் வெற்றி பெற்றது. 1959-ம் ஆண்டுத் தேர்தலில் இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தது. 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கணக்கிட்டுப் பார்த்தால், காங்கிரஸ் 10 இடங்களுக்கு போட்டி போட்டு, 25 சதவிகிதம் வாக்குகளைப் பெற்றது. கழகம் 9 இடங்களுக்குப் போட்டி போட்டு, 25 சதவிகிதம் வாக்குகளைப் பெற்றது. கழகம் வெற்றி பெற்றது 4 இடங்களில், காங்கிரஸ் வெற்றி பெற்றது 6 இடங்களில். அத்தகைய சூழ்நிலை 1962-ம் ஆண்டில் ஏற்பட்டிருந்தது. 1964-ம் ஆண்டுத் தேர்தலில் கணக்குப் போட்டுப் பார்த்தால், சென்னை மாநகரத்தில் காங்கிரஸ் 87 இடங்களுக்கு போட்டி போட்டு, 38 சதவிகிதம் வாக்குகளைப் பெற்று 40 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. கழகம் 84 இடங்களில் போட்டி போட்டு 39 சதவிகிதம் வாக்குகளைப் பெற்று, 49 இடங்களைக் கைப்பற்றியுள்ளது 1959-ம் ஆண்டில் 37 இடங்களைப் பெற்ற காங்கிரஸ் 1964-ல் 40 இடங்களில் வெற்றி பெற்றது. கழகத்திற்கு முன்பு 45 இடங்கள் இருந்தது, இப்பொழுது 49 இடங்களாகக் கூடியிருக்கிறது. இது இரண்டு பேர்களுக்கும் மகிழ்ச்சியாகத் தான் இருக்கும். ஆனால், இடையிலே இருந்த சுயேச்சைகள் இடங்களை இழந்துவிட்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்டு தங்களுடைய இடங்களை இழந்துவிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்குத் தான் நிலைமைகள் இருக்கின்றன. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இருக்கிற சூழ்நிலை சீரான நிலையில் தான்



7th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இருக்கிறது. மெல்ல மெல்ல கழகம் எதிர்ப்புகளை சமாளித்து வருகிற நிலைமை தான் இருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த மன்றத்தில் தேர்தலைப்பற்றிய கருத்துக்கள் எடுத்துத் தெரிவிக்கப்பட்ட காரணத்தினாலே, கழகத்தினுடைய நிலைமையை விளக்கிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த மட்டில், தொழில் துறையிலும், மின்சாரத்துறையிலும் இந்த ஆண்டு இந்த ஆட்சி எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கன. கல்வியைப் பொறுத்த நிலைமையும் வரவேற்கத்தக்கதே. இருந்தாலும், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளிலும், விவசாயிகளுக்கு மேலும் உதவி செய்வதற்கான முயற்சிகளிலும், அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்கு மேலும் சலுகைகள் அளிப்பதற்கான முயற்சிகளிலும் அரசினர் ஈடுபடவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தின்மீது கடந்து 7 நாட்களாக விவாதம் நடைபெற்றது. அதில் பல உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களில் பாதிப் பேர்களுக்கு மேல் கலந்து கொண்டார்கள். நேற்று வரையிலே விவாதம் ஒருவாறு நடந்தது. இன்றைக்குத் தலைவர்கள் பேசினார்கள். நேற்றும் தலைவர்கள் பேசினார்கள். நேற்று வரையில் நடைபெற்ற விவாதத்தை பொதுவாக நான் மதிப்பிடுவது என்றால், சாதாரணமாக எதிர்க்கட்சியினர் எப்படிப் பேச வேண்டுமோ அப்படிப் பேசினார்கள். அதற்கு நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கவேண்டும். எதிர்க்கட்சி என்று சொன்னால் எப்படிப் பேசவேண்டுமோ, அப்படிப் பேசினார்கள். இந்த வரவு செலவு திட்டத்தில் ஒன்றுமே இல்லை, இதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டம் எதுவுமில்லை, பலன் தரக்கூடிய திட்டம் ஒன்றுமே இல்லை என்று பல அங்கத்தினர்கள் பேசினார்கள். அதற்கப்புறம் மக்களை ஏமாற்றக்கூடிய திட்டம் என்றும் பேசினார்கள்.

ஒரு கனம் உறுப்பினர் இந்த வரவு செலவுத் திட்டத்தை 'கானல் நீர்' என்று சொன்னார்கள். அது தான் கொஞ்சம் எனக்கு அச்சமூட்டியது. கானல் நீர் என்று நினைத்து உண்மையான நீரில் விழுந்துவிட்டால், நீந்தத் தெரிந்தவர்களாக இருந்தால் பயம் இல்லை; நீந்தத் தெரியாதவர்களாக இருந்தால் அது ஆபத்தை விளைக்கும். எல்லாவற்றையும் கானல் நீர் என்றால், அது ஆபத்தை விளைவிக்குமே என்ற ஒரு கவலை தான் எனக்கு. இந்த வரவு செலவுத் திட்டத்தில் காணப்படுகிறதெல்லாம் கானல் நீர் என்று ஒரு கனம் உறுப்பினர் குறிப்பிட்டபொழுது எனக்கு இந்தக் கவலைதான் ஏற்பட்டது.

கனம் உறுப்பினர் புலவர் அவர்கள் புலவர் போல்தான் பேசினர்கள். ஒன்றுமே இதில் அவர்களுக்கு நல்லதாகத் தோன்றவில்லை. புலவர்களின் தன்மை நமக்குத் தெரியும். 'போற்றினும் போற்றுவர் தூற்றினும் தூற்றுவார்' என்ற பழமையான வாக்கு ஒன்று

தான் எனக்கு நினைவுக்கு வந்தது அப்பொழுது. புலவர் அவர்களுக்கு ‘இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒன்றுமே நல்லதாகப் புலப்படவில்லை. கல்விச் சலுகையினால் என்ன பிரயோசனம்’ என்று புலவர் அவர்களே சொல்லுகிறார்கள். புலவர் அவர்கள் கல்விப் பிரச்சனையில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்பவர்கள். அவர்களே, மாணவர்களுக்குக் கல்வியை பொறுத்தவரையில் சம்பளச் சலுகை அளித்திருப்பதில் என்ன பிரயோசனம்? யாருக்கோ, வேண்டாதவர்களுக்கு, அவசியம் இல்லாதவர்களுக்கு அது பயன்படப் போகிறது, என்ன பிரயோசனம் என்று சொன்னார்கள். மற்றொன்று, ரொம்ப விபரீதமான கருத்து. ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர்களுடைய குடும்பத்திற்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி சொல்லும்பொழுது, இப்பொழுது கொடுக்காமல் செத்த பிறகு கொடுத்து என்ன பிரயோசனம் என்று கேட்டார் புலவர் அவர்கள், அவர்களுடைய மனோபாவத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்று தான் நான் கூற வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, நான் ஓய்வு பெற்றிருந்தவர்களின் குடும்பத்திற்குப் பென்ஷன் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்த வகையில் எத்தனை பேர் பயன் அடைவார்கள், எண்ணிப் பார்த்தால் பயன் அடையக்கூடியவர்களுடைய தொகை மிகக் குறைவாக இருக்கும். அது ஒரு பெரிய பாராட்டுதலுக்கு உரியதா என்று தான் சொன்னேன். அது தேவையில்லை என்று கூறவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் கனம் புலவர் அவர்களுடைய பாராட்டுதலை எதிர்பார்க்கவில்லை. அவர் பாராட்ட வேண்டியதும் இல்லை. யாருடைய பாராட்டுதலுக்கும் வேண்டி இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் தயாரிக்கவில்லை. பொதுவாக மக்கள் இதைப் பாராட்டுவார்கள் என்பது நன்றாகத் தெரியும். எத்தனை பேர்களுக்குக் குடும்பப் பென்ஷன் வரும் என்றால், என்.ஜி.ஓக்களை எடுத்துக் கொண்டால், மொத்த மக்களில் எத்தனை பேர் சென்னை நகரத்தில் எத்தனை பேர் என்றெல்லாம் கணக்குப் போட்டு இதில் ஒன்றுமில்லை, ஒன்றும் பிரயோசனம் இல்லை என்று அடுக்கிக் கொண்டே போகலாம். அந்தப் பாணியில் தான் புலவர் அவர்கள் பேசினார்கள்.

மற்றொன்று, இது வரி இல்லாத பட்ஜெட் என்று குறிப்பிடுகிறீர்களே, இதில் வரி இருக்கிறது, புதிய வரி இல்லை என்றால் பழைய வரி இருக்கிறது, என்று கனம் அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். வரி இல்லாத பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறேன் என்று நான் கூறவில்லை. வரி இல்லாமல் சமாளிக்கக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லை. வரி போடுவது தவிர்க்கக் கூடாதது. வரி போடாமலே ஆட்சி நடத்தலாம் என்றால், வெறுமனே அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டு போகலாம். மக்களுக்கு நன்மை புரிவது என்றால், ஓரளவுக்கு வரி போடவேண்டித்தான் இருக்கிறது. ஆகையினால், வரி இல்லாத பட்ஜெட் என்று நான் ‘கிளெய்ம்’ செய்யவில்லை. இப்பொழுது வருகிற வருமானம் போதாது, மேலும் ஓரளவுக்கு வருமானத்தை உயர்த்தக்கூடிய அளவிலே



பருத்தி நூல் போன்றவைகளுக்கு விற்பனை வரி ஒரு சதத்திலிருந்து இரண்டு சதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதிலே யாரையும் ஏமாற்றுவது ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் தாங்களே விழிப்போடு இருப்பதோடு, அவர்களைவிட விழிப்போடு இருக்கிறார்கள் மக்கள் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அதை கனம் அங்கத்தினர்களும் ஒப்புக் கொள்ள வேண்டும். கனம் அங்கத்தினர்கள் ஒன்றும் ஏமாறப் போவதில்லை. அவர்களைவிட மக்கள் விழிப்புடன உள்ளவர்கள். அவர்களை நாம் யாரும் ஏமாற்ற முடியாது. ஒரு நாளைக்கு ஏமாற்றிவிட்டாலும், எப்பொழுதுமே ஏமாறமாட்டார்கள். ஒரு முறை ஏமாந்தால் கூட பிறகு விழித்துக் கொள்வார்கள். ஆகவே, யாரையும் ஏமாற்றுவதாக இந்த பட்ஜெட் கொண்டு வரவில்லை.

நகர மன்றத் தேர்தல்களைப்பற்றி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். இதிலே பார்க்கலாம் முடிவுகளை. ஒரு முறை ஏமாந்தவர்கள் மறுமுறை ஏமாறுவதில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது ‘நாங்கள் தோல்வி அடையவில்லை. அபிவிருத்தி அடைந்து கொண்டு போகிறோம்’ என்று சொன்னார்கள். அம்மாதிரி அவர்கள் பேசுவதற்கு உரிமை உண்டு. அப்படித்தான் பேசவேண்டும். போய் விட்டது என்று சொல்ல முடியுமா? மீசையில் மண் ஒட்டவில்லை என்று சொல்லப்படுகிற ஒரு பழமொழி எனக்கு நினைவுக்கு வருகிறது. ‘கோவையில், மதுரையில், தஞ்சையில் திருவண்ணாமலையில் இன்னும் பல நகரங்களில் எங்களுக்கு ஒன்றும் தோல்வி இல்லை’ என்று சொன்னார்கள். சரி, வைத்துக் கொள்ளட்டும் என்று தான் நான் கனம் எதிர்கட்சித் தலைவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்னை நகரைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் தோல்வி அடைந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்திலே, என்ன காரணத்திற்காகத் தோல்வி அடைந்திருக்கிறது என்றால், அவரவர்கள் வேறு வேறு காரணங்களைச் சொல்லலாம், அல்லது இன்னின்ன சாதனைகள் என்று சொல்லலாம். எதற்கோ மக்கள் வாக்களித்து விட்டார்கள் என்று சொல்லலாம். இங்கே பேசித் தீர்க்கக்கூடிய விஷயம் அல்ல. மக்களுக்கும் நன்றாக தெரியும். சென்னை நகரிலே என்னென்ன வழிகள் கையாளப்பட்டன. எவ்வாறு தேர்தல் முடிவுகள் ஏற்பட்டன என்பது. இரண்டு பக்கத்திலுமுள்ள அங்கத்தினர்களுக்கு நன்றாக தெரியும். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஏதோ பட வர்த்தக சபையார் ரூபாய் 10,000 தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்குக் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் அவரிடமிருந்துதான் தெரிந்து கொண்டேன். எனக்கு விவரம் தெரியாது. என் நினைவுக்கு வருவது என்னவென்றால், தெரிந்து கணக்கில் வைத்துக் கொண்டு கொடுத்தார்கள். இந்தத் தேர்தலிலே சென்னை நகரிலே கருப்புப் பணம் எவ்வளவு தூரம் நடமாடியது என்பது எல்லோருக்கும் தெரியும். ஏராளமாக கருப்புப் பணம் நடமாடியது. இதிலே புகுந்து இந்த மன்றத்தின் நேரத்தைக் கழிப்பது சரியில்லை என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.

மேலும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் மணி அவர்கள் ஒரு ஆட்சேபம் தெரிவித்தார்கள். நான் "புவனேசுவரம்" என்று சொன்னதற்கே அவர்கள் ஆட்சேபம் தெரிவித்தார்கள். பாரத நாட்டின் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. நாட்டைப் பிரிக்கும் கொள்கையில் தான் அவர்கள் இருக்கிறார்கள். புவனேசுவரம் என்று சொன்னதற்கே ஏன் ஆட்சேபம்? புவனேசுவரத்தில் காங்கிரஸ் மகாசபை கூடியது. அது தான் ஆட்சேபம். இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில், எங்களுடைய கட்சியின் கொள்கைப்படிதான் நாங்கள் நடந்து கொண்டு வருகிறோம். ஆட்சி என்றால், மக்களுக்குத்தான் ஆட்சி. அதுவும் கட்சிச் சார்பற்ற ஆட்சி. காங்கிரஸ் மகாசபை எத்தகைய கொள்கையை நிர்ணயிக்கிறதோ அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு நாங்கள் திட்டங்களை உருவாக்குகிறோம். இது ஒரு வரவு செலவுத் திட்டம் தான். இந்த வரவு செலவுத் திட்டத்திலும் எங்களுடைய கட்சி எத்தகைய விளக்கம் கூறியிருக்கிறது என்பதை வைத்துக் கொண்டு தான் நாங்கள் திட்டங்களை உருவாக்குகிறோம். புவனேசுவரத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபை எந்த முறையில் வழி காட்டியிருக்கிறதோ, அதற்கு ஏற்றவாறு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறோம் என்று சொன்னதற்காக ஆட்சேபம் தெரிவித்ததற்கு இதிலே இடம் இல்லை. இன்னும் பல அங்கத்தினர்கள் அந்த புவனேசுவரத்தில் காங்கிரஸ் காட்டியது ஒரு வழி. அது ஜனநாயக சோஷலிசம் என்ற வழி, அதைப்பற்றி நான் குறிப்பிட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆட்சேபம் கூடத் தெரிவித்தார்கள். ஆனால் எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறியபடி, சோஷலிசத்தை வேண்டாதவர்கள் யார்? இன்றைக்குச் சுதந்திரா கட்சித் தலைவர் இங்கே இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்காகக் கூறிவிட்டார்கள். பச்சையாக சோஷலிசத்தை ஒப்புக் கொள்ளுவது இல்லை என்று சுதந்திராக் கட்சி போன்ற சில கட்சிகள் செல்லலாம். ஆனால் சோஷலிசத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்று யாரும் கூற மாட்டார்கள். இங்கே பேசினவர்கள் எல்லோரும் "இதுவா சோஷலிசம், அதுவா சோஷலிசம்" என்ற முறையில் பேசினார்கள். இங்கே இருக்கிற சோஷலிசக் கட்சி அங்கத்தினருக்கு "சோஷலிச சோஷலிசம்" என்று இருக்கிறது. (சிரிப்பு.) இன்னும் அங்கத்தினர்களுக்கு புரட்சி சோஷலிசம் என்று இருக்கிறது. எனக்குப் பின்னால் வீற்று இருக்கிற அங்கத்தினருக்கு "கோசல நாட்டு சோஷலிசம், கம்பன் காட்டிய சோஷலிசம்" என்று இருக்கிறது. இவ்வாறு பல சோஷலிசங்கள் இருக்கின்றன. இந்த வரவு செலவுத் திட்டத்தில், அதைக் காணவில்லை, இதைக் காணவில்லை என்று சொல்லி சோஷலிசம் என்றால் தங்களுடைய மனதில் ஏதோ ஒன்றை உருவகப்படுத்திக் கொண்டு, "அது இருக்கிறதா, இது இருக்கிறதா" என்று அங்கத்தினர்கள் கேட்கும் போது, பழைய உபநிஷத்தில் உள்ள ஒரு கதை என் ஞாபகத்திற்கு வருகிறது. 4 பேர் குருடர்கள், யானையைப் பார்க்கப் போனார்கள். அவர்கள் தடவித்தான் பார்க்க வேண்டும். ஒருவன் யானை முறம் போல இருக்கிறது என்றான்; இன்னொருவன் உலக்கை போல இருக்கிறது என்று சொன்னான். அந்தக் கதை என் நினைவுக்கு வந்தது. மக்கள் எல்லோரும் இன்





புற்று வாழ வேண்டும் என்பது தான் சோஷலிசம். ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும். மக்கள் குறைவற்ற வாழ்க்கை வாழ வேண்டும். அவர்கள் போதிய வசதிகளைப் பெற வேண்டும் என்பது தான் எங்களுடைய லட்சியம். கனம் உறுப்பினர் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் கம்பனை மேற்கோளாகக் காட்டி, பண்டைக் காலத்திலும், லட்சியத்தை வைத்துக் கொண்டு இருந்தார்கள் என்று சொன்னார். அப்படி லட்சியம் வைத்துக் கொண்டு இருந்தால் நாளாவட்டத்திலே அது தேய்ந்து தேய்ந்து வந்தது. ஆவடியிலே ஒரு சோஷலிசத்தைச் சொன்னீர்கள், இப்பொழுது புவனேசுவரத்தில் இன்னொரு சோஷலிசத்தைச் சொல்லுகிறீர்களே என்று கேட்டார்கள். ஆவடியிலே நாங்கள் அதை விளக்கினோம்.' நாம் பரிபூரண சுதந்திரம் அடைந்தோம். சுதந்திரம் தான் நம்முடைய லட்சியம் என்று முடிவு செய்தோம். அதற்காகப் பாடுபட்டோம். காந்தி அடிகள் காட்டிய வழியைப் பின் பற்றி அந்தச் சுதந்திரத்தை அடைந்த பிறகு ஆவடியிலே கூடிய காங்கிரஸ் மகாசபையில் சோஷலிச சமுதாயத்தை அமைப்பது தான் குறிக்கோள் என்று குறிப்பிட்டோம். இன்று வேறு ஒரு சோஷலிசத்தைப்பற்றி குறிப்பிடவில்லை. சோஷலிச சமுதாயத்தை அமைப்பது என்றால், எவ்வாறு அமைப்பது, எப்படி நடத்திக் கொண்டு வருவது என்று விளக்கம் கொடுக்கிறோம். ஆவடியிலே சோஷலிச அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தால், அதற்கு முன்பு சோஷலிசம் இல்லை என்பது அல்ல, என்று காங்கிரஸ் கட்சி பரிபூரண சுதந்திரத்தை பெறுவது என்ற லட்சியத்தை நிர்ணயித்துக் கொண்டு அதைப் பெறுவதற்கு முயற்சித்து, வெற்றிகரமாகப் பெற்றதோ அது முதற்கொண்டு மக்கள் எல்லோரும் இன்புற்று வாழக்கூடிய ஒரு சோஷலிச சமுதாய அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அதனுடைய கொள்கை. மேற்கோள் காட்டுவது வெகு சுலபம். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் காந்தியடிகளை மேற்கோளாகக் காட்டினார்கள். இதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி என்னவென்றால், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் காந்தியத்தைப் பற்றி எல்லாம் எவ்வளவு தூரம் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதாகும். எல்லாம் சோஷலிசம்தான். ஆனால் அதை எப்படி அடைவது, எப்படி நிறைவேற்றுவது என்பதிலே அப்போதைக்கப்போது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுகிறோம். அப்போதைக்கப்போது கவனம் செலுத்துகிறோம். மேன்மேலும் விளக்கங்கள் கொடுக்கிறோம். ஆனால் அவை ஒன்றுக் கொன்று முரண்பாடு இல்லை. ஆண்டு தோறும் ஒரு கொள்கையை நிர்ணயிருக்கிறோம் என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார். அப்படி ஆண்டுதோறும் கொள்கை என்பது இல்லை. ஒரே கொள்கை தான், ஒரே திட்டம் தான், ஒரே லட்சியம் தான். ஆனால் அதை நிறைவேற்றும்பொழுது அப்போதைக்கப்போது பரிசீலனை செய்கிறோம். குறைபாடுகள் இருந்தால் திருத்திக் கொள்ளுகிறோம். மேலும் நாம் முன்னேறுவதற்கு உரிய வகையிலே எவ்வளவு தூரம் திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டுமோ அவ்வளவு தூரம் துரிதப்படுத்த நிர்ணயிக்கிறோம். அவ்வாறு நிறைவேற்றியும் வருகிறோம். அந்த வகையிலே, புவனேஸ்வரத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபை சோஷலிசம் நம்முடைய லட்சியம் என்றால் ஜனநாயக முறையில் அமைக்க வேண்டிய சோஷ

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1964

லிசம் என்றால், எவ்வாறு அதற்கு முயற்சிப்பது என்பதற்காக விளக்கம் தான் கொடுத்திருக்கிறது. அந்த விளக்கத்தைத் தான் நான் குறிப்பிட்டேன். "ஏன் நீங்கள் குறிப்பிட்டீர்கள்" என்று கேட்கிறார்கள். அதை லட்சியமாக வைத்துக் கொண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறோம். திட்டங்களை நிறைவேற்றுகிறோம். அது தான் நம்முடைய லட்சியம். இன்றைக்கு எல்லாமே சோஷலிசமாக அமைந்து விட்டது என்றால், அது எந்த நாட்டிலே அமைந்திருக்கிறது? சோஷலிசத்தில் முன்னணியில் இருக்கிற நாட்டிலே கூட ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்று சொல்ல முடியுமா. சோவியத் யூனியனில் "அகடமிஷியன்ஸ் ஆப் சயன்ஸ்" என்று இருக்கிறார்கள். சிலர் மாதத்திற்கு 1,000 ரூபிள் மாதச் சம்பளம் வாங்குகிறார்கள். வேறு சிலர் மாதச் சம்பளம் ஆக 11,000 ரூபிள் வாங்குகிறார்கள். இது 4 ஆண்டுகளுக்கு முன்பு வரை உள்ளது. ஆகவே சோஷலிசம் என்று ஏதோ ஒரு கருத்தை மனதில் வைத்துக் கொண்டு அது இல்லை, இது இல்லை என்று சொல்லுவது சரியல்ல, பொதுவாக மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாது, "மனாப்பொலி" இருக்கக் கூடாது என்பது வரவேற்கக் கூடிய விஷயம். இப்பொழுது கூட கனம் எதிர்க்கட்சித் தலைவர் சோஷலிசத்திற்காக ஏதோ ஒரு கொட்டேஷனை எடுத்துக் காட்டி எல்லாவற்றையும் எடுத்து போட்டுக் கொள்ள வேண்டும் என்பது இல்லை. ஓர் இருவரிடம் பொருள் குவிய இடம் கொடுக்கக் கூடாது. அதைத் தவிர்ப்பதற்கு எத்தனையோ வகைகள் இருக்கின்றன. அந்த வகைகளை அரசாங்கம் கையாண்டு வருகிறது. சில தொழில்களை அரசாங்கம் மேற்கொண்டு இருக்கிறது. சில தொழில்கள் தனியார் துறையில் இருக்கின்றன. எந்தெந்த வகையிலே கண்ட்ரோல் செய்து, எந்தெந்த வகையிலே வரி போட்டு மக்களுக்குப் பரிபூரணமாக பயன் படுத்தக்கூடிய வகையிலே கவனம்
12-30 p.m. செலுத்திக் கொண்டு வருகிறோம். வரி போடுகின்ற கொள்கையே சோஷலிச கொள்கைதான் என்று கூறுவேன். நிலவரியைக் குறைக்கவில்லையே என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறினார்கள். மற்றும் சில அங்கத்தினர்களும் கூறினார்கள். நிலம் வைத்துக் கொண்டு இருக்கிறவர்கள் எத்தனை பேர், நிலம் இல்லாதவர்கள் எத்தனை பேர் என்று பார்க்க வேண்டும். குறைந்த நிலம் இருப்பவர்களும் அன்-எக்னாமிக் ஹோல்டிங்ஸ் வைத்திருப்பவர்களும் இருந்தாலும்கூட, நிலமே இல்லாதவர்களும் இருக்கிறார்கள். நில வரி இன்றைக்கு ஓர் அளவு குறைந்து தான் இருக்கிறது. 1938–39-ல் நிலவரி மொத்த வருமானத்தில் 50 சதவிகிதம் ஆக இருந்தது. மறுபடியும் 1955—56 கணக்குப் பார்த்தால் 15 சதவிகிதம் ஆக இருந்தது. இன்றைக்கு நிலவரி என்ன என்று பார்த்தால் அது 8.8 சதவிகிதம் தான். 1955—56-ல் 15 சதவிகிதம் ஆக இருந்தது இன்றைக்கு அந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது. அது போக நிலவரி கொடுக்கிறவர்களுக்கு ஏதாவது காரணத்தால் அவதி ஏற்பட்டாலும், பயிர் தவறி விட்டாலும் அப்போதைக்கப்போது வரி நிவாரணம் அளிக்க கவனம் செலுத்தப்படுகிறது. இப்பொழுது நிலவரி 8.8 சதவிகிதம் தான் என்று சொன்னேன். அது நீர்ப் பாசன வரி மற்றவைகள் எல்லாம் சேர்ந்தது தான். இதிலே விவசாயிகளுக்கு கஷ்டங்கள் இருந்தால்



7th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டு நிவாரணம் அளிக்கப்படுகிறது. வரியைத் தள்ளிப்போடுவதோ அல்லது ரெமிஷன் கொடுப்பதோ அம்மாதிரி செய்யப்படுகிறது. சென்ற ஆண்டில் கூட வரி வசூல் தள்ளி வைக்கப்பட்டது. அவசியமானால் வஜா கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஒன்று நிலவரியைக் குறைக்க வேண்டும் என்று விவசாயிகளைப்பற்றி அக்கறை எடுத்துக் கொண்டு கூறினார்கள் கனம் அங்கத்தினர்கள். ஆனால் அவர்களுக்குப் பஞ்சப்படி வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. பஞ்சப்படி வேண்டும் என்று சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பற்றிக் கூறினார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். உடனேயே சோஷலிசத்தை எடுத்துக் காட்டினார்கள். என்.ஜி.ஓ.க்களுக்கு உடனடியாகப் பஞ்சப்படி கொடுப்பதை ஒப்புக் கொள்ளவில்லை என்பதற்காக இது என்ன சோஷலிசம் என்று குறைபட்டுக் கொண்டார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மக்களுக்குச் சேவை புரியத்தான் இருக்கிறார்கள். இந்த மன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். எல்லோருக்கும் எஜமானர்கள், பொது மக்கள் தான். அவர்களுக்குச்சாதாரணமாக என்ன வருமானம் வருகிறது? ஒருவனுக்கு—உத்தியோகத்தில் இருப்பவனுக்கு—மாதம் ரூபாய் 150 வருகிறது என்றால் மார்ச்சு மாதம் முதல் தேதியில் மனைவி குழந்தைகளுக்குக் கொடுக்கப் பணம் இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் கிராம விவசாயிகளிடத்தில் எத்தனை பேரிடம் பணம் இருக்கிறது? மற்றும் பல சந்தர்ப்பங்களில் பயிர் கெட்டுவிட்டது என்றால் உதவி செய்கிறோம். வரி வஜா செய்யுங்கள் என்று கூறினார்கள். ஆனால் பஞ்சப்படி வேண்டும் என்று கூறினார்களா? இல்லை. வஜா செய்ய வேண்டியது நியாயம் என்றால், அப்படிச் செய்கிறோம். இந்தப் பக்கத்தில் இருந்து ஒரு அங்கத்தினர் எடுத்துச் சொன்னார்கள், பண்டைக் காலத்தில் ஆறில் ஒரு பங்கு தான் வரி செலுத்தப்பட்டு வந்தது என்று. இப்பொழுது மொத்த வருமானத்தில் 8.8 சதவிகிதம் ஆக நிலவரி வசூலிக்கிறோம், எல்லாமாகச் சேர்த்து.

இப்பொழுது என்.ஜி.ஓ. களைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் பலர் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு விலைவாசி உயர்வினால் அதிகக் கஷ்டம் என்றும், அவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். நான் அதை உணராமல் இல்லை. மற்றொன்று குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநில அரசாங்க ஊழியர்களைப் பொருத்த மட்டில் முன்பு ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் பஞ்சப் படியை எந்த விதத்தில் உயர்த்துகிறார்களோ அதே விகிதத்தில் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் உயர்த்த வேண்டும் என்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறதே என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் இப்பொழுது நடப்பது என்ன? இந்த வரவு செலவுத் திட்டம் முன்னமேயே தயாரிக்கப்பட்டு விட்டது. சில நாட்களுக்கு முன்பு தான் பத்திரிகையில் பார்த்தேன். அப்பொழுது எங்களுக்கு வேறு தகவல் இல்லை. மத்திய சர்க்காரில் ஏதோ மீண்டும் ஓர் அளவு பஞ்சப்படியை உயர்த்தியிருக்கிறார்கள் என்று பத்திரிகையில் பார்த்தேன். அந்தத்தகவல் அப்பொழுது எனக்கு வரவில்லை. ஆனால் முன்பே அவ்

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1964

வாறு மத்திய சர்க்கார் பஞ்சப்படியை உயர்த்துகிறது என்றால் நாமும் உயர்த்த வேண்டும் என்ற நிலையில் மத்திய சர்க்கார் நமக்கு உதவி அளிக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அப்படி உதவி முன்பு அளித்திருக்கிறார்கள். மீண்டும் அளிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம். நாம் வேறொன்றையும் பார்க்க வேண்டும். இங்கே சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் பஞ்சப்படியை உயர்த்தும்போது ஸ்தல ஸ்தாபனங்களில் இருக்கும் ஊழியர்களை மறந்துவிட முடியாது. அதே மாதிரி ஆசிரியர்களை மறந்துவிட முடியாது. தனிப்பட்டவர்களுடைய பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கும், எல்லோருக்கும் ஒரே மாதிரிப் பஞ்சப்படியை உயர்த்தி வருகிறோம். மத்திய ஆட்சிக்கு உட்பட்ட சிப்பந்திகளுக்கு உயர்த்தும்போது மாநில ஆட்சிக்கு உட்பட்ட அத்தனை சிப்பந்திகளுக்கும் உயர்த்த வேண்டும். நாம் இன்றைக்குத் திட்டத்தை நிறைவேற்றி வரும்போது, திடீர் என்று 2 கோடி ரூபாய் செலவு என்றால் அதைச் சரிக்கட்டுவது மிகச் சிரமம். ஆகவே மத்திய சர்க்கார் உதவி அளிக்க வேண்டும் என்பது நாமும், மற்ற மாநிலங்களும் வற்புறுத்தி வரும் விஷயம். அதைச் செய்து கொண்டு இருக்கிறோம். அதற்குள்ளே என் இவ்வளவு சலசலப்பு? நம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் என்.ஜி.ஓ.க்களுக்குப் பரிந்து பேசுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. அவர்கள் அப்படிப் பேசுவதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். பக்கத்து வீட்டுக்காரி நல்ல மனசு உள்ளவள் இல்லை. அடுத்த வீட்டு இளம் பெண்ணிடம் உன்னுடைய வீட்டுக்காரன் புதுப் புடவை, நகை வாங்கிக் கொடுக்கிறானா என்று கேட்டுக் கொண்டே இருக்கிறாள். இவள் கெட்டிக்காரியாக இருந்தால் அவளுக்கு வேலை இல்லை என்று போய்விடுவாள். ஆனால் ஒன்றிரண்டு அசட்டுப் பெண்கள் இதைத் திருப்பித் திருப்பிக் கேட்டுவிட்டு கணவனைக் கேட்டுக் கொண்டு இருக்கலாம். அப்படி எல்லோரும் அசடாவது இல்லை. என்.ஜி.ஓக்களுக்கு இருக்கும் குறையை நான் மறுக்கவில்லை. அவர்களுக்கு உதவி கொடுக்க வேண்டும் என்பதை உணருகிறேன். இது விஷயமாக அவர்களுக்கும் தெரிவித்திருக்கிறேன். அதற்குள்ளே மார்ச்சு மாதம் முதல் தேதி கருப்பு பாட்ஜ் போட்டுக் கொண்டு வருவது முறையா? சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இப்படி வருவது தான் முறையா? அவர்கள் தான் அப்படி வந்தார்கள் என்றால், அங்கத்தினர்கள் அதை எடுத்துக் காட்டி சட்ட மன்றத்திலே சொல்லுவது முறையா? அது முறையல்ல. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த வரை அவர்கள் கட்சி சார்பற்று பணிபுரிகிறார்களா. யார் அரசாங்கத்தை நடத்தினாலும் அவர்களிடம் அரசாங்கம் அக்கறை கொண்டு இருக்கிறது. என்னென்ன செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வருகிறது. அதற்குள்ளாக துரி சமத்துவம் வேண்டும், அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்பது, அதற்கு மன்றத்திலே பரிந்து பேசுவது, சோஷலிசத்தைக் கோட் பண்ணுவது என்பதெல்லாம் சரியாகாது. இங்கே டெபுடி செகரடரிகள் இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். டெபுடி செக்ரடரிகளும் இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். இல்லாத டெபுடி செக்ரடரி



7th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

களும் இருக்கிறார்கள். அதே வேலையைத்தான் ஐ.ஏ.எஸ். இல்லாத டெபுடி செக்ரடரிகளும் செய்கிறார்கள், அதற்காக இரண்டு பேர்களுக்கும் ஒரே சம்பளமாக இருக்க வேண்டும் என்று சொல்ல முடியுமா? மத்திய ஆட்சியில் பஞ்சப்படி இருக்கிறதே, மாநில ஆட்சியில் வேண்டாமா என்றால் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது வரப் போகிற ஏப்ரல் முதல் தேதியிலிருந்து, கல்விச் சம்பளச் சலுகை எல்லோருக்கும் வருகிறது. இதற்கு முன்பு என்ன நிலை? நமது மாநில சர்க்கார் ஊழியர்களுடைய குழந்தைகளுக்கு இலவசமாகப் படிப்பு இருந்தது. அதே சலுகை மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இருந்ததா? அப்பொழுது அவர்கள் குழந்தைகளுக்குச் சம்பளம் கொடுத்துத் தான் படித்தார்கள். ஆகவே, எத்தனையோ வகையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. மற்றொன்று, அவர்கள் இன்றைக்குக் கல்கத்தாவிற்குப் போக வேண்டும் என்றால் போய்தான் ஆகவேண்டும். அதோடு கூட அவர்கள் ஹிந்தி படிக்க மாட்டேன் என்றால் வேலையில் இருக்க முடியாது. அவர்களுக்கு எத்தனையோ கஷ்டங்கள். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்றால் எப்படி முடியும்? மத்திய ஆட்சியில் இருந்தால் ஹிந்தி கற்றுக் கொள்ள வேண்டும். இன்றைக்கு இல்லை என்றாலும் பின்னால் கற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். ஆனால் மாநில ஆட்சியில் உள்ள வேலைக்கு ஹிந்தி அவசியம் தேவை இல்லை. பண்டைக் காலத்தில் வெள்ளைக்காரர்கள் கூட தமிழ், கன்னடம், மராத்தி போன்ற பிராந்திய மொழிகளைக் கற்றுக் கொண்டார்கள். மாநில ஆட்சியில் ஹிந்தி கற்க வேண்டியது இல்லை. ஆனால் மத்திய ஆட்சியில் ஹிந்தி கற்றுக் கொள்ள வேண்டும்; மத்திய ஆட்சியில் இருப்பவர்களுக்குக் கல்கத்தாவிற்குப் போக வேண்டும் என்றால் போக வேண்டும்; பம்பாய்க்குப் போக வேண்டும் என்றால் போக வேண்டும்; ராஜஸ்தானுக்குப் போக வேண்டும் என்றால் போக வேண்டும். காஷ்மீருக்குப் போக வேண்டும் என்றால், போய்தான் ஆகவேண்டும். அப்படி எத்தனையோ இருக்கிறது, மத்திய ஆட்சிக்கும் மாநில ஆட்சிக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள். இன்றைக்கு சூப்ரெண்ட் வேலை இருக்கிறது. அசிஸ்டெண்ட் செக்ரடரி வேலை இருக்கிறது. அப்படி நம் அமைப்பு இருக்கிறது. இரண்டு பேரும் ஒரே மணி நேரந்தான் வேலை செய்கிறார்கள். சூப்ரெண்டுக்கும் அசிஸ்டெண்ட் செக்ரடரி சம்பளம் கொடுக்க முடியுமா? அல்லது டெபுடி செக்ரடரி சம்பளத்தை அசிஸ்டெண்ட் செக்ரடரிக்கு கொடுக்க முடியுமா? அதற்கு மேலே செக்ரடரி இருக்கிறார். எவ்வளவோ கேசுகளை செக்ரடரிக்குப் போகாமல் டெபுடி செக்ரடரியே டிஸ்போஸ் செய்கிறார். அதற்காகச் செக்ரடரி சம்பளத்தை டெபுடி செக்ரடரிக்குக் கொடு என்று சொல்ல முடியுமா? அப்படிப் போய்க் கொண்டே இருந்தால் எங்கே போய் நிற்கிறது? இதெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்று கனம் அங்கத்தினர்கள் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இக் கரைக்கு அக் கரை பச்சை. "ஆந்திராவிலே அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப் படியை உயர்த்திக் கொடுத்து விட்டார்கள்" என்று சொல்கிறார்கள். அவர்கள் என்ன கொடுத்து

விட்டார்கள்? ஆந்திர சர்க்காரை நான் குறை கூறவில்லை. நான் குறை கூறுவதாக யாரும் தவறுதலாக எடுத்துக் கொள்ளக் கூடாது. 'ஆந்திராவில் கொடுத்துவிட்டார்களே' என்று சொல்கிறார்களே, அதற்காகச் சொல்கிறேன். நாம் நம்முடைய சர்க்கார் ஊழியர்களுக்கு இப்பொழுது எவ்வளவு கொடுக்கின்றோமோ, அதைத்தான் ஆந்திர சர்க்காரிலே உள்ளவர்கள் இப்பொழுது வாங்குகிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்து. நம்மைவிட அவர்கள் ஒன்றும் அதிகமாக வாங்கிவிடவில்லை. பத்திரிகையைப் பார்த்துவிட்டு, மற்ற சர்க்காரிலே கொடுத்து விட்டார்கள், இந்த மாநில சர்க்கார் கொடுக்கவில்லை" என்று சொல்கிறார்கள். அது சரியல்ல.

கேரளாவை எடுத்துக் கொள்வோம். சென்ற ஆண்டில் அவர்கள் பஞ்சப் படியை உயர்த்தவே இல்லை. மறுபடியும் நான் சொல்கிறேன். நான் கேரள சர்க்காரைக் குறை கூறுவதாக யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது. 1958-ஆம் ஆண்டிலிருந்து கேரளாவில் பஞ்சப்படி உயர்த்தப்படவே இல்லை.

The bulk of dearness allowance has not been merged with pay and therefore the D.A. rates are not comparable. ஏதோ கேரளாவில் கொடுத்துவிட்டார்கள் என்று பத்திரிகையிலே வந்ததைப் பார்த்துச் சொல்கிறார்கள். கேரளாவில் இப்பொழுது கொடுத்திருக்கும் பஞ்சப் படியைச் சேர்த்து ஒரு லோயர் டிவிஷன் க்ளார்க்குக்கு மொத்தமாக 82 ரூபாய் கிடைக்கிறது. நமது மாநிலத்தில் நாம் 105 ரூபாய் கொடுக்கிறோம். கேரளாவில் ஒரு அப்பர் டிவிஷன் க்ளார்க்குக்கு அவர்கள் 121 ரூபாய் கொடுக்கிறார்கள். கேரளாவில் மட்டும் என்ன வாழ்க்கைச் செலவு குறைவா? நாம் இப்பொழுது, மேலும் பஞ்சப் படியை உயர்த்தாத நிலையிலே, 140 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கொடுப்பது 121 ரூபாய். நாம் கொடுப்பது 140 ரூபாய்.

மைசூரை எடுத்துக் கொள்வோம். அங்கும் ஏதோ கொடுத்திருக்கிறார்கள் என்றெல்லாம் கூறப்படுகிறது. ஆனால், அவர்கள் குடும்பப் பென்ஷன் திட்டத்தை லிபரலைஸ் செய்யவில்லை. "குடும்பப் பென்ஷன் திட்டத்தைக் கொண்டுவந்து என்ன பிரயோஜனம்? செத்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று புலவர் அவர்கள் சொல்லக் கூடும். அதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலேயே பேசுகிறேன். மைசூரிலே ஒரு லோயர் டிவிஷன் க்ளார்க்குக்கு இன்றைக்கு மொத்தமாகக் கிடைப்பது 100 ரூபாய். இப்பொழுது இருக்கிற நிலையிலே நம்முடைய மாநிலத்தில் கொடுப்பது 105 ரூபாய். மைசூரில் ஒரு அப்பர் டிவிஷன் க்ளார்க்குக்கு இப்பொழுது கொடுப்பதெல்லாம், பஞ்சப் படியையும் சேர்த்து, 103 ரூபாய். நாம் இப்பொழுது கொடுப்பது 140 ரூபாய்.

ஆனால், நம் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு இப்பொழுது நாம் கொடுத்து வருவது போதுமானது என்றோ, இதற்கு மேல் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதில்லை என்றோ நான் சொல்லவில்லை.





இதெல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எத்தகைய பரிகாரம் அளிக்க வேண்டும் என்று நாங்கள் உணர்ந்திருக்கிறோம். எப்படி அளிப்பது இதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி என்ன கிடைக்கும் என்றெல்லாம் பார்க்க வேண்டும். எப்படியிருந்தாலும், எந்த வகையிலே இவர்களுக்குப் பரிகாரம் அளிப்பது என்பதெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திலே இருக்கிறது. இந்த நிலையிலே இதற்கென்று பிரத்தியேகமாக, ஏதோ என்.ஜி.ஓ.-க்களைக் காட்டி, "அவர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை, அதிலே கூட சோஷலிசம் இல்லை" என்று சொல்வது கொஞ்சமும் பொருந்தாது என்றுதான் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

"திட்டங்களை நிறைவேற்றுவதிலே சாதனைகள் இல்லை" என்று பொதுவாகச் சில கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். திட்டங்களின் சாதனைகளைப் பற்றியெல்லாம் முன்பு நடைபெற்ற விவாதத்திலிருந்து கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள்; பொது மக்களும் உணருவார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், "உணவு உற்பத்தித் திட்டத்திலே தோல்வி அடைந்துவிட்டோம், உணவு உற்பத்திப் பெருக்கம் ஒன்றும் ஏற்படவில்லை" என்று சொன்னார்கள். அதுவும் சரியல்ல. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், உணவு உற்பத்தி பெருகிக் கொண்டுதான் வருகிறது. நாம் எதிர்பார்த்த அளவு, வேண்டிய அளவு பெருகவில்லையே தவிர, இன்று சுய நிறைவு கண்டிருக்கிறோம். இன்று பற்றாக்குறை என்பது இல்லை. சிலருக்கு நெல்லூர் அரிசி சாப்பிட்டுத்தான் பழக்கம். தஞ்சை, செங்கற்பட்டு, வடாற்காடு ஜில்லாக்களில் விளைகிறது உயர்ந்த ரக அரிசியானாலும், அதைச் சாப்பிடுகிற பழக்கம் ஒரு சிலருக்கு இல்லை. ஆகவே, இத்தகைய ரக அரிசியை மக்கள் வாங்கிச் சாப்பிடுவார்கள் என்ற எண்ணம் விவசாயிகளுக்கு இல்லாமல் போய்விட்டது. நெல்லூர் அரிசி சென்னை நகரத்திற்கு வருவதிலே ஒரு தடை ஏற்பட்டது. அதிலும் அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. அதற்கு மேலாக, 'அரிசி விலை அவ்வளவு இருக்கிறது, இவ்வளவு இருக்கிறது' என்று குறை கூறுவது என்றால் . . . .

**திரு. ஆ. வி. சுவாமிநாதன்:** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். நாம் உணவு உற்பத்தியில் ஓரளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறோம். ஆனால், நம்முடைய 'டார்ஜெட்'டை எட்டிப் பிடிக்கவில்லை. அதிலே தோல்வி அடைந்திருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல; இந்திய தேசம் பூராவிலுமே நாம் உணவு உற்பத்தியிலே தோல்வி அடைந்திருக்கிறோம் என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தியா முழுவதையும் பற்றிப் பேச வேண்டுமென்றால், பார்லிமெண்டுக்குப் போய்ப் பேச வேண்டும். நம் மாநிலத்தைப்பற்றித்தான் நான் சொல்கிறேன். இந்தியா முழுவதையும் பற்றி நான் என்ன சொல்ல முடியும்? நம்

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1964

முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் முன்பே விளக்கப்பட்டிருக்கிறது. எந்த எந்த ரசாயன உரத்தைக் கொண்டு, எந்த எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று கணக்கிட்டு, அதன்படி திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். ரசாயன உரம் அதிகமாக உபயோகப்பட்டு வருகிறது; உபயோகிக்கப்படாமல் இல்லை. ஆந்திரப் பிரதேசம் சென்னை ராஜ்யத்தோடு சேர்ந்திருந்தபோது நாம் ஒரு லட்சம் டன் ரசாயன உரம் கூட உபயோகிக்கவில்லை. இப்பொழுது மூன்று லட்சம் டன்னுக்கு மேல் ரசாயன உரம் உபயோகிக்கப்படுகிறது. மேலும் உபயோகிக்க வேண்டும். உபயோகிப்பதிலே சில சிக்கல் இருக்கிறது. அதைக் கவனிக்கிறோம் என்றுதான் சொன்னேன்.

கனம் அங்கத்தினர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது நல்ல தீவிரமான யோசனை தான். அதை நான் பாராட்டுகிறேன். 'உணவுத் தானியங்களை ஸ்டேட் ட்ரேடிங்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று சொன்னார்கள். ஸ்டேட் ட்ரேடிங் என்கிற கருத்து தீவிரமான கருத்துத் தான். எவ்வளவு தீவிரமான கருத்தைத் தெரிவித்தாலும், அதற்கு மேல் தீவிரமாகப் போக நான் தயாராக இருக்கிறேன். ஆனால், அது காரிய சாத்தியமாக இருக்குமா, எது சாத்தியம், எது விவசாயிகளுக்கு நல்லது, எது உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு நல்லது என்பதையெல்லாம் நாம் கவனிக்க வேண்டும்.

புவனேசுவரத்தில் கூடிய காங்கிரஸ் நிறைவேற்றிய சோஷலிசம் பற்றிய தீர்மானத்திற்கு இந்த நிதி நிலை அறிக்கை விரோதமாக இருக்கிறது என்று சில கனம் அங்கத்தினர்கள் வியாக்கியானம் சொல்லலாம். அவரவர்களுக்குத் தோன்றியபடி அந்தத் தீர்மானத்திற்கு வியாக்கியானம் புவனேசுவர காங்கிரஸ் தீர்மானத்தின் கருத்து என்ன, அதனுடைய 'ஸ்பிரிட்' என்ன, லட்சியம் என்ன என்பதைத்தான் நாம் நன்றாகக் கூர்ந்து கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் தானியங்களுக்குக் கட்டுப்படியான விலை வேண்டும். அதோடு அவர்களுக்குத் தொல்லைகள் இருக்கக் கூடாது. இது மிகவும் முக்கியமானது. விவசாயிகளுக்கு எந்த விதமான தொல்லையும் இல்லாமல், அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்ய ஊக்கம் அளிப்பதோடு, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதற்கும் வகை செய்வதன் மூலமாகத்தான் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க முடியும். இதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. அத்துடன், அவர்கள் உற்பத்தி செய்யும் தானியங்களை வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் அனுகூலமாக உணவுப் பொருள்களின் விலையும் குறைய வேண்டும். இவ்விரண்டும் தான் அரசாங்கத்தின் லட்சியங்களாகும்.

நம்முடைய மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அவர்கள் சமீபத்தில் கூறியிருப்பதைக் கனம் அங்கத்தினர்கள் பத்திரிகையில் பார்த்திருப்பார்கள். முழு கண்ட்ரோல் என்பது ஒரு விஷயம்.



7th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

முழு டீ-கண்ட்ரோல் என்பது இன்னொரு விஷயம். இரண்டும் 'ஐடியல்' ஆக இருக்கலாம். ஆனால், அவை காரிய சாத்தியம் இல்லை. முழு கண்ட்ரோல் கொண்டு வந்துவிடலாம். ஆனால், முழு கண்ட்ரோல் இருந்தபோது எவ்வளவு தீங்கு இருந்தது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். கண்ட்ரோல் இருந்தபோது, விவசாயிகளுக்கு என்ன பாதகம் ஏற்பட்டது என்பதும் கனம் அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கக் கூடும். இந்த மாநிலத்தில் முழு டீ—கண்ட்ரோலும் செய்யப்பட்டது. திடீர் என்று டீ—கண்ட்ரோல் செய்தபோது, அதிலும் சிக்கல் ஏற்பட்டது, பற்றாக்குறை நிலை கூட ஏற்பட்டது என்பதையும் நாம் பார்த்தோம். அதை உணர்ந்து தான் மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அவர்கள், 'இதெல்லாம் ஐடியல்; காரிய சாத்தியம் இல்லாதது' என்று கூறியிருக்கிறார்கள்.

இன்று ஸ்டேட் ட்ரேடிங்கை எடுத்துக் கொள்ளலாம். எடுத்துக் கொண்டால், மில்களையும் எடுத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் சிலர் சொல்கிறார்கள். சிறிய ரைஸ் மில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம். அப்படி எடுத்துக் கொண்டால் என்ன ஆகும்? அதனால் விவசாயிகளுக்குத்தான் கட்டுப்பாடு அதிகமாகும். அதிகாரிகள் யாருக்குத் தானியங்களைக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்களோ, அவர்களுக்குத்தான் அவர்கள் கொடுக்க முடியும். சொந்த மகளுக்கு இரண்டு வண்டி நெல் அனுப்ப வேண்டுமென்று விரும்பினாலுங்கூட விவசாயி தன் தானியத்தை அனுப்ப முடியாது. நம் அதிகாரிகள் கணக்குப் போட்டு, 'இவ்வளவு தான் உற்பத்தி ஆயிற்று, இவ்வளவு தான் சாப்பாட்டுக்கு வைத்துக் கொள்ள வேண்டும், இன்ன விலைக்குத் தான் அளந்துவிட வேண்டும்' என்றெல்லாம் கொடுக்கக்கூடிய தொல்லைகளை விவசாயிகள் ஒருக்காலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அதனால் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் ஒரு விலையை உச்ச விலையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் எடுத்துக் கொண்டுவிடலாம். அதைப்பற்றி கவலை இல்லை. வேறு சிலருக்குப் பாதகம் ஏற்பட்டாலும் கவலை இல்லை. மில்களைக்கூட எடுத்துக் கொள்ளலாம். அதைப் பற்றிக் கூடக் கவலை இல்லை. மில்களை எடுத்துக்கொண்டு, அரசாங்கமே தானியத்தை வாங்கிக் குத்தி, விலைக்கு கொடுக்கிறோம் என்றால், அதனால் விவசாயிகளுக்குத் தொல்லை ஏற்படுமே என்பதுதான் அரசாங்கத்தின் முக்கியமான கவலை. வேறு எந்தக் கவலையும் அரசாங்கத்திற்கு இல்லை. எந்த வகையிலும் விவசாயிகளுக்குக் கவலை இல்லை. எந்த வகையிலும் விவசாயிகளுக்குக் கவலை இல்லாதபடி செய்ய வேண்டும். யாராவது நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு சுரண்டுகிறார்கள், அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள் என்றால் அதைக் கண்டு பிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது தான். கனம் அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது போல, முடியாதா என்றால் முடியும். லைசன்ஸ் கொடுத்து, கட்டுப்பாடு செய்து, கணக்குகளைக் கண்காணித்து, விவசாயிகளுக்குக் கட்டுபடியாகும் ஒரு விலையை உச்ச விலையாக நிர்ணயித்து, அதற்கு மேல் யாரும் விற்கக் கூடாது என்றெல்லாம்

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1964

கட்டு திட்டங்கள் செய்துவிடலாம். அதோடு, குறைந்த பட்சவிலையையும் நிர்ணயித்து, அதற்குக் கீழே விலை போகுமானால், அதற்கும் விவசாயிகளுக்கு ஆதரவு அரசாங்கம் கொடுக்கும் என்ற உறுதியையும் அளிக்கலாம். இன்றைக்கு நாம் என்ன செய்யலாம் என்றால், மொத்தமாக (ஹோல்சேல்ஸ்) வாங்கி, மொத்த விற்பனை செய்கிறவர்களுடைய கணக்கை வைத்துக் கொண்டு, இவ்வளவு தான் மார்ஜின் வைத்து விற்க வேண்டும், அதற்கு மேலே மார்ஜின் வைத்து விற்கக் கூடாது என்று கணக்கிட்டுக் கட்டுப்பாடு செய்ய முடியும். எனக்குப் புரிந்தவரை, அதுதான் சாத்தியப்படக்கூடிய வழி என்று தோன்றுகிறது. மத்திய அரசாங்க அமைச்சர்களும், இதுதான் சாத்தியப்பட்டது என்று கருதுகிறார்கள். ஆனால், மாநில சர்க்கார் மட்டும் இதை எடுத்து நிறைவேற்றிவிட முடியாது, மத்திய அரசு இதில் மேலும் கவனம் செலுத்தும் என்று கூறுகிறார்கள். இப்பொழுது அரசாங்கத்தின் கவனம் எல்லாம், இதற்கு எப்படியும் ஒரு நிரந்தரமான வழி காண வேண்டும் என்பது தான். ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்குத் தானியங்கள் மூவ் ஆகிறது. அதை ஸ்டேட் டிரேடிங்கில் எடுத்துக் கொள்ளலாம். அப்படி எடுத்துக் கொள்வது கூட நலமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். அதில் எந்த விவசாயிக்கும் பாதகம் இல்லை. என்னுடைய நோக்கம் எல்லாம் எந்த விவசாயியும் பாதிக்கப்படக் கூடாது என்பது தான். "விலைவாசி உயர்வைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை, அதைக் குறைப்பதற்கான வழிமுறைகளையும் சொல்லவில்லை" என்பதாகக் குற்றம் சாட்டலாம். அதற்கு ரெடிமேட் சொலுஷனை ஆராய்ந்து, அறிந்து இதுதான் என்று கூறிவிடுவது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. விலை உயர்வுக்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. பொருளாதார நிபுணர்களும் அதை உணர்ந்து இருக்கிறார்கள். டாக்டர் நடராசன் அவர்கள் சிலபல நல்ல கருத்துக்களைக் கூறினார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன் எனக்கு ஒன்றும் நிபுணர்களிடத்தில் அலர்ஜி இல்லை. அவர்களைக் கண்டால் வேப்பங் காயாகவும் இல்லை. வேப்பம் பழமாகவும் இல்லை. அரசாங்கத்திலேயே பல நிபுணர்கள் இருக்கிறார்கள். யாரையோ விட்டு அக்கவுண்ட்ஸ் எழுதச் சொல்கிறார்கள் என்பது இல்லை. சில சமயங்களில் இந்த நிபுணர்களினாலேயே தொந்தரவு வருகிறது. அப்படி அவர்களால் தொந்தரவு வராது இருக்கத்தான் நாம் விழிப்போடு இருக்க வேண்டியிருக்கிறது. டாக்டர் நடராஜன் அவர்கள் சர்க்கார் ஏற்று நடத்துகிற சில ஸ்தாபனங்களில் நஷ்டம் வருவதைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னவற்றில் ஒன்று பால் சப்ளை யூனியன். அதற்கு கனம் தொழில் மந்திரி அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போது விடை அளித்தார்கள். சர்க்கார் வெறும் பிசினஸ் ப்ரோபொசிஷனை ஒன்றையும் நடத்துவது இல்லை. மக்களுக்கு நலம் செய்கிற திட்டம், சமூகத்திற்கு நலம் செய்கிற திட்டம் என்கிற அடிப்படையில் தான் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாளாவட்டத்தில் லாபம் வரவேண்டுமென்ற லட்சியத்தையும் வைத்துக்கொண்டு செயலாற்றுகிறோம்.



7th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

அதேமாதிரி சிங்கோனா. முன்பு க்வினைன் ப்ரிபரேஷனுக்காக சிங்கோனாத் தோட்டம் பயிரிடப்பட்டது. அதையும் லாபத்திற்காக ஏற்கவில்லை. இப்போது க்வினைன் வேறுவகையில் தொழிற்சாலைகளில் அதிகம் உற்பத்தி செய்வதால் இத்துறையில் கொஞ்சம் நஷ்டம் காணப்படலாம். அதற்காக அதைக் கைவிட்டுவிட முடியாது. அதிலே ஒரு சிறு மாறுதல் கூடச் செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக அநேக மருந்து மூலிகைகளை அங்கே பயிரிடலாம் என்ற யோசனை இருக்கிறது. அதோடு இந்திய சர்க்கார் கூட சையன்ஸ் ரிசர்ச் என்ற அடிப்படையில் அதையே தங்கள் பொறுப்பில் ஏற்று நடத்துவதாகச் சொல்கிறார்கள்.

அடுத்து டிரான்ஸ்போர்ட். நான் முன்பு கூறியது போல சர்க்கார் பஸ்களை லாபத்திற்காக விடுவது இல்லை. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும், அவர்களுடைய வசதிகளைப் பெருக்க வேண்டும் என்கிற முறையில் தான் செயல்பட்டு வருகிறோம். வியாபாரத் துறையில் லாபம் அடைவது நோக்கம் அல்ல. இத்துறையில் லாபம் இல்லை என்பதனாலே பலர் தங்களுடைய பர்மிட்டுகளைக் கூடச் சரண்டர் செய்ய முன் வருகிறார்கள் என்று தொழில் அமைச்சர் குறிப்பிட்டார். திரு. கோசல்ராம் அவர்கள் கூட நஷ்டம் தான் வருகிறதே, ஏன் ஓவர் ஹெட் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். ஓவர்ஹெட் வேண்டாம். ஒரு கண்டெக்டர் இல்லையென்றால் போதுமா? டிரைவர் மாத்திரம் இருந்தால் சரியாகிவிடுமா? நல்ல முறையில் மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய வகையில் அந்த ஸ்தாபனம் செயல்படவேண்டுமென்றால் தேவைக்கு ஆட்கள் இருக்கத்தான் வேண்டும். அதிகச் செலவு ஆகிறதே என்பதற்காகச் செலவைக் குறைக்க வசதிகளைக் குறைக்க முடியாது. நான்-ப்ளானிங் ஸ்கீம் இருக்கிறதே தவிர அனாவசியமான திட்டங்களை நாம் எடுத்துக் கொள்வதில்லை.

பாமிலி ப்ளானிங் ஸ்கீம் நான்-ப்ளானிங் தான். மத்திய ஆட்சியில் இருந்து எவ்வித உதவியும் வரவில்லை. அதற்குக் காத்து இல்லாமல் நாம் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டு செயலாற்றி வருகிறோம். இப்போது ஏதோ கொடுப்பதாகச் சொல்கிறார்கள். 166 லட்சம், 168 லட்சம் செலவாகியிருக்கிறதென்றால் அதை அனாவசியமான திட்டம் என்று சொல்ல முடியுமா?

இன்னும் வயது முதிர்ந்தவர்களுக்குப் பென்ஷன் அளிக்கிற திட்டம் இருக்கிறது. கொடுத்தவர்களிலேயே சிலருக்கு ரத்து செய்துவிட்டதாகச் சிலர் சொன்னார்கள். வேறு எந்த மாநிலத்திலும் 62 ஆயிரம் பேர்களுக்கு முதியோர் பென்ஷன் ஸ்கீமின் கீழ் 168 லட்சம் ரூபாய் உதவி செய்யப்படவில்லை. இந்தத் திட்டம் தேவையற்றது என்று யாரும் சொல்ல முடியாது. சிலபேர் தவறாக வாங்கியிருக்கிறார்கள். விசாரணை செய்கிறோம். தவறாக இருந்தால் ரத்து செய்கிறோம். ஆனாலும் அப்படி யாருக்காவது ரத்து செய்யப்பட்டால் அவர்கள் அப்பீல் செய்துகொள்வதற்கும் இடமிருக்கிறது. ஆகவே தவறாக ரத்து செய்துவிட முடியாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அரிசி கொள்முதல் செய்வது பற்றிக் குறிப்பிட்டார்கள். ஓரளவு நியாயவிலைக் கடைகளை வைத்து ஏழைகளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டத்தைக் குறைக்கவேண்டும், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். குறைந்த விலைக்கு கொடுக்க வேண்டுமென்று குறைந்த விலைக்கு வாங்குகிறோம். மேலும் சப்சிடி செய்து நியாய விலைக் கடைகளுக்கு வழங்குகிறோம். நான் முன்பு குறிப்பிட்டது போல வியாபாரிகளே சீராகக் கொடுத்துவிட்டால் இதற்கு அவசியம் இல்லாமல் போய்விடலாம். இந்த மாநிலத்தில் உள்ள மக்களது தேவையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் தான் கொள்முதல் செய்யப்படுகிறது. அதுவும் விவசாயிகளுக்கு எந்தவிதமான கஷ்டமும் வரக்கூடாது என்பதற்காகத் தான் நாம் வியாபாரிகளிடமும், மில்காரர்களிடமும் இருந்து வாங்குகிறோம். அதனால் விலை குறைந்துவிட்டது என்று யாரும் சொல்லவில்லை; ஏறிவிட்டது என்றுதான் சொல்கிறார்கள். ஏறுகிறதென்றால் விவசாயிகளுக்கும் கட்டுப்படியாகவேண்டும். ஏழை மக்களும் பாதிக்கப்படக்கூடாது. ஆகவே தான் ஒரு சில ஏழை மக்களுக்காவது நிவாரணம் அளிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த நியாயவிலைக் கடைகளை வைக்கவேண்டுமென்று அரசாங்கம் முன்வந்தது. கொஞ்சம் கொள்முதல் விலையை அதிகப்படுத்துவதற்குக் கூட மத்திய அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. அந்தச் செய்தியையும் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். சீக்கிரத்தில் நல்ல முடிவு ஏற்படும் என்று நம்புகிறோம். அது வரையில் ஒன்றும் செய்யாமல் இருப்பது சரியல்ல. நிலைமைகளைச் சமாளிக்க எப்போதும் தயாராய் இருக்கவேண்டும். அந்த வகையில் இன்றைய தினம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறோம்.

நம்முடைய மதிய உணவுத் திட்டத்தைப்பற்றிக்கூட 'இதனால் என்ன பிரயோசனம், ஒன்றுமே இல்லை' என்று ஒரே ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். சில பேர்களுக்கு தமக்கு அதனால் பயன் இல்லை என்றால், அதனால் என்ன பயன் என்று பொதுப்படையாகச் சொல்கிற ஒரு பலவீனம் இருக்கிறது. நமக்குப் பயன் அளிக்கக் கூடியதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் பிறருக்குப் பலன் அளிப்பதாக இருந்தாலும், அதை நாம் சமூக முன்னேற்றத்தைக் குறித்து மேற் கொள்ளவேண்டும். கல்வித்துறையில் நாம் அளித்துள்ள சம்பளச் சலுகை பிரமாதமானது அல்ல என்பது புல்வர் அவர்களுடைய கருத்து. இதனால் பணக்காரர்கள் தானே பயன் அடைவார்கள் என்பது அவருடைய வாதம். உண்மையில் இதனால் பணக்காரர்களா நன்மை அடையப் போகிறார்கள்? பணக்காரர்களுடைய பிள்ளைகள் படிக்கிற பள்ளிகளே வேறு. அங்கே இந்தச் சம்பளச் சலுகை கிடையாது.

நான் தியாகராயநகர் பள்ளிக்கு சில நாட்கள் முன்னே சென்றேன். அந்தப் பள்ளியில் 11-ஆவது ஆண்டு பொதுப் பரீட்சையில் தேறுகிற மாணவர்கள் நூற்றுக்கு 80 பேர்கள் வீதம் இருக்கும். மிகவும் நன்றாக நடக்கிற பள்ளிக்கூடம். இதுவரை அங்கே





நூற்றுக்கு 30 பேர்கள் தான் சம்பளச் சலுகை பெற்று வந்தார்கள். பாக்கியுள்ள 70 பேர்களுடைய பெற்றோர்கள் என்ன லட்சாதிபதிகளா? தியாகராயநகர் எப்படிப்பட்ட இடம் என்று பலருக்குத் தெரியும். அந்தத் தொகுதி உறுப்பினர் கூட இங்கே இருப்பார். அந்தப் பகுதியில் எத்தனை லட்சாதிபதிகள் இருக்கிறார்கள்? பெரும்பாலானவர்கள் 150, 170 ரூபாய் சம்பளக்காரர்களாக இருப்பார்கள். இந்தச் சலுகையினால் அதுபோன்ற எத்தனை ஏழைக் குடும்பங்கள் நன்மை அடையும் தெரியுமா? இதை எல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமக்குப் பயன் இல்லை என்றால் எதிர்ப்பது என்பது பலவீனமான கொள்கை.

1-00 p.m.

சில நாட்களுக்கு முன் வேப்பேரியில் ஏழை மக்கள் வாழும் பகுதியில் உள்ள கிறிஸ்டியன் மிஷன் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போயிருந்தேன். அது ஒரு சிறந்த பள்ளிக்கூடம். அந்த ஏழைக் குழந்தைகளுடைய கலா நிகழ்ச்சியைப் பார்த்தேன். சிறப்பாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் ஸ்கூல் பைனல் பரிட்சையில் 70 சதவிகிதம் பேர் தேறியிருக்கிறார்கள். எண்பது சதவிகிதம் பேருக்குச் சம்பளச் சலுகை கிடைக்கிறது. சம்பளம் கொடுத்துப் படிக்கிறவர்கள் 20 சதவிகிதம் பேர்தான். அவர்களும் நடுத்தர ஏழை மக்களே. ஏதோ அவர்களுடைய சம்பளம் ஆண்டு ஒன்றுக்கு 1,500-ஐத் தாண்டியிருக்கும். சம்பளச் சலுகை பெறுகிறவர்கள் கூட முதலிலே சம்பளம் கட்டித்தான் ஆக வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. ஏனென்றால் முதல் மூன்று மாதங்களுக்கு அவர்களால் அவர்களுடைய சம்பளத்தைப் பற்றிய சர்டிபிகேட்டை வாங்க முடிவதில்லை. பெரும்பாலும் நடுத்தர மக்களும் ஏழை மக்களுந்தான், இந்தச் சலுகையைப் பெறுகிறார்கள் என்ற காரணத்தால், அவர்களைப்பொறுத்தே எல்லோருக்குமே சம்பளச் சலுகை என்று இப்போது செய்திருக்கிறோம். அப்படி வைப்பதிலே தனிப்பட்டவர்களுடைய பள்ளி அனாவசியமாகப் பாதிக்கப்படும் என்ற அனாவசியமான அச்சத்தைத் தெரிவித்தார்கள். இப்போதே தனிப்பட்டவர்களுடைய பள்ளியில் சம்பளச் சலுகை பெறுகிறவர்கள் இருந்தால், அந்தப் பள்ளிக்கு காம்பன்சேஷன் கொடுக்கப்படுகிறது. அதே மாதிரி மேலும் அதிகத் தொகை கூடாகக் கொடுக்கப்படும். ஒரே பள்ளியிலேயே சம்பளம் கொடுக்கிறவர்கள், கொடுக்காதவர்கள் என்று இருந்தால் பிள்ளைகளிடத்தில் பாகுபாடு ஏற்படும். இப்போது அந்த நிலைமை ஏற்படாது. நான் மேற்சொன்ன இரண்டு பள்ளிகளுக்குச் சென்றிருந்தேன். அவர்கள் இதைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படவில்லை. ஆனால் இங்கே இருப்பவர்களுக்குத்தான் கவலை. நல்லதைச் செய்தால் கூட, அதற்கும் ஒரு கவலை, கஷ்டம், ஆட்சேபம் ஆகியவற்றைத் தெரிவிக்கிறார்கள். நான் சென்ற பள்ளிகளில் எந்த விதமான கவலையையும் தெரிவிக்கவில்லை. அவர்கள் இதை நன்றாக உணர்ந்து வரவேற்கிறார்கள்.

மற்றொன்று, நூலுக்கு விற்பனை வரி போடப்பட்டதைப் பற்றிப் பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இது பெரும்பாலும் நம்முடைய மாநிலத்திற்கு அப்பால் விற்கப்படுவது. மற்ற

*[திரு. எம். பக்தவத்சலம்]* [7th March 1964

நிலங்களில் வியாபாரம் செய்கிறவர்கள் கொடுக்கிற வரி இது.
ந சதவிகித வரியை இரண்டு சதவிகித வரியாக நம்முடைய
காணத்தில் விற்கப்படும் கைத்தறித்துணிக்கு ஏற்றி விட்டதால்,
கத்தறிக்கு ஏதோ பாதகம் வந்து விடும் என்று ஏன் பயப்பட
ண்டும்? இந்தத் துறையில் இருக்கும் ஒரு பெரிய அதிபர்
இந்த வரி உயர்வை நாங்கள் தான் ஏற்றுக் கொள்ளவேண்டும்;
கத்தறிக்காரர்களுக்குப் போகக்கூடாது' என்று குறிப்பிட்டார்
ர். அவர்களே அப்படிக் கூறும்போது 'நீங்கள் ஏன் கைத்தறிக்
ரர்கள்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்ற முறையிலே
சுகிறீர்கள்? இந்த அரசாங்கத்திற்குக் கைத்தறியின் நலனிலே
விர அக்கறை உண்டு. அவர்களுக்காகப் பல திட்டங்களை நிறை
ற்றி வருகிறோம். மத்திய அரசாங்க ரிபேட்டோடு மட்டுமல்லா
ல் மேலும் அதிகமாக நம்முடைய நிதியிலிருந்தும் கொடுக்
றோம். கூட்டுறவுச் சங்கத்தில் இல்லாத கைத்தறிக்கும் பலன்
டபடவேண்டுமென்ற நோக்கத்தோடு 'ஹாண்ட்லூம் பிறுன்ஸ்
ர்ப்பரேஷன்' என்ற ஸ்தாபனத்தை அமைத்து, அவர்களுக்கு
ரசாங்கம் கடன் கொடுத்து கூட்டுறவுக்கு அப்பாலுள்ளவர்களும்
யன்படவேண்டுமென்று கவனம் செலுத்தி வருகிறோம். வரி
ல்லாதபோது என்ன ஆயிற்று? அப்போதைக்கப்போது நூல்
லை ஏறிக் கொண்டே இருக்கிறது. அப்படி நூல் விலை ஏறுவ
ால் ஏழைக் கைத்தறிக்காரர்கள் கட்டளை மார்க்கட்டில் வாங்க
வண்டியிருக்கிறது. இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று
ரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. சாதாரணமாக, இந்த
லுக்கு ஒரு சீலிங் பிரைஸ் போட்டிருக்கிறோம். 102 ரூபாய்க்
த்தான் விற்க வேண்டுமென்று போட்டிருக்கிறோம். ஆனால்
ார்க்கட் விலை 134 ரூபாய் ஆக இருக்கிறது. ஒரு சதவிகித
ரியை இரண்டு சதவிகித வரியாக ஆக்குவதால் என்ன வந்து
ட்டது? இவ்வாறு சீலிங் பிரைசுக்கு அதிகமாக விற்கப்படு
தைக் கண்காணித்து சீலிங் பிரைசுக்குக் கிடைக்கச் செய்ய
வண்டியது அல்லவா செய்ய வேண்டிய காரியம். அதிலே அர
ாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. இதையெல்லாம்
சய்த பிறகும் கைத்தறிக்காரர்களுக்கு இந்த வரி உயர்வினால்
ாதகம் ஏற்படும் என்றால் அவர்களுக்கு இந்த வகையிலே நிவா
ணம் அளிக்க அரசாங்கம் தயங்காது. இதையும் கைத்தறிக்காரர்
ள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். தொண்டு புரியும் தலைவர்
ளும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, கனம் அங்கத்தினர்களும்
தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமென்று தாழ்மையோடு
கட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயம் இந்தியைப் பற்றியது. ரொம்ப நாளாக
ருக்கக் கூடிய பிரச்சினை இது. இது ஒன்றுதான் கனம் தி.மு.க.
ங்கத்தினர்களுக்கு இருப்பது. நாட்டுப் பிரிவினையை விட்டு
ட்டோம் என்று சொல்கிறார்கள்; 'விடவில்லை' என்று துணைத்
லைவர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இப்போது நாட்டுப்
ிரிவினை பற்றி அதிகமாகப் பேசுவதில்லை, வாய்ப்பு இல்லை, துணிவு
ல்லை என்று கூடச் சொல்வேன். இப்போது அவர்களுக்கு எது



7th March 1964] *[திரு. எம். பக்தவத்சலம்]*

அகப்பட்டது என்றால்—ஒரு பழமொழி சொல்வார்கள்; அதை
நான் சொல்ல விரும்பவில்லை—எதற்கெடுத்தாலும் இந்தி ஒன்று
அகப்பட்டது. எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு ஒரு அடிப்படை
வித்தியாசத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கனம்
எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பேசினார்கள்; துணைத் தலைவர்
அவர்களும் பேசினார்கள்; மற்ற கனம் உறுப்பினர்களும் பேசினார்
கள். ஒரு அடிப்படை வித்தியாசம் என்னவென்றால் எங்களைப்
பொறுத்த மட்டில் இந்த நாடு இமயம் முதல் குமரி வரை உள்ள
பாரத நாடு என்ற உணர்ச்சி கொண்டவர்கள். கஷ்டப்பட்டு சுதந்
திரம் கிடைத்த பிறகு இந்த நாட்டைப் பிரிக்க ஒருக்காலும்
மக்கள் இணங்க மாட்டார்கள். இந்த நாட்டிலே பொதுவாகப்
பல மொழிகள் பேசப்படுகின்றன. நம்முடைய ஆட்சி அமைப்பு,
மத்திய ஆட்சி, மாநில ஆட்சி என்று இரண்டும் சேர்ந்த கூட்டு
ஆட்சி. அதற்கும் சில அங்கத்தினர்கள் ஆட்சேபித்து 'மத்திய
ஆட்சிக்கு அடிபணிந்து விடுகிறோமே' என்று சொன்னார்கள். அது
சரியல்ல. மாநில ஆட்சிக்கும் 'சாவ்ரினிடி' உண்டு; மத்திய
ஆட்சிக்கும் 'சாவ்ரினிடி' உண்டு. ஸ்லம்ஸ் பற்றி எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே நமக்கும் பொறுப்பு
இருக்கிறது; நகர மன்றத்திற்கும் பொறுப்பு இருக்கிறது. ஒரு
கிராமத்தில் குடி தண்ணீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டால்
அதிலே மத்திய ஆட்சி பங்கு கொண்டிருக்கிறது; மாநில ஆட்சி
பங்கு கொண்டிருக்கிறது; பஞ்சாயத்தும் பங்கு கொண்டிருக்கிறது.
இதுதான் நம்முடைய ஆட்சி அமைப்பு. இந்த மாநில ஆட்சியைப்
பொறுத்தவரை எல்லாம் தமிழிலேதான். இதிலே பிரச்சினைக்கு
இடம் இல்லை. வேகமாக மற்ற இலாக்காகளுக்கும் தமிழை அமல்
படுத்தி வருகிறோம். ஆனால் மத்திய ஆட்சியிலும் நமக்கு அக்கறை
இருக்கிறது. முதலில் போட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தி
லேயே 'இந்தி இந்தியாவின் பொது மொழி' என்று போட்டார்
கள். 'இந்தியே' என்று போட்டுவிட்டால் சிரமமாக இருக்கும்
என்ற காரணத்தால் ஆங்கிலத்தையும் வைத்துக் கொள்ளுங்கள்
என்று சொன்னோம். முன்பு இருந்த மன்றத்தில் கூட ஒருவர்
இருவர் வேறு கருத்துத் தெரிவித்திருக்கலாமே தவிர, இந்தியோடு
ஆங்கிலம் இருப்பது என்ற திட்டம் இந்த மன்றத்தினால் ஒப்புக்
கொள்ளப்பட்டதாகும். அந்தத் திட்டத்தின்படி நாம் இப்போது
வற்புறுத்தினோம். அந்த முறையில்தான் ஆங்கிலமும் தொடர்ந்து
காலவரம்பின்றி இருக்கும் என்று சட்டம் செய்திருக்கிறார்கள்.
இந்தி கூடவே கூடாது என்றால் அதை எப்படி ஏற்றுக் கொள்ள
முடியும்? எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர்களுக்கு நாட்டு
ஒருமைப்பாட்டிலேயே நம்பிக்கை இல்லை. அவர்கள் வேண்டு
மானால் ஆங்கிலமே தேசிய மொழியாக இருக்கவேண்டுமென்று
சொல்லலாம்.

ஆனால் அதை நாம் ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள முடியாது.
ஆனால் இந்தியோடு ஆங்கிலம் காலவரம்பின்றி இருக்கும். ஆனால் இந்தியோடு ஆங்கிலம்
இருக்கும் என்பதுதான் நம் கருத்து. இந்தப் பக்கத்திலும் வெறி
யர்கள் இல்லாமல் இல்லை. அவர்களுக்குச் சிறிது ஆறுதல் அளிக்

*[திரு. எம். பக்தவத்சலம்]* [7th March 1964

கக் கூடிய விஷயமோ என்னவோ தெரியவில்லை. எப்படி எதிர்க் கட்சியினர் ஏற்றுக் கொள்வார்களோ. இங்கே சொல்வது போல் நாட்டைத் துண்டாடினாலும் சரி எங்களுக்கு இந்தி மட்டும் இருந்தால் போதும் என்று சொல்லும் வெறியர்கள் அங்கிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு சிலர்தான். கவுண்டர்பார்ட் அங்கேயும் இருக்கிறது. அதற்கெல்லாம் நாங்கள் இணங்க மாட்டோம். உடன்பட மாட்டோம். 12-ம் தேதி நடைபெறப் போகிற முதல் அமைச்சர்கள் மகா நாட்டைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம் மாநில நலன்களை ஒட்டி என்னென்ன வேண்டுமோ அதை வற்புறுத்துவேன். அதை நிறைவேற்றி வைப்போம் என்பதில் சந்தேகம் இல்லை. இதுபற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். இம்மாநில மக்களுக்கு எவ்விதத்திலும் பாதகம் ஏற்படும் வகையில் மத்திய அரசாங்கம் ஒரு முடிவும் செய்யாது. அப்படிச் செய்வதற்கு இடம் கொடுக்க மாட்டோம். நாம் கூறுவதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் இந்தியே கூடாது என்று எப்படிக் கூறுவது? மும்மொழிக் கொள்கை பற்றிக் கூறினார்கள். அதைக் கூடக் கண்டித்துப் பேசினார்கள். மும்மொழிக் கொள்கையின்படி உயர்நிலைப் பள்ளியில் தாய்மொழியைப் படிக்க வேண்டும். உலக மொழியாகிய ஆங்கிலத்தைக் கட்டாயம் படிக்க வேண்டும். இனி ஒரு மொழி என்பதை இந்தி என்று போடவில்லை. மற்ற மாநிலங்களில் அப்படி போட்டிருக்கிறார்கள். கேரளா, ஆந்திரா, மைசூர் போன்ற மாநிலங்களில் இந்தி தான் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் அப்படிப் போடவில்லை. இங்கு ஒரு அலர்ஜி இருப்பது தெரியும். எனக்குக் கூட ஒரு அலர்ஜி உண்டு. அப்படி ஒரு அலர்ஜி இருப்பதால் பார்த்துத் தான் போக வேண்டும். கட்டாயம் என்று போடவில்லை. அப்படி போடாவிட்டாலும் நிறைய மாணவர்கள் இந்தி படிக்கிறார்கள் என்பதை நாம் உணராமல் இல்லை. பரீட்சைக்கு போகவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி போக வேண்டாமென்றால் ஒருவித அலட்சியம் ஏற்படும், ஏற்படுகிறது. பரீட்சைக்குச் சென்று குறைந்த மார்க் வாங்கினாலும் தேர்வு பாதிக்கப்படாது என்றும் சொல்லியிருக்கிறோம். இன்னும் ஆட்சேபிப்பதற்குக் கொஞ்சம் கூட இடமில்லை; அந்த ஆட்சேபனையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தி படிக்க விரும்பாதவர்கள் பரீட்சை இந்தியில் எழுத வேண்டிய நிமித்தமும் இல்லை. ஆனால் இந்தி படிக்க விரும்புகிறவர்களும் படிக்கக் கூடாது, பரீட்சைக்கு போகக்கூடாது என்று சொன்னால் அத்தகையோர் வேண்டுமானால் பாகிஸ்தானுக்கு போய்ப் படிக்கலாம் என்றுதான் சொல்வேன். அதற்கு நான் பின்னால் வருகிறேன். இவர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லை. பாகிஸ்தானிலும் ஜநாயகம் இல்லை. பரீட்சைக்கு உட்கார்ந்து என்றால் மார்க் வாங்க முடியாது என்று சொன்னாலும் சரி, மார்க் பற்றி ஒன்றும் இல்லை என்று சொன்னாலும் இந்தியை மற்றவர்கள் படிப்பதும் எங்களுக்கு ஆட்சேபம் என்று சொன்னால், நீ பாகிஸ்தானுக்குப் போய் படிக்கலாம் என்றுதான் சொல்லுவேன். மும்மொழிக் கொள்கைப்படி இந்தி அல்லது வேறு ஏதாவது ஒரு மொழி என்று



7th March 1964] *[திரு. எம். பக்தவத்சலம்]*

தான் வைத்திருக்கிறோம். இந்தி படிக்கவில்லை என்றால் தெலுங்கை அல்லது மலையாளத்தை அல்லது கன்னடத்தை அல்லது குஜராத்தியை படிக்கலாம் என்று தான் இருக்கிறது. ஆகவே நிர்ப்பந்தம் எங்கே இருக்கிறது? பரீட்சை எழுதுவது பற்றி முன்பே குறிப்பிட்டேன். ஐ.ஏ.எஸ். போன்ற மத்திய பரீட்சைகள் வருகின்றன. அது இதுவரையில் ஆங்கிலமாக இருந்தது. இப்போது இந்தியையும் ஒப்புக் கொண்டிருக்கிறோம். இந்தியில் மீடியம் வைப்பது பற்றி குறிப்பிட்டார்கள். அது இல்லாதிருந்தால் நல்லது தான். எனக்குள்ள அனுபவத்தை வைத்துக் கூறுவேன். ஆங்கிலத்தில் எழுதுவதைவிட இந்தியில் எழுதுவது ஹாண்டிகாப். இந்தி அத்தகைய வளர்ச்சியை அடையவில்லை. ஐ.ஏ.எஸ். போன்ற பரீட்சைகளில் விஞ்ஞானம், ஹிஸ்டரி, ஜாக்ரபி, எகனாமிக்ஸ் போன்ற பரீட்சைகள் எல்லாம் வருகின்றன. அவை இந்தியில் இருக்க வேண்டும் என்று ஆவேசத்தால் சொல்லுகிறார்களே தவிர, அவர்களுக்கே அது ஹாண்டிகாப்பாக இருக்கும். தமிழ் வேண்டுமென்று எப்படி கேட்பது? 14 மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும் என்பதைப் போல் 14 மொழிகளிலும் வைத்துக்கொள்ள முடியுமா? ஆகவே இது பற்றி நான் சொன்னேன், சரியான முடிவு எடுத்திருக்கிறார்கள். மத்திய பரீட்சைகளில் எல்லா மொழிகளையும் வைத்து செய்வது இல்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள். இல்லாவிடில் மத்திய சர்வீஸ் என்று எப்படி வரும்? மத்திய ஆட்சி சர்வீஸ்க்கு சென்ற பின்னரும் இந்தி படிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். மத்திய சர்வீஸ் வேண்டாம் என்றால் சரி, ஆனால் மத்திய சர்வீஸ்க்கு செல்ல வேண்டும், ஆனால் இந்தி படிக்க மாட்டேன் என்று சொல்வது அர்த்தம் இல்லாதது. மத்திய ஆட்சியில் பரீட்சை இந்தி மீடியம் என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நான் ஆலோசனை கூறக்கூடியது இது வேண்டாம் என்று தான் சொல்லுவேன். இப்போது நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இது புது முடிவு அல்ல. முன்னமேயே முடிவு செய்தது தான். இது வரை நிறுத்தித்தான் வைத்திருக்கிறார்கள். நான் வேண்டாம் என்றுதான் சொல்வேன். காரணம் இந்தியில் பரீட்சை எழுதக்கூடியவர்களுக்குக் கூட பாதகம் ஏற்படும். இப்போது உள்ளபடியே இருக்க வேண்டும் என்று கூறு வேன். ஆனால் அப்படி வந்து விட்டால் நாம் ஆட்சேபிக்க இடமில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்தி மொழிக் கொள்கை பற்றி இம்மன்றத்தில் நான் மகாநாட்டிற்குச் செல்வதற்கு முன்பே விவாதித்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாளை மறுதினமே விவாதிக்கலாம். 'ஹெட் ஆப் ஸ்டேட், மினிஸ்டர்ஸ் அண்ட் ஹெட்குவார்டர்ஸ் ஸ்டாப்' மானியம் வரும்போதே விவாதிக்கலாம். கனம் சபாநாயகர் அவர்கள் ஒப்புக் கொண்டால் இதற்கு என்று ஒரு கட் மோஷன் கூட கொடுக்கலாம். நோட்டீஸ் இல்லை என்றாலும் ஒத்துக்கொள்ளலாம். எதிர்க்கட்சிக் காரர்கள் இந்திக்கொள்கை பற்றி என்ன சொல்கிறார்கள் . . .

**திரு. மு. கருணாநிதி :** முதல் அமைச்சர்கள் மகாநாட்டிற்கு முதல் அமைச்சர் அவர்கள் செல்வதற்கு முன்பு இம்மன்ற அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தை வடித்து எடுத்து அங்கு அபிப்

பிராயம் தெரிவிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற காரணத் திற்காகத்தான் தனியாக ஒரு நாள் குறிப்பிட்டு அந்த விவாத அரங்கத்தை நடத்துவது உசிதமாயிருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் டெல்லிக்குப் போவதற்கு முன்பு அவகாசம் இல்லை. இதை விட வேறு என்ன சிறந்த வாய்ப்பு இருக்கிறது? நாலு மணி நேரம் இருக்கிறது, நான்கு மணி நேரம் இந்தி பற்றியே பேசலாம். அதை வரவேற்கிறேன். 11-ம் தேதி தான் நான் போகப் போகிறேன். 9-ம் தேதி பேசலாம். இல்லாவிடில் 10-ம் தேதி டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் வருகிறது, அப்போது பேசலாம். (குறுக்கீடு) தூக்கம் இல்லாது கேட்கக் கூடிய விஷயம் அல்ல இது. முஸ்லீம் சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முஸ்லீம் சமுதாயத்தை ஏளனமாக வெறுப்பு ஏற்படும்படி யாரோ பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். யார் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. யார் அப்படிப் பேசினா லும் அனுமதிக்கமாட்டோம். யார் அப்படிப் பேசினாலும் அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வோம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எங்கள் பக்கத்திலுள்ளவர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் கூட தவறுதலாகப் பேசியிருக்கிறார்கள். என்னையே அடிக்கச் சொன்னதாக என்று சொன்னார்கள். தி.மு.க. வை அடிக்கச் சொல்லவில்லை, அவ்வளவு தூரம் அனுதா பம் இருக்கிறது. அந்த அளவு பரிதாபம் இருப்பது மகிழ்ச்சி. அடிக்கிறேன் என்று சொல்லுகிறவன் அடிக்க மாட்டான். அடிக் கிறவர்கள் வேறு. இதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. எனக்குத் தகவல் வந்திருக்கிறது. தி.மு.க. மேடைகளில் தாறுமாறாகக் கேவல மாகப் பேசினார்கள் என்றுகேட்டு விட்டு மனம் குமுறி என்னிடம் வந்து சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் ஏன் போய்க் கேட்டீர்கள் என்று கேட்டேன். பேசுவதைப் பற்றி நான் பொருட்படுத்த வில்லை. ஆனால் 14-வது டிவிஷன் என்று நினைக்கிறேன். இங்கு முஸ்லிம் லீக் வெற்றியைக் கொண்டாடுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு ஒரு ஊர்வலம் நடந்தது. எனக்குத் தகவல் வந்திருக் கிறது, அதில் கலந்து கொண்டவர்கள் பாகிஸ்தான் சிந்தாபாத் என்று கத்தியிருக்கிறார்கள். இந்த மனோபாவத்தைப் பற்றி இந்த மன்றம் சிந்திக்க வேண்டும். மதத்தின் பெயரால் ஒரு அரசியல் கட்சி இருப்பதே தவறு. இத்தகைய மனப்பான்மை உடையவர்கள் லீகில் இருக்கிறார்கள். யாரோடு வேண்டுமானாலும் சேர்ந்து கொண்டு காங்கிரஸைத் தொலைக்க வேண்டுமென்ற ஆசை. பாகிஸ் தான் சிந்தாபாத் என்ற மனப்பான்மைதான் இப்படிச் செய்யத் தூண்டுகிறது. காங்கிரஸை ஏன் அழிக்க வேண்டும்? நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தது காங்கிரஸ். அதுதான் காரணம். அவர் களோடு தோழமை கொள்கிறது தி.மு.க.

**திரு. மு. கருணாநிதி :** அந்த ஊர்வலத்தில் பாகிஸ்தான் சிந்தா பாத் என்று முழக்கம் இட்டதாக ஒரு பத்திரிகையில் செய்தி வந்த தின் பேரில் முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமத் அதை மறுத்து ஒரு கூட்டத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு மறுத்துவிடுவது சுலபம். சாதாரணமாகக் குற்றம் செய்தவர்கள் தாங்கள் குற்ற வாளிகள் அல்ல என்று சொல்லுவதில்லையா? கனம் அங்கத்தினர் அவர்களுக்கே இது நன்றாகத் தெரியும்.

**திரு. க. ர. நல்லசிவம் :** நான் ஒரு விளக்கம் கேட்க விரும்பு கிறேன். அதாவது "பாகிஸ்தான் சிந்தாபாத் என்று சொல்லிக் கொண்டு போனார்கள்" என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது மிகவும் முக்கியமான விஷயம். சர்க்கார் இதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சி எடுத்திருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் எவ்வெப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ, அவ்வப்போது நட வடிக்கை எடுத்துக்கொண்டு தான் இருக்கிறது. குறிப்பாக இதை யார் சொன்னார்கள் என்பதை கண்டுபிடிப்பது கஷ்டம், ஊர்வலத் தில் கத்திக்கொண்டு போனார்கள் என்று தான் செய்தி வந்திருக் கிறது, போலீசாரும் போயிருக்கிறார்கள். இருந்தாலும் இது யாரு டைய வாயிலிருந்து வந்தது என்று கண்காணிப்பது கஷ்டமான காரியம். ஆனால், பொதுவாக எந்த மாதிரியான மனோபாவம் இருந்து வருகிறது என்பதைத்தான் நான் எடுத்துக்காட்ட விரும்பு கிறேன். இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் யா ரோடு தோழமை கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் கவனிக்க வேண்டும். சரியான ஆட்களோடு தான் தோழமை கொண்டிருக் கிறார்கள். அவர்களும் இவர்களும் நல்ல பொருத்தம் தான். திராவிட முன்னேற்றக் கழகத்தை எடுத்துக்கொண்டால், அரசியல் சட்டத்தையே கொளுத்தவேண்டும், நாட்டைத் துண்டாட வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள். ஆகவே இவர்களுடைய தோழமை சரியான ஆட்களோடு தான் இருக்கிறது. (குறுக்கீடு) கனம் எதிர்க்கட்சி உப-தலைவர் அவர்கள் ஒரு விஷயத்தை ஞாபக மூட்டுகிறார்கள். நல்லது, அவர்கள் சொல்லாவிட்டாலும் கூட நான் மறந்து போயிருப்பேன். காங்கிரஸ் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்த தைப்பற்றி குறிப்பிடுகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகளைப் பொறுத்த வரையில் ஒரு சாரார் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு அனு தாபம் கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். யார் அவர்கள் என்றால், சீனாவை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்டுகள்தான் தி.மு.க. வை ஆதரிக்கிறார்கள். இன்றைக்குக்கூட பத்திரிகையில் பார்த்திருப் பார்கள் . . .

**திரு. மு. கருணாநிதி :** சீன ஆக்கிரமிப்பு நடந்த காலத்தில் சீனாவுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகச் சிறை வைக்கப்பட்ட திரு. எம். கலியாணசுந்தரம் அவர்கள் தான் இப்போது காங்கிரசை ஆதரித்துப் பேசுகிறார்கள் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி எனக்கும் நன்றாகத் தெரியும். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஆதரித் தார்களா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டு

கம்யூனிஸ்ட் கட்சியிலேயே இதே கருத்தின் மீது பிளவு ஏற்பட்டிருப்பதை எல்லோரும் அறிவார்கள். அந்த முறையில் சீனாவை ஆதரிக்கின்றவர்கள் தி.மு.க. வின் மீது அனுதாபம் கொண்டவர்கள். இதை யாரும் மறுக்க முடியாது. சீனாவை ஆதரிக்கின்ற ஒரு பிரிவினர் இருக்கின்றார்கள் என்ற அடிப்படையில் தான் அக்கட்சியில் பிளவு ஏற்பட்டது. அவ்வாறு சீனாவை ஆதரிக்கின்ற பிரிவினர் தான் இத்தகைய இயக்கத்தையும் ஆதரிக்கின்றார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள ஒரு பிரிவினர் தி.மு.க. வை ஆதரிப்பதாக கனம் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு வேண்டுமென்றால் தெரியாமல் இருக்கலாம். எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் சொல்லுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** ராமனாதபுரத்தில் நடந்த கூட்டத்தில் கனம் போலீஸ் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் சீனாவை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்டுகள் துரோகிகள், அவர்களோடு காங்கிரஸ்காரர்கள் சேருவதா, அவர்களோடு சேருவது, அவர்களுக்கு ஆதரவு அளிப்பது மகா பாபம் என்று பேசினார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலேயே என் பேச்சின்போது குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்துகின்றேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைக் கேட்ட பின்னால் தான் நான் இதைச் சொல்ல ஆரம்பித்தேன். ஆகவே சீனாவை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்டுகள் தி.மு.க. வைத்தான் ஆதரிக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எதிர்க் கட்சியிலுள்ள கனம் ஒரு அங்கத்தினர் அவர்கள் "போலீஸ் நிலையம் அரசியல் கூடம்" என்றும் போலீசார் பட்சபாதமாக நடந்து கொள்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இன்னும்கூட ஏதோ தவறுதலாகச் சொன்னார்கள். ஏதோ எனக்குச் சொந்தக்காரன் ஒருவன் இருப்பதாகவும், இதைச் செய்கிறார்கள், அதைச் செய்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இவ்விதம் சொல்வதெல்லாம் அவர்களைப் பயமுறுத்துவதாகும். இது சிலருடைய போக்காக இருந்து வருகிறது. ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால் 'பிளாக் மெயில்' என்று சொல்ல வேண்டும். ஏதோ போலீஸ்காரர்களைப்பற்றி மன்றத்தில் பேசி, அது பத்திரிகையில் வந்துவிட்டால் அவர்கள் பயந்து போய்விடுவார்கள் என்ற எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. கண்டிப்பாக இருந்து யோக்கியதையாக வேலையில் நடந்து கொண்டால், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போலீஸ்காரர்கள் ஆகாதவர்களாக இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, டிமாரலைசேஷன் செய்வதாகத் தான் இதை எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. இது சரியல்ல. இந்தத் தேர்தலில் போலீஸ்காரர்களுடைய அக்கறையெல்லாம்





எந்த விதத்திலும் அமைதிக்குப் பங்கம் வரக்கூடாது என்பதுதான். என்னுடைய மதிப்பிற்குரிய உள்நாட்டு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ்காரர்களை அடித்து விட்டார்கள். அடித்தவர்கள் மீது போலீசார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையென்று புகார் கூறியிருக்கிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். போலீசார் எந்தக் கட்சிக்கும் ஆதரவாக நடந்து கொள்வதில்லை. அவர்கள் தங்கள் கடமையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். கனம் உள்நாட்டு அமைச்சர் அவர்கள் சொல்வது போல், அவர்கள் தங்கள் வேலையை சரியாக, திறமையாக செய்ததற்கு அவர்களை நாம் பாராட்ட வேண்டுமே தவிர, அவர்கள் மீது குறை சொல்வது சரியல்ல என்பதைத்தான் நானும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் எதிர்க்கட்சி உப-தலைவர் அவர்கள் அங்கத்தினர்களுக்கு ஹாஸ்டல் கட்டிடம் கட்டுவதைப்பற்றிச் சொன்னார்கள். வேண்டுமென்றால், இதற்குள்ள செலவைக் குறைத்துக்கொள்ளுங்கள் என்ற முறையில் பேசினார்கள். இப்போதுள்ள திட்டப்படி 170 சிங்கிள் அறையும், 30 டபிள் அறையும் கட்டுவதாகத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரியில் இடம் இல்லாததைப்பற்றியும் இதோடு சேர்த்துச் சொன்னார்கள். அந்த விஷயம் வேறு, அது தனியாக கவனிக்கப்படவேண்டிய விஷயம். நாங்கள் ஏதோ அனாவசியமாகச் செலவு செய்கின்றோம் என்று யாருக்கும் அந்த எண்ணம் இருக்க வேண்டிய தேவையில்லை. இது வேண்டாம் என்றால் என்னைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இந்த விஷயத்தில் எங்கள் கட்சி பக்கத்தில் இருப்பவர்களைக்கூட நான் கேட்கவில்லை. எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் ஒப்புக்கொள்வார்களேயானால், நான் இப்போது அதை நிறுத்திவிடுகிறேன், அல்லது இப்போது 40, 50 லட்சத்திற்குப் போட்டிருக்கின்ற திட்டம் தேவையில்லை, ஒரு ஐந்து லட்சம் ரூபாயில் இன்னின்ன மாதிரி இருக்க வேண்டும் என்று டிசைன் போட்டுக் கொடுத்தால் நான் அதை அப்படியே ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கனம் அங்கத்தினர் சுவாமிநாதன் அவர்கள் வட்டார வளர்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். டெக்னோ-எகனாமிக் சர்வே ஒன்று நடந்தது. அதில் மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்கள் அங்கத்தினராக இருந்திருக்கிறார்கள். அதில் பல விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இப்போது இன்டஸ்ட்ரியல் சர்வே ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்காக செமினார் நடந்து கொண்டிருக்கிறது. இந்த சர்வே விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஆசிரியர்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய பிரச்சினையும் என்.ஜி.ஓ.-க்களைப் போன்றது தான். இந்த விஷயத்திலும் அரசாங்கம் வேண்டிய

கவனம் செலுத்தி வருகிறது. அவர்களுடைய குடியிருப்பு வசதிக்காக, அரசாங்கம் உதவி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. இதுவும் அரசாங்கத்தின் யோசனையில் இருந்து வருகிறது. இந்த விஷயத்தில் அரசாங்கம் தனக்கிருக்கின்ற நிதிநிலைக்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நிதிநிலை அறிக்கையில், பழைய பல்லவிகள் தான் இருக்கின்றன என்றும் கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய பல்லவியும் இப்படிச் சொல்லிக் கொண்டிருப்பதுதான். சோஷியலிஸம் என்றால், பஸ் முதலாளிகளையும், ஆலை முதலாளிகளையும் பற்றிய நினைப்புத்தான் வருகிறது, வேறு ஒன்றும் அவர்களுக்குத் தென்படுவதில்லை. சோஷியலிஸ கொள்கை என்றால், மக்களுடைய வாழ்க்கை உயர்வதற்காக, உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்களுடைய திறனைப் பெற்று, அவர்கள் மூலமாக நாட்டின் வருமானத்தைப் பெருக்கி, மக்களுக்கு சுபீட்சமான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் லட்சியமே தவிர, உடனடியாக முதலாளிகளை எல்லாம் ஒழித்துவிட வேண்டும் என்பதல்ல. இந்த லட்சியத்திற்கு இடையூறாக யார் இருந்தாலும், எந்த முதலாளி இருந்தாலும் சரி, அல்லது எந்த எதிர்க்கட்சி இருந்தாலும் சரி, அதற்கு இந்தச் சர்க்கார் இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலாளிகளைப் பொறுத்தவரையில் எல்லா இடத்திலும் தான் முதலாளிகள் இருக்கிறார்கள். எங்கள் பக்கத்தில் வேண்டுமென்றால் கணக்கு வைத்திருக்கின்ற முதலாளிகள் இருக்கலாம். எதிர்க்கட்சியில் கறுப்புப்பணம் வைத்திருக்கின்ற முதலாளிகள் ஏராளம் பேர்கள் இருக்கலாம். கணக்கு வைத்திருக்கின்ற முதலாளிகளைப்பற்றி வெளியில் தெரிய முடிகிறது. கறுப்புப்பணம் வைத்துக்கொண்டிருப்பவர்களைப்பற்றி வெளியில் தெரியாது

**திரு. மு. கருணாநிதி:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி "கறுப்புப் பணம் வைத்திருக்கின்ற முதலாளிகள் எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள்" என்று குறிப்பிடுகிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தைரியம் இருந்தால், அவர்கள் யார் யார் என்பதை இந்த மன்றத்திலேயே துணிவாகச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எனக்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டுமோ, அவ்வளவு தைரியம் இருக்கிறது. இதை எங்கே சொல்லவேண்டுமோ அங்கே சொல்லிக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** திரு. மு. கருணாநிதி அவர்கள் பொதுவாகச் சொன்னார்கள், அதைப்போல் கனம் முதல் அமைச்சர் அவர்களும் பொதுவாகச் சொல்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மேலும் கனம் எதிர்க் கட்சி உபதலைவர் அவர்கள், ஏதோ பெரிய சாமியின் படத்தை வைத்து வோட்டுக் கேட்டார்கள் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். சாதாரணமாக எந்த நல்ல காரியத்திற்கும் கடவுளை நினைத்துக்கொண்டு காரியத்தைத் துவக்குவார்கள். அந்த முறையில் தான் பலர்



எழுதும்போது பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிக்கிறார்கள். இதில் யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ, அவர்கள் விருப்பம் போல் போட்டுக்கொள்கிறார்கள். ஆனால் இறந்து போன ஒருவரின் படத்தைப் போட்டு பிரசாரம் செய்வது உயர்ந்த பண்பல்ல என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

மேலும், கல்வித்திட்டங்களை எல்லாம் போட்டுக்கொண்டேயிருக்கிறோம், ஆனால் படித்தவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு கஷ்டமாக இருக்கிறது என்பதுபற்றிச் சொன்னார்கள். டெக்னிகல் படிப்பு இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது நம்முடைய திட்டத்தில் டெக்னிக்கல் 'பைஸ்' இருக்கிறது. ஜூனியர் டெக்னிக், பாலிடெக்னிக் போன்ற கல்வி முறைகள் இருக்கின்றன. அதோடு பள்ளிக்கூடத்தில் படிப்பதே உத்யோகம் பார்ப்பதற்குத்தான் என்ற மனப்பான்மை மாற வேண்டும். இதைப்பற்றி கனம் கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். சோஷியலிஸத்தில் அடிப்படையான கல்வி எல்லோருக்கும் இருக்கவேண்டும். அந்த முறையில் தான் நம்முடைய கல்வித் திட்டத்தை அமைத்துக்கொண்டு வருகிறோம்.

மேலும் பல விஷயங்களைப்பற்றி இங்கு குறிப்பிட்டுக்கொண்டேயிருக்கலாம், அவைகளைப்பற்றி எல்லாம் அரசாங்கம் பரிசீலித்து வேண்டிய கவனம் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**கனம் சபாநாயகர்:** சபை இப்பொழுது ஒத்திவைக்கப்பட்டு நாளை காலை 8-30 மணிக்கு கூடும். 1-30 p.m.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

119. Notification issued with Roc. S.B.I. No. 65653/62, North Arcot Collector's Office, Vellore, dated 21st November 1963 regarding removal of Sri K. B. Subbaraya Udayar, President, Mambattu Panchayat in Polur taluk of North Arcot district. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

### B. Reports, Notifications and other papers—*Nil.*

## APPENDIX.

[*Vide* Answer to starred question No. 176 on page 403 supra.

The informations is given in the statement below :—

| Name of the district. (1) | Number of milk supply co-operative societies for Harijans so far organized. (2) |
|---|---|
| 1 Chingleput .. .. .. .. .. | 19 |
| 2 North Arcot .. .. .. .. .. | 6 |
| 3 South Arcot .. .. .. .. .. | 2 |
| 4 Thanjavur .. .. .. .. .. | 2 |
| 5 Tiruchirappalli .. .. .. .. | 6 |
| 6 Madurai .. .. .. .. .. | 25 |
| 7 Ramanathpuram .. .. .. .. | 36 |
| 8 Tirunelveli .. .. .. .. .. | 4 |
| 9 Coimbatore .. .. .. .. .. | 3 |
| 10 Salem .. .. .. .. .. .. | 16 |
| 11 Kanyakumari .. .. .. .. | 1 |
| 12 The Nilgiris .. .. .. .. .. | 2 |
| Total .. | 122 |

நமது மாநிலத்தில் ஹரிஜனங்களுக்காக ஜில்லாவாரியாக ஏற்படுத்தப் பட்டுள்ள பால் வழங்கும் சங்கங்கள்—

| மாவட்டம். (1) | ஹரிஜனங்களுக்காக இது வரையில் அமைக்கப்பட்டுள்ள பால் வழங்கு சங்கங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 செங்கற்பட்டு .. .. .. .. .. | 19 |
| 2 வட ஆற்காடு .. .. .. .. .. | 6 |
| 3 தென் ஆற்காடு .. .. .. .. .. | 2 |
| 4 தஞ்சாவூர் .. .. .. .. .. | 2 |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 6 |
| 6 மதுரை .. .. .. .. .. .. | 25 |
| 7 இராமநாதபுரம் .. .. .. .. .. | 36 |
| 8 திருநெல்வேலி .. .. .. .. .. | 4 |
| 9 கோயமுத்தூர் .. .. .. .. .. | 3 |
| 10 சேலம் .. .. .. .. .. .. | 16 |
| 11 கன்னியாகுமரி .. .. .. .. .. | 1 |
| 12 நீலகிரி .. .. .. .. .. .. | 2 |
| மொத்தம் | 122 |

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## FOURTH SESSION OF THE THIRD LIGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

*3rd to 7th March* 1964.

### Volume XVIII (Nos. 1 to 5)

A

PAGES

ALAGAMUTHU, SRI T.P.— .. .. .. .. .. .. .. 82–85
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 1–4
God-father Scheme, Schools .. .. .. .. .. 20-21
State Electricity Board, Retrenchment of Employees (C.A.) .. ..

ALAGIRISWAMY, SRI M.— .. .. .. .. .. .. .. 188–191
Budget, 1964–65, G.D. .. ..

AMBIKAPATHY, SRI C.M.— .. .. .. .. .. .. .. 372–374
Budget, 1964–65, G,D. .. ..

ANANDAN, SRI L.— .. .. .. .. .. .. .. 286–287
Budget, 1964–65, G.D. ..

ANANDANAYAKI, SRIMATHI T.N.— .. .. .. .. .. .. 94–100
Budget, 1964–65, G.D. .. ..

ANGAMUTHU NAICKER, SRI K.— .. .. .. .. .. .. 243–245
Budget, 1964–65, G.D. .. ..

ANTI-COBRA SERUM— .. .. .. .. .. .. .. 125
Manufacture .. ..

APPAVOO THEVER, SRI A.— .. .. .. .. .. .. 226–228
Budget, 1964–65, G.D. .. ..

ARDHANAREESWARA GOUNDER, SRI K.S.— .. .. .. .. .. 72–75
Budget, 1964–65, G.D. .. ..

ARUMUGAM, SRI A.— .. .. .. .. .. .. .. 199–202
Budget, 1964–65, G.D. .. ..

PAGES.

A—*cont.*

ARUMUGAM, Sri R.S.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 42-45

ARUMUGAM, Sri S.—
Secondary Schools, free education .. .. .. .. .. 11-14

ARUNACHALAM, Sri V.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 273-274

B

BACKWARD CLASSES—
Panchayat Union Councils, Reservation of posts .. .. .. 205-207

BALAKRISHNAN, Sri A.G.—
Local Bodies, Employees .. .. .. .. .. .. .. 205

BHAKTAVATSALAM, Sri M.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 134, 137, 144, 145, 147, 154, 155, 174, 330, 335, 338, 341, 371, 471-497
B.O.H., Change in Order .. .. .. .. .. .. .. 413

BUSINESS OF THE HOUSE—
Announcement .. .. .. .. .. .. .. .. 100-102

C

CALLING ATTENTION—
Land revenue, remission due to failure of rains in Ramanathapuram 216-217
State Electricity Board, Retrenchment of Employees .. .. 20-21
Tirunelveli district, damages to roads and culverts .. .. .. 125-126

CANE—
Price fixation .. .. .. .. .. .. .. .. 311-312

CEMENT—
Distribution .. .. .. .. .. .. .. .. 105-111

CENTRAL BANKS—
Duties of officers lent .. .. .. .. .. .. .. 213

CHAIR—
Announcements—
B.O.H. .. .. .. .. .. .. .. .. 100-102
Conviction of Sri S.J. Ramaswami .. .. .. .. .. 353
Rulings and observations—
Debate—
Relevancy—Members should speak on the subject (Budget) before the House and not about persons not present in the House on grievances not related to the Budget .. .. 88, 330





PAGES

C—*cont.*

CHAIR—*cont.*
Decorum—
A Member should abide by the rules of the House and should not talk when another Member has to clarify certain points .. 219
A Member should not make a personal charge (against a former Chief Minister not present in the House) .. .. .. 317
A Member should not stand when the Chair is on its legs .. 69
A Member while speaking should not use the President's name for influencing a debate (Rule 67 of the Assembly Rules) .. 371-372
Members should not clap hands .. .. .. .. .. 403
Personal reference should be avoided .. .. .. .. 389
Personal reference to persons not present in the House should be avoided .. .. .. .. .. .. .. .. 69
Reference to a living person as dead—Deprecated .. .. 426
Expunction—
Remarks reflecting on the conduct of a Court of Justice—Expunged from the official proceedings .. .. .. 315
Objectionable Expressions—
The use of the expression 'தில்லு முல்லு' (Deceit)—Deprecated 79
Questions and Answers—
Supplementary questions should be brief .. .. .. .. 106
Supplementary questions should not be general but should be specific .. .. .. .. .. .. .. .. 397

CHEEMAICHAMI, Sri K.—
Co-operative Societies, Ramanathapuram district .. .. .. 211-212

CHINNARAJI, Sri C. K.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 258-260

CHINNASAMY, Sri T.—
Budget, 1964-65, G. D., .. .. .. .. .. .. .. 161-164

CHINNAYYAN, Sri S.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 223-226

CHINNIAH GOUNDER, Sri N. P. M.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 348-350

CHIRANJEEVULU NAIDU, Sri C.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 414-415

CO-OPERATIVE INSTITUTES (CENTRAL)—
Decentralisation of powers .. .. .. .. .. .. 214-215

CO-OPEPRATIVE SOCIETIES—
Ramanathapuram district .. .. .. .. .. .. 211-212

COOUM (RIVER)—
Hospital sewage water .. .. .. .. .. .. .. 120-121

PAGE

C—*cont.*

COURTS—
- Magistrate, Alangudi .. 122
- Village Courts .. 406–408

D

DAKSHINAMOORTHY GOUNDER, Sri A. S.—
- Budget, 1964–65, G. D. .. 231–235

DHANDAYUTHAPANI, Sri M.—
- Budget, 1964–65, G. D. .. 131–135

DHARMALINGAM, Sri A. P.—
- Budget, 1964–65, G. D. .. 88–94

DURAIARASAN, Sri A.—
- Budget, 1964–65 G. D. .. 171–175

E

EDUCATION—
- Secondary Schools .. 11–14

ELECTRICITY BOARD—
- Retrenchment of employees .. 20–21

ELLAMMA NAIDU, Sri V.—
- Budget, 1964–65, G. D. .. 260–262

F

FACTORIES—
- Cane Gur and Kandasari Sugar Factory .. 308–310

FINANCIAL BUSINESS—
- Budget, 1964–65 G. D. .. 21–100, 126–204, 217–297, 315–394, 414–497

FORESTS—
- Nilgiris district .. 395–399

G

GANESAN, Sri SAW—
- Budget, 1964–65, G.D. .. 331–345

GOMATHI SANKARA DIKSHITHAR, Sri G.—
- Budget, 1964–65, G.D. .. 392–394

GOVERNMENT EMPLOYEES.—
- Qualifications for promotion .. 215–216

GOVINDAN, PULAVAR K.—
- Cement, distribution .. 105–111
- Medical and Public Health Department, Merger .. 314
- Primary Health Centres, administrative Control .. 299–304
- Secondary School Leaving Certificate, Bogus issue .. 4–7



PAGES

G—*cont.*

GOVINDARAJULU NAIDU, Sri R.—
- Budget, 1964–65, G.D. .. 445–447

GUR—
- Cane .. 308–310
- Export .. 304–308

H

HARIJANS—
- Milk Supply Societies .. 403–404

I

I.A.S. EXAMINATION—
- Coaching .. 213

I.P.S. EXAMINATION—
- Coaching .. 213

J

JAGADAMBAL VELAYUDHAM, Srimathi—
- Budget, 1964–65, G.D. .. 436–437

JAYARAJ, Sri P.—
- Budget, 1964–65, G.D. .. 350–353

JEEVARATHNAM, Sri R.—
- Budget, 1964–65, G.D. .. 164–167

K

KADAMBAVANA SUNDARAM, Sri T.—
- Budget, 1964–65, G.D. .. 294–297

KAKKAN, Sri P.—
- Budget, 1964–65, G.D. .. 390–391

KALYANASUNDARAM, Sri M.—
- Backward Classes, reservation .. 205–207
- Cane, price fixation .. 311–312
- Gur, export .. 304–308
- Panchayat Unions, Chairman Election .. 7–10
- Scavenging workers, Clothes supply .. 314–315
- Scheduled castes, Government Service .. 212–213
- Secondary schools, free education .. 11–14
- Text-books, selection, .. 111–115

KAMALANATHAN, Sri M.—
- Budget, 1964–65, G.D. .. 281–286

KARCHA GOWDER, Sri T.—
- Budget 1964–65, G. D. .. 79–82
- Reserve forests, Nilgiris district .. 395–399

PAGES

K—*cont.*

KARIAMANICKAM AMBALAM, SRI KR. RM.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 315-319

KARIVENGADAM, SRI M. V.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 52-56

KARUNANITHI, SRI M.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 415-425, 491, 492, 493.

KOLANDAI AMMAL, SRIMATHI C.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 275-277

KOLANDAISWAMI GOUNDER, SRI M.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 287-289

KOSALRAM, SRI K. T.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 449-453

KOTHANDARAMA BAGAVATHAR, SRI C.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 257-258

KRISHNAMOORTHY, SRI M. R.—
Budget, 1964-65 G. D. .. .. .. .. .. .. .. 249-252

KRISHNAMURTHY, SRI V.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 61-68
Cane, price fixation .. .. .. .. .. .. .. 311-312
Municipal service, recruitment .. .. .. .. .. 207-209

KRISHNASWAMY NAIDU, SRI R.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 437-442

KRISHNAVENI, SRIMATHI A.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 271-273

KUNJAN NADAR, SRI A.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 30-33

L

LAKSHIMIKANTHAM SRIMATHI P. K. R.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 262-265

LAKSHIMINARASAMMA, SRIMATHI B.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 319-321

LAND REVENUE—
Remission due to failure of rains in Ramanathapuram district C. A. .. .. .. .. .. .. .. 216-217

LEGISLATIVE COUNCIL—
Teacher's constituencies .. .. .. .. .. .. .. 408-413

LEGISLATURE—
Members, wealth .. .. .. .. .. .. .. .. 405-406

LOCAL BODIES—
Employees .. .. .. .. .. .. .. .. 205



PAGES

M

MADHAVAN, SRI S—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 150-156
Land Revenue, remission due to failure of rains in Ramanathapuram (C A.) .. .. .. .. .. .. .. 216
Police Officer, foreign tour .. .. .. .. .. .. 399

MADRAS CITY—
Traffic Congestion .. .. .. .. .. .. .. 124-125

MANI SRI K. S.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 21-25

MANI, SRI M. S.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 217-223, 342
Nursery Training .. .. .. .. .. .. .. 312-313

MANIMOZHIAR, SRI KANCHI—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 383-386

MARAPPA GOUNDER SRI K.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 355-357

MATHIALAGAN, SRI K. A.—
Legislative Council, Teacher's constituencies .. .. .. 408-413
Madhavaram Dairy and Milk Project, loss .. .. .. .. 399-402
Nurses, Training .. .. .. .. .. .. .. 313
Over-bridges, Railway level-crossings, .. .. .. .. 115-120

MEDICAL DEPARTMENT—
Merger with Public Health Department .. .. .. .. 314

MILK PROJECT—
Madhavaram .. .. .. .. .. .. .. .. 399-402

MILK SUPPLY SOCIETIES—
Harijans .. .. .. .. .. .. .. .. 403-404

MINISTERS—
Foreign tours .. .. .. .. .. .. .. .. 402-403

MOOKIAH THEVAR, SRI P. K.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 425-429
I. A. S. & I. P. S. examinations, Coaching .. .. .. .. 213
Over-bridges, Railway level-crossings .. .. .. .. .. 115-120
Traffic, Madras City .. .. .. .. .. .. 124-125

MOTION(S)—
B. O. H.. Change in order .. .. .. .. .. .. 413

MUNICIPAL COUNCILS—
Members, wealth .. .. .. .. .. .. .. .. 405-406

MUNICIPAL SERVICE—
Integration in Government Service .. .. .. .. .. 209-211
Recruitment .. .. .. .. .. .. .. .. 207-209

PAGES

M—*cont.*

MUNU ADHI. SRI—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 144–148
Cooum river, Hospital sewage water .. .. .. .. .. 120–121
High Schools. Chingleput .. .. .. .. .. .. 15–19
Ministers, foreign tours .. .. .. .. .. . 402–403

MURUGAIYAN, SRI P.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 202–204
High Schools, Alangudi taluk .. .. .. .. .. .. 19–20
Pudukkottai, Tube-well Scheme .. .. .. .. .. 10–11
Taluk and Sub-Magistrate's Courts, Alangudi .. .. .. 122
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 362–364

MUTHUKARUPPANNASWAMI GOUNDER SRI M. P.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 268–271

MUTHULINGAM, SRI S.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 289–292

MUTHUVELAPPA GOUNDER, SRI P. K.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 345–348

N

NALLAMUTHU, SRI R.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 378–380

NALLASIVAM, SRI K. R.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 136–144

NARAYANASAMY NAIDU, SRI G.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 156–161

NARAYANASAMI PILLAI, SRI K.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 167–171
Secondary Schools, free education .. .. .. .. .. 11–14

NATARAJAN, DR. B.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. 45–52

NEDUNCHEZHIYAN, SRI V. R.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 453–471

NURSES—
Training .. .. .. .. .. .. .. .. .. 312–313

O

OVERBRIDGES.—
Railway level-crossings .. .. .. .. .. .. .. 115–120

P

PALANI, SRI K. B.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 184–188



PAGES

P—*cont.*

PALANISWAMI, SRI K.B.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 326–328

PANCHAYATS.—
Panchayat Union Councils, Chairmen .. .. .. .. .. 406

PANCHAYAT UNION—
Chairmen, Election .. .. .. .. .. .. .. .. 7–10

PAPERS LAID ON THE TABLE—
Agricultural Produce Markets Act 1959, Notifications .. .. 297–298
City Municipal Corporation Act, 1919, Notification .. .. .. 204
Distillery Rules, 1960, Notifications .. .. .. .. .. 394
District Municipalities Act, 1920, Notification .. .. .. 204
Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948, Notification .. .. .. .. .. .. .. .. 103
List of Unstarred Questions and Answers .. .. .. .. 103
Motor Vehicles Act, 1933, Notification .. .. .. .. .. 204
Panchayats Act, 1958, Notification .. .. .. .. .. 497
Resume of work done by Legislative Assembly from 17th to 24th January 1964 .. .. .. .. .. .. .. .. 103

PERIANNAN. SRI V.R.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 181–184

PERUMAL RAJU, SRI K.T.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 292–294

POLICE—
Police Officer, foreign tour .. .. .. .. .. .. 399

PONNAMMAL, SRIMATHI A.S.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 56–61
Harijans, Milk supply societies .. .. .. .. .. .. 403–404

PONNIAN, SRI K.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 85–88

PONNUSAMY, SRI S.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 195–199

PRIMARY HEALTH CENTRES—
Administrative control .. .. .. .. .. .. .. 299–304
UNICEF Aid .. .. .. .. .. .. .. .. 304

PUBLIC HEALTH DEPARTMENT—
Merger with Medical Department .. .. .. .. .. 314

R

AGHAVA REDDI, SRI A.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 191–195

RAJAGOPAL, SRI P.—
Budget, 1964-66, G.D. .. .. .. .. .. .. .. 359–362

PAGES

R—*cont.*


RAJAGOPALASWAMY, Sri R.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 433–436

RAJANGAM, Sri M.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 228–231

RAJANGAM, Sri N.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 76–79

RAJARAM, Sri K.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 375–378

RAMA ARANGANNAL, Sri—
Members of Legislature and Municipal Councils, wealth .. .. 405–406

RAMACHANDRA REDDI, Sri N.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 447–449

RAMAIAH, Sri V.—
Land Revenue, Remission due to failure of rains in Ramanathapuram district (C. A. St.) .. .. .. .. .. .. .. 216–217
Tirunelveli district, damages to roads and culverts (C.A. St.) .. 125–126

RAMAKRISHNA NAIDU, Sri A. L.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 382–383

RAMASWAMI, Sri S.—
Municipal Service, Integration with Government Service .. .. 209–211

RAMASWAMI, Sri S. J.—
Conviction (Ann.) .. .. .. .. .. .. .. .. 353

RANGASWAMI, Sri R.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. 246–249

REGISTRATION.—
Sub-Registry Offices .. .. .. .. .. .. .. 122–123

RIVER PUMPING SCHEME.—
Tirunelveli district .. .. .. .. .. .. .. .. 14–15


S


SADASIVAM, Sri S.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 365–366

SAMBANDAM, Sri K. R.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 177–181

SAMPANGI, Sri R.—
Budget, 1964–65, G.D. .. .. .. .. .. .. .. 353–355

SANKARAN, Sri V.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. .. .. 252–257, 330

SASIVARNA THEVAR, Sri T. L.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. .. .. 235–242




PAGES

S—*cont.*


SCAVENGERS—
Clothes, Supply .. .. .. .. .. .. .. .. 314–315

SCHEDULED CASTES—
Government Service .. .. .. .. .. .. .. 212–213

SCHOOLS—
God-father Scheme .. .. .. .. .. .. .. 1–4
High Schools, Alangudi Taluk .. .. .. .. .. .. 19–20
High Schools, Chingleput .. .. .. .. .. .. 15–19
Secondary Schools, free education .. .. .. .. .. 11–14
Secondary Schools, South Arcot district .. .. .. .. 15

S.S.L.C.—
Bogus issue .. .. .. .. .. .. .. .. 4–7

SELVARAJAN, Sri M. S.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. .. 386–389
River Pumping Scheme, Tirunelveli district .. .. .. .. 14–15
Tirunelveli district, damages to roads and culverts (C.A.) .. .. 125

SENAPATHI GOUNDER, Sri A.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. .. 442–445

SENGOTTUVELU, Sri N. P.—
Primary Health Centres, UNICEF aid .. .. .. .. 304
Sub-Registry Offices .. .. .. .. .. .. .. 122–123

SHANMUGHAM, Sri P. U.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. .. 368–372

SOUNDRAVEL SERVAI, Sri Ht. A. P.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. [illegible]–368

SOUNTHARAPANDIAN, Sri N.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. [illegible]–325

SRINIVASAN, Sri C.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. .. 357–359

SUBBIAH Sri A. K.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. .. 38–42

SUBBIAH MUDALIAR, Sri A. R.—
Budget, 1964–65, G. D. .. .. .. .. .. .. 33–38

SUBRAMANIA CHETTIAR, Sri N.—
Budget, 1964–65, G. D. .. .. .. 279–281

SUBRAMANIA GOUNDER, Sri K. S.—
Budget, 1964–65, G. D. .. .. .. [illegible]–177

SUBRAMANIAM, Sri R.—
Budget, 1964–65, G. D. .. .. .. [illegible]–30

SUGAR—
Kandasari .. .. .. .. .. [illegible]–310


D V211, 81 N64 1164.18
800.009
138003

PAGES

**S—cont.**


SWAMIDAS, Sri A—.
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 126–131

SWAMINATHAN, Sri R.V.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 429–432, 481


**T**


TEXT-BOOKS—
Selection .. .. .. .. .. .. .. .. .. 111–115

THANGAVELU, Sri A.—
Budget, 1960-61, G. D. .. .. .. .. .. .. 389–391
Secondary Schools, South Arcot district .. .. .. .. 15

THANGAVELU, Sri R.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 380–381

THIAGARAJA PILLAI, Sri M. D.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 148–150

THIRUVENGADAM, Sri B. K.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 432–433

TIRUNELVELI DISTRICT—
Damages to roads and culverts (C.A.) .. .. .. .. .. .. 125–126

TRAFFIC—
Madras City .. .. .. .. .. .. .. .. 124–125

TUBE WELL SCHEME—
Pudukkottai .. .. .. .. .. .. .. .. 10–11


**U**


"UNICEF"—
Primary Health Centres .. .. .. .. .. .. .. 304

URKAVALAN, Sri P.—
Budget, 1964-65, G.D. .. .. .. .. .. .. .. 364–365


**V**


VADIVEL, Sri M. P.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 328–331, 361
Panchayat Union Councils, Chairmen .. .. .. .. .. 406

VEERAPPA CHETTIAR, Sri R. S.—
Anti-cobra serum, manufacture .. .. .. .. .. .. 125
Cane, Gur and Kandasari Sugar Factory, starting .. .. .. 308–310
Central Co-operative Institutions, decentralisation of powers .. 214–215
Co-operative Central Banks, Duties of officers lent .. .. .. 213
Government employees, qualifications for promotion . .. 215–216
Village Courts .. .. .. .. .. .. .. .. 406–048
Village establishments, South Arcot district .. .. .. .. [illegible]




PAGES

**V—cont.**


VENKATARAMAN, Sri G.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 68–72

VENKATARAMAN, Sri R.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. 342
State Electricity Board, retrenchment of employees (C.A. St.) .. 20–21

VILLAGE OFFICERS—
South Arcot district .. .. .. .. .. .. .. 124

VISWANATHAN, Sri C. K.—
Budget, 1964-65, G. D. .. .. .. .. .. .. .. 265–268